தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1981 மே 4, 5, 6 மற்றும் 7-ம் நாட்கள்

(தொகுதி XXII எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 1]

D 1
Y2:11,31 N81
N83-22

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1981 மே 4, 5, 6 மற்றும் 7-ம் நாட்கள்

(தொகுதி 22—1 முதல் 4 வரை.)

உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. | v—vi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட—அகர வரிசையில்) .. .. .. | vii—xv |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981. .. .. .. | 201 |
| தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு, 1981) .. .. .. | 201 |
| அறிக்கை அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. | 35 |
| அறிவிப்புகள்— | |
| தி. மு. க. உறுப்பினர்கள் அவைக்கு வராமல் இருத்தல்—அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 126—127 |
| திருவாளர்கள் துரைமுருகன், உகம்சந்த், திருமதி யசோதா ஆகியோர் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சனைகள் .. .. | 366—370 |
| பேரவை அலுவல் .. .. | 449—500 |

D 2A 216—A

உரிமைப் பிரச்சினை—

தொழிலாளர் நல அமைச்சர் மீது—தீர்ப்பு 22—2

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களிடையே மோதல் .. 25—3

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை 488—49

இராஜபாளையம் பகுதிகளில் நெசவாளர் போராட்டம் .. .. 370—37

தமிழ்நாடு கருவூலத் துறை ஊழியர்கள் போராட்டம் .. .. 187—19

கவன ஈர்ப்புகள்—

கிருஷ்ணகிரி வட்டத்தில் கழிவுநீர் குடிநீரோடு கலப்பது .. .. 32—3

சென்னை சைதை மசூதித் தெருவில் தீ விபத்து 498

திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது 195—197

திருவண்ணாமலையில் ஏற்பட்ட சாலை விபத்து 377—381

நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்டக் கடன் 498—502

புவனகிரி தொகுதி, வீரமுடையான் நத்தம் கிராமத்தில் தீ விபத்து 30—31

விருத்தாசல நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல் 197—

விளவன்கோடு வட்டம், காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனை 375—

தகவல் கோரல்—

அரசு அலுவலர்கள் போராட்டம் 365—3

அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை சில பத்திரிகைகள் பிரசுரித்திருப்பது 4

அவை நிகழ்ச்சிகள் வானொலியில் தவறாக ஒலி பரப்பப்பெற்றது 1

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப்பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்துப், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', மா நகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன,

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன:—

பேரவைமுன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பட்டுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :

| | | |
|---|---|---|
| அ | .. | அறிக்கை |
| அறிவி | .. | அறிவிப்பு |
| அ. வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| கு. வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ. வி. | .. | பொது விவாதம் |
| ஆ. உ. | .. | ஆளுநர் உரை |
| உ. பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ. பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க. ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க. ஈ. அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச. அ. நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச. ஆ. நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில், |

1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.

2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தம்.

3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்

4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்

5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

| | | |
|---|---|---|
| ச. பிரி. ஆ. | .. | சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச. பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச. மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த. கோ. | .. | தகவல் கோரல் |
| த. வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |



| | | |
|---|---|---|
| உ. தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ. தி. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த. தி. | .. | தனித் தீர்மானம் |
| து. மா. கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி. மா. கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே. அ. | .. | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதல மைச்சர்)—பொது,பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர்,மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதிஅமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு,: மீன்வளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகை கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன (செய்தி அற நிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### Governor of Tamil Nadu

### Thiru SADIQ ALI

### Members of the Council of Ministers.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) - Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minesals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibitton excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கு. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்),

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21 6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

### தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.



### தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன். திரு. க. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 | இராசாறாம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ. |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே. | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | செஞ்சி |
| 32 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 43 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | இடைப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | அண்ணா நகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ. வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ. வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. சி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டாமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. சு. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ.) |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 184 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. | திருச்சி—II |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ. வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 203 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 | ராமசாமி, திரு. என். என். | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ். கே | முசிறி |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |
| 214 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 215 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ) |
| 217 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218 | விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை |
| 219 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 221 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222 | வீரனம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெர்ணமல்லூர் |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 231 | ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1981 மே 4. 5, 6 மற்றும் 7-ம் நாட்கள்

தொகுதி 22—(1 முதல் 4 வரை.)

### அ.


அங்குசாமி திரு.ச.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 444—447

அப்பாதுரை, திரு. மு.—

தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் 187

வரவு—செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் 573—575

அம்பிகாபதி, திரு. மு.—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25, 27

அரசு அலுவலர்களது கோரிக்கை—
நடவடிக்கை (ஒ.தீ.) 488, 491—493

அரசு அலுவலர்கள் போராட்டம் (த.கோ.) 365

அவை நிகழ்ச்சிகள் வானொலியில் தவறாக ஒலி பரப்பப் பெற்றது. (த.கோ.) 187

கிருஷ்ணகிரி வட்டம், கழிவு நீர் குடிநீரோடு கலத்தல் (க.ஈ.) 32, 33

தஞ்சாவூர் பொருட்காட்சிக்கு கட்டாய வசூல் (த.கோ.) 487

தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 187—190

வரவு-செலவுத் திட்டம், 1981—82, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 401—407

அரங்கநாதன் திரு. எஸ்.—

தர்மபுரி, சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருப்பணி 458—459

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அரங்கநாயகம், திரு சே.—
அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 29—30
அலுவலர்கள்
சப்-ரிஜிஸ்திரார் நியமனம், பத்திரப்பதிவுத்துறை 163—166
முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை, பல் மருத்துவர் நியமிக்கப்படாமை. 478—480
அழகர்சாமி திரு. சோ.—
அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25, 26—27
எட்டயபுரம் அரசு மருத்துவமனை, விரிவாக்குதல் 179—181
நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன் (க.ஈ.) 499, 501—502
அன்பழகன், திரு. தி.—
பொது நிறுவனங்கள் குழு ஆறாவது அறிக்கை அளித்தல் 35

"ஆ"

ஆசிரியர்கள்—
பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் 7-8
ஆண்டி அம்பலம் திரு. மெ.—
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கடன் வழங்கும் திட்டம் 362—365
நத்தம் கோவில்பட்டி, கைலாசநாதர் கோயிலைப் புதுப்பித்தல். 167—168



பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—
அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25, 27—28
இராஜபாளையம், நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) 370, 372—374
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (ந.கோ.) 365
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— காவல் துறை 395—401
தீயணைப்புப் பணிகள்
கூட்டுறவு 72—78
ஆலயங்கள்—
தர்மபுரி, சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருப்பணி. 458—459
திருச்செந்தூர் முருகன் கோவில் திரைப்படம் எடுக்க உரிமை வழங்கல் 456—458
நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோயிலைப் புதுப்பித்தல். 167—168
ஆறுமுகம், திரு. எம்.—
கிருஷ்ணகிரி வட்டம், கழிவுநீர் குடிநீரோடு கலத்தல் (க.ஈ.) 32
ஆறுமுகம், திரு. சேலம் மு.—
தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் 187
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— காவல் துறை, 429—437
தீயணைப்புப் பணிகள்
ஆனூர் ஜெகதீசன் திரு. பு. கோ.—
பொன் விளைந்த களத்தூர் ஏரி, மண் கரையினை அணைக் கட்டாக்குதல் 358—359

பக்கங்கள்

" இ "

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

- காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்னை, விளவன்கோடு (க.ஈ.அ.) — 375—377
- கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதத்துறைகளும்) சட்ட முன் வடிவு, 1981 — 201
- தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச் சட்ட முன் வடிவு, 1981) — 201
- நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன் (க.ஈ.அ.) — 499—502

**இராசாராமன், திரு. எஸ்.—**

- இராசபாளையம், நெசவாளர் போராட்டம் (ஒ.தீ.) — 370
- சென்னை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நட்சத்திர ஓட்டல்கள் கட்டுதல் — 168—170
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை
  - தீயணைப்புப் பணிகள் — 202

**இராசு, திரு. ஜே. எஸ்.—**

- மின் வாரியம், தாழ்த்தப்பட்டோருக்கு வேலை. — 157—159

**இராசேந்திரன், திரு. எஸ். என்.—**

- இராஜபாளையம், நெசவாளர் போராட்டம் (ஒ.தீ.) — 374

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு காவல் துறை, — 201, 202,
  - தீயணைப்புப் பணிகள் — 203, 424, 514, 518–520, 523–545, 548–560,
- **கூட்டுறவு** — 42

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராமச்சந்திரன் திரு. ச.—**

- அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) — 494—497
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் — 58[illegible]
- வினாப்பட்டியலில் சேர்க்கப் பெற்ற வினாக்கள் தள்ளி வைக்கப் பெறுதல் (த.கோ.) — 7

**இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—**

- தொழிற் கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகத்துடன் இணைத்தல். — 342—344
- மேல் சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் — 480—483

**இராமசாமி திரு. எஸ். என்.—**

- திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) — 377

**இராமசாமி திரு. த.—**

- இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வாங்குதல் — 470—472
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை-தீயணைப்புப் பணிகள் — 407—410

**இராமலிங்கம், டாக்டர் கே. பி.—**

- குச்சி வள்ளிக் கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரித்தல் — 13

**இளையபெருமாள், திரு. எல்.—**

- தமிழ்நாடு நிலச்சீர்த்திருத்தச் சட்டத்தை மைய அரசு திருப்பியது (த.கோ.) — 17—
- வரவு-செலவுத் திட்டம், 1981.82, வாக்கெடுப்பு—
  - காவல் துறை-தீயணைப்புப் பணிகள் — 203, 218, 533, 535, 546—548
  - பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் — 582—583

பக்கங்கள்

" ஈ "

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25—26

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) 488

ஆலந்தூர் பல்லாவரம், கூட்டு குடிநீர் திட்டம். 349—350

இராஜபாளையம் நெசவாளர் போராட்டம் (ஒ.தீ.) 370—372

காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை, விளவன்கோடு, (க.ஈ.) 377

தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் (ஒ.தீ.) 187, 190—191

திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது. (க.ஈ.) 195—196

பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் 7—8

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு 35, 49—53

" உ "

உத்திராபதி, திரு. பொ.—

சென்னை—வேதாரண்யம், விரைவுப் பேருந்துப் பணி. 182—183

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) 377

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை-தீயணைப்புப் பணிகள். 202

உமாநாத், திரு. ரா.—

அரசு அலுவலர்கள் போராட்டம் (த.கோ.) 365

கட்சித் தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது. (த.கோ.) 19—22

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

உமாநாத், திரு. நா.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

காவல் துறை-தீயணைப்புப் பணிகள். 222—240, 244, 522, 523, 531, 550, 551, 560

உரிமைப் பிரச்சினை—

பார்க்க தலைவர்

உள்ளாட்சிகள்—

காவேரிப்பட்டணம் பேரூராட்சி, வருமானத்தைப் பெருக்குதல். 171—172

" ஏ "

ஏடுகள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை. 127, 277, 585

" க "

கருப்பையா, தி. இரா.—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) 488

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) 377—380

நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன் (க.ஈ.) 498

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு. 57—65

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருப்பையா, திரு. ஏ. டி.—
- திருவண்ணாமலை சாலை விபத்து. (க.ஈ.) — 377
- வால்பாறை, தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுதல். — 350—352

கல்வி—
- ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப்பள்ளி, மாணவர்களின், கோரிக்கை. — 335—336
- உயர்நிலைப்பள்ளிகள், வரலாறு, புவியியல் தனித் தனியே கற்பித்தல. — 10—11
- ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவித்தல். — 336—341
- க. பரமத்தி உயர்நிலைப் பள்ளியை தரமுயர்த்துதல். — 11—12
- தொழிற் கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகத்துடன் இணைத்தல். — 342—344
- நாமக்கல் வட்டம், தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி அமைத்தல் — 341
- பாலர் பள்ளிகளைக் கட்டுப்படுத்துதல். — 1—

கவன ஈர்ப்புகள்—
- காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்னை, விளவன்கோடு. — 375—377
- கிருஷ்ணகிரி வட்டம், கழிவுநீர், குடிநீரோடு கலத்தல். — 32—35
- சென்னை, சைதை மசூதித் தெருவில் தீ விபத்து. — 498
- திருவண்ணாமலை சாலை விபத்து — 377—381
- திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் முடப்பெற்றுள்ளது. — 195—197
- நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன். — 498—502
- விருதாசலம் நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல். — 197—200
- வீரமுடையான் நத்தம், தீ விபத்து. — 30—32



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கழகங்கள்—
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கடன் வழங்கும் திட்டம் — 362—365

கனிமங்கள்—
- குமரி மாவட்டத்தில் கிடைக்கும் வைடூரியங்கள் — 360—362

கிருட்டிணமூர்த்தி, திரு. சா—
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் — 218—222

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—
- திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மூடப்பெற்றுள்ளது (க.ஈ.அ.) — 195—197

கிருஷ்ணன், திரு. ரா.—
- அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) — 25
- அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) — 488
- உணவுக்கு வேலை திட்டம், மக்கள் குழு அமைத்தல். — 461—467
- திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மூடப்பெற்றுள்ளது, (க.ஈ.) — 194—195

குடிநீர்—
- கழிவு நீரோடு கலத்தல் கிருஷ்ணகிரி வட்டம் (க.ஈ.) — 32—85
- குடி நீர் தேக்கத் தொட்டிப் பணி, நெருப்பூர் — 469—470
- கூட்டு குடிநீர்த் திட்டம், ஆலந்நூர்-பல்லாவரம் — 349—350
- பற்றாக்குறை, கரூர். — 175—176

பக்கங்கள்

கு—தொடர்ச்சி.


குலசேகர பாண்டியன், திரு. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு. 78—82

குழந்தைவேலு, திரு. ப.—

விருதாசலம் நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல் (க.ஈ.அ.) 198—200

குழுக்கள்—

பொது நிறுவனங்கள் குழு, ஆறாவது அறிக்கை அளித்தல். 35

கூட்டுறவு—

சங்கம் செயல்படாமை, நெருப்பூர் (பெண்ணகரம் வட்டம்). 347—348

விவசாயக் கிடங்கு கட்டுதல், மாரனே. 348

கோபால், திரு. சி.—

பாலாறு படுகை, விவசாய மின் இணைப்பு. 160—162

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள். 259—263

கோபாலன், திரு. ஆர். டி.—

கம்பம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு டிப்போ. 183—185

கம்பம் தொகுதி, சுருளி நீர் வீழ்ச்சி. 453—454

கோவேந்தன், திரு. எம். ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் 567—570


"ச"


சங்கரய்யா, திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை, தீயணைப்புப் பணிகள். 547—552




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


சங்கரய்யா, திரு. என்.—

சட்டமுன் வடிவுகள்—

கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன் வடிவு, 1981. (அ.நி.) 201

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவு, 1981. (அ.நி.) 201

சண்முகம், திரு. இரா.—

திருத்தணி அரசு பொது மருத்துவமனை, கூடுதல் வசதிகள். 181—182

சண்முகம், திரு. ஏ. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் 437—444

சத்தியமூர்த்தி, திரு. வ.—

முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை, பல் மருத்துவர் நியமிக்கப்படாமை. 478—480

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள். 240—244

சந்தைகள்—

விருதாசலம் நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல் (க.ஈ.) 197—200

சமரசம் டாக்டர் கே.—

அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதைச் சில பத்திரிகைகள் பிரசுரித்திருப்பது (த.கோ.) 488

காவேரிப்பட்டணம் பேரூராட்சி, வருமானத்தைப் பெருக்குதல் 171—172

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு 92—97

சமூக நலன்—

உணவுக்கு வேலை திட்டம் மக்கள் குழு அமைத்தல் 461—467

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது (த.கோ.) 15

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள். 263—266

சாலைகள்—

கரூர் நகராட்சி, பழுதுபார்த்தல். 173—175

சிவகாசி-விருதுநகர் சாலை, செப்பனிடுதல் 468

மதுரை சாத்தூர் இணைப்புச் சாலை, பணி தாமதமடைதல். 170—171

சித்தன், திரு. என். எஸ். வி.—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மோதல் (ஒ.தீ.) 25, 28—29

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) 488, 491, 493—494

இராஜபாளையம், நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) 370—372

கட்சித் தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது (த.கோ.) 20—21

சென்னை, சைதை மசூதித் தெருவில் தீ விபத்து (க.ஈ.) 498

தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது (த.கோ.) 15, 185

திருமங்கலம் தொகுதி, கிழவனேரி—நெடுங்குளம் ஊர்களை இணைத்து பாலம் கட்டுதல். 459—460

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு 35, 36—47

வினாப் பட்டியலில் சேர்க்கப் பெற்ற வினாக்கள் தள்ளி வைக்கப் பெறுதல் (த.கோ.) 486—487



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிவசாமி திரு. செ.—

ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப்பள்ளி, மாணவர்கள் கோரிக்கை. 335—336

திருவண்ணாமலை சாலை விபத்து. (க.ஈ.) 377

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். 562

சிவப்பிரகாசம், திரு. சீ.—

நாமக்கல் வட்டத் தொழில் நுட்ப பயிற்சிப்பள்ளி அமைத்தல். 341

சின்னசாமி, திரு. எம்.—

கரூர், குடிநீர் பற்றாக்குறை. 175—176

கரூர் நகராட்சி, சாலைகளைப் பழுதுபார்த்தல். 173—175

சின்னராசு, திரு. க. இரா.—

கிருஷ்ணகிரி வட்டம், கழிவுநீர் குடிநீரோடு கலத்தல். (க.ஈ.) 32

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள். 250—254

சின்னராசு, திரு. மா.—

சிறு தொழில்களை மேம்படுத்துதல் 483—486

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் 273—276

சுந்தரம், திரு. கே. ஆர்.—

காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை, விளவன்கோடு (க.ஈ.) 377

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் 562

சுந்தரம், திரு. ப.—

ஜோலார்பேட்டை, சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்தல். 162—163

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுந்தரமூர்த்தி, திரு. ஆர்.—
- இராஜபாளையம், நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) — 370

சுந்தரராஜ், திரு. நா.—
- கட்சித் தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது (த.கோ.). — 20
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— காவல் துறை தீயணைப்புப் பணிகள். — 503, 523—538

சுந்தரராஜன், திரு. மு.—
- மதுரை-சாத்தூர் இணைப்புச் சாலைப் பணி தாமதமடைதல். — 170—171

சுப்பிரமணியன், திரு. உ.—
- இராஜபாளையம் நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) — 370
- வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு— காவல் துறை தீயணைப்புப் பணிகள். — 202

சுவாமிநாதன், திரு. வி. வி.—
- வீரமுடையான் நத்தம், தீ விபத்து, (க.ஈ.). — 30, 31

சுற்றுலா—
- சென்னை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நட்சத்திர ஓட்டல்கள் கட்டுதல். — 168—170
- பொய்மான் கரடு (சேலம்), சுற்றுலாத்தலமாக்கல் — 166—167

செல்லமுத்து, திரு. எம்.—
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். — 570—573

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.
- க. பரமத்தி உயர்நிலைப் பள்ளியை தரமுயர்த்துதல் — 11—12





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—தொடர்ச்சி.
- கீழபவானி வாய்க்கால், கான்கிரீட் லைனிங் போடுதல். — 356—358
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, தாகெடுப்பு— கூட்டுறவு — 47—49

சேதுராமன், திரு. ஏ. எம்.—
- வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு— கூட்டுறவு. — 68—71

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—
- சென்னை, சைதை மசூதித் தெருவில் தீ விபத்து (க.ஈ.அ.) — 498
- தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மைய அரசு திருப்பியது (த.கோ.) — 16—19
- வீரமுடையான் நத்தம், தீ விபத்து (க.ஈ.அ.) — 30—32

"த"

தகவல் கோரல்—
- கட்சித் தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது — 19—22
- தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மைய அரசு திருப்பியது — 16—19
- தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது — 15—16

தங்கமணி, திரு. கே. எம்.—
- திண்டிவனம் நகராட்சி, நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலை நீக்கம் — 176—177
- வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு— பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் — 561, 583

தங்கவேலு, திரு. பி.—
- வரவு-செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு— பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் — 563—567

த—தொடர்ச்சி. பக்கங்கள்

தலைவர்—

அறிவிப்புகள்—

அவை அலுவல் 449—450

தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராமல் இருத்தல்—

அலுவல் ஆய்வுக்குழு முடிவு 126—127

திருவாளர்கள் துரைமுருகன், உகம்சந்த், திருமதி யசோதா ஆகியோர் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சனைகள் 36

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அறிவிப்புகள்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் பற்றி அவையிலே கேட்க கூடாது; தலைவரின் அறையிலே கேட்க வேண்டும் (த.கோ.) 165

உரிமைப் பிரச்சினை—

தொழிலாளர் நல அமைச்சர் மீது 15-4-1981 அன்று பேரவையில் கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினைமீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது—

"அமைச்சர் கூறியதிலிருந்து பேரவைக்கு எந்த விதத்திலும் வேண்டுமென்று தவறான தகவலைத் தந்ததாக எடுத்துக் கொள்ள இயலாது.

அமைச்சர் தம்முடைய உரையில் தாமே திருத்தம் செய்ததும் முன் பேசியதற்கு எவ்வித முரண்பாடும் இல்லை.

தவறான அறிக்கைகள் எல்லாம் அவையின் உரிமை மீறல் ஆகி விடாது.

எனவே, உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையில் எந்தவிதமான அவை உரிமை மீறலும் மேலெழுந்த வாரியாகக்கூட எழவில்லை." 22—24



த—தொடர்ச்சி. பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

"1981 ஏப்ரல் கடைசி வாரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாகப் பலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து".

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 25—30

"இராஜபாளையம் பகுதிகளில் நெசவாளர் போராட்டம் நடைபெறுவது பற்றியும் அதன் காரணமாக இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. இராஜாலிங்கராஜா முதலிய 53 பேர் கைது செய்யப்பட்டதும் குறித்து."

கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றது. 370—375

"தமிழக அரசு அலுவலர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து."

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. 488—497

"தமிழக கருவூலத் துறை ஊழியர்கள் போராட்டம் குறித்து."

நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. 187—195

ஒழுங்குப் பிரச்சினை—

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் படம் பேரவை அலுவலகத்தில் ஆங்காங்கே வைக்கப்பெற்றிருப்பது பற்றி ஓர் உறுப்பினர் கேட்ட போது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

ந—தொடர்ச்சி.


தலைவர்—தொடர்ச்சி. பக்கங்கள்.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

''இப்படங்கள் மத்திய அரசின் ஓர் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பெற்றவை; இந்திரா காந்தி ஒரு கட்சியின் தலைவர் என்றாலும் அவர் இந்தியப் பிரதமர் என்ற முறையில் எடுத்துக் கொள்ளப் பெறுவார்; பிரதம அமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவர், மேதகு ஆளுநர் ஆகியோர் படங்களை அலுவலகங்களில் வைப்பது நடைமுறைதான்.'' (த.கோ.).. 19—22

கவன ஈர்ப்புகள்—

சுருக்கமாகக் கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.. 199, 376

குறுக்கீடு—

ஒரு கட்சி உறுப்பினர் பேச்சுக்கு பதில் கூற விரும்பினால், தாம் பேசும்போதோ அல்லது தம் கட்சியில் வேறு உறுப்பினர் பேசும்போதோ பதில் கூறலாம் (வ.செ.தி.).. 437, 438

தகவல் கோரல்—

ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் பல்வேறு விளக்கங்களைக் கேட்பது சரியல்ல. திடீரென்று கேட்டால் அமைச்சர்களிடம் அதற்கு பதில் அளிக்கிற வகையில் குறிப்புகள் இருக்காது (ஓ.பி.). 19

நடைமுறை—

அவை நடவடிக்கையை வெளியிடும்போது தவறுகள் ஏற்படின் உடனுக்குடன் அந்த நிலயங்கள் திருத்திக் கொள்ள வேண்டும் (த.கோ.) 187

உறுப்பினர் ஒருவர் 15–4–1981 அன்று பேரவையில் அளித்த தன்னிலை விளக்கத்தின்மீது சில உரிமை பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவற்றை நிராகரித்து பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்புரை யாவது :

''ஓர் உறுப்பினர் தான் ஒரு காரியம் செய்யவில்லை என்று சொன்னால் பொதுவாக அதை ஏற்பது தான் மரபு.




த—தொடர்ச்சி.


பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

அக் கூற்று தவறானது என்பவர்கள் தகுந்த ஆதாரங்கள் எதையும் என்னிடம் கொடுக்கவில்லை.

மேலும் இதன் மூலப் பிரச்சினை நீதி மன்றத்தில் விசாரணையில் இருப்பதால் இவைப் பற்றிய கருத்துக்களை வழக்கு முடியும்வரை இப் பேரவையில் எழுப்பாமல் இருப்பதுதான் முறையாகும்.

''எனவே, அவ்வுரிமைப் பிரச்சினைகளுக்கு என் இசைவை அளிக்க வில்லை''. (அறி.) 366

பிரதான எதிர்க் கட்சி அவையில் இல்லாதபோது இந்த அவையை நடத்திச் செல்வது ஜனநாயக ரீதியில் முறையா என்கின்ற பிரச்சினை எழுப்பப் பெற்றபோது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

''வேறு பல எதிர்க் கட்சிகள் இருக்கும்போது அவையை நடத்தலாம்.'' (த. கோ.) 25

பேசும் முறை—

குறிப்பிட்ட பொருள்பற்றி விவாதிக்க ஏன் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்பதுபற்றி சுருக்கமாக விளக்க வேண்டும்; விவரங்களுக்குள் போகக் கூடாது. (ஓ.தீ.) 490—493

மரபு—

பேரவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு கடிதமோ அல்லது அவர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதிலோ எழுதுவது முறையுமல்ல, மரபும் அல்ல. (த.கோ.) 16

வேறு ஒரு அவையில் பேசியதைப்பற்றி இந்த அவையிலே விவாதிக்கக் கூடாது. (வ.செ.தி.) 439

## த—தொடர்ச்சி.

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—

விவாதம் முடிந்த பிறகு விளக்கம் பெற வேண்டுமென்றால் சுருக்கமாகக் கேட்க வேண்டும்; உரையாற்றக் கூடாது.

மேலும் விவாதத்தில் கலந்து கொள்ளாத உறுப்பினர் விளக்கம் கேட்பது சரியல்ல. 582, 583

வினாக்கள் விடைகள்—

ஒரே கேள்வி திரும்பவும் கேட்கப் பெற்றபோது அனுமதி மறுக்கப் பெற்றது. (து.வி.) 354

கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக் கூடாது. 483

சுருக்கமாக, கேள்வியாகக் கேட்க வேண்டும். (து.வி.) 351, 462, 481

முன்பே பதிலளிக்கப்பட்ட வினாவை திரும்பவும் கேட்டபோது அனுமதி மறுக்கப் பெற்றது. (து.வி.) 485

மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை என அனுமதி மறுக்கப் பெற்றது. (து.வி.) 162

தாமரைக்கனி, திரு. இரா—

கிருஷ்ணகிரி வட்டம், கழிவு நீர் குடிநீரோடு கலத்தல் (க.ஈ.) 32, 34

திருச்செந்தூர் முருகன் கோவில், திரைப்படம் எடுக்க உரிமை வழங்கல். 456—458

திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப் பெற்றுள்ளது. க.ஈ.) 195, 197

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) 377—379

மதுரை, அண்ணா சிலையைச் செப்பனிடுதல் 345



## தி—தொடர்ச்சி.

பக்கங்கள்.

தியாகராசன், திரு. ஆர்.—

விருத்தாசலம், எண்ணெய் பிழியும் ஆலை 345—346

விருத்தாசலம் நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல் (க.ஈ.) 197, 199—200

திருமான், திரு. இரா.—

பேளூர் (ஏற்காடு), வசிஷ்டர் நதியில் பாலம் கட்டுதல் 170

திருவேங்கடம், திரு. பெ. சு.—

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) 377

### தீ.

தீர்த்தராமன், திரு. ப.—

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) 377, 380

நெருப்பூர், குடிநீர் தேக்கத் தொட்டிப் பணி 469—470

நெருப்பூர் (பெண்ணகரம் வட்டம்), கூட்டுறவுச் சங்கம் செயல் படாமை. 347—348

தீர்மானங்கள்—

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் (பார்க்க-தலைவர்)

### து.

துரைசாமி, திரு. பி. எஸ்.—

பர்கூர் மருத்துவமனை, பெண் டாக்டர் நியமனம் 177—179

### தொ.

தொழிலாளர்கள்—

ஓய்வு விடுதி கட்டுதல், வால்பாறை 350—352

காந்திமதி ரப்பர் தோட்டம், விளவன்கோடு (க.ஈ.) 375—377

திண்டிவனம் நகராட்சி, நகரசுத்தி தொழிலாளர்கள் வேலை நீக்கம். 176—177

பத்திரிகை ஊழியர்கள் மூன்றாவது உதிய கமிஷன் சிபார்சுகளை அமல் படுத்துதல். 352—356

தொ—தொடர்ச்சி.

| | பக்கங்கள். |
|---|---|
| தொழிற்சாலை— | |
| இந்தியா மீட்டார்ஸ் நிறுவனம், நிர்வாகம் | 13—15 |
| தொழிற்சாலைகள்— | |
| எண்ணெய் பிழியும் ஆலை, விருத்தாசலம் | 345—346 |
| சாராவித் தொழிற்சாலை, குச்சி வள்ளிக் கிழங்கு மாவிலிருந்து தயாரித்தல். | 13 |
| சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்தல் ஜோலார் பேட்டை. | 162—163 |
| சிறு தொழில்களை மேம்படுத்துதல், | 483—486 |
| திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் முடப்பெற்றுள்ளது. (க.ஈ.) | 195—197 |
| ந. | |
| நல்லப்பன், திரு. தி. கா.— | |
| திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.) | 377 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் | 203, 245—250 |
| நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்.— | |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் | 254—259 |
| நா. | |
| நாராயணசாமி, திரு. கே.— | |
| விருதாசலம் நகராட்சி நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல் (க.ஈ.) | 197 |
| நி. | |
| நிதி அலுவல்கள்— | |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் | 201—276, 381—449, 503—561 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு. | 32—126 |
| பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 561—585 |



ந—தொடர்ச்சி.

| | பக்கங்கள். |
|---|---|
| நினைவுச் சின்னங்கள்— | 345 |
| அண்ணா சிலையைச் செப்பனிடுதல், மதுரை. | |
| நீக்கம்— | 367, 368—369 |
| நெடுஞ்செழியன், டாக்டர் இரா.— | |
| தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் (ஒ.தீ.) | 191—195 |
| தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது (த.கோ.) | 185—186 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 561, 562, 575—584 |
| நெடுமாறன், திரு. ப.— | |
| கட்சித் தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது (த.கோ.) | 22 |
| தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மைய அரசு திருப்பியது (த.கோ.) | 16 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் | 416, 429 439—542 |
| ப. | |
| பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம்.— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) | 365 |
| பழனிமுத்து, திரு. சி.— | |
| பாலர் பள்ளிகளைக் கட்டுப் படுத்துதல். | 1—6 |
| பழனியப்பன், திரு. கு. ப.— | |
| விழுப்புரம் அரசு மருத்துவ மனை, எக்ஸ்ரே, எலும்பு முறிவு பிரிவுகள். | 181 |

பக்கங்கள்

பழனிவேல், திரு. என்.—

உயர்நிலைப் பள்ளிகள், வரலாறு-புவியியல் தனித் தனியே கற்பித்தல். 10—11

ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவித்தல். 336—341

காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை, விளவன்கோடு (க.ஈ.) 377

திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மூடப்பெற்றுள்ளது. (க.ஈ.) 195

பாசனம்—

கீழ் பவானி வாய்க்கால், கான்கிரீட் லைனிங் போடுதல். 356—358

குளங்களை சீர்படுத்துதல், கன்னியாகுமரி மாவட்டம். 359—360

பொன் விளைந்த களத்தூர் ஏரி, மண் கரையினை அணைக் கட்டாக்குதல். 358—359

பரமலை, திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— கூட்டுறவு. 89—92

பாலகிருஷ்ணன், திரு. வி.—

சிவகாசி-விருதுநகர் சாலை, செப்பனிடுதல் 468

மாரனேரி, விவசாயக் கிடங்கு கட்டுதல். 348

பாலங்கள்—

மழவனேரி—நெடுங்குளம் ஊர்களை இணைத்து பாலம் கட்டுதல், திருமங்கலம் தொகுதி 459—460

பேளூர் (ஏற்காடு), வசிஷ்டர் நதியில் பாலம் கட்டுதல் 170

பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி. பி.—

குஜிலியம்பாறை, பேருந்து நிலையம் கட்டும் பணி 467—468

பிரபாகரன் திரு. ஜே. சி. டி.—

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம், நிர்வாகம் 13—15



பக்கங்கள்.

பிரபாகரன், திரு. ஜே. சி. டி.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு காவல் துறை தீயணைப்புப் பணிகள் 410—416

பூங்காவனம், திரு. என். ஏ.—

திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.அ) 377—380

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— காவல் துறை, தீயணைப்புப் பணிகள் 267—273

கூட்டுறவு 125

பொன்னையன், திரு. சி.—

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தை மைய அரசு திருப்பியது (த. கோ.) 18

வரவு செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— கூட்டுறவு 35, 36, 100—126

போக்குவரத்து—

கம்பம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் திற்கு டிப்போ 183—185

சென்னை-வேதாரண்யம், விரைவுப் பேருந்துப் பணி 182—183

பேருந்து நிலையம் கட்டும் பணி, குஜிலியம்பாறை 467—468

ம.

மணி, திரு. டி.—

காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்னை, விளவன்கோடு (க.ஈ.அ) 375—377

குமரி மாவட்டத்தில் கிடைக்கும் வைடூரியங்கள் 360—362

திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது (க.ஈ.அ) 195

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— காவல் துறை, தீயணைப்புப் பணிகள் 203

ம—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| மணிமாறன், திரு. ஆர்.— | |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—காவல் துறை தீயணைப்புப் பணிகள் | 381—395 |
| மருத்துவமனைகள்— | |
| ஆரம்பச் சுகாதார நிலையங்கள், செவிலியர்கள் நியமனம் | 474—478 |
| எட்டயபுரம், விரிவாக்குதல் | 179—181 |
| திருத்தணி, கூடுதல் வசதிகள் | 181—182 |
| நீர்முளையில் மருத்துவ நிலையம் அமைத்தல் நீர்முளை, (தலைஞாயிறு ஒன்றியம்) | 472—474 |
| பர்கூர், பெண் டாக்டர் நியமனம் | 177—179 |
| மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு ஜெனரேட்டர் வாங்குதல், இராமநாதபுரம் | 470—472 |
| மேல்-சித்தாமூர், ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் | 480—483 |
| விழுப்புரம், எக்ஸ்ரே-எலும்பு முறிவு பிரிவுகள் | 181 |
| மாணிக்கம், திரு. எம். எஸ்.— | |
| நீர்முளை (தலைஞாயிறு ஒன்றியம்), மருத்துவ நிலையம் அமைத்தல் | 472—474 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—கூட்டுறவு | 82—85 |
| மாரிமுத்து, திரு. த.— | |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—கூட்டுறவு | 53—57 |
| மின்சாரம்— | |
| குருவி நீர் வீழ்ச்சி, கம்பம் தொகுதி | 453—454 |
| பாலாறு படுகை விவசாய மின் இணைப்பு | 160—128 |




ம—தொடர்ச்சி.


| | பக்கங்கள். |
|---|---|
| மின்சாரம்—தொடர்ச்சி. | |
| மின் நிலையம் அமைத்தல், அஞ்சு கிராமம் (குமரி மாவட்டம்) | 162 |
| மின் வாரியம், தாழ்த்தப்பட்டோருக்கு வேலை | 157—159 |
| விநியோகத்தை முறைப்படுத்துதல் (திண்டுக்கல்) | 455 |
| முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | |
| அஞ்சு கிராமம் (குமரி மாவட்டம்), மின் நிலையம் அமைத்தல் | 162 |
| முத்துசாமி, திரு. சு. | |
| திருவண்ணாமலை சாலை விபத்து (க.ஈ.அ.) | 378—381 |


ர


| | |
|---|---|
| ரகுமான்கான், திரு. அ. | |
| தமிழ்நாடு கருவூலத்துறை ஊழியர்கள் போராட்டம் (ஒ.தீ.) | 187 |
| ரங்கசாமி, திரு. ஆர். | |
| வரவு செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு—கூட்டுறவு | 97—100 |
| ரமணி, திரு. கு. | |
| அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) | 488—491 |
| ஆரம்பச் சுகாதார நிலையங்கள், செவிலியர்கள் நியமனம் | 474—478 |

## வ.


பக்கங்கள்.

வரதராஜன், திரு. என்.

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை (ஒ.தீ.) 488

திண்டுக்கல் மின் விநியோகத்தை முறைப் படுத்துதல் 455

வரவு செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 202

விசயலட்சுமி, செல்வி வி.

பொய்மான் கரடு (சேலம்) சுற்றுலாத்தலமாக்கல் 166—167

வரவு செலவுத் திட்டம் 1981—82, வாக்கெடுப்பு கூட்டுறவு 65—67

விபத்துக்கள்

சென்னை, சைதை மசூதித் தெருவில் தீ விபத்து (க.ஈ.அ.) 498

வீரமுடையான் நத்தம் கிராமம் தீ விபத்து, (க.ஈ.) 30—32

வின்சென்ட், திரு. மி.

கன்னியாகுமரி மாவட்டம், குளங்களை சீர் படுத்துதல் 359—360

பத்திரிகை ஊழியர்கள் மூன்றாவது ஊதிய கமிஷன் சிபார்சுகளை அமல்படுத்துதல் 352—356


## வ—தொடர்ச்சி.


பக்கங்கள்.

வீட்டு வசதி

நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன் (க.ஈ.அ) 498—502

வீராசாமி, திரு. த.

வரவு-செலவுத் திட்டம், 1981-82—வாக்கெடுப்பு கூட்டுறவு 85—88

வெங்கட சுப்பிரமணியம், திரு. ப.

தமிழ்நாட்டு வரலாற்று நூல் வெளியிடுதல் 8—10

வெளியீடுகள்

தமிழ்நாட்டு வரலாற்று நூல் வெளியிடுதல் 8—10


## ஜ.


ஜகத்ரட்சகன், திரு எஸ்.

வரவு செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 447—449


## ஹ.


ஹண்டே, டாக்டர் எச். வி.

கிருஷ்ணகிரி வட்டம், கழிவு நீர் குடி நீரோடு கலத்தல் (க.ஈ.அ.) 32—35

ஹேமச்சந்திரன், திரு. ஜே.

காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை, விளவன்கோடு (க.ஈ.அ) 377

பத்திரப்பதிவுத்துறை சப் ரிஜிஸ்தரார் நியமனம் 163—166

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை 1981, மே 4.

சித்திரை 22, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்".

ஆராய்ந்து சேர்ந்த இனத்துடன் செயலைப் பற்றி நன்றாகத் தேர்ந்து தானும் எண்ணிப்பார்த்து செய்கின்றவர்களுக்கு அரிய பொருள் ஒன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 947 முதல் 950 வரை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

நர்சரி பள்ளிகளை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 951—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நர்சரிப் பள்ளிகளை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. பழனிமுத்து ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நர்சரிப் பள்ளிகள் தினமும் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் வேறு பள்ளிகளுக்குச் சென்று படிக்கும்

போது, மேல் வகுப்பில் சேர்த்துக் கொள்வதில்லை. ஆகவே, அவர்களுடைய காலம் வீணாகிறது. அதை மனதிலே கொண்டு உடனடியாக ஏதாவது சட்ட திருத்தத்தைக் கொண்டு வர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகள் அரசின் சார்பிலே ஒரு 30 பள்ளிகளைத் தவிர, நடத்தப்படுவதில்லை. தனிப்பட்டவர்கள் இத்தகைய பள்ளிகளை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். 3 வயது வந்த உடனே தங்களுடைய பிள்ளைகள் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களுக்கு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, புதிதாக நர்சரி பள்ளிகள் ஆம்பிக்கின்றவர்கள் அதிகப் பணத்தை வாங்கி, சில இடங்களிலே லாபநோக்கோடு நடத்துவதாக புகார் வந்திருக்கிறது அரசுக்கு. அந்த அடிப்படையிலே தான் இதற்கு ஒரு கமிட்டி அமைத்து இன்றைக்கு அறிக்கை தரப்பட்டு அவைகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான ஒரு சட்ட முன்வடிவை இப்போது தயாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். அது சட்டசபையிலே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றியதற்குப் பிறகு, இவைகள் எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரும்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகின்ற நர்சரிப் பள்ளிகள் அரசு அங்கீகாரம் பெற்று நடக்கின்றனவா அல்லது அவரவர்கள் விருப்பப்படி நடத்து கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் பணம் தரவில்லை. ஆகவே நம்முடைய கட்டுப் பாட்டுக்குள் இல்லை என்ற அடிப்படையில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருகின்ற அந்த அடிப்படை உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நர்சரிப்பள்ளிகளை ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த புதிதாக ஒரு சட்டம் தேவைப்படுகிறது. அதைத்தான் கொண்டு வருவதற்கு இருக் கிறோம். அதைக் கொண்டு வர முன்னேற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நர்சரிப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், ஏராளமான நன்கொடைகளைத் தனியாரிடத்திலே அனுதினமும் வசூல் செய்துகொண்டு இருக்கிறார்கள். அந்தக் கல்வித்துறையை வியாபாரத் துறையாக மாற்றுகின்ற வகையில் அவர்களுடைய பணி இருப்பதாக அரசுக்குத் தெரியுமா? இந்த நர்சரி பள்ளிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். இந்தக் கமிட்டியில் இடம் பெற்றிருக்கிற உறுப் பினர்கள் பெயர்களை அறிவிப்பார்களா? அந்தக் கமிட்டி இது வரையில் ஏதாவது தாக்கீது அனுப்பி இருக்கிறதா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி எல்லாம் முன்பே அமைக்கப்பட்டது. அவர்கள் அறிக்கையைத் தந்து, அதன் மீது மசோதா தயாராகி அது இப்போது சட்டத் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கமிட்டி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வருவதற்கு முன்னாலேயே அமைக்கப்பட்டு, அரசுக்கு அறிக்கை தரப்பட்டது. அந்த அடிப்படையில்தான் நாம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவர இருக்கிறோம். மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, நர்சரி பள்ளியை ஆரம்பிப்பவர்கள் 3 வயதில் இருந்து உள்ள குழந்தைகளுக்குக் கல்வி சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் அதிக நன்கொடை வசூல் செய்கிறார்கள். தரமான கல்வியும் அங்கே சொல்லிக் கொடுப்பது இல்லை. மேலும், மே மாதம் போன்ற லீவ் காலங்களில் கூட அவர்கள் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூல் செய்கிறார்கள். தற்போது பொதுமக்களிடத்தில் 3 வயது குழந்தைகளை நர்சரிப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆர்வம் இருப்பதால், அது மாதிரியான நர்சரி பள்ளிகளை அரசே ஒவ்வொரு நகரங்களிலும், மற்ற இடங்களிலும் நடத்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகள் அதிகப் பணம் வாங்குகிறார்கள் என்றால் அது சரியானதல்ல என்று சொல்கிற அளவிற்கு நாம் சொல்லலாமே தவிர, அது ஒரு குற்றம்போல் சொல்ல முடியாது. நாம் தான் அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கிறோம். ஒரு டாக்டரிடம், ஒரு வக்கீலிடம் சென்று அல்லது வேறு சிலரிடத்தில் அதிகப் பணத்தைக் கொடுத்து காரியங்களைச் செய்துகொள்வதைப் போல, அந்தப் பள்ளி நடத்துகிறவர்களிடத்திலும் கொண்டுபோய்க் கொடுக்கிறோம். அவர்கள் யாரும் வந்து தவறான முறையில் பணம் வாங்கிச் செல்வது இல்லை. அவர்களுக்கு இருக்கின்ற உரிமையைப் பயன்படுத்தி அவர்கள் அந்தப் பள்ளிகளை நடத்துகிறார்கள். இஷ்டம் உள்ளவர்கள் வாருங்கள், இல்லையென்றால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் உரிமையை நாம் எப்படித் தடுக்க முடியும்? இதுவரையில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கும் முயற்சியை அரசு எடுக்கவில்லை. நாமும் வாய்ப்புத் தராமல், வாய்ப்பு தருகின்ற ஆர்வம் உள்ளவர்கள் முயற்சியிலும் நாம் தடை செய்ய இறங்குவது சரியல்ல என்ற அடிப்படையில்தான், அதை நாம் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும், அது முறையாக நடத்தப் பெறுவதற்கான வகையில் காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில்தான் ஒரு சட்டத்தின் மூலம் அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, மாவட்டம் தோறும் பெருவாரியான நர்சரிப் பள்ளிகளைத் துவக்கி, குறைந்த கட்டணம் வசூலித்து, அப்படி வசூல் செய்கிற தொகையை, வேலையில்லாமல் படித்து, பட்டம் பெற்றுள்ளவர்களை அந்தப் பள்ளியில் அமர்த்தி, அவர்களுக்கு அந்தப் பணத்தை ஊதியமாகக் கொடுக்க இந்த அரசு ஏதாவது முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 வயதுக்கு மேலே 14 வயதுக்குள் இருக்கின்ற குழந்தைகளுக்குக் கல்வி தர வேண்டும் என்ற குறிக்கோளை வைத்துக்கொண்டு இருக்கிற அரசு, அதிலே அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கிறது என்றாலும், 3 வயது முதல் 6 வயதுக்குள் இருக்கிற குழந்தைகளுக்கு நர்சரிக் கல்வியைப் பற்றிய சிந்தனையை மத்திய அரசும், மாநில அரசும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறது. அது பற்றி நடவடிக்கை எடுக்க மாநில அரசு முயற்சி செய்யும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகள் ஆங்காங்கே அரசின் அங்கீகாரம் இல்லாமல் துவங்கப்பட்டு இருப்பதால், அந்தப் பள்ளிகளில் படித்துவிட்டு வந்த குழந்தைகள் அங்கீகாரம் பெற்ற ஆரம்பப் பள்ளிகளில் படிக்க முடியாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைத்து, அதன் நடைமுறைகளைச் சீரமைப்பது பற்றி பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அந்த அறிக்கை வருகின்ற வரையில் இடைக்காலத்தில் புதிதாக நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கக் கூடாது என்று தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கின்ற விதத்தில் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம். அதற்காக முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். அந்த நர்சரிப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் ஆங்கிலத்தை மட்டுமே படிக்கிறார்கள். அங்கே நடைபெறுகின்ற முக்கியமான தவறாக, ஒரு பெரிய தவறாக நாம் கருதுவது தமிழைக் கற்றுக் கொடுக்காமல், முழுக்க முழுக்க அவர்கள் ஆங்கிலத்தில் பாடங்கள் சொல்லித் தருவதைத்தான் எல்.கே.ஜி., யு.கே.ஜி., என்ற அளவிலும், 1—2—3— வகுப்புகளிலும் அவர்கள் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதால், நாம் நடத்துகின்ற ஆரம்பப் பள்ளிகளுக்கு அவர்கள் வருகின்றபோது, அங்கேயுள்ள கல்வி முறையை ஒட்டி அவர்கள் வர முடியாத அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பள்ளிகளில் காணப்படுகிற மிகப் பெரிய குறையாக அரசு இதைத் தான் கருதுகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நர்சரிப் பள்ளிகளில் தமிழை மறந்துவிட்டு, ஆங்கிலத்தை மட்டுமே கற்றுத் தருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அங்கேயும் தமிழை ஆங்கிலத்திற்குச் சமமாகக் கற்றுத்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் மனதில் வைத்துத்தான் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அவைகளைக் கொண்டு வருவதற்கு ஒரு சட்டத்தை நாம் இயற்ற விரும்புகிறோம். இப்போது நடத்துகின்ற நர்சரிப் பள்ளிகளில் தமிழ் கிடையாது என்ற குறையைப் போக்க அரசு விரும்புகிறது. பெரும்பாலும் தமிழிலே நர்சரிப் பள்ளிகள் நடக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. தமிழ் கட்டாயமாக அங்கே சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்று அரசு கருதுகிறது. இவைகள் எல்லாம் அந்தச் சட்டம் வருகிறபோது நர்சரிப் பள்ளிகளில் செய்வதற்கான வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

[முற்பகல் 9.10]

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் அளிக்கும்போது நாமாகப் பணத்தைத் தருகிறோம்; நாமாக குழந்தைகளைச் சேர்க்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? ஆங்கில மோகமா? அல்லது வேறு ஏதாவது காரணமா? ஆங்கில மோகம் என்றால் அந்த மோகத்தைக் களைய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மேலும் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவரவர்களே, ஆங்கிலத்தின் மீது இருக்கிற மோகம் தான் காரணம். ஆங்கிலம் படித்துவிட்டால் அறிவு வந்துவிடுகிறது என்ற தவறான ஆர்வம் இருக்கிறது. அதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். மக்களிடம் அந்த மோகம் ஏற்படாமலிருக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் அந்தக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும். நாம் அந்த மோகம் தவறு என்று கருதி, தீவிர நடவடிக்கை எடுத்தால் அது அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பால் பெரும் எதிர்ப்பை உருவாக்கிவிடும். அத்தகைய சூழ்நிலைகளை இன்றைக்கு நாட்டில் பார்க்கிறோம். அந்தத் தவறான எதிர்ப்பு உருவாகாமல் இருக்க வேண்டி சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத்தர வேண்டிய பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, மாவட்டம் தோறும் பெருவாரியான நர்சரிப் பள்ளிகளைத் துவக்கி, குறைந்த கட்டணம் வசூலித்து, அப்படி வசூல் செய்கிற தொகையை, வேலையில்லாமல் படித்து, பட்டம் பெற்றுள்ளவர்களை அந்தப் பள்ளியில் அமர்த்தி, அவர்களுக்கு அந்தப் பணத்தை ஊதியமாகக் கொடுக்க இந்த அரசு ஏதாவது முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 வயதுக்கு மேலே 14 வயதுக்குள் இருக்கின்ற குழந்தைகளுக்குக் கல்வி தர வேண்டும் என்ற குறிக்கோளை வைத்துக்கொண்டு இருக்கிற அரசு, அதிலே அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கிறது என்றாலும், 3 வயது முதல் 6 வயதுக்குள் இருக்கிற குழந்தைகளுக்கு நர்சரிக் கல்வியைப் பற்றிய சிந்தனையை மத்திய அரசும், மாநில அரசும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறது. அது பற்றி நடவடிக்கை எடுக்க மாநில அரசு முயற்சி செய்யும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகள் ஆங்காங்கே அரசின் அங்கீகாரம் இல்லாமல் துவங்கப்பட்டு இருப்பதால், அந்தப் பள்ளிகளில் படித்துவிட்டு வந்த குழந்தைகள் அங்கீகாரம் பெற்ற ஆரம்பப் பள்ளிகளில் படிக்க முடியாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைத்து, அதன் நடைமுறைகளைச் சீரமைப்பது பற்றி பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அந்த அறிக்கை வருகின்ற வரையில் இடைக்காலத்தில் புதிதாக நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கக் கூடாது என்று தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கின்ற விதத்தில் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம். அதற்காக முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். அந்த நர்சரிப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் ஆங்கிலத்தை மட்டுமே படிக்கிறார்கள். அங்கே நடைபெறுகின்ற முக்கியமான தவறாக, ஒரு பெரிய தவறாக நாம் கருதுவது தமிழைக் கற்றுக் கொடுக்காமல், முழுக்க முழுக்க அவர்கள் ஆங்கிலத்தில் பாடங்கள் சொல்லித் தருவதைத்தான் எல்.கே.ஜி., யு.கே.ஜி., என்ற அளவிலும், 1—2—3— வகுப்புகளிலும் அவர்கள் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதால், நாம் நடத்துகின்ற ஆரம்பப் பள்ளிகளுக்கு அவர்கள் வருகின்றபோது, அங்கேயுள்ள கல்வி முறையை ஒட்டி அவர்கள் வர முடியாத அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பள்ளிகளில் காணப்படுகிற மிகப் பெரிய குறையாக அரசு இதைத்தான் கருதுகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஏ. கி. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நர்சரிப் பள்ளிகளில் தமிழை மறந்துவிட்டு, ஆங்கிலத்தை மட்டுமே கற்றுத் தருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அங்கேயும் தமிழை ஆங்கிலத்திற்குச் சமமாகக் கற்றுத்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் மனதில் வைத்துத்தான் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அவைகளைக் கொண்டு வருவதற்கு ஒரு சட்டத்தை நாம் இயற்ற விரும்புகிறோம். இப்போது நடத்துகின்ற நர்சரிப் பள்ளிகளில் தமிழ் கிடையாது என்ற குறையைப் போக்க அரசு விரும்புகிறது. பெரும்பாலும் தமிழிலே நர்சரிப் பள்ளிகள் நடக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. தமிழ் கட்டாயமாக அங்கே சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்று அரசு கருதுகிறது. இவைகள் எல்லாம் அந்தச் சட்டம் வருகிறபோது நர்சரிப் பள்ளிகளில் செய்வதற்கான வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

[முற்பகல் 9.10]

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் அளிக்கும்போது நாமாகப் பணத்தைத் தருகிறோம்; நாமாக குழந்தைகளைச் சேர்க்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? ஆங்கில மோகமா? அல்லது வேறு ஏதாவது காரணமா? ஆங்கில மோகம் என்றால் அந்த மோகத்தைக் களைய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மேலும் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவரவர்களே, ஆங்கிலத்தின் மீது இருக்கிற மோகம் தான் காரணம். ஆங்கிலம் படித்துவிட்டால் அறிவு வந்துவிடுகிறது என்ற தவறான ஆர்வம் இருக்கிறது. அதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். மக்களிடம் அந்த மோகம் ஏற்படாமலிருக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் அந்தக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும். நாம் அந்த மோகம் தவறு என்று கருதி, தீவிர நடவடிக்கை எடுத்தால் அது அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பால் பெரும் எதிர்ப்பை உருவாக்கிவிடும். அத்தகைய சூழ்நிலைகளை இன்றைக்கு நாட்டில் பார்க்கிறோம். அந்தத் தவறான எதிர்ப்பு உருவாகாமல் இருக்க வேண்டி சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத்தர வேண்டிய பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: தலைவரவர்களே, எவ்வளவுதான் சட்டங்கள் (பாட்டாலும் வசதி படைத்தவர்கள் தன்னுடைய பிள்ளைகள் ஆங்கிலம் படிக்க வேண்டுமென்ற ஆர் வத்தில் தனியாக டியுஷன் வைத்து அந்தக் காரியத்தைச்செய்து விடுகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் அத்தகைய வசதிகளைப் பெறாத காரணத்தால், இன்றைக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிற காரணத் தால் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் நர்சரிப் பள்ளிகளை அரசாங்கத்தின் சார்பிலே ஏற்படுத்தி, அவர்களுக்கும் ஆங்கிலம் போதிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஆங்கிலம் சொல்லித் தருவதே மிக மிகத் தவறு என்று கல்வித் துறை நிபுணர்கள் கருதுகிறார்கள். ஒரு அந்நிய மொழியை இளம் வயதிலே சொல்லித்தருவது தவறு என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். அத்தகைய தவறைச் செய்வதற்கு அரசு தயா ராக இல்லை. இருந்தாலும் அரசைப் பொறுத்தவரையில் நர்சரிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு அவை முறையாக நடைபெற வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அது செயல்படும்போது தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் வாழும் அந்தப் பகுதிகளில் இத்தகையப் பள்ளிகளை ஆரம்பிக்கலாம். இப்போது நடை பெறும் குழந்தைகள் காப்பகங்கள் எல்லாம் கூட ஓரளவுக்கு நர்சரிப் பள்ளிகளைப் போலத்தான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்கள் இந்த நர்சரிப் பள்ளிகளில் டீச்சர்களாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுக்குக் குறைந்த சம்பளம், 100 ரூபாய், 80 ரூபாய்தான் கொடுக்கிறார் கள். மற்றப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுபோல் அந்த நர்சரிப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நர்சரிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக் கிறார்களா என்பதுதான் பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது. அந்த இளம் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிற பயிற்சி எதுவும் இல்லாமல், இந்தக் கல்வியைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லும்போது பயிற்சி பெற்றவர்கள் சேவை அந்தக் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதுதான். அடுத்த கட்டமாக அவர்களுடைய சம்பளப் பிரச்சனை.



பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 952.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டமேற்படிப்பு படித்த பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு ஊதியம் அளிக்கவேண்டுமென அரசு உத்தர விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த உத்தரவு எப்படி அமுல் நடத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) அரசாணை எண். 42, கல்வி, நாள் 10—1—1969ல் வெளியிடப் பட்டுள்ள ஆணையின்படி உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், எம். எட். பயிற்சிப் பட்டம் பெற்றால் மேலும் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் பெறுவர்.

(இ) மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகுதி களாக முதுகலைப்பட்டத்துடன் பி. எட். பயிற்சிப் பட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கல்வித் தகுதி மட்டும் பெற்ற மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பதற்கில்லை. எம். எட். பயிற்சி பட்டம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்த பட்ட மேல்படிப்புத் படித்த பள்ளி ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தை எடுக்க வரும்போது, அந்த ஊக்குவிப்பு எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது? அதிக ஊதியம் கொடுப்பதால் எனக்கு, உனக்கு என்ற போட்டி வரும்போது ஒரே தகுதி பெற்ற இருவர் இருந்தால் அவர்களில் யாருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரே தகுதி பெற்றவர் களாக இருந்தால் அவர்களுடைய அனுபவத்தை அடிப்படையாக வைத்து அந்த வாய்ப்பு தரப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்ற அந்த ஆண்டுகளைக் கணக்கிட்டு அதன் அடிப்படையிலேயா அல்லது அந்தப் பள்ளியிலே சேர்ந்து அவர்கள் பணியாற்றிய வகையில் அவர்களுடைய சர்வீஸ் களின் அடிப்படையிலேயா இவ்வாறு முன்னுரிமை வழங்கப்படு கின்றது? அல்லது அவர்கள் பி.ஏ. பாடத்திலே படித்த பாடத் தின் அடிப்படையிலே முன்னுரிமை வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விதிகளை நான்கைந்து நாட்களுக்கு முன்புதான் வெளியிட்டிருக்கிறோம். இப்போது அது என்னிடத்திலே இல்லை. ஆகவே தனியாகக் கேள்வி கேளுங்கள்.

## தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிடும் திட்டம்

*வினா எண். 953.—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிடுவதற்காகத் தற்போது டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தலைமையில் குழு ஒன்று இயங்கி வருகிறது. தமிழ் நாட்டு வரலாற்றின் முதல் தொகுதியாக "தொல் பழங்காலம்" என்னும் நூல் முன்னரே வெளியிடப் பட்டுள்ளது. இரண்டாம் தொகுதி "சங்ககாலம் (அரசியல்), சங்ககாலம் (வாழ்வியல்)" ஆகிய இரண்டு பாகங்கள் எழுதி முடிக்கப்பட்டு அச்சிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மூன்றாவது, நான்காவது தொகுதிகளாக முறையே "பல்லவர்-பாண்டியர் காலம்" "சோழர் காலம்" என்னும் தலைப்புகளில் பெரும் பகுதி எழுதி முடிக்கப்பட்டுக் கட்டுரைகள் குழுவின் ஆய்வில் இருந்து வருகின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுக் குழுவிலே வெறும் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த பெரியவர்கள் மட்டும் தான் இருக்கிறார்களா ? அல்லது தமிழ் அறிவு பெற்ற அறிஞர்களும் இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, டாக்டர். தா. தா. திருநாவுக்கரசு போன்ற தமிழ் அறிஞர்களும் அதிலே இருக்கிறார்கள்.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே பல வரலாற்று நூல்கள் ஆங்கிலத்திலே தமிழ் நாட்டைப் பற்றி வெளியிடப் பட்டுள்ளன. அந்த நூல்களிலே பல பிழைகள் இருப்பதாக நான் அறிகிறேன். அந்தப் பிழை களைத் திருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? கல்லூரியிலே வைக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் இருக்கின்ற , தவறுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. கோவைத் தம்பி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு வரலாற்றைப் பொறுத்த வரையில் சங்க காலம், பல்லவர் காலம் என்ற இந்த அளவோடு இருக்குமா அல்லது சுதந்திரம் கிடைத்ததற்குப் பிறகு தமிழ்நாட்டிலே ஏற்பட்ட ஆட்சி அமைப்புகள் மற்றும் பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்கள் பற்றி எல்லாம் அந்தத் தமிழ் நாட்டு வரலாற்று நூலில் இடம் பெறுமா ? அப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் அதிலே அதிகம் வகிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இக்காலம் வரையில் எழுதப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வரலாற்று நூலை எழுதுகின்ற குழுவிலே எத்தனை பேர்கள் அங்கத்தினர் களாக இருக்கிறார்கள் ? அவர்கள் யார் யார் என்பதை அறிவிக்க முடியுமா ? மேலும் அந்த வரலாற்றினை ஆங்கிலத்திலே மொழி பெயர்ப்பதற்கான முயற்சியினை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களின் தலைமையிலே இயங்கு கின்ற டாக்டர் தா. தா. திருநாவுக்கரசு, டாக்டர் சி. இராமச் சந்திரன், டாக்டர் ஏ. நம்பி ஆரூரான், டாக்டர் கே. ஜே. ராமன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழு இந்த வரலாற்றினை எழுதுகின்றது. அவர்கள் பல்வேறு பிரிவு களாகப் பிரித்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு தொகுதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. இன்னொரு தொகுதி அச்சேறுவதற்கான நிலைமையிலே இருந்து கொண் டிருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் களின் ஆட்சிக் காலத்திலே டிஸ்டிரிக்ட் கெஸட்டியர் என்ற நூல்களை வெளியிட்டார்கள். அதிலே அந்தந்த மாவட்டங்களைப் பற்றிய வரலாறு சம்பந்தமாகத் தொகுத்து வெளியிட்டார்கள். அந்த

கெஸட்டியர்களை மீண்டும் புதுப்பித்து அந்த அந்த மாவட்டங்கள் பற்றிய வரலாறுகளையும் தொகுத்து வெளியிடும் வேலையினை யும் இந்தக் குழு ஆராய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதற்கான தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நாட்டு வரலாற்று நூலை வெளியிடுவதற்கு அரசு எப்போது ஆணையிட்டது ? இதுவரையிலே அதற்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டது, எவ்வளவு செலவழிக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது ? கலை, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றோடு ஆட்சி மாற்றத்திற்கான எல்லா விவரங்களும் இந்த நூலிலே இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—20.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18—8—1970-ல் எடுக்கப்பட்ட முடிவை அடிப்படையாக வைத்துத்தான், இந்த முயற்சி தொடங்கப் பட்டு, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வரலாறு என்கிற அடிப்படையில் என்னென்ன செய்திகள் தேவையோ அவைகளையெல்லாம் தொகுத்து அவர்கள் தருவார்கள்.

உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு—புவியியல் பாடங்களைத் தனித்தனியே கற்பிக்கும் திட்டம்.

*வினா எண் 954.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு—புவியியல் ஆகிய இரு பாடங்களையும் ஒன்றாக இணைத்து கற்பிக்கும் நடைமுறையை மாற்றி ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனியாக கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளிகளில் வரலாறும் புவியியலும் தற்பொழுதே தனித்தனி பாடங்களாகத் தான் கற்றுத் தரப்படுகின்றன. தேர்வுகளில் மட்டும் இரண்டு பாடத்திற்கும் சேர்த்து மொத்தம் மதிப்பெண் 100 கொண்ட ஒரே கேள்வித்தாள் என்று இருந்தாலும், அதில் வரலாற்றுக்கு 50, புவியியலுக்கு 50 என்று தனித்தனியாகத்தான் கேள்விகளும் கேட்கப்படுகின்றன.



திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு பாடத்திற்கும், 100 மதிப் பெண்கள் என்று வைத்திருக்கிறபோது, குறிப்பாக வரலாற் றுக்கும், புவியியலுக்கும் ஏன் 50, 50 மார்க்குகள் வைக்க வேண்டும். வரலாறும், புவியியலும் ஒரு நாட்டிற்கு முக்கியமான பாடங்களாக இருக்கிற காரணத்தால், வருங்காலத் திலாவது அதைத் தனித் தனியாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் 100, 100 மதிப்பெண்கள் வைத்து, அந்தப் பாடங்களை விரிவாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அவைகள் விரிவாகத்தான் நடந்துக் கொண்டிருக்கின்றன. தனித்தனியாகத்தான் நடத்திக்கொண் டிருக்கிறார்கள். 1949—50-க்கு முன்னாலே அவைகள் தனித் தனியாக இல்லை. அப்போது சோஷியல் ஸ்டடீஸ் என்ற வரலாற் றையும் கலந்து ஒரே பாடமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அதற்குப் பிறகு தனித் தனியாகத்தான் நடத்தி கொண்டிருக்கிறார்கள். தனித் தனியாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு பாடமும் முக்கியமாகத்தான் தோன்றும். எல்லா வற்றையும் வைத்துப் பார்க்கிறபோது, இது மிகவும் முக்கியம். அதற்குப் பிறகு, இன்னொன்று என்று வரிசைப்படுத்தி, அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, வரலாற்றுக்கும், புவியியலுக்கும் 50, 50 மார்க்குகள் என்று வைத்து நடத்துவது இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் நல்லது என்று கருதித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டு, அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதிலே மாற்றம் தேவையில்லை என்றுதான் கல்வித் துறையும் கருதுகிறது.

க. பரமத்தி உயர்நிலைப் பள்ளி.

*வினா எண் 955—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், க. பரமத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற சுந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரமத்தியிலிருக்கும் பிள்ளைகள் மேல்நிலைப் பள்ளிக்குப் போகவேண்டுமானால் அங்கேயிருந்து கரூர் வரவேண்டும் அல்லது சின்னதாராபுரம் செல்ல வேண்டும். இரண்டுமே 20 மைல் தொலைவில் இருப்பதால், பரமத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு வந்திருக்கிற விவரப்படி, அங்கே இடவசதி இல்லை என்றும், மக்களின் பங்குத் தொகையான 25,000 ரூபாயை பொதுமக்கள் கொடுக்க முன்வரவில்லை என்றும், அங்கேயிருக்கும் பிள்ளைகள் கரூர் மற்றும் சின்னதாராபுரம் சென்று மேல்நிலைப் பள்ளிகளில் சேருவதற்கு வழி இருப்பதாலும், இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கான வழி முறைகள் காணப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதற்குக் காரணங்களைத் தெரிந்துகொண்டு, அதற்கு மாற்று வழிமுறைகள் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற சுந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி சின்னதாராபுரம், கரூர் போன்ற ஊர்களுக்குச் செல்ல வேண்டுமானால் 20 மைல் செல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்லியது போன்று 25,000 ரூபாயைக் கொடுக்க அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராகவும் இருக்கிறோம். அப்படி அந்தப் பணத்தைக் கட்டிவிட்டால், விரைவில் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பரிசீலனை செய்வதற்காகத்தான் அவைகள் எல்லாம் தேவை. முதலில் இவைகளை முடித்து விட்டு, பிறகு மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் புதியதாக மேல்நிலைப் பள்ளிகள் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? ஆம் என்றால் எத்தனை பள்ளிகள் துவங்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போதுள்ள உத்தேசப்படி அப்படி எதையும் ஏற்படுத்துவதாக இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 956 முதல் 960 வரை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 961.—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து எதில் ஆல்கஹால் (Ethyl Alcohol) தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) மத்திய அரசு அதற்கு அனுமதி அளித்து விட்டதா?

(இ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை இராசிபுரத்தில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) and (இ) கேள்விக்கு இடம் இல்லை.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்.

*வினா எண். 962.—திரு. ஜே. கி. டி. பிரபாகரன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் தற்போது யார் பொறுப்பில் இயங்கி வருகிறது?

(ஆ) அரசு இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(ஆ) உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: இப்போது இந்த 'பெல்' நிறுவனத்தை ஏற்று நடத்திவருகிற அந்த ஒப்பந்தம் செப்டம்பர் 21-டன் முடிவடைவதாகத் தெரிகிறது. செப்டம்பர் 21-க்குப் பிறகு மீண்டும் அந்த பெல் நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேச மில்லை என்று தெரிவித்தால் அதை அரசு பரிசீலனைக்கு ஏற்று அங்கிருக்கிற தொழிலாளர் பெருமக்களுடைய கோரிக்கையாக வைத்திருக்கிற அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசாங்கமே ஏற்று நடத்துமா என்ற கேள்விக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நலிவுற்றிருந்த அந்தத் தொழிற்சாலையை எடுத்து நிவாரணம் தேவைப்படுகிற நிறுவன மாக அறிவித்து அரசாங்கம் வேண்டிய உதவிகளை செய்து வந்தது. இப்போது 1978–79இல் ரூ. 2·27 இலட்சமும், 1979–80 இல் ரூ. 10.33 இலட்சமும், அந்த நிறுவனம் இலாபம் ஈட்டியிருக் கிறது. 1980–81 இல் ரூ. 30 இலட்சம் வரை இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்த நிறுவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற பிரச்னை இப்போது எதுவும் இல்லை.

திரு. ரா. உமாநாத்: இந்த பெல் நிறுவனத்தை எடுப்பதற்கு முன்பாக தனியார் துறையில் இருக்கும்போது அவர்களுக்குள்ளே ஏராளமான சண்டைகள் நடந்து அதற்குள் கொள்ளை அடித்து அதை க்ளோஸ் செய்து அதனால் உற்பத்தியும் தொழிலாளர் களும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கணக்கில் இருந்து உற்பத்தியும் சரி, 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் சரி, இலாபமும் சரி, அதிகரித்துக் கொண்டு வருகிறது என்று பார்க்கக்கூடிய நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் 'டேக் ஓவர்' செய்ய உத்தேசமில்லை என்று சொன்னீர்கள். இப்போது லீஸில்—லீஸ் அல்லது ஏதோ ஒன்றில்—அந்த பெல் நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காலக்கெடு செப்டம்பரில் முடிவடையப் போகிறது. மீண்டும் அந்த நிறுவனம் ப்ரைவேட் ஹான்ட்ஸ்க்குப் போனால் அந்தத் தொழிலாளர்களின் வேலை போய்விடும் என்ற பயம் இருப்பதால் அரசாங்கம் அந்த லீஸை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கவேண்டும் என்று சொல்லி ஏதாவது ரெப்ரஸென்டேஷன் வந்ததுண்டா? அப்படி யானால் அந்த ரெப்ரஸென்டேஷன் பேரில் அந்த லீஸை நீட்டிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பொதுவாக ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலை நலிவுறுகிறபோது அரசாங்கம் தேவையான உதவிகளைச் செய்து அந்த நிறுவனத்தைச் சீரமைப் பதற்கும் அது இலாபகரமாக ஓடுகிற நிலைக்கு வந்ததற்குப்



பின்னால், முன்னால் அதை வைத்து இருந்தவர்களிடம் திருப்பி ஒப்படைப்பது வழக்கமாக இருக்கிறது. இது வாடிக்கையான ஒன்று தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலும் சொல்லியிருக் கிறார்கள், இப்போதும் கேட்டிருக்கிறார்கள். இது 20–9–1981 நோடு நலிவுற்ற நிறுவனமாக இருக்கக்கூடிய அந்த காலவரம்பு முடிவடைகிறது. தொழிலாளர்களிடமிருந்து ரெப்ரஸென்டேஷன் என்னிடம் வந்ததாகத் தகவல் இல்லை. அப்படி வருமானால் அதன் மெரிட்டின் அடிப்படையில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 963 முதல் 966 வரை மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த மாமன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வரவில்லை. அது சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏதாவது எழுதி இருக்கிறார்களா? பேரவைத் தலைவர் அவர்கள் அவர்களோடு சேர்ந்து பேசி ஒரு சுமுகமான நிலையை உருவாக்கி அவர்கள் நாளை முதலாவது இம் மாமன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதுபற்றி விவ திப் பதற்காக எல்லாக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நான் இன்று 12 மணிக்கு கூட்ட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: தலைவரவர்களே, பிரதான எதிர் கட்சி இல்லாத நிலையில் இந்த அவையை நடத்திச் செல்வது ஜனநாயக ரீதியில் முறையாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தனை எதிர்கட்சிகள் இருக்கும் பொழுது, நீங்களும் இருக்கும் பொழுது சபையை நடத்தலாம். மாண்புமிகு சாகுல் ஹமீது அவர்களுக்குச் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தை

எழுதியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் எல்லா கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டிருக்கிறேன். ஏனென்றால் கடிதமோ, கடிதத்திற்கு பதிலோ சபாநாயகர் உறுப்பினர்களுக்கு எழுதுவது முறையும் அல்ல, மரபும் அல்ல. ஆகவே, எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஸ்ட்ராங் அப்ஜெக்ஷன். எங்கள் கட்சியினுடைய அப்ஜெக்ஷனைப் பற்றி நான் ரெக்கார்டு பண்ணுவதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் எதிர்க்கலாம்; அது வேறு விவகாரம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் உட்காரவேண்டும். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது. என்னுடைய அறைக்கு வந்து தெரிவியுங்கள்.

## (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மையஅரசு திருப்பியது.

திரு. ப. நெடுமாறன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்தை இந்த அவை அறிய விரும்புகிறது, அது பற்றி ஒரு அறிக்கையை அரசாங்கம் வைக்க முன்வருமா?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு விவர அறிக்கை தேவையில்லை என்று இப்போது கருதுகிறேன். ஆனால், இங்கே திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவிலே சில விளக்கங்களைக் கேட்டு, சில நாட்களுக்கு முன், மத்தியப் பேரரசிடமிருந்து கடிதம் வந்தது. அதைப் பற்றி சட்டத் துறையும் வருவாய்த் துறையும் ஆராய்ந்து, அவர்களுடைய விளக்கங்களுக்கு எல்லாம் பதிலைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட சட்ட அமைச்சரும், வருவாய்த்துறை



அமைச்சரும், முதலமைச்சர் அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இன்றோ அல்லது நாளையோ அதற்குப் பதில் போகும். பதில் வந்துகொண்டிருக்கிறது என்று தந்தி மூலம், அரசின் சார்பிலே அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்ள் பதில் சொல்லும்போது சொன்னார்கள், நிலச் சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமாக. இரண்டு மூன்று முறை நான் நிலச் சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமாகவும் பினாமி நில சட்டம் சம்மபந்தமாகவும் கேட்கும்போதெல்லாம், கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியதெல்லாம், மத்திய அரசு கேளாக் காதினராக இருக்கிறது. உடனடியாக அனுப்பவில்லை, என் கைகள் கட்டப் பட்டிருக்கின்றன. இடந் தெரியாதவர்கள், சினை ஆட்டைக் காட்டினார்கள் என்று கிராமப் பழமொழியை எல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது சொல்கிறார்கள், தந்தி அனுப்பி இருப்பதாகவும், பின்னாடி தபால் அனுப்புவோம் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் சகோதரர் நெடுமாறன் கேட்டபோது, அறிக்கையை இந்த மன்றத்தில் இப்போது வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இது மிக முக்கியமான விஷயம். இந்த அவையில் இருக்கக்கூடியவர்கள் ஏகமனதாக நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகவும், பினாமி நிலம் சம்பந்தமாகவும் நாம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஆகவே அமைச்சர் அவர்கள் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், இது குறித்து அவையிலே அறிக்கை வைக்கத் தேவையில்லை என்று சொல்வது இந்த அவையினுடைய சிரத்தையை அசிரத்தைப் படுத்துவதாகும் என்று நாங்கள் கருதுவதனால், கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக தங்களுடைய பதிலை அளிக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னாலே நான் பல சந்தர்ப்பங்களில் சொன்ன பதில்களில் எதுயெது தவறு என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதை மட்டும் நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். அது என்னவென்றால், இந்த அவைக்கு நான் அறிக்கை வைக்கத் தேவையில்லை என்று சொன்னது. தற்சமயம் தேவையில்லை என்று கருதுகிறேன் என்று சொன்னேனே தவிர, இந்த அவையை அவமதிக்கவில்லை. அதற்கு முன்னாலே நான் தெரிவித்த கருத்துக்கள் அப்படியே இருக்கின்றன. அதாவது, இந்த வார்த்தைகளுக்கு முன்னாலே நான் அப்போது சொன்ன அந்தக்கருத்துக்கள் அப்படியே இருக்கின்றன. மத்திய அரசிலிருந்து எங்களுக்கு வராமல், சில தினங்களுக்கு முன்னாலே நான், அதிலே சில சந்தேகங்கள் கேட்டு வந்தது என்று சொன்னேன். நான்

முதலிலே சொன்னது, பல நாட்களாக 234 நாளோ என்னவோ ஞாபகம் இல்லை, அதைப் போட்டுப் பூட்டி வைத்து இருக்கிறார்கள் என்று சொன்னேன். அது மட்டுமல்ல,

அங்கேயே ஒருசட்டத் துறை இருக்கிறது. அந்தச் சட்டத் துறையின் மூலமே மாநிலங்களில் இருந்து அனுப்பப்படுகிற சட்ட முன்வடிவுகள் தவறாக இருந்தால், அதை ஆராய்ந்து, அதிலே இருக்கின்ற தவறுகளைத் திருத்தி, இப்படிச் செய்தால் என்ன என்று மாநிலங்களுக்கு அனுப்பிக் கேட்டு இருக்கலாமே என்றுதான் சொன்னேன். சட்டத் துறை ஒன்று அங்கே இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்தினேன். மாநிலத்திலே மட்டும் சட்டத் துறை இல்லை. அங்கேயிருக்கிற சட்டத் துறை அதைச் செய்யாமல், அவர்கள் வேலை செய்ய வேண்டியதைக் கழித்துக் கட்டுகிறார்கள் என்று சொன்னேன். என்னுடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன, இன்னும் அவிழ்த்து விடவில்லை. அவிழ்த்து விடலாமா என்றுதான் கொரியைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். நீ செய்தது குற்றம் என்று சொல்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

இன்றைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். வந்தவுடன் வருவாய்த் துறையும், சட்டத்துறையும் அதிலே ஆழ்ந்து கவனத்தைச் செலுத்தி, அதற்குப் பதில் எழுதி, சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கையெழுத்து வாங்கி, முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இன்றோ நாளையோ நிச்சயமாக்ககடிதம் எழுதுவார்கள். ஏற்கனவே அவர்கள் அந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். ஆகவே, கடிதத்தை அனுப்புகிறோம் என்று தந்தி மூலமாகவும் தெரிவித்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, உங்களுக்கு அறிக்கை தேவைப்படுகிறபோது வைப்பதற்கு இந்த அரசாங்கம் என்றும் தயங்காது.

திரு. எல். இளையபெருமாள் : என்ன காரணத்திற்காக அதை இங்கே வைக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள் ?

திரு என். எஸ். வி. சித்தன்: என்ன சந்தேகம் கேட்டார்கள் அதைச் சொல்வதற்கு என்ன தயக்கம் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : என்ன சந்தேகம் கேட்டார்கள் என்பது அல்ல இப்போது பிரச்னை. அதனுடைய முழு விவரம் தற்போது இல்லை. ஆனால் அவர்கள் கேட்ட வினாக்களுக்கு கொரிகளுக்கு எல்லாம் பதில் தயாரித்து ஏற்கனவே ஹோம் மினிஸ்டிரிக்கு பதில் அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால், நாம் ஹோம் மினிஸ்டிரிக்கு அனுப்பிய பதில் மீது நடவடிக்கை எடுக்காமல், திடீரென்று பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து அந்தக் கொரிக்கு பதில் அனுப்பவில்லை என்று, நாங்கள் ஏற்கனவே அனுப்பிவிட்ட பிறகும், கடிதம் வந்திருக்கிறது. அதுதான் நிலைமை, அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதில் பேரில் ஏதாவது அவர்கள் (காங்கிரஸ் கட்சியினர்) கருத்துத் தெரிவிக்க விரும்புகிறார்களா ? சொல்ல மாட்டார்கள். சொல்ல முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: அமைச்சர் விளக்கம் கொடுக்கட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: விளக்கம் சொல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நாங்கள் பயப்படவில்லை. முறைகேடான நில மாற்றங்களை எடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. பின்வாங்கினால்தானே நாங்கள் விளக்கம் சொல்ல பயப்படவேண்டும் ? ஆகவே, பயப்படத் தேவையில்லை. பயப்படமாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் பல்வேறு விளக்கங்களைக் கேட்பது சரியானதல்ல. திடீரென்று விளக்கங்கள் கேட்டால், மாண்புமிகு அமைச்சர் களிடத்தில் அதற்காக பதில் அளிக்கிற வகையில் குறிப்புகள் இருக்காது. அது இயலாத காரியம். ஆகவே, வேறு முறையில் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(இ) கட்சித்தலைவரின் படத்தை அரசு அலுவலகத்தில் வைப்பது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையின் செக்ஷன் அலுவலகத்திற்குள் நுழைந்தவுடனே, அவசர கால நிலைமை போன்ற உணர்வு ஏற்பட்டது. ஏனென்று சொன்னால், திடீரென்று எதிர்பாராத விதத்தில் அங்கே காங்கிரஸ் கட்சித் தலைவருடைய படங்கள் பல்வேறு அலுவலகங்களிலே நம்முடைய சட்டப் பேரவையின் அலுவலகத்திலே, திடீரென்று தோற்றமளிக்கிறது. யாருடைய வெளியீடு எந்தப் பிரசிலே வெளியிடப்பட்டது, யார் அனுமதியிலே வெளியிடப்பட்டது, சென்ட்ரல் கவர்ன்மென்ட் அலுவலகத்திலேயிருந்து வெளியிடப்பட்டதா என்பது ஒன்றும் தெரியவில்லை. இன்பர்மேஷன் டிபார்ட்மென்டிலே இருந்து வெளியிடப்பட்டதா அல்லது எங்கிருந்து வெளியிடப்பட்டது என்ற சோர்ஸ் ஒன்றும் தெரியவில்லை. அது மட்டுமல்ல, வெறும் இந்திரா காந்தி என்று சொல்லி போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர் என்ற கபாசிடியிலே போடப்பட்டதா அல்லது பிரைம் மினிஸ்டர் என்ற கபாசிடியிலே போடப்பட்டதா என்று தெரியவில்லை. காங்கிரஸ் தலைவர் படம் நம்முடைய அவையிலே எப்படி வந்தது ? யார் அனுமதியிலே வெளியிடப்பட்டது ? அப்படி வெளியிடப்பட்டுள்ளது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டைரக்டரேட் ஆப் ஆடியோ விஷுவல் ஆண்டு பப்ளிசிடி என்ற மத்திய அரசு அலுவலகத்தாலே வெளியிடப்பட்டது இது எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் அறிகிறேன். இது மத்திய

அரசைச் சார்ந்த ஒரு அலுவலகம். அவர்கள் அனுப்பியதால்தான் இப்படம் ஆங்காங்கே மாட்டப்பட்டுள்ளது. அதிலே தவறில்லை; அதிகாரபூர்வமான ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா அலுவலகங்களுக்கும் இது மத்திய அரசின் சார்பிலே அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த அலுவலகம் உங்களுடைய கன்ட்ரோலிலே இருக்கிறது. தவிர, வெளியிடப்பட்டது எந்த சோர்ஸ் என்று தெரியவில்லை. இந்த அலுவலகம் உங்கள் கன்ட்ரோலிலே இருக்கிறது. பிரைம் மினிஸ்டர் என்று தெளிவாக இல்லை. ஆகவே, இந்தப் படத்தை மாட்டுவது சரியல்ல. அவர் காங்கிரஸ் பிரசிடெண்டாகவும் இருக்கிறார். இது பிராபர் புரொசீஜரில் வரவேண்டும். எனவே, வித்-ட்ரா பண்ண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரைம் மினிஸ்டர் படத்தை மாட்டுவதில் தவறில்லை. தவிர, இப்படம், டைரக்டரேட் ஆப் ஆடியோ விஷுவல் அண்டு பப்ளிசிடியிலே இருந்து வந்திருக்கிறது. தவிர, அதனுடைய வாசகங்கள் அலுவலகத்திற்கு பயன்படுவதாக எழுதப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: காங்கிரஸ் தலைவி என்று உமாநாத் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார். எந்த இடத்தில் அப்படி போடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை பரிசீலனை செய்கிறேன். இது டீ.ஏ.வி.பி. அலுவலகத்திலே இருந்து வந்திருக்கிறது. மத்தியப் பேரரசின் சார்பிலே அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் கருத்துக்களை நான் படித்துப் பார்க்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காங்கிரஸ் தலைவராகவும் இருக்கிறார்; பிரைம் மினிஸ்டராகவும் இருக்கிறார். அதிலே சொல்லப்பட்டுள்ள கருத்துக்களைப் படித்தால் தெரியும். அவர்கள் நமக்கு கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஈ. எம். எஸ். படத்தை வைப்பீர்களா? தனி நபர் வழிபாடு தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அதிலே ஒன்றும் தவறில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறுவது போல், அதிலே கட்சி சம்பந்தமான கருத்துக்கள் எதுவும் கூறப்படவில்லை. அரசு அலுவலகங்கள் எவ்வளவு சிக்கனமாக நடந்துகொள்ள வேண்டும், அரசு அதிகாரிகள் எவ்வளவு சிக்கனமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் தான் அதிலே கூறப்பட்டுள்ளன; இந்திரா காந்தி அவர்கள் பிரைம் மினிஸ்டர் என்ற வகையிலே கூறியுள்ள கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கிறது.



ஆகவே அது மறு பரிசீலனை என்பது தேவையில்லை. அரசாங்க இலாக்காக்களில் வைப்பதில் உங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து எல்லா இலாக்காக்களிலும் வைப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு என்னுடைய பார்ட்டி ஜெனரல் செக்ரடரி கருத்துக்களை இப்படி அடித்துக் கொடுத்தால் நீங்கள் அலுவலகங்களில் போடுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் கட்சி தலைமை தாங்குகின்ற அரசாங்கத்திலே அதைப் போட்டுக் கொள்ளலாம். அதிலே ஆட்சேபணை கிடையாது. அகில இந்தியா பூராவும் இதைப் போட்டுக் கொள்ளலாம். இதற்கும் ஆட்சேபணை கிடையாது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இ.எம். எஸ். அவர்களின் கட்சி அரசாங்கத்திலே கட்சித் தலைவருடைய படத்தைப் போட முடியாது. வெஸ்ட் பெங்கால் அரசாங்கத்திலே 'பார்ட்டி லீடர்ஸ்' படங்களை போட்டுக்கொள்ள முடியாது. இது கவர்ன்மென்ட் ஆபீஸ் என்றில்லை, இதிலே பிரைம் மினிஸ்டர் என்றில்லை. 'சோர்ஸ் ஆப் பிரின்டிங்' இல்லை, 'சோர்ஸ் ஆப் டிஸ்ட்ரிபியூஷன்' இல்லை, She is President of the Congress Party also ஆகவே மறுபரிசீலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடியரசுத் தலைவர் அவர்களின் படம், அதைபோல பிரதம மந்திரி அவர்களின் படம், மேதகு ஆளுநர் அவர்களின் படம் இந்த மூன்று படங்களையும் அந்தந்த மாநிலத்தில் அனுமதிப்பது என்பது சர்வ சாதாரணமான வழக்கம் என்று இருந்து வருகிற நடைமுறையே தவிர, வேறு ஒன்றுமில்லை. அந்த அம்மையாருக்கு இரண்டு பொறுப்புகளும் இருக்கின்றன என்று நீங்கள் சுட்டிக்காட்டினீர்களே தவிர, அது பிரதமர் என்ற முறையிலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களே தவிர வேறு அல்ல. இந்த அட்டையை அனுப்பியிருப்பது மத்திய அரசில் இருக்கிறது ஒரு அலுவலகம். Directorate of Audio Visual and Publicities-லிருந்து அனுப்பியிருக்கிறார்கள்.

ஆகவே, அந்த அலுவலகம் அனுப்பியிருப்பதால் அரசாங்க பொறுப்பு இருக்கிறது என்றுதான் நாங்கள் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர அரசாங்கத்திற்கு எந்த பொறுப்பும் இல்லை என்று மாநில அரசு எடுத்துக் கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, உங்களுடைய அனுமதி இல்லாமல் போடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. உங்களைக் கேட்காமல் அலுவலகத்தில் எப்படி இந்த படங்களைப் போடலாம். உங்களுடைய 'பெர்சனல் நாலெஜ்' இல்லாமலேயே இதை போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எங்களையும் பேச அனுமதியுங்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு ஏதாவது கருத்துக்கள் இருந்தால் அதைப்பற்றி என்னுடைய அறையில் வேண்டுமானால் விவாதிக்கலாம்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற அலுவலகம், மற்ற அரசாங்கத்தின் இதர அலுவலகங்களைப் போன்றவை அல்ல. இது சபாநாயகரின் நேரடி அதிகாரத்தின் கீழ் இருக்கக் கூடியது. மத்திய அரசாங்கத்தின் அலுவலகமாக இருந்தாலும், மாநில அரசாங்கத்தின் எந்த அலுவலகமாக இருந்தாலும், அவர்கள் அனுப்புகிற சர்க்குலர்கள், படங்கள் போன்றவைகளை இந்தச் சட்டமன்ற அலுவலகத்திலே மாட்டுவது என்பது சபாநாயகரின் அனுமதி இல்லாமல் செய்வதென்பது தவறு. அந்த தவறு இப்போது இங்கே நடைபெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களாக ஒரு கற்பனையிலே போய் தவ்று நடைபெற்றிருக்கிறது என்று தீர்ப்பு அளித்து விடாதீர்கள். அதற்காகத்தான் அறையிலே விவாதிக்கலாம் என்று சொன்னேன். கடிதங்கள் வந்திருக்கின்றன. கடிதத்தை பார்த்திருக்கிறேன். உங்களுக்கு விளக்கம் நேரடியாகச் சொல்கிறேன்.

[முற்பகல் 9.40]

## (3) உரிமைப் பிரச்சினை

### தொழிலாளர் நல அமைச்சர் மீது—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சர் மீது 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாளன்று உரிமை மீறல் பிரச்சினை ஒன்றுக்கான அறிவிப்பினை கொடுத்தார். அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தகவல் கொடுக்கப்பெற்று, இப்பிரச்சினை ஏப்ரல் 15 ஆம் தேதி பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. உறுப்பினர் அவர்களும் அமைச்சர் அவர்களும் விரிவாக இது குறித்து பேசி உள்ளார்கள்.

கண்டனத் தீர்மானம் வந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ஆம் நாளன்றும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாளன்றும் தொடர்ந்து பேசியுள்ளார்கள். அமைச்சர் அவர்கள் 10 ஆம் தேதி தான் பேசியதை 12ஆம் தேதி விளக்கமாக மூன். நான்



சொல்லியதைத் திருத்தும் வகையில், மேற்குவங்க அரசு சட்ட முன்வடிவு ஒன்றினை வரைந்துள்ளது (dictated) என்று கூறியுள்ளார்கள். எனவே அச்சட்ட முன்வடிவு மேற்கு வங்க சட்டப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டது என்று தான் முன் நாள் கூறியதைத் திருத்திக் கூறியுள்ளார்கள். எனவே, இதில் உமாநாத் அவர்கள் அமைச்சர் முதல் நாள் கூறியதை ஆதாரமாக வைத்து உரிமைப் பிரச்சினை கொண்டுவர இயலாது. மேலும் அமைச்சர் கூறியதற்கான ஆதாரம் பத்திரிகையில் வெளிவந்தது மட்டுமின்றி அப்பத்திரிக்கைக் குறிப்பிற்கான ஆதாரம், மேற்கு வங்க அரசு அனுப்பிய சுற்றறிக்கையும் அத்துடன் இணைக்கப்பட்ட சட்ட முன்வடிவும்தான் என்பதனையும் பேரவைக்குத் தெளிவாக எடுத்துச்சொல்லியுள்ளார். எனவே பேரவைக்கு எந்தவிதத்திலும் வேண்டுமென்றே தவறான தகவலைத் தெரிந்தே அமைச்சர் சொல்லியதாக எடுத்துக்கொள்ள இயலாது.

மேலும் உறுப்பினர் அவர்கள் தான் கொடுத்த அறிவிப்பில் இல்லாத ஒன்றை பேரவையில் 15 ஆம் தேதி எழுப்பினார்கள். மாண்புமிகு அமைச்சர் தான் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ஆம் நாளன்று பேசியதில் விதிகளுக்கு மாறாக திருத்தம் செய்துவிட்டதாகவும் உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளார். திருத்தப்படாத பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் அடுத்த நாள் அன்று நமது நூலகத்தில் வைக்கப்படுகிறது. அதில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால் விதிப்படி வரும் திருத்தங்கள் ஏற்கப்பட்டு அந்தப் பதிவேடுகளில் திருத்தப்படுகின்றன. அம்மாதிரியான நிலையில் அமைச்சர் அவர்களுக்கு பிப்ரவரி 12ஆம் நாள் நடவடிக்கைக் குறிப்புகள் 13ஆம் தேதியன்று அனுப்பப்பட்டு 15ஆம் தேதியன்று அது திருத்தம் செய்யப்பெற்று இத்துறைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது. அதில் 'செய்து கொண்டு இருக்கிறேன்' என்பதை 'செய்ய இருக்கிறேன்' என்று அனுப்பிய திருத்தம் ஏற்கப்பட்டுள்ளது. அத் திருத்தம் நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ள பிரதியிலும் திருத்தப் பெற்றுள்ளது. அமைச்சர் செய்துள்ள திருத்தம் அவர் அதற்கு முன்பேசியதற்கு எவ்வித முரண்பாடும் இல்லை. உறுப்பினர் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24ஆம் நாளன்று அறிவிப்பினைக் கொடுக்கும்போதே இத்திருத்தம் பதிவேடுகளில் ஏற்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதுபற்றி என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். எனவே உறுப்பினர் பிரச்சினை குறித்து அறிவிப்புக் கொடுத்த பிறகு இத் திருத்தம் வேண்டுமென்றே செய்யப்பட்டதாகத் தோன்றும் வகையில் சொல்வது தவறு.

திரு. உமாநாத் பேசும்பொழுது தான் அறிவிப்புக் கொடுத்த பிறகும் திருத்த அறிக்கை ஒன்றினை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். அமைச்சர் அவர்கள் எனக்கு இதுகுறித்து எழுத்து மூலம் விளக்கம் அளித்தபோதே பேரவைத் தலைவர் அனுமதித்தால் தெளிவாக்கும் திருத்த அறிக்கை ஒன்றை அவைக்குக் கொடுப்பதாகவும் அதற்கான நகல் ஒன்றையும்

பேரவைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டபின் அறிக்கை வைப்பது முறையாகாது என்பதற்காகத்தான் அதை நான் அனுமதிக்கவில்லை. எனவே இதிலும் எந்தவிதமான முறைகேடும் ஏற்படவில்லை.

மேலும் இம்மாதிரியான பிரச்சினைகள் பேரவையின் நேரத்தை எடுத்துக்கொள்ளாத வகையில் நாம் நமது முறைகளை அமைத்திருக்கிறோம். தற்போதுள்ள விதிமுறைகளை நாம் கண்டிப்பாக கடைப்பிடிக்காததன் விளைவே இம்மாதிரியான பல விதப் பிரச்னைகளை அவையில் கொண்டுவர வேண்டிய நிலை உள்ளது.

தவறான அறிக்கைகள் எல்லாம் அவையின் உரிமை மீறல் ஆகிவிடாது. பாராளுமன்றத்தில் முன்னாள் பாராளுமன்றத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். அது பின் வருமாறு :

> "Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie, if it can be substantiated, that would certainly bring the offence within the meaning of a breach of privilege. Other lapses, other mistakes do not come under this category, because every day we find that Ministers make their statements in which they make mistakes and which they correct afterwards ......." (page 234—Practice and Procedure of Parliament by M. N. Kaul and S. L. Shakdher.)

எனவே அமைச்சர் கூறியதில் பேரவை உரிமையை மீற வில்லை.

ஒரு அமைச்சரது அல்லது வேறு உறுப்பினரது பேச்சு அல்லது அறிக்கையில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு நமது விதிகளில் 109-வது விதியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்விதியைப் பயன்படுத்துவதன்மூலம் பாராளுமன்றத்தில் பல பிரச்னைகள் தவிர்க்கப்படுகின்றன. எனவே, இம்முறை இனி மேல் இப்பேரவையிலும் கண்டிப்பாகக் கடைபிடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, வேறு வழிகளில் இம்மாதிரியான பிரச்னைகளைப் பேரவையில் எழுப்ப வழிவகைகள் இருந்தும் உரிமைப் பிரச்னை என்ற வகையில் இவற்றை எழுப்பிப் பேரவையின் நேரத்தை எடுத்துக்கொள்வது நல்லதல்ல.

திரு. உமாநாத் எழுப்பிய பிரச்னையில் எந்தவிதமான அவை உரிமை மீறலும் மேலெழுந்தவாரியாகக் கூட எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.



## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களிடையே மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத்
தீர்மானம். "1981, ஏப்ரல் கடைசி வாரத்தில் அண்ணாமலைப்
பல்கலைக் கழக மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்
காரணமாகப் பலருக்குப் படுகாயமேற்பட்டுள்ளதால் எழுந்துள்ள
பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்
களை ஒத்திவைக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்
மொழிய அனுமதி கேட்டு— திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற
சொரணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சோ. அழகர்சாமி, திரு.
இரா. கருப்பையா திரு. மு. அம்பிகாபதி, திரு. எஸ். ஆண்டித்
தேவர், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் முன்னறிவிப்புக்
கொடுத்துள்ளனர். இதுஎப்படி அவசர முக்கியம் வாய்ந்தது
என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்
கொள்கிறேன். திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலை
வர் அவர்களே, ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் அண்ணாமலைப்
பல்கலைக் கழகத்திலே இரண்டு பிரிவு மாணவர்களிடையே ஒரு
தகராறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தகராறுக்கான காரணம்
பற்றி பல தகவல்கள் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன;
கருத்துவேறுபாடான தகவல்களெல்லாம் வந்துகொண்டு இருக்
கின்றன. ஒரு தகவலின்படி, ஒரு பகுதி மாணவர்கள் இன்னொரு
பகுதி மாணவர்களை ராகிங் செய்ததால் மோதல் ஏற்பட்டு,
பிறகு சம்பந்தப்பட்ட வார்டன் அவர்களைக் கூட்டிப் பேசி
இனி இப்படிப்பட்ட தகராறு நடக்கக் கூடாது என்று பேசி சமரச
நிலை ஏற்பட்ட பிறகும்கூட, அந்த சமரசத்தில் அவர்கள் திருப்தி
அடையாததன் காரணமாக மீண்டும் மோதல் ஏற்பட்டு, அதன்
அடிப்படையிலே இந்தக் கலவரம் நடந்திருக்கிறது என்று ஒரு
தகவல் கூறுகிறது.

இன்னொரு தகவல் என்ன கூறுகிறது என்றால், ராகிங் செய்த
தால் ஏற்பட்ட மோதல் என்று சொல்வதைவிட அங்கே ஜாதி
மோதல் ஏற்பட்டிருக்கிறது; அதன் காரணமாக இந்தக் கலவரம்
ஏற்பட்டிருக்கிறது என்று இன்னொரு தகவல் கூறுகிறது.

பல அரசுக் கல்லூரிகளில் முன்பு ராகிங் நடந்தது, அவை
களைக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்று அரசு எடுத்த
நடவடிக்கையின் காரணமாக அங்கெல்லாம் கட்டுப்பாட்டிற்குள்
கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அண்ணாமலைப்
பல்கலைக் கழகத்தைப் பொறுத்தமட்டில் போதிய அளவிற்கு
நிர்வாகம் கவனம் செலுத்த முடியாததன் விளைவாக இத்தகைய
நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இது ஜாதீயக் கலவரமா அல்லது ராகிங் காரணமாக ஏற்பட்ட கலவரமா என்பதுபற்றி விரிவாகப் பேசுவதோடு மட்டுமல்லாமல், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஏற்படாமல் இருப்பதற்கும் ஒரு விரிவான விவாதம் நடத்தி இதற்கொரு முடிவு காண வேண்டிய அவசியம் இருப்பதன்காரணமாக இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தொடர்ந்து இம்மாதிரி தகராறுகள் மாணவர்களுக்குள்ளே நடக்கின்றன. சிறிய விஷயமாக வருவதுகூடப் பெரிய விஷயமாக வெடிக்கின்ற அளவிற்கு இருக்கிறது. இப்பொழுது இராமநாதபுரம் கலவரத்திலும் சரி, கழுகுமலை விவகாரத்திலும் சரி, திருப்பரங்குன்றம் விவகாரத்திலும் சரி தமிழகத்திலே இதுபோன்ற சிறு சம்பவங்கள் பெரிய கலவரங்களாக வெடிக்கின்ற சூழ்நிலை, தூண்டுதல் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. இப்பொழுது ஜாதீயம் என்பது முனைப்பாக, கொஞ்சம் வேகமாகத் தன்னுடைய தலையைத்தூக்குகிறது. சாகப் போகின்றவனுக்குக் கடைசி நேரத்திலே மூச்சு எப்படி வேகமாகப் போய்வருமோ அதைப்போல, தெளிவு கொடுத்து அடிக்கும் என்று சொல்வார்களே அதைப் போல இருக்கிறது. ஜாதீய உணர்வு தூண்டப்படுகிறது. தஞ்சாவூரில் பார்த்தால் ஒரு பக்கத்திலே, பிராமணர்களே வெளியேறுங்கள் என்றும், மறுபக்கத்தில் ஏ, சூத்திரா உனக்கு என்னடா திமிர் என்றும் இப்படிப்பட்ட வாசகங்கள் காணப்படுகின்றன. இப்பொழுது தஞ்சாவூரிலும் கலவரம் வரும்போல் தெரிகிறது. நேற்றுகூட நான் அப்படிப்பட்ட வாசகங்களைப் பார்த்துவிட்டு வந்தேன். இப்படித் தூண்டிவிடப்படுகின்றது; ஊக்கம் கொடுக்கப்படுகிறது.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இருக்கின்ற சில ஆசிரியர்கள் பல ஆசிரியர்கள் அல்ல, சில ஆசிரியர்களே அங்கே தங்களுடைய ஜாதியைச் சேர்ந்த மாணவர்களைத் தூண்டிவிட்டு, மாணவர்களுக்குள்ளேயே கலவரங்களை உருவாக்கக் கூடிய கொடுமையான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

குறிப்பாக அண்ணாமலை யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரையில் தொடர்ந்து இதுபோன்ற தகராறுகள் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கின்றன. ஒருபக்கம் ஒரு வகுப்பைப் பற்றிச் சொல்கிறார்கள்; மற்றொரு பக்கம் இன்னொரு வகுப்பைப் பற்றிச் சொல்கிறார்கள். ஜாதிக்குள்ளே பாகுபாடு செய்து பார்க்கிறார்கள். எந்த ஜாதி என்ற விவகாரத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால் தொடர்ந்து இந்தக் கலவரங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அரிவாள், கல், கம்பு ஆகியவைகள் பயன்படுத்தப்படுகின்றன; ஹாஸ்டல் தரக்கப்படுகிறது. தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன.





[முற்பகல் 9.50]

இதற்கான காரணங்களைச் சரியாக ஆராய்வதற்கு ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட அமைச்சர் அவர்கள் கூட்டி, அல்லது மாணவர்கள் சம்பந்தப்பட்ட யூனியன்களை அழைத்துப் பேசி தம்முடைய தமிழகத்தில் அமைதியை ஏற்படுத்த ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும். ஏனென்றால் குஜராத்தில் கலவரம், அசாமில் கலவரம், மகாராஷ்டிரத்தில் கலவரம், இப்படி கலவரத்திற்கான சூழ்நிலை, இனவெறி தன்மைகள், அவைகளுடைய விளைவாக மற்றவர்கள் பாதிக்கக் கூடிய நிலமைகள் உள்ளன. மத்தியிலே. ஆளுகின்றவர்களுடைய கட்சி ஆளக் கூடிய அசாமிலேதான் மிகப் பெரிய கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய சர்க்காரைப் பற்றி ஏதாவது சொல்லாவிட்டால், அவருக்குப் பொழுது போகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பாரதத் திருநாடு என்று பாடினான் பாரதி. அந்தப் பாரதியினுடைய நோக்கு நமக்கு வேண்டாமா? எனவேதான் இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கலவரங்களைபற்றி விரிவாக விவாதிக்க, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாரதி நோக்கத்தை நிறைவேற்ற மாண்புமிகு உறுப்பினர் அடுத்த முறை பாராளுமன்றத்திற்குச் செல்லலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் இருசாராருக்கு மத்தியில் நடந்த கலவரம் சம்பந்தமாக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து அது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கொடுக்கப்பட்ட அறிவிப்பை, இப்பொழுது அந்த அவசரப் பொது முக்கியத்துவம் குறைந்திருப்பதற்குப் பின்னால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இரு சாராருக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களால் பொறியியல் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அது அவசரமானது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றால், இப்பொழுது என்ன நிலைமையிருக்கிறது என்று தெரியாவிட்டால்கூட, தமிழகத்திலே, குறிப்பாக, அண்ணாமலைப்

பல்கலைக் கழகத்தில், தொடர்ந்து மாணவர்கள் மத்தியில், ஜாதியின் பெயரால் கலவரம், அல்லது அங்கே ஏற்கனவே படிக்கின்ற மாணவர்கள், புதிதாக வந்து சேருகின்ற மாணவர்களை ராக்கிங் செய்வது என்ற பெயரால் கலவரம் என்று தொடர்ந்து நடக்கின்றது. பரீட்சைகள் எல்லாம் தள்ளிப் போடப்படுகின்றன. சென்ற ஆண்டு மற்ற பல்கலைக் கழகங்களில் எல்லாம் பரீட்சைகள் முடிந்தபிறகுகூட, அங்கே முடியவில்லை. இன்னும் பல வகுப்புகளுக்குத் தேர்வுகளையே நடத்தாத அளவு பல்கலைக் கழகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகளில், மாணவர்கள் மத்தியில் உள்ள ஜாதிக் கவலவரங்கள், மாணவர்கள் பெயரால் கொலை நடக்கக் கூடிய அளவு இருக்கும்போது, இங்கே, தமிழகத்திலே ஜாதி உணர்வு தலை தூக்கும் அளவுக்கு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சரி, மாணவர் பிரிவினரைச் சேர்ந்தவர்களும் சரி, நடந்து கொள்கிறார்கள். இங்கே மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இந்த நிலையிருக்கிறது. தமிழகத்தையும் இன்னொரு குஜராத்தாக மாற்றுவதற்கு அரசியல் கட்சிகளின் பெயரால், அல்லது, ஜாதியின் பெயரால் இயக்கங்களை வைத்திருப்பவர்கள் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தூண்டுதல்கள் பெயரால், அசாமிலே மாணவர்கள் தொடர்ந்து கலவரங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகமும் இன்னொரு குஜராத்தாக மாற எவ்வளவு காலம் ஆகும் என்று தெரியவில்லை. ஏனென்றால், ஜாதியின் பெயரால் மாநாடுகள் என்று போட்டுத் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை நீடிப்பது சரியல்ல. தமிழகத்திலே இருக்கிற அரசுக்கு, நாம் நல்லெண்ணத்தோடு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று செயல்படும்போது ஜாதிக் கலவரங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள் மத்தியில் ஒரு குழப்பமான நிலைமை இருப்பதன் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் நடந்த இந்தக் கலவரம் குறித்து விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை கூடுகின்ற நாட்களில் எல்லாம் வேறு எந்தப் பிரச்சினை விவாதத்திற்கு வருகிறதோ இல்லையோ, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமளி, அங்கே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது, மூடப்பட்டிருக்கிறது, அங்கே கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பன போன்ற பிரச்சினை ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் வருவது இப்போது வாடிக்கையாக இருப்பது உள்ளபடியே நமக்கு வேதனையாக இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் கல்லூரியிலே 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் 4ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட



ஒரு சிறு சச்சரவு பெரிய மோதலாக, அமளியாக மாறி, கல்லூரியே மூடப்படுகின்ற அளவுக்கு இன்றையதினம் வளர்ந்திருக்கிறது என்ற செய்திகள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. நமக்கிருக்கிற பெரிய கவலை எல்லாம், படிக்கின்ற பிராயத்திலே உள்ள இந்த மாணவர்களுடைய நேரமும், காலமும், பணமும் விரயமாகி, வேறு வகைகளிலே திரும்பிவிடக் கூடாது. அந்தக் கலவரம் தமிழகத்திலே வேறு இடங்களுக்கு பரவிவிடக் கூடாது என்கின்ற முறையிலே இதனைத் தடுப்பதற்கும் எதிர்காலத்திலே இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருப்பதற்கும் நாம் என்ன செய்யவேண்டும் என்பன போன்ற, தொடர்பான பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே பேரவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சிலர் திரு. வளையாபதி என்ற மாணவர் தலைமையில் ஒரு பிரிவும், திரு. என். ஆர். சாமிநாதன் என்ற மாணவர் தலைமையில் ஒரு பிரிவுமாகப் பிரிந்து, 25—4—1981 அன்று இரவு மாணவர் விடுதியில் முன்பகை காரணமாக வாய்த்தகராறில் ஈடுபட்டனர். 26—4—1981 அன்று காலை 9 மணி அளவில் மேற்கண்ட இரு பிரிவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனைக் கண்ணுற்ற விடுதிக் காப்பாளர், அவர்களைத் தடுத்து அமைதிப்படுத்தி கலைந்து போகுமாறு செய்தார்.

மேற்படி மோதலினால் விடுதியினுள் கலவரம் ஏற்படுவதைக் கண்ணுற்ற பல்கலைக் கழகத் துணைப் பதிவாளர், காவல் துறையினரைத் தலையிட்டு அமைதியினை நிலைநாட்டுமாறு எழுத்து மூலமாகக் கேட்டுக்கொண்டார். உடனே துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளர், பொறியியல் கல்லூரித் துறைத் தலைவர்கள், விடுதிக் கண்காணிப்பாளர், மற்றும் துணை வட்டாட்சியர், காவல்துறையினர் ஆகியோர் பொறியியற் கல்லூரி விடுதிக்கு விரைந்தனர். அங்கு மாணவர்கள் ஒருவரையொருவர் இரும்புக் கம்பி, சைக்கிள் செயின், ஹாக்கி மட்டைகள் போன்றவற்றைக் கொண்டு, தாக்கிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கலைப்பதற்காகக் காவல் துறையினர் குறைந்தபட்ச அளவு பலப் பிரயோகம் செய்தனர். மேற்கண்ட நிகழ்ச்சியின் தொடர்பாக இரு பிரிவுகளையும் சேர்ந்த 17 பேர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதில் 9 பேர் திரு. சாமிநாதன் பிரிவினையும் 8 பேர் திரு. வளையாபதியின் பிரிவினையும் சேர்ந்தவர்கள். இதுவரை திரு. சாமிநாதன் வளையாபதி உள்பட மொத்தம் 13 பேர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 6 பேர் திரு. சாமிநாதன் பிரிவையும் 7 பேர் திரு. வளையாபதியின் பிரிவையும் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்டவர்கள்

நிபந்தனையின் பேரில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீதி 4 பேர் தலைமறைவாக உள்ளனர். சிறு காயமேற்பட்ட மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி தொடர்பாக, அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 83-81, இ.த.ச. 147, 148, 323, 324, 427 மற்றும் 307பிரிவுகளின்கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

இறுதியாண்டு பொறியியல் கல்லூரி விடுதி மாணவர்களைத் தவிர மற்ற பொறியியல் மாணவர்கள் விடுதிகள் மூடப் பட்டுள்ளன.

[முற்பகல் 10.00]

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு 27—4—1981 முதல் வகுப்புகள் அமைதியாக நடைபெற்று வருகின்றன. காவல் துறையினரின் தகுந்த உடனடித் தலையீட்டினால் நிலைமை உடன் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தற்போது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க, சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## கவன ஈர்ப்புகள்.

அ. புவனகிரி தொகுதி, வீரமுடையான் நத்தம் கிராமத்தில் தீ விபத்து.

திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி வீரமுடையான் நத்தம் கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்களுக்குக் கூட்டுறவுக் கடன் பெற நிலப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்து ஏற்பட்டவுடன் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்மக்களுக்கு வழக்கம்போல் அரசின் உத்தரவுப்படி ரூ. 200 கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வேஷ்டி, சேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஐந்து கிலோ அரிசி கொடுக்கப் பட்டு இருக்கிறது. அரசு இன்றைக்குப் போட்டிருக்கும் உத்தர



வுப்படி ஆதி திராவிட மக்களுக்கு ரூ. 2,000 வீடு கட்டிக்கொள்வ
தற்காக வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது. இதை
இந்த அரசு முறையாகச் செய்யும்.

திரு வி வி சுவாமிநாதன்: தலைவரவர்களே, அங்கு, அந்தத்
தீ விபத்து நடைபெற்ற இடத்தில் சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு
மேலாகக் குடியிருந்தும், அந்த இடம் நத்தம் புறம்போக்காக
இருந்தும் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்காத
காரணத்தால் கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்தி
லிருந்து அமைச்சர் அவர்கள் அறிவித்த மாதிரி 2,000 ரூபாய்
கடன் பெற முடியவில்லை. ஆகையால் உடனடியாக அந்த ஆதி
திராவிட மக்களுக்குப் பட்டா கொடுக்க அரசு நடவடிக்கை
எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்
களே, ஆதி திராவிட மக்கள் குடியிருந்த அந்த இடம் அவர்களுக்
குச் சொந்தமான நிலம் இல்லை என்பது இப்போதுதான் அரசின்
கவனத்திற்கு, அதாவது இந்தத் தீ விபத்து ஏற்பட்ட பிறகு,
கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட இடத்தில்
அவர்கள் 15, 20 ஆண்டுகளாகக் குடியிருப்பதாகச் சொன்னார்
கள். அந்த விவரம் தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்
உடனடியாகப் பட்டா கொடுக்க வேண்டுமென்றும், அதற்குப்
பிறகு இந்த 2,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் உத்தர
விட்டு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது விரைவிலே
நடைபெறும்.

திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அடிக்கடி
குடிசைப் பகுதிகள் தீ விபத்துக்கு ஆளாவதால், இப்படிப்பட்ட
கூரை வீடுகள் தீ விபத்தால் பாதிக்காத அளவுக்குக் கூரை வீடு
கட்ட உபயோகப்படும் வைக்கோல், தென்னை ஓலை, கரும்புத் தோகை
போன்றவைகள் மீது கூரை போடுவதற்கு முன்னால், அவைகள்
மீது இரசாயனப் பொருள்களைத் தெளித்துப் பயன்படுத்தினால்
தீ பிடிக்காது என்று புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த
(மற்படி கூரைவீடுகள் போடும்போது பயன்படுத்தப்படும்)
பொருள்களை இரசாயனத் திராவகத்தில் நனைக்கவோ,
அல்லது அவைகளின் மீது 'ஸ்ப்ரே' செய்யவோ அரசு
உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தலைவரவர்களே,
இப்படிப்பட்ட விவரங்கள் இதற்கு முன்னால் எனக்குத்
தெரியாது. ஆனால் கூரைமீது இரசாயனப் பொருள்களை
நனைத்துக் கட்டுகிறபோது தீப் பிடிக்காது என்ற விவரத்தை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு
எவ்வளவு செலவாகும் என்பது தெரியாது. இருந்தாலும் அது
பற்றிய முழு விவரத்தையும் சொன்னால் அரசு அதைப் பரிசீலிக்
கத் தயாராக இருக்கிறது.

## ஆ. கிருஷ்ணகிரி வட்டத்தில் கழிவுநீர் குடிநீரோடு கலப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின்கீழ் கிருஷ்ணகிரி வட்டத்தில் கழிவுநீர் குடிநீரோடு கலப்பது குறித்து திருவாளர்கள் க. இரா. சின்னராசு, மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, '' கிருஷ்ணகிரி வட்டம், மரிக்கம்பள்ளி கிராமத்திலுள்ள கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் குடிநீரோடு கலப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கிருஷ்ணகிரி தாலூகா, மரிக்கம்பள்ளி கிராமத்தில் உள்ள கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் லிமிடெட் தொழிற்சாலையின் கழிவு நீரால், அந்தப் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கெட்டு பொதுமக்கள் பாதிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பேர் நீரை அருந்தி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இது வரையில் தகவல் கிடைக்கப் பெறவில்லை.

2. இத் தொழிற்சாலை ஒரு நாளைக்கு 40,000 லிட்டர் எரி சாராயம் தயாரிக்கிறது. நாள் ஒன்றுக்கு 5,50,000 லிட்டர் கழிவு நீரை இத்தொழிற்சாலை வெளியேற்றுகிறது. இக்கழிவு நீரில் ஒரு லிட்டருக்கு 40,000 மில்லி கிராம் வரை பயோ கெமிக்கல் ஆக்ஸிஜன் தேவை காணப்படுகிறது. இக்கழிவு நீர் மூன்று குட்டைகளில் விடப்பட்டு குளிர் படுத்தப்படுகிறது. குளிர்ப்படுத்தப்பட்ட கழிவு நீர் அனேரபிக் குட்டையில் விடப்பட்டு பிறகு சூரிய வெப்பத்தால் காய வைக்கப்படுகிறது. இவ்விதம் செய்வதால் ஒரு லிட்டர் கழிவு நீரில் உள்ளபயோ ஆக்சிஜன் தேவை சுமார் 3,000 மில்லிகிராமிற்குக் குறைக்கப்படுகிறது.

3. இவ்வாறு தூய்மைப்படுத்தப்பட்ட கழிவு நீரை சுத்தமான நீருடன் கலந்து, பாசனத்திற்காக உபயோகப்படுத்தும்பொருட்டு தென்பெண்ணைஆற்றின் அருகில் ஒரு கிணறு வெட்டுவதற்காக் பொதுப்பணித் துறையிடம் இத்தொழிற்சாலை அனுமதி கோரியுள்ளது. இதன் பொருட்டு சுமார் 50 ஏகர் நிலத்தைத் தொழிற்





சாலை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும், இத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அனேரபிக் என்கிற பயோலாஜிக்கல் வழியில் தூய்மைப்படுத்தி அதன் பின் வெளியேற்ற வேண்டும் என்று இத்தொழிற்சாலையைப் பொது சுகாதார இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த ஆலையிலிருந்து ஒரு நாளைக்கு 40,000 லிட்டர் எரி சாராயம் தயாரிக்கப்படுகிறது என்றும், 5,50,000 லிட்டர் கழிவு நீர் அங்கிருந்து வெளியேற்றப்படுகிறது என்றும், அதை விஞ்ஞான ரீதியிலே சுத்தப்படுத்தி நல்ல நீரோடு கலக்கச் செய்து, பாசனத்திற்குப் பயன்படுத்தும் பொருட்டு, பொதுப்பணித் துறையிடம் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்றும், சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த விவ்ர அறிக்கையின் இறுதியில் '' இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அனேரபிக் என்கிற பயோலாஜிக்கல் வழியில் தூய்மைப்படுத்தி, அதன் பின் வெளியேற்ற வேண்டும் என்று இத்தொழிற்சாலையை பொதுச் சுகாதார இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார் '' என்று உள்ளது. இதுதான் முக்கியமான விஷயம். இந்த ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் சுற்றுப்புறத்தில் இருக்கும் காற்றும் அசுத்தமடைகிறது. அதனால் மக்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள். ஆகையால் அந்த ஆலையின் உள்ளேயே அந்தக் கழிவு நீரை விஞ்ஞான ரீதியில் ஆவியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காற்றுகூடச் சுத்தமாக இல்லை என்று சொன்னார்கள். அதே நேரத்தில் அந்தக் கழிவு நீரை 'எவாப்ரேட்' செய்து அனுப்ப வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எவாப்ரேட் செய்யும்போதுதான் காற்று அசுத்தமாகும். ஆகவே, கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, விஞ்ஞான ரீதியில் சுத்தப்படுத்தி—அது பற்றிய சில முக்கியமான விஷயங்களை அறிக்கையில் கொடுத்திருக்கிறேன்—அனுப்புகிறார்கள். அதை ஒழுங்காகச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

●

விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறபடி, 40,000 மில்லி கிராம் வரை பயோ கெமிக்கல் ஆக்ஸிஜன் தேவைக் காணப்படுவதை 3,000 மில்லி கிராமாகக் குறைத்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது அதில் ஆபத்து இருக்காது. இன்னும் அதை நல்ல முறையில் சுத்தப்படுத்த ஒரு கிணறு தோண்டுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள், அதையும் ஆரம்பிக்கச் சொல்லியிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற அந்த நீரை அனேரபிக் என்கிற பயோலாஜிக்கல் வழியிலே துய்மைப்படுத்தியதற்குப் பிறகுதான் வெளியேற்றவேண்டும் என்று அந்தத் தொழிற்சாலையிடம் பொது சுகாதார இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளதாகச் சொன்னார்கள். அவர் எந்தத் தேதியிலே அவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார். அவர்களுக்கு எவ்வளவு நாள் காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள்ளாக அவ்வாறு அமைக்காவிட்டால் அந்தத் தொழிற்சாலையின் லைசன்சை ரத்து செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ? அந்தத் தொழிற்சாலையின் அதிபர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையின் மீது எந்தவிதமான கிரிமினல் வழக்கும் தொடர வேண்டிய அவசியம் இல்லை. 21—10—1978 அன்று டிஸ்டிரிக்ட் சுகாதார அதிகாரி அவர்கள் அந்தத் தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டு அங்கு எல்லாம் சரியாக இருக்கின்றதா என்று பார்த்துவிட்டு அதற்குப் பிறகு டி.பி.எச்சுக்குத் தகவல் கொடுத்து அதற்குப் பிறகுதான் அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் அந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி அதிகமாகிவிட்டதால் அங்கே அந்த மாதிரி இன்னொரு கிணறு தேவைப்படுகின்றது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. உடனடியாக கிணறு அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே பொதுவாக எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் ஒவ்வொரு இடத்திற்கும் மிகத் தெளிவாக, திட்டவட்டமாக இந்த மாதிரி நீரை சுத்தப்படுத்தித்தான் வெளியேற்றவேண்டும் என்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். ஆகவே, அதன்படி செய்யாத எந்தக் கம்பெனியாக இருந்தாலும் அரசைப் பொறுத்தவரையிலே நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையிலே இருந்து வெளியேறுகின்ற நீரினால் அந்தப்பகுதியிலே உள்ள குடிநீர் கெட்டுவிடுகின்றது என்ற காரணத்தால் அங்குள்ள பொதுமக்கள் அந்தத் தொழிற்சாலையின் முன்பும், தாலுக்கா அலுவலகத்தின் முன்பும் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். ஆகவே, அந்தக் கழிவு நீர் கலந்த நீரை அருந்துவதால் மக்களுக்கு வியாதிகள் வரும் என்று அரசு தண்டோரா மூலமாக எச்சரிக்கை விடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அப்படி எச்சரிக்கை விடுவதன்மூலமாக ஏதோ இல்லாத ஒன்றை கற்பனை செய்துகொண்டு மக்கள் மத்தியிலே அனாவசியமாக



பீதியை உண்டாக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே அந்த மக்களுக்கு நல்ல முறையிலே நாம் என்னென்ன செய்திருக்கிறோமோ எந்தெந்த வகையிலே வியாதிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோமோ அதுபற்றித்தான் சொல்லவேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பலருக்கு வியாதிகள் ஏற்பட்டதாகவும் அங்கே உயிரிழப்பு கூட ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்பேர்ப்பட்ட நிலைமை எதுவும் அந்தப் பகுதியிலே இல்லை. யாருக்கும் எந்தவிதமான ஆபத்தும் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் சொன்னதுபோன்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. வரவு செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 23— கூட்டுறவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,36,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

Thiru N. S. V. CHITHAN: Mr. Speaker, Sir, To discuss the need to issue loans to the lower income group in larger numbers for building houses and purchasing plots, I move :—

"That the allotment of Rs. 9,36,81,000 under Demand No. 23 be reduced by Rs. 100.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, கூட்டுறவு சிப்பந்திகளுக்கு ஒரே மாதிரியான சம்பளங்கள் நிர்ணயம் செய்ய வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,36,81,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கைகள் * ஒரு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பிலே ஏற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்ட பிறகு இறுதியிலே என் உரையை நான் கொடுக்கின்றேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் 1981-82ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கத்தின்மீதும், அரசு கோரி யிருக்கிற இந்த மானியத்தின்மீதும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே, நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னே வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை

பொதுவாக இந்தக் கொள்கை விளக்கத்திலே இருப்பதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னாலே, தமிழகத்திலே கூட்டுறவு இயக்கம் கடந்த சில ஆண்டுகளாகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாது, இன்றையதினம் அவைகள் அரசாங்கத்தினுடைய ஏனைய அலுவலகங்களைப் போலவே செய லாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். ஏறத்தாழ 5, 6 ஆண்டுகளாக, இப்பொழுது ஆட்சியிலே இருக்கிற இந்த அரசு, இதற்கு முன்னாலே பொறுப் பிலே இருந்த காலத்திலே கூட, அதற்கான தேர்தல்களை நடத்த வில்லை என்பதோடு மட்டுமல்லாமல், மற்றும் ஒரு தேர்தலைச் சந்தித்து, இப்பொழுது மீண்டும் பொறுப்புக்கு வந்தபின்னாலும், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொதுத் தேர்தல்களை நடத்தாமல், "நாங்கள் ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர விருக்கிறோம், அதற்கான விரிவான ஆராய்ச்சிகள் நடத்த, மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அவைகளைச் சரி பார்த்ததற்குப் பின்னாலே, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்தவிருக்கிறோம்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான் அமைச்சரிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் இந்தக் கூட்டுறவிற்கான மானியத்தின் மீது. இறுதியாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலாவது, அந்தக் கூட்டுறவுச்

[* 128-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]



சங்கங்களுக்கான தேர்தலை ஒரு கால கட்டத்திற்குள் நடத்து
வதாக திட்டவட்டமாக அறிவிக்க முன் வரவேண்டும். இதற்கு
முன்பாக இருந்த அமைச்சரவைகளில் கூட, பல முக்கியமான
சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்
போதெல்லாம் இதுபோன்ற முன்மாதிரி ஏற்பட்டதில்லை. எனவே
அரசாங்கம் உடனடியாக, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான
தேர்தலை நடத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அரசு விரும்பினால், அந்தத் துறையில் தேவைப்பட்ட
மாற்றங்களை, தேவைப்பட்ட சட்டத் திருத்தங்களை, நல்ல
விதிமுறைகளைக் கொண்டு வந்து பின்னாலே அவைகளை நடை
முறைப்படுத்தலாம். ஆகவே, அதைக் காரணம் காட்டி, தேர்தலை
நடத்துவதை தள்ளிக் கொண்டே போவது சரியாக இருக்காது
என்று கூறிக் கொள்கிறேன். ஆகவே, இறுதியாக இந்த விவாதத்
தில் பதிலுரைக்கிற நேரத்தில், அமைச்சர் அவர்கள், தமிழகத்தில்
இருக்கிற பல்லாயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுற
வாளர்களுக்கு, 'கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் இந்தக்
கால கட்டத்திலே நடைபெறும்' என்ற திட்டவட்டமான
உறுதியை இந்த மாமன்றத்தின் மூலமாக, தமிழக மக்களுக்குத்
தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

அதுமட்டும் அல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
மாமன்றத்தின் மூலமாக தமிழக மக்களுக்குக் கொடுத்திருக்கிற,
இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பிரித்துப் பிரித்துப் பார்த்
தேன், ஏதாவது புதுமையான புரட்சியான ஒரு அறிவிப்பை
மேற்கொள்ளுவதாக ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று
பார்த்தால் இதற்கு முன்னாலே சென்ற முறை அளிக்கப்பட்ட,
கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பெற்றிருந்த புள்ளி
விவரங்களின் தொடர்ச்சியாகத்தான் இருக்கிறதே தவிர, கூட்டுற
வுத்துறை மூலமாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும்
மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்கு, ஏதாவது மறுமலர்ச்
சியை, புத்துணர்ச்சியை அளிக்கும் வகையில், இந்தக் கூட்டுறவுத்
துறையின் செயல்முறைகள் இருக்காதா என்று எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிற மக்களுக்கு, நிறைவு அளிப்பதாக அது
இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பக்கத்திலே, முன்னேற்றம் பற்றிய கண்ணோட்டம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதிலே குறுகிய கால, மத்திய காலக் கடன்கள் வழங்குதலிலே, 1979–80இல் ரூ. 42·70 கோடியாக இருந்தது, 1980–81இல் ரூ. 15·79 கோடியாகக் குறைந்திருக்கிறது. ஆனால் 1981–82ஆம் ஆண்டிலே 130 கோடி ரூபாயை அரசாங்கம் இதற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு ஒரு சின்ன ஐயப்பாடு. இந்த 130 கோடி ரூபாயும், நிச்சயமாக 1981–82ஆம் ஆண்டிலே செலவழிக்கப்படுமா ? போதிய மழை இல்லாத காரணத்தாலே, அரசாங்கம் எதிர்பார்க்கிற, இலட்சிய இலக்கை அது எய்த முடியுமா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல, மூன்றாவது இடத்திலே, 'நகை ஈட்டுக் கடன்கள் வழங்குதல்' என்ற தலைப்பில் அதேமாதிரி ரூ. 111·42 டன்கள் வழங்குதல் இருந்தது, 1980–81 ஆம் ஆண்டிலே, ரூ. 85·10 கோடி காடியாக இருந்தது. இப்போது 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 130·00 ாகக் குறைந்து. உயர்த்தப்பட்டிருப்பதாக போடப்பட்டிருக்கிறது. காடியாக னால் இந்தத் தொகை மிகமிகக் குறைவு என்று நான் கருது றேன். தற்போது ஏழை விவசாயிகளுக்கு என்று எஞ்சி இருக்கிற ரே வழி முறை நகை ஈட்டுக் கடன்கள் பெறுவதுதான். ஆகவே, தற்கென்று ஒதுக்கப்பெற்றிருக்கிற இந்தத் தொகை மிக க்குறைவு. இன்னும் அதிகமாக இதற்கு ஒதுக்க அரசு முன் ர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 6-வது இடத்திலே நுகர் பொருட்கள் சில்லறை ற்பனை என்ற தலைப்பில் 1979–80 ஆம் ஆண்டிலே ரூ. 140·92 காடியாக இருந்தது, 1980–81 இல் ரூ. 110·00 கோடியாகக் றைந்து, 1981–82 ஆம் ஆண்டிலே ரூ. 192 கோடியாக யர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10-20]

அதேபோல் கிராமக்கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல் என்பதன்கீழ் 1979–80-ல் 13 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டது, அது 1980–81 இல் 19 கோடி ரூபாய் என்று உயர்த்தப் பட்டு 1981-82க்கு 25 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்று உயர்ந்து வருகிற விலைவாசியினைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது அரசாங்கம் ஒதுக்கி இருக்கிற இந்தத் தொகை மிக மிகக் குறைவான தொகை என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, இந்தத் தொகையை அதிகப்படுத்தி நாட்டு மக்களுக்கு இந்தத் துறையின் சேவை பயன்படுகிற அளவிற்கு அதிகமான தொகையை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில், இந்த அரசு கொடுத்திருக்கிற குறிப்பில் 19 வங்கிகள் மட்டும் குறைந்த அளவு கடன் வழங்கும் தகுதி பெற்றிருந்தன என்றும் ஏனைய 165 வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்தன என்றும் ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நிலவள வங்கி களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் கொடுத்திருக்கிற இந்தக் குறிப்பிலே இருப்பதுபோல், விவசாயப் பணிகளுக்கு இன்றைய தினம் நிலவள வங்கிகள் மூலம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்றுகூடச் சொல்லமுடியாது, கடன்கள் வழங்கப்படுவதே இல்லை என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சர் அவர்களைக் கேட்டால், கடனைத் திருப்பிச் செலுத் தாத காரணத்தால் கடன் வழங்கும் தகுதியை வங்கிகள் இழந்து விட்டிருக்கின்றன என்று பொதுப்படையாகப் பதில் சொல்வார்கள். என் கவலையெல்லாம், நான் சொல்ல விரும்புவதெல்லாம், விவசாயப் பெருங்குடிமக்கள் வேண்டுமென்றே கடன் வாங்கி வைத்துக்கொள்வதில்லை. பணம் இல்லாத காரணத்தினால்தான், பருவமழை தவறி, சாகுபடிச் செலவுகள் அதிகப்பட்டிருப்பதால்



அவர்களால் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியவில்லையே தவிர நிச்சயமாக அவர்கள் கையில் பணம் இருக்குமேயானால் கடனைச் செலுத்திவிடுவார்கள். ஆகவே, அரசாங்கம் கனிவோடு விவசாயி கள் மறுபடியும் விவசாயம் செய்ய பணம் கொடுத்து உதவ வேண்டும். 'சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன்கள் வழங்கு வதற்காக வாய்ப்புகள் குறைந்துவருவதால், வணிகப் பயிர் களான தென்னை, முந்திரி, காப்பி மற்றும் ஏனைய தோட்டப் பயிர்களின் சாகுபடி, டிராக்டர் மற்றும் இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள் மற்றும் கால்நடை கொட்டகைகள் அமைத்தல், பால்பண்ணைத் திட்டம், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற இதர நோக்கங்களுக்காகக் கடன்கள் வழங்குதல், மின்வாரியம், மீனளக் கழகம், உணவுப்பொருள் வழங்கும் கழகம் ஆகிய பொதுத் துறை நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தல் போன்ற பிற வழிவகைகளில் தமது நடவடிக்கை களைப் பரவலாக்க, நிலவள வங்கிகள் முயன்று வருகின்றன.' ஆக, 'அந்தத் துறையை விடுத்துவிட்டு உப தொழில்கள் உள்ள துறைகளில் அரசு கவனம் செலுத்துவது என்றால் அதனால் விவசாயிகளுக்கு விழுமிய பயன் கிட்ட வாய்ப்புகள் இல்லை.

இன்றையதினம் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி இருந்து கொண்டிருக்கிறது. 11 மாவட்டங்களில் வறட்சி அதிகமாக இருக்கிறது. ஆனால் நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குக் கிணறு களை ஆழப்படுத்த பணம் கடனாகக் கொடுப்பதில்லை, புதிதாக கிணறுகள் வெட்டவும் பணம் கொடுப்பதில்லை. ஆகவே, விவசாயி கள் யாரிடத்தில் போய் எப்படிப் பணம் வாங்கி விவசாயத்தைப் பெருக்கமுடியும்? வறட்சி அதிகமாக இருக்கிற காலங்களில் ரிசர்வ் வங்கியோடு இந்த அரசு தொடர்பு கொண்டு மாற்று ஏற் பாடு ஏதாவது ஒன்றைச் செய்து நிதி உதவி பெற்று இந்த நிலவள வங்கிகளை உயிர் உள்ளவையாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அரசாங்கம் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னால் அடுத்த ஆண்டு எப்படி விவசாயிகளால் விவசாயம் செய்யமுடியும்? இன்று கூட்டுறவு நிலவள வங்கிகளில் தவணை தவறிய கடன்கள் இருக்கின்றன. அரசு 15 ஆண்டுக் கடன் களை 20 ஆண்டுக் கடன்களாகச் செய்து, தவணைகளை அதிகப் படுத்தி நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்க ஏதாவது ஒரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டும். இதற்கு முன் இம்மாதிரியான சிக்கல் வந்ததில்லை. விவசாயிகள் கடன் சுமை படிப்படியாக ஏறிக்கொண்டே வந்திருக்கிறது. ஆகவே, அரசு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து உடனடியாக விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கிறவகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு அரசாங்கம் போர்க்கால நடவடிக்கை பால் முனைந்து செயல் படவேண்டும். வறட்சிக் காலத்தில்தான் கிணறுகளை அதிகமாக ஆழப்படுத்தமுடியும். இப்போது அவற்றை ஆழப்படுத்தினால் தான் அடுத்த ஆண்டு விவசாயம் இருக்கமுடியும். இல்லை யென்றால், விவசாயம் இருக்குமா, விவசாயிகள் இருப்பார்களா, உணவு உற்பத்தி தமிழ்நாட்டில் எந்தளவிற்கு இருக்கும் என்று

சொல்ல முடியாது. ஆகவே, நான் மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்; நிலவள வங்கிகள் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் கடன் பெறுகிற வகையில் இந்த அரசு உடனடியாக ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நில வள வங்கிகள் கிணறுகளை ஆழப்படுத்த கடன் கொடுப்பதில் ஒரு சிக்கல் இருக்கிறது. கிணறுகளை ஆழப்படுத்த -- கிரவுண்ட் வாட்டர் ஸெல்லின் க்ளியரன்ஸ் '' வாங்க வேண்டியிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட அடி தூரத்தில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தினால் தண்ணீர் கிடைக்காது என்று க்ளியரன்ஸ் கொடுக்க மறுக்கிறார்கள். அதன் மூலமாக நிலவள வங்கியிலே இருந்து விவசாயிகள் கடன் பெறுவது தடைபடுகிறது ; ஆனால் அதே நேரத்திலே, நிலவள வங்கியிலே இருந்து கடன் வாங்காதவர்கள், வசதியானவர்கள் கிணறுகளைத் தோண்டலாம், ஆழப்படுத்தலாம் என்ற நிலையிருக்கிறது. ஆனால், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக நிலவள வங்கியிடம் கடனை எதிர்பார்க்கின்றவர்களுக்கு, கடன் வசதியில்லை என்றால், அவர்களுக்கு இந்த வசதி கிடைக்காமல் போய்விடுகிறது ; அது நியாயமாகாது. அதை மறுபரிசீலனை செய்யவேண்டும். தடை என்றால் எல்லோருக்கும் ஒன்றாக இருக்கவேண்டும் ; அல்லது இந்தத் தடையை எல்லோருக்கும் நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இந்த அரசாங்கத்தின் இந்த அறிக்கையிலே 12 ஆம் பக்கத்தில் அரசு பங்கு மூலதனம் என்பதிலே நிலவள நகர வங்கிகள் உட்பட இக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின பங்குமூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதஇறுதியில் 28 கோடி ரூபாயாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவாக இருக்கிறது ; இதை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, பயிர் காப்புறுதித் திட்டம்-- இந்த அரசாங்கத்தின் அறிக்கையிலே ஒரு விவசாயி காப்புறுதி செய்யக்கூடிய அதிக அளவு ரூ.2,000 என்று போடப்பட்டிருக்கிறது. இது மிக மிகக்குறைவு. ரூ. 2,000 என்று சொன்னால், ஒரு ஏக்கர் விவசாயம் செய்வதற்கு விவசாயிக்கு ரூ. 2,000-க்கு மேலாகிறது. ஆக, சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர்கள் இருக்கின்றன. மேலும், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயிகள் வேறு இருக்கிறார்கள். ஆகவே, நாம் நல்ல காரியம் செய்கின்றபோது அந்தப் பயன் நிறைவுபெற ரூ. 2,000 என்ற உச்ச மட்டத்தை விடுத்து. தேவையான அளவுக்கு வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமையை உருவாக்கவேண்டும். அப்போதுதான், வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்படுகின்றபோது, அது பயன்தரத்தக்கதாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் செய்கின்ற உதவியைப் பெறுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, அரசாங்க விளக்கக் குறிப்பில், பயிர்க் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வட்டங்களின் எண்ணிக்கை 1979-லே 6,955 ஆக இருந்தது ; 1980-லே இது 2,283 ஆகக் குறைந்து,



1980—81-லே இது 1757 ஆக மேலும் குறைந்திருக்கிறது. அதே போல், திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் 1979-லே 12,566 ஏக்கராக இருந்தது : 1980-லே இது 4,406 ஏக்கராகக் குறைந்து. 1981-லே 4,110 ஆக மேலும் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம், காப்புறுதி செய்யப்பட்ட தொகை 72 இலட்சத்திலே இருந்து 21 இலட்சமாகக் குறைந்து, பின்னர் 19 இலட்சமாக மேலும் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. அரசாங்கத்தின் உதவி, முயற்சிகள் அத்தனையும் படிப்படியாக உயர்ந்து கொண்டு வரவேண்டிய நிலை இருக்கவேண்டுமே தவிர, இதுமாதிரி குறையக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 20-வது பாராவிலே, விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்திலே 26 அமைக்கப்பட்டுள்ளனவென்று இதிலேகொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், எனக்குக் கிடைத்திருக்கிற விவரங்கள், இந்த விவசாயப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்தவர்களது பணியைத் திரும்பப் பெற்றதாக அறிகிறேன். விவசாய விரிவாக்க அதிகாரிகள், ஜெனரல் வெல்பேர் ஆபீசர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் 28—4—1981-லே இருந்து ஏறத்தாழ 26 சங்கங்களிலே அவர்கள் பணி திரும்பப் பெற்றதாக அறிகிறேன். ஒருவேளை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு தயாரிக்கப்பட்டதற்குப் பின்னர், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே, அதற்கான விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று பாகுபாடு செய்து, நம்முடைய அரசாங்கம் தரம் பிரித்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே 5 ஏக்கரும், கிழக்கு இராமநாதபுரத்திலே உள்ள 5 ஏக்கரையும் ஒன்றாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே, நிலத்தின் வளத்தைக் கருத்திலே கொண்டு, விலையைக் கருத்திலே கொண்டு, சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பார்க்கவேண்டுமே தவிர, ஒட்டு மொத்தமாக நஞ்சை என்றால் 5 ஏக்கர் என்றும், புஞ்சை என்றால் 7½ அல்லது 10 ஏக்கர்கள் என்றும் சொல்வது சரியான, முறையாக இருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் பளு அதிகமாகியிருக்கிறது. தேர்தல் காலத்திலே, அன்றைக்கு ஆட்சி நடத்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்த அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால், வந்தவுடன் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வோம் என்று சொல்லியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களாலும் அன்றைக்கு சொல்லப்பட்டது ; மக்களும் அதை எதிர்பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஏதோ ஓரளவுக்குச்

செய்திருக்கிறார்களே தவிர, விவசாய மக்கள் எதிர்பார்த்த அளவுக்குக் காரியங்கள் செய்யவில்லை. எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் காலத்திலே கொடுக்கப் பட்ட வாக்குறுதியாக இருந்தாலும்கூட, சிறு விவசாயிகள் கடன் அத்தனையையும் உடனடியாக ரத்து செய்யவேண்டும். 5 ஏக்கர்கள், 4 ஏக்கர்கள் நிலம் வைத்துக்கொண்டு, கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வளர்ந்து, கடனாளியாக இறக்கின்ற நிலை இருக்கிறது. அந்த பரிதாபகரமான நிலைமையைப் போக்கு கின்ற அளவுக்கு, இந்த சிறு விவசாயிகளின் அத்தனைக் கடன்களையும் உடனே ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டினை இங்கே அழகாக தெரிவித்திருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடனே, விவசாயிகளுடைய கடன்கள் எல்லாம் உடனே தீர்க்கப்படும் என்று நாங்கள் சொன்னதாகவும், இன்னும் தீர்க்கப்படவில்லை; ஏதோ கொஞ்சம் செய்திருக்கிறோம் என்றும் அந்த வகையில் ஏமாற்றம் இருப்பதைப் போன்ற கருத்தை இங்கே வெளியிட்டார்கள். நான் இதே மாமன்றத்தில் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன், ஐந்தாண்டுகளுக்கு இடையில் சிறு விவசாயிகளுக்குத் தொல்லை தரக்கூடியவைகளை தீர்த்து வைப்போம் என்று நாங்கள் சொன்னோம். ஒரு ஆண்டு முடிந்திருக்கிறது. அடுத்த ஆண்டு துவங்கவிருக்கிறது. இதற்குள் ஏறக்குறைய 120 கோடிக்கு மேல் நிவாரணம் அளித்திருக்கிறோம். மத்திய அரசு அதைச் செய்யக் கூடாது என்று திரும்ப, திரும்ப கடிதம் அனுப்பிக் கொண்டிருக்கிறது. என்பதையும் செய்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள் என்பதையும் இங்கே நினைவிற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற, பதவியில் இருக்கிற ஏனைய நான்கு ஆண்டுகளுக்குப் பொருந்தும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தேர்தலில் கொடுத்த வாக்குறுதியைப் போல வருகின்ற காலங்களில் அத்தனையையும் ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதை நிறைவேற்றுவீர்கள் என்று நானும் நம்புகிறேன். எதிர் பார்ப்பதில் தவறு இல்லையே ?

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்பார்ப்பதில் நிச்சயமாக தவறு இல்லை. அதேபோல இங்கே கூறுகின்ற நண்பர் அவருடைய கட்சியின் சார்பாக மத்திய அரசை எங்களுக்குத் துணை நிற்க வேண்டுமென்று கோரி உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய நியாயமான, நல்ல கொள்கை களுக்கு என்றைக்கும் இந்த வரிசையிலிருந்து நாங்கள் ஆதரவு கொடுப்பதற்குத் தவறியதே கிடையாது. என்றைக்கும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருப்போம். இன்றைய தினம் இங்கே கடன் வசூல் செய்வதில், அன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற முறைகேடு களை எடுத்துச் சொன்னோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட உடனடியாக தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கை களை எடுத்தார் என்று நினைக்கிறேன். சிறிய விவசாயிகளாக இருந்தாலும், பெரிய விவசாயிகளாக இருந்தாலும் கடன் வசூல் செய்வதில் அரசு ஓரளவு தயவு காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் வேறு உப தொழில் வைத்திருப்ப வர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல வைத்திருந்தாலும் சரி, கடன் வசூல் செய்வதில் கண்டிப்பு காட்டலாம். ஆனால் விவசாயத்தை மாத்திரம் செய்துகொண் டிருப்பவர்களிடம் அரசு தாராளமாக நடந்துகொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயப் பெருமக்களை அன்றைக்குச் சொன்னதைப் போல ஓநாய்களைப் போல உள்ளனர், தமிழ் நாட்டில் ஒன்பது இலட்சம் ஓநாய்கள் இருக்கின்றன. கடன் பாக்கியைக் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்கிற போக்கை அரசு நிச்சயமாக கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்காக நாம் எடுக்கிற ஒவ்வொரு நட வடிக்கையும் அவர்கள் ஊக்கத்தை வளர்ப்பதாக, உணவு உற் பத்தியைப் பெருக்குவதாக இருக்க வேண்டும். இந்தத் துறையில் அரசினுடைய ஆக்கபூர்வமான முயற்சிகள் இருக்க வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு சூப்பர் மார்க்கெட்டுகள் இருக்கின்றன. இந்த மாமன்றத்திலே கூட, கோயம்புத்தூரில், திருச்சியில் இருக்கிற சிந்தாமணி கூட்டுறவு அங்காடிகளில் நடைபெற்றுவந்த பல்வேறு முறைகேடுகளைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட நேரடியாகச் சென்று நடவடிக்கை எடுத்ததைக் கேள்விப்பட்டேன். மதுரையிலே இருக்கிற பாண்டி யன் சூப்பர் மார்க்கெட்டிலே கூட, எப்படி கோயம்புத்தூர் சிந்தா மணி அங்காடியில் சிமெண்ட் விநியோகம் சரியாக இல்லை, தவறு கள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்களோ அதைப் போல முறைகேடுகள் இங்கும் நடந்து அவை கலெக்டருடைய கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டு, சிமெண்ட் விநியோகம் அவர்களுக்குக் கிடையாது என்று தடுத்து நிறுத்தியதாகவும், நான் அறிகிறேன். அதுபற்றி முறையாக விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் அத்தனையும் நல்ல முறையிலே இயங்க வேண்டுமேயானால், மக்களுக்குத் தரமான பொருள்கள் நியாயமான விலையில் தருவதோடு, இலாபம் ஈட்டி

வும் முடியும். எனக்கு இருக்கிற கவலையெல்லாம் இந்தக் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் வர வர அரசு அலுவலகங்களாக மாறிகொண்டிருக்கின்றனவோ என்று அச்சப்படுகிறேன். அந்த ரீதியில் தங்கள் போக்கை மாற்றிக்கொண்டிருக்கின்றனவோ என்ற சந்தேகம் கூட எனக்கு உண்டு. உதாரணமாக பாண்டியன் சூப்பர் மார்க்கெட்டிலே, இன்றையதினம் மத்திய அரசாங்கம் கொடுக்கிற 'சப்சிடிக்காக' அங்கே இருக்கிற அதிகாரி டெல்லி யிலே போய் உட்கார்ந்துகொண்டு, அதைப் பெற்றுத்தான் சம்பளம் போட வேண்டும் ; அதைப் பெற்றுத்தான் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று எண்ணுகிற முறையிலே கூட அங்கு நிலை ஏற்பட்டிருப்பதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற செய்தி சரியான செய்தியாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். நடுத்தர மக்களுக்கு நேரடியாக பணிபுரியக்கூடிய இத்தகைய கூட்டுறவு சிறப்பங்காடிகள் நல்ல முறையிலே இயங்குவதற்கான வழிவகைகளை அரசு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே உள்ள அமைச்சர்கள் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யக் கூடாது என்று கூறுகிறார்கள். அப்படிச் சொல்கிற அமைச்சர்களை இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் 'கேரோ' செய்ய முன்வருவார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன் : மத்திய அமைச்சர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் மத்தியிலே சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றியெல்லாம்—உங்களுக்கு என்று ஒரு கட்சி இருக்கிறது, கட்சியிலே உறுப்பினர்கள் இருக்கிறார்கள்—ஏன் நாடாளுமன்றத்திலே பேச வேண்டியவைகளையெல்லாம் இங்கே பேசி நம்முடைய நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை.

அடுத்து கிராமப்புறங்களிலே உள்ள சிறப்பு அங்காடிகளிலே அரிசி விற்பனை செய்யப்படுகிறது. அங்கே உள்ள மக்களுக்கு கோதுமை, மைதா போன்றவையும் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பலசிறப்பு அங்காடிகளில் சரியான நேரத்திற்குத் திறக்கப்படாத நிலைமை இருக்கிறது என்றும் முறையாக வியாபாரம் நடத்துவதில்லை என்றும் கேள்விப்படுகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியிலேயே திருமங்கலத்திலே என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அங்கே சரியான நேரத்திற்கு அங்காடியைத் திறப்பதில்லை, மக்கள் வந்து வாங்குவதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவில்லை, சாதாரணமாக தனியார் வணிக நிறுவனங்களுக்குச் சென்றால் காணப்படுகிற வரவேற்பு இங்கு



இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சில்லறை பிரச்சினைகள் எல்லாம் இல்லாமல் மக்களுக்காக நாம் இருக் கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து செயல்படுகிற வகையிலே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்த வரையில் ரிஜிஸ்தி ரார் நினைப்பாரேயானால் ஒரு கூட்டுறவு சங்கம் சரியாக் இயங்கவில்லையென்று சொல்லிக் கலைப்பதற்கு ஒரு பிரிவு சட்டத் திலே இருக்கிறது. கேட்டால் அது நீண்ட நெடுங்கால மாக இருக்கிறது என்று அமைச்சர் சொல்லலாம். உங்கள் காலத்திலேயே இருந்தது என்று சொல்லக்கூடும். இருந்தாலும் கூட ரிஜிஸ்திரார் நினைத்துவிட்டால்—நான் தனிப்பட்ட முறை யிலே பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலே சொல்கிறேன்— தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்துவிடலாம் என்று இருக்கிறது. அந்த அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டும். ஏனைய சங்கங்கள் கலைக்கப்படுகிறபோது அவர்கள் கோர்ட்டு களுக்குச் செல்கிற வாய்ப்பு இருப்பதைப் போன்று கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையிலும்கூட, ஏன் கலைக்கப்பட்டது என்ற காரணத்தைக் காட்டுவதற்கான வாய்ப்பை கோர்ட்டிலே எடுத்துச் சொல்கிற முறையிலே வாதிடுவதற்கான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். வருகிற சட்டத் திருத்தத்திலே இதையும் கருத்திலே கொண்டு அந்தப் பிரிவை மாற்றியமைக்க வேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தணிக்கைத் துறைக்குத் தனியாக டைரக்டர் நிய மனம் செய்து இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவருக்கு என்ன என்ன வேலைகள், என்ன வழிமுறைகள் என்பவையெல்லாம் நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

கையாடல் குற்றங்களைச் செய்தவர்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்கின்ற முறையிலே சட்டத்திலே விதிகள் இடம் பெறச் செய்யவேண்டும். நிறைய வழக்குகள் நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீக்கிரமாக முடிப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் வீடு கட்டுவதற்கு அரசாங்கத்திலேயிருந்து கடன் 9 சத வீத வட்டியில் கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்ந்து வீடு கட்ட வேண்டுமென்று கடன் கேட்டால் பதின்மூன்றே முக்கால் அல்லது 14 சத வீதம் வட்டி வசூலிக்கிறார்கள். ஆகவே எங்கேயிருந்தாலும் கடன் கொடுக்கிறபோது வட்டியை ஒரே விகிதத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவாபரேடிவ் கான்ட்ராக்ட் லேபர் சொஸைடி என்பது அழுத்தப்பட்டவர்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக இயங்கி வருகிறது என்று கேள்விப்படுகிறேன். அந்தச் சங்கங்களிலே 5, 6 சங்கங்கள் நல்ல முறையிலே நடந்து வருகின்றன என்று கேள்விப்படுகிறேன். தனிப்பட்ட கான்ட்ராக்டர்கள் போட்டியிடுகிற காரணத்தினால் அந்தச் சங்கங்களால் அவர்களோடு போட்டியிட முடியவில்லை. ஆகவே அரசாங்கம் அவர்களின் மேல் கனிவும், பரிவும் அக்கறையும் கொண்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிவகாசியில் அரிஜன் மேட்ச் பேக்டரி ஒன்று இருந்தது. அது இப்போது இயங்கவில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவருடைய தலையீட்டின் காரணமாக இன்றைய தினம் இயங்கவில்லை. அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன். அதை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டே இரண்டு விஷயங்களைச் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களிலே லோக்கல் கிளார்க் என்று கூட்டுறவு மத்திய வங்கி நியமனம் செய்ததாக அறிகிறேன். இன்றைக்கு நிர்வாகத்தை அந்தந்தச் சங்கங்களே மேற்கொண்டுவிட்ட காரணத்தினாலே அந்தந்தச் சங்கத் தலைவர்கள், அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி நடத்துகிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்குச் சம்பளம் குறைவு, பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதம். அவர்களுக்கு புரமோஷன் கிடையாது. 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஜூனியர் சூப்பிரவைசர் என்ற அந்த நிலைகூட அவர்கள் பெறமுடியாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி பதவி உயர்வு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

பிரதம நில வள வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 11 ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்தான் இன்றைக்கும் இருக்கிறது. அவர்களுக்கு அரசாங்க சிப்பந்திகளுக்கு அளிக்கப்படுவதைப் போன்ற பஞ்சப்படி 1—4—79 முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற வங்கிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையிலே பஞ்சப்படிகள் மற்ற அனைத்தும் வழங்கப்படுகின்றன. ஆனால், வங்கியிலே பல்லாண்டுக் காலமாகப் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி வழங்க மறுக்கப்படுகிறது. மதுரை மாவட்டம், திண்டுக்கல் சரகத்தைச் சேர்ந்த பிரதம நிலவள வங்கி ஊழியர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைக் கடந்த



27—4—81ஆம் தேதியிலிருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். மேற்படி ஊழியர்களின் கோரிக்கை, ஓரே வங்கியிலே அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய பஞ்சப்படி வங்கி ஊழியர்களுக்கு மறுக்கப்படுகின்ற காரணத்தால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது மாவட்ட அளவிலே, மாநில அளவிலே தொடர்ந்து வங்கியின் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

''கூட்டுயர்வே நாட்டுயர்வு'' என்பதற்கேற்ப இந்தத் துறை நன்றாகச் செயல்பட்டால்தான் நாடு உயரும், விவசாயப் பெருங்குடி மக்களும் நன்றாக வாழ முடியும் என்ற கருத்திற்கேற்ப இந்தத் துறை இன்றைக்குப் புத்துயிர்பெறும் அளவிற்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது. காரணம் என்னவென்றால் பெரும் விவசாயிகள் இன்றைக்குப் பணம் கட்டுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகக் கொண்டு வரும் திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

கூட்டுறவு அங்காடிகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு மாதம் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இன்றைய விலைவாசி உயர்வுக்கேற்ப அவர்களுடைய ஊதியத்தைக் கூட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுப்பதைப்போல் இந்த ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு உலக ஊனமுற்றோர் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்தத் துறையின் கீழ் ஏதாவது உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கிணறு வெட்டக் கடன் வாங்குகிறார்கள். அப்படிக் கடன் வாங்கிக் கிணறு வெட்டும்பொழுது கிணறு பொய்த்துவிட்டால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது அவர்களுக்கு மானிய உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னர் பேசிய திரு. சித்தன் அவர்கள் கூறினார்கள், அனைத்துக் கடன்களையும் இந்தச் சர்க்கார் ரத்து செய்ய வேண்டுமென்று. ஆனால் எங்களது புரட்சித் தலைவரவர்களின் சர்க்கார் 120 கோடி ரூபாய் வரையில் தள்ளுபடி செய்துள்ளது. ஆனால் உங்களது டெல்லி சர்க்கார் இதற்கு உதவி செய்ய மறுக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தத் துறை நலிவடைந்திருப்பதற்குக் காரணமே இதற்குமுன் இருந்தவர்கள் இந்தத் துறையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டதுதான். கடந்த மூன்று, நான்கு ஆண்டுக்காலமாக விவசாய சங்கத்தினர் என்று சிலரும், நிலச்சுவான்தார்களும் விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கட்டவிடாமல் தடுத்தார்கள். ஆனால் சிறு விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்டத் தயாராக இருந்தும்கூட, ஊர்க் கட்டுப்பாடு என்ற பெயரால் முறைப்படி அவர்கள் கடன்களைத் திருப்பிக் கட்டுவதைத் தடுத்த காரணத்தால் இன்றைக்கு வட்டிக்கு வட்டி, அபராத வட்டி என்று அந்த விவசாயிகள் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

சிறு விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்டவிடாமல் நிலச்சுவான்தார்கள் தடுத்ததோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு 4 ரூபாய், 5 ரூபாய் வட்டி என்ற அளவிற்குக் கடனைக் கொடுத்து அவர்களை மிகவும் நலிவடையச் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், சிறு விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கூடுமானவரையில் தவணை முறையில் வசூலிக்க வேண்டும் அல்லது 3 மாதங்களுக்குத் தள்ளி வைத்து வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் சுமார் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தனியாரிடம் கல் உடைக்கும் தொழிலாளர்களாக அவர்களுக்கு அடிமை போல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களைத் கூட்டுறவு துறைக்குள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே கல் உடைக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்து தரவேண்டுமென்று 9 மாதகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தச் சங்கத்தைப் பதிவு செய்து தருவதில் காலதாமதப் படுத்துகிறார்கள். அவர்களைத் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து கொண்டு, கடன் வழங்கி தொழில் செய்ய உதவி செய்ய அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சில விவசாயக் கடன் சங்கங்களிலே ஊழல்கள் நடந்துள்ளன என்று சொல்கிறார்கள். அந்த ஊழல்கள் நடப்பதற்குக் காரணமாக இருந்த கூட்டுறவுச் சட்டத்தையே மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதற்கு முன் இருந்த அந்தச் சட்டத்தில் அங்கேயிருந்த செயலாளர்களும், தலைவர்களும் மற்ற விவசாயிகளின் பெயரில் கடன் வாங்கி, அந்த விவசாயிகளின் கையெழுத்தை அவர்களே போட்டுக்கொண்டு பினாமி லோனாக, அந்தக் கடனைப் பெற்றிருக்கின்றார்கள். அந்தக் கடனைத் திருப்பிக் கட்டவரும்போதுதான் அந்த உண்மை வெளியே தெரிகிறது. ஆகவே, அந்த விவசாயிகளிடம் ஒரு பாஸ்புக் கொடுத்து, அவர்களிடமிருந்து வாங்கிய கடன் தொகைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது அவர்களுக்கு அளித்த கடனையும் எழுத வேண்டும். அவர்களிடமிருந்து பெற்ற கடனையும் வரவு வைத்துக் கொடுத்தால், இந்தப் பிரச்னைகள் எல்லாம் வராது. மேற்படி பிரச்னைகள் வரும்போதுதான் விவசாயிகள் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு, சில ஊர்களிலே, 2 ஏக்கர் நிலம் இருக்கும், 7 ஏக்கர் இருக்கிறது என்று கூறி கடனை அவர்கள் பெற்றுக் கொண்டு, கடன் கட்ட வரும்போது, எவ்வளவு பாக்கி இருக்கிறது என்று தெரியாத காரணத்தால், விவசாயிகள் கட்டமுடியாத சூழ்நிலை எற்பட்டிருப்பதால் அதிகாரிகளிடம் எனக்குக் கடன் இல்லையென்று சொல்லும் அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கூட்டுறவுச் சட்டத்தை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, சில நிலவள வங்கிகளிலே கிணறுகள் வெட்டக் கடன் வாங்கும்போது, சுமார் ரூ. 3,000 பெறுமான நிலம் இருக்கும். ஆனால், ரூ. 10,000 வரை கடன் வாங்குகிறார்கள். வாங்கிய கடனைக்கொண்டு சரியான முறையில் கிணறு வெட்டுவதில்லை. அவர்கள் அந்தக் கடனை வேறு பினாமி பெயரால் தொழிலில் ஈடுபட்டு, அந்த ரூ. 3,000 பெறுமான நிலம் போனாலும் பரவாயில்லையென்று செயலாற்றுகிறார்கள். இதற்குக் காரணம் முந்தைய சர்க்கார் என்று கூறி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தற்காலிகத்தலைவர் அவர்களே, இந்தக்கூட்டுறவுமானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் நிற்கிறேன். முதலாவதாக, இந்தக் கூட்டுறவு மானியத்தைப் பற்றி பேசுகின்றபொழுது ஒரே பிரச்சினையில் பல பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. ஏற்கனவே, சென்ற அரசு சட்டமன்றத்திலே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கான முறையிலே மு[illegible] வந்தபொழுது, அது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அந்த

பொறுக்குக் குழுவும் மாநிலம் பூராவும் சுற்றிப் பார்த்து, ஒரு
அறிக்கையைத் தயாரிக்கின்ற சூழ்நிலையில், மத்திய அரசாங்கம்
இந்த அரசைக் கலைத்ததினுடைய விளைவாக, அந்தப் பொறுக்குக்
குழுவினுடைய ஆய்வுக் காலம் முடிந்துவிட்டது. பொறுக்குக் குழு
உறுப்பினர்கள் பதவிக் காலம் போய்விட்ட நிலையிலே அது
நின்றுவிட்டது. அதற்குப் பிறகு புது அமைச்சரவைப் பொறுப்
பேற்ற பிறகு மீண்டும் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு,
அதுவும் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, பல மாவட்டங்களில்
சுற்றுப்பயணம் செய்தது. ஏற்கனவே சென்ற அரசு அமைத்த
பொறுக்குக் குழுவும் 10 மாதங்களுக்கு மேல் சுற்றுப் பயணம்
செய்தாகிவிட்டது. இப்பொழுதும் கிட்டத்தட்ட 9 மாதங்
களுக்கும் அதிகமாகவே ஆகிவிட்டது. இப்பொழுதும் கூட,
அது இன்னும் பொறுக்குக் குழு ஆய்விலே இருக்கிறது. அது
முடிந்ததற்குப் பிறகுதான் சட்டம் கொண்டு வரக்கூடிய நிலைமை
இருக்கிறது. அதற்குப் பிறகுதான் தேர்தல் நடத்தும் நிலைமை
இருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகுதான் கூட்டுறவுச்
சங்கங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்குச் சம்பளப்
பாதுகாப்பும் வேலையில் பாதுகாப்பும் கிடைக்கக்கூடிய நிலைமை
இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பாதுகாப்புகள் கொடுக்கக்
கூடிய அந்தத் சட்டத்தைக் கொண்டு வருவதில் காலதாமதம்
இருக்கக்கூடாது. ஆகவே, உடனடியாக, பொறுக்குக் குழு
அறிக்கையை தயார் செய்து இந்தச் சட்டமன்றக் கூட்டத்
தொடரிலேயே மசோதாவைத் தாக்கல் செய்து, அதன் அடிப்
படையிலே சிப்பந்திகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்
வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதோடு
மாத்திரமல்ல, சீக்கிரமாகத் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்
பட்ட போர்டுக்கு அதிகாரம் அளிக்கும் முறையிலே, அரசாங்கம்
சீக்கிரமாகச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிறகுதான்
தேர்தல் உட்பட சிப்பந்திகள் சம்பளம் உட்பட எல்லாம் வர
வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, இந்த நிலைமையை
வற்புறுத்திச் சொல்ல மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே நான்
கடமைப்பட்டிருக்கிறேன்,

கூட்டுறவுச் சிப்பந்திகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு
ஒரு நிரந்தர ஏற்பாடு இருக்கட்டும். ஏற்கனவே பல கேள்வி
களுக்குப் பதில் அளிக்கும் போது இங்கு சில விஷயங்கள் சொல்லப்
பட்டன. அதில் பலரகமான சிப்பந்திகள் இருக்கிறார்கள்.
அதையே நீண்ட பட்டியலாகப் போடலாம். இன்னும் சொல்லப்
போனால். ஆயிரக்கணக்கான வேலைகளைச் செய்து கொண்
டிருக்கிற கிராமங்களிலேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள்
தான் இன்றையதினம் அரசிஓுடைய திட்டங்களை அமுல்
நடத்துகின்றன. மண்ணெண்ணெயை அவைகள்தான்
வினியோகிக்கின்றன ; சீனியை அவைகள்தான் விநியோகிக்
கின்றன. இன்னும் சில இடங்களில் அரிசியையே அவர்கள்
மூலம்தான் சப்ளை செய்கிறார்கள். எல்லாவற்றுக்கும
மேலாக கடன் மூலமாகவும், ரொக்கம் மூலமாகவும் போதிய



அளவு வருமானம் இல்லையென்ற காரணத்தாலே, அதிலே
வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்குக் குறைவான அளவு சம்பளம்
இருக்கிறது.

[முற்பகல் 10-50]

அந்தச் சம்பளம் அவர்களுக்குப் போதவில்லை என்ற நிலை
ஏற்பட்டிருப்பதையும் பல தடவைகள் இங்கே பேசப்பட்டிருக்
கின்றன. எனவே அப்படிப்பட்ட சிப்பந்திகளுக்கு குறைந்த
பட்சச் சம்பளம் நிர்ணயம் செய்வதற்கு மாற்று ஏற்பாடுகளைச்
செய்ய அரசு முன்வரவேண்டும் என்றுகேட்டுக் கொள்கின்றேன்.
அதேபோன்று நிலவள வங்கி, அர்பன் வங்கி, நுகர்வோர் கூட்டுறவு
கடைகள் போன்ற ஒவ்வொரு கூட்டுறவு ஸ்தாபனத்திலும் பணி
யாற்றுகின்ற பணியாளர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளச்
நிர்ணயிக்க வேடுண்ம் என்பதைப்பற்றி ஒரு சட்டத்தை அரசாங்கம்
உருவாக்க முன்வரவேண்டும். அதற்கு முன்பாக இடைக்கால
நிவாரணம் அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்துக் கடன்களைப் பற்றிச் சொல்லும்போது, சென்ற
முறையே அரசாங்கம் அறிவித்தது. ஏற்கனவே குறுகிய காலக்
கடன் வாங்கப்பட்டு, அது மத்திய காலக் கடனாக மாற்றப்
பட்டிருந்தால் சில விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படும்என்று
சொல்லப்பட்டது. இது பல கூட்டுறவுச் சங்கங்களில் அமல்
நடத்தப்படவில்லை. விவசாயிகள் விவரம் தெரியாமல் இருப்ப
தால், அது அமல் படுத்தவில்லை. மத்தியகாலக் [illegible]
மாற்றப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக [illegible]
சங்கங்களில் விவசாயிகளை வற்புறுத்தி அந்தக் கட[illegible]
வசூல் செய்யும் நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனவே குறுகிய
காலக் கடன்களாக இருந்து மத்தியகாலக் கடனாக மாற்றப்படா
விட்டாலும்கூட, சிறு விவசாயிகள் அந்தக் கடன்களை கட்ட
வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி, அவர்களுக்கும்
நிவாரணம் அளிக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
அவர்களும் இந்தப் பலனை அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஏற்கனவே கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்திருக்
கிறோம். பல்வேறு இடங்களில் தனியார்கள் யாரும் கடன்
கொடுப்பதில்லை. இந்த சட்டம் வந்த பின்னால், அவர்கள்
அதை நிறுத்திவிட்டார்கள். எனவே, இந்த விவசாயிகளுக்கு
உதவக்கூடிய கட்டாயம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருக்கின்றது.
கூட்டுறவுச் சங்கங்களில் நகைகளின் பேரில் தற்போது கடன்
கொடுக்கப்படுகிறது. அது எப்படி இருக்கிறது என்று பார்த்தால்
தற்போது நடைமுறையில் ஒரு கிராம் 140,150 ரூபாயாக இருக்
கின்றது. ஆனால் சில பாங்குகளிலே கிராமங்களிலே இப்படிப்
பட்ட சாமான்களை வைக்கும்போது, 50 ரூபாய், 60 ரூபாய்
தான் கொடுக்கும் நிலை இருக்கின்றது. இன்னும் கொஞ்சம்
உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று ரிஜிஸ்டிரார் அவர்கள்

உத்தரவு போட்டும்கூட அவர்களுக்குத் தரப்படுவதில்லை. 140• 150 ரூபாய் என்று விற்கின்றபோது குறைந்த பட்சம் 75 சதவீதம் மதிப்புக் கடன் தரலாம். மார்க்கெட் ரேட்டிலே கடன் கொடுக்கும் வகையிலே அந்தத் தொகை உயர்த்தப்படவேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கி றன். அப்படிக் கொடுத்தால்தான் கிராம மக்களுக்குக் கடன் நிவாரண சட்டத்தின் காரணமாக கடன் கொ'டுக்க மறுக்கின்றவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க முடியும். விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க முடியும்.

எனக்கு முன்னே பேசிய நண்பர்கள் சொன்னதைப்போல பொய்த்த கிணறுகள் என்று சொல்லும்போது, ஏற்கனவே இவ்வளவு அடிகள் வெட்ட வேண்டும் என்று நிபந்தனையின் பேரில் வெட்டுகிறார்கள். அந்த நிபந்தனையை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. நம்மிடமிருந்து கடன் வாங்கிச் சென்று, அந்த வேலையைத் தொடங்கும்போது விலைவாசிகள் ஏறிவிடுவதன் காரணமாக 2, 3 அடிகள் நின்று விடுகின்றன. அதே நேரத்தில் சொந்தப் பணத்தைக் கொண்டு வெட்டினாலும்கூட தண்ணீர் இல்லை என்று சொல்லி, அதன் காரணமாக பொய்த்துப் போய்விட்டது என்று அப்ளிகேஷன் போட்டால் அந்த அப்ளிகேஷன்கள் காலாகாலத்தில் பரிசீலிக் கப்படுவது இல்லை. அப்படிப் பரிசீலிக்கப்படாத காரணத்தால் அவர்களுக்கு வட்டி அதிகமாக ஏறுகிறது. அதனால் விவசாயிகள் நட்டம் அடைகிறார்கள். எனவே இது சம்பந்தப்பட்ட வகையில் அமைச்சர் அவர்கள் பரிசீலித்து இந்த மனுக்களின் பேரில் துரிதமாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

அடுத்து நுகர்பொருள் விநியோகம் செய்யும் நிலையங்கள் மா நிலம் முழுவதும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சாமான்களை வாங்கி விநி யாகம் செய்வதில் ஊழல் நடைபெறாமல் தடுப் பதற்காக இது செயல்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால் சில இடங்களில் என்னென்ன சாமான்களை என்னென்ன விலைக்கு விற்க வண்டும் என்று அவர்கள் கூட்டாகச் சேர்ந்து கொண்டு அங்கே வாங்குகிறார்கள். ஆனால் வேறு இடங்களில் போகும்போது இதைவிடக் குறைவாக கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கிறேன். திருச்சியிலே நுகர்பொருள் சங்கத்திலே ஒரு குவிண்டாலுக்கு 410 என்று போட்டுவிட்டு, அ த தரம் உள்ள அதே சாமான்களை வேறு இடத்திலே கொள்முதல் போடுகிறபோது அதிலிருந்து 20, 25 ரூபாய்கள் குறைவாகக் கொடுப்பதற்கு தயாராக இருக் கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலை இருப்பதன் க ரண மாக அந்த டெண்டர் கோருகிற நேரத்தில் அதைவிடக் குறைவாக சப்ளை செய்ய யார் தயாராக வருகிறார்களோ அந்த அடிப் படையிலே தேர்ந்தெடுத்து—இங்கேதான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று போர்டிலே உத்தரவிருக்கிறது என்று அந்த ஸ்தாபனங்களை வற்புறுத்துவது சரியல்ல. விலை குறைவாக உள்ள இடங்களில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளித்து, அதற்குத் தடையாக இருப்பதைத் தவிர்ப்பதற்குச் சட்டபடி



நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பதிலாக இங்கேதான் கொள் முதல் செய்ய வேண்டும் என்று அந்த ஸ்தாபனம் வற்புறுத்துவது சரியல்ல. அதன் விளைவாக அதிகப்படியான விலைக்கு அவர்கள் வாங்கி, இங்கே கொடுக்கிறார்கள். இதனால் ஜனங்களிடத்தில் அதிக விலைக்கு அந்தப் பொருள்கள் விற்கிற நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உர விநியோகத்தைப் பற்றியும் ஒரு விஷயம் சொல்ல விரும்பு கிறேன். இந்தச் சங்கங்களில் காலாகாலத்தில் கடன் சாங்ஷன் செய்வது இல்லை என்பது ஒருபுறம் இருந்தாலும், உரங்கள் காலாகாலத்தில் அலாட்மென்ட் வருவது இல்லை. அது தாமத மாகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் விளைவாக எந்தக் காலத்தில் அந்தப் பயிர்களுக்கு உரங்கள் போட வேண்டும் என்று அரசு அறிவுரைகள் கூறுகிறதோ அந்த நேரத்தில் விவசாயிகள் அந்த உரத்தைப் போடமுடியாமல் போய் விடுகிறது. ஆரம்ப காலத்தில் அந்தப் பயிர்களுக்கு உரம் போட்டால் நல்ல முறையில் வளரும். ஆகவே, உரங்களை முன்னதாகவே கொள்முதல் செய்து, ஒவ்வொரு சீசனுக்கும் சரியான நேரத்தில் அவைகள் கிடைக்கின்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தி போன்ற பொருள்கள் கொள்முதல் செய்வதற்கும், தரமான முறையில் அவைகளை வாங்குவதற்கும், நியாயமான முறையில் விற்பதற்கும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில், இதைக் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் செய்தால் போதாது. எங்கெங்கே பருத்தி அதிகமாக விளைகிறதோ அங்கெல்லாம் இப்படிப் பட்ட நிலையங்கள் ஏற்படுத்தி, அங்கேயுள்ள பருத்தி உற்பத்தியாளர்களிடமிருந்து அதை நியாயமான முறையில் கொள்முதல் செய்து, வர்த்தகச் சூதாடிகள் அதிக ஸ்டாக் வைத்துக்கொண்டு விலையேற்றம் செய்யாத வகையில், கூட்டுறவுத் துறைமூலம் பரவலாக எல்லா இடங்களிலும் இதைச் செய்யவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள் கிறேன்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, நடந்து கொண்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையில் பல நலிந்த பிரிவினருடைய முன்னேற்றங்களுக்காக நல்ல பல வளர்ச்சித் திட்டங்களுக்கான மதிப்பீடு மற்றும் திருத்த மதிப்பீடு களைச் சிறப்பான முறையில் தயாரித்து இம் மாமன்ற ஒப்புதலுக்காக வைத்துள்ள மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திறமையினைப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில், விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். அவர்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். எங்கள் கட்சி முழுமையாக மத்திய அரசின் ஆட்சி பொறுப்புக்கு வந்தால் நாங்கள் விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்வோம் என்று தேர்தல் காலங்களில் சொன்னார்களே, ஆட்சிக்கு வந்த பிறகு—சர்வ வல்லமை யுள்ள மத்திய அரசின் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு, நினைத் தால் இந்த ஆட்சியை ஒரு நிமிட நேரத்தில் வீட்டுக்கு அனுப்பும் சக்தியும் அதிகாரமும் பெற்ற அரசு என்று சொல்லிக்கொள்கிற வர்கள், இந்தியாவின் முழு சுக துக்கங்களில் பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கும் ஆட்சி என்று சொல்லிக்கொள்பவர்கள், நினைத்து இருந்தால், தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் நன்மையைக் கருதி அந்த விவசாயக் கடனை தள்ளுபடி செய்து இருக்கலாம் அல்லவா? அப்படிப்பட்ட காரியத்தை இந்த அரசு செய்வதற்காவது அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்கள் உறு துணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி னார்கள். அந்தக் குறைபாடுகளுக்குக் காரணம், கடந்த கால ஆட்சியின் பினாமி பெயரிலும், தக்க தகுதிக்கு மீறியும் கடன்கள் கொடுத்து, பல ஊழல்களை உருவாக்கி, அந்தக் கூட்டுறவுத் துறையை ஒரு நோய் பிடித்ததாக ஆக்கிவிட்டார்கள். இந்த அரசாங்கமும், அமைச்சரும் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் தான் அந்த நோயிலிருந்து அந்தத் துறையைக் காப்பாற்றி, நல்லநிலையில் கொண்டுவருவதற்காகப் பாடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த முயற்சியை நான் வரவேற்கிறேன்.

கூட்டுறவுக் கடைகளில் போடப்படும் புழுங்கல் அரிசி புழு நெளியும் அரிசியாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். கூட்டுறவுத் துறையில் நல்ல அரிசிதான் வினியோகிக்கப்படுகிறது என்பதைக் கூறிக்கொண்டு, அவர்கள் ஆண்டுக்கொண்டிருந்த காலங்களில்தான் புழுக்களை கப்பல் கப்பலாக ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

குறுகிய, மத்திய, நீண்ட காலக் கடன்களை விவசாயப் பெரு மக்களுக்கு வழங்கச் செய்துள்ள ஏற்பாட்டின் பாங்கினைப் பாராட்டுகிறேன். நலிந்த பிரிவினரிடையே மறுமலர்ச்சி இல்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். கடந்த காலங்களில் விவசாயத் துறையில் வழங்கப்பட்ட கடன் உதவிகளில் ஆதிதிராவிட மக்கள் அதிக அளவு உதவிப் பணம் பெறவில்லை என்பதை உணர்ந்த வணக்கத்திற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 1981–82ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட 40 ஆயிரம் விவசாயக் குடும்பங்களை, கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரும் செயல் பொதுவுடைமைப் பூங்காவிற்கு அழைத்துச் செல்லும் புரட்சிகரமான திட்டமாகும்.



இந்த அரிய திட்டத்தை அமுல்படுத்துகிற முறையினை எண்ணுகிறபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இதயம் இமயத்தை காட்டிலும் உயர்ந்து நிற்கிறது, என்பதை எண்ணிப் பெருமைபடுகிறேன்.

[முற்பகல் 11-00]

இந்தத் திட்டத்தின் மூலம் பால்பண்ணை, ஆடுவளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவற்றிற்கு மத்திய காலக் கடன்களைப் பெறும்பொருட்டு சங்கத்திற்கு செலுத்தவேண்டிய பங்கு மூலதனத் திற்க கூட்டுறவுச் சங்க ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொரு வருக்கும் அரசு மானியமாக 100 ரூபாய் வழங்க திட்டமிடப் பட்டுள்ள செயல் திட்டத்தை முழுமையாக அந்த மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதில் உள்ள உறுதியை, அக்கறையை எடுத்துக்காட்டுகிறது. இப்படிப்பட்ட அரிய திட்டத்தைச் செயல் படுத்துகிற இந்த அரசுக்கு அந்த மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி ஆக்கப்பூர்வமாக ஆதி திராவிட மக்களை உயரச் செய்வதில், முன்னேற்றுவதில் உணர்வுப்பூர்வமாக, உளப்பூர்வ மாக, செயல்படுகிற, பாடுபடுகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்குகிற இந்த அரசை, ''ஆதி திராவிடப் பெருமக்கள் அரசு'' என மனதாரப்பாராட்டுகிறேன்.

சுயநலக்காரர்களின் தூண்டுதலால் தவணை தவறிய கடன் தொகை அதிகரித்து பல மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஈடுகாண்பிக்க இயலாத நிலையில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தும் விவசாயப் பெருங்குடி மக்க [illegible]டையநலனில் பெரிதும் அக்கறைகொண்டிருக்கும் மாண்புமிகு [illegible]த் தலைவர் அவர்களுடைய அரசு, 1979ஆம் ஆண்டு [illegible] வரை அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததும், 1977–78 ஆம் [illegible]டில் கட்டப்பட்ட அபராத வட்டியைத் திருப்பித் தந்ததும், 1978 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவை யிலிருந்த ஏற்கனவே மூன்று அல்லது 5 ஆண்டுக் கடன்களாக மாற்றப்பட்ட கடன்களின் மீது சாதாரண வட்டியைத் தள்ளுபடி செய்ததும் ;

1980-ஆம் ஆண்டு மார்ச்சில் குறுகிய காலக் கடன், வட்டி, அபராத வட்டியாக 4·52 இலட்சம் கடன்காரர்கள் சார்பில் 49·64 கோடி ரூபாய் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசே செலுத்தியுள்ளதும் ;

1981–82 ஆம் ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களைச் சரிகட்டும் வகையில் 23·54 கோடி ரூபாய் அரசுக்கு செலவும் ;

தவணைகள் கொடுத்து வசூலிக்கக்கூடிய முறையில் அமைய வேண்டும். ஜப்தி நடவடிக்கை என்பது முழுமையாக கைவிடப்பட வேண்டும்.

அடுத்து, நிலவள வங்கிகள் ஏற்கனவே கொடுத்து வந்த கடன்கள், இருபது ஆண்டுகாலக் கடன்கள் என்பது சமீபத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றம் காரணமாக அது ஏழாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் கடன்களுக்கு இருபது ஆண்டுகள் கொடுக்கப்படுகிறது. ஆனால் நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் கடன்களை ஏழாண்டுக் கடன்கள் என்று வைத்திருப்பது சரியல்ல. ஆகவே இந்த ஏழாண்டுக் காலக் கடன்கள் என்பதை இருபது ஆண்டுக் காலக்கடன்களாக மாற்றியமைக்க வேண்டும். நிலவள வங்கி மூலம் பெறுகிற கடன்களை விவசாயிகள் ஏழு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே அதை 20 ஆண்டுக் காலக் கடன்களாக மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, விவசாயிகளுக்கு இன்றைய தினம் கொடுக்கக் கூடிய வட்டி விகிதம் 12 சதவீதம். 12 சதவீதம் வட்டிக்குத்தான் அவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். ஆனால் ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கக் கூடிய நேரத்தில் 6 சதவீதத்திற்கு வாங்குகிறார்கள். இடையில் ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கியிலிருந்து மத்திய கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கிராம நாணயச் சங்கங்கள் என்றிருக்கின்றன. இப்படி கடைசியாகச் செல்லக் கூடிய நேரத்தில் 12 சதவீதம் வட்டி என்று வருகிறது. அதிலும் அபராத வட்டி என்று வந்தால் அதற்கு மேல் $1\frac{1}{2}$ சதவீதம் என்று வருகிறது. ஆகவே இரண்டு அமைப்புகளை வைத்துக்கொண்டு—மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி இரண்டையும் ஒரே அமைப்பாக வைத்துக் கொண்டு விவசாயிகளுக்கு கடன்கள் வழங்க வேண்டும். அதோடுகூட இந்த வட்டி விகிதத்தையும் குறைக்க வேண்டும். 6 சதவீதத்திற்கு ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கும்போது கூடுதலாக $1\frac{1}{2}$ அல்லது 2 சதவீதம் வைத்து $7\frac{1}{2}$ சதவீதம் அல்லது 8 சதவீதம் வட்டிக்கு விவசாயிகளுக்கு பணம் கடன் கொடுக்க வேண்டும். அப்படி விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தால் அது நமக்கு நல்ல பயனை அளிக்கும்.

அதேமாதிரி கைத்தறி. இது கைத்தறி அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தில் வரவில்லை என்றாலும் மாநில சங்கத்தின் கிளையாக கைத்தறியாளர்கள் பிரதம உற்பத்தி சங்கம் இருந்தால் உற்பத்தியாகும் சரக்குகளை விரைவில் விற்பனைசெய்ய உதவியாக இருக்கும். ஆகவே கைத்தறித் துறையிலும் இப்போது இருக்கக் கூடிய அமைப்புகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும். ஆகவே, ஒவ்வொரு அமைப்புகள் பற்றியும் மறுபரிசீலனை செய்யவேண்டும்.



அடுத்து, கூட்டுறவுத் துறையில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் இருக்கிறார்கள். நம் மாநிலத்தில் மூன்று லட்சம் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் இல்லை. வேலைப் பாதுகாப்பு கிடையாது, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கிடையாது அவர்களுக்கு போனஸ் கிடையாது. குடும்ப பாதுகாப்பு நிதி கிடையாது. ஆனால் அவர்கள் அரசுத் துறையில், கூட்டுறவுத் துறையில் உருவாக்கக் கூடிய சட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் நிறை வேற்றிக்கொண்டு வருகிறார்கள். மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டால், இந்த மூன்று இலட்சம் ஊழியர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. ஆகவே அந்த ஊழியர்களுக்கு வேலைப் பாதுகாப்பும், குறைந்த பட்சஊதியமும் கொடுக்கப்பட வேண்டும். இப்போது யாரும் ரூ. 400-க்கு குறைந்து வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே, அந்த ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 400 கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள், இது "அட்டாணமஸ் பாடி" ஆகவே அதுசம்பந்தமான ஊதியத்தை நிர்ணயிக்கக் கூடிய பொறுப்பு அவர்களுக்குத்தான் உள்ளது, நாம் இதில் ஒன்றும் செய்ய முடியாது, அவரவர்கள் பார்த்து செய்ய வேண்டும் என்று ஒரு வாதத்தை தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். கடன் வழங்குவது சம்பந்தமாக கொள்கையைத் தீர்மானிப்பது நம் மாநில பதிவாளர் அல்லது கூட்டுறவு இலாகா.

[முற்பகல் 11-`0]

'கடன் எப்படி வழங்கப்படவேண்டும்? எந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட வேண்டும்? யாருக்கு வழங்கப்பட வேண்டும்? எப்படி வசூலிக்க வேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்' என்பதையெல்லாம், உண்மையிலேயே இன்றைக்கு இந்தக்கூட்டுறவு இலாகாவும், பதிவாளர் அவர்களும் சொல்கிறார்கள். இதை நிர்ணயிக்கின்ற அதிகாரமும், பொறுப்பும் பதிவாளருக்கு இருக்கிறது. கூட்டுறவு பண்டகசாலைகள் எவ்வாறு பண்டங்களை கொள்முதல் செய்யவேண்டும், எந்த ல பத்திற்கு, எப்படி விற்பனை செய்யவேண்டும் என்பனபோன்றவற்றை முழுமையாக இந்த கூட்டுறவு இலாகாவும், பதிவாளரும் அமைத்துக்கொண்டு, இந்த நிர்வாகத்தை கண்காணிப்பது, இயக்குவது இந்த கூட்டுறவு இலாகா என்பது தெரியும், அப்படி செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில, அதிலே பணிபுரிகின்ற ஊழியர்கள் கேட்கும் குறைந்த பட்ச சம்பளத்தை கொடுக்க வேண்டு மன்றால், அதை நிர்ணயிக்க வேண்டியது அந்தந்தச் சங்கங்களின் பொறுப்பு என்று சொல்வது, ஏதோ வாதத்திற்காகச் சொல்லப்படுகின்றதே தவிர வேறல்ல. எனவே, இந்த வாதத்தை மாற்றியமைக்கின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் இதிலே பணிசெய்யும் ஊழியர்களைப் பாதுகாக்க குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தவணைகள் கொடுத்து வசூலிக்கக்கூடிய முறையில் அமைய வேண்டும். ஜப்தி நடவடிக்கை என்பது முழுமையாக கைவிடப்பட வேண்டும்.

அடுத்து, நிலவள வங்கிகள் ஏற்கனவே கொடுத்து வந்த கடன்கள், இருபது ஆண்டுகாலக் கடன்கள் என்பது சமீபத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றம் காரணமாக அது ஏழாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் கடன்களுக்கு இருபது ஆண்டுகள் கொடுக்கப்படுகிறது. ஆனால் நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் கடன்களை ஏழாண்டுக் கடன்கள் என்று வைத்திருப்பது சரியல்ல. ஆகவே இந்த ஏழாண்டுக் காலக் கடன்கள் என்பதை இருபது ஆண்டுக் காலக்கடன்களாக மாற்றியமைக்க வேண்டும். நிலவள வங்கி மூலம் பெறுகிற கடன்களை விவசாயிகள் ஏழு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே அதை 20 ஆண்டுக் காலக் கடன்களாக மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, விவசாயிகளுக்கு இன்றைய தினம் கொடுக்கக் கூடிய வட்டி விகிதம் 12 சதவீதம். 12 சதவீதம் வட்டிக்குத்தான் அவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். ஆனால் ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கக் கூடிய நேரத்தில் 6 சதவீதத்திற்கு வாங்குகிறார்கள். இடையில் ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கியிலிருந்து மத்திய கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கிராம நாணயச் சங்கங்கள் என்றிருக்கின்றன. இப்படி கடைசியாகச் செல்லக் கூடிய நேரத்தில் 12 சதவீதம் வட்டி என்று வருகிறது. அதிலும் அபராத வட்டி என்று வந்தால் அதற்கு மேல் $1\frac{1}{2}$ சதவீதம் என்று வருகிறது. ஆகவே இரண்டு அமைப்புகளை வைத்துக்கொண்டு—மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி இரண்டையும் ஒரே அமைப்பாக வைத்துக் கொண்டு விவசாயிகளுக்கு கடன்கள் வழங்க வேண்டும். அதோடுகூட இந்த வட்டி விகிதத்தையும் குறைக்க வேண்டும். 6 சதவீதத்திற்கு ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கும்போது கூடுதலாக $1\frac{1}{2}$ அல்லது 2 சதவீதம் வைத்து $7\frac{1}{2}$ சதவீதம் அல்லது 8 சதவீதம் வட்டிக்கு விவசாயிகளுக்கு பணம் கடன் கொடுக்க வேண்டும். அப்படி விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தால் அது நமக்கு நல்ல பயனை அளிக்கும்.

அதேமாதிரி கைத்தறி. இது கைத்தறி அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தில் வரவில்லை என்றாலும் மாநில சங்கத்தின் கிளையாக கைத்தறியாளர்கள் பிரதம உற்பத்தி சங்கம் இருந்தால் உற்பத்தியாகும் சரக்குகளை விரைவில் விற்பனைசெய்ய உதவியாக இருக்கும். ஆகவே கைத்தறித் துறையிலும் இப்போது இருக்கக் கூடிய அமைப்புகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும். ஆகவே, ஒவ்வொரு அமைப்புகள் பற்றியும் மறுபரிசிலனை செய்யவேண்டும்.



அடுத்து, கூட்டுறவுத் துறையில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் இருக்கிறார்கள். நம் மாநிலத்தில் மூன்று லட்சம் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் இல்லை. வேலைப் பாதுகாப்பு கிடையாது, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கிடையாது அவர்களுக்கு போனஸ் கிடையாது. குடும்ப பாதுகாப்பு நிதி கிடையாது. ஆனால் அவர்கள் அரசுத் துறையில், கூட்டுறவுத் துறையில் உருவாக்கக் கூடிய சட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் நிறை வேற்றிக்கொண்டு வருகிறார்கள். மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டால், இந்த மூன்று இலட்சம் ஊழியர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. ஆகவே அந்த ஊழியர்களுக்கு வேலைப் பாதுகாப்பும், குறைந்த பட்சஊதியமும் கொடுக்கப்பட வேண்டும். இப்போது யாரும் ரூ. 400-க்கு குறைந்து வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே, அந்த ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 400 கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள், இது ''அட்டாணமஸ் பாடி'' ஆகவே அதுசம்பந்தமான ஊதியத்தை நிர்ணயிக்கக் கூடிய பொறுப்பு அவர்களுக்குத்தான் உள்ளது, நாம் இதில் ஒன்றும் செய்ய முடியாது, அவரவர்கள் பார்த்து செய்ய வேண்டும் என்று ஒரு வாதத்தை தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். கடன் வழங்குவது சம்பந்தமாக கொள்கையைத் தீர்மானிப்பது நம் மாநில பதிவாளர் அல்லது கூட்டுறவு இலாகா.

[முற்பகல் 11-ௌ0]

'கடன் எப்படி வழங்கப்படவேண்டும்? எந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட வேண்டும்? யாருக்கு வழங்கப்பட வேண்டும்? எப்படி வசூலிக்க வேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்' என்பதையெல்லாம், உண்மையிலேயே இன்றைக்கு இந்தக்கூட்டுறவு இலாகாவும், பதிவாளர் அவர்களும் சொல்கிறார்கள். இதை நிர்ணயிக்கின்ற அதிகாரமும், பொறுப்பும் பதிவாளருக்கு இருக்கிறது. கூட்டுறவு பண்டகசாலைகள் எவ்வாறு பண்டங்களை கொள்முதல் செய்யவேண்டும், எந்த ல பத்திற்கு, எப்படி விற்பனை செய்யவேண்டும் என்பனபோன்றவற்றை முழுமையாக இந்த கூட்டுறவு இலாகாவும், பதிவாளரும் அமைத்துக்கொண்டு, இந்த நிர்வாகத்தை கண்காணிப்பது, இயக்குவது இந்த கூட்டுறவு இலாகா என்பது தெரியும், அப்படி செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில, அதிலே பணிபுரிகின்ற ஊழியர்கள் கேட்கும் குறைந்த பட்ச சம்பளத்தை கொடுக்க வேண்டும் என்றால், அதை நிர்ணயிக்க வேண்டியது அந்தந்தச் சங்கங்களின் பொறுப்பு என்று சொல்வது, ஏதோ வாதத்திற்காகச் சொல்லப்படுகின்றதே தவிர வேறல்ல. எனவே, இந்த வாதத்தை மாற்றியமைக்கின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் இதிலே பணிசெய்யும் ஊழியர்களைப் பாதுகாக்க குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேநேரத்திலே, மற்றொரு விஷயம். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அதாவது டி. ஆர்., சி. எஸ். ஆர்., சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பஞ்சப்படி அரசு விகிதம்போல் வழங்கப்படுகிறது; அவர்கள் அந்தச் சங்கங்களிலே இருந்து எடுத்துக்கொள்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்திற்கு லாபம் வருகிறதா, நஷ்டம் வருகிறதா என்கின்ற நிபந்தனைகள் எல்லாம் அவர்களுக்குக் கிடையாது; ஆனால், அங்கே வேலை செய்கின்ற ஊழியர்கள் கேட்டால், பதிவாளர் நிர்ணயிக்கின்ற கோட்பாடுபடி தான் சம்பளம், அது சொசைடியாக இருந்தாலும், சிறப்பங்காடியாக இருந்தாலும், ஸ்டோராக இருந்தாலும் அல்லது கேன்டீனாக இருந்தாலும், அதிலே வரக்கூடிய வருமானத்திலே 3 சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இது முறையா? இது எப்படி நியாயம்? அரசு ஊழியர்களுக்கு மட்டும் 3 சத விகிதத்திற்கு மேலே போனாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம், அவர்களே அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம், அதைக் குறைக்க முடியாது என்று சொல்லும்போது, மற்ற ஊழியர்களுக்கு அந்த முறையில்லை என்று சொல்வது சரியல்ல என்ற காரணத்தினால், இந்த ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் கிராம சிறப்பு அங்காடி ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 100 என்று சொன்னால், அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு இருக்கிறது. அவர்கள் எப்படி கிராமத்தில் குடியேறி வாழ்க்கை நடத்த முடியும். கிராமத்திற்குப் போய்வர சைக்கிள் செலவு பஞ்சர் சரி செய்யக்கூட இந்த ரூ. 100 ஆகிவிடும். ஆகவே, இவர்கள் ஊதியத்தைப் பற்றி சர்க்கார் கவனிக்க வேண்டும். இன்றைய தினம் அவர்கள் இந்த ரூ. 100-ஐ வாங்கிக் கொண்டு, கிராமங்களிலே அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றும் பணிகளிலே மக்களின் தேவைப்பொருள்களை வழங்கும் கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்பேர்பட்ட ஊழியர்களைப் பற்றி, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி இந்த சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த 100 ரூபாய்தான் அவர்கள் தலையெழுத்து என்பதை மாற்றிவிடும் முறையிலே, அதற்கான அறிவிப்பை அமைச்சர் அவர்கள் இந்த சந்தர்ப்பத்திலே சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவ்வாறு உடனே மாற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல்வேறு இடங்களிலே கூட்டுறவு ஊழியர்கள் பிரச்னை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. மாநில கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர்கள் கோரிக்கை இன்றைய தினம் நிறைவேற்றப்படவில்லை. 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்



10-ஆம் நாளில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, பதிவாளர் உத்தரவிடப்பட்டு, 2 தினங்களுக்குள் அது வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. 16-ஆம் தேதியிலே இருந்து அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல், பிரதம நிலவள வங்கி ஊழியர்களிடம் 70-லே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அங்கே வேலை செய்யும் சி.எஸ்.ஆர். போன்றவர்கள் பஞ்சப்படி அரசு ஊழியருக்கு உயரும் போதெல்லாம் அதை தொடர்ச்சியாக பெற்று வருகிறார்கள் ஆனால், அந்த நிலவள வங்கியிலே நேரடியாக நியமனம் பெற்று பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கவேண்டுமென்று கேட்டால், நிதி நிலை சரியல்லை, கடன் வசூல் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இது நியாயமான வாதமாக இருக்கமுடியாது. ஆகவே, இந்த ஊழியர்களுடைய பிரச்னை 10 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அந்த ஊழியர்களுடைய பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்து ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். திடீரென ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பதிவாளர் உத்தரவு மாற்றப்படுகிறது. நியமனம் சம்பந்தமாக, பதிவாளர் உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், தொடர்ச்சியாக 20, 25 ஆண்டுகளாக அதே நிலையில் அங்குள்ள ஊழியர்கள் இருந்து வருகிறார்கள். இன்றைக்கு அதிலே பணியாற்றக் கூடிய ஊழியர்கள், பதவி உயர்வு வருகின்ற நேரத்திலே பதிவாளர் அவர்களால் ஒரு உத்தரவு போடப்படுகின்றது. அதிலே, உங்களுக்கு இந்த குவாலிபிகேஷன் இருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இதனால் பல இடங்களில் இத்தகைய பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக, திருச்சியிலே அமராவதி சிறப்பங்காடியிலும், சிந்தாமணி சிறப்பங்காடியிலும் உள்ள ஊழியர்களோடு 79-லே டிசம்பர் மாதத்திலே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இருக்கிறது. அதன்படி, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. கேடர் ஸ்டிரெங்க்த் (cadre strength) பூர்த்தி செய்ய வேண்டும் என்ற பிரச்னையெல்லாம் இருக்கிறது. ஆனால் அவை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஊழியர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் (மணியடிக்கப் பெற்றது).

செல்வி வி. விஜயலட்சுமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் காக்கும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் அரசு விவசாயிகளுக்கு இடர் உதவியாக சில பணிகளைச் செய்து வருகிறது. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவை நின்ற எல்லா தவணை

அதேநேரத்திலே, மற்றொரு விஷயம். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அதாவது டி. ஆர்., சி. எஸ். ஆர்., சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பஞ்சப்படி அரசு விகிதப்படி வழங்கப்படுகிறது; அவர்கள் அந்தச் சங்கங்களிலே இருந்து எடுத்துக்கொள்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்திற்கு லாபம் வருகிறதா, நஷ்டம் வருகிறதா என்கின்ற நிபந்தனைகள் எல்லாம் அவர்களுக்குக் கிடையாது; ஆனால், அங்கே வேலை செய்கின்ற ஊழியர்கள் கேட்டால், பதிவாளர் நிர்ணயிக்கின்ற கோட்பாடுபடி தான் சம்பளம், அது செயலாளராக இருந்தாலும், சிறப்பங்காடியாக இருந்தாலும், ஸ்டோராக இருந்தாலும் அல்லது கேன்டீனாக இருந்தாலும், அதிலே வரக்கூடிய வருமானத்திலே 3 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று சொல்லப்படுகிறது. இது முறையா? இது எப்படி நியாயம்? அரசு ஊழியர்களுக்கு மட்டும் 3 சதவிகிதத்திற்கு மேலே போனாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம், அவர்களே அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம், அதைக் குறைக்க முடியாது என்று சொல்லும்போது, மற்ற ஊழியர்களுக்கு அந்த முறையில்லை என்று சொல்வது சரியல்ல என்ற காரணத்தினால், இந்த ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் கிராம சிறப்பு அங்காடி ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 100 என்று சொன்னால், அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு இருக்கிறது. அவர்கள் எப்படி கிராமத்தில் குடியேறி வாழ்க்கை நடத்த முடியும். கிராமத்திற்குப் போய்வர சைக்கிள் செலவு பஞ்சர் சரி செய்யக்கூட இந்த ரூ. 100 ஆகிவிடும். ஆகவே, இவர்கள் ஊதியத்தைப் பற்றி சர்க்கார் கவனிக்க வேண்டும். இன்றைய தினம் அவர்கள் இந்த ரூ. 100-ஐ வாங்கிக் கொண்டு, கிராமங்களிலே அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றும் பணிகளிலே மக்களின் தேவைப்பொருள்களை வழங்கும் கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட ஊழியர்களைப் பற்றி, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி இந்த சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த 100 ரூபாய்தான் அவர்கள் தலையெழுத்து என்பதை மாற்றிவிடும் முறையிலே, அதற்கான அறிவிப்பை அமைச்சர் அவர்கள் இந்த சந்தர்ப்பத்திலே சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவ்வாறு உடனே மாற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல்வேறு இடங்களிலே கூட்டுறவு ஊழியர்கள் பிரச்னை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. மாநில கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர்கள் கோரிக்கை இன்றைய தினம் நிறைவேற்றப்படவில்லை. 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்



10-ஆம் நாளில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, பதிவாளர் உத்தரவிடப்பட்டு, 2 தினங்களுக்குள் அது வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. 16-ஆம் தேதியிலே இருந்து அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல், பிரதம நிலவள வங்கி ஊழியர்களிடம் 70-லே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அங்கே வேலை செய்யும் சி.எஸ்.ஆர். போன்றவர்கள் பஞ்சப்படி அரசு ஊழியருக்கு உயரும் போதெல்லாம் அதை தொடர்ச்சியாக பெற்று வருகிறார்கள் ஆனால், அந்த நிலவள வங்கியிலே நேரடியாக நியமனம் பெற்று பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கவேண்டுமென்று கேட்டால், நிதி நிலை சரியல்லை, கடன் வசூல் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இது நியாயமான வாதமாக இருக்கமுடியாது. ஆகவே, இந்த ஊழியர்களுடைய பிரச்னை 10 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அந்த ஊழியர்களுடைய பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்தும் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கிட்டத்தட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பதிவாளர் உத்தரவு மாற்றப்படுகிறது. நியமனம் சம்பந்தமாக, பதிவாளர் உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், தொடர்ச்சியாக 20, 25 ஆண்டுகளாக அதே நிலையில் அங்குள்ள ஊழியர்கள் இருந்து வருகிறார்கள். இன்றைக்கு அதிலே பணியாற்றக் கூடிய ஊழியர்கள், பதவி உயர்வு வருகின்ற நேரத்திலே பதிவாளர் அவர்களால் ஒரு உத்தரவு போடப்படுகின்றது. அதிலே, உங்களுக்கு இந்த குவாலிபிகேஷன் இருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இதனால் பல இடங்களில் இத்தகைய பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக, திருச்சியிலே அமராவதி சிறப்பங்காடியிலும், சிந்தாமணி சிறப்பங்காடியிலும் உள்ள ஊழியர்களோடு 79-லே டிசம்பர் மாதத்திலே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இருக்கிறது. அதன்படி, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. கேடர் ஸ்டிரெங்க்த் (cadre strength) பூர்த்தி செய்ய வேண்டும் என்ற பிரச்னையெல்லாம் இருக்கிறது. ஆனால் அவை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஊழியர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் (மணியடிக்கப் பெற்றது).

செல்வி வி. விஜயலட்சுமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் காக்கும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் அரசு விவசாயிகளுக்கு இடர் உதவியாக சில பணிகளைச் செய்து வருகிறது. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவை நின்ற எல்லா தவணை

தவறிய விவசாயக் கடன்களுக்கும் 1979 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதி வரையில் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அபராத வட்டியைத் திருப்பித்தந்தது. மேலும் ஐந்து ஏக்கர், அதற்குக் குறைந்த அளவு நஞ்சை அல்லது புஞ்சை நிலம் சொந்தமாக வைத்திருக்கும் சிறு விவசாயிகளின் சார்பில் காலக் கடன்களாக மாற்றப்பட்டு 1980 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் அவர்களிடம் நிலுவை நின்ற குறுகிய காலக்கடன்களை வட்டி, அபராத வட்டி உட்பட விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தாமே திருப்பித் தர அரசு முடிவு செய்திருக்கிறது.

அதன்படி 49·64 கோடி ரூபாய் அளவிற்கு அவ்வகைக் கடன்களை 4·52 இலட்சம் கடன்தாரர்கள் சார்பில் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கிறது. சிறு விவசாயிகள் கடன்களை வட்டியும், அபராத வட்டியும் உட்பட அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய கடன்களை சரிக்கட்டும் வகையில் திருப்பிக் கொடுத்து, இவ்வகையில் அரசின் செலவு 23·59 கோடி ரூபாய் ஆகும். மேலும் குறித்த காலத்தில் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன்தாரர்களை ஊக்குவிக்கும் வகையில் 1981-82 ஆம் ஆண்டில் தமது குறுகியகாலக் கடன்களையும் மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி செய்யப்பட்டது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தான் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

விவசாயிகளில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் மூலம் நலிந்த பிரிவினர்களுக்கு 20 சதவீதம் தமிழகத்திலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 1979-80 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்களுக்கு 49 சதவீதம் அதாவது 20·87 கோடி ரூபாயை கடனாக வழங்கி உள்ளது. நீண்ட காலக் கடன்களில் வழக்கமான திட்டத்தின் கீழ் வழங்கும் கடன்களில் 20 சதவீதத்தையும் விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் உதவும் திட்டங்களின் கீழ் 60 சதவீதத்தையும் நலிந்த பிரிவினர் பெறுகின்றனர். மேலும் இழப்பீட்டுத் தொகை செலவிற்காக தமிழ் நாடு பயிர்க் காப்புறுதி நிதிக்கு மாநில அரசு மானியமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. மாநிலம் முழுவதிலும் கட்டுப்பாட்டு விலைத் துணி விநியோகம் கூட்டுறவுச் சங்கங்களிடம் விடப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள் இத்துணியைப் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். 75 சதவீதத் துணி கிராமப்புற பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரியப்படுத்திக்கொள்கிறேன்.



குடிசைக்கு ஒரு மின் விளக்குத் திட்டம் நலிந்த பிரிவினருக்
காக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மேலும் இன்று நாளுக்கு நாள் பல்வேறு பிரிவு
களில் ஆரம்பிக்கப்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களை
திறமையாக, சிறப்பாகச், செயல்படுத்திட, அதற்கேற்ற முறையில்
பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டியது அவசியம் என சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 1-30]

இத்துறையின் வளர்ச்சியைக் கண்காணிக்க போதுமான பணி
யாளர்கள் நியமனம் செய்யவேண்டிய நேரத்தில் கூட்டுறவுச்
சங்கங்களில் பணியாற்றும் அரசு அல்லாத ஊழியர்களுக்கு முன்னு
ரிமை அளிக்கப்படவேண்டும். தமிழகத்தைப் பொறுத்த மட்டில்
மற்ற மாநிலங்களைவிட கூட்டுறவுத்துறை சிறப்புடன் விளங்கு
கிறது என்று கூறினால் மிகையாகாது. இத்தகைய கூட்டுறவுத்
துறையில் கிராமப் பகுதிகளிலுள்ள பலதரப்பட்ட சங்கங்களிலும்
தமிழகம் முழுவதும் சுமார் 3 லட்சம் பணியாளர்கள் பணியாற்றி
வருகின்றனர். அவர்களுக்கு மாத ஊதியமாக குறைந்தபட்சம்
100 ரூபாயும் அதிகபட்சமாக 300 ரூபாயும் வழங்கப்பட்டு
வருகிறது. மேலும் நிரந்தரப் பணி, விடுப்பு, மற்றும் இதர சலுகைகள்
அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. நிர்வாகத்தின் ஆதரவு
இருக்கும்வரைதான் பணியில் இருக்கமுடியும், ஆதரவு இல்லை
யானால் பணியை இழக்கவேண்டியிருக்கும் என்ற நிலையில்
அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சமுதாயத்தின் அடித்தள
மக்களோடு தோளோடு தோள் கொடுத்து இரவு பகலென்று
பாராது பாடுபடும் அந்தத் தொழிலாளர்களின் ஊதியம்உயர்ந்திட
பணி நிரந்தரமாக்கிட இதர சலுகைகளைப் பெற்றிட மாண்புமிகு
புரட்சித் தலைவர் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். மேலும் மற்ற இணைப்பதிவாளர்
அலுவலகங்களைப் பிரித்ததுபோல சேலம் வட்டார இணைப்
பதிவாளர் அலுவலகத்தையும் சேலம், தருமபுரி என
இரண்டாகப் பிரிக்கவேண்டுமெனவும், மூன்றாவது சம்பளக் கமி
ஷனுக்கு முன்பிருந்ததுபோல் இளநிலை ஆய்வாளர்களின்
ஊதியத்தை இளநிலை உதவியாளர்கள் ஊதியத்தைவிட அதிக
மாக்கித்தர ஆவன செய்யவேண்டுமெனவும், மற்றத் துறைகளில்
சொந்தத் தாலூக்காவில் பணியாற்ற அனுமதியளிக்கும்போது
கூட்டுறவுத் துறையில் சொந்தத் தாலூக்காவில் பணியாற்றக்
கூடாது என்ற தடையை நீக்கவும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு
அண்ணாவின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் தந்து செயல்
படும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் புனிதப்படை செயல்
வீரர், சேலத்து மாங்கனி, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்
களின் இம்மானியக் கோரிக்கையினை மகிழ்வுடன் வரவேற்று
அமர்கிறேன்.

1981 மே 4]

*திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82-ஆம் ஆண்டிற்கு குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் 130 கோடி ரூபாயும் நீண்டகாலக் கடனாக 10 கோடி ரூபாயும் கிராம விவசாயிகளின் நலன் கருதி நகை ஈட்டுக் கடனாக 130 கோடி ரூபாயும், நுகர் பொருள் விற்பனைக்காக 192 கோடி ரூபாயும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் அரசில் பெருந் தொகையாக ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. கிராம மக்கள் நல்வாழ்விற்கு இது மிகவும் பயன்படக் கூடிய திட்டமாகும். மாநில அளவில் கடன்கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 1980-81-ல் 361·47 லட்ச ரூபாயும், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 211·73 இலட்சமும், பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டங்களுக்கு 25·02 இலட்சமும் ஆக மொத்தம் 647·68 இலட்ச ரூபாய் வருகிற 1981-82இல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்க இருப்பது கிராம ராஜ்யத்தை, அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்கும் அந்த நிலையை இந்த அரசு உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மாநில அரசும் மத்திய அரசும் கிராமத் திட்டங்களுக்காக நல்ல முறையில் கவனம் செலுத்தி எதிர்காலத்திலே கிராம மக்கள் அனைவரும் பயன்பெறககூடிய முறையிலே நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலே 4,742 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஆனால் அவை நல்லபடியாக இயங்கிவருகின்றனவா என்பது ஒரு வகையிலே கேள்வி குறியாக இருந்தாலும் கூட அந்தச் சங்கங்கள் எதிர்காலத்திலே நல்லபடியாக இயங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே நல்லபடியாகச் செய்ய வேண்டுமென்ற முறையிலேதான் பொறுக்குக் குழு அந்தச் சட்டத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. விரைவிலே அது முடிவு எடுத்து அரசாங்கத்தின் மூலமாக அமல்படுத்தப்படுகிற முறையிலே மக்களுடைய நலனிலே அரசு அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது என்பதிலே ஐயமில்லை. அதை விரைவிலே அமைச்சரவர்கள் செய்வரார்கள், இந்தக் குழுவிலே உள்ள உறுப்பினர்கள் செய்து காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

ஷெட்யூல்ட் வகுப்பைச்சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் உறுப்பினராக்கப்பட வேண்டுமென்ற அரசின் முடிவும் மிகவும் சிறப்பானது; வரவேற்கத்தக்கது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், பெண்கள், நலிந்த பிரிவினர் ஆகிய மூன்று தரப்பினரும் ஒவ்வொரு சங்கத்திலேயும் உறுப்பினராக இருத்தல் வேண்டுமென்ற உறுதியை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மட்டுமல்லாமல் பொது மக்கள் சார்பாகவும் வரவேற்கிறோம். எதிர்காலத்திலே ஜனநாயக ரீதியிலே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இந்தச் சட்ட முன்வடிவின்மீது பொறுக்குக்குழு விரைவிலே நடவடிக்கை எடுத்து, விரைவிலே தேர்தலை நடத்தி கிராம மக்களின் வாழ்வில் ஒரு ஒளிவிளக்கை ஏற்றிவைக்கின்ற நிலையை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.



1981 மே 4] [திரு. ஏ. எம். சேதுராமன்]

இதுவரையில் 73 கோடி ரூபாய் வரையில் சிறு விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பெரிய விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கடன்களுக்குக் கூட இப்பொழுது வட்டி விகிதத்திலே 37 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்ய, விவசாய உச்சமட்டக் குழுவின் சார்பாக தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆக மொத்தத்திலே எங்களுடைய தலைவரவர்கள் சற்று முன்னர் சொல்லியதைப்போல 11 கோடி ரூபாயிலிருந்து 120 கோடி ரூபாய் வரையில் 11 மாதங்களுக்குள்ளாக-இன்னும் ஓராண்டுகூட ஆகவில்லை-11 மாதங்களுக்குள்ளாக இந்த அரசு சிறு விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் சேர்த்துத் தள்ளுபடி செய்திருக்கிறது என்பதை மிகவும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். எங்கள் தலைவரவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மைய அரசு வழிவகை செய்தாக வேண்டும். தள்ளுபடி செய்வதற்கு மத்திய அரசும் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மறு சீரமைப்புத் திட்டம் ரிசர்வ் வங்கியின் பரிசீலனையில் உள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்தப் பரிசீலனை விரைவில் முடிந்து மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் செயல்முறைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலைமையைச் சமாளிக்க உதவும் வகையில் முன்பணமாக 10 கோடி ரூபாயும், வழிவகை முன்பணமாக 7 கோடி ரூபாயும், வட்டியையும் சேர்த்து மாநில அரசு வசூலிப்பைத் தள்ளி வைத்திருக்கிறது. நகர்ப்புறக் கடன் வசதி சங்கங்கள், மொத்தம் 131 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்படுகின்றன. நகர்ப்புறங்களிலுள்ள மக்களும் கிராமப்புறங்களில் உள்ளவர்களைப்போன்று பலனடைய வேண்டும்; அவர்களும் வளர வேண்டுமென்பதில் அக்கறை கொண்டு 131 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்பட்டு வருவது பெருமைக்குரிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிந்த பிரிவினரின் வளர்ச்சிக்காக நடமாடும் மத்திய கூட்டுறவு வங்கி கிளையை முதன்முறையாகச் சென்னையில் துவங்கியுள்ளது. 7 இலட்சம் பேர்களிடம் வைப்புத் தொகையை வசூலித்துள்ளது. இதற்காக மத்திய கூட்டுறவு வங்கியை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மகாராஷ்டிர மாநிலத்தில் கூட்டுறவுத் துறை நன்கு இயங்கிக் கொண்டு இருக்கிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் டாக்டர் கொரியன் அவர்களால் ''ஆனந்த் பிளான்ட்'' என்ற பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தப் பால்பண்ணை பால் ஸ்ப்ரே, பால் பவுடர் ஆகியவற்றைத் தயாரிக்கும் பெரிய நிறுவனமாக இயங்கி வருகிறது. இங்கே

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1981 மே 4

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ஈரோட்டிலே ஒரு தொழிற்சாலையைத் துவங்கியிருக்கிறார்கள். டாக்டர் குரியன் துவங்கியதைப்போன்று இங்கேயும் பத்து, பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு பெரிய திட்டங்கள் வரவிருப்பதைக் கண்டு மத்திய அரசாங்கத்தையும், மாநில அரசாங்கத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் குரியன் அவர்களிடத்தில் அவருடைய தனித் திறமை, ஆற்றல் ஆகியவற்றை நம்பி, அவருடைய செயல் திறனைக் கண்டு 40 கோடி ரூபாயை மத்திய அரசு இது போன்ற திட்டத்திற்காக அவர்களிடத்திலே ஒப்படைத்திருப்பது ஆச்சரியத்துக்குரிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குஜராத் மாநிலத்திலே 'இப்கோ' என்ற கம்பெனி உரம் தயாரிக்கிறது. தமிழகத்திலேயும்கூட அது போன்று கூட்டுறவுத் துறையிலே உரம் தயாரிக்கின்ற தொழிற்சாலையை நிறுவ அமைச்சரவர்களும், புரட்சித் தலைவரவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கிணற்றை ஆழப்படுத்துவதற்கோ அல்லது புதிதாகக் கிணறுகளை வெட்டுவதற்கோ கடன்களை வாங்கினால் அதற்கு 12 சத வீதம், 10 சத வீதம் என்று வட்டி வசூலிக்கப்படுகிறது. அதைக் குறைத்து வருகின்ற ஆண்டுகளில் 6 அல்லது 8 சத வீதம் வட்டி வசூலிக்கப்பட்டாலொழிய விவசாயிகள் முன்னேற முடியாது, முன்னுக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சி நிலை இருப்பதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு வருகின்ற வருவாயையும் அனுசரித்து 8 சத வீதம் வட்டிக்கு மேற்படாமல் கடன் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கப்படும் கடன்களின் அடிப்படையிலேதான் தமிழகத்திலுள்ள கிராம மக்கள் முன்னேற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு ஒரு மாட்டிற்கு ரூ. 1,000, ரூ. 2,000 தான் கொடுக்கிறார்கள். இப்பொழுதிருக்கிற விலை ஏற்றத்தால், மாடு வாங்குவதற்கு அத்தொகை போதாததாக இருப்பதால், வருகின்ற ஆண்டுகளில் சுமார் ரூ. 5,000 கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகாராஷ்டிராவில் நேரிலேயே கண்டோம். ரூ. 11,000 கொடுத்து மாட்டை வாங்குகிறார்கள். அது 28 லிட்டர் பால் தருகிறது. நாம் ரூ. 1,000 விவசாயிக்குக் கொடுத்து மாடு வாங்கினால், மாட்டுக்குத் தீவனமும் போட முடியாது, மாட்டையும் காப்பாற்ற முடியாது. ஆகவே, அங்கே, ரூ. 11,000 கடன் கொடுக்கப்படுகிறது.



1981 மே 4] [திரு. ஏ. எம். சேதுராமன்]

இங்கே ரூ. 1,000 தான் கொடுக்கப்படுகிறது என்பதைக் கவனத்திற் கொண்டு, இங்கும் அதிகமாகக் கடன் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் உள்ள செயலாளர்கள் அங்கேயே நிரந்தரமாகப் பணி ஆற்றுகிற காரணத்தால், 3, 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்ட ஊழல்களுக்கு அவை அடிப்படையாக இருக்கிற காரணத்தாலே, தயவு செய்து ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களை மாற்றம் செய்யக்கூடிய முறையிலே சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களும் ஊழல் செய்ய மாட்டார்கள், விவசாயிகளும் ஊழல் செய்ய மாட்டார்கள். ஆகவே, அவற்றில் இருக்கிற செயலாளர்கள் ஊழல் செய்யாதவகையிலே, அவர்களை மாற்ற வேண்டுமென்று கூறி, அதற்கு மாற்றுச் சட்டம் இயற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1981ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டாக இருக்கிற காரணத்தாலே, விவசாயிகளில் பல பேருக்கு சாப்பிடக்கூட வழியில்லாமல், அவர்கள் வாழ்க்கையிலே எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையிருக்கிற காரணத்தாலே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்தத் துறை மூலமாக நிச்சயமாக நல்ல சூழ்நிலையை உருவாக்கி, அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களில் கல்வியறிவு பெற்றவர்கள் கிராமங்களிலே குறைந்திருக்கிற காரணத்தாலேயும், ஏழ்மை, வறுமையின் காரணமாகவும் அவர்கள் அவதிப்படுவதால், அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிற இந்த நேரத்தில், சங்கங்களிலே பணியாற்ற, அல்லது உறுப்பினர்களாகச் சேர்க்க, அவர்களுக்கு குறைந்த சந்தா தொகையை நிர்ணயித்து, அதை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அவர்கள் சங்கங்களிலே பங்கேற்று, பலன் பெற வேண்டுமென்ற அக்கறை கொள்ளக்கூடிய முறையிலே, சந்தாத் தொகையை தள்ளுபடி செய்து, அவர்கள் உரிமையோடு அரசு கொடுக்கின்ற பலன்களைப் பெற்று வாழ வழிசெய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் இந்த நாட்டில் உயர்வு ஏற்படும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. ஆகவே தமிழ்நாட்டில் கூட்டுறவு மூலம் நல்ல வாழ்வு கிடைக்கும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு அவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அந்த மானியக் கோரிக் கமீது சிலகருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவு என்பது தாங்களாகவே மனமுவந்து கூட்டுறவுச் சங்கங்களுடைய அங்கத்தினர்களாக இருந்து, அதிலேயிருக்கிற பலனை அவர்களே பகிர்ந்து அனுபவிக்க வேண்டுமென்ற அந்த நல்ல தத்துவத்தின்கீழ் கூட்டுறவு ஆரம்பிக்கப்பட்டாலும், அது அதிகாரிகளின் கையில் கொடுக்கப்பட்டு, அவர்கள் கூட்டுறவு என்ற பெயரில் இயங்கிவருகிற காரணத்தால்தான் பல தவறுகளுக்கு இடம் அளிக்கிற வகையில் நீண்ட நெடுங்காலமாக கூட்டுறவுத்துறை வளர்ந்து வந்திருக்கிறது என்ற சரித்திரத்தை தமிழகத்திலே நன்கு அறிவோம். இதற்கு முன்னாலே கூட்டுறவு வங்கிகள் எல்லாம், மாவட்ட வங்கிகள் எல்லாம் ஒரு குடும்பச் சொத்தாக ஆக்கப்பட்டு பல கோடி ரூபாய் அரசு குறைந்த வட்டிக்குக் கொடுத்ததை அவர்கள் தாங்களே வட்டிக் கடை வைத்து நடத்தியதையெல்லாம் அரசு உணரும், பல வழக்குகளும் இருக்கின்றன. அந்தப்பணத்தை அவர்களிடமிருந்து திருப்பிப் பெற வழிவகை இருக்கிறதா என்றால் இல்லை. அதற்குத் தண்டனை இருக்கிறதா என்றால், இல்லை. அதையெல்லாம் மனதிலே கொண்டு, பல திருத்தங்கள் கொண்டு வந்தாலும், அந்தத் திருத்தங்கள் மூலம் அவர்களுக்கு பயம் ஏற்படும் அளவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

இப்போது நல்லதொரு சட்டத்திருத்தம் இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று எண்ணி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி இருக்கிறது. அது வருவதற்கு காலதாமதமாகும் என்ற காரணத்தினால், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்புக்களில் வர முடியவில்லை. அந்தச் சட்டத் திருத்தம் கூடிய விரைவில் கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொறுக்குக் குழுவில் இருந்து அந்தச் சட்டம் வந்தாலும், கூட்டுறவுச் சங்கத்தில் தமிழகத்திலே உள்ள அத்தனை குடும்பங்களையும் அங்கத்தினர்களாக ஆக்க வேண்டும் என்ற நல்ல திட்டத்தை அரசு அறிவித்திருப்பதை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மொத்தமாக உள்ள எல்லா விவசாயக் குடும்பங்கள் 53.14 இலட்சமும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் குடும்பங்கள் 42.05 இலட்சம் என்கின்ற அளவுக்கு இருக்கிற அத்தனை குடும்பங்களையும் 6-வது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் அங்கத்தினர்களாக ஆக்க இருக்கிறோம் என்ற அறிவிப்பு உண்மையிலே மெத்த மகிழ்ச்சிக்குரிய அறிவிப்பாகும்.

அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களைச் சேர்க்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவரை விவசாயச் சேவை கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்கு



கின்ற அறிவிப்பும், அவர்களுக்கு அரசின் மானியமாக 100 ரூபாய் அரசு வழங்கத் திட்டமிட்டிருப்பதையும் பாராட்டுகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், சிறு விவசாயிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை அறிவித்ததைப் போல 20 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்கு 5 ஏக்கர் நன்செய் அல்லது அதற்குக் குறைவாக நன்செய் அல்லது புன்செய் வைத்திருப்பவர்களுக்கு அவர்களுடைய கடன்களைத் தீர்ப்பதற்கு அரசு மானியமாகக் கொடுத்து உதவியிருக்கிறது. அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இருந்தாலும் 5 ஏக்கர் நன்செய் நிலத்தையும், 5 ஏக்கர் புன்செய் நிலத்தையும் ஒன்றாகக் கருதுவது சரியானதல்ல என்று நான் கருதுகிறேன். எனவே 5 ஏக்கர் நன்செய் அல்லது 10 ஏக்கர் புன்செய் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத காரணத்தால் குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்படாமல் இருக்கின்றன. அங்கே உள்ள அதிகாரிகள் அதைச் சரிவர அமல்படுத்தாத காரணத்தால் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டிய சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கூட என்னுடைய தொகுதியிலே உள்ள இரண்டு கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்லி அங்கே ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் பயனற்றுப் போயிருப்பதை எடுத்துச் சொன்னேன். இந்தச் சங்கங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாததால் அவைகள் சரியாக இயங்காமல், அங்கே இருக்கின்ற கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அதை மாற்றிக் கொடுக்காத காரணத்தால் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் 5 இலட்சம் ரூபாய் அந்த விவசாயிகள் அனுபவிக்க முடியவில்லை என்பதனைப் பட்டியல் போட்டு கொடுத்துள்ளேன். இதே போன்று தமிழகம் முழுவதிலும் இருக்கின்றது. அந்த அதிகாரிகள் இதற்குத் தகுந்த உத்திரவினைப் பிறப்பித்து, இயங்காமல் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை இயங்கச் செய்து, அந்த விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய பலனைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை

இப்படி கடன்களை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்வதற்கும் கூட மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அண்மையிலே டெல்லியிலே விவசாயிகள் மாநாட்டைக் கூட்டி, விவசாயிகளைப் பார்த்து அவர்கள் பரிதாபகரமான மக்கள், விவசாயிகள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 மே 4

என்று சொன்னார்களே தவிர, அந்த விவசாயிகளுக்கு மாநில அரசு உவந்து கொடுக்கின்ற உதவியினைக் கூட, அவர்களுக்கு உதவி செய்யாதே என்று சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். எனவே நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நமது அரசு மத்திய அரசை விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்ய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் விவசாயிகள் சேவை சங்கங்கள் 4,742 இருக்கின்றன என்று இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இந்த விவசாய சேவா சங்கங்களில் பணி புரிகின்றவர்களின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே காவலரும், ஏவலரும் அவர்களே தான். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சம்பளம் மிகவும் குறைவு. அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எந்த சலுகைகளும் அவர்களுக்குத் தரப்படவில்லை. அவர்களுக்கு இவ்வளவுதான் சம்பளம் என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நிறுவனத்திலே பணிபுரிகின்றவர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை என்று சொன்னால் கடன்களை வசூலித்து அதிலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே அவர்களுக்கும் அரசு ஊழியர்களைப் போல ஊதியம் மற்றும் சலுகைகள் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று நிலவள வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமப் புறங்களிலே உள்ள அங்காடிகள் இவைகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு 100 ரூபாய், 80 ரூபாய், 60 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு தங்களது வாழ்க்கையை நடத்த முடியாத காரணத்தால் சில குற்றச் சாட்டுகளை இந்த அரசு மீது சுமத்துகின்ற விதத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஒரு கிலோ சீனி போட வேண்டும் என்று சொன்னால் 800 கிராம்தான் போடுகிறார்கள். அரசாங்கம் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒரு கிலோ சீனி போடவேண்டும், கிராமப்புறத்தில் உள்ள மக்களும் பயன்பட வேண்டும் என்று எண்ணியிருந்தாலும், அவர்கள் ஒரு கிலோவிற்கு 800 கிராம் போடுவதன் மூலம், ஏற்படுகின்ற மீதமுள்ள சீனியை அவர்கள் பகிர்ந்துஎடுத்துக் கொள்கிறார்கள். அப்படி எடுத்துக் கொள்வதில் மற்றவர்களுக்குப் பங்கு போடுகிறபோது தகராறுகள் ம் நான் பார்த்து இருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

அது மட்டுமல்ல, ஆங்காங்கு கிராமங்களில் ஆரம்பிக்கப் பட்டுள்ள சிறிய அங்காடிகளில் எல்லா நுகர் பொருள்களும் விற்கப்பட வேண்டும். எந்தப் பொருளும் அங்கேயுள்ள கிராம சிறிய அங்காடிகளில் இல்லை. அந்தக் கடைகள் தினமும் திறந்து



1981 மே 4] [திரு. எஸ், ஆண்டித்தேவர்.]

வைக்கப்படுகின்றன. சீனி கூட அங்கே விற்பது இல்லை. அங்கே ஒரு ஆள் இருக்கிறார். அவருக்கு என்ன வேலை என்று கேட்டால் தினமும் இரண்டு மணி நேரம் திறந்து வைக்க வேண்டும். நான் திறந்து வைக்கிறேன். அவ்வளவுதான் என்று சொல்கிறார்கள். ஆகவே, கிராமங்களில் உள்ள இந்தச் சிறிய அங்காடிகளில் எல்லா நுகர் பொருள்களும் விற்பதற்கான வகையில் நடைமுறைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எல்லாப் பொருள்களும் மாவட்ட அளவிலேயே விற்கப்பட்டு விடுவதாகவும், கிராமங்களுக்கு கோட்டா சரிவர கொடுப்பது இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலைமை ஏன் என்று தெரியவில்லை. சீனி விநியோகம் 10 கிராமங்களுக்குத் தரவேண்டும் என்று கொடுத்தால், அது ஒரு கிராமத்திலேயே ஒட்டுமொத்தமாக விற்கப்படுகிறது. இது குறித்து வட்டாரக் கூட்டுறவுத் தலைவரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனுக்கள் கொடுத்து இருக்கிறேன். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் இல்லையாம். சில அதிகாரம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தியும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். அல்லது வேறுஇன்னொருவருக்குஅனுப்பவேண்டும் என்று சொல்கிறார்கள்.

கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற எந்தக் குறைகளையும், குற்றச்சாட்டுகளையும் சொன்னாலும் அது பதிவாளருக்குச் செல்லவேண்டும், என்கிற நிலைமை இருக்கிறது. நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன், பத்து மூட்டை சீனி விநியோகத்திற்குக் கொடுத்தால், அது 300 ரூபாய் என்கிற விலைக்கு விற்க வேண்டும் என்று கொடுத்தால், அதை வெளியில் 900 ரூபாய் என்கிற விலையில் விற்றுவிட்டு, ஒரு மாதத்திற்கு அவர்கள் 5,000 ரூபாய் வரையில் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் எந்த ஊழல் குற்றச்சாட்டு மீதும் நடவடிக்கை எடுக்கமுடியாத அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். நான் பலமுறை பல ஊழல்கள் குறித்து கையெழுத்துப் போட்டு அமைச்சரிடம் கொடுத்து இருக்கிறேன். அதிலும் அமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு துறைக்கு அனுப்புவார். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. எந்த இடத்தில் அந்த பேப்பர் முடக்கப்பட்டது என்பது தெரியாது. காரணம், அவர்கள் அரசு சலுகை விலையில் கொடுக்கிற சர்க்கரையை வெளியில் விற்று அதன் மூலம் பணக்காரர்களாக இருப்பதால், எந்தக் காரியத்தைச் செய்தாவது அந்தப் பேப்பரை முடக்கம் செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஊழலை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் கொடுப்பது குறித்து இங்கே ஒரு பட்டியல் வைத்து இருக்கிறார்கள். 1977-78-ல் 139·41 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 1980-81-ல் 19·66 கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி, அதற்குக்

காரணம், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க விவசாயிகள் தவறியதன் காரணமாக மத்தியக் கூட்டுறவு வங்கி, ரிசர்வ் வங்கியிடமிருந்து திரும்பக் கடன் பெறும தகுதியை இழந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், 1974-ல் இருந்தே விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கு அல்லது அதை ஆழப்படுத்துவதற்குக் கொடுக்கப்படும் கடன் நிறுத்தப்பட்டு விட்டது. இந்த விவசாயிகளின் அவல நிலை போக்கப்பட வேண்டுமானால், கிட்டங்கி கட்ட மத்திய அரசும்; மாநில அரசும் செலவழிக்கிற பணத்தைக் கொடுக்க வேண்டும். தற்போது மத்திய அரசு 60 சதவீதம் பங்கும், மாநில அரசு 40 சத வீதம் பங்கும் போட்டு, ஆங்காங்கு கிட்டங்கி கட்டியிருக்கிறார்கள். அதற்கு ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் செலவழித்து இருக்கிறார்கள். ஆனால் அங்கே வைப்பதற்கு தானியங்கள் இல்லை. ஏதோ திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அது செய்யப்பட்டிருக்கிறதே தவிர விவசாயிகள் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்' என்கிற வகையில் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட முறையில் பணத்தைச் செலவழிப்பதற்கு பதிலாகக் கிணறு வெட்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் அவர்களுக்கு நிதி உதவி செய்து, இந்தப் பஞ்சகாலத்தில் அவர்கள் உற்பத்தியை அதிகரிக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற கடன்களைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புகிறேன். ஆடு வாங்க, மாடு வாங்க கடன்கள் கொடுக்கப்படுகின்றன. நான் அமைச்சருக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்வேன். ஆடுகளை விற்றுவிட்டு, அங்கேயுள்ள வெட்னரி டாக்டரிடம் அந்த ஆடுகள் இறந்துவிட்டன் என்று சர்ட்டிபிகேட் வாங்கி, இன்சூரன்ஸ் பணமும் வாங்கிவிடுகிறார்கள். இப்படி பல தவறுகள் நடந்து இருக்கின்றன. நான் அதைத் தெளிவாகப் பல நேரங்களில் விளக்கி இருக்கிறேன். அப்படி இறந்துவிட்டது என்று சொல்வதற்கும் அவர்கள் செய்வதற்கும் பொருத்தமில்லை. இறந்துவிட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். வெட்டரினரி டாக்டர்களால் சர்டிபிகேட் கொடுக்கப்படுகிறது. மறுபடியும் இன்ஷூரன்ஸ் பணத்தில் பங்கு போடுகிறார்கள். எப்படி இருக்கிறது நிலைமை? அப்படிப் பட்ட கடனைக் கொடுக்காமல் தடுப்பதற்கு என்ன சட்டம் இன்றைக்கு வைத்திருக்கிறோம்?

வங்கிக் கடன், நகைகள் மீதான கடன் நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம் தமிழ்நாட்டில் நகைக் கடன் சட்டம் என்று வந்த பிறகு, வங்கிகளில் நகைகளின் பேரில் கடன் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். நகையை வைத்து கடன் வாங்கிவிட்டு, அதைத் திருப்பப்போனால் நகை இல்லை என்ற நிலை ஏற்படுகிறது. யார் எடுத்தார் என்றால், நகைகள் எல்லாம் அங்கே கோர்ட் நடவடிக்கை என்ற



பெயரால் வைக்கப்பட்டிருக்கின்றன. வழக்கு முடிய நீண்டகாலமாகிறது. அதுவரையிலும் பொதுமக்களுக்கு அந்த நகை கிடைக்க வழியில்லை. அதனால் இன்றைக்கு பொதுமக்கள் மத்தியிலே கூட்டுறவுச் சங்கங்கள் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல் நடைபெற்றால், அதற்கு '65 என்குயரி' என்று வைத்திருக்கிறார்கள். 65 என்குயரி மூலம் சி.எஸ்.ஆர். என்குயரி செய்யப் போகிறார். அவர் என்னென்ன செய்யவேண்டுமென்று சொல்கிறாரோ அந்தமாதிரி செய்கிறார்கள். வழக்கு நடைபெறாமல் போகக்கூடிய வழிமுறைகளை எல்லாம் அவர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதை பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். அமைச்சரவர்கள் கோர்ட்டிலே இதைப் பார்த்திருப்பார்கள். 65 என்குயரி முடிந்த பிறகு வழக்கு நீதிமன்றத்திற்கு வருகிறது. அதற்குள் 3 ஆண்டுகளுக்குமேல் பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. கோர்ட்டிலே அந்த வழக்கு எடுபடாமல் போய்விடுகிறது.

அது மட்டுமல்ல. அரசாங்க வழக்கறிஞர் பல யோசனைகளைச் சொன்னாலும் 10 குற்றச்சாட்டு என்றால் அத்தனையும் கோர்ட்டிலே ஒரே நேரத்தில் தாக்கல் செய்வதில்லை. 2, 3 குற்றச்சாட்டுகளை மட்டும் தாக்கல் செய்கிறார்கள். அதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. 65 என்குயரி செய்தவர்கள்தான் கோர்ட்டிலே பிராசிகியூஷனுக்குப் போகிறார்கள். இப்படிப் பட்ட சட்டச் சிக்கல் இருக்கிறது. இந்தச் சிக்கல் இல்லாமல் தவறு செய்தவர்கள் நேரடியாகத் தண்டிக்கப்பட வேண்டும். அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

அது மட்டுமல்ல. தலைவர் அல்லது மற்றவர்கள் அங்கே இருக்கின்ற புத்தகங்களில் கையெழுத்துப் போட்டிருப்பதைப் பார்த்த பின்னால், கணக்குகளை சரியாகப் பார்த்த பின்னால் 65 என்குயரி எதற்கு? அது தேவையில்லை. அதனால் காலதாமதம் தான் ஏற்படுகிறது. 5 ஆண்டுகளுக்குள் வழக்கு தொடரவில்லை என்றால் அவர்மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு சட்ட சிக்கல் இன்றைக்கு இருக்கிறது. அதை நீக்க சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, இந்த உர விநியோகத்தைப்பற்றி ஒன்றைமட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். உர விநியோகம் என்பது விவசாயிகளின் பெரிய பிரச்சனையாக இருந்துக்கொண்டிருக்கிறது. உர விநியோகத்தில், அரசு திட்டவட்டமாக ஒரு குறிப்பிட்ட அளவைச் சொல்லி, வங்கிகள் அந்த அளவுக்குக் கொடுக்கின்றன. விவசாயிகள் கடன் கேட்கும்போது 25 சதவீதம் உரமாகவும் மீதியைப் பணமாகவும் கொடுக்கிறார்கள். இந்த பயிர் லோன் என்று கொடுப்பதை அவர்கள் கேட்ட உடனே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஜூன் மாதம் பயிர்கடன் கேட்டால் ஜூன் 15-க்குள் கொடுத்துவிட

வேண்டும். தற்போது ஆகஸ்ட் மாதம் வந்தாலும் கொடுக்கப்படுவதில்லை. இந்த முறையினால் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். காலம் தாழ்ந்து உரம் கிடைப்பதால், பயிருக்குப் போட வேண்டிய உரத்தை பயிருக்குப் போடுவதற்குப் பதிலாக அதை விற்று வேறு வழியில் செல வழித்துவிடுகிறார்கள். அதனால் வாங்கிய கடனைத் திருப்பித் தரமுடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, பயிர் கடனைப் பொறுத்தவரையில் விவசாயிகள் கேட்டவுடனே, தேவையான நேரத்தில் கொடுக்க அரசு ஒரு திட்டவட்டமான கொள்கையை உருவாக்க வேண்டும்; அதை வங்கிகள் சரியான முறையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் வழங்குவதிலும் சரி, உரம் வழங்குவதிலும் சரி, ஒரு திட்டவட்ட மான கொள்கை இல்லை என்றால் விவசாயத்திற்கு நாம் செய் கின்ற சலுகைகள் நேரடியாக அந்த விவசாயிகளுக்குக் கிடைக்க வில்லை என்றால். அந்த குற்றச்சாட்டு நம்மீது வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடன் வழங்கும்போது வட்டி விகிதம் என்ன, எப்படி செலுத்த வேண்டுமென்று அதிகாரிகள் எழுதிக் கொடுக்கிறார்கள். அவர் களுடைய 'ஓவர் ஹெட்' சார்ஜ்க்கும் சேர்த்து வட்டியாகப் போடுகிறார்கள். நிலவள வங்கியாக இருந்தாலும் சரி, கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, இந்த அளவுக்கு ஏன் வட்டி போட வேண்டும் அல்லது இந்த அளவுக்குத்தான் பணியாளர்கள் இருக்க வேண்டும் என்று ஒரு வரன்முறை இன்றைக்கு இல்லை. அரசும் அது பற்றி சொல்லவில்லை. அதனால் கடன் வழங்குகின்றவர்கள் இது வரும், அது வரும் என்று சொல்லி, வட்டியைக் கூட்டி, விவசாயி கள் தலையில் வைக்கிறார்கள். ஆகவே, இதில் ஒரு திட்டவட்ட மான முடிவு இருக்க வேண்டும். இவ்வளவு பணம் பட்டுவாடா செய்வதற்கு இவ்வளவு பேர் தான் பணியாற்றலாம் என்ற வர முறை இருக்க வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு மேல் வட்டி என்று வரும்; பணம் கட்ட முடியாத நிலை வரும்; பின்னால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை என்ற நிலையைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் நல்லதொரு சட்ட திருத்தத்தைக் கொண்டுவந்து, சீக்கிரமாக கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[நண்பகல் 12-00]

**திரு. ந. குலசேகர பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு மானியக் கோரிக்கை எண் 23-மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்காக, முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக் கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கூட்டுறவு என்பது நாட்டின் வளர்ச்சியிலே மிகப் பெரிய அரியதொரு பங்கைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது. இந்தியாவிலேயே கூட்டுறவு என்பது தமிழகத்தில்தான் முதல் இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இடைக்காலத்தில் சில அரசியல் சுயநலமிகளின் தலையீட்டின் காரணமாக, பொலிவிழந்து மிகவும் பின்தங்கிய நிலைமையை அடைந்திருக்கிறது. கூட்டுறவு என்றாலே, அன்றைக்கு மக்கள் மத்தியிலும், விவசாயிகளின் மத்தியிலும் மிகப் பெரிய மதிப்பை பெற்றிருந்தது. இன்றைக்கு கூட்டுறவு என்றாலே மக்கள் அதை வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு பின்அடைந்து போயிருக்கிறது என்றால், அதற்கு காரணமானவர்கள், அதை இடைக் காலத்திலே சீரழித்தவர்கள் தாம். அப்படி அந்தக் கூட்டுறவுத் தத்துவத்தை இடைக்காலத்திலே சிதைத்து சீரழித்தவர்கள், இன்றைக்கு இந்த விவாதத்திலே கலந்துக் கொள்ளாதது நிச்சயமாக மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதன்பிறகு, தமிழ்நாட்டில் இந்தக் கூட்டுறவுத் துறையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு, ஒரு தனி உத்வேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இடையிலே மீண்டும் விவசாயிகள் என்ற பெயராலே மிட்டா மிராசுகளும், பெரிய பெரிய விவசாயச் சங்கத் தலைவர் களும், பணத் திமிங்கிலங்களும் சேர்ந்துக் கொண்டு விவசாயிகள் பெற்ற கடனை திருப்பிக் கொடுக்க முடியாது என்று போராடி யதின் காரணமாக ஒரு நோய்வினை அடைந்து, இன்றைக்கு மாண்புமிகு கூட்டுறவுச் சட்ட அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு அது உயிர் பெற்று இலைவிட்டு துளிர்க்க ஆரம்பித்திருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது.

இன்றைக்குத் தமிழகத்திலே 4,742 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறங்களிலே இருந்து கொண்டு, சிறு விவசாயிகளுக்கு நலம் தரும் பணிகளை ஆற்றிக் கொண்டு வருகின்றன. அந்த வகையிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் வளர்ப்பதற்கான எல்லா நடவடிக்கைகளிலும் இந்த அரசு துணையாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஷெட்யூல்டு வகுப்பைச் சார்ந்த நாற்பதாயிரம் விவசாயக் குடும்பங்கள் வருகிற 1981–82 ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படும், என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருப்பது பாராட்டத் தக்க செயலாகும்.

இதன் மூலம் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடன் உதவிகளையும், ஏனைய சேவைகளையும் பெற்று, தாழ்த்தப்பட்ட அந்த மக்களின் வருவாயை பெருக்கிக் கொள்ள முடியும் என்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்

ஒரு வாய்ப்பினை அவர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.
சிறு விவசாயிகளுடைய இடர்களை களைய வேண்டும் என்ற
வகையில் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவையில்
நின்ற எல்லா தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கும் 1979
ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதி வரையில் அபராத வட்டியை
திருப்பித் தந்ததோடு மட்டுமல்லாமல், ஏற்கனவே மூன்று அல்லது
ஐந்தாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டு, 1978-ஆம் ஆண்டில்
ஜூன் மாத இறுதியில் நிலுவையில் நின்ற எல்லாக் கடன்களின்
மீதும் இருந்த சாதாரண வட்டியை அரசு தள்ளுபடி செய்தது
பாராட்டுக்குரிய அம்சமாகும். ஆகவே, மொத்தமாக
ஏறக்குறைய 120 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுடைய
கடன்களை தள்ளுபடி செய்திருப்பதற்கு, தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழக மக்களும் சிறு விவசாயி
களும், நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே,
அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே பெரும் அரசு அதிகாரிகள் மட்டுமே,
பெரும் அளவில் பங்கு பெற்று, அதன் வளர்ச்சியிலே முழுமையாக
வெற்றிபெற முடியாது என்பதை இந்த நாட்டிலே உள்ள
அனைவரும் அனேகமாக ஒத்துக் கொள்வார்கள், கூட்டுறவிலே
அதிகாரிகள் மட்டும் அல்லாது, அதிகார பற்று அற்றவர்கள்
பொருப்பேற்க வேண்டும். அப்போதுதான் கூட்டுறவுத் துறை
நல்ல முறையில் வளர்ச்சிப் பெற முடியும். அப்படிப்பட்ட
அதிகார பற்று அற்றவர்கள் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களிலும்
பணியாற்றினால்தான், கூட்டுறவுத் துறை இன்னும் சிறப்பாக
வளர முடியும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க
முடியாது என்றும் நம்புகிறேன். ஆகவே நான் இந்த அரசை கேட்டுக்
கொள்ள விரும்புவதெல்லாம், உயர் அதிகாரிகளை அதிகமாகப்
போடுவதைக் காட்டிலும், இப்படிப்பட்ட அதிகாரப் பற்றற்றவர்
களை பங்கு பெறச் செய்து, விவசாயிகள் பயன் பெறவும்.
கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் வளர்ச்சி அடையவும்,
தேர்தல்களை விரைவாக கொண்டு வரவேண்டும் என்றும்,
மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பற்றற்ற
தொண்டர்கள் அதிலே பங்கு பெறச் செய்ய வேண்டும் என்றும்
கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களில் இன்றைக்கு அயலாற் பணி என்ற
திட்டத்தின்கீழ் பெருமளவு அரசாங்க அலுவலர்கள் அதிகமாக
இருக்கிறார்கள். இந்த அயலார் பணித் திட்டம் என்பது
நிச்சயமாக கூட்டுறவுத் துறையில் இருந்து எடுக்கப்பட
வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த
கூட்டுறவு நிறுவனங்களில் உள்ளபடியே வேலை செய்பவர்களின்
எதிர்கால நலன்களை, அவர்கள் முன்னேற்றத்தை. அவர்களது
ஒளிமயமான எதிர்காலத்தை இது இருளாக்கிவிடக்கூடாது



என்பதால் பாரின் சர்வீஸ்சில் உள்ள அனைவரையும்
கூட்டுறவுத் துறையிலிருந்து அரசாங்கம் திரும்பப் பெறவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர்களின் ஊதிய விகிதங்கள்
மாற்றி அமைக்கப்படவேண்டும். அவர்களுக்கு ஊதிய உயர்வு
அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநெடுநாட்களாக இருந்து
வருகிறது. வளர்ச்சியடையாத மிகவும் பின்தங்கிய நிலையில்
இருக்கக்கூடிய வங்கிகளில் உடனடியாக இந்த ஊழியர்களுக்கு
ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க இயலாது என்றிருந்தாலும்
கூட நல்ல வளமான வங்கிகள் பல இருக்கின்றன. அங்கெல்லாம்
அங்குள்ள ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதற்கு
அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
நிலவள வங்கிகளில் இருக்கக் கூடிய தனி அதிகாரிகள் இன்று
வசூல் என்ற பெயரால் கார்களை எடுத்துக் கொண்டு சுற்று
கிறார்களே தவிர அங்கே வேலைகள் ஒன்றும் சரிவர நடைபெறு
வதில்லை. ஆகவே அப்படிப்பட்ட செலவுகளைக் கட்டுப்படுத்த
வேண்டும். உடனடியாக நிர்வாகக் குழுக்களை அமைப்பதன்
மூலம் இந்த தனி அதிகாரிகளை, அதிகமான இடங்களில் தேவை
யற்றிருப்பவர்களை, திரும்பப் பெற அரசாங்கம் ஆவன செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுக்கடைகள் பல இடங்களில், பல கிராமங்
களில் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கடைகள் மூலம்
கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் பெரிய பலனை அடை
கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள். அந்தக் கடைகளில்
பொருள்கள் இருப்பதில்லை என்று கூறினார்கள். அவர்கள்
தொகுதியில் அப்படி இருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது.
ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில்,
அங்குள்ள கூட்டுறவு கடைகள் மூலம் எல்லாப் பொருள்களையும்
மக்களுக்கு வழங்குவதற்கு எல்லா வகையிலும் வழிவகை
செய்யப்பட்டிருக்கிறது என்பதோடு பொருள்கள் இல்லாத
கடைகள் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
சோளிங்கர் தொகுதியில் குருவராஜபேட்டை விஸ்வநாதபுரம்
கிராமத்தில் விசுவநாதர் கூட்டுறவு நெசவாளர் சங்கம் என்று
ஒன்றிருக்கிறது. அந்தச் சங்கத்தின் தலைவர் மீது பல குற்றச்
சாட்டுகள், முறைகேடுகள், நடந்ததாக அவர்கள் மீது
நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகள் முன்வந்திருக்கிறார்கள்.
ஆனால் அந்த அதிகாரிகள் நல்ல முறையிலே நடவடிக்கைகள்
எடுக்க முடியாத அளவில், அந்தக் கூட்டுறவுச் சங்கம் செயல்
படாத வகையில் அங்கே மாற்றுக் கட்சியினர், சமூக விரோதிகள்
போன்றவர்கள் இந்த இயக்கமே அங்கே நடக்க விடாமல் செய்து
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பல நெசவாளர் குடும்பங்களும்
அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. நல்ல முறையில்,
நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பாராட்டுகளைச்

சொல்வதோடு சமூக விரோதிகள் கூட்டுறவு இயக்கத்தை நசுக்க விடாமல் தடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது என் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி தமிழ் நாட்டில் கூட்டுறவுத்துறை நல்ல முறையில் சிறந்து விளங்குகிற ஒரு அமைப்பாக இன்று உருவாகி இருக்கிறது. இந்தக் கூட்டுறவு அமைப்பை உருவாக்கியவர்கள் பல லட்சியங்களை, பல எண்ணங்களை மனத்தில் கொண்டு இந்த அமைப்புகளை உருவாக்கியதால் இன்று கூட்டுறவு இயக்கம் இந்த நிலையை அடைந்திருக்கிறது. ஆனால் இடைக் காலத்தில் இருந்த ஆட்சியினர் அந்தக் கூட்டுறவு அமைப்புகளையே நாசமாக்கி கூட்டுறவு அமைப்புகளின் நோக்கங்களை முறியடித்து தங்களுடைய வளர்ச்சிக்காக அதை அடிமைப்படுத்தி நடத்திவந்தார்கள். இந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தல்கள் இல்லை என்றும், அதை கலைத்துவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். அந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அந்தக் கூட்டுறவு அமைப்புகளில் கொள்ளையடிக்கிறார்கள், அந்த கூட்டுறவு அமைப்புகளின் நோக்கங்களுக்கு விரோதமாக செயல்படுகிறார்கள் என்ற காரணத்தால் தான் அந்த அமைப்புகளில் இருந்தவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பி அதைக் கலைத்துவிட்டு ஆனால் அடிப்படை அமைப்புகளை அவர்கள் கலைக்காமல் வைத்து விட்டுச் சென்றார்கள் என்றளவில் காங்கிரஸ் நண்பர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அதைப்போல் இங்கே கூட்டுறவுக் கடனை ரத்து செய்வோம் என்று தேர்தல் காலத்திலே கூறப்பட்டதாகச் சொன்னார்கள். விவசாயிகளுடைய கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கூறுகின்ற நேரத்திலே, அவர்களைச் சுரண்டி வாழ்கின்ற, உழைக்கின்ற விவசாயிகளைச் சுரண்டி வாழ்கின்ற, வாழ்ந்து கொண்டிருக்கிற பெரிய முதலாளிகளை நான் குறிப்பிடவில்லை. உழைத்துப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற, நிலத்திலே பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய கடனை ரத்து செய்வதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். 1937லே, சென்னை ராஜதானியின் முதல்வராக இராஜாஜி அவர்கள் இருந்தபோது, விவசாயிகளுடைய தனிப்பட்ட கடனையெல்லாம் எப்படி ரத்து செய்தார்களோ அதைப்போல், அகில இந்தியாவிலேயே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் இந்தியாவிலேயே இந்த அரசு தான் மத்திய அரசின் உதவியில்லாமலேயே இந்த கூட்டுறவுக் கடனை ரத்து செய்திருக்கிறது.



மகாராஷ்டிரத்தை ஆண்டுக் கொண்டிருக்கிற மராட்டிய முதல்வர் அந்துலே அவர்கள் கூட கூட்டுறவுக் கடனை ரத்து செய்யவேண்டுமென்று கேட்ட நேரத்திலே, மத்திய அரசாங்கம் அதற்கு மறுத்த நேரத்திலே, மத்திய அரசாங்கம் மறுத்தால் நான் பதவியை விட்டு விலகிவிடுவேன் என்று மத்திய அரசாங்கத்தை மிரட்டி, அங்கே குழப்பம் வரக்கூடாது என்பதற்காக, மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றார். ஆனால், தமிழகத்திலே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் உதவியில்லாமலேயே, 73 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடனை இன்று ரத்து செய்திருக்கிறார் என்று சொன்னால், இந்த தமிழகத்தின் முதல்வர் அவர்கள் மற்ற முதல்வர்களுக்குக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள்.

அதைப்போல், இங்கே இன்னும் பல நல்ல காரியங்கள் கூட்டுறவுத் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தை தங்கள் அடிமைப் பொருளாக, குடும்பச் சொத்தாக நினைத்துக் கொண்டு, இந்த கூட்டுறவுத் துறையை ஆக்கிரமித்து கொண்டு, ஏழை, எளிய மக்களுக்கு, பாட்டாளி விவசாயத் தொழிலாளர்களுக்கு பயனில்லாமல் செய்துவந்த அவர்கள் கையிலே இந்த கூட்டுறவு இயக்கம் செல்லாமல் இருக்கவேண்டுமென்பதற்காக, அதை நினைத்துக் கொண்டு பெரு முதலாளிகளிடம், முதலைகளிடம் இந்த அமைப்பு சென்றுவிடக் கூடாது என்பதற்காக சட்டத் திருத்தம் கொண்டுவந்து, அப்பேர்ப்பட்ட கூட்டுறவு அமைப்பு உண்மையிலேயே ஏழை எளிய பாட்டாளிகளுக்கு பயன்படக் கூடிய வகையில் இருக்கவேண்டும் என்பதற்காக, கூட்டுறவு இயக்கத்திலே தேர்தல், அந்தவகையிலே நடக்க வேண்டுமென்பதற்காக அந்த நல்ல நோக்கத்தோடு தேர்தலை நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது; புரட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு அத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல், இங்கே கூட்டுறவுத் துறையிலே, பல கூட்டுறவு மத்திய வங்கிகளில், முன்பு தலைவர்களாக இருந்த காலத்தில், அந்த ஆட்சிக் காலத்தில், கூட்டுறவு வங்கிகளில் எந்த அளவுக்கு மோசமாக, எப்படியெல்லாம் தவறுகள் நடந்தன என்பது தெரியும். குடந்தை மத்திய கூட்டுறவு வங்கி இதற்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. அங்கே இருக்கிற அந்த கூட்டுறவு மத்திய வங்கியை எப்படி பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்? அங்கே இருக்கிற சிறப்பு அதிகாரியை தன்னுடைய வேலையாளாக வைத்திருந்தது என்பதையெல்லாம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டு, அது குறித்து இன்றைக்கு வழக்கு மன்றத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றபோது, உடனே தேர்தல் வைக்க வேண்டுமென்று சொன்னால், அப்பேர்ப்பட்ட [illegible] வேண்டுமென்று கேட்கிறார்களா

என்று நான் காங்கிரஸ்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன். எனவே, கூட்டுறவுத் துறை நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்பதற்காக, எந்த இயக்கமானாலும் சரி, எந்தக் கட்சிக்காரர்களானாலும் சரி, தங்கள் குடும்பச் சொத்தாக அதைத் தங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்தோடு இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல், என்னுடைய தொகுதியிலே வேதாரண்யத்திலே புகையிலை உற்பத்தியாளர் சங்கம் நலிந்த நிலையிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஒரே ஒரு தனிப்பட்ட சங்கமாக இருக்கிறது; அதற்கு உதவி அளிக்கவேண்டும்; அப்படி உதவியளித்து அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும், கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், கூட்டுறவு நில வள வங்கி ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற அளவிலே, வயபிளாக இல்லாமல் இருக்கிறது என்பதற்காக, மற்ற வங்கிகளோடு இணைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி வேதாரண்யம் நிலவள வங்கியை செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது வேதாரண்யம் தனி தாலுகாவாக மாறியிருக்கிற நிலமையில், அந்த தாலுகாவின் பகுதியாக உள்ள திருத்துறைப்பூண்டிநிலவள வங்கிப் பகுதியில் உள்ள தலை ஞாயிறு பகுதியை வேதாரண்யம் நிலவள வங்கிப் பகுதியாக இணைத்தால் வேதாரண்யம் நிலவள வங்கி ஒரு முழு யூனிட்டாக, வயபிளாக மாறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிச் செய்தால், உதவியாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கூட்டுறவு சங்கத்திலே இருக்கிற ஊழியர்கள் எல்லாம், வேலை பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சங்கத்திலே இருக்கிறவர்களுக்கு 150 ரூபாய் தான் சம்பளம் அளிக்கவேண்டுமென்று கூட்டுறவு பதிவாளர் அவர்கள் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். நல்ல கூட்டுறவு சங்கங்களில் அந்த சம்பளத்தை 200 ரூபாய், 300 ரூபாய் என்று அளித்திருக்கிறார்கள். ஆடிட் செய்கிற ஆடிட்டர்கள், ஆடிட்டின் போது சம்பளத்தை திருப்பிக் கட்டவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் குறைக்கக்கூடாது; அந்த ஊதியத்தை திருப்பி கட்ட வேண்டுமென்று கூறக்கூடாது. ஏனென்றால் வழங்கப்பட்ட ஊதியத்தை குறைப்பதற்கும் கூடாது. அவர்களுக்கு வேலை பாதுகாப்பு அளிக்க வேண்டும். அந்த கூட்டுறவு சங்கங்களில் ஊழியர்களாக இருக்கிறவர்கள் பயிற்சி பெறாத சிலர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பயிற்சிக்கு அனுப்பி அங்கே மத்திய வங்கியினுடைய ஊழியர்களாக ஆக்கவேண்டும். அவர்கள் செயலாளர் போன்ற பதவிகளுக்கு பதவி உயர்வு பெற வாய்ப்பளிக்க வேண்டும். அதைப்போல அந்த சங்கத்திலே



இருக்கிறவர்கள் வயது வரவர்கள் இன்னும் சிலர் இருக்கிறார்கள்.
அந்த வயதின் காரணத்தால் அவர்கள் வேலையிலிருந்து
நீக்கப்படாமல் பார்த்து, அவர்களுக்கு வயது வரம்பிலிருந்து
விலக்களித்து, பதவி உயர்வு பெற வாய்ப்பளிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களை மீண்டும்
பாராட்டி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. த. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
1981-82 ஆம் ஆண்டு கூட்டுறவு மானியக் கோரிக்கையின்
மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு, கூட்டுறவு இயக்கம் சமுதாயத்தில் நலிந்த ஏழை,
எளிய மக்கள் ஒன்று கூடி சமுதாயத்தில் இருக்கிற பண பலம்
படைத்தவர்கள், சக்தி வாய்ந்தவர்கள் செய்கிற தொழிலுக்கு
ஒப்ப நல்ல தொழிலை செய்து தங்களுடைய பொருளாதார
வாழ்வினை முன்னேற்றிக்கொள்வதற்காக, கூட்டுறவாளர்கள்,
கூட்டுறவு சிந்தனையாளர்கள், கூட்டுறவு இயக்கத்தை தோற்று
வித்தார்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன். அந்த அடிப்
படையில் பார்க்கிற நேரத்தில் பேராசிரியர் கல்வர்ட் அவர்கள்
தன்னுடைய Law and principles of Co-operation என்ற புத்தகத்தில்
"A form of organisation wherein the persons voluntarily
associate together has human beings on a basis of equality,
for the promotion of economic interests of themselves"
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே கூட்டுறவு என்றுச்
சொல்லக்கூடிய அந்த கூட்டுறவுத் தத்துவம், சமுதாயத்தில்
நலிந்திருக்கிற ஏழை, எளிய மக்கள் ஒன்று கூடி அவர்களுடைய
பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள ஏற்பட்ட
ஒரு இயக்கம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்
கிறேன். அந்த அடிப்படையில்தான் ஜெர்மன் நாட்டிலே
ரெய்பீசன் என்ற கூட்டுறவாளர் அந்தநாட்டிலே விவசாயிகள்தங்க
ளுடைய விவசாயத்தை செய்கின்ற நேரத்தில் சிரமப்படுகிறார்
கள் என்பதால் அங்கே பணத்திற்காக Agricultural credit society
என்பதைத் தோற்றுவித்தார்கள். அதேபோலதான் 1844ஆம்
ஆண்டு இங்கிலாந்து நாட்டிலே அங்கே வாழ்கின்ற ஏழை தொழி
லாளர்கள் நல்ல பொருள்களை வாங்கி நல்ல முறையில்
வாழ்வதற்கு Consumers Co-operatives என்று சொல்லக்கூடிய
கூட்டுறவுத் துறையை அங்கே ஏற்படுத்தினார்கள். அந்த அடிப்
படையில்தான் நம்முடைய நாட்டிலே கூட்டுறவுத் துறையின்
தந்தை என்று சொல்லக்கூடிய நிக்கல்சன் அவர்கள் 1904 ஆம்
ஆண்டு கூட்டுறவுத் துறையை ஏற்படுத்தி, அந்த கூட்டுறவுத்
தத்துவம், இங்கே இருக்கிற ஏழை, எளிய மக்கள் நல்ல
முறையில் நல்வாழ்வினை எய்துவதற்காக ஏற்படுத்தினார்கள்.
அந்த வகையிலேதான் கூட்டுறவுத் துறை நம்முடைய நாட்டிலே
தோற்றுவிக்கப்பட்டு, ஆங்கிலேயர் காலத்தில் கூட்டுறவுத் துறை
நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் சுதந்திரத்திற்குப்
பிறகு ஆசிய ஜோதி நேரு அவர்கள் நம் நாட்டில் இருக்கக்கூடிய

[திரு. த. வீராசாமி] [1981 மே 4

ஏழை, எளிய விவசாய பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள் அத்தனைபேரும் பயன்பெருகிற வகையில் கூட்டுறவுத் துறை அமைய வேண்டும் என்பதற்காக அவர்கள் கொள்கை வழியில் திட்டங்களைத் தீட்டி நடைமுறை படுத்தி வந்தார்கள். ஆனால் அந்த நேரத்தில் கூட்டுறவுத் துறையிலே யார் பங்கு பெற்றார்கள் என்று கேட்டால் சமுதாயத்தில் பண பலம் படைத்தவர்கள், சுயநலமிகள், சுயநலக்காரர்கள் கூட்டுறவுத் துறையில் புகுந்து கொண்டு, கூட்டுறவுத் துறையை ஆக்கிரமித்துக் கொண்டு அவர்களின் எண்ணம் ஈடேறாவண்ணம் தடைசெய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு கூட்டுறவுத் துறை புத்துயிர் பெற வேண்டுமென்று, இந்தத் துறை மறுமலர்ச்சி பெறவேண்டுமென்பதற்காக பெரு முயற்சியை எடுத்துக்கொண்ட தன் காரணமாக இந்தத் துறை மறுமலர்ச்சி கண்டது. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்கு பின்னர் கூட்டுறவுத் துறையிலே ஒரு சோதனை ஏற்பட்டது. கூட்டுறவுத் துறை ஒரு சிலருடைய சொந்த நிறுவனமாக இயங்கிக்கொண்டு வந்தது. அதன் மூலம் கூட்டுறவுத் துறையிலே களங்கம் கற்பிக்கின்ற முறையிலே கூட்டுறவுத் துறை என்று சொன்னாலே மக்கள் அஞ்சி பீதியடையக் கூடிய வகையிலே இழிவான நிலைமைக்கு வந்தது. அதற்குப்பிறகு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலே இந்த கூட்டுறவுத் துறை நன்றாக முடுக்கிவிடப்பட வேண்டுமென்ற முறையிலே திட்டங்களைத் தீட்டி செயல்முறைகளை வகுத்து, நாட்டு மக்கள் வளம்பெற வேண்டுமென்பதற்காக திருத்தி அமைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையின்கீழ் பணியாற்றுகின்ற அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே நல்லதொரு சட்டத்தினை இயற்ற இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே முனைப்பாக காரியங்கள் செய்யப்படுகிறபோது புரட்சித் தலைவர் அவர்களால் அரசியலில் முடமாக்கப்பட்டவர்கள், இந்த நாட்டிலே தங்களுக்கு எதிர்காலம் உண்டா என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருப்பவர்கள், அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள், இந்த நாட்டிலே எந்த ஆட்சி வந்தாலும் குழப்பம் உண்டாக்கவேண்டுமென்று எண்ணுகிறவர்கள் கூட்டுறவுத் துறையிலே ஒரு சோதனையான காலத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கூட்டுறவுத் துறைக்கு எதிர்காலம் உண்டா என்ற கேள்வியையே கிளப்பி இருக்கிறார்கள். நான் சில புள்ளி விவரங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். 1977-78 இல் 139·41 கோடியும் 1978-79-இல் 113·89 கோடியும், 1979-80 இல்



1981 மே 4] [திரு, த. வீராசாமி]

51·55 கோடியும், 1980-81 இல் 19.66 என்ற அளவிற்கு கூட்டு
றவுத் துறையிலே குறுகிய, மத்திய காலக் கடன்கள் வழங்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் இந்த நேரத்திலே கூட்டுறவுத்
துறைக்கு ஒரு சோதனை ஏற்பட்டிருக்கிறது. தவணை தவறிய
கடன்கள் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில்
32·9 சதவிகிதம், 1979ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில்
52·5 சதவிகிதம், 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில்
73·4 சதவிகிதம், 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளில்
80 சதவிகிதம் ஆக மொத்தம் 96·5 விழுக்காடு என்ற அளவிற்கு
கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு இருக்கிறது. கூட்டுறவுத்
துறையிலே கொடுக்கப்படுகிற கடன் அளவு குறைந்த அளவிலே
தான் திருப்பிக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. இந்த
நிலைமையிலே கூட்டுறவுத் துறையை நல்ல முறையில் செயலுக்குக்
கொண்டுவருகிற வகையில் புரட்சித் தலைவர் அவர்கள், தம்
ஆட்சியில் நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்ற
உணர்வோடு நம்முடைய நாட்டிலே உள்ள 16 மத்திய கூட்டுறவு
வங்கிகளுக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவைகள்
கடன்களை வழங்கவேண்டுமென்ற முறையில் 1980ஆம் ஆண்டு
ஜனவரியில் 20·12 கோடி ரூபாயையும், 6 மத்திய கூட்டுறவு
வங்கிகளுக்கு 1980 அக்டோபரில் 21·81 கோடி ரூபாயும்
ஆக மொத்தம் 41·99 கோடி ரூபாய் அளவுக்கு
வேஸ் அன்ட் மீன்ஸ் என்ற முறையில் கொடுத்து உதவி
செய்து, அதன் மூலமாக ஏழை எளிய விவசாயப் பெருங்குடி
மக்கள் கடன்களைப் பெற்று வாழ்க்கையில் நல்ல காரியங்களைச்
செய்வதற்கு பேருதவி செய்திருக்கிறது. 1980ஆம் ஆண்டு
மார்ச் மாதம் இறுதியில் சிறு விவசாயிகளுக்கு குறுகிய காலக்
கடன் அசல் வட்டி தள்ளுபடி 49·64 கோடி ரூபாய் ஆகும்.
இதன் மூலம் 5 ஏக்கருக்கு குறைந்து வைத்துள்ள சிறு
விவசாயிகள் 4·52 லட்சம் பேர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.
விவசாயிகள் கட்டிய கடனை திருப்பிக் கொடுக்கிற ஒரே ஒரு
அரசு இந்த அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
1975ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாளுக்குப்பின்
திருப்பிச் செலுத்திய மத்திய கால மாற்றுக் கடன்களை திருப்பிக்
கொடுத்ததன் வகையில் 1981-82-ல் 23·59 கோடி ரூபாய்க்கு
அரசு வழிவகை செய்திருக்கிறது என்பதைக் கூறி இந்த அரசைப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கும் மேலாக இந்த அரசு நலிந்த மக்களைக் காப்பாற்றும்
அரசு என்ற வகையிலே ரிசர்வ் வங்கி கொடுக்கும் மொத்தக்
கடனில் 20 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்க வண்டு
மென்ற நியதியிருந்தாலும்கூட, நம்முடைய அரசு 1980ஆம்
ஆண்டு கொடுக்கப்பட்ட மொத்தக் கடனில் 49 சதவீதம்
கடனை நலிந்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பதையும்,
அதாவது 20·87 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்பதையும், 1980-81ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட குறுகிய

[திரு. த. வீரசாமி] 

காலக்கடன்கள் 42 சதவீதமும், மத்திய காலக் கடன்களில் 95 சதவீதமும் மொத்தக் கடனிலே நலிந்தவர்களுக்கு கொடுக் கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் எந்த அரசும் செய்யாத சாதனையைச் செய்ய இன்றையதினம் இந்த அரசு வழிவகை வகுத்திருக்கிறது. அதாவது 40,000 அரிசனக் குடும்பங்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்படுவதாகக் கொள்கைக் குறிப்பிலே கூறியிருப் பதைக் கண்டு நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சி ஒன்றுதான் 1979-80-ம் ஆண்டு முதல் பயிர்க் காப்புறுதித் திட்டம் என்ற திட்டத்தை நாட்டிலே நல்லமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு தனியார் நகையீட்டுக் கடைகள் ஒழிக்கப்பட்டதால் மக்களுடைய அன்றாட நடவடிக்கைகளுக்காகவும், வேளாண்மைத் தொழில் இன்னும் மற்றத் தொழில்கள் நடத்துவதற்காக நகையீட்டுக் கடனாக 15 சதவீத வட்டியில் 1,631 கூட்டுறவு அமைப்புகள் தற்பொழுது நகைக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1980-81ஆம் ஆண்டில் 85·10 கோடி ரூபாய் கொடுத்து 7·02 இலட்சம் பேர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். 1981-82ஆம் ஆண்டிற்கு 130 கோடி ரூபாய் நகையீட்டுக் கடன் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.]

இந்த அரசு நுகர்வோர் கூட்டுறவுத் துறையிலும் நல்ல முறை யில் செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பெருங்குடி மக்க ளிடமிருந்து விவசாய விளை பொருட்களை வாங்குவதற்காக மார்க்கெட்டிங் என்று சொல்லும் துறையிலும் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. வாங்கிய நெல்லை சமித்து வைப் பதற்காக 5 இடங்களில் கூட்டுறவு விற்பனைக் கூடங்களைக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. 200 கிராமக் கூட்டுறவுக் கூடங்களையும் கட்ட வழிவகை செய்திருக்கிறது.

என்னுடைய ஒரத்தநாடு தொகுதியில் உள்ள நீடாமங்கலம் ஒன்றியத்தில் இருந்த நிலவள வங்கியை 'நான்-வயபில்' என்ற முறையில் கருதி ரிசர்வ் வங்கியானது அதை மன்னார்குடி நில வள வங்கியுடன் இணைத்திருக்கிறது. இப்பொழுது நீடா மங்கலம் ஒரு புதிய தாலுக்காவாகப் புரட்சித் தலைவரவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு அந்த வங்கியைத் திறக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், **(மணியடிக்கப்பெற்றது).**



 [திரு. க. பாரமலை]

திரு. க. பாரமலை :—மாண்புமிகு பேரவை மாற்றுந் தலைவர் அவர்களே. கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஓரிரு வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கூட்டுறவு இயக்கமானது ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற சித்தாந் தத்திற்கேற்ப மிகச் சிறப்பான முறையில் நமது தேசத்தில் செயல்பட்டு வந்ததை மறந்திருக்க முடியாது. "Co-operation between Socialism and Capitalism is the Golden *Via* Media" முதலாளித்துவ, சமதர்மப் பொரு என்று சொல்லுமளவிற்கு ளாதாரத் தத்துவம் என்ற புதிய தத்துவத்தை ஏற்றுக்கொண் டிருக்கின்ற இந்த இயக்கம் ஒருகாலத்தில் விவசாயிகள், நடுத்தர ஏழை விவசாயிகள் ஆகியவர்களை லேவாதேவிக்காரர்களின் கொடுமையான பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற எண்ணத் தில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமாகும். கூட்டுறவு என்ற முறை யில் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பை இந்த இயக்கம் ஏற்றிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது. இப்படிப்பட்ட இந்த இயக்கம், ஒரு காலத்தில் வெளிநாட்டுக்காரர்கள் இங்கு வந்து பார்த்துவிட்டுச் சென்று, இதன் நடைமுறை வேலைத் திட்டங்களை அவர்களுடைய நாட்டிலே அமல்படுத்தலாம் என்ற அளவிற்கு இருந்த இந்த இயக்கம், சமீப காலத்தில் க்ஷீண திசையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை மிக்க வருத்தத்தோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1977-78ஆம் ஆண்டு நம்முடைய கூட்டுறவு இயக்கம் நடுத்தர, மத்திய கால, குறுகிய காலக் கடனாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங் கிய கடன் 139·48 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால், 1980-81ஆம் ஆண்டிற்கு 19·66 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டு மென்று கருதி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1980-81-க்கு ரூ. 172 கோடி செலவழிக்கத் திட்டமிட்டிருந்தார். பல்வேறு காரணங்களால், கூட்டுறவுச் சங்கங்கள், கடன் வழங்கும் தகுதியை இழந்து விட்ட காரணத்தாலே, அந்த இலக்கை எட்ட முடியவில்லையென்று வருத்தத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறார் கள். இந்த நிலை நீடித்துக் கொண்டே போகுமானால், இது எங்கே போய் முடியும் என்று நமக்கு வருத்தமாக இருக்கிறது. காரணம், தமிழகத்தினுடைய விவசாயிகளுடைய குறுகிய கால, மத்திய கால தேவை, மத்திய அரசின் விவசாய ஆணைக் குழுவின் மதிப்பீட்டின்படி ஏறக்குறைய ரூ. 250 கோடி என்று தெரிகிறது. அதிலே பத்தில் ஒரு பங்குகூட நாம் செலுத்த முடியாத நிலை மையில் இருக்கிறோம் என்று சொன்னால் மிக்க வேதனையாக

இருக்கிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டும். இந்த ஆண்டில்
நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏறக்குறைய ரூ. 130 கோடி
செலவழிப்பதற்கான திட்டங்களை, குறுகிய காலக் கடனாகச்
செலவழிக்கும் திட்டங்களை, நீண்ட காலக் கடனாக ரூ. 10
கோடி செலவழிக்கும் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். இந்த
இலக்கை நாம் அடைய முடியவில்லையென்றால், நிச்சயமாக நான்
சொல்லிக்கொள்ள விரும்புவது, ஏழை, எளிய விவசாயிகள் தங்க
ளுடைய தேவைகளுக்கு மீண்டும் லேவாதேவிக்காரர்களை அணுகு
வார்களானால், நிச்சயமாக அவர்களுடைய நிலை வேறு மாதிரி
இருக்கும். இன்றைக்கு அரசு பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்
கள் போட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு புரோ
நோட்டின் பேரிலே, நம்பிக்கையின் பேரிலே கடன் கொடுக்க
மாட்டார்கள். ஆகவே, நிலத்தை இறுதிக் கிரயமாக எழுதி
வாங்கிக்கொண்டுதான் பணம் கொடுப்பார்கள். அந்த நிலை
அனுமதிக்கப்படுமானால், புதிய ஜமீன்தாரி முறை, நிலப்பிரபுத்
துவ முறை இந்த நாட்டில் வருமோ என்று அச்சப்படும் அளவுக்கு
நிலைமை போய்க் கொண்டிருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். சமீப காலத்தில் மக்கள் மத்தியில் ஏற்பட்
டிருக்கிற மனோநிலையைப் பார்க்கும்போது இதைத் திட்ட
மிட்ட ஒருசில சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நில பிரபுக்களைச்
சேர்ந்தவர்கள் செய்து கொண்டிருக்கிறார்களோ என்று அச்சுறு
கின்ற அளவுக்கு மக்களுடைய மனோபலம் போய்க் கொண்
டிருக்கிறது. ஆகவே, முன்பு இருந்ததைப் போல, சரியான
முறையிலே, செம்மையான முறையிலே கூட்டுறவுகள் செயல்படக்
கூடிய வகையில், அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரையும் அமைச்சரவை
யையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்குக் கூட்டுறவிலே நில வள வங்கிகள்
அனேகமாகச் செயல்படாத நிலையில்தானிருக்கின்றன. அறிக்கை
யிலே 165 நிலவள வங்கிகளிலே 16 நிலவள வங்கிகள் ஓரளவு
கடன் வழங்குகின்ற தகுதியைப் பெற்றிருப்பதாகச் சொல்லியிருக்
கிறார்கள். 19 வங்கிகள் உயர்ந்த அளவுக்கு கடன் வழங்கு
கின்ற வசதிகள் பெற்றிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
இப்படி மொத்தத்தில், தமிழகத்தில், நிலவள வங்கிகளுடைய
சேவை, அவைகளுடைய செயல்பாடு ஸ்தம்பித்துவிட்டது என்று
தான் சொல்ல வேண்டும். ஆகவே, அமைச்சர் அவர்கள் சிறப்
பான முயற்சியை எடுத்து நிலவள வங்கிகளின் வேலைகளைத்
தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த
அளவு நம்முடைய தமிழகத்தில், ஏற்கனவே காலையில் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், விவசாயிகளுக்கு
ரூ. 125 கோடி கடன்களை ரத்து செய்ததன் மூலமாகவும், பல்
வேறு வழிகளிலும் விவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்
டிருக்கிறது. இப்பொழுதுகூட, ஏறக்குறைய 5·2 இலட்சம் பே
பயனடையக்கூடிய ரூ. 4·8 கோடி வட்டிச் சலுகை அறிவிக்கப்



பட்டிருக்கிறது. இந்த நோக்கில் நான் சொல்லிக்கொள்வது
கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு 5 ஏக்கர் என்று நிர்ணயித்
திருக்கிறீர்கள். ஆனால், சென்ற சட்டமன்றத்திலிருந்து நாங்கள்
சொல்லிக்கொண்டிருக்கிறோம். தயவுசெய்து அதைச் சிந்தித்துப்
பாருங்கள். எங்களுடைய பகுதியிலே இருக்கிற 10 ஏக்கர் நிலம்
தஞ்சையிலே இருக்கிற 1 ஏக்கருக்குச் சமம் என்ற கருத்தை
மனதிலே வைத்து நிச்சயமாக மறுபரிசீலனை செய்வீர்கள் என்ற
நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆகவே நான் அமைச்சரைப் பணி
வோடு கேட்டுக் கொள்கிறேன். அளவை மட்டும் சிந்தித்துப்
பார்க்காமல், தயவுசெய்து நிலத்தினுடைய தரத்தைச் சிந்தித்துப்
பார்த்து, அதற்குரிய சலுகைகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்
கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு கடன்களைக்கூட 3 அல்லது 6 ஆண்டு
களுக்கு விஸ்தரிக்கக் கூடிய அளவு நீங்கள் கடனை விஸ்தரிக்கிறீர்
கள். எங்களுடைய பகுதியிலே கொடிக்கால் விவசாயிகள் இருக்
கிறார்கள். அவர்களுடைய கடனுக்காக, அவர்களுடைய
சொத்துக்களை ஜப்தி செய்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டிருக்கின்றன. ஆகவே, அமைச்சருக்குச் சென்ற முறையும்
சொன்னோம். ரெவின்யூ மானியத்தின்போதும் குறிப்பிட்டிருக்
கிறோம். ஆகவே, நிலமில்லாத அந்தக் குடும்பங்களுக்கான
கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு தயவுசெய்து அவர்கள் அதிகாரி
களோடு கலந்து பேசி ஏதாவது ஒரு முடிவெடுத்து, கொடிக்கால்
விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முயற்சிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த 40,000 குடும்பங்
களுக்குக் குடும்பத்திற்கு ஒருவர் வீதம் கூட்டுறவு இயக்கத்திலே
அங்கத்தினர்கள் ஆக்கப்போகிறோம் என்று அறிவித்திருக்கி
றார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி
அவர்கள் வருவதற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 மானியம்
கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், அதிலே பால்
பண்ணைபோன்றபல்வேறுதொழில்களைத்துவங்க ஷேர் காப்பிட்ட
லாகப் பணம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
உங்களுக்குத் தெரியும், ஏற்கனவே கூட்டுறவுத் துறையிலே அங்கத்
தினர்களாகச் சேருகின்றவர்கள் சில தொழில்களைத் துவங்க,
10 சதவீதம் அளவுக்கு முன்தொகையாக, ஷேர் காப்பிட்டல்
என்று கொடுக்க வேண்டும். ஆகவே, பால் பண்ணை துவங்க
வேண்டுமானால், ரூ. 3,000, ரூ. 2,000 என்று ஆகும். அதற்கு
ரூ. 100 போதாது. ஆகவே, ரூ. 100 என்று சீலிங் வைக்காமல்,
அவர்களுக்குரிய அந்த ஷேர் காப்பிட்டல் முழுமையாக அரசால்
கொடுக்கப்படும் என்ற நல்ல அறிவிப்பை அமைச்சர் அவர்கள்
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கூட்டுறவுச் சட்டம் புதிதாய் வந்து கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்திலே உள்ள பல்வேறு தவறான கருத்துக்களை எல்லாம் நீக்கி ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுவதாக நான் அறிகிறேன். இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது, இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே வேலை பார்க்கக் கூடியவர்களுக்குப் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களுக்கு வேலை நிரந்தரம் இல்லை. இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு, ஒருவர் மற்ற துறையிலே வேலைக்குச் சென்றால், தற்காலிகமாக சென்றாலும்கூட 400 முதல் 480 ரூபாய் வரை கிடைக்கின்றது. ஆனால் கூட்டுறவு பயிற்சி பெற்ற ஒருவர் இந்தத் துறையிலே வேலைக்குச் சென்றால் முதன் முதலாக 100 ரூபாய் என்று 'சீலிங்' வைத்து இருக்கிறார்கள். 2, 3 ஆண்டுகள் சென்றால்தான் நிரந்தரம் ஆகும். எனவே அவர்களுக்கும் மற்றவர்களைப் போல எல்லா சலுகைகளும் கிடைக்கின்ற வகையிலே சம்பளத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வகையில் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையினுடைய பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அந்த இயக்கம் செம்மையாக செயல்படுவதற்குத் தனிப்பட்ட குடும்பச் சொத்தாக ஆக்கப்படாமல் இருப்பதற்கு, இந்த இயக்கத்தைப்பொது மக்கள் இயக்கமாக தக்க நேரத்தில் ஆக்குவதற்கு, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

டாக்டர் கே. சமரசம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தமிழினத் தலைவன் புரட்சித் தலைவர் அவர்கள் அரசால் மாண்புமிகு சட்ட-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக் கூடிய கூட்டுறவு பற்றிய 23ஆம் எண்ணுள்ள மான்யக் கோரிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய உணர்வுகளை உங்கள் மூலமாக இந்த மன்றத்திலே வைக்க நான் விரும்புகிறேன்.

பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்பதற்கு ஒரு டிரேட் மார்க்—கரமாகும். அது இணைந்த கரம். அது இணைந்த கரமே தவிர, இரும்புக் கரமல்ல. பிரிக்க முடியாத பிரின்டட் கரமல்ல. அது வார்ப்படமும் அல்ல. ஆகவே அது இயங்கக் கூடிய கரம் என்பதுதான் கூட்டுறவினுடைய சிம்பள்—சின்னம், அந்தக் கரம்—அந்தக் கை, பலமற்றதாக இருக்கக் கூடாது, இயங்கும் சக்தி அற்றதாகவும் இருக்கக் கூடாது, வளர்ச்சி குன்றியதாகவும் இருக்கக் கூடாது, என்பதன் அடிப்படையிலேதான் இந்தக் கூட்டுறவு நிறுவனம் இன்றைய தமிழக அரசால் மிகத் தெளிவாக, நல்ல முறையிலே இயங்கி வருகின்றது என்பதை நீங்கள் உணர்வீர்கள். உண்மையாக கூட்டுறவுச் சங்கம் என்பது உள்ளங்கை என்று சொன்னால் அதற்குப் பணம் கொடுப்பவர், அந்த நிறுவனத்தில் இருந்து பணம் பெறுவோர்



அதை நடைமுறைப் படுத்துவோர் இவர்கள் எல்லாம் விரல்கள் என்று சொன்னால், அந்த விரல்கள் பலம் அற்றதாக இருக்கக் கூடாது. வளர்ச்சி குன்றியதாகவும் இருக்கக் கூடாது. அதே போலத்தான் மத்திய அரசு உள்ளங்கை என்று சொன்னால், கூட, மாநில அரசுகள் எல்லாம் விரல்கள் ஆகும். ஆகவே அதிலே ஏதாவது பலமற்ற விரலாக மாறுகிறது என்று சொன்னால் அதற்கு ஏதோ போலியோ நோய் வந்திருக்கிறது என்று பொருள். அல்லது இயங்கும் சக்தி அற்ற நிலையில் அந்த விரல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு பெராலிசஸ் அட்டாக் வந்திருக்கிறது என்று பொருள். அது வளர்ச்சி குன்றிய விரலாக இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கைக்கு பெருநோய் வந்திருக்கிறது என்று பொருளாகும். ஆகவே அப்படிப்பட்ட நிலையிலிருந்து இந்திய ஜனநாயகம் மிகத் தெளிவான முறையிலே இருக்க வேண்டும் என்பதற்கு, தமிழகத்திலே இன்றைய தினம் கூட்டுறவுத் துறை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதற்கு வேண்டிய நல்ல அபிப்பிராயங்களை, எண்ணங்களை திட்டங்களை இங்கே உருவாக்கி இருக்கிறார்கள் என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[ பிற்பகல் 12-40 ]

'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பது பழமொழி. அப்போது கூட அந்த இலங்கை வேந்தன் கடன்பட்டவர்கள் நிலைமையைப் போக்க முன்வரவில்லை. ஆனால், இன்றைக்குக் கடன்பட்டார் நிலையறிந்து கலங்கினார் புரட்சித் தலைவர் என்ற முறையில், 1978–79ல் மின் கட்டணக் குறைப்பு அந்த விவசாய மக்களின் நலன் கருதி இந்த அரசு செய்தது. அது மட்டுமல்லாமல், 1979ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உதவி செய்யக் கூடிய வகையிலே குறுகிய கால, கடன் மீது வட்டித் தள்ளுபடி என்கிற முறையிலே 5 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. 1980-ல் மத்திய கால கடன்களைக் குறுகிய காலக் கடன்களாக மாற்றி வைத்து, வறட்சியால்ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக அதை வட்டியோடு தள்ளுபடி செய்த வகையில் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், 1981ஆம் ஆண்டில் வறட்சி காரணமாக சாகுபடி அற்றவர்கள் ஒழுங்காக, நியாயமாக கடன் தொகையைத் திருப்பிச் செலுத்திவிட்டாலும், அவர்களுக்கும் சலுகை அளிக்கவேண்டும் என்கிற அடிப்படையில், அவர்கள் செலுத்திய பணத்தைத் திருப்பிச் செலுத்தும் முறையில் 23 கோடி ரூபாய் அளவிற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான். ஆனால், விவசாயிகளின் பக்கம், உற்பத்தியாளர்களின் பக்கம் இந்த நாட்டின் தொழிலாளிகள் பக்கம் இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

அதற்குப் பிறகு 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளுக்குள் குறுகிய காலக்கடன் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு சாதாரண வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பெரிய விவசாயிகளுக்கு அபராத வட்டி மட்டும் தள்ளுபடி செய்ய அரசு அனுமதித்துள்ளது. இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு ரூ. 40 கோடிக்கு மேல் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, ஏறத்தாழ 110 கோடிக்கு மேல் இந்த அரசு இந்த வகைகளில் விவசாயிகளுக்குச் சலுகை அளித்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மாநில நிலவள வங்கிகளைப் பொறுத்த வரையில், அந்தச் சங்கங்கள் இயங்காத நிலையில் உள்ள காரணத்தால், லட்சக்கணக்கானவர்கள் பணம் கட்ட முடியாமல் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்தில், இந்த அரசு 35¼ கோடி ரூபாய் கடனாகக் கொடுத்து, அவற்றை இயங்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக அரசுக் கடன் 42 கோடி ரூபாய்—ஆக மொத்தம் 77¼ கோடி ரூபாய்க்கு மேல் அரசு கடன் உதவி கொடுத்து, அந்த ஏழை விவசாயிகள் வாழ வேண்டும், வளரவேண்டும் என்கிற அடிப்படையில் உதவி செய்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் ஒரு சில கருத்துக்களையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். கிராமந்தோறும் அங்காடிகள், அமுதம் அங்காடி என்றும், சிறு அங்காடிகள் என்றும் ஆங்காங்கு அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதை நடத்துகிறவர்களுக்கு இந்த அரசாங்கம் 100 ரூபாய் உதவித் தொகை என்ற வகையிலோ, அல்லது சம்பளம் என்ற வகையிலோ அல்லது பார்ட்-டைம் பேமென்ட் என்கிற முறையிலோ ஏதோ ஒரு பெயரில் கொடுக்கிறார்கள். அது போதுமானது அல்ல. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அரசு அலுவலர்களுக்குப் பலவிதமான சலுகைகள் கொடுக்கிறோம். அவர்கள் பதவியில் இருக்கிறபோது இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்தாருக்கு 10,00 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தொகை கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவது இல்லை. இந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கும் அந்த உதவி செய்ய வேண்டும் என்று இந்த அரசை நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வளர்ச்சித் திட்டங்களுக்காக தொழில்பெருக்கக் கூடிய வகையில் உதவிகள் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் சாதாரணமாக நெல் மட்டும் உற்பத்தி



செய்துகொண்டு, கரும்பு மட்டும் உற்பத்தி செய்துகொண்டு இருக்காமல், விவசாயம் செய்ய சரியான காலம் இல்லாத நேரங்களில் வேறு பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அவர்களுக்கு வழிவகை செய்யவேண்டும். அந்த அளவிற்கு அவர்களுக்குப் பயிற்சியும், பொருளாதார வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்களுக்கு அதற்கான ஆலோசனைகள் வழங்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, நெல் கொள்முதல் நேரடியாகவே அரசாங்கம் செய்யவேண்டும். அரசாங்கமே அவற்றை நேரடியாக சலுகை விலையில் விற்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் இடைத்தரகர்களை அரசாங்கம் ஒழிக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த பிரிவினர் யார் என்று ஏற்கனவே அரசாங்கம் கோடிட்டுக் காட்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்குக் கூட்டுறவுத் துறை மூலம் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கவும், வட்டி இல்லாமல் கடன் கொடுக்கவும், அரசாங்கம் முன்வர வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதன் மூலம் நலிந்த பிரிவினரை அரசாங்கம் வாழவைக்க முடியும் என்பதைச் சொல்லி, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

விநியோக முறையில் ஏராளமான ஊழல் ஏற்பட்டு இருக்கிறது. அதைச் சீர்படுத்த வேண்டும். பழச்சாறு, வற்றல் ஏற்றுமதியை தனியார் வெளிநாடுகளுக்கு அதிக அளவில் செய்து அந்நியச் செலாவணி ஈட்டுகின்றனர். அதனைக் கூட்டுறவுத் துறையில் அரசாங்கம் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கிராமக் கூட்டுறவு அங்காடிகளுக்கு பொருட்களை நேரடியாக சப்ளை செய்ய வேண்டுமே தவிர, அந்த ஷாப்புகளே மாவட்ட அளவிலோ அல்லது வட்ட அளவிலோ எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது. அதிலே பல தில்லுமுல்லுகள் நடைபெற வழி ஏற்படுகிறது. ஆகவே, அந்தந்த ஷாப்புகளுக்கு பொருட்களை நேரடியாக சப்ளை செய்ய வேண்டும்; அன்றாட விற்பனைத் தொகையைத் தினந்தோறும் கட்டவும் வழிவகைச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, " இருப்பவன் இழந்திடத் தேவையில்லை; உழைப்பவன் உயர்ந்தால்போதும் " என்ற அண்ணாயிசத் தத்துவ தின் அடிப்படையிலே இந்தியத் துணைக்கண்டத்திலேயே புரட்சித் தலைவர் அரசு ஒன்றுதான் தொடர்ந்து பல்வேறு சலுகைகளை, தேவையான உதவிகளை விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் எல்லோருக்கும் செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மேலும் தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் காகிதத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த தேவையான கச்சாப் பொருட்கள், மூலப்பொருட்கள், மூங்கில் கிடைக்கின்றது; சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கிற கழிவுப் பொருட்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த வழிவகை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தர்மபுரி மாவட்டத்தில் மதுபானம் தயாரிக்க மொலாசஸ் கிடைக்கும் வாய்ப்பு நிறைய இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஜனநாயகம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. இந்தியாவின் ஜனநாயகத் தொட்டிலாக தமிழகம் இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் கூட்டுறவுச் சட்டத்திற்கு செலக்ட் கமிட்டி போடப்பட்டிருக்கிறது அது பாராட்டுக்குரிய ஒன்று. எல்லாக்கட்சிக்காரர்களுடைய எண்ணங்களும் அதிலே பிரதிபலிக்கின்ற வகையில் இருக்கிறது. அதிலே நானும் ஒரு உறுப்பினர் என்பதால் அதுபற்றி நன்கு அறிவேன். அதே நேரத்தில் அந்தப் பிரச்சனை சட்டமாக இங்கே வருவதற்கு முன்பு 'தனி அதிகாரிகள் கூட்டுறவு' என்று இல்லாமல் நல்லமுறையில் மக்களுக்கு உபயோகமாக கூட்டுறவு அமைப்புகள் இயங்குகின்ற வகையில் உடனடியாக தகுந்த நிர்வாகிகளை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இங்கே விவசாயிகள் பிரச்சனை என்று வரும்போது, பத்மாசினியம்மாள் என்ற விதவைத்தாயின் கண்ணீர்க்கடிதம் ஒன்று வந்தது. அந்த அம்மையாருடைய டிராக்டரை ஜப்தி செய்துவிட்டார்கள். அவர் ஒரு திக்கற்ற விதவை. 25 ஏக்கர் மானாவரி நிலம்தான் இருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டதால் கடனைக் கட்ட முடியவில்லை என்று சொன்னார்கள். ஆனால் உண்மையான நிலை என்னவென்றால், அந்த அம்மையார் பொன்னேரி நிலவள வங்கியில் 62,000 ரூபாய் கடன் பெற்றிருக்கிறார்கள் ட்ராக்டரும், ட்ரெயிலரும் வாங்க. 1—5—1978-லிருந்து ஆண்டுத் தவணைத் தொகை செலுத்தவில்லை. தவணை தவறிய பாக்கி 36,528 ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. அதற்குக் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள்; கட்டுவதற்கு மறுத்திருக்கிறார்கள். கலெக்ஷனுக்குப் போய் ஒருநாள் தங்கியிருக்கிறார்கள். இருந்தும் பயன் இல்லை. அதனால் ஜப்தி நடவடிக்கைக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது சட்டப்படி.

இங்கேஅந்த அம்மையார் திக்கற்ற விதவை என்று சொன்னார்கள். அவர் ஒன்றும் திக்கற்றவர் அல்ல. தந்தை, சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 95 ஏக்கர் நிலம். இருக்கிறது அந்த



அம்மாவுக்கு 21 ஏக்கர் நிலம் இருக்கிறது. அது நன்செய் நிலம். 2 ஏக்கர் புன்செய் நிலம் இருக்கிறது. 12 ஏக்கர் நன்செய் நிலமும், 4 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ள ஒரு மைனர் மகனுக்கு கார்டியனும் அவர்தான். வறட்சிப் பாதிப்பு எதுவும் இல்லை. அரசாங்கக் கணக்குப்படி ஆண்டு நில வருமானம் 75,000 ரூபாய். ஆனால் அவர் ஆண்டுக் கடனாக இந்த அரசுக்குச் செலுத்த வேண்டியது 12,708 ரூபாய் மட்டும்தான். அப்படி இருந்தும் அவர்கள் கட்டத் தவறியிருக்கிறார்கள். ஆகவே, ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி அநியாயமாகும்? இது நியாயமா அல்லது அநியாயமா என்று மாற்றுக்கட்சிகள் சொல்லவேண்டும். "கறையான் புற்றெடுக்க, கருநாகம் குடி புகுந்த கதை"யாக இது உள்ளது. காரணம், "படிப்பது பாரதம், இடிப்பது பெருமாள் கோவில்" என்பதைப் போல இவர்கள் பேசுவது ஏழையைப்பற்றி; கேட்பது பணக்காரர்களுக்கு. இந்த நிலை இருக்கலாமா?

"ஏழையின் சிரிப்பில் "இறைவனைக் காண்போம்" என்கிறார்கள். அவர்கள் எல்லாம் பணக்காரர்களின் பல்லிளிப்பிலே பகவானைக் காணத்துடிக்கிறார்கள்". ஆகவே, இந்த அரசு கூட்டுறவுத் துறையிலே எப்படி எப்படி நல்ல உறவுகளை வளர்க்க முடியுமோ அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்திருக்கிறது; ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு ஆர். ரங்கசாமி: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையின் இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி உடைமையைப் போக்க, தனி மனிதன் ஆதிக்கத்தை ஒழிக்க, கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்கள் அடிமை சாசனம் ஒழிய, வட்டி வந்தர்கள் ஆதிக்கம் ஒழிய, பின்தங்கிய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க கூட்டுறவுத் துறை ஒன்றால்தான் முடியும் என்பதை இந்த அரசு சிறந்த முறையில் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்றையதினம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின்கீழ் எல்லா விவசாயக் குடும்பங்களையும் கொண்டுவரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் திட்டமிட்டு இந்த அரசு செயல்படுகிறது. தமிழகத்தில் இருக்கிற மொத்த விவசாயக் குடும்பங்கள் 53·14 இலட்சம். அவர்களில் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிற விவசாயக் குடும்பங்கள் 40·86 இலட்சம்.

[பிற்பகல் 12-50]

அது 77 சதவீதம் ஆகும். சிறு விவசாயிகளின் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 42·05 இலட்சம் ஆகும். வருகிற 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், அனைத்து விவசாயிகளையும், கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வர திட்டமிடப் பட்டுள்ளது குறித்து, நான் பாராட்டுகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் மற்ற துறைகளை விட இது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற துறைகளை அரசு, அதிகாரிகளின் மூலம் நிர்வாகம் செய்கிறது. கூட்டுறவுத் துறை அதிகாரிகளும், பொது மக்களின் பிரதிநிதிகளும் கூட்டாக செயல்படுத்தும் சிறப்பு வாய்ந்த ஒரு துறையாகும். இந்தத் துறையை மேம்படுத்த இந்த அரசு முனைப்பாக இன்றையதினம் திட்டங்களைத் தீட்டி வருகிறது. இத்துறை, கடந்த காலத்தில் எப்படி இயங்கியது என்பதைப் பார்ப்போமேயானால் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நில அடைமான வங்கி என்ற பெயரில் இயங்கி வந்தது. அந்த வங்கியின் உதவிகள் அப்போது யாருக்குக் கிடைத்தது என்றால், பெரிய பெரிய மிட்டா மிராசுதாரர்களுக்கும், பெருநிலச் சொந்தக் காரர்களுக்கும்தான் கிடைத்தது. ஏழைகளான சிறு விவசாயிகளுக்கு அந்த வங்கியின் உதவி கொஞ்சம்கூட கிடைக்கவில்லை.

ஆகவே, அதை மாற்றுவதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நில அடைமான வங்கியை, நிலவள வங்கி என்று பெயர் மாற்றம் செய்து, ஏழை எளியவர்களுக்குப்பயன் பெறும் விதத்தில் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று நான் சொல்வது, பேரறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராக கொண்டு இயங்கிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத்தான். அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த அந்த நல்ல மாற்றத்தை, நல்ல தத்துவத்தை, பின்னால் வந்த, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை முதலமைச்சராக கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்படியெல்லாம் சீரழித்தது என்று சொல்லவேண்டும் என்றால், ரிசர்வ் வங்கி எதிர்த்ததையும் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு நிலவள வங்கி என்று ஆரம்பித்து, அது சரிவர இயங்க முடியாமல் போனதன் காரணமாக, இன்றையதினம் அவைகளை தகுதி அற்ற வங்கிகள் என்று சொல்லி, தாலுக்கா வங்கிகளை உடன் இணைத்து இயக்குகிற நிலைமைக்கு உருவாகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணாவால் புத்துயிர் பெற்ற கூட்டுறவு எனும் புனிதக் குழந்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பல்வேறு வகையாக சீர்கேடு அடைந்து, புனிதக் குழந்தையாக இருந்தது, பாவக் குழந்தையாக மாற்றப்பட்டு, சாகக் கிடந்தது.



சாகக் கிடந்த அந்தக் கூட்டுறவுத் துறை என்னும் பாவக் குழந்தை புரட்சித் தலைவர் அவர்களின் புனிதக் கரம்பட்டு, புத்துயிர் பெற்று, புதுப் பொலிவுடன் பொது மக்களுக்கு, தொடர்ந்து தன் பணியைச் செய்து அர்ப்பணித்துக்கொள்ள தொடங்கியிருக்கிறது என்று இந்த நேரத்தில தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏன் தேர்தலை நடத்தவில்லை, உங்களுக்குப் பயமா? உங்கள் கட்சிக்காரர்கள் வெற்றி பெற மாட் டார்கள் என்ற அச்சமா என்றெல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே இல்லை என்றாலும் நான் அவர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய வங்கிகளை பிடிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக உங்களுடைய ஆட்சியிலே நீங்கள் எப்படியெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்திக் கொண்டீர்கள் என்பதை நான் இங்கே உங்களுக்கு நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரே நாளில் சிறு விவ சாயிகள் நீர்ப்பாசனத் திட்டம் என்ற திட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திற்குப் ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தை ஏற்படுத்தி, அதன் தலைவர்கள் ஓட்டு அளிக்கிற உரிமையைப் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்தி மத்திய வங்கிகளை, மாநில வங்கிகளை தனித்தனியாக பிரிப்பதற்காக நீங்கள் முயற்சிகள் எடுக்கவில்லையா? அப்படியெல்லாம் ஆரம்பித்த, ஆரம்பிக்கப்பட்ட அந்தச்சிறு விவசாயிகள் நீர்ப்பாசனதிட்டங்கள் வெற்றி பெற்றதா? அந்தச்சிறு விவசாயிகள் பயன் பெற்றார்களா? அதனால் என்ன நிலைமை அல்லது முன்னேற்றம் ஏற்பட்டது என்று பார்க்கிறபோது, பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு, மிட்டா மிராசு தாரர்களும், பெரிய விவசாயிகளான பண்ணை சொந்தக்காரர் களுமே கடன் பெற்று பயன் அடைந்தார்களே தவிர, எந்த சிறு விவசாயிகளுக்கென்று சொல்லப்பட்டு, திட்டம் கொண்டு வரப் பட்டதோ, அந்தச்சிறு விவசாயிகளுக்குச்கொஞ்சம் கூட பயன்பட வில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களும் வசூல் செய்யப்பட வில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் காலத்தில் நிலவள வங்கிகளிடம் கடன்கள் பெறவேண்டும் என்றால் ஏழை விவசாயிகள் முதலில் அந்த ஊரிலுள்ள கட்சிக்காரர்களைப் பார்க்கவேண்டும், அதற்குப் பிறகு தலைவரைப் பார்க்கவேண்டும், அதற்குப் பின்னால் அங்கிருக்கிற அதிகாரிகளைப் பார்க்கவேண்டும். இப்படி பல பேர்களைப் பார்த்து அவர்கள் கடன் வாங்குவதற்குள் கடன் வாங்குகிற அந்த எண்ணமே அவர்களிடத்திலிருந்து போய் விடும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் யாரையும் போய் பார்க்க வேண்டியதில்லை. நேரடியாகச் சென்று தகுதி இருந்தால் அவர்கள் கடனைப் பெறலாம் என்ற ஒரு முறை இந்த ஆட்சியில் தான் நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக பாரபட்சமற்ற ஆட்சி புரட்சித் தலைவர் ஆட்சி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தவணை தவறிய கடன்கள் இருந்ததன் காரணமாக மாநிலத்தில் உள்ள எல்லா வங்கிகளும் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்து, 16 வங்கிகள் மட்டும் குறைந்த அளவு கடன் வழங்கும் தகுதி பெற்றிருந்து, 165 வங்கிகளில் மீதி கடன் வழங்கும் தகுதி இழந்துவிட்டன. அரசு பங்கு மூலதனமாக 27·26 இலட்சம் ரூபாய் வழங்கியதால் 16 வங்கிகள் குறைந்த அளவு கடன் வழங்க தகுதி பெற்றன. ஒன்பது வங்கிகள் அதிக அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற்றன.

நிலவள வங்கிகள் மூலம் இந்த அரசு புதிய சில கடன்களை வழங்கும் திட்டத்தை கொண்டுவந்திருப்பதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். கறவை மாடுகள் வாங்க, வண்டி மாடுகள் வாங்க, ஆடுகள் வளர்க்க, கோழிகள் வளர்க்க என்று பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது இந்த அரசு. அதில் ஒரு சிறிய மாற்றத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இரண்டு மூன்று பேர்கள் நபர் ஜாமீன் வாங்கிக் கொண்டு கடன் வழங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் கடன்கள் வழங்கும்போது குறைந்த ஆண்டுகள் கடனுக்குக்கூட, மூன்றாண்டுக் கடன்களுக்குக்கூட சொத்துக்களை அடமானம் வைத்து வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் கூட்டுறவு இயக்க வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொய்த்துப் போன கிணறுகளுக்கு மானியம் வழங்குகிற திட்டம் இருக்கிறது. நம் அரசு கோடி கோடியாக ரூபாய் அதற்காக ஒதுக்கி வருகிறது. அப்படியிருந்தும் பொய்த்துப் போன கிணறுகளுக்குத்திட்டப்படியானமானியங்கள் வழங்கப்படுவதில்லையென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கிருந்து அரசாங்கத்தின் சார்பாக பொறியாளர் சென்று, மாநில நிலவள வங்கி பொறியாளர் சென்று, நிலத்தடி நிபுணர் சென்று பார்த்து ஒரு குறிப்பு தயார் செய்து இது பொய்த்துப் போன கிணறுகள்தான், அதற்காக கொடுக்கப்பட்ட கடனை வஜா செய்துவிடலாம், அதற்கான மானியத்தை வழங்கலாம் என்று பரிந்துரை செய்த பிறகும் மாநில வங்கியிலுள்ள ஒரு கணக்காயர் அந்த பைலை திருப்பியனுப்பி அந்தத் தொகையைப் பெறமுடியாமல் செய்துகொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக அரசு கோடி கோடியாக நிதி ஒதுக்கியிருந்தும் பொய்த்துப் போன கிணறுகளுக்கு மானியம் வழங்குகிற திட்டம் மாநில வங்கியால் முடக்கிவைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.**— மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு அரிய



கருத்துக்களைக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர், இந்திரா காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த அன்புச் சகோதரர் திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் நன்னிலையில் இல்லை என்ற பொருள்படும்படிப் பேசினார்கள். இன்னும் பல முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1977-ம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய, சங்கங்களுடைய அமைப்புகளுடைய நடைமுறை எவ்வாறு இருந்தது, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

நகர வங்கிகள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய வங்கிக் கிளைகள், கிராம கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் விவசாயத் தொடர்பில்லாத கடன்கள், ஆனால் விவசாயி களுக்கு வேண்டிய உப தொழில்கள் போன்றவற்றிற்குத் தேவையான கடன்கள், விவசாயிகளுக்கு அந்த நகைக் கடன்களை அதிகமாகத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் வற்புறுத்தினார்கள்.

அத்தகைய கடன்கள் எல்லாம் இந்த ஆட்சி பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால், 1977-க்கு முன்னால், 150 கோடி அளவிலே இருந்த அந்தக் கடன், கடந்த 3 ஆண்டு காலத்தில் கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல், விவசாய உப தொழில்களிலே ஈடுபடுகின்றபோது, அவர்களுக்கு வருவாய் அதிகம் வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட வேண்டும், அதற்குக் கூட்டுறவு இயக்கம் உதவியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே 1977-க்கு முன்னால் 150 கோடியாக வழங்கப்பட்ட அந்தத் தொகை தற்போது 1980—81-லே 280 கோடியாக கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்காக வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, நுகர்பொருள் விநியோகத்தை எடுத்துக் கொண்டால், ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால் 160 கோடியாக இருந்த அந்த இயக்கம் தற்போது 1980—81-ல் 190 கோடி அளவிற்கு, மக்களுக்கு மலிவு விலையில் பொது விநியோக முறையை மேற்கொண்டு, பலபொருள்கள் கிட்டக்கூடிய அளவிற்கு மேம்பாட்டு வசதிகளை மேற்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மார்கெட்டிங் பெடரேஷன் என்று ஒன்று உண்டு. அந்த மார்கெட்டிங் பெடரேஷன் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை தன்னகத்தே கொண்டு, விவசாயப் பொருள்களை எல்லாம், வியாபாரிகள், இடைத் தரகர்கள் இல்லாமல் நேரடியாகக் கொள்முதல் செய்து விவசாயிகளை இடைத்தரகர்கள் சுரண்டலிலே இருந்து விடுதலை தந்து, மாபெரும் பணியைச் செய்து வருகிறது. இந்த ஆட்சி

பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால், 35 கோடி ரூபாய் அளவிற்கு செயல்பட்ட அந்த உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஒருங்கிணைப்பு அமைப்பும் 1980–81-லே மட்டும் 81 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் நலன் கருதி பல்வேறு விதமான பொருட்களைக் கொள்முதல் செய்து, இடைத்தரகர்கள் கரண்டலிலே இருந்து விவசாயிகளைக் காத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, டெபாசிட்டை எடுத்துக்கொண்டால்கூட, இந்த ஆட்சிப் பொறுப்பிலே வருவதற்கு முன்னால் 264 கோடியாக இருந்த டெபாசிட், தமிழகத்தின் கூட்டுறவுச் சங்க அமைப்புகளில் எல்லாம் தற்போது 1980—81-ல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்குப் பிறகு 542 கோடி ரூபாய் அளவிற்கு இந்தக் கூட்டுறவு அமைப்பு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மக்கள் நலம் கருதி, பாடுபட்டு வருகிறது என்று நம்பியிருக்கின்ற காரணத்தினால், இன்று 542 கோடி ரூபாய் அளவிற்கு டிபாசிட் அதிகமாகி இருக்கிறது. ஆனால், விவசாயக் கடனைப் பொறுத்த மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் சுட்டிக்காட்டியதைப் போல், முன்பெல்லாம் 100 கோடி, 130 கோடி விவசாயக் கடன் வழங்கப்பட்டது. இன்றைக்கு அது 31 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குத் தானே கடன் தருகிறீர்கள் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அல்ல என்பதைத் தெளிவாக அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு, விவசாயிகளுக்காக, பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு, பல ஆக்கபூர்வமான திட்டங்களை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறது. விவசாயிகள், தாங்கள் வாங்கிய கடனைக் கொடுக்கக் கூடாது என்று திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தும் அரசியல் வாதிகளின் தூண்டுதலின் காரணமாக, தமிழகம் தழுவிய அளவிலே சில நிகழ்ச்சிகள் நடந்த காரணத்தினால், வாங்கிய கடனைத் திருப்பித் தராததினால், மத்திய அரசைச் சார்ந்த ரிசர்வ் வங்கி சில விதிகளை இடுகிறது. மைய அரசு மூலமாக இயங்கிவரும் ரிசர்வ் வங்கி, ஏ. ஆர். டி. சி. திட்டத்தின்கீழ் தருகின்ற கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் திருப்பிக் கட்டி விட வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும், மைய அரசு, உலக வங்கியிடமிருந்து வாங்கிய பணத்தை, ஏ. ஆர். டி. சி. திட்டத்தின் கீழ் ரிசர்வ் வங்கியின் விதிகளுக்கு உட்பட்டு தருகின்ற காரணத்தினால், தமிழக அரசு தபால் ஆபீஸ் போல இயங்கி வருகிறது. விவசாயிகள் வாங்கிய கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தந்து, அந்தப் பணத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி ரிசர்வ் வங்கிக்குத் தரவேண்டிய பொறுப்பில் மாநில அரசு இருக்கிறது. ஆனால், ரிசர்வ் வங்கியினுடைய விதிகள் கடுமையாக இருக்கின்ற அதே நேரத்தில், வசதி படைத்த விவசாயிகள், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் பற்றி நான் சொல்லவில்லை; பணம் படைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் ஆலை அதிபர்களாக இருக்கிறார்கள்.



**திரு. செ. சிவசாமி:** தலைவர் அவர்களே, இவ்வளவு கடுமையான சட்டங்கள் இருக்கக்கூடிய நிலைமையிலே இந்த அரசு இரண்டாம் தடவை பொறுப்பேற்பதற்கு முன்னால் தஞ்சையிலே, மதுரையிலே கலெக்டர்கள் மாநாட்டைக் கூட்டி வசூல் செய்யாதீர்கள் என்று நான் உத்திரவிடுகிறேன் என்று ஒரு மத்திய அரசு மந்திரியாக இருக்கிறவர் சொன்னது வாஸ்தவமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு புறம், மாநில அரசுகள் விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்யக் கூடாது: உடனடியாக வசூல் செய்ய வேண்டும்; இதற்கு எங்களது ஆதரவு இல்லை என்று அதிகார பூர்வமாக எங்களுக்குத் தெரிவிக்கிறபோது, தமிழகத்திலே இருக்கிற, மத்திய அரசில் இருக்கிற ஆட்சி இயக்கத்தை சேர்ந்தவர்கள், அரசியல் ஆதாயத்திற்காக அனைத்துக் கடனையும் ரத்து செய்கிறோம் என்றுகூடச் சொல்லலாம். சொல்லுகிறார்கள். அதற்கு அவையில் பதில் சொல்ல முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். மத்திய அரசு இப்படி விதிமுறைகள் இடுகிறது. ஆனால் பெரும் விவசாயிகள் சில காழ்ப்புணர்ச்சிமிக்க அரசியல் வாதிகளுடைய துணை கொண்டு அவர்கள் கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய நிலை இருந்தபோதிலும், சினிமா தியேட்டர் சொந்தக்காரராக இந்த விவசாயிகள் இருக்கிறார்கள்; கார் வைத்திருக்கிற விவசாயிகளாக இருக்கிறார்கள்; விவசாயத்தை விட உப தொழிலில் அதிக வருமானம் பெறுகிற விவசாயிகள் இருக்கிறார்கள். குறைந்த வட்டிக்குக் கூட்டுறவுத் துறையிலே பணம் கிடைக்கிறதே என்பதற்காக அந்தக் கடனைக் குறைந்த வட்டிக்கு வாங்கி பிற தொழில்களில் மூலதனம் செய்து, தங்களுடைய சொந்தப் பணத்தை அதிக வட்டிக்கு சிறு விவசாயிகளுக்குத் தந்து, ஏழை விவசாயிகளை சுரண்டுகிற பெரும் விவசாயிகள் எல்லாம் சில அரசியல்வாதிகள் ஆதரவை பெற்றுக் கொண்டு, வழிவகை இருந்தும்கூட, திருப்பிச் செலுத்தாத நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் எத்தனையோ மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் அந்தகடன் விவசாயிகளுக்கு, நன்மை பயக்கக்கூடிய சில திட்டங்களாக இருந்தாலும் கூட, மத்திய அரசு இவைகளில் கடுமையாக இருக்கிற காரணத்தால் தான் இந்தக் குறுகிய காலக் கடன் போன்றவைகள் எல்லாம், மாண்புமிகு சித்தன் அவர்கள் கூறியதைப் போல அதிகமாக நாம் கொடுக்க முடியவில்லை. இதற்கு மாநில அரசு பொறுப்பல்ல. மத்திய அரசு இடுகிற விதிமுறைகள் பணக்கார விவசாயிகள் அரசியல் காழ்ப்புணர்ச்சி உடைய சில சக்திகளோடு சேர்ந்து தொடர்பு கொண்டு, தகுதி இருந்தும், பலம் இருந்தும், வசதி இருந்தும் வாங்கிய கடனைக் கொடுக்காத நிலையால் இன்று பல

[திரு. சி. பொன்னையன்] [1981 மே 4

வித தொல்லைகள் ஏழை விவசாயிகளுக்கு கூட ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சித்தன் அவர்கள் கூறியபோது புள்ளி விவரங்களைச் சொல்லி நுகர்பொருள் விநியோகத்தில் போதிய முன்னேற்றம் இல்லை என்று சொன்னார்கள். அது ஒரு தவறான கணிப்பு என்பதற்கு ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களைச் சார்ந்த இயக்கமான காங்கிரஸ் இயக்கம்தான் மத்திய அரசை ஆள்கிறது. மத்திய அரசிலிருந்து 1980–81 Government of India, Ministry of Civil Supplies, New Delhi என்ற இந்த புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய இந்த புத்தகத்திலே 59ஆம் பக்கத்திலே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். பாரதத்திலே அனைத்து மாநிலங்களிலும், தற்போது அண்மையில் ஒரு ஆய்வினை நடாத்தி நுகர்பொருள் விநியோகத்தைப் பொறுத்தவரை எந்தமாநிலம் முன்னணியில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் குறைந்த அளவே விநியோகத்தில் ஈடுபட்டு மலிவு விலையிலே ஏழைகளுக்கு எல்லாம் அத்தியாவசியப் பொருள்கள் கிட்ட வேண்டுமென்று புரட்சித் தலைவர் எண்ணிய காரணத்தாலும், அந்தப் பணியிலே நாங்கள் பல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைபடுத்தியதன் காரணமாக தற்போது 106·40 கோடி ரூபாய் அளவிற்குத் தமிழகம் அதிகப்படியான அளவிற்கு நுகர்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு மக்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்பதைக் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தமிழகத்திற்கு அடுத்த நிலையில் மராட்டிய மாநிலம் 77 கோடி ரூபாய் தான். பாரதத்திலே இருக்கிற பல மாநிலங்களிலே சராசரி 27 கோடி ரூபாய்; ஒரிசாவில் 7.71 கோடி ரூபாய்; பஞ்சாப் மாநிலத்தில் 3 கோடி ரூபாய்; என்றுதான் நிலை இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆள்கிற பல மாநிலங்களில்கூட தற்போது கர்நாடகத்தில் 12 கோடி ரூபாய்; குஜராத் மாநிலத்தில் 14 கோடி ரூபாய் மட்டுமே என்ற நிலை இருக்கிறது. இந்த மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களைத் தருவதற்கு பணியில் அந்த மாநிலங்களில் பின்தங்கி இருக்கிறது என்பதையும், தமிழகம்தான் 106 கோடி ரூபாய் என்ற இலக்கை எட்டிப் பிடித்து பாரதத்திலேயே முன்னணியில் தற்போது இருக்கிறது என்பதையும் இது 1977ஆம் ஆண்டிற்கு முன்னால் இருந்த நிலைக்குப் பல மடங்கு முன்னேற்றமான நிலை என்பதையும் இதிலிருந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு

[பிற்பகல் 1-10]

நட்டம் ஏற்படுகிறது. உற்பத்திச் செலவுக்கு ஏற்ற ஊதியம் இல்லை என்ற நிலையைச் சொல்கிறார்கள். அதை இந்த அரசு மறுக்கவில்லை. ஆனால் எல்லாப் பொருள்களிலேயும் விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டுவிடுவது இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகள், குறிப்பாக, கன்வென்ஷனல்



1981 மே 4] [திரு. சி. பொன்னையன்]

கிராப்ஸ் என்ற முறையிலே காலங்காலமாக பயிரிடுகிற பயிர்களையேதான் இட்டு வருகிற காரணத்தாலேயும் அவர்கள் விஞ்ஞான ரீதியிலே புதிய விவசாய முறைகளை மேற்கொள்வதிலே தயக்கம் காட்டுகிற காரணத்தினாலேயும் "சென்ட்ரல் புட் ரிசர்ச் டெக்னலாஜிக்கல் இன்ஸ்டிட்யூட்" என்று சொல்லப்படுகிற பல விவசாயக் கழகங்கள் எல்லாம் கண்டு பிடித்திருக்கின்ற அதிக விளைச்சல் குறைந்த முதலீட்டில் தருகின்ற பயிர்களையும் போட அவர்கள் முன்வராத காரணத்தினாலே கூட அதிக வருவாய் தரக்கூடிய பயிர் இடாததால் அவர்களுடைய வருவாய் அதிகமாகாத நிலைகூட இருக்கிறது. இதையெல்லாம் மாற்றுவதற்கு நடப்பு ஆண்டிலே நாங்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த விவசாயிகளுக்குக் கடன் தர வேண்டுமென்றால் குறிப்பாக சிறு விவசாயிகளுக்குக் கடன் தர வேண்டுமென்றால், பெரு விவசாயிகள், வசதி படைத்த விவசாயிகள் அதிகப்படியான கூட்டுறவுக் கடனை வாங்கியிருக்கிற காரணத்தினால் எண்ணிக்கையில் அதிகமான சிறு விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கிய கடன் குறைவாக இருந்த போதிலும், நாங்கள் இது போன்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். மைய அரசு கூட விவசாயிகளுடைய உற்பத்திச் செலவுக்கு ஏற்ற ஊதியம் இல்லையென மாநில அரசைப் பார்த்து விவசாய சங்கங்கள் கூறுவது உண்மையிலேயே சரியான அணுகுமுறையல்ல. விவசாய விளை பொருட்களைப் பொறுத்த வரைக்கும் மாநிலம் விட்டு மாநிலம் செல்லக்கூடிய பொருட்கள் இருக்கின்ற காரணத்தினால் பாரதத்தில் ஒரு ஒட்டுமொத்தமான ஒருங்கிணைந்த நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். எகிப்து நாட்டிலே விவசாய விளை பொருட்கள் உற்பத்தியைப் பொறுத்த வரையில் மானிடரிங் பண்ணக்கூடிய ஒரு மைய அமைப்பு இருக்கிறது. இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் நல்ல விளைச்சலாக இருக்கிறது என்று தெரிந்து சற்று வருமானம் கிடைத்துவிடுமானால்—விவசாயிகள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்ற காரணத்தினால்—ஒரு பக்கத்து தோட்டத்து விவசாயி கரும்பைப் பயிரிட்டு அதிக லாபத்தைப் பெற்றுவிட்டான் என்ற காரணத்திற்காக எல்லா விவசாயிகளும் கரும்பை பயிரிடுவார்கள். அளவு கடந்த கரும்பு பயிரிடப்படுகிறபோது அடுத்த ஆண்டு உற்பத்தி செலவுக்கு ஏற்ற ஊதியம் கூட கிட்டாமல் போய்விடுகிறது. காரணம் மத்திய அரசின் அளவிலே இருந்துகூட மானிடரிங் செல் இல்லை. மாநில அரசு ஒரு செல் போட முடியுமா என்றால் முடியாது. தமிழகத்து விவசாயிகளை, நீங்கள் இத்தனை ஏக்கர் கரும்பு பயிர் செய்யலாம், சர்க்கரை அடுத்த ஆண்டு உள்நாட்டுக்குத் தேவை இவ்வளவு, இவ்வளவு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் என மைய அரசு முடிவு செய்திருக்கிறது. ஆகவே இவ்வளவு மட்டுமே உற்பத்தி செய்யுங்கள், அப்போதுதான் விவசாயிகளுக்கு லாபம் கிட்டும் என விவசாயிகளுக்கு மாநில அரசு மானிடரிங் செல் உத்திரவிடுமானால் வெற்றி பெற முடியாததற்குக் காரணம்

மற்ற மாநிலங்களில் கரும்பை உற்பத்தி செய்கிறவர்கள்
அதிகப்படி கரும்பை உற்பத்தி செய்யலாம், குறைந்த அளவு
உற்பத்தி செய்யலாம். Sugar Policy being an All-India Policy.
மைய அரசு இதுபோன்று—நான் சுகருக்கு மட்டும் சொல்ல
வில்லை—மானிடர் செல் போட்டு விவசாயிகளுக்கு விளை
பொருட்கள் இந்த ஆண்டு இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும்
என்று வரையறை செய்வோமானால்—எகிப்து நாட்டிலே அது
நடைமுறையிலே வெற்றிகரமாக இன்றையதினம் இருக்கிறது,
விவசாயிகளுக்கு அளவுக்கு மேலான உற்பத்தியான காரணத்தி
னால் விலைச் சரிவு ஏற்பட்டு நட்டம் ஏற்படுத்துகிற நிலைமை
இல்லாமல் இருக்கிறது—அதை நடைமுறைப்படுத்த மாண்புமிகு
உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ்
கட்சி ஆளுகின்ற மைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்,
நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப்
பிறகு விவசாயிகளுக்குச் சொன்ன வாக்குறுதியைச் செய்யவில்லை
என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
கூட மாண்புமிகு சித்தன் அவர்கள் இருக்கிறபோதே எடுத்துச்
சொன்னார்கள். வாக்குறுதியைச் சொன்னோம். தேர்தல்
வாக்குறுதியாகக் கூடச் சொன்னோம். ஆனால் ஆட்சிக்கு
வந்தவுடன் வந்த அடுத்த மாதம் அல்லது 6 மாத காலத்திற்
குள்ளே அனைத்துச் சலுகைகளையும் அளிப்போம் என்று
சொல்லவில்லை. மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். குறிப்
பிட்ட காலத்திற்கு இந்த ஆட்சி பொறுப்பிலே இருந்து மக்
களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று செய்திருக்கிறார்
கள். அந்த அடிப்படையிலே படிப்படியாக வருவாய்க்கு உட்
பட்டு கொடுத்த வாக்குறுதிகளை ஏழை எளிய விவசாயிகளுக்
காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக, சிறு விவசாயிகளுக்காக
செய்ய வேண்டுமென்று இந்த அரசு கொள்கையில் தெளிவோடு
இருக்கிறது. நடைமுறைப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்
னால் எத்தனையோ ஆட்சிகள் தமிழகத்தை ஆண்டன. எந்த
ஆட்சிக் காலத்திலேயும் செய்யாத ஒரு சலுகையை இந்திய
வரலாற்றிலேயே எந்த மாநிலமும் செய்யாத ஒரு சலுகையை
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சி
தான் செய்திருக்கிறது. கிராம பொருளாதாரத்தின் முன்
னேற்றத்திற்காகவும் விவசாயப் பெருங்குடி மக்களின் துயர்
துடைப்பதற்காகவும் பலவித சலுகைகளைச் செய்திருக்கிறது.
உதாரணமாக 1979ஆம் ஆண்டு சிறு விவசாயிகள் வட்டி, அபராத
வட்டியை தள்ளுபடி செய்யும் முகந்தான் 5 கோடி ரூபாயை
தள்ளுபடி செய்தது.

அதையொட்டி, அதே ஆண்டு 50 கோடி ரூபாய் விவசாயி
களினுடைய—சிறு விவசாயிகளினுடைய நிலுவைக் கடன்களை
ரத்து செய்து, 50 கோடி ரூபாய் சலுகையைத் தந்தது.



அதையடுத்து, கடனை நாணயத்தோடு குறிப்பிட்ட காலத்தில்
திருப்பிக் கட்டிவிடுகின்ற விவசாயிகள்—அவர்களுக்கு வருமானம்
இல்லாமலும் இருக்கலாம் ; கஷ்ட நிலையிலேயும் இருக்கலாம்;
''கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கைவேந்தன்''
என்ற பண்போடு வாழ்கின்ற பலர் கடன் வாங்கியேனும்
கடனைக் கட்டிவிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால்
கடனைத் திருப்பிக் காலத்தே கட்டாமல் போராட்டங்களிலே
யெல்லாம் ஈடுபட்டு, அவர்களை, இவர்களையெல்லாம் பிடித்து,
ஆட்சியை அச்சுறுத்திப் பல நிலைகளில் இருக்கின்ற பல
விவசாயிகள் இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளின் பிரச்னையை
அறிந்து விவசாயிகளின் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்கின்ற
நேரம் ; உண்மையிலேயே நேர்மையாகக் கஷ்டத்தில்
இருந்தபோதிலும் கட்டிய நாணயமான விவசாயிகள் இருக்கிறார்
களே அவர்களுக்கும் அந்தப் பணச் சலுகை கிட்ட வேண்டுமென்ப
தற்காகத்தான் மாண்புமிகு முதல்வரவர்கள் 23 கோடி ரூபாய்
சலுகையை, நாணயத்தோடு காலத்தே கட்டியவர்களுக்குக்கூட,
காலம் தவறிக் கூட கட்டியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகை
செல்ல வேண்டுமென்று உத்தரவையிட்டு 23 கோடி ரூபாய்
சலுகையை அளித்தார்கள்.

அண்மையிலே கூட முதல்வரவர்கள் அறிவித்திருக்கின்ற,
இந்த நிதி நிலை அறிக்கையிலே அறிவித்திருக்கின்ற சலுகை
30—6—1981ஆம் தேதிக்குள் சிறு விவசாயிகள் அவர்கள் வாங்கிய
கடனைக் கட்டி விடுவார்களேயானால் அபராத வட்டி
மற்றும் சாதாரண வட்டியைக் கூட ரத்து செய்வதாகவும், சிறு
விவசாயி அல்லாத ஒருவர் அசலும் வட்டியையும் கட்டுவாரானால்
அபராத வட்டியை ரத்து செய்வதாகவும், இதன் மூலமாக
40 கோடி ரூபாய் தள்ளுபடி சலுகையை அரசு அறிவித்திருக்
கிறது. ஒட்டுமொத்தமாக இதன் மூலமாக 1977-இல் புரட்சித்
தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 118 கோடி ரூபாய்
விவசாயிகளுக்கு இத்தகைய சலுகைகளை அளித்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ரிசர்வ் வங்கி இடுகின்ற விதிகளின்
காரணமாய் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்டாமல்
இருக்கின்றபொழுது கடனை நல்ல முறையிலே திருப்பித் தந்த
விவசாயிகளுக்குக் கூட அடுத்த பயிருக்குக் கடன் தர முடியாத ஒரு
நிலை ஏற்பட்டது. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்ப
தற்காக ரிசர்வ் வங்கி இட்டிருந்த உத்தரவான 40 சத வீதம்
விழுக்காடு என்பதனை ரிசர்வ் வங்கியோடு பேசி 20 சத
வீதம் விழுக்காடு என்று மாற்றிய காரணத்தால்தான் பல மைய
வங்கிகள், விவசாயிகளுக்கு மீண்டும் கடனைத் தரக்கூடிய தகுதி
யினை இந்த ஆட்சியிலே பெற்றன.

அதுமட்டுமல்லாமல், மைய வங்கிகளுக்கு 42 கோடி ரூபாய்
கடனும், அதைப் போலவே நிலவள வங்கிகளுக்கு 33.50 கோடி
ரூபாய் கடனும் ஒட்டுமொத்தமாக ஒரு 75½ கோடி ரூபாய்

கடன் வழிவகைக் கடன்களாக விவசாயிகள் அடுத்த பயிர் செய்ய கடன் வாங்க வேண்டுமே, வாங்கிய கடனைக் கட்டாத நிலையிலே கடன் இல்லை என்று சொல்லிவிட்டால் விவசாயத்தில் அவர்கள் ஈடுபட முடியாமல் போய்விடுமே, சிறுவிவசாயிகள் பணக்கார, கடன் தருகின்ற மார்வாடிகளைப் போலச் செயல் படுகின்ற மணிலெண்டர்களிடம் சென்றுவிடக் கூடாதே என்பதற் காக இந்த வழிவகைக் கடனை 75½ கோடி ரூபாயை முதன் முறை யாகத் தந்தது கூட மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசு தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ரிசர்வ் வங்கியினுடைய உத்திரவுப்படி விவசாயிகளுக்குப் பல சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று கொள்கையை உடைய இந்த அரசு 55 கோடி ரூபாய்க்குக் கியாரண்டி கூடத் தந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக இந்த அடிப்படையில் கிட்டத்தட்ட 193½ கோடி ரூபாயை 1977-லிருந்து 1981 வரை இந்திய வரலாற்றிலேயே இல்லாத சலுகையை, தமிழகத்தை இதுகாறும் ஆண்ட எந்த இயக்கங்களும் கிராமப் புற விவசாய முன்னேற்றத்தைக் கருதிச் செய்யாத சலுகைகளை, கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தின் மீது அக்கறையோடு செயல்படுகின்ற புரட்சித் தலைவர்களின் ஆட்சியில்தான் இந்த அளவிற்கு, 193½ கோடி ரூபாய்க் கடன் சலுகைகள் விவசாயி களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதுகூட ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறோம். சிறு விவசாயிகள் காலத்தே கடனைத் திருப்பிச் செலுத்துவார்களே யானால் அவர்களுக்கு 2 சதவீதம் வட்டிச் சலுகை—அவர்களுக்கு வட்டியிலே தள்ளுபடி செய்யப்படும் என்று கூட சொல்லப்பட்டிருக்கிறது.

விவசாயக் கடனை வசூல் செய்ய வேண்டாமென்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் கூடத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மாநில அரசுகள் கூட்டுறவு இயக்கத்தை—விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வதைப் பாதிக்கும் என்ற காரணத்தால் தள்ளுபடி செய்வதே கூடாது என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கியும் இதே நிலையை மேற் கொண்டிருக்கிறது. ஏ. ஆர். டி. சி. (Agricultural Refinance Development Corporation) என்று சொல்லப்படுகின்ற வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் கூடப் பெரிய அச்சுறுத்தலைச் சொல்லியிருக்கிறது. காரணம், உலக வங்கியிடமிருந்து கடனை வாங்கி விவசாயிகளுக்குத் தருகிறார்கள். கடனாகத் தரப்படுகின்ற அந்தப் பணம் குறிப்பிட்ட காலத்தே தரப்பட்டு விடப் பட வேண்டும்.



[பிற்பகல் 1-20]

ஆனால், குறிப்பிட்ட காலத்தே அந்தக் கடனை அவர் கள் திருப்பித் தராவிட்டால், வாங்கிய கடனாக இருக்கிற காரணத்தால், உலக வங்கியினுடைய கடனைத் திருப்பித் தராத காரணத்தால், தமிழகம் 'பிளாக் லிஸ்ட்' செய்யப்படும். மீண்டும் விவசாயக் கடனை ஏ. ஆர். டி. சி. மூலமாகப் பெறக் கூடிய தகுதியினை தமிழகம் இழந்துவிடும் என்ற ஒரு அச்சுறுத் தலைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

பெரும் விவசாயிகள், அதிகப்படியான, கோடிக்கணக்கான ரூபாய்களை வாங்கிக் கொண்டு கொடுக்க மாட்டோம், கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறபொழுது, அரசே ரூ. 193½ கோடிக்கு சலுகைகளை அளித்தபொழுது, ரூ. 55 கோடிக்கு ரிசர்வ் வங்கிக்கு காரண்டி தந்த பிறகு, வழிவகைக் கடன்களாக ரூ. 75½ கோடிக்குச் சலுகைகளைச் செய்த பிறகு, பாரதத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு செய்தபிறகு, மீண்டும் விவசாயிகள் இருக்கிற கடனைத் திருப்பிக் கட்டாத நிலையிருக்கும்போது, தமிழகம் அடுத்த கடனுக்கு 'பிளாக்லிஸ்ட்' செய்யப்படும் என்று ஏ.ஆர்.டி.சி. மூலமாக, அரசுக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. இந்த நிலை நீடிக்குமானால், ஒருவேளை, வாங்கிய கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வசூல் செய்து கொடுக்காது பிளாக் லிஸ்ட் ஆகுமானால், உலக வங்கி மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு கொடுக்கின்ற கடனைப் பெறுகின்ற தகுதிக்கு கூட தமிழ் நாட்டுக்கு ஒரு கரும்புள்ளி விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, உலக வங்கி உதவிகள் மூலமாக நடைமுறைப்படுத்த இருக்கிற பல மேம்பாட்டுத் திட்டங்கள் சிக்கலில் சென்று விடக்கூடிய சூழல் ஒரு அபாயச் சூழல் உருவாகி வருவதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போது பெரு விவசாயிகள் கடனைக் கட்டாதபொழுது, சில விவசாயிகள் சில கிராமங்களில் 51 சதவீதத்திலிருந்து 144 சதவீதம்வரை வட்டி கொடுத்து, அந்தப் பெரிய விவசாயிகளிடமே கடனை வாங்கி, அவர்கள் கடைசியில் உற்பத்தி செய்கின்ற விளை பொருள்களை அந்தப் பெரிய விவசாயிகளுக்கே விற்று, இறுதியிலே நிலத்தையே இழக்கக்கூடிய நிலை பல இடங்களிலே ஏற்பட்டிருக் கிறது. சிறு விவசாயிகளைக் கடனைக் கட்டாதே, கடனைக் கட்டாதே என்று தூண்டுகிற காரணத்தால் இந்த நிலை, ஏற் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் பேசுகின்றபொழுதுகூட அதைப்பற்றிச் சுட்டிக் காட்டினார்கள்.

அது மட்டுமல்லாமல், வாங்கியக் கடனைக் குறித்த காலத்தில் திருப்பிக் கட்டாத காரணத்தால், அவைகளுடைய பொருளாதார நிலையிலே ஒரு சரிவு ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மைய

வங்கிகளுடைய உதவி பெற்று நடைபெறுகிற கிட்டத்தட்ட
11,101 கிராம அங்காடிகள் போன்ற இன்றியமையாத பொருள்
களை விநியோகம் செய்கின்ற கடைகளில் மாண்புமிகு உறுப்பினர்
கள் சொன்னார்கள் பல பொருட்கள் அங்கெல்லாம் இல்லை
—இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்
கள். அவைகளுடைய வருவாய் நல்ல நிலையில் இருக்க வேண்டு
மானால், ஒட்டுமொத்தமாக, கூட்டுறவு வங்கிகள் பொருளாதார
ரீதியிலே நல்ல நிலையிலிருக்க வேண்டும். பணம் படைத்தவர்கள்
குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கிறதே என்ற ஒரே காரணத்
திற்காக, கடனையெல்லாம் வாங்கி, எப்படி, எப்படியோ அவர்
கள் சம்பாதித்துக் கொண்டு நுகர்வோருக்கும் இடைஞ்சல்களாக
இருக்கிறார்கள், சிறு விவசாயிகளும் பாதிப்புக்கு ஆளாகி
யிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், சுமார் 900 கிராம கூட்டுறவுச் சங்கங்
களிலுள்ள பணியாளர்களுக்குக் கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக
ஊதியம் கூடக் கொடுக்க முடியாத நிலை, பணக்கார விவசாயிகள்
வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத காரணத்தாலே
ஏற்பட்டிருக்கிறது.

தமிழகம், பாரதத்திலேயே ஒரு உன்னத நிலையில் இருந்த
காலம் உண்டு, இல்லையென்று சொல்லவில்லை. ஆனால்
தற்போது, பாரதத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு
ரூ. 444 கோடி நிலுவையாக விவசாயக் கடன் இருந்து வருகிறது.
அதிலே இந்த அரசு நடவடிக்கை எடுப்பது கூட 10 ஏக்கருக்கும்
கீழே நிலமுள்ள 5 ஏக்கருக்கும் கீழே நிலமுள்ள சிறு விவசாயிகள்
பெற்றிருக்கிற அந்த ரூ. 171 கோடி பற்றி நாங்கள் நடவடிக்கை
எடுக்கவில்லை. 10 ஏக்கருக்கும், 5 ஏக்கருக்கும் இடையே நிலம்
வைத்திருக்கிற நடுத்தர விவசாயிகள் பெற்றிருக்கிற ரூ. 160
கோடி கடன் மீது கூட நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.
ஆனால், வாழ்க்கையினுடைய உயர்மட்டத்திலேயிருக்கிற, மிட்டா
மிராசுதாரர்களாக இருக்கிற, வசதி படைத்தவர்களாக இருக்கிற
பெரும் விவசாயிகள்—மொத்தம் 10 ஏக்கருக்கு மேல் நிலம்
வைத்திருக்கிற விவசாயிகள் பெற்றிருக்கிற ரூ. 113 கோடி
கடனுக்கு அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அந்தப் பெரும்
விவசாயிகள் அந்த ரூ. 113 கோடி கடனைத் திருப்பித் தந்து
விடுவார்களானால், மைய அரசு, ஏ. ஆர். டி. சி., ரிசர்வ் வங்கி
போன்றவைகள் விதிக்கின்ற விதிமுறைகளுக்குட்பட்டு பிறகு
அனைத்து விவசாயிகளுக்கும் கடனைத் தரக்கூடிய பெறு பெயரிட்டு
கடனைத் தரக்கூடிய சுமூக நிலை ஏற்படும் என்ற காரணத்தால்
மைய அரசு இட்ட அந்த உத்தரவின் அடிப்படையில் இந்த
நடவடிக்கையை தமிழக அரசு தற்போது மேற்கொண்டிருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சித்தன், கருப்பையா
மற்றும் பாரமலை ஆகியோர் பேசுகின்றபோது, சிறு விவசாயி,
பெரு விவசாயி என்ற பிரிவினைப் பொருத்தவரையிலும்
தற்போது இருக்கும் (Mere acreage basis) கூடாது
என்று சொன்னார்கள். அதை கொள்கை அளவிலே அரசு ஒப்புக்
கொள்கிறது. அதிலே பிரச்சினைகள் கண்டிப்பாக இருக்கிறது
என்பதை உணர முடிகிறது. சில இடங்களில் நிலம் அதிக
விளைச்சலும், சில இடங்களில் நிலம் குறைந்த விளைச்சலும்
தண்ணீர் அளவைப் பொருத்து விளைச்சல் மாறுகிற காரணத்
தினாலே வெறும் ஏக்கரேஜ் பேசில் சிறு விவசாயி,
பெரு விவசாயி என்று நடைமுறை வைக்கப்பட்டிருப்பது
சரியான முறை அல்ல. இது பல ஆண்டுகளாக நடைமுறை
யிலே இருந்து வருகின்றது. அதை பொருக்குக் குழு கூட
ஆய்ந்து வருகிறது. நில வரியின் அடிப்படையில், நிலத்தின்
தரத்தின் அடிப்படையில் இதுபோன்ற சிறு விவசாயி, பெரு
விவசாயி என்ற முறையை மாற்றி அமைக்க அரசு கண்டிப்பாக
நடவடிக்கை மேற்கொள்ளும்.

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற
போது வசூலிலே கெடுபிடி நடக்கின்றது என்று சொன்னார்கள்
மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பேசுகிறபோது
அரூரிலே, தஞ்சையிலே வசூலிலே 10 ஏக்கருக்குக் கீழ் நிலம்
வைத்திருக்கின்ற விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவ
தாகச் சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்வேன், அரசு
தெளிவான உத்தரவை இட்டிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்
பட்ட விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது.
அதேநேரத்தில் 10 ஏக்கருக்கு கீழே நிலம் வைத்திருக்கிற நடுத்தர
விவசாயிகள் மீதும் 5 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்திருக்கின்ற
சிறு விவசாயிகள் மீதும் நடவடிக்கை எடுக்க கூடாது என்று தெளி
வான உத்தரவை அரசு இட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்
எங்கே எந்த அதிகாரி 10 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்திருப்
பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்
பதை சுட்டிக் காட்டுவார்களேயானால், கண்டிப்பாக அந்த
அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்ற
குறைகளைக் களைவதற்கு உதவிகரமாக இருக்கும். மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசுகின்றபோது, சித்தன் அவர்கள் பேசும்போது
தமிழகத்திலே கூட்டுறவுத்துறையிலே தேர்தலே இல்லாத நிலை
நீடிப்பதாக இருக்கிறது என்று சொன்னார்கள். 1961-ஆம்
ஆண்டு கூட்டுறவுச் சட்டம் பல குறைபாடுகளை உடைய சட்டம்
என்பதனை பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட
பொறுக்குக் குழுவே ஏற்றுக்கொண்டுள்ளது. குறைபாடுகள்
அந்தச் சட்டத்திலே இருக்கின்ற காரணத்தினால், சந்து பொந்து
கள் இருக்கின்ற காரணத்தினால்தான் மாண்புமிகு உறுப்பினர்
ஆண்டி தேவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல ஆட்டை
வாங்கி விட்டு, பின் அந்த ஆட்டை விற்றுவிட்டு, செத்துவிட்டது
என்று பொய்யான தகவலைத் தந்தால் கூட, இந்தக் கூட்டுறவுச்
சங்கத்திலே இருக்கிற தலைவர் மீதோ அல்லது மற்றவர்கள்

மீதோ நடவடிக்கை என்றால் அந்த ஆடுகளுக்குள்ள கிரயத்தை
வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அல்லது 65 என்குயரி போடு
வோமேயானால் அது பல காலம் நீட்டிப்பாகி, கடைசியில் அந்த
போர்டே கூட காலாவதி ஆகின்ற சூழ்நிலை, இப்படி பல
சூழ்நிலைகள் இருக்கின்றன. முறைகேடுகள் ஊழல்கள், இவற்
றைத் தடுக்க வேண்டுமானால் கூட்டுறவுத் துறையிலே கண்டிப்
பாக தற்போது இருக்கின்ற சட்டம் முழுமையாக மாற்றப்பட
வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் பல கடுமையான விதி
முறைகளோடு இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டு வருகின்றோம்.
புதிய சட்டத்திலே கூட்டுறவு இயக்கம் என்றால் மாண்புமிகு
பாரமலை, ரங்கசாமி, வீராசாமி ஆகியோர் பேசுகின்ற நேரத்தில்
சொன்னதைப்போல, ஆசியஜோதி பண்டித ஜவகர்லால் நேரு
அவர்கள் நலிந்த பிரிவினர்க்கு நன்மை கிட்டுவதற்காக, துவக்கப்
பட்ட இயக்கம் இந்த இயக்கம் என்பதனை எல்லாம் எடுத்துச்
சொன்னார்கள். ஆனால் உண்மையான நோக்கம், கூட்டுறவு
இயக்கத்திற்கு ஊக்கம் தரப்பட, ஆரம்பத்தில் அப்படி இருந்த
போதிலும் கூட, காலப்போக்கிலே ஆங்காங்கு கிராமங்களிலே
வசதி படைத்தவர்கள் கையில் கூட்டுறவு இயக்கம் சிக்கிவிட்டது.
நலிந்த பிரிவினர்க்கு நன்மை கிட்டாத சூழ்நிலை ஏற்பட்டு
விட்டது ஆதிக்க வாதிகளின் ஆட்சி அங்கே அதிகப்படியான
நிலையில் இருந்துவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிர்
பார்த்த அளவில் ஒரு சிறு அளவுக்கு கிட்டாத நிலை ஏற்பட்டது.
அரசியல் தலையீடுகளுக்கு, சட்டங்களிலே இருக்கின்ற சந்து
பொந்துகளுக்கு வழிவகை செய்து விட்டது. இவற்றை எல்லாம்
தடுப்பதற்காக அரசியல் தலையீடுகள் இல்லாமல், வசதி படைத்
தவர்களுடைய ஆதிக்கம் இல்லாமல் கூட்டுறவு இயக்கம் மக்களுக்
காக, மக்களால், மக்களுடைய இயக்கமாக இயங்க வேண்டும்
என்பதற்காகத்தான் புதிய சட்டத்தை தற்போது கொண்டுவர
இருக்கிறோம். அனைத்துக் கட்சிகளினுடைய உறுப்பினர்கள்
இருக்கிறார்கள். வரி வரியாக, கிளாஸ் வாரியாக பார்த்துக்
கொண்டு இருக்கிறோம். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்
கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், கம்
யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் அனைத்து கட்சிகளுடைய
உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அடுத்த வாரம் 18-ந் தேதி
முதல் பொறுக்குக் குழு மீண்டும் உட்கார்ந்து கிட்டத்தட்ட ஒரு
வாரத்திற்குள் இந்த முடிவுகளைச் செய்த பிறகு விரைவிலே புதிய
சட்டம் கொண்டு வந்து அந்தப் புதிய சட்டம் கொண்டு வந்த
6 மாத காலத்திலேயே தேர்தலைக் கொண்டு வருவதற்கு அரசு
நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்கள்
எல்லாம் அதிகாரிகள் கையிலே இருக்கின்றன, என்று சொன்னார்
கள். பத்திரிகையிலே கூட அப்படியே செய்திகள் வெளியிடு
கின்றார்கள். மிக வேதனையான நிலை அது. பாரதத்திலே
தமிழகத்திலே இத்தகைய நிலை இல்லை. வேறு சில மாநிலங்
களிலே வேண்டுமானால் அப்படிப்பட்ட நிலை இருக்கலாம்.
அப்படிப்பட்ட மாநிலங்கள் கூட இருக்கின்றன.



[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன்
அனுமதியுடன், பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறிப்பாக, 1976-க்கு
முன்னால், தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் எந்த நிலைமையில்
இருந்தன. பிறகு, அவற்றின் மீது எத்தகைய முறையில் நடவடிக்கை
எடுக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன்
அறிவார்கள். 1976ஆம் ஆண்டில் இன்றைக்குப் பிரதம
அமைச்சராக இருக்கிற திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதம
அமைச்சராக இருந்தபோது, இருந்த ஆளுநர் ஆட்சியில்தான்
தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டன. தனி
அதிகாரிகள் அதிலே நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இன்றைய
தினம் பிரதான எதிர் கட்சியாக இருக்கின்ற திராவிட
முன்னேற்றக் கழகத்தினர் பல கூட்டங்களில் பேசுகிறபோதும்,
பத்திரிகைகளில் எழுதுகிறபோதும், மற்றும் வேறு பல
கட்டங்களிலும் தமிழகத்தில் இருக்கும் அத்தனை கூட்டுறவுச்
சங்கங்களும் கலைக்கப்பட்டன என்று சொல்லிக்கொண்டு
வருகிறார்கள். இது தவறான தகவல். அதுவும் புரட்சித்
தலைவர் ஆட்சி வந்த பின்னர்தான் கலைக்கப்பட்டன என்று
ஒரு பிரமை ஏற்படுகிற முறையில் சொல்லிக்கொண்டு இருக்கி
றார்கள். இத்தகைய தவறான செய்தியை சில பத்திரிகைகளும்
பரப்பிக்கொண்டு இருக்கின்றன. தமிழகத்தில் ஒட்டு
மொத்தமாக இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்
கிட்டத்தட்ட 25,000 முதல் 30,000 கூட்டுறவுச் சங்கங்கள்.
அவைகளுக்கு அபெக்ஸ் பாடிகளாக இருக்கும் கூட்டுறவுச்
சங்கங்கள் 380. அந்த 'அபெக்ஸ் பாடிகளைத்தான்'
—அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களைத்தான் மாண்புமிகு
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதம அமைச்சராக
இருந்த நேரத்தில் கலைத்தார்கள். அப்படி கலைக்கப்பட்ட
தற்கான காரணங்களைச் சொல்லுகிறபோது, சொன்னார்கள்.
அந்த 'அபெக்ஸ் பாடியில்' எல்லாம் தி.மு.க. ஆட்சியில் நியமிக்
கப்பட்ட நிர்வாகிகள் இருக்கிறார்கள். அதிலே இருக்கும்
குறைகளைக் களைவதற்கும், கூட்டுறவுத் துறையின் பணம்
மக்கள் நன்மைக்குப் பயன்படவேண்டும் என்றும், வைப்புத்
தொகை போடப்படும் மக்களின் நலன் பேணப்பட வேண்டும்
என்கிற வகையிலும் இது செய்யப்படுகிறது என்று காரணத்
தைச் சொல்லி, அந்த 380 'அபெக்ஸ் பாடிகளை'க் கலைத்
தார்கள். அப்படி 380 'அபெக்ஸ் பாடிகளை' கூட்டுறவுச்
சங்கங்களைக் கலைத்துவிட்ட காரணத்தாலே, தமிழகத்திலே
இருக்கும் கூட்டுறவு அமைப்புகள் அனைத்திலுமே அதிகாரிகள்
இருக்கிறார்கள் என்கிற தவறான எண்ணம் போக்கப்பட
வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

கிட்டத்தட்ட 25,000 கூட்டுறவுச் சங்கங்கள்—1977-க்கு
முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது
இயங்கி வந்தவை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகளைக் கொண்டவை—1976-ல் கலைக்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகும் கூட இதுகாறும் கலைக்கப்படவில்லை. தி.மு.க. ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகக் குழுக்கள் உள்ள 25,000 கூட்டுறவுச் சங்கங்கள் இதுகாறும் கலைக்கப்படாதது மட்டுமல்ல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சி வந்த பிறகும், அவற்றிற்கு உயிர் நீட்டிப்புக் கொடுத்து—அவைகள் காலம் காலாவதியாகி விட்ட நிலையிலும்—முன்பு அமைக்கப்பட்ட அந்தத் தி.மு.க. நிர்வாகிகளைக் கொண்டே அந்த 25,000 சங்கங்களும் இன்னும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இருந்தும். சில பத்திரிகைகள் தவறான செய்திகளைப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பல அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்களும் இப்படிப் பேசுகிறார்கள். பாரதத்திலே பல மாநிலங்களிலே அடிமட்டத்திலே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆயிரக் கணக்கில் கலைக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் இருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் தி.மு. கழக ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கொண்டு 25,000 கூட்டுறவுச் சங்கங்கள்—தவறு செய்த காரணத்தால் ஆங்காங்கு சீரமைப்புச் செய்த சில போக—மீதியுள்ள அனைத்துச் சங்கங்களும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கூட்டுறவு அமைப்பிலே, ஜனநாயக முறையில்லை, அனைத்திலுமே அதிகாரிகள்தான் இருக்கின்றனர் என்ற தவறான எண்ணம் போக்கப்பட வேண்டும் என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த 25,000 கூட்டுறவுச் சங்கங்களிலும், கூட்டுறவுச் சட்டத்தின் 72-விதியின் பல ஆடிட் அன்ட் அட்மினிஸ்டிரேஷன் போதனைகளின் அடிப்படையில் ஊழல்கள், முறைகேடுகள், தவறுகள் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த 77 சங்கங்கள் மீது, புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 21 சங்கங்களில் தவறுகள் களையப்பட்டபிறகு, அதற்கான நடவடிக்கைகளில் உட்படுத்தப்பட்ட பிறகு, மீண்டும் தேர்தல் மூலம் அந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஆகவே, இந்த சங்கங்கள் தவிர மற்ற எல்லா சங்கங்களும்—கிட்டதட்ட 25,000 கூட்டுறவு சங்கங்கள் தி.மு.க. ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் பொறுப்பிலே ஜனநாயக முறையிலேதான் இயங்கி வருகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மற்றும் திரு. ஆண்டித்தேவர் பேசுகிறபோது ஆங்காங்கு பல கூட்டுறவு அமைப்புகளிலே பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. அதைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடுக்க வேண்டும் என்றுச் சுட்டிக்காட்டினார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு இந்த நடவடிக்கைகளில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்தால், கடந்த



ஓராண்டு காலத்தில் மட்டும் கூட்டுறவு சங்கங்களில் 70 அலுவலர்கள் கையாடல் மற்றும் ஊழல் போன்ற குற்றங்களுக்காக நிரந்தரமாக பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, 88 ஊழியர்களுக்கு ஓராண்டு காலத்தில் மற்ற தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் 160 ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்து, தற்காலிக வேலை நீக்கம் செய்து. மற்ற தவறுகளுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எங்கிருந்து குற்றச்சாட்டு வந்தாலும் உடனடியாக அரசு அக்கறையோடு செயல்படுகிறது என்பதை எடுத்துக்காட்டும் இந்த நேரத்தில் கூட்டுறவு அமைப்பின் மூலம் சாதாரண மக்களுக்கு எல்லாப் பொருட்களும் கிடைக்க வேண்டும் என்றும், முறைகேடு நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் கடந்த ஓராண்டு காலத்தில் 70 பேர்கள் கையாடல் குற்றங்களுக்காக வேலை நீக்கம் செய்யப்பட்டும் 160 பேர்கள் மீது மற்ற நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆண்டித் தேவர், திரு. கருப்பையா. திரு. சொரணம் போன்றவர்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில் பல கடைகளில் இன்னும் அதிகமாக பொருட்கள் கிடைக்க வேண்டும்; இன்னும் அதிக நேரம் அந்தக் கடைகள் பணியாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். 11,101 கிராமக் கூட்டுறவு அங்காடிகள் இன்று இயங்கி வருகின்றன. அவைகளின் சராசரி வருமானம் 2,000 ரூபாய் என்ற அளவிலே இருப்பதால் பல கடைகளில் ஊழியர்களுக்குகூட ஊதியம் தரமுடியாமல் இருக்கிறது.

அந்த அங்காடிகளில் இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பல பொருட்கள் அங்கு கிடைக்காததால் அந்த மக்கள் பட்டணத்திற்குச் செல்லக்கூடாது என்பதற்காக நுகர்பொருள் கூட்டுறவு மாநில இணையத்தின் மூலம் பல்வேறுபட்ட பொருட்களை கிராம அங்காடிகளுக்குத் தரவேண்டுமென்ற தீவிர திட்டத்தை நடப்பாண்டில் இருந்து நடைமுறைப்படுத்த இருக்கிறோம். அதற்கு ஏற்பாடு செய்யும் போது பர்ச்சேஸ் கமிட்டிமூலம் பொருட்கள் வாங்கப்படுவதால் சில இடங்களில் பொருட்களின் விலை மிக அதிகமாக இருக்கிறது. தவறுகூட நடந்துவிடுகிறது என்று திரு சொரணம் அவர்கள் சொன்னார்கள். அதைத் தவிர்க்க, உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்பொருட்களை மாநில விற்பனை இணையம் பெற்று, இடைத்தரகர்களிடமிருந்து பெறாமல். நேரடியாக அந்த கூட்டுறவு கிராம அங்காடிகளுக்குத்

தரும் திட்டத்தை நடப்பாண்டிலிருந்து தீவிரப்படுத்த இருக்கிறோம். இடைத்தரகர்கள் நீக்கப்படுகின்ற காரணத்தால் கண்டிப்பாக விலை குறைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு அங்காடிகள் அதிக நேரம் பணியாற்ற வேண்டு மென்பதற்காக ஒரு திட்டத்தைக் கூட அரசு உருவாக்கி யிருக்கிறது. அது மட்டுமல்ல. மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் போன்றவைகளின் விநியோகமும் இன்னும் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது பற்றி 'கட்மோஷன்' கொடுத்து, திரு. நல்லப்பன். திரு. அப்பாதுரை போன்றவர்கள் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல், போன்றவை விநியோ கத்தில் மாநில அரசின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவை களின் விநியோக உரிமை மத்திய அரசிடம் இருக்கிறது. அவைகளை விநியோகம் செய்ய, மக்கள் இயக்கமான கூட்டுறவு இயக்கங்கள் மூலம் உரிமை தாருங்கள், கன்ஸ்யூமர்ஸ் பெட ரேஷனுக்கு உரிமை தாருங்கள் என்று மத்திய அரசைக் கேட்டால் அதற்கு மத்திய அரசு இணங்காமல் இருக்கிறது.

பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்னார்கள். மண்ணெண்ணெய் தட்டுப்பாடு கூட, அந்தந்த கூட்டுறவுக் கடைகளில் அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப் பரேஷன் பெயரிலே இருக்கிற கடைகளில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு என்றால் அதற்கு மாநில அரசு பொறுப்பல்ல. காரணம் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவைகளை விநியோகிக்கும் உரிமையை மத்திய அரசு தனியார்களுக்கு, ஏராளமான முதலாளிகளுக்குத் தந்திருக்கிறது, நம்முடைய மக்கள் இயக்கமான கூட்டுறவு அமைப்புகளுக்கோ அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கோ தரவில்லை. நாட்டிலே இருக்கிற பெரும் பணக்காரர்கள்தான் 'ஹோல் சேல் டிஸ்டிரிபியூட்டர்'களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே நாம் பெற்றிருக்கிற உரிமை நம்முடைய கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய, தினம் தினம் அந்த 'ஹோல் சேல் டிஸ்டிரி பியூட்டர்'களை எதிர் நோக்கி நிற்கவேண்டும் என்பதுதான். அவர்கள் தருவதைத்தான் நாம் விநியோகிக்க முடியும். அவர்கள் தருவதில் சில முறைகேடுகள் நடைபெறுகின்றன. முறைகேடு எல்லா இடத்திலும் நடைபெறுகிறது என்று நான் சொல்ல மாட்டேன். பல்வேறு இடங்களில் இந்த விநியோக முறைக்கு ஆபத்து ஏற்படுகிறது.

(பிற்பகல் 1-40)

மைய அரசை நாம் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறோம். மைய அரசுக்கு சொந்தமான மண்ணெண்ணெய் மக்களுக்குச் சென்று அடைகிறபோது, இடைத் தரகர்களான வியாபாரிகள் தனி



முதலாளிகள் மூலமாகச் செல்லாமல், மக்களுடைய இயக்கமான கூட்டுறவு இணையத்தின் மூலமாக அது விநியோகம் செய்யப்படுமே யானால் மிக நன்மையாக இருக்கும் என்று மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மைய அரசு அதற்கு ஒத்துக்கொள்ளும்போது, இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என்று அரசு நம்புகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக திருவாளர்கள் ஆண்டித் தேவர், கருப்பையா, சொரணம், சேதுராமன், மாணிக்கம் போன்ற வர்கள் எல்லாம், கூட்டுறவுத் துறையிலே பணிபுரிகிற அடி மட்டத் திலே இருக்கிற பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கூட கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறதே அது உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதை அரசு ஏற்றுக் கொள்கிறது.

''கிராம அங்காடித் திட்டத்தின் கீழுள்ள கூட்டுறவு நுகர் பொருள் விற்பனைக் கடைகளிலும், மற்ற கூட்டுறவு நுகர் பொருள் விற்பனைச் சங்கங்களிலும் மற்ற ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு பொதுவாக தற்போது மாத ஊதியமாக வழங்கப்படும் ரூ. 100 மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைப்படி, தொழிலாளர் தினமான நடப்பாண்டு மே 1ஆம் தேதி முதல் குறைந்த பட்சம் ரூ. 150 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசை யைத் தட்டும் ஒலி) அது மட்டும் அல்லாமல், மற்ற பணியாளர் களுக்கு 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாளில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் அந்தந்தப் பிரிவினர் களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறைந்த பட்ச ஊதியமாகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலமாக சுமார் 15,000 தொழிலாளர்கள் பயனடைவார்கள்'' (மேசையைத் தட்டும் ஒலி.

அடுத்து நீண்ட நெடுநாட்களாக, பல ஆண்டுகளாக இருந்து வருகிற கோரிக்கையான, கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிற சுமார் 50,000 பணியாளர்களுக்கு குடும்ப நலத் திட்டம் வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்கிறது. அந்த அடிப்படையில்,

''தமிழகம் முழுவதிலுமுள்ள பலவகை கூட்டுறவுச் சங்கங் களிலும் பணிபுரியும் சுமார் 51,000 பணியாளர்களின் நலன் கருதி 'குடும்ப நலநிதித் திட்டம்' ஒன்று ஒவ்வொரு மாவட்டத் திலும் அந்தந்த மாவட்டத்தின் மைய வங்கியின் பொறுப்பில் துவக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர் யாரேனும் பணிக்காலத்தில் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கு கணிசமான ஒரு தொகை குடும்ப நல நிதியாக வழங்கப்படும். இந்த தொகை ரூ. 5,000-க்கு குறையாமல் ரூ. 10,000க்கு மேற்படாமல் இருக்கும். சரியான தொகை எவ்வளவு என்பது பின்னர் அறிவிக்கப்படும்.''

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது நில வள
வங்கி ஊழியர்களைப் பற்றிச் சொன்னார்கள்:

''வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமப்புற விவசாய பொரு
ளாதாரத்தை சீராக்க புரட்சித் தலைவர் அரசு பலகோடி செல
வில் துயர்துடைப்பு மற்றும் நிரந்தரப் பயன் தரும் ஆக்கத்
திட்டங்களை மக்கள் பாராட்டத்தக்க அளவில் நிறைவேற்றி
வருகிறது. வறட்சியால் பாதிக்கப்படாத பகுதிகளில், தற்
பொழுது கடன் வசூலில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் இன்னும்
ஒரு கணிசமான சதவிகிதத்திற்கு இன்னும் சில மாதங்களிலேயே
உயரும் என்று அரசு நம்புகிறது. இந்நிலைகளின் முன்னேற்றத்தை
யொட்டி, 1970ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளுக்குப்
பிறகு ஊதிய மாற்றம் இதுகாறும் செய்யப்படாத நிலவள வங்கி
ஊழியர்கள், இந் நிலையிலுள்ள மற்றுமுள்ள கூட்டுறவு அமைப்பு
களின் பணியாளர்களின் சம்பள விகிதம், ஈட்டுப்படி ஆகியவற்றை
மறு பரிசீலனை செய்வது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
படும்.''

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, ஆங்காங்கு
குறிப்பாக நுகர் பொருள் அங்காடிகளில் ஸ்டாக் டெபிஷியன்சி
இருக்கிறது என்பதைப் பற்றியும், அப்படி ஸ்டாக் டெபிஷியன்சி
என்ற போர்வையிலே மிஸ்-அப்பிரோப்பிரியேஷனும், எம்பசல்
மெண்ட்டும் நடந்து விடுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள்.
அந்தக் குறையை நிரந்தரமாக நீக்குவதற்காக, கூட்டுறவு
பண்டக சாலைகளில் சரக்கு இருப்புக்குறைவு பெருமளவில் அதி
கரித்து வருகிறது. அது நுகர்வோர் கூட்டுறவு இயக்கங்களின்
ஒரு பிணியாக மாறி வருவதை அறவே போக்க வழி வகைகள்
நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது பற்றியும் தமிழகத்திலுள்ள
அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கணக்குகளை சரியாக
வைப்பது பற்றியும், உறுப்பினர்களுக்கு நன்மை செய்கின்ற அதே
நேரத்தில், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்துடனும் இயங்கு
வதற்காக வழி வகைகள் வகுப்பது பற்றியும் ஆய்ந்து அரசுக்கு
பரிந்துரை செய்யும் பொருட்டு ஒரு குழுவை இந்த அரசு அமைத்
திருக்கிறது. இந்தக் குழுவிற்கு மேலவை உறுப்பினர் மாண்புமிகு
திரு. ஏ. ஆர். தாமோதரன், எம்.எல்.சி., அவர்கள் தலைவராக
இருக்கிறார். இதிலுள்ள மற்ற உறுப்பினர்கள் திரு. டீ.
சந்தோஷம், எம்.எல்.சி.; திரு. என். பரமேஸ்வரன், சார்ட்டர்ட்
அக்கவுண்டன்ட்; திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ்.,

இவர்கள் அரசுக்கு அந்த அறிக்கையை தருவார்கள். திரு.
ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ் அவர்கள் இக்குழுவிற்கு கூட்ட
அமைப்பாளராக இருப்பார். இந்தக் குழுவிடம் இருந்து அறிக்கை
வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது,
விவசாயிகளுக்கு உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் பெறாத நிலையில்
இருப்பதை சுட்டிக் காட்டினார்கள். இந்த அரசினுடைய



கொள்கையும் அதுதான். விவசாயம் முன்னேறினால்தான்,
கிராமப்புறத்திலே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால்தான்
நாட்டினுடைய ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சி ஏற்படும்
என்பதிலே இந்த அரசு அக்கறையாக இருக்கிறது.

கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றம்தான்
நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அச்சாணி, ஆணி
வேர் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிற காரணத்தால்தான்
நடப்பாண்டில் விவசாயிகளுக்கு அதிக வருமானம் தரக்கூடிய சில
திட்டங்களை இந்த அரசு கொண்டுவர இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுடைய 'பெர் ஏக்கர் இன்கம்' எனப்படும் அவர்
களது நில வருமானத்தை அதிகப்படுத்த மாநில நிலவள வங்கி
மூலம் சில திட்டங்கள் நடப்பாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்
படவுள்ளன.

வழக்கமாகப் பயிரிடும் 'கன்வென்ஷனல் க்ராப்ஸ்', பயிர்களில்
பல நேரங்களில் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவிற்கு ஏற்ற
வருமானம் கிடைக்காத நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தால்
சென்ட்ரல் புட் அண்டு டெக்னாலஜிக்கல் ரிசெர்ச் இன்ஸ்டிட்யூட்,
கோவை விவசாயப் பல்கலைக் கழகம், திரு. நாயுடும்மா குழு
போன்றவைகளின் பரிந்துரையின் அடிப்படையில் நடப்பாண்டி
லிருந்து கீழ்க்கண்ட திட்டங்கள் நிலவள வங்கிகளில் கடன் மற்றும்
தொழில் நுட்ப உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

மல்லிகைப் பூ சாகுபடி, நெல் சாகுபடிக்குத் தேவையான
தண்ணீரில் அரைப்பங்கு மட்டும் மல்லிகை சாகுபடிக்குப் போது
மானது. இதில் ஒரு ஏக்கருக்கு ரூ. 6,000 நிகர வருமானம்
கிடைக்கும். மல்லிகையிலிருந்து எடுக்கும் 'காண்செண்ட்ரேட்'
என்னும் பொருளுக்கு வெளிநாடுகளில் உள்ள வாசனைப்
பொருட்கள் மற்றும் அழகுசாதனங்கள் தயாரிப்புக்கு நல்ல கிராக்கி
உள்ளது. 10 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யும் மல்லிகைப்
பூவிலிருந்து தைலம்எடுக்கும் ஒரு சிறிய இயந்திரம்(க்ருட் ஜாஸ்மின்
ஆயில் எக்ஸ்ட்ராக்ஷன் ப்ளான்ட்) நிறுவ ரூபாய் ஆயிரம் மட்டுமே
செலவாகும். இந்த இயந்திரம் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படு
கிறது. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20,000 நிகர
வருமானம் ஏக்கர் ஒன்றுக்கு கிடைக்கும். இத் திட்டத்தின்கீழ்
சுமார் 110 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை, சேலம், கன்னியா
குமரி மாவட்டங்களில் சுமார் 2,000 ஏக்கரில் மல்லிகை சாகுபடி
செய்யவும், 100 தைலம் எடுக்கும் சிறு தொழிற்கூடங்கள்
நிறுவவும் நடப்பாண்டு திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.

அதேபோல் சிட்ரோநல்ல, லெமன்கிராஸ், ஜிரேனியம், மரிக்
கொழுந்து போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்க சுமார்
இரண்டு கோடி ரூபாய் செலவில் இந்தப் பயிர்களைப் பயிரிடவும்,

அதிலிருந்து தைலம் எடுக்கவும் சிறு இயந்திரங்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய பயிர்கள் 3,000 ஏக்கர் களில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் ஆறு கோடி ரூபாய் நிதி உதவியுடன் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் ஆண்டு வருமானம் ரூ. 10,000 வரை வரும் சிங்கப்பூர் க ட்டன் என்று சொல்லக்கூடிய இலவம்பஞ்சு பயிர் செய்ய விவசாயிகளுக்கு உதவி தர திட்டம் மேற்கொள்ளப் படும்.

அதேபோல் ரூ. 60 இலட்சம் முதலீட்டில் சுமார் 5,000 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டை இலை பயிரிடுவதற்கும், பட்டுநூல் சுற்றும் தொழிற்கூடங்கள் நிறுவவும் நடப்பாண்டிலிருந்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள், 'பெயில்ட் வெல்ஸ் பண்ட்'க்கு பல கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருந் தும்கூட விவசாயிகளுக்கு அந்தச் சலுகை கிட்டவில்லை என்றும் அதை மாற்றவேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த உணர்வு களின் அடிப்படையில் 'பெயில்ட் வெல்ஸ் பண்ட்' கீழ் தரக்கூடிய சலுகைகளை தாராளமாக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் கடினமான பாறைகள் எதிர்ப்படுவது போன்ற காரணங்களால் திட்டமிட்டபடி ஆழ வெட்டாமல் அரை குறையாக விடப்படும் கிணறுகளுக்கும் விவசாயத் துறையின் கருத்தின் அடிப்படையில் மானியம் கிடைக்கும் வகையில் விதி தளர்த்தப் படும்.

கிணறுகளில் கிடைக்கும் தண்ணீர் நாள் ஒன்றுக்கு 3,000 காலன்களுக்கு குறைவாகவும் குழாய் கிணறுகளிலும் பில்டர் பாயின்ட்களில் கிடைக்கும் தண்ணீர் நாள் ஒன்றுக்கு 9,000 காலன்களுக்கும் குறைவாகவும் இருந்தால் அவைகளுக்கு தற்போது உள்ள விதிகளின்படி மானியம் வழங்கப்படும்.

மணி ஒன்றுக்கு 2,000 காலன்களுக்கு குறைவாகத் தரும் பில்டர் பாயிண்டுகளுக்கும் 3,000 காலன்களுக்குக் குறைவாகத் தரும் குழாய்க் கிணறுகளுக்கும் மானியம் கிடைக்கும் வகையில் விதிகள் திருத்தப்படும்.

ஒரு ஏக்கருக்கு மேற்படாத நிலப் பரப்பில் நீர்ப் பாசனம் பெறும் பயிர்கள் இரண்டுக்கு மேல் சாகுபடி செய்யமுடியாத அளவுக்கு தண்ணீர் இல்லாத கிணறுகள் பொய்த்த கிணறுகளாக இதுகாறும் கருதப்படுகின்றன. அதை மாற்றி பில்டர் பாயின்ட் களாக இருந்தால் 3 ஏக்கருக்கு மேற்படாமல் இரண்டு பாசனப் பயிர்களுக்கு மேல் சாகுபடி செய்யாமல் இருந்தாலும் குழாய்க் கிணறுகளாக இருந்தால் 4 ஏக்கர்களுக்கு மேற்படாமல் இரண்டு பாசனப் பயிர்களுக்கு மேல் சாகுபடி செய்யாதிருந்தாலும் அவை பொய்த்த கிணறுகளாகக் கருதப்படும்.



தற்போதுள்ள விதிகளின்படி கிணற்றுநீர் சாகுபடிக்கு தகுதி யற்றதாகயிருந்தாலும் அல்லது அத்தண்ணீரை சாகுபடிக்கேற்ப மாற்றமுடியாது என்று தகுதி வாய்ந்த வல்லுநர்கள் கருதினாலும் அக்கிணறு பொய்த்ததாகக் கருதப்படும். சாகுபடிக்கேற்ப நீரின் தன்மையை மாற்றுவது பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகா தென்று தெரிந்தாலும் அக் கிணறுகள் பொய்த்தவையாகக் கருதும் வகையில் விதிகள் திருத்தப்படும்.

மேலும் நீருற்றுகள் அற்ற பாறைகள் எதிர்ப்படுவது போன்ற காரணங்களால் மேற்கொண்டு தொடராமல் நிறுத்தப்படும் குழாய் கிணறுகளுக்கும் பில்டர் பாயின்டுகளுக்கும் மானியம் வழங்கப்படும்.

(பிற்பகல் 1-50)

தொகையில்
தற்போது சிறு விவசாயிகளின் கடன் அசல் தொகை மட்டும் 90 சதவீதம், மற்ற விவசாயிகளின் கடன் அசல் தொகை யில் 75 சதவீதம் மானியமாக வழங்கப்படுகின்றன. இனிமேல் அசலும், வட்டியும் சேர்ந்த மொத்தத் தொகையில் 90 சதவீதம் சிறு விவசாயிகளுக்கும், 75 சதவீதம் மற்ற விவசாயிகளுக்கும் மானியமாகக் கிடைக்கும் வகையில் விதிகள் திருத்தப்படும். மற்றும், 1977-லிருந்து 1981 வரை கிராமப் பொருளாதார முன் னேற்றத்திலும், விவசாயிகள் நலனிலும் மிக்க அக்கறையோடு செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இதுகாறும் 193½ கோடி ரூபாய் அளவிற்கான சலுகைகளை விவ சாயிகளுக்கு அளித்திருக்கிறது. தற்போது, 1980ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளுக்குப் பின் குறுகிய கால பயிர்க் கடன் மீது சாதாரண வட்டியையும், அபராத வட்டியையும் செலுத்திய சிறு விவசாயிகளுக்கும், அபராத வட்டியை செலுத்திய இதர விவசாயிகளுக்கும் அத் தொகையினை அவர்களுக்கே திருப்பித் தர வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே, மேற் கொண்டு 3 கோடி ரூபாய் அவர்களுக்கு கடன் தள்ளுபடி செய்து, அடுத்த ஆண்டு கட்ட வேண்டிய கடனோடு ஈடு செய்யப்படும்.

அடுத்து, மலைவாழ் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம் படுத்த திட்டப்படும் பல திட்டங்களில் ஒன்றாக, சேலம், வட ஆற்காடு மாவட்டப் பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளான கொல்லிமலை, ஏலகிரி மலை ஆகிய இரு பகுதி களிலும் அங்கு உற்பத்தியாகும் அன்னாசி, தக்காளி, கொய்யா, ஆரஞ்சு போன்ற பழங்களிலிருந்து பழ ரசப் பொருட்கள் தயாரிக் கும் இரண்டு தொழிற்சாலைகள் இவ்வாண்டிலேயே நிறுவப் படும்.

அடுத்து, நெல் கொள்முதல் பொறுத்த வரைக்கும், மைய அரசு நிர்ணயித்துள்ள தொகை 109 ரூபாய் என்பது இந்த அவைக்குத் தெரியும். இருந்த போதிலும் சப்போர்ட் பிரை ஸாக மாநில அரசு 119 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறது.

விவசாயிகள் உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் இல்லை என்ற குறையிருப்பதை, இந்த அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தினால், மைய அரசு விவசாய கொள்முதலுக்கு அடிப்படை விலை நிர்ணயிக்கிற முறையில், பொது மக்கள் அதிக விலையை நிர்ணயித்த மைய அரசு, நெல்லுக்கு, நெல்லை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய கஷ்டத்தை மைய அரசு உணராமல் இருந்தபோதிலும், விவசாயிகளுக்கு சலுகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களது முடிவின் அடிப்படையிலே, தனியார் சுரண்டலிலே இருந்து விவசாயிகளைக் காப்பாற்ற, பாதுகாக்கப்படும் [illegible] நெல் கொள்முதலுக்கு கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக அதிகப் பணம் கொடுக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தனியார் வியாபாரி ஒருவர், மூட்டை ஒன்றுக்கு ரூ. 140 கொடுத்து கொள்முதல் செய்து, விவசாயிகளுடைய வருமானத்தைக் குறைத்து, இழப்பு ஏற்படச் செய்கிற நிலையை மாற்றி, தற்போது கூட்டுறவு சங்கங்கள் அதாவது தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலமாக தனியார்களைவிட, அரசு இந்த அமைப்பின் மூலமாக ரூ. 180 வரை கொடுத்து, தற்போது நெல் கொள்முதல் இன்றைக்கு செய்யப்பட்டிருக்கிறது. அதனால், விவசாயிகள் பயிரை அறுவடை செய்தவுடன், வாங்கிய கடனை கொடுக்க அவசர அவசரமாக வியாபாரிகளிடம் விற்றுவிட்டு, சுரண்டலுக்கு உட்பட்டிருக்கின்ற நிலையைப் போக்க, விவசாயிகள் அனைவருக்கும் கட்டுபடியாகக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக இதுகாறும் 20 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 1,15,000 டன் நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கூட்டுறவுத் துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் வரும் ஆண்டில், விவசாயிகளின் நலனைக் கருதி, அவர்களுக்கு தனியாரை விட, அதிகமாக நெல் முதல் விலை கொடுத்து, மைய அரசு நிர்ணயித்திருக்கின்ற ரூ. 119-ஐ விட, அதிகமான விலை கொடுத்து, சராசரி ரூ. 160 வீதம் வரும் ஆண்டில் கிட்டத்தட்ட 1,50,000 டன் நெல்லைக் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

பருத்தி, நெல், மிளகாய், கொத்துமல்லி ஆகிய விவசாய விளைபொருட்களில் அதிகப்படியான கொள்முதலில், மாநில கூட்டுறவு விற்பனை இணையம் நடப்பாண்டிலிருந்து ஈடுபடுவதால் ஏற்படும் சாதகமான நிதிநிலையைக் கொண்டும், உர விநியோகத்தில் சில சிக்கன சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமும் விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகிக்கப்படும் உரத்தின் விலை வரும் ஆண்டிலிருந்து ஓரளவு குறைக்கப்படும்.

நகரப்புறத்திலே இருக்கும் நலிந்த பிரிவினருக்கு நன்மை செய்யவேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே, கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த அரசு பல நன்மைகளை



செய்து வருகின்ற இந்த அரசு, நகரப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் இந்த அரசு நன்மை செய்ய வேண்டுமென்று கருதுகிறது.

நகரப்புறத்திலே இருக்கிற நலிந்த பிரிவினருக்காக அக்கறை காட்டுகிற இந்த அரசு காலணி செய்வோர், மண்பாண்டம் செய்வோர், கூடை முடைவோர், தச்சர், கருமார், உடைகள் தைப்போர், நாவிதர், சலவைத் தொழிலாளி மற்றும் இதுபோன்ற குடிசைத் தொழில் அல்லது சிறு தொழில் செய்ய முன்வரும் தாழ்த்தப்பட்டோர், நரிக்குறவர், மலைவாழ் மக்கள், சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கிற மிக நலிந்த பிரிவினருக்கு தொழில் செய்ய தாராளமாக கடனுதவி வழங்கப்படும். இத்தகைய கடனுக்கு தற்போது இருக்கும் 10½ சதவீத வட்டிக்குப் பதிலாக 'டிபரன்ஷியல் ரேட் ஆப் இன்டரஸ்ட்' என்ற அந்த முறையில் மிகக் குறைந்த வட்டியான 4 சதவீத வட்டியே வசூலிக்கப்படும். அத்தகைய குறைந்த வட்டியிலே கடனுதவியை தமிழகத்திலே உள்ள 64 நகர கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், 26 விவசாய சேவை கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், ஆரம்பக் கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

மோட்டார் சைக்கிள் ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிற ஓட்டுநர்களுக்கு தரவேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர்அவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையிலே, மிதி சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் படும் துயரத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை தரவேண்டும் என்பதற்காக மிதிசைக்கிள் ரிக்ஷாக்கள் எல்லாம் படிப்படியாக மோட்டார் சைக்கிள் ரிக்ஷாவாக மாற்றியமைத்து, அத்தகைய மோட்டார் ரிக்ஷாக்களை மிதி சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு மட்டுமே அளிக்கவேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிற மிதி சைகிள் ரிக்ஷா ஓட்டுநர்கள், மோட்டார் சைகிள் ரிக்ஷா வாங்கக் கூடிய பொருளாதார வசதி இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அந்த ஏழை ஓட்டுநர்களுக்கு மோட்டார்சைகிள் ரிக்ஷா வாங்குவதில் பொருளாதார உதவியை அரசு மூலமாக செய்து தரவேண்டுமென்ற திட்டத்தின் முதல் கட்டமாக தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கிற ஆயிரம் சைகிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு ஆள் ஒன்றுக்கு மோட்டார் சைகிளின் விலையான சுமார் 5,000 ரூபாயில் 25 சதவீதமான 1,250 ரூபாயை அரசே மானியமாக கொடுத்தும், மீதமுள்ள 3,750-ஐ அந்தந்த மாவட்ட கூட்டுறவு மைய வங்கிகளின் மூலம் குறைந்த வட்டிக்கு கடனுதவியாகத் தந்தும், மேற்சொன்ன ஆயிரம் மிதிசைக்கிள் ஓட்டுநர்களுக்குச் சொந்தமாக ஆயிரம் மோட்டார் சைகிள் ரிக்ஷாக்கள் வழங்கப்படும்.

அதேபோல உடல் ஊனமுற்றோர்களுக்காக உதவி செய்ய தற்போது ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறது. உடல் ஊனமுற்றோர் உலக ஆண்டான இவ்வாண்டில் உடல் ஊன

முற்றோர்களுக்காக, அவர்கள் வாழ்வில் வருமானம் ஈட்டுகிற
வகையில், உடல் ஊனமுற்றோர் நல வாழ்வு கூட்டுறவுச் சங்கங்கள்
வேலூர், திருநெல்வேலி, கடலூர், தஞ்சை, திருச்சி ஆகிய ஐந்து
இடங்களில் நிறுவப்படும். ஆதி திராவிட மக்களுக்காக
கூட்டுறவு அமைப்பு தேவையான வசதிகளை, ஆதிக்க சக்திகளின்
பிடியில் இந்த அமைப்பு இருந்த காரணத்தால் செய்யவில்லை
என்பதை பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த
அமைப்பு ஆதி திராவிட மக்களுக்காக ஏற்கனவே
Labour Contract Co-operative Society; Co-operative Farming
Society; Land colonisation Co-operative Society; Salt
Workers Co-operative Production and Sales Society;
என்ற சங்கங்களை அமைத்து செயல்படுத்த வேண்டும் என்பதிலே
கூட ஆதி திராவிட மக்கள், அருந்ததி மக்கள் எல்லாம்
அவர்கள் கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் உறுப்பினர்களாகக் கூட
அந்த குறைந்தபட்ச பணத்தை கட்டமுடியாமல் வறுமை நிலையில்
இருக்கிற காரணத்தால்தான் நாடு சுதந்திரம் அடைந்து
இத்தனை ஆண்டுகளான பிறகும் தாழ்த்தப்பட்ட மக்கள்,
கூட்டுறவு அமைப்பின் மூலமாக பயன் பெறாத ஒரு நிலை
இருந்து வந்தது. உறுப்பினர்கள் ஆவதற்கு கூட அந்த ஆரம்
பப்பணத்தை கட்ட முடியாமல் இருந்தார்கள். கூட்டுறவு
இயக்கமே நலிந்த தாழ்த்தப்பட்ட மக்களின் மிக முக்கியமான
காரியங்களுக்காக இயங்கவேண்டும் என்ற காரணத்தால் நடப்
பாண்டில் தமிழகத்திலே இதுகாறும் என்றும் இல்லாத அளவிற்கு
பாரதத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர்
அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். படிப்படியாக அனைத்து
தாழ்த்தப்பட்ட மக்களும், கூட்டுறவு அமைப்பிலே கட்டாய
மாக உறுப்பினர்களாக ஆக வேண்டும். அதற்காக
ஒவ்வொரு உறுப்பினருக்கும் உறுப்பினர்கள் 'சப்ஸ்
கிரிப்ஷன் பீசை' அரசே கட்டவேண்டுமென்ற முறையில்
ஆரம்ப கட்டமாக ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள்
கூட்டுறவு சங்க அமைப்பிலே உறுப்பினராக கொண்டு வருவதற்
காக அவர்களுக்கு அந்த பணமான 100 ரூபாயை அரசே தர
வேண்டுமென்ற திட்டத்தை நடப்பாண்டில் இருந்து கொண்டு
வருகிறது. இந்த திட்டத்தின் அடிப்படையில் அனைத்து தாழ்த்
தப்பட்ட மக்களும் தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பில், கூட்டுறவு
சங்கங்களில் அரசே அவர்களுக்கு சந்தாவைச் செலுத்தி விரைவில்
அனைவரும் உறுப்பினர்களாக ஆக்கப்படுவார்கள், தமிழ்
நாட்டில் தற்போது இருக்கிற 131 நகர கூட்டுறவு வங்கிகளிலும்,
நகர்புறத்தில் இருக்கிற சமுதாயத்தில் தாழ்நிலையிலுள்ள மிக
நலிந்த பிரிவினருக்கு குடிசைத் தொழில் போன்ற தொழிலில்
ஈடுபட நிதியுதவி போன்றவற்றை செய்வதில் ஒருங்கிணைந்த
பணியை மேற்கொள்ளும் நோக்கோடு தமிழகத்தில் இருக்கிற
131 நகர கூட்டுறவு வங்கிகளும் ஒருங்கிணைந்த 'ஸ்டேட் பெட
ரேஷன் அர்பன் கோவாபரேட்டிவ் பாங்க்' என்ற ஒன்று
அமைக்கப்படும்.



திருச்சி, சேலம் மாவட்டங்களில் உறுப்பினர்களுக்கு பலனளிக்
கும் வகையில் இந்த இரு மாவட்டங்களில் மைய கூட்டுறவு
வங்கிகளின் மூலமாக திருமண மண்டபம், மருத்துவ மனை
வசதி, போன்ற, சமூக நல வசதிகளைக்கொண்ட 'கோவாப
ரேட்டிவ் கம்யூனிட்டி செண்டர்', ஆரம்ப கட்டமாக தமிழகத்தில்
கூட்டுறவுத் துறையின் மூலமாக அமைக்கப்படும். மாண்புமிகு
உறுப்பினர்கள் பலர் தமிழகத்தில் பல மாவட்டங்களில் 'டிஸ்ட்
ரிக்ட் கோவாபரேட்டிவ் யூனியன்' இருந்தும் கூட பல ஆண்டுக
ளாக சென்னை, தர்மபுரி, பெரியார், கன்னியாகுமரி பகுதிகளில்
கூட்டுறவு யூனியன் இல்லை என்று குறையைச் சொன்னார்கள்.

[பிற்பகல் 2-00 மணி]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பாயின்ட் ஆப் இன்பார்
மேஷன், நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது
பணியிலே இறக்க நேரிட்டால் ரூ 5 ஆயிரத்திற்குக் குறையாமலும்
10 ஆயிரத்திற்கு மேற்படாமலும் கொடுக்கப்படும் என்று
சொன்னார்கள். பணியில் இறந்துவிட்டால் கொடுக்கப்படுகிறது.
ஆனால் சொசைட்டிகளிலே வங்கிகளிலே பணியாற்றுகிறவர்கள்
பாம்பு கடித்து இறந்துவிட்டால் அல்லது திருடர்களாலே அடித்துக்
கொல்லப்பட்டுவிட்டால் அப்படிப்பட்டவர்களுக்கும் அந்தத்
தொகை கொடுக்கப்படுமா? அடுத்து அரிசன மக்களுக்கு அர
சாங்கம் 100 ரூபாய் கட்டுவதாகத் தெரிவித்தார்கள். அதற்காக
என்னுடைய பாராட்டுதல். வீடுகள் கட்டுகிறபோது அவர்கள்
பங்குத் தொகை கட்டவேண்டுமென்று சொல்கிறார்களே, அதை
யும் அரசாங்கமே கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை
செய்வார்களா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: குடும்ப நலத் திட்டம்
என்பதன் கீழ் அரசு ஊழியர்கள் பணிக்காலத்திலே இறந்து
விட்டால் கொடுக்கப்படுவதைப்போல் கூட்டுறவுத் துறையிலே
50 ஆயிரம் பேர்கள் இதைப் பெறாமல் இருந்தார்கள். அவர்
களுக்கும் இதை நடைமுறைப்படுத்துவதற்குத்தான் இது கொண்டு
வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
ஆலோசனையை அரசு பரிசீலிக்கும். கூட்டுறவுத் துறை மூலமாக
வீடு கட்டுகிற பிரச்சினை பொறுத்தவரையில் நான் மாண்புமிகு
வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களிடம் இதுபற்றிக் கூறி
பரிசீலித்து நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல அரிய கருத்துக்களை,
யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்கு எல்லாம்
நேரம் இல்லாத காரணத்தினால் பதில் சொல்ல முடியாமல்
இருக்கிறது. அரிய ஆலோசனைகளை ஆராய்ந்து, கூட்டுறவுத்
துறை நலிந்த பிரிவினருக்காக நன்மைகள் செய்ய தீவிரமாகப்

பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை என் பதிலின் அடிப்படையில் திரும்பப் பெற்றுக்கொண்டு நான் கோரியிருக்கிற மானியத்தை நிறைவேற்றித் தருமாறு தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோருடைய வெட்டு தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 9,36,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. அறிவிப்பு.

தி. மு. க. உறுப்பினர்கள் அவைக்கு வராமலிருந்தல்—அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில் மாண்பு மிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் ''பிரதான எதிர்க்கட்சி அவைக்கு வரவில்லையே, அவர்களிடமிருந்து ஏதேனும் தகவல் உண்டா'' என்று கேட்டார். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலை வரிடம் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது என்றும், இன்று 12 மணிக்குக் கட்சித் தலைவர்களைக் கூட்டி இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் நான் தெரிவித்தேன். அதன்படி அலுவல் ஆய்வுக் குழு கூடியது.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாளன்று பேரவை யில் நடந்த நிகழ்ச்சியில் எந்த ஒரு உறுப்பினரையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டப்படவில்லை என்பதால் அன்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழு கூடி செய்த முடிவிற்கிணங்க இப்பிரச்சினையை எனது தனிப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தேன். 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளன்று ஆளும் கட்சி தரப்பில் இருந்தும், எதிர்க்கட்சி தரப்பில் இருந்தும் கொடுக் கப்பட்ட கடிதங்களை ஆய்வு செய்த பின்னர் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவையே பேரவைக்கு நான் அறிவித்தேன்.



நான் தனிப்பட்ட முறையில் உறுப்பினர்கள் எழுதும் கடிதங் களுக்குப் பதில் எழுதுவது என்பது பாராளுமன்ற மரபு அன்று. தீரவிசாரிக்காது எந்த உறுப்பினர் மீதும் அவை நடவடிக்கை எடுக்க இயலாது.

இதுபற்றி மேலும் இன்று அலுவல் ஆய்வுக் குழு கூடி ஒரு உறுப்பினர்மீது விசாரணையின்றி நடவடிக்கை எடுக்க இயலாது என்பதை ஏற்றுக்கொண்டு இப்பிரச்சினையை அவை உரிமைக்குழு ஆய்வு செய்து தனது அறிக்கையைக் கொடுத்தபின் முடிவு எடுக்கலாம் என்று தீர்மானித்தது.

இச்சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டப் பேர வையில் கலந்துகொள்ள வேண்டும் என்று இன்று அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்ட எல்லாக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த கருத்தை நான் அவை மூலமாக அவர்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5—5—1981)ஆம் தேதி காலை 9·00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

270. திருச்சிராப்பள்ளியிலுள்ள மத்திய சிறையில் ஆகஸ்ட் 1979 ஆம் ஆண்டு இறந்த இரண்டு ஆயுள் கைதிகளின் மறைவு குறித்து விசாரணை செய்வதற்காக, மதுரையிலுள்ள கூடுதல் மாவட்ட நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன் அவர்களைக் கொண்டு நியமிக்கப்பெற்ற தனி நபர் விசாரணைக் குழுவின் அறிக்கையும், அதன்மீது அரசு ஆணைகளும் [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

186. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொள்கை விளக்க குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

[36 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

### கூட்டுறவுத் துறையின் 1981–82 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், குறிப்பாக வேளாண் கடன் மற்றும் இடுபொருட்களை வழங்குதல், விளை பொருட்களை விற்பனை செய்தல், இன்றியமையாத நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் மக்களுக்கு உதவி வருகிறது.

2. முன்னேற்றம் பற்றிய கண்ணோட்டம்.

| விவரம். | முன்னேற்றம். 1979–80-ல். | 1980–81 டிசம்பர் முடிய. | 1981-82-க்கான திட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (கோடி ரூபாயில்) | | |
| 1. குறுகிய கால, மத்திய காலக் கடன்கள் வழங்கல். | 42.70 | 15.79 | 1,30.00 |
| 2. நீண்டகாலக் கடன்கள் வழங்கல். | 8.85 | 3.87 | 10.00 |
| 3. நகை ஈட்டுக் கடன்கள் வழங்கல். | 1,11.42 | 85.10 | 1,30.00 |
| 4. விளை பொருட்கள் விற்பனை செய்தல். | 65.83 | 46.07 | 70.00 |
| 5. இரசாயன உரங்கள் வழங்கல். | 25·82 | 16·23 | 66·00 |
| 6. நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை. | 1,40·92 | 1,10·00 | 1,92.00 |
| 7. கிராமக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல். | 13·66 | 19·37 | 25·00 |

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசு 1979–80 ஆம் ஆண்டில் செய்த செலவு, 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்த மதிப்பீடு, 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—



## இணைப்பு

| திட்டங்களின் விவரங்கள். | 1979–80ல் செலவு. | 1980–81க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1980–81க்கான திருத்த மதிப்பீடு. | 1981–82க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சம் ரூபாயில்) | | | |
| I. மாநிலத் திட்டப் பணிகள்— | | | | |
| 1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 11,86·47 | 3,92·41 | 3,41·05 | 3,61·47 |
| 2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 15·40 | 34·62 | 42·49 | 29·11 |
| 3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 1,60·04 | 1,94·92 | 1,95·09 | 2,11·73 |
| 4. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 30·11 | 4·60 | 6·60 | 19·70 |
| 5. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி .. | .. | 0·41 | 0·41 | 0·65 |
| 6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் .. | 4·19 | 28·41 | 28·41 | 25·02 |
| மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம் .. | 13,96·21 | 6,55·37 | 6,14·05 | 6,47·68 |
| II. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்— மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள் .. | 5,06·22 | 1,08·54 | 1,08·95 | 1,90·38 |
| திட்டப் பணிகளின் மொத்தம் .. | 19,02·43 | 7,63·91 | 7,23·00 | 8,38·06 |
| III. திட்டத்தில் சேராத பணிகள் .. | 47,88·12 | 29·06 | 74,23·14 | 33·74 |
| பெரு மொத்தம் .. | 66,90·55 | 7,92·97 | 81,46·14 | 8,71·80 |

### கூட்டுறவு விவசாயக் கடன் உதவி.

குறுகிய கால, மத்திய கால, நீண்ட காலக் கடன்கள்.

4. முகவுரை.—இம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் டிப் படை அமைப்பாக 4,742 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன. பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும் விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களுக் காக மத்திய காலக் கடன்களையும் இச் சங்கங்கள் வழங்கி வரு கின்றன. நிலத்தை வளப்படுத்துவதற்காக விவசாயிகளுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை, சீரமைப்புத் திட்டத் தின்கீழ் அண்மையில் இதர வங்கிகளுடன் இணைக்கப்பட்ட 39 வங்கிகள் நீங்கலாக, 184 பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் அளித்து வருகின்றன.

5. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆக்குதல்.—இம் மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் ஏறத்தாழ முக்கால் பங்கு, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங் களில், 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் இருந்த நிலவரப் படி சேர்க்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன:—

| | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நிலவுடமைகள்படி) | |
|---|---|---|
| | எல்லா விவசாயக் குடும்பங்களும். | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயி களின் குடும்பங்கள். |
| | (இலட்சத்தில்) | |
| 1. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை. | 53·14 | 42·05 |
| 2. கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்ட குடும்பங் களின் எண்ணிக்கை. | 40·86 | 31·03 |
| 3. சேர்க்கப்பட்ட குடும்பங்களின் சதவிதம். | 77 | 74 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில் மொத்த குடும்பங் களையும் கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டுவர திட்டமிட பட்டுள்ளது.



6. ஷெடியூல்டு வகுப்பைச் சார்ந்த விவசாயிகளைப் பெரு மளவில் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவரும் நோக்கத் துடன் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்குவது மூலம், ஷெடியூல்டு வகுப்பைச் சார்ந்த நாற்பது ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் 1981–82ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படும். இதனால் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடனுதவியையும் ஏனைய சேவைகளையும் பெற்று தம்முடைய வருவாயை பெருக்கிக் கொள்ள ஏதுவாகும். கூட்டுறவுச் சங்கத்தில் இவ்வாறு உறுப்பினராகச் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும், அரசின் மானியமாக நூறு ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மானியம், விவசாயக் கடன்களையும், பால்பண்ணை, கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும், சங்கத்திலிருந்து பெறும் பொருட்டு அவர்கள் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காகக் கொடுக்கப்படும்.

7. கடன் வழங்கியது.—கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க்கண்ட விவரப்படி, விவசாயக் கடன்களை வழங்கியுள்ளன.—

| ஆண்டு. | குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள். | நீண்ட காலக் கடன்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (கோடி ரூபாயில்) | | |
| 1977–78 | 127.13 | 12·28 | 139.41 |
| 1978–79 | 102.65 | 11.24 | 113.89 |
| 1979–80 | 42.70 | 8.85 | 51.55 |
| 1980–81 (டிசம்பர் முடிய). | 15.79 | 3.87 | 19.66 |

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடனளவு குறைந்ததற்கு முக்கிய காரணம், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் தொகை பெருமளவில் அதிகரித்தது ஆகும். கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை விவசாயிகளின் சங்கங்கள் 1977–78ஆம் ஆண்டிலிருந்து கடுமையாக எதிர்த்து வந்தது, தவணை தவறிய கடன்கள் அதிகரித்ததற்குக் காரணம் ஆகும்.

8. தவணை தவறிய கடன்கள்—தவணை தவறிய கடன்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு—

கேட்பில் தவணை தவறிய கடன்களின் சதவீதம்.

| | விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள். | பிரதம நிலவளக் கூட்டுறவு வங்கிகள். |
|---|---|---|
| 30-6-1978-ல் | 32.9 | 67.1 |
| 30-6-1979-ல் | 52.5 | 80.8 |
| 30-6 1980-ல் | 73.4 | 88.7 |
| 31-12-1980-ல் | 80.0 | 96.5 |

தவணை தவறிய கடன்கள் அதிகரித்து வந்ததால், பல மத்தியக்
கூட்டுறவு வங்கிகள், தாம் மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து
வாங்கிய கடன்களுக்கு ஈடாக பிரதம சங்கங்களிடமிருந்து
தமக்கு வர வேண்டிய தவணை தவறாத கடன்களை வேண்டிய
அளவிற்கு ஈடு காண்பிக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனால்
ரிசர்வ் வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கடனைப் பெற்று
விவசாயிகளுக்கு சாகுபடி செலவிற்காக புதிய பயிர்க் கடன்களை
இம்மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்க இயலவில்லை. நிலவள
வங்கிகளைப் பொறுத்த வரையில், தவணை தவறிய கடன்கள்
இருந்ததன் காரணமாக எந்த வங்கியும் கடன் வழங்கும்
தகுதியை முழுமையாகப் பெறவில்லை, 19 வங்கிகள் மட்டுமே
குறைந்த அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற்றிருந்தன.
ஏனைய 165 வங்கிகளும் கடன் வழங்கும் தகுதியை இழந்
திருந்தன.

9. விவசாயிகளுக்கு இடர் உதவிப் பணிகள்—விவசாயிகளுக்கு
இடர் உதவியாக அரசு சில பணிகளைச் செய்துள்ளது. 1978ஆம்
ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவை நின்ற எல்லா
தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கும் 1979 ஆம் ஆண்டு
ஜூன் மாத இறுதி வரையில் அபராத வட்டியைத் தள்ளுபடி
செய்தது. 1977-78ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அபராத
வட்டியைத் திருப்பித் தந்தது; மேலும் ஏற்கெனவே மூன்று
அல்லது ஐந்தாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டு 1978ஆம்
ஆண்டு ஜூன் மாத இறுதியில் நிலுவையிலிருந்த எல்லா கடன்
களின் மீதும் சாதாரண வட்டியைத் தள்ளுபடி செய்தது. இந்த
வட்டிச் சலுகைகள் கடன்தாரர்கள் தம் கடன் பாக்கிகளை
1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் தேதிக்குள் திருப்பிச்
செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டிருந்தன.
இவ்வகையில் 4.85 கோடி ரூபாய், விவசாய சேவைக் கூட்டுறவுச்
சங்கங்கள் மற்றும் நிலவள வங்கிகளின் கடன்தாரர்களில் 5.21
இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டது. அன்றியும் 1978ஆம்
ஆண்டு ஜூன் மாத இறுதியில் எந்த ஒரு உறுப்பினர்



பேரிலும் நிலுவை நின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட
மத்திய கால மாற்றுக் கடன்களையும் தவணை நீட்டித்த மத்திய
கால மாற்றுக் கடன்களையும், மூன்று முதல் ஆறு ஆண்டு
களுக்குள் திருப்பிச் செலுத்தும் வகையில் ஒரே கடனாக ஒருங்
கிணைக்கவும் அரசு ஆணை பிறப்பித்தது. இவ் வகையில் 52.72
கோடி ரூபாய் அளவிற்கு 2.35 இலட்சம் பேர்களுடைய கடன்கள்
ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும் நிலுவை நின்ற மத்திய கால
மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால
மாற்றுக் கடன்களின் மேல், வட்டி விகிதம் 13.8-லிருந்து சிறு
விவசாயிகளுக்கு 10·5 ஆகவும், இதர விவசாயிகளுக்கு 12
ஆகவும், 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம். முதல் தேதி முதல்
குறைக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி அனுமதித்த கடனைப் பெற்று
புது கடன்களை வழங்க ஏதுவாகும் பொருட்டு, தவணை
தவறாத கடன்களை ஈடுகாட்டுவதில் உள்ள குறையை நீக்கு
வதற்காகவும், தவணைத் தேதியில் செலுத்தத் தவறிய
தொகையை செலுத்துவதற்காகவும் மத்தியக் கூட்டுறவு வங்கி
களுக்கு அரசு வழி வகை முன்பணம் வழங்கியது. இவ் வகையில்
1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 20.12 கோடி ரூபாய்
அளவிற்கு எட்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், 1980ஆம்
ஆண்டு அக்டோபர் மாதத்தில் 21.87 கோடி ரூபாய் அளவிற்கு
ஆறு மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் பயன் அடைந்தன.

10. சிறு விவசாயிகளின் கடன் பளுவைத் தணிக்க அரசு
எடுத்த முடிவிற்கிணங்க, ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த
அளவு நஞ்சை அல்லது புஞ்சை நிலம் சொந்தமாக வைத்
திருக்கும் அல்லது குத்தகைக்குப் பயிர் செய்யும் சிறு விவசாயி
களின் சார்பில், இயற்கைப் பேரிடர்கள் காரணமாக மத்தியக்
காலக் கடன்களாக மாற்றப்பட்டு 1980ஆம் ஆண்டு மார்ச்,
மாத இறுதியில் அவர்களிடம் நிலுவை நின்ற குறுகிய காலக்
கடன்களை வட்டி, அபராத வட்டி உட்பட விவசாய சேவைக்
கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தாமே திபிப்பித்தர அரசு முடிவு
செய்தது. அதன்படி, 49.64 கோடி ரூபாய் அளவிற்கு
அவ்வகைக் கடன்கள், 4.52 இலட்சம் கடன்தாரர்கள் சார்பில்,
விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்
தப்பட்டன. இதற்காக அரசு மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு
ஏற்கெனவே 42 கோடி ரூபாய் வழங்கியுள்ளது ; மீதி உள்ள 7.64
கோடி ரூபாயும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசால் ஈடு
செய்யப்படும். விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் கடன்
தாரர்களில் மேற்சொன்ன வகை சிறு விவசாயிகள் 1–7–1975-க்குப்
பின் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்திய மத்திய கால மாற்றுக்
கடன்களை, வட்டியும் அபராத வட்டியும் உட்பட
அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.
இது 1981–82ஆம் நிதி ஆண்டில், அவர்கள் சங்கங்களுக்குத்
திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களை சரிக்கட்டும் வகையில்
திருப்பிக் கொடுக்கப்படும். இவ்வகையில் அரசின் செலவு
23.59 கோடி ரூபாய் ஆகும்.

11. மேற்கண்ட உதவிகளையன்றி, கீழ்க்காணும் உதவிகளையும் தர அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தை சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ பயிரிடும் ஒரு சிறு விவசாயி தன்னுடைய குறுகிய காலக் கடன் அசல் தவணை கடந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை திருப்பிச் செலுத்தப்படாதிருந்து, அந்த அசல் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்தப்பட்டால், அவ்வாறு திருப்பிச் செலுத்தப் படும் தேதிவரைக்கான வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்படும். அதுபோல சிறு விவசாயி அல்லாத ஒருவர் மேற்கண்ட வகைக் கடன்களில் அசலையும் வட்டியையும் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்தினால், அவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரைக்கான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும். இந்தச் சலுகையை அளிப்பதால் அரசுக்கு ஆகும் செலவு சுமார் 40 கோடி ரூபாய் ஆகும்.

மேலும், குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்து வதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் தாரர்களை ஊக்குவிக்கும் வகையில், 1981—82ஆம் ஆண்டில் நமது குறுகியகாலக் கடன்களையும் மத்திய காலக் கடன் தவணை களையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது.

12. நிலவள வங்கிகளைப் பொறுத்த வரையில், 27·26 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு பங்கு மூலதனம் முதலீடு செய்ததின் மூலம் தவணை தவறிய கடன்கள் அதிகமாக இருந்ததன் காரணமாகக் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்த 165 வங்கிகளில், 16 வங்கிகள் குறைந்த அளவு கடன் வழங்கும தகுதியைப் பெறவும், குறைந்த அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற்றிருந்த 19 வங்கிகளில் 9 வங்கிகள் அதைவிட அதிக அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெறவும் வழிவகை செய்யப்பட்டது. ரிசர்வ் வங்கி குறிப்பிட்ட அளவிற்குக் கூட்டுறவு நிலவள வங்கிகள் கடன்களை வசூலிக்காமல் இருந்தாலும்கூட, சிறப்புத் திட்ட பகுதிகளில் செயல்படும் கடன் வழங்கும் தகுதியை இழந்த பிரதம நிலவள வங்கிகள் மேற்படி திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதை ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளது; இது, ரிசர்வ் வங்கி விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் ஏற்கத்தக்க ஒரு மறு சீரமைப்புத் திட்டத்தை அவ் வங்கிகள் செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும். மறுசீரமைப்புத் திட்டம் ரிசர்வ் வங்கியின் பரிசீலனையில் உள்ளது. சிறு பாசனத் திட்டங் களுக்குக் கடன்கள் வழங்குவதற்காக வாய்ப்புகள் குறைந்து வருவதால், வணிகப் பயிர்களான தென்னை, முந்திரி, காப்பி மற்றும் ஏனைய தோட்டப்பயிர்களின் சாகுபடி, டிராக்டர் மற்றும் இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள் மற்றும் கால்நடைக் கொட்டகைகள் அமைத்தல், பால் பண்ணைத் திட்டம், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற இதர நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்குதல், மின்வாரியம், மீன்வளக் கழகம், உணவுப் பொருள் வழங்கும் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தல் போன்ற பிற வழிவகைகளில் தமது நடவடிக்கைகளைப் பரவலாக்க, நிலவள வங்கிகள் முயன்று வருகின்றன. நிலவள வங்கிகள் பலவகைப்பட்ட காரியங் களுக்குப் பெருமளவில் கடன் வழங்க இயலும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டம் பல்வேறு பரவ லான காரியங்களுக்குக் கடன் வழங்க அனுமதிக்கும் வகையில் தக்க முறையில் திருத்தப்பட்டுள்ளது. மேலும் இச் சட்டத்தில், கடன்களுக்குப் பிணையாக நில அடமானத்தை வற்புறுத்தாமல், அரசு உத்தரவாதத்தின் பேரில் கடன்கள் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. இதன்படி நிலமற்றவர்களுக்கு அடமானப்பிணை இல்லாமல், பலவகைப்பட்ட காரியங்களுக்கு நிலவள வங்கிகள் கடன்கள் வழங்குவதற்காக ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள் தம் நிலங்களை வளப் படுத்தி நன்மை பெறும் பொருட்டு அவ்வாறு ஒப்படைக்கப் பெற்ற நிலங்களின் பிணையின் பேரில் கடன் வழங்குவதற்காக அவ்வகை நிலங்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடமானம் வைப்பதை அரசு அனுமதித்துள்ளது. அன்றியும், உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்ற நிலமற்றவர்களுக்கு வளர்ச்சிக் கடன்களைத் தொடர்ந்து வழங்குவதற்கு ஏதுவாகும் பொருட்டு, அவர்களிட மிருந்து நிலங்களைத் திரும்பப் பெறும் நிலை ஏற்படும் போது, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. உபரிநிலம் ஒப்படைக்கப் பெற்றவர்களுக்குக் கடன்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



13. கடன் வழங்குவதற்குத் திட்டம்.—குறுகிய காலக் கடன் களையும் மத்திய காலக் கடன்களையும் 1980—81ஆம் ஆண்டில் 172 கோடி ரூபாய் அளவிற்கு வழங்க முதலில் திட்டமிடப்பட்டது. பின்னர் இத்திட்டம் 65 கோடி ரூபாய் அளவிற்குத் திருத்தப் பட்டது. 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய வழங்கப் பட்ட கடன்கள் 15·79 கோடி ரூபாய் ஆகும். உறுப்பினர்களின் தவணை கடந்த கடன்கள் அதிகரித்தாலும், அதன் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கும் தகுதியை இழந்திருப்பதாலும் இந்த திருத்திய திட்டத்தைக்கூட நிறை வேற்ற இயலாது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையில் 1981—82-ஆம் ஆண்டில் 130 கோடி ரூபாய் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட காலக் கடன்களைப் பொருத்த வரையில், 1980—81ஆம் ஆண்டிற்கு முதலில் நிர்ணயித்த அளவு 17 கோடி ரூபாய் ஆகும். அது பின்னர் 8 கோடி ரூபாயாகத் திருத்தப்பட்டது 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய கொடுக்கப்பட்டது 3·87 கோடி ரூபாய். முன் சொன்ன அதே காரணங்களுக்காக இந்த இலக் கையும் எய்த இயலாது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில்

முன்னேற்றத்தை எதிர்பார்த்து, 1981–82ஆம் ஆண்டிற்கு 10 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. விவசாய மறு நிதி வளர்ச்சிக் கழகத் திட்டம்.—1968–69ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதின் மூலம், விவசாய வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதற்காக, பகுதி வாரியாக வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 36·63 கோடி ரூபாய் செலவிலான 82 சிறு பாசனத் திட்டங்களும், 16·72 கோடி ரூபாய் செலவிலான 83 சிறு பாசனமில்லாத பிற திட்டங்களும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 4,937 நீர் இறைக்கும் மின்விசை இயந்திரங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக, மாநில நிலவள வங்கி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976–77ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 2·30 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

15. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.—விவசாயிகளில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குவதில் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிமுறையின்படி மொத்தக்கடன் தொகையில் 20 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தமிழகத்திலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், 1979–80ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்களுக்கு 49 சதவீதம், அதாவது 20·87 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளன. 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் '80 முடிய 5·67 கோடி ரூபாய் குறுகியக் காலக் கடன்களும் 2·16 கோடி ரூபாய் மத்திய காலக் கடன்களும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டன. இவை மொத்தம் வழங்கப்பட்ட குறுகிய கால மத்திய காலக் கடன்களில் முறையே 42 சதவீதமும், 95 சதவீதமும் ஆகும். நீண்ட காலக் கடன்களில், வழக்கமான திட்டத்தின்கீழ் வழங்கும் கடன்களில் 20 சதவீதத்தையும் விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் உதவும் திட்டங்களின் கீழ் 60 சதவீதத்தையும் நலிந்த பிரிவினர் பெறுகின்றனர். வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினர் பங்கை உயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

16. உள் நிதி வசதிகள்.—மேன்மேலும் அதிக அளவில் விவசாயக் கடன்களை வழங்க ஏதுவாக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (சென்னை மாநகரிலுள்ளவை தவிர மற்ற) மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகிய



வற்றின் உள்நிதி வசதிகள் போதிய அளவிற்கு வளர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் பங்கு மூலதனம் (அரசு பங்கு மூலதனம் நீங்கலாக) 1978–79ஆம் ஆண்டு இறுதியில் 59·59 கோடி ரூபாயாக இருந்தது. 1979–80ஆம் ஆண்டு இறுதியில் 60·70 கோடி ரூபாயாக அதிகரித்தது. ஆனால் அது அதிகமாக இருந்த பங்கு மூலதனத்தைக் கடன்களுக்கு சரிக்கட்டியதின் காரணமாக 1980-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 58·17 கோடி ரூபாயாக குறைந்தது. அவற்றின் மொத்த வைப்புத் தொகை 1978–79-ம் ஆண்டு இறுதியில் 267·24 கோடி ரூபாயாக இருந்தது. 1979–80-ம் ஆண்டு இறுதியில் 312·92 கோடி ரூபாயாக உயர்ந்தது. இது 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 344·91 கோடி ரூபாயாக மேலும் உயர்ந்தது. முப்பது ஆயிரம் ரூபாய் வரையில் உள்ள வைப்புத் தொகைகளுக்கான வைப்புத் தொகைகள் காப்புறுதித் திட்டம் மாநிலத்தில் பல மட்டங்களில் உள்ள 145 கூட்டுறவு வங்கிகளுக்கு, 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

17. அரசு பங்கு மூலதனம்.—கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் பெறுவதற்குத் தகுதி உடையனவாக இருப்பதாக இவற்றின் பங்கு மூலதனத்தில் அரசும் முதலீடு செய்து வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியும் இதற்காக தேசிய விவசாயக் கடனுதவி (நீண்ட கால செயல்முறைகள்) நிதியிலிருந்து, மாநில அரசுக்கு நிதி உதவியளித்து வருகிறது. நிலவள வங்கிகள், நகர வங்கிகள் உட்பட இக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 28 கோடி ரூபாயாக இருந்தது.

18. மாநில நிலவள வங்கிக்கு உதவி.—மாநில நிலவள வங்கி, கடனீட்டுப் பத்திரங்கள் வாயிலாக நிதி திரட்டுகிறது. மாநில அரசு, மத்திய அரசு, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பிற நிறுவனங்கள் இப்பத்திரங்களை வாங்கி நிதி வழங்குகின்றன. இவ்வகைப் பத்திரங்களின் பேரில் மாநில அரசு நிதி வழங்கி 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் நிலுவையாக இருந்த தொகை 15·41 கோடி ரூபாயாகும். 1981–82 ஆம் ஆண்டில் மாநில அரசு கடனீட்டுப் பத்திரங்களுக்கு நிதி வழங்குவதற்காக 60 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. தவணை கடந்த கடன்கள் பெருகியது காரணமாக மாநில நிலவள வங்கிக்கு ஏற்பட்ட கடினமான நிலையிலிருந்து அது மீளுவதற்கு உதவும் வகையில் இவ்வங்கிக்கு அரசு வழிவகை முன்பணம் 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இவ்வங்கிக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த வழிவகை முன்பணமான 7 கோடி ரூபாயையும் வட்டியையும்

வசூலிப்பதையும் மாநில அரசு தள்ளி வைத்துள்ளது. மேலும் 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய காலம் முடிந்த கடனீட்டுப் பத்திரங்களின் பேரில் அரசுக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருந்த 5·15 கோடி ரூபாயை மாநில நிலவள வங்கியில் பங்கு மூலதனமாக அரசு மாற்றியமைத்துள்ளது. 1979ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு காலம் முடிந்து, ஆனால் 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் திருப்பிச் செலுத்தப்படாதிருந்த கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பான 4·82 கோடி ரூபாய், 1982ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு திருப்பிச் செலுத்தப்படுவதையும் அரசு அனுமதித்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு கொடுத்துள்ள உத்தரவாதத்தின்படி மாநில நிலவள வங்கியின் 30–6–79-ல் ஐந்து ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் தவணை தவறி நின்ற கடன்களின் தனிக் கணக்கில் 1978–79ஆம் ஆண்டு வரையில் வசூலில் குறையாக நின்ற 2·88 கோடி ரூபாயை அரசு மானியமாகத் தந்தது. புகளூர் ஆற்று நீர்ப்பாசனச் சங்கம், கரூர் கூட்டுறவு நிலவள வங்கிக்கு கொடுக்கப்பட வேண்டியும், அவ்வங்கி மாநில நிலவள வங்கிக்கு கொடுக்கப்பட வேண்டியும் இருந்த கடன் அசல் தொகையாகிய 1·25 கோடி ரூபாயை அரசு, தாம் அளித்திருந்த உத்தரவாதப்படி அச்சங்கத்திற்கு வழங்கியுள்ளது. 1–4–68-க்குப் பிறகு நிலவள வங்கிகளிடமிருந்து கடன் பெற்றவர்களும் தம்முடைய கிணறுகள் பொய்த்திருந்தால் சலுகை பெறும் வகையில் பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து நிதியுதவி தருவதற்கான விதிகளை அரசு தளர்த்தியுள்ளது. இதுவரை 8·92 இலட்சம் ரூபாய் அளவிற்கு 670 பொய்த்த கிணறுகளுக்காக நிதி உதவி தரப்பட்டுள்ளது.

19. பயிர்க் காப்புறுதித் திட்டம்.—வெள்ளம், வறட்சி போன்ற பல இயற்கை இடர்களால் பயிர்கள் சேதமாகி, அதனால் ஏற்படும் நட்டத்தை விவசாயிகளுக்கு ஈடுகட்ட பயிர்க்காப்புறுதித் திட்டம் நெல் பயிருக்காக முன்னோடியாக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் தவணைக் கட்டணத்திலும், கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையிலும் 25 சதவீதம் பங்கு ஏற்று தமிழ்நாடு பயிர்க்காப்புறுதி நிதி ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் காப்புறுதி செய்துள்ளது. ஒரு விவசாயி காப்புறுதி செய்துகொள்ளக் கூடிய அதிக அளவு தொகை 2,000 ரூபாய் ஆகும். தவணைக் கட்டணம், சராசரி விளைச்சலைப் பொருத்து இடத்துக்கு இடம் மாறுபடும். பயிர் விளைச்சல் தேர்வாராய்ச்சியைப் பொருத்து, ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிர்ணயிக்கும் அளவிற்குக்கீழ் பயிர் விளைச்சல் ஆகின்ற இடங்களில் மட்டுமே இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படும். இழப்பீட்டுத் தொகை செலவிற்காக தமிழ்நாடு பயிர்க் காப்புறுதி நிதிக்கு மாநில அரசு மானியமாக ஒரு இலட்சம்



ரூபாய் வழங்கியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றியது பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | நெல் 2 1979–80 | நெல் 1 1980 | நெல் 2 1980–81 |
|---|---|---|---|
| வட்டங்களின் எண்ணிக்கை. | 17 | 6 | 7 |
| பயனடைவோரின் எண்ணிக்கை. | 6,955 | 2,283 | 1,757 |
| திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிலம். (ஏக்கரில்). | 12,566 | 4,406 | 4,110 |
| காப்புறுதி செய்யப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்). | 72·34 | 21·81 | 19·06 |
| வசூலிக்கப்பட்ட மொத்த தவணைத் தொகை (இலட்சம் ரூபாயில்). | 2·98 | 1·13 | 0·77 |
| (அ) ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் பங்கு. | 2·23 | 0·85 | 0·58 |
| (ஆ) தமிழ்நாடு பயிர்க் காப்புறுதி நிதியின் பங்கு. | 0·75 | 0·28 | 0·19 |

1979–80 நெல் 2 பயிருக்காகப் புள்ளி விவரத் துறை கிராமங்களில் நடத்திய பயிர் விளைச்சல் தேர்வாராய்ச்சி, திருத்தணி, மதுராந்தகம், விழுப்புரம், ஆத்தூர் மற்றும் நாமக்கல் வட்டங்களில் விளைச்சல் காப்புறுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கும்கீழ் இருந்ததைத் தெரிவித்தது. இதனால் கொடுக்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை 4·51 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் தமிழ்நாடு பயிர்க்காப்புறுதி நிதியின் பங்கு 1.13 இலட்சம் ரூபாய் ஆகும். மேற்சொன்ன ஐந்து வட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் 1979–80 நெல் 2 பயிருக்காக பயன் பெறுவோர் 2,729 பேர்கள். எல்லா கிராமங்களிலும் 1980 நெல் 1 பயிருக்காக நடத்திய பயிர் விளைச்சல் தேர்வாராய்ச்சியின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

20. விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்.—மாநிலத்தில் 26 விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கங்கள், சாகுபடிக்காகவும், துணைத் தொழில்களுக்காகவும், கடன்கள் வழங்குவதும், பயிர்ப்பாதுகாப்பு, மண் மாதிரிகளையும், நீர் மாதிரிகளையும் சோதனை செய்தல், மாதிரிப் பண்ணைகள் அமைத்தல் போன்ற பணிகளைச் செய்வதும் அல்லாமல் பால் பண்ணை அமைத்தல், கட்டை வண்டி தயாரித்தல், கோழிப் பண்ணை நடத்துதல், பட்டுப்புழு வளர்த்தல், மணிலா, பருத்தி மற்றும் காப்பி விதை விற்பனை செய்தல், டின் கலன்கள்

தயாரித்தல் போன்ற பல சிறப்பட்ட நடவடிக்கைகளுக்கான
தனித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றன.

**கடன் நிவாரணச் சட்டத்தால் ஏற்பட்ட நிதிவசதிக் குறைவைத் தீர்ப்பதில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு.**

21. கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு நிறுவன
அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகி
இதனால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு
தீர்ப்பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், நகை ஈட்டின்
பேரில் கடன்கள் வழங்குவது மூலம் முக்கிய பங்கு வகித்து
வருகின்றன. 1.119 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும்,
மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 372 கிளைகளும்,
128 கூட்டுறவு நகர வங்கிகளும், இவற்றின் 12 கிளைகளும் ஆக
1631 கூட்டுறவு அமைப்புகள் தற்பொழுது நகைக் கடன்
வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. நகை ஈட்டுக் கடன்களின் பேரில்
கடன்தாரர்களிடமிருந்து வாங்கும் வட்டி ஆண்டு ஒன்றுக்கு 15
லிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. 1979–80ஆம்
ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய நகை ஈட்டுக்
கடன்களின் அளவு 111·42 கோடி ரூபாய் ஆகும். இதனால் பயன்
அடைந்தவர்கள் 9·81 இலட்சம் பேர்கள். 1980-81ஆம் ஆண்டில்
டிசம்பர் 80 முடிய கூட்டுறவுச் சங்கங்கள் 85·10 கோடி ரூபாய்
அளவிற்கு 7·02 இலட்சம் பேர்களுக்கு நகை ஈட்டுக் கடன்களை
வழங்கியுள்ளன. 1981–82ஆம் ஆண்டிற்கான இலக்கு 130 கோடி
ரூபாய். மாநிலம் முழுவதிலும், அநேகமாகக் கிராமப்புறங்களில்,
1,631 கூட்டுறவு அமைப்புகளில் நகைக் கடன்கள் வழங்குவது
மூலம், கூட்டுறவுச் சங்கங்கள், நலிந்த பிரிவினரின் அவசரக் கடன்
தேவைகளைப் பயன் விளையத் தக்க வகையில் நிறைவு
செய்கின்றன. இத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களை
ஊக்குவிக்கும் பொருட்டு விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்
இரும்புப் பெட்டகங்களை வாங்குவதற்காகவும், மத்திய
வங்கிகளின் கிளைகள் பெட்டக அறைகளைக் கட்டுவதற்காகவும்
அரசு நிதி உதவி அளித்து வருகின்றது.

**நகர்ப்புறக் கடன் வசதி.**

22. தமிழ்நாட்டில் 131 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்
பட்டு வருகின்றன. நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்ப்
புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்கும் குறுகிய கால, மத்திய காலக்
கடன்களையும் வங்கி வசதிகளையும் அளித்து வருவதுடன்
அவை, குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி
உதவி செய்யும் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இத்
திட்டத்தின்கீழ், அவை 1979–80ஆம் ஆண்டில் 112·60 இலட்சம்
ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளது. 1980–81ஆம்
ஆண்டில் டிசம்பர் 1980 முடிய அவை 105·63 இலட்சம் ரூபாய்
அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளன.



23. சென்னையில் உள்ள சென்னை மத்தியக் கூட்டுறவு
வங்கி 1980-ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நடமாடும் கிளையைத்
துவங்கியுள்ளது. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின்
நடமாடும் கிளை நாட்டில் மூன்றாவது ஆயினும், நடமாடும்
கிளை துவங்குவது தமிழ்நாட்டில் வங்கித் துறையின் வரலாற்றில்
ஒரு புதிய துணிகரச் செயல் ஆகும். இந்த நடமாடும் கிளை
எல்லாவித வங்கி வசதிகளையும் அளித்து வருவதுடன், சிறு சேமிப்பில்
தனி கவனம் செலுத்தி, தமது வாடிக்கையாளர்கள், குறிப்பாக
நலிந்த பிரிவுகளைச் சார்ந்தவர்கள் பிற்காலத்திற்காக சேமித்து
வைப்பதற்கு உதவுகின்றது. இக்கிளை மாநகரில், குறிப்பிட்ட
ஐந்து இடங்களில் எல்லா வேலை நாட்களிலும் குறிப்பிட்ட
நேரத்தில் இயங்கி, வங்கி வசதிகளைத் தருகிறது. இது துவங்
கப்பட்டதிலிருந்து ஏழு மாத குறுகிய காலத்தில் அதாவது
1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய, ஏழு லட்சம் ரூபாய்
அளவிற்கு வைப்புத் தொகையை வசூலித்துள்ளது.

**கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் இருப்பு வசதி. கூட்டுறவு விற்பனை.**

24. விவசாய விளை பொருட்களை விற்பனை செய்தல்.—
114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தமது உறுப்பினர்களின்
விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதில் அவர்களுக்கு
உதவி செய்து, அதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம்
பெறுவதில் அவர்களுக்குத் துணை புரிகின்றன. 1979–80ஆம்
ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்
களின் மதிப்பு 65·83 கோடி ரூபாய் ஆகும். இதில் பருத்தி
மட்டுமே 16·33 கோடி ரூபாய் அளவிற்கு விற்கப்பட்டது.
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1979–80ஆம் ஆண்டில்
28·86 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் பிழிந்த
மணிலாப் பிண்ணாக்கு, மஞ்சள், வெங்காயம் முதலிய பொருட்
களை ஏற்றுமதி செய்துள்ளது. 1980–81ஆம் ஆண்டில் சோவி
யத் யூனியனுக்கு 1·18 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தியையும்,
சோவியத் யூனியனுக்கும் சிங்கப்பூருக்கும் 0·23 கோடி ரூபாய்
மதிப்புள்ள எண்ணெய் பிழிந்த மணிலாப் பிண்ணாக்கையும்
ஏற்றுமதி செய்துள்ளது. 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் 1980
முடிய 46·07 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்
கள் விற்கப்பட்டன. 1981–82ஆம் ஆண்டிற்கான இலக்கு
70 கோடி ரூபாய். நெல், இதர தானியங்கள், எள், மிளகாய்,
தனியா, வெல்லம், மஞ்சள் போன்றவற்றை வாங்குவதில்
கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும், நுகர்வோர் கூட்டுறவுச்
சங்கங்களுக்கும் இடையில் இணைந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்
ளது. இது போன்ற ஏற்பாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளுடனும்
செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஆறு கூட்டுறவு விற்பனைச்
சங்கங்களும், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கமும்
பருத்தியை வாங்கி, விதை எடுத்து, பஞ்சைக் கூட்டுறவு நூற்
பாலைகளுக்கு விநியோகிக்கின்றன. விவசாயிகளுக்கும், நுகர்

வோருக்கும் இன்னும் அதிக அளவில் நன்மை கிடைக்கும் பொருட்டு, விவசாய விளை பொருட்களின் விற்பனையை அதிகரிக்க வழிவகைகள் ஆராயப்படுகின்றன.

25. சரக்கீட்டுக் கடன் வழங்குதல்.—விவசாயிகள் தம் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு, அவர்களுக்கு, அவர்களது விளை பொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் கடன்களை வழங்கி வருகின்றன. இது போன்ற ஈட்டுக் கடன்கள் 1979–80ஆம் ஆண்டில் 1·84 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன.

26. நெல் கொள்முதல்: ஆதார விலைத் திட்டத்தின்கீழ் 1980–81ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அரசின் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டுள்ளது. குறுவைப் பருவகாலத்தில் அது 3,000 டன் நெல் கொள்முதல் செய்தது. நடப்பு சம்பா பருவகாலத்தில் நெல்லின் தற்போதைய சந்தை விலை ஆதார விலையைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருப்பதால் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அப்போதைக்கப்போது உள்ள சந்தை விலைக்கு வெளிச் சந்தையில் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதில் ஈடுபட்டுள்ளது. ஒரு லட்சம் டன் நெல் வாங்குவதை இவ்விணையம் இலக்காகக் கொண்டுள்ளது. நாற்பது சத வீத லெவியிலிருந்து இதற்கு விலக்கு இருப்பதால், இவ்விணையம் நெல்லை அரைத்து நுகர்வோருக்கு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிராமக் கூட்டுறவு அங்காடிகள் வாயிலாகச் சந்தை விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்க நம்பிக்கை கொண்டுள்ளது.

27. இரசாயன உர விநியோகம்: விவசாய சேவைக்கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களில் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதாருக்கும் ரொக்கத்திற்கும் தம்முடைய 4,577 சில்லறைக் கடைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன. 1979–80ஆம் ஆண்டில் 25·82 கோடி ரூபாய் மதிப்புள்ள 1·85 இலட்சம் டன் உரங்கள் விநியோகிக்கப்பட்டன. 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 16·23 கோடி ரூபாய் மதிப்புள்ள 1·17 இலட்சம் டன் உரங்கள் விற்கப்பட்டன. உர விற்பனையில் குறைவேற்பட்டதற்குக் காரணம் பெருமளவிலான தவணை தவறிய கடன்களால் சங்கங்கள் வழங்கிய பயிர்க் கடன்கள் குறைந்தது ஆகும். 1981–82ஆம் ஆண்டில் 66 கோடி ரூபாய் மதிப்புள்ள 3·30 இலட்சம் டன் உரங்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



28. விற்பனை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்: கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு விற்றுமுதல் செய்யத் துணை புரியும் பொருட்டு, ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதன்கீழ், ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்டவாறு நிதி உதவி தரப்படுகிறது :—

1. விற்பனைக் களம் கட்ட (40 : 60 விகிதத்தில்) மானியமும் கடனுமாக 2 இலட்சம் ரூபாய்.
2. லாரி வாங்க மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காகத் தொடக்க நிலை உதவித் தொகையாக மானியம் 25,000 ரூபாய் (1981–82ல் இது 50,000 ரூபாயாக உயர்த்தப்படும்).
3. தரம் பிரிக்கும் கருவிகள் வாங்க மானியம் 10,000 ரூபாய்.
4. விற்பனைக்காகப் பொதுவில் சேர்க்கப்படும் விளை பொருட்களின் மதிப்பில் ஒரு சதவீதம் என்ற கணக்கில் உறுப்பினர்களுக்கு வைக்கப் பணமாகக் கொடுக்க மானியம் 2,000 ரூபாய்.

1979–80ஆம் ஆண்டில் ஐந்து சங்கங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி தரப்பட்டது. 1980–81ஆம் ஆண்டில் மேலும் ஐந்து சங்கங்களுக்கு நிதி உதவி தரப்பட்டது. 1981–82ஆம் ஆண்டில் மேலும் ஐந்து சங்கங்களுக்கு இவ்வுதவி தரப்படும்.

கூட்டுறவு பதப்படுத்துதல்.

29. அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், கடனாகவும் உதவி பெற்றுக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பதப்படுத்தும் பிரிவுகளை விற்பனை செதிக்குத் துணையாக நிறுவியுள்ளன. 30 அரிசி ஆலைகள், 24 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 18 பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள், 9 எண்ணெய் ஆலைகள் உட்பட 87 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன. 1980–81ஆம் ஆண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன், மாநில அரசு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அதன் திருவண்ணாமலை எண்ணெய் ஆலையில் சுத்திகரிப்புப் பிரிவு ஒன்றையும், சங்கரன்கோவில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பருத்தி விதை நீக்கும் ஆலை ஒன்றையும், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிலக்கடலை ஆலை ஒன்றையும் நிறுவுவதற்காக நிதியுதவியை ஒப்பளித்துள்ளது. கல்குளம் விளவங்கோடு வட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் தனது பழம் பதப்படுத்தும் நிலையத்தை விரிவுபடுத்துவதற்காகவும் அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது.

30. தென்னாற்காடு மாவட்டத்தில் விருந்தாசலத்தில்
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் நிறுவப்பட்டுள்ள
சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலையும், கோயம்புத்தூர்
மாவட்டத்தில் ஒண்டிப்புதூரில் கோயம்புத்தூர் மாவட்டக்
கூட்டுறவு விற்பனை விநியோகச் சங்கத்தால் நிறுவப்பட்டுள்ள
இன்னொரு சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலையும், சூரியகாந்தி
விதை போதிய அளவிற்குக் கிடைக்காததால், கடலை எண்
ணெய் தயாரித்து வருகின்றன. இவ்விரு ஆலைகளும் 1979–80
ஆம் ஆண்டில் 2,729 டன் கடலை எண்ணெய்யும், 1980–81ஆம்
ஆண்டில் டிசம்பர் முடிய 1,481 டன் கடலை எண்ணெயும்
தயாரித்துள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்
வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் 77·10
இலட்சம் ரூபாய் செலவில் நிறுவிய கடலை எண்ணெய் ஆலை
19–2–1980-ல் உற்பத்தி துவங்கியது. இது டிசம்பர் 80 முடிய
827 டன் கடலை எண்ணெயைத் தயாரித்தது.

31. துடியலூர் கூட்டுறவு விவசாயச் சேவைச் சங்கம்
1979–80ஆம் ஆண்டில் 67 இலட்சம் ரூபாயும், 1980–81ஆம்
ஆண்டில் டிசம்பர் முடிய 57 இலட்சம் ரூபாயும் மதிப்புள்ள பூச்
சிக் கொல்லி மருந்து தயாரித்தது.

32. அரிசி ஆலைகளை நவீனப்படுத்துதல் : திருத்தப்பட்ட
அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்துதலும், உரிமம் வழங்கு
தலும்) சட்டப்படி, பழைய அரிசி ஆலைகள் நவீனப்படுத்தப்பட
வேண்டும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடம் 30 அரிசி
அரைவை ஆலைகளும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களிடம்
நவீனப்படுத்த வேண்டிய நிலையில் 7 ஆலைகளும் உள்ளன.
ஆலைகளை நவீனப்படுத்துவதற்காகப் பகுதி மூலதனமாகவும்,
கடனாகவும், 1977–78ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவி தரப்
படுகிறது. 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 22 ஆலை
களை நவீனப்படுத்துவதற்காக 6·64 இலட்சம் ரூபாய் தரப்
பட்டுள்ளது. ஒரு ஆலைக்கு நிதி உதவி தருவது தேசியக்
கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஆய்வில் உள்ளது. மீதி
உள்ள 14 ஆலைகள் சங்கங்களின் சொந்த நிதியைக் கொண்டு
நவீனப்படுத்தப்படும். அரிசி அரைவை ஆலைகளை முழு அளவில்
பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக நெல்லை வாங்கி அரைப்பதற்கு
நிதி உதவி தரப்படுகிறது.

33. விதை மேம்பாட்டுத் திட்டம் : துடியலூர் கூட்டுறவு விவசாய
சேவைச் சங்கமும், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்
களில் உள்ள 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 170·50
இலட்சம் ரூபாய் செலவில், நெல், இதர தானியங்கள், பருத்தி,
வேர்க்கடலை, பயறு வகைகள் ஆகியவற்றின் தரமான விதை
களைப் பெருக்குவதற்காக விதை மேம்பாட்டுத் திட்டம்
ஒன்றை 1976–77ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகின்றன.
11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,000 டன் விதைகள்



இத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும். துடியலூர்
கூட்டுறவு விவசாயச் சேவை சங்கமும் 5 கூட்டுறவு விற்பனைச்
சங்கங்களும் இத் திட்டத்தின் முதற் கட்டத்தை செயல்படுத்தி
வருகின்றன. இம் முதற்கட்டத்தின் செலவு மதிப்பு முதலில்
93·50 இலட்சம் ரூபாயாக இருந்தது ; இயந்திரப் பொறிகளின்
விலை, கூலி முதலியன ஏறியதால், இது 130 இலட்சம் ரூபாய்க்கு
உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதல் கட்டத்திற்காக
அரசு பங்குத் தொகை 9·35 இலட்சம் ரூபாயும், கடன் 65·45
இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதற்
கட்டம் விரைவில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 77 இலட்சம் ரூபாய்
செலவில் நிறைவேற்றப்பட முதலில் திட்டமிடப்பட்டது. இது
இப்போது 116·40 இலட்சம் ரூபாய்க்குத் திருத்தப்படுகிறது.
இது 1981–82ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட எடுத்துக்
கொள்ளப்படும்.

## கிடங்கு வசதி.

34. கிடங்கு கட்டுதல் : கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்
றுக்கு 200 கிராமக் கிடங்குகளைக் கிராம அளவிலும், 5 விற்ப
னைக் கிடங்குகளை மண்டி அளவிலும் மாநில அரசிடமிருந்து
40 சதவீத மானியத்தையும், புது டெல்லியில் உள்ள தேசியக்
கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவீதக் கடனையும்
கொண்டு கட்டும் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. இதற்கு
முன்னர் 150/120 டன் கொள் திறனுடைய கிராமக் கிடங்கு
ஒன்றுக்கு 40,000 ரூபாய் உதவி தரப்பட்டது. இது இப்போது
107 டன் கொள் திறனுடைய கிராமக் கிடங்கு ஒன்றுக்கு 58,000
ரூபாயாகத் திருத்தப்பட்டுள்ளது. 1,000 டன் கொள்
திறனுடைய விற்பனை கிடங்கு ஒன்றுக்குத் தரப்படும் உதவி 2
இலட்சம் ரூபாயிலிருந்து 3·40 இலட்சம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்
டுள்ளது. 500 டன் கொள் திறனுடைய விற்பனைக் கிடங்கு
ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் உதவி தரப்படுகிறது. இரசாயன
உரங்கள், இன்றியமையாத நுகர் பொருட்கள், மற்றும் விவசாய
விளை பொருட்களைச் சேமித்து வைத்து விற்பனை செய்ய இக்
கிடங்குகள் பயன்படுத்தப்படுகின்றன. 1980ஆம் ஆண்டு டிசம்பர்
மாத இறுதியில் 3,142 கிராமக் கிடங்குகளும், 238 விற்பனைக்
கிடங்குகளும், 4·76 இலட்சம் டன் மொத்தக் கொள்
திறனுடன் இருந்தன. 59,000 டன் மொத்தக் கொள் திறன்
கொண்ட 403 கிராமக் கிடங்குகளும், 14 விற்பனைக் கிடங்கு
களும் கட்டப்பட்டு வருகின்றன. இக் கிடங்குகள் கட்டுவதைக்
கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில் மேற்பார்வைப் பொறி
யாளர் (கட்டுமானம்) தலைமையிலான கட்டுமானப் பிரிவு
மேற்கொண்டுள்ளது.

1981 மே 4

## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

35. நுகர் பொருட்கள் விநியோகம்: 3,523 பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், மற்ற எழுது பொருட்கள் வழங்கும், 2,682 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், மகளிருக்கு மட்டுமேயான 15 பண்டகசாலைகளும், தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கென 281 பண்டகசாலைகளும் அடங்கும். மாநிலத்தில் 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் செயல்பட்டு வருகின்றன. அவை, பிரதமப் பண்டகசாலைகள் இல்லாத அல்லது பிரதமப் பண்டகசாலைகள் செவ்வையாகச் செயல்படாத இடங்களில் சில்லறை விற்பனைக்காக 837 கிளைகளைத் தொடங்கியுள்ளன. நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பிரதமப் பண்டகசாலைகளும், 391 கிளைகளைத் தொடங்கியுள்ளன. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் 1979–80ஆம் ஆண்டில் செய்த சில்லறை விற்பனை மதிப்பு 140·92 கோடி ரூபாய் ஆகும்; 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய செய்த சில்லறை விற்பனை மதிப்பு சுமார் 110 கோடி ரூபாய் ஆகும். சென்ற ஆண்டில் 180 கோடி ரூபாய் மதிப்பிற்குச் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டது. 1981–82ஆம் ஆண்டிற்கான திட்டம் 192 கோடி ரூபாயாகும்.

36 மத்திய அரசிடமிருந்து நிதி உதவி: வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தீவிர வளர்ச்சிக்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் நுகர்வோர் திட்டங்களின்கீழ், மத்திய அரசு 1971–72ஆம் ஆண்டு முதல் நிதி உதவி அளித்து வருகிறது. 1971–72ஆம் ஆண்டிலிருந்து 1980–81ஆம் ஆண்டு முடிய கீழ்க்காணும் திட்டங்களுக்காக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது:—

1. ஒன்பது சிறப்பங்காடிகளை நிறுவுதல்; ஒரு சிறப்பங்காடியை விரிவுபடுத்துதல்; சிறப்பங்காடிகளின் 7 கிளைகளை நிறுவுதல்.

2. நாற்பத்தி மூன்று பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகளை நிறுவுதல்; ஒரு பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடியை விரிவுபடுத்துதல்.

3. நலிந்த பிரிவினருக்காகவும் தொழிற்சாலைத் தொழிலாளருக்காகவும் 66 சிறு கிளைகளை ஏற்படுத்துதல்; மாநகர்களிலும் நகர்களிலும் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினரில் மிகவும் நலிந்தவருக்கென்று 100 மிகச் சிறு கிளைகளை அமைத்தல்.





1981 மே 4]

4. இரண்டு மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்களை கோயம்புத்தூரிலும், சென்னையிலும் முறையே கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.

5. மூன்று கிளை மற்றும் விநியோகப் பிரிவுகளை மதுரையிலும் திருச்சியிலும், சேலத்திலும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் நிறுவுதல்.

6. பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்களுக்கான 36 பொதுச் சமையற் கூடங்களை அமைத்தல்.

7. பனியன் தொழிற்சாலை ஒன்றை திருப்பூரில் கோயம் புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும், பீங்கான் பாண்டப் பிரிவு ஒன்றை விருத்தாசலத்திலும், பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்றை சென்னையிலும் தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.

8. எட்டு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளை மறு சீரமைத்தல்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின்கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1979–80ஆம் ஆண்டில் 93·58 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி பெற்றன. 1980–81ஆம் ஆண்டில் பெற்ற நிதி உதவி 82·89 இலட்சம் ரூபாய் ஆகும்.

37. சிறப்பங்காடிகளும் சிறப்புச் சிற்றங்காடிகளும்: நுகர்வோர் பண்டகசாலைத் திட்டங்களைத் தொடங்கும் முனைப்புத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் 22 சிறப்பங்காடிகள் செயல் பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத்தைப் பெருக்க சிறப்புச் சிற்றங்காடிகள் எனப்படும் 146 நவீன சில்லறை அங்காடிகளைக் கூட்டுறவு மொத்த விற் பனைப் பண்டகசாலைகளும், பிரதமப் பண்டகசாலைகளும் திறந் துள்ளன. மன்னார்குடியில் ஒரு சிறப்பங்காடியும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கருங்குளத்திலும் வடுவூரிலும் இரு சிறப்புச் சிற்றங்காடிகளும் திறக்கப்படும். இவற்றிற்காக மத்திய அரசு அண்மையில் நிதி உதவி ஒப்பளித்துள்ளது.

38. நலிந்த பிரிவினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் பணி: பின்தங்கிய பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர், தொழிற் சாலைத் தொழிலாளர்கள் முதலியோருக்காக 10 சிறுகிளை களையும், மாநகரங்களிலும் நகரங்களிலும் குடிசைப் பகுதி களில் உள்ள நலிந்த பிரிவினருள் மிகவும் நலிந்த பிரிவினருக்கென 10 மிகச் சிறு கிளைகளையும் (மக்கள் அங்காடிகள்) தொடங்க 1979–80ஆம் ஆண்டில் மத்திய அரசு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி தந்துள்ளது. 1980–81ஆம்

ஆண்டில் 6 சிறு கிளைகளுக்காகவும், 5 மிகச் சிறு கிளைகளுக்காகவும் நிதி உதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது; தற்பொழுது 60 சிறு கிளைகளும் 95 மிகச் சிறு கிளைகளும் செயல்பட்டு வருகின்றன. இக் கிளைகள் 1979–80ஆம் ஆண்டில் 2·83 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. 1980–81ஆம் ஆண்டில் நவம்பர் முடிய இக்கிளைகள் செய்த விற்பனையின் மதிப்பு 3·29 கோடி ரூபாய் ஆகும். 1980–81ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 6 சிறு கிளைகளும், 5 மிகச் சிறு கிளைகளும் விரைவில் தொடங்கப்படும். மத்திய அரசு நிதி உதவி கிடைக்கும், மேலும் 3 சிறு கிளைகளையும், 5 மிகச் சிறு கிளைகளையும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

39. **மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள்:** நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் திறனை ஒருமுகப் படுத்தவும் பேரம்செய்யும் சக்தியைத் திறம்படுத்தவும், கூட்டுறவு சங்கங்களின் சில்லறை விற்பனை அங்காடிகளுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சுமுகமாகவும் தொடர்ச்சியாகவும், பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும், நாட்டில் முதன் முதலாக இரு மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்களைத் தமிழ் நாட்டில் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்தது. கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்காக 22·32 இலட்சம் ரூபாய் நிதி உதவியுடன் கோயம்புத்தூரில் நவம்பர் 1978இல் நிறுவப்பட்ட மண்டல நுகர்பொருள் விநியோக நிலையம் 1979–80ஆம் ஆண்டில் 13.79 கோடி ரூபாயும், 1980–81 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 12·61 கோடி ரூபாயும் மதிப்புள்ள பொருட்களை விநியோகித்தது. சென்னை, செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக 101 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் ஒரு மண்டல நுகர்பொருள் விநியோக நிலையத்தைத் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் நிறுவி வருகிறது. இந்த நிலையம் 1981–82ஆம் ஆண்டு ஆரம்பத்தில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

40. **நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை மறு சீரமைத்தல்:** திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் உட்பட எட்டு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் மறு சீரமைப்பிற்காக அரசு 111 இலட்சம் ரூபாய் நிதி உதவி தந்துள்ளது.

41. **நுகர்வோர் தொழில் பிரிவுகள்:** ஒன்பது எண்ணெய் ஆலைகள், 8 அரிசி ஆலைகள், 6 காப்பிப்பொடி பிரிவுகள் உட்பட 39 நுகர்வோர் தொழில் பிரிவுகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலை 1979–80ஆம் ஆண்டில் 52,220 டஜன் பனியன்களைத் தயாரித்தது. விருதாசலத்தில் உள்ள பீங்கான்



பாண்டப் பிரிவு 1979–80ஆம் ஆண்டில் 14,654 மற்றும் 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 20,408 மின் வலித்தடை போன்ற பாண்டங்களைத் தயாரித்தது. பலவின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று சென்னையில் 1·30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டு வருகிறது. சென்னையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் 5·05 இலட்சம் ரூபாய் செலவில் குறிப்பேடுகள் தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவுவது பற்றி மத்திய அரசுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

42. **மாநில அரசின் நிதி உதவி.**—நிர்வாகப் பணியாளர் செலவு, தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைத்தல் போன்ற காரியங்களுக்காக மானியமாகவும், நடைமுறை மூலதனத்தைப் பெருக்குதல், சரக்கு வண்டிகள் வாங்குதல், மேசை நாற்காலிகள் வாங்குதல், நவீன சில்லறைப் பிரிவுகள் நிறுவுதல், சிறப்பங்காடிகளுக்கு கட்டடம் கட்டுதல், நலிந்த நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளுக்குப் புத்துயிர் ஊட்டுதல் போன்ற காரியங்களுக்காக பங்கு மூலதனமாகவும், மற்றும் கடனாகவும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு நிதி உதவி தந்து வருகிறது. பல்வேறு மாநிலத் திட்டப் பணிகளின்கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டுக்காக 1979–80ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த நிதியுதவி 18·98 இலட்சம் ரூபாய் ஆகும். 1980–81ஆம் ஆண்டில் 36·89 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

43. **தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைத்தல்.** நுகர்வோருக்குத் தரமான பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு விற்பனை செய்யப்படுகிற உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்பொருட்களின் தரம் குறித்து முன்சோதனை செய்வதற்காக தரச் சோதனை ஆய்வுக் கூடங்கள் அமைக்க தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கும், திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கும் ஒவ்வொன்றுக்கும் 75,000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1980–81ஆம் ஆண்டில் மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு ஒரு தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்க நிதி உதவி தரப்பட்டுள்ளது.

44. **ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு அங்காடித் திட்டம்.**—கிராமப் பகுதிகளில் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய், புளி, [illegible], கடலை எண்ணெய் முதலிய இன்றியமையாப் பொருட்கள் நியாய விலையில் எளிதாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலை அங்காடி திறப்பதன் மூலம் மாநிலம் முழுவதிலும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களைப் பொது விநியோகம் செய்யும் திட்டத்தின்கீழ், கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட

கீழ்க்காணும் 11 மாவட்டங்களில், 5,387 முழுநேர அங்காடிகளும், 1,273 பகுதிநேர அங்காடிகளும் ஆக 6,660 அங்காடிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் திறந்துள்ளன :—

1. செங்கற்பட்டு
2. வட ஆற்காடு
3. சேலம்
4. கோயம்புத்தூர்
5. பெரியார்
6. நீலகிரி
7. திருச்சிராப்பள்ளி
8. புதுக்கோட்டை
9. மதுரை
10. ராமநாதபுரம் மற்றும்
11. கன்னியாகுமரி.

மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் மற்றும் தராசுகள் வாங்க ஒவ்வொரு கிராம அங்காடிக்கு 1,250 ரூபாயும் லாரி வாங்க 8 முதன்மைச் சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாயும் தொடரா இன மானியமாக அரசு வழங்கியுள்ளது. பணியாளர் செலவு, வாடகை மற்றும் இதர சில்லரைச் செலவுகளுக்காக முழு நேர அங்காடி ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாயும் பகுதி நேர அங்காடி ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்கு 1,800 ரூபாயும் ஆக தொடரும் மானியமும் அரசு வழங்குகிறது.

45. எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கெனவே நியாய விலைக் கடைகளாக நடத்தப்பட்டு, பின்னர் பல்பொருள் அங்காடிகளாக மாற்றப்பட்ட 4,441 அங்காடிகளையும் சேர்த்து தற்பொழுது 11,101 கிராம அங்காடிகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இவை இன்றியமையாப் பொருட்களை 1979–80ஆம் ஆண்டில் 13·66 கோடி ரூபாய் அளவிற்கும், 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 19·37 கோடி ரூபாய் அளவிற்கும் விற்றன. 1981–82ஆம் ஆண்டில் 25 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

46. பாடப் புத்தகங்கள் வழங்குதல்.—தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிடும் நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் விநியோகித்து வருகின்றன. 1979-80 கல்வி ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடமிருந்து 5·83 கோடி ரூபாய் மதிப்புள்ள 368 இலட்சம் நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களை விநியோகத்திற்காக வாங்கின. 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய கூட்டுறவுச் சங்கங்கள் 5·55 கோடி ரூபாய் மதிப்புள்ள 332 இலட்சம் நூல்களை வாங்கியுள்ளன. இந்த நூல்கள், 2,525 பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட, பல சில்லரைக் கடைகள் மூலமாக 36,589 பள்ளிகளில் பயிலும் 89 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.



47. கட்டுப்பாட்டு விலைத் துணி வழங்குதல்—மாநிலம் முழுவதிலும் கட்டுப்பாட்டு விலைத் துணி விநியோகம் கூட்டுறவுச் சங்கங்களிடம் விடப்பட்டுள்ளது, கிராமப்புற மக்கள் இத் துணியைப் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். 75 சதவீத துணி, கிராமப்புற பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படுகிறது. 1979–80 கூட்டுறவு ஆண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 6·12 கோடி ரூபாய் மதிப்புள்ள 24,478 பேல் துணியை விநியோகத்திற்காக எடுத்தது. நடப்பு கூட்டுறவு ஆண்டில் ஜனவரி 1981 முடிய, 4·02 கோடி ரூபாய் மதிப்புள்ள 16,096 பேல் துணி எடுக்கப்பட்டது.

48. குறிப்பேடுகள் வழங்குதல்.—தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வழங்கும் குறிப்பேடுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்து வருகின்றன. 1980–81 கல்வியாண்டில் ஜனவரி முடிய 1·91 ரூபாய் கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் கூட்டுறவுச் சங்கங்களால் விற்கப்பட்டுள்ளன.

49. சிமிட்டி வழங்குதல்.—கூட்டுறவுச் சங்கங்கள், சிமிட்டியையும் பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றன. 1979–80ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 1·46 இலட்சம் டன் சிமிட்டியைப் பொது மக்களுக்கு விநியோகித்தன. 1980–81ஆம் ஆண்டில் டிசம்பர் வரையில் 83,000 டன் சிமிட்டி விற்கப்பட்டுள்ளது.

50. மண்ணெண்ணெய் வழங்குதல்.—ஏனைய இன்றியமையாப் பொருட்களுடன் மண்ணெண்ணெயையும் பொது விநியோக முறையின்கீழ் வழங்குவதைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகஸ்ட் 1979 முதல் மேற்கொண்டுள்ளன. நகர்புறங்களில் உள்ள எல்லா நியாய விலைக் கடைகளும் கிராமப்புறங்களிலுள்ள எல்லா கிராம அங்காடிகளும் பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கின்றன. ஆகஸ்ட் 1979 முதல் மார்ச் 1980 வரையில், கூட்டுறவுச் சங்கங்கள் 624 இலட்சம் லிட்டர் மண்ணெண்ணெய் எடுத்து விநியோகித்தன. 1980–81ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் வரையில் 1,050 இலட்சம் லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

51. மின்சக்தி வழங்குதல்.—கிராமப்புறங்களில் மின்சக்தியை பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும், புது டில்லி கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நிதி உதவியுடன், கும்பகோணத்தில் ஒரு கிராமப்புற மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் பங்குத் தொகைக்கு அரசு 10 இலட்சம் ரூபாய் செலுத்தியுள்ளது. அன்றியும் புது டில்லி கிராமப்புற மின் இணைப்புக் கழகம் இச்சங்கத்திற்கு கட்டம் கட்டமாக கொடுக்க இருக்கும் திட்டக் கடன் 1·48 கோடி ரூபாயையும் இச் சங்கம் அக் கழகத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளித்துள்ளது. கும்பகோணம் நகர்

நீங்கலாக கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் வட்டங்களைக் கொண்ட நிலப் பகுதி தமிழ்நாடு மின் வாரியத்தால் ஜூலை 1980இல் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. நலிந்த பிரிவினருக்கான ''ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்கு'' திட்டத்தின்கீழ் 420 மின் இணைப்பு உட்பட, 1,500 மின் இணைப்புகளை இச் சங்கம் ஜூலை 1980 முதல் ஜனவரி 1981 முடிய காலப் பகுதியில் வழங்கியுள்ளது.

52. நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.—தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் பயனுக்காகவே சில கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெறுவதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. பிறவகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்குப் பல வசதிகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன. இச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், மானியம், துறைப் பணியாளர்களின் இலவச சேவை ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

53. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.—சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் தங்களுக்கென சொந்த வண்டிகளை வைத்துக்கொள்ள உதவும் பொருட்டு, சென்னை, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரத்தில் மூன்று சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. சென்னைச் சங்கம், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்று 104 சைக்கிள் ரிக்ஷாக்களைத் தம் உறுப்பினர்களுக்கு வாடகை செலுத்திச் சொந்தமாக்கிக் கொள்ளும் (Hire Purchase) முறையில் விநியோகித்துள்ளது. திண்டுக்கல் சங்கம், அரசிடமிருந்து கடனாகவும், மானியமாகவும் 1·50 இலட்சம் ரூபாய் பெற்று, 100 சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியுள்ளது. காஞ்சிபுரம் சங்கம் அண்மையில் தான் அமைக்கப்பட்டது. 1981–82ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள முக்கியமான நகரங்களில் மோட்டார் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கங்களை அமைத்து, 1,000 உறுப்பினர்களுக்கு 1,000 மோட்டார் சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்காக நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் விலையிலும் 25 சதவீத அளவிற்கு 1,125 ரூபாய் மானியமாக மாநில அரசால் தரப்படும். மீதித் தொகை கூட்டுறவுச் சங்கங்களால் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

54. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.—1980–81ஆம் ஆண்டில் நான்கு தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி தரப்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டில் ஐந்து தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கு 55,000 ரூபாய் வீதம் நிதி உதவி தரப்படும்.



55. நவீன முடி திருத்தகம்.—அமைப்பதற்காக ஒரு முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 21,000 ரூபாயும், நவீன உலர் சலவைப் பிரிவு அமைப்பதற்காக ஒரு சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 33,000 ரூபாயும் தரப்படும். இரண்டு உப்பளத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் 10,000 ரூபாயும் லாரி வாங்குவதற்குக் கடனும் மானியமும் வழங்கப்படும்.

56. பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.—பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் மிக அதிகமாக வாழும் பகுதிகளில், கடன், விற்பனை வசதி, ஏனைய பணிகள் அனைத்தும் ஒரே இடத்தில் அவர்களுக்குப் கிடைக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பது இருந்தன. தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்று களில் உள்ள பழங்குடியினருக்காக இயங்கி வந்த மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஜனவரி 1981ல் பெரிய அளவி லான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டன. பழங்குடியினரின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இச்சங்கங்களுக்கு அரசு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது. தமது கடன் வாங்கும் திறனைப் பெருக்கிக் கொள் வதற்காக, இப் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் 50,000 ரூபாய் வீதம், அரசு பங்கு மூலதன உதவி அளித்துள்ளது. சங்கத்தில் பங்குத் தொகை செலுத்தி கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் வீதம் மானியம் தரப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் தலைமையிடங்களிலும், கிளைகளிலும், கிடங்கு- ஆலைகம்-சில்லறை விற்பனைப் பிரிவு கட்டுவதற்காக, பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் அரசு நிதி உதவி அளித்துள்ளது. சாதாரணமாக சிறு விவசாயிகளுக்கு 10·5 சதவீத வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12 சதவீத வட்டிக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால், பழங்குடியினருக்குக் குறைந்த வட்டி வீதத்தில், அதாவது 4 சதவீத வட்டிக்கு, சாகுபடி மற்றும் துணைத் தொழில்களுக்காகக் கடன்களை இச் சங்கங்கள் வழங்குகின்றன. இயல்பான வட்டி வீதத்திற்கும், இக் குறைந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது. இச் சங்கங்களுக்கு மோட்டார் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு சங்கங்கள் அரசு உதவியுடன், எட்டு கிளைகளைத் தொடங்கியுள்ளன. பணியாளர் மானியம், இழப்பு நிதி மானியம், மேசை நாற்காலி மானியம், விலை ஏற்றத்தாழ்வு மானியம், மோட்டார் வண்டிகளின் பராமரிப்புக்கான மானியம், நிர்வாக இயக்குநரின் குடியிருப்பிடம் கட்ட மானியம் போன்ற இதர மானியங்களையும் அரசு இச் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. 1979–80ஆம் ஆண்டில்

ஒப்பளிக்கப்பட்ட 17·66 இலட்சம் ரூபாய் உட்பட, 1976–77 முதல் 1979–80 முடிய பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கல்ராயன் குன்றுகளில் இருந்த மூன்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு 49·55 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளித்துள்ளது. 1980–81-ஆம் ஆண்டில் அரசு 29·80 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளித்துள்ளது.

57. ஒன்பது பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் விவகார எல்லைகளில் உள்ள எல்லாப் பழங்குடியினர் குடும்பங்களையும் தம் உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 12 பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 30,072 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சங்கங்கள் ஆற்றிய பணிகள் பின்வருமாறு:—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன்கள். | வாங்கப்பட்ட சிறு காடுபடு பொருட்களின் மதிப்பு. | விநியோகிக்கப்பட்ட விவசாயத்திற்குத் தேவையான பொருள்களின் மதிப்பு. | விநியோகிக்கப்பட்ட நுகர் பொருட்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் ரூபாயில்.) | | |
| 1976–77 | 9·10 | 0·20 | 0·06 | 0·38 |
| 1977–78 | 34·23 | 8·52 | 1·23 | 7·70 |
| 1978–79 | 39·57 | 11·09 | 1·17 | 14·73 |
| 1979–80 | 38·31 | 8·66 | 5·74 | 21·64 |
| 1980–81 (டிசம்பர் முடிய). | 6·65 | 4·79 | 3·80 | 23·08 |

## கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.

58. கூட்டுறவுப் பயிற்சி.—இம் மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கவனித்து வருகிறது. இடைநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னையில் உள்ள நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தரப்படுகிறது. இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னையில் உள்ள மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், மாவட்டங்களில் உள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் தரப்படுகிறது.



59. கொள்கை பரப்புதலும், விளம்பரமும்: ஆங்கிலத்திலும் தமிழிலும் மாத இதழ்கள் வெளியிட்டும், கொள்கை பரப்புதலுக்காக ஏழு ஊர்திகளைப் பயன்படுத்தியும், அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடியும், நூலகங்கள் நடத்தியும், கூட்டுறவு பற்றிய நூல்களையும், சிறு வெளியீடுகளையும் வெளியிட்டும், மாநாடுகள், கருத்தரங்குகள் முதலியன நடத்தியும், பொருட்காட்சிகளில், பங்கு கொண்டும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் முயற்சிகள் பற்றி விளம்பரம் செய்து வருகிறது. இவ்வொன்றியம், கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் பற்றி இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் செய்தி பரப்பி வருகிறது. கூட்டுறவு கடன்களைத் திருப்பிச் செலுத்துவதன் அவசியம் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பற்றியும் உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் மூன்று சிறிய சினிமாப் படங்களை இவ்வொன்றியம் தயாரித்து வருகிறது. மாவட்ட அளவில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெளியிட்டும், நூல் நிலையங்கள் நடத்தியும் வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

## பொது.

60. சட்டத்திற்குத் திருத்தம்.—கூட்டுறவு இயக்கத்தின் சீரிய வளர்ச்சிக்காக 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தையும் 193 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கியின் சட்டத்தையும் தள்ளுபடி செய்து திரும்பச் சட்டமாக்கும் பொருட்டு, ஒரு முழுமையான சட்ட வரைவு 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் நாள் சட்டமன்றத்தில் திரும்பவும் கொண்டுவரப்பட்டது. அது தற்பொழுது பொறுக்குக் குழுவின் கவனத்தில் உள்ளது. அக்குழு முடிவெடுத்ததும் சட்ட வரைவு சட்ட மன்றத்தில் சட்டமாக்குவதற்காகக் கொண்டுவரப்படும். இப் புதிய சட்டத்தின் பேரில் கூட்டுறவுச் சங்கங்களின் குழுக்களுக்குத் தேர்தல்கள் நடைபெறும்.

61. கூட்டுறவு தொண்டர் அணி. இந்தியாவில் முதல் முதலாக, நமது மாநிலத்தில் கூட்டுறவுத் தொண்டர் அணி அண்மையில் நவம்பர் 1980இல் அமைக்கப்பட்டுள்ளது, இவ்வணியின் நோக்கம், இயற்கைப் பேரிடர் ஏற்படும் போதும், இதர சந்தர்ப்பங்களிலும் கூட்டுறவாளர்களின் முயற்சிகளை சமூக சேவையில் ஈடுபடுத்துவது ஆகும். இது மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1980இல் சென்னையில் கொண்டாடப்பட்ட 27வது அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரத்தின் போதும், ஜனவரி 1981இல் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் இவ்வணி

சேவை செய்துள்ளது. சென்னையில் 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் நடைபெற்ற குடியரசு நாள் அணிவகுப்பிலும் இது கலந்து கொண்டது. தீயணைத்தல், முதலுதவி மற்றும் பிணியாளர்களை வீட்டில் பேணுதல், வெள்ள நிவாரணப் பணிகள் முதலியவற்றில் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

62. கூட்டுறவாளர்கள் இரத்த நன்கொடை செய்தல்.—நவம்பர் 1980இல் அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டதை ஒட்டி, சென்னை பொது மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு நூறு கூட்டுறவாளர்கள் மனமுவந்து இரத்த நன்கொடை செய்தனர்.

63. உடல் ஊனமுற்றோருக்கு உதவி.—1981ஆம் ஆண்டு உலக ஊனமுற்றோர் ஆண்டாகப் பாரெங்கும் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உடல் ஊனமுற்றோருக்கு 1978ஆம் ஆண்டிலிருந்தே உதவி புரிந்து வந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னை மாநகரில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், ஆண்டுதோறும் கிடைக்கிற இலாபத்திலிருந்து வைக்கப்பட்டுள்ள தம் பொது நல நிதியிலிருந்து 76,000 ரூபாய் மதிப்பிற்கு சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை 184 உடல் ஊனமுற்றோருக்கு வழங்கின.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**செவ்வாய்க் கிழமை, 1981 மே 5.**

**சித்திரை 23, துன்மதி-திருவள்ளுவர் 2012.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு.''

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**1979 ஆம் ஆண்டில் மின்வாரியம் நடத்திய நேரடித் தேர்வு.**

*வினா எண் 967 திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக மின் வாரியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதியினருக்கு வேலை தருவதற்காக 1979ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற நேரடித் தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : இதுவரை 62 பேர்களுக்கு வேலை நியமன உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதுவரையில் குறிப்பிட்ட நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்டவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று முன்பு குறிப்பிடப்பட்டது. அந்தத் துறையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய ரிசர்வேஷன் கொடுக்கப்படவில்லையா ? அமைச்ச

ரவர்கள் முன்பு சபையிலே தெரிவிக்கின்றபோது 130 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி யானால் அதன்படி ஏன் கொடுக்கப்படவில்லை? மின் துறையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சதவீதம் கொடுக்கப் படவில்லை என்றால் ஏன் இவ்வாறு குறைந்த நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது? தகுதி பெற்றவர்கள் இருந்தும் ஏன் கொடுக்கப்படவில்லை, அதிலே ஏற்படும் காலதாமதத்திற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்ற முறை 140 பேர்களுக்கு வேலை தரப்படும் என்று சொன் னேன். அவர்களில் 62 பேர்களுக்கு உத்தரவுகள் அனுப்பப் பட்டுள்ளன. மீதி 78 பேர்களுக்கும் உத்தரவுகள் அனுப்பப்படும். ஆனால் அந்தத் துறையிலே மீதிப்பேர்களுக்கும் ஏன் வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். வேலைக்கு இடம் காலியில்லாததால்தான் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மின்சார வாரியத்திலே ஏற்கனவே பணியாளர்கள் சர்ப் ளஸ்ஸாக, இந்தக் குறிப்பிட்ட தேர்வினை நடத்துவதற்கு முன்பு இருந்தார்கள் என்பது உண்மையா? அப்படி இருந்தும் எந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது, பின்னர் எந்த அடிப்படை யிலே அந்த சிக்கல் நிவர்த்தி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, இத்தகைய நியமனங்கள் பற்றி எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதில்லை. இது மின்வாரியமே செய்யக்கூடிய காரியமாகும். 1980ஆம் ஆண்டு 265 இளநிலை உதவியாளர்கள், 45 காசாளர்கள், 60 பண்டகசாலைக் காப்பாளர்கள் ஆகி யோருக்கான பதவிகள் காலியாகும் என்று எதிர்பார்த்து வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு பட்டியலை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனால் தொழிலாளர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஏற்கனவே இருப்பவர்களுக்கு பணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டபின் இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்றால் ஏற்கனவே பணியாற்றியவர்கள் சர்ப்ளஸ் ஆக ஆகிவிட்டார்கள். அதாவது கூடுதலாக ஆகிவிட் டார்கள். 680 இளநிலை உதவியாளர்களும், 100 காசாளர்களும் உபரியாக ஆகிவிட்டார்கள். ஆகவே பண்டகசாலை காப்பாளர் கள் என்ற இரண்டாம் நிலைப் பதவிகள் காலியாக இருந்தன. அந்த இடங்கள்தான் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 140 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன.



திரு. எல். இளையபெருமாள்:—தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் 265 இளநிலை உதவியாளர்கள், 45 காசாளர்கள், 60 பண்டகசாலைக் காப்பாளர்கள் பதவி காலி யாகும் என்று எதிர்பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அந்த மின்வாரியத்திலே ஆரம்ப காலத்திலிருந்தே தாழ்த்தப் பட்டவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய 18 சதவீதம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்பது உண்மைதானா? தேர்வு காலங்களிலே அந்த மின்வாரியம், அரசாங்கம் அனுப்பிய உத்தர வினை அலட்சியம் செய்ததின் விளைவாக அவ்வாறு தாழ்த்தப் பட்டவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கின்றது என்பது உண் மையா? குறிப்பிட்ட தகுதி வாய்ந்த மாணவர்கள், தாழ்த்தப் பட்ட மாணவர்கள் வந்திருந்தும் அந்தப் பதவிகள் இதுவரையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆரம்பக் காலம் எது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை கிறிஸ்து பிறந்தது முதற் கொண்டு கேட்கிறார்களோ என்பதும் புரியவில்லை. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்கு அங்கே போதிய சதவீதம் வேண்டும் என்ற அடிப்படையிலே காலியாகின்ற இடங்களில் 100-க்கு 100 தாழ்த்தப்பட்டவர்களுக் குத்தான் கொடுத்து வருகிறார்கள். ஆகவே ரிசர்வேஷன் என்பதில் பிரச்சினை ஒன்றுமில்லை. மொத்தத்திலே ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 18,000 பேர்கள் தாழ்த்தப்பட்ட வர்கள் இருக்கிறார்களா என்று கேட்பார்களானால் அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. அப்படி வராததற்குக் காரணம் ஆரம்ப காலம் என்று தாங்கள் எதைக் கருதுகிறீர்களோ, அதிலேயிருந்து தான் இது வரும்.

திரு. கோவைத்தம்பி:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு வேலை வாய்ப்பு தருவதில் எதிர்கால நடவடிக்கைகளில் ஏதாவது மாற்றம் செய்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—தலைவர் அவர்களே, அப்படி அனுப்பி இருந்தாலும் என்னுடைய துறைக்கு அனுப்ப மாட்டார்கள்.

## பாலாறு படுகை வட்டாரத்தில் மின் இணைப்புக்கான நிபந்தனைகள்.

* **வினா எண் 968** திரு. சி. கோபால் :—மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டம் பாலாறு படுகை வட்டாரத்தில் விவசாயிகள் மின் இணைப்புப் பெறுவதற்கு தனி நிபந்தனைகள் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** :—ஆம். பாசனத் துறையின் ஆணைக்கிணங்க பாலாறு படுகை வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கும் அனுமதியின் அடிப்படையில்தான் மின் இணைப்புகள் வழங்கப் படுகின்றன.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு படுகை வட்டாரத்திலே விவசாயிகள் மின் இணைப்புப் பெறுவதற்கு இருக்கிற நிபந்தனைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, எந்த ஒரு கிணற்றிலும் கீழ்க்கண்ட திறனுக்கு மேற்படும் பம்ப் செட்களைப் பயன்படுத்துதல் கூடாது. அது ஜீவ நீரூற்றுகள் 400 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ் பவர்; ஜீவ நீரூற்று வழிகள் 200 மீட்டரிலிருந்து 400 மீட்டர் வரை 5 ஹார்ஸ் பவர்; 400 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ்பவர்; மற்ற நீர் பிறப்பிடங்கள் 50 மீட்டருக்கு அப்பால் 100 மீட்டருக்குள் 9 ஹார்ஸ் பவர், 100 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ் பவர். புதிய பம்ப் செட் இணைப்பிற்கு அல்லது ஏற்கனவே இருக்கும் இணைப்பினை வேறு இடத்திற்கு மாற்ற மின்சார வாரியம் அனுமதி வழங்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அடிப்படையிலே அனுமதி அளிக்க வேண்டும்.

திரு. சி. கோபால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்புப் பெறுவதற்கு விவசாயிகள் நிலத்தடி நீர் சான்றிதழ் பெற வேண்டுமென்ற நிலையை நம்முடைய புரட்சித் தலைவர் அரசுதான் மாற்றியது. அதைப்போல், இங்கே குறிப்பிட்டு இருக்கிற சில நிபந்தனைகளையும் மாற்றி, மின் இணைப்பு தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே ஏற்கனவே ஆற்றுப் பாசனம், வாய்க்கால் பாசனத்தைப் பெற்று வருகின்ற விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த மின்சார பம்பு செட்கள் அமைக்கப்பட வேண்டும். அதற்காகவே



இந்த விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆற்றுப் பாசனத்தைப் பெற்று வருகின்றவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அரசு அதை மாற்ற இயலாது.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு படுகை வட்டாரத்தில் எவ்வளவு கிராமங்கள் மின் இணைப்புப் பெற முடியாமல் பாதிக் கப்பட்டிருக்கின்றன ? நிபந்தனைகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத கிராமங்கள் எல்லாம் இந்தப் பாலாறு படுகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தக் கிராமத்திலும் இன்னும் மின்சாரம் வழங்காமல் பாதிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. கிட்டத் தட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம். பாலாற்றுப் படுகையிலே சில பம்ப் செட்களுக்கு வழங்கப்பட முடியவில்லையென்று அதற்காகத்தான் இந்த விசேஷ சட்டங்கள் இருக்கின்றன, விதி முறைகள் இருக்கின்றன. அவற்றை மாற்றியமைத்து அவர்களுக்கு மின்சாரம் வேண்டுமென்றாலோ, அல்லது பாலாற்றுப் படுகைக்கும் அந்தக் கிராமங்களுக்கும் சம்பந் தம் இல்லையென்றாலோ, அதைச் சொல்ல வேண்டியவர் மாவட்ட ஆட்சித் தலைவர்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்தப் பாலாற்றுப் படுகை சான்றிதழ் பெற வேண்டி விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, குடி யாத்தம் தொகுதியைப் பொறுத்த வரையிலே பாலாற்றுப் படுகையை ஒட்டி 3, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்தச் சட்டம் இல்லை. ஆனால் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தள்ளி யிருக்கிற கிராமங்களுக்கு இந்தச் சட்டம் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இதனை அகற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, பாசன விதிகளை மாற்ற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பி னர்கள் பாசனத்துறை அமைச்சருக்கு அதுபற்றி விரிவாகக் கடிதம் எழுதலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதிய மின் இணைப்புகள் கொடுக்கக் கூடாது என்று உத்தரவுகள் எதுவும் அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுப்பப்பட்டதற்கான காரணங்கள் என்ன ? அது எப்பொழுது தளர்த்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு இரவில்தான் கொடுக்கப்படுகிறது. பகலிலே கொடுப்பதில்லை. இதனால் இரவு வயலுக்குப் போகும்போது பாம்பு கடித்து இறந்துவிடுகிறார்கள். இரவில் வெட்டு, குத்தெல்லாம் நடக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 969 திரு. க. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் 33 KV மின் நிலையம் (Transformer) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) 110/11 கே.வி. மின் நிலையம் ஒன்று ரூபாய் 47 இலட்சம் செலவில் அஞ்சு கிராமத்தில் அமைப்பதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 970—திரு. ம. சுந்தரம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் ஒரு புதிய தொழிற்பேட்டை ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோரிடமிருந்து குறைந்தது பத்து விண்ணப்பங்களாவது வருமாயின் தொழிற்பேட்டை அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் எடுக்கப்படும்.

[முற்பகல் 9-10]

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் அதற்காக விண்ணப்பித்தால் அரசு ஆலோசிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதாலும், அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலேயும் அரசே முன்வந்து தொழிற்பேட்டையை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுதான் அங்கே தொழிற்பேட்டை கட்ட முடிவெடுத்திருக்கிறது. 'சிட்கோ' மூலம் கட்டப்படும். தொழில் முனைவர்கள் முன்வந்தால் அரசு கட்டிக் கொடுக்கும்.

பத்திரப் பதிவுத் துறையின் துணைப்பதிவாளர் பதவிகளுக்கான நேரடித்தேர்வு முறை.

*வினா எண் 971: திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பத்திரப் பதிவுத் துறையின் சப்-ரிஜிஸ்தரார் பதவிகளுக்கு நேரடித் தேர்வு செய்யும் முறையைக் கைவிடுவதற்கு அரசிற்கு வேண்டுகோள் வந்ததுண்டா?

(ஆ) ஆம் என்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சப்-ரிஜிஸ்டிரார் பதவிக்கு அசிஸ்டென்டுகளுக்கு பிரமோஷனுக்கு இப்போது ஸ்டாக்னேஷன் பீரியட் 23 வருடத்திலே இருந்து 25 வருடங்கள் வரை இருப்பதன் காரணமாக அவர்

களுடைய பிரமோஷன் வாய்ப்புகள் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால், இன்று நடைமுறையில் இருக்கக்கூடிய ரேஷியோ 1:2 என்பதை 1:3 ஆக மாற்றி அவர்களுக்கு விரைவிலே பிரமோஷன் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளையும் வைத்துக்கொண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் இப்படிப்பட்ட ஒரு சலுகை செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? மூன்று வருட காலம் அங்கே நேரடியாக வெளியிலே இருந்து ஆட்களை ரெக்ரூட்மெண்ட் செய்வதற்குப் பதிலாக, பிரமோஷன் கொடுத்து 3 வருட காலம் பிரமோஷன் மட்டும் கொடுக்கப்பட்டது என்பதோடு அதற்குப் பிறகு 1:2 என்பது 1:3 என்று மாற்றி கொடுக்கப் பட்டது. இது போன்று கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் அமல்படுத்தியிருப்பதன் காரணமாக இந்தத் துறையிலேயும் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி இன்று சப்-ரிஜிஸ்டிரார் களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரமோஷன் வாய்ப்பினை அதிகப் படுத்த, ஏற்கனவே மற்ற துறைகளிலே இப்படி செய்வதன் காரண மாக, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி யதைப் போல ஒரு பிரத்யேகமான சூழ்நிலையில், அதுவும் குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், வணிகத் துறையில் ஒரே நேரத்தில் அதிகமான எண்ணிக்கையில் நேரடி நியமனங்கள் செய்யப்பட்டது. அதன் விளைவாக பதவி உயர்வு தடைப்பட்டது. எந்த விகிதத்தில் போட வேண்டுமோ அந்த விகிதத்தில் போடாததினால் இந்தத் தவறுகள் நேர்ந் திருக்கின்றன. இவை ஏற்கனவே நடைபெற்றிருந்தது. எனவே பதவி உயர்வில் ஏற்பட்ட தேக்கநிலையைப் போக்க 3 ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த ஆணை முந்தைய நிலைக்குக் கொண்டு செல்ல வகை செய்யும்.

ஆனால் சார்பதிவாளர்களைப் பொறுத்தவரையிலும், அந்த விகிதப்படிதான் அதாவது 1:2 என்ற விகிதப்படிதான் கொடுக்கப் படுகிறது. அதிக எண்ணிக்கையில் நேரடி நியமனம் செய்யப்பட வில்லை. ஆனால் உங்களுக்குத் தெரியும், நேரடி நியமனம் செய்வதன் நோக்கமே இன்றைக்கு அரசினுடைய கொள்கைப்படி 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மற்றும் உள்ள 50 சத வீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.



அப்படி நேரடி நியமனம் தடை செய்யப்பட்டால் அல்லது குறைக் கப்பட்டால் சமுதாயத்திலே உள்ள பின்தங்கிய பகுதியினருக்கு (வீக்கர் செக்ஷன்ஸ்) அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு துறையிலே பதவி உயர்வு என்பது மிகுந்த பலகீனமானதாக இருக்கிறது. உதவியாளர்கள் சார் பதிவாளர்களாக வரவேண்டும் என்று சொன்னால், ஏறத்தாழ 15 ஆண்டுக்காலம் பிடிக்கிறது. அதைபோல, ஒரு இளநிலை உதவியாளர் சார்பதிவாளராக வரவேண்டும் என்று சொன்னால் 25 ஆண்டுகாலம் பிடிக்கிறது. நேரடி நியமனம் செய்யப்படுவதால் அனுபவசாலிகள் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை இருப்பதால்—நேரடி நியமனமே தேவையில்லை என்று நான் வாதிடத்தயாராக இல்லை. ஆனாலும் கூட அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் அடிப்படையில், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி தேர்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக அந்தப் பணியாளர்கள் தரப்பிலிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அதனை அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற நேரத்தில் எதிர்காலத்தில் பதவி உயர்வைப் பெருக்குவதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். 1978 லே இந்தத் துறையில் 60 நபர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத் தில் இல்லை. நான் விசாரித்து அறிகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, சகோதரர் மணிமாறன் அவர்கள் அனுபவம் உள்ளவர்கள் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை உள்ளது என்று சுட்டிக்காட்டினார்கள். நம் முடைய மாண்புமிகு அமைச்சர் அனுபவரீதியாக உள்ளவர்களைப் பின்னுக்குத் தள்ளுவதைப்பற்றிச் சொல்லவில்லை. அரசாங்க

உத்தரவுப்படி நாற்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய, சேர வேண்டிய விகிதாச்சாரம் சேரவில்லை என்பது உண்மையா? அந்தத் துறையில் அந்த விகிதாச்சாரப்படி சேர்வதற்கு என்ன வழியை இந்த அரசு கடைப்பிடிக்கும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் சேராமல் இருக்கவில்லை. ஒரு நியதியைச் சொன்னேன். அரசாங்கத்தின் வழிமுறையைச் சொன்னேன்.

பொய்மான் குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண். —972—செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பொய்மான் கரடு என்ற சரித்திர பிரசித்தி பெற்ற குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அறிவிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—(அ) இல்லை. எந்த இடத்தையும் சுற்றுலா இடமாக அறிவிக்கும் அரசு வழக்கம் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்மான் கரடு என்ற இடத்தை ராமாயண காலத்தோடு ஒட்டிப்பேசுகிறார்களே, அதற்கு ஏதாவது சான்றுகள் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஆராய்ச்சியாளர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வியை அமைச்சரிடத்தில் கேட்பது நல்லதல்ல.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொய்மான்கரடு என்ற இடத்தில் தெரிகிற ஒரு மாயமான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பார்த்தால் தான் தெரிகிறது. அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலத்தில் பயிர் செய்கிற நேரத்தில் பார்வையாளர்களை பார்க்க விடாமல் அந்த நிலச்



சொந்தக்காரரர்கள் வேலிபோட்டு வைத்துவிடுவதாகச் சொல்கிறார்கள். பார்வையாளர்கள் அதை எந்தக்காலத்திலும் பார்ப்பதற்கு வசதி செய்கிற வகையில், அந்த இடத்தை அரசே கையகப்படுத்தி, அந்த இடத்தினை ஒரு பார்வையாளர் இடமாக உருவாக்க அல்லது ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே நெடுஞ்சாலைத் துறையினர் ஒரு தகவல் குறிக்கும் அடையாளப் பலகை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவல்படி அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது பற்றிய தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றிய தகவலைச் சேகரித்து, அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டிய துறையிடத்தில் சுற்றுலாத் துறை தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. ஆர். வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு சுற்றுலா இடமாக அறிவிப்பதில்லை என்று சொன்னார்கள். சுற்றுலா இடமாக அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் சுற்றுலா ஸ்தலமாக அரசு அறிவிக்கும் திட்டம் இல்லை என்று பதில் அளித்ததிலேயே அது அடங்கிவிட்டது. மீண்டும் அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிவேண்டுமென்று கேட்கிறார்கள். அறிவிப்பதற்கே திட்டம் இல்லை என்று சொல்லும்போது என்ன தகுதி வேண்டுமென்று கேட்பது சரியல்ல. என்றாலும் விளங்குவதற்காகச் சொல்கிறேன், அது இயற்கையிலேயே மக்களால் வரவேற்கப்பட்டு, மக்களைக் கவர்ந்த அந்த இடத்திற்கு மக்கள் செல்லுகின்ற தன்மை, சூழ்நிலைகளை எல்லாம் பெற்றிருந்தால் ஏற்கெனவே சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடும்.

நத்தம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

*வினா எண். 973 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம், நத்தம் கோவில்பட்டியில் ஒரு புராதன கைலாசநாதர் கோவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் மேற்படி கோவிலைப் பழுது பார்த்து புதுப்பிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) & (ஆ). மதுரை மாவட்டம், நத்தம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் 24-6-1971-ந் தேதிய குறிப்பில் ரூ. 75,800க்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ரூ. 16,008·67 செலவு செய்யப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகள் 1977-இல் இருந்து நடைபெறாமல் இருப்பதாலும், தற்போதுள்ள திருப்பணி குழு செயலற்ற நிலைமையில் இருப்பதாலும் இந்தக்குழுவை கலைத்து விட்டு புதியகுழு அமைத்து எஞ்சியுள்ள வேலைகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் சென்னையில் நட்சத்திர ஓட்டல்கள் கட்டும் திட்டம்.

*வினா எண். 974—திரு. எஸ். இராசாராம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நட்சத்திர ஹோட்டல்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் திட்டங்கள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ)— தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் கூட்டாகச் சேர்ந்து சென்னையில், முன்பு ஜனதா ஹோட்டல் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் ஒரு ஹோட்டல் வளாகம் (Hotel Complex) கட்டுவதற்கு ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே ஒரு நட்சத்திர ஹோட்டல் கட்டுவதற்கு அக்கழகத்தின் இயக்குநர் குழு தீர்மானித்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவரவர்களே, தனியார் துறையில் பல நட்சத்திர ஓட்டல்கள் சென்னையில் இருக்கின்ற காரணத்தால் இங்கே ஏழை எளிய மக்கள் தங்குவதற்கு குறைந்த வாடகையில் ஓட்டல்கள் கட்டுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் அளித்திருக்கிற விடையில் 'ஓட்டல் காம்பிளக்ஸ்' (consisting of economy class) என்று நடுத்தர வருமானம் உள்ளவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்கும் விடுதிகளை அங்கே அமைக்கும் திட்டம் அதிலே பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, அரசு வேலையாக ஏராளமான அரசு அலுவலர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தலைநகரான சென்னைக்கு அன்றாடம் வந்துபோகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு குறைந்த வாடகையில் ஏதாவது விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் சுற்றுலாத் துறையிலே விடுதிகள் அல்லது ஓட்டல்கள் கட்டுவதற்கு பதில் அளித்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே, அரசு அலுவலர்கள் தங்க விடுதி வேண்டுமென்றால் அரசின் பொதுப் பணித் துறைதான் அதுபற்றி முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறையில் இந்த கேள்வியைக் கேட்டால் தக்க பதில் கிடைக்கும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, நட்சத்திர ஓட்டல் என்றால் என்ன ? பெரிய ஓட்டல்கள், நடுத்தர ஓட்டல்கள் என்று பெயர் வரக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மத்திய அரசு இந்த ஓட்டல்களின் தர நிர்ணயத்தைப் பிரிப்பதற்காக 2 நட்சத்திரம், 3 நட்சத்திரம், 4 நட்சத்திரம், 5 நட்சத்திரம் என்று குறியிட்டு, குறிப்பிடுகிறார்கள். இரண்டு நட்சத்திர ஓட்டல் என்றால் என்னென்ன வசதி, 3 நட்சத்திரம் என்றால் என்னென்ன வசதி என்று அங்கே இருக்கிற தகுதிகள், வசதிகள், அமைப்புகள் ஆகியவைகளை அடிப்படையாக வைத்து இந்த குறியீடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்தக் குறியீடுகள் அடிப்படையில் 2 நட்சத்திர ஓட்டல், 3 நட்சத்திர ஓட்டல் என்று அழைக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னையில் கட்டப்படும் இந்த நட்சத்திர ஓட்டலுக்கு ஜனதா ஓட்டல் என்று பெயர் வைத்ததும், அதற்கு இப்போதுள்ள மத்திய சர்க்கார் எதிர்ப்பு தெரிவித்ததும் அதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்பதும் உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற அந்தக் கேள்விக்கு எந்தவிதமான ஆதாரமும் இந்த அரசிடம் இல்லை. முன்னாலே இருந்த அரசு இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாமெல்லாரும் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. இப்போது அது மாற்றுத் திட்டமாக பரிசீலனையில் இருந்து வருகிறது என்று மட்டும்தான் இந்த அரசிடம் தகவல் இருக்கிறது.

**வசிஷ்டர் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 975—திரு. இரா. திருமான் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏற்காடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் எப்போது ஆரம்பமாகும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ரூ. 14.00 இலட்சம் செலவில் செயல்படுத்த 1981–82 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதும் வேலை துவங்கப்படும்.

**திரு. இரா. திருமான் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

**மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை.**

* வினா எண் 976—திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் நகராட்சியினரால் ஆரம்பிக்கப்பட்ட மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை (காமராஜ் பைபாஸ் ரோடு) முடிவடையாமல் இருப்பதன் காரணம் என்ன ?



(ஆ) அத் திட்டம் நிறைவேற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? இதில் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை போடுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன் வராததே தாமதத்திற்குக் காரணம்.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ரூ. 1,79,170 கடனாக நகராட்சிக்குக் கொடுத்துள்ளது. திட்டம் முழுவதுமாக 1982–83-க்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 2,63,650. இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,41,650.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒப்பந்தக்காரர்கள் கிடைக்காத காரணத்தால் அந்த வேலையில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னதாக நினைக்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் ஏன் வருவதற்கு மறுக்கிறார்கள் ? நீண்ட நாட்களாகவே வேலை ஆரம்பிக்கப்பட்டும் நிறைவு பெறாமல் இருப்பதால் விருதுநகருக்குள்ளே போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருப்பதால் அரசு முனைந்து அந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு என்ன ஏற்பாடுகளை செய்ய இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான லாபம் கிடைப்பதில்லை. அதன் காரணமாகத்தான் பலர் பணிகளைச் செய்வதற்கு முன்வருவதில்லை. மேலும் தற்போது பொருட்களின் விலை அடிக்கடி ஏறிக்கொண்டிருப்பதால் அதற்கு ஏற்ற முறையிலே ஒப்பந்தக்காரர்களுக்கு அரசாங்கமும் பணம் கொடுத்தால்தான் வருகிறார்கள். இல்லை என்றால் வருவதில்லை. ஆகவேதான் இந்த நிலை. ஆனாலும் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**காவேரிப்பட்டணம் பேரூராட்சியின் வருமானம்.**

* வினா எண் 977—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தேர்வுநிலைப் பேரூராட்சியின் வருமானம் நிர்வாகச் செலவிற்கே போதுமானதாக இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் இரண்டு மைல் சுற்றளவின் பகுதிகளை இணைத்து இயங்கிக் கொண்டிருக்கும் சினிமா கொட்டகைகளின் வருமானத்தைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டத்தின்படி இவ்வாறு செய்வது சாத்தியமல்ல.

திரு. கே. ... சாமி : தலைவரவர்களே, காவேரி பட்டணம் பேரூராட்சி தற்போது வட்டத் தலைநகராகக் கூடிய தகுதி பெற்று வருகிறது. அங்கே அரசு அலுவலகங்களும், அலுவலர் குடியிருப்புகளும், தொழிற்கூடங்களும் ஏற்படக்கூடிய நல்ல வாய்ப்பு இருப்பதால் உடனடியாக அதாவது தேர்தலுக்கு முன்பாகவே அங்குள்ள சுற்றுப்புற பகுதிகளை காவேரிப்பட்டணம் பேரூராட்சியோடு இணைக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கேளிக்கை வரி. அந்தக் காவேரிப்பட்டணம் பேரூராட்சிக்கு கிடைக்குமா என்பதுதான். ஆனால் அப்போ இணைப்பைப் பற்றி அருமை நண்பர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ... சாமி : தலைவரவர்களே, இந்த காவேரிப் பட்டணம் நகரைச் சுற்றி ஐந்தாறு சினிமாக் கொட்டகைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. அதன்மூலம் வருகின்ற வருவாயைக் கொண்டு நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்குவதற்குரிய தகுதி அற்றதாக அதாவது பலம் இல்லாததாக கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. ஆகவே, கிராமம் நகரம் என்ற பாகுபாட்டை நீக்குகின்ற வகையிலே அதாவது சிறு நகரம், பெருநகரம் என்று சொல்லப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையிலே அங்கே சுற்றுப்புற கிராமங்களை எல்லாம் அரசு உடனடியாக காவேரிப்பட்டணம் பேரூராட்சியுடன் சேர்ப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, காவேரிப்பட்டணம் பேரூராட்சியின் எல்லைக்குள் ஒரு திரைப்பட அரங்கு கூட இல்லை. தற்பொழுது இரண்டு நடமாடும் திரை அரங்குகளும், பகுதி நிரந்தர திரைப்பட அரங்கு ஒன்றும் காவேரிப் பட்டணம் பேரூராட்சி எல்லையைச் சுற்றி உள்ள 2 கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ளன. கேளிக்கை வரி மூலமாக பெறப்படும் வருவாய் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கும், கேளிக்கை வரி மீதான மேல் வரி மற்றும் காட்சி வரி காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆகவே இதன்மூலமாக வருவாயை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.



## கரூர் நகராட்சி சாலைகளைப் பழுது பார்க்கும் திட்டம்.

* வினா எண் 978—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகராட்சி சாலைகள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக பழுது பார்க்கப்படாமல் மிகவும் சீர்கெட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு உள்ளது குறித்து அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நானே அவரிடத்தில் கொடுத்திருக்கிறேன். அந்த கரூர் நகராட்சியில் இருக்கிற சாலைகள் கடந்த 5 ஆண்டுகள் காலமாக பழுது பார்க்கப்படாத காரணத்தால், போக்குவரத்தே மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. ஆகவே அந்த ரோடுகளை டெண்டர் விட்டாலும்கூட, ரேட் கட்டுப்படியாகாது என்கிற காரணத்தால் ஒப்பந்தக்காரர்கள் கூட யாரும் முன் வருவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் பொதுப் பணித் துறையோ அந்த சாலைகளை எடுத்து பழுதுகளை சரிபார்க்கும் வகையில் அரசு ஆணை இடுமா என்று அறிய விரும்புகிறேன்?

(பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 1979-80ல் கூட 7 சாலைகள் செப்பனிடுவதற்காக எடுக்கப்பட்டது. 1980-81-ல் 5 பெரிய சாலைகளும் 25 சிறிய சாலைகளும் பழுதுபார்க்க எடுத்துக் கொள்ளப் பட்டன. 1981-82-ல் 73 சாலைகளை செப்பனிடுவதற்கு, நகராட்சியின் வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு உடனடியாக சாலைகள் அனைத்தும் பழுது பார்க்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலைகளைப் போடுவதற்குத் தேவையான தார் சரியாகக் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். தேவையான தார் கிடைக்க அரசு தேவையான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தார் பொறுத்தவரையில் பொதுவாகவே தமிழ்நாட்டுக்கு குறைவான கோட்டா தான் மைய அரசு மூலமாகக் கொடுக்கப் பட்டு வருகிறது. அதிகப்படியான கோட்டா வழங்க வேண்டும் என்று ஏற்கனவே மத்திய பெட்ரோலிய அமைச்சரிடத்தில் நேரிடையாக நானே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். அவர்களும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை பல்க் பிட்டமின் ஆகத்தான் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அதை பாக்கெட் பிட்டமின்னாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். உடனடியாக கொடுக்கப் படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கொடுத்த உடன் வேலைகள் தொடங்கப்படும்.

திரு. [illegible]. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகராட்சி சாலைகள் மட்டுமல்ல, பொதுவாக தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து சாலைகளுமே, தேசீய நெடுஞ்சாலைகள் நீங்கலாக எல்லா சாலைகளுமே பழுதுபட்டு வருகிறது. இன்னும் 4, 5 ஆண்டுகளுக்கு அப்படியே விட்டு விட்டால் நிச்சய மாக போக்குவரத்தே எங்கேயும் போகமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். இப்படிப்பட்ட ஒரு அபாயமான சூழ்நிலை ஏற்படுவதை தவிர்க்க, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த பாக்கெட் பிட்டுமனை கொஞ்சம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டு பெற்று, அனைத்து சாலைகளையும் பழுது பார்க்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் இருக்கக் கூடிய சாலை களை எல்லாம் உடனடியாக பழுது பார்க்க வேண்டும் என்று ஆணையாளரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதேபோல் மைய அரசு கொடுக்கக் கூடிய தாரைக் கூட அதிகமான அளவில் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற் கெனவே நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்து முதல்வர் புரட்சி தலைவர் அவர்கள் கூட நேரிடையாக மத்திய பெட்ரோலிய அமைச்சர் அவர்களுக்கு ஒரு டி.ஓ. லெட்டர்- நேர்முகக் கடிதம் எழுதி, கொடுக்கக்கூடிய கோட்டாவை அதிக மாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கென சீக்கிரமாக ஆணை ஒன்று மத்திய அரசிடமிருந்து பிறப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் கட்டிடங்கள் கட்டுவதானாலும், கழிப்பிடங்கள் கட்டுவதானாலும், பாது காப்பான சாலைகள், பழுது இல்லாத நிலையில் ஏற்படுத்தப்பட வேண்டுமானாலும், ஒப்பந்தக்காரர்கள் யாரும் அவ்வளவாக முன் வருவதில்லை. அதற்குக் காரணம் தமிழக சர்க்கார் அளிக்கும்



ரேட்டுகள் மிகக் குறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, இதை மனதில் கொண்டு, ஒப்பந்தக்காரர்கள் மனம் உவந்து முன் வந்து, ஒப்பந்தங்களை எடுக்கும் வகையில் அரசு அதற்கான ரேட்டுகளை உயர்த்திக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இருக்கிற நிலைமைகள் அனைத்தையும் கவனத்தில் கொண்டுதான் நாம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான கொள்ளை லாபம் அடிக்கிற சூழ்நிலையை அரசே ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலே அதிகம் கவனமாக இருக்கிறோம். ஆனால் பக்கத்து மாநிலங்களில் இருக் கிற ரேட்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழ்நாடு குறைவாகத்தான் கொடுக்கிறது என்ற காரணத்தால், தமிழகத்தில் இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் பக்கத்து மாநிலங்களுக்கு போகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவை களை கவனத்தில் கொண்டு, எவ்வளவு தூரம் உயர்த்திக் கொடுத் தால், ஒப்பந்தக்காரர்களுக்குக் குறைந்த லாபத்தை வைத்துக் கொண்டு, நல்ல திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த முடியுமோ, அதை அரசு ஆராய்ந்து வருகிறது.

கரூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண் 979—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கரூர் நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க (மின்வெட்டு காரணமாக) ஜெனரேட்டர் ஒன்றும், இரண்டு டீசல் என்ஜின்களும் வாங்க அனுமதி கேட்டு நகராட்சி அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : பொதுவாக மின்வெட்டு காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அந்த நகராட்சிக்கு ஒரு ஜெனரேட்டர் வாங்க அரசு முன்வருமா ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கரூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் கரூர் நகராட்சியின் நிதி நிலைமை நன்றாக உள்ளது. ஆகவேதான் ஆட்சித் தலைவர் கூட அந்த கரூர்

நகராட்சி உடனடியாக ஜெனரேட்டர்கள் வாங்கி பொருத்தி அதன்மூலம் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் அங்கே குடிநீர் பிரச்னை இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே கரூர் நகராட்சிக்கு உடனடியாக நிதி உதவி தேவை இல்லை இப்போது. அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாகவும் இல்லை. ஆகவே உடனடியாக அந்த நகராட்சியே தன் நிதியிலிருந்து ஜெனரேட்டர்ஸ் வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### திண்டிவனம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தி தொழிலாளர்கள்.

*வினா எண் 980—திரு. கே. எம். தங்கமணி : தங்கமணி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகராட்சியில் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தர எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட 12 நகர சுத்தி தொழிலாளர்களில் 6 நகர சுத்தி தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். மீதியுள்ள 6 நகர சுத்தி தொழிலாளர்கள் விடுப்பினால் ஏற்படுகின்ற காலி இடங்களில் (Leave Vacancy) தொடர்ந்து பணி செய்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள், ஆறு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆறு பேர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது கொடுக்க முடியும் என்ற நிலையில் தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் நிதி நிலைமை காரணமல்ல. வேண்டுமென்றே அவர்களை பழி தீர்க்கும் நோக்கத்தில் அது செய்யப்பட்டிருக்கிறது. காரணம் அங்கே அவர்களுக்கு உதவியாக வந்து அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கவில்லை என்ற கோபம் காரணமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமாகப் பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதைப் பற்றி தீர விசாரித்து உண்மையாக ஐந்தாறு ஆண்டுகளாக வேலை செய்து வந்த அந்தத் தொழிலாளர்களை தற்காலிக வேலையாட்களாக நியமிப்பது என்பது நியாயமல்ல என்பதை உணர்ந்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பழிவாங்கவேண்டும் என்ற நோக்கம் இருந்திக்குமேயானால் இப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொண்



டிருக்கமாட்டார்கள். ஆனால் 12 தொழிலாளர்களில் 6 பேர்கள் மீண்டும் காலியிடங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இன்னும் ஆறு பேர்கள் தற்காலியாக எப்போதெல்லாம் வேகன்சி வருகிறதோ அந்த நேரங்களில் அவர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த முயற்சிகள் எடுத்துக் கொண்டு வரப்படுகின்றன. இப்போது நிதிநிலைமை நன்றாக இருக்கிறது என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நல்ல முறையில் மறு பரிசீலனை செய்யப்பட்டு பழி வாங்கவேண்டுமென்ற நோக்கம் இல்லாமல்—அதிகாரிகள் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியிருக்குமானால் நிச்சயமாக, கண்டிப்பாக அதைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் மீண்டும் அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படி இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து ஆராயப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : நிதி நிலைமை காரணமாக அந்த ஆறு பேர்களை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நிதி வசதி உள்ள பல நகராட்சிகளில் ஊழியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அங்கே போதிய அளவு ஊழியர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பொறுத்து எழுப்பப்பட்ட கேள்வி. இன்னும் கூடுதலாக ஆள்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வினா மூலம் அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். இப்போது இருக்கக் கூடிய நிலைமையில் அங்கே போதும் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு நகரத்தில் அப்படிப் போதவில்லை என்று உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவிப்பார்களேயானால் அது குறித்து நிச்சயமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

### பர்கூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 981—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூரில் உள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் பெண் டாக்டர் போடுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஒரு மருத்துவ அலுவலரை நியமிக்க ஒட்டுமொத்த செயற்குறிப்பு ஒன்று மருத்துவப்பணி மற்றும் குடும்பநலத் துறை இயக்குநரிடம் ஆய்வில் உள்ளது.

திரு. செ. சிவகாமி : அந்த மருத்துவமனைக்கு எஸ்டிமேட் எவ்வளவு ? எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அது மருத்துவ மனை அல்ல, மருந்தகம். இப்போது அது ஒரு டிஸ்பென்சரி யாக இருக்கிறது. படுக்கைகள் கூட அங்கே இல்லை. ஒரே ஒரு மெடிக்கல் ஆபீசர், டாக்டர் கே. நடராஜன் அங்கே இருக் கிறார். அதை ஒரு பெரிய மருத்துவமனையாக ஆக்க உத்தேசம் உண்டா, எப்போது என்று கேட்கிறார்கள். இப்போது அந்த உத்தேசம் இல்லை. இன்னும் அதன் அருகில் பலயிடங்களில் மருத்துவமனைகள் இருக்கின்றன. அதை ஒரு மருத்துவமனை யாக ஆக்க வேண்டும் என்று ப்ரொபோஸல் வரும்போது அதற் குரிய எஸ்டிமேட்டை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[ முற்பகல் 9-40 ]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். சுற்றிலு முள்ள 15 மைல் தூரத்தில் மருத்துவ மனை இல்லை. அங்கே பிரசவம் பார்ப்பதற்கு பெண் டாக்டர் இல்லை. ஆகவே, குழந்தை வளர்ச்சி, பிரசவம், இன்னும் மற்ற அத்தியாவசியமான உடல் நோய்களைத் தீர்ப்பதற்காக, மருத்துவ மனையை விரிவு படுத்துவதோடு அல்லாமல், உடனடியாக அங்கே பெண் டாக்டரை நியமிப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரே ஒரு டாக்டருக்கு இடமிருக்கிறது. இன்னொரு டாக்டரை கூடுதலாக அமர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்படி 161 மெடிகல் இன்ஸ்டிட்யூஷன்களிலே இன்னொரு டாக்டர் கூடுதலாக அமர்த்த வேண்டுமென்று, அதற்காக புரபோசல்களை டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் அண்டு பேமலி பிளானிங் அனுப்பியிருக் கிறார்கள். அந்த 161 மருத்துவ மனைகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூரிலுள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லாமல் இருப்பதைப் போல், ஏறத்தாழ 161 இடங்களில் மேலும் நியமிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு பெண் டாக்டர்கள் பலர் இருக்கிறார் கள். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் சுகாதார அமைச்சராக இருக்கின்ற இந்தக் காலத்திலே, ஏராளமான பெண் டாக்டர்களைத் தாராளமாக நியமித்து, டாக்டர்கள் இல்லை என்று சொல்கின்ற அளவிலே நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்? திருமங்கலத்திலே இந்த மாதிரி பெண் டாக்டர் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 161 இடங்களிலே பெண் டாக்டர் கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. 161 இடங்களிலே கூடுதலாக, அடிஷனல் டாக்டர், ஒரு போஸ்ட் கிரியேட் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பைனான்சியல் இம்ப்ளிகேஷன்ஸ் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனாக இருக்கிறார்கள். நிதி நிலை எவ்வளவு என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதற்குரிய கணக்குகளையெல்லாம் புரபோசலாக அனுப்பியிருக்கிறார்கள். எவ்வளவு ஆகும் என்பதைப் பார்த்து, அந்த 161 இடங்களில் அடிஷனல் டாக்டர்கள் தேவைப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். சில இடங்களில் பெண் டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கு ஆண் டாக்டர்கள் தேவைப்படு கிறது. அந்த மாதிரியான புரபோசல்தான் இது. அந்த அடிஷனல் டாக்டர் வேண்டுமென்ற இந்த புரபோசல் லிஸ்டிலே இந்த மருத்துவமனை வந்திருக்கிறது. திருமங்கலம் வந்திருக் கிறதா என்று கேட்டால், அது எனக்குத் தெரியாது.

எட்டயபுரம் அரசு மருத்துவமனை.

வினா எண் 982—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையை விஸ்தரிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அப்பணிகள் எந்நிலையில் உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் [illegible] எத்தனை டாக்டர்கள் வேலை செய்கிறார்கள்? [illegible] வேலை செய்கின்ற டாக்டர்கள் பற்றாக்குறை, அது பூர்த்தி செய்யப் படாமல் இருக்கிறது என்பது பற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்புகளை எல்லாம் என்னிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உடனடியாக கவனிக்க வேண்டுமென்பதற்காக நாம் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே சொல்வது பொருத்தமாக இருக்கும்.

As there have been repeated representations from the public and M.L.A.s for increase of beds in the hospitals, the Director of Medical Services and Family Welfare submitted proposals for construction of buildings for hospital at Ettayapuram with 20 beds and Labour-cum-Operation Theatre and a small Kitchen at a cost of Rs. 5 lakhs

ப்ரபோசல் வந்திருக்கிறது. ஆனால், வந்த பிறகு அதை பார்ட் இரண்டு ஸ்கீமிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

The proposal has however been deferred due to paucity of funds. There is a Public Health Centre at a distance of 6 K.Ms and a Government Hospital at Koilpatti at a distance of 16 K. Ms.

இந்தக் காரணங்களைச் சொல்லி, அதாவது 8 கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறதென்றும், 16 கிலோ மீட்டர் தூரத்தில் கோவில்பட்டியில் ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது என்றும் சொல்லி, அது போஸ்ட்போன் செய்யப்பட்டு, பெண்டிங் ஆகியிருக்கிறது. இருந்தாலும், நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன், மீண்டும் இந்த ப்ரபோசலை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சில சிறு விழாக்கள், சில நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அந்தப் பகுதிக்கு அபிவிருத்தி, விமோசனம் ஏற்படுகிறது. அதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாம் பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறபோது, எட்டையபுரத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்கு முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொல்கிற நேரத்தில் அந்த கருத்தைத்தான் சுட்டிக்காட்டினார்கள். அந்த கருத்தின் அடிப்படையில் மீண்டும் பரிசீலனை செய்வதற்கு ஆணை இடுகிறோம் என்று சொன்னேன்.

### விழுப்புரம் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் எலும்பு முறிவுச் சிகிச்சை பிரிவுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 983—திரு. [illegible] பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் அமைக்க அரசு குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஏற்கனவே 100 எம். ஏ., எக்ஸ்ரே பிரிவு பொருத்தப்பட்டுள்ளது. எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### திருத்தணி வட்ட அரசு பொது மருத்துவமனை.

*வினா எண் 984—திரு. டி. சண்முகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்ட அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்ளிருப்பு படுக்கைகள் எத்தனை?

(ஆ) படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் உள்ளதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 32.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருத்தணி பொது மருத்துவமனையில் படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதால், பல நோயாளிகள் தரையில் படுக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு திருத்தணி சண்முகம் அவர்கள் எழுப்பிய மூலகேள்விக்கு நான் பதில் அளித்தேன். இப்போது மாண்புமிகு ஆரணி சண்முகம் அவர்கள் இன்னொரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஒரு நல்ல செய்தி, அவருக்கு தெரிந்திருக்குமோ, என்னவோ தெரியாது. சென்னையிலிருந்து 'டிரான்ஸ்பர் ஆப் டெக்னாலஜி' என்ற திட்டத்தின் அடிப்படையிலே, சுற்றுப்புறத்தில் இருக்கிற நோயாளிகளை கூட்டி வந்து, நல்ல நிபுணர்களை அழைத்து வந்து 15 நாட்களுக்கு ஒருமுறை 'ஆபரேஷன்' முதலியவற்றை அங்கே செய்து கொண்டிருக்கிறோம். டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையிலே கிடைக்காத அளவிற்கு அங்கே வசதிகள் கிடைக்கக்கூடிய அளவிற்கு நாம் ஏற்பாட்டை செய்திருக்கிறோம். ஆகவே அந்த மருத்துவமனை மக்கள் மத்தியிலே பாராட்டுதலுக்குரிய ஒரு மருத்துவமனையாக விளங்குகிறது.

### சென்னை-வேதாரண்யம் விரைவுப் பேருந்து பணி

* வினா எண் 985—திரு. பொ. உத்திராபதி :— மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இருந்து வேதாரண்யத்திற்குச் சென்று கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அதை மீண்டும் தொடங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) பொதுமக்களின் நன்மையைக் கருதி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ம் நாள் முதல் இத்தடத்தில் பேருந்துகளை மீண்டும் இயக்கி வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, நாங்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு திரும்பவும் அந்தப் பேருந்தை விட்டதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக





நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்த வேதாரண்யம் என்பது சர்தார் வேதரத்தினம் பிள்ளை பிறந்த ஊர்; மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட ஊர்; இப்போது அந்த ஊருக்கு விட்டிருப்பது சாதாரண பஸ்; மேலும் அந்த பகுதியிலே இருந்து வருவதற்கு ஒரு சூப்பர் பஸ்ஸை விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் வண்டி கேட்கிறார்கள். அதற்கடுத்து ஏ. சி. பஸ் கேட்பார்களோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, அந்தத் தடத்திலே அடிக்கடி பழைய பேருந்தை விடுவதால், டயர் பங்ச்சர் ஆகி இரண்டு மணி, மூன்று மணி என்று காலதாமதமாக வருகிற நிலைமைகள் இருக்கிறது. சூப்பர் டீலக்ஸ் பஸ் விடுவதற்கு முன்னால், புதிய பேருந்தை விடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகிறார் என்பதற்காக மட்டும் நாம் புதிய வண்டியைவிட முடியாது. பழைய வண்டிகள் பழுதாகி இருந்தால் அது நிச்சயமாகக் கவனிக்கப்படும். ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பேருந்துகளை மாற்றி வருகிறோம். அதை நல்லமுறையில் கண்காணித்தும் வருகிறோம். டயர் 'பங்ச்சர்' ஆகி நிற்பது என்பது வெயில் காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்டிருக்குமே தவிர, வேலையில் கவன குறைவாக இருந்த காரணத்தால் அப்படி ஏற்பட்டிருக்காது. இருந்தாலும்கூட அதைக் கவனிக்கச் சொல்லி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாங்கள் உத்தரவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் கூட கவனிக்கப்படும்.

### கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக பணிமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 986. திரு. ஆர். டி. கோபாலன் :—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிற்பதற்கு நிரந்தரமான டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதற்கான திட்டம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் உள்ளது.

திரு. ஆர். பு. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக [illegible] கட்டுவதற்கு கம்பாத்தில் [illegible] இடம் [illegible] என்பதை அறிய விரும்புகிறேன்.

(படங்கள் 9-10)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 3.26 ஏக்கர் பரப்பளவில் ஒரு இடத்தைப் பார்த்து அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் எழுதியிருக்கிறது. அது வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஆர். பு. [illegible] : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இடத்தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, விலையைப் பற்றிய எந்தத் தகராறும் இல்லை. அதனால் கால தாமதமும் [illegible] இல்லை. ஆனால் முறைப்படி ஆர்ஜிதம் செய்கிறபோது என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ [illegible] அதிகாரிகள் செய்ய வேண்டியிருக்கிறது. இருந்தாலும் கூட விரைவாகச் செய்ய வேண்டுமென்று அரசுக்கு எழுத இருக்கிறோம். ஆகவே அது விரைவாகச் செய்யப்படும்.

திரு. ஜெ. ஜெ[illegible] : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக இருக்கக் கூடிய பேருந்துகளை, பல இடங்களிலே [illegible] டெப்போக்கள் இல்லாத காரணத்தினால் வெயிலிலும், மழையிலும் நிறுத்த வேண்டிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால் பஸ்களுக்குச் சேதம் ஏற்படுகிறது. குறிப்பாக கோவை, தமிழ்நாடு எல்லைப் பகுதிகளிலே [illegible] பல பேருந்துகள் ஓப்பன் வெளியிலே நிறுத்தப்படுகின்றன. எனவே அப்படிப்பட்ட இடங்களிலேயாவது டெப்போக்களை [illegible] யாகக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, கடந்த 27ஆம் தேதி மானியத்தின்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நிறைய இடங்களில் டெப்போக்களைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கிறேன். [illegible] கூட மாண்புமிகு உறுப்பினர் அன்றைக்குப் பேசினார், இதுபற்றி பேசினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இப்போது அதைப்பற்றிச் சொல்லி இருக்கிறார். முடியும் என்றால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே திருவள்ளுவர் போக்குவரத்திலே இருக்கக்கூடிய பஸ்களுக்கு பணிமனைகள் கட்டுவதற்கு முன்பு இடைக் காலத்திலே பக்கத்



திலே இருக்கின்ற அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய பணி மனைகளில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக [illegible] நிறுத்துவதற்கு உதவி செய்யவேண்டுமென்று [illegible] களுக்கு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தந்த போக்குவரத்துக் கழகத்திற்கு என்று தனித்தனி பணி மனைகள் இருப்பதுதான் சரியாக இருக்கும். எந்தவிதமான தவறும் நடக்காமல் இருக்கும். தற்போது பெரிய பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டால் அதை அவர்கள் [illegible] ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் நாம் [illegible] கிறோம். அது நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உறுப்பினரின் தொடக்கத்தில் (*) குறிக்குறியிட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் [illegible] என்பதைக் குறிக்கும்.]

2. [illegible]

(அ) திமுக உறுப்பினர்கள் [illegible]

திரு. எஸ். எஸ். வி. [illegible] : தலைவர் அவர்களே, [illegible] வைத்தைப் போலவே இன்றைக்கும் இந்த மாமன்றத்திலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சபைக்கு வரவில்லை. இன்றைக்கும் காலைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மானியமான காவல் துறை மானியம் வர இருக்கிறது. ஆனால் செய்தி ஏடுகளிலே பார்க்கிறோம், இந்தச் சட்டசபை கூட்டத் தொடர் முடியும் வரையில் அவர்கள் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் இல்லாமல் இந்தச் சபைக் கூட்டம் நடக்குமானால் அது முழுமை பெற்றதாக நான் கருதவில்லை. அவர்கள் கலந்து கொள்ளாதது குறித்து தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் அவர்கள் கலந்துகொள்ளக்கூடிய அவையிலே சூழ்நிலையை உருவாக்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு [illegible] நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, [illegible] நேற்று இந்த அவையிலே அறிவித்து இருக்கிறீர்கள். பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அலுவல் ஆய்வுக் குழுவைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும் கலந்தாலோசித்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் இந்த அவைக்கு ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். ஆகவே உரிமைக் குழுதான் அதைப் பரிசீலித்து உண்மை நிலையை அறிந்து அறிக்கை அனுப்புகிற தன்மையில் அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கு இல்லை. நானாக எதுவும் செய்வதற்கு இல்லை என்று தெளிவாகச் சொல்லி இந்த அவையிலே தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

இந்த அவையில் உள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் எல்லோரும் சேர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டு அவர்கள் தெரிவித்துவிட்டதன் காரணமாக தாங்கள் எடுத்த முடிவிற்கிணங்க அதற்கு ஒத்துழைப்புத் தருகின்ற முறையில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அவைக்கு வரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தெரிவித்தார்களென்ற கருத்தை மாண்புமிகு தலைவர் இந்த அவையிலே தெரிவித்து செய்தித் தாள்களிலே வந்தது. இவ்வளவு வந்ததற்குப் பிறகு அவர்கள் ஒரு முடிவை எடுக்கிறார்கள், இந்தத் தொடர்கூட்டம் முழுவதும் கலந்துகொள்வதில்லையென்று. அப்படி எடுக்கிற முடிவை உடையவர்களை நாம் வற்புறுத்த இயலாது. கேட்டுக்கொள்ளலாம், வாருங்கள் என்று சொல்லலாம். இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை கட்சிக்காரர்களுடைய விருப்பம் என்று தெரிவிக்கலாம். இந்தக் கட்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டதற்குப் பிறகு அவர்கள் இந்த கூட்டத் தொடர் முழுவதும் கலந்துகொள்வதில்லையென்று தீர்மானம் செய்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே அவர்களை வற்புறுத்த முடியாது வந்துதான் தீர வேண்டுமென்று. அவர்கள் வராத நிலை வரையிலும் நாம் இந்த அவையை நடத்துவதற்கு இல்லை என்றும் நாம் சொல்லமுடியாது. அவை நடந்துகொண்டுதான் இருக்கும் முறைப்படி.

இப்போதும் நாம் அவர்களுக்குச் சொல்லலாம். அவர்கள் கலந்து கொண்டு ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இங்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் சொன்ன கருத்துக்கிணங்கவும், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்கவும் இப்போதும் வேண்டுமானாலும் வேண்டுகோள் விடலாம், வந்து கலந்துகொள்வதுதான் முறை. கலந்துகொண்டு, ஜனநாயக முறைப்படி தங்களுடைய பங்கைச் செலுத்த வேண்டுமென்று இப்பொழுதும் நாம் கேட்டுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—அவை முன்னவரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு நான் ஒன்றும் தனியாக விளக்கம் அளிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.



ஆ. அவை நிகழ்ச்சிகள் வானொலியில் தவறாக ஒலிபரப்பப் பெற்றது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் அண்ணாமலை யூனிவர்சிட்டி சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து இங்கே பேசிய விஷயத்தை வானொலியிலே கூறுகின்றபொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முருகர்சாமி, அம்பிகாபதி, கருப்புசாமி என்று அறிவித்தார்கள். எங்களுடைய கட்சியில் ஏ. பு. கருப்பையா, ஆர். கருப்பையா அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். கருப்புசாமி என்று யாரும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்கு ஏதாவது புதிதாக மெம்பர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல் இருந்தால் தெரிவிக்கும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வானொலியிலே சில தவறுகள் ஏற்பட்டு விடுவதாக நான் அறிகிறேன். அந்தத் தவற்றைத் திருத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் போராட்டம்.

தமிழ்நாடு கருவூலத் துறை ஊழியர்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் . . ரகுமான் கான், மு. அப்பாதுரை, மு. ஆறுமுகம், பி. சுப்பிரமூர்த்தி என்கிற சொரணம், மு. அம்பிகாபதி ஆகியோர் "தமிழ்நாடு கருவூலத் துறை ஊழியர்கள் போராட்டம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு, அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. மு. அம்பிகாபதி அவர்கள்

திரு. மு. அம்பிகாபதி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த எட்டு மாத காலமாக கருவூலத் துறையில் இருக்கும் ஊழியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் வேலை நிறுத்தம் செய்த கருவூல ஊழியர்களுக்கு அந்தக் காலத்தைச் சம்பளம் இல்லா விடுப்பாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் பிற துறைகளில் வேலை நிறுத்தங்கள் நடந்த காலத்திற்கு சம்பளம் உள்ள விடுப்பாக அறிவித்திருக்கிறது. எதாரணமாக. தலைமைச்

செயலகச் சங்கம், கால்நடை ஆய்வாளர் பட்டயதாரர்கள் சங்கம், தொழுநோய்த் தடுப்புப் பணியாளர்கள் சங்கம் போன்றவற்றின் வேலை நிறுத்தங்களில் சம்பளம் உள்ள விடுப்பாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், மதுரை, பசுமலை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட எட்டு மாநில நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் கடந்த எட்டு மாத காலமாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட போதிலும் குற்றக் குறிப்பாணைகள் தராமலும், வழக்குக்கான குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யாமலும் காலதாமதமாக்கப்படுகிறது.

சங்க வேண்டுகோளின்படி ஆர்ப்பாட்டத்திலும், தர்ணாவிலும் கலந்து கொண்ட மதுரை, பசுமலை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடந்த பத்து மாத காலமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் வழங்குவதிலும் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.

சங்க முடிவுகளின்படி ஆறுமாதங்களுக்கு முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததற்காகத் துறையில் கிட்டத்தட்ட 2,000 ஊழியர்களுக்கு மேல் குற்றக் குறிப்பாணைகள் கொடுக்கப்பட்டு பலருக்கு 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை ஊதிய வெட்டு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் தர சங்க ஊழியர்களிடம் நிதி கேட்டு சுற்றறிக்கை சங்கத் தலைமை அனுப்பினால் அவர்களுக்கு 17 (ஏ) குற்றக் குறிப்பாணை, அதைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகிகள் மீது குற்றக் குறிப்பாணை தந்து 6 மாத ஊதிய உயர்வு வெட்டப்பட்டிருக்கிறது. சங்க நடவடிக்கைகளுக்காக சுவரொட்டி ஒட்டியமைக்காக சங்க நிர்வாகிகளுக்கு தற்காலிக வேலை நீக்கம் செய்து அதற்கான குற்றக் குறிப்பாணைகளுக்கு விளக்கங்களைப் பெறாமலே, ஒரு ஆண்டு நிரந்தரமான ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் நடத்த ஊழியர்களைத் திரட்டியதற்காக சங்க நிர்வாகி ஒருவரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்து, அதற்கான குற்றக் குறிப்பாணையும் கொடுக்காது ஒரு கொடுமையான நிலை இருக்கிறது.

சங்க நிர்வாகிகளுக்கு வேலை நிறுத்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் அடுத்த மாத ஊதியத்தில் அனைத்து விதிமுறைகளுக்கும் எதிராக முழுமையாகப் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் சங்க நிர்வாகிகளையும், முன்னணி ஊழியர்களையும் இடம் விட்டு இடம் மாற்றப்பட்டிருக்கிறது.



சங்க நிர்வாகிகளின் துணைவியார் ஓரிடத்தில் பணியாற்றும் பொழுது அவர்களைப் பிரிக்கக்கூடாது என்று அரசாணைகள் இருந்தும் அதையும் மீறி அவர்களைப் பிரித்து நீண்ட தூரத்திற்கு மாற்றியிருக்கிறார்கள்.

சங்க நிர்வாகிகளுக்கு விடுப்பு ஒப்பளிப்புக்குப் பிறகும் அதற்கான ஊதியம் தராமல் காலம் தாழ்த்தப்படுகிறது.

சங்க நிர்வாகிகளையும், முன்னணி ஊழியர்களையும் பழி வாங்குவதற்காகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தஞ்சாவூர், மதுரை போன்றயிடங்களில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நிலையை உருவாக்குவது யார் என்று கேட்டால் அந்தக் கருவூலத் துறையினுடைய இயக்குநர் இந்தத் துறையில் இருக்கும் ஊழியர்களை எதிர்த்து ஒரு கடுமையான தாக்குதலையே தமிழகத்திலே நடத்தியிருக்கிறார். தமிழகத்தில் இருக்கக் கூடிய பல்வேறு துறைகளைச் சார்ந்த ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்கக்கூடிய இடத்தில் இருக்கின்றவர்களை இவ்வளவு சர்வாதிகாரமான, முறைகேடான நிலையில் ஒரு அதிகாரி வேண்டுமென்றே பழி வாங்குகின்ற ஒரு கடும் போக்கு இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திலே இருக்கலாமா? அவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து நாங்கள் மனவருத்தம் அடைகிறோம்.

[முற்பகல் 10-00]

காரணம், தமிழக மக்களும் கருவூலத் துறையைச் சேர்ந்தவர்களும் மிகுந்த நம்பிக்கையோடு இந்த அரசை உருவாக்கியிருக்கிறார்கள். கோர்ட் விடுதலைக்குப் பிறகும் அந்தத் தொழிலாளர்கள் மீது இருக்கிற வழக்குகள் வாபஸ் வாங்கப்படாத ஒரு கொடுமையான நிலையிருக்கிறது. இப்படிப் பல்வேறு பிரச்னைகளை வைத்து, தமிழகத்திலேயிருக்கிற கருவூலத் துறையைச சேர்ந்த ஊழியர்கள் தொடர்ந்து 8 மாத காலமாகப் போராடுவதோடு மட்டுமல்ல, கருவூலத் துறை இயக்குநர் கொடும்பாவியை எரிப்போம் என்ற அளவு அவர்களுடைய மன உணர்வுகள் வெந்து போய், நொந்து போய், அவர்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலைமைகள் இருக்கின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவும், இதுபோன்ற பல்வேறு பிரச்னைகளை எடுத்துக் கூறி விவாதிக்கவும், தொடர்ச்சியாக, நீண்ட நெடு நாட்கள் அவர்கள் போராடியதற்குப் பிறகும், அவர்களுடைய வலுவான போராட்டத்திற்குப் பிறகும், வேலை நிறுத்தம் செய்து, அது முடிந்து, திரும்ப வேலையில் சேர வருகிறார்கள் என்றால், அவர்களிடம், நீ மன்னிப்பு எழுதிக் கொடுத்தால்தான் வேலைக்கு வரலாம் என்பது போன்ற மோசமான நிலைமை கருவூலத் துறையிலே ஏற்பட்டிருக்கிறதென்றால், அத்தகைய துறையிலே,

துறைக்கு ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து, விவாதிக்க இன்று அவையின் இதர அலுவல்கள் அனைத்தையும் ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொன்ன அதே கருத்தை மீண்டும் சொல்லி நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அவர் சொல்லிய அதே கருத்தை நானும் சொல்லியதாக நீங்கள் எடுத்துக்கொண்டு, அது போக சொல்ல வேண்டிய சில கருத்தை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபொழுது முறையாகக் கூப்பிட்டுப் பேசி அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று கேட்டு ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக, அவர்களுடைய போராட்டத்தை நீண்ட காலத்திற்கு வேண்டுமென்று விட்டு பட்டினி போட்டுள்ளார். அதற்குப் பிறகு, அவர்களாகவே போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டதற்குப் பிறகு, மன்னிப்பு எழுதிக் கொடுத்தால்தான் வேலையில் வைத்துக்கொள்வோம் என்று பல இடங்களிலே பழி வாங்கப்படுகிற நிலை இருக்கிறது. அவர் குறிப்பிட்ட இடம் போக, வேறு சில இடங்களிலே, வேலூரிலே, எப்படி பழி வாங்கப்பட்ட விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. அதற்குப் பிறகு வேலைக்கு வந்ததற்குப் பிறகு, வேலை கொடுக்க மறுப்பது சரியல்ல என்று 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்த பிறகு, வக்கீல் மூலம் நடவடிக்கை எடுத்த பின் வேலைக்கு வா என்று பழையபடி சொல்லி, வந்தவுடனே, உன்னை இங்கே வைத்திருக்க முடியாது, வேறு இடத்திற்கு போ என்று பல இடங்களுக்கு இப்பொழுது மாற்றம் செய்து பழி வாங்கியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இந்த டைரக்டர் அவர்கள் என்ன நிலைமையிலே செயல்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லி, பின்னால் மற்ற விவரங்களையெல்லாம் விவாதத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். சமீபத்திலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்பொழுது கடைசி நாளன்றும், அதற்கு முதல் நாளும், அந்த ஊர்வலத்திலே அனைவரும் கலந்துகொள்ளும் முறையிலே, வாய்ப்பளிக்க வேண்டுமென்று கருதி, கருவூல ஊழியர்கள் உட்பட எல்லோருக்கும் விடுமுறைவிட வேண்டுமென்று அரசாங்க உத்தரவு போட்டிருந்தும், அந்த உத்தரவின் அடிப்படையிலே கலந்துகொள்கிற காரணத்தைக் காட்டி, அந்தக் குரோதத்தை எல்லாம் வைத்துக் கொண்டு பலருக்கு ஷோ காஸ் நோட்டீஸ் மட்டுமல்ல, இன்று அவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததோடு, அவர்களுக்குச் சம்பளப் பிடித்தம் செய்யக்கூடிய அளவுக்கு பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். பழி வாங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாக யாராவது இருந்தால், அவர்கள் மீதும்



பழி வாங்குகிற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளை விரிவாக விவாதித்து, ஆராயும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்த இயக்குநர் அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துகின்றார். ஆகவே, மற்றவைகளைப் போல், அனுமதி மறுக்காமல் இதை முழுமையாக விவாதித்து, நல்ல ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முறையிலே, இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் 25—10—1980, 27—10—1980 முதல் 9—11—1980 முடிய, கருவூல கணக்குத்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த காலத்தைச் சம்பளம் இல்லாத விடுப்பாகக் கருதப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால், இதற்கு முன்பும், பின்பும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பிற துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கு வேலை நிறுத்தக் காலத்தைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பாக அரசு அறிவித்துள்ளது என்றும், அதே போல் கருவூலக் கணக்குத்துறை ஊழியர்களுக்கும் வேலை நிறுத்தக் காலத்தைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பாகக் கருத வேண்டும் என்றும் மேலும் இது போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தியும், 11—3—1981 முதல் கருவூலக் கணக்குத்துறை இயக்குநரின் அலுவலகத்திற்கு முன்னால் தொடர் உண்ணாவிரதம் நடந்து வருவதால் தமிழ்நாடு கருவூலக் கணக்குத்துறை ஊழியர்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கர், கூடுதல் பணியாளர்களை அனுமதித்தல், இளநிலை உதவியாளர்களைக் கணக்கர்களாகப் பதவி உயர்த்துதல், இரட்டைப் பூட்டு அதிகாரிகளைத் தகுந்த பதவி தரங்களில் பதவி உயர்த்துதல். ஆகிய கோரிக்கைகள் கொண்ட மனு ஒன்றை 1980 பிப்ரவரியில் கொடுத்தது. இக்கோரிக்கைகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவை. இவை மார்ச் மாதத்தில் பரிசீலனையில் இருந்தன. ஆயினும் இக்கோரிக்கைகளின் பேரில் உடனடியாக ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கம் கிளர்ச்சியில் இறங்கி, 27—3—1980 அன்று ஒட்டுமொத்தமாகத் தற்செயல் விடுப்பு எடுத்துக்கொண்டதோடு, 28—3—1980-லிருந்து கால வரையன்றி, சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தையும் மேற்கொண்டனர். நிதி ஆண்டின் கடைசிப் பகுதியில் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், அந்தந் நிதி ஆண்டுக்குள் பணம் கொடுக்கப்பட வேண்டிய வேலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 2—4—1980 அன்று ஆளுநரின்

ஆலோசகர் அரசிதழ் பதிவிலா அலுவலர் சங்கம் மற்றும் கருவூலக் கள் கணக்குப் பணிச் சங்கத்தின் தலைவர்களைச் சந்தித்து, அவர் களது முக்கியமான கோரிக்கையான கூடுதல் பணியாளர்களை அனுமதிப்பது குறித்து திட்டவட்டமான முடிவு 30-4-1980-க் குள் எடுக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று அவர்களுக்கு உறுதிமொழி அளித்தார். மேலும் பணியாளர் பழி வாங்குதல் எதுவும் இருக்காது என்றும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த உறுதிமொழிகளின் அடிப்படையில் வேலை நிறுத்தம் திரும் பப் பெறப்பட்டது. பணியாளர்கள் 3-4-1980 -லிருந்து வேலைக்குச் சென்றனர். 27-3-1980 -லிருந்து 2-4-1980 வரையிலான வேலை நிறுத்த கால அளவு பணியாளருக் குரிய விடுப்புக் கால அளவாகக் கருதப்பட்டது. கூடுதல் பணி யாளருக்கான அனுமதி ஆணைகள் நிதித்துறையின் (கருவூலக் கணக்கு) 13-5-1980 நாளிட்ட பல்வகை அரசாணை எண் 430-ல் பிறப்பிக்கப்பட்டன.

கருவூலக் கணக்கு பணிச் சங்கப் பணியாளர்கள் 1980 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மதுரையில் மற்றும் ஒரு கிளர்ச்சியை நடத்தினர். இக்கிளர்ச்சி மதுரைக் கருவூல அலுவலர் பிறப்பித்த வழக்கமான ஒரு சுற்றறிக்கையை எதிர்த்து முதற் கண் தொடங்கியது. இச் சுற்றறிக்கையில் சென்னை தலைமைக் கணக்காயருக்கு 14-7-1980-ல் அனுப்பப்பட வேண்டிய ஜூன் 1980 மாதத்திற்குண்டான இரண்டாவது தொகை வழங்கு பட்டி யல், ரசீதுகள் முதலியவற்றை 12-7-1980 அன்றே கொடுக்கும் படி பணியாளர்களுக்கு மதுரைக் கருவூல அலுவலர் அறிவுரை வழங்கினார். இது தலைமைக் கணக்காயருக்கு குறித்த காலத் தில் இரண்டாவது தொகை வழங்கு பட்டியலை அனுப்புவதற்காக வழங்கப்பட்ட அறிவுரையாகும். இதன் தொடர்பாக, தவறாக நடந்துகொள்வதையே வழக்கமாகக் கொண்ட மதுரை மாவட்டக் கருவூலக் கணக்கர் திரு. ஆர். நல்லக்கண்ணு என்பவர், இந்த சம யத்திலும் மதுரைக் கருவூல அதிகாரியுடன் தவறாக நடந்து கொண்டார். ஆகவே, நிர்வாகத்தில் சிறந்த ஒழுக்க நிலையினை ஏற்படுத்துவதற்காகக் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அவர் மாற்றப்பட்டார். இந்த மாறுதலை ஒரு கௌரவப் பிரச்சினை யாக எடுத்துக்கொண்டு, மாற்றல் ஆணையை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு கோரிக்கை விடுத்து கிளர்ச்சி நடத்தினர். ஆயினும் இக்கிளர்ச்சி முடிவில் தானாக நின்றுவிட்டது. இக் கிளர்ச்சியின்போது கருவூலக் கணக்குத் துறையைச் சேர்ந்த 53 பேர், ஏனைய துறையைச் சேர்ந்த 15 பேர் ஆக மொத்தம் 68 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் மன்னிப்புக் கோரினால் அவர்கள் மீதான வழக்குகளுக்குப் பாதக மின்றி வேலையில் சேர அனுமதிக்கும்படி உத்தரவிடப்பட்டது. இவ் வுத்திரவின்படி மன்னிப்புக் கடிதம் கொடுத்த 45 பேர்கள் வேலைக்குச் சேர அனுமதிக்கப்பட்டனர். மீதம் உள்ள 8 பேர்



களில் பெரும்பாலோர் சங்க நிர்வாகிகள். அவர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுக்கவில்லை. எனவே அவர்கள் தொடர்ந்து தற் காலிக வேலை நீக்கத்திலுள்ளனர். ஏனைய துறையைச் சேர்ந்த 15 பேர்களைப் பற்றி நடவடிக்கைகள் எடுக்குமாறு பொதுத் துறைக்கு இத் துறையின் ஆணையின் நகல் அனுப்பப்பட்டது.

மதுரைக் கிளர்ச்சியின்போது தற்காலிகமாக வேலையி லிருந்து தள்ளி வைக்கப்பட்டவர்களை நிபந்தனை எதுவுமின்றி வேலையில் திரும்பச் சேர்த்துக்கொள்ளுமாறு கோரி 1980 அக்டோ பரில் மற்றுமொரு கிளர்ச்சியை கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கம் தொடங்கியது. இக்கிளர்ச்சியின் தொடர்பாக அவர் கள் 27-10-1980-லிருந்து சட்ட விரோதமாக காலவரையின்றி வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். தஞ்சாவூர் மாவட்டக் கருவூலத்தில் வேலை நிறுத்தம் 25-10-1980 அன்றே தொடங்கி விட்டது. கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கம் 9-11-1980 அன்று வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றது. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட அனைவரும் 10-11-1980 அன்று வேலைக்குத் திரும்பினர். இந்த வேலை நிறுத்தத்தின் போது தர்மபுரியில் கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கத்தைச் சேர்ந்த 31 பேர்களும், வடஆர்க்காடு மாவட்டத்தில் கருவூலங்கள் கணக்குப் பணிச் சங்கத்தைச் சேர்ந்த 29 பேர்களும், வருவாய்த் துறை யைச் சேர்ந்த 2 பேர்களும், ஆக மொத்தம் 62 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

அரசு நிதிப் பற்று வரவுகள் அனைத்தும் மாவட்டங்களிலுள்ள கருவூலங்கள், துணைக் கருவூலங்கள் மூலமாகவும், சென்னை மாநகரில் சம்பளக் கணக்கு அலுவலகங்கள் மூலமாகவும் நடை பெறுகின்றன. ஆகவே, கருவூலக் கணக்குத் துறைப் பணியாளர் கள் செய்யும் வேலை நிறுத்தம் எதுவும் ஒப்பந்தக்காரர்களுக்கும், பொருள் வழங்குவோருக்கும் தொகை செலுத்துவதில் கால தாமதத்தை ஏற்படுத்தும். பொதுமக்களும் அவசியமற்ற தொல்லைகளுக்கு உட்படுவர். அரசுப் பணியாளர்கள், ஆசிரியர் கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் அவர்களது சம்பளம் பெற இயலாதது மட்டுமல்லாமல் அரசிடமிருந்து அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளும் பெற முடியாதாகையால் பாதிக்கப் படுவர். ஓய்வு ஊதியம் பெறுவோரும் உரிய நாட்களில் ஓய்வு ஊதியங்களைப் பெற இயலாது. ஆகவே, கருவூலங்கள் கணக்குத் துறை அரசின் மிக இன்றியமையாத பிரிவுகளில் ஒன்றாகக் கருதப் படவேண்டும். ஆனால், இத்துறையினர் கடந்த ஆண்டு மார்ச்சு மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் இரண்டு முறை சட்ட விரோதமான வேலை நிறுத்தத்திலும், மதுரையில் ஒரு முறை மறியலிலும் ஈடுபட்டுள்ளனர். மார்ச்சு மாதத்தில் ஆண்டு முடிவிலும், அக்டோபர் மாதத்தில் தீபாவளிக்கு முன்பும், அம்மாத முடிவிலும் திடீரென வேலை நிறுத்தத்தில் இறங்கி, பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேவையற்ற இடர் ஏற்

படுத்தியுள்ளனர். எனவே, அவர்கள் இதனை ஒரு முறையாக, அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடத்திய வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அவ்வேலை நிறுத்தக் காலத்தைச் சம்பளம், படிகள், இழப்புடன் விடுப்பில் இருந்ததாகக் கருதப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

[முற்பகல் 10-10]

தன்மையில் என்.ஜி.ஓ. சங்கமும் கருவூலக் கணக்குத் துறை பணிச் சங்கத்திற்கு ஆதரவாகக் கிளர்ச்சிகள் செய்து வந்தது. இவர்களின் தற்போதைய முக்கிய கோரிக்கை கருவூலக் கணக்குத் துறையில் தற்போது உள்ள இயக்குநருக்குப் பதிலாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டும் என்பதாகப் பத்திரிகை செய்திகள் மூலம் தெரிகிறது. அத்துடன் அவர்கள் கருவூலக் கணக்குத் துறை இயக்குநரின் ஊழியர் விரோதப் போக்கினைக் கண்டிப்பதற்காக கிளர்ச்சிகள் செய்வதாகவும் பத்திரிகைகள் மூலம் அறிவித்துள்ளனர். இதன் தொடர்பாக மார்ச் மாதம் 11ஆம் தேதியிலிருந்து கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் அலுவலகம் முன் தொடர் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. இது 31-3 1981 வரை நீடித்தது. அதன்பின், 2-4-1981 அன்று கருவூலக் கணக்குத் துறை இயக்குநரின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் சென்னையில் இயக்குநர் அலுவலகம் முன்பும், மற்றும் காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டை, ஈரோடு மாவட்டக் கருவூலங்களின் முன்பும் நடத்தினர்.

மதுரையில் தொடர்ந்து தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்துவரும் எட்டுப் பேர்களையும் உடனே வேலையில் சேர்த்து மாறும் அதற்கிடையில் அவர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 75 சதவீதம் என்ற அடிப்படையில் பிழைப்பு ஊதியம் (சப்சிஸ்டென்ஸ் அலவன்சு) வழங்குமாறும் என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளார். இது தனியாகப் பரிசீலனையில் உள்ளது. மேற்கூறிய விண்ணப்பம் தவிர வேறு விண்ணப்பங்கள் எதுவும் என்.ஜி.ஓ. சங்கத்திடமிருந்தோ அல்லது கருவூலக் கணக்குப் பணிச் சங்கத்திடமிருந்தோ இப்பிரச்சினைகள் குறித்து அரசுக்குக் கிடைக்கவில்லை.

தற்சமயம் என்.ஜி.ஓ. சங்கம், கருவூலக் கணக்குத் துறை பணிச் சங்கத்திற்கு ஆதரவாக நடத்திவரும் கிளர்ச்சிகளில் கருவூலக் கணக்குத் துறையைச் சேர்ந்த பெரும்பாலான ஊழியர்கள் கலந்துகொள்ளவில்லை என்றும், அத்துறையின் வேலை எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும் கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் அறிவித்துள்ளார். ஆகவே, சட்டத்திற்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்க வேண்டுமோ அதை எடுப்பதில் அரசும், கருவூலத் துறையும் ஈடுபட்டு இருக்



கிறது. இதிலே சட்டத்திற்குப் புறம்பான நிலையில் எதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தால், அதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. காலத் தாழ்வு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தவிர்ப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, இதற்குமேல் இது குறித்து விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், என். பழனிவேல், டி. மணி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979–80ஆம் ஆண்டில் மதுரை பகுதி சுங்க வரி இலாகாவின் கணக்குப்படி குமரி, நெல்லை, முகவை, திருச்சி, மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் குரோஸ் ஒன்றுக்கு ரூ. 4·50 கலால் வரி செலுத்தும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் 499 ஆகவும், குரோஸ் ஒன்றுக்கு ரூ. 1·60 கலால் வரி செலுத்தும் பாக்டரிகள் 6,139 ஆகவும் இருந்தன. இவைகளில் ரூ. 4·50 வரி செலுத்தும் 49 பாக்டரிகளும் ரூ. 1·60 வரி செலுத்தும் 1,900 பாக்டரிகளும் 1979–80ம்

ஆண்டில் வேலை செய்யவில்லை. மற்றைய பாக்டரிகள் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்த தீப்பெட்டியின் அளவு 1,58,07,515 பண்டல்கள். ஆக மாத சராசரி உற்பத்தி 13,17,293 பண்டல்கள் ஆகும்.

விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் பண்டல்கள் 5 இலட்சம் எனக் கூறுவது மாத சராசரி உற்பத்தியில் பாதி கூட இல்லை. வியாபாரத்தில் இந்த இருப்பை ஒரு தேக்கம் எனக் கூற முடியாது. மேலும் தீப்பெட்டி பண்டல்கள் தேக்கத்தால் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பன போன்ற செய்தி அரசுக்குக் கிடையாது. அப்படி எந்த ஒரு தொழிற்சாலையும் மூடியிருப்பதாகவும் தெரியவில்லை. இந்நிலையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டிருப்பதும் பொருந்தாத ஒன்றாகஉள்ளது.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய விளக்கத்திலே உண்மைக்கு மாறுபட்ட சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை ஏற்கனவே கொடுக்கும்போது 5 இலட்சம் குரோஸ் தேக்கம் இருந்தது. சிலவற்றை மூடிவிட்டோம், சிலவற்றை மூட வேண்டிய நிலை இருக்கிறது என்று அந்தச் சங்கத்தினர் கூறினார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் அர்ஜுனராஜன் அவர்கள் சமீபத்தில் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அரசுக்கும் அது பற்றி கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ரேடியோவிலும் அறிவிப்பு வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 கோடி குரோஸ் தேக்கம் இருந்திருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் மட்டுமல்ல, எல்லாத் தொழிற்சாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சில வரிகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் அல்லது வரி விலக்குக் கொடுப்பதன் மூலம்தான் இந்தத் தொழிலை நடத்த முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? வரவில்லை என்றாலும் இப்போது நான் தந்திருக்கிற தகவலின் அடிப்படையில் அந்தத் தேக்கத்தைப் போக்கி, தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு, எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, தற்போது கூட்டுறவு தீப்பெட்டி உற்பத்திக் கூடங்கள் எதுவும் மூடப்படவில்லை என்றும், இன்றைக்கு மூடப்பட்டிருக்கும் சில நிறுவனங்கள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்கள் என்றும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்



களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படி தனியார்களுடைய நிறுவனங்களிலே தேங்கிக் கிடக்கிற தீப்பெட்டிகளைக் கூட விற்பனை செய்ய அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால் அந்த தனியார் நிறுவனங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையின் கீழ் வந்து பதிவு செய்து, பின்னர் அரசாங்கத்திடம் ஒத்துழைப்பு, உதவி கேட்டால் நிச்சயமாக அத்தகைய உதவிகளைச் செய்ய, போதுமான நடவடிக்கைகளை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, தமிழகத்திலே மிகப் பெரிய தொழிற்சாலையாக இருப்பது 'விம்கோ' தொழிற்சாலை. அதனால் கிராமப்புறங்களில் இருக்கிற குடிசைத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த பாதிப்பு ஏற்படாமல் இருக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே மத்திய அரசு விம்கோ போன்ற நிறுவனங்களுக்கு ரூ. 7·20 என்ற வகையில் கலால் வரி விதித்துள்ளது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு குறைந்த விகிதத்தில் கலால் வரி விதித்து பாதுகாப்பு நல்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விருத்தாசல நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். தியாகராசன், கே. நாராயணசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். தியாகராசன்: தலைவரவர்களே, "விருதாசலம் நகராட்சி மாட்டுச் சந்தையில் குத்தகைதாரர்கள், கால்நடைகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிப்பதால் அங்குள்ள விவசாயிகளிடம் நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

தென் ஆர்க்காடு மாவட்டம் விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட சந்தைகளில் கால்நடை வாரச் சந்தையும் ஒன்றாகும். ஏனைய சந்தைகள் போன்று இச் சந்தையும் பொது ஏலத்தில் விடப்பட்டு சந்தையின் வரி வசூல் செய்வதற்கு 1981-82-ம் ஆண்டிற்கான உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுரிமையாணையின்படி விற்பனைக்குக் கொண்டுவரும் பசு, காளைமாடு, ஆடு, கோழி என்று ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | ரூ. | பை. |
|---|---|---|
| 1. விற்பனைக்குக் கொண்டு வரும் பசு, காளைமாடு ஒன்றுக்கு .. .. | 0 | 75 |
| 2. விற்பனையாகும் பசு, காளைமாடு ஒன்றுக்கு தனியாக .. .. .. | 2 | 00 |
| 3. ஆடு ஒன்றுக்கு .. .. .. | 0 | 50 |
| 4. கோழி ஒன்றுக்கு .. .. .. | 0 | 15 |

மேற்கண்ட வரி அளவின்படியே ஏலதாரர் வசூல் செய்யவேண்டும். ஏலவிளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை 17-ன்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதலாக ஏலதாரர் வசூல் செய்தால் அபராதம் விதிக்கவோ அல்லது ஏலத்தை ரத்து செய்யவோ முழுப் பொறுப்பு நகராட்சியைச் சேர்ந்தது. அதன்படி வண்டியில் வரக்கூடிய வியாபாரப் பொருளுக்கு ரூ. 0·50 பைசாவிற்குப் பதிலாக ரூ. 1·50 வசூல் செய்யப்படுவதாக வந்த புகாரின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏலதாரருக்கு விருத்தாசலம் நகராட்சி 18—4—81 அன்று எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதர இனங்களின் மீது கூடுதலாக வரி வசூலிப்பதாகப் புகார்கள் நகராட்சிக்கு வரவில்லையென நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வியாபாரப் பொருட்கள் மற்றும் வசூலிக்க வேண்டிய கட்டண விபரங்கள் அடங்கிய பலகைகள் வாரக் கால்நடை சந்தை, வாரச்சந்தை மற்றும் பாலக்கரையின் கீழ்புரம் ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட புகார்கள் நகராட்சி ஆணையாளர் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஏலதாரர் மீது தக்க நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்படும்.



[முற்பகல் 10-20]

திரு. ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே விருத்தாசலம் கால்நடை வாரச் சந்தையிலே அதுபோன்ற எந்தவிதமான ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்று தனி அதிகாரிகள் குறிப்பிட்டிருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஆகவே கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தச் சந்தையிலே அப்படி நடக்கின்றது என்பது இப்போது மட்டுமல்ல. 1971-லே அது தனி நகராட்சியாக ஆக்கப்பட்டது. அன்று முதல் அந்த நகராட்சியிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லை. மக்கள் ஆட்சியும் இல்லாமல் தனி அதிகாரியின் கீழ் தான் அது இருக்கின்றது. தனி அதிகாரியின் கீழ் அந்தச் சந்தையின் போது நடக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் அந்தச் சந்தையின்போது நடக்கின்ற தகராறுகள் பற்றி சொல்லி இருக்கிறோம். நடக்கின்ற தகராறுகள் பற்றி நகராட்சி மக்கள் குழுவிலே கூட இரண்டு மாதங்களுக்கு முன்பு நகராட்சியின் மக்கள் குழுவிலே கூட விளம்பரப்பலகை வைப்பது பற்றியும் கூட சொல்லி இருக்கிறோம். அது ஆனால் தனி அதிகாரி அதை கவனிக்கவில்லை. தனி அதிகாரி மட்டுமல்லாமல் அங்கே நடக்கின்ற சம்பவங்களைத் தனி அதிகாரி அவர்கள் ஒரு நகராட்சி பிரதிநிதியை அனுப்பி அவற்றைப் பார்வையிடவேண்டும் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. அங்கே 8 அணா வசூலிக்கவேண்டிய பணம் வசூல் செய்கிறார்கள். கிராமத்திலே இருந்து வருகிற வண்டிக்கு 2 ரூபாய் வசூலிக்கிறார்கள். கிராமத்திலே இருந்து வருகிற மாட்டிற்கு 10 ரூபாய் கொடுத்தால் கூட மீதி வண்டிக்கு 8 அணா என்றால் 10 ரூபாய் கொடுத்தால் கூட மீதி கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட புகார்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அங்கே ஆறு பேர் என்பவர் 225 ரூபாய்க்கு ஒரு மாட்டை விற்றிருக்கிறார். ஆனால் சந்தைக் குத்தகை, தரகுக் கட்டணம், தரகர் பணம் எல்லாம் போக 160 ரூபாய்தான் கிடைத்திருக்கின்றது. இதுபற்றியெல்லாம் வருக்கு கையிலே கிடைத்திருக்கின்றது. மேலும் அங்கே ஏராளமான புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து இருக்கும் என்றும் படுகின்ற சிரமத்தை ஒரு தனி அதிகாரியை நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் ..... ..

மாண்புமிகு செ. மாதவன்: தலைவர் அவர்களே, அங்கே இப்படிச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன, ஆகவே அவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரு தனி அதிகாரியைப் போட வேண்டுமா என்பது போன்று ஒரு கேள்வியாகத்தான் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு தியாகராஜன் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் தனிஅதிகாரி கொடுத்திருக்கின்ற ரிப்போர்ட்டை மட்டும் வைத்துக்கொண்டு பதில் சொல்வதுதான். ஆகவே அங்கே என்ன நடக்கின்றது என்பதை அறிய மக்கள் பிரதிநிதிகள் சொல்வதை

ஆகவே அங்கே இருக்கின்ற அதிகாரியும் கவனிக்க வேண்டும். மட்டுமல்லாது வேறொரு அதிகாரியையும் போட்டு அங்கே என்ன நடக்கின்றது என்பதை விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? மேலும் அங்கே நடக்கின்ற மோசடிகளைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு மேல்மட்ட அதிகாரியை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த விருத்தாசலம் வாரச் சந்தையைப் பொறுத்தவரையில் 1981–82ஆம் ஆண்டுக்கான உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி ஒவ்வொரு இனத்திற்கும் இவ்வளவுதான் வரி வசூலிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக விற்பனைக்குக் கொண்டுவரும் பசு, காளை மாடு போன்றவற்றிற்கு, ஒன்றுக்கு 75 பைசா விற்பனை வரியாக வைக்கப்பட்டிருக்கின்றது. விற்பனையாகும் பசு, காளைமாடு ஒன்றுக்கு தனியாக 2·00 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆட்டுக்கு 50 பைசா என்றும் கோழி ஒன்றுக்கு 15 பைசா என்றும் இப்படி அட்டவணைகள் எல்லாம் ஆங்காங்கே வாரச் சந்தைகளில் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் குறிப்பாக ஒரு புகார் நகராட்சிக்கு வந்தது, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. வண்டியில் வரக்கூடிய வியாபாரப் பொருட்களைப் பொறுத்தவரையில் 50 பைசாவுக்கு பதிலாக 1½ ரூபாய் வசூல் செய்யப்படுவதாக வந்த புகாரின்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ஆம் நாளன்று ஒப்பந்தக்காரருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கின்றது. ஆகவே ஒழுங்கீனங்கள் நடைபெற்றால் உயர்மட்ட அதிகாரிகளை வைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துகொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் இவ்வாறு கூறியதற்காக நன்றி. மேலும் அதிகாரிகள் தரப்பிலே கொடுக்கப்பட்ட அறிக்கையினைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்து விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் பல ரிப்போர்ட்டுகள் பற்றி எங்களால் நிரூபிக்க முடியும், ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் விசாரிப்பதற்கு தனியாக ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை)



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்க பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு

### (அ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,85,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. [illegible] : தலைவர் அவர்களே, அமெரிக்காவில் காவல் துறை [illegible] முறையில் [illegible] இங்கு அமுல் நடத்தப்படுகிறது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 55,85,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. [illegible] : தலைவர் அவர்களே, கொலை, கொள்ளை, களவு போன்றவைகளில் [illegible] உள்ளவர்களுடன் காவல் துறை [illegible] ஏற்படாமல் கண்காணிக்க ஒரு அமைப்பை உருவாக்க வேண்டுவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 55,85,23,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. பொ. [illegible] : தலைவர் அவர்களே, காவலர்களின் குழந்தைகளுக்கு பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் அரசே இலவசமாகக் கல்வி வசதி செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 55,85,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,46,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ். இராமசாமி: Sir to discuss the need to provide training in fire fighting methods to all students in colleges and Schools, I move—

'That the allotment of Rs. 3,46,89,000 under Demand No. 16—fire Services be reduced by Rs. 100.



திரு. [illegible] மணி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குழித்துறையில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு மிகவும் பழுதடைந்த தீயணைப்பு வண்டியை மாற்றி புதிய வண்டி கொடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,46,89,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. தி. [illegible] நல்லப்பன்: தலைவர் அவர்களே, பெருந்துறையில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,46,89,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பேடுகளை* நான் படித்ததாக அவைக்குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விவாதத்திற்குப் பிறகு என்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்

[பிற்பகல் 10-30]

*திரு. எல். [illegible]: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவல் துறை மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேச இடம் அளித்ததற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்றிருக்கிற நிலையில் சட்டம்-ஒழுங்கு நிலை நாட்டப்படவேண்டுமானால் போலீஸ் துறையில் பணி செய்கிறவர்களுக்கு போதுமான வசதி வாய்ப்புகள் செய்து தரப்பட வேண்டும். சாதாரணமாக அரிசி கொடுத்துவிட்டாலோ அல்லது குறைந்த விலையில் பொருள்கள் கொடுத்துவிட்டாலோ அவர்கள் கஷ்டங்கள் நீக்கப்பட்டு விட்டதாகக் கருதக் கூடாது. காவல் துறையில் உள்ள, லோயர் லெவலில் உள்ள கான்ஸ்டபிள்களுக்கு கொடுக்கப்படுகிற தினசரி பாட்டா மிக மிகக் குறைவாகும். அவர்களுக்கு ஒரு நாள் பாட்டா என்பது குறைந்தது பத்து ரூபா யாவது இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் நிச்சயமாக தவறான பாதைக்குச் செல்லவேண்டிய நிலைக்கு அவர்கள் விடப்படுகிறார்

* 2 4169 -ம் பக்கத்திலிருந்து இணைப்புகள் [illegible] ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் பொறுத்த வரையில் 1924-ம் ஆண்டில் போடப்பட்ட ப்ளான் பிரகாரம் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இன்று சுதந்திர நாட்டில் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் என்ற பெயரால் திட்டங்கள் தீட்டப்பட்டாலும், ஒரு பெரிய குடும்பம் என்றால் பெரிது வந்த பிள்ளைகள் படிக்க வசதி, உறங்க வசதி போன்ற வசதிகள் இருக்க வேண்டும். என்றோ போட்டப்பட்ட ப்ளான் பிரகாரம் அதை வைத்துக்கொண்டு காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது என்றால் அரசின் பணமும் சரிவர பயன்படாமல் போகவும், அவர்களுக்கும் ஒரு நிம்மதி இல்லாத சௌகரியமில்லாத நிலை தான் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு நல்லவிதத்தில் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணி அடித்தார்கள்)

தமிழ்நாட்டில் உள்ள சட்டம்-ஒழுங்குநிலை பற்றி முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு வந்த காலத்திலும் சரி அல்லது அரசாங்க பொறுப்பு இல்லாத காலத்திலும் சரி காவல் துறையில் உள்ளவர்களின்அவலநிலைபற்றி அறிவார்கள். செல்வாக்கு உள்ளவர்கள், தனவந்தர்கள், வசதி உள்ளவர்கள். அரசியலில் செல்வாக்கு உள்ளவர்கள் போன்றவர்கள் போலீஸ்காரர்களை தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு சட்டங்களை தங்களுக்கு வாய்ப்பாக வசதியாக செய்து கொண்டு வந்தார்கள் என்று அன்று சொன்னோம். அப்போது அன்னியர் ஆட்சி இருந்தது. ஆனால் இன்று நம் ஆட்சியிலும்கூட அதே அவலநிலைதான் இருக்கிறது. சட்டங்கள் பல செய்கிறார்கள். ஆனால் சட்டங்களை அமல் படுத்த சரியான முறையில் அதிகாரிகளை அமைக்கவில்லை. அப்படி அதிகாரிகள் அமைக்கப்பட்டாலும், அரசியல் காரணமாக —எந்த அரசாங்கமானாலும் சரி—அந்தச் சட்டங்களை அமல் படுத்த காலதாமதம் செய்வதால் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக சட்டங்கள் இருந்தும் அவற்றை அமல்படுத்தவில்லை என்பதற்காக ஜனநாயக உரிமைப்படி அவர்கள் ஸ்ட்ரைக் செய்ய துணிகிறார்கள். அல்லது கூட்டங்கள் போடுகிறார்கள். அல்லது சில சமயங்களில் தவறான செயல்களில் தொழிலாளர்கள் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு சுயநலத்தோடு இருக்கிறவர்கள் ஒரு சிலரால், சமூக விரோதிகள் என்று சொல்லக் கூடிய ஒரு சிலரால் தொழிலாளர்கள் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவலநிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிறபோது சட்டங்கள் இருந்தாலும், சட்டம்-ஒழுங்கை நிர்வகிக்கக்கூடிய கீழ் லெவலில் உள்ள அதிகாரிகள் சில சமயங்களில் பொறுப்பற்றிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்று தொழில் அமைதி இல்லை. யார் அமைதியாக இருக்கிறார்கள்? ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கேட்க போராடுகிறார்கள், உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அமைதியற்ற நிலையில் இருக்கிறார்கள். அரசியல்வாதி



கள் தெரிந்தோ தெரியாமலோ சொல்கிற பாவ காரணமாக ஆசிரியர்கள் உட்பட அரசாங்கச் சொத்துக்களை நாசம் செய்வதால்தான் அரசாங்கத்தின் கவனத்தை நாம் நம் பக்கம் இழுக்க முடியும், அதுதான் சுருக்கமான வழி என்று எண்ணக் கூடிய ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே அரசாங்கச் சட்டங்களை ஒழுங்காக தக்க காலத்திலேயே அமல்படுத்த வேண்டும். போலீஸ் துறை தன் வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று உண்மை என்ன என்று அறிந்துகொள்ள வேண்டும். இன்று கீழ்பட்ட அதிகாரிகளின் அலட்சியப்போக்கினால், அவர்கள் கேட்பாரற்ற நிலையில் இருப்பதால் இவ்வளவு நாசம் நடக்கிறது. ஆகவே சட்டம்-ஒழுங்கு நல்ல முறையில் நிலைநாட்டப்பட வேண்டும். எதிலும் காலதாமதம் செய்யக்கூடாது.

இன்று தொழில் துறையில் அமைதி இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு காரணம் தொழிலாளர்கள் என்று சுலபமாகச் சொல்லிவிட வாய்ப்பாக இருக்கிறது. சட்டங்களை அமல்படுத்துவதில், அவற்றைப் பராமரிப்பதில் ஒரு அலட்சியப் போக்கு இருப்பதால்தான் இந்த அவலநிலை ஏற்படுகிறது. கடைசியாக போலீஸ் அதிகாரிகள் செய்யக் கூடிய சந்தர்ப்பம், அடக்குமுறையைக் கையாள்வது என்ற அவலநிலை ஏற்படுகிறது.

இன்று நாட்டில் குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பின்படி, ஐந்தாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, 1979-ல் 'மர்டர் ஃபார் கெயின்' 28 குற்றங்கள், ஆனால் 1980-ல் 53 குற்றங்கள் நடந்திருக்கின்றன. 1981 ஜனவரி, பெப்ரவரியில் இரண்டு மாதங்களில் மட்டும் 11 குற்றங்கள். டெக்காயிட்டி, 1979-ல் 36, 1980-ல் 60. ராபரி 79-ல் 254, 80-ல் 271, ஹவுஸ் ப்ரேக்கிங் 1979-ல் 9,637, 80-ல் 9,410 மேஜர் தெப்ட்ஸ் 79-ல் 25,406, 80-ல் 25,991, ஜனவரி, பெப்ரவரியில் 3,979, மைனர் தெப்ட்ஸ் 1979-ல் 2,069, 80-ல் 2,061, ஜனவரி பெப்ரவரியில் மட்டும் 259, காட்டில் தெப்ட்ஸ் 79-ல் 1,241, 1980-ல் 1,241 என்றிருக்கிறது.

அதுபோலவே, பல விஷயங்களை நாம் எடுத்துப் பார்த்தால் குற்றங்கள் வளர்ந்துகொண்டு போவதற்குக் காரணம், ஸ்தலத்திலே உள்ள அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது ஆகும். அரசாங்கத்தை நடத்துகின்ற நாம் அந்தக் குற்றத்திற்குக் காரணம் என்ன? பொதுமக்களா அல்லது அரசாங்கமா? அரசாங்கம் என்று சொன்னால், அதிகாரத்தில் இருக்கிறவர்கள் கொடுக்கப்பட்ட சட்டங்களை அமுல்படுத்துவதில் காலதாமதப்படுத்துவதும் அல்லது மாற்றானுடைய பலவந்தத்தினால், கட்டாயத்தினால், அலட்சியத்தினால் நாம் விட்டுக் கொடுப்பதுதான் காரணம். இந்தக் குற்றம்தான் நடப்பதற்குக் காரணம். இதை அரசு ஏற்கின்ற பொறுப்பாக இருக்கின்ற நிலைமைக்கு நாம் நம்மை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது என்று அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தை
எடுத்துக்கொண்டால, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத்
தெரியும். நானும் அந்தக் கிராமத்திற்குச் சென்றேன். ஐ. ஜி.
அவர்களைப் பார்த்துக் கேட்டேன்; டி.ஐ.ஜி. அவர்களைப்
பார்த்துக் கேட்டேன். எஸ். பி.-ஐ பார்த்துக் கேட்டேன்;
அடிஷனல் எஸ். பி.ஐ பார்த்துக் கேட்டேன்; எஸ். ஐ.-ஐப்
பார்த்துக் கேட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள்? செங்கு
ளாங்குளத்திலே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னார்கள்.
ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக, குறிப்பாக,
இந்த நிலையற்ற, அனாதையான, அவதிப்படுகின்ற, சுதந்திரத்
திற்குப் பின்னாலும் இந்தக் கேடான நிலையிலே, அவமான
நிலையிலே உள்ளவர்களைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். ஆனால், சில நண்பர்கள் சொல்வார்கள் குஜராத்தைப்
பாருங்கள்; பீகாரைப் பாருங்கள் என்று. அந்த காட்டு
மிராண்டித்தனமான நிகழ்ச்சிக்கு நாம் போக வேண்டாம்.
தமிழகத்திலே நடக்கின்ற ஆட்சி, தமிழ்நாட்டில், வள்ளுவர்
பிறந்த நாட்டில் வள்ளியம்மைப் பிறந்த நாட்டில் இந்த காட்டு
மிராண்டித் தனமான காரியத்திற்கு நாம் இடம் கொடுக்க
வேண்டுமா? என்று அப்படிப் பேசுகின்ற நண்பர்களை நான்
கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். எனவே, அந்த அவலநிலை
மையை சுட்டிக்காட்ட வேண்டாம். சப்-இன்ஸ்பெக்டர் ஒன்றுமே
நடக்கவில்லை என்று சொன்னார்; எஸ். பி. ஒன்றுமே நடக்க
வில்லை என்று சொல்கிறார். நாராதிருஷ்டவசமாக மந்திய
அமைச்சர் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்கிறார். அங்கே
50 வயதிற்கு மேற்பட்ட கிழவிகள்தான் ஊரிலே இருக்கிறார்கள்
என்கிறார்கள் மிகக் கேவலமான அந்த நிலைமையைக் கண்டு
வருந்துகிறேன். அதற்காக நான் வெட்கப்படுகிறேன். நான் சார்ந்த
கட்சியின் சார்பிலே நான் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.
ஆனால், எப்படியிருந்தாலும், ஆளுகின்ற கட்சி, நான் ஆளுகின்ற
நிலைமையில், தன்னுடைய கடமையிலே இருந்து தவறிவிடக்
கூடாது. தவறில்லாத ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும்.
டி.ஐ.ஜி. அங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்கிறார்;
எஸ். பி. அவர்கள் அங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று
சொல்கிறார். கடைசியாக அவர்கள் ஒரு இணக்கத்திற்காக ஒரு
குறிப்பைச் சொல்கிறார். அந்த ஊரில் இருந்த மக்களை, தன்
ஜீப்பில் வைத்து, பெட்ரோல் போட்டு, சிவந்திரபுரத்திற்கும்,
செங்குளாங்குளத்திற்கும் அனுப்பியதாகச் சொன்னார். நான்
அவரைத் திருப்பிக் கேட்டேன். ஒன்றுமே நடக்கவில்லை என்று
சொன்னீர்களே, ஏன் அரசாங்கத்தின் பெட்ரோலை வீணாக்கி
னீர்கள், ஏன் டிரைவருக்கு தொந்தரவு கொடுத்தீர்கள்? ஏன்
அந்த மக்கள் திரும்பிச் சென்றார்கள் என்று கேட்டேன். அவர்,
அவர்கள் பயந்தார்கள், எனவே அனுப்பினேன் என்றார்.
கடைசியில், நீதி விசாரணை நடக்கிறது. அப்படி நீதி விசாரணை
நடத்தியதற்காக நான் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்று உண்மை தெரிந்திருக்கிறது. ஒரு ஏழை மகளை
கற்பழிக்கத் துணிந்தார்கள். அந்த ஏழை மகளுடைய புருஷன்



கண்ணுக்கு நேராகக் கண்டதைக் கேட்டான்; அதற்காக அவன்
அடிக்கப்பட்டான்; இறக்கச் செய்யப்பட்டான். அவன் ஒரு
கிறிஸ்துவ சகோதரன். முறைப்படி அவனுக்கு ஈமச் சடங்குகள்
நடைபெறவில்லை; அவன் எரிக்கப்பட்டான். கிராமத்திலே
எரிக்கின்ற தொழிலை தாழ்த்தப்பட்ட இனத்திலே உள்ள
வெட்டியான், அந்தத் தொழிலைச் செய்வான். ஆனால் அங்கு
நாவிதன் என்ற வகுப்பைச் சார்ந்த பண்டிதர் என்று சொல்லக்
கூடியவர் தீயினை மூட்டி எரித்திருக்கிறார். அப்படி எரிக்கப்பட்ட
எலும்பைக் கிணற்றிலே போட்டிருக்கிறார்கள். அந்த எலும்பு
கிடைத்திருப்பதாக நீதி விசாரணையின் மூலம் தெரிய வந்திருக்
கிறது. அந்த நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்த முதலமைச்சர்
அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால்,
அந்த சமயத்திலே அந்த நீதி விசாரணையின் முடிவு என்ன ஆகும்
என்று எனக்குத் தெரியாது.

முதலமைச்சர் அவர்கள் அங்கே செல்லவில்லையானால், அந்த
எஸ். பி. அவர்களும், அந்த டி.ஐ.ஜி. அவர்களும், கீழ்த்தர
சிப்பந்திகளும் உண்மையைக் கொன்று விட்டார்கள் என்பதை
மறைக்க முடியாது. என்னைவிட அதிகமாக முதலமைச்சர்
அவர்களுக்குத் தெரியும்.

அதேபோல், இராமநாதபுரத்திலே கலவரம். யாரோ ஒரு
பையன், ஒரு பெண் தவறு செய்ததற்காக, ஒரு சமூகம் இன்னொரு
சமூகத்தை அழித்துக் கொள்கிற மிலேச்சத்தனமான குணம்
வருகிறது. இதற்கு, போலீஸ் அதிகாரிகள் உடனடியாக செயல்
படாதது தான் காரணம்.

அதேபோல் டாக்டர் அழகப்பா கல்லூரியில் நடந்தது என்ன?
அதேபோல் டாக்டர் அழகப்பா கல்லூரியில் இருந்துவந்த சண்டையைப் பெரிது
மாணவர்களுக்கிடையே இருந்துவந்த 3 மாடிகளுக்கு மேல் ஏறி,
படுத்தி, மாணவர்களை இரவிலே 3 மாடிகளுக்கு மேல் ஏறி,
அடிக்கத் துணிந்தார்கள். ஸ்தலத்திலே இருந்த அந்த போலீஸ்
அதிகாரிகள் ஒன்றும் செய்யவில்லை. கேட்டால், ஒன்றும் நடக்க
வில்லை என்று சொன்னார்கள். நான் ஐ.ஜி. அவர்களிடம்
சொன்னேன், 20 நாட்களுக்குப் பிறகு ஐ.ஜி. அவர்கள் டெலிபோன்
செய்து, போலீஸ் பந்தோபஸ்து கொடுக்கச் சொன்னார்கள். பிறகு,
அங்கே அமைதி நிலவிற்று. இதற்குக் காரணம், சட்டங்கள்
எதைச் செய்தாலும், மேல் மட்ட அதிகாரிகள் என்ன நினைக்
கிறார்கள்? தெரிந்தோ, தெரியாமலோ அவர்களிடத்திலே உள்ள
அலட்சியப்போக்கு இருக்கிறது அல்லது என்போன்ற ஓட்டு
வாங்கினவர்கள் பின்னாலே எஸ். ஐ. அல்லது சர்க்கிள் இன்ஸ்
பெக்டர் போன்றவர்களைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடம்
சொல்லி, அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கின்ற ஒரு
கேவலமான நிலை ரசியல்வாதிகளிடம் தெரிந்தோ தெரியாமலோ
இத்தகைய பாவமான காரியத்தைச் செய்வதால் தான். எனவே,
ஆளுகின்ற கட்சியிலே இருக்கின்றவர்கள், அமைச்சர் பெருமக்கள்:
இதைக் கண்டிப்பாக, தங்கள் கட்சிக்காரர்களாக இருந்தாலும்,
அல்லது இளையபெருமாளாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட

அநீதியான காரியங்களுக்காக அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கின்றபோது, அவர்களுக்கு சாதகமாக வருகின்றவர்களை நிச்சயமாக கவனிக்கக்கூடாது; இதிலே தைரியமான ஒரு எண்ணம் அவர்களுக்கு இருக்கவேண்டும். தேர்தல் வருகிறது, ஓட்டு வாங்க வேண்டும் என்று எண்ணத் துணிவார்களானால், நீதி செத்துவிடும். இந்த நிலைமைக்கு முதலமைச்சர் அவர்களும், நாம் மையா அரசாங்கமும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 10-40]

அதைப்போல வ போலீஸ் பிரிவிலே தமிழ் நாட்டில் ஸ்பெஷல் போலீஸ் பிரிவு, ஆயுத போலீஸ் பிரிவு இருக்கிறது. நிர்வாகத்தை நடத்துகிற பிரிவு இருக்கிறது. ஸ்பெஷல் போலீஸ் பிரிவில் 15 ஆண்டுகள், 18 ஆண்டுகள் அவர்கள் அதிலே இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அப்படியில்லாமல் 5 ஆண்டு 6 ஆண்டு ஆன பிறகு அவர்கள் மாற்றுத் தொழிலுக்கு செல்கிற நிலைமை இருந்தால் அவர்களுடைய குடும்பங்கள் தற்போது அனாதை போல இருக்கிற அவல நிலை மாறும். அத்தனை பேருக்கும் வீடு வசதிகள் கொடுக்கவில்லை. அவர்களுடைய குடும்பம் அநாதையாக விட வேண்டிய நிலை இருக்கிறது. 15 ஆண்டு, 18 ஆண்டு என்று இருப்பதை 5 ஆண்டு, 6 ஆண்டு என்று இருக்குமானால் அவர்களுக்கு உதவி செய்ததாக இருக்கும். மாற்றுத் தொழில் மற்றவர்களுக்குக் கொடுக்கிற ஒரு புதிய நிலைமையை உண்டாக்கலாம். இது கேரளா மாநிலத்தில் அமுலிலே இருக்கிறது. அதைப்போல நாமும் செய்யலாமென்று அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இருக்கிற நிலையிலே குற்றப் பிரிவுகள் அதிகரிப்பதற்குக் காரணம் அரசு எத்தனை சட்டங்களைப் போட்டாலும் கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் உடனடியாகச் செய்யவில்லை என்ற குறை தான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த நிலைமைக்கு ஒரு தனி ஸ்பெஷல் போலீஸ் அமைப்பை உண்டாக்கி எங்கெல்லாம் தொழில் துறை நடக்கிறதோ அங்கே இருக்கிற தொழிற்சங்கத்திலிருந்து அவர்களுக்குத் தகவல் வருகிறபோது உடனடியாகச் சென்று விசாரித்து அதில் தொழிலாளர்கள் சார்பில் தவறு இருக்குமானால் அவர்களைக் கண்டிக்கவும்; அல்லது முதலாளிகள் மேனேஜ்மெண்ட் மீது தவறு இருக்குமானால், சட்டங்கள் இப்படி இருக்கிறது, ஏன் இதை அமுல் நடத்துவதற்குத் தயங்குகிறீர்கள்? ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என்று தெரிந்து உடனடியாக அவர்களுக்கு அறிவுரை கூறுவது, முடிய வில்லை என்றால் சட்டப்படி அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமையைப் பாதுகாத்து உதவிட வேண்டும். இன்று தொழில் துறையில் அமைதியற்று இருக்கிற நிலைமையை மாற்ற வேண்டும். தொழிலாளர்கள் தலைவர்களை



கூப்பிட்டு அழைத்து பேசி, முடிவு செய்தால் இதுபோன்ற நிலைமையை மாற்றலாம். நீதி நிர்வாகம் என்று வருகிறபோது நீதித் துறை எப்படி போனாலும், நிர்வாகத் துறையிலே இருக்கிற முக்கியமான பங்கு வகிக்கின்ற போலீஸ் பிரிவினர் அதை செய்வதிலே தவறக்கூடாது. என்பதைக் கூறி, அரசு இதை செய்வதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து பொய் வழக்குகள். இது வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த ஒரு சட்டம். நான் சென்ற வருடம் கேட்டபோது அது நீக்கப்பட்டது என்று சொன்னார்கள். மாதம் இறுதியில் 30-ஆம் தேதி வந்து விட்டால் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் உள்ளவர்கள் இத்தனை கேஸ்கள் தொடுக்க வேண்டும். அப்போது தான் அந்த போலீஸ் ஸ்டேஷன் ஒழுங்காக காவல்துறையின் சட்டத்தை அமல் படுத்துகிறார்கள் என்று எண்ண முடியுமென்ற நிலை இருக்கிறது. ஒரு கேஸ் கூட போடவில்லையோ? அவ்வளவு உத்தமர்கள் இங்கே இருக்கிறார்களா? என்று எல்லாம் மேல் அதிகாரிகள் கீழுள்ள அதிகாரிகளை விரட்டிக்கேட்கிற நிலை இருக்கிறது. அதனால்தான் காரணம், காரியம் கூட தெரியாமல் எவனெல்லாம் அழுக்குச் சட்டை போட்டானோ, எவனெல்லாம் கோர்ட்டுகளில் வக்கீல் வைத்து வாதாட முடியாத நிலையில் இருக்கிறானோ, அவனையெல்லாம் பஸ் ஸ்டாண்டிலே, ரோடிலே பிடித்துக் கொண்டுபோய் கேஸ் போடுகிற அவல நிலை இருக்கிறது. நான் ஒரு சமயம் ஐ.ஜி. அவர்களை கேட்ட போது ஐ.ஜி. அவர்கள் அந்த நிலைமையை மாற்றி விட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் நேற்று இரவு கூட அந்த அவல நிலைமை நடைபெற்றது. சிதம்பரத்திலே கூலித் தொழிலாளர்கள் நேற்று இரவு பஸ் கிடைக்காமல் இருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் நெல்லை நடுத்தெருவில் போட்டுவிட்டு, அவர்கள் மீது சந்தேக கேஸ் என்று போட்டு அவர்களை அடைக்கிறார்கள். ஏன் இதை சொல்கிறேன் என்றால் நாம் போடுகிற சட்டங்கள் அதிகாரிகள் மேல் மட்டத்திலே இருந்து ஒழுங்காகச் செய்யவில்லையா? அல்லது கொடுத்தும் இந்த அவல நிலையை உண்டாக்குகிறார்களா? அப்படி இருக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல ஐ.ஜி. அவர்கள் கூட அரசாங்கத்திற்கும், அமைச்சர் அவர்களுக்கும் எல்லாம் தெரியும் என்று இல்லாமல், அதற்காக ஐ.ஜி. ஆகவோ, அல்லது நிர்வாக அதிகாரியை உருவாக்கி இப்படி அரசியல்வாதிகள் தவறான முறையில், தகாத முறையில், அநீதி செய்தவர்களுக்கு, அக்கிரமம் செய்தவர்களுக்கு, சமூக விரோத செயல்களைச் செய்தவர்களுக்கு சிபாரிசு வருவார்களானால், அதற்கான ஒரு குறிப்பேடு வைத்து அப்படிப்பட்ட காரியங்களை யார் செய்தார்கள் எந்த சட்டமன்ற உறுப்பினர்கள் செய்தார்கள்; என்பதை தெரிந்து இந்த அவையில் பகிரங்கமாக படிக்கவேண்டும். அப்படி செய்தால்தான் அக்கிரமம் செய்பவர்

களுக்கு உதவியாக வருகிற சட்டமன்ற உறுப்பினர்கள் செயல் குறையும்; அதனால் நீதி ஒழுங்காக நிலை நாட்டப்படும்; நிர்வாகத்திலே தவறில்லாமல் இருக்கும். அது எந்த கட்சிக் காரர்கள் ஆனாலும் சரி; இளையபெருமாளானாலும் சரிதான். அதை பகிரங்கமாக செய்கிற துணிவு அரசாங்கத்திற்கு வந்தாலொழிய இந்த நிலைமையை சீர் செய்ய முடியாது.

அடுத்து சாராயக் கடை, கள் கடை; ஏதோ கொடுக்கப்போகிறோம் என்று முடிவு செய்தார்கள். இதற்கு 28 பேர்தான் கள் கடையை நிறுத்த வேண்டும் என்றார்கள். இதர பேர்கள் சேர்ந்து இந்த சபையில் திறக்கவேண்டுமென்று செய்து விட்ட பிறகு, அதற்குள் போகவில்லை நான்; ஆனால் ஏலம் விடப்படவில்லை. ஆனால் வழங்கியவர்கள் போக, வழங்காதவர்கள் தெருவெல்லாம் விற்கிறார்கள். ரோடெல்லாம் விற்கிறார்கள். பள்ளி நிலையத்திற்கு பக்கத்திலே விற்கிறார்கள். கல்லூரி பக்கத்திலே விற்கிறார்கள். நம்முடைய சட்டம் என்ன செய்கிறது? நம்முடைய நிர்வாக அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? அதற்காக ஒரு ஸ்பெஷல் ப்ளையிங் ஸ்குவாடு வைத்திருக்கிறோம் என்று கூட சொன்னார்கள். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்? அப்படி செய்யாததற்கு காரணம் என்ன? அப்படிச் செய்து விட்டு மீண்டும் அதே நபர் ஒரு நாள் கோர்ட்டிற்கு வந்து அபராதம் கொடுத்துவிட்டு மறுநாள் காலையிலிருந்து 15 நாட்களுக்கு ஒழுங்காக விற்கிறார். பிறகு 16 நாட்களுக்குப் பிறகு அவரே வந்து மாமூல் பணத்தைக் கட்டிவிட்டு போய்விடுகிறார். மாமூல் வாங்குவதில்லை என்று போலீஸ் நிலையங்களில் சொல்வதற்கு இந்த அரசுக்கு தைரியம் இருக்கிறதா? வாங்குகிறார்கள் என்ற உண்மை தெரிந்தால் தெரிந்தவர்கள்மீது எத்தனை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது? அது எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதானது அல்லது இப்படித்தான் இருக்கும் என்ற அலட்சியப் போக்கானது மேலும் மேலும் குற்றங்களை அதிகரிக்கிறது, சட்டத்தை அவமானப் படுத்துகிறது. சட்டத்தை உண்மையாக அமல்படுத்தக்கூடிய ஒரு 5 சத விகித நல்ல அதிகாரிகள்கூட மந்திரிகள் கேட்கவில்லை சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கவில்லை, 95 சதவித அதிகாரிகள் கேட்கவில்லை நமக்கு ஏன் கெட்ட பெயர் என்று அந்த நல்ல அதிகாரிகூட இம்மியூன் என்று சொல்வார்களே அந்த நிலையிலே சொரணையற்ற நிலையிலே தங்களுடைய அறிவை மழுக்கிக் கொள்ளக் கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். இந்த அவல நிலைக்கு அரசு தான் காரணம். எந்த கட்சி பொறுப்பு ஏற்கிறதோ அந்தக் கட்சிதான் பொறுப்பு. மத்திய சர்க்காரையோ மாநில சர்க்காரையோ சொல்வதில் பயனில்லை, யார் நிர்வாகத்திலே இருக்கிறார்களோ அவர்கள்தான் பொறுப்பேற்கவேண்டும்



அடுத்து தீண்டாமை ஒழிப்புச் சட்டம். நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்வது எல்லாம் செய்தாலும் அமல்படுத்தவில்லை. இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் டி.ஐ.ஜி. லெவலில் ஒருவரைப் போட்டிருக்கிறோம். ஆனால் கேஸ் கொடுக்கப்பட்டால் இதைத்தவிர உங்களுக்கு வேறு வேலை இல்லையாடா போடா என்று சொல்லக்கூடிய அவல நிலைமை தான் இன்று இருக்கிறது. டி. ஐ. ஜி. லெவலில் அதிகச் சம்பளம் கொடுத்து நிர்வாகத்தில் நீதியை நிலைநாட்ட ஏற்பாடு செய்தும் ஒன்றும் நடக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கவேண்டும். ஒன்று நாம் கடைமையைச் செய்ய வேண்டும். இல்லையானால் டி.ஐ.ஜி-க்கு அதிகச் சம்பளம் கொடுப்பதை நிறுத்தினால் அரசாங்கத்திற்கு பணமாவது மிச்சமாகும், அவர்களுடைய அறிவும் திறமையும் வேறு வகையிலே பயன்படும். இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டப்படியும், தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படியும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டப்படியும் எந்தப் போலீஸாரிடத்திலே கொடுத்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்ற நிலையும் அமைப்பும் இருக்கிறது. ஆனால் ஒருவரும் தானே எடுப்பதில்லை, சட்டப்படி இருக்கிறது. ஆர்டிகிள் 17 இன் பிரகாரம் அன்டச்சபிளிட்டி இஸ் அபாலிஷ் என்று சொன்னார்கள், இட் எக்சிஸ்ட் இன் ஆல்பி ...ஸஸ் என்று சொல்கிறார்கள். ஆனால் எத்தனை போலீசார் தானே என்று இந்த கிராமத்திலே தீண்டாமை அனுஷ்டிக்கப்பட்டது. நான் இந்தக் கிராமத்தைப் பார்த்த போது இந்த கேஸை எடுத்தேன் அவர்களைத் தண்டித்தேன் என்று சொல்ல முடியுமா? அவர்கள் ஒன்றுகூட அப்படிச் சொல்ல முடியவில்லை. எந்த ஆட்சியையும் இதற்குக் காரணம் என்று சொல்லவில்லை. அது முன்னாலே இருந்த ஆட்சியாக இருந்தாலும் சரி பின்னாலே இருந்த ஆட்சியாக இருந்தாலும்சரி, நாளைக்கு வரப்போகிற ஆட்சியாக இருந்தாலும் சரி சட்டத்தைப் போட்டிருக்கிறோம், அது மதிக்கப்படவில்லை என்ற நிலைமையைத்தான் நாம் சொல்லவேண்டியவர்களாக இன்று இருக்கிறோம். குறிப்பாக செங்கற்பட்டு ஜில்லாவிலே இடையாத்தூர், கடம்பத்தூர், திருக்கழுக்குன்றம், திருமுல்லைவாயில் இத்தனை கிராமங்களில் அக்கிரமம் நடந்திருக்கிறது. ஆனால் திருக்கழுக்குன்றத்திலே தக்க நேரத்திலே நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் அந்த ஊரே தீப்பற்றி எரிந்திருக்கும். தக்க நேரத்தில் போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அரசியல் கட்சிக் காரர்கள் என்ன கூறுகிறார்கள், போர்க்காலம் போல் இருக்கிறது என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. அரசு என்ன செய்தது அப்படி ஸ்டேட்மெண்ட்டைக் கொடுத்தவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருக்கட்டும், அவர்கள் தி. மு. க. வாக இருக்கட்டும் அல்லது காங்கிரஸ் கட்சியாக இருக்கட்டும், அல்லது அண்ணா தி. மு. க. வாக இருக்கட்டும், அல்லது கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கட்டும் அந்த நிலைமையை செய்ததற்கு போர்க்கால யுத்தம் போல் இருக்கிறது என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்களே அரசு என்ன தூங்கிக்கொண்டிருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முதலமைச்சரவர்கள் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி சொல்லும்போழுது கூடச் சொன்னார்கள். மற்ற சமுதாயத்தார் கோபப்படுவார்கள் என்று சொன்னார்கள். கோபப்படலாம் ; நீங்கள் கொண்டுவரும் நல்ல திட்டத்தை ஏழை மக்களுக்குக் கொடுக்கக் கூடாது என்றுதான் சொல்வார்கள். மற்ற சமுதாயத்திலிருக்கின்ற நல்லவர்களைத் தவிர—அந்த நல்லவர்கள் என்பதும் 5 சதவீதம்தான். ஆனால் 95 சதவீதம் பேர் இதைக் கூடாது என்றுதான் சொல்வார்கள். ஆகவே, வீடு கட்டும் திட்டத்திலே நாங்கள் விடுபட்டது தர்மம் அல்ல ; நியாயம் அல்ல.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பதவியை, அரிசன நல அமைப்புத் துறையை, ஒரு அரிசன நல அமைச்சரிடம் கொடுப்பதைவிட முதலமைச்சரேதான் எடுத்துக்கொள்ள வேண்டும். மனிதருக்கு மனிதர் ஒரு உண்மை உயர்வு தனித் தன்மை இருக்கத்தான் செய்கிறது. அதை இல்லை என்று மறுக்க முடியாது. எம்.எல் ஏ.க்கள் எல்லோரும் எம்.எல்.ஏக்கள்தான். நான் அவர்களைக் குறை கூறவில்லை. ஆனால் அவர்கள் செய்யும் பணிகள், அவர்கள் செய்யும் வகையான நல்ல காரியங்கள், ஆற்றல்கள், அவற்றைக் கணக்கில் எடுத்துத்தான் அமைச்சர் பெருமக்களோ அல்லது அதிகாரிகளோ நீதி உதவி வழங்குகின்ற நிலைமை வரும்பொழுது, உதவி செய்கின்ற நிலைமை வரும்பொழுது எதற்காக வருகிறார்கள், சுயநலத்தோடு வருகிறார்களா, யாருக்காவது ஏஜெண்டாக வருகிறார்களா என்று நினைத்துப் பார்த்துத்தான், அது உண்மையாக வந்தால், உறுதியாக வந்தால், நியாயமாக வந்தால் கடமையைச் செய்கிறார்கள். அதுபோலவே நல்லதொரு இளைஞர் அமைச்சராக இருப்பதற்கு நான் பாராட்டுகிறேன் ; வாழ்த்துச் சொல்கிறேன். ஆனால் இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்றால் இந்தப் பணியை அவருடைய கையிலிருந்து முதலமைச்சரவர்கள் எடுத்துக்கொண்டால் ஒழிய இந்தப் பணி சிறக்காது ; இந்தப் பணி நடக்காது ; நான் அனுபவ ரீதியாக இதனைச் சொல்கிறேன். 1952ஆம் ஆண்டு முதல் நான் ஒவ்வொரு முதலமைச்சரிடமும் கேட்டு வருகிறேன். நீங்கள் இந்தப் பணியை எடுத்துக் கொள்ளுங்கள், தவறு இருந்தால் தாராளமாக எங்களைக் கேளுங்கள்.

டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசர் என்பவர் ஆர். டி. ஓ. ரேங்க் தான். தாலுகா தாசில்தாரும் ரெகுலர் தாசில்தார் ரேங்க்தான். ஆனால் அரிசன் வெல்பர் தாசில்தார் என்று சொன்னால் எந்தக் கிராமத்துக் கணக்குப்பிள்ளையும், மணியமும் மதிப்பதில்லை; ஆனால் கணக்குப்பிள்ளையும், மணியமும் இப்பொழுது இல்லை. புதிதாக வரும் ரவின்யூ இன்ஸ்பெக்டரும்கூட அவரை மதிக்க மாட்டார். அவரை ஒரு தீண்டத்தகாத அதிகாரியாக நினைக்கிறார்கள். இதை மறைப்பதிலே பயன் இல்லை. தோட்டி, தலையாரிகூட அவர்களை மதிப்பதில்லை. ஆகவே, முதல் அமைச்சரிடம் இந்தத் துறை இருக்குமேயானால் முதலமைச்சர் உதவி எல்லோருக்கும் தேவை, இளையபெருமாள் உள்பட—ஆகவே



முதலமைச்சர் சொல்கிறார் என்றால் உடனே அதற்கொரு மதிப்பு வந்து அந்தக் காரியத்தை முடித்துக் கொடுத்தால் முதலமைச்சரிடம் நல்ல பெயர் வாங்கலாம் என்ற எண்ணம் கொண்டு காரியத்தைச் செய்வார்கள். காரியம் செய்யவேண்டுமென்று கட்டமிருந்த அவர் முதலமைச்சரின் பார்வையிலே இருந்தால் அது நடக்கும், அதைச் செய்யத் தவறினால் இந்த மக்களுக்குச் செய்கின்ற கடமைகளுக்காக எத்தனை கோடி செலவிட்டாலும் அது சேர வேண்டிய மனிதர்களுக்குப் போய் சேராது என்பதைச் சொல்கிறேன்,

அதுபோல, இராமநாதபுரம் கலவரத்திலே முதல்வரவர்கள் ஏன் எங்களையெல்லாம் விட்டுச் சென்றார்கள் என்று கேட்கத்தான் வேண்டும் என நினைக்கிறேன். மக்களுக்கு, யார் முதலமைச்சரோடு வருகிறார்களோ, யார் ஐ.ஜி.யோடு வருகிறார்களோ, யார் எஸ். பி. யோடு வருகிறார்களோ, யார் கலெக்டரோடு வருகிறார்களோ அவர்களை வைத்துத்தான் அவர்களின் கீழ் இருக்கிற அதிகாரிகள் கணக்குப் போடுகிறார்கள்.

இந்த இந்திய மண்ணினுடைய, பாவ மண்ணிலே பிறந்த மனிதன் எவ்வளவு கல்லூரிப் படிப்பு படித்தும், சான்டிபிக்காக படித்தும் குஜராத்திலே ரிசர்ச் செய்த டாக்டர் ஆப்பரேஷன் தியேட்டரிலே உட்கார்ந்து ஆப்பரேஷன் கத்தியை எடுத்தார், அந்த சமயத்தில் நோயாளி மாது கேட்கிறார், இந்த டாக்டர் என்ன ஜாதி என்று, அருகிலுள்ளவர்கள் அரிசன் என்றார்கள். நான் செத்தாலும் பரவாயில்லை; நான் அவன் கையால் ஆப்பரேஷன் செய்து கொள்ள மாட்டேன் என்று வெளியே போய்விட்டார். 1980–ல் வந்த செய்தி, ஆகவேதான் இதைச் சொல்கிறேன். இந்த நிலைமையில் அவதியான இடத்தில் நாம் இருப்பதால் முதல் அமைச்சரோடு இளையபெருமாள் சென்றால் அல்லது முதல் அமைச்சரோடு இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த அ.தி.மு.க எம். எல். ஏ.க்கள் அல்லது காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் சென்றால் ஒரு அரிசன மகன் சென்றால் நிச்சயமாக அதை மக்கள் கவனிப்பார்கள்.

இக்கலவரத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் ஒன்று பின்தங்கிய சமுதாயம், மற்றொன்று ஆதிதிராவிட சமுதாயம். இவர்கள் இரண்டு பேரும் கலந்து சென்றால் அங்கே கீழே இருக்கிற அதிகாரிகள் அந்த நல்ல காரியத்தைச் செய்வார்கள். அது என்னுடைய எண்ணம் நான் அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். அப்படி இல்லையானால், ஒரு சாராரைக் கூப்பிட்டுச் சென்றால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? ஒகோ, அந்தச் சமுதாயத்திற்கு முதல்வருடைய கண்பார்வை இல்லை, ஆகவே நாம் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள். அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் சுதந்திரத்திற்கு முன்பும் சரி, சுதந்திரத்திற்குப் பின்பும் சரி, பின்தங்கிய மக்கள், படிப்பற்றவர்கள், ஏழை மக்கள், உள்ள பகுதி. வறட்சி பூமி. அவர்களுக்குக் கடுமையான கோபம் தெரியுமே ஒழிய, கோபத்

தினுடைய எல்லையின் முடிவு என்ன என்று தெரியாத மக்கள். அவர்களை நீங்கள் வாழவைக்க வேண்டுமென்றால், பொருளாதாரத்திலே அவர்களை உயர்த்துவதற்கு இந்தத் தமிழ்நாடு ஜில்லாக்கள் அத்தனையையும் விட, அந்த ஒரு ஜில்லாவைத் தனியாகக் கவனிக்கவேண்டும்.

தர்மபுரியிலே எங்கிருந்து வந்தாலும், கூலிச்சட்டத்தை அமுல் படுத்தாதவர்கள் என்ற பெயரால், நக்சலைட் என்ற பெயரால், முதலாளிகள் என்ற பெயரால், தொழிலாளிகள் என்ற பெயரால் கம்யூனிஸ்ட்கள் என்ற பெயரால், தவறான லிஸ்டுகளைப் போலிஸ் அதிகாரிகளிடம் கொடுத்ததனால் பாதிக்கப்பட்டவர்கள் உண்டு. ஆனால், எல்லாம் பொய் என்று நான் சொல்லவில்லை. ஆனால், தொடுத்த வழக்குகளிலே 90 சதவீதம் தவறு. 10 சதவீதம் தான் உண்மை. அதிலே பாதிக்கப்பட்ட மக்கள் பின்தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள் என்பது என்னைவிட அரசுக்கு நன்றாகத் தெரியும். அந்த உண்மையை நீங்கள் பார்க்கத் தவறுவீர்களானால், எங்களுக்கிழைக்கப்பட்ட அநீதி அது, அது சரியானதாகாது என்று சொல்லிக்கொள்கிறேன். அதை முறைப்படுத்த வேண்டும்.

இப்பொழுதிருக்கிற நிலையில் சட்டம், ஒழுங்கு, அமைதியின்மை குறைவாக இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வோம். அதற்கு யார் காரணமாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சிக் காரணமாக இருந்தாலும் சரி. இப்போது காவல் துறையில் போதிய ஸ்ட்ரெங்த் கிடையாது. வேலைப் பளு நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருக்கிறது. இந்த ஸ்ட்ரைக்குகளில் எல்லாம், இந்த ஜாதிகளில் எல்லாம் முக்கிய பங்கு வகிக்கின்றவர்கள் அரசியல் தலைவர்கள்தான், படித்தவர்கள்தான், படித்து, பட்டம் பெற்றவர்கள்தான். அவரவர்களுக்கு ஜாதி வெறியும், மத வெறியும், அரசியல் வெறியும் இருக்கிற காரணத்தால், மறைமுகமாக தூண்டிக் கொண்டிருக்கிறோம். அதை ஒத்துக் கொண்டுதான் தீர வேண்டும். இல்லையென்றால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம் என்று பொருள். இந்த அவல நிலையை போக்குவதற்கு இன்றைக்கிருக்கிற 55,000 அல்லது 60,000 ஸ்ட்ரெங்த் போதாது. அந்த இரண்டு மடங்காக்க வேண்டும். வேலையை அதிகமாக்கிவிட்டு, வேலைப் பளுவை உயர்த்திக் கொடுத்துவிட்டு, வேலை செய்கின்ற ஆட்களை உயர்த்தாமலிருந்தால் எப்படி இத்துறை வேலை செய்ய முடியும்? ஒரு ஸ்டேஷனிலே 15 பேர்கள் இருக்கிறார்கள். இரண்டு பேர்கள் கார்டுக்குப் போய் விடுகிறார்கள், 5 பேர்கள் கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். 4 பேர் லீவு போட்டு விடுகிறார்கள். ஒரு பெரிய கலவரம், 2,000, 3,000 பேர்கள் நடத்தினால், என்ன செய்வது? ஒரு ஸ்டேஷனுடைய எல்லை குறைந்தபட்சம் 25 சதுர மைல், அதிகபட்சம் 30 சதுர மைல், 40 சதுர மைலுக்கு வருகிறது. அதுவும் கிராமாந்தரப் பகுதியிலே பஸ் போகாது, ரோடு இல்லை, சைக்கிளில்தான் போக வேண்டும். இப்படிப்பட்ட அவல நிலை



இருப்பதனால், அந்த மக்கள் திருடலாம், மக்கள் எல்லாம் செய்வார்கள் என்று ரொம்ப வேதாந்தம் பேசலாம். ஆனால், நடைமுறையிலே மக்களைக் கெட்டவர்களாக, பொய்ப் பிரச்சாரத்தினால் ஆக்கக் கூடாது. ஆண்டவன் பெயரிலே இருந்த நம்பிக்கையை அரசியல் வாதிகள் கெடுத்துவிட்டோம். சட்டத்திற்கு இருந்த மரியாதையை நாம் கெடுத்து விட்டோம். ஆக, சட்டத்தின் மீது நம்பிக்கை போய்விட்டது. ஆண்டவன் மீதிருந்த நம்பிக்கையும் போய் விட்டது. அநாதையாக ஆகிவிட்டார்கள். அநாதையாக இருப்பவர்களை அரசுதான் கவனிக்க வேண்டும். அரசாங்க சிப்பந்திகள்தான் கண்காணிக்க வேண்டும். இருக்கிற ஸ்ட்ரெங்த் போதுமானதல்ல. அந்த இரண்டு மடங்கு மாற்றினால் தவறில்லை. அவைகளைச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதிக் கலவரம் எங்கு தோன்றினாலும், அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும், அவர்களுக்குக் கூட்டு அபராதம் போடுவோம் என்ற ஒரு கடுமையான முறையை, நடவடிக்கையை அரசு கொண்டு வந்தால்தான், அதிலே தவறு செய்பவர்கள் திருத்தப்படுவார்கள்.

பக்கத்திலே செங்கல்பட்டு ஜில்லா திருமுல்லைவாயில் என்ற ஒரு கிராமம். அரிஜன சகோதரர் கொல்லப்பட்டார். ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இரண்டு பேர்மீதுதான் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், கடந்த 15 நாட்களுக்கு முன்பு இன்னொரு உயர்ந்த ஜாதி சகோதரர் அடித்துக் கொல்லப்பட்டார், அல்லது தானாக இறந்தார், எப்படியோ இறந்தார். ஆனால், ஒரு கிராமத்தையே அடித்து, ஊரை விட்டுத் துரத்தி விட்டார்கள். போலீஸ் அதிகாரம் இப்படி செய்கிறது. அது முறையாக இருக்கிறதா? என்ன காரணம்? நான் ஐ.ஜி. அவர்களிடம் சொன்னேன், அவர் இனிமேல் நடக்காமல் கவனிக்கிறேன் என்றுதான் சொன்னார். நான் எதையும் கீழ் மட்டத்திலே சொல்லாமல், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெயரில், குறை கூறுவதற்கோ அல்லது முதல்வர் மேல் பழி சுமத்துவதற்கோ இதைச் சொல்லவில்லை. நான் பேசிய அத்தனையும் கீழ்பட்ட அரசு அதிகாரி முதல் உயர்மட்ட அதிகாரி வரை சொல்லி. பயனற்ற நிலைமையில்தான் இங்கு வந்து சொல்கிறேன்.

நான் கடைசியாகச் சொல்ல வேண்டுமென்றால், கும்பகோணம் கல்லூரியிலே கடந்த 10 ஆண்டுகளாக ஜாதிக் கலவரம். அதைத் தூண்டி விட்டு விடுகிறார்கள். அப்படித் தூண்டி விடுகிறவர்கள் கலெக்டரிடம் நல்ல பெயர் வாங்குகிறார், பெரிய போலீஸ் அதிகாரியிடம் நல்ல பெயர் வாங்குகிறார். போலீஸ்காரர்களுக்குத் தெரிகிறது இளையபெருமாள் என்று வைத்துக் கொள்ளுங்கள், இளையபெருமாள் என்று தெரிகிறது, ஏன் என் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காமல் எனக்குப் பயந்து

கொண்டோ, அல்லது என்னுடைய சக்திக்குப் பயந்து கொண்டோ நடைமுறையில் செயல்படுகிறார்கள். அங்கு ஒரு நல்ல போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். அவரை மாற்றக்கூடாது என்று சொன்னோம். மாற்றிவிட்டார்கள் அவர் கண்ட்ரோல் செய்த தற்குத் தண்டனை அவரை ஊரை விட்டுத் துரத்தியுள்ளார்கள். இந்த நிலைமை இருப்பதனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீர்க்கமாக இந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்த நிலைமையிலே அதிகாரிகளை, கான்ஸ்டபிள்களின் ஸ்ட்ரெந்தை உயர்த்தி, சட்டத்தை உடனடியாக அமுல்செய்து சட்டத்தின் குறுக்கே நிற்கின்றவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கின்ற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11.00)

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கான காவல்துறை இயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது எனது கருத்துக்களை எடுத்து இயம்புகிறேன்.

சட்டம், ஒழுங்கு அமைதியை நிலைநாட்ட, குற்றங்கள் நடைபெறா வண்ணம் தடுத்தல், குற்றங்களைத் துப்புத் துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு ஆற்றும் பொதுவான பணிகளைத் தமிழ்நாட்டு காவல் துறை சீரும் சிறப்பாகவும் செய்து கொண்டு வருகிறது என்பதனை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, குற்றங்குறைகள் நிறைந்து வந்த எனது கோட்டமான அரியலூரிலும், அதைச் சுற்றிய காவல் துறை அலுவலகங்களிலும் இன்று இளம் துடிப்போடு இருக்கின்ற சப்-இன்ஸ்பெக்டர்களை நியமித்த மக்குப் பாராட்டுகிறேன். அங்கு நடைபெறும் கொடுமையான செயல்களைப் பற்றி நான் அரசினுடைய கவனத்திற்கு பலமுறை கொண்டு வந்திருக்கிறேன். அதிகாரிகள் கவனத்திற்கும் பல முறை தெளிவாகக் கொண்டு வந்திருக்கிறேன். அதனால் அங்கே இளமைத் துடிப்போடுகூடிய சப்-இன்ஸ்பெக்டரைப் போட்டதற்கு. அந்த புரட்சிகரமான திட்டத்தின்படி போட்டதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் குறிப்பாக இரும்புலிக்குறிச்சி, பொன் பரப்பு ஆகிய இடங்களில் ஏற்பட்ட மாபெரும் கலவரங்களை அடக்குவதற்கு காவல்துறை நல்ல முறையில் செயல்பட்டதன் காரணமாக அங்கே இன்றைக்கு அமைதி நிலவுகிறது. அந்த அமைதியை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என் இதயபூர்வமான



நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் புரட்சித் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வேன், இப்படிப்பட்ட சமூக விரோத செயல்களைச் செய்கின்ற சமூக விரோதிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டுகிறேன்.

இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் 150 காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்களை நியமிக்கும்படி ஆணையிட்டிருக்கிறார்கள் அதிலும் குறிப்பாக நல்லவர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கு முதலிடம் தந்து அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். திறமை உள்ளவர்களுக்கு சற்று உயரமோ அல்லது பாடியோ குறைவாக இருந்தாலும் அவர்களுக்கும் அதிலே எக்சம்ப்ஷன் கொடுத்து அவர்களை நியமிக்கவேண்டுகிறேன்.

குறிப்பாக நமது மாநிலத்தில் அனைத்துக் காவல் நிலையங்களிலும் தனி பெண் பிரிவு ஏற்படுத்தக் கூடுதல் பணியாளர்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதை வரவேற்கின்றேன். குற்றங்கள் எப்படி நடைபெறுகின்றன, குற்றங்களைத் துப்புத் துலக்குதல், களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டல் ஆகிய முயற்சிகளில் தமிழ்நாடு காவல் துறை மற்றைய மாநிலங்களைவிட சிறப்பாகச் செயலாற்றுகின்றது என்பதனைப் பாராட்டாமல் இருக்கமுடியாது

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளில் இருந்து பொதுமக்களை மீட்க தன்னுயிரையும் தந்து அவற்றை அடக்கிய தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு எடுத்துக் காட்டாக, வடார்க்காடு தர்மபுரி மாவட்டங்களில் காவல் துறையினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பிறகு, மக்களுடைய மன அமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது.

அதோடு மட்டுமல்ல. வேண்டப்படாத விவசாயிகளின் போராட்டங்கள் விபரீத விளைவுக்கு வித்திடுமோ என்று நாம் நினைத்த நேரத்தில், திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் செய்த கொடூரமான செயல்களின் விளைவாக அங்கே விவசாயிகளின் வேண்டப்படாத விபரீதப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்திய திருச்சி மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கும், திருச்சி மாவட்டத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோன்று பல போராட்டங்கள், விழாக்கள் இவற்றை அமைதியாகவும், அரசின் நல்ல எண்ணத்திற்குத் தீங்கு ஏற்படாமலும் பாதுகாப்பு அளித்த காவல் துறையினரை இந்த நேரத்தில் பாராட்டுகின்றேன்.

காவல் துறை பணியின் மீது நாட்டமும், நோட்டமும் கொண்டு, காவல் துறை அதிகாரிகளுக்கும், எல்லாக் காவலர்களுக்கும் கடந்த காலத்திலே பல இனிய திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறார்கள், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், காவலர் குடும்பங்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதனால் ஒரு ஆண்டிற்குக் குறிப்பாக 4 கோடி ரூபாய் செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள். காவலர்களிடையே பணி உற்சாகத்தை வளர்க்கவும், அஞ்சாமை உணர்வுகளை ஏற்படுத்தவும், நம்பிக்கை உணர்வுகளை ஏற்படுத்தவும் கருதி தீரச்செயல்புரியும்போது உயிர் இழந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சிறப்புக் கருணைத் தொகையாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். காயமுற்றவர்களுக்கு ஆயிரம் முதல் மூவாயிரம் வரையில் கருணைத் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். கடமையைச் செய்யும்போது காயம் ஏற்பட்டு விட்டால், வீரச்செயல் புரிகின்றபோது ஊனமுற்று விட்டால், அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இத்தகைய மாபெரும் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, திருப்பத்தூர் வட்டாரத்தில் ஏற்பட்ட நக்சலைட் கலவரத்தில் உயிரிழந்த காவல்துறை அதிகாரிகளின் குடும்பத்திற்கு மூப்பதாயிரம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், காவல்துறை அதிகாரிகளுக்கு எந்த அளவிற்கு மலிவு விலையில் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறதோ அதே வகையில் இன்றைக்குத் தீயணைப்புத் துறையில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, காவல்துறை இந்தியாவிலேயே—தமிழகத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்கிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.

இதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். மதுரை மாநகரில் 5—ஆம் உலகத் தமிழ் மாநாடு பல லட்சம் மக்கள் வருகையைக் கொண்டு சீரோடும் சிறப்பாகவும் நடைபெற்றது. பலநாட்டு அறிஞர்களும் குறிப்பாகப் புரட்சித் தலைவரைப் போற்றிப் பாராட்டுகின்ற வகையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் பல லட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள். அந்தப் பல லட்சம் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க 8 ஆயிரம் காவல் துறை அதிகாரிகளையும், காவலர்களையும் கொண்டு வந்து விரிவான வகையில் பாதுகாப்புக் கொடுத்து, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், செயல்கள் எதுவும் நடைபெறாமல் பாதுகாப்புக் கொடுத்தார்கள். அதற்காக அந்தக் காவல்துறையினரை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தை இன்றைக்குச் சிறப்புற ஆண்டுகொண்டு இருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



செந்துறை காவல் நிலையம் தற்போது ஒரு கூரைவேயப்பட்ட கட்டிடத்தில் உள்ளது. அதற்கு ஒரு நல்ல கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று இதற்கு முன் இரண்டு முறை எடுத்து இயம்பி இருக்கிறேன். என்னுடைய தொகுதியில் செந்துறை ஒரு முக்கிய பகுதியாக இருப்பதால் அந்த இடத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு ஒரு நல்ல கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்கிற வேண்டுகோளைப் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகம் உடையார்பாளையத்தில் இருக்கிறது. நாங்கள் எல்லாம் அவரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவேண்டும் என்று விரும்பினால், அது முடியாது. அவருக்கு தொலைபேசி வசதி கிடையாது. வாகன வசதி கிடையாது. ஆகவே, உடையார்பாளையம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீசுக்கு டெலிபோன் வசதியும், வாகன வசதியும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செந்துறையில் உள்ள காவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் இல்லை. இதனால் அவர்கள் பல இடங்களில் குடியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் பல சங்கடங்கள் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் ஒரே இடத்தில் குடியிருப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, அந்த முயற்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தீயணைப்பு நிலையம் கிடையாது. ஜெயங்கொண்டத்தில் தான் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அதோடு தான் நாங்கள் தேவையேற்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் தலைமையிடமான ஆண்டிமடத்தில் ஒரு தீயணைப்பு நிலையமும், என் தொகுதிக்கு மையமாக உள்ள செந்துறை யூனியனைச் சார்ந்த மாத்தூரில் ஒரு தீயணைப்பு நிலையமும் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய சிறப்பான முறையில் இந்த மானியக்கோரிக்கையைத் தந்துள்ளதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த மானியக் கோரிக்கையில், இன்றைக்குக்கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இடர்ப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. துணிப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. மலிவான விலையில் இன்றியமையாப் பொருள்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வாடகைப்படி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது, ஏவலர் நியமனம் தகர்க்கப்பட்டு இருக்கிறது. இத்தகைய ஒரு நல்ல மானியக்கோரிக்கையை வரவேற்று, வாழ்த்தி ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன்.

புன்சிரிப்பை உதிர்கின்ற மழலை தன்னை
தன் கரத்தில் எடுக்கின்ற எம் தலைவா

எம் புலமை நாவினிலே தமிழைக் கோந்து
உன் புகழும் வாழட்டும், என்று சொன்னேன்

வாழ்த்துகின்ற வயது எனக்கில்லை; அதனால்
வணங்குகின்றேன் தலைவன் என்று உம்மைக்கூறி

நேற்று வரை உன்கரத்தை நம்பி வாழ்ந்தோன்
வேற்றுமகன் என்றே தான் மாற்றிச்சொன்னான்

தலைவா போற்றுகின்ற வழியினிலே
நீவீர், வாழ்க! வாழ்க!!

எனக்கூறி, என்னுரைக்குத் திரையிட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[முற்பகல் 11-10]

*திரு. ர. உமநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் ஆட்சி வந்த பின் போலீஸ் நிர்வாகம் எப்படி கலகலத்து நிற்கிறது என்பதுபற்றி போன மானிய விவாதத்தில் குறிப்பிட்டேன் அதன் பிறகும் நிலைமையில் அபிவிருத்தி இல்லை என்பதுதான் என்னுடைய நிர்ணயிப்பு. குற்றநிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் காலத்தில் பல திருட்டுகும்பல்களை போலீஸ் அதிகாரிகள் உடைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதே நேரத்தில் வடக்கே இருக்கிற சில மாநிலங்களில் நடந்ததோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தில் பரவா யில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய மநிலத்தின் நிலவரத்தை வைத்துப் பார்க்கும்போது இந்தக் குற்ற நிலைமை சற்று கவலை தருவதாக இருக்கிறது. அதற்குத் தேவையான புள்ளிவிவரங்களை அரசு சார்பிலே தந்திருக்கிற கொள்கை குறிப்பிலேயே பார்க்கலாம். அதையே மீண்டும் நான் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதிலும் பெரிய கொள்ளை, கொலை, திருட்டு, மற்ற குற்றங்கள் எல்லாம் 1979—ஐ விட 1980-ல் அதிகரித்திருக்கின்றன. ஆனல் நம்முடைய நாட்டில் இருக்கிற பொருளாதார நிலை இப்படிப்பட்ட குற்ற வளர்ச்சிக்கு ஒரு பின்னியாக இருக்கிறது என்று சொல்வது ஓரளவுக்கு சரியாக இருக்கும் குற்ற நிலைமை அதிகரிப்பிற்கும் இந்தப் பொருளாதார நிலைக்கும் சம்பந்தம் உண்டு என்பதை ஓரளவுக்கு நான் ஒத்துக்கொள்கிறேன்.



நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமையிலிருந்து நமது மாநில குற்ற நிலைமையைப் பிரித்துப் பார்க்க முடியாது. இருந்தாலும் அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் குற்ற நிலைமையைக் கண்காணித்து போதிய அளவு கட்டுப்படுத்த வில்லை. அந்தக் கண்காணிப்பு என்பது 'சீர்கெட்டு இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் காவல் துறை யினருக்கும் சமூக விரோதிகளுக்கும் இடையே இருக்கும் இணைப்புகள் தான். அந்த பிணைப்புதான் இந்தக் குற்ற நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமைக்கு முக்கிய காரணம். கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு மூலம் சமூகவிரோதிகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தில் பங்கு பெறுவதற்கு போலீஸ் நிர்வாகத்தினர் உணர்வுப்பூர்வமாக வைத்துக்கொள்ளக்கூடிய உறவு இது. இந்த சங்கிலிக் கோர்வையை உடைத்தால், இந்த கூட்டுறவை உடைத்தால் குற்றங்களில் ஒரு பகுதி நிச்சயமாகக் குறையும். பூராவும் போய்விடும் என்று நான் சொல்லவில்லை; ஒரு பகுதி போகும். ஆனால் இந்த இணைப்புகளை போலீஸ் அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் இந்த போலீஸ் இயந்திரத்தின் சகோதரத் துவத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாச்சே. ஆகவே, இந்த போலீஸ்—உறவுகள் சமூக விரோதியைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு விசாரணைக்கமிஷன்' நியமிக்க வேண்டும். போலீஸில் உள்ள இந்த தீய உறவை தீவிரமாகக் கண்காணிக்க இந்தத் துறையுடன் தொடர்பு இல்லாத துப்பறியும் யூனிட் ஒன்றை நியமிக்க வேண்டும் இந்த இரண்டு யோசனைகளையும் கவனமாகப் பரிசீலித்து ஏற்றுக்கொண்டால் குற்ற நிலைமையை ஓரளவு குறைப் பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதைப்போல பிராது கொடுத்தால் வாங்காமல் இருப்பதும், வாங்கினால் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் போலீஸ் ஸ்டேஷனில் இன்னும் நடக்கிறது. 'முழுப் பூசனிக் காயை சோற்றில் மறைத்தால் பிரயோஜனம் இல்லை'. அது இன்னும் தொடருகிறது. நானே எத்தனையோ தடவை வீட்டிலிருந்து தொலைபேசியில் சொல்லியிருக்கிறேன். கம்பிளைண்ட் கொடுத் தால் அதற்கு என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுங்கள், முதலில் அதை பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக் கிறேன்.

அதைப்போல பணம் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பது, இல்லை என்றால் கேஸ் பதிவு செய்வதில்லை; நடவடிக்கை எடுப் பதில்லை என்ற நிலை இன்றைக்கும் போலீஸ் ஸ்டேஷனில் நீடிக் கிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

அதைப்போல சார்ஜ் ஷீட் போடுவதில் வேண்டுமென்றே தாமதப்படுத்துவதும், போலீஸ் கோர்ட்டிற்கு வராமல் கேஸை இழுத்தடிப்பதும் — இழுத்தடிப்பது அந்த பார்ட்டியை தொந்திரவு கொடுப்பதற்கு — போன்ற முறைகள் தொடருகின்றன. தாமதத்

திற்கு சிலவற்றில் நியாயமான காரணங்கள் இருக்கலாம். ஆனாலும் பலவற்றிலும் பணத்திற்காகவே இப்படி ஜனங்களை சித்திரவதை செய்கிறார்கள்' என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

போலீஸ் ஸ்டேஷன்களில் ஜனங்களை மிகவும் ஏளனமாக நடத்தும் முறை இன்னும் மாறவில்லை. அது மேலும் மோசமாகி இருக்கிறது என்று சொல்லலாம். 'லாக்கப்' மரணங்கள் பல நடந்துள்ளன. அவைத் தலைவர் அவர்கள் வடிகட்டியும் 10 லாக்கப் கொலை பிரச்சனைகள் இந்த அவையிலே வந்துள்ளன. வெளியிலே இதைவிட அதிகமாக இருக்கிறது.

லாக்கப் மரணம் ஏற்படுவதைத் ஓரளவு கட்டுப்படுத்த என்னுடைய யோஜனை என்னவென்றால், லாக்கப்பில் மரணம் ஏற்பட்டால், ஆரம்ப முடிவே அது கொலை என்று வைத்துக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அந்த ஸ்டேஷன் அதிகாரிகள் மீது முதலிலே 302 செக்ஷனில் வழக்கும்போட்டு கைது செய்ய வேண்டும்; பிறகு இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டும். அதைச் செய்தால்தான் சற்றுப் பாதுகாப்பு இருக்கும், அவர்களுக்கும் சற்று பயம் இருக்கும். தங்களின் கையிலே இருக்கின்ற கைதிகளின் உயிருக்கு தாம்தான் பொறுப்பு என்ற பயமும் அவர்களுக்கு ஏற்படும்.

அத்துடன் லாக் அப்பிலே சித்திரவதை நடக்கின்றது என்ற தகவல் கிடைத்தவுடனே மாஜிஸ்ட்ரேட், தாசில்தார், எம்.எல்.ஏஸ்., எம்.பிஸ். போன்றவர்கள் உடனடியாக ஸ்டேஷன்-க்கு போய் விசிட் பண்ணுவதற்கான அந்த அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கவேண்டும்.

மேலும் போலீஸ்—பொதுஜன உறவு சம்பந்தமாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது மேலெழுந்த வாரியாகத்தான் இருக்கின்றது. ஆனால் தற்போது பலமாக உள்ள உறவு ஒன்று இருக்கின்றது. அது போலீஸ்—முதலாளிகள் உறவு, அது ரொம்ப வலுவாக இருக்கிறது. அதேபோன்று போலீஸ்-நிலப்பிரபுக்கள் உறவு என்பதும் ரொம்ப வலுவாக இருக்கிறது. க்ளப்கள் மூலமாகவும் கிராமங்களில் நிலப்பிரபுக்களின் வீடுகளில் தங்கி சாப்பிடுவதன் மூலமாகவும் இந்த உறவு மேலும் பலப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே டி.எஸ்.பி மட்டத்திலும் எஸ். பி. மட்டத்திலும் பொதுமக்களின் பிரதிநிதிகளான எம். எல். ஏ-க்கள் மற்றும் முக்கியமான பொதுஜனத் தொடர்புடையவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டி அமைக்கப்படவேண்டும். அப்படி அமைக்கப்பட்ட அந்த அட்வைசரி கமிட்டி அடிக்கடி கூடி பிரச்சினைகள் பற்றி விவாதித்தால் நிச்சயமாக பப்ளிக் போலீஸ் உறவு என்பது சுமுகமாக இருப்பதற்குரிய வழி ஏற்படும். அந்த உறவுகளை வளர்க்கவும் முடியும், ஆகவே அந்தமாதிரி ஏற்பாடு செய்யாவிட்டால் இருக்கின்ற நிலைமைகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.



அடுத்து வகுப்புக் கலவரங்கள் பல நடந்துள்ளன. இது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கின்றது. ஆனால் பொதுவாக மோதல் ஏற்பட்டதற்குப் பிறகுதான் போலீஸ் தலையீடு இருப்பதாகத் தெரிகின்றது. அடுத்து அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே இன்னொன்று இருக்கின்றது. அது என்ன வென்றால் தனிப்பட்ட நபர்களிடையே ஆரம்பிக்கின்ற சண்டைதான் பெரிய வகுப்புக் கலவரங்களாக மாறி விடுகின்றன என்று சொல்லப்படுகின்றது. அப்படி தனிப் பட்டவர்களிடையே நடக்கின்ற மோதல் வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்துகின்றது என்றால் அந்த இடத்திலே இரண்டு வகுப்புக்களுக்கிடையே பதட்டநிலை இருக்கின்றது என்றுதானே அர்த்தம். அப்படி இல்லாமல் தனி நபர்களுக்கிடையே இன்டிவிஜுவல்ஸுக்கிடையே நடக்கின்ற மோதல் எப்படி வகுப்புக் கலவரமாக வளரும்.

போலீஸ் இலாக்காவிலே துப்பறியும் இலாகா இருக்கின்றதே, அது என்ன வேலை செய்கின்றது. இந்த வேலையைச் செய்ய வேண்டியது அவர்களுடைய பொறுப்பு இல்லையா? ஒரு இடத்திலே பதட்டநிலை வளருகின்றது என்ற உடனேயே அந்தக் கண்டுபிடிக்க அவர்கள் ஏன் முயற்சி செய்யக்கூடாது? அதுபற்றி அவர்கள் கண்டுபிடித்து மேலதிகாரியிடம் சொல்லி முன்கூட்டியே ஏன் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து இருதரப்பினருக் இடையேயும் சமாதானக் கமிட்டிகள் மூலமாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைச் செய்திருக்கலாமே. ஆகவே அவர்கள் ஏன் அதுபற்றி கண்டுபிடிக்க முயற்சி செய்யவில்லை. இந்த மாதிரி முக்கியமான பணிகளை எல்லாம் விட்டுவிட்டு எங்களை இங்கே வந்து வேவு பார்க்கின்ற பணியினைச் செய் தால் என்ன அர்த்தம்? அதனால் என்ன பயன்? ஆகவே அந்த துப்பறியும் பிரிவு வகுப்புகளுக்கிடையே இருக்கக்கூடிய பதட்ட நிலை, ஹரிஜன்—மேல் ஜாதி பதட்ட நிலை இருக்கும் இடங்கள் போன்றவற்றை உற்று கவனிக்கக்கூடிய காரியங்களைச் செய்ய வேண்டும். அந்த வகையிலே அந்த துப்பறியும் பிரிவு பணி செய்வதற்குரிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆகவே இந்த நல்ல காரியத்திலே சி. ஐ. டி.க்களை கொஞ்சம் திருப்பிவிடுங்கள். போலீஸ் பயிற்சி கொடுக்கின்ற போதே வகுப்பு வாதத்திற்கு எதிராகவும், தீண்டாமைக் கெதிராகவும் ஒரு வெறுப்பை வளர்க்கவேண்டும். மேலும் அதிகாரிகளின் அணியில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஹரிஜன்கள் போன்ற சிறுபான்மையினரையும் திட்டம் போட்டு சேர்க்க வேண்டும்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயம். நேஷனல் செக்யூரிட்டி ஆக்டை இந்த அரசு உபயோகப்படுத்துவதற்கு ஆரம்பித்திருக்கிறது. அது உங்களுக்கே எதிராக அமையும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த சட்டப்படி, மைய அரசு வாரன்ட் போட்டு மாநிலத்திலே இருக்கக்கூடிய நபரைப் பிடிக்கும்படி உங்களைக் கேட்கலாம்.

அப்படி வருகின்றபோது ஒரு கட்டத்திலே மைய அரசு இங்கே இருக்கின்ற ஆளும் கட்சியின் தலைவர்கள் யாரையாவது அல்லது தொண்டர்கள் யாரையாவது கைது செய்யவேண்டும் என்று வாரண்ட் அனுப்பினால் அவர்களைப் பிடிக்காமல் இருக்க உங்களால் முடியுமா?

[முற்பகல் 11.20]

நீங்கள் ஒருமுறை அந்தச் சட்டத்தை உபயோகப்படுத்திய பிறகு, அவர்கள் அதன்படி ஒரு வாரண்டை உங்கள் கட்சிக்காரர்கள் மீதே உபயோகித்தால்—பிடிக்கச் சொன்னால், நீங்கள் எப்படி பிடிக்க மாட்டேன் என்று சொல்லமுடியுமா நீங்கள் பிடிக்காமலிருந்தால் நீங்கள் பாகுபடுத்துவதாகக் குற்றம் சாட்டுவார்கள் அப்படி நீங்கள் பிடித்தால் உங்கள் கதி என்ன ஆகும்? உங்கள் கட்சியை, உங்கள் சர்க்காரை உங்கள் கையினாலேயே சீர்குலைக்க முயற்சிக்கும் பொழுது என்ன செய்வீர்கள்? ஆகவே யாருக்கு எதிராகவும் தடுப்புக் காவல் சட்டத்தை உபயோகப்படுத்த மாட்டோம் என்று இப்பொழுதே ஒரு முடிவான நிலை எடுப்பது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன். அப்போதுதான், அது உங்களுக்கெதிராகப் பயன்படுத்தப்படும்போது, நீங்கள் அதன்படி பிடிக்காமல் இருந்தால், முன்னால் பிடித்தீர்களே இப்போது பிடிக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களே என்கிற பாகுபடுத்தும் குற்றச்சாட்டு உங்கள் மீது வராமல் இருக்கும். ஆகவே, இப்போதே, அந்தச் சட்டத்தை யாருக்கு எதிராகவும் பயன்படுத்தமாட்டோம் என்ற வகையில் ஒரு முடிவு எடுப்பது தான் உங்களுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, பி. அண்டு. சி. மில் விஷயத்தில் மத்திய அரசு ஆசை வார்த்தைகள் காட்டி ஏமாற்றிக் கொண்டிருக்கிற போது, நமது முதல்வர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களின் துயர் துடைக்க 26 லட்சம் ரூபாய் நிவாரணமளிக்க முன் வந்ததற்காக நான் மனமார அவரைப் பாராட்டுகிறேன். அத்தோடு, அந்தத் தொழிலாளர்களின் பெயரில் போடப்பட்டிருக்கும் கேஸ்களையும் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல மைய அரசு இந்த மில்லைத் திறக்கும் விஷயமாக இப்படி இழுத்தடித்துக் கொண்டே போவதைப் பார்த்தால், மில் திறப்பதை தாமதப்படுத்தி, தொழிலாளர்களை மாநில அரசு மீது ஏவிவிட்டு, அதை சட்டம் அமைதிப் பிரச்னையாக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

ஆகவே, மாநில அரசு மைய அரசை உடனடியாக வற்புறுத்தி, மில்லை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று கேட்டு, திறந்து வைத்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, பேச்சுவார்த்தையை வைத்துக் கொள்ளலாம் என்கிற வகையில் ஒரு உறுதியான யோசனையை முன்வைக்க வேண்டும் என்று மாநில அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டு மல்லாமல், இத்தகைய நிலை இருப்பதைப் பற்றி மாநில அரசு மக்களிடத்திலே பரப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து தொழிலாளர்களின் போராட்டங்களில் போலீஸ் தலையீடு தொடர்ந்து நடைபெறுகிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. இந்த தடவை, எந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு பரிந்து இந்த அரசு, கவர்னர் உரையில் பேசிற்றோ, அந்த சைலண்ட் மெஜாரிட்டி மீது கூட, அந்த அமைதிப் பெரும்பான்மையின் மீது கூட, போலீஸ் ஏவிவிடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். மதுரை, சத்திராப்பட்டி, சங்கரன் கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களின் மீது தடியடி, கண்ணீர்புகை அதன் விளைவாக ஒருவர் சாவு, வீட்டுக்குள் நுழைந்து சட்டிப்பானைகள் உடைப்பு ஆகிய அனைத்தும் நடத்தப் பட்டிருக்கின்றன.

இதேபோல் அமைப்பு ரீதியாகத் திரளாத இன்னொரு பகுதி தொழிலாளர்கள், அவர்கள் பி.எச்.ஈ.எல்-ன் சுற்றிலுமுள்ள சிறு சிறு தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள்—அவர்கள் மீது பாய்ந்தது இந்த போலீஸ், அவர்களுக்கு எந்த தொழில் சட்டமும் அமுல் படுத்தப்படவில்லை, மிகக் குறைந்தகூலி உயிர் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவர்களுக்கு எதுவும் இல்லை—அப்படிப்பட்ட அந்தத் தொழிலாளர்களில் 5 பேர்கள் சமீபத்தில் ஆக்ஸிடெண்டில் செத்தார்கள். அடுத்ததாக 6 வது சாவும் நடைபெற்றிருக்கிறது. அதனால் ஆத்திரம் அடைந்த அந்த தொழிலாளர்கள் ஆட்சேபணை ஊர்வலம் நடத்தினார்கள். வழியில் சுற்றியுள்ள மற்ற பேக்டரி தொழிலாளர்களையும் வெளியில் அழைத்தனர்.

அப்போது அதைத் தடுப்பதற்கென்றே உள்ளேயிருந்த சில குட்டி முதலாளிகள் அங்கிருந்தபடியே கல் எறிந்தார்கள். அதை எதிர்த்து தொழிலாளர்களும் கல் எறிந்தார்கள். இந்த நிலையில் அங்கே இருந்த எஸ்.ஐ., இது ஒரு சாவு சம்பந்தப்பட்ட உள்ளப்பதட்ட பிரச்னையாக இருப்பதினால், அவர்களையும் சமாளித்து, இவர்களையும் சமாளித்து, இடையில் அடித்து, இடையில் சமாதானம் சொல்லி, ஊர்வலத்தை ஒருவழியாக சமாளித்துக் கொண்டு போயிருக்கிறார். சற்றுப் பொறுப்புணர்ச்சியுடன் எஸ். ஐ. ஊர்வலத்தையும் நிலைமையையும் சமாளித்துக் கொண்டு போனார். ஆனால் திருச்சி எஸ்.பி. கணேசன் அவர்கள், அவர்களுடைய வண்டியில் இருக்கும் போலீஸ் வொயர்லெஸ் மூலமாக, "சி ஐ.டி.யூ.வா, சி.பி.எம்—மா அப்படியானால் அடித்து நொறுக்கு ஏய், எஸ். ஐ. நீ என்ன சேலையா கட்டிக் கொண்டிருக்கிறாய், அடித்து நொறுக்கு" என்று மாவட்டம் பூராவும் கேட்கும்படியாகக் கத்தினார். அவர் அப்படிக் கத்தியது மாவட்டம் முழுவதும் போலீஸ் வொயர்லெஸ் செட்டில் கேட்டது.

தன் கையிலிருக்கும் ஒலிபெருக்கியில் கத்தினால் அது மாவட்டம் பூராவும் கேட்கும் என்பதை தெரிந்தவர் தான்—அதை மறந்து அடித்து நொறுக்கு நீ என்ன சேலையா கட்டிக் கொண்டிருக்கிறாய் என்று அங்கேயிருக்கும் எஸ்.ஐ.யை கேட்கிறார் என்றால் எஸ்.பி. அவ்வளவு தொழிலாளி வர்க்க துவேஷி மார்க்ஸிஸ்ட் விரோதி என்பது தெரிகிறது அல்லவா? சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டியவர்கள் தனிப்பட்ட முறையில் இப்படி வஞ்சம் தீர்க்கும்படி நடந்து கொள்ளலாமா? அவருடைய ஆத்திரத்தின் விளைவாக 25 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதில் ஸ்பாட்டில் இருக்கும் எஸ்.ஐ. சட்டம் அமைதியை காப்பாற்ற முயற்சி செய்கிறார். ஆனால் எஸ்.பி. காக்கி சட்டையை துஷ்பிரயோகம் செய்து, குண்டாயிசம் பண்ணப் பார்க்கிறார். வன்முறையைத் தடுக்க போலீஸ் தலையீடு வேண்டாம் என்று நீங்கள் கேட்கலாம், ஆனால் இந்த சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்னால், பி. எச். ஈ. எல் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் ஊர்வலமாக வந்து எங்கள் யூனியன் ஆபீஸ் மீது கல்லால் அடித்து, ஜன்னல்களை நொறுக்கினார்கள். கொடியை கீழே இறக்கி கொளுத்தினார்கள், சைக்கிளை நடுரோட்டில் கொளுத்தினார்கள். ஆனால் கூடவே இருந்த 2 டி.எஸ்.பிக்கள் ஒருவரைக்கூட கைது செய்யவில்லை. ஒரு டிராபிக் டி.எஸ்.பியும், ஒரு ரூரல் டி.எஸ்.பியும் அங்கே நின்று கொண்டு இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தும் ஒருவரைக் கூட கைது செய்யவில்லையே ஏன் என்று அந்தத் தொழிலாளர்கள் கேட்கிறார்கள். நானும் கூட கேட்கிறேன். அன்றைக்கு மட்டும் அந்த எஸ்.பி. கணேசனின் மைக் வேலை செய்யவில்லையே ஏன் எனக் கேட்கிறேன்?

எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே சொல்கிறேன் அன்று மட்டும் சட்டம் அமைதி எங்கே போயிற்று? தொழிலாளர்களுக்கு எதிராகக் கல் அடித்தாலும் அடிக்கலாம், தொழிலாளர்களின் சொத்துக்களை நொறுக்கினாலும் நொறுக்கலாம், ஆனால் முதலாளிகள் மீது ஒரு கீறல் விழுந்துவிட்டால் சட்டம் அமைதி கெட்டுப் போய் விட்டது, இதுதானே கணேசனின் சட்டம் அமைதி பற்றிய கருத்து. இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக் கொண்டு தொழிலாளர்கள் மத்தியில் அரசாங்கம் எப்படி நல்ல பெயர் வாங்க முடியும்? ஆகவேதான் சொல்கிறேன் இப்படி நடந்திருக்கும் போது ஒருவர் கூட கைதுசெய்யப்படவில்லை என்றிருக்கிறபோது நாங்கள் அனுபவித்ததை அனுபவித்துவிட்டோம், போகட்டும், இந்த கைத்தறி நெசவாளர்களை சமீபத்தில் கைது செய்திருக்கிறீர்களே, அவர்களை விடுதலை செய்யுங்கள் எங்களைத் தாக்கியபோது கைது செய்யாமல் இருக்கும் போது அப்பாவி மக்கள் தங்கள் வயிற்றைக் கழுவ போராட்டம் நடத்திய போது அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யுங்கள். நாங்கள் அடி வாங்கியதற்கு அவர்களாவது பயன் அடையட்டும்.



அடுத்து கிராமப்புற ஏழைகள்—விவசாயத் தொழிலாளர்களிடம் உங்கள் போலீஸ் கொள்கை என்ன? இது ஒரு முக்கியமான விஷயம். அவர்கள் வாழ்வு உயரவேண்டுமென்று விரும்புகிறீர்கள், நான் நம்புகிறேன், நிலப்பிரபுக்கள் கொட்டத்தை அடக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. நான் நம்புகிறேன். முதலாளிகளுடைய கொட்டத்தை அடக்க என்றால் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நிலப்பிரபுக்கள் கொட்டத்தை ஒடுக்க இந்த அரசு விரும்புகிறது, அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் உங்கள் போலீஸ் கொள்கை உங்கள் விருப்பத்திற்கு எதிராக செயல்படுகிறது. கிழக்கு தஞ்சை தவிர மற்ற இடங்களில் சட்டக்கூலி அமலாகவில்லை, ஏன்? சட்டக்கூலி கேட்டவுடன் மிராசுதாரர்கள் கட்ட தொழிலாளர்கள் பூராவையும் அப்படியே அப்புறப்படுத்துவார்கள். சட்டக்கூலியைவிட குறைந்த கூலிக்கு அறுவடை செய்ய வெளியூர்களிலிருந்து ஆட்களை கொண்டு வந்தால் அதற்கு போலீஸ் பாதுகாப்பு தரவேண்டும் என்று மிராசுதார்கள் போலீஸைக் கேட்பார்கள். போலீஸ்காரர்கள் தருகிறோம் என்று சொல்வார்கள். பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வார்கள் பிறகு சட்டக்கூலி கேட்ட ஹரிஜனங்கள் எப்படி அங்கே அறுவடை செய்ய முடியும்? இவர்களை வெளியேற்றியது வெளியேற்றியதுதான். பிறகு சட்டக்கூலி கேட்ட ஹரிஜனங்களுக்கு வேலை ஊரில் கிடைக்காது. பகிஷ்காரம் செய்வார்கள். சுற்றுப்புற கிராமங்களில் உள்ள நிலப்பிரபுக்களிடம் கூட வேலை கிடைக்காது. அவர்கள் சரணாகதி அடைகிறவரையில் வேலை இல்லை என்று பட்டினி போடுவார்கள். சீக்கிரம் சரண் அடையச் செய்வதற்கு போலீஸ் மேலும் உதவி செய்வார்கள். சட்டக்கூலி கேட்ட முக்கியமான விவசாயத் தொழிலாளர்கள் மீது நன்னடத்தை ஜாமீன் கேஸ் போட்டு கோர்ட்டுக்கு வரும்படி அலைக்கழிக்கப்படுவார்கள். போலீஸ் தான் இந்த வேலையைச் செய்வார்கள், 107 செக்ஷன்படி.

நன்னடத்தை என்றால் சட்டக்கூலி கேட்காமலிருப்பது நன்னடத்தையா? அதுதானே அதனுடைய அர்த்தம். பின் கெட்ட நடத்தை என்றால் என்ன? சர்க்கார் நிர்ணயித்த சட்டக்கூலியைக் கேட்பது கெட்ட நடத்தை, இப்படிப்பட்ட கருத்தோட்டத்தை வைத்துக்கொண்டிருப்பதால்தான் சட்டக்கூலி அமுலாகவில்லை. நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நாங்கள் அமைப்பு ரீதியாக திரண்ட தொழிலாளர்களைத்தான் அதிகமாகக் கவனிப்பதாகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள விவசாயத் தொழிலாளர்களை கொஞ்சம் போய் கவனியுங்களேன் என்று அடிக்கடி இந்த அவையில் எங்களைப் பார்த்து நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்கள் யோசனைப்படி 25–2–1981 தேதியன்று திருச்சி மாவட்டம் முழுவதும் சட்டக்கூலி தினம் என்று நாங்கள் அறிவித்தோம். ஆனால் உங்கள் போலீஸ் அந்த ஊர்வலங்களைக் கட்டுப்படுத்த திருச்சி டவுன் ரூரல் டி.எஸ்.பி. போட்ட உத்திரவு என்ன தெரியுமா? கட்டுப்படுத்தும் உத்திரவை மட்டும் படிக்கிறேன்.

''ஸி.பி.எம். கிஸான் பிரிவு 25-2-81 தேதியன்று குறைந்தபட்சக் கூலி அமல்படுத்தக் கோரி மாவட்டத்தில் ஊர்வலங்கள் நடத்த இருப்பதாகத் தெரிவதனால் அது அமைதியைக் கெடுக்கும் என்று நான் கருதுவதனால் ''என்று கூறி போலீஸ் சட்டம் போட்ட சட்டக்கூலி கேட்டு ஊர்வலங்கள் விடுவது அமைதியைக் கெடுக்கும் என்று நான் கருதுவதனால் அப்படி ஒரு போலீஸ் ஆக்டைப் போடுகிறார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு சட்டக் கூலி கேளுங்கள் என்று எங்களைக் கேட்கிறீர்கள். ஆனால் திருச்சி எஸ்.பி. கூறுகிறார், சட்டக்கூலி கேட்பதே அமைதியைக் கெடுக்கும் என்று. ஆகவே நான் முதல்வர் அவர்களை வேண்டுகிறேன். சட்டக்கூலியை அமல்படுத்த ரெவன்யூ அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும்—அந்த இரண்டு டிபார்ட்மென்ட்களும் சட்டக்கூலியை அமல்படுத்துவதற்கு பொறுப்பாக்க வேண்டும். சட்டக்கூலியை முறியடிக்கும் முயற்சியைத் தடுப்பதற்கும் ரெவன்யூ டிபார்ட்மென்டையும் போலீஸ் டிபார்ட்மென்டையும் பொறுப்பாக்க வேண்டும். சட்டக்கூலி கேட்ட தொழிலாளர்கள் மீது எந்தக் கேஸும் இதுவரை போட்டிருந்தால் அதை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அடுத்தபடியாக நக்சலைட்டுகள் விஷயம். சமீபத்தில் சில நக்சலைட்டுகளைப் பிடித்தபோது, ஸ்பாட்டிலேயே சுட்டுக் கொன்றுள்ளார்கள். நக்சலைட்டுகளைப்பற்றி எங்களுடைய கருத்து நான் முந்திய சபையிலே சொல்லியிருக்கிறேன். அதை திரும்பக்கூறவில்லை. ஆனால், இந்த கொள்கைக் குறிப்பிலே சில துப்பாக்கிச் சூட்டிலே நக்சலைட்டுகள் இறந்து போனதாக சொல்லப் பட்டிருக்கிறது; அதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தமாதிரி இடத்திலேயே சுட்டுக் கொன்றது, நக்சலைட்டுகளைப் பிடிக்கும்போது, அவர்களோடு மோதுகிறபோது, தற்காப்புக்காக சுடப்பட்டதாகவும், அதிலே நக்சலைட்டு இறந்ததாகவும் போலீஸ் விளக்கம். அதாவது, (Died in encounter) என்று ஆங்லத்தில் சொல்வார்கள். நம்முடைய முதல்வர் அவர்களும் போலீஸ் விளக்கத்தை இந்த விஷயத்தில் ஒப்புக் கொள்கிறார்கள். நான் முதல்வர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நக்சலைட்டுகளை கோர்ட்டுக்கு கொண்டுபோனால், சட்டத்திலுள்ள ஓட்டைகள் வழியாகத் தப்பித்துக்கொள்வார்கள். ஆகவே, நக்சலைட்டுகளைப் பிடித்த இடத்திலேயே யாருக்கும் தெரியாத இடத்திலேயே அவர்களைச் சுட்டுக் கொல்வது, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை தற்காலிகமாவது கட்டுப்படுத்த உதவும் என்று ஏன் போலீஸ் நினைத்திருக்கக் கூடாது? ஏன் அப்படி நினைக்கலாம் அல்லவா? கேரளாவிலே அப்படிச் செய்தார்கள்



The whole thing ராஜன் விஷயம் ஹைகோர்ட்டிலே அம்பலமாகி, அந்த சீப் மினிஸ்டர் ரிசைன் செய்தார். முதலமைச்சர் கருணாகரன் ராஜினாமா செய்ய நேரிட்டது. ஆந்திரவிலும் இந்த மாதிரி பலர் அழிக்கப்பட்டார்கள் என்பது அம்பலமாயிற்று. பல சம்பவங்கள் வெளிவந்து விட்டன. லேட்டஸ்டாக, பகல்பூரில் கொள்ளைக் கூட்டம் என்று போலீஸ் கருதினவர்களை, அவர்களின் கொள்ளை நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று, அவர்கள் கண்களை ஊசியால் குத்தி, அதில் ஆசிட்டை ஊற்றி இன்ஜெக்ட் பண்ணி, அவர்கள் கண்களைக் குருடாக்கவில்லையா? அப்படி குருடாக்கினால், அவர்களால் கொள்ளையடிக்க முடியாது என்று அப்படிச் செய்யவில்லையா? அது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவில்லையா?

அதேபோல், திருப்பத்தூரிலும் போலீஸ் அப்படிச் சுட்டுக் கொன்றிருக்காது என்று முதல்வர் அவர்கள் எப்படி அறுதியிட்டுச் சொல்ல முடியும். முதல்வர் அவர்கள் அந்த இடத்திலே இல்லை. எனவே, நீங்கள் எப்படி அறுதியிட்டுக் கூற முடியும்? அங்கு நடந்த இந்த மரணங்கள் பற்றி ஒரு நீதி விசாரணை நடத்தினால் தானே தெரியும்?

திருச்சி சிறையிலே என்ன நடந்தது? கைதிகள் கருப்பனும், மாரியப்ப தேவரும் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று சிறை அதிகாரிகள் சாதிக்கவில்லையா? ஆனால், நீதி விசாரணைக்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அந்த நீதி விசாரணையில் கருப்பன் தற்கொலை செய்துகொண்டான் என்றும், ஆனால் மாரியப்ப தேவர் தற்கொலை செய்துகொண்டார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது, அவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று நீதி விசாரணை தீர்ப்பு சொல்லவில்லையா? அந்த நீதி விசாரணைக் கமிஷன் இல்லையென்றால், நாம் என்ன நினைப்போம்? தற்கொலை என்றுதான் நினைத்திருப்போம். ஆகவேதான் சொல்கிறேன், நக்சலைட்டுகள் மரணங்களிலும் உண்மை இருக்குமா? அது மரணமா அல்லது அழிக்கப்பட்டதா என்பதற்கு இப்படிப்பட்ட ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமீபத்திலே போலீஸ் அதிகாரிகளுடைய சில நடவடிக்கைகளைப் பார்க்கும்பொழுது அதிலே இருக்கின்ற மேலதிகாரிகள் நமது சர்க்காருக்கு எதிராக ஒரு போட்டி சர்க்கார் அவர்களால் நடத்தப்படுகின்றதா என்ற பலத்த ஒரு ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால், இந்த போலீஸ் அதிகாரிகளை இந்த அரசின் கட்டுப்பாட்டிற்குள் உறுதியாகக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால், நெருக்கடியான ஒரு கட்டத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்தை

பகிரங்கமாக எதிர்த்து சவால் விடுவார்கள் என்று நான் இப்போதே இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். Chief Minister's w[illegible] Police m[illegible] d[illegible] [illegible] cycle [illegible] Four W[illegible] the Secretariat என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆர்டர்லி முறையை ஒழித்து உத்தரவு போட்டீர்கள். ஆனால், போலீஸ் துறை உங்கள் உத்தரவை மீறி அந்த ஆர்டர்லி முறையை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமையல் செய்விப்பது, சேலை துவைக்கச் செய்வது, சாணி தட்டவைப்பது, பால் கறக்க வைப்பது போன்ற வேலைகளை அப்படியே அவர்கள் தொடருகிறார்கள். முதலமைச்சர் இந்த முயற்சிகளை உறுதியாக அடக்க வேண்டும்.

இன்னும் விவரம் வேண்டுமா? பொதுவாக நான் சொல்ல மாட்டேன். விவரம் கொடுக்கிறேன். மெட்ராஸ் சிடி ஏ. ஆர். (ஹெட் குவாட்டர்ஸ்)—இல் மொத்தம் 246 பேர்கள்; இதிலே 32 பேர்கள் மவுண்டெட் பிராஞ்சிலே இருக்கிறார்கள்; பாக்கி 224 பேர்கள் பர்மனென்டாக ஆர்டர்லிகளாகவே இருக்கிறார்கள்; வைக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் கணக்குத் தருகிறேன். 6—4—1981 தேதியன்று A முதல் D கம்பெனிகளில் ''ஆபீசர்ஸ் ரெசிடென்ட் கார்ட் அண்டு டீ.ஜி.பி. செகியூரிடி'' என்ற புனைப் பெயரால் 64 ஆர்டர்லிகள் கொடுக்கப்பட்டன. அதே தேதியில் ''மிஸ்ஸலேனியஸ்'' என்ற புனைப் பெயரால் 42 ஆர்டர்லிகள் கொடுக்கப்பட்டன. அதேபோல், ரெசிடென்ட் கார்டு என்று பெயர் கொடுத்ததினால் அதிகாரிகள் வீட்டிற்கு கார்டு என்று நினைக்க வேண்டாம்; அப்படி ஏமாறக் கூடாது. அதற்கென 'ஆர்ம்ஸ்' அண்டு லத்தி கார்டு அண்டு வி.வி.ஐ.பி. கார்ட்ஸ் என்ற தலைப்பில் அந்த தேதியில் 816 பேர்களைத் தனியாகத் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி பல தலைப்புகளின் பேரிலே, இப்படிப்பட்ட கணக்குகளையெல்லாம் சொல்லி ஆர்டர்லிகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் என்னை நம்பவில்லையா? சொல்கிறேன் கேளுங்கள். ஐ.ஜி.பி. திரு. பரமகுரு அவர்களை நான் தனித்து கூறுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். அவர் கணக்கு தான் என்னிடம் மாட்டி இருக்கிறது, இப்போது. மற்றது பின்னால். திரு. பரமகுருவிற்கு முழு யூனிபாரம் காப்பாளர்கள் போக ஆபிஸர்கள் டிரைவர்கள் போக, தபால் டியூட்டி ஆட்கள் போக, ஆர்டர்லி வேலைக்கு 12 பேர்கள் அவருக்கு இருக்கிறார்கள். என்னிடம் முழு விபரங்களும் அவர்களுடைய பெயர், பி. சி. நம்பர் எல்லாம் என் கையில் இருக்கிறது. ஒரு சின்ன உதாரணம் மட்டும் சொல்கிறேன். ஹரி என்கிற காவலர் Vepery O.D. in S.R.P. F.1. இவர் தான் அவருக்கு பால் கறப்பவர். பி.சி.க்கு பால் கறக்கிற வேலையா? ஆர்டர்லி முறை சுதந்திர தினத்திற்கு பிறகு ஒழிக்கப்பட்டது.



ஹரி இங்கே பால் கறந்து கொண்டிருக்கிறார். இது தான் கார்டா? பாதுகாப்பு கார்டா? பாக்கி பலர் சேலை துவைக்கிறாங்க; துணி துவைக்கிறாங்க சமையல் எல்லாம் செய்கிறார்கள், இதுமட்டுமின்றி ஓய்ந்து போனால் டூட்டி என்று பெயர் கொடுத்து அவருடைய வீடு கழுவவும், சுத்தம் செய்யவும், அதாவது வீட்டுக்கு அசதி ஏற்பட்டால் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி ஜம்ஜம் என்று ஜில் ஆக்குவதற்கு; வீட்டிற்கு அசதி போக்க டூட்டி அதற்கு தனியாக ஆள் போட்டிருக்கிறார்கள். வரதராஜன் என்ற பி. சி. எம். ஏ., பட்டதாரி உண்மையிலேயே வருத்தப் படுவோம். அவருக்கு என்ன வேலை தெரியுமா? அந்த ஆர்டர்லிக்கெல்லாம் மேஸ்த்திரி ஆர்டர்லி. இதைவிட அட்டூழியம் வேறு எது இருக்க முடியும்?

தர்மபுரியிலே என்ன நடக்கிறது தெரியுமா? பி. சி. 1275 செல்வராஜ் நக்சலைட்சை கண்டுபிடிப்பதற்கு சி.ஐ.டி. டூட்டி அவர் நக்சலைட்சை தேடுகிறார். எங்கே தெரியுமா, தர்மபுரியில் எஸ்.பி, வீட்டு சமயலறையில் அரிசியிலே நக்சலைட்சை தேடுகிறார்; பருப்பிலே தேடுகிறார்; தேடிக் கண்டுபிடித்து அவர்களைக் கொல்வதற்காக என்று நினைக்கிறேன்; அடுப்பிலே வைத்து நல்லா வேக வைக்கிறார். விளையாடறீங்களா? நான் கேட்கிறேன், பெரிய அதிகாரி என்றால் எது வேண்டுமானாலும் செய்யலாமா? நக்சலைட்சை தேடுகிற ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் தான், போலீஸ் கான்ஸ்டேபிள் தான் எஸ்.பி.க்கு தர்மபுரியிலே சமையல்காரர். இந்த அதிகாரிகளுக்கு என்ன பயம் இருக்கிறது சர்க்கார் பற்றி? சாதாரண காவலர் என்றால் பணி நீக்கம் தலைமைக் காவலர் என்றால் பணி நீக்கம் சங்கம் அமைத்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சர்க்குலர் மேல் சர்க்குலர் சங்கம் அமைத்தால் கடும் நடவடிக்கை; சுற்றறிக்கை விடும் S. P. ஆனால் சட்டவிரோதமாக ஆர்டர்லிகளை வைத்தால் அவர் மீது யார் நடவடிக்கை எடுப்பது. ஆகவே இது இன்று நடக்கிறது. இந்த அரசின் உத்தரவுகளை காலில் போட்டு மிதித்த பொறுப்பான அதிகாரிகளை உடனே சஸ்பெண்ட் பண்ணுவீர்களா? என்று சர்க்காரை நான் கேட்கிறேன், இந்த அவைக்கு கொடுத்த உறுதியை காலில் போட்டு மிதித்த அதிகாரிகளை சஸ்பென்ட் பண்ணுவீர்களா? என்று அரசாங்கத்தை நான் கேட்கிறேன். போலீஸ் துறையில் செயல்படும் போட்டி சர்க்காரை கலைப்பீர்களா என்று நான் நம்முடைய சர்க்காரைக் கேட்கிறேன்.

அடுத்தது எடுத்துக் கொள்ளுங்கள், மைய அரசு தனது விதியைத் தளர்த்திய பிறகு 2[illegible]-1-8[illegible] தேதியன்று ஆய்வாளர் முதல், காவலர் வரை ஒரே சங்கம் வைக்கலாம் என்று நம் சர்க்கார் உத்தரவு போட்டது. உத்தரவு போட்டு 3 மாதம் ஆகியும் சங்கம் அமைக்க போலீஸ் அதிகாரிகள் இடம் கொடுக்கவில்லை. தடுத்துத் தான் இருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவு போட்டாகிவிட்டது; சீப் மினிஸ்டர் உத்தரவு போட்டாகிவிட்டது

ஹோம் டிபார்ட்மெண்ட் உத்தரவு போட்டுவிட்டது. ஆனால் போலீஸ் டிபார்ட்மெண்ட், நான் சொன்ன, போட்டி சர்க்கார் மூன்று மாதம் ஆகியும் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்கள் உத்தரவு மூலம் அனுமதி கொடுத்து ஒரு மாதமும், ஒரு வாரமும் ஆன பிறகு 26-2-81 தேதியன்று திருச்சி பி. கணேசன் ஒரு தனி உத்தரவு போடுகிறார். அவர் எழுதுகிறார், "சங்கங்கள் அமைப்பது சம்பந்தமாக ஆணைகள் மத்திய அரசிடமிருந்து, மாநில அரசு மூலமாக— அப்படியானால் மாநில அரசு ஒரு தபால் ஆபீஸ் அந்த எஸ்.பி.—க்கு — கிடைக்கப்பெறும் வரை காவல் துறையினர் எவரும் சங்கம் சம்பந்தப்பட்ட செயல்களில் ஈடுபடக் கூடாது என்றும், சங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக் கைகளையும் நிறுத்தி வைக்குமாறும், காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி வலியுறுத்தப்படுகிறார்கள்". திருச்சி S. P. 26-2-81 அனுப்பிய சர்க்குலர். இதற்கு பொருள் என்ன? சங்கம் அனுமதிக்கச் சொல்லி நீங்கள் இயக்குநருக்கு உத்தரவு போட்டுள்ளீர்; சர்க்கார், டைரக்டர் ஜெனரலுக்கு உத்தரவு போட்டுள்ளீர் எஸ். பி. கணேசன் அவர்களின் சுற்றறிக்கைப்படி, முதலமைச்சரின் உத்தரவு டைரக்டர் ஜெனரல் நிறுத்தி வைத்துள்ளார், என்று பொருள். ஏன்? சங்கம் சம்பந்தமாக மாநில அரசின் உத்தரவை எஸ்.பி.யும் டைரக்டர் ஜெனரலும் மதிக்கமாட்டார்களாம். மைய அரசிடமிருந்து அவர்களுக்கு ஆணை வர வேண்டுமாம். அதைத்தான் அங்கீகரிப்பார்களாம். இயக்குநர் உண்மையிலேயே அப்படி சொன்னார்களா, இல்லையா என்பதை கவர்ன்மெண்ட் விசாரிக்க வேண்டும். ஏனென்றால் எஸ். பி. கணேசன் அவர்களை நான் நம்பவில்லை. டைரக்டர் ஜெனரலை நீங்கள் கேட்டு உண்மை அறிய வேண்டும். எஸ்.பி. கணேசன் தெளிவாக இருக்கிறார். அவர் மைய அரசின் ஆணையைத் தான் மதிப்பாராம். இப்படி முதலமைச்சரின் உத்தரவை மீறும் அதிகாரியை அந்த எஸ்.பி.—யை ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். நீங்கள் சங்கம் அனுமதித்தும் காவலர்கள் அந்த உரிமையை அனுபவிக்க முடியவில்லை. 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' என்ற நிலை இந்த காவலர்களுக்கு ரொம்ப பொருந்தும். காவலர்கள் உங்கள் உத்தரவுப்படி சங்கம் அமைக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

[முற்பகல் 11.40]

அதேபோல் போன போலீஸ் மானிய விவாதத்தின்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். நான் நம்முடைய ரிக்கார்டி லிருந்து எடுத்திருக்கிறேன், என்ன கேட்டார் என்றால் "தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு சம்பளமில்லாத விடுமுறை அளிக்கப்பட்டது. அதை மாற்றி அவர்களுக்கு சம்பளத்தோடு



கூடிய விடுமுறை அளிக்கப்படுமா?" என்று கேட்டார், அதற்கு மாண்புமிகு முதல்வர் 'நிச்சயமாக மாற்றிக் கொடுக்கப்படும்' என்று சொன்னார்கள். ஆனால் உத்திரவு என்ன போடுகிறார்கள் என்றால் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய உரிய லீவு இல்லாவிட்டால் அவர்களுக்கு வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் தரப்பட மாட்டாது. ஆகவே இந்த அவையிலே வாக்குறுதி கொடுத்த பிறகு கூட உத்திரவு இப்படி வருகிறது. ஆகவே அரசின் விருப்பங்களையும் உத்திரவுகளையும் தமதப்படுத்தியதும், நிறுத்தி வைத்ததும்' அமலாக்காமல் மீறியவர்களும், போட்டி சர்க்காராக செயல்படுகிறவர்களும் யார் என்று கண்டறிந்து நடவடிக்கை எடுக்க சாதாரண அதிகாரிகளை கொண்ட ஒரு கமிட்டியைப் போடவேண்டுமென்று நான் கோர மாட்டேன், ஒரு கமிட்டியை அமைச்சரவை மட்டத்தில் அமைத்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவலர் வெல்பேர் நடவடிக்கைகளில் மேலதிகாரிகள் சுறுசுறுப்பு காட்டுவதில்லை. சங்கம் வைப்பதை எதிர்ப்பதிலே காட்டுகின்ற சுறுசுறுப்பை தன்னுடைய சொந்த கீழ் அணிகளுக்கு நன்மைகள் செய்வதிலே காட்டுவதில்லை. 2072 நம்பர் கலைச்செல்வன் என்பவர் 21-10-79 இல் விபத்தில் இறந்துவிட்டார். ஒன்றரை வருஷம் ஆகிறது, இதுவரை அவர் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் போய்ச் சேரவில்லை. அவருடைய தங்கை டி. ஜீ. பி. க்கு இதுவரையில் 12 கடிதங்களை எழுதி இருக்கிறார்.

கடைசியில் அந்தப் பெண் எழுதுகிறது பாவம். "என் அண்ணன் இறந்து 1½ ஆண்டு ஆகிவிட்டது. எங்கள் குடும்பம் வறுமையால் வருந்துகிறது. நான் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 இறுதித் தேர்வு முடித்துவிட்டேன். மேல்படிப்புக்கு கல்லூரிக்குச் செல்ல இயலாது போய்விடும்போல் தெரிகிறது" என்று கண்ணீர் விடுகிறார் என்று சொன்னால் அதிகாரிகளை கேட்கிறேன். உங்கள் கீழ் அணிகளுக்கு நீங்கள் என்ன செய்கிறீர். செத்துப்போன குடும்பத்திற்கு பத்தாயிரம் கொடுப்பதற்கு சுறுசுறுப்பான ஆக்ஷன் எடுப்பதற்கு வக்கு இல்லை. ஆனால் போலீஸ் சங்கம் வைக்கவேண்டுமென்று முதலமைச்சர் சொன்னால் அது சொத்தை. வழிகாட்டி வரவில்லை என்று எல்லாம் சொல்வதற்கு மட்டும் சுறுசுறுப்பு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இந்த அணுகும் முறையை அடக்க வேண்டும்.

அடுத்தபடியாக நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அதிகாரிகளுக்கு அரசியல் விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். அதை அவர்களோடு வைத்துக்கொள்ளலாம். பப்ளிக்கிலே பகிரங்கமாக வெளியிடக் கூடாது. ஆனால் சமீபத்தில் 8-3-1981 ஆம் தேதிய கல்கியில் ஒரு பிரமுகர் வில்லிவாக்கம் லயன்ஸ் கிளப்பிலே பேசியது வந்திருக்கிறது. இது வந்து ஒன்றரை மாதம் ஆகிவிட்டது. கல்கி என்பது

அந்தஸ்துடைய பேப்பர்தான். அதிலே வந்திருக்கிறது. வில்லிவாக்கம் லயன்ஸ் கிளப்பிலே என்ன பேசியிருக்கிறார் என்றால் ஒரு பகுதியை மட்டும் நான் படித்துக்காட்டுகிறேன். "நீங்கள் ஆளுக்கொரு நோட்டுப்புத்தகம் வைத்துக்கொள்ளுங்கள்" உட்கார்ந்திருக்கின்ற ஜனங்களிடம் சொல்கிறார். "உங்கள் பகுதியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்புகள்" ஸ்ட்ரைக்குகள் ஊர்வலங்கள் கண்டனங்கள் இவற்றையெல்லாம் தேதிவாரியாக குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள். தேர்தல் சமயத்தில் எந்தக் கட்சியினர் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அதிகப்படி பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கணக்கு எடுங்கள். பிறகு அந்தக் கட்சிக்கு வோட்டு போடாதீர்கள்" என்று பேசியிருக்கிறார். அட்வான்ஸ் கேன்வாசிங் ஆரம்பித்து விட்டார். கிளர்ச்சி, ஊர்வலம், ஸ்ட்ரைக், போராட்டம் போன்றவற்றில் அதிகம் பங்கு கொள்ளாதவர்களுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று கூறுகிறார், ஆளுங்கட்சியாக இருப்பதினால் அ.தி.மு.க. தான் அவற்றில் பங்கு கொள்ளாத கட்சியாக இருக்கும், அதிலே கம்மியாக மார்க் வாங்குகிற கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க.வுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று சொல்கிறார். ஆகவே அடுத்த தேர்தலில் ஏ.டி.எம்.கே.க்கு ஓட்டுப்போடுங்கள் என்று மறைமுகமாக பொது மேடையில் கேன்வாஸ் பண்ணுகிறார் என்றுதான் பொருள். அவர் அண்ணா தி.மு.க. பிரமுகர் என்று நினைக்கிறீர்களா? இல்லை அப்படிப் பேசியது சிடி போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஸ்ரீபால். பகிரங்க மேடையில் அரசியல் விளையாடுவது அவருடைய வேலை அல்ல. அது மட்டுமல்ல, ஊர்வலங்கள், கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்கள். கண்டனங்கள் என்பது இந்த நாட்டின் ஜனநாயக உரிமைகள். மக்களின் ஜனநாயக உரிமைகளை மிஸ்டர் ஸ்ரீபால் எவ்வளவு வெறுக்கிறார் என்று பாருங்கள். எவ்வளவு கீழ்த்தரமாக மதிக்கிறார் என்பது தெரிகிறதல்லவா? இந்த வெறுப்பை அவர் தமது கடமையை நிறைவேற்றுவதில் காட்ட மாட்டாரா? அதில் பிரதிபலிக்காதா? மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்று டி. எஸ். பி., ஏ. ஆர்., லோக்கல் போலீசில் தனித்தனியாக ஆள் எடுக்கப்படுகிறது.

கேரளத்திலே ஒரு நல்ல முறை இருக்கிறது. எங்கே நல்லது இருந்தாலும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இங்கே T.S.P. யிலே இருந்தால் T.S.P. யிலேயே கடைசிவரையிலே சாவார்கள். இல்லையென்றால் அதிகாரிகளின் தயவிலே அவர்களை அடுத்த சர்வீசுக்கு மாற்றுவார்கள். அதிலே பாகுபாடெல்லாம் இருக்கிறது. கேரளாவிலே என்ன செய்கிறார்கள் என்றால் முதலில் எம்.எஸ்.பி.யில் இருக்கிறார்கள்; குறிப்பிட்ட ஆண்டுகள் ஆனால் அல்லது ஏ.ஆர்.-ல். காலிஸ்தானம் இருந்தால் எம்.எஸ்.பி-யிலிருந்து ஏ.ஆர்-க்கு அனுப்புவார்கள். ஏ.ஆரிலிருந்து லோக்கல் போலீசுக்கு வேகன்சி வரவர அனுப்புகிறார்கள். அதே முறையை நாம் இங்கேயும் கடைபிடித்தால் நிச்சயமாக ஒரு பெரிய குறை தீரும் என்று நான் நினைக்கிறேன்.



அதேபோன்று அரசியல் கட்சிக் கூட்டங்களில் குறிப்பெடுக்கும் 41 போலீஸ் ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். முதல் சீனியர் ரிப்போர்ட்டர்ஸ், இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் போலீஸ், ஜூனியர் ரிப்போர்ட்டர்ஸ், சப்-இன்ஸ்பெக்டர்ஸ் எல்லோரும் வேலூர் சுருக்கெழுத்து பீரோவுடன் இணைக்கப்பட்டவர்கள். அவர்கள் எங்களுக்கு நண்பர்கள். எங்கள் கூட்டங்களுக்கு, காட்டுக்குப் போனாலும் அவர்களும் வருவார்கள் பாவம். இவர்களை மெட்ராஸ் போலீஸ் சபார்டினேட் சர்வீஸ் ஆக அங்கீகரித்திருக்கிறது ரொம்ப நாளாக. ஆனால் போலீசுக்குக் கொடுக்க கூடியவைகளை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. அது என்ன நியாயம்? அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுப்பதில்லை. கல் விழுந்தால் முதலில் அவர்கள் தலையிலேதான் விழும். ஏனென்றால் முன்னாலே மேசை போட்டு அவர்கள் உட்காருகிறார்கள். மற்ற போலீசுக்குக் கொடுக்கக்கூடிய மலிவு தானியமும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் 41 பேர்கள்தான் இருக்கிறார்கள். டி.ஜி.பி.யும் இது சம்பந்தமாக சிபார்சு செய்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து டி.ஜி.பி. ரெக்கமண்ட் செய்திருப்பதை சீக்கிரம் பாஸ் பண்ணி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் ஆஃப் எஸ்.ஐஸ். மனுக்களை வாங்கியுள்ளீர்கள். ஆனால் காவல் துறையில் உள்ள பட்டதாரி காவலர்களுக்கு வயதுவரம்பு தளர்த்திகொடுக்காததால் அவர்கள் மனு செய்ய முடியவில்லை. இதில் நியாயம் வழங்க வேண்டுமென்று முதல்வரவர்களை நான் எளிமையோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எக்ஸ்-சர்வீஸ்மென், மினிஸ்டீரியல் ஸ்டாஃப், ஜுடீஷியல் ஸ்டாஃப், T.S.P. (டி.எஸ்.பி.) எஸ்.ஐ.கள். இவர்களுக்கெல்லாம் வயதுவரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது காவல் துறையிலுள்ள பட்டதாரிகளுக்கு மட்டும் ஏன் மறுக்க வேண்டும். முதலமைச்சரை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், இதைப்பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று.

காவலர்கள் குடியிருப்புகளில் போதிய மின்வசதியும் தண்ணீர் வசதியும் இன்றைக்கும் இல்லை. ஏராளமான இடங்களில் இம்மாதிரியான நிலைமைகள் உண்டு. சில உத்தரவுகளையே அமல் நடத்துவதில்லை.

சைக்கிள் அலவன்ஸ் சேங்க்ஷன் ஆகிவிட்டதாக நான் அறிகிறேன். ஜீ.ஓ. நம்பர் 1054, தேதி 5-10-78-லே சைக்கிள் அலவன்ஸ்க்கு சேங்ஷன் பண்ணியிருக்கிறது. இன்றையவரைக்கும் அது கொடுக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன்.

ஃபயர் சர்வீசஸ் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், பலயிடங்களில் என்ஜின்கள் சரியாக இல்லை. சமீபத்தில் திண்டுக்கல்லில் கடைவீதியில் ஒரு இடத்தில் நெருப்பு பிடித்தது. சப்-கலெக்டர் ஓடி வந்தார். ஒன்றரை பர்லாங் தூரத்தில் ஃபயர் சர்வீஸ் இருக்கிறது. அவர்களும் ஓடிவந்தார்கள். ஓடி வந்து என்ஜினை ஓர்க் செய்ய ஆரம்பிக்கும்பொழுதுதான் அது ஓர்க் பண்ண மாட்டேன் என்கிறது, அப்பொழுதுதான் அது ஓர்க் பண்ணவில்லை என்பது தெரிகிறது. இதனால் ஜனங்களுக்கு ஆத்திரம் வந்து அந்த ஃபயர் என்ஜின் ஊழியர்களை எல்லோரும் அடிக்கப்போனார்கள். சப்-கலெக்டர் இடத்தில் இருந்தவர் சமாதானம் பண்ணி பிறகு எப்படியோ சமாளித்து நெருப்பை அணைத்தார்கள். இதற்காக நான் ஊழியர்களைக் குறை சொல்லவில்லை. பலயிடங்களில் என்ஜின்கள் பழையதாக இருக்கின்றன; அந்த என்ஜின்களை மாற்ற வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

பலயிடங்களில் புது ஸ்டேஷன்களைத் திறந்தால், ஓப்பன் அன்று மட்டும் அந்த இடத்திற்கு பழைய ஸ்டேஷன்களிலிருந்து என்ஜின்களைக் கொண்டு வந்து நிறுத்துவார்கள். நிகழ்ச்சி முடிந்த பிறகு அந்த என்ஜின்களைப் பழைய ஸ்டேஷன்களுக்குக் கொண்டு போய்விடுவார்கள். இம்மாதிரியான முறையில்லாமல் சீக்கிரமாக நல்லமுறையில் இருக்கும் என்ஜின்களை வாங்க வேண்டும், மெயின்டெயின் பண்ணவும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில் நெருப்புப் பிடித்தால் ஜனங்கள் இரண்டு மூன்று இடங்களுக்குப் போன் செய்தால் மூன்று இடங்களிலிருந்தும் ஃபயர் என்ஜின்கள் வரும். சில நேரங்களின் இப்படி மூன்று இடங்களிலிருந்தும் ஃபயர் என்ஜின்கள் ஓரிடத்திற்கு வந்து குவிந்தால் அந்த ஸ்டேஷன்களின் வரம்பிலே ஏதாவது நெருப்பு பிடித்தால் அங்கே கவனிப்பதற்கு ஃபயர் என்ஜினே இருக்காது. அந்த மூன்றும் இங்கே இருக்கும். ஆகவே, அதை ரெகுலேட் செய்ய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

ஃபயர் சர்வீஸ் ஊழியர்கள் மிகவும் ஊதாசீனப்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். ஒரு வாரம் பகலில் 9 மணி நேரம் வேலை பார்க்க வேண்டும், இன்னொரு வாரம் அவர்கள் இரவு டூட்டி, அது 15 மணி நேரம் எல்லாம் சேர்ந்து. அரசு விடுமுறை ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு 24 மணி நேரம்; வாரத்தில் ஒரு நாள் 24 மணி நேரம் வேலை. ஆகவே, எட்டு மணி நேரம் வேலை என்பதை அவசியம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் மேதின வாழ்த்தில் கூடச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பு எடுக்கிறார்கள். அவர்கள் இதை முதலமைச்சருக்குக் கூற வேண்டும். அவர்கள் மேதின வாழ்த்திலே எட்டு மணி நேரம் தொழிலாளர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்று அவர் விருப்பமாக, அவருடைய ஆசையையும் சந்தோஷத்தையும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த எட்டு மணி நேரம் என்பதை மே தினப் பரிசாக இந்த ஃபயர் சர்வீசுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்க வேண்டும். அன்றைக்கு ஜெயில் காவலர்களுக்கு நான் எட்டு மணி நேரம் கேட்டேன். நமது சட்ட அமைச்சரவர்கள் நாசூக்காக அப்படியே அந்தப் பிரச்னையை பைபாஸ் பண்ணிப் போய்விட்டார்கள் ஆகவே, அந்த எட்டு மணி நேர வேலை என்பதை உடனடியாக செய்யவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.



[முற்பகல் 11-50]

கடைசியாக, விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட் இதிலே இருப்பதால், ஊழல் விஷயம் ஒன்று சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். ஊழல் செய்தவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும், நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்று மாண்புமிகு முதல்வர் அடிக்கடி சொல்வார். ஆனால், பெரும் ஊழல் செய்தவர் மாண்புமிகு முதல்வரை influence பண்ணி, தப்பிக்க முடியும் என்ற எண்ணம் ஏற்படும் சில நிகழ்ச்சிகள் மாநிலத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு என்னுடைய அனுபவம் எக்ஸ்பீரியன்ஸ் திருச்சி ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் பிரின்சிப்பால் மிஸ்டர் மணிசுந்தரம்—ஏற்கனவே இங்கே நான் கிளப்பி இருக்கிறேன். 17 ஆண்டுகளாக அவரைப்பற்றி தாவாக்கள் இருக்கின்றன என்று கல்வி அமைச்சரே இந்த அவையிலே சொன்னார்கள். காங்கிரஸ் காலத்திலே அவர் அந்த அரசின் தயவு நாடி தப்பித்து விட்டார். திராவிட முன்னேற்றக்கழக காலத்திலே அவர்களுடைய தயவு நாடி தப்பித்து விட்டார். ஆனால், நம் முதல்வர் இருக்கும்பொழுது அவர் காலத்திலே, இந்த விஷயத்தில் அவர் தயவை நாட முடியாது, தப்பிக்க முடியாது என்று நம்பி நான் ஊழல் பட்டியல் தயார் செய்து தஸ்தாவேஜ் ஆதாரத்துடன் 1977லே கொடுத்தேன். பணம் கையாடல், அட்மிஷன் ஊழல், பாஸ் பண்ணுவதில் ஊழல், கல்லூரிப்பொருட்களை துர் உபயோகப் படுத்துகிற ஊழல் என்று அதற்கான அத்தாட்சிகளைக் கொடுத்தேன், தஸ்தாவேஜுக்களை கொடுத்தேன். நான்காவது ஆண்டு ஆகிறது பட்டியல் கொடுத்து. இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக முதல்வர் எனக்குக் கடிதம் எழுதவில்லை. இரண்டு தடவை பேரவையில் நான் இந்தப் பிரச்னையைக் கிளப்பினேன். முதலமைச்சர் பதில் சொல்லாமல் உட்கார்ந்த பிறகு நான் எழுந்திருந்து, அதைப் பற்றி என்ன என்று கேட்டேன். சுருக்கமாகச் சொன்னார், நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரே வார்த்தையில் முடித்தார். ஆனால், இன்று வரையிலும் அந்த இன்ஜனீயரிங் காலேஜ் பிரின்சிப்பால் பேரிலே, இவ்வளவு குற்றச்சாட்டுகள் ஆதாரத்துடன் கொடுத்தபொழுதும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, எந்தப் பதிலும் இல்லை. அப்படியானால் ஊழல் செய்தவர்கள் இந்த அரசையும் தயவையும் பெற்று தப்பிக்க

லாம் என்ற முடிவுக்கு வர இடம் இருக்கிறதா, இல்லையா? நான் கேட்கிறேன், இந்த விவாதத்திற்குப் பதில் தருகிற பொழுது, இந்தத் தடவை தயவு செய்து மாண்புமிகு முதல்வர் அந்த பெட்டிஷன் பேரிலே, நான் கொடுத்த பெட்டிஷன் பேரிலே, ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் பிரின்சிப்பல் மிஸ்டர் மணிசுந்தரம் பேரிலே என்ன விசாரணை நடத்தப்பட்டது? விஜியலன்ஸ் என்கொயரியா? சாதாரண என்கொயரியா? ஏனென்றால், என்னை யாரும் இதுவரையில் ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. 4 வருஷம் ஆயிற்று? என்ன விசாரணை நடத்தப்பட்டது, அதனுடைய முடிவு என்ன, எந்த கட்டத்திலே இருக்கிறது என்பதற்கு முதலமைச்சர் நிச்சயமாகப் பதில் கூற வேண்டுமென்று கூறி, மற்ற பல பிரச்னைகளை நான் கிளப்பியதைப் பரிசீலனை செய்து, நல்ல முடிவைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் 15, 16 ஆகியவற்றில் என்னுடைய கருத்தினைக் கூறுவதற்கு வாய்ப்பினை நல்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துத் துவக்குகிறேன். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் காவல் துறை திறமையுடன் செயல்படுகிறது என்பது இந்த மாமன்றம் ஒப்புக்கொண்ட ஒன்றாகும். அப்படிப்பட்ட மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு பெற்றமையை நான் பெருமையாகக் கருதுகின்றேன். இன்றைய தினம் அனைத்து இந்தியாவிலும் எந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குறைந்துவிடவில்லையென்ற நிலை இருக்கிறது. அதற்கு எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்று இந்தக் காவல் துறை பொறுப்பையும் வகிப்பதுதான் முதல் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட தலைமையின்கீழ் இன்றைய தினம் பணி புரியும் காவல் துறையினருக்கு இந்த அரசு நல்ல பல சலுகைகளை, இந்த மானியக் கோரிக்கையின் மூலம் அறிவித்து இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையினருக்கு அலுவல் நேரம் நிர்ணயிக்கப்படவில்லையென்பது ஒரு குறிப்பிடத்தக்க கருத்தாகும். அதனை அரசாங்கம் பரிசீலனை செய்து இத்தனை மணி நேரம்தான் அவர்கள் அலுவல் புரிய வேண்டுமென்ற நிலையினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு பகல் என்று பாராது எந்தத் தருணத்திலும் கலவரம் ஏற்படும் நிலையில் தனது இல்லத்தை விட்டு வெளியே வந்து பணி புரியும் காவல் துறையினருக்கு அரசு எந்த அளவு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தாலும் அது வரவேற்கத்தகுந்தது தான் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அது மட்டுமல்லாது, இங்கே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்
மூலம் நான் அறிகிறேன், அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி
உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது, துணிப்படி உயர்த்திக்
கொடுக்கப்பட்டிருக்கிறது, சீருடை மானியம் அதிகமாக வழங்கப்
பட்டிருக்கிறது. இதை எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அது மட்டுமல்லாது. மலிவான விலையில் அத்தியா
வசியப் பண்டங்கள் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டிருக்
கிறது. இன்றைய தினம் காவல் துறையைச் சேர்ந்த ஆயிரக்
கணக்கான குடும்பங்களில் வசிக்கும் இல்லத்தரசிகள் இந்தப்
புரட்சித் தலைவருடைய ஆட்சியை வாழ்த்திக் கொண்டிருக்
கிறார்கள்.

அவர்கள் பெறும் சம்பளத்தை ஒரு சிலர் ஊதாரித்தனமாக
செலவிட்டாலும், வீட்டுக்கு வேண்டிய அத்தியாவசியப்
பண்டங்கள் புரட்சித் தலைவரின் சீரிய திட்டத்தின் மூலம்
இன்றைய தினம் அந்த அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு
இல்லாமல் 1-ந்தேதி வீட்டுக்கு வந்து சேருகிறது என்ற
நிலைமையைப் பார்க்கிறபோது உள்ளபடியே பூரிப்பு அடையத்
தோன்றுகிறது.

அதோடு இந்த மாநிலத்தில் காவல் துறை பொதுமக்கள்
நல்லுறவு பற்றி எடுத்து உரைக்கப்பட்டிருக்கிறது. இந்த
நல்லுறவை தெளிவாக்கும் வகையில் எனக்கு முன்பு பேசிய
மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒரு கருத்தினை வலியுறுத்
தினார். வெறும் விளையாட்டை மட்டும் நடத்தினால் நல்லுறவு
பல வகைகளிலே ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டா என்றால்
அது ஐயப்பாடு உடையதுதான். அவர்கள் எடுத்துச் சொன்னதைப்
சமயம்போல அந்தப் பகுதியின் முக்கியப் பொது மக்கள், தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியவர்கள் கொண்ட ஒரு குழு
அமைத்து, உயர்மட்ட அதிகாரிகள் அடிக்கடி சந்தித்துப்
பேசுவது என்றாலே நல்லுறவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்
கிறது என்ற கருத்தை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்

அதோடு நமது காவல் துறையின் புலனாய்வுத் துறையைப்
பற்றி என்னுடைய தனிப்பட்ட கருத்தினைச் சொல்ல விரும்பு
கிறேன். குற்ற விசாரணை முறைச் சட்டம் 162 பிரிவின்படி,
முதல் தாக்கல், தாக்கலான பிற்பாடு, மற்ற சாட்சியங்களை
அந்த வழக்கு சம்பந்தமாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்
வதற்கு, சாட்சியங்களை இன்னின்ன செய்கிறார்கள் என்பது
பற்றி அந்தப் புலனாய்வு அதிகாரி விசாரித்து, அதற்கான சாட்சி
களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இது தொன்று
தொட்டு பாரம்பரியமாக வந்துகொண்டிருக்கின்ற முறை ஆகும்.
இந்தத் தருணத்தில் நடைபெறவில்லை- ஒரு முதல் தாக்கல்,
தாக்கல் செய்து விட்டால் அதனைப் பதிவு செய்கின்ற அதிகாரி
இந்த வழக்கில் எப்படியாவது தண்டனை வாங்கவேண்டும் என்ற
வகையில், தஸ்தாவேஜுகள் தயார் செய்ய வேண்டும் என்ற

நிலையில் எந்த ஒரு சாட்சியையும் நேரடியாக விசாரிக்கிறார்களா என்று நம் நெஞ்சைத் தொட்டுப் பார்ப்போமானால், உயர் மட்ட அதிகாரிகள் அவர்களுடைய நெஞ்சங்களைத் தொட்டுப் பார்ப்பார்களேயானால, இல்லை என்று அவர்கள் ஒப்புக் கொள் வார்கள். இந்த நிலை நீடித்துக் கொண்டே இருக்கின்றது. முதல் தாக்கல் அறிக்கையில் என்ன ரெக்கார்டு செய்யப்பட்டிருக் கிறதோ, அதையே மற்ற சாட்சிகளும் சொன்னதாக அவர் களைப் பார்க்காமலேயே எழுதிவிடுகிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லியதற்குப் பிறகு, அந்த சாட்சியங்களைக் கட்டுப்படுத்து வதற்கு சட்டத்திலே ஏதாவது வழி இருக்கிறதா என்றால் துளி கூட இல்லை. அவர்கள் சொன்னார்கள் என்று காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எழுதி வைப்பார்கள். நீதி மன்றத்தில் அந்த சாட்சி வந்து நான் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டால், அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு வழி வகையில்லை. ஆகவே நான் தாழ்மையான ஒரு விண்ணப்பத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் தாக்கல். தாக்கல், செய்தவுடன், காவல் துறை அதிகாரிகள் அந்த எப். ஐ. ஆர். பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு சாட்சியையும் விசாரிப்பதற்கு அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவருக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது. என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக சட்டம் படித்த ஒருவரை விசாரணை அதிகாரி என்று தனியாக நியமித்து-காவல் துறை அதிகாரி சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க அதிகமான நேரத்தை செலவிட இருக்கின்ற தருணத்தில்-இந்த விசாரணை அதிகாரி ஒவ்வொருவரைக் கூப்பிட்டு தனித்தனியாக விசாரித்து அவர்களைப் பதிவு செய்து அவர்களிடம் கையொப்பம் வாங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் நீதிமன்றத்திலே அவர்கள் முன்னால் கொடுத்த வாக்கு மூலத்தை பின்பு மறுத்தாலும். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக் கிறது. அதுமட்டுமல்லாமல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பது மறுக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. அதே தருணத்தில் உண்மையான சம்பவங்கள் சந்தர்ப்ப சூழ் நிலையோடு நீதி மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமையும் என்று இந்தத் தருணத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து சமீபத்தில் ராமநாதபுரம் சென்றிருந்த நமது முதலமைச்சர் அவர்கள் அங்கே உத்தரகோசமங்கையில் ஒரு முழு தகுதிவாய்ந்த காவல் நிலையத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு என்னுடைய கடலாடி தொகுதியில் கீழச்ச நல்லூர் கிராமத்தில் ஒரு புறக் காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையம் இதோடு 4, 5 முறை சமூக விரோதிகளால் தாக்கப்பட்டிருக்



கின்றது. அந்தக் காவல் நிலையத்தை முழு அந்தஸ்து பெற்ற முழுமையான காவல் நிலையமாக மாற்றவேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஓராண்டுக்கு முன்பே அரசுக்கு பரிந் துரை செய்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த வகையில் அந்த புறக்காவல் நிலையத்தை முழு அந்தஸ்து பெற்ற காவல் நிலையமாக மாற்றி அங்கே ஒரு உதவி ஆய்வாளரை நிய மிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

(நண்பகல் 12.00)

கடலாடித் தொகுதியில் முதுகுளத்தூர் தாலூக்கா முழுவதும் ரெவின்யூ இலாகாவைப் பொறுத்தவரையில், கிழக்கு முகவை மாவட்டத்தில் இருந்து வருகிறது. ஆனால் சாயல்குடி காவல் சரகம் மட்டும் மேற்கு முகவை மாவட்டத்தில் இணைக்கப்பட் டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள், கிழக்கு முகவை மாவட் டத்தோடு அதிக தொடர்பு கொண்டு பழக்கப்பட்டு இருப்பதால், இந்த சாயல்குடி காவல் சரகத்தையும் கிழக்கு முகவை மாவட் டத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலாடியில் ஒரு காவல் துறை ஆய்வாளர் அலுவலகம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை வந்திருப் பதாகத் தெரிகிறது. அந்தக் காவல் துறை ஆய்வாளர் அலு வலகத்தை அங்கே விரைவில் ஆரம்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முதுகுளத்தூர் சரகத்திலேயே அதிகமான காவல் நிலையங்கள் இருப்பதால். கடலாடியில் ஒரு ஒரு சர்க்கிள் அலுவலகம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் ஒன்றைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். முதுகுளத்தூரில் கடந்த ஓராண்டுக் காலமாக டி. எஸ். டி. நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. சமீபத்தில் ஒரு ஐ. பி. எஸ். அதிகாரி ஏ. எஸ். பி. என்ற ஸ்தானத்தில் போட்டு இருந்தார்கள். அவரும் இப்போது பயிற்சி என்று சென்று விட்டார்கள். அந்தப்பகுதி ஒரு கலவரப் பகுதி என்பது எல்லோருக் கும் தெரியும். அப்படியிருக்கிற நிலையில் டி. எஸ். பி. அந்தப் பகுதியில் இல்லாமல் இருப்பது வருந்தத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. இதுவரை யிலும் பிரிக்கப்படவில்லை. எப்போது பிரிக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. என்றாலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த மாவட்டத் திற்குத் தலைநகராக வைத்தாலும் ஆட்சேபணையில்லை. அதற்கு முன்னால், காவல் துறை மாவட்ட கிழக்கு, மேற்கு அலுவலகங்கள்

இப்போது மதுரையில் இயங்கி வருவதை அந்த மாவட்டத்தில் உள்ள ஒரு முக்கிய நகரில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிழக்கு முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில். அந்த எஸ். பி. அலுவலகத்தை இராமனாத புரத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்கள் பிரதிநிதிகளாக உள்ள எங்களிடத்தில் மக்கள் பிரச்னைகளை வந்து சொல்கிறார்கள். அவர்களுடைய குறைபாடுகளைக் களைவதற்காக அதிகாரிகளை அணுகி நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படி செய்யவேண்டுமானால், அதற்காக சுமார் 80-85 மைல்கள் தொலைவில் உள்ள மதுரைக்குச் செல்லவேண்டியிருக்கிறது. வசதி படைத்தவர்களாக இருந்தால் எங்களைக் காரில் அழைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆனால் வசதி இல்லாதவர்களாக இருந்தால் அப்படிச் செய்வதல்கு வாய்ப்பு இல்லை. அதனால் எங்களுக்கும் சிரமம் ஏற்படுகிறது. அந்த மக்களுக்கும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த எஸ். பி. அலுவலகத்தை உடனடியாக மதுரையில் இருந்து இராமனாதபுரத்திற்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது இங்கே காவல்துறை அதிகாரிகள் வைத்துக்கொண்டுள்ள ஆர்டர்லிகள் பற்றிப் பேசினார்கள். நான் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன், மேற்கு வங்கம், கேரள போன்ற மாநிலங்களில் இத்தகைய ஆர்டர்லிகள் நியமிக்கப்படவில்லையா அந்த நிலைமையை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தி, இப்போது மேல்மட்ட அதிகாரிகள் விரும்பி அவர்களை ஆர்டர்லிகளாக போட்டுக் கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. சிலபேர் மேல் அதிகாரிகளிடத்தில் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்பதற்காக அவர்களுக்குத் தெரியாத முறையிலேயே அவர்கள் வீட்டிற்குச் சென்று உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தின்மூலம் தடை செய்தாலும், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை சட்டத்தின்மூலம் தடைசெய்யமுடியாது என்று சொல்லி, காவல் துறையில் உள்ள காவலர்களே திருந்தவேண்டும் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் என்ன தவறு செய்தாலும், அதை குவஸ்டின் செய்வதற்கு அங்கே இருக்கும் சட்டமன்றம் இருக்கிறது. அதற்கு பதில் சொல்ல அந்த அரசாங்கம் இருக்கிறது. அதைப்பற்றி இங்கே கேட்க உரிமை கிடையாது, ஆனால் இங்கே இந்த மாநிலத்தில் நடைபெறுகிற அதிகாரிகள் நடவடிக்கை சம்பந்தமாக இங்கே பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதற்கு அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும். அங்கேயிருக்கிறது என்று சுட்டிக்காட்டுவது பதில் இல்லை.



*திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக்கோரிக்கை எண். 15 தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை எண். 16 ஆகியவற்றின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பாக, இந்த அறிக்கையில் 30-ம் பக்கத்திலே பாரா 12-லே வ. கம்யூனிஸ்ட் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தயவு செய்து வெளியே சொல்லும் இம்மாதிரியான தவறான கருத்துக்களை இந்தக் கொள்கை விளக்கக்குறிப்புகளில் இனி மேலாவது சேர்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் சுதந்திரத்திற்கு முன்னால் எப்படிச் செயல்பட்டதோ அதைப்போலத்தான் இன்றைக்கும் கூட செயல்படுகிறது. தொழிலாளர்கள் போராட்டமானாலும் சரி, விவசாயிகள் போராட்டமானாலும், சரி ஆசிரியர்கள் போராட்டமானாலும் சரி அல்லது ஏனைய போராட்டமானாலும் சரி ஒரு சில அதிகாரிகள்-இந்தத் துறையில் இருக்கும் அனைவரும் அல்ல-வேண்டுமென்றே சில பிரச்சனைகளை அவர்களுக்குள்ள விருப்பு வெறுப்புகளின் பேரில் தூண்டி விடுகிற நிலை இருக்கிறது. அதனாலும் போராட்டம் தொடருகிறது.

போராட்டத்தின் பயனாக பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு நடைபெறுகிறது. அந்த போராட்டத்திற்குக் காரணமான மில்லிலோ அல்லது வேறு பகுதிகளிலே இருக்கிற சம்பந்தப்பட்ட பொருட்களை துணி அல்லது வேறு பொருட்களை வெளியே கொண்டுவர முடியாத நிலை ஏற்படுகிறது, போராடிக்கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்கள் மில்லிலே இருந்து வெளியே வரக்கூடிய துணியையோ அல்லது பஞ்சையோ போராட்டம் முடிந்த பிறகு கொண்டுவரலாம் என்று கூறும்போது அப்படிக் கொண்டுவருவதற்கு காவல் துறையினர் மில்காரர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய நிலைமைகளைப் பார்க்கிறோம்.

காவல் துறையைப் பொறுத்தமட்டில் பல கருத்துக்களை இங்கே சொல்லியிருந்தாலும் கூட அவர்களுக்கு பயிற்சிக் காலத்திலேயே இப்போது இருக்கிற பயிற்சியின் தன்மையை மாற்றி, எப்படி மக்களிடத்திலே பழக வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பனவற்றில் நல்ல பயிற்சி அளிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏறி வருகின்ற விலைவாசி ஏற்றம், பொருளாதாரப் பிரச்சனை. இவை சம்பந்தமாக ஆங்காங்கே போராட்டம் நடைபெற்றாலும் அந்தப் போராட்டத்தின் தன்மையை உணர்ந்து, போராட்டம் நடக்கும் காலத்தில் பொருட்களுக்கு பந்தோபஸ்து இருக்கவேண்டும். அதற்கு மாறாக தொழிலாளர்கள் இடத்தில் கடுமையான அடக்குமுறை இருக்கக் கூடாது என்று கூறிக்கொள்கிறேன்.

போராட்டம் நடக்கின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் தடியடிப்பிரயோகம் நடத்தி இருந்தாலும் அல்லது ஏனையச் சம்பவங்கள் நடைபெற்றிருந்தாலும் அவர்கள் கொடுக்கக்கூடிய ஒரே ஒரு அறிக்கை, வன்முறையாளர்கள் காவல் துறையினர் மீது கற்களை வீசினார்கள்; அதன் பிறகு தான் தடியடிப்பிரயோகம் அல்லது கண்ணீர்ப்புகை பிரயோகம், ஏனைய சம்பவங்கள் நடைபெற்றன என்று ஒவ்வொரு அறிக்கையிலும் பத்திரிகை வாயிலாக பார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு சம்பவம் நடைபெற்றால், நடைபெற்றிருக்கிற சம்பவம் எப்படி நடைபெற்றது என்று பரிசீலிப்பதற்குப் பதிலாக ஏற்கெனவே என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறார்களோ அதையே இன்றைக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலியே பயிரை மேய்ந்தது போல, நீலகிரியில், கூனூரில் இரு காவல் துறையினர் அடித்துக்கொண்டனர். ஒரு காவலரை இன்னொரு காவலர் அவர்—சப்-இன்ஸ்பெக்டர்—அடித்து, அவர் வாயிலே சாராயத்தை ஊட்டி, வழக்குப் போட்டதாக செய்தி வந்தது. அது சம்பந்தமாக, அடிப்பட்ட காவலருக்கு ஆதரவாக அனைத்துக் கட்சியினரும் கட்சி வித்தியாசம் இல்லாமல், சர்வ கட்சிகளும அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்; தந்தி கொடுத்திருக்கிறார்கள். இதைப்போல பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்: அதேமாதிரி காவல் துறையினர் அனைவரும் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறார்கள் என்று நான் கூறவிரும்பவில்லை. ஒருசில இடங்களில் இப்படி ஒருசில சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அந்தமுறையில்தான் சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த சம்பவமும் சரி, திருநெல்வேலி மாவட்டம் கழுகுமலையிலே நடைபெற்ற சம்பவமும் சரி நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்ட சம்பவம்—தாழ்த்தப்பட்டவர்கள் ஊர்வலம் செல்லும்போது அந்த ஊர்வலத்தினரை கேவலமாக பேசினார்கள் என்பதால் நிகழ்ந்த ஒரு சம்பவம்.

[பிற்பகல் 12.10]

அன்றையதினம் அங்கே முறையாக நடவடிக்கை எடுத்திருந்தால் ஆட்கள் சாகின்ற அளவுக்கு அந்தச் சம்பவம் போய் இருக்காது என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து கழுகுமலையிலே இரவு 10 மணிக்கு ஒரு சமூக விரோதி பயங்கரமான ஆயுதங்களைக் கையிலே கொண்டுவந்து கட்டி வீதியிலே கும்பல் கூடுகின்றது. அபபோது சம்பந்தப்



பட்டவர்கள் காவல் துறையினருக்கு தகவல் கொடுகிறார்கள். அந்தத் தகவல் கிடைத்தவுடன் காவல் துறையினர் வந்து உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் பல கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு பல இலட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்காது என்பதை இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தீவிரவாதிகளைப் பற்றி இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "6-8-1980 அன்று விடியற்காலையில் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையில் காவலர் குழுவினர் வடாற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டைக்கருகே 5 தீவிரவாதிகளைப பிடித்தனர். அவர்களை மோட்டார் வண்டியில் திருப்பத்தூருக்கு அழைத்து வரும்போது அத்தீவிரவாதிகளில் ஒருவர் மோட்டார் வண்டிக்குள் நாட்டு வெடிக்குண்டு ஒன்றை வீசினார். அது வெடித்தது, இதனால் ஒரு இன்ஸ்பெக்டர், 2 காவலர்கள்' 3 தீவிரவாதிகள் ஆகியோர் இறந்துவிட்டனர். மற்ற 2 தீவிரவாதிகள் தப்பிவிட்டனர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதன்படி அவர்களைக் காரிலே ஏற்றியதற்குப் பிறகு அவர்கள் குண்டு வீசியதாக இருககின்றது. காரிலே இருந்தவர்கள் குண்டு வீசினார்களா அல்லது வெளியிலே இருந்து குண்டு வீசப்பட்டதா என்ற விவரங்களை எல்லாம் முழுமையாகத் தெரிவிக்காமல் குண்டு வீசியதாக மட்டுமே குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆகவே தீவிரவாதிகளைப் பிடிக்கச் செல்கின்றபோது இப்படித்தான் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற முடிவோடுதான் சென்று அவர்களைப் பிடித்திருப்பதாக இந்தக் குறிப்பின் மூலம் தெரிகின்றது. மேலும் இன்னின்ன இடத்திலே இந்த இந்த தீவிரவாதிகள் இறந்தார்கள் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றதே தவிர காவலர்கள் யாராவது முதலிலே இறந்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. காரிலே கொண்டு வருகின்றபோது குண்டு வெடித்ததால்தான் காவலர்கள் இறந்திருக்கிறார்கள் என்று மட்டும் தான் இருக்கின்றது. பெரிய மோதல்கள் ஏற்படுகின்றபோது இருதரப்பிலேயும் இறப்பது என்பது சகஜம். ஆனால் அப்படிக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே திட்டமிட்டு தீவிரவாதிகளை எப்படியாவது அடக்கவேண்டும், அல்லது தீவிரவாதி என்று யாரையாவது காவல்துறையினர் நினைத்தால் அவர்களைக் கண்டிப்பாக அடக்கிவிடவேண்டும் என்ற நிலையிலேதான் இவ்வாறு செய்யப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன்.

அடுத்து விவசாயிகள் போராட்டம். இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய அடிப்படை கோரிக்கை என்னவென்றால் அவர்களுடைய விளைபொருட்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்பதுதான். அவ்வாறு அவர்களுடைய விளைபொருட்களுக்கு போதிய விலை கிடைக்க வேண்டும்

என்பதிலே யாருக்கும் மாற்று கருத்து இல்லை. ஆனால் கிராமப்புறங்களிலே இருந்து பொருட்களை நகரப்புறங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்ற கருத்திலே எங்களுக்கு முரண்பாடு இருக்கின்றது. திருச்சியிலே கூத்தப்பர் கிராமம் என்ற இடத்திலே விவசாயச் சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அனுமதி தரப்படுகின்றது காவல் துறையினரால். அப்படி அனுமதி கொடுக்கப்பட்டதற்குப் பிறகு அந்த விவசாயச் சங்கத்தினர் குறிப்பிட்ட இடத்திலே குறிப்பிட்ட காலத்திலே ஊர்வலம் நடத்துவதற்காகப் போகின்றபோது அவர்களை வழியிலே தடுத்து நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் அவர்களை எப்படி எப்படி எல்லாம் செய்ய முடியுமோ அப்படி அப்படி எல்லாம் செய்து துன்புறுத்தி அடித்து இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதும் இந்த அறிக்கையின் வயிலாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது மட்டும் அல்லாமல் அவர்களை அடக்கிவிட்டதாகவும் கூறியிருக்கிறார்கள்.

எனது மாவட்டத்திலே குறிப்பாக என்னுடைய தொகுதியிலே நடந்த இரண்டு சம்பவங்களை மட்டும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த சம்பவங்களில் ஒன்று குறிச்சியில் அதாவது ஊத்துக்குளி ஒன்றியத்தில் நடைபெற்றிருக்கின்றது.

குறிச்சியில் சிறுவள்ளூரிலிருந்து 80 மூட்டை அரிசியை ஏற்றிக் கொண்டு ஒரு லாரி வருகிறது. ஏற்றிக்கொண்டு வருகிற அந்த லாரி குன்னத்தூரில் மடக்கப்பட்டு, தீயிட்டுக் கொளுத்தப்படுகிறது. அப்படி கொளுத்தப்பெற்ற அந்த சம்பவத்தையும், கொளுத்திய நபர் யார் என்பதையும், லாரியை ஓட்டிக் கொண்டு வந்த அந்த டிரைவரும், கிளீனரும் நன்றாக அறிவார்கள். ஆனாலும், அதைக் காரணம் காட்டி, போலீசார் குறிச்சிக்கு சென்று, குறிச்சியிலே உள்ள அனைத்து ஆண்களையும்—ஆண் என்று தெரிந்தால் போதும் அனைவரையும் அடித்து, குன்னத்தூர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆண்கள் அடிக்கப்பட்டது கூட தவறு என்று சொல்லவில்லை. அவர்களையெல்லாம் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து வைத்துவிட்ட பிறகு ராமசாமி என்கிற நபர் அந்த குறிச்சியிலே டீக்கடை வைத்திருப்பவர். குறிச்சி என்பது ஒரு சிறு ஊர். அந்த ஊரிலே சிறியதாக ஒரு டீக்கடையை வைத்திருப்பவர் நான் குறிப்பிடும் ராமசாமி என்பவர்.

அந்த ராமசாமி என்பவர் இந்த சம்பவத்திலே சம்பந்தப்பட்டிருப்பார் என்று கருதி, அவர் வீட்டுக்கு சென்று வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 சைக்கிள்களை, வீட்டிற்கு பின்புறம் எடுத்துச் சென்று அம்மிக் கல்லை போட்டு உடைத்திருக்கிறார்கள். அவர் டீ போடுவதற்கு உபயோகிக்கும் மேஜை, நாற்காலி, பெஞ்சு, பக்கெட் எல்லாவற்றையும் நொறுக்கி உடைத்திருக்கிறார்கள். போராட்டக் காலங்களில் போராடுபவர்கள்



வன்முறையில் ஈடுபட்ட பல சம்பவங்களை சொல்லியிருக்கிறார்கள். அப்படி வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கும், இவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல பாண்டியம்பாளையத்தில் எங்களுடைய கட்சி மாவட்ட விவசாயச் சங்கத்தினுடைய துணைத் தலைவர் பி. எஸ். அம்மாசை கவுண்டர் இருக்கிறார். அங்கேதான் நானும் இருக்கிறேன். அன்றையதினம் காவல் துறையினர் மின் கட்டணம் கட்டாத பாக்கிக்காக, பியூஸ் கேரியரை எடுக்க வந்தார்கள். நான் குறிப்பிட்ட எங்கள் விவசாயச் சங்கத் தலைவருக்கு 3 வீடுகள் இருக்கின்றன. 2 பழைய வீடுகள், 1 புதிய வீடு. 3 வீடுகளுக்கும் மின் கட்டணத்தை கட்டியிருக்கிறார். ஆனால் அவர்கள் வந்தவுடன் அந்த வீடு யாருடையது என்று கேட்க, விவசாயச் சங்கத் தலைவருடையது என்று சொன்னவுடன், அந்த வீட்டிலே இருந்த ஒயரை துண்டித்துவிட்டார்கள். கட்டணம் கட்டியிருக்க மாட்டார்கள் என்று நினைத்துச் செய்திருக்கிறார்கள்.

அவருடைய வீட்டில் சன்னலுக்குப் போடப்பட்டிருக்கிற சன்ஷேடை உடைத்து, வீட்டுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பூச்செடியை வெட்டி எறிந்து, அவர் வீட்டு முன்னால் நின்று கொண்டிருந்த சைக்கிளையும் போட்டு உடைத்திருக்கிறார்கள். இப்படிப் பல சம்பவங்கள் இருக்கின்றன. சட்டத்தை முழுமையாக நிலைநாட்ட வேண்டும் என்று பயன்படுத்தவேண்டிய இந்தத் துறையினர் அவர்களே வன்முறையில் ஈடுபடக்கூடிய நிலைமை—அது தவிர்க்க முடியாத நிலைமையாக—சூழ்நிலையாக இருந்தாலும் இருக்கிறது என்பதை தாழ்மையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தீயணைப்புத் துறை பற்றிக் கூறவிரும்புகிறேன். குடிசைகள் அதிகமாக இருக்கிற பகுதியில்தான் பெரும்பாலும் நெருப்பு பற்றுகிறது. தீ பிடித்து எரிகிறது. ஆனால் ஒரு இடத்தில் அப்படிப்பட்ட தீ பற்றிவிட்ட சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று இந்த தீயணைப்புத் துறையினருக்கு போன் செய்தால் அவர்கள் வருவதற்குள்ளாக, நெருப்புப் பிடிக்கப்பட்ட குடிசைகள் அனைத்தும் எரிந்துவிடுகின்றன. அதற்கு காரணம், ஏறத்தாழ இருக்கின்ற தீயணைப்பு நிலையங்கள் அனைத்துமே ஊரிலிருந்து 25 மைல், 30 மைல் தள்ளியிருக்கிற நிலைமைதான். அதன் காரணத்தால்தான் இப்படிப்பட்ட துரதிருஷ்டவசமான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க முடியவில்லை. இதனை மாற்ற, அவைகளை 15 மைல் அல்லது 20 மைலுக்குள்ளாக ஏற்படுத்தவேண்டும் என்று கேட்பதோடு, வெயில் காலங்களில்தான் குடிசைப் பகுதிகளில் அதிகமாக நெருப்புப் பிடிக்கின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், அந்தக் காலங்களில் தீ அணைக்கும் படையினை எந்த நிலைமைக்கும் தயாராக வைக்கவேண்டும் என்று கோருகிறேன்,

அடுத்து போலீஸ் காவல் துறையினருக்கு கொடுக்கப்படுவது போல தீயணைப்புப் பணியாளர்களுக்கும் கொடுக்கப்பட்டால்கூட இன்றைய விலைவாசி ஏற்றத்தில் அரசு கொடுக்கின்ற அத்தியா வசியப் பண்டங்களைத் தவிர, வேறு சில முக்கியப் பொருள்களை வாங்கக்கூட முடியாத நிலை இருப்பதால், காவல் துறையினருக்கும், அவர்களுக்கும் இன்னும் அதிகமான சம்பளத்தை சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

[பிற்பகல் 12.20]

*திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை, மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு முதலில் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு காவல் துறை மானியத்தின் மீதான அரசாங்கக் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள விளக்கங்களைப் படித்துப் பார்க்கிறபோது தமிழகத்தில் இருக்கிற காவல் துறையினருக்கு குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்ட பிறகு நல்ல பல மாற்றங்களைச் செய்து காவல் துறையினர் நல்லமுறையில் தன்னிச்சையாக அவர்கள் செயல் முறையில் இறங்கவும் நல்லதொரு வாய்ப்பைத் தந்து, காவல் துறையினர் குடும்பங்களுக்கு, நலிவுற்றிருக்கிற அவர்களுக்கு, நல்லமுறையில் வசதி வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வகையில் அவர்களுக்காக நல்லதொரு அமைப்பை, மாற்றங்களைச் செய்து, பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு கடமையைச் செய்கிறபோது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் கடமை உணர்வோடு ஆற்றுகிற அரும்பணிகளுக்காக இந்த அரசு அவர்களுக்கு குடும்ப நிதித் திட்டம் என்று தந்திருக்கிறது. ஆகவே இந்த அரசை காவல் துறையினர் மிகவும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று தமிழகத்திலே தீவிரவாதிகள் என்ற ஒரு பிரிவினர் நாட்டிலே இருக்கிற மக்களை அச்சுறுத்துகிற வகையில் குறிப்பாக தர்மபுரி, வடஆற்காடு மாவட்டங்களில் பல கொள்ளைகள், கொலைகள் அவர்கள் செய்து வந்ததை அரசு கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. தீவிரவாதிகள் என்று இந்த நாட்டிலே நடமாடிக்கொண்டு கொலைகள், கொள்ளைகள் இவற்றைச் செய்து நாட்டிலே பொதுமக்கள் நடமாடுவதற்குக் கூட, சில கிராமங்களில் இரவு நேரங்களில் யாரும் வெளியே வரமுடியாத ஒரு சூழ்நிலை தமிழகத்தில் அந்தத் தீவிரவாதிகள் இருந்த பகுதிகளில் இருந்து வந்தது என்பதை இந்த நாடு அறியும். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் நல்லவர்கள் கூட வெளியே வருவதற்கு அச்சப்படுகிற நிலை இருந்தது. அதை மாற்றியமைக்கிற வகையில் தமிழ்நாட்டிலே



எங்கிருந்தாலும் அந்தத் தீவிரவாதிகளை அடக்கவேண்டும் என்ற நல்ல நோக்கோடு இந்த அரசு எடுத்த முயற்சி காரணமாக இன்று தமிழகத்திலே ஏழைமக்களும், நடுத்தர மக்களும் வெளியே பயமின்றி நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் அந்த தீவிரவாதிகள் நடமாடிக் கொண்டிருந்த அந்தக் கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள், அத்தனை மக்களும் இன்று புரட்சித் தலைவர் அவர்களை மிகவும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், நாங்கள் தைரியமாக வெளியே வரக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்களே என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு அந்த நடவடிக்கைகள் நாட்டிலே அமைந்திருக்கின்றன.

நான் ஒன்றை அரசாங்கத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையால் போடக்கூடிய வழக்குகள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள்ளாக சார்ஜ் ஷீட்ஸ் போட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற முறையில் சட்டவிதிகளை அமைக்க வேண்டும் என்று அரசையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வழக்கைப் பதிவுசெய்து நீண்ட நாட்கள் அதை அப்படியே போட்டுவிட்டால் அந்த வழக்கு வெற்றிபெறுவதற்கு உள்ள வாய்ப்பு நழுவிவிடும், அந்த வழக்கு தோல்வியுற்றுவிடும், குற்றவாளிகள் தண்டனை அடைவதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே அப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாதவண்ணம் ஒரு வழக்கு பதிவு செய்த இவ்வளவு நாட்களுக்குள்ளாக சார்ஜ் ஷீட் போட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற பொதுவான ஒரு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு அவர்கள் நல்ல முறையிலே கடமையாற்ற வேண்டும்; இந்த நாட்டிற்கு தொண்டாற்ற வேண்டும்; இந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்களுடைய குடும்பங்களுக்கும், அவர்களுக்கும் மலிவு விலையிலே நுகர்பொருள்கள் வழங்குகின்ற ஒரு நல்ல திட்டத்தை தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக, இன்றைக்கு காவல் துறையினரின் குடும்பங்கள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே. அன்றைக்கு நமது நாட்டிலே ஆங்கிலேயர்கள் காலத்திலே உருவாக்கப்பட்ட காவலர்கள் தாம் இன்றைக்கு காவல் நிலையங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கிருஷ்ணகிரியில் ஒரு காவல் நிலையத்தில் ஆங்கிலேயர்கள் காலத்தில் எத்தனை காவலர்கள் நியமிக்கப்பட்டார்களோ, அதே அளவு காவலர்கள்தான் இன்றும் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலேயர் கால [illegible]

அந்த காவல் நிலையத்திலே பணியாற்றிக் கொண்டிருந்தார்: ஆனால், இன்றைக்கு அந்தக் காவல் நிலையத்திலே ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஒரு டிபுடி இன்ஸ்பெக்டர், ஒரு ஏ.எஸ்.ஐ., ஒரு சப் இன்ஸ்பெக்டர் என்று இத்தனை அலுவலர்கள் அங்கே இருக்கிறார்கள். டி.எஸ்.பி. போன்ற அத்தனை அலுவலர்களும் அங்கே இருக்கிறார்கள். ஆனால் காவலர்கள் அதே நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஏதாவது ஒரு தகராறு நடக்கின்றது என்று முன்னெச்சரிக்கையாக சொன்னால், அனுப்புவதற்குப் போதிய காவலர்கள் இல்லை என்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் தற்சமயம் காவலர்கள் நியமனம் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட காவலர்களை, உடனடியாகப் பயிற்சிக்கு எடுத்துக் கொண்டு அவர்களை எந்தெந்த காவல் நிலையங்களுக்கு தமிழகத்திலே காவலர்கள் போதாமல் இருக்கிறதோ, அந்தக் காவல் நிலையங்களிலே எல்லாம் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு தமிழகத்திலே வகுப்புக் கலவரங்கள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வகுப்புக் கலவரங்கள் நடைபெறுகின்ற நேரத்தில், காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தால், உடனே சென்று, அங்கு உரிய முறையிலே நடவடிக்கைகளை எடுப்பார்களானால் அந்த வகுப்புக் கலவரங்கள் ஆரம்பத்திலேயே நிறுத்தி விடுவதற்கு, அப்படி நடைபெறாமல் தடுப்பதற்கு நல்ல வாய்ப்பாக அமையும். ஆனால், சில நேரங்களில் காவல் துறையினர் கால தாமதம் செய்துவிடுகின்ற காரணத்தினால், அங்கே பெருமளவிற்கு வகுப்புக் கலவரங்கள் அதிகமாகி விடுகின்றன. அவர்களை நான் கடமை செய்யவில்லை என்று சொல்ல வில்லை. சில அதிகாரிகள் கொஞ்சம் தாமதமாகச் செல்லுன்ற காரணத்தினால், அங்கே கலவரங்கள் வளர்ந்து விடுகின்றன. ஆகவே, அப்பேர்ப்பட்ட சூழ்நிலை வருகின்றபோது உடனடி யாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காவல் துறையினர் முற்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே காவலர்களுக்குக் குடியிருப்புகள் பெருமளவிற்கு இல்லாத நிலை இருக்கிறது. எனவே, காவல் நிலையங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு குடியிருப்புக் காலனிகள் கட்டுவதற்கு அரசு முயற்சியெடுக்க வேண்டும். அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்கின்ற வகையிலே பார்க்கும்போது, சில நகரங்களிலே நூற்றுக்கணக்கான ரூபாயை அவர்கள் வாடகையாக கொடுக்க வேண்டியிருக் கிறது. ஆனால், அவர்களுக்கு அரசு வழங்குகின்ற அந்தத் தொகை உண்மையிலேயே அவர்களுக்குப் போதாது. ஆகவே அரசு தரப்பிலே அவர்களுக்கு காலனிகள் கட்டிக் கொடுத்து, அவர்களுக்குத் தருகின்ற வீட்டு வாடகைப் படியை அரசு



எடுத்துக்கொண்டாலும் கூட அது சரியாக இருக்கும். ஆகவே, குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கூட வேப்பனஹள்ளி, மகாராஜகடை, ராயகோட்டை போன்ற பகுதிகளிலே உள்ள காவல் நிலையங்களிலே உள்ள காவல் துறையினருக்கு, அவர்கள் குடியிருப்பதற்கு காலனிகள் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, இப்பேர்ப்பட்ட இடங்களில் எல்லாம அவர்களுக்கு குடியிருப்புக் காலனிகள் கட்டிக்கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, காவல் துறையினர் செம்மையாகப் பணியாற்று வதற்கு அவர்களுக்கு உரிய வாகனங்கள் தேவை. இன்றைக்கு அவர்களுக்கு வாகன வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு இடத்திற்கு அவர்கள் விரைந்து செல்ல வேண்டுமென்று சொன்னால், டி.எஸ்.பி-க்கு தகவல் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், வாகனங்கள் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்களுக்கு கூடுதலான வாகனங்களை வாங்கிக் கொடுக்கவேண்டும். அதோடு, இப்போது இருக்கின்ற பழுதுபட்ட வாகனங்களை யெல்லாம் எடுத்துவிட்டு, நல்ல வாகனங்களைக் கொடுத்து, நல்ல முறையில் காவல் துறையினர் பணியாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12–30]

அடுத்து பெரியார் மாவட்டம், சேலம், தர்மபுரி மாவட்டங் களுக்கு ஒரு டி. ஐ. ஜி. அலுவலகத்தை சேலத்தில் நிறுவவிருப்ப தாக நான் கேள்விப்படுகிறேன். இந்த மூன்று மாவட்டங்களுக்கும் மையமாக இருக்கிற சேலத்திலே வைப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, தீவிரவாதிகள் நிறைந்த தர்மபுரி மாவட்டத்தில் டி. ஐ. ஜி. அலுவலகத்தை நிறுவ வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைக்கும் படையினர்; அவர்கள் கூட புரட்சித் தலைவர் அவர்கள் காவலர்களுக்குத் தருகிற வகையில் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் தரவேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். அதைக் கொடுத்துக் கொண்டு இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்,

அடுத்து தீயணைக்கும் படையிலே இருக்கிற வாகனங்கள் மிக மோசமாக இருந்து கொண்டிருக்கின்றன. நான் கிருஷ்ண கிரியில் இருக்கிற அலுவலகத்திற்கு ஒரு இடத்தில் தீ பிடித்துக் கொண்டு விட்டது, உடனடியாக வாருங்கள் என்று 'போன்'

செய்தால், அந்த வாகனத்தை தட்டி 'ஸ்டார்ட்' செய்வதற்கே ஒரு மணி நேரம் ஆகியது. அதற்குள் எல்லாம் நீராவியாகி விட்டது. ஆகவே பழைய வாகனங்களை எடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே நவீன தீயணைப்பு இயந்திரங்களைப் புரட்சித் தலைவர் அவர்கள் வாங்கித் தந்திருக்கிறார்கள். கிருஷ்ணகிரி, ஹோசூர், தர்மபுரியில் இருக்கிற வாகனங்களை, அவைகள் பழமையாக இருப்பதால், நல்ல வாகனங்களை வாங்கித் தருவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கியமைக்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு முன்னவர் அவர்களும் இங்கே இல்லையென்றாலும் கூட, எங்கே இருந்தாவது நாங்கள் சொல்கிற கோரிக்கைகளை கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையிலே சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுமக்களுடைய பாதுகாப்பு நடவடிக்கைகளை மிக சீரிய முறையில் செயல்படுத்துவதில் இந்திய துணைக் கண்டத்தில் பெரிதும் போற்றும்படியாக இருப்பது நமது காவல் துறை என்று சொன்னால் அதில் ஒன்றும் தவறில்லை. அவர்களுக்கு எவ்வளவு சலுகைகளை அளித்தாலும் கூட அது தகும் என்று தான் நாங்கள் நினைக்கிறோம். இன்று காவல் துறையினருக்கு மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதைப் பாராட்டுகிறேன். இடர்ப்படி வழங்கப்படுகிறது; துணிப்படி மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. வீட்டு வாடகைப்படி உயர்த்தப்பட்டுள்ளது; சீருடை மானியம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 1979-ல் வேலை நிறுத்தத்தின் போது, வேலை நிறுத்தம் செய்யாதவர்களுக்கு கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. இவ்வளவு சலுகைகள் அளித்தமைக்கு அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல காவலர்களுக்கு அவர்கள் பணிபுரிகின்ற இடங்களிலே இல்லங்களை கட்டித்தர வேண்டும். ஓய்வு பெறுகிற நேரத்தில், அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு, ஓய்வு பெறுகிற காவலர்கள் எங்கே தங்க விரும்புகிறார்களோ அங்கே வீடு கட்டித்தர வேண்டுமென்றும், பணத்தைத் தவணை முறையில் பிடித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



என்று கூட்டத் தொடரில் கூட நான் சொன்னேன். காவல் துறையில் பணிபுரிகின்றவர்களின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பிலே ஒரு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். கிட்டத்தட்ட ஒரு சென்டி மீட்டர் குறைந்து விட்டது என்ற காரணத்திற்காக கூட அவர்களுக்கு அந்த வேலைக்கு தகுதி இல்லாதவர்கள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே காவல் துறையினர் குழந்தைகளுக்குச் சலுகைகளை அளித்து வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சலுகைகள் எல்லா காவல் துறையினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும். அதாவது சிறைக் காவலர்கள், தீயணைப்புப் படையினர், வானொலிப் பிரிவில் உள்ளவர்களும் சமமாகக் கருதப்பட்டு எல்லா சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர்கள் துறையிலே சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். தீயணைப்புப் படையினரைப் பொறுத்தவரையில் அவர்கள் மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் தீவிபத்துக்களிலிருந்தும் பிற விபத்துக்களிலிருந்தும் பாதுகாத்து வருகிறார்கள். தங்கள் உயிரைக்கூட அவர்கள் பொருட்படுத்தாமல் தியாகத்தைச் செய்து வருகிறார்கள். எனவே அவர்களுக்கும் காவல் துறையினருக்குரிய அத்தனை சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நடப்பு ஆண்டிலே 10 தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதாக அரசு அறிவித்திருக்கிறது. அந்த பத்திலே ஒன்றை எனது தொகுதியாகிய ஆலங்குளத்திலே ஊத்துமலையிலே நிறுவவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஊத்துமலையிலே கிராம மக்கள் நிறைந்திருக்கிறார்கள். அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. ஏதாவது தீ விபத்து ஏற்படுகிறபோது 25 மைலுக்கு மேலே உள்ள தென்காசி தீயணைப்பு நிலையத்திற்கோ அல்லது 25 மைல் கிழக்கே உள்ள திருநெல்வேலி தீயணைப்பு நிலையத்திற்கோ தகவல் கொடுக்கவேண்டும். அப்படித் தகவல் கொடுத்து அவர்கள் வருவதற்குள்ளாகத் தீ முழுவதும் பற்றிக் கொள்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்க ஊத்துமலையிலே ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சிறைக்காவலர்களும் தங்களுடைய கடமைகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். காவல் துறையினர் எவ்வளவு நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்களோ அதே வகையிலே அவர்களும் பணியாற்றி வருகிறார்கள். அந்த சிறைக் காவலர்களுக்கும் மற்ற காவலர்களைப் போன்று எல்லா சலுகைகளையும் அளிக்கவேண்டும், அவர்களுக்கும் உணவு தானியம் மலிவு விலையிலே கொடுக்கப்பட ஆவன செய்ய வேண்டும். இன்றைய தினம் காவல் துறையினர் திறமையாகச்

செயல்படுகிறார்கள் என்று சொன்னால் சட்டமும் ஒழுங்கும் போக்குவரத்தும் ஒழுங்காக நடைபெறுகிறது என்றால் குற்றப் பிரிவு துரித நடவடிக்கை உடனுக்குடன் எடுக்க உறுதுணையாக இருகின்ற துறை காவல் வானொலிப் பிரிவு என்று சொன்னால் மிகையாகாது. காவல் துறையினர் மிகச் சிறப்பாக செயற்படக் கூடிய வகையில் வானொலிப் பிரிவில் உள்ள தொழில் நுட்பப் பிரிவில் பணியாற்றுகின்றவர்கள் இரவும் பகலும் சென்னை நகரம் முதல் கடைநிலையில் உள்ள கிராமங்கள் வரையிலே பணியாற்றுவதால் தான் சீக்கிரமான நடவடிக்கைகளை காவல் துறையினர் எடுக்க முடிகிறது. அவர்கள் காவலர்கள் என்று எடுக்கப் படாததால் மற்றைய காவலர்களுக்கு உரிய சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் தாயில்லாத பிள்ளை போன்று அநாதையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு முதலாவது, இரண்டாவது ஊதிய குழுக்களிலே நியாயம் வழங்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் 1977 ஆம் ஆண்டு வீசிய கடுமையான புயலின்போது தஞ்சை, நாகை ஆகிய பகுதிகள் மற்றைய பகுதிகளோடு செய்தித் தொடர்பு அற்றுப்போன நிலையிலே முதன் முதலாக அந்தச் செய்தித் தொடர்பை ஏற்படுத்துவதற்காக அல்லும் பகலும் அவர்கள் உழைத்த நேரத்தில் கூட அவர்களுக்கு மற்ற காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச உணவு அவர்களுக்கு வானொலிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் காவலர்கள் அல்ல என்ற காரணத்தைக் காட்டி வழங்கப்படவில்லை. தமிழக முதல்வர் அவர்களால் அளிக்கப்படுகிற விருதுகளும் தேசிய விருதுகளும் கூட கிடைக்கவேண்டிய நேரத்திலே அவர்களுக்கு, அவர்கள் காவலர்கள் அல்ல என்ற காரணத்தைச் சொல்லி, வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. 1979 ஆம் ஆண்டு காவலர் வேலை நிறுத்தம் செய்தபோது செய்தித் தொடர்பு அற்றுப்போகாத முறையில் அரசு வேலையைச் செய்த அந்தப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. ஆனால் மனிதர்கள் இயல்புப்படி அவர்கள் தவறு செய்கிறபோது மட்டும் காவலர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுகிறது. அவர்களுடைய துயரங்களை நன்கு உணர்ந்து 23.11.1979 அன்று உள்துறை ஆணை எண் 2923 படி அவர்களை முழுமையான காவலர்களாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாற்றினார்கள். அதற்காக வானொலிப் பிரிவினர் தமிழக முதல்வர் அவர்களை வாழ்நாள் உள்ளளவும் தெய்வமாகப் போற்றி வணங்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 1979 ஆம் ஆண்டிலே போட்ட அந்த உத்திரவுப்படி இன்றுவரை எந்தவிதமான சலுகைகளும் வழங்கப்படவில்லை. மலிவு விலையில் உணவுப் பண்டங்கள் மட்டும் அவர்களுக்கு வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மற்றைய சலுகைகள் வழங்கப்படவில்லை என்ற குறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் அத்தனையையும் கொடுக்க வேண்டும். இலவச வீட்டு வசதி, ஊர்திப்படி, ஒட்டுமொத்த சிறப்பூதியம், சீருடைப்படி, சீருடைத்தொகை,



1979 ஆம் ஆண்டு காவலர் வேலைநிறுத்தம் செய்தபொழுது வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு மூன் ஊதிய உயர்வு ஆகியவை வழங்கப்பட வேண்டியது நியாயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

அரசு ஆணை 4504/78, தேதி 5.10.78 அன்று போலீஸ்காரர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் என்று 10 ரூபாய் தர வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று மூன்றாண்டுக் காலமாகியும் அவர்களுக்கு அந்த சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. அதையும் மனதிற் கொண்டு அவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் இருக்கின்ற இல்லங்கள் மிகப் பழைய இல்லங்களாக, கீறல் விழுந்த இல்லங்களாக இருக்கின்றன. அவைகள் பழுதுபார்க்கப்பட்டு, அவர்கள் அங்கே சிறப்பாக தங்கிப் பணி புரிவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுடைய வீடுகளுக்கு மின்சாரம் கொடுக்கும் விஷயத்தைப் பொறுத்தவரையில், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையில் தான் மின்சாரம் கொடுப்பதாகக் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். பல்வேறு வேலைகளைச் செய்துவிட்டு இரவு 11 மணி சுமருக்கு வீட்டுக்கு வருபவர்கள் மின்சாரம் இல்லாததால் அவதிப்படுறார்கள். இதைப்போன்ற கோடைக் காலங்களில் வெப்பத்தைத் தணிக்க முடியாமல் அவர்களுடைய குழந்தைகள்கூடத் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படியெல்லாம் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற அதே நேரத்தில் சில அதிகாரிகள் செய்யும் தவறுகளால் ஏற்படும் சங்கடங்களைப் பற்றியும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கை காப்பாற்றுகின்ற காவல்துறையினர் இன்றையதினம் சிலர் செய்கின்ற காரியங்களினாலே அந்தத் துறைக்கே அவமானத்தை ஏற்படுத்துகின்ற காரியங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன. எனக்கு வந்த தகவலின்படி தாம்பரத்திலே லோகநாதன் என்பவர் 10.1.1981 ஆம் தேதி மாலை 7 மணி அளவிலே 4 பேர்களால் குத்தி கொலைசெய்யப்பட்டு விட்டார். அதிலே

இரண்டு பேர்களைப் போலீசார் கைது செய்தார்கள். இரண்டு பேர் கோர்ட்டில் சரண் அடைந்தார்கள். அதன் பின்னாலே அதிலே ஒருவர் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். பிறகு மற்ற 3 பேர்களும் நீதிமன்றத்திலே கண்டிஷன் பெயில் பெற்று வெளியே வந்திருக்கிறார்கள். அவர்கள் கொலை நடந்த இடத்திற்கு வரக்கூடாது, வந்தால் சாட்சிகளைக் கலைத்து விடுவார்கள் என்று அந்த இடத்திற்கு வராமல் இருப்பதாகக் கண்டிஷன் போட்டார்கள். ஆனால் இங்கே நடந்தது என்னவென்றால், சில நாட்களுக்கு முன்பாக 29.4.1981 ஆம் தேதியன்று மாலை 3.30 மணி அளவில் கொலை செய்யப்பட்டவரின் நண்பர் கிருஷ்ணன் என்பவர் இந்த வழக்கில் சாட்சி சொல்வார் என்பதற்காக குத்திவிட்டுத் தப்பி ஓடிவிட்டார்கள். [illegible] குத்தப்பட்டவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் வார்டு நம்பர் 3c—ல் இருக்கிறார். இதோடு மட்டுமல்லாமல், மேற்படி குற்றவாளிகள் இறந்துபோன லோகநாதன் என்பவருடைய மனைவி சுசீலா என்பவரைப் பயமுறுத்தி, கத்தியைக் காட்டி மிரட்டி, இந்த ஊரிலே இருக்கக் கூடாது. இருந்தால் உன்னைக் கொன்று விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் உயிருக்குப் பயந்த நிலையில் தன்னுடைய 7 வயது மகளையும், 4 வயது மகனையும் தூக்கிக்கொண்டு மாம்பலத்தில் அவருக்குத் தெரிந்த ஒருவருடைய வீட்டில் அடைக்கலம் அடைந்திருக்கிறார். அவர் சோடாக்கடை ஒன்றை வைத்து வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் இப்போது அந்தச் சோடாக்கடை வியாபாரத்தையும் நடத்த முடியாமல் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று போகாமல், ஏழை எளியவர்களுக்குத் துணைபுரிவது என்ற நிலையை மேற்கொள்ள வேண்டும். பத்துக் கட்டளைகள் என்று காவல் நிலையங்களுக்கு மாட்டப்பட்டிருக்கிறது. அவைகள் அற்புதமான கட்டளைகள், ஆனால் அவைகளைக் காவல்நிலையங்களில் செயல்படுத்தாமல் இருந்து வருகிறார்கள்.

அதேபோன்று, திருமணம் ஆன பெண்கள், மதுரை திருச்சி, சிதம்பரம் போன்ற இடங்களில் சந்தேகத்திற்கு இடமான வகையில் மரணம் எய்தியிருக்கிறார்கள் அவைகளிலே சில தற்கொலைகள் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, கொலையோ என்ற ஐயம் பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

திருவொற்றியூரில் நிலச்சொந்தக்காரர் ஒருவருக்கு நீதி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பலனைக்கூட அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவை ஒவ்வொன்றின் விவரம் தர வேண்டுமென்றாலும் கூட அவற்றைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இவற்றைச் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட அவசரமான நீதி வழங்க வேண்டிய நிலையிலும், மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதினால், பாதிக்கப்பட்டவர்கள் பெரும் மன வேதனைக்கும் தொல்லைக்கும்



பொருட் செலவுக்கும் ஆட்பட வேண்டியிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட ஐயப்பாட்டு முறையீடுகளை உடனுக்குடன் கவனிப்பதற்கு, மாவட்ட அளவில் தனிப் பிரிவு ஒன்று இயங்குவது நியாயம் வழங்குவதற்கு நல்லது எனக் கருதுகிறோம்.

அதே போன்று கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் தாங்கள் எளிதாகச் சம்பாதித்த பணபலத்தால் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய காவல் துறையினரையே அச்சுறுத்தும் பரிதாபமான நிலை உள்ளது. காவல்துறையினர் அந்த அளவுக்குக் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களால் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

அதே போன்று, அரசியல் கைதிகள் மீது ஏவிட முடியாத கொடுமைகள் செய்த வித்யாசாகர் போன்றவர்களை, விசாரணை கமிஷன் நீதிபதி, அவர் தவறு செய்திருக்கிறார் என்று கூறிய பின்னரும், பதவியிலே அமர்த்தியிருப்பது வருந்தத்தக்கது. சமூகக் குற்றங்கள் செய்து சிறைக்கு வருகிறவர்களையும், சமுதாய நலன் கருதி, போராடிச் சிறைக்கு வருபவர்களையும், சமமாகக் கருதி, கொடுமைகளை இழைத்த அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லையென்றால், இத்தகைய தவறுகளை மற்ற அதிகாரிகள், உயர் அதிகாரிகள் செய்வதற்கு நாம் ஊக்கம் அளித்தவர்கள் ஆகிவிடுவோம்.

அரசையும் பொது மக்களையும் ஏமாற்றுகின்ற குற்றவாளிகளையும் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்குப் போராடி சிறை சென்றவர்களையும் ஒன்றாகக் கருதிவிடக் கூடாது.

நெல்லை மாவட்டத்தில் பத்தமடை, மேலச்செவல், கோபால சமுத்திரம் ஆகிய ஊர்களில் காவல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக திருவொற்றியூர் தொகுதி எண்ணூர் போலீஸ் சரகம் விம்கோ நகர் 7-வது பகுதியில் திருட்டு, வழிப்பறி, குடிபோதைகள், கலாட்டா ஆகியவைத் தொடர்ந்து நடைபெறுவதால் அப்பகுதியில் ஒரு அவுட்போஸ்ட் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிவருகிறார்கள். அந்த கோரிக்கைகளை நிறைவேற்றி காவல் துறை எளிதான முறையிலே சிறப்பான முறையிலே பணியாற்ற எங்களது இயக்கத்தின் சார்பிலே ஆதரவு தெரிவித்து பேச வாய்ப்பளித்த கனம் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீதும் தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-வது எண் மானியக் கோரிக்கையின் மீதும் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு காவல் துறை என்று சொன்னாலே அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு, தனிப் பெருமை உண்டு, தனிப்பட்ட ஆற்றல் உண்டு என்பதை யாரும்

மறக்க முடியாது. அப்படிப்பட்ட தமிழ்நாடு காவல்துறை 1969-ஆம் ஆண்டுடிலேயிருந்து 1976-ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மங்கி இருந்தது என்பதையும் யாரும் மறக்க முடியாது. நம்முடைய புரட்சித் தலைவர் 1977-ஆம் ஆண்டிலே இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே தமிழ்நாட்டின் காவல் துறையினுடைய சிறப்பு அதனுடைய தனி ஆற்றல் மீண்டும் புத்துயிர் பெற்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்து காவல் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னாலே தமிழ்நாடு ஒரு அமைதிப் பூங்காவாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடைமைப்பட்டிருக்கிறேன். ஆனால் புரட்சித் தலைவருடைய பொறுப்பு மிக உன்னதமான பொறுப்பு. புரட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிற காரணத் தாலே நீதியும் நிர்வாகமும் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். தமிழ்நாட்டிலே அமைதி பூத்திட வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே காவல் துறை பணியாற்றிக்கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்திலே, இந்தத் தமிழகத்தைக் கிளர்ச்சிக் கூடார மாக மாற்ற வேண்டும், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற இந்தத் துறையிலே ஏதாவது ஒரு பிணம் விழுகிறதா, அதை வைத்துக்கொண்டு அரசியல் நடத்த லாமா என்றெல்லாம் சிலர் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நிலைமையிலே நான் ஒருசில கருத்துக்களை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 12·50]

தமிழகம் அமைதி பூங்காவாக இருக்கின்ற இந்த நேரத்திலே, பாரதக் கண்டத்திலே இருக்கின்ற மற்ற மாநிலங்களைப் பார்ப் போமானால் தினந்தோறும் பத்திரிகையில் வருகின்ற செய்தி களை உற்றுநோக்குவோமானால் தமிழகத்திற்கு அப்பாலே, வடக்கிலும் தெற்கிலும் உள்ள மாநிலங்களில் எந்த அளவிற்கு அங்கே பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள், பொது மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்பது எல்லாம் நமக்குத் தெளிவாகத் தெரியும். ஆனால் அங்கேயெல்லாம் அமைதி கெடவில்லை, சட்டம் ஒழுங்கு கெடவில்லை, என்று சொல்கிறார்கள். அங்கேயெல்லாம் மக்கள் சிட்டுக்குருவிகளைப் போல் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். ஆனால் அப்படி இருந்தும் சட்டம் ஒழுங்கு கெடவில்லை என்று வாதிக்கின்றவர் கள் அமைதியாக நல்லெண்ணம் கொண்ட புரட்சித் தலைவர் ஆட்சியிலே அமைதி கெட்டு விட்டது, எங்கே கிளர்ச்சி நடத்த லாம் என்கிற நிலைமையை இந்தத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மறந்து விடக்கூடாது. இதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30-ஆம் நாளிலே விவசாயிகள் என்ற பெயராலே ஒரு சில சமூக விரோதிகளாலே தூண்டப்பட்டு தமிழகத்திலே ஒரு கிளர்ச்சியை நடத்தினார்கள். அந்தக் கிளர்ச்சிகளை நடத்தியவர்கள் பாலங்களுக்கு எல்லாம் வெடி வைத்து தகர்த்தார்கள். பேருந்துகளை லாரிகளைக் கொளுத்தினார்கள். மின் கம்பிகளை வெட்டி நெடுஞ்சாலையில் குறுக்கே போட்டார்கள். மின் அழுத்த மாற்றத்தைச் சேதப் படுத்தினார்கள். காவல் நிலையங்களைத் தாக்கினார்கள். காவலர் ஒருவரைக் குத்திக் கொன்றார்கள். நீர் வழங்கும் குழாய்ப்பாதைகளைச் சேதப்படுத்தினார்கள். பால் காய்கறி கள் அரிசி விறகு போன்ற அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி சென்ற வண்டிகளையெல்லாம் தடுத்து நிறுத்தினார்கள். பல இடங்களிலே கொட்டி வீணாக்கினார்கள். அப்படிப்பட்ட ஒரு நேரத்திலே தமிழகத்தினுடைய அமைதி கெட்டு விட்டது, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்கிற ஒரு நிலைமையை உருவாக்கி தமிழகத்திலே அப்படி ஒரு நிலைமை ஏற்படாதா என கனவு கண்டு கொண்டு இருந்தவர்களுடைய நினைவுகள் எல்லாம் தூள் தூளாகின்ற வகையிலே அந்தக் கிளர்ச்சியைப் பொறுமையுடனும் கட்டுப் பாட்டுடனும் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அந்தக் காவல் துறையினர் நல்ல முறையில் செயல்பட்டு, நல்ல வெற்றியும் ஈட்டித் தந்தது என்பதை இந்த நேரத்தில் சொல்லி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே, சில காவல் நிலையங்களிலே, புறக்காவல் நிலையங்களிலே தொலைபேசி இல்லாத சூழ்நிலை இருந்து வரு கிறது. காவல் துறையினர் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று சொன்னால் குறிப்பாக வாகன வசதிகளும் தொலைபேசி வசதியும் செய்து தரவேண்டிய பொறுப்பு மிக மிக முக்கியம் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள் என்ற நிலையிலே குறிப்பாக சில காவல் நிலையங்களிலும் புறக் காவல் நிலையங்களிலும் தொலைபேசி இல்லாத நிலையை மாற்றித் தரவேண்டும். தொலைபேசி வசதி செய்து தரவேண் டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே போன்று, காவலர்களுக்கும், காவல் துறை அதிகாரி களுக்கும் சொந்த வீடுகள் கட்டுவதற்காக காவலர் வீட்டு வசதி கழகம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு காவல் துறை இன்ஸ்பெக் டர்-ஜெனரல் லெவலிலே தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்தாலும் கூட, பொதுமக்களுடைய உணர்வுகளைத் தெரிந்து கொள்வதற்கும், பொதுமக்களோடு தொடர்பு கொள்வதற்கும், எந்த நிலையிலே காவல் துறை அதிகாரிகளுக்கு என்னென்ன நிலைமைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று எண்ணுகிற நிலைமையை உருவாக்குவதற்கும் தனிப்பட்ட முறையிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அந்தக் கழகத்திற்கு அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நல்ல முறையில் நடந்துவருகின்ற புரட்சித் தலைவர் அவர்களுடைய நிர்வாகத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினாலே, குறிப்பாக 1969 ஆம் ஆண்டிலிருந்து 1976 வரையில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஒரு சிலருடைய நன்மையாலும், ஆதரவாலும், காவல் துறையில் நுழைந்து இருக்கிற ஒரு சிலர் வேலியே பயிரை மேயும் என்று சொல்வோமே அதைப்போல, அந்தத் துறையில் இருந்துகொண்டு புரட்சித் தலைவர் நல்ல முறையில் நடத்திவருகின்ற அந்த நிர்வாகத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்ற முறையிலே ஒரு சில இடங்களிலே செயல்பட்டு வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக திருச்சி நகரிலே ரிக்ரியேஷன் கிளப் என்று ஏற்படுத்திக்கொண்டு அவைகளையெல்லாம் சில இடங்களில் சூதாட்ட விடுதிகளாக இரவு நேரங்களில் நடைபெற்று வருகின்றன. அப்படி நடைபெற்று வருகின்ற அந்த சூதாட்ட விடுதிகள் கூட சில இயக்கத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்துகொண்டு இன்று தமிழகத்தின் நிர்வாகத்தை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காகவும், புரட்சித் தலைவருடைய ஆட்சியில் நல்ல நிர்வாகத்திற்குக் களங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற முறையிலே திருச்சியிலே சில விடுதிகள் எல்லாம் நல்ல முறையில் செயல்படாமல் சூதாட்ட விடுதிகளாக அவைகள் நடைபெற்று வருகின்றன.

அவைகளுக்கு எல்லாம் மேலாக வேலியே பயிரை மேய்வது போல் அங்கே இருக்கும் காவல் துறையில் உள்ளவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்களுக்கு எல்லாம் உடந்தையாக இருந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலே குருவராஜ் பேட்டை என்ற கிராமத்தில் இருக்கிற இன்டஸ்ட்ரியல் வீவர்ஸ் சொஸைடியில் தலைவராக ஒருவர் இருந்தார். அவருடைய பதவிக் காலம் கடந்த டிசம்பர் மாதத்தோடு முடிந்துவிட்டது. அவருடைய பதவிக் காலம் முடிந்த பின்னாலே, அந்த இன்டஸ்ட்ரியல் வீவர் சொசைடியின் புதிய தலைவர் போடுவதற்கு முன்னால், ஒரு போர்ட் நியமனம் செய்வதற்கு முன்னால், அங்கே அரசின் சார்பிலே ஒரு செக்ரடரியைப் போட்டார்கள். அந்த செக்ரடரி பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே முன்னால் தலைவராக இருக்கிற ஒரு கட்சிக்காரர், அந்த இன்டஸ்ரியல் வீவர்ஸ் சொசைடியை பூட்டி வைத்துக்கொண்டு, அங்கே அரசின் சார்பிலே நியமிக்கப்பட்ட செக்ரடரியை நுழைய விடாமல் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக பல ஏழை நெசவாளப் பெருமக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் இப்படித் தனிப்பட்ட முறையில் சர்வாதிகாரமான வகையில், நலிந்துபோன மக்களின் நலனைப் பாதிக்கின்ற



வகையில் அந்த சொசைடியைப் பூட்டி வைத்துக்கொண்டு இருந்ததால், அந்த அதிகாரி காஞ்சீபுரம் உதவி இயக்குநர் அவர்களுக்கும் சோளிங்கர் போலீஸ் ஸ்டேஷனுக்கும் கம்ப்ளெய்ன்ட் செய்கிறார். அரக்கோணத்தில் இருக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் விவரம் தெரிவிக்கிறார். இருந்தாலும்கூட அங்கேயுள்ள அந்த நெசவாளர் குறை தீர்க்கப்படவில்லை. அங்கேயிருக்கும் போலீஸ் அந்தத் தனிப்பட்ட நபருக்குச் சாதகமாக உடந்தையாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியில் இப்படி இருக்கிறது என்று குறை கூறவில்லை. இப்படிப்பட்ட காரியங்களில் காவல் துறையினர் ஈடுபடுவதன் மூலம் நல்ல முறையில் இயங்கி வருகின்ற புரட்சித் தலைவர் ஆட்சிக்கு களங்கம் கற்பிக்கும் முறையில் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறவர்களை தண்டிக்கவும், அதற்கான நடவடிக்கை எடுக்கவும் இல்லாத நிலையில் காவல் துறையினர் இருப்பது வருந்தத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தீயணைப்பு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய சோளிங்கர் தொகுதியைப் பொறுத்தவரையில், சோளிங்கர் தொகுதியின் நாலு புறமும் 20 மைல் தூரத்திற்கு தீயணைப்பு நிலையம் இல்லை. ஆகவே, சோளிங்கரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், அந்த சோளிங்கரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களில் சரியான ரோடு வசதி இல்லாத கிராமங்கள் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அங்கே ஒரு தீ விபத்து ஏற்பட்டுவிட்டால், 20 மைல் தூரத்தில் இருந்து தீயணைப்பு வண்டி வருவதற்குள் சேதம் அதிகமாகி விடுகிறது. அவைகள் நல்ல முறையில் பணியாற்ற முடியவில்லை.

(பிற்பகல் 1-00)

ஆகவே, சோளிங்கர் நகரிலே கிராம மக்கள் நலன் கருதி அந்த விபத்துக்களைத் தடுப்பதற்காக ஒரு தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

***திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறை மானியத்தின் பேரில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு 5-ந் தேதி, காவல் துறை மானியத்தில் நாம் பேச இருக்கின்றபோது 3-ந் தேதி தினமணி பத்திரிகையில் காவல் துறைக்கு கட்டிடம் கட்ட வாரியம் அமைப்பது பற்றி அறிக்கை

[திரு. ஏ. சாகுல் ஹமீது]

வெளிவருகிறது. அதிலும் உள்துறை உயர் அதிகாரி என்ற பெயரிலே ஒரு அறிக்கை வருகிறது என்றால் இன்றைக்கு இந்த மானியத்தின் மீதான விவாதத்தை ஆரம்பிக்கிறபோது இங்கே அந்த விவரத்தைச் சொல்லாமல் அறிக்கை வெளியிட்டது இந்த அவையின் உரிமையை மீறிய பிரச்சினை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வகுப்புக் கலவரங்கள் நிறைய ஏற்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, கடந்த 2, 3 நாட்களாக கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் பகுதியில் சினிமா தியேட்டரில் இருவருக்கு ஏற்பட்ட தகராறு காரணமாக மீனவர்களுக்கும் சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கும் இடையே வகுப்புக் கலவரம் ஏற்பட்டு, இஸ்லாமிய மக்கள் பாதிக்கப்பட்டு மேலும் பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.

நேற்று மண்ணடியில் கதிஜா ஓட்டலில் 3 பேர் சாப்பிட்டு விட்டு காசு கொடுக்காமல் போயிருக்கிறார்கள். அவாகளிடம் காசு கேட்டபோது தகராறு ஏற்பட்டு, அந்த ஓட்டல்காரர் தாக்கப்பட்டிருக்கிறார். மண்ணடி வட்டாரத்தில் சிறுபான்மையினர் கடைகள் தாக்கப்பட்டு, சூறையாடப்பட்ட சம்பவம் நேற்று நடைபெற்றிருக்கிறது. இவைகளை எண்ணிப் பார்க்கும்போது இன்றைக்கு காவல் துறை ஸ்தம்பித்துவிட்டது; லா அண்ட் ஆர்டர் தமிழ்நாட்டில் செயல்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்மையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கலவரம் காவல் துறையின் கண்காணிப்பு சரியாக இல்லாததால் ஏற்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் காவல் துறையின் கண்காணிப்பு இருந்திருந்தால் தாழ்த்தப்பட்ட மக்களும் மற்ற சமுதாய மக்களும் பாதிக்கப்பட்டதை தவிர்த்திருக்க முடியும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த மேற்கரை என்ற பகுதியில் இரட்டைக் கொலை நடந்தது. கள்ள நோட்டு என்ற பெயரிலே சிலர் மீது பொய் வழக்குப் போட்டு, வழக்கு பதிவு செய்தார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், குற்றவாளிகளைத் தேடப்போகிறோம் என்கின்ற பெயராலே தாழ்த்தப்பட்ட மக்களையும், சிறுபான்மை முஸ்லீம் மக்களையும் தொல்லைப்படுத்தும் நிலைமை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள்மீதும் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள்மீதும் ஒரு கொடுமையான நிலையை ஏற்படுத்தியதன் மூலம் அங்கே பதட்ட நிலை ஏற்பட்டு, அங்கே இருக்கிற செங்கோட்டை சப்-இன்ஸ்பெக்டர் வேண்டுமென்றே ஒரு வகுப்பார் சார்பாக செயல்பட்டார் என்ற காரணத்தால் அவர் மாற்றப்பட்டிருக்கிறார். இன்றைக்கு இந்தத் துறை சம்பந்தப்படாதவர்களை எல்லாம் அழைத்துச்



[திரு. ஏ. சாகுல் ஹமீது]

சென்று, அவர்களிடம் பணம் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். பொய் வழக்குப் போட்டு, இன்றைக்கு அந்தப் பகுதி மக்கள் அமைதி இழந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு காவல் துறை அறிக்கையில் இனக் கலவரங்கள் என்ற தலைப்பில் முஸ்லீம்களால்தான் இனக் கலவரம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது இந்த அரசு சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் மீது வேண்டுமென்றே பழி போடுகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மொத்தத்தில் தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் காவல் துறை சரியாகச் செயல்படவில்லை. அதனால் தப்பு செய்தவர்கள் எல்லாம் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலை மாறி, இன்றைக்குத் தப்பு செய்கிறவர்கள் எல்லாம் தப்பித்துக் கொள்வார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

சிறுபான்மை இஸ்லாமியர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு காவல் துறையில் அதிகமாக வேலை வாய்ப்பு இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற உயர்ந்த பதவிகளில், ஐ.பி.எஸ். தரத்தில் இருக்கிற உயர்ந்த பதவிகளிலே இருக்கிற அதிகாரிகளுக்குக்கூட பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இன்றைக்கு போலீஸ் இலாகாவில் யார், யாருக்கெல்லாம் பிரமோஷன் கொடுக்கலாம் என்று ஒரு பட்டியல் போட்டிருக்கிறார்கள். அந்த பட்டியலிலே இருந்த மூன்று முஸ்லீம்கள் பெயர்களை எடுக்காமல் அவர்களை ஓவர்டேக் செய்து மற்றவர்களுக்குக் கொடுத்ததாகத் தெரிகிறது. இதைப் பார்க்கும்போது இந்த அரசு இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு சரியான பிரதிநிதித்துவம் தரவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, காவல் துறையைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் தருவதன் மூலம் இங்கே நடைபெறுகின்ற இத்தகைய தவறுகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை எடுத்துக் காட்டி, போலீஸ் இலாகாவிலே இவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு தரப்படும் என்ற சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு நம்முடைய மத்திய அரசிலே இருந்து நம்முடைய மாநில அரசுக்கு ஒரு உத்தரவு வந்திருப்பதாக நான் அறிகிறேன். அதாவது, தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மையோரான முஸ்லீம்கள் போன்றவர்களுக்கு எல்லாம் டபுள் பிரமோஷன் கொடுத்து அவர்களுக்குரிய சலுகைகளைச் செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவு வந்து இருப்பதாக நான் அறிகிறேன்.

[திரு. ஏ. சாகுல் ஹமீது]

அடுத்து, இராமநாதபுரம் கலவரத்தை அடுத்து கீழக்கரை பகுதியில் ஏர்வாடி என்ற இடத்திலுள்ள புண்ணிய ஸ்தலத்துக்குப் போகின்ற மக்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தி தந்தி மூலமாக எனக்குக் கிடைத்திருக்கின்றது. பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக செல்கின்ற நேரத்திலே இவ்வாறு ஏர்வாடி என்ற இடத்திலே தாக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே, இது குறித்து பரிசீலனை செய்து இந்த மாதிரியான நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திலே குளச்சல் என்ற பகுதியிலேயும் இப்படிப்பட்ட பதட்ட நிலை உருவாகி இருக்கின்றது. அந்தப் பதட்ட நிலையினையும் நீக்கி பாதுகாப்பு தரவேண்டும்.

அடுத்து கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால் கரும்புக் கடை, காரமடை என்ற இடத்திலே ஸ்கில்கேம், இசைக்கூட்டு நடனம் போன்றவை நடத்துவதல் அங்கே தொழப் போகின்றவர்களைத் தடுத்து தொழமுடியாதபடி இக்கட்டான நிலையினை உருவாக்கி இருக்கிறார்கள். அங்கேயும் பதட்ட நிலை உருவாகுமோ என்ற நிலை இருக்கின்றது. ஆகவே, அதையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்திலே எடுத்துக்கொண்டால் காவல் துறை நல்லபடியாகச் செயல்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் லா அண்ட் ஆர்டர் மிக மோசமாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டினை சொல்லிக்கொள்கிறேன். மேலும் காவல் துறையினருக்கு என்று சில சலுகைகளை இந்த அரசு செய்து இருந்தாலும் மேலும் அவர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. குறிப்பாக வாரம் முழுவதும் வேலை பார்த்துவிட்டு கிடைக்கின்ற ஒரு நாள் லீவிலேயும் அவர்கள் வேலை பார்க்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது அவர்களுக்கு 7 ரூபாய்தான் சம்பளம் தரப்படுகிறது. அது போதாது. கேரளாவிலே 12 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. அது போன்று இவர்களுக்கும் அதிகமாகத் தருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, காவல் துறையினரில் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்களுக்கு சம்பளத்தோடு மூன்று இன்க்ரிமென்ட் கொடுக்க வேண்டும் என்ற முறைப்படி சிடியிலே தரப்படவில்லை என்ற ஒரு குறை இருக்கின்றது. அதையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு சைக்கிள் அலவன்சும் தரப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, சைக்கிள் அலவன்ஸ் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலே குளச்சலிலே வகுப்புக் கலவரத்தை உடனடியாகத் தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.



*திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் கலவரம் அதிகப்படியாக விரிவடைந்து மீண்டும் ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவாகி இருக்கின்றது. ஆகவே அமைச்சரவையும் அதிகாரிகளும் போதிய நடவடிக்கைகளை எடுத்து அங்கே ஒரு சுமுகமான நிலைமை அதாவது அமைதி ஏற்படுத்தியதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, காவல் துறையிலே ரிஸ்க் அலவன்ஸ் என்று சென்ற முறை சொன்னார்கள். கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர், எஸ்.பி. போன்ற மட்டங்களிலே அவர்களுக்கு இந்த அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற பிரச்சினையைப் பார்க்கின்றபோது அவர்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றுகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பெல்லாம் போலீஸ்காரர்களைக் கண்டு மக்கள் ஓடி ஒளிந்த நிலை மாறி இன்றைக்கு மக்களைக் கண்டு போலீஸ்காரர்கள் எல்லாம் ஓடி ஒளிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கிராமப்புறங்களிலே போலீஸ்காரர் அடிக்கப்பட்டார், சப்-இன்ஸ்பெக்டர் அடிக்கப்பட்டார் என்ற நிலைமைகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகைகளிலே கூட நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகளில் கூட காவல் துறையினர் தங்களது குடும்பத்தினரை எல்லாம் மறந்துவிட்டு பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்பதைப் பொறுத்த வரையிலே எஸ்.பி. லெவலிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஆண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆகவே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து போலீஸ் ஸ்டேஷன் கட்டிடங்களைப் பொறுத்த வரையிலே அவை வெள்ளைக்காரர்கள் காலத்திலே கட்டப்பட்டது. இன்னும் சில கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களாகத்தான் இருக்கின்றன. வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்ற ஸ்டேஷன்களிலே இட நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. ஆகவே ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இரண்டு ஸ்டேஷன்களையாவது புதிதாகக் கட்ட வேண்டும். காவலர்களுக்குப் புதிய குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுப்பதற்

(பிற்பகல் 1-10)

குரிய நிலைமைகளை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கி நாம் செய்து கொடுப்போமேயானால் நல்லது. அல்லது 5 ஆண்டுகளுக்குள்ளேயாவது பல ஸ்டேஷன்களில் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்களைப் போன்றவர்கள், போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் போனால், அங்கே உட்கார இடம் இல்லை. அங்கே போட்டிருக்கும் சேர்கள் கூட ஓட்டை சேர்களாக போடப்பட்டிருக்கின்றன. அம்மேநாயக்கனூரில் உள்ள போலீஸ் ஸ்டேஷ

னுக்கு நான் 5, 6 மாதங்களுக்கு முன்னே போனேன். அங்கே ஒரே ஒரு ஓட்டை சேர்தான் இருக்கிறது. அதிலே ஒரு ஆர்ம்—ஒரு கை கூட இல்லை. அதிலே உட்கார்ந்துகொண்டு சேலையைக் கூட கிழித்துக்கொண்டு வந்தேன். ஆகவே, கட்டாயமாக போலீஸ் ஸ்டேஷன்களுக்கு பர்னிச்சர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, போலீஸ் நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் குடியிருப்புகள். எந்த அளவிற்கு அரிசன மக்களுக்கு வீடு கட்டப் பெறுகிறதோ, அந்த அளவில்தான் இந்த போலீஸ்காரர்களும் அவர்களுடைய பழைய குடியிருப்புகளில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி அவர்களுக்கு புதிய குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் குழந்தை குட்டிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுக்கு ஒரு நல்ல வசதி வாய்ப்பாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எல்லோரும் சொன்னார்கள் சைக்கிள் அலவன்ஸ் பற்றி. அதை நிச்சயமாக கொடுத்தே தீரவேண்டும். அதேபோல டி.எஸ்.பி. லெவலில் ஒரு மோட்டார் வேனை கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் லெவலிலே, ஒரு ஜீப்பாவது கொடுத்தால்தான் எங்காவது கிராமங்களிலே கலகம் நடந்துவிட்டால், அல்லது கொலை, கொள்ளை முதலியவை நடந்துவிட்டால், அவர்கள் அந்த ஜீப்பிலே கூட 4 போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு போய் என்ன நடந்தது என்று விசாரிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை மனதிலே வைத்து, நம்முடைய முதல்வர் அவர்கள் அவர்களுக்கு அந்த வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாம் வீட்டு வாடகைப் படியை அவர்களுக்குத் தருகிறோம், அது ரொம்பப் பாராட்டத் தக்கதுதான் என்றாலும், நகரங்களிலே 50 ரூபாய் என்றும், கிராமப்புறங்களிலே 30 ரூபாய் என்றும், அதை நிர்ணயம் செய்திருப்பது போதாது என்று கூறிக் கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் 30 ரூபாய்க்கு எங்கே வீடு கிடைக்கிறது. அம்மநாயக்கனூரில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் வாடகை வீட்டில்தான் குடியிருக்கிறார். 100 ரூபாய்க்குக் குறைவாக கிராமப்புறங்களிலேயே இப்போது வாடகை வீடுகள் கிடைப்பதில்லை. ஆகவே, கிராமப்புறங்களுக்கு குறைந்தபட்சம் 75 ரூபாயும், நகர்ப்புறங்களில் 100 ரூபாயும் என்று உயர்த்திக் கொடுத்தால்தான் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஒரு நல்ல திட்டம். போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கு சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்கு காவலர்கள் வீட்டு வசதித் திட்டம் என்று ஏற்படுத்தி அதற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதை



காலாகாலத்தில் கட்டிக் கொடுப்போமேயானால் அவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். அவர்கள் ரிடையர் ஆவதற்குள் கட்டிய வீடுகளில் வாடகைக்கு விட்டு கடனை அடைத்துவிட்டு, ரிடையர் ஆன பிறகு, நிம்மதியாக அந்த வீடுகளில் வசிப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த வகையில் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அவர்கள் தற்போது குடியிருக்கும் வீடுகளில் நாம் என்னதான் சொல்லிக் கொண்டாலும் கூட, தண்ணீர் பிரச்னை இருக்கிறது. ஏனோ தெரியவில்லை அங்கே மாத்திரம் தண்ணீர் வராது. மின்சாரமும் சரியாக இருக்காது. அதை எல்லாம் நாம் செய்தாக வேண்டும். செய்து கொடுப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

அடுத்ததாக, அவர்களுடைய வாஷிங் அலவன்சை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு 10 ரூபாய் கொடுக்கப்பெறுகிறது. அது போதாது. நாம் ஒரு சேலை போட்டால் கூட 2 ரூபாய் வாஷ் பண்ண கூலி கேட்கிறார்கள் என்கிற போது, 10 ரூபாய் அவர்களுக்கு வாஷிங் அலவன்சாக கொடுப்பது மிக மிக குறைவு, அதை 20 ஆக உயர்த்திக் கொடுத்தால் சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல 15 வருஷம், 20 வருஷம், 25 வருஷம் என்று சர்வீஸ் செய்திருக்கும் ஏட்டுகள் ஏ.எஸ்.ஐ. போஸ்டுகளுக்காக பரீட்சை எழுதுகிறார்கள். அப்படி பரீட்சை எழுதினாலும் அந்த வயதான காலத்தில் அவர்களால் பாஸ் செய்ய முடியவில்லை. ஆகவே, 15 வருஷம், 20 வருஷம் சர்வீஸ் உள்ளவர்களுக்கு, அவர்கள் பரீட்சை எழுதினாலும் சரி, எழுதாவிட்டாலும் சரி, அவர்களுக்கு உடனே பிரமோஷன் கொடுத்து, ஏ.எஸ்.ஐ. ரேங்கும் கொடுத்தால், அவர்களுக்குச் சற்று சம்பளமும் அதிகமாகும், நாமும் இந்த உயர்வான பதவியிலே வந்தோம் என்ற மன நிறைவும் அவர்களுக்கு ஏற்படும். ஆகவே, அத்தகைய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த படியாக அந்த போலீஸ் குடியிருப்புகளில் வசிக்கும் போலீஸ்காரர்களின் குடும்பங்களில் உள்ள பெண்கள் அதிகமாக வெளியே வருவது இல்லை. ஆனால் அவர்களுக்கு குடி தண்ணீர் பிரச்னை எழுகிறபோது அவர்கள் வெளியே வந்து பொதுக் குழாய்களில் தண்ணீர் பிடிக்கிறார்கள். அங்கே இருக்கும் பெண்களும் இவர்களோடு சண்டை போடுகிறார்கள். இவர்களுக்குள்ளேயும் சண்டை வருகிறது. போலீஸ்காரர்களின் மனைவிகள், ஏட்டு மனைவியும், சப்-இன்ஸ்பெக்டர் மனைவியும் அங்கே சண்டை போட்டுக் கொண்டால் அது நன்றாகவா இருக்கும்? ஆகையினால் அவர்களுக்கு அவர்களுடைய குடியிருப்பு இடங்களிலேயே குழாய்களைப் போட்டு, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்லாமல் அவர்களுக்கு உபரியாக வருமானம் கிடைப்பதற்கு, பாய் பின்னுதல், வொயர் கூடைகள் போடுதல் போன்ற சிறு சிறு கைத்தொழில்களுக்கு உதவி செய்து, உபரி வருமானத்திற்கு வழிவகை செய்ய கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பால் மாடுகள் வாங்கிக் கொடுத்தால் அது அவர்களுக்கு பல வகையிலும் உபயோகமாக இருப்பதோடு, மாதந்தோறும் கணிசமான அளவு உபரி வருமானம் கிடைக்கவும் வழி ஏற்படுத்தும் என்று கூறிக் கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் விரைவிலே செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கடலிலே ஸ்மக்ளிங் செய்பவர்களை பிடிப்பதற்கும், மீனவர்கள் கடலிலே சண்டை பிடித்துக் கொண்டால், அவர்களை தடுத்து நிறுத்துவதற்கும், போலீஸ்காரர்கள் செல்லக் கூடிய லாஞ்சுகள் 2, 3 ஆண்டுகளாக ரிப்பேராக இருக்கின்றன என்று நான் அறிகிறேன். அதை எல்லாம் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுத்து, அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெண் போலீஸ். அவர்களுக்கு எல்லாவிதமான பயிற்சியும் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்து கொள்ள வேண்டிய நிலைமை. இன்று நாட்டில் எவ்வளவு தான் நல்ல முறையில் சட்டங்கள் செய்தாலும்கூட சில துரோகிகள், இனக் கலவரங்கள் செய்ய வேண்டும் கெடுதலான சூழ்நிலையை உருவாக்க வேண்டும், இந்த அரசுக்கு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டும் என்ற முறையில் செயல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பெண் போலீஸ்க்கு எல்லாவிதமான பயிற்சியும் கொடுப்பதோடு கூட அவர்களுக்கு ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் தனி அறை ஒதுக்க வேண்டும். அப்படி தனி அறைகள் ஒதுக்குவதோடு மட்டுமல்லாமல் ஒரு பெண் எஸ். ஐ. இருந்தால் அவருக்குத் துணையாக இரண்டு மூன்று பெண் போலீஸ் இருக்க வேண்டும் என்று பணிவோடு அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முதலிலே சொன்னேன். போலீஸ்காரர்கள் ஒரு ஊருக்குள்ளே சென்றால் அவர் போலீஸ் என்பதை மறந்துவிட்டு அவர்களை எதிர்க்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. என் தொகுதி பற்றி சொல்கிறேன். என் தொகுதியைப் பொறுத்தவரையில் சிறுவீடு, விளாம்பட்டி என்ற இரண்டு இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி வேண்டுமென்று கேட்டு அரசுக்கு சிபார்சு செய்து வந்திருக்கிறது. அங்கே பல கிராமங்களில் மோட்டார் இருந்தால் ஒரு காகிதம் எழுதிப் போட்டுவிடுகிறார்கள். இந்தத் தேதி இன்ன இடத்திற்கு வாருங்கள் என்று எழுதுகிறார்கள். மோட்டார் மறைந்து விடுகிறது. பிறகு சென்று பார்த்தால் ரூ. 300, ரூ. 500 வைக்க வேண்டும் என்று ஒரு சிட் எழுதி வைத்துவிட்டு அவர்கள் போய் விடுகிறார்கள். அந்த ரூ. 500



கொடுத்தால்தான் அந்த மோட்டார் திருப்பித் தரப்படுகிறது. இந்த நிலையில் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே எங்கெங்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷன்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கே அவற்றை அமைத்துக் கொடுக்க வேண்டும். சிறுவீடு, விளாம்பட்டியில் இப்படிப்பட்ட திருடுகள் நடைபெறாதிருக்க வேண்டுமென்றால் இரண்டுபோலீஸ் ஸ்டேஷன்கள் சாங்ஷன் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்கள் தங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அம்மேநாய்க்கநல்லூர் பற்றிச் சொல்கிறேன். அந்த போலீஸ் ஸ்டேஷன் நான் இருக்கும் பகுதியில் இருக்கிறது. நான் அங்கேதான் அந்தப் பகுதியில்தான் குடியிருந்து வருகிறேன். அங்கே ஏதாவது கேஸ் வந்தால் அங்கே இருக்கக் கூடியவர்கள் யார் வந்தாலும் சரி, அங்கே ஒரு ஏ.எஸ்.ஐ. இருந்துகொண்டு எவ்வளவு கெடுதலைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறார்கள். அங்கே ஒரு கமிட்டி அமைத்தோம் 1978-ல் காமலாபுரம் என்ற ஊரில் ஒரு உயர்நிலைப் பள்ளி வந்தது பெண்களுக்காக. அந்த உயர்நிலைப் பள்ளியை வாங்கிக் கொடுத்துவிட்டும் அங்கே சாராயம் காய்ச்சல் தொழிலை ஒருசில நபர்கள் செய்து வந்தார்கள். அரசாங்க உத்தரவு வந்தவுடன் அதை மாற்றவேண்டும் என்று அங்கே ஒரு கமிட்டி போட்டு, மதுவிலக்குக் கமிட்டி போட்டு, அங்கே சாராயம் காய்ச்சக் கூடாது என்று சாராயம் காய்ச்சுபவரை அழைத்து அவரிடம் சொன்னவுடன் அவர் அதை ஏற்றுக் கொண்டார். அவருக்கு வேறு தொழில் கொடுக்கிறோம் என்று சொன்னவுடன் அவர் அதை ஏற்றுக்கொண்டார். இரண்டு மாதங்கள் சென்ற பின் அந்த அம்மேநாயக்கநல்லூர் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தவர்கள், சப்-இன்ஸ்பெக்டர், ஏ.எஸ்.ஐ. அந்த சாராயம் காய்ச்சுபவனை அழைத்து நீ ஏன் சாராயம் காய்ச்சவில்லை, சாராயம் காய்ச்சாவிட்டால் மண்டையை அடிப்பேன், உன் மேல் கேஸ்கள் போடுவோம் என்று சொல்லி, அவனை சாராயம் காய்ச்ச சொல்லி அவனிடமிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய், தினசரி ரூ. 100 வாங்கப்படுகிறது. இதைப் பற்றி நான் டி.எஸ்.பி.யிடம் பேசிவிட்டேன். அது பத்திரிகையில் பெரிதாக வந்துவிட்டது. போனமுறை சட்டமன்றத்திலும் அதைப் பற்றிப் பேசி அதுவும் பத்திரிகையில் பெரிதாக வந்துவிட்டது. இதைப் பார்த்துவிட்டு உங்களை ஒடுக்குவேன் என்று சொல்லி அந்தக் கிராம மக்களை இன்னாபின்னமாக்கி, சீரழிக்கும் நிலைமையை உருவாக்கிவிட்டார்கள். அங்கே ஒரு எஸ். ஐ. எட்டு மாதங்களுக்கு முன்பு இருந்தார்கள். அவர் காமலாபுரம் வந்தவுடன் அந்த எஸ். ஐ.யை சாராயம் காய்ச்சுபவர் பிடித்து அடித்து மண்டையை உடைத்தார்கள். அங்குள்ள பொதுமக்கள் சென்று அந்த எஸ். ஐ-க்கு பாதுகாப்பு கொடுத்தார்கள். ஆனால் இன்று கேஸ் எப்படி போடப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், அந்த எஸ்.ஐ. வேறு ஊருக்கு மாற்றப்பட்டுவிட்டார். இப்போது அந்த எஸ்.ஐ.யும் அடித்தவனும் சிநேகிதர்களாக ஆகிவிட்டார்கள். ஆனால் ஊர்காரர்கள் மீது

இன்று கேஸ் போட்டு அவர்களை வீடு வீடாக விரட்டி போலீசிடம் கொண்டு வந்து ரெயிட் செய்து கூட்டிக் கொண்டு போகக்கூடிய ஒரு நிலை உருவாகக் கூடிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. இப்படியிருந்தால் பொதுமக்கள் எப்படி போலீஸ்காரர்களை மதிப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அங்கே அந்தோணிசாமி என்பவர் அந்தக் கமிட்டியில் இருந்து தீவிரமாக வேலை செய்தவர். இவர் குடித்துவிட்டு அந்த அந்தோணிசாமியை கொலை செய்யப்போகிறேன் என்று இங்கிருந்து ஓடி முந்திரிக்கொடியை வெட்டிவிட்டான். இதைக் கண்டு ஊர் மக்களும், அந்தோணிசாமி சகோதரியும் ஓடி இவர்கள் முந்திரிக்கொடியை வெட்டுவதற்குள்ளாக பிடித்து விட வேண்டும் என்று சென்று முந்திரிக் கொடியை வெட்டியவுடன் அவனை பிடித்து கையைக்கட்டி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். அம்மேநாயக்கநல்லூர் போலீஸ் ஸ்டேஷனில் என்ன செய்தார்கள்? யார் வெட்டிச் சென்றானோ, யார் குடித்து விட்டு வந்து அக்கிரமம் செய்தானோ அவன் மீது கேஸ் போடாமல் அந்தோணிசாமி மீதும் அவன் மகள்—குழந்தை பெற்று மூன்று நாட்கள்தான் ஆகியிருக்கிறது—மீதும். அவர் மனைவி மீதும் கேஸ் போட்டு ஒரு வாரத்திற்கு முன்பாக அங்கே போலீஸ் ரிசர்வ் பார்ட்டி வரக்கூடிய நிலை ஏற்பட்டு வீடு வீடாகப் புகுந்து 'ஏண்டி வண்டியில் ஏறடீ' என்று சொல்லக்கூடிய அக்கிரமம் நடந்திருக்கிறது. இதை டி.எஸ்.பி.-யிடம் சொன்னேன் டி.எஸ்.பி. நியாயம் செய்ய வேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை. அந்த டி.எஸ்.பி. உதவியை வைத்துக் கொண்டு அக்கிரமம் நடந்தால் ஊரிலுள்ள மக்கள் என்ன நினைப்பார்கள்?

[பிற்பகல் 1-20]

நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே, அவர்கள் மக்களுக்கு நல்ல முறையிலே காரியங்கள் செய்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே, இப்படி போலீஸ்காரர்கள் கொடுமைப்படுத்துகிறார்களே என்று இந்த அரசாங்கத்தின்மீது கெட்ட பெயர் வரக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்று போலீஸ்காரர்கள் செய்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், பட்டிவீரன்பட்டியில், பல நாட்களுக்கு முன் இந்த அருந்ததி மக்கள், 75 பேர்களுக்கு அங்கே வீட்டு மனை கொடுக்கப்பட்டது ஆர்.டி.ஓ. தலைமையில், அரிசன நல இலாகா தாசில்தார் அவர்களால் வீட்டு மனை கொடுக்கப்பட்டது. அவர்கள் அங்கே 64 வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அங்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு நிலத்தைக் கொடுத்தாரே அந்த முதலாளி, அவர் பெரிய பண்ணைக்காரர். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருப்பவர், அந்த நபர் போலீஸ் உதவியோடு, டி. எஸ்.பி.யோடு ஒரு வேன் நிறைய போலீசோடு வந்து, அங்கே வீடு கட்டிக் கொண்டு வசிப்பவர்களைப் பார்த்து என்ன சொல்கிறார் என்றால், நீங்கள் இந்த வீட்டிலே இருக்கக் கூடாது. ஏண்டா, சக்கிலிப் பயல்களா, நீங்கள் உடனே வெளியேறுங்கள் இல்லாவிட்டால், உங்களைக் கொளுத்துவேன், வெட்டுவேன்



என்று, இன் தி பிரசன்ஸ் ஆப் தி போலீஸ், சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்குள்ள அந்த அப்பாவி மக்கள், எம். ஜி.ஆர். நகர் என்று பெயர் போட்டுக்கொண்டு, 64 குடியிருப்புகளைக் கட்டியதற்குப் பிறகு, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கே உருவானால், அவர்கள் யாரிடத்திலே போய் சொல்வார்கள்? ஆகவே, இந்த போலீஸ்காரர்கள், இன்றைக்கு கீழ் மட்டத்திலே இருப்பவர்களை இன்றைக்கு கிராம லெவலிலே உள்ளவர்கள் மரியாதைக் குறைவாக கருதுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் மக்களை மிரட்டுகிறார்கள், விரட்டுகிறார்கள்; தவிர அவர்கள் மக்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வதுதான் என்பதை நான் இந்த அமைச்சர் அவையின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அவர்களுக்கெல்லாம் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்.

யாராக இருந்தாலும், அவர்கள் இன்றைக்கு லஞ்சம் வாங்கினால் அவர்களைக் கடுமையாக தண்டிக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்கினாலும் அல்லது வேறு யார் லஞ்சம் வாங்கினாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். போலீஸ்காரன் இரண்டு ரூபாய் வாங்கிவிட்டான் என்பதை நாம் பெரிதாகச் சொல்கிறோம் அப்படிச் சொல்லிவிட்டு, அரசியல் வாதிகள் லஞ்சம் வாங்கினால் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். வில்லேஜ் ஆபீசர்கள் அதாவது கிராம உத்தியோகஸ்தர்கள் எந்தெந்தத் துறையிலே லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதை ஆராய்ந்துபார்த்து இதையெல்லாம் தடுக்க வேண்டும். அதேபோல், அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்கினால் அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்கிறார், அவரது அமைச்சர் அவை நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பார்த்து, அவர்கள் தவறான முறையிலே சொத்து சேர்த்திருந்தால், அதைப் பிடுங்க வேண்டும் என்பதைப் பணிவோடு, அன்போடு கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தமிழக காவல் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கையையும், கொழுந்துவிட்டு எரியும் இனக் கலவரமும், ஜாதிக் கலவரமும், அரசியல் கலவரங்களும் நாட்டின் பிற பகுதிகளில் நடந்து வந்தாலும், அவைகளையெல்லாம் இந்த தமிழக மக்களைத் தீண்டவிடாமல் காத்து வருகின்ற, தமிழகத்தை ஒரு தண்ணீர் தடாகமாக வழி நடத்திச் செல்லுகின்ற புரட்சித் தலைவர் அவர்களை இந்த நாட்டு மக்கள், தமிழ் நாட்டு மக்கள் மட்டும் அல்லாமல், இந்தியாவிலே இருக்கின்ற அரசியல் சார்புற்ற அத்தனை மக்களும் போற்றிப் பாராட்டி வருகிறார்கள் என்பதை நான் கடமை உணர்வோடு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இன்று தமிழகத்தில் காவல் துறையினர் ஒரு காலத்திலே ஸ்காட்லாந்து போலீசுக்கு நிகராக, இங்கிலாந்து ஸ்காட்லாந்து யார்ட் என்று போலீஸ் துறை புகழ் பெற்று, ஈடு இணையற்ற பணிகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்வோம். ஆனால், கடந்த காலங்களில் அரசியல் தலையீட்டின் காரணமாகவும், அரசியல்வாதிகள் அங்கு ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று நினைத்ததன் காரணமாகவும், சில செல்வாக்கு மிக்கவர்கள் தங்களுடைய செல்வாக்கை அங்கு காவல்துறையிலே காட்டிக் கொள்ள வேண்டுமென்று, அதற்கு தங்களை ஆட்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணி, தங்களை ஈடு படுத்திக் கொண்டதன் காரணமாகவும், அந்தத் துறைக்கு இருந்த சிறப்பு ஓரளவு குறைந்தது என்பதை நாம் மறைத்துவிட முடியாது. இன்றைக்கு மீண்டும் அவர்கள் இழந்த புகழை, புகழை இழந்து விட்டார்கள் என்று கூற முடியாது, குறைந்து விட்ட அந்தப் புகழை நிலைநிறுத்துவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பல சிறப்புத் திட்டங்களை, அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை இன்று இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை அரசியல் தலைவர்களும், எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இன்று ஒரு பக்கம் காவல் துறையினர் குற்றங்கள் நடவாமல் தடுக்க வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலும்கூட, நாட்டிலே குற்றங்களைத் தூண்டுவதும், குற்றங்கள் நிகழ்வதையே தங்களுடைய அரசியல் ஆதாயமாகக் கருதக் கூடியவர்களும், ஒரு பக்கம் அரசியல் பேரால், சங்கங்களின் பேரால், ஜாதி இனங்களின் பேரால் நடத்தி வருகிறார்கள் என்பதை நாம் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

குற்றங்கள் நிகழ்ந்த பின்னால் தான் காவல்துறைக்கு நாம் தடுக்கிற பொறுப்பினை கொடுக்கிறோம். குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களை தண்டிக்கிற பொறுப்பினை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதில் எந்த குறைபாடும் கிடையாது. ஆனால் குற்றம் என்று தெரிந்தே அதை வேண்டுமென்றே தூண்டுவதற்கான ஒரு சக்தி தமிழ் நாட்டில் இன்று மிகுந்து வருகிறது என்பதை நாம் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தச் சங்கங்கள் என்ற பெயரால் படித்தவர்கள் இருக்கிற சங்கங்கள் ஆனாலும், சுயநலமிகள் தங்கள் செல்வத்தை காத்துக் கொள்வதற்காக விவசாய சங்கத்தைப் போன்றவைகள் போராட்டங்கள் நடத்துகிறபோது குற்றங்களை தூண்டி விடுகிறார்கள். இதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். சங்கங்கள், அரசு அலுவலர் சங்கங்கள் கூட இருக்கிறது. அவர்கள் சாதாரணமாக ஒரு கோரிக்கையை வைத்து அந்த கோரிக்கையை கோட்டைக்கு அனுப்பி, உடனே அடுத்த நாள் போராட்டம், மறியல் என்று துவங்குகிறார்கள். இன்று அவர்கள் நடத்துகிற போராட்டங்கள் காரணமாக, அரசியல்வாதிகள், அரசியல் கட்சி போராட்டத்திற்கு ஓரளவு மவுசு இல்லாமல் தமிழ் நாட்டிலே போய் விட்டது. அந்த அளவுக்கு எதற்கெடுத்தாலும் மறியல் நடத்துகிறோம் என்றும், சிறைக்கு செல்வதை அரசாங்க ஊழியர்கள் கூட ஒரு சர்வ சாதாரணமாக நிகழ்வாக அவர்கள் கருதிக் கொண்டிருக்கிற நிலை இங்கு ஏற்பட்டிருக்கிறது. காரணம் படித்து ஆட்சி பொறுப்பிலே இருக்கிறவர்கள் சர்வ சாதாரணமாக சிறை செல்வது குற்றமில்லை, பாவமில்லை என்று கருதுகிற அளவிற்கு நிலைமைகள் இருந்தால் அதை பார்க்கிற பாமரமக்கள் ஏழை எளிய மக்கள் அவர்களுடைய நிலை, குற்றங்களை, காவல் துறையினரை பார்த்து அஞ்சுகிற நிலை மாறிவிடும் என்பதை இன்று நாம் அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும். அவர்கள் உரிமைக்காக போராடட்டும். அதை யாரும் தடுக்க முடியாது. பொறுப்பிலே இருக்கிறவர்கள் முக்கியமாக அரசாங்க ஊழியர்கள். அவர்கள் அரசு பணியில் இருக்கிறோம், அவர்களும் சேர்ந்து தான் இந்த நிர்வாகத்தை நடத்துகிறார்கள், எந்த ஆட்சி நடந்தாலும் அவர்களுக்கு இந்த பொறுப்பு இருக்கிறது, கடமை இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்கிற வகையில் அரசு நல்ல தீவிரமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்று வழக்கு மன்றங்களில் நடக்கிற வழக்குகள் குற்றவாளிகளை கண்டுபிடித்து பின்னால் அவர்கள் மீது சார்ஜ் ஷீட் என்று சொல்லப்படுகிற அந்த குற்ற அறிக்கையை போடுவதற்கு கூட காவல்துறையினர் மிக நீண்ட காலம் எடுத்துக் கொள்கிறார்கள். அதன் காரணமாக குற்றவாளிகள், குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்னால் பல ஆண்டு காலம் வழக்கு மன்றங்களில் சென்று வரக்கூடிய துர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள். இதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வழக்குகளை நடத்துவதற்கு ஒரு போலீஸ் அதிகாரியை நியமிக்க வேண்டும். அவர்கள் யார் வழக்குகள் போட்டாலும் அந்த வழக்குகளின் தன்மைகள் அறிந்து வழக்கு மன்றங்களில் அந்த பணியை எடுத்துக் கொள்ள வேண்டும். இதை தவிர்த்தால் ஒழிய குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய நிலை நிச்சயமாக, அவர்களுடைய கஷ்டங்கள் நீக்க முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

அதே நேரத்திலே காவல் துறையில் இருக்கிற சில கீழ் மட்டத்தில் இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் அடிக்கடி மாறுதலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எனது பகுதியில் இருக்கிற துடியலூர் என்று ஸ்டேஷன். அந்த போலீஸ் ஸ்டேஷனில் கடந்த மூன்று மாதத்தில் ஐந்து சப் இன்ஸ்பெக்டர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் எதுவாக இருந்தாலும் கூட, அவர்கள் பணியை எப்படி ஏற்றுக் கொண்டு நடத்த முடியும்? அது மிகுந்த பரந்த பகுதி. அந்த பகுதியை தெரிந்து கொள்வதற்கே ஒரு சப் இன்ஸ்பெக்டருக்கு குறைந்தது ஆறு

மாதங்கள் பிடிக்கும். அவர்கள் காலத்தில் சில வழக்குகளை அவர்கள் தொடுக்கிறார்கள். அந்த வழக்குகள் தன்மை அடுத்து வருகிற சப் இன்ஸ்பெக்டர்களுக்கு தெரியாது. ஆகவே அடிக்கடி மாறுதலுக்கு உட்படுத்துவதை தடுக்க வேண்டும். அவர்களுக்கும் குடும்பங்கள் என்று இருக்கும். அவர்களும் பல கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஆகவே காரணமின்றி அரசியல் தலையீடு என்று நான் சொல்ல மாட்டேன்; அதிகாரிகள் மட்டத்தில் அவர்களை தேவையில்லாமல் செய்கிற மாறுதல்களை தவிர்க்க வேண்டும்.

இன்று கோவை மாநகராட்சியாக ஆகி இருக்கிறது. மதுரை மாநகராட்சியான பின்னாலும் கூட அந்த மாநகராட்சிக்குரிய கமிஷனர் அந்தஸ்தில் ஒரு போலீஸ் அதிகாரியை நியமிக்கவில்லை. அதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. ஆகவே கோவைக்கும், மதுரைக்கும் கமிஷனர் அந்தஸ்தில் போலீஸ் அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் கூட வற்புறுத்தியிருக்கிறார், தொண்டாமுத்தூர் தொகுதியில் பலகாலமாக கேட்டுக்கொண்டு வருகிறோம், ஆலந்துறை என்பது சிறுவாணி அடிவாரத்தில் உள்ள பகுதி. அந்தப் பகுதியிலிருந்து 20 கிலோ மீட்டர் வரையிலே காவல் நிலையம் இல்லை. ஆகவே அங்கே ஒரு காவல் நிலையத்தினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவை நகராட்சியில் என்.ஜி.ஓ. காலனியில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. இடைப்பட்ட பகுதியில் எந்தக் காவல் நிலையமும் இல்லை. கண்ணப்ப நகர், மாணிக்க வாசகர் நகர், சாயிபாபா நகர் ஆகிய இடங்கள் குற்றவாளிகளுக்குப் புகலிடங்களாக இருக்கின்றன, ஆகவே அங்கேயும் காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981ஆம் ஆண்டு மே திங்கள் 6ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

271. பனங்கற்கண்டைப் பொறுத்த வரையில், திருநெல்வேலி மாவட்டத்தை அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் தேதியிடப்பெற்ற 1454ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

272. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் ஆறாம் ஆண்டறிக்கையும் கணக்குகளும் 1979–80 (தமிழ்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

187. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1980–81. (தமிழ், ஆங்கிலம்).

188. தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த ஆய்வுரை, 1980–81. (தமிழ், ஆங்கிலம்).

189. ‘ தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, லிமிடெட் ’— வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு—1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

190. ‘ தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ’ பற்றிய குறிப்பு, 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

191. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு—1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளில் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

192. ‘ தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ’ என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

193. ‘ டான்பெட்—தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம் ’ என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

194. ‘தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மீதான அறிக்கை’ குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1980–81.

## இணைப்பு I

[45-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாடு காவல் துறை

### 1980-81 ஆம் ஆண்டுக்குரிய ஆய்வுரை.

சட்டம் ஒழுங்கு அமைதியை நிலை நாட்ட குற்றங்கள் நடைபெறாவண்ணம் தடுத்தல், குற்றங்களை துப்பு துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு ஆற்றும் பொதுவான பணி ஆகியவற்றைத் தமிழ்நாடு காவல் துறை, தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இப் பணிகளை ஆற்றும்போது எதிர்நோக்கவேண்டியிருந்த சவால்களைச் சமாளித்ததுடன் இயற்கைச் சீற்றங்கள் நேர்ந்தபோது அவற்றுக்கு ஈடு கொடுத்தும் தங்கள் கடமையை நிறைவேற்றியுள்ளது.

2. தற்போதுள்ள காவல் படைப் பணியாளர் அமைப்பு தொடர்பான விவரங்கள் I ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. படைக்கலந் தாங்கிய காவற்படை அணிகள்.—

இம்மாநிலத்தில் படைக்கலந் தாங்கிய காவற்படை அணிகள் ஐந்து உள்ளன. ஒவ்வோர் அணியும் ஆறு இயங்கும் பிரிவுகளையும் ஒரு தலைமையிடப் பிரிவையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மேற்கூறிய ஐந்து அணிகளில் ஆவடியில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி (II ஆம் அணி) மத்திய அரசின் பொறுப்பின்கீழ், புது டில்லியில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் நாள் முதல் பிற மாநிலப் பணிகளைக் கவனிப்பதற்கென முகமையில் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் 20 சதவீதப் பணியாளர்கள் இல்லாமலேயே இப் பிரிவு அரையாண்டுக் காலம் வரை செயல்பட்டது. வளர்ந்து கொண்டு வரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக இரண்டு புதிய தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4. பயிற்சியும் தேர்வும்

(1) தமிழ்நாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல் பணிப் பதவிகள் 130 ஆகும்.

(2) காவல் துறை உதவி சூப்பிரண்டுகள் இருவர் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் தங்கள் செயல்முறைப் பயிற்சியை முடித்தபின்னர் காவல் துறைத் துணைக் கோட்டங்களில் தனித் தனியாகப் பொறுப்பேற்கும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.



## இணைப்புகள்

(3) தமிழ்நாடு காவல் பணிக்கென ஐ.பி.எஸ். பதவித் தரத்தில் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்காக 1980 டிசம்பரில் சென்னையிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரியில் சேர்ந்தார்.

(4) ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் 1980 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாளன்று பிற்பகல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். தமிழ்நாடு காவல் பணியைச் சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் 1980 ஆம் ஆண்டு, மே திங்கள் 27 ஆம் நாள் முதற்கொண்டு மகாராட்டிரக் காவல் பணிக்கு மாற்றப்பட்டார். தமிழ்நாடு காவல் பணிக்கென முதலில் நியமிக்கப்பட்ட மற்றுமொரு ஐ.பி.எஸ். அதிகாரி 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் முதல் பீகார் மாநிலக் காவல் பணிக்கு மாற்றப்பட்டார்.

(5) (i) நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகள் (வகை 1) இருவர், சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்த பின்னர் ஆறு திங்கள் காலத்துக்குச் செயல் பயிற்சி பெறும் பொருட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

( ) காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகள் ஐவர், புது டில்லியில் "குற்றத் தடய அறிவியல் நினைவு கூர்" பயிற்சி பெற்றனர். இந்த ஆண்டில் புது டில்லியில் நடைபெற்ற முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்புக் கருத்தரங்கில் காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகள் இருவர் பங்கு கொண்டனர்.

(6) ( ) ஐதராபாதிலுள்ள மத்திய துப்பறியும் பயிற்சிப் பள்ளியில் "அறிவியல் முறையில் புலனாய்வுசெய்தல்" பற்றிய 3 வார கால நினைவுகூர் பயிற்சிக்கு காவல் துறை இன்ஸ்பெக்டர்கள் இருவரும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் முகமையில் அனுப்பப்பட்டனர்.

( ) சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டு கால நிறுவன பயிற்சி பெற்றுவந்த, நேரடியாக நியமனம் செய்யப்பட்ட காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் இருநூற்று எண்பத்தேழு பேர், 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தனர். பின்னர் ஆறு திங்கள் காலத்துக்கு செய்முறை பயிற்சி பெறும் பொருட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆவடி, ரெஜிமென்டல் நிலையத்தில் ஓராண்டு காலப் பயிற்சி பெற்றுவந்த நேரடி நியமனம் செய்யப்பட்ட காவல் துறை ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் இருபத்திரண்டு பேர், 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் பயிற்சியை முடித்தனர். பயிற்சியை முடித்த பின்னர் சென்னை மாநகரக் காவல்பிரிவிற்கும் மற்றும் மாவட்டக் காவல் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டனர்.

(11) காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் 150 பேரை நேரடி நியமனம் செய்யும்படி அரசு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளன்று ஆணை பிறப்பித்துள்ளது. அவர்களை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5. பெண் காவலர்கள் பிரிவு.

(1) 1973 டிசம்பரில் பெண் காவலர்கள் பிரிவு ஒன்று முதன் முதலில் சென்னை மாநகரில் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவில் தற்போது சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர்கள் 22 பேர் உள்ளனர்.

(2) 1975-ல், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பெண் பயணிகளைச் சோதனையிடுதல், பாதுகாப்பு, விமானக் கடத்தலை தடுத்தல் ஆகியபணிகளைக் கருதி பெண் காவலர் பிரிவு தொடங்கப்பட்டது. 1979-ல், இப்பிரிவில் பெண் காவலர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. தற்போது இப்பிரிவில் பெண் சப் இன்ஸ்பெக்டர்கள் 13 பேரும், பெண் காவலர்கள் மூவரும் உள்ளனர்.

(3) 1976-ல் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் பெண் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், பெண் தலைமைக் காவலர் ஒருவர், பெண் காவலர்கள் 12 பேர் அடங்கிய பெண் காவலர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

(4) 1979-ல் ஏனைய விமான நிலையங்களிலும், பாதுகாப்பிற்காகவும் விமானக் கடத்தல் தடுப்புப் பணிக்கும் திருச்சிர ப்பள்ளி விமான நிலையத்திற்கு 2 பெண் சப்-இன்ஸ்பெக்டரும், கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கு 2 பெண் சப்-இன்ஸ்பெக்டரும், மதுரை விமான நிலையத்திற்கு ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டரும் கொண்ட பெண் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

(5) ஆய்வாண்டில், இம்மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய காவல் நிலையங்களிலும் தனி பெண் காவலர் பிரிவு ஏற்படுத்துவதற்காக 60 பெண் சப் இன்ஸ்பெக்டர்கள், 60 பெண் தலைமை காவலர்கள், 600 பெண் காவலர்கள் கொண்ட கூடுதல் பணியாளர்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(6) விமான நிலையங்களில் பாதுகாப்புப் பணிக்காக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 18 பெண் சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுடன் 60 புதிய பெண் சப் இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு ஆள் தேர்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2ஆம் நாள் முதல் சென்னை, காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுகின்றனர்.



(7) ஆய்வாண்டில் அனுமதிக்கப்பட்ட பெண் தலைமைக் காவலர்களின் 60 கூடுதல் பதவிகளில், 30 இடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்படும். எஞ்சியுள்ள 30 இடங்கள் தற்போதுள்ள பெண் காவலர்களிடையேயிருந்து பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நிரப்பப்படும்.

(8) 600 புதிய பெண் காவலர்கள் பதவிகளுக்கும் 30 புதிய பெண் தலைமைக் காவலர் பதவிகளுக்கும் ஆள் தேர்வுப் பணி முடிந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி வாய்ந்த நபர்கள் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ஆம் நாள் முதல் வேலூரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

6. பயிற்சிகள்.

காவல் துறையில் இவ்வாய்வாண்டில் உயர் அதிகாரிகளுக்குப் பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக நிர்வாக மற்றும் செயல் முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. 30 ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கும் இரண்டு மாநில காவல் பணி அதிகாரிகளுக்கும் குறைந்த பட்சம் 2 நாட்கள் முதல் அதிக பட்சம் 14 வாரங்கள் வரை ஐதராபாத், புது டில்லி, மவுண்ட் அபு, பெங்களூர் போன்ற இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

7. துப்பறியும் நாய் புலனாய்வு அணி.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் துப்பறிவதற்கெனப் புலனாய்வியல் நாய் அணிகள் உள்ளன. திருச்சிராப்பள்ளியிலுள்ள பிரிவு 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாள் முதல் அமைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரையிலான கால அளவில் 630 வழக்குகளில் துப்பறியும் நாய்கள் உதவின. இவற்றில், 249 வழக்குகளில் அவை துப்புத் துலக்கிய விவரங்கள் பயனளித்தன.

8. குற்ற நிகழ்வுகள்.

1979, 1980ஆம் ஆண்டுகளிலும் 1981ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் முதல் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாள் வரையிலான சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பு நோக்குப் புள்ளி விவர அறிக்கை வருமாறு :

| குற்றங்களின் வகைப்பாடு. | 1979 | 1980 | 1—1—81 முதல் 28—2—81 வரை. |
|---|---|---|---|
| ஆதாயத்திற்காகக் கொலை செய்தல் .. .. .. | 28 | 53 | 11 |
| கொள்ளை .. .. .. | 36 | 60 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழிப்பறி | .. .. .. | | 254 | 271 | 30 |
| கன்னக் களவு | .. .. .. | | 9,637 | 9,410 | 1,417 |
| பெரிய திருட்டுகள் | .. .. | | 25,406 | 25,991 | 3,979 |
| சிறிய திருட்டுகள் | .. .. | | 2,069 | 2,061 | 259 |
| கால்நடைத் திருட்டுகள் | .. | | 1,241 | 1,241 | 231 |

9. குற்றங்களைத் துப்புப் துலக்குதல்

சீரிய முறையிலும் திறமையாகவும் குற்றப் பிரச்சினையை சமாளிப்பதற்கு, தமிழ் நாடு காவல் துறை அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டுள்ளது. எவ்வித தடங்கலுமின்றி வழக்கு கள் பதிவு செய்யப்பட்டன. எனவே விசாரணை வழக்குகள் தண்டனையில் முடிந்த வழக்குகள் இரண்டையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் தண்டனையில் முடிந்த வழக்குகளும் விசா ரணையில் உள்ள வழக்குகளும் 1979ஆம் ஆண்டில் 47 6 சதவீதம் என்றிருக்க, 1980ஆம் ஆண்டில் இது 59.1 சதவீதமாகியது.

| | 1979 | 1980 |
|---|---|---|
| குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படை யில் துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது .. .. | 26·0 | 29.4 |
| தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள் விசா ரணை நடைபெறுகின்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கையில் துப்புத் துலக் பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது .. .. .. .. | 47·6 | 59·1 |

10. களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டல்.

1979ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சொத்துக்களில் 41.9 சதவீதம் மீட்கப்பட்டன. ஆனால் 1980ஆம் ஆண்டில் களவா டப்பட்ட சொத்துக்களில் 47·8 சதவீதம் மீட்கப்பட்டு விட்டன. குற்றங்கள் தொடர்பாக அறிவியல் முறையில் புலனாய்வு செய் தல், மாநில விரல் ரேகைப் பதிவு கழகம், எல்லா மாவட்டங்களி லுள்ள ஒற்றை விரல் பதிவு பிரிவுகள், தமிழ்நாடு குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம், மாவட்டங்களிலுள்ள குற்றத் தடய பொருள் அறிவியல் நடமாடும் ஆய்வுக் கூடங்கள் போன்ற அமைப் புகள், காவல் துறை வான் தந்தி அமைப்புகள், துப்பறியும் நாய் அணிகள், காவல் துறை கணக்கீட்டுப் பொறிப் பிரிவு ஆகியவற்றை புலனாய்வுப் பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின் றனர். அவர்கள் தங்கள் பணியில் அதிக வெற்றியைக் கண்டுள் ளனர்.



11. காவல் துறையினரால் கண்டறியப்பட்ட முக்கியமான வழக்குகள் சில வற்றின் விவரங்கள்.

I ஆதாயத்திற்காகக் கொலை செய்தல்

(1) 1980ஆம் ஆண்டு சனவரி திங்கள் 11ஆம் நாளன்று செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம் பல்லாவரத்தைச் சேர்ந்த அச்சு தன் என்ற பிரபு (த.பெ. இராமச்சந்திர நாடார்) என்பவர், சென்னை, பட்டினப்பாக்கத்தில் உள்ள குடியிருப்பில் புகுந்து திருமதி வசந்தியைக் கொலை செய்து ரூ. 9,000 மதிப்புள்ள நகைகளைத் திருடிக்கொண்டு தப்பித்து விட்டார். இதுகுறித்து மைலாப்பூர் காவல் நிலையத்தில் இ.பி. கோ. 302, 380ஆம் பிரிவுகளின்கீழ் 77/80ஆம் எண்ணுள்ள வழக்கு ஒன்று பதிவுசெய்து புலனாய்வு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட அச்சுதனை, சென்னை மாநகர்க் காவலர்கள் 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21ஆம் நாளன்று கைது செய்து, திருடப்பட்ட சொத்துக் களை மீட்டனர். குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இவருக்கு சென்னை முதல் வகுப்பு கூடுதல் செஷன்ஸ் நீதிபதி இ.பி.கோ. 302ஆம் பிரிவின்கீழ் ஆயுள் தண்டனையும் இ.பி.கோ. 449, 397ஆம் பிரிவுகளின் கீழ் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கவும் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளிட்ட 44/80 ஆம்எண்ணுள்ள வழக்கில் தீர்ப்பளித் துள்ளார்.

(2) 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாளன்று இரவு சுமார் 7-30 மணிக்கு மைலாப்பூர், வடுகு இடையர் தெருவில் நாகராஜன் என்பவரும் ஏனைய இருவரும் சேர்ந்து மூன்று பெண்களைச் சந்தித்துப் பேசி, அவர்களில் ஒருவர் முகத்தில் மிளகாய்ப் பொடியைத் தூவினர். அவர்களில் ஒருவரின் கழுத் திலிருந்த தங்கத் தாலியை நாகராஜன் பறித்துக்கொண்டு தப்பித்து ஓடும்போது அவரைப் பிடிக்கச் சென்ற மகாதேவ னுக்குக் காயத்தை ஏற்படுத்தியதோடு, பிடிக்கச் சென்ற டாக்சி ஓட்டுநர் திரு. தேவனைக் கத்தியால் குத்திவிட்டார். இதனால் தேவன் இறந்துவிட்டார். பின்னர், நாகராஜன் பொது மக்க ளால் பிடிக்கப்பட்டார். மற்றும் கத்தி, திருடப்பட்ட பொருள் களில் சிலவற்றையும் கைப்பற்றினார்கள். மைலாப்பூர் காவல் நிலையத்தில் இ.பி.கோ. 392, 302, 324, 393, 394, 414 பிரிவு களின் கீழ் குற்ற எண் 1465/80-ன்கீழ் வழக்கொன்று பதி செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட மூவர் மீதும் 1980-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் நாளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு சைதாப் பேட்டை XI ஆம் பெரு நகர் மாஜிஸ்திரேட்டின் முன் விசாரணை யில் உள்ளது. இச்சம்பவத்தில் வீர மரணம் எய்திய டாக்சி ஓட்டுநர் திரு. தேவன் அவர்களைப் பாராட்டி ரூ. 10,000 ரொக்கப் பரிசையும் அண்ணா நினைவுப் பதக்கத்தையும் அரசு அளித்துள்ளது.

*(3)* மைலாப்பூர் கிருட்டிண பிள்ளையின் மகனான ராஜன் என்பவர் முருகன் என்றும் சீனிவாசன் என்றும் அழைக்கப்படுபவர், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12ஆம் நாளன்று இரவில் கீழ்ப்பாக்கம் பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலையில் இருக்கும் வீட்டில் தென் மேற்கு அறையில் திருமதி இராசலட்சுமி என்னும் மூதாட்டி தனியே தூங்கிக்கொண்டிருக்கையில், அவ்வறையினுள் நுழைந்தார். இராஜன் சன்னல் கம்பிகளை ரம்பம் கொண்டு வெட்டி அறையினுள் நுழைந்து இராசலட்சுமியைக் கழுத்தை நெறித்துக் கொன்று அவர் அணிந்திருந்த ரூ. 30,000 பெறுமான தங்க வைர நகைகளைக் களவாடிச் சென்றுவிட்டார். இ.பி.கோ. 302, 379 பிரிவுகளின்கீழ் 2048/80ஆம் எண்ணுள்ள குற்ற வழக்கொன்று கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் பதிவு செய்து, புலன் விசாரணை செய்யப்பட்டது. சென்னை மாநகர் காவலர் குற்றஞ் சாட்டப்பட்ட ராஜனை 1980ஆம் ஆண்டு சூலை திங்கள் 16-ம் நாளன்று கைது செய்து களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டனர். குற்றஞ் சாட்டப்பட்டவரை இரண்டாம் கூடுதல் குற்றவியல் நீதிபதி குற்றவாளியெனத் தீர்மானித்து ஆயுள் தண்டனை விதித்துள்ளார்.

II. தெய்வச் சிலைகள் திருட்டு.

தஞ்சாவூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள திருவிழாக்குடி ஆலயத்திலிருந்து 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ம் நாளன்று பல இலட்சம் ரூபாய்கள் பெறுமான விலை மதிப்புக்கடங்காத நடராசர் சிலையொன்று களவாடப்பட்டது. குத்தாலம் காவல் நிலையத்தில் இ. பி. கோ. 380, 457 பிரிவுகளின் கீழ் குற்ற எண் 46/78-ல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9-ஆம் நாளன்று உள்ளூர்க் காவல் துறையினர் அவ்வழக்கினை துப்புக் காணப் பெறாததெனக் குறிப்பிட்டனர். தொடர்ந்து நடந்த புலன் விசாரணைக்குப் பின்னர் மாநில குற்றவியல் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) சிலைத் திருடுகளில் கை தேர்ந்த அவப் பெயராளியான சி.வி. இராமன் என்பவரையும் ஏனைய 8 பேர்களையும் கைது செய்தது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 1974 ஆம் ஆண்டுக்கும் 1979 ஆம் ஆண்டுக்கும் இடையே நடந்த 15 தெய்வச் சிலை திருட்டுகளுக்கும் அவர்களே பொறுப்பெனக் கண்டுபிடிக்கப்பட்டது. இது வரை 5 சிலைகள் மீட்கப்பட்டுள்ளது. பழங்கலைப் பெருமை வாய்ந்த நடராசர் சிலையும் வேறு 5 சிலைகளும் இந்தியாவை விட்டு வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்டு நியூயார்க்கில் வசிக்கும் திருமதி டி. வீனர் என்ற அருங்கலைப் பொருள் வாணிபம் செய்பவரிடம் இருப்பதாகத் தெரியவந்தது. குற்றப் புலனாய்வுத் துறையைச் சார்ந்த புலனாய்வுக் குழு ஒன்றை அமெரிக்காவுக்கு அனுப்பி சிலைகளை மீட்க நடவடிக்கைகள் எடுக்க -டுகின்றன.



III. மின்கம்பித் திருட்டுகள்.

*(1)* பெரியார் மாவட்டத்தில் 1979—80 ஆண்டுகளில் நடைபெற்ற மின்கம்பித் திருட்டுகள் தொடர்பாக கேரளாவைச் சேர்ந்த உள்ளூரிலில்லாத முன்னாள் குற்றவாளி கிருட்டிணமூர்த்தி என்பவரை 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 1 ஆம் நாளன்று ஈரோடு பேருந்து நிலையத்தில் தனிக் காவலர் குழு கைதுசெய்தது. மின் கம்பிகளைத் திருடியது சம்பந்தமாக அவர்மீது 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருடப்பட்ட அத்தனை மின் கம்பிகளும் அவர் கூறியதன்பேரில் மீட்கப்பட்டன. குற்றஞ் சாட்டப்பட்ட அவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஈரோடு காவல் நிலையத்தின் குற்ற எண். 263/80-ன் கீழ் ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

*(2)* செங்கற்பட்டு மேற்குக் காவல் துறையினர் கனகம்மா சத்திரம் காவல் நிலைய குற்ற எண் 92/80-ன் படி உள்ளூர்க் கேடி பட்டியலில் இடம் பெற்ற நாகையாவின் தலைமையில் இயங்கிய 4 முன்னாள் குற்றவாளிகளைக் கைது செய்தது குறிப்பிடத்தக்கது. அது பல மின்கம்பித் திருட்டுகளின் வரிசையினைப் புலனாய்வு செய்தலுக்கு அடிகோலியது. தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த 10,000 ரூபாய் மதிப்புள்ள செம்பு, அலுமினியக் கம்பிகள் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டோருக்கு திருத்தணி நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

IV. கார் திருட்டுகள்.

சென்னை மாநகர் காவல் துறையினர் கார் திருடும் இரண்டு கும்பல்களைக் கைது செய்தனர். புதுப் பேட்டையைச் சேர்ந்த சையது நூர் என்பவரின் தலைமையில் 8 குற்றவாளிகளடங்கிய கும்பலொன்று தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களிலும் 41 கார்கள், 3 ஸ்கூட்டர்கள், 1 மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைத் திருடியது. அன்வார் என்பவரின் தலைமையில் இயங்கிய ஆறு குற்றவாளிகளடங்கிய மற்றொரு கும்பல் 11 கார்களைத் திருடியது தெரியவந்தது. இவ்வழக்குகள் புலன் விசாரணையிலுள்ளன. திருடப்பட்ட கார்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நீதி மன்றங்கள் மூலம் உரிமையாளர்களிடம் திரும்ப வழங்கப்பட்டன.

V. வழிப்பறி வழக்குகள்.

*(1)* மாவட்ட இடையிலான 10 குற்றவாளிகளடங்கிய கும்பலொன்றை செங்கற்பட்டு கிழக்கு மாவட்டக் காவல் துறையினர் கைது செய்தனர். இக்குற்றவாளிகள் பரங்கிமலைப் பகுதியில் 21 வழிப் பறிக் கொள்ளைகளையும், கன்னக் களவுகளையும் செய்துள்ளனர். இவ்வழக்குகள் தொடர்பாக ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. பரங்கி மலைக்

காவல் நிலையத்தில் இ.பி.கோ. 401 பிரிவின் கீழ் ஒரு கும்பல் வழக்கு 853/80ஆம் எண்ணில் பதிவு செய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டோர் பூந்தமல்லி உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ரேடின் முன்னால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனா.

(2) குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய ஒரு தனிக்குழு, தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் நடந்த 10 வழிப்பறிக் கொள்ளை வழக்குகளுக்குக் காரணமான 8 குற்றவாளிகளை 1980 டிசம்பரில் கைது செய்தனர். ரூ. 1,76,000 பெருமான ரொக்கமும் நகைகளும் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

## VI. நரபலியிடுதல் தொடர்பான வழக்கு.

திருச்சிராப்பள்ளி வேப்பந்தட்டை கிராமத்தில் ஒரு வீட்டு மனையிலிருந்த அசுத்த ஆவியை அமைதிப்படுத்த பச்சிளம் பாலகர்கள் இருவர் கோரமாகக் கொல்லப்பட்டு நரபலியிடப்பட்டதை 1980 ஆம் ஆண்டில் மாநிலக் குற்றப் பிரிவு, புலனாய்வுத் துறை நன்முறையில் புலனாய்வு செய்து கண்டுபிடித்தது. முக்கிய குற்றவாளியும் பள்ளி ஆசிரியருமான வேலுசாமியும் அவருடைய இரண்டு கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களுள் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொள்பவராக எடுத்துக்கொள்ளப்பட்டார். இவர்களுக்கு எதிரான வழக்கு திருச்சிராப்பள்ளி அரம்பாலூர் காவல் நிலையக் குற்ற எண் 144/80 இ.பி.கோ. 363, 302, 120-பி பிரிவுகளின் கீழ் விசாரணையில் உள்ளது.

## VII. ஏமாற்றுதல்.

குற்றம் சாட்டப்பட்ட கணேச அய்யர் பல புனைப் பெயர் கொண்டவர். தன்னை இந்து மதத்திலும் கிறித்தவ மதத்திலும் புலமை பெற்றவர் என்று அவர் கூறிக்கொள்கிறார். பி.எச்.டி. பட்டம் பெற்றவர் என்றும் கூறிக்கொள்கிறார். அவர் 1975 வரையிலான 5 ஆண்டுகளில் சென்னை ஆர்ச் பிஷப்பிடம் இந்தியாவில் கிறித்தவ மதத்தின் தோற்றம் பற்றிய உண்மையான ஆவணங்களைத் தருவதாகக் கூறி 15 லட்சம் ரூபாய் வரையில் மோசடி செய்துள்ளார். போலி ஆவணங்களடங்கிய நிழற்பட அச்சுப்படிகளை பழங்கால இந்து மத ஆவண மூலங்களெனக் கூறி ஆர்ச் பிஷப்பிடம் அவர் அளித்திருக்கிறார். சென்னை, ஆர்ச் பிஷப் கொடுத்த புகாரின் பேரில் இ.பி.கோ. 406, 420, 471 பிரிவுகளின்கீழ் 3/80 ஆம் குற்ற எண்ணில் குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு அதிகாரிகள் குழு ஒன்றால் குற்றவாளி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட 1,436 ஆவணங்கள், தமிழ்நாடு குற்றத்தடய அறிவியல் ஆய்வுக்கூட ஆவணப் பரிசோதனை வல்லுநரால் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



## 12. இனக் கலவரங்கள்.

தமிழ்நாட்டில் பொதுவாக அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது. இங்கு பல்வேறு வகுப்புகளையும் சேர்ந்த மக்கள் பொதுவாக நட்புறவோடு கூடி வாழ்கின்றார்கள். இங்குமங்குமாகச் சிறிய அளவில் ஏற்பட்ட சில இனப் பூசல்கள்கூட காவல் துறையின் பாரபட்சமற்ற முறையில் உரிய நடவடிக்கை எடுத்ததன் மூலம் தடுக்கப்பட்டன.

(1) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2ஆம் நாள் அன்று இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டம் இராஜகம்பீரம் என்னும் ஊரில் உள்ள புறம்போக்கு நிலத்தில் ரம்ஜான் திருவிழா கொண்டாட முற்பட்ட முஸ்லீம்களுக்கும் அதனை எதிர்த்த கிறிஸ்தவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு 19 பேர் காயமுற்றனர். கலவரம் விளைவித்தவர்கள் மீது காவலர்கள் இ.பி கோ. 107-வது பிரிவின் கீழ் நடவடிக்கையெடுத்து அமைதியை நிலைநாட்டினர்.

(2) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் அன்று வடாற்காடு மாவட்டம் பேரணாம்பட்டில் ஆடிக் கிருத்திகையின்போது சின்ன மசூதித் தெரு வழியாக காவடியெடுத்துச் செல்வது சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தில் அமைதியை நிலைநாட்ட முயன்ற 14 காவலர்களுக்கு காயம் ஏற்பட்டது. காவலர்கள் தடியடிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தும் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

(3) 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23ஆம் நாள் அன்று நீலகிரி மாவட்டம் தேவாலா காவல் நிலைய எல்லை உப்பாதுயில் இந்து ஒருவருக்கும், தேனீர்க் கடை உரிமையாளரான முஸ்லீம் ஒருவருக்கும் ஏற்பட்ட வாய்ச் சண்டை பின்னர் இரு வகுப்பினருக்கும் இடையே மோதலாக உருவெடுத்து வன்முறைச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டனர். இருசாரருக்கும் சொந்தமான இரண்டு வீடுகளும் ஒரு குடிசையும் ஜீப் ஒன்றும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. காவலர் தலையிட்டு வழக்கு பதிவு செய்து கி.பு.கோ. 107-வது பிரிவின் கீழ் நடவடிக்கையெடுத்து அமைதியை நிலைநாட்டினர்.

(4) 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூர் கிராமத்தைச் சேர்ந்த மாதவாலயத்தில் புறம்போக்கு நிலத்தில் இருந்த விநாயகர், நாகர் சிலைகள் அகற்றப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டது குறித்து இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. காவலர்கள் குறுக்கிட்டு மோதல் ஏற்படாமல் தடுத்தனர். இருப்பினும் 14—11—1980 அன்று இருசாராருக்கும் மோதல் ஏற்பட்டு கலவரத்தில் ஈடுபட்ட 25 பேர்

காயமுற்றனர். அமைதியை நிலைநாட்டச் சென்ற காவலர்களில் 7 பேர் காயமுற்றனர். காவல் துறையினரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கி.பு.கோ. 107-வது பிரிவின் கீழ் நடவடிக்கையெடுக்கப்பட்டு அமைதி நிலை நாட்டப்பட்டது.

13. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.

தமிழ்நாட்டில் 1978 வரை மிகக் குறைவாகவே இருந்துவந்த தீவிரவாதிகளின் நடவடிக்கைகள், பெரிய அளவில் குறிப்பாக வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களில் தலையெடுக்கத் தொடங்கியது. 1979 முதல், நாட்டு வெடிகுண்டுகள், பயங்கர ஆயுதங்கள் ஆகியவற்றுடன் தீவிரவாதிகள் ஒன்று சேர்ந்து பயங்கரவாதிகள் குழுவை அமைத்துக்கொண்டு, நிலப் பிரபுக்கள், உள்ளூர்ப் பிரமுகர்கள் ஆகியோரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். உதவி அல்லது பாதுகாப்பு கேட்டு காவலர்களை அணுகவொட்டாமல் மக்களை அச்சுறுத்துவதே தீவிரவாதிகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.

(2) தீவிரவாதிகள் 1980-ல் நடைபெற்ற 6 கொலைகளுக்கும், 14 கொலை முயற்சிகளுக்கும் பொறுப்பாக இருந்தனர். இவை தவிர வேறு வகையில் 19 குற்றங்களையும் அவர்கள் புரிந்தனர். முக்கியமான வழக்குகள் பற்றிய சுருக்க விவரம் பின்வருமாறு:—

(i) ஜோலார்பேட்டை காவல் நிலைய எல்லைக்குள் (வடாற்காடு மாவட்டம்) அமைந்த பொன்னேரி கிராமத்தில் 16-5-1980 அன்று பொன்னேரி ஊராட்சியின் முன்னாள் தலைவரான கேசவ ரெட்டி, அவரது மனைவி, அவரது பேத்தி ஆகியோர் வெடிகுண்டுகளால் கொல்லப்பட்டனர்.

( ) 19-5-1980 அன்று (தருமபுரி மாவட்டம்) பாரூர் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த புலியூர் கிராமத்திற்கருகே தாதம்பட்டி சந்திப்புச்சாலையில் நிலப் பிரபுவும் அந்த ஊர் மக்கள் நலக் குழுவின் தலைவருமான வெள்ளைய கவுண்டர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

(i ) (வடாற்காடு மாவட்டம்) திருப்பத்தூர் கிராமப்புற காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த கதிரம்பட்டி கிராமத்தில் நிலப் பிரபுவும் கிராமப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவருமான நடேச நயினார் 3—8—1980 அன்று இரவு அந்த ஊர் எல்லையில் கொலை செய்யப்பட்டார்.

(v) 6—8—1980 அன்று விடியற்காலையில் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையில் காவலர் குழுவினர் வடாற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டைக்கருகே 5 தீவிரவாதிகளைப் பிடித்தனர். அவர்களை மோட்டார் வண்டியில் திருப்பத்தூருக்கு அழைத்து வரும்போது அத் தீவிரவாதிகளில் ஒருவர் மோட்டார் வண்டிக்குள் நாட்டு வெடிகுண்டு ஒன்றை வீசினார்.



அது வெடித்தது ; இதனால் ஒரு இன்ஸ்பெக்டர், 2 காவலர்கள், 3 தீவிரவாதிகள் ஆகியோர் இறந்துவிட்டனர். மற்ற 2 தீவிரவாதிகள் தப்பிவிட்டனர்.

(3) தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பெருகிவிட்டதைத் தொடர்ந்து மாநில அளவில் தீவிரவாதிகளை வலைவீசித் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையை காவல் துறையினர் மேற்கொண்டனர். தடுப்பு நடவடிக்கை பிரிவுகளின் கீழ் 160 பேரும், குறிப்பிட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களில் குற்றம் சாட்டப்பட்ட 55 பேரும் கைது செய்யப்பட்டனர். திருப்பத்தூரில் 6-8-1980 அன்று வெடிகுண்டு வெடித்ததைத் தொடர்ந்து வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களில் தீவிரவாதிகள் மறைந்துள்ள இடங்கள் என்று சந்தேகப்பட்ட இடங்களில் முறையான திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க காவலர்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டனர். தீவிரவாதிகள் தாக்குகின்ற பகுதிகளில் இரவு பகல் எந்த நேரமும் காவலர் ரோந்து சுற்றிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் விளைவாக 206 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். வடாற்காடு மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டில் காவலருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே ஆறு முறை மோதல்கள் ஏற்பட்டன. இதில் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்த மோதல்கள் யாவும் தீவிரவாதிகள் செய்த குறிப்பிட்ட குற்றங்களுக்காக அவர்களைக் கைது செய்யக் காவலர் சென்றபோது நேரிட்டவையாகும். நடைபெற்ற மோதல்கள் ஒவ்வொன்றிலும் காவலர் எவ்வளவோ பொறுமையையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தும் கூட தீவிரவாதிகள் அவர்களைக் கொல்ல முயன்றதால் காவலர்கள் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது. பின்வரும் இடங்களில் அம்மாதிரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது:—

( ) வட ஆற்காடு மாட்டம், பொம்மிகுப்பம் கிராமத்தில் 11—9—1980 அன்று விடியற்காலையில் ஏற்பட்ட மோதலில் வடாற்காடு மாவட்டம், வேடப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெரியதம்பியின் மகன் சண்முகம், அம்மன் கோவில் நைனர்தியூர் கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி கவுண்டர் மகன் சுப்பிரமணியம் ஆகிய இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். திருப்பத்தூர் கோட்டாட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு, துப்பாக்கிச் சூடு நியாயமானது என முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

( ) 18—9—1980 அன்று பிற்பகல் வடாற்காடு மாவட்டம், ஜோலார்பேட்டை காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த இராமரெட்டியூர் கிராமத்திற்கருகே குருவிக்காரன் பள்ளத்தைச் சேர்ந்த ஒட்டையின் மகன் குருவிக்கார கனகராஜ் என்ற தீவிரவாதி வடாற்காடு மாவட்டம், கல்குத்தியூர் கிராமத்தில்

நடந்த மோதலில் கொல்லப்பட்டார். திருப்பத்தூர் கோட்டாட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு துப்பாக்கிச் சூடு நியாயமானது என முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

( ) வடாற்காடு மாவட்டம், ஆலங்காயம் அருகேயுள்ள மேல் நிம்மியம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த முனுசாமியின் மகன் 'நொண்டி' பெருமாள், வடாற்காடு மாவட்டம், நாட்ரம்பள்ளி காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த ஆத்தூர் குப்பத்தைச் சேர்ந்த குழந்தையின் மகன் சின்னதுரை ஆகிய இரு தீவிரவாதிகள் வடாற்காடு மாவட்டம், பொம்மிகுப்பம் கிராமத்தில் 12—10—1980 அன்று விடியற்காலையில் நடந்த மோதலில் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் குறித்து திருப்பத்தூர் உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு துப்பாக்கிச் சூடு நியாயமானது என முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

(iv) வடாற்காடு மாவட்டம், பொன்னேரி காலனியைச் சேர்ந்த தோளனின் மகன் ஜெயபால் என்ற தீவிரவாதி வடாற்காடு மாவட்டம், உமராபாத் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள பெய்ரபள்ளி வனப் பகுதியில் 14—10—1980 அன்று பிற்பகல் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டார். இதன்பேரில் திருப்பத்தூர் உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு துப்பாக்கிச்சூடு நியாயமானது என முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

(v) காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த சென்றாயனின் மகன் மனோகரன் என்ற தீவிரவாதி, வடாற்காடு மாவட்டம் நாட்ரம்பள்ளி காவல் நிலைய எல்லைக்குள் உள்ள பாப்பன் குட்டையில் 17—12—1980 அன்று விடியற்காலையில் நடந்த மோதலில் கொல்லப்பட்டார். இச்சம்பவம் குறித்து திருப்பத்தூர் உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை நடத்த உத்திரவிடப்பட்டுள்ளார்.

(vi) 28—12—1980 அன்று அதிகாலை தருமபுரி, மொரசுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இலட்சுமண கவுண்டரின் மகன் கண்ணாமணி என்ற தீவிரவாதி, வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி காவல் நிலைய எல்லைக்குள் உள்ள மாதக்கடப்பா கிராமத்தில் நடந்த மோதலில் கொல்லப்பட்டார். இச்சம்பவம் குறித்து திருப்பத்தூர் உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை நடத்த உத்திரவிடப்பட்டுள்ளார்.

(4) அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் உரை நிகழ்த்தியதற்காக இ.பி.கோ. 124-ஏ பிரிவின்படி மொரப்பூர் காவல் நிலையத்தின் 94/80 ஆம் குற்ற எண்ணில் பதிவு



செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக தேடப்பட்டு வந்த தீவிரவாதி பாலன் (தருமபுரி) சீரியம்பட்டி கிராமத்தில் 6—9—1980 அன்று கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யும் போது அவரும் அவரது கூட்டாளிகள் 15 பேரும் பயங்கர ஆயுதங்களுடன் காவலரைத் தாக்கினர். காவலர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தபோதிலும் திறமையாக அவர்களை அடக்கி கைது செய்தனர். காவலரிடமிருந்து தப்பியோடிய போது சுவரிலிருந்து விழுந்து பாலனின் கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. சென்னை அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு ஒரு வாரம் சிகிச்சை பெற்ற பின்னர் காயங்களின் காரணமாக இறந்துவிட்டார்.

(5) வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்களில் காவலரால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளை அடுத்து தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறைந்துள்ளது என்பதை உணர முடிகிறது. ஆயினும் இன்னும் தலைமறைவாக இருக்கின்ற தீவிரவாதிகளைத் தேடும் பணி தொடர்ந்து வருகிறது.

14. **விவசாயிகள் பிரச்சினையும் நிலைமையும்.**

(1) திரு. சி. நாராயணசாமி நாயுடுவின் தலைமையிலான தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாட்டில் 1980–81 ஆம் ஆண்டில் விவசாயிகள் போராட்டத்தை முன்னின்று நடத்தியது

(2) இச்சங்கம் 1980 ஏப்ரல், மே திங்களில் பால் விற்பனைக்குக் கூடுதல் விலை கேட்டு, பால் பயனீட்டாளர்களுக்குப் பால் செல்வதைத் தடுக்கும் வகையிலான போராட்டத்தை மேற்கொண்டது. இப் போராட்டத்தில் இச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், பால் எடுத்துச் சென்ற வண்டிகளை, பல்வேறு இடங்களில் மறித்து நிறுத்தி பெருமளவிலான பாலை மண்ணில் கொட்டி பாழாக்கினர். பால் விலையை அரசு உயர்த்தியதனால் 6—5—1980 அன்று இப்போராட்டம் கைவிடப்பட்டது.

(3) கூத்தப்பர் கிராமத்திலுள்ள (திருச்சிராப்பள்ளி) ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கப்படுவதை எதிர்த்து இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 1980 ஆகஸ்டு, செப்டம்பரில் காவல் நிலையங்களின் முன்னும், அரசு அலுவலகங்களின் முன்னும் மறியல் செய்து காவலில் வைக்கப்பட்டனர். கைதானவர்களை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்த விவசாயிகள் சங்கம் 6—10—1980 ஆம் நாளில் திருச்சிராப்பள்ளியில் இது தொடர்பாக மாநில விவசாயிகள் பேரணி ஒன்றை நடத்த அழைப்பு விடுத்தது. ஆனால் கடுமையான தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக இப்போராட்டம் பிசுபிசுத்தது.

## இணைப்புகள்

(4) மாநில அரசு 21-11-1980, 22-11-1980, 4-12-1980 ஆகிய நாட்களில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தில் இணக்கப் பேச்சு வார்த்தை மேற்கொண்டு, விவசாயிகள் மின்சார பாக்கித் தொகை யைச் செலுத்துவது குறித்து பல்வேறு சலுகைகளை அறிவித்தது. நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்படி 14-12-1980 ஆம் நாள்வரையில் மின்சார பாக்கியை " 1+1 " என்ற முறைப்படி அதாவது ஒரு திங்கள் நடப்புப் பாக்கியுடன் ஒரு திங்களுக்குரிய பழைய நிலுவையைச் செலுத்தலாம் என்று உருவாகிய முறையின்படி செலுத்த விவசாயிகள் அனுமதிக்கப்பட்டனர். இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது நிலுவை களைச் செலுத்தத் தவறிய பெரிய விவசாயிகளின் மின் இணைப்பைத் துண்டிக்கும் நடவடிக்கை 15-12-1980-லிருந்து மேற்கொள்ளப்பட்டது. மின் இணைப்பை துண்டிக்கப்பட்டதை எதிர்த்தும், தங்களது ஒன்பது அம்ச கோரிக்கைகளை நிறை வேற்றுமாறு கேட்டும் 23-12-1980-லிருந்து நாராயணசாமி நாயுடு தலைமையிலான சங்கம் இன்றியமையாப் பொருட்களை எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்தும் போராட்டத்தைத் தொடங்கியது. 31-12-1980-ல் மாநில அளவிலான முழு அடைப்புப்போராட்டத்தையும் நடத்தியது. இப்போராட்டத்தில் சங்க உறுப்பினர்கள், பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தல், பேருந்துகளையும் லாரிகளையும் கொளுத்துதல், மின் கம்பிகளை வெட்டி நெடுஞ்சாலைகளின் குறுக்காக போடுதல், மின்னழுத்த மாற்றிகளை சேதப்படுத்துதல், காவல் நிலையங்களைத் தாக்குதல், காவலர் ஒருவரை குத்திக் கொன்றது, நீர் வழங்கு குழாய்ப்பாதைகளைச் சேதப் படுத்துதல் போன்ற பல்வேறு வன்முறைச் செயல்களில் ஈடு பட்டனர். மேலும் பால், காய்கறிகள், அரிசி, விறகு போன்ற இன்றியமையாப் பொருட்களைக் கொண்டுசென்ற வண்டிகளையும் மறித்துத் தடுத்தனர். பல இடங்களில், பெரு மளவிலான பாலைக்கொட்டி வீணாக்கினர். பெரியார்மாவட்டத் தில் மட்டும் 10 கிராமங்களில் உள்ள மின்னழுத்த மாற்றிகளைச் சேதப் படுத்தியதன் விளைவாக இலட்ச ரூபாய்க்குமேல் இழப்பு ஏற்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. காவலர்கள் இக் கிளர்ச்சியைக் கையாண்ட பொழுது மிகுந்த பொறுமையுடனும் கட்டுப்பாடுடனும் சகிப்புடனும் செயல்பட்டனர். வன்முறைப் போராட்டக்காரர்கள் காவலர்களைக் கண்டபடி தாக்கியதாலும், காவலர்களின் உயிருக்குப் பேராபத்து விளையும் நிலைமை ஏற் பட்டதாலும், தென்னாற்காடு மாவட்டத்தில் வீரப்பெருமா நல்லூரிலும், செங்கற்பட்டுமேற்கு மாவட்டத்தில் வீரகநல்லூரிலும் சந்தானவேணுகோபால புரத்திலும், திருநெல்வேலி மாவட்டத் தில் திருவேங்கடத்திலும் காவலர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இத் துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள் கீழே குறிக்கப் பட்டுள்ளன.



## இணைப்புகள்

( ) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள வீரப்பெருமா நல்லூரில் 31-12-1980 அன்று சுமார் 300 விவசாயிகள் மடப்பட்டு — பண்ருட்டி முக்கியசாலையைமாட்டுவண்டிகளைக் கொண்டு வழிமறித்தனர். காவலர்கள் அவர்களைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தபோது காவலரைத் தாக்கினர். போதிய எச்சரிக்கை கொடுத்த பின்னர் காவலர்கள் தடியடிப் பிரயோகம் செய்தனர். அது பயனற்று போகவே, காவலர் வானத்தை நோக்கி இரண்டு சுற்றுகளும், கூட்டத்தைநோக்கி ஒரு சுற்றும் சுட்டனர். இதில் ஒருவர் இறந்தார். தடியடிப்பிரயோகத்தில் ஒன்பது பேர் காயமடைந்தனர். காவல் துறை இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது காவலர்கள் காயமடைந்தனர். இச்சம்பவம்குறித்துமாஜிஸ்ட்ரேட் விசாரணை ஒன்றை நடத்துமாறு ஆணையிடப்பட்டது.

( ) 31-12-1980 அன்று செங்கற்பட்டு மேற்கு மாவட்டத் தில் வீரகநல்லூர் சந்திப்புச் சாலைக்கு அருகே 50 பேர் சாலை யைத் துண்டித்துப் பாலத்தைச் சேதப்படுத்த முயன்றனர். அக்கூட்டத்தினரைக் காவலர் சூழ்ந்துகொண்டபோது அவர்கள் காவலர்மீது கல்லெறிந்தனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர காவலர்கள் தடியடி நடத்தினர். அது தக்க பயனளிக்காது போகவே காவலர் உடைமை காயம்ஏற்படுத்தும் ரவைத் தோட்டாக் களைப் பயன்படுத்தி 18 சுற்றுகள் சுட்டனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. கல்லெறியால் 6 காவலர் கள் காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி திருவள்ளூர் கோட்டாட்சியருக்கு ஆணையிடப் பட்டுள்ளது.

( ) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம்நாளன்று செங்கற்பட்டு மேற்கு மாவட்டத்திலுள்ள ஆர். கே. பேட்டை, திருத்தணி சாலையில் சந்தானவேணுகோபாலபுரம் அருகில் சுமார் 500 விவசாயிகளைக் கொண்ட கூட்டமொன்று சாலையில், தடைகளை ஏற்படுத்தியது. காவலர் சாலைத்தடைகளைஅகற்ற முயன்றபோது அக்கூட்டம் காவலர்மீது கற்களை எறிந்தனர். உரிய எச்சரிக்கைக்குப்பின், காவலர் தடியடி நடத்தினர். ஆனால் அது பயனற்றுப்போய் காவலர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை தோன்றியதால், காவலர் ரவைத் தோட்டாக் களைக்கொண்டு 23 சுற்றுக்கள் சுட்டனர். இதில் இரு சிறுவர்கள் இறந்தனர். நால்வர் காயமடைந்தனர். கல்லெறியால் நான்கு காவலர்களுக்குக் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி திருவள்ளூர் கோட்டாட்சியருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(v) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று குறிஞ்சிகுளம், புதுப்பேட்டை, வெள்ளாங்குளம் ஆகிய கிராமங் களைச் சேர்ந்த விவசாயிகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருவேங்கடம் காவல் நிலையத்தைத் தாக்குவதற்கு ஆயுதங்

களுடன் திரண்டு வருவதாக கிடைத்த தகவலின் பேரில், கோவில் பட்டி காவல் துறை இன்ஸ்பெக்டர், காவலர் படையுடன் திருவேங்கடத்துக்குச் சென்றார். குறிஞ்சிக்குளத்தை நோக்கிக் காவலர்படை செல்லும் சாலையில் குறுக்காக பெரிய பள்ளம் வெட்டப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அவ்விடத்தைக் காவலர்படையினர் அடைந்தபோது. நாட்டுவெடிகுண்டு உட்பட பயங்கர ஆயுதங்களுடன் சுமார் 1,000 பேரைக் கொண்ட கூட்ட மொன்று காவற்படையினரைத் தாக்கியது. போதிய எச்சரிக்கைக்குப்பின் கூட்டத்தைக் கலைப்பதற்குக் காவலர் கண்ணீர்புகைக் குண்டை வெடித்தனர். ஆனால் அது பயனளிக்க வில்லை. இக்கூட்டம் அரிவாள். கம்பு ஆகியவற்றால், காவலர் ஒருவரைத் தாக்கியதன் விளைவாக அவர் இறந்தார். அக்காவலரின் உதவிக்குச் சென்ற ஆயுதம் தாங்கிய சப்-இன்ஸ்பெக்டரும் அரிவாளால் வெட்டப்பட்டு காயமடைந்தார். நிலைமையை கட்டுக்குக் கொண்டுவரும் பொருட்டு காவலர் 20 சுற்றுக்கள் சுட்டனர். இதில் 5 பேர் இறந்தனர். 5 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இச்சம்பவத்தில் 14 காவலர்களுக்குக் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

(5) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு டிசமபர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் நடைபெற்ற மேற்சொன்ன போராட்டம் தொடர்பாக தடுப்புக் காவல் பிரிவின்கீழும் மற்றும் குறிப்பிட்ட குற்றங்கள் குறித்த பிரிவுகளின்கீழும் சுமார் 7,600 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். மேலும் பொது ஒழுங்கமைதியைப் பேணுவதற்கும் சமுதாயத்திற்கு இன்றியமையாப் பொருட்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்துப் பணிகளைப் பராமரிப்பதற்கும் ஊறுசெய்யும் வகையில் சங்கத்தின் முன்னணித் தலைவர்கள் எச்செயலையும் செய்துவிடாவண்ணம் அவர்களைத் தடுக்கும் நோக்குடன் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 15 பேரைக் காவலில் வைக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவர்களுள் ஏழுபேர் மட்டுமே காவலில் வைக்கப்பட்டனர். எனினும், காவலில் வைக்கப்பட்ட அனைவரும் 12—1—1981 அன்று விடுவிக்கப்பட்டனர். ஏனையோரைக் காவலில் வைப்பதற்கான ஆணைகள் திருப்பிப் பெறப்பட்டன. கொலை போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்களைத் தவிர கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

(6) தஞ்சாவூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள மாயூரம் வட்டம், ஆக்கூர் கிராமத்தில் 1980 மார்ச்சுத் திங்கள் 1, 2, ஆகிய நாட்களில், ஊதியத் தகராறு, வெளியே இருந்து வந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல் போன்ற காரணங்களுக்காக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.





1—3—1980 அன்று ஆதிதிராவிட விவசாயிகள் குடியிருப்பிலுள்ள ஒரு தேனீர் கடைக்கும் இரு வீடுகளுக்கும் மிராசுதாரர்கள் தீயிட்டனர். ஆக்கூர் கடைத் தெருவிலுள்ள சாதி இந்துக்களின் கூரைவேய்ந்த கடைகளுக்கு மார்க்சிஸ்டுகம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் தீயிட்டனர். 2—3—1980 அன்றும் இரு தரப்பினரையும் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்ட நிகழ்ச்சிகள் இரண்டு நடைபெற்றன. இவற்றில் இருவர் தாக்கப்பட்டனர். இருபிரிவினர்களுக்கு எதிராகவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு காவலில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இரு பிரிவினர்களையும் சேர்ந்த 25 தீவிரவாதிகளுக்கு எதிராக கி.பு.நோ. 107 ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(7) 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7 ஆம் நாளன்று செம்பனார்கோயில் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட (தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம்) கீழையூர் கிராமத்திலுள்ள மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த உழவர்களுக்கும் மிராசுதாரர்களுக்கும் இடையே, வெளியே உள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், தொழிலாளர்களைதொடர்ந்து ஏழுமணி நேரம் வேலை வாங்கி குறிப்பிட்ட சட்டப்படிக்கான ஊதியத்தை வழங்காதிருத்தல் போன்ற காரணங்களுக்காக தகராறு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட வேளாண்மைப் பணி, மாயூரம் (விவசாயிகள் குறித்த) தனி வட்டாட்சியர் முயற்சியால் 8—7—1980 அன்று ஏற்பட்ட இணக்க உடன்பாட்டின் பின்னர் மீண்டும் தொடங்கப்பட்டது.

(8) 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ஆம் நாளன்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த 32 விவசாயிகள் மாணிக்கப்பங்கிலுள்ள (தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம்) அரங்கசாமி நாயுடு பொறுப்புக் கழகத்தைச் சேர்ந்த நிலத்தினுள் அத்துமீறி நுழைந்து, அந்நிலத்தில் எல்லை கட்டியபின் பயிரிட ஆயத்தப்படுத்தினர். பொறுப்புக் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதி கொடுத்த புகாரின் மீது எட்டு நபர்களுக்கு எதிராக இ.பி.கோ. 147, 447 ஆம் பிரிவின்கீழ் குற்ற எண் 100/80-ல் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் வழக்கொன்றைப் பதிவு செய்தனர். குற்றவாளிகள் 18—7—1980 அன்று கைது செய்யப்பட்டனர்.

(9) 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாளன்று, தன்னிலாபாடி கிராமத்தைச் சேர்ந்த 15 விவசாயிகள் சிதம்பரம் நடராஜசாமி அறக்கட்டளையைச் சேர்ந்த நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் அந்நிலத்தில் அத்துமீறி நுழைந்தனர். மேற்சொன்ன நிலங்களில் பயிரிடும் குத்தகைதாரர்களிடமிருந்து வரப்பெற்ற புகாரின் பேரில் இ.பி.கோ. 147, 447 ஆம் பிரிவுகளின்கீழ் குற்ற எண்கள் 104, 105, 106/80-ல் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இது தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

(10) பத்து ஏக்கருக்குக் குறைவாக நிலமுடைய விவசாயிகளுக்கு வேளாண்மைக் கடன் அனுமதிக்குமாறு மத்திய அரசைக் கேட்டும், வேளாண்மைக் கடன்களைத் தள்ளுபடி செய்வது குறித்து மாநில அரசு செலவிட்ட தொகையை ஈடு செய்ய, மாநில அரசுக்கு நிதி உதவி அளிக்க மறுக்கும் மத்திய அரசின் போக்கைக் கண்டித்தும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் 25–8–1980 முதல் 27–8–1980 வரையில் மத்திய அரசு அலுவலகங்களின் முன் மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த விவசாயிகள் மறியல் செய்தனர். 25–8–1980, 26–8–1980, 27–8–1980ஆகிய நாட்களில் மத்திய அரசு அலுவலகங்களின் முன் மறியல் செய்ததற்காக தஞ்சாவூர் கிழககு, மேற்கு மாவட்டங்களில் மொத்தம் 1,584 பேர் கைது கைது செய்யப்பட்டு அன்று மாலையே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

(11) உரங்களின் விலையைக் குறைக்குமாறும் நெல்லிற்கு (குவின்டால் ஒன்றுக்கு) ஆதாயம் தரத்தக்க விலையை நிர்ணயிக்குமாறும், புதிய வேளாண்மைக் கடன்களை அனுமதிக்குமாறும் கேட்டு, தஞ்சாவூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட்டுக் கட்சியைச் சேர்ந்த விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் 1–9–1980, 2–9–1980, 3–9–1980 ஆகிய நாட்களில் மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன் மறியல் செய்தனர். அரசு அலுவலகங்களின் முன் மறியல் செய்தபோது இரு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 4,965 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(12) கலியபெருமாள் பிள்ளை என்னும் நிலச் சுவான்தார் நன்னிலம் (தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம்) அருகே கரையூரிலுள்ள தமது நிலத்தில் விளைந்த பயிர்களை அறுவடை செய்யும் பொருட்டு வெளியூர்களிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ஆம் நாளன்று அப்பணியில் ஈடுபடுத்தினார். அவர் இவ்வாறு செய்ததற்கு உள்ளூரிலுள்ள ஆதி திராவிடர் வகுப்பை சேர்ந்த விவசாயிகள் (வ. கம்.) எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் காரணமாக உள்ளூர் ஆதி திராவிட விவசாயிகளுக்கும், நிலச்சுவான்தாரின் ஆதரவாளர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. விவசாயிகள் 7 பேர்களும், நிலச்சுவான்தாரரின் ஆதரவாளர்கள் ஐவரும் காயமுற்றனர். இது தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

(13) தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் திருவாரூர் வட்டம், இரிஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்த பி. கோபாலகிருஷ்ண நாயுடு என்னும் நிலச்சுவான்தாரர் ஒருவர் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாளன்று கீவளூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆணைக்குடி கிராமத்திலுள்ள சந்தை வெளித்தோப்பில் கொலை செய்யப்பட்டார். கீவளூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 254/80-ல் இ.பி.கோ. 302ஆம் பிரிவின்கீழ் ஒரு வழக்கு





பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) யைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கு தொடர்பான புலனாய்வு நடைபெற்று வருகிறது.

**15. தொழிலாளர்கள் அமைதியின்மை**

(1) 1980ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் தொழிலாளர் சங்கங்கள் நடத்திய வேலை நிறுத்தங்கள் போன்றவற்றின் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடும்போது சிறிதளவு குறைந்துள்ளது.

(2) இந்த ஆய்வாண்டில் துணி ஆலைகள், பொறியியல், போக்குவரத்து போன்ற பெரிய நிறுவனங்களில் மாநிலம் தழுவிய போராட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை. ஆயினும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் செந்தாநீர்புரம் காவேரி பொறியியல் கழகம், ஆலந்தூர் இஞ்சின் வால்வு மற்றும் சேலம் டால்மியா மேக்னசைட் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வடாற்காடு மாவட்டத்திலுள்ள பீடி தொழிலாளர்கள், இராமநாதபுரம் மாவட்டம் தளவாய்புரத்திலுள்ள விசைத் தறித் தொழிலாளர்கள், கன்னியாகுமரி மாவட்ட முந்திரித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், நீலகிரி, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு கட்டங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது காவல் துறை தலையிட்டு அமைதியை ஏற்படுத்தியது. இவ்வனைத்துத்தொழில்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் பணிகளில் ஈடுபட்டிருக்க மற்றொரு பிரிவினர் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து விசுவாச தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட தருணங்களில் காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கு நிலைமையை நிலைநாட்டினர்.

(3) குறிப்பிடத்தக்க வகைகளில் நடைபெற்ற பெரிய வேலை நிறுத்தங்களில் சிலவற்றைக் குறித்த விவரங்கள் கீழே குறிக்கப்படுகின்றன :—

(i) காடம்பாறையிலுள்ள (கோயம்புத்தூர் புறநகர் மாவட்டம்) இந்துஸ்தான் கன்ஸ்டிரக்ஷன் கம்பெனி.

காடம்பாறை மின் விசையேற்றத் தேக்கப் புனல் மின்திட்டத்தின் (கோயம்புத்தூர் புறநகர்) கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப் பணியைத் தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது. ''நீர் கடத்தும் ஏற்பாட்டுப் பணியின்'' மொத்த ஒப்பந்தக்காரர்கள் திருவாளர்கள் இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியினர் ஆவர். இப்பணி 1979ஆம்

ஆண்டு மே திங்களில் தொடங்கப்பட்டது. தற்காலிக அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட பணியாளர்கள் (C.I.T.U.) ஊதிய உயர்வு கோரி, மெதுவாக வேலை செய்யும் முறையைக் கடைபிடித்ததன் விளைவாக நிரந்தரப் பணியாளர்களுக்கு 2 திங்கள் ஊதியத்தை முன் பணமாக வழங்கியது. தற்காலிக அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட பணியாளர்கள் அனைவரையும் சட்டப்படி அவர்களுக்கு சேரவேண்டிய ஈட்டுத் தொகையை வழங்கி அவர்களைப் பணி நீக்கம் செய்துவிட்டது. 1980ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7ஆம் நாளன்று கதவடைப்பும் செய்யப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தங்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரி 1980ஆம் ஆண்டு ஜூலை திங்கள்18ஆம் நாள் முதல் மூன்று பேருள்ள பிரிவுகளாக காலவரையறையின்றித் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கைதாயினர். மொத்தம் 109 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது இ.பி.கோ. 309ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ஆம் நாளன்று கதவடைப்பை நீக்கியது. நிரந்தரத் தொழிலாளர்களும் விசுவாசத் தொழிலாளர்களும் பணியை மீண்டும் தொடங்கினர். 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11, 12ஆம் நாட்களில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் விசுவாசத் தொழிலாளர்களை வேலைக்கு அழைத்துச் சென்ற வண்டிகளை வழிமறித்துத் தடுத்தனர். 33 பெண்கள் உட்பட மொத்தம் 142 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். நிரந்தரமான, நம்பிக்கைக்குரிய தொழிலாளர்கள் உதவியுடன் தற்போது பணி தடையின்றி நடைபெற்று வருகிறது. கைது செய்யப்பட்ட பெண்கள் மீதுள்ள வழக்குகளை திரும்ப பெறுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

(i) பால்வள நிறுவனம்.

பால்வள நிறுவனத்தில் மதுரைப் பிரிவில் பணி புரிந்து வந்த பணியாளர் ஒருவர் மாற்றம் செய்யப்பட்டதையும் மற்றொரு பணியாளருக்குத் தண்டனை வழங்கப்பட்டதையும் எதிர்த்து அப்பிரிவில் பணி புரிந்த 787 பணியாளர்களில் சுமார் 315 பணியாளர்கள், 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28ஆம் நாள் முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலும், ஊதிய உயர்வு, பணிக்கொடை ஆகியவற்றைக் கோரியும் மாதவரம், அம்பத்தூர் (செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம்), அயன்புரம் (சென்னை நகரம்), சேலம் ஆகிய இடங்களிலுள்ள உழைக்கும் மக்கள் மன்றத்தையும், இந்திய தொழிற் சங்கங்கள் மையத்தையும் சேர்ந்த பணியாளர்கள் 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ஆம் நாள், 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ஆம் நாள் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து



1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாள் முதல் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர், ஆம்பூர், திருவண்ணாமலை தருமபுரி மாவட்டத்திலுள்ள தருமபுரி, கிருட்டினகிரி ஆகிய இடங்களிலும் பணியாளர்கள் போராட்டத்தில் இறங்கினர். காவலர் பாதுகாப்புடன் நம்பிக்கைக்குரிய பணியாளர்கள், நாட்கூலி அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட பணியாளர்கள் ஆகியோரைக்கொண்டு மேற்சொன்ன இடங்களில் பால் வழங்கப்பட்டது. மாதவரம், அம்பத்தூர், அயன்புரம் ஆகிய இடங்களில் உள்ள (சி.ஐ.டி.யூ., உ.ம.ம.) பணியாளர்களைத் தவிர, ஏனைய எல்லா பணியாளர்களும் நிபந்தனையின்றி 1981ஆம் ஆண்டு. ஜனவரி திங்கள் 2ஆம் நாளன்று மீண்டும் பணிக்கு வந்தனர் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்காகச் செல்லும் பொருட்டு 1981ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள், 1981ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாட்களில் சென்னை நகரில் குழுமிய 202 (சி.ஐ.டி.யூ., உ.மம..) பணியாளர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் ஜாமீனில் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(iii) பக்கிங்காம் அண்டு கர்னாடிக் ஆலை, சென்னை.

சுமார் 13,000 பணியாளர்களைக் கொண்ட பக்கிங்காம் அண்டு கர்னாடிக் ஆலையின் நிர்வாகத்தினர் தம் வாணிபத்தில் ஏற்பட்ட இழப்பின் காரணமாக ஆலையை 1981ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள் முதல் மூடி விடுவதாக 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ஆம் நாளன்று சட்டப்படி அறிவிப்பைக் கொடுத்தனர். ஆலையை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்றும் பணியாளருக்குப் பணிக் கொடை வழங்க வேண்டுமென்றும் கோரி, 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4, 5, 7ஆம் நாட்களில் ஆலைப் பணியாளர்கள் பல குழுக்களாக சென்னை நகரில் மறியல் செய்தனர். அவர்களில் 228 பேர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். பணியாளர்கள் 12—12—1980 முதல், 20—12—1980 ஆம் நாள் வரை, குறளகம் எதிரில் தொடர் உண்ணா விரதம் இருந்தனர். பி. அண்டு சி. மில் நிர்வாகத்தினர் 1—1—1981 முதல் விட்டனர்.

சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி., தி.மு.க., உழைக்கும் மக்கள் மன்றம், சென்னைத் தொழிலாளர் சங்கம், சென்னையிலுள்ள தொழிற் சங்கங்களின் மன்றம், இவையனைத்தும் ஒன்று சேர்ந்து பி அண்டு சி ஆலையை மறுபடியும் திறக்க வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி சென்னை மாநகரிலும் அதனை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளிலும் 9—1—1981ஆம் நாளில் முழு அடைப்புக்கு ஏற்பாடு செய்தன. முழு அடைப்பு நாளில் சிற்சில இடங்களில் பல்லவன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளின் மீது கல்லெறி நடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு கல்லெறிந்ததற்காக, 15 நபர்கள் சென்னை மாநகரக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

(iv) போக்குவரத்து.

போக்கு வரத்துப் பணியாளர்கள் பெரிய அளவில் வேலை நிறுத்தம் ஏதும் செய்யவில்லை எனினும், சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகள், பயணிகள் அல்லது மாணவர்களின் செயலால் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திடீர் வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. அண்ணா போக்கு வரத்துக் கழகப் பணியாளர்கள் 11—3—1980ஆம் நாளன்று சேலத்தில் வன்முறையில் ஈடுபடவிருந்ததைத் தவிர்க்கும் பொருட்டுக் காவல் துறையினர் இலேசான தடியடி செய்தனர்.

(2) கடமையாற்றும்போது உயிர் இழக்க நேரிடும் ஓட்டுநர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 வழங்கக் கோரியும், கூடுதல் ஊதிய உயர்வு கோரியும், சென்னை நகரிலுள்ள டாக்சி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் 18—12—1980ஆம் நாளன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது குறித்து 21—12—1980ஆம் நாளன்று போக்கு வரத்துத் துறை அமைச்சருடன் கலந்து பேசிய பின்னர், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு சாரார் 22—12—1980ஆம் நாளன்று வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் விசுவாச ஓட்டுநர்களைத் தாக்கினர். அவர்களுடைய வாகனங்களையும் சேதப்படுத்தினர். பேச்சு வார்த்தையில ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் 25—12—1980ஆம் நாள் போராட்டம் நிறுத்தப்பட்டது.

16. மாணவர்கள், ஆசிரியர்கள்,

1980-ம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் பொதுவாக மாணவர் போராட்டங்கள் ஏதும் பெரிய அளவில் நடைபெறவில்லை. ஆயினும், ஆசிரியர்களுடைய போராட்டங்களுக்கு மாணவர்கள் தங்களுடைய ஆதரவை அளித்தனர். தேர்வுக் கூடங்களில் பார்த்து எழுதுவதற்கு அனுமதி அளிக்காத காரணத்தால், சில இடங்களில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். கல்லூரி மாணவர் இல்லங்களிலுள்ள ஆதி திராவிட மாணவர்களுக்கும் ஆதி திராவிடர் அல்லாத பிற மாணவர்களுக்குமிடையே வகுப்பு வாதக் கலவரமும், கல்லூரி சங்கத்தேர்தல்களில் போட்டியும் ஏற்பட்டன. கல்வி நிறுவனங்களிலும் மாணவர் இல்லங்களிலும் சிறந்த வசதிகள் செய்து தருமாறும், கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுமாறும், தங்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை திரும்பப் பெறுமாறும், தேர்வுக் கட்டணங்கள் முதலியவற்றை குறைக்குமாறும் கேட்டு மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இவ்வாண்டில் மாணவர்களிடையே ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சங்கராபுரத்திலும் (தென் ஆற்காடு), மாதர்பாக்கத்திலும் (செங்கல்பட்டு மேற்கு) காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். 17ஆம் பாராவில் விவரங்களைக் காண்க.



(2) 6—2—1981 அன்று காலை 10 மணி அளவில் பல்லவன் போக்கு வரத்துக் கழக மேலாளர் (இயக்குதல்) சென்னை மில்லர்ஸ் சாலையில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர் இல்லத்திற்கருகில் சென்றுகொண்டிருந்தார். பல்லவன் போக்கு வரத்துக் கழகப் பேருந்து படியில் சில மாணவர்கள் நின்றுகொண்டு பயணஞ் செய்ததை அவர் கண்டித்தார். அப்போது மாணவர்களுக்கும் அதிகாரிக்கும் ஏற்பட்ட வாய்ச் சண்டை கைகலப்பாக மாறி அதிகாரியின் ஓட்டுநர் தாக்கப்பட்டார். கலவரத்தை அடக்க விரைந்த காவலர்களும் செங்கல் முதலியவற்றால் தாக்கப்பட்டனர். காவல் துறை நிழல் படம் எடுப்பவரிடமிருந்து நிழற்படக் கருவியும் பணமும் பறிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் அமைதியை நிலை நாட்ட 9 கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. அரை மணி நேரத்திற்குப் பின்னர் நிலைமை அமைதியாயிற்று. மோதலில் காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் அறுவருக்குக் காயமேற்பட்டது. சில மாணவர்களுக்கும் பேருந்து ஓட்டுநருக்கும் காயமேற்பட்டு, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இது தொடர்பாக, சென்னை மாநகர குற்றப் பிரிவில் இ.பி.கோ. 147, 148, 332, 363, 395ஆம் பிரிவுகளின் கீழும் மாநகரக் காவல் சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழும் 63/81-ம் குற்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அது புலனாய்வில் உள்ளது. இது குறித்து நீதி விசாரணை நடத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(3) நடப்புக் கல்வி ஆண்டில் தொடக்கத்திலிருந்தே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 1928ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டதன் காரணமாக அங்கு பதட்ட நிலை நிலவியது. குறிப்பிட்ட காலத்திற்குள் பதவி உயர்வு அளித்தல், பணியை முறைப்படுத்துதல் முதலியவை உட்பட 21 கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை வலியுறுத்தி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திய போது, 17—7—1980-லிருந்து 31—7—1980 வரை கல்லூரியை மூடுவதற்குப் பல்கலைக் கழகம் உத்திரவிட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தேர்வுக் குழுவினரால் அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டதால் போராட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் டிசம்பரில், மாணவர்கள் தங்களது வகுப்புகளிலிருந்து வெளியேறி, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரிகள் சங்கத்தைக் கண்டித்து 15--12--1980-லிருந்து 18--12--1980 வரையில் ஊர்வலம் நடத்தினர். ஆங்கில விரிவுரையாளர் ஒருவரைஅவர்கள் தாக்கினர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் ஏனைய காரணங்களுக்காகவும் ஆசிரியர்களும் ஏனைய பணியாளர்களும் வேலை நிறுத்தம் செய்து உண்ணா விரதம் மேற்கொண்டனர். அமைதியின்மை காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முழுவதையும் 18—12—1980 லிருந்து காலவரம்பின்றி மூடிவிடுமாறு உத்திரவிடப்பட்டது. ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் போராட்டத்தினைக் கைவிட்டனர். தற்பொழுது பல்கலைக் கழகம் திறக்கப்பட்டு அமைதியாக நடைபெற்று வருகிறது.

**17.** காவலர்கள் துப்பாக்கிச் சூடு.

1—1—1980 முதல் 31—12—1980 வரையில் காவலர்கள் 24 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். 6 துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள் பத்தி 13 ''தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்'' என்பதில் குறிக்கப்பட்டுள்ளன. பத்தி 14 ''விவசாயிகள் பிரச்சினையும் நிலைமையும் என்பதன் கீழ் 4 நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் உள்ளன. 1—1—1980 முதல் 31—3—1980 வரையில் நடந்த மூன்று துப்பாக்கிச் சூடுகள் சென்ற ஆண்டு அய்வு வரையில் இடம் பெற்றுள்ளன- எஞ்சிய 11 நிகழ்வுகள் குறித்த விவரங்கள் கீழே சுருக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன:—

(1) 1980ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாளன்று தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையக் காவலர் திடீர் சோதனை நடத்தி மதுவிலக்குக் குற்றங்களுக்காக 15 பேரைக் கைது செய்ததையடுத்து ஆயுதங்களுடன் 1,000 மீனவர்கள் அருகிலுள்ள சிறு கடைகளைச் சூறையாடியதுடன் தூத்துக்குடி தெற்குக் காவல் நிலையத்தை சூழ்ந்து கொண்டு கற்களை வீசினர். அவர்கள் காவல் நிலையத்தைத் தாக்க முற்படுகையில், கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கலைக்கும் நோக்குடன் காவல் படையினர் வானத்தை நோக்கிச் சுட்டனர். ஆயினும் கூட்டம் கலையாததால், நிலைமையைச் சமாளிக்க வன்முறையில் ஈடுபட்ட கூட்டத்தினர் மீது காவலர் தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடத்தினர். கைகலப்பில், காவல் துறையினர் அறுவரும், பொதுமக்கள் அறுவரும் காயமுற்றனர். துப்பாக்கிக் குண்டினால் காயமுற்ற ஒருவர் பின்னர் இறந்துவிட்டார் இச்சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரியால் விசாரணை நடதத உத்தரவிடப்பட்டுள்ளது.

(2) அரசியல் காழ்ப்புணர்ச்சி, தேர்தல் பகைமை காரணமாக, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாளன்று சோனாங்குப்பம் கிராமத்தில் (தென் ஆற்காடு) அ.இ.அ.தி.மு.க கழக உறுப்பினர்களுக்கும், தி. மு. க. உறுப்பினர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக இரு கட்சியையும் சார்ந்த நால்வருக்குச் சிறு காயம் ஏற்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்குக் காவல் துறையினர் விரைந்தபோது கூட்டம் காவலரைத் தாக்கியது. எனவே கூட்டத்தை அச்சுறுத்தி கலைக்கும் நோக்குடன் காவல் துறையினர் வானத்தை நோக்கிச் சுட்டனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் யாருக்கும் காயமேற்படவில்லை.

(3) சென்னை பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கொட்டி வைக்குமிடத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாளன்று நான்கு பேர் அத்துமீறி நுழைந்து நிலக்கரியைத் திருடினர். இந்நால்வரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஏனையோர் தப்பியோடிவிட்டனர். இதன் பின்னர் கைது செய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவரைக் காவலர்



பாதுகாப்பிலிருந்து விடுவிக்கும் நோக்குடன். உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த கூடிய ஆயுதங்களுடன் சுமார் 30 பேர் காவலர் அறைக்கு வந்தனர்? சோடா புட்டிகளை வீசியும், சரமாரியாகக் கற்களை எறிந்தும், அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதத்தையும் காவலரின் உயிருக்கு ஆபத்தையும் விளைவித்தனர், காவலர் ஒருவர் காயமுற்றார். நிலைமை மிகவும் மோசமடைந்ததால், காயமுற்ற காவலர் தற்காப்பிற்காக இரண்டு சுற்று தோட்டாக்களை வானத்தை நோக்கிச் சுட்டார் இத்துப்பாக்கிச் சூட்டினால் ஒருவரும் காயமுறவில்லை.

(4) கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூரில் குடிபோதையில் நடந்த சண்டையின் காரணமாக, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17 ஆம் நாள் வரை நாடார் சமூகத்திற்கும் மீனவர் சமூகத்திற்குமிடையே தொடர்ந்து பல மோதல்கள் ஏற்பட்டன. சுமார் 3,000க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கும் நாடார்களுக்கும் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17 ஆம் நாளன்று தூத்தூரில் மோதல் ஏற்பட்டு சரமாரியாக கற்களை வீசினர். காவல் படையினர் ஒழுங்கை நிலைநாட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர். ஆனால் இது பயனளிக்கவில்லை. கூட்டத்தினர் காவலரை கற்கள், தடிகள், இரும்புக் கம்பிகள் கொண்டு தாக்கினர். இதனால் 14 காவலர்களுக்கு காயம் ஏற்பட்டது. தடியடி நடத்தப்பட்டது. அதுவும் பயனளிக்கவில்லை. நிலைமை மிகவும் மோசமானதாலும் காவல் படையினரின் உயிருக்கு ஆபத்து விளையும் நிலை ஏற்பட்டதாலும் தற்காப்பிற்காகக் காவல் படையினர் இரண்டு முறை வானத்தை நோக்கி சுட்டனர். இச்சம்பவம் குறித்து பத்மநாபபுரம் உதவிமாவட்ட ஆட்சியாளரால் விசாரணை நடத்தப்பட்டு அப்போதைய சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நியாயமானதே. என்ற முடிவை அரசு ஏற்றுக் கொண்டது.

(5) மயில்சாமி என்பவர் தன் மீது காறியுமிழ்ந்து செருப்பாலடித்து விட்டதாகக் குற்றஞ்சாட்டி ஆசிரியர் ஒருவர் கொடுத்த புகாரின் மேல் விசாரணை நடத்துவதற்காக கோயம்புத்தூர் மாவட்டத்தில் (கிராமப்புறம்) ஆனைமலை காவல் நிலையத்திற்கு 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2-ம் நாளன்று மயில்சாமி கொண்டு வரப்பட்டார். இதன் காரணமாக, ஆனைமலை காவல் நிலையத்திற்கெதிரே ஒரு பெருங்கூட்டம் கூடி தொலை பேசித் தொடர்புகளை துண்டித்து காவலர்கள் மீது கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டது. மயில்சாமியைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்த காவலர்களை தங்கள் முன் கொண்டு வர வேண்டுமென்று இக்கூட்டத்தினர் கூச்சலிட்டனர். காவல்துறை இணை சூப்பிரண்டின் தலைமையில் மற்றொரு காவல்படை, நிலைமையைச் சமாளிக்க அந்த இடத்திற்கு விரைந்தது. ஆனால், அக்கூட்டத்தினர் ஆத்திரமடைந்து காவலர்களை எதிர்த்துத் தாக்கி காவல் நிலையத்திற்குச் சேதம் விளைவித்தனர்.

இவ்வன்முறை நிகழ்ச்சியில், காவலர் பன்னிருவரும் வேறு இருவரும் காயமுற்றனர். கூட்டம் அச்சுறுத்தும் வகையில் முன்னேறியதாலும் காவல் படையினரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருந்ததாலும், காவற்படையினர் வானத்தை நோக்கிச் சுட்டனர். அதன் பின்னும் கூட்டம் கலையாததால் காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இதில் மூவர் இறந்தனர், பதினோரு பேர் காயமுற்றனர். இந் நிகழ்ச்சி குறித்து கோயம்புத்தூர் மாவட்ட கூடுதல் ஆட்சியாளரால் விசாரணை நடத்த ஆணையிடப்பட்டது. அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்ற விசாரணை அதிகாரியின் முடிவினை அரசு எற்றுக் கொண்டது.

(6) தென்னாற்காடு மாவட்டம், திருப்பாதிரிப்புலியூரில் ஆதி திராவிடர் ஒருவருக்கும் சாதி இந்து ஒருவருக்கும் இடையே பழக்கடை நடத்துவது குறித்து 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று சண்டை ஏற்பட்டது. இதன் விளைவாக, 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாளன்று அவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. அன்று, சுமார் 600 சாதி இந்துக்கள் ஆதி திராவிடர்களைத் தாக்குவதற்காக ஆதி திராவிடர்க் குடியிருப்புகளை நோக்கிச் சென்றனர். காவல் படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தியபோது, அவர்கள் காவலரைத் தாக்கினர். இதில், காவலர் எழுவர் காயமுற்றனர். வன்முறையில் ஈடுபட்டிருந்த கூட்டத்தைக் கலைப்பதற்காக, காவல் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். காவற் படையினர் கூட்டத்தைக் கலைப்பதற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இதில் மூவர் காயமுற்றனர். இந் நிகழ்ச்சி குறித்து சிதம்பரம் உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்த ஆணையிடப்பட்டது.

(7) உள்ளூர்ப் பள்ளியொன்றில் முறை தவறி நடந்து கொண்ட மாணவர் ஒருவரின் தந்தை மீது காவலர் எடுத்த நடவடிக்கையால் மன நிறைவுறாத சங்கரபுரம் (தென்னாற்காடு) பள்ளி மாணவர்கள் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ஆம் நாளன்று சமூக விரோதிகள் சிலருடன் சாலைகளில் தடைகளை வைத்து, போக்கு வரத்திற்கு இடையூறு விளைவித்தனர். காவற் படையினர் குறுக்கிட்டபோது, அக்கும்பல் காவற் படையினர் மீது கற்களை வீசியது. இதனால், காவலர் நால்வரும், கூட்டத்தில் ஒருவரும் காயமுற்றனர். கட்டுக்கடங்காத அக்கும்பலைக் கலைப்பதற்காக காவற் படையினர் தடியடிப் பிரயோகம் நடத்தினர். இதனால் பலனேதும் ஏற்படாததால், தற்காப்பிற்காக காவற் படையினர் ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைக் கொண்டு நான்கு முறை சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் ஒருவருக்கு சிறு காயமேற்பட்டது. இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை தேவை இல்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டது.



(8) இராமநாதபுரம் (மேற்கு) மாவட்டம், விருதுநகரில் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ம் நாளன்று பண்டிகை ஒன்றின் போது நாடார் ஒருவருக்கும், தேவர் சிறுவன் ஒருவருக்குமிடையே ஏற்பட்ட சிறு சச்சரவு இவ்விரு வகுப்பினருக்குமிடையே பெரும் மோதலாக முடிந்தது. 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20-ம் நாளன்று இரு பிரிவினரும் மோதிக் கொண்டனர். காவற் படையினர் தலையிட்டபோது செங்கற்களைக் கொண்டு தாக்கப்பட்டனர். இம்மோதலில் கூட்டத்தினரில் ஒன்பது பேரும், காவலர் எட்டு பேரும் காயமுற்றனர். நிலைமை மிகவும் மோசமாகியதால், கும்பலைக் கலைப்பதற்காக, காவல் படையினர், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர் தடியடிப் பிரயோகம் நடத்தினர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர காவற் படையினர் ஊமைக் காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைப் பயன்படுத்தி 8 முறையும், ரவைத்தோட்டாக்களைப் பயன்படுத்தி 5 சுற்றும் சுட்டனர். இத் துப்பாக்கிச் சூட்டினால 12 பேர் காயமுற்றனர். இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அதிகாரியால் விசாரணை நடத்தப்பட்டு அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்ற விசாரணை அதிகாரியின் முடிவினை அரசு ஏற்றுக் கொண்டது.

(9) குற்றஞ் சாட்டப்பட்டு, தலைமறைவாகிவிட்ட போலுத் தேவர் என்பவரை, காவல் படையினர் களக்காடுபேருந்து நிலையத்தில் (திருநெல்வேலி மாவட்டம்) 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ஆம் நாளன்று கைது செய்ய முயன்றனர். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர் தன்னைக் கைது செய்ய இயலாத வண்ணம் தடுத்து தலைமைக் காவலரை அரிவாளால் தாக்க முனைந்தார். அதனால், தலைமைக் காவலர் தற்காப்பிற்காகச் சுட்டார். குற்றஞ் சாட்டப்பட்டவரிடமிருந்து நாட்டுத் துப்பாக்கி ஒன்றும், அரிவாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும்போது காயமுற்ற போலுத்தேவர் மரணமடைந்தார். இச்சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரியால் விசாரணை நடத்த உத்திரவிடப் பட்டுள்ளது.

(10) தேர்வு மையத்தை கும்மிடிப்பூண்டியிலிருந்து மாதர் பாக்கத்திற்கு மாற்றும்படிக் கோரி, மாதர்பாக்கம்(செங்கல்பட்டு மேற்கு) அரசு மேல் நிலைப் பள்ளியைச் சேர்ந்த சுமார் 1,000 மாணவர்கள், 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளன்று பல இடங்களில் போக்கு வரத்திற்குத் தடை ஏற்படுத்தி, பேருந்துகளை நிறுத்தினர். காவலரிடமும் முறைகேடாக நடந்துகொண்டதற்காக மாணவர் ஒருவர் கண்டிக்கப்பட்டார். இதனால் சினங்கொண்ட மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் அடங்கிய மாபெரும் கும்பல் காவற் படையினரைத் தாக்கியது. பின்னா, அக் கும்பல், பாதிரி வீடு காவல் நிலையத்திற்கு முன் குழுமி, காவல் நிலையத்தின் மீது கற்களை வீசினர்.

சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், காவலர் அறுவரும் காயமுற்றனர். காவல் படையினரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை உருவாகியதால், ஊமைக் காயம் ஏற்படுத்தும் தோட்டக்களைப் பயன்படுத்தி 33 முறையும், ரவைத் தோட்டாக்களைப் பயன்படுத்தி 10 சுற்றும் வெடித்தனர். எட்டு பேர் காயமுற்றனர். இந் நிகழ்ச்சி குறித்து மாஜிஸ்ட்ரேட்டு விசாரணைக்கு உத்திரவிடப் பட்டுள்ளது.

(11) சென்னை மாநகர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் நிலக்கரி கொட்டி வைக்குமிடத்தில் நிலக்கரித் திருட்டு கும்பலொன்றை, காவல் பணி புரிந்த காவலர் ஒருவர் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம்நாளன்று எச்சரித்தபோது, அவர்கள் காவலர் மீது கற்களையும் ஏனைய பொருள்களையும் வீசினர். அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையிலிருந்ததால் தற்காப்பிற்காகக் காவலர் சுட்டார். ஒருவர் காயமுற்றார். காயமுற்ற அவர் பின்னர் இறந்துவிட்டார். இந்நிகழ்ச்சி குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

18. கண்ணீர் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியது.

1980ஆம் ஆண்டில சட்டம் ஒழுங்கினை நிலைநாட்ட செங்கற்பட்டு, (கிழக்கு), தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர், (மேற்கு), கன்னியாகுமரி, திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முறையும், மதுரை (தெற்கு) மாவட்டத்தில் இரு முறையும், இராமநாதபுரம் (மேற்கு) மாவட்டத்தில் மும்முறையும், வட ஆற்காடு மாவட்டத்தில் 4 முறையும், சென்னை மாநகரில் ஆறு முறையும், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

19. காவல் துறைவானொலிப் பிரிவு.

தமிழ்நாடு காவல் துறை மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னை காவல் துறை வானொலிப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், செங்கற்பட்டு சரகங்கள் ஆகிய ஆறு செய்தித் தொடர்பு நிலையங்கள் மேற்சொன்ன பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவை தவிர, சென்னை மாநகரக் காவல் படை வானொலி தொடர்பு அமைப்பு உள்ளது. சென்னை மாநகரம், அணைக்கரை, மேல் அணை கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. 18 நிலையான வானொலி அமைப்பு நிலையங்கள், 6 உட்கோட்ட வானொலி அமைப்பு நிலையங்கள், 24 இயலூர்தி வானொலி அமைப்பு நிலையங்கள், 19 மீவுயர் அதிர்வலைச் செய்தி அஞ்சல் நிலையங்கள், 19 மாநகர்ச் செய்தித் தொடர்பு நிலையங்கள், 10 வெள்ளக்கால



நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் ஆகியவை தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. முக்கியமான திருவிழாக்கள், புயல், வேலை நிறுத்தங்கள், பெரு மக்கள் வருகை, மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் இந் நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், ஆகிய நான்கு இடங்களில் வானிலை அறிவிப்பு நிலையங்கள் மன நிறைவு அளிக்கத்தக்க வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

20. தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்துதல் .

காவலர் படையை நவீனப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இதற்கான நிதி உதவியையும் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வண்டிகள், கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், அறிவியல் சாதனங்கள் இவற்றை வாங்குவதற்காக 1969–70 முதல் 1978–79 வரை ரூ. 425·47 இலட்சத்திற்கு கடனாகவும் மானியமாகவும் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் இவற்றை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக ரூ. 38.50 இலட்சம் தொடரினச் செலவாகவும் இம்மாநில அரசு வழங்கியுள்ளது. 1980–81 ஆம் ஆண்டு முதல் 1989–90 வரையிலான 10 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு காவல்படையை நவீனமாக்கும் திட்டத்தை மறுபடியும் புதுப்பித்துள்ளது. அதன்படி 1980–81 ஆம் ஆண்டில் கடன் மற்றும் மானியமாக ரூ. 56.35 இலட்சம் வழங்கியுள்ளது. இத்தொகை மீவுயர் மின்னலை செய்தித் தொடர்புக் கருவிகள் ( V. H. F. ) மற்றும் இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் (walk e Talk e) வாங்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

21. செய்தித் தொடர்பு

உயர் அதிர்வலை, மீவுயர் அதிர்வலைச் செய்தி தொடர்பு மூலம் அனைத்து காவல் நிலையங்களை மாவட்டத் தலைமையிடங்களுடனும், மாநிலத் தலைமையிடத்துடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும். ஒலி வடிவிலும் வரிவடிவிலும் வானொலி மூலம் அனுப்புவதற்கு வகை செய்ய மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைமையிடத்துடன் ஏற்கெனவே மீவுயர், அதிர்வலைச் செய்தித் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. தவிர, 893 காவல் நிலையங்களில் 640 காவல் நிலையங்களுக்கும், 93 துணைக் கோட்டங்களில் 50 துணைக் கோட்டங்களும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப் பதிவுகள், நிழற்படங்கள், ஐயத்திற்கிடமான ஆவணங்கள் ஆகியவற்றின் படிகளை புகைப்பட ஒளிபரப்பு முறையில் அனுப்பும் வசதிகள், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் உள்ள சரகத் தலைமையிடங்களில் தற்போது உள்ளன.

(2) மாநிலத் தலைமையிடத்திற்கும் மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இடையே போக்குவரத்து அதிகரித்து வருவதால், தற்போதுள்ள ஒரு வழி மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதி போதுமானதாயில்லை. எனவே, ரூ. 100 இலட்சம் செலவில் நுண்ணலை பல்வழிச் செய்தித் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த பல்வழிச் செய்தித் தொடர்பு அமைப்பு சுமார் 540 கிலோ மீட்டர் தொலைவுக்கு செய்தியை அனுப்பக்கூடியது. இத் தொலைவு ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின்கீழ் மிக உயரமான இடங்களில் 5 மறு ஒலி பரப்பு வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பின் மூலம் விரல்ரேகைப் பதிவுகள், குற்ற வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள் தேவைப்படும் பொழுது மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் அறிந்துகொள்வதற்கு முடியும் என்பதோடு மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்திலிருந்து தொலை அச்சுப் பொறிகள் உருவ நேர்படி தொடர்பு (Facs mile Transmission) ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் குற்ற வழக்குகள் குறித்த தகவல்களை விரைவாக அனுப்பவும், முடியும் இந்த விண்ணலைத் திட்டம் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கிவிட்டது. அன்றாடத் தேவைகளுக்கு செயல்படுத்தப்படுகிறது.

(3) இதுவரை செய்தித் தொடர்பு வசதி பெறாத தமிழ்நாடு சிறப்புக்காவல் படை அணிகளுக்கும் காவல் நிலையங்களுக்கும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளுக்கு வகை செய்ய இவ்வாண்டில் 350 மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு கருவிகளும் (V.H. F. se's) 1,800 இருவழி செய்தித் தொடர்புகாவிகளும் (Walkie Talkie) துணைப் பொருட்களும் ரூ. 1,98,45,000 செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த கம்பியில்லா தந்தி சாதனங்களை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகள் அமைக்கப்படும் பொழுது மாநிலம் முழுவதுமுள்ள எல்லா காவல் நிலையங்களும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளைப் பெற்றிருக்கும்.

(4) மேலும், மாவட்ட தலைமையிடங்களிலுள்ள குற்ற புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 15 சிறப்புப் பிரிவு (S.B.C.I.D.) களுக்கு ரூ. 120 இலட்சம் செலவில் மிகையுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக்கு வகைசெய்ய இவ்வாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேவையான சாதனங்களை வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சாதனங்கள் நிறுவப்பட்டவுடன் குற்றப் புலனாய்வுத் துறை மாநிலத் தனிப் பிரிவின் பொறுப்பில் இது தனியானதொரு வானொலி அமைப்பாக இருக்கும்.



(5) மாநிலத்தில் 893 காவல் நிலையங்களும் 192 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 871 காவல் நிலையங்களுக்கும் 184 புறக்காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், தொலை பேசித் துறை, இதுவரை, 773 காவல் நிலையங்களிலும் 95 புறக் காவல் நிலையங்களிலும் மட்டுமே, தொலைபேசிகளை அமைத்துள்ளது. தொலைபேசித் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து எஞ்சிய காவல் நிலையங்களிலும், புறக்காவல் நிலையங்களிலும், கூடிய விரைவில் தொலைபேசிகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 22. காவல் துறையினருக்கு அறிவியல் தொழில் நுட்ப சாதனங்கள்.

சட்டத்தையும், ஒழுங்கையும், திறம்படப் பேணி வரவும், குற்ற நிகழ்வுகளையும், குற்றவாளிகளையும் கண்டுபிடிக்கவும், எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது. மாநிலக் குற்றத் தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தில் எல்லா வகையான நவீன கருவிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அனைத்து காவல் துறை மாவட்டங்களிலும் எல்லா வசதிகளும் நிறைந்த நடமாடும் குற்றத் தடய அறிவியல் ஆய்வுக் கூடப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளின் உதவியுடன் புலனாய்வு செய்வதில் நல்ல பயன் கிட்டியுள்ளது. 20 காவல் துறை மாவட்டங்களிலும், ஒவ்வொன்றிலும் ஒரு விரல் ரேகைப் பிரிவு செயல்பட்டு வருகின்றன. குற்றம் நடைபெற்ற இடத்தில் காணப் பெறும் தடயங்களையும் கைரேகைகளையும் விரைவாக அடையாளம் கண்டு கொள்வதற்காக ரூ. 11·2 இலட்சம் செலவில் 1977-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் "கோடக் மிரா கோடு" (Kodak Mira Code) மைக்ரோ பிலிம் என்னும் சாதன அமைப்பு நிறுவப்பட்டது. நுண்படச் சுருளில் கைவிரல் ரேகைப் பதிவேடு வைத்துவரும் முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டது. இது, 1981 ஜூன் இறுதிக்குள் முடிவடையக் கூடும். மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டாரக் குற்றத் தடய அறிவியல் ஆய்வுக்கூட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

## 23. காவல் துறைப் புள்ளி விவரம் கணக்கீட்டுப் பிரிவு.

காவல் துறைப் புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 இலட்சம் குற்ற நிகழ்வுகள், 3 இலட்சம் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு குறியீடு இடப்பட்டுள்ளன. மூன்று இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகளும் கணக்கீட்டுப் பொறி முறையில் கணக்கு வைத்து வரப்படுகின்றன.

குற்ற நிகழ்வுகள், குற்றவாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள், விரல் ரேகைப் பதிவுகள் ஆகியவற்றைக் கணக்கிட்டு பொறி முறையில் வைத்து வரும் பணி முடிவடைந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திற்கும் அன்றாடம் செய்தி வழங்கும் நடைமுறை 1—2—1975 முதல் தொடங்கப் பட்டது. குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் விரைவில் கண்டுபிடிக்க மாநிலம் முழுவதிலும் காவல் துறையினருக்கு இது மிகவும் பயனுள்ளதாய் இருக்கிறது. தேசிய காவல் துறைக் கணக்கீட்டுப் பொறி கணிப்பு முறைத் திட்டத்தின் கீழ் ரூ. 74 இலட்சம் செலவில் டி.டி.சி. ( I.D.C. ) 316 கணக்கீட்டுப் பொறியை பெறவிருக்கும் மாநில காவல்படை முதல் அணியில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது. திருவாளர்கள். எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்னும் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஓர் உடன் பாட்டின்படி, அந்த நிறுவனம் இரண்டு கட்டமாக கணக்கீட்டுப் பொறியினை வழங்கி இருக்கிறது. முதல் கட்டம் தொடர்பான இயந்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இவை சோதனைக்குட்படுத்தப்பட்ட பின் இயங்கி வருகின்றன. இரண்டாவது கட்டம் தொடர்பான முதற்பகுதி இயந்திரங்கள் இந்த ஆண்டில் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டம் இரண்டாம் பகுதி சம்பந்தப்பட்ட இயந்திரம் இவ்வாண்டிற்குள் வழங்கப்படலாம்.

**24. புதிய ஊர்திகள் வழங்க ஒப்புதல்.**

அறிக்கை ஆண்டில் பல்வேறு பிரிவுகளுக்கும் 26 ஜீப்புக்கள், 6 அம்பாசிடர் கார்கள், 12 பிக் அப் வேன்கள், 60 மோட்டார் சைக்கிள்கள், 3 ஸ்டாண்டர்டு —20 வண்டிகள். 5 லாரிகள் ஆக மொத்தம் 112 வண்டிகளை ரூ. 48,33,689 செலவில் வழங்க அரசு ஒப்புதல் அளித்தது. காவல் துறையில் தற் தற்போதுள்ள வண்டிகளுக்கு பதிலாக 10 சதவிகிதம் புதிய வண்டிகளை வாங்க ரூ. 1,59,83,000-க்கு மேற்படாத தொகைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனால் சுமார் 186 புதிய வண்டிகள் வாங்கப்பட்டு காவல் துறை மேலும் திறம்பட செயலாற்ற பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**25. போக்குவரத்துப் பணிமனை பயிற்சிப் பள்ளி ஆவடி.**

தமிழ்நாடு காவல் துறை ஆணைக் குழுவின் பரிவுரையின் அடிப்படையில், சென்னை மாநகர காவல் படைக்கும், ஆயுதந் தாங்கிய காவல் அணிக்கும் பயன்படும் விதத்தில் ஆவடியில் போக்குவரத்துப் பணிமனை பயிற்சிப்பள்ளி தொடங்கப்பட்டது. இப்பள்ளி, 1975 டிசம்பர் திங்கள் 20-ம் தேதியிலிருந்து



இயங்கி வருகிறது. 'தற்போது ஆவடியிலுள்ள பணிமனையைத் தரம் உயர்த்துவதற்கும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி ஆகிய இடங்களில் இதைப் போன்ற பணிமனைகளை அமைப்பதற்குமான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**26. தமிழ் நாடு காவலர் நலநிதி.**

காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறாப் பணி யாளர்களுக்கு, இறப்பு, பிணி குறித்து செலவுக்காக நிதி உதவி குறிப்பிட்ட சில பிரிவுகளில் பயிலும் குழந்தைகளுக்கு படிப்புதவி, ஏனைய நல உதவி, பொழுது போக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் நாடு காவலா நல நிதி தொடாந்து செவ்விய முறையில் செயல் பட்டு வருகிறது. காவல் துறையில் பணிபுரியும அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்குத் தொகை திரட்டப் படுகிறது. 1971—72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிதி ஆண்டும் ஒரு மொத்த மானியமாக 1·5 இலட்சம் ரூபாயை அரசும் இந்நிதிக்கு வழங்கி வருகிறது. அறிக்கையாண்டில் ரூ. 2,13,000 வழங்கியது. முந்திய ஆண்டில் ரூ. 1,83,000 வழங்கப்பட்டது.

**27. தமிழ் நாடு கவல் துறை நூற்றாண்டு விழா.**

**படிப்புதவித் தொகை நிதி.**

தமிழ்நாடு காவலர் நலநிதியைத்தவிர தமிழ்நாட்டுக் காவலர் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதியும உள்ளது. காவல்துறை அரசிதழ் பதிவுறா நிர்வாக அதிகாரிகளின் பிள்ளை களில், தகுதியுடையோருக்குக் கல்லூரிகளின் மேலபடிப்பும, தொழில்நுட்பக்கல்வியும் கற்க ஆண்டுதோறும இந்நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்படுகிறது. தனிபபட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள மூலம் இந்நிதிக்கு தொகை திரட்டப் படுகிறது. 1979— 80 ஆம் ஆண்டில் 142 பேருக்கு படிப்புதவித் தொகை வழங்குவதற்காக இந்நிதியிலிருந்து 28,000 ரூபாய் செல விடப்பட்டது.

**28. தமிழ் நாடு காவலர் குடும்ப நல நிறுவனம்.**

தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம் தொடர்ந்து நற் பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு வகுத்த பல்வேறு திட்டங்களின் கீழ், நூற்பு, தையல் வேலை, பாய் முடைதல, ஜமுக்காளம் நெசவு, தீக்குச்சி செய்தல், பட்டாசு வெடி மருந்து வைப்பதற்கான உறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற் பண்ணை, கோழிப் பண்ணை, கைவினைத் தொழில்கள், பனியன்கள் தயாரித்தல் முதலிய பல் வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களின் வருவாயைத் தொடர்ந்து பெருக்குவதில் பெரிதும் துணை புரிகின்றன.

## 29. ஊர் காவல் படை

இந்தத் தொண்டு நிறுவனம், காவல் துறையினருக்குத்
தொடர்ந்து துணைப் படையாகத் திறம்படச் செயல்பட்டு வரு
கிறது. தமிழ் நாட்டிலுள்ள 96 அணிகளில் 24½ அணிகள்
சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 71½ அணிகள் மாவட்டங்
களில் 59 இடங்களில் அமைந்துள்ளன. ஊர்க்காவல் படை
மகளிர் அணிகள் 5 உள்ளன. அவற்றில் 2 அணிகள் சென்னை
நகரிலும் 2½ அணிகள் பாதி பேர் வீதம் ஐந்து மாவட்டத்
தலைமை இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்
தூர், நாகர்கோயில், வேலூர் ஆகிய இடங்களிலும் அமைந்துள்
ளன. இந்த அறிக்கை ஆண்டில், போக்குவரத்தை முறைப்
படுத்தல், இரவு நேரத்தில் ரோந்துப்பணி, தேர்தல்களுக்குப்
பாதுகாப்பு பணி, திருவிழாக்கள், ஏனைய பொது நிகழ்ச்சிகளில்
பாதுகாப்புப் பணி ஆகியவற்றுடன் வெள்ள நிவாரணப் பணிகளி
லும் ஊர்க்காவல் படையினரின் பணி பயன்படுத்தப்பட்டது.
எல்லா வகுப்பினரிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்த, ஊர்க்
காவல் படையினர் பெரும்பாலும் ஆதி திராவிடர்கள் வசித்து
வருவதும் பொருளாதார வகையில் பின்தங்கியதுமான ஒரு
கிராமத்தை மதுரை மாவட்டத்திலிருந்தும் (வடக்கு) கோயம்
புத்தூர் கிராமப்புறம் மாவட்டத்திலிருந்தும் எடுத்துக்கொண்டு
கிராமத்தினருக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுத்
தனர். இம்முறை ஏனைய மாவட்டங்களிலும் பின்பற்றப்படும்.
முதலுதவி, தீயணைப்புப் பணி, உள் நாட்டுப் பாதுகாப்பு ஆகிய
பணிகளிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வெள்ளத்
தால் பாதிக்கப்படும் இடங்களான புதுக்கோட்டை, அறந்தாங்கி,
திருச்சிராப்பள்ளி, குளித்தலை, நாகபட்டினம், வேதாரண்யம்
இராமநாதபுரம், மண்டபம், சிதம்பரம், மதுராந்தகம், பெரம்பூர்,
சைதாப்பேட்டை போன்ற 12 இடங்களில் கிராமப்பகுதி ஊர்க்
காவல் படையினர் பணி புரிகின்றனர். மாநில சட்ட மன்ற
தேர்தலின் போது காவல் துறைப் பணியாளர்களுடன் சேர்ந்து
இந்த ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்புப் பணிகளைச் செவ்
வனே கவனித்தனர். எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஊர்க்
காவலர் படையைச் சேர்ந்த அந்தந்தப் பகுதி தளவாய்களின்,
மாநாடு, உள் துறை, அரசு ஆணையாளர் மற்றும் செயலாளரின்
தலைமையின் கீழ் மதுரையில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்
14ஆம் நாளன்று நடைபெற்றது. செங்கற்பட்டு கிழக்கு,
மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய
மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 ஊர்க்காவலர்
படையினர் 1981ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26ஆம் நாளன்று
சென்னை மாநகரில் நடைபெற்ற குடியரசுத் தின அணிவகுப்பில்
முதன் முறையாகப் பங்கு கொண்டனர்.

## 30. போக்குவரத்து நெறிக் காவல் அமைப்பு.

சென்னை மாநகரக் காவலர் போக்குவரத்து நெறிக் காவலர்
அமைப்பு 1978ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது முற்றிலும்
தானாகவே முன் வந்து செயல்படும் அமைப்பாக உள்ளது.



சென்னையில் 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம்
நாளில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமை வகித்த
ஒரு நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த
அமைப்பு தொடங்கி வைக்கப்பட்டது. இந்த அமைப்பில் முதன்
மைப் பாதுகாவலர் ஒருவர், துணை முதன்மைப் பாதுகாவலர்
ஒருவர், போக்குவரத்துப் பாதுகாவலர் 70 பேர் ஆகியோர்
உள்ளனர். உடற்பயிற்சி, போக்குவரத்துச் சட்டங்கள், போக்கு
வரத்தை ஒழுங்கு படுத்தல் ஆகியவற்றில் 10 நாட்களுக்கு அவர்
களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. போக்குவரத்துப்
பாதுகாப்பைக் கவனிப்பதில் காவலர்களுக்கு உதவி செய்தல்,
பொதுமக்களுடனும், அதிகாரிகளுடனும் ஒத்துழைத்தல்,
விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பது, போக்குவரத்தைக் கட்டுப்
படுத்துவது குறித்துச் சிறந்த திட்டம் ஒன்றை வகுப்பதும், சாலை
யில் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு பற்றி எடுத்து உரைப்பது
ஆகியவை இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். முக்கியப்
பிரமுகர்களின் வருகையின் பொழுது நடக்கும் பெருங்கூட்டங்கள்,
கிரிக்கெட் விளையாட்டின் பொழுது பாதுகாப்பு ஏற்பாடு செய்
தல் போன்ற சமயங்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில்
அவர்கள் இது வரை மிகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்
ளனர்.

## 31. காவலர் வீட்டு வசதித் திட்டம்.

இம்மாநிலத்தில் காவலர் வீட்டு வசதித் திட்டம் 1955–56இல்
வகுக்கப்பட்டது. காவல் துறை சார் நிலைப் பணியாளர்களின்
80 சதவீதத்தினருக்கு வீட்டு வசதி அளிப்பது இத்திட்டத்தின்
நோக்கமாகும். இந்த இலக்கில் இதுவரை 46·2 சதவீதத்தி
னருக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

(2) வீட்டு வசதித் திட்டத்திற்காக மத்திய ஏழாம் நிதி
ஆணைக் குழுவும் 1979 முதல் 1984 வரை ஐந்து ஆண்டுகளுக்கு
ரூ. 6,75 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்துள்ளது. இம்மாநி
லத்தில் 1955–56இல் வீட்டு வசதித் திட்டம் கொண்டு வரப்பட்ட
திலிருந்து 1977–78 வரை ரூ. 9,66.41 இலட்சம் (இதில் மத்திய
அரசு வழங்கிய கடனுதவித் தொகை ரூ. 5,73.34 இலட்சமும்
அடங்கும்.) செலவிடப்பட்டுள்ளது. காவல் துறை சார்நிலை
பணியாளர்களுக்கு இன்ஸ்பெக்டர்களிலிருந்து காவலர்கள் வரை
9,635 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

(3) 1978–79, 1979-80ஆம் ஆண்டுகளுக்கு, 30 இன்ஸ்பெக்டர்
கள், 93 சப்-இன்ஸ்பெக்டர்கள், 257 தலைமைக் காவலர்கள்,
1,887 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டித் தர
அரசு மொத்தம் ரூ. 7,12.32 இலட்சம் வழங்கியுள்ளது. வெவ்
வேறு இடங்களில் இக்குடியிருப்புகள் கட்டும் பணி நடந்தேறி
வருகிறது. இப்பணி முடிக்கப்பட்டால் 80 சதவீத இலக்கில்
50·7 சதவீதம் நிறைவேறியிருக்கும்,

(4) மேற்குறிப்பிட்ட காவலர் வீட்டு வசதித் திட்டத்தைத் தவிர காவலர்களுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் சொந்த வீடுகள் கட்டுவதற்காக காவலர் வீட்டு வசதிக் கழகம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் 1 கோடி ரூபாயாகும். இக்கழகத்தை வரைவல் நிறுவ, 1980ஆம் ஆண்டு காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

32. பதக்கங்கள்.

(1) தமிழ் நாட்டைச் சேர்ந்த 22 காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் 1980ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்களும் காவல் துறையினரின் பதக்கங்களும் வழங்கப்பட்டன. இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் (மறைந்த) திரு. என். ரிச்சர்டின் துணிவுடைமையைப் பாராட்டி அவரது மறைவுக்குப் பின் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

(2) 1980ஆம் ஆண்டில் தன்னிகரற்ற பணியாற்றியதற்காக 37 காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது. துணிவுடைமையைப் பாராட்டி மூன்று காவலர்களுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் காவலர் பதக்கமும், ஒரு இன்ஸ்பெக்டருக்கும், ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும், 5 காவலர்களுக்கும் அவர்களின் துணிவுடைமையைப் பாராட்டி அவர்களது மறைவுக்குப் பின் முதலமைச்சர் காவலர் பதக்கமும் வழங்கப்பட்டன.

33. விளையாடுப் போட்டிகள்.

தமிழ் நாடு காவலர் விளையாட்டுக் குழுவினர் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாள் வரை போபாலில் நடைபெற்ற 24ஆம் அனைத்திந்திய காவலர் பணிப் போட்டியில் கலந்து கொண்டு அறிவியல் சாதனங்களின் உதவியுடன் புலனாய்வு செய்வதில் இரண்டு முதல் பரிசுகளும் நான்கு இரண்டாம் பரிசுகளும் பெற்றனர்.

2. தமிழ் நாடு காவல்துறை 30ஆம் அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டியை 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ஆம் நாள் முதல் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாள் வரை சென்னையில் நடத்தியது. இப்போட்டி இங்கு 23 ஆண்டுகளுக்குப் பின் நடந்தது. இவ் விளையாட்டுப் போட்டியை இங்கு நடத்த அரசு ரூ. 3,15,000 வழங்கியுள்ளது. அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற தென் மண்டல விளையாட்டுப் போட்டி 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7ஆம் நாள் வரை சென்னையில் நடைபெற்றது. இப் போட்டியில் தமிழ் நாடு குழு உட்பட நான்கு தென் மாநிலங்களும் பங்கு கொண்டன.



34. சுற்றுக் காவல் படையினர்.

மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகளை மீறுபவர்களைக் கண்டுபிடிக்கவும் குற்றவாளிகளைக் கைதுசெய்யவும் முன்பு 6 மாவட்டங்களில் அதாவது கோயம்புத்தூர் நகர்ப்புறம், மதுரை தெற்கு, தென்னார்காடு, தஞ்சாவூர் (மேற்கு), திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுற்றுக் காவல் படையினர் செயல்பட்டு வந்தனர். சுற்றுக் காவல்படை ஒவ்வொன்றிலும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், காவலர் இருவர் உள்ளனர். அது போன்ற சுற்றுக் காவல் படைகள் செங்கல்பட்டு கிழக்கு, வடாற்காடு, இராமநாதபுரம் மேற்கு, கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி, நீலகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் 1979 செப்டம்பர் முதல் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறாக, 20 காவல் துறை மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் சுற்றுக் காவல்படையினர் தற்போது செயல்பட்டு வருகின்றனர்.

35. தேர்தல்களும் ஏனைய முக்கியமான பாதுகாப்புப் பணிகளும்.

(1) நாடாளுமன்ற இடைத் தேர்தல்கள் 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்றும் 6 ஆம் நாள் அன்றும் நடைபெற்றன. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல் 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 28 ஆம் நாளன்றும், 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாளன்றும் நடைபெற்றது. காவலர்கள் விரிவான அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து விழிப்புடன் செயலாற்றியதன் பயனாகத் தேர்தல் அமைதியாக நடந்தது.

(2) இவ்வாண்டில், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் திருவிழா கும்பகோணத்தில் 1980 பிப்ரவரி-மார்ச்சில் கொண்டாடப்பட்டது. இத் திருவிழா சமய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் நாட்டில் நடைபெறும் முக்கியமான திருவிழாவாகவும் இருந்ததால் நாட்டின் பல இடங்களிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் குடந்தைக்கு வருகை தந்தனர். சுமார் 7,000 காவல்துறை அதிகாரிகளும் காவலர்களும் பரந்த அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்ததால், திருவிழா மிக அமைதியான முறையில் நடந்தது. இதைப் போன்று 1981 சனவரியில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு பல இலட்சக்கணக்கான மக்கள் வந்து விழாவைக் கண்டு கேட்டு களித்தனர். சுமார், 8,000 காவல்துறை அதிகாரிகளையும் காவலர்களையும் கொண்டு திறமையாகவும், விரிவாகவும் பாதுகாப்பு ஏற்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது. மாநாடு நடைபெற்ற போது மதுரையில் விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏதும் நடக்கவில்லை. இதுவே தமிழ்நாடு காவல்துறையினரின் திறமைக்குச் சான்றாகும்.

36. காவலர்—பொதுமக்கள் நல்லுறவு.

குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்தல்—குற்றங்களைக் கண்டு பிடித்தல் ஆகிய பணிகளில் மட்டுமல்லாமல், சட்டம் ஒழுங்கினை நிலை நாட்டுவதிலும் காவலர் செவ்வனே பணியாற்ற மக்கள் ஆட்சியில் காவலருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு இருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

(2) எல்லா வகையிலும் சிறந்த காவலர் ஒருவரை ஊரே போற்றும். அவரே பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் சிறந்த அதிகாரி ஆவார். இது குறித்து காவலர் மனதில் பொறுப் புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அடிப்படை பணியிருப்புப் பயிற்சி காலமும் நீக்கப்பட்டிருப்பதோடு இதில் அதிக நாட்டமும் தற்போது செலுத்தப்படுகிறது.

(3) பொது மக்கள் தொடர்பு என்பது இன்றைய நிலையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. பரந்த அளவில் அதிகாரங்களையும் கொண்டு சமூகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியிருக்கும் காவல்துறை போன்ற பெரிய துறை எதுவும் பொது மக்களுடன் நல்லுறவு வைத்திருப்பதில் வல்லுநரின் ஆலோசனையின்றிச் செயல்பட முடியாது. சிறுவர் சங்கங்கள், சிறுவர் போக்குவரத்துப் பூங்காக்கள், போக்குவரத்து வாகனங்கள், பொருட்காட்சிகளில் காவல்துறை அரங்குகள் போன்ற தனி முயற்சிகள் மூலம் காவலர்-பொது மக்களிடையே நிலவி வரும் நல்லுறவை மேம்படுத்தப் பாடுபடுவது உண்மையே. ஆனாலும் இவற்றால் இப்பிரச்சினையை ஓரளவிற்குத் தான் அணுக முடிகிறது. இவையாவும், உள நூல் அறிவியலிலும் அதனை யொட்டிய முறைகளிலும் இருந்து எழுவதாயில்லை, தமிழ் நாட்டில் காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே அவ்வப்போது விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இவ்வகைப் போட்டிகள் காவல்துறையினர்—பொது மக்களிடையே நிலவி வந்த நல்லுறவு மேலும் வளருவதற்கு உதவியதோடு விளையாட்டு வீரர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தின, அப்படிப்பட்ட விளையாட்டு வீரர் ஒருவர் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அளவிற்கு உயர்ந்துள்ளார்.

37. காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்.

(1) கூடுதலாக ஓர் ஊதிய உயர்வினை அளித்தல்:— 1979 இல் நடைபெற்ற காவலர் கிளர்ச்சியின்போது கடமையை உணர்ந்து செயலாற்றிய காவல் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் (இன்ஸ்பெக்டர் பதவி தரத்திலும் அதற்குக் குறைவான பதவித் தரத்திலும் உள்ளவர்களுக்கு) ஓர் ஊதிய உயர்வு கூடுதலாக வழங்கப்பட்டது.

(2) இடர்ப் படி.—காவல்துறையின் எல்லாப் பிரிவுகளிலும் பணியாற்றுகின்ற காவல்துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் காவலர்கள் நிலை-2இலிருந்து இன்ஸ்பெக்டர்கள் வரை திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 இடர்ப் படி வழங்கப்பட்டுள்ளது. காவல்துறை டெபுடி சூப்பிரண்டுகளுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 வழங்கப் பட்டுள்ளது.



(3) துணிப் படி.—குற்றப் புலனாய்வுத் துறை, மாவட்ட தனிப்பிரிவுகள் மற்றும் இரயில்வே சேர்ந்த காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும், திங்கள் ஒன்றுக்கு துணிப் படியாக ரூ. 1.87 வழங்கப்பட்டது. இப்படியை திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

(4) மலிவான விலையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குதல்.—காவல் துறைப் பணியாளர்களுக்கு (காவல் துறை இன்ஸ்பெக்டர் பதவி முதல் கீழ்நிலை வரை) 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து சகாய விலையில் இன்றியமையாப் பொருட்கள் சிலவற்றை வழங்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. காவல் துறை சார்நிலைப் பணியாளர் ஒருவர் குடும்பத்திற்கு காவல்துறை பணியாளரைச் சேர்த்து அவரது குடும்பத்தில் அதிக பட்சம் நான்கு பேர்களுக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் சகாய விலையில் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்படுகிறது. வழங்கப்படுகிற உணவுப் பொருட்கள், உணவுப் பொருட்களின் அளவு, அரசு வழங்கும் உதவித் தொகை ஆகிய விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் பண்டங்களும். | ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு வழங்கப் படும் பொருட் களின் அளவு. | கி. கிராம் ஒன்றுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை. |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 1 அரிசி .. .. .. | 6 கி.கி. | 1 00 |
| 2 துவரம்பருப்பு .. .. | 1 கி.கி. | 2 50 |
| 3 உளுத்தம் பருப்பு .. | 1 கி.கி. | 2 00 |
| 4 பாமோலின் எண்ணெய் .. | 1 கி.கி. | 4 10 |
| 5 சர்க்கரை (சென்னை மாநகரமும் அதன் எல்லையோரப் பகுதியும்) .. .. | 1¼ கி.கி. | 1 40 |
| சர்க்கரை (ஏனைய மற்ற பகுதிகளுக்கு) .. .. | 3/4 கி.கி. | 1 40 |
| 6 கோதுமை .. .. | ½ கி.கி. | 0 70 |
| 7 ரவை * .. .. .. | 3/4 கி.கி. | 0 90 |
| 8 மைதா .. .. .. | 3/4 கி.கி. | 0 95 |

இணைப்புகள்

*இரண்டு பண்டங்களில் ஏதாவது ஒன்றோ அல்லது இரண்டு பண்டங்களும் சேர்ந்தோ ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 750 கிராம் எடையளவுக்கு மேற்படலாகாது.

காவல் துறை பணியாளர்கள் எவ்வளவு பொருட்களை வாங்குகின்றனரோ அவற்றிற்குரிய அங்காடி விலைக்கும் அரசு வழங்கும் உதவித் தொகைக்குமுள்ள வித்தியாசத்தை காவல் துறை பணியாளர்கள் ஏற்கின்றனர்.

வழங்கப்படும் பொருட்களின் அளவையும் உதவித் தொகையின் அளவையும் இனிமேல் மாற்ற வேண்டியது அவசியமென அரசு கருதினால், அவ்வாறே திருத்தியமைக்கும்.

(5) வீட்டு வாடகைப் படி.—வாடகை இன்றி குடியிருப்புகள் வழங்கப்படாத காவல் துறைப்பணியாளர்களுக்கு வீட்டுவாடகைப் படி வீதத்தை 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:

சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டத் தலைமையிடங்களிலும் வாடகை இன்றி குடியிருப்புகள் வழங்கப்படாத காவல் துறைப் பணியாளர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50.

மாவட்டத் தலைமையிடங்கள் தவிர ஏனைய இடங்களில் வாடகை இன்றி குடியிருப்புகள் வழங்கப்படாத காவல் துறைப் பணியாளர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30.

(6) சீருடை மானியம்.—இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கு இலவசமாகச் சீருடைகள் வழங்குவதற்குப் பதிலாக வழங்கப்படும் சீருடை மானியம் இவ்வாண்டில் உயர்த்தப் பட்டது. அதன் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் வகையும். | முன்னர் கொடுக்கப் பட்ட வீதம். | திருத்தப் பட்ட வீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1 சமவெளிகளில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. | 80 | 100 |
| 2 மலைப் பகுதிகளில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. | 100 (நீலகிரி மாவட்டக்கில்) | 125 |



இணைப்புகள்

| தொடர் எண்ணும் வகையும். | முன்னர் கொடுக்கப் பட்ட வீதம். | திருத்தப் பட்ட வீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 3 சமவெளிகளில் பணிபுரியும் சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. | 60 | 75 |
| 4 சென்னை மாநகரில் பணி புரியும் சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 100 | 125 |
| 5 மலைப் பகுதிகளில் பணி புரியும் சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. | 80 (நீலகிரி மாவட்டத்தில்) | 100 |

38. ஏவலர்கள் நியமன முறையை நீக்குதல்.

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் முதல் ஏவலர்கள் நியமன முறை, காவல் துறையிலிருந்து அடியோடு நீக்கப்பட்டது. ஏவலர்களுக்குப் பதிலாக '' பாதுகாப்புப் பணியாளர் '' என்ற புதிய வகையினரை நியமிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

39. காவல் துறையினரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

இவ்வாண்டில், கூடுதலாக 2,966 பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே கூறியுள்ள 2 புதிய சிறப்புக்காவல் படைகளுக்க க கூடுதலாக ஏற்படுத்தப் பட்டுள்ள பதவிகளின் விவரங்கள் இணைப்பு III-இல் கொடுக்கப் பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட முக்கியமான பதவிகள் வருமாறு :—

(1) காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல்-ஒருங்கிணைத்தல்) பதவிக்கு பதிலாக காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல் - ஒருங்கிணைத்தல்) பதவி ஏற்படுத்தப்பட்டது.

(2) காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (நிர்வாகம்), டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (குற்றப் புலனாய்வுத் துறை), டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (குற்ற புலனாய்வுத் துறை, நுகர் பொருள் வழங்கல்), காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (ஊர்க்காவல் படை, உள் நாட்டுப் பாதுகாப்பு) ஆகிய பதவிகள் எடுத்துவிடப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பதிலாக காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (நிர்வாகம்), கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (குற்றப் புலனாய்வுத் துறை), காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (குற்றப் புலனாய்வுத் துறை, நுகர் பொருள் வழங்கல்) கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (ஊர்க்காவல் படை, உள்நாட்டு பாதுகாப்பு) ஆகிய 4 பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(3) மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல் படுத்தவும் ஆதி திராவிடர்கள் நலனை பாதுகாக்கவும் ஒரு காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(4) காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு (திட்ட மிடுதல்-ஒருங்கிணைத்தல்) உதவிபுரிய காவல் துறை உதவி இன்ஸ் பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல்-ஒருங்கிணைத்தல்) ஐ.பி.எஸ். முதுநிலைச் சம்பள வீதத்தில் பதவி ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(5) குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவை சீரமைக்க 1 காவல் துறை சூப்பிரண்டு, 1 டெபுடி சூப்பிரண்டு, 1 ரிசர்வ் இன்ஸ்பெக்டர், 8 டெபுடி இன்ஸ்பெக்டர்கள், 1 சப்-இன்ஸ் பெக்டர், 1 ரிசர்வ்-சப்-இன்ஸ்பெக்டர், 15 தலைமைக் காவலர் கள், 56 காவலர்கள் நிலை II, ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர், 5 இளநிலை உதவியாளர்-தட்டச்சர் ஆகியோரைக் கூடுதலாக நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(6) தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் காரணமாக வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை அதிகரித்து வருவதால், அவற்றைச் சமாளிக்கக் கூடுதலாக 1 காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, 2 இன்ஸ்பெக்டர்கள், 5 டெபுடி இன்ஸ் பெக்டர்கள், 7 சப்-இன்ஸ்பெக்டர்கள், 10 உதவி சப்-இன்ஸ் பெக்டர்கள், 2 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 2 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 51 தலைமைக் காவலர்கள் 12 நாயக்குகள் 8 லான்ஸ், நாயக்குகள், 11 காவலர்கள் நிலை I, 369 காவலர்கள் நிலை II ஆகியோரை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(7) இவ்வாண்டில், அலுவலகப் பணிகளில் கூடுதலாக 4 நேர்முக உதவியாளர்கள் (நிர்வாகம்), 9 கண்காணிப்பாளர்கள், 51 உதவியாளர்கள், 49 இளநிலை உதவியாளர்கள், 1 சுருக் கெழுத்துத் தட்டச்சர், 8 தட்டச்சர்கள் ஆகியோரை நியமிக்க அனுமதி வழங்கியுள்ளது.





**40. காவல் துறை மாவட்டங்களையும் காவல் நிலையங்களையும் கூடுதலாக் காவல் படையினரையும் நியமித்தல்.**

ஆய்வு ஆண்டில் செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம், அம்பத் தூரில் புதிய உட்கோட்டத்திற்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில், "ஆவுடையார்கோயில் வட்டம்" என்னும் பிரிவிற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

(2) இவ்வாண்டு, சென்னை நகரில் சாஸ்திரி நகர், கோட்டூர் புரம், பேசின்பாலம், வட ஆற்காடு மாவட்டத்தில், ஏலகிரி, குருசிலம்பட்டி, தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, செங்கற் பட்டு கிழக்கு மாவட்டத்தில் ஆதர்பாக்கம், இராஜமங்கலம், திருநெல்வேலி மாவட்டத்தில் முக்கூடல், கல்லிடைக் குறிச்சி, தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் பைங்காட்டூர், கலப்பல், இடையூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்பேதி, திருபுவனவாசல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தாத்தூர், கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மாவட்டத்தில் காடம்பாறை ஆகிய இடங்களில் 17 காவல் நிலையங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப் பட்டது. சென்னை நகரில், தலைமைச் செயலகக்குடியிருப்பு, டி.பி. சத்திரம், தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம், வடபாதி மங்கலம் ஆகிய இடங்களில் உள்ள புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன. இவை தவிர சென்னை நகரில், அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சீனிவாசபுரம், தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் திருவேந்துரை, விக்ரபாண்டி தேவதானம், தேவன்குடி, மன்னார்குடி ஆகிய இடங்களில் 8 புறக்காவல் நிலையங்களை புதிதாக ஏற்படுத்த அனுமதி வழங்கப் பட்டது.

(3) சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கும் பொருட்டு முக்கியமான பகுதிகளில், காவல் பணி புரியவும், ரோந்துசுற்றி வரவும் முன்னாள் படைவீரர்கள் 350 பேரை வேலைக்கு அமர்த்தும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. மதுரை நகரிலும், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல் வேலி, வேலூர், கடலூர், தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலும் ரோந்துப் பணிக்காக முன்னாள் படைவீரர்கள் 560 பேரை வேலைக்கமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**41. காவலர் ஒழுங்கு உணர்வு.**

கட்டுப்பாட்டுடனும் ஆர்வத்துடனும் தொடர்ந்து தங்கள் கடமையைச் செவ்வனே ஆற்றி காவல் துறையினர், அனை வருடைய நன்மதிப்பையும் பெற்றுள்ளனர்.

## இணைப்புகள்

### இணைப்பு 1.

(பத்தி—2)

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளபடி காவல்படையினர் எண்ணிக்கை.—

| | |
|---|---|
| காவல் துறை டைரக்டர்-ஜெனரல் .. .. .. | 1 |
| காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் .. .. | 5 |
| காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் .. | 4 |
| காவல் துறை கமிஷனர் .. .. .. .. | 1 |
| காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் .. | 11 |
| காவல் துறை சூப்பிரண்டு .. .. .. .. | 42 |
| காவல் துறை கூடுதல் சூப்பிரண்டு .. .. .. | 21 |
| காவல் துறை டெபுடி கமிஷனர் (ஆயுதம் தாங்கிய சேமக்காவற்படை) .. .. .. .. | 1 |
| காவல் துறை இணை சூப்பிரண்டு .. .. .. | 5 |
| தளவாய்கள் .. .. .. .. .. .. | 6 |
| காவல் துறை கூடுதல் சூப்பிரண்டு .. .. .. (ஆயுதம் தாங்கிய சேமக்காவற்படை). | 2 |
| துணை தளவாய்கள் .. .. .. .. | 3 |
| காவல் துறை உதவி சூப்பிரண்டு .. .. .. | 12 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு நிலை 1 .. .. | 175 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு நிலை 2 .. .. | 27 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு நிலை 3 .. .. | 21 |
| இன்ஸ்பெக்டர்கள், அட்ஜுடண்ட் இன்ஸ்பெக்டர்கள். . | 733 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 84 |
| டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 254 |
| சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 2,340 |
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 308 |
| உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 850 |
| ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள். . .. .. | 164 |
| தலைமைக் காவலர் .. .. .. .. | 4,690 |



| | |
|---|---|
| ஹவில்தார் .. .. .. .. .. | 459 |
| நாயக்குகள் .. .. .. .. .. .. | 430 |
| லான்ஸ் நாயக்குகள் .. .. .. .. .. | 385 |
| காவலர்—நிலை I .. .. .. .. .. | 4,559 |
| காவலர்—நிலை II .. .. .. .. | 34,810 |
| பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 82 |
| பெண் தலைமைக் காவலர்கள் .. .. .. .. | 64 |
| பெண் காவலர் நிலை 1 .. .. .. .. | 62 |
| பெண் காவலர்—நிலை II .. .. .. .. | 600 |
| மொத்தம் .. | 50,721 |

## இணைப்பு II

(பத்தி—39).

1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை அனுமதி அளிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களின் எண்ணிக்கை.—

### நிர்வாகப் பணியாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் | 1 |
| 2. | காவல் துறை-டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல். | 1 |
| 3. | காவல் துறை சூப்பிரண்டு | 4 |
| 4. | கூடுதல் சூப்பிரண்டு | 2 |
| 5. | தளவாய் | 1 |
| 6. | காவல் துறை டெபுடி சூப்பிரண்டு | 17 |
| 7. | இன்ஸ்பெக்டர்கள் | 31 |
| 8. | ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் | 4 |
| 9. | டெபுடி இன்ஸ்பெக்டர்கள் | 25 |
| 10. | சப்-இன்ஸ்பெக்டர்கள் | 209 |
| 11. | ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் | 13 |
| 12. | உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 29 |
| 13. | ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 10 |
| 14. | தலைமைக் காவலர் | 308 |
| 15. | நாயக்குகள் | 14 |
| 16. | லான்ஸ் நாயக்குகள் | 8 |
| 17. | காவலர்—நிலை I | 121 |
| 18. | காவலர்—நிலை II | 1,990 |
| | மொத்தம் .. | 2,788 |



### அமைச்சுப் பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | நேர்முக உதவியாளர் | 4 |
| 2. | கண்காணிப்பாளர் | 9 |
| 3. | உதவியாளர் | 51 |
| 4. | இளநிலை உதவியாளர் | 49 |
| 5. | தட்டெழுத்து சுருக்கெழுத்தர் | 1 |
| 6. | தட்டச்சர் | 8 |
| | | 122 |

### ஏனைய பணியாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | கைரேகை நிபுணர் | 31 |
| 2. | நிழற்படம் எடுப்பவர் | 1 |
| 3. | தொழில் நுட்ப அலுவலர் (காவல் துறை வானொலிப் பிரிவு) | 4 |
| 4. | தொழில் நுட்ப உதவியாளர் (கம்பியில்லாத் தந்தி) | 7 |
| 5. | வானொலி மேற்பார்வையாளர் | 7 |
| 6. | பதிவேடு எழுத்தர் | 2 |
| 7. | அரசு அடிப்படைப் பணியாளர்கள் | 4 |
| | | 56 |

## இணைப்பு III.

(பத்தி—39)

இரண்டு தமிழ் நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கு நியமிக்கப்பட்ட கூடுதல் காவல் துறையினர் விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| தளவாய் .. .. .. .. .. .. | 2 |
| உதவித் தளவாய்கள் .. .. .. .. | 8 |
| இன்ஸ்பெக்டர்கள், அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்கள். | 18 |
| சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 42 |
| உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 12 |
| அவில்தார்கள் .. .. .. .. .. | 200 |
| நாயக்குகள் .. .. .. .. .. | 184 |
| லான்ஸ் நாயக்குகள் .. .. .. .. | 184 |
| காவலர்கள் (இரண்டாம் நிலை) .. .. .. | 1,272 |
| | 1,822 |
| அமைச்சுப் பணியாளர்கள்— | |
| கண்காணிப்பாளர்கள் .. .. .. | 6 |
| உதவியாளர்கள்.. .. .. .. .. | 6 |
| இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 32 |
| தட்டச்சர்கள் .. .. .. .. | 2 |
| சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. .. .. | 2 |
| பதிவேடு எழுத்தர்கள் .. .. .. .. | 2 |
| | 50 |
| தொழில் நுட்பப் பணியாளர்கள்— | |
| வானொலி மேற்பார்வையாளர்கள் .. .. | 2 |
| வானொலி தொழில் நுட்ப வல்லுநர்கள் .. | 4 |
| | 6 |
| பிற பணியாளர்கள்— | |
| சமையற்காரர்கள் .. .. .. .. | 56 |
| துப்புரவுப் பணியாளர் மற்றும் தண்ணீர் கொண்டு வருபவர்கள் .. .. .. .. .. | 54 |
| | 110 |



## இணைப்பு .II

[45ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### 1980–81.

### ஆய்வுரை.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை 1967ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது. நமது நாட்டிலேயே பெரியது எனவும் மிகத் திறமை வாய்ந்த தீயணைப்புத் துறைகளுள் ஒன்றாகவும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை பெயர் பெற்றுச் செயல்பட்டு வருகிறது. மக்களின் உயிரையும், உடைமையையும் தீ விபத்துக்களிலிருந்தும், பிற விபத்துக்களிலிருந்தும் காத்து வருவதே தீயணைப்புத் துறையின் நோக்கமாகும். பொதுமக்களுக்கு எந்த நேரத்திலும் சேவை செய்வதற்காக இத்துறை இயங்கி வருகிறது.

2. தீ விபத்தைத் தடுப்பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய செயலாயினும், மக்களின் நலனுக்காகப் பல வகையில் இத்துறை நற்பணியாற்றுகிறது. பொருட்காட்சிகளிலும் திருவிழாக்களிலும் தீ பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதுடன், இடிந்து விழுந்த கட்டிடங்கள், வெள்ளம், கிணறுகள் முதலிய இடர்பாடுகளில் சிக்கிக்கொண்டவர்களையும் கால்நடைகளையும் காப்பாற்றி வரும் வகையில் இத்துறை அரும்பணியாற்றி வருகிறது. நோயுற்றவர்களையும், காயமடைந்தவர்களையும் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு உடனே கொண்டு செல்லும் ஊர்திகள் பெரிய நகரங்களில் ஆயத்தமாக வைக்கப்பட்டுள்ளன. தொத்து நோய்கள் பெருவாரியாகப் பரவும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும் உதவுகிறது. கலவரங்களின்போதும், பொதுத் தேர்தல்களின்போதும் பாதுகாப்புப் பணியில் பங்குகொள்ள, காவல் துறையினருக்கு உதவியாக தீயணைப்பு பணியாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இது போன்ற பல்வேறு மனிதாபிமானப் பணிகளைத் தவிர பொது மக்கள் கூடும் இடங்கள் பற்றிய சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், சென்னை மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், படைக்கலச் சட்டம், அச்சட்டங்களின்கீழ் இயற்றப்பட்ட விதிகள், தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் ஆகியவற்றின்படி உரிமங்கள் வழங்கப்பட்ட அல்லது உரிமங்கள் வழங்கப்படவிருக்கிற இடங்களை ஆய்வு செய்யும் பணியையும் இத்துறை அலுவலர்கள் கவனிக்கின்றனர்.

3. **பணியாளர் எண்ணிக்கை :**

1981ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புப் பணியிலுள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை இணைப்பில் குறிக்கப்பட்டுள்ளது.

4. தீயணைப்பு நிலையங்கள் :

நம் மாநிலத்தில் 1981ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 119 தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் 14 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரிலும், 105 தீயணைப்பு நிலையங்கள் வெளியூர்களிலும் அமைந்துள்ளன. 1979–80ஆம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்ட 20 தீயணைப்பு நிலையங்களில் எட்டு தீயணைப்பு நிலையங்களும், சென்னை நகரில் மேலும் ஒரு தீயணைப்பு நிலையமும் (வ.உ.சி. நகர்) ஏற்படுத்தப்படாமலுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் மேலும் 10 தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி மொத்தம் 19 தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஏற்கெனவே வாங்கப்பட்ட அடிச்சட்டங்கள் மீது நகரும் நீர் தாங்கிகள் கட்டப்பட்டவுடன் இத்தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். தீயணைப்பு நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்குரிய மனைகளைப் பெறுவதற்கான தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் தேவையைக் கருதி 19 தீயணைப்பு நிலையங்களையும் தொடக்கத்தில் வாடகை இடத்திலாவது அமைப்பதற்குச் சிறப்பு நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. தியணைப்பு உதவி அழைப்புகள் :

1980ஆம் ஆண்டு இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் 10,486 முறை உதவிக்கான அழைப்புகளைப் பெற்றன. இவற்றுள் 141 அழைப்புகள் போலியானவை. 1,378 அழைப்புகள் அவசர மீட்புப் பணிகளுக்கானவை. மீதமுள்ள 8,967 அழைப்புகளும் உண்மை தீ விபத்துக்களுக்கானவை. இவற்றில் 100 தீ விபத்துக்கள் மிகவும் கடுமையானவை. இதில் பலர் உயிரிழந்தனர். ஒவ்வொன்றிலும் ரூ. 50,000க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டது. இம் மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால் சேதமடைந்த பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 420.70 இலட்சமாகும்.

6. மீட்புப் பணி வேண்டல் :

1980ஆம் ஆண்டில் 1,378 விரைவு மீட்புப் பணிகளுக்கான வேண்டுதல்கள் வந்தன. அவை உடனடியாகக் கவனிக்கப்பட்டன. தீயணைப்புப் படையினர் அல்லும் பகலும் அயராமல், மக்கட் சேதத்தையும் பொருட் சேதத்தையும் தவிர்க்க அரும்பாடுபட்டுச் சீரிய சேவை செய்தனர். பொதுமக்களும், செய்தித்தாள்களும் இத்தீயணைப்புப் படையினரின் பணியைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.



7. அவசர சிகிடசை ஊர்திகள்

தீயணைப்புப் பிரிவுகளைத் தவிர நகரத்தின் தேவைக்கேற்ப அவசர சிகிச்சைக்காக நோயாளிகளை உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் ஊர்திகளும் தீயணைப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1981ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதி நிலவரப்படி மொத்தம் 62 ஊர்திகள் இத்துறையில் உள்ளன. 1980ஆம் ஆண்டு மட்டும் இவ்வூர்திகள் 6,128 முறை அழைக்கப்பட்டு செயல்பட்டன. இவற்றில் 388 முறை விபத்துக்களுக்காகவும், பிற பணிகளுக்காகவும் அழைக்கப்பட்டன. மீதமுள்ள 5,740 அழைப்புகளுக்குச் சென்று துணை புரிந்ததற்காக உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டது. நோயாளிகளைச் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளுக்கு ஊர்திகளில் கொண்டு சென்றமைக்கு வாடகைக் கட்டணமாக ரூ. 1,54,661 வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது

8. ஊர்தி விபத்து உதவி வண்டி :

இத்துறையில் விபத்து உதவி ஊர்தி ஒன்று உள்ளது. தென் சென்னைக் கோட்டத்தைச் சேர்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் இவ்வூர்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்த ஊர்திகளைத் தூக்கி அகற்றவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின்போது பெரும் பாரமான கட்டிடப் பகுதிகளை அகற்றவும் இது பயன்படுத்தப்படுகிறது. இதுபோன்ற பணிகளுக்காக 26 முறை பயன்பட்டு அதற்கான வாடகைக் கட்டணமாக ரூ. 6,128-ம் வசூலிக்கப்பட்டது.

9. பணிமனை மற்றும் பழுது பார்க்கும் அணி :

இத்துறையின் வண்டிகள், எந்திரங்கள், கருவிகள் முதலியவற்றைப் பழுது பார்ப்பதற்காகப் பட்டறை ஒன்று இத்துறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கோட்டத் தலைமையிடத்திலும், நடமாடும் பழுது பார்க்கும் அணி, கோட்டங்களிலுள்ள ஊர்திகளைப் பழுது பார்த்துச் செப்பனிடுகிறது.

10. பரிசு :

இவ்வாண்டில் சிறப்புப் பணியாற்றிய 9 தீயணைப்புப் பணியாளர்களுக்கு '' தீயணைப்புச் சேவைப் பதக்கம் '' 1980ஆம் ஆண்டு விடுதலைத் திருநாளன்று வழங்கப்பட்டது. சிறப்பாகப் பணியாற்றியமைக்கு இரு தீயணைப்புப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதல் அமைச்சரின் பதக்கமும் வழங்கப்பட்டது.

11. தீயணைப்புத் துறைப் பணியாளர் நல நிதி :

தமிழ்நாடு தீயணைப்புத் துறைப் பணியாளர் நல நிதி 1962 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தீயணைப்புப் பணியாளர்கள் இடர்ப்படும்போது அவர்களின் துயர் துடைத்து நலம் காக்க நிதியுதவி செய்வதே இதன் நோக்கமாகும். இத்துறையைச் சேர்ந்த பணியாளர்களோ, அவர்களை நம்பியிருப்பவர்களோ, காச நோய், தொழு நோய், புற்று நோய் போன்ற நோய்களால் அவதிப்படும்போது அவர்களின் சத்துணவுக்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. பணியாளர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்கும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணம் அளிக்கவும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு ஈமச் சடங்கு செய்யவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதியிலிருந்து பணிக் காலத்தில் எவ்வித நிதியுதவியும் பெறாதவர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும்பொழுது அடையாள மானியத் தொகை இந்த நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது. இத்துறையில் பணிபுரியும் 3,397 பணியாளர்கள் இத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 1980 ஆம் ஆண்டில் சந்தாத் தொகையாக இவர்களிடமிருந்து ரூ. 41,402.67 வசூலிக்கப்பட்டிருக்கிறது. 1980–81-ல் இந் நிதியிலிருந்து ரொக்க நிவாரணமாக ரூ. 11,644.75 அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும் அரசு இந்நிதிக்கு ஒரு மொத்த மானியமாக ரூ. 10,000 வழங்கியுள்ளது.

12. பயிற்சி :

சென்னையிலுள்ள தீயணைப்புத் துறையின் மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது. பணியாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளும், இதர வகுப்புகளும் இப்பள்ளியில் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிப் பள்ளி தீயணைப்பு கோட்ட அலுவலரின் கீழ் செயல்படுகிறது. அவருக்கு தீயணைப்பு நிலைய அலுவலர்களும், முன்னணி தீயணைப்போர் இருவரும் உதவி புரிகின்றனர். இவ்வாண்டில் தீயணைப்பு நிலைய அலுவலர்களுக்கும் தீயணைப்போருக்கும் இரு பயிற்சி வகுப்புகளும் முன்னணி தீயணைப்போருக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன. மொத்தத்தில் 220 பேருக்கு இவ்வாண்டில் பயிற்சி அளிக்கப்பட்டது.

13. பணியாளர் நலத் திட்டம் :

தீயணைப்பு உதவி கோட்ட அலுவலர் பதவித் தரத்திலும் அதற்குக் குறைந்த பதவித் தரத்திலுமுள்ள அனைத்துத் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் இன்றியமையாத சில உணவுப் பொருட்களை அரசு குறைந்த விலையில் வழங்கியுள்ளது. இத்திட்டம் 1–1–1981 நாள் முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 33 இலட்சம் ரூபாய் செலவாகும். இத்திட்டத்தினால் 3,974 பேர் பயனடைவர்.



(அ) காவல் துறை பணியாளர்களுக்கு அளிப்பதுபோல் அதிக வீட்டு வாடகை கொடுத்து குடியிருக்கும் தீயணைப்புத் துறை கீழ் நிலைப் பணியாளர்களுக்கும் அச் செலவை ஈடுகட்ட அதிகரித்த வீதத்தில் வீட்டு வாடகைப் படி அளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

(ஆ) நிதி நிலையைக் கருதி இவ்வாண்டில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் பணியாளர்களுக்கு ரூ. 40.5 இலட்சம் செலவில் குடியிருப்பு கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது.

14. பொது :

இத்தீயணைப்புத் துறையிடம் பொதுவாகப் பல முக்கியமான நவீன கருவிகள் இல்லாத காரணத்தால் சென்னை மாநகரிலும் அதைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் உள்ள அதிக உயரமான பல மாடிக் கட்டிடங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டால் விரைவாக அணைப்பதும், அக்கட்டிடங்களில் சிக்கிக்கொண்டவர்களை மீட்பதும் பெரிய பிரச்சினையாக உள்ளது. சமீபத்தில் '' ஸ்நார்க்கல் '' என்னும் நவீன சாதனங்கள் கொண்ட பெரிய எந்திரம் ஒன்றை இங்கிலாந்து நாட்டிலிருந்து ரூ. 42 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி அளித்தது. இச் சிறப்பு எந்திரம் இங்கிலாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு 25–3–1980 ஆம் நாள் முதல் இத்துறையில் உள்ளது. 13–2–1981 அன்று பழம் பெரும் நிறுவனமாகிய ஸ்பென்சர் கட்டிடத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டபோது மேற்படி ஸ்நார்க்கல் என்னும் எந்திரத்தை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது தான் அவ்வூர்தியின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர முடிந்தது. இந்த நவீன எந்திரம் இல்லையெனில் அத் தீவிபத்தை தீவிரமடையாமல் உடனே கட்டுப்படுத்தி இருக்க முடியாது. விபத்தின்போது அங்கு குழுமியிருந்த பொதுமக்களும், உயர் அதிகாரிகளும், பிறரும் தீயணைப்புப் படையினரின் செயல் திறமையைக் கண்டு பெரிதும் பாராட்டினர். அரசு கேட்டுள்ள மத்திய அரசின் கடன் தொகை கிடைக்கப்பெற்றால், இத்தகைய சிறந்த நவீன எந்திரத்தை மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற முக்கிய நகரங்களிலும் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக இவ்வாண்டில் இத்துறை அனைவரும் பாராட்டும் வகையில் நற்பணியாற்றியுள்ளது.

## இணைப்பு

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி அனுமதிக்கப்பட்டுள்ள தீயணைப்புத் துறை பணியாளர்களின் எண்ணிக்கை:—

| தொடர்வகை எண்ணும் பதவிப் பெயரும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. நிர்வாக அதிகாரிகள் :— | |
| 1 தீயணைப்புத் துறை இயக்குநர் .. | 1 |
| 2 தீயணைப்புத் துறை துணை இயக்குநர் .. | 2 |
| 3 தீயணைப்பு கோட்ட அலுவலர்கள் .. | 9 |
| 4 தீயணைப்பு உதவி கோட்ட அலுவலர்கள் .. | 9 |
| 5 தீயணைப்பு உதவி கோட்ட அலுவலர்.. (போக்குவரத்து) .. | 1 |
| 6 தீயணைப்பு நிலைய அலுவலர்கள் .. | 133 |
| 7 நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) .. | 9 |
| 8 (தலைமை) முன்னணித் தீயணைப்போர்கள்.. | 447 |
| 9 ஓட்டுநர் எந்திரக் கம்மியர் .. .. | 119 |
| 10 தீயணைப்புக் கம்மியர்கள் .. .. | 8 |
| 11 தீயணைப்பு ஓட்டுநர்கள் .. .. | 681 |
| 12 தீயணைப்பாளர்கள் (தீயணைப்புக் காவலர்கள் மற்றும் அவர்களுக்கு நிகரான பதவி யிலுள்ளவர்களும்) | 2,565 |
| 13 பற்றவைப்பாளர் .. .. | 1 |
| 14 தீயணைப்புத் தச்சர் .. .. | 1 |
| | 3,986 |



| தொடர் வகை எண்ணும் பதவிப் பெயரும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 2. நிர்வாகப் பணியாளர்கள் :— | |
| 1 தீயணைப்புத் துறை இயக்குநரின் நிர்வாக நேர்முக உதவி அலுவலர் .. | 1 |
| 2 கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) .. | 4 |
| 3 கண்காணிப்பாளர்கள் .. .. | 9 |
| 4 உதவியாளர்கள் .. .. | 32 |
| 5 இளநிலை உதவியாளர்கள் .. .. | 39 |
| 6 சுருக்கெழுத்து தட்டச்சர்கள .. .. | 3 |
| 7 தட்டச்சர்கள் .. .. | 14 |
| 8 பதிவு எழுத்தர்கள் .. .. | 10 |
| 9 அடிப்படை ஊழியர்கள் .. .. | 25 |
| | 137 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 மே 6.

சித்திரை 24, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் ''

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில் ; பழி அன்று.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 987 முதல் 990 வரை மாண்புமிகு நிதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

**ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கோரிக்கைகள்.**

* வினா எண் 991—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் 5 அம்ச கோரிக்கை வைத்து போராடி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அவர்கள் கோரிக்கைகள் என்ன ?

(இ) அவைகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) (1) உடற்பயிற்சி ஆசிரியரின் பற்றாக் குறை நிவர்த்தி செய்திடுதல் ;

(2) கழிவறை வேண்டுதல்;

(3) பள்ளிக் கட்டட வசதியும், இருக்கை வசதியும்;

(4) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தங்கும் விடுதி வசதி ;

(5) மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றாக் குறையைப் பூர்த்தி செய்தல்.

(இ) கோரிக்கைகள் 1 மற்றும் 2-ல் கேட்டுள்ளபடி, இப்பள்ளிக்கு கூடுதல் உடற் பயிற்சி ஆசிரியர் பணியிடம் அனுமதிக்கக்கோரியும், கழிவறை கட்டுவதற்கும் மாவட்டக் கல்வி அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும் கோரிக்கைகள் 3 மற்றும் 4-ல் கேட்டுள்ளபடி, பள்ளிக்குரிய கட்டடங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவை வருங்காலத்தில் ஏற்படுத்தித் தரப்படுமென உறுதி அளிக்கப்பட்டது. கோரிக்கை 5-ல் கேட்டுள்ள மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் கணிதப்பாட ஆசிரியர் பணியிடம் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் முதல் நிரப்பப்பட்டுள்ளது.

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கூடமானது திருப்பாலைக்குடி கடற்கரை ஓரத்திலே மிகவும் பிற்பட்ட பகுதியிலே இருக்கிறது. அந்தப் பள்ளியிலே நீண்ட நாளாக கோரிக்கை வைக்கப்பட்டும், 5 அம்சக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அரசாங்கம் ஓரளவு நடவடிக்கை எடுத்து, இன்றைக்குக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே அந்தப் பள்ளியை பிளஸ் 2 பள்ளியாக்க வேண்டிய ஏற்பாடும் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி மாணவர்களது கோரிக்கையே, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதி, மற்றும் மேநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்தல் என்பவையாதலால், இப்பொழுதே அது மேநிலைப் பள்ளியாகத் தானிருக்கிறது.

**ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்கும் திட்டம்.**

*வினா எண். 992—**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்நத குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்க எடுத்துள்ள நடவடிக்கைகளில் முக்கியமானவை; பள்ளிகளில் இலவசப் படிப்பு; நண்பகல் உணவுத் திட்டம்; இலவசமாகப் பாட புத்தகங்கள் வழங்குதல்; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் பிற்பட்டோருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம்மும். பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் பல சலுகைகள் வழங்குதல் ஆகியவையாகும்.





**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கிராமப்புறங்களில் வசிக்கக்கூடிய சாதாரண ஏழை எளியவர்கள், எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்குத் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியாமல், ஆடு மாடுகள் மேய்ப்பதற்கும், மற்றவர்கள் வீட்டில் அடிமை வேலை செய்வதற்கும் அனுப்பக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் பொதுவாக கருத்தில் கொண்டு, விசேஷமாக ஏதாவது நிதி ஒதுக்கி, அவர்களைப் பள்ளிக்கு வரவழைக்க திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் விசேஷ கவனங்கள் கடந்த பல ஆண்டுகளாக எடுத்ததன் மொத்த விவரத்தைத்தான் நான் பொதுவாகச் சொன்னேன். எல்லா குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி தந்திருப்பது. தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்புகளில் பயில்வோருக்கு சுமார் மூன்றில் ஒரு பங்கான ஏழை மாண மாணவிகளுக்கு 20·7 இலட்சம் மாணவர்களுக்கு மதிய உணவு தருதல். 1 முதல் 3 வகுப்பு படித்து வரும், மதிய உணவு பெற்று வரும் ஏழை மாணவ மாணவியருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், முதல் வகுப்பில் சிலேட்டும் இலவசமாகத் தருதல். ஆதி திராவிட பழங்குடியினைச் சேர்ந்த மாணவிகளுக்குப் படிப்பு உதவித் தொகைகள், இலவச வீட்டு வசதி, இலவச உடை முதலிய பல சலுகைகள் வழங்குதல். இவ்வனைத்து சலுகைகளும் இருந்தும் முழு நேரப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாத நிலையிலுள்ள சிறுவர் சிறுமியர் பயன் பெறுவதற்காக ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒன்று வீதம் 1,496 மையங்கள் இப்பொழுது நடைபெறுகின்றன. அவற்றில் படிப்போர் எண்ணிக்கை சுமார் 45,000 ஆகும். 1981—82-ல் மேலும் 240 மையங்கள் தொடங்கப்படும். இவைகள் எல்லாம் படிக்க வராமல் இருக்கிற குழந்தைகளை ஈர்ப்பதற்காக எடுத்துக் கொண்ட பல நடவடிக்கைகள் ஆகும். ஆனால் நாம் என்ன செய்தாலும் படிக்க வேண்டுமென்கிற விருப்பத்தோடு அவர்கள் வரவில்லையென்றால், அவர்கள் ஒத்துழைக்காத நிலையிலிருந்தால் பயன் இல்லை. அவர்களுக்கு வந்து படிக்க வேண்டுமென்கிற ஆர்வம் கொஞ்சமாவது இருந்தால்தான் இந்தச் சலுகைகள் மூலம் நிச்சயமாகப் பள்ளிக்கூடத்திலே இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** தலைவர் அவர்களே, தங்களுடைய பிள்ளைகளை பள்ளிக் கூடத்திற்குஅனுப்பக் கூடாது என்றோ, படிக்க வைக்கக் கூடாது என்றோ எந்த தாய் தந்தையருக்கும் எண்ணம் ஏற்படாது. இன்றையதினம் இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள், ஒவ்வொரு மாணவருக்கும் 22 ரூபாய்— மதிய உணவுக்கும், புத்தகங்கள் வாங்குவதற்கும் கொடுக்கும் பணம் இல்லாமல்— உதவி

செய்து, அதன் மூலம் அந்த மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை இந்த அரசு பின்பற்றுமா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்திலே என்ன நடைபெறுகிறது என்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. தனித்தனியாக ஒவ்வொன்றாக ஒப்பிட்டுப் பார்த்து பேசுவதற்கில்லை. ஏனென்றால் நாம் சில சலுகைகளை தந்திருக்கிறோம். அவர்கள் சில சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். ஆகவே மொத்தமாக பார்க்கின்றபோது மற்ற எந்த மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு வரவழைப்பதற்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளும், நாம் பள்ளிகளை ஆரம்பித்து இருப்பதும் அதிகம், அதுவும் பொதுவாக இன்றைக்கு 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் கல்வித்துறையின் அனுமதி பெறாமலேயே கூட பள்ளிகளை ஆரம்பித்து, பிறகு 3 மாதங்களுக்குள் அனுமதி பெற்றுக் கொள்ளலாம் என்ற அளவுக்கு நாம் அதிகாரங்களை எல்லாம் தந்துள்ள நிலைமைகள் இருக்கின்றன. பொதுவாக பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் இருப்பதலே வேறு பல காரணங்களினால் அவர்கள் அனுப்பாமலே இருக்கக் கூடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால் அது சரி அல்ல. இப்போது வராது இருக்கின்ற குழந்தைகள், அந்தக் குழந்தைகளினுடைய பெற்றோர்கள் அந்தக் கல்வியினுடைய நன்மையை இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அதற்கு இருக்கிற காரணம் ஆகும். அந்த அடிப்படையிலேதான், படிக்காத பெற்றோர்கள் இருந்தால், படிக்காத குழந்தைகள் இருப்பார்கள் என்ற அடிப்படையில் முதியோர் கல்வியில் அதிகமான அக்கறை எடுத்துக்கொண்டு கடந்த 2 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறோம்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்தில் கட்டாய இலவசக் கல்வி அளிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் அவர்களுக்கு இலவசக் கல்வி அளித்தும் கூட, ஊக்குவித்தும் கூட இன்னும் பலபேர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் இருக்கிறார்கள். அவர்களைக் கட்டாயமாக பள்ளிக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் இது வரையில் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளிக்கு வரக்கூடிய வயதில் உள்ள குழந்தைகளின் கணக்கை எல்லாம் எடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆசிரியர்கள் அந்தக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்காக மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு இன்றையதினம் செயல்பட்டுக்





கொண்டிருக்கிறோம். கட்டாய இலவசக் கல்வி என்கிற நிலைமை நாட்டிலே இருப்பது தெரிந்த ஒன்றுதான். இந்த அளவுக்கு மேலே போய் அவர்களை தண்டிக்க அல்லது பெற்றோர்களுக்கு தண்டனை தருகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுப்போமேயானால் பொதுமக்கள் எதிர்ப்புத்தான் வரும். அது அவ்வளவு சரியல்ல. என்பதால்தான் நாம் இந்த அளவோடு காரியங்களைச் செய்கிறோம்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுகிறபோது, அந்தக் கிராமப் பகுதியிலே இருக்கிற தாய் தந்தையர்கள் கல்வியைப் பற்றிப் புரிந்து கொள்ளாத காரணத்தால் படிக்க வைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். ஏழைக் குழந்தைகள் 10 வயதுக்குட்பட்டவர்கள், ராமநாதபுரத்தில் கூட, சைல்டு லேபர் என்ற முறையில் 10 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்கு அனுப்பப்பட்டு பெரும் விபத்துக்குள்ளான விவரம் எல்லாம் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே 10 வயதுக்கு உட்பட்டவர்கள், குறைந்த பட்சம் 5 வகுப்பு படிக்கின்ற அளவுக்கு கட்டாயமாக அவர்களுக்குக் கல்வி போதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்களுக்கு இருக்கிற குறைகளை ஆராய்ந்து தாய், தந்தையர்களுக்கு மானியம் கொடுத்து அந்தக் குழந்தைகளை பள்ளியில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா? நமது பட்ஜெட்டிலே கூட 33 சதவிகிதம் 1979-80 ஆண்டு பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் ஓடி விட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதை நாம் பார்த்தோம். அதற்கு இருக்கிற காரணத்தை அறிந்து கட்டாயமாக 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 5 வகுப்பு வரை படிப்பதற்காகவாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9—10]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, சிவகாசியில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி அடிப்படையில் நாம் அங்கே பணியாற்றுகின்ற அந்தக் குழந்தைகளை வேலைக்குப் போகக் கூடாது என்று தடுக்க முடியாது. காரணம், பெற்றோர்கள் அந்தக் குழந்தைகள் கல்வி, கற்று எதிர்காலத்தில் சம்பாதிப்பதைவிட இப்போது அவர்கள் சம்பாதித்து வருகிற வருமானத்தைப் பெரிதாக நினைக்கிறார்கள். பொருளாதார நிலைதான் அதற்குக் காரணம். அதை நாம் தவறு என்று சொல்ல முடியாது: கண்டிக்க முடியாது. அதனால் அப்படிப்பட்ட குழந்தை எல்லாம் எப்படியாவது கல்வி அறிவு பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் வேலைக்குப் போய் வந்த பிறகு, நாம் முறைசாரா கல்வித்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தில் சேர்ந்து அவர்கள் 8—வதுவகுப்பு வரையில் படிக்கின்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்.

[1981 மே 6

திருமதி. தா. இராசாம்பாள் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஏழை மாணவர்களுக்கு கோடை விடுமுறையில் மதிய உணவு வழங்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, அரசு கொள்கை விளக்கக் குறிப்பில் இப்போது பள்ளிக்கு வராதவர்களின் விழுக்காடு குறைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு உள்ளாட்சித் துறை அதிக மானியம் பெற்று, அந்தக் குழந்தைகளுக்கு அதிகமான உணவு தந்தால் பள்ளிக்கு வருகின்றவர்களுடைய எண்ணிக்கை இன்னும் பெருகும். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மதிய உணவு என்பதே பள்ளிக்கு வராதவர்களை, ஏழ்மையின் காரணமாக பள்ளிக்கு வராத குழந்தைகளை வரவழைப்பதற்குத் தான் இந்தத் திட்டம் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களால் கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து நாமும் அதைச் செயல் படுத்தி வருகிறோம். கேர் நிறுவனம் அதற்கு 9 கோடி ரூபாய் உணவுப் பொருட்களைத் தருகிறது. மாநில அரசு 6 கோடி ரூபாய் அதற்கு செலவிடுகிறது. அது போதாமல் இருக்கிறது என்ற குறையை மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள். அரசுக்கு இருக்கிற நிதி ஆதார நெருக்கடியினால் அதற்கு இன்னும் அதிகமாக ஒதுக்க முடியவில்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, 1/3 பகுதியினர்தான் ஏதாவது ஒரு கல்வியைக் கற்றிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையை நாம் தமிழ்நாட்டில் வைத்திருக்கிறோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏழை எளியக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு, கிராமப்புறங்களிலுள்ளவர்களுக்கு இப்போது ஒரு வேளை உணவு என்று கொடுப்பதை மாற்றி, இரண்டு வேளை இலவச உணவு, ஆண்டிற்கு இரண்டு ஜோடி இலவச உடை, இலவச புத்தகங்கள் என்று வழங்கினால் அநேகமாக எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்க வசதி ஏற்படும். ஆகையால் அப்படிப்பட்ட ஒரு கொள்கையை அரசு வகுத்து, உடனடியாகச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 மே 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையில், அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தில் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த உதவிகளை அவ்வப்போது செய்து வருகிறோம். நாம் என்னதான் உதவிகளைச் செய்தாலும் தாங்கள் படித்து முன்னேற வேண்டுமென்ற உணர்வு இல்லாமல் முன்னேற முடியாது. குதிரையை தண்ணீர் குடிக்க கொண்டுபோய் விடலாமே தவிர, தண்ணீரைக் குடிக்க வைக்க முடியாது.

**நாமக்கல் வட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 993—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, நாமக்கல் வட்டம் நாளடைவில் மாவட்டமாக ஆக்கப்படும் சூழ்நிலை இருப்பதாலும், அந்தப் பகுதி தொழில் துறையில் பெருமளவு முன்னேறி இருப்பதாலும் அந்தப் பகுதியில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை ஏற்படுத்த, இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அங்கே கல்லூரிகள் இரண்டு, ஆண்களுக்கு என்றும் பெண்களுக்கு என்றும் ஆரம்பிக்கப்பட்டு, அங்கே மாணவர்கள் சேர்ந்து படிக்காமல், அவை சரியாக நடை பெறவில்லை என்ற விவரம் இருக்கிறது. இருக்கிற வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள முதலில் அங்கே இருக்கிற மாணவர்கள் முன்வர வேண்டும். அங்கே இருக்கின்ற கல்லூரிகளை விட்டுவிட்டு, அவர்கள் வேறு இடத்தில் படிக்கின்ற சூழ்நிலையைத் தவிர்த்து, இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தொழில் நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இப்போது அங்கே ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

[1981 மே 6

## தொழிற்கல்வி நிலையங்களை தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் திட்டம்.

*வினா எண். 994—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சா—கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லாத் தொழில் கல்வி நிலை யங்களையும் (Engineering Colleges and Polytechnics) தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் இணைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்போது யு.ஜி.சி. யிலிருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் சில தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக இன் றைக்கு ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் டிகிரிஸ்' வாழ்க்கையில் பயன்படவில்லை என்றும், ஆகவே 'ஜாப் ஓரியன்டட் ஸ்கீமை' ஊக்குவிக்க வேண்டும் என்றும் யு.ஜி.சி. மாநில அரசுக்கு தாக் கீது அனுப்பியிருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சையன்ஸ் பாடங்கள் இல்லாமல் தொழில் நுட்ப அறிவை நாம் வளர்த்துக்கொள்ள முடியாது. அது அடிப்படை அறிவு, ஆகவே அது இருந்து தான் ஆகவேண்டும். ஆனால் அதோடு கூட வேலைவாய்ப்பு உள்ள பயிற்சியைத் தருவதும் நல்லது. அந்தக் கருத்தைதான் கோத்தாரி கமிஷனும் சொல்லி யிருக்கின்றது. யு.ஜி.சி.யும் அந்தக் கருத்தைத்தான் சொல் லிக்கொண்டிருக்கின்றது. ஆகவே பல்கலைக் கழகங்கள் கல் லூரிப் பாடத் திட்டங்களை மாற்றியமைக்கின்றபோது அந்தக் கருத்துக்கு ஒரு நல்ல வடிவம் தருவார்கள். பராசக்திக் கல் லூரி, மதுரையிலே அமெரிக்கன் கல்லூரி போன்ற கல்லூரிகள் இந்தக் கருத்துக்களை ஒட்டி செயல்பட்டுக் கொண்டு இருக் கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தற்சமயம் மிகவும் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற கெமிக்கல் என் ஜினியரிங், எலக்ட்ரானிக் எஞ்சினியரிங் படிப்பிற்கு என்ஜினி யரிங் கல்லூரிகளிலேயும், பாலிடெக்னிக்குகளிலேயும் அதிக முக்கியத்துவம் கொடுத்து. அதிலே அதிகமான மாணவர்களைச் சேர்த்து பயிற்றுவிப்பதற்கு அரசு முன்வருமா?



1981 மே 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, அரசைப் பொறுத்தவரையிலே புதிய தொழில்கல்விப் பாடங்களை நடத்துவதில் அதிக விருப்பம் உடையவர்களாக இருக்கிறோம். எத்தகைய பயிற்சிகளை மாணவர்கள் படித் தால் அவர்கள் படித்து முடித்தவுடன் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், நாமும் தேவைக்கான ஆட்களைப் பெற் றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையிலே தான் புதிய கோர்ஸ்களை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எத்தனை தொழில் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அதிக மான தொழில் கல்வி நிலயைங்களை ஏற்படுத்துகின்ற வகையிலே அதாவது ஆண்டுக்கு 5 அல்லது 6 என்று ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, தொழிற்கல்வி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக் கின்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக தொழிற்கல்வி யிலே சேருக்கின்ற மாணவர்களை குறைவாகச் சேர்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போதுதான் தொழிற்கல்வி களிலே அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையிலே சேர்த்துக்கொண்டிருக்கிறோம். மேலும் அதிகப்படியான பாலிடெக்னிக்குகளை சென்ற ஆண்டு கூட ஆரம்பித்தோம். மேலும் தொழிற்கல்விக்கு அரசு நல்ல ஆதரவைத் தந்துகொண்டிருக்கிறது. அதாவது நம்முடைய தேவைக்கேற்ப மாணவர்களைத் தயாரித்துக்கொள்வதா அல்லது அவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ற வகையிலே தொழிற்கல்விகளிலே மாற்றம் செய்வதா என்ற வகையிலேதான் முரண்பாடுகள் மற்ற இடங்களிலே இருக்கின் றன. ஆனால் நம்மைப்பொறுத்தவரையில் நல்ல தொழிற் கல்விப் பயிற்சிகளைக் கொடுத்து மாணவர்களை எதிர் காலத் திலே சீரிய முறையிலே பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலேதான் அதிக அளவு வாய்ப்புக்களைத் தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இளம் வயதிலேயே குழந்தைகளுக்கு தொழிற் கல்வியினைத் கற்றுக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்வதன் காரணத்தால் குழந்தைகளுக்கு இளமையிலேயே தொழில்களின் மீது பற்று அதிகமாக வரும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்தி லும் தொழிற்கல்வி பயிற்சியை ஆரம்பித்தால் படித்தவர்களுக்கு வேலையில்லாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்க முடி யும். வெளிநாடுகளிலே தொழிற்கல்வி பயின்றவர்களுக்குத் தான் அதிகமான அளவிலே வேலைவாய்ப்பு இருக்கின்றது. ஆகவே இங்கேயும் அந்த வகையிலே தொழிற்கல்வியினை அதிகப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார் களா?

[1981 மே 6

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தொழிற்கல்வியினுடைய பயனை அறிந்ததின் விளைவுதான் நாம் இப்போது அதற்கு அதிகமான ஊக்கத்தைத் தந்துக் கொண்டிருக்கிறோம். அது உண்மையான கல்வியாக இருப்பதால் இந்த அரசு அதிலே அதிக நாட்டம் செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே எல்லா மாவட்டங்களிலும், எல்லாப் பகுதிகளிலும் உள்ள மாணவர்களும் இந்தத் தொழிற்கல்வியின் பயனைப் பெறுவதற்குரிய முயற்சியினை அரசு மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய உணர்வுகளோடு தனிப்பட்டவர்கள் முயற்சிகள் எடுத்தாலும் கூட நாம் அதைப் பயன்படுத்திக்கொள்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் இந்த இன்ஜினியரிங் கல்வியினைப் பொறுத்தவரையில் அத்தகைய முயற்சிகள் நல்ல பயனைத் தந்துகொண்டிருக்கின்றன.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்கல்வியிலே அதிக ஆர்வம் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே தோல் பதனிடும் தொழில் அதிகமாக இருக்கின்றது. ஆகவே அங்குள்ள பாலிடெக்னிக்குகளில் லெதர் டெக்னாலஜி என்ற தொழிற்கல்வியினை ஆரம்பிக்க அரசு முன்வருமா? மேலும் தமிழகத்திலேயே சென்னையிலேதான் அத்தகைய கோர்ஸ் இருக்கிறது. அதிலேயும் குறைவான மாணவர்கள் தான் சேர்க்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அந்தப் புதிய கோர்ஸை வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பாலிடெக்னிக்குகளில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, புதிய தொழிற்கல்விப் பாடங்களைப் பொறுத்தவரையிலே அந்தந்தப் பகுதிகளிலே இருந்து ப்ரப்போஸல்ஸ் அரசுக்கு அனுப்பப்படுமானால் அதனை மாநில அளவிலே தொழிற்கல்விக் குழு ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் தந்து தென்னாட்டைச் சேர்ந்த தென்பகுதி தொழிற்கல்விக் குழு ஒப்புதல் தந்து அதற்குப் பிறகு அகில இந்திய அளவிலே ஒப்புதல் தரப்பட்டதற்குப் பிறகுதான் அவற்றை ஆரம்பிக்கிறோம். அது முறையாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆகவே அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் என்னென்ன தொழிற்கல்விகளை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்களோ அதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.



1981 மே 6]

### மதுரை நீதிமன்றத்திற்கருகிலுள்ள அண்ணா சிலையை செப்பனிடும் பணி.

*வினா எண் 995—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நீதிமன்றத்திற்கு அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலையை செப்பனிடும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மதுரை நீதிமன்றம் அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலை செப்பனிடப்பட்டு தங்க வண்ணம் பூசி 25—3—1981-க்கு முன்னதாக வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன.

[முற்பகல் 9-20]

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலைகளை நிறுவுவதற்கு முன்பாகவே, அவைகள் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கவும், அடிக்கடி பழுதுபடாமல் இருக்கவும் தேவையான நல்ல யோசனைகளை அளிக்கும் பொருட்டு சிலைகள் பராமரிப்புக் குழு ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த எண்ணங்களை எல்லாம் கருத்தில் கொண்டுதான், அதை நிறுவுவதற்கு முன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னால் அவைகள் ஒரு வேளை பழுது பட்டால், அவைகளை பழுது பார்ப்பதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு வேண்டுமானால் வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

### விருத்தாசலம் எண்ணெய் பிழியும் ஆலை.

*வினா எண். 996—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் விருத்தாசலம் 1976 ஆம் ஆண்டு சூரிய காந்தி எண்ணெய் பிழியும் ஆலை 60 இலட்ச ரூபாய் மதிப்பில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு சூரிய காந்தி விதை கிடைக்காத காரணத்தினால் மணிலாப் பயிரை அரைத்து எண்ணெய் எடுக்க 3 ஆண்டுக்கு அனுமதி அளித்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) 3 ஆண்டுகள் முடிந்த பிறகு மறுபடியும் இவங்க மத்திய அரசால் அனுமதி மறுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் என்றால் மறுபடியும் ஆலை செயல்பட மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) மாநில அரசின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய அரசு நிலக்கடலை போன்ற முக்கிய எண்ணெய் வித்துக்களை அரைப்பதற்கு இவ்வாலைக்கு 1—10—1980 முதல் 31—3—1981 வரை தாற்காலிக அனுமதி அளித்துள்ளது.

(இ) நிரந்தர உரிமம்பெற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆர். தியாகராசன் :** மரியாதைக்குரிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலே, விருத்தாசலத்திலே உள்ள அந்த ஆலை ஆரம்பிக்கப்பட்ட பிறகு 3 மாதம் அல்லது 6 மாத கால அளவில்தான், மிகக் குறுகிய கால அளவில்தான் ஆர்டர்கள் கிடைப்பதால் அங்குள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதுவுமல்லாமல் அங்கே சூரிய காந்தி விதைகள் தேவையான அளவு கிடைக்கவில்லை. உற்பத்தியும் ஆ௳வில்லை. ஆனால் மணிலாப் பயிர்கள் தொடர்ந்து கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்த ஆலையில் மணிலாப் பயிரையே தொடர்ந்து அரைத்து, மில்லை மூடாத அளவிற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்த ஆலை தொடர்ந்து நடைபெற முடியாமல் இருப்பதற்கே காரணம் மத்திய அரசு தான். சூரிய காந்தி விதையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகத்தான் ஆரம்பத்திலே அந்த ஆலை தொடங்கப்பட்டது. ஆனால் போதிய அளவிற்கு சூரிய காந்தி விதைகள் கிடைக்காத காரணத்தால், அந்த ஆலையை மூடாமல் இருக்கும் பொருட்டு, மணிலாப் பயிரை அரைத்து எண்ணெய் எடுப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசை அனுமதி கேட்டு, அவர்களும் தற்காலிக அனுமதியாக 3 ஆண்டு காலத்திற்கு அனுமதி வழங்கினர். அதற்குப் பிறகு, அந்த 3 ஆண்டுகள் கழித்து, மீண்டும் அனுமதியைக் கேட்ட போது மறுத்துவிட்டார்கள். ஆனால் தற்போது 6 மாத காலத்திற்கு மட்டுமே தற்காலிக அனுமதி தந்திருக்கிறார்கள். நிரந்தர அனுமதி வேண்டும் என்று பலமுறை மத்திய சர்க்காரை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது ; மீண்டும் வற்புறுத்தும், வற்புறுத்திக் கொண்டேயிருக்கும்.



## நெருப்பூர் கிராமத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண். 997—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் வட்டம் நெருப்பூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு சங்கம் செயல்படாமல் இருக்கக் காரணம் என்ன ?

(ஆ) அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருப்பூர் விவசாய சேவா கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் உள்ளவர்களே, கடன் தவறிய பாக்கிதாரர்களாக இருக்கிற காரணத்தாலும், மற்றும் பல உறுப்பினர்கள் நிலுவைக் கடனிலே இருக்கிற காரணத்தாலும் கடன் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலைமை சீராக ஆகும் என்று அரசு நம்புகிறது.

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வங்கி ஏறத்தாழ 10 ஆண்டுகள் காலமாக செயல்படாமல் இருந்து வருகிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கூட, அந்த ஊருக்கு 15 மைல், 20 மைல் தள்ளி இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்கள் கடன் வசதி பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். மத்திய கூட்டுறவுச் சங்கம் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தனி நபர்களின் ஆதிக்கம் அங்கு அதிகமாக இருப்பதால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதும் அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இதனை போக்க தக்க நடவடிக்கையை எடுத்து, அங்குள்ள மக்கள் மீண்டும் கடன் வசதி பெறும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட சங்கத்தைப் பொருத்தவரைக்கும் விவசாயிகளுக்கு கடன் தரக்கூடிய தகுதியை அந்தச் சங்கம் இழந்திருப்பதற்கே காரணம், கொடுத்த கடனை அந்தச் சங்கம் திருப்பிப் பெறாமல் இருப்பதுதான். அந்தச் சங்கத்தின் நிர்வாக குழுவின் உறுப்பினர்களாக இருப்பவர்களும் கூட வங்கியில் வாங்கிய கடனை கட்டாத நிலுவைதாரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிர்வாகக் குழு உறுப்பினர்களும், கடன் வாங்கிய மற்ற விவசாயிகளும், வாங்கிய கடனை திருப்பிக் கட்டுகிறபோதுதான், அந்த வங்கி மீண்டும் கடனை தரக்கூடிய தகுதியைப் பெறும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. தீர்த்தராமன் : அந்தச் சங்க நிர்வாக பொறுப்பினை ஏற்றிருக்கிறவர்கள் அதிகமாகக் கடனைப் பெற்று அந்தச் சங்கம் செயல்படாத அளவிற்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களால் அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறுகிற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட ஏதாவது சலுகைகள் அளித்தாவது அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறும் வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வேலியே பயிரை மேய்கிறது என்ற நிலை இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் தான் கூட்டுறவு சட்ட விதி 28 (1)-ன்கீழ் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீதும் அங்குள்ள அதன் உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது, நோட்டீஸ் அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து எக்ஸ்ப்ளனேஷன் பெற்றவுடன் அவர்கள் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

திரு. கா. இரா. சின்னராசு : அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏதாவது பணம் கையாடல் செய்து பினாமி லோன்கள் போட்டு எடுத்திருக்கிறார்களா? அந்தத் தலைவர் மீது என்னென்ன வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? மேலும் வசூலிக்கப்படாமல் இருக்கும் அந்தக் கடன்களை வசூலிப்பதற்கு அரசு தரப்பில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்கள் பினாமி கடன்கள் எடுத்திருக்கிறார்களா என்பது பற்றிய தகவல் இல்லை. இருக்கிற பிரச்சினையெல்லாம், கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்தச் சங்கத் தலைவர், உறுப்பினர்கள் எடுத்து கடன்களைக் கட்டாமல் அந்தச் சங்கத்தை செயலற்ற வகையில் வைத்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### மாரனேயில் விவசாயக் கிடங்கு கட்டும் திட்டம்.

*வினா எண். 998—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச்சங்கம் உள்ள மாரனேயில் விவசாயக் கிட்டங்கி கட்ட ஆய்வு செய்ததா?

(ஆ) அது இதுவரை கட்டப்படாதது ஏன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் கிடங்கு கட்டுவதற்கான அடிமனை இதுவரை வாங்காத காரணத்தினால் அங்கு கிடங்கு கட்டப்படவில்லை.



### ஆலந்தூர், பல்லாவரம் கூட்டு குடிநீர் திட்டம்.

* வினா எண். 999— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றிலிருந்து ஆலந்தூர், பல்லாவரம் ஆகிய இரண்டு நகர சபைகளுக்கும் குடி தண்ணீர் சப்ளைக்காக ரூபாய் 2½ கோடி செலவு செய்யப்பட்டும் இன்றுவரை தண்ணீர் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) சீக்கிரம் தண்ணீர் கிடைக்க அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆலந்தூர், பல்லாவரம் கூட்டு குடி நீர் திட்ட செயலாக்கத்தில் ஏற்பட்ட சில கோளாறுகள் காரணமாக இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை.

(இ) இத் திட்டம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டு, அதற்கான வேலைகள் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1982-ஆம் ஆண்டு இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டும் கூட இதுவரை தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், கோளாறு என்று சொன்னார்கள். என்னென்ன கோளாறுகள்? யார் யாரால் செய்யப்பட்டது? அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீரேற்றுக் குழாயில் நீரேற்றும் போது கசிவு ஏற்பட்டது. W ter w s fou d oozi g out. இதைப் பரிசோதனை செய்ததில் பதிக்கப்பட்ட குழாய்கள் யாவும் பயன் அற்றவை என்று கருதப்பட்டது. இந்தப் பொருள் தற்சமயம் காவல் புலானாய்வுத் துறையின் ஆய்வில் உள்ளது. இப்போது இந்தத் திட்டத்தை, இரும்பு வார்ப்பு குழாயைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யும் வகையில் ரூ. 708·08 இலட்சம் திருத்த மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடக்கிறது.

[1981 மே 6

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இவ்வளவு மோசமான சாமான்கள் எல்லாம் வந்திருக்கிறதே, அதை சப்ளை செய்தது யார்? எதன் அடிப்படையில் வாங்கப்பட்டது? இந்த ஊழல் செய்தவர்களை அல்லது அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கனவே சொன்னதுபோல், இந்தப் பொருள் தற்சமயம் காவல் புலனாய்வு துறையின் ஆய்வில் உள்ளது. இது நடந்ததெல்லாம் 1972, 1973, 1974-ஆம் ஆண்டுகளில். யார் காலத்தில் இப்படி நடந்தது, யார் பொறுப்பாளி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: இந்தக் குடி நீர் திட்டங்களே கோளாறான திட்டங்களாக இருக்கின்றன. வீராணம் திட்டம் கோளாறு, பாலாறு திட்டம் கோளாறு, ஆக எல்லாம் கோளாறாக இருக்கின்றன. ஆகவே இந்தக் கோளாறுகளை நீக்கி கோளாறு இல்லாமல் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தகைய நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோளாறு இருந்த காரணத்தால்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். எனவே நாங்கள் இப்போது கோளாறு இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1000—திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுவதற்காக தொழிலாளர்கள் நல வாரியம் திட்டமிட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு விடுதி கட்ட தீர்மானித்துள்ளது. அதற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) விடுதி கட்டுவதற்காக இடம் கிடைத்ததும், அதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு, பின்னர் கட்டிட வேலை துவக்கப்படும்.



1981 மே 6]

[முற்பகல் 9—30]

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறைப் பகுதியில் தொழிலாளர் நல வாரியம் மூலமாக தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு இல்லம் கட்ட வேண்டுமென்பது என்னுடைய கேள்வி, காரணம் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் இருந்து அந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் 200 ஆண்டுகளாக குடியேறி, அங்கே தோட்டத் தொழிலாளர்கள் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இடம் கிடையாது; ஓய்வு இல்லம் கிடையாது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓய்வு விடுதி கட்ட வேண்டுமென்று கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்களுக்கு ஓய்வு இல்லம் கட்டுவது தொழிலாளர் நல அரசின் கடமை என்று நான் கருதுகின்ற காரணத்தினால், வெகு வேகமாக இடத்தை அக்குவயர் பண்ணி அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தொழிலாளர் நல வாரியம் திட்டம் பற்றியது என்றாலும், தொழிலாளர் நல வாரியத்திற்கு யார் யார் சந்தா தருகிறார்களோ, ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் தருகிறார்களோ அவர்கள் பலன் பெறுவதற்காக கட்டுவதாக உள்ளது. ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யும்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து தகவல் வந்தவுடன் அதற்கான வரைபடமும், மதிப்பீடும், தயாரிக்கப்பட்டு, பின்னர் கட்டிட வேலை துவங்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் ஊதியத்திலே இருந்து மாதா மாதம் ஒரு ரூபாய் அந்த தோட்ட முதலாளிகளால் பிடிக்கப்பட்டு, தொழிலாளர் நல வாரியத்திற்கு அனுப்பப்படுவதாக நான் அறிகிறேன். அந்தப் பணத்தில் தொழிலாளர் ஓய்வு இல்லம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

[1981 மே 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாரியத்தில் சட்டப்பிரகாரம் மாதா மாதம் ஒரு ரூபாய் கட்ட வேண்டியதில்லை. ஒரு தொழிலாளர் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாயும், முதலாளிகள் ஒரு தொழிலாளருக்கு 2 ரூபாய் என்றும் தருகிறார்கள். மாதாமாதம் என்பது சரியல்ல. மாதா மாதம் வாங்கப்படுவதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அப்படி அந்தப் பணம் வாங்கக்கூடாது என்று உத்தரவிடுகிறேன். சட்டப்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொழிலாளர் ஒரு ரூபாய் கட்ட வேண்டும். சட்டம் அப்படித்தான் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் இப்படிப்பட்ட ஓய்வு விடுதிகள். திருமண மண்டபங்கள், இன்னும் அது போன்ற பல நல்ல ஏற்பாடுகளை தொழிலாளர்களுக்குச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் அந்த நடவடிக்கை துரிதமாக, விரைவில் நிறைவேற்று கின்ற நிலை இல்லையென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த நிலையை மாற்றி, அவர்களிடம் சந்தா வசூலித்து, அரசும் பணம் போட்டு, அதைக் கட்டுவதற்கு துரிதமான ஏற்பாட்டைச் செய்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்வர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் படி துரிதமாக வேலை நடப்பதாகத் தெரிகிறது. கலெக்டர் அவர்களிடமிருந்து நிலம் வருவதிலே தாமதம் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் காலதாமதம் ஆகிறது, எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்ற குறிப்பைச் சொல்வர்களானால், அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பத்திரிகை ஊழியர்களுக்கான மூன்றாவது ஊதிய கமிஷன் சிபாரிசுகளை அமல்படுத்துதல்.

*வினா எண். 1001—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிக்கை ஊழியர்களுக்காக அமைக்கப்பட்ட மூன்றாவது ஊதியக் கமிஷன் சிபாரிசுகளை தமிழகத்தில் எந்தெந்த பத்திரிக்கைகள் அமுல்படுத்தி இருக்கின்றன ?

(ஆ) முரசொலி பத்திரிக்கை அமுல்படுத்தி இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், பயன்பெற்ற நிருபர்கள், உதவி ஆசிரியர்கள் யார் ? யார் ?



1981 மே 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கீழ்க்கண்ட பத்திரிக்கைகள் அமுல்படுத்தி இருக்கின்றன என்ற தகவல் கிடைத்துள்ளது :—

(1) ஹிந்து—சென்னை, கோயம்புத்தூர், மதுரை.

(2) இந்தியன் எக்ஸ்பிரஸ்—சென்னை, மதுரை.

(3) தினமணி—சென்னை, மதுரை.

(4) தினமணிக்கதிர்—சென்னை.

(5) கல்கி—சென்னை.

(6) மங்கையர் மலர்—சென்னை.

(7) சந்தமாமா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

(8) முரசொலி, சென்னை.

(9) ராம்நாத் பப்ளிகேஷன்ஸ், சென்னை-24. (பேசும் படம்—பிக்சர் போஸ்ட்.)

(10) பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா, சென்னை-2.

(11) யுனைட்டெட் நியூஸ் ஆப் இந்தியா, சென்னை-2.

(ஆ) ஆம்.

(இ) இதனால் பயனடையும் நிருபர்களும், உதவி ஆசிரியர்களும் வருமாறு :

(1) திரு. பி. எம். பாண்டியன்—உதவி ஆசிரியர்.

(2) திரு. என். விவேகானந்தன்—உதவி ஆசிரியர்.

(3) திரு. கே. ஆர். ராமசுப்பு—உதவி ஆசிரியர் (மதுரை கிளை அலுவலகம்).

(4) திரு. வீரசத்தி—நிருபர் (ரிப்போர்டர்).

திரு மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை ஊழியர்களுக்காக அமைக்கப்பட்ட மூன்றாவது ஊதிய கமிஷன் சிபார்சுகளை சரியாக அமல் நடத்த மத்திய அரசு அமைத்துள்ளதைப்போல நிதி, தொழிலாளர் நலன், செய்தித் துறை ஆகிய மூன்று அமைச்சர்களும் உள்ளடங்கிய கமிட்டி ஒன்றை இந்த அரசு அமைக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே அழைத்து ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறேன். அதிலே கமிஷனரிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இதை செயல் படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். பஞ்சப்படி பற்றி இன்னும் நிர்ணயம் ஆகவில்லை. அந்தப் பஞ்சப்படி நிர்ணயம் ஆகிவிட்டால் மறுபடியும் கூட்டம் நடத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று இந்த அரசு கருதியிருக்கிறது.

[1981 மே 6

**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதிய கமிஷன் சிபார்சுகளை அமல்படுத்தாத பத்திரிக்கைகளுக்கு அரசு விளம்பரங்கள் கொடுக்க மாட்டோம் என்று அரசு அறிவிக்குமா? தமிழ் பத்திரிகைகளை ஊக்குவிக்கும் அளவில் விற்பனை எண்ணிக்கையை கணக்கில் எடுக்காமல், தமிழ் பத்திரிகைகளுக்கு விற்பனை வரி 4 சதவீதம் என்று அரசு அறி விக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கேள்விக்கு என்னிடத்தில் இப்போது பதில் இல்லை. முதல் கேள்விக்கு பஞ்சப் படி பற்றி மத்திய அரசு நிர்ணயம் செய்த பிறகு எந்தெந்த பத்திரிகைகள் எப்படி, எப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்த்து என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

**திரு. ரா. இருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பாலேக்கர் பரிந்துரையை அமல் செய் யாத பத்திரிகையாளர்களுக்கு அரசு விளம்பரங்கள் கொடுப் பதில்லை என்று சில மாநிலங்கள் உத்தரவிட்டுள்ளன. அந்த அடிப்படையிலே அரசினுடைய விளம்பரங்கள் பாலேக்கர் பரிந் துரையின் படி................(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே கேள்வியைத்தான் அவரும் கேட்டார். திரு. கருப்பையா.

**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பத்திரிகை ஊழியர்களுக்கு பாலேக்கர் அவார்டை அமல் செய்ய வேண்டுமென்று கோரிய காரணத்திற் காக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் ஏற்கனவே வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்ததாக அறிவித்த காரணத்தினாலே மூடிவிடுவதாக அறிவித்தார்கள் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். தற்போது வேலை நிறுத்த நோட்டீஸ் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த பத்திரிகையை மூடுவதை, இதைத் தடுப்பதற்கான நடவடிக் கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் இன்றைய நிலை இதைப் படிக்கிறேன். பத்திரிக்கை நிறுவனம் 20–4–1981 அன்று, பத்திரிகை நிறுவனத்தை 20–6–1981 முதல் மூடிவிட இருப்பதாக ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளது. தொழிலாளர் கட்குச் சட்டப்படி தரவேண்டிய இரண்டு மாத முன் அறிவிப்பும் தரப்பட்டுள்ளது. மூடுவதற்கான காரணங்கள் கீழே கொடுக் கப்பட்டுள்ளது.

(1) தொழிலாளர்களின் தொடர்ந்த மற்றும் கடுமையான ஒழுங்கின்மை;



1981 மே 6]

(2) கடந்த ஆண்டில் நான்கு முன் அறிவிப்பின்றி வேலை நிறுத்தங்கள்;

(3) 10–5–1981 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக கூறி தொழிற் சங்கம் 17–4–1981 அன்று விடுத்துள்ள வேலை நிறுத்த அறிக்கை;

(4) பலேகரின் பரிந்துரையை அமுல்படுத்துவதால் நிறு வனத்திற்கு முதல் ஆண்டு செலவு ரூபாய் 100 லட்சமும் மற்றும் ஆண்டுதோறும் ரூபாய் 50 இலட்சமும் செலவு ஆகும் என்றும், இது நிறுவனத்தில் இப்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக இயலாத ஒன்று.

தொழிலாளர் துறை ஆணையர் இதுகுறித்து இருதரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்.

**திரு. என். எஸ். வீ. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த பத்திரிகை ஊழியர்களுக்காக அமைக்கப் பட்ட மூன்றாவது ஊதிய கமிஷன் சிபார்சுகளை அமுல் படுத்து கிற பத்திரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித் தார்கள். அந்த பட்டியலிலே இல்லாத வாய்ப்பு, வசதியும் மிக்க பத்திரிக்கைகளுக்கு இவை விரைவாக அமுல் படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் விபரமாகச் சொல்ல வேண்டுமென்றால், கீழ்க்கண்ட 30 பத்திரிகை நிறுவனங்கள் பலேகர் பரிந்துரைகளை அமுல்படுத்தி விட்டதாகவோ அல்லது அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாகவோ கூறியுள்ளார். 30 பத்திரிக்கைகளையும் படிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். எனவேதான் ஒரு இறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் பஞ்சப்படியை பற்றியும் ஒரு முடிவு மத்திய அரசு எடுத்து விடுவதுதான் அந்த பிரச்சினையில் முடிவான தன்மை வருகிறது. எனவே மத்திய அரசுக்கு பஞ்சப் படியை உடனடியாக நீங்கள் நிர்ணயிக்கவேண்டுமென்று மாநில அரசின் சார்பாக, இந்த அரசின சார்பாக கடிதம் எழுதப்பட் டிருக்கிறது. அதற்கு பின்னர் ஒரு 'ஓவர் ஆல்' 'பிக்ச்சர்' கிடைக்கும்; யார், யார், எதை, எதை அமுல் படுத்துகிறார்கள் என்று; இப்போது மெயில் பத்திரிக்கையை பொறுத்தவரை கூட, நீங்கள் கேள்வி கேட்கவில்லையென்றாலும் கூட, அவர்கள் அமுல் படுத்துவதாக இல்லை. அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதால் பலே கரின் பரிந்துரையை அமுல் படுத்துவதால் ஏற்படக்கூடிய நிதி நெருக்கடி மிகவும் மோசமாகிவிடும் என்றும் கூறியுள்ளார்கள். நஷ்டத்தில் இயங்கும் பத்திரிகையாளர்கள் பலேகரின் பரிந் துரைகளை அமுல் படுத்தாமல் இருக்க அதில் வழிவகை செய்யப் படவில்லை என்று தொழில் துறை ஆணையர் தெரிவித்திருக் கிறார்கள். நீங்கள் நஷ்டமாக இருந்தால் கொடுக்கவேண்டிய

தில்லை என்றும் பலேகரின் அவார்டில் இல்லை. கொடுத்து தான் ஆகவேண்டும் என்பது தான் நம்முடைய அரசினுடைய 'ஸ்டாண்ட்'.

[முற்பகல் 9.40]

பொதுவாக பாதிதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 'ஊதியம் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, பஞ்சப்படி நிர்ணயிக்கப்பட வில்லை. அதுவும் நிர்ணயிக்கப்பட்ட பிறகு யார் யார் அமல் படுத்துகிறார்கள், யார் யார் அமல் படுத்தவில்லை என்பதைப் பார்த்து ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களைக் கூட்ட ஏற்பாடு செய்து அதன் விளைவுகளைப் பார்த்து என்ன செய்யலாம் என் பதைப்பற்றி அரசு முடிவு எடுக்கும். எல்லாத் தொழிலாளர் களுக்கும் அந்தப் பரிந்துரைப்படி ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறையாக இருக்கிறது. அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்யும்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்டியன் எக்ஸ்பிரஸ் குளோஷர் நோட்டீஸில் பலேக்கார் அவார்டை அமல் நடத்துவதிலே ஒரு பெருந்தொகை கமிட் பண்ணவேண்டி இருக்கிறது என்ற ஒரு ஷரத்து வருகிறது. ஒரு பக்கத்திலே பலேக்கர் அவார்டை அமல்படுத்துவது என்று கமிட் பண்ணிவிட்டு, ஆனால் செலவைச் சரிக்கட்டுவதற்காக, மிச்சப்படுத்துவதற்காக 22 பேர்களை ரிட்ரென்ச் பண்ணப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படி பலேக் கார் அவார்டை அமல்படுத்துகிறபோது ரிட்ரென்ச் செய் வதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித் துள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரிட்ரென்ச் பற்றிச் சொல்கிறார்கள். அவர்கள் 20—6—1981 முதல் அந்த நிறு வனத்தையே மூடிவிட இருக்கிறார்கள். அது முன்னாலே நடந் தது. அப்போது கமிஷனர் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் ஏற்படுத்தப்பட்டது. The position has gone still worse now. இப்போது அவர்கள் 20—6—1981 லிருந்து முடிவிடுவதாக இருக்கிறார்கள். நாம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவோம்.

**கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் லைனிங் போடும் திட்டம்**

*வினா எண் 1002—**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்த சாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் லைனிங் போடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) முதல் நிலை ஆய்வு முடிந்து விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், விபர மதிப்பீடுகள் தயாரித்த பின் அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரி வித்துள்ளார்.

**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ? இதன் மூலம் கூடுதலாக எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வு வேலைகள்தான் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் என்னால் தோராயமாக ஒரு மதிப்பீட்டைச் சொல்ல முடியும். கிட்டத்தட்ட 2 ஆயிரம் மைல் இந்த கால்வாயை நவீனப்படுத்த வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக 47 கோடி ரூபாய் செல வாகும் என்று ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் ஏற்றத்தொகை, எஸ்கலேஷன் காஸ்ட் காரணமாக 61 கோடி ரூபாய் அளவுக்கு செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக 62 ஆயிரம் ஏக்கர் பரப்ப ளவில் நஞ்சை பயிர் கூடுதலாகப் பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரப் பட்டுள்ளதா? நிதியுதவி அளிப்பதற்கு உலக வங்கி ஒப்புக்கொண் டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிவுற்றதற்குப் பிறகு மாநில நிதி அளவில் செய்வதா என்பதை அரசு முடிவு செய்யும். அல்லது உலக வங்கியிடமிருந்து பெற்று செய்ய முடியுமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்கும். எதை விரை வாகச் செய்யமுடியும் என்று பார்த்து அதைச் செய்வதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது என்னுடைய தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கர்வரை சர்வே செய்து நிலத்தை அளந்து பணத்தைக்கூட கொடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு அப்படியே விட்டுவிட்டார்கள். ஆகவே கூடுதலாக பாசன வசதி கொடுக்கும்போது அந்த ஏக்கர்களுக்கும் பாசன வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 62 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

பொன்விளைந்தகளத்தூர் ஏரியின் மண்கரையினை அணைக்கட்டாக்கும் திட்டம்

*வினா எண். 1003—திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம்–பொன்விளைந்தகளத்தூர் ஏரி வெள்ளக் காலில் உள்ள மண்கரை ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாக 1,200 ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருபோக சாகுபடிக்குப்பயன்படுகிறது. இந்த ஏரிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவிட்டு சீரமைப்பு வேலை நடைபெற்றிருக்கிறது. இருந்தாலுங்கூட மண் கரையில் தொடர்ந்து 10 ஆண்டு காலமாக உடைப்பு ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஒரு சிறு தடுப்புச் சுவர் எழுப்பி, கல் அணையாகக் கட்டித் தேக்கினால் இந்த ஏரி வலுவடைவது மட்டுமல்லாமல் இந்த ஏரியின் உபரி நீரை ஏழு நீர்ப்பாசன ஏரிகள் பயன்படுத்துவதற்கான தண்ணீர் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே மூலக்கேள்வியில் ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் என்று இருக்கிறது; அதனால் இல்லை என்று சொன்னேன். இப்பொழுது இந்தத் துணைக்கேள்வியில் அந்தப் பகுதி தொடர்ந்து வெள்ளத்தின் காரணமாக உடைந்து போகாமல் இருக்க ஏதாவது தடுப்புச் சுவர் போலக் கட்ட முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து இப்பொழுது ஆய்வு செய்யச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறது. தோராயமாக நான்கைந்து இலட்சம் ரூபாய் ஆகும் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு அந்த நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.





திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கு முன்பு சுமார் 4,50,000 ரூபாய் அளவிற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு பரிசீலனையில் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாண்டுக் காலமாகியும்கூட அந்த மதிப்பீடு நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்த வேலை நடக்கவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அதைத் துரிதப்படுத்திச் செயல்படுத்துகின்ற உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, விரைவிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுக்காக்களிலுள்ள குளங்கள்.

*வினா எண் 1004—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தோவாளை போன்ற தாலுக்காக்களில் 50 ஏக்கருக்கும் மேலாக விஸ்தீரணம் உள்ள குளங்கள் மண்ணால் நிறைந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த குளங்களை வெட்டி ஆழப்படுத்தி பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடியாக அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் உள்ள சில குளங்களில் தூர் சேர்ந்திருந்தாலும், எல்லாக் குளங்களும் வாய்க்கால்களில் மூலம் ஆற்று நீரைப் பெறுவதால் இக்குளங்களில் தண்ணீர் வருடத்தில் எல்லா மாதங்களிலும் இருக்கும் எனவும் அதனால் இக்குளங்களின் கீழுள்ள ஆயக்கட்டுகளில் பாசன வசதி பெறாத நிலங்கள் இல்லை எனவும், சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். ஆற்று நீரைப் பெறுகின்ற குளங்கள் ஆகையால், தூர் அகற்றி மேம்படுத்தும் பணிகளை எடுத்துக் கொள்வதற்கான விதிமுறைகளின் கீழ் வரவில்லை. எனினும் குளங்களை மராமத்து செய்யும் பணி மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு பகுதிகள் முழுமையும் கடந்த இரண்டு முறை பயிர்கள் தண்ணீர் இன்றிக் கருகி விட்டன. சேனலில் தண்ணீர் வராத நேரத்தில் இந்தக் குளங்களில் தண்ணீர் இருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகும். ஆதலால் இந்தக் குளங்களை ஆழப்படுத்த அரசு வேகப் பணிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** தலைவரவர்களே, பராமத்துப் பணிகள் என்று வருகின்றபொழுது தூர் எடுப்பதைக்கூட நாம் சேர்த்துக் கொள்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே தூர் எடுத்து அந்த மண்ணைக் கொண்டுபோய்க் கடற்கரையிலேதான் கொட்ட வேண்டியிருக்கிறது. அதற்காகச் செலவு அதிகமாகும் என்ற கருத்து முன்பு தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது அரசினுடைய புதிய அறிவிப்பின்படி ஏரி குளங்களைத் தூர் எடுப்பதற்கு, கரையை உயர்த்துவதற்கு, ஒரு டன் உற்பத்தி ஆவதற்கு 15,000 ரூபாய்வரை செலவானால்கூடப் பரவாயில்லை என்று அரசு இன்றைக்குப் புதிய உத்தரவைப் போட்டிருப்பதனுடைய விளைவாக இந்தத் திட்டங்களெல்லாம் பொருளாதார ரீதியாகக் கட்டுப்படியாவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, இது குறித்து அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம் தடிக்காரக்கோணத்திற்கு அருகாமையில் கிடைக்கும் வைடூரியங்கள்

*வினா எண். 1005: திரு. டி. மணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் தடிக்காரக்கோணத்திற்கு அருகாமையில் வனப் பகுதியில் வைடூரியங்கள் எந்த அளவிற்கு கிடைக்கின்றன?

(ஆ) எந்த வருடத்திலிருந்து ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது?

(இ) இதன் விலை மதிப்பு என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :**

(அ) மற்றும் (இ) * விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9–50]

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிற, என்னுடைய கேள்விக்கு ஆதாரமான, அடிப்படையான, பதில்கள் அதிலே இல்லை. குறிப்பாக, அது ஆரம்பித்தது எப்போது, எந்த அளவுக்கு அரசுக்கு அதிலே வருமானம் கிடைத்தது, அது எவ்வளவு இருக்கும் என்பது ஒன்று. இப்பொழுது தந்திருக்கிற குறிப்பிலே அது சிறப்புலி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தடிக்

---

* [430 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது].



காரக் கோணத்திற்கு அருகாமையிலிருக்கிற தனியாருக்குச் சொந்தமான ஒரு தோட்டத்திற்கு அருகாமையிலிருக்கிற ஒரு மலைப் பகுதியிலே, தருவையாறு என்று சொல்கின்ற இடத்திலே கடந்த ஓராண்டு காலமாக ஆய்வு நடத்தி வெட்டப்பட்டு, அந்தப் பணி நடந்து கொண்டே வருகிறது. கடந்த வருஷம் வரையிலும் அந்த வேலை நடந்து கொண்டேயிருக்கிறது. என்னுடைய கேள்வி ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்னாலே கேட்கப்பட்டிருந்தாலும், இப்பொழுதுகூட அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதனால், அதிலே கிடைத்த கல்லின் அளவு எவ்வளவு. ஏற்கனவே கல் விளையவில்லையென்று சொல்லி விட்டுச் சென்ற காரணத்தால், தனியார்கள் அதை எடுக்கின்ற சூழ்நிலை அங்கேயிருக்கிறது. ஆகவே, அதைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, விளைகிற வரையிலும் அந்தப் பகுதியைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவர அறிக்கையை மீண்டும் ஒரு முறை வேண்டுமானால் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய அந்தப் பகுதியிலே ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினருடைய முதல் கேள்விக்கு இங்கே பதில் இருக்கிறது. அடுத்தபடியாக, நான் குறிப்பிட்டிருப்பதைப் போல், ஆய்வினுடைய அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே கிடைக்கக் கூடிய கற்கள் வியாபார ரீதியாகவும், தரங்களின் அடிப்படையிலும் சரியாக இல்லையென்ற காரணத்தாலே மேற்கொண்டு அந்தப் பகுதியிலே சுரங்க வேலை நடைபெறவில்லையென்பதுதான் எனக்கு இருக்கிற தகவல். எனவே எவ்வளவு வருமானம் என்பதற்கு என்னிடத்திலே தகவல் இல்லை. ஏனென்றால், என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற தகவலின்படி அந்தப் பகுதியிலே இப்பொழுது வெட்டி எடுக்கப்படவில்லை.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுக்குத் தந்திருக்கிற தகவலைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஆனால், கடந்த முந்தைய வாரம் நான் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்றபொழுதுகூட, அந்தப் பணி அங்கே நடைபெற்று வருகிறது என்பதைப் பார்த்தேன். ஆகவே, துறையினர் அந்தத் தகவலை எப்படித் தந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, என்னுடைய கோரிக்கையெல்லாம் ஏற்கனவே அந்தக் கல் விளையவில்லையென்ற காரணத்தினால், அந்த வேலையைச் சில நேரங்களில் நிறுத்தி வைக்கிறார்கள். அந்த நேரத்தில் தனியார்கள் அங்கே சென்று எடுத்துச் செல்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, அதைப் பாதுகாக்கிற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அந்தப் பகுதியிலே, தடிக்காரக் கோணத்தை ஒட்டியிருக்கிற முக்துக்குளி, மகேந்திரகிரி, பாலமூர், அப்பர் கோதையார் இது போன்ற அந்தப் பகுதிகளில் இப்பொழுது ஆய்வு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இப்படி ஆய்வு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆய்வுகளின் அடிப்படையிலே வை வியாபார ரீதியிலே லாபகரமாக இருக்கும் என்றால் அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

டெம்போ மற்றும் வேன் வாங்கக் கடன் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1006—திரு. மெ ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ( T.I.I.C. ) டெம்போ, வான் முதலிய வாகனங்களை வாங்க கடன் வழங்கும் திட்டத்தை ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு குறைவான டவுன் பஞ்சாயத்து பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கட் தொகை உள்ள நகரமாக இருந்தாலும், வாய்ப்பு உள்ள எல்லா நகரங்களிலும் ''டெம்போக்கள்'' மற்றும் ''வான்கள்'' முதலிய வாகனங்கள் வாங்கி ஓட்டுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தகுதி அடிப்படையில ஏற்கனவே கடனுதவி வழங்கி வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தொழில் முதலீட்டுக் கழகம், இப்படி வாகனங்கள், தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் வாங்கக் கடன் வழங்கும் போது, புதியவைகளுக்கு மட்டும் கடன் வழங்குகிறது. ஆகவே, பழைய வாகனங்கள், பழைய இயந்திரங்களுக்குக் கடன் வழங்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் வழங்குவதற்கான பரிசீலனை அரசிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிற அது மாதிரியானக் கடன்களுக்கு என்ன வட்டி



விதத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறது ? இதுவரை அந்த நிறுவனம் டெம்போ போன்ற வாகனங்கள் எத்தனை கொடுத்து இருக்கிறார்கள் என்ற விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா? இப்பொழுது சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு எல்லாம் இயந்திரங்கள் பொருத்துகிறார்கள். எல்லா ஊர்களிலும் தகுதியின் அடிப்படையிலும் அதற்கும் கடன் கொடுக்க, இந்தத் தொழில் முதலீட்டுக் கழகம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டி விகிதம் 9 சதவீதம் என்று நினைக்கிறேன். என்னிடத்திலே இப்பொழுது சரியான புள்ளி விவரம் இல்லை. ஆனால், இப்படி கொடுக்கப்படுகிற அளவைக் கூட ஏற்கனவே, ரூ. 50,000 வரை, டெம்போ போன்ற டிரான்ஸ்போர்டு வாகனங்களை வாங்குவதற்கு, அதிகபட்சமாகக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ; அந்த அளவைக்கூட புது வண்டிகள் வாங்குவதற்கு ரூ. 1 இலட்சம் வரை உயர்த்துவதற்கு இப்பொழுது உத்தேசம் இருக்கிறது. சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும்கூட கடன் வழங்குகிற அளவை உயர்த்தி, எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் வாங்குவது என்பது மிகவும் சிரமமான காரியம் என்றும், நீண்ட நாட்கள் ஆகிறது என்றும் பெரிய பிரயாசைய முயற்சியாக இருக்கிறது என்றும் போனவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அந்த நாட்களை குறைப்பதற்கும் துரிதமாகக் கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மட்டும் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் மாவட்ட அளவில் பிராஞ்சு அளவிலே 50 ஆயிரம் ரூபாய்கள் கடன் வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட அளவிலே 5 கோடி ரூபாய்கள் சென்ற ஓராண்டிலே மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி விரைவாகக் கடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் இருந்தால் அதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. கெ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகரப் புறங்களிலே மட்டும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்குவதாகச் சொன்னார்கள். ஏன் அது கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே அதை விரிவுபடுத்தக் கூடாது. இப்போது ஒரு இலட்சம் ரூபாயாக

அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போதிலிருந்து நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைமை நிலையமாக சென்னையில் இந்தக் கடன்கள் வழங்குவதாக இருந்த அதிகாரத்தை சென்ற ஆண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர், அவர்கள் மாவட்ட அளவில், பிராஞ்சு அளவில், இந்தக் கடன்கள் வழங்குகிற அதிகாரத்தை விஸ்தரித்து விரிவுபடுத்தினார்கள். எனவே கிராமங்களிலே கடன்கள் வழங்கப்படுகின்றன என்று முதலிலேயே சொன்னேன். சென்ற ஆண்டு 5 கோடி ரூபாய் அனைத்து மாவட்டங்களிலே கிராமப்புறங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சிறு தொழில்கள் துவங்குவதற்கும் அதைப் போல டிரான்ஸ்போர்ட்டு வண்டிகள் வாங்குவதற்கும் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் தகுதி அடிப்படையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். என்ன தகுதி என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் அரசியல் சாசனச் சட்டப்படி பின்தங்கியவர்கள், மலைவாழ் மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, மாநில அரசு இஷ்டப்பட்டால் தனிச் சலுகை வழங்க இடம் உண்டு என்று அரசியல் சாசனச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் யாருக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுக்கப்பட்ட 5 கோடியில் பின் தங்கிய மக்கள், நலிவுற்ற மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு ஏதாவது கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடையத்தக்க விதத்திலே சென்ற ஆண்டுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் சிறு தொழிலைத் துவங்க முன்வருவார்களேயானால், அவர்கள் எவ்வளவு முதலீடு கொண்டு வரவேண்டுமோ, அதிலே இருந்து அவர்களுக்கு விதி விலக்குக் கொடுத்து, அவர்கள் அதிகமாகப் பெறுகிற வகையிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு துணைக் கேள்வி ..............

Mr. SPEAKER: The question is on "Tempo" and so I wanted to create a little tempo. I cannot allow any more supplementary. Questions are over.





[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

## 2. தகவல் கோரல்.

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் கைதாகிக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. 7, 8 ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்துவிட்டு, எல்லாம் ஒரே நாளில் வர வேண்டுமென்றால் எப்படி முடியும்?

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவரவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது மறுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அவையிலே கேட்கக் கூடாது. என்னுடைய அறையிலே கேட்க வேண்டும்.

### ஆ. அரசு அலுவலர்கள் போராட்டம்.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவாகி இருக்கிறது. அரசு அலவலர்கள் எல்லாம் இன்று ஒரு மணி நேரம் ............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது கொந்தளிப்பான நிலைமை இல்லை; அவர்கள் போராட்டம் இன்றைக்கு இல்லை; நீங்கள் அமைதியடையலாம்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வது, அந்த "கான்பிரன்டேஷன் அவாய்ட்" பண்ணப்பட வேண்டும். அதற்கு என்ன ..........

[1981 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சனையில் இருக்கிற முக்கியத்துவத்தை நான் மறுக்கவில்லை. இன்றைக்கு அவர்களுடைய போராட்டம் இல்லை ; 14-ந் தேதிக்கு வைத்து இருக்கிறார்கள். உங்களுடைய எண்ணங்களை நான் வரவேற்கிறேன் ; ஆனால் இன்றைக்கு அந்தப் பிரச்சனை இல்லை.

## 3. அறிவிப்புகள்.

### திருவாளர்கள் துரைமுருகன், உகம்சந்த், திருமதி யசோதா ஆகியோர் கொடுத்திருந்த உரிமைப் பிரச்னைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன் அவர்களும் திருமதி டி. யசோதா அவர்களும் பேரவையின் 246-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு அறிவிப்புக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் 15—4—1981 அன்று பேரவையில் அறிவித்த தன்னிலை விளக்கத்தில் கூறப்பட்ட சில கருத்துக்கள் தவறானவை என்றும், பேரவைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ளார் என்றும் அவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்களும் " முரசொலி " நாளேட்டின் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டுள்ளார். அதுவும் அவர் குறித்த தன்னிலை விளக்கம் குறித்தது தான்.

பேரவையைப் பொறுத்தவரையில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் தாம் ஒரு காரியம் செய்யவில்லை, அல்லது தான் அப்படி நியமிக்கவில்லை என்று கூறினால் பொதுவாக அதைத்தான் ஏற்க வேண்டும் என்பதுதான் மரபு. உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்த உறுப்பினர்கள் தம் கருத்துக்கு ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை. எனவே இவை பற்றிய முடிவு எடுக்க வேண்டுமானால் வேறு ஆதாரங்களிலிருந்துதான் எடுக்க வேண்டும். இதன் மூலப் பிரச்சினை நீதி மன்றத்தின் முன் விசாரணையில் இருப்பதால், இவை பற்றிய கருத்துக்களைப் பேரவையில் இதுதான் சரி, இது சரியல்ல என்று கூறாமல் இருப்பதுதான் முறையாகும். வழக்கு முடியும் வரையில் இப் பிரச்சினை குறித்துப் பேரவையில் எழுப்பாமல் இருப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்வே, இங்கு கூறப்பட்ட பிரச்சினைகளை எழுப்ப அடிப்படை ஆதாரங்கள் இல்லாததால் அவற்றை எழுப்ப என் இசைவை அளிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 மே 6]

திருமதி டி. யசோதா : தலைவரவர்களே, என்னிடம் ஆதாரம் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன். நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரங்கள் இருந்தால் அவைகளை வைத்துக் கொண்டு நீங்கள் கோர்ட்டுக்குப் போகலாம்.

* * *

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, உங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன். அதற்குள்ளே நான் போக வில்லை. இங்கே இருக்கிற பிரச்சினை, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் பெண் உறுப்பினர் யசோதா அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பை நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மீண்டும் அதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். " நீதி மன்றத்தின் முன் விசாரணையில் இருப்பதால், இவை பற்றிய கருத்துக்களை பேரவையில் இதுதான் சரி, இது சரியல்ல என்று கூறாமல் இருப் பதுதான் முறையாகும். வழக்கு முடியும் வரையில் இப்பிரச் சினை குறித்துப் பேரவையில் எழுப்பாமல் இருப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இங்கு கூறப்பட்ட பிரச்சினை களை எழுப்ப அடிப்படை ஆதாரங்கள் இல்லாததால் அவற்றை எழுப்ப இசைவை அளிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன் " என்று தீர்ப்பளித்து இருக்கிறேன். அதோடு பிரச்சினை முடிந்துவிட்டது. அதைப்பற்றி மேலும் விவாதிப்பது சரியல்ல.

திரு. நா. சுந்தரராஜ் : நான் அதற்கு உள்ளே போகவில்லை. திருமதி யசோதா அவர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக் கிறார்கள். அதன்மீது இங்கே இருக்கிற உறுப்பினர் தன்னிலை விளக்கம் அளித்திருக்கிறார். அப்போது திருமதி யசோதா அவர் கள் மீது பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டது இந்த அவையில்தான் ; நீதிமன்றத்தில் அல்ல. யசோதா அவர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருப்பதும் இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர் மீது தான். ஆகவே நீங்கள் உங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்ற சம்பிர தாயத்தைப் படித்தால்தான் மத்திய அரசில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே நடந்தது நமக்கு சௌகரியமாக இருந்தால் எடுத்துக் கொள்கிறோம் இல்லை என்றால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சபையிலே கூறப்பட்ட தீர்ப்பையே படிக்கிறேன்.

On 26th August 1970, the Chair read a Members' notice on a privilege matter against the Minister of Food and was about to give his ruling. Just then another Member requested the Chair to allow the Member who had given notice of the matter to make out his case. Thereupon the Deputy Speaker observed that the matter was one of facts, no legal principles were involved and he had all the material to decide whether there was a *prima facie* case of breach of privilege. Hence there was no need to allow the Member to speak. However, in deference to the suggestion of the Chief Minister the Chair allowed the Member to explain his point.

Tough it was not obligatory on the part of the Speaker to hear the views of the Members on a privilege issue raised by a Member, it was the practice to ascertain the views of the Leaders of parties before the Speaker announced his decision. It was not done as a matter of right or in accordance with any rule. The view of the Leaders of Parties were ascertained to help the Speaker in driving at a decision. In accordance with such an established practice, the views of the Leaders were ascertained.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தங்களிடத்திலே கேட்கின்றபோது நீதி மன்றத்திற்குச் செல்லுங்கள் என்றும் * * *
* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * *
* * * * *

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இங்கே பேசிய ஒரு மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு சுமத்தி தகவல் கொடுத்திருக்கிறார். ஆகவே,.........

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலேஜ் இஸ்ஸுவைப் பொறுத்தவரையிலே முதல் நாள் எடுத்துக் கொண்டு விளக்கம் கேட்கலாம். ஆனால் அதுபற்றி ஒவ்வொரு முறையிலும் வருகின்றபோது கோர்ட்டிலேயும் அந்த விஷயம் இருக்கின்றபோது கோர்ட்டிலே போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்வது சம்பிரதாயமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தத் தீர்ப்பைத்தான் நான் அளித்திருக்கிறேன். தலைவரின் தீர்ப்பின் மீது விவாதிப்பது நல்லதல்ல. அதற்கு அனுமதி தருவதற்கும் இயலாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் தாங்கள் முன்னர் சொன்ன கருத்துக்களைக் குறிப்பிட்டு ஒன்று சொன்னார். அது பத்திரிகைகளிலே வருமேயானால் வேறு வகையிலே பொருள்பட்டு விடக்கூடும். எனவே அதனை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கறிஞர் பற்றிய அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவருக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு எனக்குக் கொடுப்பதற்கு மறுக்கப்பட்ட காரணத்தால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திருமதி டி. யசோதா வெளிநடப்புச் செய்தார்)

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இந்த அவையிலே உறுப்பினர்கள் பல கருத்துக்களின் அடிப்படையில் வெளி நடப்புச் செய்வது பாராளுமன்ற மரபுக்கு உட்பட்டது. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும்.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ரூலிங் கொடுங்கள்' எது வேண்டுமானாலும் ஒப்புக் கொள்கிறோம். அவர்கள் ஏன் உட்கார்ந்து கொண்டே பேச வேண்டும்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உட்கார்ந்துக் கொண்டே பேசுவதெல்லாம் குறிப்பேட்டில் ஏறாது. எழுந்து நின்று பேசினால் எல்லோர் காதிலும் விழும். உட்கார்ந்துக் கொண்டே பேசினால் பலர் காதில் விழுவது இல்லை. அதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன. உட்கார்ந்துக் கொண்டே பேசியதாக திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டு எழுப்பிய பிரச்சினையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவு இடுகிறேன். இதோடு இப் பிரச்சினையை காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் விட்டு விட வேண்டும். உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

### 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

#### இராஜபாளையம் பகுதிகளில் நெசவாளர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் உ. சுப்பிரமணியம், எஸ். இராசாராமன், ஆர். சுந்தரமூர்த்தி, என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எஸ். ஆண்டித்தேவர் ஆகியோர் "இராஜபாளையம் பகுதிகளில் நெசவாளர் போராட்டம் நடைபெறுவது பற்றியும் அதன் காரணமாக இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. இராஜலிங்கராஜா முதலிய 53 பேர் கைது செய்யப்பட்டதும் குறித்து விவாதிக்க என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்." இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே ராஜபாளையத்திலே சுற்றியிருக்கிற சத்திரப்பட்டி போன்ற பகுதிகளிலே இருக்கக் கூடிய நெசவாளப் பெருமக்கள் கடந்த சில நாட்களாகவே போராட்டம் நடத்தியது பற்றியும், அவர்களுடைய பிரச்னைகளை தீர்ப்பது பற்றியும் சில தினங்களுக்கு முன்பாக இந்த மன்றத்திலே, இந்த வரிசையிலே இருந்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அரசின் கவனத்தை ஈர்த்தோம். ஆனாலும் அந்த ராஜபாளையம் பகுதியிலே நடைபெற்று வருகிற அந்த நிகழ்ச்சிகள், அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்த பின்னாலும் கூட, முடிவு பெறாமல் தொடரும் நிலைமையிலேயே இருப்பதாக உள்ளது மெத்த வேதனையை அளிக்கிறது.



1981 மே 6]

அந்தப் பகுதியிலே வசிக்கக் கூடிய கைத்தறி நெசவாளர்களின் துணிகள், லட்சக் கணக்கான ரூபாய் பெருமானம் உள்ளவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தாலும், கைத்தறி நெசவாளர்கள் தங்களுக்கு கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்று போராடிய காரணத்தாலும், எதிர்காலத்தில் அவர்களுக்கு வேலை கிடைப்பது என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிற காரணத்தாலும் நெசவாளர் குடும்பங்களுக்கு மத்தியில் ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதன்காரணமாக ராஜபாளையத்திலே அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போரட்டத்திற்கு ஆதரவாக அனேகமாக எல்லா கட்சியினருமே ஆளும் கட்சியின அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர மற்ற கட்சிகள் அனைத்துமே அந்தப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கிறார்கள். குறிப்பாக இளைஞர் காங்கிரஸ் கட்சி இதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அந்த மக்களின் துயர் துடைக்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதில் குறிப்பாக இளைஞர் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. இராஜலிங்க இராஜா அவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்ற தோழர்களும் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தருகிற வகையில் கலந்துகொண்டு போராடியதின் விளைவாக அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஆகவே இந்தப் பிரச்னையில் அரசாங்கம் உடனடியாக தேங்கிக் கிடக்கக்கூடிய துணிகளை கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சம்மந்தப்பட்டவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, வேலை இழந்து தவிக்கும் நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைக்கவும் உரிய வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும். தங்கள் மூலம் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் பசியாலும் பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள் அந்த நெசவாளர் பெருங்குடிமக்கள். ஆகவே ஏதோ பொன்னை வைக்கும் இடத்தில் பூ வைப்பதுபோல் இந்த நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் நிவாரண நிதியில் இருந்து ஒரு கணிசமானதொகை இல்லாவிட்டாலும்கூட ரூ. 100 யாவது கொடுத்து அவர்கள் பசியையும் பட்டினியையும் போக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட இது சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படவேண்டும். தேங்கிக் கிடக்கிற துணிகளை கொள்முதல் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஆக, இதுபோன்ற பிரச்சனைகள் குறித்து பேச வேண்டியிருப்பதால், இந்தப் போராட்டம் தொடரக்கூடாது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 மே 6

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் வலியுறுத்துகிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் வட்டாரத்தில் குறிப்பாக சத்திரப்பட்டியில் இருந்து இந்தப் பகுதியில் சங்கரன்கோவில் வரை கைத்தறி நெசவாளர்கள் பல்வேறு விதமான கோரிக்கைகளுக்காக கோரிக்கைகள் வைத்திருக்கலாம். ஒருபக்கத்தில் துணித்தேக்கம் இருக்கிறது. அதை அரசாங்கம் கொள்முதல் செய்து துணித் தேக்கத்தைக் குறைக்க வேண்டும் என்ற முறையில் ஒருபக்கத்தில் போராட்டம், இன்னொரு பக்கத்தில் சங்கரன் கோவிலில் 12 (3) ஸெட்டில் மென்டை அமல்படுத்த மறுக்கிறார்கள், அதை அமல் படுத்த வேண்டுமென்ற முறையில் சாத்தியக் கூறுகள் வந்த போது அரசுத் தரப்பில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், பேசிக்கொண்டிருக்கிறோம் சீக்கிரத்தில் முடிவு எடுக்கப்படும் என்று கூட சொன்னார்கள். அப்படி ஒரு முடிவு எடுக்கப்படாததால் அங்கே ஒரு பதட்டநிலை ஏற்பட்டு தீ வைப்பு சம்பவம் கூட ஏற்பட்டது. சத்திரப் பட்டி, சங்கரன்கோவில், சேந்தூர், இராஜபாளயைம் போன்ற இடங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டது மட்டு மல்ல, தொடர்ந்து இன்னும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த நெசவுத் தொழிலாளர்களை அரசு தரப்பில் அழைத்துப் பேசி அவர்கள் கோரிக்கைகள் என்ன, இதில் எது சாத்தியம் எது சாத்தியமில்லை என்று பேசி ஒரு தீர்வு காணவேண்டும் என்றும் அதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்பதோடு—ஏற்கனவே கைது செய்யப் பட்டவர்கள் பலர் ஜெயிலில் இருக்கிறார்கள், பலர் ஜாமீனில் வந்திருக்கிறார்கள், ஜாமீனில் வந்து கோர்ட்டுகளுக்கு அலைந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே ஒரு பதட்ட மான நிலை ஏற்பட்டிருக்கிறது. போடப்பட்டுள்ள அந்த வழக்கு களை வாபஸ் வாங்க வேண்டும். என்பதோடு பல்வேறு நிலைமைகள் குறித்து விவாதித்து ஒரு முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து—வழக்கம்போல் இல்லாமல்—இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் வட்டாரம் சத்திரப்பட்டி, சங்கரன்கோவில் பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராடிக் கொண்டிருக்கிறார் கள். குறிப்பாக சத்திரப்பட்டியில் நடத்த போராட்டம்



1981 மே 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

அங்கே 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அவர்கள் சொசைட்டிகளுக்குக் கொடுத்த துணிகளுக்கு அதன்மூலம் வரவேண்டிய 35 இலட்சம் ரூபாய் பணம் வரவில்லை என்ற போராட்டத்தை அவர்கள் நடத்திய போது 320 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அந்த 320 பேர்களும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்கிறபோது 307 செக்ஷன் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் நீண்ட நாட்களாக வைத்துக்கொள்ளப்பட்டார்கள். அதற்குப் பின்னாலும் அந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இன்னும் கோர்ட்டுகளுக்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள். அந்த 320 பேர்களும் தங்கள் வேலைகளை இழந்து கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள். அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும். இல்லை என்று சொன்னால் அந்த நெசவாளர் பெருமக்கள் நீதிமன்றங்களைச் சந்திக்க முடியாத நிலை, அங்கிருக்கிற நிலையை மிகவும் பதட்டமான நிலயை உருவாக்கியிருக்கிறது. குறிப்பாக சங்கரன்கோவிலில் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கூலி கேட்டு ஒரு ஒப்பந்தம் டி. ஸி. எல். அவர்கள் மூலம் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தம் 1980-ல் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஹைக்கோர்ட்டில் ஸ்டே வாங்கினார்கள். அந்த ஸ்டே இப்போது வெக்கேடாகியிருக்கிறது. இருந்தாலும்கூட அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டு மென்று அரசு தரப்பில் பேசியும் கூட அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

[முற்பகல் 10–20]

முதலாளிகள் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறார்கள். அதன் காரணமாக அங்கே தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 56 குழந்தைகள் உட்பட, 336 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே. . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ராஜபாளைய நெசவாளர்கள் போராட்டம். ராஜபாளையத்திலிருந்து சத்திரப் பட்டிக்கு ரொம்ப தூரம் போக வேண்டும். அதற்கு மேல் சங்கரன்கோவில். மாவட்டமே மாறுகிறது. நீங்கள் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள். இப்படி கேட்டால் அமைச்சர் அவர்களிடம் எப்படி பதில் எதிர்பார்க்க முடியும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: இராஜபாளையத்திலே தான் 336 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள்மீது செக்ஷன் 307 போடப்பட்டிருக்கிறது. கொலை முயற்சி செய்ததாக வழக்கு போடப்பட்டிருக்கிறது. சாதாரண தொழி லாளர்கள் ஊதியம் கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு

வாபஸ் பெறப்படவில்லை. அதனால் அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்த 836 பேர்கள் சிறையிலே இருக்கிறார்கள். அங்கே பதட்ட நிலை பரவியிருக்கிறது. எனவே, இதுகுறித்து, விவாதிக்க இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கீழ் ராஜ குலராமன் காவல் நிலையத்தைச சேர்ந்த சத்திரப் பட்டி கிராமத்தில் வசிக்கும் கைத்தறி நெசவாளர்கள் கொள் முதல் செய்த துணிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும், தேங்கிக்கிடக்கும் கைத்தறித் துணியை உடனே கொள்முதல் செய்ய வேண்டும் என்பன போன்ற 13 கோரிக்கைகளை முன்வைத்து, 1—4—1981 முதல் சத்திரப்பட்டியில் போராட்டம் நடத்தி வந்தனர். காவல் பிரிவு சட்டம் 32-ன்கீழ் 31—3—1981 முதல் 15 நாட்களுக்கு அங்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேற் கண்ட போராட்டத்திற்கு ஆதரவாக 8—4—1981ல் திரு. ஓ. பி. ஆர். ராமசாமி தலைமையில், இராஜபாளையத்தில் 200 பேர்கள் சட்ட விரோதமாக ஊர்வலமாகச் சென்று, இராஜ பாளையம் தாலுக அலுவலகத்தை அடைந்து, அங்கு கடைநிலை ஊழியராக பணிய ற்றும் ஒருவரை அலுவலகத்தில் நுழைய விடாமல் தடுத்ததற்காக, ஓ. வெங்கிடசாமி, ராஜலிங்க ராஜா மற்றும் 51 பேர்களை காவல் துறையினர் கைது செய்து, இராஜபாளையம் நகர காவல் நிலைய குற்ற எண். 155-81ல் இ.த.ச. 143, 341 மற்றும் 188-ன் கீழும், குற்றவியல் திருத்த சட்டம் 7(1) (ஏ)ன் கீழும் ஒரு வழக்கு பதிவு செய்தனர். மேலும் 9—4—1981 அன்று 32 பேர்களும், 10—4—1981 அன்று 8 பேர்களும் இதே சம்பவத்திற்காகக் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி, கைது செய்யப் பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். தற்சமயம் கைத்தறி நெசவாளர்கள் போராட்டத்தில் ஈடு பட்ட ஒருவரும் சிறைச்சாலையில் இல்லை. 20—4—1981 அன்று போராட்டக் குழு கலைக்கப்பட்டது. 31—3—1981 முதல் மூடியிருந்த 8 கைத்தறி நெசவாளர்கள் சங்கங்களும் 21—4—1981 அன்று திறக்கப்பட்டு, சுமுகமாக நடைபெற்று வருகின்றன. 2—4—1981 அன்று டெக்னிகல் சூப்ரவைசர் கள் மதுரையிலிருந்து சென்று சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள துணிகளை கொள்முதல் செய்துள்ளனர். தற்பொழுது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இப் பிரச்சினை குறித்து விவாதிக்க, சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கைத்தறி கதர்—துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர் மானம் குறித்து விவாதித்துத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. விளவங்கோடு வட்டம் காந்திமதி ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினை.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம்—காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் 100 பேருக்கு வேலை மறுக்கப்பட்டது குறித்து '' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர் சங்கம் குமரி மாவட்டத்திலுள்ள காந்திமதி ரப்பர் தோட்ட நிர்வாகத்தின் மீது, திரு. குரூஸ்முத்து என்ற தொழிலாளியை 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் நாள் அன்று நிர்வாகம் வேலை நீக்கம் செய்ததாகவும், தொழிலாளியை மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் கோரி ஒரு தொழிற் தகராறை நாகர் கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு எழுப்பியது. மேலும் இப்பிரச்சினை பற்றி நிர்வாகத்தினரிடத்தில் நேரில் எடுத்துச் சொல்லியதில் பலனில்லை என்றும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் முதல் வழக்கம்போல் தொழி லாளர்கள் வேலைக்குச் சென்றபோது, கேட் (Gate) மூடப் பட்டிருந்ததின் காரணமாக தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல இயலவில்லை என்றும் கூறி, அதனால் இதை விசாரிக்க வேண்டும் என்று சங்கம் கோரியது.

திரு. குரூஸ்முத்து என்ற தொழிலாளி 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர் மீதான குற்றச்சாட்டுகள் மீது 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள 23 ஆம் நாள் அன்று விசாரணை நடைபெற இருந்தது என்றும், அத்தொழிலாளிக்கு மீண்டும் வேலை கொடுக்குமாறு கோரி மற்ற தொழிலாளர்கள் வேலைக்கு வரவில்லை என்றும் நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. மேலும் தொழிலாளர்கள் வேலைக்கு வந்தால், அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்றும் நிர்வாகத்தின் தரப்பில் கூறப் பட்டது.

இத்தொழில் தகராறு, நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலரால் 2—4—1981, மற்றும் 22—4—1981 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நிர்வாகத்தினர் ஆஜராகவில்லை. மீண்டும் 7—5—1981 அன்று விசாரணை நடைபெற உள்ளது.

*திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள காந்திமதி ரப்பர் தோட்டத்தில் சுமார் 100 தொழிலாளர்கள், 27 பால் வெட்டும் தொழிலாளர்கள், சுமார் 40 காட்டு வேலை தொழிலாளர்கள், இதர தொழிலாளர்கள் சேர்த்து சுமார் 100 பேர்கள் இருக்கிறார்கள். நீண்ட நெடுங் காலமாக அந்த மாவட்டத்திலே இருக்கிற நூற்றுக்கும் மேற்பட்ட தோட்டங்களிலே 'பிளாண்டேஷன் லேபர் ஆக்ட்' அமலாக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த காந்திமதி நிர்வாகம் மட்டும் அரசாங்கத்திலே இயற்றியிருக்கிற ஒரு சட்டத்தை சுமார் 20 ஆண்டு காலமாக மறுத்து, பல்வேறு தகராறுகளை செய்து வருகிறார்கள். நியாயமான சம்பளம் வேண்டும் என்று கேட்கின்ற காரணத்தால் அவர்களுக்கு வேலை மறுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் லேபர் இலாக்கா கூட அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தாலும் அவர்கள் வருவதில்லை. கடந்த மூன்று மாதங்களாக இந்தநிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நியாயமான கோரிக்கைகளை, அரசாங்கம் இயற்றியிருக்கிற சட்டத்தை அமலாக்க வேண்டும், பிளாண்டேஷன் லேபர் ஆக்டை அமலாக்க வேண்டும், நியாயமான கோரிக்கையை கேட்டதன் காரணமாக வேலை மறுக்கப்படுகிறது. வேலை மறுக்கப்பட்ட தொழிலாளர்கள் சத்தியாகிரகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதன் காரணமாக அங்கே இருக்கிற போலீஸ்காரர்கள் அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மீது அநாவசியமான பொய்யான பல வழக்குகளை ஜோடித்துள்ளார்கள். குறிப்பாக ஒன்பது, பத்து வழக்குகளை ஜோடித்துள்ளார்கள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாக கேட்டு சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, நியாயமான, சட்டப்படியான சம்பளத்தை அங்கே அமலாக்க அரசு முன் வருமா? அந்த நியாயமான போராட்டத்திலே தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். இன்று அங்கு ஒரு பெரிய போலீஸ் முகாமாக, போலீஸ் அதிகாரிகள் அங்கே முகாம் அமைத்துக் கொண்டு, வேறு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிற வேலை நடத்தி வருகிறார்கள். இதை தடுத்து நிறுத்தி பழைய தொழிலாளர்களை வேலைக்கு திரும்பவும் எடுக்க வேலை வாய்ப்பு கொடுக்க, சட்டப்படி நியாயமான சம்பளத்தை அமலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலாளிகள் பேச்சு வார்த்தைக்கு வரவில்லை என்ற விஷயத்தை நானே எடுத்துச் சொன்னேன். இப்படி முதலாளிகள் வரமாட்டேன் என்று சொல்வதால் தான் நேற்றைய தினம் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றி விட்டால் இவர்கள் வரவில்லை என்றால் சம்மன் அனுப்பலாம். அதுவரையில் அந்த செயலில் நாம் ஈடுபட முடியாது. எனவே 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் அன்று மீண்டும் அழைத்திருக்கிறோம். அதிலே தொடர்ந்து அழைத்து பேசுவதற்கு முயற்சி செய்வோம். சுமுகமான ஏற்பாடு செய்வதற்கு இந்த இலாக்கா எல்லா ஏற்பாட்டையும் செய்யும்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, சட்டப்படியான சம்பளத்தை, உரிமைகளை தர மறுக்கிற அந்த தோட்டத்தை அரசாங்கமே எடுத்து நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி வேறு கேள்வி போட்டால், பரிசீலனை செய்து பார்த்து, பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், நா. பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களும் கொடுத்துள்ளனர்.

## ஆ. திருவண்ணாமலையில் ஏற்பட்ட சாலை விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி, எஸ். என். இராமசாமி, என். ஏ. பூங்காவனம், இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, செ. சிவசாமி, தி. க. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, ப. தீர்த்தராமன், ஆகியோர் "திருவண்ணாமலையில் அரசு போக்குவரத்துப் பேருந்தும் கார் ஒன்றும் மோதிக்கொண்டதால் மூவர் உயிரிழந்தது குறித்து" கவன ஈர்ப்புத்தீர்மானங்களை கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குகொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் அரசு போக்குவரத்துப் பேருந்தும், கார் ஒன்றும் மோதிக்கொண்டதால் மூவர் உயிரிழந்தது குறித்து,

[1981 மே 6

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ஆம் நாள் அன்று, சென்னையிலிருந்து சேலத்திற்குச் சென்றுகொண்டிருந்த டி.எம்.என். 8920 பதிவு எண். கொண்ட திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக துரிதப் பேருந்து மாலை சுமார் 3 மணியளவில் திருவண்ணாமலை கலைக்கல்லூரி அருகே ஒரு அம்பாசிடர் காருடன் விபத்துக்குள்ளானது. விபத்து திருவண்ணாமலை-செங்கம் சாலையில் ஒரு சிறிய வளைவில் ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தில் சாலையின் அகலம் 22 அடி. அதன் இருபுறமும் 5 அடி அகலமாக சாலையும் உள்ளது.

2. விபத்திற்கு முன் பேருந்தின் ஓட்டுநர் சாலையின் இடது புற ஓரமாக தனது பேருந்தை மிகுந்த கவனத்துடன் ஓட்டிச் சென்றுள்ளார். அச்சமயம் எதிரே சாலையின் வளைவில் கட்டுப் பாடின்றி வெகு வேகமாக வந்துகொண்டிருந்த ஒரு அம்பாசிடர் காரை கண்ணுற்றார். உடனே விபத்தை தவிர்க்கும் பொருட்டு பேருந்தை தடையிட்டு மீண்டும் சிறிது இடதுபுறமாக திருப்பி னார். ஆனாலும், எதிரே வேகமாக கட்டுப்பாடின்றி வந்த கார் பேருந்தின் முன் வலது பக்கமாக மோதி அதன் காரணமாக மறு புறம் திரும்பி நின்றது. இந்த விபத்தின் காரணமாக கார் பலமாக சேதமடைந்தது. காரில் பயணம் செய்த நான்கு பயணிகளில் மூவர் அவ்விடத்திலேயே மரணமடைந்தனர். காய முற்ற நான்காம் நபர் திருவண்ணாமலை அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். பேருந்தில் பயணம் செய்த பயணிகளில் யாருக்கும் காயமில்லை.

3. இவ்விபத்துக்குள்ளான பேருந்து 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் முதல் விடப்பட்ட புதிய பேருந் தாகும். அது தகுதிச் சான்றிதழுக்காக 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் நாள் அன்று அனுப்பப்பட வேண்டிய தாகும். மோட்டார் வாகன ஆய்வாளர், திருவண்ணாமலை பேருந்தை பரிசோதித்து அதனை விடுவித்தார். பேருந்துக்கு C.F.X. நோட்டீஸ் வழங்கப்பட்டது. இந்த விபத்து குறித்து திருவண்ணாமலை காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய் யப்பட்டுள்ளது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் புலனாய்வின்படி இந்த விபத்து கார் ஓட்டியின் கவனக் குறைவா லும் கட்டுப்பாடற்ற ஓட்டத்தினாலும் தான் ஏற்பட்டது என்றும் கழகப் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்திற்குக் காரணமல்ல என்று தெரிகிறது.



1981 மே 6]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பயணிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகிறார்கள். சிலர் சிறு காயம் அடைகிறார்கள், சிலர் பெரும் காயம் அடை கிறார்கள் ; சிலர் உயிரையும் இழந்துவிடுகிறார்கள்.

[முற்பகல் 10-30]

ஆதலால் தலையில் காயம் ஏற்பட்டுவிட்டால் ஹெட் இன்ஜுரி என்ற முறையிலே காயம் ஏற்பட்டுவிட்டால் அதற்கு வைத்தி யம் பார்ப்பதற்கு டாக்டர்கள் எல்லா மருத்துவ மனைகளி லேயும் இல்லை. ஆகவே பேருந்துகளிலே பயணம் செய் கிறவர்கள் எல்லாம் தலையில் கவசம் அணியவேண்டும் என்றும் விமானத்திலே பயணம் செய்கிறவர்கள் அணிகின்ற லைப் பெல்டைப் போன்று பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் அணியவேண்டும் என்றும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : சிறுகாயம் பெருங்காயம் பற்றி எல்லாம் சொன்னார்கள். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் நாம் படிப்படியாக தலையில் கவசம் அணிவதை நடைமுறைப்படுத்தலாம் என்று இருக்கிறோம். முதலிலே இரண்டு சக்கர வண்டிகளிலே பயணம் செய்வோர் அதைப் பயன்படுத்துமாறு ஏற்பாடு செய்வதற்கு ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் பேருந்துகளில் பயணம் செய்கிறவர்கள் அப்படிச் செய்யவேண்டுமென்றால் நடை முறையில் வருமா என்பதைப் பார்க்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் செய்வார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. இருந்தாலும் அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத் துக்கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே அரசுப் பேருந்துகள் வேகமாகச் செல்கின்ற காரணத்தினால் தான் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே விரை வாகச் செல்லும் பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் பயணச் சீட்டோடு பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆனால் அந்த அந்த உறுப் பினர்களே வாங்கி வைத்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இன்ஷூரன்ஸ் செய்து வைத்தாலும்கூட முழுமையாக எல்லாப் பயணி களுக்கும் கொடுக்ககூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை எதிர்காலத் திலே பரிசீலனை செய்து பார்க்கலாம்.

[1981 மே 6

திரு. ப. தீர்த்தராமன் : துணைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் வண்டிகளுக்கு வேகத் தடை கருவியை பொருத்து வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போன்று அனைத்து வாகனங்களிலும் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எல்லா வாகனங்களிலும் விரைவிலே பொருத்தப்படவேண்டும் என்பதுதான் . ரசினுடைய நோக்கம். முதற்கட்டமாக போக்குவரத்துக் கழக பேருந்துகளிலே பயன்படுத்த இருக்கிறோம். தொடர்ந்து எல்லா வண்டிகளிலும் அதைப் பொருத்த வேண்டுமென்ற முறையிலே அரசு ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விவர அறிக்கையில் அரசு பேருந்து மட்டும் சான்றிதழ் பெற அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கார் வேகமாகச் சென்றதால் மோதி யதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கார் பழுது அடைந்திருந்ததன் காரணமாகத்தான் இந்த விபத்து ஏற் பட்டதா? அப்படி பழுது அடைந்ததன் காரணமாக விபத்து ஏற்பட்டிருந்தால் அந்த விபத்திலே பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அரசு மானியம் வழங்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கார் வேகமாக வந்து பேருந்திலே மோதியதாகத்தான் தகவல் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது கார் பழுது அடைந் திருந்ததா இல்லையா என்பதல்ல, கார் நல்ல நிலையில் இருந் திருந்தாலும் வேகமாக வந்த காரணத்தினால் நிறுத்தமுடியாத நிலைமையில் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. 10 ஆயிரம் கொடுக்கமுடியுமா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட சாத் தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, விபத்துக்களில் இறந்தவர்களின்—இறந்தவர்கள் குடும்பத்தின் தலைவராக இருந்தால்—அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் களுக்கு அவர்களுக்குஅது பேரிழப்பாக இருக்கின்றகாரணத்தினால் நட்ட ஈட்டுத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏழைகளாக இருந்தால்—அந்தக் குடும்பத்தினுடைய தலைவராக இறந்தவர் இருந்தால்—பல சட்டதிட்டங் களை வைத்து அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிப்பது நடைமுறையிலே ஏற்கெனவே இருக்கிறது. ஆனால்



1981 மே 6] [திரு. சு. முத்துசாமி]

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தவறு காரணமாக ஏற்பட்டிருப்பதை பாதுகாப்பது என்ற நிலைமையில் நடவடிக்கை எடுப்பது என்பது முடியாத காரியம்.

## 6 வரவு செலவுத் திட்டம் 1981–82 வாக்கெடுப்பு

### (அ) கோரிக்கை எண் 15—காவல்துறை—தொடர்ச்சி.

### (ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப்பணிகள்—தொடர்ச்சி.

*திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற காவல் துறை, மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியங் களை வரவேற்று ஒருசில உணவுர்களை, கருத்துக்களை வைக்க நான் முற்படுகிறேன்.

ஜனநாயக தார்மீகக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்ற முறையில் மாமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத் திற்கு அனுப்பப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுகின்ற சந்தர்ப்பத்தைத் தவிர்க்கின்ற முறையில் இங்கே வராமல் இருந்தாலும்கூட, இந்த மானியக் கோரிக்கைகளிலே நடைபெறும் விவாதங்களிலே அவர்கள், கலந்துகொண்டு, நாட்டுக்குத் தேவையான பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருந்தால் மிக்க வரவேற்கத் தகுந்த நல்ல அம்சமாக நிச்சயமாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும். ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலை என்று அவர்களால் கைக்கொள்ளப் பட்ட அந்த வரவழைக்கப்பட்ட சூழ்நிலையின் காரணமாக அவர்கள் இங்கே வராமல், கருத்துக்களைச் சொல்லாமல் இருந்தாலும்கூட இந்தக் காவல்துறை மாநிலத்தை வரவேற்றும், தீயணைப்புப் பணிகள் பற்றிய மானியத்தை வரவேற்றும் உணர்வு களை வெளிக்காட்டுவது ஆளுங்கட்சியினுடைய கடமை என் கின்ற ஜனநாயக உரிமையில் இந்தக் கருத்துக்களை நான் வைக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

ஒரு அரசைக் குறை கூற வேண்டுமென்று சொன்னால் ஒரு அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று யாராவது கருது வார்களேயானால் அதற்குக் காவல்துறை ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது என்பது நாம் அறிந்திருக்கின்ற ஒரு உண்மையாகும். ஆனால் நம்முடைய தமிழகத்தின் காவல் துறையைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற வகையில், ஒரு முன்னு தாரணமாகத் திகழ்கின்ற அளவிற்கு நம்முடைய தமிழகத்தின்

[திரு. ஆர். மணிமாறன்] [1981 மே 6

காவல்துறை மின்னி மிளிர்ந்து கொண்டிருக்கிறது என்ற கருத்தை யாரும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள் என்ற நல்ல நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது.

காவலர்களை அதிகாரத்தால் மிரட்டும் ஆணவப் போக்குகள் நான் சொன்னதுதான் சட்டம், சொன்னபடிதான் நீ செய்ய வேண்டும், இல்லாவிட்டால் நடப்பதே வேறு என எச்சரிக்கின்ற முடக்கு வாதங்கள் சவக்கிடங்கின் பொக்கிஷமாக ஆக்கப்பட்ட கதைகள் நாட்டுக்கும் ஊருக்கும் உலகுக்கும் நிச்சயமாகத் தெரியும். கால அலைகளில் இந்தச் சர்வாதிகாரப் போக்குகள் கரைந்து மறைந்து விட்டிருக்கின்றன என்பதுதான் ஒரு யதார்த்தமான உண்மையாகும்.

காவல்துறை நியாயத்தையே வழங்க வேண்டும்: சட்டப்படியே நடந்தாக வேண்டும்; பாரபட்சம், நூலளவும் காட்டலாகாது என்ற பரந்த நோக்கு எங்களுடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசில் காவல் துறைக்கு அன்றாடம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. அந்த உணர்வின் அடையாளச் சின்னமாக நம்முடைய தமிழகக் காவல்துறையின் அரிய சேவை சென்ற காலகட்டங்களில் பாராட்டி, வரவேற்கத் தகுந்த அம்சமாக இருக்கிறது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மதுரைத் திருநகரில் அந்தத் கூடல் மாநகரத்தில் உலகமே போற்றுகின்ற வகையில் உலகத் தமிழ் மாநாட்டை நம்முடைய தமிழக அரசு நடத்தி பல்வேறு தமிழறிஞர்கள், பல்வேறு தமிழ்ப் புலவர்கள் ஆகியவர்களையெல்லாம் இந்த உலகத் தமிழ்நாட்டில் சங்கமம் ஆக வைத்து ஏறத்தாழ 20 இலட்சம், 25 இலட்சம் மக்கள் வெள்ளம் போல் அந்த மதுரைத் திருநகரத்திலே கூடியிருந்தார்கள். சாதாரணமாக ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் கூடியிருந்தாலே அந்தக் கூட்டத்தின் வாயிலாக குழப்பங்கள் ஏற்படுவது ஒரு சகஜ நிலைமை. அதைப்போல ஏதாவது சிறிய குழப்பங்கள், சிறிய சண்டை சச்சரவுகள் என்பது யதார்த்தமாக ஏற்படுகின்ற ஒரு உண்மையாகும். ஆனால் 20 இலட்சம் பேர், 25 இலட்சம் பேர் வெள்ளம் போலக் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் ஒரு கலவரம் இல்லை. ஒரு சச்சரவு இல்லை. ஒரு கஷ்ட நஷ்டம் மக்களுக்குக் கிடையாது.

[முற்பகல் 10-40]

கொள்ளைகள் கிடையாது; கொலை செய்கின்ற முயற்சிகள் கிடையாது; எந்தக் களவும் கிடையாது. சாதாரண பிக் பாக்கெட் செய்கைக் கூட அங்கே நடைபெறவில்லையென்று சொன்னால் 7,000, 8,000 பேரை மாத்திரமே பாதுகாப்புக்



[திரு. ஆர். மணிமாறன்] [1981 மே 6

ஒரு நல்ல நிகழ்ச்சி பாரதப் பிரதமர் அவர்கள் கடைசியாகக் கலந்துகொண்ட நிறைவு விழாவின்போது காவல் துறையினர் சிறந்த கட்டுக் கோப்போடு அங்கே அமைதியைக் காத்தார்கள் என்பதையும் நாம் இங்கே நினைவுகூறக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

அதே போல் கடந்த காலச் சம்பவங்கள் நம்முடைய மனதிலே நிழல் படமாக எழுந்திருப்பது ஒரு நியாயமான உணர்வாகும். அந்த மதுரைத் திருநகர் வீதியில், பாரதத்தினுடைய பிரதம அமைச்சராக இருந்த இந்திரா காந்தி அன்றைக்குப் பிரதம அமைச்சர் என்ற அந்தஸ்து இல்லாமல், அதே மதுரைத் திருநகர் வீதியிலே வலம் வந்த நேரத்திலே தான் காயப்படுத்தப்பட்டார்கள், அடிக்கப்பட்டார்கள், அன்றைக்கு அவருடைய உயிரைக் காப்பதற்கு ஒரு நெடுமாறன் மாத்திரம் அல்ல, ஒரு சித்தன் மாத்திரம் அல்ல. பலரும் அன்றைக்குக் காவலாக இருந்தார்கள் என்பதை இன்றைக்கு நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். ஆனால், அத்தனைக்கும் மீறி அன்றைக்கிருந்த தமிழகத்தின் காவல் துறை அதிகாரிகள் இந்திரா காந்தி அவர்களுக்குப் பலத்த பாதுகாப்பை அளித்து, வன்முறை கொடிய தாண்டவம் ஆடிய அந்த நேரத்திலும்கூட, இந்திராவினுடைய உயிருக்கு உலை வைக்கக்கூடிய கடுமையான சோதனைக்கு அவர்கள் அன்றைக்கு ஆளாகியிருந்த நேரத்திலுங்கூட, இந்திரா காந்தியினுடைய உயிரைக் காப்பாற்றிய து தமிழகத்தினுடைய காவல் துறை அதிகாரிகள், தமிழகத்தினுடைய காவல் துறை. நான் எதற்காக இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், ஆந்திரா மாநிலத்திற்கு அன்றைக்கு இந்திரா காந்தி அவர்கள் 'நான் செல்கிறேன்' என்று சொன்ன நேரத்தில், அன்றைக்கிருந்த வெங்கல் ராங் இங்கே வரவேண்டாம். ஆர்ப்பாட்டங்கள் நடைபெற இருக்கிறது என்று திருப்பி அனுப்பட்ட கூட, அதே போல் கர்நாடக மாநிலத்திற்கு இந்திராகாந்தி சென்ற நேரத்தில், அன்றைக்கிருந்த முதலமைச்சர் தேவராஜ அர்ஸ் அவர்கள் இங்கே வரவேண்டாம். வந்தால், கலவரம் நடைபெறும், ஆர்ப்பாட்டம் நடக்ககூடிய சூழ்நிலை உருவாகக்கூடும் என்று சொல்லி, வேண்டாம் அம்மையாரே, திரும்பிப் போங்கள் என்று அனுப்பப்பட்ட பொழுதும்கூட தமிழ்கத்திற்கு இந்திரா காந்தி வருகிறார் என்று தெரிந்தவுடனே தமிழ்கத்தினுடைய முதலமைச்சர், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் திரும்பிப் போங்கள் என்று சொல்லவில்லை. வருங்கள் : எங்கள் காவல் துறை உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்று சொல்லி, அன்றைக்கு இந்திரா காந்தி அவர்களை வரவேற்றது மாத்திரமல்ல, இந்திரா காந்தியை முதலமைச்சர் போய்ச் சந்திக்கலாமா என்ற சந்தேகத்தின் சாயல்கள், அச்சத்தின் அடையாளங்கள், ஐயப்பாட்டின் நிழ்ல்கள் எழுந்த நேரத்திலே கூட, முதலமைச்சர் கம்பீரமாகச் சொன்னார்.

காக வைத்துக் கொண்டிருந்த அந்தக் காவல் துறையின் அதிகாரிகள் எப்படிப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தை, அந்த மதுரை நகரத்திலே நடத்திக் காட்டி, அரசுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். நான் மதுரைத் திருநகரத்திற்கு வர மாட்டேன், மதுரைக்கு வருவதற்கு நான் தயாராக இல்லை. நான் மாத்திரமல்ல, எங்களுடைய கட்சியே அங்கே, வராது; கட்சியினுடைய உறுப்பினர்கள் யாருமே அந்த மதுரைக்குப் போக மாட்டார்கள், உலகத் தமிழ் மாநாட்டிலே நாங்கள் கலந்து கொள்வதாக இல்லையென்று கூட அறிவித்தார்கள். காரணம், சட்டம், ஒழுங்கு எப்படியும் கெட்டுவிடும் என்று எதிர்பார்க்கின்ற குறுகிய மனப்பான்மைக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக அன்றைக்கு ஆனார்கள். ஆனாலும்கூட, எந்தக் களவும் இல்லை எந்தச் சச்சரவும் இல்லை. எந்தவிதமான அசம்பாவிதமும் இடையாது. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இன்முகத்தோடு இனிய புன் சிரிப்போடு மிக அமைதியாக, மிகச் சுமுகமாக அந்த 25 இலட்சம் மக்களையும் வழி நடத்தி சென்றார்கள் என்று சொன்னால் அது நிச்சயமாகப் பாரட்டுக்குரிய ஒரு காரியமாகும்.

கன்னட மாநாட்டை, கர்நாடக மாநிலத்தில், அதனுடைய தலைநகரத்திலே நடத்த வேண்டுமென்று அந்த மாநிலத்னுடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆசைப்பட்டு எண்ணம் கொண்டு, இவ்வளவு பெரிய மாநாட்டை அண்டையிலே இருக்கிற தமிழ்மாநிலத்திலே நடத்தி முடித்திருக்கிறார்களே, அதற்கென்று எப்படி, எப்படிச் சட்ட விதிகளைப் பயன்படுத்தினார்கள், என்ன என்ன திட்டங்களைக் காவல் துறை அதிகாரிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டுமென்பதற்காக, கர்நாடக மாநிலத்திலிருந்து இங்கேயிருக்கிற காவல் துறை அதிகாரிகளுக்கு அவர்கள் விண்ணப்பமிட்டு, அந்த அதிகாரிகளை நேரிடையாக அனுப்பி, அதற்கென்று இருக்கக்கூடிய திட்டத்தைத் தமக்குத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அத்தனை மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக, நம்முடைய தமிழ் மாநிலத்தின் காவல் துறை தனியாக, ஒரு கம்பீரமான தோற்றத்தோடு நின்று கொண்டிருக்கிறது என்பதை என்னாலே இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை.

25 இலட்சம் மக்கள் கூடினார்கள் என்று சொன்னால், பாரதத்தின் பிரதம அமைச்சர் அந்த மதுரைத் திருநகருக்கு வருகை தந்திருந்தார். அன்றைக்கு ஏராளக் கூட்டம், பெருங்கூட்டம். அந்தத் கூட்டத்திலே கூட அமைதியைக் காக்கின்ற



ப்திைனாரு ஆண்டுக்காலம் பிரதம மந்திரியாக இருந்த வரை இந்தியத் துணைக்கண்டத்னுதிடைய பிரதமர் என்கிற முறையிலே நான் சந்திக்கப்போனேன் என்று மறுப்பு அறிக்கைகூட விடுத்தார்கள். ஆகவே காவல் துறை அன்றைக்கு ப்பிரமாக இருந்த காரணத்தினால்தான் எப்படியும் இந்திரா காந்திக்குப் பாதுகாப்புத் தரமுடியும் என்ற நம்பிக்கை நட்சத்திரம் புரட்சித் தலைவர் இதயத்திலே ஆழ்மாக சுடர் விட்டு எரிந்த காரணத்தினாலதான் மற்ற மாநில முதல்வர்கள் எல்லாம் போங்கள் என்று சொன்னபோது கூட, நமது தமிழக முதலமைச்சர் தமிழகத்திலே இருக்கக்கூடிய காவல் துறை பாதுகாப்பு கொடுக்கிற தங்கக் கவசமாக தங்கக் கேடயமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு தான் அன்றைக்கு அவர்கள் வரவேற்றார்கள். வரவேற்று அவர்களைப் பத்திரபடுத்தி திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலையை தமிழகத்தின் சார்பிலே ஏற்படுத்தித் தந்தார்கள்.

தமிழகத்திலே குடந்தை மகாமகம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு வரக்கூடிய திருவிழா. அந்தத் திருவிழாவில் 15-லிருந்து 20 லட்சம் பேர்கள் கூடியிருந்தலும் கூட சட்டம் ஒழுங்கை நம்முடைய காவல் துறை பாதுகாத்தது என்பதும், அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் நம்முடைய காவல் துறை முனைப்போடு செயலாற்றியது என்பதையும் நாம் நிச்சயமாக நினைவு கூற வேண்டும்.

கொலை, கொள்ளை, வழிப்பறி, களவு, பெரிய திருட்டு, சிறிய திருட்டு, கால்நடை திருட்டு, கார் திருட்டு, போன்ற குற்றப் பிரச்னைகளை மிக ஆழ்ந்த முறையில் ஆய்வு நம்முடைய காவல்துறை செய்து வருகிறது. தண்டனையிலே முடிந்த வழக்குகளும், விசாரணையிலே உள்ள வழக்குகளுமாக 1979-ஆம் ஆண்டில் 47·6 சதவீதம் தான். ஆனால் 1980-ல் 59·1 சதவீதம் என்ற அளவில் முன்னேற்றத்தை முன்னேற்றப் பாதையை நம்முடைய காவல் துறை கண்டிருப்பது வரவேற்கத் தகுந்த ஒரு காரணமாகும்.

அதுவே 1981-ஆம் ஆண்டு 65 அல்லது 70 சதவீதமாக உயரவேண்டும் என்ற தாழ்மையான விண்ணப்பத்தை நான் காவல் துறையினுடைய உயர் அதிகாரிகள் மத்தியில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்பார்ப்போமாக. 1979-ல் களவாடப்பட்ட சொத்துக்களில் 41.9 சதவீதம் மீட்கப்பட்டிருக்கின்றது. 1980-ஆம் ஆண்டில் 47·8 சதம் மீட்கப்பட்டிருக்கின்றன. அதுவே 1981-ஆம் ஆண்டில் 50 சதவீதமாக அல்லது 60 சதவீதமாக உயர வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முதலமைச்சருடைய பார்வைக்கு வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சென்னை பட்டினப்பாக்கம் வசந்தா கொலை, டாக்ஸி டிரைவர் தேவன் கொலை, கீழ்ப்பாக்கம் பச்சையப்பன் கல்லூரி விடுதி சாலையில் இருக்கக்கூடிய இராஜலட்சுமி கொலை

[திரு. ஆர். மணிமாறன்] [1981 மே 6

ஆகியவை சென்னை மாநகரத்தை பீதிக்கு ஆளாக்கிய மிகப் பெரிய கொலைகளாகும். அந்தக் கொலைகளையெல்லாம் மின்னல் வேகத்திலே துப்பினை துலக்கி குற்றவாளிகளை அடையாளம் காட்டியது காவல் துறையில் ஒப்பற்ற செயலாகும்.

மனிதனை மனிதனே தின்கின்ற நரபலிகளை கண்டுபிடித்து, அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக முனைந்த காவல் துறை எத்தகைய சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டது என்பது கடந்த கால வரலாது. நடந்து முடிந்த சரித்திரங்கள்.

தீவிர வாதிகள் என்று தங்களை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கிறவர்கள் வன்முறையை மாத்திரமே மிகப் பெரிய ஆயுதமாக கையிலே தூக்கி, மனிதனை மனிதனே அடித்துக் கொல்ல வேண்டும் என்ற சாத்திரத்திற்கு தங்களுடைய இதயத்தை ஆளாக்கிக் கொண்டு, வன்முறையில் தான், ரத்தத்தினால்தான் நரபலியால்தான், ஆளை அடிப்பதால் தான், ஆளைக் கொலை செய்வதால்தான், பச்சை ரத்தத்தை இந்த மண்ணிலே தவழ விட்ட காரணத்தால்தான் உண்மை உருவாகும். நீதி பிழைக்கும், சட்டம் காப்பாற்றப்படும், உயர்வு ஓங்கும் என்ற வரட்டுத்தனமான கொள்கைக்கு தங்களுடைய நெஞ்சை அடகு வைத்திருக்கக்கூடிய பட்டதாரிகள்—அது இல்லாமையின் பிரதிபலிப்பா? வேலை கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தின் உணர்வின் பிரதி பிம்பமா? வேலை இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறோமே அடுத்த நாள் சோற்றுக்கு வழி இல்லையே என்று ஏங்கி, தவிக்கின்ற வறுமையின் கோரப் பிடியின் காரணமாகவா?—அந்த ஆராய்ச்சிக்குள் நாம் போகவில்லை. காரணங்கள் ஆயிரம் அலை மோதி வந்தாலும் லட்சோப லட்சம் அடுக்கடுக்காக உண்மைக் காரணங்கள் எதிரிலே நின்றாலும்கூட, வன்முறை என்பது கையாலே தூக்கக்கூடாத ஒரு கடுமையான ஆயுதம். வன்முறை என்பது தீவினையின் மறு பிரதிபலிப்பு, ஆகவே, அந்த வன்முறையைத் தொடக்கூடாது என்கிற முறையிலேதான் இந்தத் தீவிர வாதிகள் காவல் துறையைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டரைச் சாகடித்து இரண்டு காவலர்களைச் சாகடித்த கதையை நாம் மறப்பதற்கு இல்லை.

[முற்பகல் 10–50]

அந்த தியாகத் தீபமாக அந்த இன்ஸ்பெக்டர் பழனிசாமி கொடுமையின் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும்; கடுமையான, வன்முறையாளர்களால் சட்டத்தினுடைய அந்த பிடியிலே இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வில் தன்னுடைய உயிரை பலி கொடுத்த கதையை நாம் அறிவோம். அந்த இன்ஸ்பெக்டர் பழனிசாமி திருப்பூர் நகரைச் சேர்ந்தவர். தியாகத்தின் பிம்பமாக இருந்த திருப்பூர் குமரன் வாழ்ந்த அந்த மண்ணிலே தோன்றியவர். அந்த மண்ணிலே தோன்றியதாலோ என்னவோ அந்த தியாகம் தன்னுடைய இரத்தத்தோடு இரத்தமாக கலந்துவிட்ட சூழ்நிலையில் வெடிக்குண்டு



1981 மே 6] [திரு. ஆர். மணிமாறன்]

விபத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மறைகிறார். காவலர்களும் மறைகிறார்கள். இந்தச் செய்தி தெரிந்த உடனே தமிழகத்தின் முதலமைச்சர் நேரடியாக அந்த நகரத்திற்குப் போகிறார். திருப்பத்தூருக்குப் போகிறார். இறந்துபட்டு மண்ணில் கிடந்த அந்த இன்ஸ்பெக்டர் பழனிசாமியையும் காவல் துறையைச் சேர்ந்த இரண்டு காவலர்களையும் பார்த்து கண்ணீர் வடிக்கிறார் தமிழக முதலமைச்சர். இதுவரையிலே இந்த நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, சரித்திரத்திலே காண முடியாத அளவுக்கு 50,000 ரூபாயை உயிரிழந்த அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் தாரை வார்த்து தந்து, காவலர்களுக்கு காவல் தெய்வமாக இருக்கிற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார் என்ற சரித்திர முக்கியத்துவத்தை அங்கே நிலைநாட்டி வந்தார்கள்.

அந்த திருப்பத்தூர் வெடிகுண்டு மற்றவர்களுக்கு ஒரு பாடமாக மற்ற தீவிரவாதிகளுக்கு ஒரு கல்வி புகட்டுகின்ற சாலைக் கூடமாக அமைந்திருக்கிறது என்றால் அது நிச்சயமாக மிகையாகாது என்று கருதுகிறேன்.

அதைப் போல், இப்படி இறந்துபட்ட அந்த காவலர் குடும்பங்கள் கண்ணீரை வடித்துக்கொண்டிருக்கின்றன. நஷ்டத்தில் இருக்கின்றன. அந்தக் காவலர் குடும்பங்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டாமா? அவர்கள் வாழ்க்கையில் விடிவெள்ளி உதிக்க வேண்டாமா? அந்த இருண்ட வாழ்வுக்குள் வெளிச்சம் காட்ட வேண்டாமா? இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் கூட காவல் துறையினருக்கு சங்கம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது அந்தக் காவல் துறையினருக்கு இருக்கக்கூடிய உணர்வுகளை மதிக்க வேண்டாமா? அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அவர்களுடைய பிரச்சனைகளை மனதிலே வைத்து, அவைகளுக்குப் பரிகாரம் காண வேண்டாமா? மதிப்புத் தரவேண்டாமா? அந்த முறையிலே தான் 10 ஆண்டு சேவை செய்துள்ள காவலர்களுக்கும், எட்டுகளுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டது இந்தத் தமிழக அரசில்தான்; மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில்தான்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் கூட சென்ற கூட்டத்திற்கு முந்தின கூட்டத் தொடரில் எடுத்து வைத்தார்கள் என்பது என்னுடைய ஞாபகம். அதை நிறைவேற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு. அவர்களுக்கு அளிக்கப்படும் உணவுப் படியை உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். இந்த உணவுப் படியை 3 ரூபாயிலிருந்து $4\frac{1}{2}$ ரூபாயாகவும், $4\frac{1}{2}$ ரூபாயிலிருந்து 6 ரூபாயாகவும் உயர்த்தியது இந்த அரசுதான். அதைப் போல ஆபத்து படியை அதிகரித்துள்ளதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகுதான்.

[திரு. ஆர். மணிமாறன்] [1981 மே 6

கடமையிலே உயிரிழந்த காவலர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை, விடுதி சலுகை, இன்னும் பல விசேஷ சலுகைகள் புத்தக அலவன்ஸ்—இத்தனையும் அந்தக் காலவலர் குடும்பங்களுக்குத் தந்தது இந்த தமிழக அரசுதான்.

அதைப்போல வீட்டு வாடகைப் படிவை 30 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக உயர்த்தியதும் இந்த அரசுதான். சலவைப் படியை ரூபாய் 1.85-லிருந்து 10 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசுதான்.

இதற்காக காவலர்கள் கோரிக்கை வைக்கவில்லை. காவலர்கள் சங்கம் இதை வலியுறுத்தவில்லை. அவர்கள் எல்லாம் கேட்காமலேயே தாமாக இந்த சலுகைகளை வழங்கியது நம்முடைய புரட்சித் தலைவர் அரசு.

அதைப்போல வேறு எங்குமே சாதிக்க முடியாத அளவுக்கு காவலர்களுக்கு என்று வீட்டுவசதிக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு பெற்ற காவலர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, தங்களுடைய தள்ளாத வயதில் தங்களுடைய கடந்த கால வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்க, தாங்கள் கடமையாற்றிய பாங்கினை சிந்தனை செய்து பார்க்க, சாய்வு நாற்காலியிலே சாய்ந்துகொண்டு தங்களுடைய கடமையிலே நிகழ்ந்த சம்பவங்களை எண்ணிப்பார்க்க. அமைதியான முறையிலே அதை நினைத்துப்பார்க்க ஒரு சொந்த வீடு வேண்டாமா? நீங்கள் சாய்வு நாற்காலியிலே சாய்ந்து கொள்ளலாம், உங்கள் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கலாம், உங்கள் கற்பனையை எங்கு வேண்டுமானாலும் ஓடவிடலாம்; நீங்கள் அந்தக் காலத்தில் ஆற்றிய சேவையை எண்ணி எண்ணி பெருமகிழ்ச்சி அடையலாம். நீங்கள் பெருமூச்சு விடாமல் பெருமகிழ்ச்சி அடையலாம். தள்ளாத வயதில், உங்களுடைய கடைசி காலத்தில் உங்கள் பிள்ளைகள் உங்களை கைவிட்டாலும் உங்களை இந்த அரசு காப்பாற்றும், உங்களுக்குச் சொந்த வீடு நிச்சயம் இருக்கும் என்பதற்கு கட்டியம் கூறுகின்ற வகையில், சாட்சியம் காட்டுகின்ற முறையில், ஆதாரம் சொல்லுகின்ற வகையில் ஒரு கோடி ரூபாயில் தமிழகத்தினுடைய காவலர் வீட்டுவசதிக் கழகத்தை அமைத்தது இந்தப் புரட்சித் தலைவருடைய அரசாங்கம் தான்.

அதைபோல் காவலர்களுக்கு மலிவு விலையிலே உணவு போன்றவற்றை எல்லாம் காவலர்களின் குடும்பத்திலே இருக்கக்கூடிய தாய்மார்கள் எல்லாம் வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். போற்றிக்கொண்டிருக்கிறார்கள், பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 100 ரூபாய் என்ற அளவிலே மிச்சப்படுகின்ற வகையிலே அந்தத் திட்டம் வந்திருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



1981 மே 6] [திரு. ஆர். மணிமாறன்]

அடுத்து, பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை அதிகாரிகளுடைய பார்வைக்கு ஒரு சில உணர்வுகளை வைக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நாட்டிலே வகுப்புக் கலவரம், ஜாதி கலவரம், இனக் கலவரம் என்று எங்கே பார்த்தாலும் கொந்தளித்துக் குமுறிக்கொண்டிருக்கின்றது. எரிமலையாக வெடித்துக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஜாதிக் கலவரத்தை, வகுப்புக் கலவரத்தை, இனக் கலவரத்தை தனிப்பட்ட எந்த நபர் தூண்டினாலும் அல்லது அரசியல் கட்சிகள் என்ற போர்வையிலே அரசியல் ஆதாயம் தேடுவதற்காக ஜாதிகளைப் பயன்படுத்தினாலும், இனங்களைப் பயன்படுத்தினாலும், வகுப்புகளைப் பயன்படுத்தினாலும், வகுப்புகளை மறைமுகமாகப் பயன்படுத்துவோம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற தலைவர்களாக இருந்தாலும் அப்படிப்பட்ட சதிக்கூட்டத்தினுடைய அதாவது சமூக விரோத சக்திகளின் கைகளிலே விலங்கிட்டு சிறைக்கூடத்திலே அடக்கி வைக்க வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு இருக்கின்றது என்பதை நான் மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் சங்கம் என்று ஒரு சங்கம், அது விவசாயிகள் சங்கமா அல்லது விஷவாயுக்கள் நிறைந்த சங்கமா என்பது நாட்டு மக்களுக்குத் தெரிந்துகொண்டுதான் இருக்கின்றது. கடன் பாக்கியைக் கட்ட மாட்டோம் என்று ஆர்ப்பரிக்கின்றது, அரசுக்கு வரவேண்டிய வருமானத்தை தடுக்கின்ற வகையிலே தடைக்கற்களைப் போட்டு அரசின் வருவாயை எந்த அளவுக்கு தடுக்க வேண்டுமா அந்த அளவுக்கு இன்றைக்கு தடுத்துக்கொண்டிருக்கின்ற காரியங்களை இன்றைக்கு அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பலபேர் செய்துக்கொண்டிருக்கிறார்கள், அந்த வகையிலே இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் இந்த மாமன்றத்திற்கு நினைவூட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஒரு சந்தையை யாராவது ஏலம் எடுக்கச் சொல்கிறார்கள் என்றால் அவர்களிடத்திலே போய் ஏலம் எடுக்கக் கூடாது என்றும் அப்படி எடுக்க வேண்டும் என்றால் எங்களுடைய சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் தந்துவிட்டுத்தான் ஏலம் கேட்க வேண்டும் என்று சொல்கின்ற அந்த அதிகார துஷ்பிரயோகம் இன்றைக்கு அந்தச் சங்கத்தினரிடத்திலே கொடி கட்டிப் பறக்கின்றது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் திருப்பூர் நகரத்தையும் அவிநாசி நகரத்தையும் சொல்லலாம். பல்வேறிடங்களிலே சந்தையை ஏலம் போடக்கூடாது என்று ஒரு பேரலல் கவர்ன்மெண்ட்டை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார், பல இடங்களிலே போலீஸ் அதிகாரிகள் ஒரு தனி அரசாங்கம் போன்றே நடத்திக்கொண்டிருப்பதாக. அது உண்மையல்ல. தனி அரசாங்கம் எங்கே நடக்கின்

றது என்பது தெரியுமா ? விவசாயிகள் சங்கம் என்று சொல்லப்
படுகின்ற அந்தப் பசுமைப் போர்வையிலே தான் அந்தத் தனி
அரசாங்கம் நடத்தப்படுகின்றது. அந்தச் சமூக விரோத சக்தி
யினர் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள்.
'' எம். ஜி. ஆர். என்ன செய்து விடுவார், பார்த்துவிடு
வோம் ஒரு கை '' என்று பகிரங்கமாகவே அறிவிக்கிறார்கள்
அப்படி அறைகூவல் விடுகின்ற அந்தச் சக்திகள் இன்றைக்குத்
தமிழகம் பூராவும் ஆங்காங்கே விஷக்கிருமிகளாகப் பரவிக் கொண்
டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் இந்த மாமன்றத்திற்கு
வைக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன். போராட்டம் என்ற
பெயரால் பாலை நகருக்குள்ளே அனுப்ப மாட்டோம், காய்
கறிகளை அனுப்ப மாட்டோம், பாதைக்கு வெடி வைப்போம்,
பாதையை இரண்டாகப் பிளப்போம், பச்சைத் தண்ணீரிலே,
பாலிடாலைக் கலப்போம், பாதையிலே மரத்தை வெட்டிப் போடு
வோம் என்றெல்லாம் சொல்வதுதான் போராட்டத்தின் அடை
யாளமா ? காந்தியாருடைய அந்த அகிம்சா தத்துவத்தினுடைய
மறு வார்ப்பா இது ? ஆகவே, தனி சர்க்காரையே விவாசாயிகள்
சங்கம் நடத்திக்கொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித்
தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் சமூகவிரோத சக்தி
களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு தண்டனை அளிக்க வேண்டும்
என்று. அந்த சமூக விரோத சக்திகள் இந்த சங்கத்தின் உள்ளே
புகுந்து இந்த நாட்டையே குட்டிச்சுவராக ஆக்குவதற்கு திட்டம்
தீட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிகுந்த பணிவோடு
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்திலே பல கிராமங்களிலே உள்ள ட்ரான்ஸ்
பார்மர்கள் எல்லாம் கொளுத்தப்பட்டன. இது உண்மையா இல்
லையா ? இது நடந்ததா இல்லையா ? டிரான்ஸ்பார்மர்கள்
எல்லாம் 40 கிராமங்களில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

[முற்பகல் 11–00]

அதிலே அடிபட்ட காவலர்கள், உதைபட்ட போலீஸ்காரர்கள்,
இரத்தம் சிந்திய போலீஸ்காரர்கள் எத்தனை பேர்கள். விவ
சாயப் போராட்டத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உயிரை இழந்
தார். இரண்டு போலீஸ் காவலர்கள் உயிரை இழந்தார்கள்.
இது இப்போது அடிக்கடி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு
காரியமாகும்.

இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தீவிரவாதிகள் என்று சொல்கிறபோது, அவர்களின் உணர்வு
களை படம் பிடித்துக் காட்ட வேண்டும். அவர்களின் உணர்வு
களை புரிந்து கொள்ள வேண்டும், என்று மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் அண்ணன் கே. ரமணி அவர்கள் எடுத்துச் சொன்
னார்கள். அவர்களின் எண்ணங்களை அப்படியே படம் பிடித்
துக் கொள்ளுங்கள். ஆனால், அவர்களின் உணர்வுகள் எப்படிப்
பட்டது என்பதைப் பற்றியும் பிரித்துப் பார்த்து மனதில் படம்





பிடிப்பதற்கு காவல் துறை அதிகாரிகள் தயவு செய்து பின்
வாங்கக் கூடாது என்பதையும் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

ஒரு பேரறிஞன் சொன்னான். மனிதனுக்கும் விண்வெளிக்கும்
இடையே உள்ள தூரம் குறைந்துகொண்டே போகிறது. ஆனால்,
ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இருக்கிற இடை
வெளியோ, விண்வெளியை விட உயரே போய்க் கொண்டே
யிருக்கிறது. ஒரு மனித மனத்திற்கும் இன்னொரு மனித மனத்
திற்கும் இடையே உள்ள தூரம் விண்வெளி தூரத்தைவிட அதிக
மான தூரம் இருக்கும்போல் இருக்கிறதே என்ற கருத்தை அந்த
அறிஞன் சொன்னான். அப்படியே இந்த தீவிரவாதிகள் என்று
சொல்லிக் கொள்ளக் கூடியவர்கள் இந்தத் தத்துவத்திற்கு தங்கள்
ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்திச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதன் விளைவாகத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்
வர், புரட்சித் தலைவர் அவர்கள் தர்மபுரிக்கு போகும்போதுகூட,
அந்த இரயில் பாதையில் 5, 6 வெடி குண்டுகள் வைத்து அவ
ருடைய இன்னுயிரை பறிப்பதற்குத் திட்டம் இட்டார்கள். அன்
றைக்கு அவர் காரிலே போய்க் கொண்டிருக்கும்போது, 4, 5
காவலர்கள் வந்து, நீங்கள் போகிற அந்தப் பாதையில், ஜோலார்
பேட்டைக்கு முன்னாடியோ, அல்லது பின்புறமோ உள்ள ஒரு
இடத்தைக் குறிப்பிட்டு, அங்கிருந்து 4, 5 வெடிகுண்டுள் கைப்
பற்றப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லி, தெரியாமல் இன்னும்
எத்தனையிருக்கிறதோ, ஆகவே, தொடர்ந்து அந்தப் பாதையில்
போக வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால், அப்படிச் சொன்னபோது, நமது மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள், தமிழகத்தின் தனி பெருந் தலைவர் அவர்
கள், ஒரு உத்வேகமான வார்த்தைகளை அன்றைக்கு எடுத்துச்
சொன்னார்கள். ''நான் அதே பாதையில்தான் செல்லப் போகி
றேன். அதே புகை வண்டியில்தான் செல்லப் போகிறேன். நான்
போவதாக இருக்கிற அந்த வண்டி ஆயிரக்கணக்கான தாய்மார்
களையும், குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு போகிறது. எனக்கு
ஆபத்து ஏற்படுகிறபோது, ஆயிரக்கணக்கான மக்களும் அல்லவா
அதனால் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் அத்தனை பேர்களும்
பாதிக்கப்படுகிறபோது, நான் மட்டும் ஏன் பாதை மாறி போக
வேண்டும். ஆகவே, நானும் அவர்களோடு செல்வேன். அவர்
களுக்கு ஆபத்து ஏற்பட்டால் எனக்கும் ஏற்படட்டும் '' என்று
ஆபத்தின் உச்சியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிற அந்த நிலைமை
யிலே அவர்களுக்கு வருகிற சாவு எனக்கும் வரட்டும் என்று
சொல்லி அஞ்சாத நெஞ்சத்தோடு, அதே இரயிலில் அன்று பயணம்
செய்தார்கள். ஆபத்து தீபஸ்தம்பமாக கண்ணெதிரே தெரிந்துக்
கொண்டிருக்கிற நேரத்திலே, எந்த நேரமும் உயிருக்கு ஆபத்து
ஏற்படலாம் என்று நிலைமை இருக்கும் காலத்திலே, அதை

துச்சமாக உதறி எறிந்து மேலே பயணம் செய்யக்கூடிய மனோபலம், மனோசக்தி, மனோவலிமை, தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர், புரட்சித் தலைவர் அவர்ளுக்குத்தான் இருந்தது என்பதை நாம் அன்றைக்குக் கண்கூடாகப் பார்த்தோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், காவல் துறையின் அதிகாரிகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்து மிகுந்த கண்காணிப்போடு இருக்க வேண்டும், இவைகளை முன்கூட்டியே, தெரிந்து கொண்டு, சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் எச்சரிக்கை செய்யக்கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடத்தான் சொல்கிறேன்.

அதே போன்று மணியாச்சி என்னுமிடத்தில் புரட்சித் தலைவர் அவர்களின் உயிரைப் பறிக்க வேண்டும் என்பதற்காகவே ஒருவன் அவர் மீது கத்தியை வீசி எறிந்த சம்பவம். அன்றைக்கு அவர் உயிருக்கு ஆபத்து நேரிடவில்லை என்ற லும் கூட, காவல் துறையின் அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுத்திருந்து, போதுமான பாதுகாப்பை வழங்கியிருந்தால், முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால், இத்தகைய நிகழ்ச்சிகளை தவிர்த்து இருக்கலாம் என்று என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இனிமேலாவது வருங்காலங்களில் இது போன்ற சம்பவங்களை தவிர்க்க காவல் துறையின் உயர் அதிகாரிகள் தக்க கண்காணிப்போடு, முன் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இன்னொன்றை ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறை தமிழக முதல்வர் அவர்களின் கீழ் எப்படி இயங்குகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ராதாபுரத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, யாரோ ஒருவன் அவர் மீது உளியை வீசினான் என்று தெரிந்தவுடனே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்ளுக்கு எங்கே சென்றாலும் அவருக்குத் துணையாக போகுமாறு ஒரு செக்யூரிட்டியை அன்றே நியமித்து அனுப்பினார் என்றால், ஜனநாயகத்தின் மரபுகளை காப்பாற்ற அவர் எப்படி அக்கறை கொண்டிருக்கிறார் என்பது விளங்கும். ஆகவே, ஜனநாயகத்தைக் காப்பாற்றும் வகையிலே காவல் துறை, புரட்சித் தலைவர் அவர்களின் கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இங்கே மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்படி காவல் துறை அதிகாரிகள் மிகுந்த கண்காணிப்போடு இருக்க வேண்டும் என்று சொல்லி நான் பன்னி பன்னி எடுத்துச் சொல்வதற்குக் காரணம் தமிழகத்தில் இன்றைக்கு சமூக கலவரங்களும், வகுப்புக் கலவரங்களும் ஜாதி கலவரங்களும் பற்றிபடருகின்ற வகையில் விஷ விதை ஊன்றக்கூடிய நிலையில் விஸ்தீரணமாக வளர்ந்துக் கொண்டிருக்கிற காட்சியினை நாம், அன்றாடம் பார்த்துக் கொண்டே வருகிறோம்.





ஆகவே போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவர்கள் கடமை என்பதை இங்கே கூறிக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காவல் துறை அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு இந்த அரசு செய்தது போல் வேறு எந்த அரசும் சலுகைகள் செய்யவில்லை என்பதை என்னால் உறுதியிட்டு, அறுதியிட்டுச் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகிறபோது கூட மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மாநில அரசின் காவல் துறை பரவாயில்லை என்ற ஆழமான கருத்தை நேற்றைய தினம் அவர்கள் எடுத்து வைத்தார்கள்.

**திரு. ரா. உமாநாத் :** மற்ற எல்லா மாநிலங்களும் என்று சொல்லவில்லை. வடக்கே இருக்கிற சில மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது பெட்டர் பொஷிஷன் என்று சொன்னேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** வடக்கே என்று சொன்னாலும், தெற்கே என்று சொன்னாலும் எங்களுக்குச் சாதகமாகச் சொன்னார்கள் என்பதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** பீகாருக்கு பிரதம அமைச்சரே போக வேண்டிய ஒரு நிலை வந்திருக்கிறது.

**திரு. ஆர். மணிமாறன் :** வடக்கே உள்ள அந்த உணர்வுகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்று கூட பிரதம அமைச்சர் அவர்கள் நேரடியாகப் போய் 40 பிணங்கள் விழுந்திருப்பதைப் பார்த்து கண்ணீர் சிந்திவிட்டு வந்திருக்கிறார்கள் என்பது நாம் அறிந்திருக்கிற உண்மையாகும். அப்படிப்பட்ட நிலையில் தமிழ்நாட்டு காவலர்கள் நல்ல முறையில் மும்முரமாக பாடுபட்டு வருகிறார்கள் என்பதை அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள்.

சென்ற கூட்டத் தொடருக்கு முன்பு தமிழக முதல்வர் அவர்கள் ஆர்டர்லீஸ் என்றிருப்பதை அகற்ற வேண்டும் என்ற உறுதியை இங்கே தந்தார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அந்த ஆர்டர்லி முறை இன்றும் இருந்து வருவதாகவும் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. ஆர்டர்லீஸ் என்ற முறை மாற்றப்பட்டு அது ஒழிக்கப்பட்டு காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு என்ற முறையில் அவர்கள் பாதுகாப்பிற்காக காவல் துறை பாதுகாப்புப் பணியாளர்கள் என்ற பொறுப்பை நம் அரசு அறிவித்திருக்கிறது. அது, ஆர்டர்லி என்ற முறை அல்ல. அதிகாரிகளுக்கு பாதுகாப்பு தருகிற 'செக்யூரிட்டி' என்ற முறையில் அந்தப் பணியாளர்களை அமர்த்தியிருக்கிறார்களே தவிர வேறு அல்ல. அவர்களுக்கு

வருகிற தொலைபேசியோடு தொடர்பு கொண்டு, யார் யார் பேசினார்கள் என்ற புள்ளியை எடுத்துரைப்பது, அதேபோல் குறித்து வைப்பதற்கும், வரவேற்பதற்கும் உண்டான முறைகளில் அவர்கள் அந்த விதிமுறைகளை அனுஷ்டிக்கிறார்களே தவிர ஆர்டர்லி என்ற முறையை—தமிழக முதல்வர் அவர்கள் இங்கே அறிவிக்கப்பட்டு யாரும் இப்போது கடைப்பிடித்து வருவதில்லையென்பதை நான் அவர்களது கவனத்திற்கு மிகுந்த பணிவன்புடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மிகப் பெரிய உயர்தர போலீஸ் அதிகாரிக்கு பாதுகாப்பு தருவது என்பது, அவருக்கு செக்யூரிட்டி போடுவது என்பது சந்தேகத்திற்குரிய ஒரு அம்சம் அல்ல. அது வேண்டாத அம்சம் அல்ல. அவர்களுக்கு பாதுகாப்பு நிச்சயமாகத் தேவை. அப்படிப்பட்ட பாதுகாப்பு முயற்சியில் இன்றைக்கு செக்யூரிட்டி என்ற முறையில் உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல என்ற உண்மையை நான் இங்கே எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஸெக்யூரிட்டிஸ் என்ற முறையில் அதிகாரிகளுக்கு கார்ட்ஸ் கொடுப்பதில் ஆட்சேபிக்கவில்லை. நேற்று சொன்னபோது சொன்னேன். ஆர்ம்ஸ் ஆன்ட் லத்தி கார்ட்ஸ் என்று குறிப்பிட்ட தேதியில், 6 ஆம் தேதி அன்று தனியாக 200 சொச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களை எப்படி சமையலுக்கு, பால் கறக்க யூஸ் செய்கிறார்கள் என்று பெயரைச் சொன்னேன். பால் கறக்கிறவர் யார் என்று பெயர் சொன்னேன். சமையலுக்கு யூஸ் செய்கிறவர் யார்—ஸ்பெஷல் ப்ராஞ்சுக்கு ஒதுக்கப்பட்டவர்—பெயர் சொன்னேன். அதை நீங்கள் மறுக்கத் தயாரா? ஸ்பெசிபிக் இன்ஸ்டென்ஸஸ் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : ஸ்பெசிபிக் இன்ஸ்டென்ஸஸ் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் கூட அப்படி எழுதிக் கொடுத்திருக்கமாட்டார்கள். ஸ்பெஸிபிக் இன்ஸ்டென்ஸை என்று நீங்கள் யாரைக் குறித்து சொல்கிறீர்களோ அவர்கள் உங்களிடத்தில் அல்லது மற்றவர்களிடத்தில் ரிப்போர்ட் செய்ய வேண்டிய காரண காரியங்கள் இல்லை.

ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் போட்ட ஒரு உத்தரவை உயர்தர அதிகாரிகள், உயர்தர போலீஸ் அதிகாரிகள் மறுதளித்து அப்படி ஒரு பாரலல் கவர்ன்மென்ட்டை போலீஸ் அதிகாரிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது, ஒப்புக் கொள்வதற்கில்லை, நம்ப முடியாது, நம்பிக்கை கொள்ள இயலாததொரு வாதமாக இருப்பதாக நான் இங்கே கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



அதேபோல் தமிழகத்தினுடைய காவல் துறை அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு பல்வேறு சிறப்பு அம்சங்களை எதிர் காலத்தில் நம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்ய இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி நாட்டிலே வகுப்புக் கலவரம், முளை விட்டுக் கிளம்பாமல், இனக் கலவரம் எழும்பாமல், ஜாதிக் கலவரம் தோன்றாமல் தகுந்த பாதுகாப்பினை காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் தரவேண்டும் தரவேண்டும் என்று கேட்டு இந்தக் காவல்துறை மானியத்தை வரவேற்று, இந்த தீ அணைப்புத்துறை மானியத்தையும் வரவேற்று எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[முற்பகல் 11-10]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, நான் சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

காவல் துறை என்பது ஒரு நாட்டில், இந்த மாநிலத்தின் பெருமளவிற்கான சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்க இருக்கின்ற ஒரு முக்கியமான ஸ்தாபனம். ஒரு மாநிலத்தி சட்டம் ஒழுங்கு இருக்கிறது என்று சொன்னால், அது காவல் துறையை வைத்துத்தான் சொல்ல முடியும். தமிழக காவல் துறை இந்தியாவிலேயே மிகச் சிறப்பான காவல் துறை என்று பெயர் பெற்ற அந்தத் துறைநீண்ட நெடுங்காலமாக, அந்தத் துறை டிசிப்ளின்ட் போர்ஸ் என்பதை இழந்து விட்டதற்குக் காரணம், இதற்கு முன்னால் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் எல்லாம் அந்த டிசிப்ளின்ட் போர்ஸ் என்பதை மாற்றுகின்ற அளவிற்கு தலையீட்டின் காரணமாக அதிகாரிகள் செயல்படாத நிலை ஏற்பட்டது என்பது இந்த நாடு அறிந்த உண்மை. அப்படிப்பட்ட அந்த காவல் துறை எப்படி அந்த டிசிப்ளின்ட் போர்சை, அந்த நிலையை இழந்தது என்ற வரலாற்றைச் சொல்வதைவிட, அரசாங்கப் பொறுப்பிலே இருப்பவர்கள் தலையிடாமல் இருந்தால் அதைக் காப்பாற்ற முடியும். பொறுப்பில் இருப்பவர்கள் தலையீட்டின் காரணமாக, சில அதிகாரிகள் தவறு செய்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், கீழே இருப்பவர்கள் செயல் இழக்கின்ற நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலை தவிர்க்கப்படுமானால், காவல் துறை தனது கடமையை, சட்ட ஒழுங்கை நிறைவேற்றுவதற்குச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றது. இந்த ஜனநாயக ஆட்சியிலே பொறுப்பிலே இருக்கின்றவர்களால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றபோது, அந்த அதிகாரிகள் பழி வாங்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல. கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் காவல் துறையிலே தவறு செய்கிறார்கள் என்று நான் சொல்

வதற்கு இல்லை. காவல் துறையைச் சார்ந்த ஒரு உயர் அதிகாரி எனக்கு ஞாபகம் சரியாக இருக்குமானால், கிருஷ்ணசாமி என்பவர் காவல் துறையைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அதிலே அவர், கான்ஸ்டபிளரி என்ற தலைப்பின் கீழ் எழுதியிருக்கிறார்கள். கான்ஸ்டபிளரி என்று அவர்கள் சொல்வது இன்ஸ்பெக்டர் தரப்பிற்கு கீழ் மட்டத்திலே, அந்தப் பதவிகளிலே உள்ளவர்கள் மாமூல் வாங்குவதாக அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு அதிக ஊதியம் வேண்டியதில்லை என்று போலீசைப் பற்றி, ஒரு போலீஸ் உயர் அதிகாரியே எழுதியிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற கான்ஸ்டபிளரி மமூல் வாங்குகிற நிலை என்பதைப் பற்றி ஒரு போலீஸ் உயர் அதிகாரியே எழுதி வைத்திருக்கிறார்கள்.

இது நடைமுறையில் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஊதியம் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி, மற்ற வாய்ப்புகள் அத்தனையும் குறைந்திருக்கின்ற காரணத்தினால், அந்த சிறு சிறு தவறுகளைச் செய்கின்றபோது, இந்த காவல் துறைக்கு ஒரு களங்கம் கற்பிக்கின்ற அளவிற்கு கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் செய்கிறார்கள். அந்தச் செயலை காவல் துறையிலே கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு இந்த அரசு சில அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறது. காவலர்களுக்கு உணவுப் பண்டங்களை மலிவு விலையில் கொடுப்பது போன்ற சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டை காவல் புரிகின்ற, இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கை, உயிரைப் பாதுகாக்கின்ற, பொருளைப் பாதுகாக்கின்ற அத்தனையையும் இந்த காவல் துறை செய்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும். இந்த அரசு, குறிப்பாக, தமிழக முதல்வர் அவர்கள் பல சலுகைகளை அவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

காவல் துறை சங்கம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சங்கம் அமைப்பதிலே தாமதம் இருக்கிறது. எங்களது இயக்கம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் வங்க மாநிலத்திலே எல்லாக் காவலர்களும் சங்கம் அமைப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அது போன்று இந்த அரசும் அனுமதி கொடுத்திருக்கிறது. இருந்தாலும், அந்தச் சங்கத்தை அமைப்பதற்குரிய அனுமதியை இங்கே உயர் அதிகாரிகள் கொடுக்கவில்லை என்றெல்லாம் பேசினார்கள். இருந்தாலும், சங்கம் வைப்பதற்கு இந்த அரசு அனுமதி கொடுத்திருப்பது பாராட்டத் தகுந்தது.

தமிழகத்திலே நல்லமுறையிலே செயல்பட்டாலும் கூட இந்த ஆட்சி வந்ததற்கு பிறகு, அதிலேயும் இப்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு காவல் துறை



யிலே தலையீடு குறைந்திருக்கிறது என்பது அத்தனை பேரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விஷயம். இந்த நிலைமை இருந்தும் கூட காவல் துறை எந்தளவிற்கு பணிபுரிகின்றது என்பதை பார்க்கவேண்டும். கீழ் மட்டத்திலே உள்ளவர்கள் காவல் நிலையங்களில் சிற்சில குற்றச்சாட்டுகள் வரக்கூடிய அளவிற்கு நடக்கிறார்கள். அங்கு பட்டியலில் எழுதிப் போடுகிறார்கள். சிவில் வழக்குகளில் தலையிடாதே என்று 21 ஆவது காலத்தில் எழுதி போட்டு விட்டு அங்குள்ளவர்கள், அந்த மனுவை வாங்கிக் கொண்டு விசாரிக்கிறோம், விசாரிக்கிறோம் என்று சொல்லி அதிலே சில தவறுகள் நடக்கின்றன. சிவில் வழக்குகளில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் தலையிடக் கூடாது என்று உத்தரவு இருந்தாலும் கூட சில ஏழை விவசாயிகள் அவர்கள் குத்தகைக்கு வைத்திருக்கிறவற்றை அவர்கள் காலி செய்வதற்கு முன்சீப் கோர்ட் போன்று காவல் துறையைச் சேர்ந்த கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் நடந்து வருகிறார்கள். அதை இந்த அரசு திட்டவட்டமாக அறிவித்து, அப்படி அந்த செயல்களிலே இறங்குகிற போலீஸ் அதிகாரிகளுக்கு தக்க நடவடிக்கை எடுப்போம் என்று அச்சுறுத்தினாலன்றி அந்த நிலைமை மாறாது.

தமிழகத்தில் காவல்துறை ஆய்வுரையில் குறிப்பிட்டிருப்பதை பார்த்தால் குற்றங்கள் அதிகரித்து வருகிறது என்பது தெரிகிறது. ஆறாம் பக்கத்தில் 1979-ல் குற்றங்களை பார்க்கிற போது, ஆதாயத்திற்காக கொலை செய்தல் 1979 ஆம் ஆண்டு 28; 80 ஆம் ஆண்டு 53 என்று அதிகரித்து கொண்டு போகிறது; கொள்ளை என்று பார்த்தால் 1979 ஆம் ஆண்டு 36 குற்றங்கள் என்பது சென்ற 1980 ஆம் ஆண்டு 60 ஆக உயர்ந்திருக்கிறது. கன்னக்களவு என்பது 9,410 என்பது 9,637 ஆக 1980 ஆம் ஆண்டு கூடுகிறது. சில திருட்டுகளைப் பொறுத்தவரை புள்ளிவிவரங்கள் ஒரு ஆண்டிற்கு ஒரு ஆண்டு உயர்ந்திருப்பதை உயர் மட்ட அதிகாரிகள் சற்று கூர்ந்து பார்க்க வேண்டும். காவல்துறையில் விதிமுறைகள் வைத்திருக்கிறீர்கள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குற்றப்பிரிவு, ஒவ்வொரு மாதமும் புள்ளி விவரத்திலே அதிகமாக கொடுக்க வேண்டும். ஏன் என்று சொன்னால் சென்ற ஆண்டு 60 திருட்டு என்றால் அந்த காவல் துறையில் இருப்பவர்கள் இப்போது 61 ஆவது கொடுக்க வேண்டும். அவர்கள் அதை 'கிரியேட்' செய்ய வேண்டுமென்பதை மாற்ற வேண்டும். குற்றங்களை குறைக்க வேண்டுமே தவிர, சென்ற மாதம் நடந்த அளவு இந்த மாதம் இல்லை என்று, திருட்டுகளே இந்த மாதம் இல்லையா என்று கேட்கிறார்கள். கேட்கிற அந்த புள்ளி விவரத்திற்காக காவல் துறை கீழ் மட்டத்திலே திருட்டு வழக்குகள், யாராவது பிடித்து கூட புள்ளிவிவரங்களை கொடுக்கிற அவல நிலை இருக்கிறது. அந்த புள்ளி விவரம் குறைந்து கொண்டு வரவேண்டுமே தவிர, ஏன் அதிகரிக்கவில்லை என்று இருக்கிற அந்த விதிமுறையை தளர்த்த வேண்டும்.

அதுமட்டுமல்ல 109 என்று சொல்கிற சந்தேக வழக்குகள் இன்னும் ஜனநாயக நாட்டிலே இருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் யாரை வழக்கு போடவேண்டுமென்று சொன்னால் a man of no means அவனுக்கு சொத்தில்லை என்பது தான். இந்த நாட்டிலே வாழக்கூடியவர்களுக்கு வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்த சட்டத்தின் கீழ் 'a man of no means' யாராவது அழுக்குச் சட்டைக்காரர்கள் சொத்துரிமை அற்றவர்கள் என்றால் அவர்கள் மீது 109 கேஸ் போட வேண்டுமென்பதை தமிழக அரசு அமல் படுத்தாமல் இருக்க வேண்டும். இரவு நேரங்களில் யாராவது சினிமா பார்த்து விட்டு வந்தால் கூட சந்தேக கேஸ் போடுகிறார்கள். பணக்காரர்கள் அதிலேயிருந்து தப்பிக் கொள்கிறார்கள். எந்த தவறை செய்து விட்டு போனால் கூட அவர்கள் நடுநிசியில் வரலாம். ஏழைகள் வந்தால் சந்தேக கேஸ் என்று காவல் துறையினரால் போடப்படுகிறது. மாதத்தில், கடைசியில் யாராவது கிராமப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள் பஸ் நிலையங்களில், பஸ் கிடைக்காமல் இருந்தால் அவர்கள் இந்த சட்டத்தின் கீழ் பலியாக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

நம் குற்றப் பிரிவு காவல் துறையால் களவாடப்பட்ட பொருளகள் எந்தளவிற்கு மீட்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே 41·9 சதவீதம் களவாடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன என்று சொல்கிறார்கள். ஒரு 50 சதவீதம் கூட வரவில்லை.

[முற்பகல் 11-20]

களவாடப்பட்ட பொருட்களை திருப்பிப் பெறுவதில் இன்னும் முனைப்பாக 100-க்கு 100 மீட்கப்படுகிற நிலைமையை ஏற்படுத்த காவல் துறை முயற்சியை எடுக்கவேண்டும்.

தெய்வச் சிலை திருட்டு என்பதிலே இன்றைக்கு காவல் துறை அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தெய்வச் சிலை திருடுவதிலே, குறைந்த பணத்தைக் கொடுத்து, கோயிலில் வேலை பார்க்கிறவர்களைப் பயன்படுத்தி அவர்களுடைய ஒப்புதலோடு செய்யப்படுகிறது. இதற்கென்றே தமிழகத்திலே சிலர் இருக்கிறார்கள், அது காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும். இப்படி தெய்வச் சிலையைத் திருடி வியாபாரமாகச் செய்துகொண்டிருக்கின்ற அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறைவாகப் பணத்தைக் கொடுத்து, இன்ன சிலையைக் கொண்டுவந்தால் உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொல்லி பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சிலையை திருடுகிற கூட்டம் இருக்கிறது. பணக்காரர்கள் செய்கிறார்கள், யார் அப்படி இருக்கிறார்கள் என்பது குற்றப் பிரிவுக்குத் தெரியும். ஆனால் அவர்களை அவர்கள் பிடிப்பது இல்லை. சிலைகளை பம்பாய் வரையில், கடத்திக்கொண்டிருக்கிறார்கள். சிலைகளைத் திருடிவிட்டு





அதுபோன்ற சிலையை செய்து உள்ளே வைத்துவிட்டு திருடிச் சென்றுவிடுகிறார்கள். அதைப்போலவே கோயில்களிலே நகைகள் இருக்கின்றன, அவைகளைப்போன்று செய்து வைத்துவிட்டு அந்த நகைகளை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதற்கெல்லாம் யார் உடந்தையாக இருக்கிறார்கள் என்று பார்த்து அந்தப் பணக்காரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைப்போன்றுதான் மின் கம்பித்திருடுகளும் நடைபெறுகின்றன. அந்தத் திருடிய கம்பிகளை வாங்குகிறவர்கள் கடை வைத்துக்கொண்டு அவற்றை வாங்குகிறவர்கள் ஏவித்தான் அதைச் செய்கிறார்கள் : அந்தக் கடைக்காரர்கள்மீது கேஸ் போடுவதில்லை. அதற்காக 411-வது செக்ஷன் என்று இருந்தாலும் வழக்குப் போடுவதில்லை. கடையிலே வேலை பார்க்க சிறுவனை போட்டுவிட்டு, அந்த வழக்கு முடிந்த பிறகு அவர்கள் கடைக்கு வந்துவிடுகிறார்கள். இப்படி பல ஆயிரம் முதலீட்டிலே கடைகளை போட்டு வைத்துக் கொண்டு சிலரை ஏவி விட்டு மின் கம்பிகளைத் திருடச் செய்கிறார்கள். இவர்களைப் பற்றியும் குற்றப்பிரிவுக்கு தெளிவாகத் தெரியும் இவர்களை எல்லாம் தண்டிக்கிற முறையிலே குற்றப்பிரிவு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து இனக்கலவரங்கள் என்ற பெயரால் தமிழகத்திலே பல இடங்களிலே நடந்துகொண்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக கல்விச் சாலைகளிலே, கல்லூரிகளிலே இனக் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இங்கே குறிப்பிலேகூட சொல்லப்பட்டு இருக்கிறது. ஆதிதிராவிட மாணவர்களுக்கும் மற்ற இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் போட்டி வருகிறபோது இனக்கலவரம் ஆக மாறுகிறது என்றும் தேர்தல் முறையிலே இனக்கலவரங்கள் வருகின்றன என்றும் இந்த கொள்கை விளக்க ஏடுகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினால் இவை ஏற்படுகின்றன என்பதை ஆராய வேண்டும். சில சலுகைகளைக் கொடுக்கிறோம். அதன் மூலமாக அங்கே இருக்கிறார்கள். சில சம்பவங்கள், சிலருக்குக் கொடுக்கப்படுகிற அந்தச் சலுகைகளின் பேரில் மற்றவர்களுடன் மோதுவது என்ற நிலைமை வருகிறது. குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு தனி விடுதி என்று இருப்பதன் காரணத்தினால் அவர்கள் அங்கே திட்டமிடுகிறார்கள், அப்படித் திட்டமிட்டு மற்ற விடுதிகளை தாக்குகிற நிலைமை இருக்கிறது. ஆகவே எல்லோரும் கலந்து இருக்கின்ற முறையிலே விடுதிகளை வைக்கவேண்டும். குறிப்பிட்ட இனத்திற்காக விடுதி வைக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்கு இராமநாதபுரத்திலே கலவரம் நடந்தது. அந்தச் செய்தியைக் கேட்டவுடனே தமிழக முதல்வர் அவர்கள் வெளிநாடு செல்வதைக் கூட விட்டுவிட்டு உடனடியாக அந்த இடத்திற்கே மற்ற கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று கலவரம் நடந்த இடத்திற்கு முதல்வர் அவர்கள் போனகாரணத்தினால் மிகவும் அமைதியாக காவல் துறை நடவடிக்கை எடுத்ததின் காரணமாக அமைதி நிலவுகிறது. முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. முதல்வர் அவர்கள்

அந்தப் பகுதிக்குச் சென்று ஒவ்வொருவரையும். தனித்தனியாக விசாரித்து நிலைமையை உணர்ந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் 4 ஆம் தேதி பத்திரிகையிலே நான் ஒரு அறிவிப்பைப் பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர் கொடுத்திருக்கிறார். போர்ப் பிரகடனம் அறிவித்து இருக்கிறார்கள். நான் அதைப் படிக்க விரும்பவில்லை. 4 ஆம தேதி தந்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. இனக் கலவரத்தைப்பற்றி நேரடியாக தூண்டினார்கள், 4 ஆம் தேதி மாநாட்டைப்போட்டு பேசியிருக்கிறார், இதை காவல் துறை அனுமதிக்கிறதா ? நம்முடைய அரசும அனுமதிக்கிறதா ? நான் முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விருமபுகிறேன். அப்படித் தூண்டுகிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜாதிக் கலவரங்களை நேரடியாகத் தூண்டுகிறார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கின்றபொழுது, அரசும் காவல் துறையும் இருக்கிறபொழுது தனியாகப் போர்ப் பிரகடணத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் அந்தப் பேப்பரை வேண்டுமானாலும் கூட படிக்கிறேன். அப்படி வேண்டாமென்று கருதித்தான் நிறுத்திக்கொண்டேன். எனவே, பெயரைக் குறிப்பிடாமல் பேசுகிறேன். எங்களுக்குத் தளதிபகள் இருக்கிறார்கள் ; ஆயுதங்கள் இருக்கின்றன என்ற அளவிற்கு மற்ற இனத்தவரை மிரட்டுகின்ற அளவிற்கு எழுதப்பட்டிருக்கிறது. தலையைப் பறி கொடுத்து ஜாதி இந்துக்களோடு போராடத்தயாராக இருக்கிறோம் என்று சொல்லி எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் காவல்துறை எந்த அளவிற்கு நன்றாக இருக்கிறது என்பதற்கு உதாரணமாக மாண்புமிகு முதல்வரவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று கலவரத்தை அடக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டு அமைதியான சூழ்நிலை இருக்கின்றபொழுது இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன்.

தீவிரவாதிகள் என்ற தலைப்பிலே விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே தீவிர வாதிகளை அடக்குவதற்காக தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சியில் காவல்துறை மிகவும் தீவிரமாக இருந்து பொதுமக்களிடமிருந்த பீதியை இப்பொழுது களைந்திருக்கிற காவல்துறைக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. இருந்தாலும்கூட அதிலே ஒரு பகுதியினர் பிரிந்து இப்பொழுது தென் பகுதிக்கு வந்து நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுபற்றி மனுக்கள் அனுப்பப்பட்டிருப்பதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. அவர்கள் வெளி நாட்டுப் பண உதவியோடு படித்தவர்கள், எங்களுடைய மலைப் பகுதிகளைத் தங்கள் உறைவிடமாக வைத்துக்கொண்டிருப்பதாக மனு வந்திருக்கிறது ; அதன் நகல் அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதில் காவல்துறை தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தீயணைப்பு சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், நான் மாநிலம் முழுவதும் உள்ளதைப்பற்றிச் சொல்லாவிட்டாலும் கூட, 119 தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நான் குறிப்பாக ஒன்றைச் சொன்னால் அந்த 119 தீயணைப்பு நிலையங்களும் எப்படி இயங்குகின்றன என்பதைப்பற்றிப் புரிந்துகொள்ளலாம் என்று கருதுகிறேன்.

உசிலம்பட்டியில் ஒரு தீயணைப்புப் படை இருக்கிறது ; வண்டியொன்று இருக்கிறது. அங்கே வண்டியும், அந்தப் படையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களே தவிர அதற்குத் தண்ணீர் எங்கேயிருந்து எடுப்பது என்று தெரியவில்லை ; தண்ணீர் வண்டி இருக்கிறதா என்றால் இல்லை. ஒரேயொரு என்ஜின் மட்டும் இருக்கிறது. உசிலம்பட்டியில் ஒரு பர்லாங் தூரத்தில் நெருப்பு பிடித்துக்கொண்டது என்று கூப்பிட்டால் 6 மைல், 7 மைல் தூரத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகின்ற நிலைமை இருக்கிறது. அந்தத் தீ அணைக்கப்பட்ட பிறகு, பெரியகுளம், தேனி பகுதிகளிலிருந்து வந்த பிறகு, தீயை அணைத்த பிறகு இவர்கள் தனியார் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குரிய வண்டிகளும், அதற்குரிய தண்ணீர் வசதியும் செய்து கொடுக்கப்படாமல் தீயணைப்பு நிலையம் மட்டும் இருப்பது பொதுமக்களுக்கு அவ்வளவு உதவிகரமாக இல்லை. அதையும் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவல் துறை சம்பந்தமான இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறிக் கொள்கிறேன். குறிப்பாகக் காவல் துறை என்பது, ''போலீஸ்' எனறு கூறுவதே, ''போலீஸ் என்ற போலந்து நாட்டு மொழியிலிருந்து வநத வார்த்தை என்று கூறுகிறார்கள். அதற்கு நம்முடைய அர்த்தம், காவல், கண்காணிப்பு ஆகிய இவை இரண்டையும் செய்ய வேண்டியது காவல் துறையினுடைய கடமை என்ற கோட்பாட்டு ரீதியாகக் கூறப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே சொல்லுகின்ற நோக்கில், சட்டம் ஒழுங்கு அமைதியை நிலை நாட்டல், குற்றங்கள் நடைபெறா வண்ணம் தடுத்தல், குற்றங்களைத்துப்பு துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு ஆற்றும் பொதுவான பணி ஆகியவற்றைத் தமிழ்நாடு காவல் துறை தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறிப்பாக வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நம்முடைய சொந்த நாட்டு மக்களை அடக்கவும், ஒடுக்கவும் இந்தக் காவல் துறை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. சுதந்திரம் வந்த பிறகு பல்வேறு கட்சிகளின் ஆட்சிகள் நடந்தாலும்கூட நம்முடைய நாட்டில் அந்தப் போலீஸ் நடவடிக்கையின் அடிப்படை மாற

[திரு. மு. அம்பிகாபதி] [1981 மே 6

[முற்பகல் 11—30]

வில்லை. ஏனென்றால், காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பயிற்சி அப்படி. வேலூரிலே இருக்கட்டும், அல்லது பிற இடங்களாயிருக்கட்டும், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பயிற்சி அப்படி. இந்தப் பயிற்சி முறைகள் மாற்றப்பட்டு காவலர்களை எனபவர்கள் மக்களுக்குச் சேவை செய்கின்ற மனப்பான்மை கொண்டவர்கள், மக்களுடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள், வழி தெரியாமல் ஒருவன் வந்து விட்டால், அவனுக்கு வழி காட்டக் கூடியவர்கள் என்ற அப்படிப்பட்ட ஒரு நல்ல எண்ணத்தைக் காவல் துறை பெற வேண்டும். அப்படிப் பெறுவது தான் மிகச் சிறப்பான ஒரு காவல் துறையாக அமைய முடியும். இன்றைக்கு வளர்ச்சி பெற்ற மேல் நாடுகளில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது.

குறிப்பாக, நக்சலைட்டுகளுடைய பிரச்னையில், இன்றைக்கு அந்தப் பிரச்னை ஒடுக்கப்பட்டிருக்கிறது என்று இதிலே கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நக்சலைட் என்கின்ற இயக்கம் உருவாவதற்கு இளைஞர்கள் அதிலே ஈர்க்கப்படுவதற்கான அடிப்படை காரணங்களைக் களைவதற்கு, நம்முடைய தமிழக அரசு முயல வேண்டும். அப்படி நக்சலைட் என்ற இளைஞர்கள் இருந்தாலும், அவர்களுடன் தத்துவார்த்த ரீதியில் போராட்டம் நடத்தி, அவர்களைத் திருத்துவதற்கான நடவடிக்கையைக் காவல் துறை எடுக்க வேண்டுமே தவிர, அவர்களைச் சுட்டுக் கொன்று விடுவது என்பது அவ்வளவு சரியல்ல. அந்த நக்சலைட் இயக்கத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால், நம்முடைய தமிழக இளைஞர்கள் இனிமேலாவது சுடப்பட்டு சாகாமல், அவர்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, விவசாயிகள், தொழிலாளர்கள் பிரச்னைகளில் காவல் துறை எக்காரணத்தைக் முன்னிட்டும் தலையிடக் கூடாது. விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாகப் போராட்டம் நடத்துகிறார்கள். சிலபேர் பிரச்சினையே இல்லாமல், கிராமத்திலேயிருக்கிற பாலை நகரத்திற்குக் கொண்டு வரக் கூடாது என்று கூட போரட்டம் நடத்துகிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை. அதை நாங்கள் எதிர்க்கிறோம். நகரத்திற்கும் கிராமத்திற்கும் சண்டையை உண்டாக்கி, நகர மக்களும் கிராம மக்களும் மோதிக் கொள்கிற ஒரு நிலைமையை உருவாக்குகிறார்கள். அதை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால், விவசாயிகளுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு, இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்காகஇப்பொழுது கூட உயர்மட்டக் குழு போடப்பட்டிருக்கிறது. அந்த உயர் மட்டக் குழு இருந்தும் சில இடங்களிலே தஞ்சை மாவட்டத்திலே முத்துப்பேட்டையிலே—ஜப்தி நடவடிக்கை போன்றவற்றினால் பிரச்சினைகள் இருக்கின்றன.



1981 மே 6] [திரு. மு. அம்பிகாபதி]

அதே போல், தொழிலாளர்கள் போராடினால், தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடுகின்ற தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நிற்கவேண்டும். ஏனென்றால், அரசாங்கம் போடுகின்ற சட்டங்களை முதலாளிகள் அமுல் நடத்தாதபொழுது, அந்த நிர்வாகத்தை எதிர்த்துத் தொழிலாளர்கள போராடுகிறார்கள். அரசு சட்டத்தை அலட்சியப்படுத்தியதற்காகப் போராடுகின்றபோது தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் காவல் துறை இருக்க வேண்டுமே தவிர, அந்த நிர்வாகத்திற்கோ, முதலாளிகளுக்கோ ஆதரவாக இருக்கக் கூடாது.

ஒரு விஷயத்தைச் சொல்வேன், 12—4—1981-லிருந்து கோத்தாரி கெமிக்கல்ஸ், சோழவந்தான்—அங்கே வேலை நிறுத்தம் நடக்கிறது. அங்கேயிருக்கிற தொழிலாளர்களோ மொத்தம் 300 பேர்கள்தான். அந்த தொழிலாளர்கள் போராடுகின்ற அந்த நேரத்தில் அங்கே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். பல பேர் காயம் அடைந்திருக்கிறார்கள், என்கிற விவரம் என்னிடத்திலேயிருக்கிறது. எனவே, தொழிலாளர்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சொல்லி, தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் பேராடும்போது, 300, 400 பேர்கள்தான், அதே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அவர்களைச் சமாளிக்கவில்லை. மகாமகத்திற்கு 20 இலட்சம் பேர்கள் வந்தார்கள், சமாளித்தோம். விஞ்ஞான வளர்ச்சி, ரெயில் வசதிகள், கார்வசதிகள் மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய தெய்வ நம்பிக்கை, இவற்றினுடைய விளைவாகக் கூட்டங்கள் பெருகி இருக்கின்றன. மகாமகத்திற்கு 20 இலட்சம் பேர்களுக்கு மேல் வந்தார்கள். மதுரையிலும் தமிழ் மாநாட்டிற்கு வந்தார்கள். நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சமாளித்தார்கள். சிறப்பாக சமாளித்தார்கள் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்று ரொம்பச் சிறப்பாகச் சொல்லப்பட்டது. சரி, 400 தொழிலாளி, 300 தொழிலாளி போராடினால் ஏன் சமாளிக்க முடியவில்லை. ஏன் துப்பாக்கி போகிறது? லத்தி சார்ஜ் நடக்கிறது? அங்கே என்ன நடக்கிறது என்று நான் கேட்கிறேன். 20 இலட்சம் மகாமகத்திற்கு வரும்போது சமாளிக்கக் கூடிய நம்முடைய போலீஸ் சாதாரணமாகத் தொழிலாளி போராடும்போது ஏன் அங்கே சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, காவல் துறை எக்காரணத்தை முன்னிட்டும் தொழிலாளர்களுக்கு எதிராக தங்களுடைய கையிலே இருக்கிற தடியை உயர்த்தக் கூடாது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஒரு சம்பவத்தை மாண்புமிகு முதல்வருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னை தலைநகரத்தில் இராயபுரம் பகுதியில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் ஆபீஸ் இருக்கிறது. அங்கு என். எப். டி. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் வீதியிலே நின்று கொண்டிருக்கும்போது, 2 மாதங்களுக்கு முன்பு, ஒரு போலீஸ்காரர், குடிபோதையில் வந்து அங்கே இருந்த ஊழியர்களைத் தாக்கி இருக்கிறார். காவல் துறையில் சில நல்லவர்களும் இருக்கிறார்கள். சில மோசமானவர்களும் இருக்கிறார்கள். அந்த மோசமானவர்களிலே ஒருவர் போல் இருக்கின்றார் இவர். காவல் துறையிலே லஞ்சமே வாங்காமல் இருக்கின்றவர்கள் உண்டு எனக்கு நன்றாகத் தெரியும். சில பேர்கள் ஏழைகள் கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும், கொடுக்கின்ற ஏழைகளிடமும் பணம் வாங்கிக் கொண்டு, யார் மேலே கம்ப்ளெயின்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களிடத்திலேயும் வாங்கிக் கொள்கிறார்கள். இந்தக் காவல்காரர் அந்த டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் ஊழியர்களைத் தாக்க முற்பட்டபோது, அந்த ஊழியர்கள் ஒன்று கூடி, ஆட்சேபணை தெரிவித்து கோஷம் போட்டிருக்கிறார்கள். பிறகு அந்த என்.எம்.பி.டி. வாழ்க, ஜிந்தாபாத் கோஷம் எல்லாம் போட்டிருக்கிறார்கள். பின்னர் நல்ல உள்ளம் படைத்த அந்த பகுதியினுடைய அசிஸ்டென்ட் கமிஷனர் அவர்கள் அங்கேவந்து அந்த போலீஸ்காரரை மன்னிப்பு கேட்க வைத்திருக்கிறார் இது நடந்து 2 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் நேற்று சில ரௌடிகளைத் தயார் செய்து, அவர்கள் அந்த டெலிபோன் எக்ஸ்சேஞ்சின் உள்ளேயை புகுந்து தாக்கி இருக்கிறார்கள். அங்கே இருந்த 2 சைக்கிள்களையும் எடுத்துச் சென்று விட்டார்கள். இப்படிப்பட்ட இரண்டொருவர் இருக்கின்ற காரணத்தால்தான் இந்த இலாக்காவுக்குக் கெட்ட பெயர் நாடு பூராவும் ஏற்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், விக்ரமசிங்கபுரத்திற்குப் பக்கத்தில் உள்ள கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரர் இன்னொரு ஜாதிக்காரரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக. ஆனால் அங்கே இருக்கிற போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் இவர்களைத் தூண்டிவிட்டு, ரவுடிகளைத் தயார் பண்ணி, அங்கே, பேரல் பேரலாக மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிட்டார்கள். ஆனால் அங்கே உள்ள சப் இன்ஸ்பெக்டர் வெளியே போகவே இல்லை. அந்தப் பகுதியில் உள்ள டி. எஸ். பி. அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். பின்னர் அங்கே தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். எனவே, இந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த ஊரிலே இருக்கக்கூடாது. அவர் அங்கே இருந்தால் மற்றவர்கள் சாட்சியம் சொல்ல வரமாட்டார்கள். அந்த ஊரிலே இருக்கக் கூடியவர்களுக்கு இந்த எஸ். ஐ. அவர்கள் ஊக்கம் கொடுத்ததன் விளைவாக ஜாதிக் கலவரங்கள் உருவாகக் கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை தெரிந்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் ஏ. சாமி, செங்கோட்டை. அவர் அங்கே உள்ள உதவி ஆய்வாளர் அண்ணாதுரை என்பவரால் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் செய்த குற்றம் என்னவென்றால், பக்கத்து வீட்டிலே இருந்த 3 பேர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். அவர்களை ஏன் அழைத்துச் சென்றீர்கள் என்று கேட்பதற்காகத்தான் அவர் காவல் நிலையம் சென்றார். அரசியலில் உள்ளவர்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது என்பது சாதாரணமாக நடப்பதுதான். அவர் காவல் நிலையத்தில் நுழைந்த உடனேயே அவர் மிகப் பயங்கரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அதன் விளைவாக செங்கோட்டையில் ஊர்வலம், கோஷம் போன்றவைகள் நடைபெறுகின்றன. சர்வகட்சிகளும், அகில இந்தியஅண்ணா தி.மு.க., தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியகம்யூனிஸ்ட் (மா), சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. ஐ.என். டி., யு. சி.,எச். எம்.எஸ். போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சில சம்பவங்களை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக திட்டக்குடி, திட்டக்குடியிலே 2 பேர்கள் ரோட்டிலே நின்று பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் காவலர்கள் இரண்டு பேர்களையும் அடித்திருக்கிறார்கள். அடிப்பட்டவர்களில் ஒருவர்க்கு மிகவும் பலத்த காயம் ஏற்பட்டதால், ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போக பஸ் வசதியில்லை. வேறு ஊருக்கு அழைத்துப் போகவேண்டிய நேரத்தில், அங்கே ஒரு பிரைவேட் பஸ் நின்றிருந்தது. நாராயணன் கம்பெனி பஸ் என்று நினைக்கிறேன்—அந்த பஸ்ஸை எடுக்கச் சொல்லி இருக்கிறார்கள். அந்த டிரைவர் நான் முதலாளியைக் கேட்டுத்தான் எடுப்பேன் என்று சொன்ன நேரத்தில் அடித்து இருக்கிறார்கள். அதனால் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. திட்டக்குடி செங்குந்தர் சார்பிலே இந்த விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-40]

இப்படி நான் பல உதாரணங்களைச் சொல்ல விரும்புவதற்குக் காரணம் நம்முடைய காவல் துறையைப் பொறுத்தவரையில் அது மக்களுடைய நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு சிறந்த அமைப்பாக, விளங்க வேண்டும் என்று சொல்லுகின்ற அதேநேரத்தில் விவசாயிகள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம் இவைகளிலே தலையிடாமல் இருக்கிற நிலைமையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்துவதோடு இன்றைக்கு சாதாரணமாக நம்முடைய காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற யூனிபார்ம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஆம் ஆண்டுக்கு யூனிபார்ம் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. 1981-ல் மூன்றாம் மாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முன்னால் ஒரு வருஷத்திற்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதைக் கவனித்து, கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காவலர்கள் வாராந்திர ஓய்வில் இருந்தால் 5 மணிக்கு 'ரோல் காலுக்கு வரவேண்டும் என்பதை தவிர்க்க வேண்டும். உடல் நலம் சரியில்லாமல் இருக்கும்போது அவர்கள் ரோல் காலுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்.

காவலர் குடியிருப்பு இல்லங்கள் இன்றைக்கு பழுதுபட்டிருக்கின்றன. மன்னார்குடியில் காவலர் இல்லங்கள் சீர்கேடு அடைந்திருக்கின்றன. அவர்களுக்கு உடனடியாக நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். குடிசைமாற்று வாரியம் சார்பாக அவர்களுக்கு நிரந்தரமான முறையில் அவர்கள் ஓய்வு பெற்றால் சொந்த வீட்டில் இருக்கிறமாதிரி அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் காவலர்கள் குடியிருக்கும் இல்லங்களில் குடிநீர் வசதி, ஒளி விளக்கு வசதி குறைந்திருக்கிறது. அதை சரியாகச் செய்ய வேண்டும்.

தலைமைக் காவலர்கள் 45 வயதுக்கு மேலும் கவாத்து செய்யும் முறை இருக்கிறது. அரசு ஆணை எண். 45/51 தேதி 2—1—1951-ன் படி 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவாத்து செய்ய வேண்டியதில்லை. ஆகவே, அரசு 45 வயதுக்குமேல் அவர்கள் கவாத்து செய்ய வேண்டுமா என்பதை பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்கள் ஓய்வில் செல்லும்போது அவர்களுக்கு சேர வேண்டிய அனைத்துப் பணத்தையும் கணக்குத் தீர்த்து கொடுத்து விட வேண்டும்.

10 வருஷங்களுக்கு மேல் அவர்களுக்கு பதவி உயர்வு இல்லாத நிலை ஏற்பட்டால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுப் படியை ரூ. 4.50-லிருந்து 7 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதைப்போல தற்போது வாராந்திர ஓய்வில் அவர்கள் வேலை பார்த்தால் அதற்கு 7 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி, ஒரு நாள் சம்பளம் என்னவோ அதைக் கொடுக்க வேண்டும்.

ஆங்காங்கே தகராறு ஏற்பட்டால், கூட்டம் நடக்கும்போது கலவரம் என்று தெரிந்தால் அதற்குத் தனியாக சிறப்பு காவலர்களை அனுப்பி, ஒழுங்குபடுத்தி, அங்கே இருக்கிற சமூக விரோதிகளை அப்புறப்படுத்தி, சட்டத்திற்குட்பட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறையை தமிழக மக்களுக்கு சேவை செய்கின்ற மனப்பான்மையோடு பணியாற்றக் கூடிய ஒரு அமைப்பாக செயல்படச் செய்ய வேண்டும். மக்களிடம் அந்த மதிப்பை காவல்துறை பெறக் கூடிய ஒரு அமைப்பாக விளங்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த அந்த அதிருப்தி மனப்பான்மை இல்லாமல் ஒரு சிறந்த அமைப்பாக காவல் துறையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டங்களில் போலீசார் தலையிடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற காவல் துறை மானியத்தையும், தீயணைப்புத்துறை மானியத்தையும் வரவேற்று பேசுகின்ற ஒரு வாய்ப்பினை அளித்ததற்காக முதற்கண் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தினுடைய காவல் துறையை, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுடைய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களிலே சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்கு பராமரிக்கப்படுகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கும்போது, தமிழகம் எவ்வளவோ மேல் என்று சொல்லத்தக்க அளவுக்கு தமிழகத்தில் காவல் துறை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் முனைப்பாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற சில மாண்புமிகு உறுப்பினர்கள் சில இடங்களில் நடைபெற்ற சில சம்பவங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாலும் கூட அந்தப் பிரச்சனைகளிலே காவல் துறை எந்த அளவுக்கு சமாளித்திருக்கிறது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி இருக்கிறது என்பதை அவர்கள் கொஞ்சம் எண்ணிப்பார்த்து பேசவேண்டுமென்று, நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் எனக்கு முன்னாலே, ஆரம்பத்திலே பேசிய நமது கொறடா அவர்கள் இலட்சக்கணக்கான மக்கள் கூடிய உலகத் தமிழ் மாநாடு பற்றி குறிப்பிட்டார்கள். 25 இலட்சம் மக்கள் கூடிக் கலைந்த அந்த உலகத் தமிழ் மாநாட்டில், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்கள் எல்லாம் தமிழ் மக்களின் இதயங்களைத் தெரிந்து பாராட்டுகின்ற அளவுக்கு, எந்த அளவுக்கு அங்கே அமைதி காக்கப்பட்டது, சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. கு. இராமசாமி] [1981 மே 6

அதற்கு யார் காரணம் என்பதையும் இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணமாகிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழக மக்கள், அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்த மக்கள் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டவனாக இருக்கிறேன். தமிழகத்திலே 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கின்ற சமயத் திருவிழாவான கும்பகோணம் மகாமகத் திருவிழாவிலே, பல இலட்சம் பக்தர்கள் கூடி இருந்த அந்தத் திருவிழாவிலே எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் தராமல் அந்தத் திருவிழா நடைபெற்றது என்பதும் காவல் துறையினருடைய சிறப்பினைக் கொஞ்சம் உயர்த்திக் காட்டி இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பகுதிகளில் தீவிரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் பொதுமக்களுக்கு எந்த அளவுக்குச் சங்கடத்தைத் தந்தார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்டவர்களிடத்திலே இருந்து மக்களைப் பாதுகாக்கின்ற தன்மையில் ஒரு தனி போலீஸ் படையையே நிறுவி சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்பவர்களை ஒடுக்குவதிலே போலீஸ் துறையின் மூலம் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்கு கண்டிப்பாக இருந்தார்கள் என்பதையும் இந்தநேரத்திலே நம் கவனித்துப் பார்க்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இத்தனை சிறப்புக்களுக்கும் காரணம் தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அடுத்து இரவு பகலாக முழு நேர ஊழியர்களாகப் பணி புரிகிற காவல் துறையினருக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே பல்வேறு சலுகைகளை இன்றைய தினம் செய்து இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியின் போது காவல்துறை எந்த அளவுக்கு நடத்தப்பட்டது என்பதும் அதிலே எந்த அளவுக்கு தலையீடுகள் இருந்தன என்பதும், நமக்கெல்லாம் தெரியும். ஆனால் இன்றைய தினம் புரட்சித் தலைவரின் ஆட்சியிலே எந்தவிதமான தலையீடும் இல்லாமல் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகின்ற தன்மையில் காவல்துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காவலர்களுக்கு மலிவு விலையில் உணவு பொருள் கொடுக்கப்படுகிறது. இடப்படி, துணிப்படி என்று 1.87 ரூபாய் என்று முன்பு இருந்தது. அவ்வாறு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் எண்பத்தேழு காசு என்று இருந்ததை மாற்றி, இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் என்ற அளவிலே உயர்த்தித் தந்திருப்பது புரட்சித் தலைவரின் ஆட்சிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மே 6] [திரு. கு. இராமசாமி]

அடுத்து காவல் துறையினரின் வீட்டு வாடகைப்படியினைப் பொறுத்தவரையிலே மாவட்ட தலைமையிடத்திலே பணியாற்றுபவர்களுக்கு 50 ரூபாய் என்றும், மற்ற இடங்களிலே பணியாற்றுபவர்களுக்கு 30 ரூபாய் என்றும் உயர்த்தி இருக்கிறார்கள்.

அடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருப்பதன் காரணத்தால் என்னுடைய இராமநாதபுரம் தொகுதி நிலையினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே கலவரம் திடீரென்று வெடித்தது. அந்தக் கலவரம் ஏற்பட்டு கடுமையான சூழ்நிலை ஏற்பட்ட போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் மேற்கொள்ளவிருந்த சிங்கப்பூர் பயணத்தைக் கூட ரத்து செய்துவிட்டு, அங்கே இராமநாதபுரம் கலவரப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லி, எப்படி அந்தக் கலவரம் உருவானது என்ற விவரங்களை தனித் தனியாக அழைத்துப் பேசி தெரிந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அதற்குப் பிறகு இன்றைக்கு அந்தப் பகுதியிலே மாமூல் நிலைமை உருவாகிக்கொண்டு வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு அலுவல்கள் இருந்தாலும், பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருந்தாலும் கூட அவற்றை எல்லாம் ரத்து செய்து விட்டு, மக்களின் நலனைக் காக்கின்ற வகையிலே இராமநாதபுரம் கலவரப் பகுதிக்கு வந்து அமைதி ஏற்படுத்தியதன் காரணத்தால் அங்குள்ள மக்களின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் அந்தப் பகுதியிலே ஜாதிக் கலவரத்திற்கு யார் காரணம் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். நக்ஸலைட்டுகளை அடக்குவதற்கு எப்படித் தனியாகப் போலீஸ் படை அமைக்கப்பட்டதோ, அது போன்று ஜாதிக் கலவரங்களை உருவாக்குபவர்கள் யார் என்பதையும் கண்டு பிடித்து ஒடுக்குவதற்கு ஒரு தனி போலீஸ் படையை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து இராமநாதபுரத்திலே 34 காவலர்கள்தான் இருக்கிறார்கள். போதுமான காவலர்கள் இல்லை. மேலும் இராமநாதபுரத்திலே தாலுகா போலீஸ் ஸ்டேஷன் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதே போல கண்டிரோல்டு ரூம் ஒன்றும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட கால பிரச்னையாக இருக்கக் கூடிய உச்சக்குடி புறக்காவல் நிலையத்தை பக்கா காவல் நிலையமாக, எல்லா அந்தஸ்தோடு கூடிய காவல் நிலையமாக மாற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல இராமேஸ்வரம் பகுதியில் பல்வேறு பிரச்னைகள்

திடீர் திடீர் என்று உருவாகிற நிலைமை இருக்கிற காரணத்தாலே, அந்தத் தீவு பகுதி மக்களை காப்பாற்றுகிற அளவிலே அங்கே காவலர்களை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி சொல்லி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கோரியிருக்கிற தொகையினை மானியக் கோரிக்கைகள் வாயிலாக தந்திட வேண்டும் என்று ஆதரித்து பேசுகிற நல் வாய்ப்பினை பெற்றமைக்காக உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். காவல் துறை சமுதாய வாழ்விற்கு திறமையாக இருக்க வேண்டும். திறமையாக அவை இருந்திட வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அந்தத் துறையிலே வேறு யாரும் தலையிட்டு, அவர்களுக்குச் சாதகமாக அந்தத் துறையைத் திருப்பிக் கொள்ளக் கூடாது என்கிற, அந்த இலக்கண வரம்பை பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே, இதே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசுகிற போது தெளிவாக குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

அந்த இலக்கண வரம்பிற்கு உட்பட்டிருக்கிற நல்ல அரசாக, எடுத்துச் சொன்ன அந்தக் காரண காரியங்களுக்கு ஒத்து போகிற ஒரு நல்ல அரசாக, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் நின்று நிலையாக இருக்கிறது என்பதை இங்கே தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். காவல் துறை மக்களின் வாழ்விற்கு உறுதுணையாக, தொண்டனாக இருக்கிறது, திறமையாக செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். தெளிவாகச் சொன்னார்கள்.

நான்மாடக் கூடலிலே நடந்த 5-வது உலகத் தமிழ் மாநாட்டிற்கு, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் ஆற்றியிருக்கக் கூடிய அந்த நல்ல பணிகள் ஒன்றே போதும். இந்திய துணைக் கண்டம் முழுவதும் வியக்கின்ற விதத்திலே அவர்கள் ஆற்றியிருக்கிற அந்த பணியே அவர்களுடைய திறமைக்குச் சான்றாக இருக்கிறது என்கிற கருத்தினை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தந் துறையிலே வேறு யாரும் தலையிட்டு தங்களுக்கு சாதகமாக அந்தத் துறையை திருப்பிக் கொள்ளக் கூடாது என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்குப் பிறகு, ஜாதி மத, இனம் ஆகிய அந்த உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாக, கட்சி பிரிவுகளுக்கும் மற்றக் கருத்து- வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக காவல் துறை தனித்து இயங்க



வேண்டும் ; மக்கள் நல்வாழ்விற்காக இயங்க வேண்டும் என்ற அந்த வழிகளை வகுத்து தருகிறவராக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற காரணத்தினாலே, இன்றைக்கு காவல் துறையினுடைய பணிச் சிறப்பு, வியக்கத்தக்க மாற்றங்களையும், மறு மலர்ச்சியையும் தமிழகத்தில் உண்டாக்கி வருகிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டம்-ஒழுங்கு பற்றி அதிகமாகச் சொன்னார்கள். Law and order problem is an All-India phenomenon. அதிலே தமிழகத்தில் மட்டும் சட்டம் ஒழுங்கு குறைந்திருக்கிறது என்பதற்கு அடுக்கடுக்காக காரியங்களைச் சொல்ல முடியும் என்று கூட சில பேர்கள் இங்கே உரையாற்றினார்கள். இந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்னை தற்போது அனைத்திந்திய பிரச்னையாக, இந்திய துணை கண்டம் முழுவதிலும் உள்ள பிரச்னையாக இன்றைக்கு மாறியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்தாக வேண்டும்.

இந்திரா காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களானாலும் சரி, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள் ஆளுகிற, தலைமை ஏற்றிருக்கிற மேற்கு வங்காளம், கேரளம், திரிபுரா போன்ற மாநிலங்களானாலும் சரி, சட்டம்-ஒழுங்கு என்பது மிகப் பெரிய பிரச்னையாக இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கிறது. மகாராஷ்டிரத்திலே சரத் ஜோஷி அவர்கள் தலைமையிலே நடந்த மிக பிரம்மாண்டமான விவசாயிகள் கிளர்ச்சி, அது தொடர்பாக ஆயிரக்கணக்கானவர்கள் கைது, தடியடி, புகையிலை உற்பத்தியாளர்கள் கிளர்ச்சி கர்நாடகத்திலே, துப்பாக்கிச் சூடு, பல பேர் மரணம். கேரளத்திலே மார்க்சிஸ்டுகள் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளுக்கிடையே மோதல், பயங்கரமான கொலை வெறி தாக்குதல். ஒரிஸ்ஸாவில் மட்டும் என்ன மார்வாரி கடைகளை சிலர் கடுமையாக தாக்கியதாக பத்திரிகைகளில் செய்தி. வங்காளத்திலே மார்க்சிஸ்டுகள் தலைமையிலே உள்ள அரசை எதிர்த்து காங்கிரஸ் கட்சி நடத்திய சமீபத்திய பந்த், அதன் தொடர்பாக அடித்து நொறுக்கப்பட்ட பஸ்கள், கொளுத்தப்பட்ட ரயில்கள் என்று செய்திகள் ; வெடிகுண்டு தாக்குதலில் பலர் உயிரிழப்பு என்று பத்திரிகைகளில் வருகிற செய்திகள் ; குஜராத் மாநிலத்திலே ரிசர்வேஷன் பற்றிய பிரச்னை பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டு, சிட்டுக் குருவிகளைப் போல் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிற அந்தச் செய்திகள். இப்படிப்பட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்னைகள் இந்திய துணை கண்டத்தையே எதிர் நோக்கி இருக்கிற போது, தமிழகத்திலே இருக்கிற காவல் துறையினர் எத்துணை திறமையாக நிலைமைகளை சமாளிக்கிறார்கள் ; சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றுகிறார்கள் என்று பார்க்கிறபோது, உள்ளபடியே அந்த துறையைச் சேர்ந்தவர்களுக்கு நாம் பாராட்டு தலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. ஜே. சி. டி. பிரபாகரன்] [1981 மே 6

அப்படி பாராட்டுகிறபோது இந்தத் துறை சட்டம்-ஒழுங்கை காப்பாற்றுவதற்காக, நவீனப்படுத்துவதற்காக அன்றாடம் நடக்கிற தமிழ்நாட்டில் இருக்கிற சட்டம்-ஒழுங்கு நிலையை சமாளிப்பதற்காக புதிய திட்டங்களை இந்த ஆய்வுரையில் அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே அதை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி இந்தக் காவல் துறையில் மாற்றங்கள் வேண்டுமென்று சொல்கிற போது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர்கள் இப்படிக் கூட சில காவல் துறை அதிகாரிகள் நடந்து கொள்கிறார்களே என்ற வேதனையை வெளியிட்டார்கள். விரக்தி மனப்பான்மையில் எக்ஸெப்ஷனலாக இருக்க வேண்டிய சில அதிகாரிகளைக் குறிப்பிட்டு இவை தானா இன்று காவல் துறையாக இருக்கிறது என்ற வருத்தத்தை வெளியிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பேருரையிலிருந்து ஒரு வார்த்தையை தெளிவாக குறிப்பிட்டுச் சொல்வது இப்போது பொருத்தமாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

இதே காவல்துறை மானியத்தின் மீது பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள் ஏதோ காவல் துறையில் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ வந்துவிட்ட பண்டங்கள் அல்ல. இங்கே இருக்கிறவர்கள்தான். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். உங்கள் பிரதிபலிப்பாக இருக்கிறவர்கள்தான் இக் காவல்துறையில் இருக்கிறார்கள். அப்படிச் சொல்கிற போது விளக்கமாகச் சொல்கிறார்கள் இந்தப் போலீஸ் துறை நேர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும் என்றால் இரண்டு காரியங்களைப் பூர்த்தி செய்தால்தான் அது நிறைவுள்ளதாக இருக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். காவல் துறையாக இருந்தாலும் அது ரெவின்யு துறையாக இருந்தாலும், எந்தத் துறையாக இருந்தாலும் சமுதாயத்தில் இருக்கிற பணியின் பிரதிபலிப்பாகத்தான் அந்தத் துறை இருக்குமே தவிர வேறு ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால எந்தத் துறைக்கும் நம்மில் இருந்துதான் சில பேர்களை நாம் அனுப்பிவைக்கிறோம். நம் அண்ணன், தம்பிகள், மைத்துனர், பெரியப்பா மகன்கள் என்று இப்படி நம்மில் இருந்தே சிலபேர்கள் அந்தத் துறைக்குச் செல்லுகிறார்கள். போலீஸ் துறை உட்பட, ஆகவே மொத்தத்தில் சமுதாயத்தில் எப்படிப்பட்ட நேர்த்தியிருக்கிறதோ அதுதான் துறையில் இருக்குமே தவிர, அதன் பிரதிபலிப்பாக இருக்குமே தவிர அது வேறாக இருக்கமுடியாது. ஆகவே போலீஸ்துறையில் இருக்கிற சிலபல குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு சமுதாயத்தில் நேர்த்தி வளரவேண்டும். சமுதாயத்தில் நேர்த்தி வளர வளரத்தான் அந்தக் குறைபாடுகள் நீங்கும் என்ற விளக்கத்தை அறுதியிட்டுச் சொன்னார்கள். அந்த வகையில் சமுதாயத்தில் நேர்த்தியைப் பாதுகாக்கின்ற அந்தப் பணியில் ஆளும் பொறுப்



1981 மே 6] [திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

பில் இருக்கிற புரட்சித்தலைவர் அரசு அல்ல, சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றுவதில் ஆளும் கட்சி அல்ல இங்கே இருக்கிற பிரதான எதிர்கட்சி உட்பட அத்தனை எதிர்க் கட்சிகளும் அதற்குரிய தார்மீக கடமைகளை ஆற்றவேண்டும் என்று பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

ஜாதிக் கலவரங்கள் பெருகி வருகிற இந்த நேரத்தில் ஜாதியை வைத்துக்கொண்டு தலைவராக விரும்புகிறவர்களை நிச்சயமாக அடையாளம் தெரிந்துகொள்ளவேண்டும். இக் கலவரங்களைத் தூண்டுகிறவர்களை நிச்சயமாக சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றுகிற காவல்துறையினர் மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி இந்தக் காவல் துறையைப்பற்றிப் பேசுகிறபோது முன்னால் இருந்த நிலைமை என்ன என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் போன்றவர்கள் மறந்திருக்கமுடியாது. தொழிலாளர்கள் சங்கங்கள் பற்றிப் பேசினார்கள். தொழிலாளர் சங்கங்களோடு எவ்வளவு பரிவோடு காவல்துறை இருந்திருக்கிறது என்பதை ஒன்றிரண்டு உதாரணங்களோடு நான் சொல்லியாக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆவடியில் நடந்த தொழிலாளர்கள் போராட்டத்தில் தொழிற் சங்கத்தலைவர் திரு குசேலர் மண்டையைப் பிளப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் யார்? அன்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த காவல்துறை இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. தொழிற்சங்கத்தலைவர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பட்டப்பகலில் கத்தியால் குத்தப்பட்டார். எனக்கு பாதுகாப்பு இல்லை. தொழிற்சங்கம் நடத்துவதற்கு பாதுகாப்பு இல்லை. இந்தத் துறை பாதுகாப்பு தந்தாக வேண்டும் என்று அவர்கள் எழுத்து மூலம் காவல்துறைக்கு சொல்லியும் கூட பாதுகாப்பு தராது திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் ஆனால் இன்று திரு உமாநாத் அவர்கள் உட்பட இங்கிருக்கின்ற அத்தனைபேரும் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல இங்கே மட்டுமல்ல வெளியேகூட பாதுகாப்பு இருக்கிறது, பாதுகாப்புதருகிற ஒருதுறையாக இந்தத் துறை இருக்கிறது என்பதை உணர்ந்தாக வேண்டும்.

விவசாயிகள் என்ற பெயரால் விஷமிகள் இன்று நாட்டில் விளைவித்துக்கொண்டிருக்கிற குழப்பங்கள், பொதுமக்களுக்கு விளைவித்துக்கொண்டிருக்கிற அல்லல்கள் இவற்றை நிச்சயமாக இந்தநாடு ஒருபோதும் எற்றுக் கொள்ள முடியாது.

[நண்பகல் 12·00]

அப்படிச் செய்கின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சொல்லுகின்றேன். அந்த சமூக விரோதிகளை ஒடுக்குவதற்கு இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கான

அத்தனை முயற்சிகளையும் நான் உள்ளபடியே வரவேற்கிறேன். இன்னும் அதிகமாக இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களைப் புரிகின்ற, அந்த விவசாயிகளுக்குத் தலைமை ஏற்று நடத்துகின்றவர்களை மக்களுக்கும் அடையாளம் காட்டுகின்ற விதத்திலே கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்து, அப்பேர்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காவல் துறையைப் பற்றிக் கூறுகின்றபோது, ஒவ்வொரு மாவட்டந்தோறும் காவல் துறையிலே மக்கள் பாதுகாப்புக் குழு என்ற ஒரு அமைப்பை அமைத்து, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த அரசுக்குச் சொல்வதற்கு வாய்ப்பாக, மாவட்டந்தோறும மக்கள் பாதுகாப்புக் குழுவை இந்த அரசு அமைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காவல் நிலையங்களிலே இருக்கின்ற அந்த லாக்கப் சரிவர பராமரிக்கப்படாமல் இருப்பதால், அதை ரீமாடல் செய்ய வேண்டும்; அதற்குரிய வெண்டிலேஷன் கொடுத்து, உள்ளே போகின்றவர்கள் இத்தோடு தொலைந்தோம் என்ற எண்ணத்திற்கு ஆட்படாமல் அவைகள் பராமரிக்கப்பட வேண்டும் என்று நான் இங்கே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே முதல் நிலை, இரண்டாம் நிலை காவலர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு உத்தியோக உயர்வு பெற தற்போது தேர்வு முறை கையாளப்பட்டு வருகிறது. இந்த முறையை நீக்கி, அவர்கள் பணிக் காலங்களை கணக்கிலே வைத்து உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும். தேர்வு முறையில் உத்தியோக உயர்வு என்று வைத்தால், உண்மையிலேயே திறமைசாலிகள் ஒருவேளை வராமல் தடுக்கப்படுவார்களோ என்ற ஒரு அச்ச உணர்வு இருக்கின்ற காரணத்தினாலே, இதையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும், அதில் ஆற்றியிருக்கின்ற நல்ல பணிகள், ஆற்ற இருக்கின்ற பணிகள், மக்களைப் பாதுகாப்பதற்காக இதுவரைக்கும் இல்லாத நிலைமையிலே அத்துறை இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது. இந்தத் துறையைச் சேர்ந்த அந்த அதிகாரிகள் இன்னும் அதிகமான மனிதாபமான உணர்வோடு காரியங்களை அவர்கள் ஆற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் காவல் துறையைச் சார்ந்த, தீயணைப்புப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அவுஸ் ரெண்ட் அலவன்ஸ்





45 ரூபாய் என்றிருக்கிறது. ஆனால், காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 50 என்று உயர்த்திக்கொடுக்கப்படுகிறது. இந்த நல்ல காரியத்தைச் செய்து இருக்கின்ற இந்த அரசு, இந்த தீயணைப்புப் பிரிவிலே உள்ளவர்களுக்கும் அந்த ரூ. 50 என்ற அளவிலே உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறைக்கு சங்கம் அமைப்பதற்கு அனுமதி அளித்துள்ள இந்தநல்ல அரசு என்று பூரிப்போடு சொல்லுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள் என்ற கருத்தினை இங்கே சொன்னார்கள். எங்களுக்குப் புரியவில்லை. கொள்கை அளவிலே இந்த லட்சியத்தை ஏற்றதற்குப் பிறகுதான் அதை இந்த அரசு இங்கே அறிவித்திருக்கிறது. ஆக்கபூர்வமாக அந்தச் சங்கத்தை அமைக்கவேண்டும், இயக்க வேண்டும் என்ற உறுதியோடுதான், அந்த அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியிலே இந்த அரசு இறங்கியிருக்கிறது; அதை யாரும் தடுக்கமுடியாது. அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்க புரட்சித் தலைவர் அவர்கள் ஒருக்காலும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த தீயணைப்புத் துறையைப் பொறுத்த மட்டில், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற அம்பத்தூர் தொழிற்பேட்டையிலே இப்போது இரண்டு யூனிட்டுகள்தான் வைத்திருக்கிறார்கள். மூன்றாவது யூனிட் இன்றைக்கு பழுதடைந்திருக்கிறது. இருக்கின்ற ஒரு ஆம்புலன்சும் கூட 8 மாதங்களாக இயங்காத நிலையிலே இருக்கின்றது. இந்த தீயணைப்புப் பிரிவிலே இன்றைக்கு போம் டெண்டர் யூனிட் இல்லாத காரணத்தினால் அங்கே அதிகமாக கெமிக்கல்ஸ், அதிகமாக ஆயில்களைப் பயன்படுத்துகின்ற தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற இடத்திலே இந்த போம் டெண்டர் யூனிட் இல்லாத காரணத்தினால் ஒரு தீ விபத்து ஏற்படுமானால் எண்ணூரிலே இருக்கின்ற அல்லது சென்னை விமான நிலையத்திலே இருக்கின்ற அந்த போம் டெண்டர் யூனிட்டை பெறவேண்டிய நிலை இருக்கிறது. எனவே தொழிற்சாலைகள் நிறைந்த அம்பத்தூர் தொழிற்பேட்டையிலை ஒரு போம் டெண்டர் யூனிட்டை அரசு வழங்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கம் தொகுதியைச் சார்ந்த மேற்கு அண்ணா நகர் பகுதிக்கும் திருமங்கலம் பகுதியிலும் புற காவல் நிலையம் ஏற்படுத்திக்கொடுக்குமாறு அரசை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே போல் வில்லிவாக்கம் தொகுதியிலே ராஜமங்கலம் பகுதிக்கு அரசு வழங்கியிருக்கிற புதிய காவல் நிலையத்திற்கு அந்தத் தொகுதியிலே ஏற்படுத்தியிருக்கிற

புதிய உட்கோட்டத்திற்கு நான் மனமாற நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த காவல் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு பெற்றமைக்கு நான் நன்றி கூறி புரட்சித் தலைவர் அரசு காவல் துறையினுடைய கண்ணாக இந்த அரசு காவல் துறைக்கு பொற்காலம் படைத்துக் கொண்டிருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்த போலீஸ் மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்னாலே இன்றைக்கு முதலுக்கே மோசம் வந்திருக்கக்கூடிய நிலைமையை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய பொறுப்பு என்று கருதுகிறேன்.

இந்திய அரசியல் சட்டப்படி மாநிலங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகின்ற ஒரு பொறுப்பு என்பது அந்தந்த மாநில அரசுகளைச் சார்ந்ததாகும். அதனால்தான் ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கின்ற ரயில்கள் மற்றும் அதைப் போன்றவைகள் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தாலும் கூட அவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற பிரச்சினை—அந்தந்த மாநிலங்களின் அரசுகள்தான் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

ரெயில்வே போலீஸ் என்பது நம்முடைய தமிழக போலீஸ் துறையின் கட்டுப்பாட்டிலே ஒரு பிரிவாக இயங்கக்கூடியது. அது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே இல்லை ஆகவே மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டுகிற முழுப்பொறுப்பு அந்தந்த மாநிலங்களைச் சார்ந்தது. ஆனால் நாடாளுமன்றத்தில் வந்திருக்கிற ஒரு சட்ட திருத்தத்தின் மூலம் இந்த அடிப்படை உரிமைக்கு ஆபத்து வந்திருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1976 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்திற்கான ஒரு திருத்த மசோதா நாடாளுமன்றத்திலே விவாதத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் எந்த ஒரு பகுதியையும் கலவரப் பகுதியாக அறிவிக்கும் அதிகாரம், மத்திய அரசிற்கு இந்த சட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. அதிலும் கலவரத்திற்கு பொறுப்பானவர்களை விசாரிக்க விசேஷ நீதிமன்றங்களை அமைக்கிற அதிகாரங்கள் கூட இந்த சட்ட திருத்தத்தின் படி மத்திய அரசிற்கு வழங்கப் படுகிறது. அதாவது மாநிலத்திற்கு பொறுப்பாக இருக்கிற போலீஸ் துறையிலே மத்திய அரசு தலையிடும். "கன்கரன்ட் லிஸ்டிலே" இந்த போலீஸ் துறையை சேர்ப்பதற்கான முதல்





முயற்சியாக இந்த திருத்த மசோதா நாடாளுமன்றத்திலே வந்திருக்கிறது. இந்த மசோதாவின் படி ஒரு மாநிலத்தின் ஒரு பகுதியோ, சில பகுதிகளோ, அல்லது பல பகுதிகளோ, அல்லது மாநிலம் முழுமையாகவோ கலவரப்பகுதியாக அறிவிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசைச் சார்கிறது. ஒரு மாநிலம் மட்டுமல்ல, பல மாநிலங்களில் கூட இப்படி மத்திய அரசு அறிவிக்கலாம். ஆக இது மாநிலத்தின் உரிமையை முழுமையாகப் பறிப்பதாகும்.

சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்கும் ஒரு பகுதி கலவரப் பகுதியா, இல்லையா என்பதை முடிவு செய்வதற்கும் சில வழி முறைகள் இருக்கின்றன. இங்கே நம்முடைய மாநிலத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்திலே ஏதாவது ஒரு ஊரிலே கலவரம் நடந்தால் வெறும் போலீஸ் அதிகாரி மட்டும் அங்கே சட்ட ஒழுங்கை நிலைநாட்டுகிற பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களோடு மாநில ரெவின்யூ அதிகாரிகள் அதைப் போலவே நீதித்துறை அதிகாரிகள் ஆக மூன்று பேரும் இணைந்துதான் அந்தக்கலவரத்தை ஒடுக்குவதற்கு அல்லது அந்த கலவரப் பகுதியைப் பற்றி தீர்மானிப்பதற்கான முடிவுகளை அவர்கள் ஒட்டு மொத்தமாக செய்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளில் கலெக்டர் இருக்கிறார்; ஒவ்வொரு மாவட்டத்திலும் மாஜிஸ்டிரேட் இருக்கிறார். அந்த மாவட்டத்தின் சூப்பிரெண்டெண்ட் ஆப் போலீஸ் இருக்கிறார். இவர்கள் எல்லாம் இணைந்து செயல்பட்டு இது கலவரப் பகுதி; என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்கான முடிவினை அந்த பகுதியிலே அமைதியை நிலை நாட்டுவதற்கான முறைகளை போலீஸ் உதவியுடன் அவர்களால் எடுக்க முடிகிறது. இது கலவரப் பகுதியா, இல்லையா என்பதை போலீஸ் மட்டும் செய்து விட முடியாது. மாவட்ட கலெக்டரும், நீதித்துறை அதிகாரிகளும் சேர்ந்து செய்ய வேண்டும். ஆனால் டெல்லியிலே உட்கார்ந்து கொண்டு யாரோ ஒருவர் அரசியல் ரீதியாக அல்லது ஏதாவது ஒரு அரசியல் கட்சி புகார் செய்யுமானால் இந்த மாவட்டத்திலே கலவரம் நடக்கிறது. எங்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொன்னால் கூட அரசியல் உள்நோக்கத்துடன், மற்றக்கட்சிகள் ஆட்சி நடத்துகிற மாநிலங்களிலே மத்திய அரசு தலையிட்டு அந்தப் பகுதிகளை கலவரப் பகுதியாக அறிவிக்க முடியும். விசேஷ கோர்ட்டுகளை அங்கே நியமிக்க முடியும். மாநில ஆட்சியை அந்தப்பகுதியிலே ஸ்தம்பிக்க செய்யமுடியும். இது இந்தியாவின் சமஷ்டி அரசியல் தத்துவத்தின் அடிப்படையை வெடி வைத்து தகர்க்கக்கூடிய ஒரு மசோதா நாடாளுமன்றத்திலே விவாதத்திற்கு வருகிறது. அதை எதிர் கட்சிகள் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக எதிர்த்து இருக்கிறார்கள். ஜனநாயக ரீதியிலே-தவறு என்பதை சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். இதிலே நம்முடைய மாநில அரசு உறுதியாக இருக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த சட்ட

திருத்த மசோதாவிற்கு தன்னுடைய எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திற்கு இந்த விஷயத்திலே தெளிவான அதிகாரம் இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் 256-ஆம் பிரிவு, 257-ஆம் பிரிவுகள்படி மாநில நிர்வாகங்களை தானே எடுத்துக் கொள்கிற அதிகாரத்தை அரசியல் சட்டம் வழங்கியிருக்கிறது. 356-வது பிரிவின்படி மாநிலத்திலே இருக்கக்கூடிய ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்து அங்கே தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்துவதற்கான அதிகாரம் எல்லாம் இருக்கிறது. இப்படி அதிகாரங்கள் அரசியல் சட்டத்திலே இருந்தும் கூட இந்தத் திருத்த மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கொண்டு வந்தவர்கள் தெளிவாக விளக்கவில்லை; விளக்க முடியவில்லை.

[பிற்பகல் 12-10]

இது அரசியல் உள்நோக்கத்துடன் கொண்டுவரப் பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைத் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழக போலீஸ் துறை இந்தியாவிலே திறமைக்குப் பெயர் பெற்றது என்று சகலராலும் பாராட்டப் பெற்ற போலீஸ் துறையாக இருந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே ஏற்படுகிற கலவரங்களை அடக்கும் சக்தி நம்முடைய போலீசுக்கு இருக்கிறது, திறமை இருக்கிறது. அது மட்டுமல்ல, ஒரு சம்பவத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி சுதந்திரம் பெற்ற நேரத்திலே நாடு பூராவும் வகுப்புக் கலவரம் பீறிட்டுக் கிளம்பியது. அகதிகள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும், பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கும் இடம் பெயர்ந்தனர். நாடே கொந்தளித்துக் கொண்டிருந்த நிலைமையிலே தலைநகரம் டெல்லி பல நாள் பற்றியெரிந்தது. போலீஸுக்குள்ளேயே வகுப்புவாத உணர்வுகள் வந்து ஒரு வகுப்பு போலீஸ் இன்னொரு வகுப்பைச் சேர்ந்த மக்களைச் சுட்டார்கள். இன்னொரு வகுப்பைச் சேர்ந்த போலீஸ் எதிர்த்த வகுப்பைச் சேர்ந்தவர்களைச் சுட்டார்கள். போலீஸ் படையே கலவரத்திலே ஈடுபடக்கூடிய நிலைமை வந்தபோது உள்துறை அமைச்சராக அப்போது இருந்த வல்லபாய் படேல் அவர்கள் வட மாநில போலீஸ் அதை அடக்க முடியாது, வகுப்புவாத உணர்வுகள் அவர்களிடம் புரையோடிவிட்டது, ஆகவே, தமிழகத்திலே உள்ள போலீஸை வரவழைத்தார். அப்போது சஞ்சீவி பிள்ளை என்பவர் இங்கே போலீஸ் கமிஷனராக இருந்தார், அவரை டெல்லிக்கு அனுப்பி அங்கே கமிஷனராக நியமித்தார்கள். தமிழக போலீஸார் 3 நாட்களிலே டெல்லியிலே ஏற்பட்ட பயங்கரமான கலவரத்தை ஒடுக்கிக் காட்டினார்கள். அதற்குப் பின்னாலே எந்த நாளும் கலவரம் இல்லை என்ற நிலைமையை தமிழ்நாடு போலீஸ் எடுத்துக் காட்டியது. ஆகவே இந்த போலீஸ் மீது நமக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழகத்திலே எந்தப் பகுதியிலே கலவரம் நடந்தாலும் அடக்கு



வதற்கு ஆன சாமர்த்தியம் நம்முடைய போலீஸுக்கு இருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால் உங்களுக்கு அந்த திறமை இல்லை, தகுதியில்லை, நாங்கள் தலையிட்டால்தான் கலவரங்களை நிறுத்த முடியும் என்று சொல்லாமல் சொல்கிற நிலைமைக்கு வந்திருப்பது வருந்தத்தக்கது. இந்த ஆட்சி அந்தத் திருத்த மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திருத்த மசோதாவிற்கு இப்போது என்ன அவசியம்? 1947 ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரம் பெற்றபோது நாடு பூராவும் வகுப்பு கலவரங்கள். ஹைதராபாத், திருவிதாங்கூர் போன்ற சுதேச சமஸ்தானங்கள் 600-க்கு மேற்பட்ட சுதேச சமஸ்தானங்கள் தாங்கள் சுதந்திரக் கொடியை உயர்த்துவோம் என்று சொல்லி மத்திய ஆட்சிக்கு சவால் விட்டுக் கொண்டு இருந்தார்கள். காஷ்மீரில் மலை சாதியினர் என்ற பேரால் படையெடுத்தனர். இந்தியா பூராவும் மொழிவாரி மாநிலம் வேண்டுமென்று கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. அப்போது பிரதமராக இருந்த நேருஜீ அவர்களோ உள்துறை அமைச்சராக இருந்த படேல் அவர்களோ மற்றபெருந்தலைவர்களோ இதுபோன்ற அவசரச் சட்டத்தைப் போடாமல் இந்தியா துண்டாகப்படுகிற நிலைமையை சிதறுண்டு போகிற நிலைமையைத் தடுத்து இருக்கிறார்கள். இருக்கின்ற சட்டத்தை வைத்துக் கொண்டே. நமக்கு அரசியலமைப்புச் சட்டப்படி அதிகாரங்கள், மாநிலங்களுக்கு என்ன என்ன அதிகாரங்கள் என்றும் மத்திய அரசுக்கு என்ன என்ன அதிகாரங்கள் என்றும் பொதுவாக என்ன என்ன அதிகாரங்கள் என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் கலவரங்களை ஒடுக்கிக் காட்டினார்கள். தமிழ் நாட்டிலே மோசமான நிலைமை இருக்கிறதா என்றால் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஆகவே அந்தத் திருத்தச் சட்டத்திற்கு நம்முடைய அரசு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நம்முடைய போலீஸ் படைக்கும் பொது மக்களுக்கும் இருக்கக்கூடிய உறவு நிலையைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். மகா கவி பாரதி பாடினான் ''ஊர்ச் சேவகன் வருதல் கண்டு மனம்பதைப்பார்'' என்று, போலீஸ்காரர் வருகிறார் என்றால் மக்கள் ஓடி ஒளியக்கூடிய நிலைமை அப்போது இருந்தது, இன்றைக்கும் ஓரளவுக்கு இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால், இன்று ஐ. ஜி. யாக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய பரமகுரு அவர்கள் எடுத்த உங்கள் நண்பன் என்ற திரைப்படம் என் நினைவுக்கு வருகிறது. பொது மக்களுக்கும் போலீஸுக்கும் எப்படி சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்று அந்தப் படத்திலே எடுத்துக் காட்டினார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன், போலீஸ் துறையினுடைய உயர் அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் சோஷியல் கான்ட்டாக்ட் இருக்கிறது. நான் அதை மறுக்கவில்லை. நீங்கள் அப்படி சுமுகமான உறவை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நான் மறுக்கவில்லை. ஆனால் போலீஸ் படையின் கீழ் மட்டத்திலே உள்ளவர்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் 'அப்

படிப்பட்ட உறவு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இந்த உறவை நீங்கள் சீர் செய்துகொள்வீர்களேயானால் உங்களுக்கும் பெருமை. அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் சோஷியல் கான்டாக்ட் வைத்திருப்பதால் மட்டும் போலீஸ் படைக்குப் பெருமை வந்துவிடாது. கீழ் மட்டத்திலே பணிபுரிகின்றவர்களுக்கும் அத்தகைய எண்ணம், அத்தகைய உணர்வு இருக்குமாறு செய்ய வேண்டியது போலீஸ் துறையிலிருக்கின்ற பெரிய அதிகாரிகளின் பொறுப்பு ஆகும். தீண்டாமை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு போன்ற உன்னதமான கொள்கைகளில் இன்றைக்குக் கட்சி வேறுபாடு இல்லை ; எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறது. இந்த உணர்வு போலீஸ் துறையில் அடிமட்டத்தில் பணியாற்றுபவர்களுக்கு ஏற்படுவதற்கு வழிவகை செய்தாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடிப்படையிலே இந்த உணர்வு போலீஸ் படையின் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு வந்தால்தான் ஜாதியக் கலவரம் நடக்கும்பொழுது அதைத் தடுக்கவும், வேண்டாத நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது விருப்பு வெறுப்பு இல்லாமல் பணியாற்றவுமான சூழ்நிலை ஏற்படும்.

அதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கின்ற போலீஸ் அதிகாரிகள் மாதந்தோறும் அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை—மக்கள் பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனைக் கூட்டங்களைப் போலீஸ் அதிகாரிகள் நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் சொல்லுகின்ற குற்றங்குறைகளைக் கேட்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளைச் செய்வதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

போலீசுக்கும் பொதுமக்களுக்கும் இருக்கும் உறவு நிலைகளைப் பற்றி இந்திய அரசில் Director, Bureau of Police Research and Training. ஆக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய தில்லான் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். உலகத்திலேயே ஜப்பான் போலீஸ் மிகச் சிறந்த போலீஸ் படை என்று அவர் தெரிவித்து விட்டுச் சொல்கிறார் ; ஜப்பானிய நாட்டிலே நகரங்களிலே போலீஸ்காரர்கள் Social Services Cells. அமைத்திருக்கிறார்கள். அதைக் கிராமங்களுக்கும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். முதல் படியாக நகரங்களில் Social Service Cells என்று அவ்வாறு நடத்துகிறார்கள். மக்களுக்குச் சமூக சேவை செய்கின்ற அமைப்புகளை ஏற்படுத்தி மக்களுடன் போலீஸ்காரர்கள் தொடர்பு கொள்கிறார்கள். இதன் மூலமாக மக்களுக்கும் போலீஸுக்கும் சுமுகமான உறவு ஜப்பான் நாட்டிலே இருக்கிறது. காஷ்மீரத்திலே இருக்கிற எல்லைப் பாதுகாப்புப் படை





இதைப் பரிசீலனை செய்து பார்த்தது என்பதைத் தில்லான் அவருடைய அறிக்கையிலே சொல்கிறார்கள். காஷ்மீரத்திலே இருக்கக் கூடிய எல்லைப் பாதுகாப்புப் படை—மத்திய போலீஸ் படை அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய சமூக சேவைகளைச் செய்வதன் மூலம் அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்று, அந்த நம்பிக்கை வந்த பிறகு மக்கள் சுமுகமாக வாழத் தொடங்கினார்கள். இதன் மூலம் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது எளிதாக இருக்கிறது ; போலீசுக்கும் மக்களுக்கும் இடையே மோதல் குறைந்திருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதை மனதிலே கொண்டு நம்முடைய மாநில போலீஸ் துறையும் சமூக சேவை அமைப்புக்களைப் பல்வேறு பகுதிகளிலேயும் ஏற்படுத்தி இந்தத் தொடர்புகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான ஆற்றல் நம்முடைய போலீசுக்கு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது நான் பார்த்தேன். ஏறக்குறைய 25 இலட்சம் மக்கள் மதுரை நகரத்தில் திரண்டார்கள். சாதாரணமாக நான்கைந்து இலட்சம் இருக்கின்ற அந்த மதுரை நகரில் திடீரென்று ஒரே நாளில் 25 இலட்சம் மக்கள் திரண்டபொழுது, ஏழாயிரம் போலீஸ்காரர்கள்—அதற்கு மேலே இல்லை—முதல் நாள் முற்றிலுமாக டிராபிக்சீர்கு லந்துவிட்டது. அந்த நேரத்தில் ஏழாயிரம் போலீஸ்காரர்கள் இருந்து அதைத் திறமையாகச் சமாளித்தார்கள். அத்தகைய திறமையைச் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது அவர்களால் வெளிப்படுத்தமுடிகிறது. ஆகவே, இந்த ஏழை மக்களுடன் சேராகத் தொடர்பு வைத்துக் கொள்வது என்பது பெரிய விஷயம் அல்ல. அதை நம்முடைய போலீஸ் துறையில் உள்ள உச்ச மட்ட அதிகாரிகள் கண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமபுறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கிடையில் ஏற்படுகின்ற சிறுசிறு சச்சரவுகள், குடும்பச் சண்டைகள் ஆகியவற்றைப் போலீஸ் ஸ்டேஷனிலே தீர்த்து வைத்து சுமுகமான நிலைமையையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துகின்ற பணியைச் செய்ய வேண்டும். இதுபோன்று காரியங்களைச் செய்வதன் மூலம்தான் வீணான தொல்லைகளை ஏழை எளிய மக்களுக்குத் தராமல் இருக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போலீஸ் படையின் அடிப்படையிலேயே கோளாறு இருக்கிறது. காரணம் பிரிட்டனிலுள்ள போலீஸ்காரர்கள் இன்வெஸ்டிகேட்டராகவும் இருக்கிறார்கள்.

[பிற்பகல் 12–20]

நம்முடைய போலீஸ் படையினருக்கு, அந்தக் காவலர்களுக்கு, அந்த அதிகாரம் இல்லை, வெறும் மெசஞ்ஜராக மட்டும்தான் அவர்கள் இங்கே செயல்பட முடிகிறது. அதற்குக் காரணம் 1861 ஆம் ஆண்டிலே அன்றைக்கு வெள்ளை ஆட்சி வகுத்த பழமையான சட்டத்தின் அடிப்படையிலேதான் இன்னமும் நம்

முடைய போலீஸ் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் எப்படி வந்தது என்றால், 1857 ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டம் நடைபெற்றபொழுது, அதனுடைய சூழ் நிலையை அடிப்படையாக வைத்து, 1861-லே இந்தச் சட்டம் வகுக்கப்பட்டது. அதன் விளைவாக இன்னமும் மாற்றம் இல்லாத நிலைமையிருக்கிறது. அதை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், போலீஸ் அமைப்பிலே எவ்வளவு ஸ்ட்ரக்ச்சுரல் சேஞ்ஜஸ் நீங்கள் செய்தாலும், இந்த அடிப்படையை மாற்றாத வரையிலே, அதை முற்றிலுமாகத் திருத்த முடியாது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களிலே வன்முறைச் சம் பவங்கள் நடைபெற்றதைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே நக்சலைட் என்பவர்கள் செய்த கொலைகளாக இருந்தாலும், போலீசார் சுட்டதால் இறந்த நக்சலைட்கள் பற்றிய நிகழ்ச்சிகளாக இருந் தாலும், அங்கே விசாரிப்பதற்குச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளாக இருந்தாலும், சர்வோதயத் தலை வர்கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளாக இருந்தாலும், அத்தனையை யும் பற்றி பரிபூரணமாக விசாரணை நடத்த வேண்டுமென்ற கருத்தை நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். இதை 1980-லே Na ional Police Comm ss on தனது முதலா வது இடைக்கால அறிக்கையிலே ஒன்றைத் தெளிவாகச்சொல் யிருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த இடைக்கால அறிக்கையிலே, டிஸ்டிரிக்ட் என்கொயரி கமிஷன் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். யார் பொறுப்பிலே போட வேண்டு மென்றால் Addit onal Sess ons Judge என்ற அந்தஸ்திலே உள்ளவர்களை நியமித்து, அந்தந்த மாவட்டத்திலே போலி சாருக்கு எதிராக எழுகின்ற குற்றச்சாட்டுகளை அந்த அமைப்பு களே விசாரிக்கும் என்ற முறையிலே, எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தினால் இந்தக் குற்றச்சாட்டுகள் குறையும் என்று அந்தப் போலீஸ் கமிஷனுடைய அறிக்கையிலே சொல்லப்பட் டிருக்கிறது.

இன்னொன்றையும் அந்தக் கமிஷன் சொல்லியிருக்கிறது.

The Commission suggested that if a prima facie complaint against the Police disclosed a specific cognisable offence, the statutory responsibility for a proper investigation would immediately arise. It would therefore, be desirable that irrespective of the factfinding enquiry by any authority a formal first information repor be registered at once in the Police Station having jurisdiction over the place of alleged occurrence of misconduct.





என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த போலீஸ் கமிஷனின் அறிக்கையிலே சொல்லியிருக்கிற அந்த யோசனையை நம்முடைய மாநிலத்திலே நடைமுறைப்படுத்த நம்முடைய அரசு முன் வரவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற் கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று, நம்முடைய போலீஸ் படைக்கு இருக்கக்கூடிய பலவீனம், மக்கள் தொகைக்கு ஏற்ப, அதிகாரிகள் மற்றும் மென், போலீஸ் படையிலே இல்லை. அது பெரிய பலவீனமாக இருக் கிறது. பொதுவாக, ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். பம் பாயிலே 82 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அந்த நகரத்திற்கு 22,000 போலீஸ் காவலர்கள் இருக்கிறார்கள். நம்முடை சென்னை நகரத்திலே 42 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இங்கே 6,000 காவலர்களை வைத்துக் கொண்டு இவர்கள் செயல்பட வேண்டிய ஒரு நிலைமையிருக்கிறது. போலீஸ் படைக்குப் புதிதாக 12,000 பேரைச் சேர்க்கின்ற முயற் சியை நான் வரவேற்கிறேன். ஆனாலும் இது போதாது. அந்த எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

போலீசார் வசிக்கும் இடங்களும் அவர்கள் வேலை பார்க்கும் இடங்களும் அருகருகே இருக்கவேண்டும். அப்படியிருப்பது எல்லா வகையிலும் நல்லது. முதலிலே அரசுக்கு ஃபூயல் மிச்சம் ஆகும், பெட்ரோல், டீசல் மிச்சமாகும்.

போலீஸ் வான்கள் மற்றும் லாரிகள் ரிப்பேர் ஒர்க் ஷாப்புகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக அமைப்பதற்கான நட வடிக்கையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போலீஸ் வாகனங்களிலே 50 சதவீதத்திற்கு மேல் எப்பொழுதும் ரிப்பேராக இருக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. அதை மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

சென்ற பட்ஜெட் கூட்டத்தின்பொழுது போலீஸ் ஹவுசிங் கார்ப்பரேஷன் வைக்கவேண்டுமென்று நான் இந்த அவையிலே வற்புறுத்தியதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், தமிழ் நாட்டிலுள்ள அனைத்து போலீ சார்களின் சார்பிலே என்னுடைய யோசனையை அவர்கள் ஏற் றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக, ரூ. 1 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அந்த ஹவுசிங் கார்ப்பரேஷனை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். நான் கேள்விப்படுவது, ரிட்டையர் ஆன போலீஸ் அதிகாரிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதா அல்லது இப்பொழுது இருப்பவர்களுக்கு கட்டிக் கொடுப்பதா என்பது பற்றிய வாதங்கள் எல்லாம் இருப்ப தாக நான் அறிகிறேன். அது தேவையல்ல.

முதலிலே இன்றைக்கு அலுவலிலே இருப்பவர்களுக்கு வீடுகள் இருக்கவேண்டும்................

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் காவல் துறையிலே இருக்கிற காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஓய்வு எடுக்கும் நிலையிலே இருந்து ஓய்வு எடுத்த பிறகு அவர்கள் எங்கே போவது என்ற பிரச்சனையை முன்னிட்டுதான் அவர்களுக்கும் மற்றவர்களுக்கு உதவுவதைப்போல வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற பணியைப் பெரிதாகக் கருதி நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அந்த வகையில் இப்போது வேலையில் இருப்பவர்கள் என்று இருந்தாலும்கூட, முன்னுரிமை காட்டி வேலையில் இருந்து ஓய்வு எடுக்கக்கூடியவர்கள் யார்—உடனடியாக அல்லது விரைவில் அந்த நிலையை யார் பெற இருக்கிறார்களோ அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதென்பதை இந்த அரசின் கொள்கையாக வைத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு எதிரானவன் அல்ல. நீங்கள் ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டியதுதான் இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கும் கொடுங்கள், ஆனால் இன்றைக்கு அலுவல்களிலே இருப்பவர்களுக்கு முதலுரிமை கொடுத்து உடனடியாகச் செய்ய வேண்டும். காரணம் சோஷியல் கான்டாக்ட் அவர்களுக்கு அதிகம்..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சரியாக விளக்கவில்லை என்று கருதுகிறேன். காவலர்களுக்கென்று வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க முனையும்போது இப்போது பணியிலே இருக்கிற அந்தப் பணியிலே ஈடுபட்டு தியாக அளவுக்கு தங்களுடைய கடமையைச் செய்கின்ற அனைத்துக் காவலர்களுக்காகத்தான் என்றாலும், உடனடியாக ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள், அந்தப் பணியிலிருந்து வெளியே சென்றவுடன் எங்கே தங்குவது, எங்கே நமது வீடு என்றில்லாத அளவிற்கு அவர்கள் நிம்மதியாக வாழ இடம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் செய்கிறோம். ஆனால் அனைத்து காவலர்களுக்கும் அதைச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாகும்.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நான் இதய பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நாட்டில் காவலர்களுக்கு வீடு இல்லாத நிலைமையில் அவர்கள் எங்கேயோ, சேரிப்பகுதியிலே, குடிசைப் பகுதியிலே எங்கே வீடு கிடைக்கிறதோ அங்கே போய் குடி இருக்க வேண்டிய ஒரு





பரிதாபகரமான நிலைமையிலே, அவர்களுக்கும் அந்தப் பகுதியிலே வசிக்கின்ற சமூக விரோத சக்திகளுக்கும், தொடர்பு வந்து விடுகிறது. காவலர் குடியிருப்பு தனியாக இருக்குமானால் அந்தத் தொடர்பு குறையும்—வராது என்று சொல்ல முடியாது. நிச்சயமாக குறையும். போலீஸ் அதிகாரிகளாக இருப்பவர்கள் இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பி.கள் அதற்கும் மேலே இருக்கக்கூடிய எல்லோருக்கும் வீடுகள் இருக்க வேண்டும். இன்னொருவரை நம்பி இன்னொருவர் வீட்டிலே குடியிருக்கக் கூடிய நிலை வருமானால் அவர்களும் மற்றவர்களுக்கு தயவு தாட்சண்யங்களுக்கு உட்படுகிற நிலைமை ஏற்படுகிறது, அவர்களை அறியாமலேயே. ஆகவே இந்த போலீஸ் துறையிலே இருப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலைமைகள் எல்லா மாவட்டங்களிலும் எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ஆவடியிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு போலீஸ் குடியிருப்பு, நாட்டு ஓடுகள் போடப்பட்டு நம்முடைய காவலர்கள் குடியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே சென்ட்ரல் ஆர்ம்டு போர்ஸ்—மத்திய அரசாங்கத்தின் போலீஸ் குடியிருப்பு இருக்கிறது. அவர்கள் நல்ல வசதியான வீடுகளில் குடியிருக்கிறார்கள்.

ஒரே மாதிரியான வேலையில் இருப்பவர்கள்—நம்முடைய மாநில அரசுப் போலீஸ்காரர்கள் வசதியற்ற வீடுகளில் குடியிருப்பதும், மத்திய அரசைச் சேர்ந்தவர்கள் வசதியாக இருப்பதும் நல்லதல்ல. மத்திய அரசுக்கு பணம் இருக்கிறது என்பது வேறு. ஆனாலும் இந்த வித்தியாசங்கள் இல்லாத சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

மதுரை நகரிலே ஒரு பிரச்சினை. இது மதுரையில் மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலும் இருக்கிற பிரச்சினை; அதை நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நகை வியாபாரிகள் இருக்கிறார்கள். நகையை விற்கிறார்கள், வாங்குகிறார்கள். திருட்டு நகை வந்தால் அந்த வாங்குபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபிக்கவில்லை. திருட்டு நகை வாங்குவதும் விற்பதும் குற்றம்; நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் எது திருட்டு நகை, யார் திருட்டு நகையை வாங்குகிறார்கள் என்று தெரியாமல் இருக்கும்போது நேர்மையாக தொழில் நடத்துகிற நகை வியாபாரிகளை போலீசார் தொந்தரவுபடுத்துகிறார்கள்; போலீசாரால் அவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டு, அதனால் மதுரை மாநகரில் இருக்கிற நகை வியாபாரிகள் எல்லாம் ஒரு நாள் அர்த்தால் நடத்தினார்கள்.

ஆய்வுப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் சிலப்பதி காரத்தில் பெயர்பெற்ற அந்த நெடுஞ்செழியனாலே கூட கோவலன் கொண்டு வந்தது திருட்டு நகையா அல்லது சொந்த நகையா என்று கண்டுபிடிக்கமுடியவில்லை; தடுமாறினான்; ஆகவே, இதிலே தீர்க்கமான விசாரணை செய்துதான் முடிவு செய்ய முடியும். திருட்டு நகை என்று தெரிந்த பின்னால் வேண்டுமென்றே ஒரு நகை வியாபாரி அந்த நகையை வாங்க மாட்டார். அப்படி இருந்தாலும், வேண்டுமென்றே ஒரு நகை வியாபாரியை "நீ திருட்டு நகை வாங்கியிருக்கிறாய்" என்று சொல்லி, அவரிடம் இருந்து நிறைய பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டு விடுகிற பழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த மாதிரி மதுரை மாநகரிலே ஏற்பட்டு, அதனால் அங்கே இருக்கிற நகை வியாபாரிகள் மத்தியிலே கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கு மட்டுமல்லாமல், எல்லா ஊர்களிலும் இருக்கிற நகை வியா பாரிகளுக்கும் இந்தச் சிரமம் இருக்கிறது. இதை மாற்றியாக வேண்டுமென்று நகை வியாபாரிகள் சங்கம் போலீஸ் அதிகாரி களைச் சந்தித்து மனு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த வியாபாரிகள் போலீஸ் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறார்கள். யார் திருட்டு நகையை வாங்குகி றாரோ அவரை அந்தச் சங்கத்திலிருந்து வெளியேற்றுகிறோம், சமூக பகிஷ்காரம் செய்கிறோம் என்று சொல்லி, அதற்கு அவர் கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் உயர்தர போலீஸ் அதிகாரிகள் ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாநில அரசு தேசிய பாது காப்புச் சட்டத்தைப் பயன்படுத்த மறுக்க வேண்டுமென்பது என னுடைய பணிவான வேண்டுகோளாகும். மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும். காரணம், மேற்கு வங்க அரசு அதை மறுத்திருக்கிறது. பயன்படுத்த மாட் டோம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், இந்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் இருக்கிற ஆபத்து என்னவென்றால், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை ஒடுக்கலாம். எதிர்க்கட்சிகளை ஒடுக்குகின்ற அதிகாரம் மைய அரசு கையிலே கிடைத்திருக்கிறது. அவர்கள் ஆணையிட்டால், இன்னின்னாரைப் பிடித்து உள்ளே போட வேண்டுமென்று உத்தரவிட்டால் அதைச் செய்து தீரவேண்டிய அவசியம் நம்முடைய மாநில அரசுக்கு வரலாம். ஆகவே, நம்மு டைய மாநில அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தைச் செயல் படுத்த மாட்டோம் என்பதிலே உறுதியாக இருக்க வேண்டும்.

மத்திய, மாநில உறவு பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். மைய ஆட்சியிலே செய்யும் தவறுகளை நாம சுட்டிக்காட்டுகி றோம். அந்த மைய அரசிலே இருக்கிறவர்கள் விரும்பவில்லை





என்றால், அப்படிச் சொல்கிறவர்களை எல்லாம் இந்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி பிடித்து உள்ளே போட வேண்டு மென்ற நிலை வந்தால் அது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே இருக்கிற ஒரு அமைச்சர் மத்தியிலே இருக்கிற ஒருவ ரைப்பற்றி ஏதோ சொல்லிவிட்டார் என்பதற்காக நம்முடைய மாநில அமைச்சரை எவ்வளவு மோசமாக விமர்சிக்கிறார்கள், என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அமைச்சர் போகிற இடமெல்லாம் கறுப்புக்கொடி காட்டுவோம் என்று சொல்கிறார்கள். நாளை இந்த தேசிய பாதுகாப்புச் சட்டத் தின்படி அவரையே பிடித்து உள்ளே போட வேண்டுமென்று சொன்னால் அதிலே நம்முடைய நிலை என்ன? ஆகையால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று மறுப் பதிலே நம்முடைய அரசு உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு சட்டப்படியான கூலி கொடுக்க மறுக்கின்ற நிலப்பிரபுக்கள் மீது விவசாயத் தொழி லாளர்கள் சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத் தால் அந்தப் புகாரைப் பதிவு செய்துகொண்டு, அதன்மீது நட வடிக்கை எடுக்கின்ற அதிகாரத்தை போலீஸ் நிலையங்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும். அதன் மூலம் ஏராளமான விவசாயக் கூலிகள், ஏழை எளிய மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற சட்டத்தின்படி இந்த நிலப்பிரபுக்கள் கூலி கொடுப்பதில்லை. அதை சரியாகச் செயல் படுத்த, நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்பட நம்முடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தீ அணைப்புத் துறை பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டு வரை நம்முடைய தீ அணைப்புத் துறை போலீஸ் துறையின் ஒரு பிரிவாகவே இருந்துவந்தது.

4–10–1967-லே போலீஸ் துறையிலே இருந்து தீயணைப்பு துறையினைத் தற்காலிகமாக தனியாகப் பிரிப்பது என்ற முடிவை மாநில அரசு எடுத்தது. பிறகு 1970-லே தனியாகப் பிரிக்கப் பட்ட இத்துறை நிரந்தரமாக்கப்பட்டது. இதற்கான டைரக்டர் பதவியும் நிரந்தரமாக்கப்பட்டது. 1978–லே தீயணைப்புத் துறையின் டைரக்டராக இருந்த திரு. ரத்தினசாமி அவர்கள் திடீரென்று கட்டாய ஓய்வுத் திட்டத்தின் கீழ் வேலையிலிருந்து அனுப்பப்பட்டார். அதுபற்றிய அப்பீல்கள், மனுக்கள் எல்லாம் இன்னும் நம்முடைய அரசின் பார்வையில் இருந்துகொண்டிருக் கிறது. அது இன்னும் முடியவில்லை. அது ஒரு பக்கம் இருக்கிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1981 மே 6

அதற்குப் பிறகு போலீஸ் துறையிலே டி.ஐ.ஜி. யாக இருந்த ஒருவர் தீயணைப்புத் துறையின் டைரக்டராகத் திடீரென்று நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து 1979-லேயும் போலீஸ் துறையிலே இருந்து ஒருவர்தான் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதன் மாநில டைரக்டர் பதவிக்கு ஒரு டி.ஐ.ஜி. போலீஸ் துறையிலே இருந்து நியமிக்கப்படுகிறார். தீயணைப்புத் துறையின் இன்னொரு பதவிக்கு அதாவது டெபுட்டி டைரக்டர் பதவிக்கு போலீஸ் துறையிலே இருந்து ஏ.எஸ்.பி. அந்தஸ்திலே இருந்து ஒருவர் நியமிக்கப்படுகிறார். இவ்வாறு நியமிப்பது எந்த வகையிலே தீயணைப்புத் துறையின் வளர்ச்சிக்கு ஏற்றது என்பது தெரியவில்லை. தீயணைப்புத் துறையிலே உள்ள உயர் பதவிகளுக்கு போலீஸ் துறையிலே இருப்பவர்களைக் கொண்டு வந்து நியமித்தால் தீயணைப்புத் துறையிலே உயர் பதவிக்கு வர வேண்டியவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுகிறது. பலருக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகளும் அதனால் பாதிக்கப்படுகின்றது. போலீஸ் துறையிலே உள்ளவர்கள் தகுதி படைத்தவர்கள் அல்ல என்று நான் வாதாடவில்லை. ஆனால் அதே நேரத்திலே தீயணைப்புத் துறையிலே அதற்கான தனிப் பயிற்சி பெற்றவர்கள் தகுதி வாய்ந்தவர்கள் இருக்கின்றபோது அவர்களுடைய உரிமைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு, அவற்றை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்த இடங்களில் போலீஸ் துறையிலே உள்ளவர்களைக் கொண்டு வந்து நியமிப்பது நல்லதல்ல.

புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியது பற்றியும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புதிய தீயணைப்பு நிலையங்களை அமைக்கின்றபோது ஓலைக் கொட்டகை போட்டு அமைத்து வருகிறார்கள். மற்றொரு நிலையத்திலுள்ள தீயணைப்பு இயந்திரங்களை எடுத்து வந்து புதிய நிலையத்தில் வைக்கிறார்கள். இது சரியானதல்ல. இதன் மூலம் இரண்டு இடத்திலேயும் பாதிப்பு எற்படுகிறது.

தீயணைப்புத் துறையிலே இருக்கக்கூடிய வண்டிகள் பல காலமாக ஓடாத நிலையிலே பல்வேறு ரிப்பேர்களுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கின்றது. விபத்து நேரங்களிலே அவை சரியாக வேலை செய்யாத காரணத்தால் பெருத்த சேதமும் நஷ்டமும் எற்படுகின்றது. ஆகவே, தீயணைப்புத் துறையிலே இருக்கக்கூடிய வண்டிகளைப் பொறுத்த வரையில் முற்றிலும் புதிய வண்டிகளாக மாற்றியமைக்க வேண்டும், அங்குள்ள பழுதுபட்ட வண்டிகளை எல்லாம் பழுது பார்க்கவேண்டும். மேலும் தீயணைப்புத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கி இந்தக் காரியங்களை எல்லாம் செய்வதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும்.

தீயணைப்புத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு நிறையக் குறைகள் இருக்கின்றன. ஆகவே, போலீசாரோடு இவர்களையும் ஒப்பீட்டு அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அத்தனையையும் இந்தத் துறையின் பணியாளர்களுக்கும் அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.



1981 மே 6] [திரு. ப. நெடுமாறன்]

25—3—1980 அன்று 'ஸ்நார்க்கல்' என்ற இயந்திரம் தீயணைப்புத் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. 42 லட்சம் ரூபாய் செலவிலே அந்த நவீன இயந்திரம் அந்தத் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அதைப் பாராட்டுகிறேன். அண்மையிலே ஸ்பென்சர் கட்டிடத்திலே தீ விபத்து ஏற்பட்டபோது அந்த இயந்திரம் மிகவும் அற்புதமாக வேலை செய்தது. அது பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் பாராட்டப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற இயந்திரங்களை திருச்சி, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் வைக்கின்ற உத்தேசம் இந்த அரசிற்கு இருக்கின்றது என்று இந்த அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் மத்திய அரசினிடத்திலே இருந்து கடன்பெற்றுத்தான் அதைச் செய்ய வேண்டி இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே, மத்திய அரசின் இடத்திலே இருந்து கடன் விரைவிலே பெற்று திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் இந்த இயந்திரம் வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தத் தீயணைப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி அந்தத் துறையின் பணிகளைப் பொறுத்தமட்டிலே போதுமானதன்று. மக்களின் நலனுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு துறை இது. ஆகவே அதிகமான நிதியினை ஒதுக்கி நிதிப்பற்றாக்குறையினால் பல காரியங்கள் தடைப்படுகின்ற நிலைமையினை மாற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[பிற்பகல் 12-40]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகள் 15, 16-ன் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இதே மே திங்களில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்தில் கலைக்கப்பட்ட அந்த சூனியமான காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ஆம் தேதியன்று கலைக்கப்பட்ட பிறகு, மீண்டும் ஜூன் மாதம், இந்த நாட்டில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஏற்படக்கூடிய இடைக்காலத்தில் தமிழகத்தினுடைய நிலவரம் என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி இந்த நாட்டிலிருந்து கலைக்கப்பட்ட பிறகு, ஏறக்குறைய 3½ மாத காலத்தில் தமிழகத்தினுடைய நிலவரம் ஒரே கலவரமாக இருந்தது என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள அனைவரும் அறிவார்கள்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள், உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் இந்த ஆட்சியின் மீது அவதூறான புகார்களை ஆதாரம் இல்லாமலேயே அள்ளி வீசிக் கொண்டு வருகிறார்கள். அப்படி ஆதாரம் இல்லாமல் பேசியவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட சங்கடங்களை, சீர்கேடுகளை எண்ணிப் பார்த்தால், அவை எண்ணிலடங்கா. என்னிடத்தில் அதற்கான நீண்டதொரு பட்டியலே இருக்கிறது. ஆனால் என்னுடைய உரையாற்றும் நேரத்தைக் கணக்கிட்டு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் வரையறுத்து விட்ட காரணத்தால், அவற்றை இங்கே கூறுவதற்கு எனக்கு நேரம் இல்லை. அன்றைக்கு இந்த ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட பிறகு, தமிழகத்தின் $4\frac{1}{2}$ கோடி மக்களும், மீண்டும் இந்த ஆட்சியை ஏற்படுத்தி, மீண்டும் புரட்சித் தலைவர் அவர்களைத் தலைவராக தேர்ந்தெடுத்து, $4\frac{1}{2}$ கோடி மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக, முத்தமிழ் நாட்டின் முதன்மை காவலராக தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் இந்த நாட்டு மக்கள் புதியதோர் நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய ஏற்றமிகு எதிர்கால வாழ்விற்கு உற்ற துணைவன், கலங்கரை விளக்கமாக இருக்கக் கூடிய புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதில் இந்த நாட்டு மக்கள் அனைவரும், குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை எளிய மக்கள் அனைவரும், நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் காவல் துறை எவ்வளவு சிறப்பாக பணியாற்றி வருகிறது என்பதையும் சற்று நல்ல உள்ளத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த ஆட்சி பணக்காரர்களுடைய ஆட்சி அல்ல. தேர்தல் காலத்திலே பணக்காரர்கள் எங்கள் பக்கம் வருவதற்கே பயந்தார்கள். எங்களைக் கண்டு பேசுவதற்கே அச்சப்பட்டார்கள். இந்த ஆட்சி முழுக்க முழுக்க ஏழை எளிய மக்களால், தொழிலாளத் தோழர்களின் உதவியால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி என்பதை இந்த நேரத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் எவ்வாறு குற்றங்களும் கொலைகளும் மலிந்து, எங்கு பார்த்தாலும் கொலைக் களங்களாகவே காட்சி அளித்த நிலையினையும் சற்று எண்ணிப் பார்க்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, நாட்டில் நிலவும் அமைதியையும், சட்ட ஒழுங்கு முறையையும் இணைத்து எண்ணிப் பார்க்கிறேன். இன்றைக்குச் சென்னை மாநகரத்தைப் பொருத்த





வரைக்கும், இங்கே இருக்கக் கூடிய காவல் நிலையங்களில் பணியாற்றக்கூடிய காவலர்கள் செம்மையாக பணியாற்றக் கூடிய வகையில், இரவு நேரங்களில் ரோந்து சென்று குற்றங் குறைகள் நடைபெறாமல் தடுப்பதற்கு உதவியாக ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் 300 பேர்களுக்கு. ரோந்து காவல் படையின் பதவிகள் கொடுத்து, அதன் விளைவாக இன்றைக்கு சென்னை மாநகரிலே குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

அது மட்டும் அல்ல, சென்னை மாநகரில் இருக்கக் கூடிய 51 காவல் நிலையங்களுக்கும் இரவு நேரங்களில் ரோந்து வருவதற்கு உதவியாக 51 மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் விழிப்புடன் சுறுசுறுப்பாக செயலாற்றி, சென்னை மாநகரத்தின் குற்றங்களை குறைத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக் கூடிய 844 காவல் நிலையங்களிலிருந்தும், இரவு நேரங்களில் ரோந்துக்குச் செல்லக் கூடிய காவலர்கள் கையிலே தற்காப்பிற்காக கைத்துப்பாக்கிகள் வழங்குவது அவசியம் என்று கருதி, ஒரு காவல் நிலையத்திற்கு 5 கைத் துப்பாக்கிக்கள் வீதம் வழங்க இந்த அரசு மைய அரசுக்கு அனுமதி கேட்டு எழுதியபோது மைய அரசின் அனுமதி காவலர்கள் கைத்துப்பாக்கி கையாள அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர் என்ற காரணத்தால் மறுக்கப்பட்டது.

ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புரட்சிகரமான திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள காவல் நிலையங்களில் அமல்படுத்த 844 காவல் நிலையங்களிலும் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஐந்து கைத்துப்பாக்கிகள் வீதம் வைத்துக் கொள்ள எடுக்கும் நடவடிக்கையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு இந்த அரசு மைய அரசோடு தொடர்பு கொண்டு அந்த அனுமதியைப் பெற்று செயல்பட விழைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் குற்றங்குறைகள் ஏற்பட்டால், ஒரு மாவட்டத்தில் கொலைகள் களவுகள் ஏற்பட்டு குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டு செல்லக்கூடிய நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குற்றப்புலனாய்வுத்துறை மாநில குற்றப் புலனாய்வுத் துறையோடு தொடர்பு கொண்டு உடனுக்குடன் தகவல்கள் கொடுக்க மின் அணு தொலைபேசி எலக்ட்ரானிக் டெலிபோனிக் எக்சேஞ்ச் என்ற திட்டத்தை தமிழ் நாட்டில் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு சிறப்பு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே வைத்து இது ஒரு சிறப்பான முறையாகும். அடுத்து தமிழ்நாடு ஒன்றில் தான், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் ஒன்றில்தான் இன்று காவலர்கள் பணியில் இருக்கும்போது ஆய்வுவேலைகளில் ஈடுபட்டு பிறகு ஓய்வு

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1981 மே 6

பெற்றபின் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு தனது
பழைய காலத்தை பசுமையான நினைவுகளை நினைத்துக்
கொண்டிருக்கும் விதத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள காவலர்
வீட்டுவசதிக் கழகம் என்ற ஒரு கழகத்தை ஏற்படுத்தி ஐ.ஜி.
பதவியின் தரத்திலுள்ள ஒரு தனி அதிகாரியை நியமித்து ஒரு
கோடி ரூபாய் அனுமதித்து இந்த ஆண்டு அது பதிவு செய்யப்
பட்டுள்ளது.

இன்றையதினம் தமிழ்நாட்டில் 600 பெண்காவலர்களை
கூடுதலாக நியமிக்கவும், 60 பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள்,
60 பெண் தலைமைக் காவலர்கள் நியமிக்கவும் அனுமதி அளிக்
கப்பட்டு அவர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்க ஏற்பாடு
செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக
பணியாற்றுகிற காவல் துறை தமிழ்நாடு காவல் துறை என்று
பெருமையோடு பேசப்பட்டு வந்த காவல் துறை திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் களங்கப்படுத்தப்பட்டு
விட்டது. காவல்துறையில் அடிக்கடி அவர்கள் தலையீடுகள்
இருந்ததன் காரணமாக காவல்துறை அதிகாரிகளின் கைகள்
கட்டப்பட்டு அன்றையதினம் காவல் துறை இழித்து பழித்துப்
பேசப்படும் நிலைக்கு ஆளாக்கப்பட்டது. அந்தக் களங்கம்,
பழி இன்று துடைக்கப்பட்டு புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சி இந்த மாநிலத்தில் ஏற்பட்ட பிறகு காவல் துறை இன்று
சுதந்திரமாக செயல்பட்டுவருகிறது. இன்றையதினம் எங்கே
யாவது ஒரு ஆளும்கட்சியைச் சார்ந்தவர் அல்லது அனைத்திந்
திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த
ஆளும் கட்சி உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் காவல்
துறையில் புகுந்து தலையிட்டதாக எவரையாவது கூற முடியுமா?
என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். அந்தளவிற்கு தமிழ்
நாட்டில் உள்ள நிர்வாக இயந்திரங்கள் செயல்பட புரட்சி
தலைவர் அவர்களால் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இப்படிப்
பட்ட புனிதமான ஆட்சியில் குற்றங் குறைகள் இருக்கின்
றனவா என்று தேடிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். குற்
றம் குறைகளைத் தேடிப் பிடித்துக் கொண்டிருக்கும் அவர்
களைக் கேட்கிறேன். உங்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்
டில் ஏற்பட்ட விவசாயிகள், மாணவர்கள் போராட்டங்களை
ஒடுக்குவதற்காக அடக்குவதற்காக இரும்புக்கரத்தைக்கொண்டு
நசுக்குவேன் என்று கூறியதை அவர்கள் மறந்து விட்டார்களா?
அந்த மக்களால் மறக்கமுடியாது அல்லது அதை மறுக்கவும்
முடியாது.

இன்றைய தினம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா காவல் நிலை
யங்களிலும் வி.எச்.எப் கருவிகள், மற்றும் வாக்கி டாக்கி கருவிகள்
வாங்கவும் இந்த அரசு 318 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அதற்கான
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



1981 மே 6] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

இன்றைய தினம் தமிழ்நாடு காவல் துறையில் பயன்படுத்தி வரும் வாகனங்கள், அவை ஜீப்களாக இருந்தாலும் வாகனங்களாக இருந்தாலும் சரி அவை பரிதாபகரமான நிலையில் இருந்தன. எங்கேயாவது ஒரு இடத்தில் கலவரம் என்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோ அல்லது மேல் அதிகாரிகளிடமிருந்து தகவல் வந்தால் அந்த வேண்டுகோளை ஏற்க முடியாத ஒரு நிலை இருந்தது. ப்யூயல் பம்ப் இருக்காது, ஸெல்ப்ஸ்டார்ட்டர் வேலை செய்யாது. அந்தமாதிரி நிலையில் அந்த வண்டியை கீழே இறங்கி தள்ளு தள்ளு என்று தள்ளிக் கொண்டிருந்த ஒரு நிலை தமிழ்நாட்டில் கடந்த காலத்தில் இருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

[பிற்பகல் 12–50]

அப்படிப்பட்ட பழுதடைந்த இந்த வண்டிகளை இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் 10 சதவிகிதத்திற்கு மேல் பழுதடைந்தவைகள் என்று அவைகளை ஒதுக்கிவிட்டு, புதிய வண்டிகளை வாங்குவதற்கு அனுமதித்துள்ளார்கள். இன்றைக்கு தமிழகத்திலுள்ள காவல் துறை எந்த நிலைமைக்கும் தயார் என்று இருக்கக்கூடிய வகையிலே, புதிய வாகனங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தில் பெரிய நகரமாக கும்பகோணம் நகரம் இருக்கிறது. இன்றைய தினம் அங்கே 1½, 2 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே மகாமகம் என்ற திருவிழாக் காலத்தின்போது 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வருகிறார்கள்; கூடுகிறார்கள். தவிர, அது ஒரு சுற்றுலா நகரமாகவும் இருக்கிறது. எனவே, அப்பேர்பட்ட ஒரு நகரத்திற்கு ஒரு கன்ட்ரோல் ரூம் அங்கே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு அங்கே ஒரு இடத்தில் கொள்ளை, கொலை நடந்தால், அல்லது கிணற்றிலே விழுந்து தற்கொலை செய்து கொண்டால் அல்லது மரத்திலே தற்கொலை செய்துகொண்டு தூக்குப் போட்டுக்கொண்டு தொங்கினால் அம்மாதிரியான பிணங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது பிரேத பரிசோதனைக்காக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வதற்குத் தகுந்த வண்டியோ, அல்லது வாகனமோ இல்லை. மாட்டு வண்டியிலோ அல்லது குதிரை வண்டியிலோ எடுத்துச் செல்லலாம் என்றால், அவைகளைக் கொடுக்க மக்கள் மறுக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு ஒரு நம்பிக்கை, எங்கே பேய் பிசாசுகள் மாடுகளுக்கு பிடித்துக் கொள்ளுமோ என்று அஞ்சுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை காவல் துறையைச் சார்ந்த

வர்களுக்கு ஏற்படுகிறது. வேறு வழியில்லாமல், எங்காவது தப்பித் தவிர தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த, வாடகைக் காரைக் கொண்டுவந்தால்கூட, அந்தக் காரிலே அந்தப் பிணத்தை முன்னாலே வைக்க அனுமதிப்பதில்லை. அந்தப் பிணத்தை பின்னாலே உள்ள டிக்கிலே சுருட்டிப் போடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படிப் போடுவதால், ஏற்கனவே ஏற்பட்டுள்ள காயத்தோடு, இதிலும் காயம் ஏற்படுவதால் மருத்துவ அதிகாரிகள் இந்தக் காயத்தைக் கண்டுபிடிப்பதிலே குழப்ப நிலையை அடைகிறார்கள். எனவே, இதை நிவர்த்திக்கும் வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு மாவட்ட காவல்துறை கண்காணிப்பு அதிகாரியின் பொறுப்பிலே ஒரு பிண ஊர்தியை, எப்படி மாவட்ட மருத்து மனைகளிலே பிணங்களை எடுத்துச் செல்வதற்கு பிண ஊர்திகள் இருக்கின்றதோ, அம்மாதிரி ஒரு பிண ஊர்தியை ஒவ்வொரு மாவட்ட அளவிலேயும் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இரவிலே பெண்களை லாக் அப்பிலே வைக்கக் கூடாது என்ற ஒரு தடையை புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால், தவிர்க்க முடியாத நேரங்களில் கொலை, கொள்ளை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டு, பெண்கள் இரவு நேரங்களிலே பிடிபட்டால், அவர்களுக்கு சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. அப்போது அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக, அங்கே இருக்கின்ற ரிகார்டுகளிலே காலையிலே கைது செய்ததாக பதிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்போது அரசியல்வாதிகள் அலிகேஷன் சொல்லக்கூடிய வாய்ப்பு, நிலைமை உருவாகிறது. ஆகவே, அவற்றை எல்லாம் போக்க, தவிர்க்க, ஒவ்வொரு தாலுகா மட்டத்திலும் ஒரு பெண் லாக் அப்பை ஏற்படுத்தி, அந்தந்த தாலுகாவிலே உள்ள காவல் நிலையங்களிலே அவர்களைப் போட்டு, சட்டப்படி அவர்களை லாக் அப்பிலே போடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவியாக அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொளளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு மாவட்டத்திற்கு ஒரு அடிஷனல் சூபரின்டென்டென்ட் அதாவது கூடுதல் மாவட்டக் கண்காணிப்பாளர் இருக்கிறார்கள். அவர்களுடைய முழுமையான வேலை இன்றைய தினம் மதுவிலக்கு போன்ற அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, மேலும் ஒரு கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளர், ஒவ்வொரு மாவட்ட கண்காணிப்பாளருக்கும் உதவியாகக் கொடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரிக்க உதவ வேண்டும். அப்படி உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் தமிழகத்திலே சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவற்றைச் சிறப்பான முறையிலே அமுல்படுத்த வேண்டும் என்று நான் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல. இன்றைக்கு காவல் துறையினர் குடி இருக்கக் கூடிய வீடுகளுக்கு மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை அவர்களுடைய வீடுகளிலே விளக்குகள் எரிவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. காவல் துறையைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு பணியின் காரணமாக, திருவிழாக் காலங்கள், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றில் பணியாற்றி விட்டு, இரவு 11, 12, 1 மணிக்குத் திரும்பி வருகின்ற நேரத்தில், வீடுகளிலே விளக்குகள் எரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, காவல் துறையினர் வீடுகளில் மாலை 6 மணி முதல் 10 மணி வரை விளக்குகள் எரிய வேண்டும் என்ற உத்தரவை திருத்தி, மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை எரிய அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், இன்றைக்கு கிராமங்களில் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு இரண்டரை ரூபாய் செலுத்தி, இன்றைக்கு அவர்களுக்குத் தாராளமாக மின்சாரத்தை அனுமதிக்கின்றபோது, இந்த இரவு நேரத்தில் மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பாக இருக்கக் கூடிய காவலர்கள் வசிக்கக் கூடிய இல்லங்களுக்கு மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை விளக்குகள் எரிய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, காவலர்கள் விடுமுறை நாட்களில் பணி செய்தால், அன்றைக்கு அவர்களுக்கு ஊதியமாக ரூ. 4 கொடுக்கப்படுகிறது. இன்றைய தினம் அவர்களுக்கு எவ்வளவோ வசதிகளை இந்த புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்து வருகிறது. வீட்டு வசதிக் கழகம், அத்தியாவசியப் பண்டங்களை வழங்குதல் போன்ற இம்மாதிரியான காரியங்களை இந்த புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்து வருகின்ற போது, இத்தகைய சிறிய சிறிய குறைகளைத் தவிர்ப்பதற்கு முன்வர வேண்டும் என்று நான் பணிவோடு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டிலே சட்டம் ஒழுங்கு பராமரிப்பதற்காக, நாட்டிலே நடமாடக்கூடிய நக்சலைட்டுகளைத் தடுப்பதற்காகவும், நீலகிரி மாவட்டத்தில் நில ஆக்கிரமிப்புகளை தடுப்பதற்காகவும் இரண்டு சிறப்பு படைகளை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ் நாட்டிலே நக்சலைட்டுகள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியிருக்கிறது. தர்மபுரி, திருப்பத்தூர் போன்ற இடங்களிலே மக்கள் நடமாடுவதற்கே அஞ்சினார்கள். அங்கே மக்களிடையே அச்சம், பீதி நிலவியது. நக்சலைட்டுகளின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றியது இந்த அரசு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்பதை மக்கள் இன்றைக்கு நன்றி பெருக்கோடு நினைவு கூறுகிறார்நள். சிறப்பு படை ஏற்படுத்தியதன் மூலம் நக்சலைட்டுகள் தமிழ் நாட்டிலே அடக்கப்பட்டிருக்கிறார்கள்; ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள்; கடந்த காலத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி அகற்றப்பட்டதற்குமுன்பு சட்டம், ஒழுங்கு எவ்வாறு சீர்குலைந்து இருந்தது என்பதைசிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு எதற்

கெடுத்தாலும், காங்கிரசிலே இருக்கக் கூடிய நண்பர்கள் 8 எம். எம். என்ற அளவிலே தெரியக் கூடிய சிறிய காட்சிகளை எல்லாம் பெரிதுபடுத்துகிறார்கள். அதே சமயத்தில் வட நாட்டிலே 70 எம். எம். என்று சொல்லக்கூடிய சினிமஸ்கோப் அளவிலே இன்றைக்கு பீகார் போன்ற மாநிலத்திலும், உத்தரபிரதேச மாநிலத்திலும் இன்றைக்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்த நிலைகண்களுக்கு பளிச்சென்று தெரிகிறது. அவற்றை எல்லாம் அவர்கள் மறைக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் நண்பர்கள் அரசியல் சட்டத்தின் 356 பிரிவை எப்படியாவது மீண்டும் அமல் நடத்த ஒரு வாய்ப்பு கிடைக்குமா என்று துடிக்கிறார்கள்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சிறிய கருத்தை இந்த நாட்டிலே சாதாரண குடிமகன் என்ற முறையிலே அரசியல் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் பேசுவதைக் கூட எதிர்க்கிறார்கள். அவர்கள் அதை அனுமதிக்க மறுக்கிறார்கள். அவர்களைமைகள் இன்றைக்கு நாட்டிலே மறைய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகாலத்திலே தான் எவரும் தனது உள்ளத்திலே ஏற்படக்கூடிய கருத்துக்களை தைரியமாக வெளிப்படுத்த முடியாது.

நான்கு சுவற்றுக்கு உள்ளே பேசி வந்த ஒரு நிலைமை மாறி, இன்றைக்கு $4\frac{1}{2}$ கோடி மக்கள் சந்திக்கக்கூடிய இந்த ஆட்சியிலே ஒரு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உள்ளத்திலே வந்த கருத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்த அச்சம் அவருக்கு ஏற்படுத்தப்படுகிறது. அவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை கூறிக்கொள்கிறேன்.

சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை என்று முழங்கிய திலகர் போன்ற மாவீரர்கள் தலைமையில் வந்தவர்கள் தான் இன்றைக்கு சுதந்திரத்திற்கு குரல் கொடுக்கக் கூடிய மாவீரன் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடைய பேச்சை தடுத்து நிறுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நண்பர்களை கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த நாட்டிலே பேசுவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. சுதந்திரம் இருக்கிறது. இந்த ஆட்சியிலே யார் வேண்டுமானாலும் தங்களுடைய கருத்தை எடுத்து வைக்க இந்த ஆட்சி அனுமதித்து இருக்கிறது. ஆகவே அரசியல் சட்டப் பிரகாரம் ஒரு அமைச்சர் செயல்பட நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய கருத்தை ஆதரித்து அவருக்கு பேச உரிமை இருக்கிறது என்று வாதாடுகிறார். பாராட்டுகிறேன்; இதே உரிமை எங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.





வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சுக்கு பதில் சொல்கிற வகையிலே நாங்கள் பேச அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். நாளைக்கு பேசலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, 150-க்கு மேற்பட்ட தலைமை காவலர்கள் இன்றைக்கு அவர்கள் ஏ.எஸ்.ஐ. பதவிக்கு தேர்வு எழுதி, 30 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். தலைமை காவலர்கள் 20 ஆண்டு, 25 ஆண்டு பணிபுரிந்தவர்கள், 150 பேருக்கு மேல் ஓய்வு பெறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் மக்களுடைய இன்னல்களைப் போக்குவதற்கு மின்னல் வேகத்தில் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்தநாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்கள் நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, துருவ நட்சத்திரமாக விளங்குகிறார்கள். அவர்களுடைய ஆட்சியின் சாதனையை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிமுடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-00]

* திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் காவல் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த காவல் துறை மானியத்தை வரவேற்றுப் பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறை முன்னணியில் இருக்கிறது. இமாலயப் புகழை தமிழகக் காவல் துறை அடைந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகம் தான் ஜனநாயக மலர் பூத்துக் குலுங்கும் அமைதிப் பூங்காவாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு பற்றி இங்கே எதிர்க்கட்சியினர் பேசினார்கள். குறிப்பாக திரு. இளையபெருமாள் அவர்கள் எடுத்துப் பேசினார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இன்றைய தினம் நடைபெறக் கூடிய பிரச்சினைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டிலே நடக்கிற சம்பவங்கள் 1 சதவீதம் கூட இல்லை என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தியாவின் தலைநகராகிய டெல்லி மாநகரத்திலே மாலை 7 மணிக்கு மேலே வியாபாரம் நடையர்து. கடைகள் திறக்கப்படுவதில்லை. சாதாரணமாய் போக்குவரத்து விதி முறைகள் கூட சாலைகளிலே கடைக

பிடிக்கப்படுவதில்லை இரவு நேரங்களிலே டெல்லியிலே என்ன என்ன நடைபெறுகின்றது என்பதைப்பற்றியெல்லாம் அன்றாடம் செய்தித்தாள்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. உத்திரப் பிரதேசத்திலே கொள்ளைக்காரர்கள் கூட்டம் மக்களைத் தாக்கியிருக்கிறது. கொள்ளைக் கூட்டத் தலைவி பூலாந்தேவி என்பவர் 24 பேர்களை நிற்க வைத்து சுட்டுவிட்டார்கள். சுட்டது யார் என்று அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு அங்கே கிராமம் கிராமமாக கொள்ளைக் கூட்டம் வலைவீசிக் கொண்டு இருக்கிறது. மக்கள் வாழ்வதற்கே பயந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது, ஒரு கொள்ளை கோஷ்டி 24 பேர்களை நிறுத்தி குண்டுமாரி, தோட்டாமாரி பொழிந்து இருக்கிறது என்று. ஏன் அந்தக் கொள்ளை கோஷ்டியை அடக்க முடியவில்லை? பீகார் மாநிலத்திலே கலவரம், இந்த நான்கு நாட்களிலே .. .. .. (குறுக்கீடு).

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, நாம் இந்த அவையிலே விவாதித்துக்கொண்டிருப்பது தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கொண்டுவந்த மானியக்கோரிக்கை மீதா அல்லது பீகார், உத்திரப்பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களிலே உள்ள பிரச்சினையையா? அவைகளை எல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கலாமா?

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்தியாவிலே ஒரு பகுதிதான் ஒரு மாநிலம் தான் தமிழகம் ஆகும்.

**Thiru L. ELAIYAPERUMAL:** We want your ruling.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாட்டிலே எவ்வளவு சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொல்கிறார். இங்கே நன்றாக இருக்கிறது என்று பாராட்டுவதற்காகச் சொல்கிறார். அவ்வளவுதான்.

**திரு. நா. சுந்தரராஜ்:** இன்றைக்கு சண்முகம் அவர்கள் சொல்வதிலே கருத்து வேறுபாடு சொல்லவில்லை. இந்த அவையிலே இன்னொரு மாநிலத்திலே நடைபெறுகிற சம்பவங்களைப்பற்றிப் பேசி.. .. .. .. .. ..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கனவே எல்லா மாநிலங்களிலும் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். அவையைப்பற்றி பேசவில்லை. அவர் மற்ற மாநிலங்களிலே எப்படி இருக்கிறது என்பதை ஒப்பிட்டுக் காட்டுவதற்காகப் பேசியிருக்கிறார்.



**திரு. ராம் உமர்நாத்:** கேரளத்திற்கு இரண்டு முதலமைச்சர் என்று இவர் மாத்திரம் பேசலாமா?

**திரு. ப. நெடுமாறன்:** துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவர் சுந்தரராஜ் அவர்கள் ஒரு பிரச்சினையை கிளப்பியிருக்கிறார்கள். நேற்றைய தினம் நாடாளுமன்றத்திலே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப்பற்றி அவர் தேசத் துரோகத்திற்கான வழியையும் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான வேலையையும் செய்து கொண்டிருக்கிறார் என்று தி.மு.க உறுப்பினர் நாடாளுமன்றத்திலே பேசி இருக்கிறார். அந்த அவையிலே தமிழ்நாட்டைப் பற்றி விவாதம் நடக்கும் பொழுது, இந்த அவையில் மற்ற மாநில அவைகளைப் பற்றியோ, நாடாளுமன்றதைப் பற்றியோ விவாதம் நடப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு அவையிலே பேசியதைப் பற்றி நாம் இங்கே விவாதிக்கக்கூடாது.

* **திரு. ஏ. சி. சண்முகம்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டினுடைய பிரஜை என்ற முறையில் பல மாநிலங்களில் நடைபெறும் சட்டம் ஒழுங்கை பற்றி, அந்தந்த மாநிலங்களிலே நடைபெறுகின்ற பிரச்சினைகளைப் பற்றி உங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினராக நான் இருந்திருந்தால் அவைகளையெல்லாம் பற்றிச் சொல்லாமல் தமிழகத்தைப் பற்றி மட்டும் சொல்வேன். ஆனால், நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன்—ஆளுங் கட்சியைச் சார்ந்தவன் என்ற காரணத்தால் இந்திய நாட்டிலேயே தமிழகம் மட்டும்தான் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய அரசாக இன்றைய தினம் செயல்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே இதுபோன்ற ஆதாரங்களை, இது போன்ற சம்பவங்களைச் சொல்கிறேன் என்பதை திரு. சுந்தரராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பீகார் மாநிலத்திலே கலவரம் நடக்கிறது; நான்கு நாட்கள் நடக்கிறது; 48 பேர்கள் செத்து மடிந்திருக்கிறார்கள்; கலவரம் நடக்கிறது; கண்ட இடத்திலே சுடுவதற்கு உத்தரவு அங்கே பிறப்பிக்கப்படுகிறது.

அசாம் மாநிலத்திலே பயங்கரமான கொந்தளிப்பு, கலவரம், தீ வைப்பு, சூறையாடல் என்பது சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைச் சார்ந்த உயர்மட்ட அ

காரி ஒருவர் குண்டு வீச்சுக்கு ஆளாகி மறைந்திருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆந்திர மாநிலத்திலே கலவரம்; கர்நாடக மாநிலத்திலே கலவரம் என்று இதுபோன்று கலவரங்கள் நடக்கின்றன. ஆனால், தமிழகம் ஜனநாயகம் தழைக்கக்கூடிய ஒரு பூங்காவாக விளங்குகின்ற வகையில் தமிழ்நாட்டுக் காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், தமிழக காவல்துறையைப் பொறுத்த வரையில், தமிழகம் உத்தரப்பிரதேசமாக மாறக்கூடிய நிலைமையிலே தீவிரவாதிகளின் போக்கு இருந்த நேரத்தில், சரியான நேரத்தில் சரியான நடவடிக்கைகளை சரியான தருணத்திலே சரியான தலைமையின் கீழ் எடுக்கப் பட்ட காரணத்தால் அந்தத் தீவிரவாதிகளின் கொட்டம் வேரோடு ஒழிக்கப்பட்டது என்பதற்காக என்னுடைய நன்றியைக் காவல்துறைக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

குறிப்பாக எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே பல கிராமங்களில் நக்சலைட்டுகளின் தொல்லைகள் ஒரு சில ஆண்டும் காலமாக இருந்தன. பலவிதமான கொலைகள் நடந்தன; கொள்ளைகள் நடந்தன; கற்பழிப்புகள் நடந்தன; இவைகளெல்லாம் சாதாரணமாக நடந்து கொண்டிருந்தன. ஒரு கிராமவாசி ஒரு நக்சலைட்டைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி விட்டால் மறுநாள் அவனுடைய பிணம்தான் அகப்படும். சாதாரணக்குற்றம் செய்பவர்கள்கூட நான் நக்சலைட் என்று பெருமையாகச் சொல்லக்கூடிய அளவிற்கு நக்சலைட்டுகள் வளர்ந்திருந்தார்கள். அந்தப் போக்கைத் தமிழகத்தினுடைய காவல் துறை அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சரியான நடவடிக்கை எடுத்ததன் மூலம், அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்ததன் மூலம் சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் என்று வடார்க்காடு மாவட்டத்திலிருந்து தமிழகம் முழுவதும் பரவாமல் தடுத்துவிட்டார்கள். இதற்காகத் தமிழக முதல்வர் அவர்களுக்கு குறிப்பாக வடார்க்காடு மாவட்ட மக்கள் சாகும் வரையில் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நக்சலைட் கலவரத்தில் காவல்துறையைச் சார்ந்த ஒரு அதிகாரி மடிந்தபொழுது தமிழக முதல்வரவர்கள் அங்கே துணிந்து வந்து, தன்னுடைய உயிரைக்கூட பொருட்படுத்தாமல், அந்தப்பகுதிக்கு வந்து பார்வையிட்டு அவர்கள் அந்த அதிகாரிக்கு அஞ்சலி செலுத்தினார்கள் என்றால் இந்தியாவிலேயே தமிழக முதல்வரவர்கள்தான் உயிருக்கும் துணிந்து காவல்துறையிலுள்ள



வர்களுடைய தலைவராக, அவர்களுடைய அமைச்சராக செயல் பட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், திரு. இளையபெருமாள் அவர்கள் நேற்றையதினம் பேசும்பொழுது சட்டம் ஒழுங்கைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தை எடுத்துச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் இதை ஒரு குற்றச்சாட்டாகவோ அல்லது அவர்கள்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையிலேயோ கூறவில்லை. கர்நாடகத்திலே தமிழர்களுக்கு எதிராகக் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாமன்றத்திலே இதைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட வந்து மாண்புமிகு உறுப்பினர் திரு நெடுமாறன் போன்ற தலைவர்களெல்லாம் இங்கே தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். தமிழர்களின் வீடுகள் சூறையாடப்படுகின்றன; தமிழர்கள் வேலை செய்ய முடியாமல் பாதுகாப்பற்ற முறையிலே நடத்தப்படுகிறார்கள். அதிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய மாணவர் தலைவர் ஒருவரின் பெயர் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது; F.M. கான் என்ற காங்கிரஸ் கமிட்டி பாராளுமன்ற உறுப்பினர் செய்கிறாரே என்பது குறித்து மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தயவுசெய்து மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்து தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள்.

நேற்று முன்தினம்கூட ஒரு சர்ச்சில் தொழுகை நடக்கும் பொழுது, பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும்பொழுது ஆண்டாண்டு காலமாகத் தமிழில் நடந்த வழக்கத்தை மாற்றித் திடீரென்று இப்பொழுது கன்னடக்காரர்கள் தங்களுடைய பண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையினுடைய அடிப்படையிலே கன்னடத்திலேயே பிரார்த்தனை நடத்த வேண்டுமென்று தகராறு செய்திருக்கிறார்கள்; காவல் துறை நுழைந்திருக்கிறது: அமைதியாகப் பிரார்த்தனை நடைபெற வேண்டிய ஏசுவின் சந்நிதியிலே கலவரம் நடந்திருக்கிறது; கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1-10]

இதையெல்லாம் தாங்கள் மனதிலே வைத்து, அதற்கான முடிவுகளை மாநில அரசு, இந்திரா காங்கிரசினுடைய அரசுதான் அங்கும் இருக்கிறது; மைய அரசிலே ஆளுகின்றவர்களும் அவர்கள்தான். அதற்கு நீங்கள் வாதாட வேண்டும். மற்ற மாநிலத்திலேயுள்ள தமிழர்களுக்கு ஒன்று என்றால், தமிழ் நாட்டிலே உள்ள தமிழர்கள் யாரும் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக்

கொண்டு வந்து, இந்தப் பிரச்சினைக்குப் பாரதப் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு தலைவர் நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தை—மத்திய அரசு இன்றைய தினம் பாராளுமன்றத்திலே கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப் பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் வலியுறுத்திப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை என்னுடைய சொந்தக் கருத்தாகவே பேச விரும்புகிறேன். ஒரு மாநிலத்திலே கலவரம் வந்தால் அந்தக் கலவரத்தை அடக்குவதற்கு, கலவரப் பகுதியாக அறிவிப்பதற்கு மாநில அரசிற்கு, அரசியல் சட்டத்தின்படி உரிமை இருக்கிறது. அந்த உரிமையை, மைய அரசு தன்னுடைய கையிலே எடுத்துக் கொள்வதற்கான சட்ட முன்வடிவைப் பாராளுமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறது. இருக்கக்கூடிய சட்டத்தை, அந்தக் கலவரப் பகுதிகள் என்று அறிவிக்கக்கூடிய உரிமையை, மாநிலங்கள் இதுவரை அறிவிக்காமல், இதுவரை செயல்படுத்தாமல், இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டே அந்தக் கலவரங்களை அடக்கிக் கொண்டிருக்கிற அந்த மாநிலங்களுடைய அதிகாரங்களைப் பறிப்பதற்கு ஒரு முன்னோடியாக மைய அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சி ஆளுகிற மாநிலங்கள்தான் இதிலே அதிகமாக பாதிக்கப்படக்கூடிய நிலைமையிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொண்டு வருகிற சட்டத்தில் ஒரு மாநில அரசு ஒரு பகுதியைக் கலவரப் பகுதியாக அறிவித்துவிட்டால், அதிலே மைய அரசு தலையிட முடியாது. மத்திய அரசு ஒரு பகுதியைக் கலவரப் பகுதியாக அறிவித்துவிட்டால், அதிலே மாநில அரசு தலையிட முடியாத நிலைமையிருக்கிறது, குறிப்பாக, தமிழகத்திலே சேலத்திலே ஒரு போராட்டம், கலவரம் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சேலம் பகுதியை மைய அரசு கலவரப் பகுதியாக அறிவித்துவிட்டால், அங்கே நிர்வாகம் செய்வது யார்? அங்கே நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவது யார்? தமிழக அரசு அங்கே தலையிட முடியாத நிலைமை இந்தச் சட்டத்தின் மூலமாக வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கலவரங்கள் நடந்தால், இருக்கின்ற மாநிலங்கள் கலவரப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று உள்ள அந்த அதிகாரங்களை, மைய அரசு, அரசியலமைப்புச் சட்டத்திலே உள்ள அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, இப்படிச் செய்யுங்கள் என்று மாநிலங்களுக்கு டைவர்ஸன் கொடுத்து வரையறுத்துக் கூற இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே வழியிருக்கிறது. அப்படி இருக்கும்போது புதிதாக ஒரு சட்டத்தை எதற்காகக் கொண்டு வருகிறார்கள் என்பதைத்தான் இந்த நேரத்திலே மத்திய அரசைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,





அப்படி அந்தச் சட்டத்தை மைய அரசு நிறைவேற்றுமானால், மைய அரசும், மாநில அரசும் ஒரு இடத்தைக் கலவரப் பகுதியாக அறிவிக்கலாம் என்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமானால் கூட்டுப் பொறுப்பாகத்தான், சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய பொறுப்பு, மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள கூட்டுப் பொறுப்பாக மாறிவிடும். அப்படி என்றால்; சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறிய மாநிலங்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அந்த அதிகாரம், அந்த மாநிலங்களைக் கலைக்கக்கூடிய அதிகாரம் எதற்காக மைய அரசு கையிலே வைத்துக் கொண்டிருக்கிறது ? அந்த அதிகாரத்தை, அந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்திவிட்டு, இதுபோன்ற சட்டத்தின் மீது மைய அரசு முடிவெடுக்க வேண்டும், அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். என்று இந்த நேரத்திலே மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக். கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே மானியக் கோரிக்கையிலே ஒருசில கருத்துக்கள் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. சிலைகள் திருடு போவதைப் பற்றியும், காணாமல்போன சிலைகள் கண்டு பிடிக்கப்பட்டதைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அமெரிக்காவிலேயிருந்து 5 சிலைகளைக் கொண்டுவர குழு போவதாகக் கூடச் சொல்லி இருக்கிறார்கள். அதே போன்று அமெரிக்காவிலிருந்து ஒரு லிங்கன் சிலை தமிழ்நாட்டிற்கு வந்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. அந்த லிங்கன் சிலை எங்கேயிருக்கிறது ? யாரிடத்திலே இருக்கிறது ? எந்த உருவத்திலேயிருக்கிறது என்பதைக் காவல் துறை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக்காலத்திலே காவல் துறை கட்சித் துறையாகத்தான் செயல்பட்டது என்பதை இங்கே பல உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் மீது பல மினி மிசாக்கள், 307-க்குள் போடப்பட்ட வரலாறுகள் தமிழகத்திலே இருந்தன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டி, அந்த நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் தமிழகத்திலே பொறுப்பேற்றிருக்கிற புரட்சித் தலைவர் அரசால் மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்கள் குறிப்பிடும் போது, தமிழகத்திலே ஆளுங்கட்சியினர் நிர்வாகத்திலே தலையிடுவது மிகவும் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். நான் ஓரே ஒரு உதாரணத்தை, சம்பவத்தை எடுத்து வைத்து, தலையீடு குறைந்து விட்டது என்று சொன்னால் கூட அது பொருத்தமாகாது அறவே ஆளுங்கட்சியினர் காவல் துறை நிர்வாகத்திலே தலையிடுவதில்லையென்று பல சம்பவங்கள் சொல்ல முடியும். ஆரணியில ஒரு சம்பவம் நடந்தது. ஒரு கழகப் பேச்சாளர் தாக்கப்

பட்டார் என்ற காரணத்திற்காக ஒரு அரசு மருத்துவ மனையிலே டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்குவதற்குச் சென்று அந்த டாக்டர் சரியான சான்றிதழ் கொடுக்கவில்லை என்பதற்காக இரண்டு கிளைக் கழகச் செயலாளர்கள் அந்த டாக்டரை அணுகி, அதற்காக எப்படித் தவறுதலாக அந்த சர்ட்டிபிகேட் கொடுக்கிறீர்கள் என்று கேட்ட ஒரே ஒரு காரணத்திற்காக, அந்த டாக்டர் கம்ப்ளெயின்ட் செய்ததற்காக, 32 கிளைக் கழகச் செயலாளர்கள் கைது செய்யப்பட்டு, வழக்குமன்றத்திற்கு ஆரணியிலிருந்து செய்யாறுக்கு அனுப்பப்பட்டு, இரண்டு ஆண்டுக்காலம் நீண்ட நெடிய படிகளிலே கழகத் தோழர்கள், ஒரு ஒன்றியத்தினுடைய செயலாளர் உட்பட, 32 கிளைக் கழகச் செயலாளர்கள் வழக்கு மன்றத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த நீண்ட நெடிய படிக்கட்டுகளிலே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் நிர்வாகத்திலே நாங்கள் தலையிடவில்லையென்பது விளங்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் தலையிடவில்லை என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகம்தான் ஒயர்லெஸ் கருவிகளை வைத்திருப்பதிலே முன்னேறி இருக்கிறது. அனைத்துக் காவல் நிலையங்களிலும் ஒயர்லெஸ் கருவிகள் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். வெளி நாடுகளிலே இருப்பதைப்போல் ஒவ்வொரு போலீசாருக்கும், குறிப்பாக டிராபிக் போலீசாருக்கு வாக்கிடாக்கி கொடுக்க வேண்டும் என்றும் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கேற்ப காவல் துறையில் காவலர்களை இரண்டு மடங்காக அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க கம்ப்யூட்டர் சிஸ்டம் இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிகமான முறையிலே உபயோகிக்கப்பெறுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காவலர்களுக்குச் சங்கம் அமைத்துத் தந்த தமிழ்நாடு அரசைப் பாராட்டி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன்.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்தை வாழ்த்தி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து இன்றுவரை அவர்கள் காவல் துறைக்குச் செய்த நன்மைகள் பல. அவற்றைப்





பார்த்து மற்றத் துறையினர் பொறாமை படக்கூடிய அளவுக்குக் காவல் துறைக்கு நன்மைகள் செய்து வருவதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவலர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்கள் வீட்டு வாடகைப் படியை உயர்த்தினார்கள். முந்திய ஆட்சிக் காலத்தில் வீட்டு வாடகைப் படி உயர்வு என்றால் காவலர்களுக்கு 5 ரூபாய்தான் வரும். ஆனால் தமிழக முதல்வர், காவலர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோர் 50 ரூபாய் பயன்பெறத்தக்க முறையில் உத்தரவு போட்டு அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கி இருக்கிறார்கள். இதனால் 45 ரூபாய் வீட்டு வாடகைப் பெற்ற காவலர்கள் ரூ. 95-ம் ரூபாய் 75 பெற்ற தலைமைக் காவலர்கள் இன்று ரூ. 125-ம் பெறுகிற அளவுக்கு இருக்கிறார்கள்.

தலைமைக் காவலர்கள், காவலர்கள் வாரம் ஒரு நாள் வாராந்திர ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொள்ளாமல் வேலை செய்தால் ஒரு நாளைக்கு ரூ. 2 தான் முந்திய அரசு கொடுத்து வந்தது. புரட்சித் தலைவர் அவர்கள் நியாய உணர்வோடு அவர்களுக்கு ரூ. 7-00 கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பொதுப்படை குவிப்பின்போது 'ஃபீடிங்' சார்ஜ்— சாப்பாட்டுப் பணம் காவலர்களுக்கு, தலைமைக் காவலர்களுக்கு ரூ. 4-50 வீதம் கொடுக்க உத்தரவிட்டது புரட்சித் தலைவர் அரசுதான் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுமக்களிடம் காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ளவர்கள்தான் நெருங்கிய தொடர்புகொண்டு நடக்கக் கூடியவர்கள். மேற்படியார்கள் வீட்டில் பசிப்பிணி இருக்கக்கூடாது என புரட்சித் தலைவர் அவர்கள் காவலர்கள் முதல் ஆய்வாளர் வரை மலிவு விலையில் உணவுப் பண்டங்களை விநியோகம் செய்ய உத்திரவிட்டார்கள். இதை இந்திய நாடே பாராட்டுகிறது. அப்படி இருந்தும் சில காவல் துறையினர் இந்த அரசுக்கு நல்லவர்கள் போல் நடித்துக்கொண்டு எதிர்க்கட்சியினருக்குத் துணைபோவதும் அரசுக்குக் கெட்ட பெயர் உண்டுபண்ண நினைப்பதும் மிகவும் வருந்தத்தக்கதாகும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. எனவே அவர்கள் கட்சி சார்பற்ற முறையில் நியாய உணர்வோடு நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-20]

இங்கே இருக்கிற கோட்டை தலைமைச் செயலகத்திற்கு ஒரு ஏ.சி., 2 இன்ஸ்பெக்டர்கள் 6 சப் இன்ஸ்பெக்டர்கள், 6 தலைமைக் காவலர்கள், 60 காவலர்கள் ஆகிய அறுவர்

களை நியமிக்க அரசு ஒப்புதல் அளிக்க இருப்பதாகத் தெரிய வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கண்ட அதிகாரிகளைத் தனது நேரடிப் பார்வையில் வைத்துக்கொண்டு முதல்வரின் கவனத்திற்கு வரும் விவரங்களின் உண்மையை அறிய மேற்படி அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேற்படி அதிகாரிகள் நியாயமானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் திறமை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தலைமைச் செயலகத்திலிருந்து பல கோப்புகள் எதிர்க்கட்சித் தலைவரின் கைக்கு போய்விடுகின்றன. அவை எப்படி போகின்றன என்பதைக் கண்டுபிடிக்க இந்த அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முகவை மாவட்டத்தில் கலவரம் என்றவுடன் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தனது வெளிநாட்டுப் பயணத்தை தள்ளிவைத்துவிட்டு ஓடோடிச் சென்று பார்த்து கலவரத்தை அடக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்காக முகவை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர் முதல் மாவட்ட போலீஸ் அதிகாரி (எஸ்.பி.) வரை அனைவருக்கும் 'ரிஸ்க் அலவன்ஸ்' கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

காவல் துறையில் உள்ளவர்கள் சங்கம் அமைக்க உத்தர விட்டதும் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

காவல் துறையில் நடக்கும் தேர்வுகள் பற்றி பல பேர்கள் பலவிதமாக கருத்து மாறுபாடு கொண்டுள்ளார்கள். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிப்பதுடன் இனிமேல் தலைமைக் காவலரிலிருந்து உதவி ஆய்வாளராகத் தேர்வு செய்யப்படக்கூடியவர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதியாவது பெற்றிருக்க வேண்டும். அதாவது எஸ்.எஸ்.எல்.சி. யாவது அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும். தற்சமயம் 8-வது படித்திருந்தால் போதும் என்ற நிலையை மாற்றி எஸ். எஸ். எல். சி. என்று வைத்தால்தான் காவல்துறையின் தரம் உயரும் என்பது என்னுடைய கருத்து. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் காவல்துறைத் தலைவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.



அடுத்தபடியாக கன்னங்குடியில் சப் இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடிய அளவிலே ஒரு போலீஸ் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் பாதை வசதி போக்குவரத்து வசதி இல்லாததால் அங்கே பல கொலை, கொள்ளைகள் நடந்தாலும் அவர்கள் 10 மைல்களுக்கு அப்பால் இருக்கிற தாலுகா போலீஸ் நிலையத்திற்கு தனியாக வந்து சொல்ல வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கொலை கொள்ளைகளைப் பார்த்தவர்கள் வந்து சொல்லகூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தால் கன்னங்குடியிலே சப் இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடிய அளவிலே ஒரு போலீஸ் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் போன 17—3—1981 அன்று அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுக் கூட்டம் தேவகோட்டையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே சில சமூக விரோதிகள் வெடிகுண்டுகளை வீசினார்கள். அவர்களை அங்கே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் இன்னும் கைதுசெய்யவில்லை. அவர்கள்மீது 'நான் பெயிலபிள் செக்ஷன்' வழக்குப் போடப்பட்டும் 1½ மாதம் ஆகியும் இன்னும் அவர்கள் கைதுசெய்யப்படவில்லை. அவர்கள் அங்கே சுதந்திரமாக நடமாடி இன்னும் காயம் ஏற்படுத்தினாலும் எங்களை என்ன செய்ய முடியும் என்று சொல்லிக்கொண்டு திரிவதால் உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. செ. சிவசாமி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தேவகோட்டை கூட்டத்தில் வெடிகுண்டு வீசினார்கள் என்று சொன்னார்கள். அந்த வெடிகுண்டுகளை விசியவாகள் எந்தக் கட்சிக்காரர்கள் என்று சொல்ல முடியுமா?

*திரு. எஸ். ஜகத்ரட்சகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவவர்களே, அப்பழுக்கற்ற ஒப்பற்ற ஒரு பெருந் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள காவல் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

'' தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவ வேண்டும்'', என்ற பாரதியாரின் பாட்டு வரிக்கேற்ப உலகமெங்கும் தமிழ் பரவ வேண்டுமென்ற நோக்கத்தில் தமிழகத்திலே உலகத் தமிழ் மாநாட்டை நமது முதல்வர் கூட்டினார்கள். உலகத் தமிழ் மாநாடு என்று சொல்லும்போது 25 இலட்சம்

மக்களுக்கு மேலாக மதுரை மாநகரிலே கூடி உலகத் தமிழர்கள் எல்லாம் அங்கே ஒருங்குகூடி மிகச் சிறப்பாக மாநாடு நடைபெற்றது. எந்த ஒரு நேரத்திலும் எந்த ஒரு இடையூறும் இல்லாமல் ஒழுங்காகவும், சிறப்பாகவும், அமைதியாகவும் அனைவரும் பாராட்டத்தக்க வகையிலும் உலகத் தமிழர்கள் மாநாட்டைச் சிறப்பாக நடத்திக்காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் அவர் பொறுப்பில் உள்ள காவல் துறையினரையும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கலவரம் என்று சொன்னவுடன் நமது இராமச்சந்திர மூர்த்தி அந்த இடத்திற்கு விரைகிறார் என்று சொல்கின்றபோது பிரச்சனை எதுவாயினும் எங்கே இருந்தாலும் அவைகளைச் சுமூகமாகப் பேசியே தீர்த்துவிட முடியும் என்ற அடிப்படையில் அவைகளைப் பேசித் தீர்த்துவைப்பதோடு தமிழகத்தை ஓர் அமைதிப் பூங்காவாக நடத்திவருகின்ற காவல்துறை அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டை முதலில் தெரிவித்துகொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் உச்ச நீதிமன்றம் என்று சொல்கின்ற நீதிமன்றத்தினையே கூட பாதுகாப்பது தமிழகத்தின் காவல்துறைதான் என்று சொன்னால் அது மிகையாகாது. குடியரசுத் தலைவர் பதக்கத்தை எங்கிருந்தாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் முன்னணியிலே இருக்கிறார்கள்.

ஜப்பான் நாட்டிலே தற்கொலைப் படை என்று ஒரு படை இருந்ததாம், அதுபோலத் தன்னுடைய உயிரையும் பணயமாக வைத்துத் தமிழகத்திலே அமைதியை உருவாக்கி பணியாற்றுகின்ற காவல் துறையினரைப் பாராட்டுவது மிகையாகாது.

ஆங்கிலத்திலே ஒரு முதுமொழி சொல்வார்கள், அதாவது "What grammar is to a language Police is to Society" என்று சொல்வார்கள், அதுபோன்று தமிழகத்திற்குக் கண்ணாகவும், காதாகவும் இருந்தோடு பணியாற்றுகின்றனர் காவல் துறையினர். வாக்கு ஒத்தவர்களுக்கு வக்கீல் வேலை, போக்கு ஒத்தவர்களுக்கு போலீஸ் வேலை என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோன்று காவல்துறையினர் ஆளும் கட்சிக்குத்தான் ஆதரவாகவும் எதிர்க்கட்சியினருக்கு எதிரியாகவும் இருப்பார்கள் என்ற நிலையினை மாற்றி யாராக இருந்தாலும் அதாவது சாதாரண மனிதர்களாக இருந்தாலும்கூட அவர்களைப் பாதுகாக்கின்ற கடமையை பட்சபாதம் இல்லாமல் மேற்கொண்டிருக்கின்ற காவல்துறையினரைப் பல இடங்களிலே நடக்கின்ற கலவரங்களுக்குக் காரணம் என்று சிலர் தவறாகச் சொல்கின்றனர். காமாலைக் கண்ணனுக்குக் கரித்தூளும் மஞ்சள் என்று சொல்வார்கள். அதுபோன்று நிறக் கண்ணாடி அணிந்துகொண்டு வந்து தமிழகத்திலே காவல்துறையினர் ஆளும் கட்சிக்கு ஆதரவாகவும், எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் இருக்கிறார்கள் என்று எப்போதும் சொல்கிறார்கள்.





காவல் துறையைப் பொறுத்தவரையிலே பல இடங்களிலே போக்குவரத்துக்கான ஜீப் இல்லாத நிலைமை சில காவல் நிலையங்களில் இருக்கின்றன. ஆகவே எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கவேண்டும். போக்குவரத்து வசதியில்லாமல் அவர்கள் பணியாற்றவேண்டிய அவல நிலையைப் போக்கியாக வேண்டும்.

அடுத்து, உத்திரமேரூர் ஒரு தாலுக்காவாக இருந்தாலும் அங்கே தீயணைப்பு நிலையங்கள் சரியாக அமைக்கப்படவில்லை. தீயணைப்பு நிலையங்களை அங்கே ஏற்படுத்தித் தருவதோடு ஒரு காவல் நிலையமும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்களுக்கு எல்லாம் காவல்துறையிலே பணியாற்ற வாய்ப்பு நல்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூட எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்கள். அவர்களுக்கு அந்த விவரம் தெரியும். ஆகவே எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்களைக் காவல் துறையிலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே செங்கோல் வழுவாமல் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியிலே சந்தேக வழக்குகளே இல்லை. ஆனால் கலைஞரின் ஆட்சிக் காலத்திலே 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் சந்தேக வழக்குகள் ஆண்டுதோறும் போடப்பட்டுவந்தன. ஆகவே கலைஞர் ஆண்டுதோறும் 40,000 தமிழர்களைச் சந்தேகப்பட்டு வந்திருக்கிறார். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ்த்தாயின் தவப்புதல்வராக சந்தேக வழக்குகளை ஒழித்துக் கட்டிவிட்டு எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று சொல்கிற வகையிலே ஆட்சி இனிமையாக நடத்தி வருகிறார். அந்த வகையில் புரட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையினை மனதார வரவேற்று அமருகிறேன். நன்றி, வணக்கம்.

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (ஆ) பேரவையின் அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையிலுள்ள எல்லா கட்சிகளையும் கலந்து, பேரவையின் நிகழ்ச்சி குறித்து கீழ்க்கண்ட முடிவு பேரவைக்குத் தெரிவிக்கப்படுகிறது.

காவல்துறை மற்றும் நீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது மேலும் விவாதமும் பதிலுரையும் நாளை, 7—5—1981 அன்றும் தொடரும். இந்த மானியக் கோரிக்கைகள் முடிந்தவுடன், நாளை எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1981) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

## இணைப்பு I.

[36--ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 1005 க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாடு நிலவியல் பிரிவு 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1980-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தடிக்காரக் கோணம் என்னும் இடத்தில் விரிவான நிலவியல் ஆய்வினை மேற்கொண்டுள்ளது. மேற்கண்ட ஆய்வின் மூலமாக வைடூரியத்தில் இருவகை கற்கள் இங்கும் அங்குமாக பெக்மடைட் (Pegmatite) என்னும் பாறை விரிசல்களில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த இரண்டு வகை கற்களில் ஒவ்வொன்றிலும் 1 கேரட் (0.2gms) அளவுகொண்டு வரப்பட்டு, அதன் தன்மையை (Quality) ஆராய்வதற்காக உடைத்து, மெருகூட்டப்பட்டது. இக்கற்கள் மற்ற கற்களைப்போல் தக்கவடிவத்திலும், ஒரே இடத்திலும் கிடைக்காமல் இங்கும் அங்குமாக இருப்பதால், அதனுடைய முழுஅளவையும் மதிப்பிட இயலவில்லை. இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இக்கற்கள் அதிக அளவில் இங்கு இருப்பதற்கான வாய்ப்பும் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

(ஆ) இந்த ஆராய்ச்சி முதலில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பரில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவ்வருடம் அக்டோபர் மாதத்தில் வீரப்புலி காட்டுப்பகுதியில் அம்மாதத்திலேயே





வேலை ஆரம்பிக்கப்பட்டது. இக்கற்களில் ''பூனைக்கண்'' என்னும் வகையானது எவ்வித குறையும் இல்லாமல் சுத்தமாக மஞ்சள் நிறத்தில் 5 கேரட் (1.0 gms) இருந்தால் அதை சிறந்த வைடூரியமாகக் கருதலாம். இங்கு நடத்தப்பட்ட ஆய்வில் 1 கேரட்டுக்கும் குறைந்த அளவு சுத்தமான வைடூரியமே கிடைத்துள்ளது.

(இ) தற்போது நிலவி வரும் நிலையில் 1 கேரட் சுத்த வைடூரியம் ரூ. 100 முதல் ரூபாய் 150 வரை பெறுமானம் உடையதாகும். இதன் விலையானது அதன் நிறம் பிரதிபலிக்கும் தன்மை ஆகியவற்றைப் பொருத்ததாகும். வாங்குவோரைப் பொறுத்தும் சிலசமயங்களில் 10 கேரட் கல் ஒரு ஆயிரம் ரூபாய்க்கும் மேலான விலையைப் பெற்றுத் தரும். இத்தகைய கல் இதுவரை நடத்திய சோதனைகளில் கிடைக்கப் பெறவில்லை.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வியாழக்கிழமை, 1981, மே 7**

*சித்திரை 25, துன்மதி—திருவள்ளுவர் 2012.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

'' நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.''

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கம்பம் தொகுதியிலுள்ள சுருளி நீர் வீழ்ச்சி.

***வினா எண் 872— திரு. ஆர். டி. கோபாலன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியிலுள்ள சுருளி நீர் வீழ்ச்சியில் மின் சாரத் துறையினரால் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் தண்ணீர் விட அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே சில காலம் இந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் நிறுத்தப்பட்டிருந்ததாகச் செய்தி வந்ததின் காரணமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். அவர்

இன்றைக்கு இல்லை. ஆனாலும், இந்த நீர்வீழ்ச்சியில் வரும் தண்ணீரை ஏழை எளிய மக்கள் வந்து பார்த்து பயன் அடைகிற வகையில் இருப்பதால், இந்த நீர்வீழ்ச்சியைப் பொருத்தவரையில், பொதுவாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருளி ஆற்றில் கட்டப்பட்டிருக்கிற அந்த அணைக்கட்டின் கீழே போடப்பட்டிருக்கும் குழாய்கள் அடியில் பாதுகாப்பாக இருக்கின்றன. இதன் மூலம் கோடைக் காலத்தில் அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் விட வழி செய்யலாம். மற்ற காலங்களில் சுருளி ஆறு அணைக்குக் கீழே அந்த நீர் வீழ்ச்சிக்கு மேலே உள்ள நீர்பிடிக்கும் பகுதியிலிருந்து செல்கிற தண்ணீரே அந்த நீர் வீழ்ச்சிக்குப் போதுமானது. ஆகையினால் நீர் வீழ்ச்சிக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை.

**திரு ரா. கிருஷ்ணன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுருளியாறு போன்ற இப்படிப்பட்ட பிராஜக்ட் பகுதிகளில் வேலை செய்து முடிந்த பிறகு, மின்சார வாரியத்தினர், அவர்களுடைய வாரியத்திற்குச் சொந்தமான சில பொருட்களை ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் அல்லது இரும்புக் கம்பிகள், குழாய்கள் போன்றவற்றை அங்கேயே விட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். இதனால் சில சமயங்களில் ஆபத்தும் ஏற்படுகிறது. குறிப்பாக சுருளியாறு பிராஜக்டில்...... (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வி சுருளி ஆற்றில் கட்டப்பட்ட நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர் வருவதை மின்சாரத் துறை நிறுத்தியுள்ளதா என்பதைப் பொறுத்தது. நீங்கள் கேட்பதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாவாக கேட்டு முடிப்பதாக இருந்தால் தொடர்ந்து கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள்.

**திரு ரா. கிருஷ்ணன் :** அப்படிப்பட்ட தகராறு ஏற்படக் கூடிய சில நேரங்களிலும் அங்கே பாயக்கூடிய மின்சாரத்தைத் தடை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அது பற்றி அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அளவிற்குப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு அவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு அரசு உத்தரவு இடும்.



## திண்டுக்கல் நகரில் மின் விநியோகத்தை முறைப் படுத்துதல்

*வினா எண் 873— திரு. என். வரதராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் மிக அதிகமான மின் தடை அடிக்கடி ஏற்பட்டிருந்ததின் விசேட காரணமென்ன ?

(ஆ) இந்த நிலைமையை மாற்றி மின் விநியோகத்தை முறைப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) திண்டுக்கல் நகரத்துக்கு இரண்டு வெவ்வேறு கம்பித் தொடர் வழியாக மின்சாரம் பெறப்படுகிறது. ஆயினும் மின்னூட்டிகளில் ஏற்பட்ட மின்சுமை நிறைவின் காரணமாக திண்டுக்கல் மற்றும் உள்ளிட்ட தமிழ்நாடு எங்கிலும் மின்சார அளிப்பில் தடை ஏற்பட்டு வந்துள்ளது.

(ஆ) 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் முதல் மின்சார விநியோகத்தில் மேலும் கூடுதல் மின்வெட்டை அரசு அமுல்படுத்தியுள்ளபடியால் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட கால அட்டவணைப்படி மின்சுமை குறைப்பு செய்யப்படுகிறது. இந்த கூடுதல் கட்டுப்பாடுகளை அனுசரிப்பதினாலும், அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அளவைப் பெருக்குவதின் வாயிலாகவும் மின் விநியோகம் தற்போது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள மின்சார நெருக்கடியிலே அரசு விதித்திருக்கிற அந்தக் கட்டுப்பாடுகளை எந்த அளவிற்கு எடுக்க முடியுமோ அந்த அளவிற்கு எடுத்து, முழுவதுமே மேற்கொண்டு மின்வெட்டு இல்லாமல் தடுத்துவிடலாம் அல்லவா ? அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் எங்கள் முயற்சி.

## திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோவிலில் திரைப்படம் எடுக்க உரிமை வழங்கல்.

*வினா எண் 1007—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 முதல் 1979 முடிய எந்த எந்த நிறுவனங்களுக்குத் திரைப்படம் எடுப்பதற்கு உரிமம் கொடுக்கப்பட்டது?

(ஆ) மேற்படி உரிமம் கொடுக்கப்பட்டதின் பேரில் எவ்வளவு வருமானம் கிடைத்தது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு முடிய கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு திரைப்படம் எடுக்க உரிமம் கொடுக்கப்பட்டது: —

(1) திருவாளர் சுப்பு புரொடக்‌ஷன்ஸ், சென்னை-18.

(2) திருவாளர் வி. ஆர். சினி கிரியேஷன்ஸ், சென்னை-28.

(3) திருவாளர் குமாரசாமி அண்டு கோ, திருவனந்தபுரம்.

(4) திருவாளர் அருள்வேல் கம்பைன்ஸ், மதுரை.

(ஆ) அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு முடிய படப்பிடிப்பிற்காக பல நிறுவனங்களிடமிருந்து கட்டணமாக கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ. 2,250.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் படம் பிடிப்பதற்காக அனுமதிக்கப்படும்போது, இன்னும் அதிகமாகக் கட்டணத்தை வசூல் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? பக்தி படங்களுக்கு மட்டுமே படப்பிடிப்பு கோயிலுக்குள் நடத்த அரசு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஏற்கனவே அதிகமாக இருந்த கட்டணத்தை திரைப்படத் துறையினுடைய வளர்ச்சி கருதி இப்படிப்பட்ட முக்கியமான கலைச்சிற்பங்கள் மிக்க ஆலயங்கள், எழில் மிக்க இயற்கை வளமுள்ள காட்சிகள் திரைப்படங்கள் மூலம் எடுத்துப் பிரசாரம் ஆகவேண்டும் என்று கருதியும் திரைப்படத் துறைக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்ற எண்ணத்திலும் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. குறிப்பாக பக்திப் படங்களைத்தான் கோவில்களில் எடுக்கிறார்கள். அது தவிர வேறு படங்களுக்கு அவசியமானால் கோவில் காட்சிகள் வருகிற போது அந்தக் கோவில்களைப் பயன்படுத்துகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி விசாகம் நடக்கிறது. அதைச் செய்தித்துறை மூலம் படம் எடுத்து தமிழ்நாடு முழுவதும் போட்டுக் காட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சமய நிகழ்ச்சிகளை அல்லது அதுசம்பந்தப்பட்ட விழாக்களை தமிழ்நாடு அரசு மூலம் செய்திப் படம் எடுக்கிற கொள்கை கிடையாது. ஆகவே, அதை அறநிலையத்துறை விரும்பினால் அவர்கள் தனியாக எடுத்து அதை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. கோவைத்தம்பி : ஆண்டவன் சன்னிதானத்தை திரைப்படம் எடுக்க வசூலிக்கும் கட்டணங்கள் மூலம் தமிழ்நாட்டில் அதிகத் தொகை வசூலாகியிருப்பதாக அமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் கோவில்பற்றிக் குறிப்பிட்டுக் கூறியதிலிருந்து தெரிகிறது. ஆகவே, இன்று இந்தத் துறை மூலம் இதிலிருந்து கிடைக்கிற பணத்தை நடிகர்களாக இருந்து வறுமையில் வாடுகிறவர்களுக்குச் சலுகைகள் அளிக்கக்கூடிய வகையில் அல்லது அவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக இந்தப் பணத்தை அரசு அறநிலையத் துறையிலிருந்து பயன்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதிகமான வசூல் கிடைக்கவில்லை என்பதை இந்த ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 2,250 தான் கிடைத்திருக்கிறது என்ற புள்ளிவிவரமே கூறும். சில படங்களை சில குறிப்பிட்ட எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டுகூட சில கோவில்களில் போய் படம் எடுக்கிறார்கள். அந்தக் கோவில்களுக்குச் சென்று நம்பிக்கையோடு படம் எடுத்தால் அது நன்றாக ஓடும் என்ற நம்பிக்கையில் எடுக்கிறார்கள். அப்படிப் போகிற கோவில்களாக சில கோவில்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள், அதில் ஒன்றுதான் திருச்செந்தூர் கோவில்.

திரு. உ. சுப்பிரமணியன் : கோவில்களில் திரைப்படங்கள் எடுக்கும்போது மூலஸ்தானத்தில் படம் எடுக்க அனுமதிக்கப் படுகிறதா? அப்படி அந்த 'ஸாங்கடம் ஸாங்க்டோரம்' என்று சொல்லக்கூடிய அந்த வழிபாடு செய்கிற ஸ்தலத்தின் புனிதத் தன்மை குறையாமல் இருக்க அது தடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆலயங்களில் திரைப் படங்கள் எடுக்கிறபோது சில கண்டிப்பான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

கோவில் உட்பிரகாரத்திலோ அல்லது கர்ப்பகிரகத்திற்குள் இருக்குமிடம், மூலவர் மற்றும் உத்ஸவர் விக்ரகங்களை படமெடுத்தல் கூடாது.

கோவிலில் உட்பிரகாரத்திற்குள் நடைபெறும் சடங்குகள், மடாதிபதிகள் தியானங்கள் மற்றும் வழிபாடுகள் இவற்றினையும் படம் பிடித்தல் கூடாது.

கோவில்களில் தெய்வீக வழிபாடு மற்றும் கோட்பாடுகள் இவற்றிற்குத் தகுந்த மரியாதை கொடுக்கப்பட வேண்டும். இந்துக்கள் அல்லாதவர்கள் கோவில் உட்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்ற கண்டிப்பான நிபந்தனைகள் மீதுதான் அனுமதி அளிக்கப்படுகிறது.

### தர்மபுரி நகரிலுள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி

*வினா எண் 1009—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தர்மபுரி நகரில் குமாரசுவாமி பேட்டையில் உள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் இராஜ கோபுரம், பின்கோபுரம் ஆகியவைகளை ஆலய நிதியினைக் கொண்டு திருப்பணி செய்ய ரூ. 45,000-க்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளிட்ட குறிப்பில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு அதே தொகைக்கு மதிப்பீடு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளைய குறிப்பில் அங்கீகரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



திரு. எஸ். அரங்கநாதன் : தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருப்பணிக்காக ரூ. 45,000 ஒதுக்கியும், அதற்கு வேண்டிய செயல் திட்டங்களை உருவாக்கியும் தந்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதேபோல் தர்மபுரி மாவட்டத்திலுள்ள இந்த சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மிகவும் புகழ்பெற்ற கோவிலாக இருப்பதால் என்னென்ன வகையில் இதை அபிவிருத்தி செய்யவும் அல்லது வெளியே இருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை அல்லது பக்தர்களை ஈர்த்து அவர்கள் வந்துகளிக்கக்கூடிய வகையில் என்னென்ன முயற்சிகளை அரசு மேற்கொள்ளயிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருப்பணி பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்பினால் தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

### திருமங்கலம் தொகுதியில் கிழவனேரி—நெடுங்குளம் ஆகிய ஊர்களை இணைக்கும் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 776—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்களுக்குச் செல்வதற்கு ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(குறிப்புகள் 9-10)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருபோக்காக வினாவிற்கு இடமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்கள் திருமங்கலம் தொகுதியில் இருக்கின்றன. மழைக் காலங்களில் விவசாயப் பெருமக்கள், பெண்டிர் நோயாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோர் மருத்துவ வசதி பெறுவதற்கு இயலாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அரசு இதற்கு

7 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்த 6 மாதங்களுக்கு 7 கோடியே 40 இலட்சம் ஒதுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மக்கள் குழு என்ற பெயரால் கண்காணிக்க வேண்டியதில்லை. அதற்குக் காரணம் மாநில அளவிலே தமிழக முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு இருக்கிறது. மாவட்ட அளவிலும் ஒரு குழு இருக்கிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆகவே மக்கள் குழு இதைத் தனியாக கண்காணிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 73 ஆயிரம் டன் என்பது 27 ஆயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டு, கடைசியாக இப்போது எவ்வளவாக இருக்கிறது என்பதே தெரியவில்லை. இது அதிகபட்சமாக எவ்வளவு மத்திய அரசால் குறைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் நியாயமான விவசாய கூலி கிடைக்க உத்தரவாதம் செய்கிற முறையிலே, விவசாயத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெறுகிற வகையிலே, சிறப்பான முறையில் அமல்படுத்துவதற்குத் இத்திட்டம் பயன்படுகிறது. ஆகவே கிராமங்களில் நிலச்சுவான்தாரர்கள் விவசாயக் கூலி அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, நிலச்சுவான்தார்கள் தூண்டுதலினால் இப்படிப்பட்ட தடை ஏற்பட்டிருக்கிறதா என்பதையும், அதைப்போலவே ஏற்கனவே ஒவ்வொரு வேலையிலும் எந்தெந்த வேலைகள் எடுக்கப்படவேண்டும், அதை முழுமையாக லஞ்ச லாவண்யம் இல்லாமல் கவனிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்களில் குறைந்தபட்ச அதிகாரங்கள் இருந்தால்தான் முழுமையாக ஏற்படுத்துவதற்கு ஒரு ஏற்பாடு இருக்கும். வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரை கூட இன்றைக்கு அவை சரியாக இல்லை. (பணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை பல்வேறு பணிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகத்தான் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் குழு இருக்கிறது. அந்த மக்கள் குழு சிறந்த ஆலோசனைகளை எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி அதின் மூலமாக நடைபெறுகின்ற காரணத்தால் தேசிய வேலை வாய்ப்புத் திட்டங்களைத் தனியாகக் கண்காணிக்க வேண்டிய



அவசியம் இல்லையென்று எடுத்துச் சொன்னேன். தவறுகள் நடக்குமானால் சுட்டிக் காட்டப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு இன்னும் அதிகமாக இந்த ஆண்டிலே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக இந்த ஆண்டு மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? புனிதராம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே, இந்தப் பணியில் காண்ட்ராக்ட் முறையை இந்த அரசு தவிர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல மத்திய அரசின் மூலமாக முதல் ஆறு மாதங்களுக்கு 7 கோடியே 40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆறு மாதங்களுக்கு 7 கோடியே 40 இலட்சம், ஆக ஏறத்தாழ 15 கோடி ரூபாய் மத்திய அரசு தேசிய கிராமப்புற வேலைத் திட்டங்களுக்காகக் கொடுக்கிறது. ஆகவே 50 பெர்சென்ட். இது 15 கோடி ரூபாய். இன்னொரு 50 சதவீதம் 15 கோடி ரூபாய் மாநில அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே 30 கோடி ரூபாய் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக இந்த ஆண்டு நாம் செலவு செய்யவிருக்கிறோம். இதிலே 'காண்ட்ராக்ட்' முறையைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டுமென்றுதான் ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. காண்ட்ராக்ட் முறை கிடையாது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உணவிற்கு வேலைத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்குப் போதுமான அரிசி 'ஸ்டாக்' இல்லையென்று சொல்லி, மத்திய அரசு அரிசி உபயோகிக்கிற மாநிலங்களான தமிழகம், மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கு அரிசி வழங்குவதை நிறுத்தியிருக்கிறது. கோதுமை உபயோகிக்கின்ற மாநிலங்களில் முழுமையாக இந்த மானியம் கோதுமையாக அளிக்கப்படுகிறது. அரிசி இல்லையென்றாலும் பரவாயில்லை. கோதுமையாவது கொடுங்கள் என்று கூறி பெற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை அரிசி தான் முக்கிய தேவையாக இருக்கிறது. ஆகவே அரிசி ஒரு லட்சம் டன் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்குப் பதிலாக பணமாகக் கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லி, பணம் கொடுக்க

[1981 மே 7

ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். கொடுக்கப்படக் கூடிய தொகையினை ஏறத்தாழ ஏழு ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி இருக்கிறோம். ஆகவே ஏழு ரூபாய் கொடுப்பதன் மூலமாக அங்கே வேலை செய்கிறவர்களுக்கு ஒரு வகையில் கட்டுப்படியாகும் என்று நினைக்கிறேன். முதலிலே கொடுத்ததைக் காட்டிலும், இந்த ஆண்டு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே அதிகமாக கோதுமை வேண்டுமென்று நாம் கேட்டாலும் கூட பணமாகத்தான் கொடுப்போமென்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே இதைக் கூட பரிசீலனை செய்யலாம்.

[முற்பகல் 9-20]

**திரு. ராஜ்குமார் விஜயேந்திரத் தொண்டைமான் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்படவில்லை. ஒரு சில மாவட்டங்களில் சில யூனியன்களில்தான் நடைபெறுகிறது. சில யூனியன்களிலே நிறுத்தி வைத்திருக்கிறார்கள், பின்தங்கிய மாவட்டங்களிலே நிறுத்திவைக்கப்படுகிற காரணத்தினால் இப்போதைய வறவுட் சமயத்தில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு பின்தங்கிய மாவட்டங்களிலே அதை நிறுத்தாமல் எல்லா யூனியன்களிலும் அந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. எந்த மாவட்டத்தில் அது இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு கோடிட்டுச் சொன்னால் அவையெல்லாம் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** துணைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 15 கோடி ரூபாய் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள், அதோடு மாநில அரசும் சேர்ந்து போட்டு மொத்தம் 30 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. மத்திய அரசு கொடுக்கிற நிதியை அரிசியாக வாங்கியாவது கிராம மக்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா? அதைத் தவிர, ஒரு குறிப்பிட்ட காண்ட்ராக்டரிடம் வேலை கொடுக்கப்படுகிறபோது அவர் வேறு பகுதியிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து செய்வதன்மூலம் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே எந்தப் பகுதியிலே வேலை மேற்கொள்ளப்படுகிறதோ அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கே வேலையைக் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?



1981 மே 7]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தத் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அரிசியும் பணமும் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே முதலிலே அமலாக்கப்பட்டது. இப்போது மத்திய அரசு அரிசி இல்லை என்று சொல்கிற காரணத்தினால் அதைப் பணமாகப் கொடுத்துவிடலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. முதலிலே நாம் இரண்டு கிலோ அரிசியும், ஒரு கிலோ அரிசிக்கான பணத்தையும் சேர்த்து கொடுத்தோம். ஆனால் மினிமம் வேஜ் என்று சொல்லப்படுகிற குறைந்தபட்சக் கூலியைக் கூட அது எட்டவில்லை என்ற காரணத்தினால் ஏழு ரூபாய் என்ற அளவிலே பணமாகக் கொடுக்கலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் காண்ட்ராக்ட்கள் தவிர்க்கப்படவேண்டுமென்றுதான் ஆணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பகுதியிலேயும் காண்ட்ராக்ட் முறையில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவலைக் கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். எந்தப் பகுதியிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதோ அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று ஆணையர்கள், கோட்டாட்சி அலுவலர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படி இல்லையென்று சொன்னால் அதுபோன்ற தகவலை என்னிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 4 கிலோ அரிசி அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது 2 கிலோ அரிசியும் ஒரு கிலோ அரிசிக்கான பணமும் கொடுக்கப்படவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு நான்கு கிலோ அரிசி கொடுக்காமல் இரண்டு கிலோ அரிசியும் ஒரு கிலோ அரிசிக்கான பணமும் சேர்த்துக் கொடுக்கப்படுவதால் அந்த வேலை செய்கிற மக்கள் வறுமையில் வாடுகிற மக்கள் அதை நிராகரித்திருக்கிறார்கள். அதைப் பற்றிய தகவல் அரசுக்கு வந்துள்ளதா? அது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒரு நாளைக்கு எவ்வளவு வேலையை ஒருவர் செய்கிறார் என்ற கணக்கையும் பார்த்துத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. குறைந்தபட்சம் எவ்வளவு வேலை என்ற மெஷர்மெண்ட், அளவு எல்லாம் வைத்துத்தான் அவை கொடுக்கப்படுகிறது. ஒருவர் அதிகமான வேலை செய்தால் அதிகமான கூலி கொடுக்கப்படுகிற நிலையும் இருந்து வருகிறது. இரண்டு கிலோ அரிசியும் ஒரு கிலோ அரிசிக்கான பணமும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் ஒரு கிலோ

அரிசி ரூ 1.50 என்ற விகிதத்தில் 3 கிலோ அரிசிக்கு 4.50 ரூபாய் என்று கணக்குப்போட்டு 4½ ரூபாய் கூலி கொடுத்தால் அந்த அடிப்படையிலே கூலிக்கு ஆட்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே 7 ரூபாய் பணமாகக் கொடுத்துவிட்டால் ஆட்கள் அதிகமாகக் கிடைக்கும் என்ற சூழ்நிலையில் இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து இந்த ஆண்டிலிருந்து அமல் செய்ய அரசு இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மக்கள் குழு யூனியன்களில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் யூனியன்களிலே வேலை செய்யாமலேயே கணக்கை எழுதிவைத்திருக்கிறார்கள் என்று மக்கள் குழுவே அரசுக்குத் தகவல் தெரிவித்தது உண்மையா? அப்படியானால் அந்தப் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே. பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு புகார்கள் வந்திருக்கின்றன. அந்தப் புகார்களின் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. "மக்கள் குழுக்கள்" அங்கே சிறந்த ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டும். அந்த ஆலோசனைகளின் அடிப்படையில்தான் அங்கிருக்கக்கூடிய ஆணையாளர்கள், கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட புகார்கள் வந்தால் கண்டிப்பாக நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**திரு. எ. உமாநாத்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நாம் இங்கே நோக்கத்திற்குப் பதிலாக அரிசியாகவே வேண்டுமென்று விவாதித்துக் கொண்டிருக்கும்பொழுதே, சமீபத்தில் நாடாளுமன்றத்தில் நடந்திருக்கக்கூடிய விவாதத்திலிருந்தும், press d sp tche-லிருந்தும் வேலைக்கு உணவுத் திட்டத்தையே கம்ப்ளீட்டாகக் கைவிடும் திட்டம் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையில் இருப்பது Parliament discussion-ல் தெரிய வந்தது. அப்படிக் கைவிடுவதாக இருந்தால் தனால் நாம் சீரியசாகப் பாதிக்கப்படுவோம். ஆகவே, அதைப்பற்றி ஏதாவது அறிகுறிகள் நம்முடைய மாநில சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா? கிடைக்கவில்லை என்றாலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும் தொடர வேண்டுமென்று வற்புறுத்தி மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதற்கு மாநில அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, இதுவரையிலும் நம்முடைய மாநில அரசைப் பொறுத்த வரையில் மைய அரசிடத்திலேயிருந்து இந்தத் திட்டத்தைக் கைவிடுவதாக நமக்குத் தகவல் இல்லை. ஆனாலும் நாம் கொடுக்கக்கூடிய மானியத்தையும் கூட, ஏற்கனவே 1979–80, 1980–81-லே



எப்படி மானியம் நூற்றுக்கு நூறு சதவீதம் மானியமாகக் கொடுத்து வந்தார்களோ அப்படியே கொடுக்க வேண்டுமென்று தான் நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். முதலிலே இருந்ததை Central Sector Schemes என்கின்ற அளவிலே இருந்ததை இப்பொழுது Centrally Sponsored schemes என்று மாற்றியிருக்கிறார்களே அதுவும் கூட மாற்றப்படக்கூடாது. Central Sector Schemes ஆகத்தான் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும்கூட நாம் கேட்டு கொண்டிருக்கிறோம்.

## குழித்துறை நகரில் பேருந்து நிலையம் கட்டும்பணி

*வினா எண். 778— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

வேடசந்தூர் தாலுகா, குஜிலியம்பாறை நகரில் பேருந்து நிலையம் கட்டுவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்தப் பேருந்து நிலையம் கட்ட ரூ 1 இலட்சத்திற்கான மதிப்பீடு 1976-ல் தயாரிக்கப்பட்டது. 1979-ல் நெடுஞ்சாலை மேற்பார்வைப் பொறியாளர் அங்கீகாரம் அளித்தபோது மதிப்பீட்டுத் தொகையை ரூ. 1·25 இலட்சமாகத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பேரூராட்சியின் அனுமதி 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதியில் அளிக்கப்பட்டது. இந்த வேலை ஆரம்பித்து இப்போது நடந்து வருகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குஜிலியம்பாறை நகரில் பேருந்து நிலையம் அமைக்கின்ற பணி பல ஆண்டுகளாகக் காலதாமதம் ஆகிக்கொண்டே வருகிறது. பல்வேறு கட்டங்களில் அதிகாரிகள் உறுதிமொழி அளித்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவில் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் இந்தப் பணி முடிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் இதை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட பதிலிலும்கூட 31–3–1981-க்குள் வேலையை முடிப்பதாகத்தான் தெரிவித்திருந்தார்கள். ஆகவே, 31—3—1981 முடிந்து, 30—4—1981 முடிந்து, இப்பொழுது

5-வது மாதத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எவ்வளவு சீக்கிரமாக அந்த வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக, அதிலும் குறிப்பாக இன்னும் இரண்டு மாதங்களில்—நான் இந்த மன்றத்திலேயே உறுதி அளிக்கிறேன். இன்னும் இரண்டு மாதங்களில் அந்த வேலை கண்டிப்பாக முடிக்கப்படும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பாகப் பேரூராட்சிகளில் கட்டப்படுகின்ற இந்தப் பேருந்து நிலையங்களில் கடைகளுக்கான வசதியில்லாத காரணத்தினால் பயணிகள் தங்குவதற்குக் கட்டப்படும் இடங்களிலேயே வியாபாரம் செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தில் கடைகள் கட்டுவதற்கும் திட்ட மதிப்பீடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் கடைகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பேருந்து நிலையங்கள் கட்டப்படுகின்ற நேரத்தில் வருமானத்தின் அடிப்படையிலேயும் கூட பேருந்து நிலையங்களில் கடைகள் சேர்த்துக் கட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தைத் தான் நாம் இப்பொழுது அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திலேயும் கூட கடைகள் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### சிவகாசி—விருதுநகர் சாலையினைச் செப்பனிடும் பணி

*வினா எண். 779—**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சிவகாசி விருதுநகர் சாலையை செப்பனிட இந்த நிதியாண்டில் 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப் படாததின் காரணம் என்ன?

(இ) அந்தச் சாலையில் விரைவாகப் பாலம் ஒன்று கட்டித் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) (ஆ) மற்றும் (இ) சிவகாசி-விருதுநகர் சாலையை ரூ. 14.00 இலட்சம் செலவில் செப்பனிட அரசு ஆணை எண். 150 நாள் 5—2—1981ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் பாலம் கட்டுவதற்கான ஆணை அடுத்த நிதியாண்டில் பிறப்பிக்கப்படும்.





### நெருப்பூர் கிராம குடிநீர் தேக்கத் தொட்டி

*வினா எண். 899—**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னகரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெருப்பூர் கிராமத்தில் குடிநீர் தேக்க தொட்டியின் வேலை பாதியில் நிறுத்தப்பட்டதின் காரணம் என்ன?

(ஆ) அது எப்போது முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) பொன்னகரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெருப்பூர் கிராமத்தில் ஏற்படுத்தப் பட்ட குடிநீர் தேக்க தொட்டியின் வேலை பாதியில் நிறுத்தப் படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[முற்பகல் 9-30]

**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வேலை துவக்கப்பட்டு ஏறத்தாழ 7, 8 ஆண்டுகள் ஆகியும் முடிக்கப்படாமல் இருக்கிறது. வேலை நிறுத்தப்படவில்லையென்று அமைச்சர் தகவல் கொடுக்கிறார். வேலை நிறுத்தப்படவில்லை என்று சொன்னால், தண்ணீர் சப்ளை கொடுக்கின்ற அளவு வேலை முடிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய இன்ஜினியர் எந்தக் காரணத்தினால் வேலையை நிறுத்தியிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, நீர்த் தேக்கத் தொட்டியினுடைய வேலை எல்லாம் கடந்த 9—4—1979-லேயே முடிந்து விட்டது. ஆனால், கிணற்றிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீரைத் தள்ளக்கூடிய சக்தி இல்லாததால், தண்ணீரைக் கொண்டு செல்ல, பி.வி.சி. பைப் அழுத்தம் தாங்காமல் இருந்த காரணத்தால், ஜி. 3 பைப் போட வேண்டுமென்று நாம் கேட்டிருந்தோம். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. சீக்கிரத்திலே முடிக்கப்படும்.

**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டும் அவர்கள் பொறுப்பாக இல்லாத காரணத்தால், அரசுக்கு அவப்பெயர் ஏற்படுகின்ற வகையிலே, அங்கே செயல்பட்டு வருகிறார்

கள். அதே போல் பல பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 7, 8, ஆண்டுகள் ஆகியும் அரசிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் காண்ட்ராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றியது. ஆகவே, நீர்த்தேக்கத் தொட்டியைப் பொறுத்த அளவில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே பதில் இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## இராமநாதபுரத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு ஜெனரேட்டர் வாங்கும் திட்டம்

• வினா எண். 1010— திரு. த. இராமசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 'ஜெனரேட்டர்' வாங்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம். இராமநாதபுரம் அரசு தலைமையிட மருத்துவ மனைக்கு மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் (ஜெனரேட்டர்) வாங்கி நிறுவுவதற்கான ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனையில் தினமும் பல அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அப்பொழுது மின்சாரம் தடைபட்டால் ஆப்பரேஷன் நோயாளிகளுடைய நிலை என்ன என்பதை உணர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்களைப் பொருத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அரசு மாவட்ட மருத்துவமனையிலும் ஜெனரேட்டர் வைக்கப்பட வேண்டுமென்று நாம் உத்தரவிட்டிருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளே எல்லாத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஜெனரேட்டர் இருக்கும் என்பதை இங்கே நான் உறுதியாகச் சொல்லி விடுகிறேன்.





திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் இரண்டு மாதங்களுக்குள் ஜெனரேட்டர் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இன்றிருக்கிற நிலையிலே எங்கு பார்த்தாலும் கரன்ட் கட். ஆப்பரேஷன் செய்யக் கூடிய நேரத்திலே கரன்ட் ஃபெயிலியூர் ஆகிவிடுவதன் காரணமாக, ஆப்பரேஷன் தியேட்டரிலே ஆப்பரேஷன் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இதையெல்லாம் ஒழுங்குபடுத்தும் முறையிலே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு உடனடியாக ஜெனரேட்டர் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலேயிருக்கிற முகவை மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே ஜெனரேட்டர் நிறுவ G. O. Ms. No. 290, Health, dated 26th February 1981,ல் அதற்கான ஆணையை நாம் பிறப்பித்திருக்கிறோம். ஜெனரேட்டரினுடைய டோட்டல் காஸ்ட் ரூபாய் 3 இலட்சமாகும். இன்னும் சில நாட்களுக்குள்ளே அது இயங்க ஆரம்பித்துவிடும். ஆகவே, எந்தப் பிரச்னையும் மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்கள் வைப்பது அறிந்து மகிழ்ச்சி. அதே போல், இப்பொழுது மின் வெட்டு சர்வ சாதாரணமாக இருக்கிற காரணத்தால், தாலுகா மருத்துவ மனைகளிலும் அதைப் போன்ற வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 120 தாலுகா மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஒரு ஜெனரேட்டரினுடைய விலை இப்பொழுதே ரூபாய் 3 இலட்சமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஜெனரேட்டர் வாங்கி வைத்த பிறகு அதற்கு டீசல் எல்லாம் தேவைப்படுகிறது. ஆகவே, அதையெல்லாம், மனதிலே கொண்டு ''வையா மீடியம் பாலிசி''யாக, எந்த அளவு நிதிநிலை இடம் கொடுக்கிறதோ, அந்த வகையில், படிப்படியாக- ஃபேஸ்ட் ப்ரொகிராமாக நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவ மனை இராமநாதபுரம் நகரத்தில் இருக்கிறது. அங்கே ஜெனரேட்டர் மற்றும் பிற கருவிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால்,

மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது என்றால் அதிக தொலைவு இருப்பதால் அது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே, மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இத்தகைய ஜெனரேட்டர் போன்ற வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே- மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு,மூன்று பெரிய மருத்துவ மனைகள் —குறிப்பாக—விருதுநகர்- சாத்தூர்—சிவகாசி—போன்ற இடங்களில் இருக்கின்றன. அந்த மருத்துவ மனைகளில் எந்த மருத்துவ மனையில் இத்தகைய வசதிகளைக் கொண்டு வரலாம் என்பதை ஆராய்ந்து- அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அரசு தயாராக இருக்கும்.

## தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் மருத்துவ நிலையம் துவங்கும் திட்டம்

*வினா எண். 1011—திரு: எம்: எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் அரசு மருத்துவ நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கக்கூடிய கிராமப் பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமிருந்தும் ஏற்கனவே உறுதியளித்த நன்கொடைத் தொகை அரசுக்கணக்கில் செலுத்தவில்லை. ஆகவே அரசு மருந்தகம் இன்னும் திறக்கப்படவில்லை.

திரு. எம். எஸ் மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து அதற்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூபாய் 1 இலட்சத்தைச் செலுத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தொகையை அனுப்ப முடிவு எடுத்து விட்டார்கள். எனவே, அந்த மருந்தகத்தை விரைவில் துவங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம் ரூபாய் 30,000 செலுத்த வேண்டும். பொதுமக்கள் ரூபாய் 10,000 செலுத்த வேண்டும். இரண்டு வருஷங்களுக்கான பராமரிப்புச்



செலவுத் தொகையும் ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே ஊராட்சி ஒன்றியம் 1 இலட்ச ரூபாய் செலுத்துமானால். இவைகளை யெல்லாம் அதற்குள்ளே அடங்கிவிடும். அப்படி நிதியைச் செலுத்துகின்ற நிலைமை நிச்சயமாக உருவாக்கப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் நிச்சயமாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. தலைஞாயிறு ஒன்றியத்தில் மருத்துவ மனை ஆரம்பிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். தலைஞாயிறு பகுதியில் வாழ்கிற மக்கள் மிகவும் பிற்பட்டவருப்பைச் சேர்ந்தவர்கள். அந்தப் பகுதி கடலோரப்பகுதியாக இருப்பதால் அங்கே வாழ்கிற மக்கள் பெரும்பாலானவர்கள் ஏழை எளியவர்களாக இருக்கிறார்கள். அந்த மக்கள் இந்தத் தொகையைச் செலுத்தினால் தான் இந்த மருத்துவ மனை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னால், அது இந்த ஆண்டில் முடியாது. காரணம். அவர்களுக்குச் செலுத்துவதற்கு அத்தகைய வசதி இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு இந்த நிலையை ஏற்று பெரும்பகுதி பணத்தை அரசுப் பொறுப்பில் போட்டு, அந்த மக்களின் நன்மையைக் கருதி அரசு மருத்துவ மனயை அங்கே விரைவில் ஏற்படுத்தித் தருவதற்கு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட பகுதியில் மருத்துவ மனை ஆரம்பிப்பதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். அந்த ஒன்றிய மக்கள் அந்தப் பணத்தைக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதை நாம் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் அதைச் செலுத்த முன்வரவில்லை என்றால், பார்த்துக்கொள்ளலாம். எப் பாதே அவர்கள் கொடுக்க முடியாது என்று நாம் கருதிவிடக் கூடாது. முடிந்த வரை முயற்சித்துப் பார்ப்போம். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்கு பிற்படுத்தப் பட்ட பகுதிகளுக்கு உதவி செய்ய முடியுமோ அவற்றைச் செய்து வருகிறது. அதையெல்லாம் தனியாக கவனம் செலுத்தி கவனித்துக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் அந்தக் காரியங்கள் செய்யப்படும். இந்த இடத்தைப் பொறுத்த வரையில், பணம் செலுத்துவதாகச் சொல்லி இருப்பதால், அதை எதிர் பார்த்து இருக்கிறோம். எந்த அளவிற்குப் பணம் வருகிறதோ அந்த அளவிற்கு அரசுக்கு லோட் குறையும். ஆகவே அந்த வகையில் இந்த உத்தரவைப் போட்டு இருக்கிறோம்.

[ 1981 மே 7]

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே. அந்த கிராமத்து மக்கள் பணம் செலுத்த முடியாது என்பதால்தான் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் இருந்து 50,000 ரூபாய் செலுத்துவது என்று தீர்மானம் போட்டு அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே விரைவில் அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவார்கள். அரசு உடனடியாக அந்த மருத்துவமனையை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, முன் வரும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான செவிலியர்கள் நியமனம்

*வினா எண். 1012—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு செவிலியர் (ஹெல்த்விசிட்டர்) தான் நியமிக்கப்பட்டுள்ளாரா ?

(ஆ) ஆம் எனில் அந்த எல்லையைக் கருத்தில் கொண்டு எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்பொழுது மாநிலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவைக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட சுகாதார மேற்பார்வையாளர்கள் (ஹெல்த் விசிட்டர்) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு சுகாதார மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, ஹெல்த் விசிட்டர்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவான பெரிய எல்லைக்குள்ளே இருக்கும்படியான ஒரு நிலையத்தில் பணிசெய்வதுஎன்று சொன்னால் அங்கேயும் ஒருவர் என்ற நிலை ஏற்பட்டால் வேலை சரிவர நடக்க முடியாது. ரொம்ப நெருக்கமான ஜனத்தொகை உள்ளபகுதிகளாக இருந்தால் அப்படிப்பட்ட பகுதிகளில் தூரம் குறைவாக இருக்கும். அங்கே ஜனத்தொகை கொண்டு நியமனம் செய்யலாம். ஆனால் எல்லை விரிவாக இருந்தால் அவர்களால் அந்தப் பணியை சரியாகச் செய்ய முடியாது. ஆகவே எல்லா இடங்களிலும் இந்த ஜனத்தொகை அடிப்படை மட்டுமே என்று வைத்துக்கொள்ளாமல், ஜனத்தொகை, இடத்தின் விஸ்தீரணம் ஆகிய இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த ஹெல்த் விசிட்டர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 மே 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி செவிலியர்களைப் பொறுத்து எழுந்ததல்ல ; ஹெல்த் விசிட்டர்ஸ் பற்றியது. இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒருவர் போதாது என்ற அடிப்படையில்தான் ஒரு நபருக்குமேல் இன்னொருவரையும் நியமித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அடிப்படையில் நியமித்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மொத்தமாக 842 பேர்களை நியமித்திருக்கிறோம்.

| (1) | Number of Health Visitors. (2) |
|---|---|
| Integrated Child Demonstration Centres in Madurai and Dharmapuri districts .. | 4 |
| Primary Health Centres .. .. .. .. | 383 |
| School Health Services Programme .. .. | 103 |
| D.P.T. Immunisation Programme .. .. | 150 |
| Health Unit area, Poonamallee .. — | 4 |
| Backward Area Scheme — — — | 19 |
| Multi Purpose Health Workers' Scheme — | 177 |
| Health Visitors' School, Madras .. .. | 2 |

இப்படி மொத்தம் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 842 ஹெல்த் விசிட்டர்களை நியமித்திருக்கிறோம்.

(முற்பகல் 9—40.)

திரு. கெ. செம்மலை : துணைத் தலைவரவர்களே, மருத்துவ வசதியைப் பெருக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சியின் காரணமாக இந்த ஆண்டு கூட கிட்டத்தட்ட 15 ஆரம்பச் சுகாதார நிலையங்களை அப்கிரேடு செய்வதாக அறிகிறேன். அப்படி அப்கிரேடு செய்யப்படும்போது ஆரம்பச் சுகாதார நிலையம் ஒவ்வொன்றுக்கும் எத்தனை ஹெல்த் விசிட்டர்ஸ் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, அப்கிரேடு செய்யப்பட இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் அங்கே ஹெல்த் விசிட்டர்ஸ் எண்ணிக்கையை உயர்த்துவதில்லை. அங்கு செவிலியர்களை நியமிக்கப்படுவார்கள். அப்கிரேடு செய்யப்படும்

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 20 படுக்கைகளை ஏற்படுத்த இருக்கிறோம். அப்கிரேடு செய்யும்போது தாலுகா மருத்துவ மனையில் என்ன என்ன வசதிகள் இருக்கிறதோ அதே அடிப்படையில் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் செய்ய இருக்கிறோம். அதைப் போல 'ஸ்டாப் பேட்டர்' னும் தாலுகா மருத்துவமனை அடிப்படையில் இருக்கும். ஆகவே, ஹெல்த் விசிட்டர்ஸ் பிரச்சினை அங்கே வராது. ஹெல்த் விசிட்டர் என்பது அந்த சென்டரிலிருந்து பல இடங்களுக்குச் சென்று விசிட் செய்து விட்டு வந்து, மருத்துவம் செய்ய நியமிக்கப்படுவது, ஆகவே, தரத்தை உயர்த்தும்போது அங்கே செவிலியர்களை நியமிக்க வேண்டிய பிரச்சினை வருமே தவிர ஹெல்த் விசிட்டர்களை அதிகரிக்கும் பிரச்சினை வராது.

**திரு. மி. வின்சென்ட் :** துணைத் தலைவர் அவர்களே. ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்துவதனால் மக்கள் அடையும் பலன்கள் என்னென்ன? மக்கள் நலனைக் கருதி அந்த எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவரவர்களே, மத்திய அரசின் கொள்கைப்படி 6 ஆவது ஐந்தாண்டு திட்டத்திலே ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்த மட்டில் இப்போது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 9 ஒன்றியங்களில் எக்ஸ்ட்ராவாக ஒன்று இருக்கிறது. சராசரியாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றியத்திற்கு ஒன்று என்பது போதாது என்ற எண்ணம் இப்போது அகில இந்தியாவிலும் இருக்கிறது. அதனுடைய அடிப்படையிலே படிப்படியாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு எண்ணியிருக்கிறது. அந்த யோசனையை நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒரு பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த இந்த ஆண்டு 15 ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஒன்றியத்திற்கு ஒன்றாக—கூடுதலாக ஒன்று—அமைக்க இருக்கிறோம்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவரவர்களே, இந்த ஹெல்த் விசிட்டர்களை அடிக்கடி இடம் மாற்றுகிறார்கள். உத்தியோகத்திற்கு வந்த குறுகிய காலத்திற்குள்ளாகவே ஒருவரை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுகிறார்கள். இந்த நடவடிக்கை மேலே இருக்கிற சில அதிகாரிகளின் தவறான போக்கினால் ஏற்படுகிறது. அவர்கள் தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, 3 ஆண்டு, 4 ஆண்டுக் காலத்திற்கு ஒரே இடத்தில் இருந்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் ஆரோக்கியத்தைப் பற்றி அந்த ஹெல்த் விசிட்டர் நன்றா



தெரிந்துக் கொள்வார்கள். மக்களோடு நெருங்கிய பழக்கம் ஏற்படும், அதற்கு ஏற்ற முறையில் மருத்துவ வசதி அளிக்க வசதியாக இருக்கும். ஆகவே, அவர்களை ஒரு குறிப்பிட்டகாலத்திற்காவது ஒரே இடத்தில் இருக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுகாதார மேற்பார்வையாளர்கள் என்ற இந்த ஹெல்த் விசிட்டர்ஸைப் பொறுத்தவரையிலே பல இடங்களிலே 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கூட தொடர்ந்து ஒரே இடத்திலே பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒரு சில இடங்களில் மட்டும் தான் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரீசனுக்காக அதாவது நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கவேண்டுமே என்பதற்காக 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் ஒரு இடத்திலே பணியாற்றியவர்கள் சிலரை மாற்றி இருக்கிறோம். எல்லா இடங்களிலும் இப்படி மாற்றுவதில்லை. ஒட்டு மொத்தமாக தமிழகம் பூராவும் பார்க்கின்றபோது பல இடங்களிலே பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் ஒரே இடத்திலேயே இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மனதிலே ஏதோ ஒரு குறை இருக்கின்றது என்று நினைக்கிறேன். ஆகவே எங்கேயாவது தவறு நடந்திருக்கின்றது என்ற தகவல் அவருக்கு வந்திருக்குமேயானால் அதனை எனக்குத் தருவார்களானால் அது என்ன என்று ஆராய்ந்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே வேலை செய்யக்கூடிய கணவன்-மனைவியரை நீண்ட நாட்களாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகும் பிரித்து வைத்திருக்கிறார்கள், இராமநாதபுரத்திலே கணவனும், நெல்லையிலே மனைவியும் வேலை செய்கிறார்கள். இந்த நிலையினை மாற்றி கணவனும் மனைவியும் ஒரே இடத்திலே வேலை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, ஹெல்த் விசிட்டர்ஸைப் பொறுத்தவரையிலே ஒரு பிரச்சினை இருக்கின்றது. அதாவது, Qualitatively what type of primary health centre it is—என்பதைப் பார்த்து அதாவது இரண்டு ஹெல்த் விசிட்டர்ஸை வைத்துக் கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையமா என்பதைப் பார்க்க வேண்டி இருக்கின்றது. ஆகவே இரண்டுபேரை வைத்துக் கொள்ள முடியாத ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவர்கள் இருவரையும் ஒன்றாகக் கொண்டுவர முடியாது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சங்கடமும் ஏற்படுகிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த விவரத்தை கொடுத்தால் நான் பார்க்கிறேன்.

திரு. அ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, ஹெல்த் விசிட்டர்ஸ் எத்தனை ஆண்டுக்காலம் பயிற்சி பெறுகிறார்கள்? அவர்கள் பயிற்சி பெறுகின்ற தகுதியை வைத்து அவர்கள் எந்த அளவுக்கு மருத்துவத் துறையிலே பணியாற்ற முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, 1½ ஆண்டுகள் அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். சங்கரன்கோயில் பகுதியில் மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்கள் நிறைந்த பகுதியாக அது இருக்கின்றது. ஆகவே அங்கே ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்படி அத்தனை உறுப்பினர்களும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல முடியாது. ஆகவே இதற்கென்று ஒரு சில நார்ம்ஸ் வைத்திருக்கிறோம். அதாவது இத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே அதைச் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் இவ்வாறு கேட்டுக் கொண்டிருப்பது உசிதமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 1013—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் பல் மருத்துவர் (Dental Doctor) நீண்ட காலமாக நியமிக்கப்படாததற்கு என்ன காரணம்?

(ஆ) மேற்படி மருத்துவமனைக்கு மேலும் 100 படுக்கைகள் கொண்ட கட்டிடத்திற்கு அரசு அனுமதி வழங்கியது உண்மையா?

(இ) ஆம் எனில், நிறைவேற்றாததற்கு என்ன காரணம்?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே—

(அ) முதுகுளத்தூர் அரசு மருத்துவ மனையில் பல் மருத்துவராக இருந்தவர் மாற்றம் கோரி மாறியபின் இங்கு நியமிக்கப்பட்ட பல் மருத்துவர்கள் பணியில் அவர்கள் சேராததினால் இந்த இடம் காலியாக உள்ளது. தற்போது கே. வி. சௌந்தரராஜன் என்பவரை அங்கே நியமனம் செய்துள்ளது.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே தற்போது ஒரு பல் மருத்துவர் அங்கே நியமிக்கப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் விரைவிலே அங்கு சேர்ந்து பணி புரிவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இரண்டாவது கேள்விக்கு இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அங்கே 100 படுக்கைகளுக்கு மேற்பட்ட புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அது கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. அந்த பகுதி மிகவும் பின்தங்கிய மக்கள் நிறைந்த பகுதி. அங்கே நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் தரையிலே படுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கே மேற்கொண்டும் ஒரு கட்டிடம் கட்டுவதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்து நில ஆர்ஜிதம் செய்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்கிற புதிதான ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எனக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்காகத்தான் அந்த வேலைகள் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறதா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. நிறுத்தப்பட்டிருப்பதற்கான விவரம் என்ன என்று ஆராய்ந்து தான் பார்க்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காரணத்திற்காகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது வேறு எதாவது காரணங்களுக்காக நிறுத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேறு சாத்தியக் கூறுகளைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேட்பாரேயானால் அறிந்து பதில் சொல்லப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போடப்பட்டிருந்த திட்டம் எப்படி இருந்தாலும், இப்பொழுது அங்கே 100 படுக்கைகள் கொண்ட மருத்துமனை கட்டிடம் அவசியம் தேவை என்பதை அரசு உணர்ந்து, அதை நிறுவ ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், இதுபோன்ற கேள்விகளுக்கெல்லாம் நான் கேள்வி நேரத்துலே பதிலுரைக்க முடியாது என்று.

மேல் சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்,

*வினா எண். 1014—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்சித்தாமூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக புதிய கட்டிடம் கட்ட திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கான மருந்தகக் கட்டிடம் மட்டுமல்லாமல், பணியாளர் குடியிருப்பு இல்லங்கள் மற்றும் சுற்றுச் சுவர் அதாவது காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு அரசு ஆணை இடப்பட்டு, கட்டிட வேலைகள நடத்துக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல் சித்தாமூரில் புதுதாக மருத்துவ மனைக்கு கட்டிடம கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதேபோல எல்லா பிரதம சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடங்கள் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பார்ட் II ஸ்கீம், என்ற ஸ்கீமின் அடிப்படையில், 1979–80 ஆம் ஆண்டில் ஜீ.ஓ. எம். எஸ். நெ. 2159, 11—12—1979 ஆம் நாளன்று உத்தரவுகள் இடப்பட்டிருக்கின்றன. 20 பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குத்தான் இந்த உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்



கிறது என்று தகவல் என்னிடத்தில் இருக்கிறது. அந்த 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒன்று இந்த மேல் சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையமும் என்று குறிப்பிருக்கிறது. மற்ற 19 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்னென்ன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்காக மத்திய அரசு ஏதாவது நிதி உதவி அளிக்கிறதா? அப்படி அளிக்கிறது என்றால் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புவதோடு, இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் போதுமான அளவிற்கு மருந்துகள் இல்லை என்கிற குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா? இருக்கிற மருந்துகள் 2 மாதங்களுக்குக் கூட போதவில்லை என்கிற நிலைமை கிராமப்புறங்களில் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதனால் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு மருத்துவ வசதி வாய்ப்புகள் பெற வழி இல்லாமல் போயிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதே. நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கூட இது பற்றி பேசும்போது.... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மருத்துவ மானியத்தில் பேசிக் கொண்டிருக்கவில்லை. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு ரா. கிருஷ்ணன் : நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கூட பேடன்ட் ப்ரீ டிரீட்மெண்ட் என்ற முறையை எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி ஜெனிவாவில் பேசியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, நம்முடைய அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்னும் அதிகமான அளவு மருத்துவ உதவிகளைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் 2, 3 விஷயங்களை ஒன்றாகச் சேர்த்து பேசி கடைசியாக கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொருத்த வரையில் புதிதாக நாம் கட்டவிருக்கும் அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான செலவில்தான் பாதித் தொகையை அவர்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றும் உறுதியாக ஆணை மூலமாகக் கூட வரவில்லை. அது எந்த அளவிற்கு வரப் போகிறது என்று பார்க்க வேண்டும். பேமிலி பிளானிங்கைப் பொருத்தவரையில்தான் மத்திய அரசு நமக்கு மருத்துவத் துறை பொருத்தமட்டில் உதவி செய்து வருகிறார்கள்.

கிராமப்புறங்களில் நாம் இப்போது ஏற்படுத்தி வரும் மருத்துவ வசதிகளுக்குக் கூட அவர்கள் உதவி எதுவும் இல்லை. ஆகவே இதிலே நிதிநிலைமையைப் பார்த்துத்தான் நாம் ஒரு முடிவிற்கு வரவேண்டியதாக இருக்கிறது.

அடுத்து பேடண்ட் முறையைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி ஹாத்தி கமிஷன் ரிப்போர்ட்டிலேதான் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பேடண்ட் மெடிசின், பேடண்ட் நேம், பேடண்ட் ப்ரீ ட்ரீட்மெண்ட் போன்றவைகளைப் பற்றியெல்லாம் அந்த ஹாத்தி கமிஷன் ரிப்போர்ட்டில்தான் இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டும் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. ஆகவே அதைக் கொண்டுவரக்கூடிய நிலைமை மாநில அரசின் கையிலே இல்லை. மத்திய அரசாங்கத்தின் கையிலேதான் இருக்கிறது.

**திரு. தி. கா. நல்லப்பன்** : இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கு ஐந்து ஏக்கர் நிலமும் ரூ.10,000-மும் அந்தப் பகுதி மக்கள் கட்ட வேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது. விலை அதிகமாகப் போகக்கூடிய நிலங்கள் அல்லது வயல்காடுகள் இருக்கிற இடங்களில் ஐந்து ஏக்கர் வாங்குவது என்பது கடினமாக இருப்பதால் இடங்களைப் பரிசீலனை செய்து ஐந்து ஏக்கர் என்றிருப்பதைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : ஐந்து ஏக்கர்கள் இருந்தால்தான் ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல இது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த நிபந்தனை என்பது ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அல்ல. தனியாக ஒரு மருத்துமனை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்றால் அரசு சார்பாக, ஐந்து ஏக்கர் நிலம் வேண்டுமென்று இருக்கிறது. எந்த நேரத்திலும் அந்த மருத்துமனையை பெரிய மருத்துவமனையாக ஆக்குவதற்கான வசதிகள் இருக்க வேண்டும். ஒரு ஏக்கர் என்று எடுத்தால் பிறகு அதை மக்கள் கோரிக்கை அடிப்படையில் விரிவுபடுத்த முடியாமல் இன்னொரு இடத்திற்குப் போக வேண்டிவரும். ஆகவே ஆரம்பிப்பதை ஐந்து ஏக்கர் என்று ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறோம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற ஜொராணம்**: இந்த மேல் சித்தாமூர் ஆரம்பச் சுகாதார நிலையம் பற்றி அமைச்சர் அவர்கள் கூறும்போது பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பார்ட் 2 ஸ்கீம் என்றால் என்ன? பார்ட் 2 ஸ்கீம் 15 இடங்களில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த இடங்கள் எவை எவை என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : பார்ட் 2 ஸ்கீம் பற்றி விளக்கம் கொடுக்க நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்று தெரியும். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்** : வினா எண்கள் 1015, 1016, 1017, 1018, 1019 மாண்புமிகு போக்குவரத்துத் துறை, சமூகநலத் துறை அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர்................

MR. DEPUTY SPEAKER : No point of order during question hour.

**சிறுதொழில்களை மேம்படுத்துவதற்கான அரசின் திட்டம்.**

குறுகிய கால வினா எண் 15— திரு. மா. சின்னராசு: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களை மேம்படுத்த 'Centre for Appropriate Technology' ஏற்படுத்தும் அரசின் திட்டம் எந்த நிலையில் உள்ளது

(ஆ) எப்பொழுது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : (அ) மற்றும், (ஆ) தொழில் நுட்ப மையம் ஒன்று Centre for Appropriate Technology) அமைப்பதுபற்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டபின், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத் துணை வேந்தரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு பெறப்பட்டது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. செம்மலை** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தொழில் நுட்ப மையம் அமைக்கிற கருத்து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த தொழில் நுட்ப மையத்தைத் துவக்கும் நோக்கம் என்ன ? கொள்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

[1981 மே 7

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : துவக்கப்பட இருக்கிற தொழில் நுட்ப மையத்தினுடைய வாயிலாக தமிழ் நாட்டில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், இந்தியாவில் வெளிநாடுகளில் உள்ள விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி தற்போதுள்ள தொழில்களை மேம்படுத்தவும் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கும் தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தவும் தொழில் நுட்ப மையம் பயன்படும். அதுமட்டுமல்ல.

இந்த மையம் விஞ்ஞானிகளையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்டிருக்கும். மற்றும் தமிழக தொழில் வளர்ச்சியில் இம்மையம் புதிய தோற்றத்தை உருவாக்கும். இந்தத் தொழில் மையத்தின் நோக்கங்கள் ஆறு :

1. பரவலாக உள்ள 'பொருத்தமான தொழில் நுட்பம்' பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.

2. கற்பித்தல், பயிற்சி ஆகிய இரண்டிற்கும் வகுப்புகள் நடத்துதல்.

3. பல துறைகளிலும் மற்றும் ஆராய்ச்சி மையங்களிலும் பொருத்தமான தொழில் நுட்ப திட்டங்களை உருவாக்குதல்.

4. நிரந்தர மற்றும் நடமாடும் பொருட்காட்சிகளை ஏற்படுத்துதல் போன்ற விரிவான செயல்களை மேற்கொள்ளுதல்.

5. பயிற்சிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நிர்வாகம் மற்றும் நிதி உதவிக்கும் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி திட்டங்களை செயல்படுத்தும் இதர நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளுதல்.

6. தக்க ஆலோசனை கூறும் மையமாகப் பணியாற்றுதல்.

[முற்பகல் 10-00]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தொழில் நுட்ப மையம் தொடங்க அரசுக்கு எவ்வளவு நிதி ஆதாரம் செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தை மூன்று பகுதிகளாக நிறுவுவதற்கு தொடர், மற்றும் தொடரா செலவினமாக ஒரு இலட்சம் தேவைப்படுமென்று இன்றைய தினம்



1981 மே 7]

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதைத் தமிழக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் 'சென்டர் பார் அப்ரோப்ரியேட் டெக்னாலஜி' இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுதான் முதல்மையம். சிறுசிறு அளவிலே தனியார்கள் வைத்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்திலே அவர்களுக்காக இந்த மையத்தை வைத்திருக்கிறார்களே தவிர, இந்த அளவில் விரிந்த பரந்த சிறு தொழில்களுக்கு அதிக அளவிலே பயன்படுகின்ற அளவிற்கான முயற்சி இந்தியாவிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் முதல் முறையாக முயற்சி செய்யப்படுகிறது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாவட்ட தொழில் மையம் என்கின்ற முறையில் மாவட்டத்தினுடைய தலைநகரத்தில் இந்த தொழில் மையம் இப்போது இயங்கி வருகின்றது. அதுபோல, இந்த மையத்தை மாவட்ட ரீதியாக அந்தந்த தலைநகரத்தில் உருவாக்க, ஏற்படுத்த அரசு முனையுமா ? அல்லது நம்முடைய மாநிலத்தின் தலைநகரத்தில் மாத்திரம் இதை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஆராய்ச்சி நிறுவனம் ; ரிசர்ச் சென்டராக இருக்கின்ற காரணத்தினால், இது ஒரு இடத்தில்தான் நிறுவப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில்களை மேம்படுத்தும் ஆராய்ச்சி கூடத்தை தமிழகத்திலே எத்தனை இடங்களில் அமைச்சர் அவர்கள் நிறுவ இருக்கிறார்கள் என்பதையும், அதுவும் குறிப்பாக தொழிற்பேட்டையுள்ள இராணிப்பேட்டையில்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இதற்குப் பதில் சொல்லியாகி விட்டது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிறு தொழில்கள் சரியாக நடக்க முடியாமல், தொடர்ந்து நடக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் வாங்கக் கூடிய ரா-மெடீரியல் சரியான விலையில் கிடைக்காத காரணத்தினாலும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு சரியான மார்க்கெட் கிடைக்காத காரணத்தினாலும்தான் சீராக நடக்கவில்லை என்பதை அரசு ஆராய்ந்து, இது ஒரு ஆலோசனை மையமாக இல்லாமல், அவர்களுடைய பொருட்களுக்கு நல்ல விலை கொடுத்து, வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலப் பொருள்கள் கொடுப்பதற்கு சிட்கோ நிறுவனம் இருக்கிறது. அதேபோல் சிட்கோ நிறுவனம் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வாங்குவதற்கும் வசதிகளையெல்லாம் தமிழக அரசு செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்த தொழில்நுட்ப மையம், சென்டர் பார் அப்ரோப்ரியேட் டெக்னாலஜி வளர்ந்து வருகின்ற தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவியளிக்க, தொழில் அதிபர்களுக்கு கொடுக்கப்படுகின்ற முயற்சியாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (—) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### அ. வினாப் பட்டியலில் சேர்க்கப் பெற்ற வினாக்கள் தள்ளி வைக்கப்பெறுதல்,

**திரு. என், எஸ், வி, சித்தன் , பாயிண்ட் ஆப் ஆர்டர்** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக கேள்வி நேரத்தில் ஏறத்தாழ 20 கேள்விகள் இடம் பெறும். ஆனால், கடந்த சில நாட்களாக மன்றத்திலே ஒன்றிரண்டு அமைச்சர்கள் இல்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டன. இது ஏதோ ஒரு நாள் ஏற்பட்டதென்றால் பரவாயில்லை. நீங்கள் 2, 3 நாட்களுக்கு முன் கொடுத்து விடுகிறீர்கள். நாங்கள் எங்களுக்கு இருக்கின்ற வேலைகளையெல்லாம் ஒத்தி வைத்துவிட்டு, இங்கே வந்து





கலந்து கொள்கிறோம். ஆகவே, இனிமேல் அமைச்சர் கேள்விகள் இடம்பெற்றால், கண்டிப்பாகக் கலந்துகொள்ள தாங்கள் ஏற்பாடு செய்தால், அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் சர்வ சாதாரணம். அவர்களுக்கு ஏதாவது திடீரென்று என்கேஜ்மென்ட், இன்கன்வீனியன்ஸ் ஏற்படலாம். ஆனால், அதைப் பற்றி பரிசீலித்து, அவ்வாறு இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்விப் பட்டியல் முன்னாலே வந்துவிடுகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் சட்ட சபைக்கு வரக் கூடாது என்பதல்ல. தவிர்க்க முடியாத சில பொது வேலைகள் வருகின்ற காரணத்தாலே இந்த நிலைமை ஏற்படுகின்றது. சான்றாக நேற்றைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேள்விகள் இடம் பெற்றிருந்தன. அவர் டெல்லி செல்ல வேண்டிய அவசரமான நிலை ஏற்பட்டது. அதைப்போலத்தான் ஒவ்வொரு அமைச்சர்களும் தங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டியது, கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் ; அந்த ஒரு மணி நேரமும் வினாக்கள்-விடைகள் நடைபெற்றனவா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, யார் வந்தார்கள், யார் போனார்கள் என்று 'அட்டென்டென்ஸ்' எடுப்பது சரியானதல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவரவர்களே .........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சொல்லியாகி விட்டது உட்காருங்கள்.

### ஆ. தஞ்சாவூர் பொருட்காட்சிக்கு கட்டாய வசூல்.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலே நடைபெறுகிற பொருட்காட்சியிலே தொடர்ந்து அங்கே இருக்கிற சில அதிகாரிகள் 200, 500 என்று டிக்கட் அச்சடித்து கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக பொது மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்திருக்கிறது. இது குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் அளிக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்.

இ. அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை சில பத்திரிகைகள் பிரசுரித்திருப்பது.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றையதினம் இந்தச் சட்டப்பேரவையிலே மதுராந்தகம் நிகழ்ச்சியைப் பற்றி பேசப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்கினார். பல சம்பவங்கள் நீக்கப்பட்டன. அப்படி நீக்கப்பட்ட சம்பவங்கள் எல்லாம் இன்றையதினம் விஷமத்தன விமர்சனமாக சில பத்திரிகைகளில் ந்திருக்கின்றன. அதிலே சில தகாத வார்த்தைகள் எல்லாம் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது குறித்து எழுதிக் கொடுங்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அரசு அலுவலர்களது கோரிக்கை—நடவடிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ரமணி, மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, ரா. கிருஷ்ணன், என். வரதராசன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர்—

" தமிழக அரசு அலுவலர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து " விவாதிக்க பேரவையின் இதர அலுவலர்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படிஅவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கும்படியான அரசு ஊழியர்கள் அவர்களுடைய சில முக்கியமான கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையிலே ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டதின் மீது சில வளர்ச்சிப் போக்குகள் ஏற்பட்டு வருவதை உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



அவர்கள் கேட்டுள்ள முக்கியமான கோரிக்கை அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பஞ்சப்படி பாக்கி. மூன்று தடவை மத்திய அரசு பஞ்சப்படி உயர்த்தி கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் மாநில அரசு ஊழியர்களுக்கு அந்த பஞ்சப்படி உயர்த்திக் கொடுக்கவில்லை என்ற குறையிருக்கிறது. ஒரு பஞ்சப்படியை உயர்த்திக் கொடுப்பதற்கு இப்போது மாநில அரசு முன் வந்துள்ளது. அதுவும் இப்போதிலிருந்து கொடுப்பது என்கிற நிலை. ஆனால் மத்திய அரசினுடைய பஞ்சப்படி கொடுத்த கணக்கு பிரகாரம் நாம் பார்த்தால் அது போன செப்டம்பர் மாதத்திலிருந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டியது. இந்த நிலையில் அவர்களுக்கு மனக்குறை ஏற்படும் என்பதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்பதை அரசு பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, பார்த்து கலந்து பேசி தங்களுடைய குறைகளை தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களை சமாதானம் செய்வதற்கும், அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கும் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆயினும் குறைகள் நீடிக்கின்றன. இந்த நிலையில் அவர்களுக்குவேறு வழியின்றி தங்களுடைய ஸ்தாபனத்தில் மூலமாகநடவடிக்கை எடுக்கிறோம் என்று முன்வருகிறார்கள். பல்வேறுசந்தர்ப்பங்களில் அவ கள் எடுக்கிற நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்கு பல கருத்துக்கள் இருக்கலாம்; கண்ணோட்டம்இருக்கலாம்; இருந்த போதிலும் அவர்கள் அரசினுடைய ஊழியர்கள். தொடர்ந்து நிர்வாகத்தில்செயல்பட வேண்டியவர்கள், மக்களுக்கு உதவிட வேண்டியவர்கள் என்ற கண்ணோட்டத்துடன் அரசினுடைய சொந்த ஊழியர்கள் என்ற கண்ணோட்டத்துடன் பரிசீலிக்க வேண்டுமென்று நாம் இங்கே எடுத்து விவாதிக்க வேண்டும்.

[முற்பகல் 10-10]

அரசின் பக்கத்திலேயிருந்து எடுத்துக் கொண்டுள்ள சில நடவடிக்கைகள் பார்த்தால் அது வேதனைக்குரியதாகவும், குழப்பத்தையும். கஷ்டத்தையும் வலுப்படுத்துகிற சந்தேகத்தை ஏற்படுத்துகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை தமிழக சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஒரு பயமுறுத்தல் மாதிரி ஒரு நடவடிக்கை எடுத்தால் படித்தவர்களை.........................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் விவாதிக்க வேண்டி இருக்கிறது என்று பிரைமா பேசியை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கு. ரமணி : அரசாங்கம் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இந்த நடவடிக்கைகள் அந்த இடத்திற்குப் போகக் கூடாது, அதற்குக் காரணத்தை பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படித்தவர்களைத் திரட்டி இந்த நடவடிக்கைகளை மிரட்டி அடக்குவதும் வறட்சிப் பணிகளை தடுப்பதற்கான இடத்திற்கு அவர்களுடைய நடவடிக்கைகள் கொண்டுபோய்விடும், பொதுமக்களுக்கு எதிராக அரசு ஊழியர்கள் பணி செய்யக்கூடிய போக்கு ஏற்படுகிறது. அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே வித்தியாசம் ஏற்படுகிறமாதிரி ஒரு நிலையை உண்டாக்குகிற இந்த நடவடிக்கைகள் அரசு பக்கத்திலிருந்து வரக்கூடாது. அது நமக்குப் பயன்படாது அரசுக்கும் பயன்படாது, மற்றவர்களுக்கும் பயன்படாது. ஒரு வாதத்திற்கு ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சுதந்திர இந்தியாவிலே 33 ஆண்டுகளாக.......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்திவைத்த மாதிரிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். பிரைமா பேசி பற்றிப் பேசி முடித்துவிடுங்கள். டீடெய்ல்ஸ்க்குள்ளே போகக் கூடாது. ஏற்கனவே விவாதிக்க வேண்டியுள்ளது என்று சொன்னீர்கள். அதோடு முடியுங்கள்.

திரு. கு. ரமணி : நீங்கள் சொல்வதற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்கிறேன். பாயிண்ட்டுக்கு வந்துவிட்டேன். சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளாகியும் அரசு ஊழியர்கள் தொடர்ந்து பணி செய்தும் பெருவாரியான மக்கள் பட்டினி கோட்டிற்குக் கீழே எத்தனை சதவீதம் இருக்கிறார்கள் என்றால் அதற்கு அரசு ஊழியர்கள் காரணமாக முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் . முடித்து விடுங்கள். விவாதிக்க வேண்டியுள்ளது என்று சொல்லி விட்டீர்கள், அதோடு விட்டு விடுங்கள்.

திரு: கு. ரமணி : முடிக்கப் போகிறேன். அப்படிப்பட்ட பார்வை அரசுப் பக்கத்திலிருந்து வராமல் இருப்பதற்காக பொதுமக்களுக்கு விரோதமாக என். ஜி. ஓ.க்கள் இருக்கிறார்கள் என்ற நிலையை உண்டாக்குவது அரசுக்கு நல்லதல்ல என்று நினைக்கிறேன். 55 ஸ்தாபனங்கள் ஒன்றாகச் சேர்ந்து சகல ஆசிரியர்கள் சங்கங்களும் சகல அரசு ஊழியர் ஸ்தாபனங்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அது பாதகமானது. கெடுதலானது அப்படி வரக்கூடாது. அதற்காக அவர்களுடைய ஸ்தாபனத்தினுடைய பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசி பொருளாதாரப் பிரச்சினையில் அரசுக்கு இருக்கிற கஷ்டங்களை எடுத்துச் சொல்லி அந்த



முறையில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியும் நேரடி நடவடிக்கை வராமல் தடுக்கமுடியும் என்பதற்கு வேண்டிய ஒரு முயற்சியை இந்த அரசு பக்கத்திலிருந்து எடுப்பதற்காக வேண்டிய இந்த விஷயத்தை விளக்கமாக நாம் விவாதித்து முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது, அதை விவாதிப்பதற்குமற்ற விஷயங்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களின் போராட்டம் பற்றிய அறிவிப்பின் விளைவாக கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்கள் ஓய்வுபெற்றால் 10 ஆயிரம் ரூபாய் தரப்படவேண்டும், மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிற அளவுக்கு பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய கொள்கையால் விலைவாசி ஏறுகிறது என்ற நிலையில் அவர்கள் வாழமுடியாத நிலைமை ஏற்படுகிறது, அதனால் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கறுப்புப் பணம் இருக்கிறது பறிக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் 350 கோடி கூட வரவில்லை. இப்படி ஸோ மெனி பாயிண்ட்ஸ் இருக்கின்றன விவாதிப்பதற்கு.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதையெல்லாம் எப்படிப் பேசலாம். How is the chair allowing this?

திரு. ரா. உமாநாத் : ஏன் சொல்லக்கூடாது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு அம்பிகாபதி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது தான் ஆரம்பித்திருக்கிறேன. மத்திய அரசு கொள்கையின் விளைவாக விலைவாசி ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிற்குள்ளே இருப்பதுதான் தமிழ்நாடு. மத்திய அரசு என்று சொன்னவுடனே கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரம் மத்திய அரசினிடத்திலே தான் இருக்கிறது. அவர்கள் பஞ்சப்படி கேட்கிறார்கள். விலைவாசி ஏறுவதன் காரணமாக அந்தக் கோரிக்கையை வைக்கிறார்கள்.

The N.G.Os. fight against the price rise. அவர்கள் இந்த அரசாங்கத்தை எதிர்த்துப் போராடவில்லை. என். ஜி. ஓ.க்கள் விலைவாசியேற்றத்தை எதிர்த்துப் போராட முன் வருகிறார்கள். தங்கள் கோரிக்கை மீது விவாதிக்க

வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அரசாங்கம் அவர்களோடு சேர்ந்து நின்று போராட வேண்டும் விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து, விலைவாசியை ஏற்றுகின்றவர்களை எதிர்த்து. எனவே, என். ஜி. ஓ.க்களை அழைத்துப் பேசவேண்டும் என்ன பிரச்னை என்று கேட்க வேண்டும். அரசாங்க வருமானத்திலே 40 சதவீதம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கேரளாவிலே 48 சதவீதம் கொடுக்கப்படுகிறது. வெஸ்ட் பெங்காலிலே 49 சதவீதம் கொடுக்கப்படுகிறது. நாமும்தான் 50 சதவீதம் கொடுப்போமே, அரசாங்க நிர்வாகம் நன்றாக நடக்கட்டுமே. இவைகளைப்பற்றியெல்லாம் விவாதித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகளால் அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டு வாழ்க்கைப் போராட்டத்தில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் சாம்பாரிலே பருப்பே இல்லை. தேங்காய் எண்ணெயைத் தொட்டு முகர்ந்து பார்த்தால் எட்டணா கேட்கிறான் ஏன் தொட்டாய் என்று. இப்படி விலைவாசி அதிகரித்திருக்கிறது. இந்தக் கடுமையான நிலைமையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் ஏதோ இந்த அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. அவர்கள் விலைவாசி உயர்வின் விளைவாக நொந்துபோய்க் கஷ்டப்படுகிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்கள்கூட வாழ்க்கையை நடத்த முடியாமல் கடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 7 இலட்சம் பேர் இருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் என். ஜி. ஓ.க்களின் போராட்டத்தைப் பற்றி பரிசீலித்து, அதற்கு எதிர்நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவர்களை அழைத்துப் பேசி, நம்முடைய அரசாங்கத்தில் உள்ள பொருளாதார நிலையைப்பற்றி எடுத்துச் சொல்லி இந்த நிலையில் என்ன செய்யலாம் என்று, Direct negotiation and settlement. ஏன் அவர்களை நாம் அழைத்துப் பேசக்கூடாது? நம்முடைய அரசாங்கத்தின் கீழ் இருப்பவர்களுக்கு நல்லது நடக்கும் என்று வாக்களித்த காரணத்தினால் மத்திய அரசாங்கம் இந்த ஆட்சியைக் கலைத்தபிறகும்கூட மீண்டும் ஆட்சியிலே அமர்த்துவதற்கு என். ஜி. ஓ.க்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்கள் ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் நம்முடையமக்கள், அவர்களை அழைத்துப் பேச வேண்டும் மாண்புமிகு முதல்வரவர்கள்நடித்த ''நாடோடி மன்னன்'' படத்தில் ''நாளை போடப்போகிறேன்சட்டம், பொதுவில்நன்மைபுரிந்திடும்திட்டம்'' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடலை அவர்கள் பாடியிருக்கிறார்கள், எனவே, இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் இந்த நாட்டுமக்கள் எதிர்பார்க்கும்பொழுது நாம் அந்த ஊழியர்களை அழைத்துப் பேசவேண்டும். அவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது, அவர்களைக் கைது செய்தல் கூடாது. நம்முடைய தமிழக மக்கள் தொழிலாளர்கள் அரசு ஊழியர்கள்....................



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஒத்தி வைப்பதற்கு இது எப்படி அவசியம் வாய்ந்தது என்பதுபற்றி மட்டும் எடுத்துச்சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி** : என். ஜி. ஓ.க்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் வறட்சி நிவாரண வேலைகள் பாதிக்கப்படும். அரசு வேலைகள் பாதிக்கப்படும். எனவே, அவர்களை அழைத்துப் பேசி இதில் சுமுகமான முடிவெடுக்க இதைப்பற்றி நீண்ட நேரம் விவாதிக்க இன்றையதினம் பேரவையின் இதர அலுவல்கள் அனைத்தையும் ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வழக்கம்போல் தள்ளுபடி செய்து விட வேண்டாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய தமிழக அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன் வைத்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். 6ஆம் தேதியன்று ஒரு மணி நேரம் வெளியிலிருந்து முழக்கமிடுவது, பிறகு 12 ஆம் தேதியிலிருந்து ஒட்டுமொத்தமாக விடுப்பு எடுப்பது, ஊர்வலம் நடத்துவது, தடையிருந்தாலும் மீறி தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவது போன்ற அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். இதிலே தமிழக அரசு ஊழியர்கள் சார்ந்திருக்கின்ற வருவாய் வாரிய அதிகாரிகள் சங்கம், தலைமைச்செயலக அதிகாரிகள் சங்கம், வணிக வரி அலுவலக சங்கம் போன்ற 145 சங்கங்களைச்சேர்ந்த அரசு ஊழியர்கள் இந்தப்போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். எனக்கு முன்னர் பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப் போல மத்திய அரசு அறிவித்திருக்கின்ற பஞ்சப்படிக்கு இணையாகப் பஞ்சப்படி கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருப்பதால் அரசாங்கம் சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களோடு கூடிப் பேசி சுமூகமான நிலையை உருவாக்க வேண்டும். அரசு அண்மையிலே பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருப்பதைப் பார்த்தால் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற சங்கங்களின் அங்கீகாரமே மறுக்கப்பட்டு விடுமோ என்று கவலைப்படுகின்ற அளவிற்கும், இன்னும் இந்தப் போராட்டத்தைத் தடுக்கும் அளவில் அரசாங்கம் தேவைப்பட்ட அளவிற்குத் தேவையானவர்களை வேலையிலே அமர்த்தச் செய்வதற்கான முயற்சி போன்றவற்றைச் செய்வதாலும், இதுபோன்ற பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மே தினத்தன்று கடலூரியில் பேசுகின்றபொழுது வறட்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் குடிக்கத் தண்ணீர்கூட இல்லாத நேரத்தில்

நட்சத்திர ஹோட்டலில் காப்பி குடிக்கக் காசு அதிகமாக வேண்டுமென்று கேட்பது நியாயமா என்று பேசியிருப்பதால் தொடர்ந்து மக்கள் மத்தியிலேயும், அரசு ஊழியர்களின் மத்தியிலேயும் பதட்ட நிலைமை உருவாகியிருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, சங்கத் தலைவர்களை, பிரதிநிதிகளை அழைத்துப் பேசி சுமூகமான நிலையை உண்டாக்கி, அவர்கள் மனநிறைவு அடைந்து பணிபுரிகின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எடுத்துக் கூடி விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர் சம்பந்தப்பட்ட பல்வேறு பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி 6—5—1981 அன்று உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணி நேரம் அலுவலகத்தை விட்டு வெளியில் செல்வது என்றும், 12—5—1981 அன்று ஒட்டு மொத்தமாகச் சிறுவிடுப்பு எடுப்பது என்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் அதன் இணைப்புச் சங்கங்களின் ஆதரவுடன் முடிவெடுத்திருப்பதாக அரசுக்குத் தகவல் வந்தது. கடந்த 9—4—1981 அன்று, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியப் பிரதிநிதிகள், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தங்கள் கோரிக்கைகளை வைத்தனர். கோரிக்கைகளைப் பரிசீலிக்க சம்பந்தப்பட்ட இலாக்கக்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அரசின் நிதிநிலைக்கு ஏற்ப, கோரிக்கைகள் பரிவுடன் கவனிக்கப்படும் என பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதற்கிடையில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தார் நேரடி நடவடிக்கையில் ஈடுபட முற்படுகின்றனர்.

அரசு அங்கீகாரம் பெற்ற பணியாளர் சங்கங்கள், தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் விதத்தில் அரசுக்கு எதிராக வேலை நிறுத்தமோ அல்லது அதுபோன்ற அச்சுறுத்தலோ செய்யக்கூடாது என்று 1974 ஆம் ஆண்டின் அரசுப் பணியாளர் சங்கங்களின் அங்கீகார விதிகளில் விதிக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் அரசுக்கு அல்லது அரசு அதிகாரிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி, வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் இருத்தல் போன்ற போராட்டப் போக்கில் ஈடுபடக் கூடாது என்று தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகளில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் ''மெதுவாக வேலை செய்தல்'' ''விதிமுறைப்படி மட்டும் வேலை செய்தல்'' ''உறுப்பினர்களை ஒட்டு மொத்தமாகச் சிறுவிடுப்பு எடுக்கத் தூண்டுதல்'' போன்ற தவறான கொள்கையைப் பணியாளர் சங்கங்கள் கடைப்பிடிக்கக் கூடாது என்றும், சங்கங்கள்



நடத்தும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் முதலியன அலுவலக எல்லைகளுக்கு வெளியில் அமைதியான முறையில் நடத்தப்படலாம் என்றும் அவை அலுவலக நேரங்களில் நடத்தப்படக்கூடாது என்றும் அரசு பணியாளர் சங்கங்களின் அங்கீகார விதிகளுக்குச் சில புதிய விதிமுறைகள் சமீபத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இக்கட்டான நிதி நிலையிலும் கூட பணியாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்து வந்துள்ளது. பணியாளர் சங்கங்களின் கோரிக்கைகள் பலவும் பரிவுடன் கவனிக்கப்பட்டு தகுதிக்கேற்ப முடிவெடுக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டு உள்ளன. தற்போது தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலையால் ஏழை மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரைத் துடைப்பதற்காக, அரசு தீவிர நடவடிக்கைகளை 'போர்க்கால நடவடிக்கை' அடிப்படையில் மேற்கொண்டு நடத்தி வருகின்ற போதிலும், அரசு பணியாளரின் மேலும் சில கோரிக்கைகளை, அரசு கவனமாகவும், அனுதாபத்துடனும் பரிசீலித்து வருகிறது. அரசின் நிலையை அரசுப் பணியாளர் சங்கங்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கும்பொருட்டு 4—5—1981-ல் வெளிவந்த ஆங்கில நாளிதழ்களில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கைகள் அரசு ஊழியர்களிடையும் அரசுப் பணியாளர் சங்கங்களிடையும் போராட்ட மனப்போக்கைத் தவிர்க்கும் என அரசு நம்புகிறது. இதையும்மீறி போராட்டத்தில் ஈடுபட்டால் சம்பந்தப்பட்ட சங்கத்தின் மீதும், அரசுப் பணியாளர்கள் மீதும் விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசுகிறபொழுது அந்தக் கோரிக்கையிலே நியாயம் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் பேசுகின்றபொழுது அந்த நியாயத்தை ஏற்க வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கே உரியது என்றும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்கிறபொழுது இந்திய அரசு பணம் தருகிறது, ஏன் மாநில அரசு தரக் கூடாது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது நியாயம் இருக்கிறதா, இல்லையா என்பதல்லபிரச்னை, அதே போல், அரசின் பக்கத்திலேயும் நியாயம் இருக்கிறது.

அரசும் அநியாயமாக நடக்கவேண்டும் என்ற நிலையில் இல்லை' இதிலே எது நியாயம், தலை சிறந்த நியாயம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான் மிகவும் முக்கியம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அரசு ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசினுடைய நிதி நிலைமை இக்கட்டான நிலை

யில் இருந்தாலும் கூட, பல்வேறு பணிகளில் நாம் ஈடுபடவேண்டிய அதே நேரத்தில், வறட்சிப் பணிகளுக்கு அதிமாகச் செலவிடவேண்டிய அந்தச் சூழ்நிலையில் கூட, அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தட்டிக் கழித்துவிடவில்லை. அவற்றிலே உள்ளவற்றை ஒவ்வொரு துறையிலும் பார்த்து, எந்த அளவிற்கு நியாயம் இருக்கிறது, தகுதிஇருக்கிறது என்று பார்க்கச் சொல்லியிருக்கிறார். இந்தச் சூழ் நிலையில் போராட்டம் தேவைதானா?

அலுவலகத்தில் இருந்து ஒரு மணி நேரம் வெளியேறுவோம், அதற்குப் பிறகு, சிறு விடுப்பு தமிழகம் முழுவதும் நாங்கள் போடுவோம் என்பது தேவைதானா என்பதை அரசு ஊழியர்கள் சிந்திக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்தகைய ஒரு போராட்டச் சூழ்நிலையை இந்த நேரத்தில் கொண்டு வருவது சரிதானா என்பதை கடலூரில் நடந்த மே தின விழாப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்கள்.

ஏனென்றால் நம்மையெல்லாம் இன்றைக்கு வாழ்விக்கின்ற, இன்னும் சொல்லப்போனால், இந்த அரசு நிதிக்கு வரி கொடுக்கின்ற நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால், அவர்களுடைய துயரைத் தீர்க்கவேண்டிய பெரும் கடமை மக்களுடைய பிரதிநிதிகளாகிய நமக்கும் இருக்கிறது. அதைப்போலவே, மாண்புமிகு ரமணி அவர்கள் குறிப்பிட்டது போல், இந்த அரசுக்கு என்றும் வேலை செய்ய வேண்டிய சொந்த ஊழியர்கள், அவர்கள் வெளியேறிவிடலாமா? அவர்கள் சொந்த ஊழியர்கள் அல்லவா? அவர்கள் சொந்தத்தோடு இருந்து அந்த வறட்சிப் பணியை ஆற்றும் பெரும் கடமை அவர்களுக்கு இருக்கிறது. மக்களுடைய துயரைத் தீர்க்கவேண்டிய அந்தப் பணியில் தங்களை அர்பணித்துக் கொள்ளவேண்டிய இந்தச் சூழ்நிலையில் ஆர்பாட்டம் தேவைதானா என்பதையும், அத்தகைய ஆர்ப்பாட்டம் அவர்கள் மேற்கொள்வார்களானால் அதைப் பார்த்துக் கொண்டு ஒரு அரசு கைகட்டிக்கொண்டு சும்மா இருக்க முடியாது என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நடந்தால் என்ன செய்ய வேண்டும் என்று நல்ல வேளையாக 1974 ஆம் ஆண்டிலேயே விரிவான வகையில் விதிமுறைகளை வகுத்து வைத்து இருக்கிறார்கள். வேலை நிறுத்தம் என்று சொன்னாலோ, அல்லது மெதுவாக வேலை செய்வது என்று சொன்னாலோ அல்லது விதிப்படி வேலை செய்வது என்று சொன்னாலோ, அல்லது அலுவலகத்தை விட்டு வெளியே போய் கோஷம் போடுவது என்று சொன்





னாலோ, அவற்றிற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கிற வகையில் அந்தச் சங்கங்களின் அங்கீகாரம் ரத்து செய்யலாம் அல்லது ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி எங்களுக்கு முன்னாலே மிகத் திறமையாக செயல்பட்டதாக தங்களைத் தாங்களே கருதிக் கொண்டு இருக்கக்கூடியவர்கள்—1974 ஆம் ஆண்டிலேயே அங்கீகாரம் தருகிற நேரத்தில் அரசு ஆணையில் தெரிவித்து இருக்கிறார்கள். பின்னர் சில தெளிவான திருத்தங்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன.

நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அதைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல, அரசுப் பணியிலே இருக்கின்றவர்கள் நினைக்கிறபோது வெளியேறுவது தகாது என்பதை அன்றைக்கு இருந்தவர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

அதோடு மட்டுமல்ல, அங்கீகாரம் தருவதே அரசோடு பேசி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தருகிற அங்கீகாரம்தான். அங்கீகாரம் என்பது போராட்டம் நடத்துவதற்குத் தருகிற அங்கீகாரம் அல்ல. அங்கீகாரம் என்று தருகிறபோதே ஏற்படுகிற பிரச்னைகளை அவர்கள் அரசோடு பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தரப்படுகிறதே தவிர, போராட்டம் நடத்துவதற்கான அங்கீகாரம் அல்ல என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகையால், ஏற்கனவே இதைப் பற்றி அரசு தன்னால் இயன்ற வரையில் அந்தக் காரியங்களில் ஈடுபட்டு இருக்கிறபோது, இத்தகைய போராட்டம் வீணான போராட்டம், தேவையற்ற போராட்டம் தீதான போராட்டம், அதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் வறட்சிப் பணியில் நாம் மிகத் தீவிரமாக ஈடுபடவேண்டிய இந்தக் கட்டத்தில் இத்தகைய போராட்டம் நடத்துவது சரியல்ல என்பதை அரசு ஊழியர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, இது குறித்து விவாதிக்க சட்டப்பேரவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### அ. சென்னை சைதை மசூதித் தெருவில் தீ விபத்து.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' 19–4–1981 அன்று சென்னை சைதாப்பேட்டை மசூதித் தெருவில் ஏற்பட்ட தீ விபத்தினால் குடிசைகள் சேதமடைந்தது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தேதியில் குடிசை தீப்பற்றி எரிந்ததில் உயிர்ச் சேதம் [illegible] சேதம் எதுவும் இல்லை. 5,000 ரூபாய் வரையில் சேதமாகி இருக்கிறது. பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு ரூ. 200 கொடுக்கப்பட்டு இருக்கிறது. அரிசியும், வேஷ்டியும், புடவையும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 10–30]

**திரு. என். எஸ். வி. சித்தன்** : துணைத் தலைவரவர்களே, எரிந்து போன குடிசைகளுக்குப் பதிலாக புதிதாக வீடு கட்டிக் கொள்ள 2,000 ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. அப்படி புதிதாக வீடுகள் கட்டிக்கொள்ள கடன் கேட்டு அவர்கள் அரசுக்கு மனு அனுப்பியிருக்கிறார்களா ? அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: துணைத் தலைவரவர்களே, அந்த இடத்திலிருந்து மனுக்கள் வரவில்லை. மனு வந்தால் அதை கவனிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### ஆ. நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்படாதது பற்றி திருவாளர்கள் சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.





**திரு. சோ. அழகர்சாமி** : துணைத் தலைவரவர்களே, '' நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்குக் கடந்த 8 மாத காலமாக வீடு கட்டும் கடன் வழங்கப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாநிலத்திலுள்ள அனைத்து பிரதம வீட்டு வசதி சங்கங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் தலைமைச் சங்கமாக உள்ளது. இத்தலைமைச் சங்கம், ஆயுள் காப்புறுதிக் கழகம், மற்றும் பொதுக் காப்புறுதிக் கழகம், '' ஹட்கோ '' (HUDCO) போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று, தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம சங்கங்களுக்கு கடன் உதவி அளித்து வருகிறது. ஆயினும், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு கடன் வழங்க தலைமைச் சங்கம் எதிர்நோக்கியிருக்கும் ஒரே நிதியாதாரம் ஆயுள் காப்புறுதிக் கழகமே.

2. சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடந்த எட்டு மாத காலங்களுக்கு மேலாக, கடன் பட்டுவாடா செய்யாததால், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்கள் உறுப்பினர்களுக்கு கடன் ஒப்பளிப்பு வழங்கி, வீடுகள் கட்ட ஆரம்பித்து, முடிக்க முடியாமல் அரை குறையாக கட்டிடங்கள் நின்றுவிட்டதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள தகவல் முற்றிலும் சரியானதல்ல என்றாலும், நிதிப் பற்றாக்குறை காரணமாக சமீப காலத்தில் நகர்ப்புற சங்கங்களுக்கு தலைமைச் சங்கத்தால் பணம் பட்டுவாடா செய்ய இயலவில்லை. இதற்கு முக்கிய காரணம், ஆயுள் காப்புறுதிக் கழகம் 1980–81-ம் ஆண்டில் கடன் தொகை வழங்காததால், தலைமைச்சங்கத்திடம் பணம் பட்டுவாடா செய்ய போதுமான நிதி வசதி இல்லை என்பதாகும்.

3. 1980–81ஆம் ஆண்டில், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு கடன் உதவி அளிப்பதற்காக நிதியுதவி வேண்டி, ஆயுள் காப்புறுதிக் கழகத்திற்கு 1980 செப்டம்பர் திங்களில் ரூ. 20 கோடிக்கு கடன் விண்ணப்பம் தலைமைச் சங்கத்தால் அரசு பரிந்துரையுடன் அனுப்பி வைக்கப்பட்டது. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து மேற்படி கடன் தொகையைப் பெறுவதற்கு முன்னர் அதன் நிபந்தனைகளுக்கிணங்க சில பத்திரங்களையும், சான்றிதழ்களையும் தலைமைச் சங்கம் வழங்க வேண்டியிருந்தது.

இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகளால் கடன் பெறுவதில் கால தாமதம் ஏற்பட்டது. எனவே தலைமைச் சங்கம், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு உடனடியாக ஓரளவிற்கு பணம் பட்டுவாடா செய்யும் நோக்கத்தோடு, இடைக்கால நிதி உதவியாக ரூ. 4 கோடி (ரூபாய்கள் நான்கு கோடி) முன் பணமாக (Ways and means advance) வழங்குமாறு அரசை அணுகியது. அரசும் இதனை ஏற்றுக் கொண்டு ரூ. 4 கோடி முன் பணமாக கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் தலைமைச் சங்கத்திற்கு வழங்கியது. இதை 31—3—1981 ஆம் தேதிக்குள் அரசுக்குத் திருப்பித்தரவேண்டும்.

4. நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களில் 30—6—1980 அன்று நிலவரப்படி ரூபாய் 260.11 இலட்சங்கள் மதிப்புள்ள 1958 கடன் விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன. 1–7–1980 முதல் 31–3–1981 முடிய ரூ. 2,165.09 இலட்சங்கள் மதிப்புள்ள 8,530 கடன் மனுக்கள் பிரதம சங்கங்களால் பெறப்பட்டன. அவற்றில் ரூ. 1,643.48 இலட்சங்கள் மதிப்புள்ள 7,305 கடன் மனுக்களுக்கு பிரதம சங்கங்களால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கடன் தொகை ரூ. 686.86 இலட்சங்கள் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட கடன் தொகை, அரசு அளித்த முன் பணத்திலிருந்து , தலைமைச் சங்கம் மற்றும் பிரதம சங்கங்களுடைய சொந்தப் பணத்திலிருந்தும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

5. கடந்த மார்ச் திங்கள் 27 ஆம் நாள் ஆயுள் காப்புறுதிக் கழகம், தலைமைச் சங்கத்தின் சொத்துக்களின் பொறுப்புறுதியின் பேரில் (Omnibus security of floating charge) 10½ சதவீத வட்டி வீதத்தில், (விண்ணப்பிக்கப்பட்ட ரூ 20 கோடிக்கு மாறாக) ரூ. 8 கோடி மட்டிலும் சிறப்புக் கடனாக (Special loan) வழங்க முன் வந்து, தகவல் அனுப்பியிருந்தது. இது நாள் வரை, ஆயுள் காப்புறுதிக் கழகம், 8½ சதவீத வட்டிக்கு, அரசு பொறுப்புறுதியின் பேரில், (Government Guarantee) கடன் வழங்கி வந்துள்ளது. 1979–80-ஆம் ஆண்டில், முதன் முறையாக 10½ சதவீத வட்டி வீதத்தில் ரூ. 8 கோடி சிறப்புக் கடன் வழங்கியது. இத்துடன் அரசின் பொறுப்புறுதியின் பேரில் 8½ சதவீத வட்டியில் வழங்கப்பட்ட சாதாரண கடன் ரூ. 7 கோடி. ஆனால் 1980–81 இல் ஆயுள் காப்புறுதிக் கழகம் (8½ சதவீத வட்டியில்) சாதாரண கடன் வழங்க முன் வரவில்லை. இதற்கு யாதொரு காரணமும் தரவில்லை. மாறாக, 10½ சதவீத வட்டிக்கு சிறப்புக் கடன் மட்டுமே அளிக்க உத்தேசித்துள்ளது. தற்காலிகமாக, இதனை ஏற்றுக்கொண்டால் ரூ 16 இலட்சம் நஷ்டம் ஏற்படும். மேலும் இதன்படி சொத்துக்களை தலைமை சங்கம் அடமானம் செய்வதில் நடைமுறையில் சில சிக்கல்கள் உள்ளன. ஆகவே, தலைமைச் சங்கம் விண்ணப்பித்துள்ளபடி சாதாரண கடனையும் உடனடியாக வழங்குமாறும், அவ்வாறு சாதாரண கடனும்



வழங்க இயலாவிடில், தற்போது வழங்கப்படவிருக்கும் 10– சதவீத வட்டியைக் கொண்ட சிறப்புக் கடனுக்குப் பதில் 8½ சதவீத வட்டியை விதித்து சாதாரண கடன் தொகையை அரசு பொறுப்புறுதியின் பேரில் அளிக்குமாறு ஆயுள் காப்புறுதிக் கழகத்தை அரசு கேட்டுக் கொண்டது. இது சம்பந்தமாக அரசு தலைமை செயலர் ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் தலைவருக்கு (Chairman LIC) அனுப்பியுள்ள நேர்முகக் கடிதத்திற்கு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடனுதவி பெறப்பட்ட உடன், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு நிதி நிலைக்கு தக்கவாறு கடன் வழங்கப்படும். இதற்கிடையில், ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் நிதி உதவிக்குத் தக்கவாறு கடன் மனுக்கள் பெறுவது, ஒப்பளிப்பு வழங்குவது முதலிய நடைமுறைகளை நிதானப்படுத்துமாறு தலைமைச் சங்கத்திற்கு அரசு அறிவுரை வழங்கி உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையில் 20 கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் கடன் பெற மனுக்கள் அனுப்பப்பட்டு, இதுவரை அவர்களிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லி, அதற்கு பல காரணங்களையும் சொல்லியிருக்கிறார்கள். வட்டி என்ற வகையில் 8½ சதவீதத்திலிருந்து 10½ சதவீதமாக அதைஉயர்த்தித் தான் கொடுப்போம், இல்லை என்றால் கொடுக்க முடியாது என்று ஆயுள் காப்புறுதிக் கழகம் மறுத்ததன் காரணமாக கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து இதுவரையில் அந்தக் கடன் கிடைக்கவில்லை. ஏறத்தாழ ஓராண்டு காலமாகிவிட்டது.

அந்தந்த நகரிலுள்ள வீடு கட்டும் சங்கத்தில் கடன் கேட்டு மனு கொடுத்து, அது சாங்ஷன் செய்யப்பட்டு, இந்தக் கடன் எப்படியும் வந்துவிடும் என்ற எண்ணத்தில் 'பேஸ் மட்டம்’ வரையில் கையிலிருந்த பணத்தைப் போட்டு வீடு கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அது மட்டுமல்லாமல் ஒரு மாதம் அல்லது 10 நாளில் கடன் வந்துவிடும் என்று சொல்லி மரக்கடைக்காரர்கள், மற்றவர்களிடம் கடனாக பொருட்களையும் பணத்தையும் பெற்று ஓரளவுக்கு கட்டியிருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்க முடியாத ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. கட்டப்பட்ட வீடும் அரைகுறையாக நிற்கிறது. அந்த வீடு கட்டும் சங்கத்தில் சி. எஸ். ஆர். போன்ற அதிகாரிகள் செயலாளர்களாக இருந்தும் கூட சங்கங்களில் ஒரு வேலையும் இல்லாமல் இருக்கும்.

அது மட்டுமல்ல. இங்கே எடுத்திருக்கிற நடவடிக்கை கூட, கடிதம் போகிறது. ஏதோ ஒன்றை அவர்கள் எழுதுகிறார்கள், திரும்ப பதில் போகிறது என்ற நிலையில் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலையில் இனிமேல் புதிதாக கடன் வழங்காமல் போனாலும் பரவாயில்லை. ஏற்கெனவே சாங்ஷன் செய்யப்பட்டவர்களுக்கு வீடுகளை அரைகுறையாக கட்டி வைத்திருக்கிறவர்களுக்கு உடனடியாக கடன் வழங்க ஏற்பாடு செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திடமிருந்து ஏதோ இரண்டு கோடி ரூபாய் அந்தச் சங்கங்களுக்குச் கொடுத்து, முன்பு கடன் வழங்கப்பட்டவர்களுக்கு அதிலிருந்து கடன் வழங்கி அவர்கள் வேலையை முடிக்க ஏற்பாடு செய்யவும், மற்றவர்களுக்கு இப்போது கொடுக்க வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் வற்புறுத்திக் கேட்பது என்னவென்றால், ஏற்கனவே, சாங்ஷன் ஆனவர்களுக்கு எல்லாம் உடனடியாக அந்த கடனை வழங்க மாநில அரசு நிதி உதவி செய்ய ஏற்பாடு செய்யுமா, அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதுதான். அதற்கு என்ன ஏற்பாடு ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறமாதிரி 2 கோடி ரூபாய் அல்லது, 'வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்ஸ்' என்ற முறையில் 4 கோடி ரூபாய் முன் பணமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நினைப்பதுபோல் அல்லாமல் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய தலைமைச் செயலாளர் ஆயுள் காப்புறுதிக் கழகத் தலைவருக்கு (செயர்மென், எல்.ஐ. சி.) அனுப்பிய நேர்முகக் கடிதத்திற்கு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதிலே இருக்கிற முக்கியமான சிக்கல், வட்டி விகிதத்தை அவர்கள் ஸ்பெஷல் லோன் என்று சொல்லி $10\frac{1}{2}$ சதவீதம் வட்டி போட வேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் ஆர்டினரி லோன் என்று சொல்லி $8\frac{1}{2}$ சதவீதம் வட்டி போட வேண்டுமென்று கேட்கிறோம். $10\frac{1}{2}$ சதவீதம் வட்டிக்கு நாம் ஒத்துக்கொண்டால் நமக்கு 16 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படும். கடன் வாங்குகிறவர்களுக்கும் அதனால் பாதிக்கும் நிலை ஏற்படும். கடன் வழங்குவதிலும் சில கஷ்டங்கள் ஏற்படும். அரசின் நிலை எல்.ஐ சி.யிலிருந்து இந்தத் கடனை வாங்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி இன்னும் துரிதமாக முயற்சிகள் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யும்.



## 5. வரவு செலவுத் திட்டம் 1981—82 வாக்கெடுப்பு

### கோரிக்கை எண் 15. காவல்துறை—கோரிக்கை எண் 16. தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

*திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற காவல்துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் என்ற மானியக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவதற்காக வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற நம்முடைய காவல்துறை ஒரு சிறந்த காவல்துறை என்பதற்கு எடுத்துக்காட்டாக சமீபத்திலே நடந்த உலகத் தமிழ் மாநாட்டிலே நல்ல முறையிலே பாதுகாப்புத் தந்தார்கள் அதன் மூலமாக பல இலட்சம் மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் ஒரே ஒரு சிறு குறையைத் தவிர அதாவது நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. சித்தன் அவர்களின் தலையிலே ஒரு காயம் ஏற்பட்டதைத் தவிர மற்றபடியாக நல்ல முறையிலே நடந்தது. ஆகவே காவல்துறையினர் சிறப்பாகப் பணியாற்றியதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வந்த நேரத்திலே அவருக்கு தக்க பாதுகாப்பினை அளித்த காவல்துறைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையைத் தொடங்குகிறேன். நாடாளுமன்றத்திலே ஒரு விசேஷ கோர்ட் அமைப்பது பற்றியும் ஒரு குறிப்பிட்ட பகுதியினை கலவரப்பகுதி என்று அறிவிக்கின்ற வகையிலேயும் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டதற்காக நேற்றைய தினம் இங்கே பேசியவர்களின் சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் அங்கே மத்திய அரசைச் சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்கின்ற போது யாரும் எந்தவிதமான அச்சமும் படவேண்டாம் என்றும் மாநில அரசுக்கு உதவியாகத்தான் நாங்கள் செயல்படுவோம் என்றும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. குறிப்பிட்ட ஒரு பகுதியிலே கலவரம் நடக்கின்றது என்றால் நம்முடைய மாநில அரசு கூட மத்திய எல்லைப் படையினையும் இராணுவப் படையினையும் தருவிக்கிறார்கள். ஆகவே அது எல்லாம் மாநிலஅரசின் நிர்வாகத்திலே குறுக்கிடுவதாக இருக்காது. ஆக அந்த முறையிலே தான் விரிவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அதே நேரததிலே சொத்துக்களையும், உயிர்களையும் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவும் அந்த சட்ட மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அந்த மசோதாவிற்கு நீங்கள் ஆதரவு தாருங்கள் என்றும் அப்போதுதான் இந்தியாவிலே எந்தப் பகுதியிலே கலவரம் நடந்தாலும் அதை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மே 7

தமிழ்நாட்டு நிதிநிலை அறிக்கைகளில் காவல்துறை மானியக் கோரிக்கைகளை எடுத்துப் பார்த்தால் 1977–78, ஆம் ஆண்டு 33,65.17 இலட்சமும், 1978–79, ஆம் ஆண்டு 33.61.36 இலட்சமும், 1979–80 ஆம் ஆண்டு 40.43.84 இலட்சமும், 1981–82 ஆம் ஆண்டு 55,85.23 இலட்சமும் கோரப்பட்டு ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே. இந்த வகையிலே பார்த்தால் நீங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதற்குப் பிறகு காவல்துறைக்கு அதிகமாகச் செலவிடுகிறீர்கள். இதற்கு என்ன காரணம்? ஏதாவது புதிய படையினரைத் தேர்ந்தெடுக்கிறீர்களா? புதிய உபகரணங்கள் ஏதாவது வாங்கி இருக்கிறீர்களா என்றால் இல்லை ஆனால் இவற்றில் பெரும்பகுதியான பணம் சம்பளமாகவும் பயணப்படியாகவும் தான் செலவழிக்கப்படுகின்றது. 1977-ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு ஒரு ஐ.ஜி. தான் இருந்தார்- ஒரே ஒரு அடிஷனல் ஐ.ஜி. தான் இருந்தார். ஆனால்- இன்றைக்கு ஒரு டைரக்டர் ஜெனரல் பதவி உருவாக்கப்பட்டிருக்கின்றது. 5 ஐ.ஜி.க்கள் பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 7 டி.ஐ.ஜீ.க்கள் இருந்த இடத்திலே இப்போது 11 டீ.ஐ.ஜி.க்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் பலருக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று இன்னும் விரும்புவீர்களேயானால் 18 டீ.ஐ.ஜீ.க்களைக்கூட உருவாக்கக்கூடும். அதைக்கூடச் செய்வீர்கள். காரணம் மேலதிகாரர்களுக்கு பதவிகள் கொடுக்க வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே சீ. . ப் என்ஜினீயராக இருந்தாலும் அல்லது வேறு எந்தப் பதவிகளாக இருந்தாலும் ஒரு அதிகாரி இருந்த இடத்திலே இன்றைக்கு 7 பேர், 10 பேர் என்றெல்லாம் பணியாற்றுகின்ற வகையிலே உங்களுடைய நிர்வாகம் போய்க் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10–40]

அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு நம்முடைய டைரக்டர் ஜெனரல் அவர்கள் வெளிநாட்டிற்குத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் இன்னும் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சென்ற பிறகு அந்த இடத்திலே யாரை புதிதாக டைரக்டர் ஜெனரலாக போடுவது, அந்தப் பொறுப்பை யார் ஏற்கப் போகிறார்கள் என்று இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. அதன் காரணமாக அந்தப் பதவிக்கு வரகூடிய எண்ணம் உள்ளவர்கள், ஆம்பிஷன் என்று சொல்வார்களே, அப்படி அந்தப் பொறுப்புக்கு ஆசைப்படக் கூடியவர்கள் தங்களுக்குள்ளேயே கருத்து மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் குற்றங்குறைகளைச் சொல்லி வருகிறார்கள். இந்த விஷயம் மேல் மட்ட அளவில் உள்ள அதிகாரிகளிடத்தில் மாத்திரம் அல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும்,



1981 மே 7] [திரு. நா. சுந்தரராஜ்]

மற்றும் உள்ள சில அதிகாரிகளின் மத்தியிலும் ஒரு பகட்டமான சூழ்நிலையை உருவாக்கும் நிலையமைக்கு கொண்டுபோகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

காரணம் அப்படி ஒருவரைப் பற்றி இன்னொருவர் குறைக் கூறிக் கொண்டே தமிழக காவல் துறையின் தலைமைப் பொறுப்பில் பணியாற்றுவார்களேயானால் அது நல்ல முறையாக இருக்குமா? மாறாக இருக்குமா அல்லது இம்மாதிரி சூழ்நிலையை உருவாக்குமா என்கிற சந்தேகம் எழுகிறது. ஆகவே, முதல்வர் அவர்கள் உடனே இருக்கக் கூடிய அந்த குழப்பமான சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு, அவருக்குப் பிறகு இன்னார் தான் அந்தப் பொறுப்பை ஏற்கப் போகிறார்கள் என்று திட்டவட்டமாக, அறிவித்து அந்த பதட்டத்தைக் குறைக்க. குழப்பத்தை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்குக் குற்றங்கள் நடைபெறுவதைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசாங்கம் 1979 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரை புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில், கன்னக் களவு என்ற அடிப்படையில் 1969 ஆம் ஆண்டு 9637 என்றும், 1980 ஆம் ஆண்டில் 9,410 என்றும், அதற்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1981, ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரையில் 1,417 என்றும் கொடுத்துள்ளார்கள். அதேபோல பெரிய திருட்டுக்கள், என்ற தலைப்பில் 1979 ஆம் ஆண்டு 25,406 என்றும் 980 ஆம் ஆண்டு 25,991 என்றும் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரையில் 3.979 என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இவைகளிலெல்லாம் அரசு கொடுத்துள்ள குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தமிழகத்தில் இந்தக் குற்றங்கள் எல்லாம் தொடர்ந்து அதிகரிப்பதாகத்தான் தெரிகிறது.

கன்னக் களவுகள் ஆனாலும் சரி, திருட்டுகள் ஆனாலும் சரி, பெரிய திருட்டுகளானாலும் சரி சிறிய திருட்டுகளானாலும் சரி அவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தக் குறிப்புகள் கூட பதிவு செய்யப்பட்ட திருட்டுக்களின் விவரமே தவிர, பதிவு செய்யப்படாமல் நிறைய இருக்கும். காரணம், நிறைய பேர்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்க மாட்டார்கள். அந்த வகையிலே பதிவு செய்யப்படாத திருட்டுகளே இரண்டு மடங்குகூட இருக்கும். அந்த வகையிலே பதிவு செய்யப்பட்ட திருட்டுக்களின் விகிதாச்சாரங்களே இந்த அளவில் வித்தியாசமாக இருக்குமேயானால், நாட்டில்

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மே 7

சட்டம் ஒழுங்கு முறை எப்படி இருக்கிறது- நாட்டில் மக்கள் அமைதியாக எப்படி வாழ முடியும் என்பதையெல்லாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டிலே, திருட்டுக்களையும், களவுகளையும், குற்றங்களையும் தவறுகளையும் பெரும் அளவில் குறைந்த மிகத் திறமையான காவல் துறை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அன்றைக்கு இந்த பருத்தி சூதாட்டத்தைப் பற்றிக்கூட இதே அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினோம். அமைச்சர் அவர்கள் கூட பதில் சொன்னார்கள். ஆனால், அன்றைக்கு ஐ.ஜி.யாக இருந்த திரு. அருள் அவர்கள் எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சிகள் காரணமாக அந்த பருத்திச் சூதாட்டம் முதலில் அடியோடு ஒழிக்கப்பட்டது. இப்போது அது மீண்டும் தலையெடுத்திருக்கிறது என்று அன்று கூட நான் இந்த அவையிலே குறிப்பிட்டேன்.

அன்றைக்கு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எப்படிப்பட்ட குற்றங்களாக இருந்தாலும் சரி, அதில் எப்படிப்பட்ட பெரிய மனிதர்கள், வசதி படைத்தவர்கள் ஈடுபட்டிருந்தாலும் சரி, அவர்களை கொஞ்சம் கூட தயங்காமல் சிறையிலே தள்ளக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள் காவல்துறையிலே இருந்தார்கள். இன்றைக்கு என்ன அந்த ஆற்றல் காவல் துறைக்குக் குறைந்து விட்டதா ? அல்லது அவர்களை கடமையைசெய்ய விடாமல் யாராவது தடுக்கிறார்களா ? யாரும் தடுக்க வில்லை. ஆனாலும் தடை ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால்தான் அவர்கள் தங்கள் முழுத் திறமையோடு செயல்பட முடியவில்லை என்கிற நிலைமை ஏற்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதை மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

காலையிலே கூட பத்திரிகையிலே பார்த்தோம். இராமநாதபுரத்திலே தொடர்ந்து கலவரம். பல பேர்கள் அதன் விளைவாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக செய்தி. நான் ஒன்றை இங்கே கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு காவல்துறையில் இன்டெலிஜென்ஸ் விங் என்கிற ஒரு விங் இருக்கிறதா இல்லையா ? நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், எங்காவது சிறிய அளவில் திருட்டுகள் நடைபெற்றால், சிறிய கலவரங்களோ, தகராறுகளோ ஏற்பட்டால் அது முன்கூட்டியே அதிகாரிகளுக்குத் தெரிய வாய்ப்பில்லாமல் இருக்கலாம். ஆனால், பெரிய அளவில் கலவரங்கள்- ஒரு ஊருக்கும் இன்னொரு ஊருக்கும் இடையே- ஒரு இனத்திற்கும் இன்னொரு இனத்திற்கும் இடையே ஒரு ஜாதிக்கும்- இன்னொரு ஜாதிக்கும் இடையே கலவரங்கள் தகராறுகள் ஏற்படுகிறது என்றால், அப்படி ஏற்படக் கூடிய [illegible] அங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்கிற வாய்ப்பு



1981 மே 7] [திரு. நா. சுந்தரராஜ்]

காவல் துறைக்கு உண்டா இல்லையா ? அப்படி உண்டு என்றால் அதை முன்கூட்டியே தடுப்பதற்கு உண்டான நடவடிக்கைகளில் அவர்கள் ஏன் ஈடுபடுவதில்லை. கண்டும் காணாமல் விட்டு விடுகிறார்களா ? அல்லது ஏனோ தானோ என்ற முறையில் செயல்படுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

ஆகவே இந்த 'இன்டெலிஜன்ஸ் விங் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டுமென்று சொன்னால் இன்னும் சற்று வேகமாக அதைச் செயல்படுத்த முடுக்கி விட வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நக்ஸலைட் விவகாரம். இன்று அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்காக அதிகாரிகளை நியமனம் செய்து அதன் மூலம் அந்தப் பகுதிகளிலுள்ள நக்ஸலைட் இயக்கத்தை அடக்கி விடலாம் என்று நீங்கள் நம்புகிறீர்கள். நக்ஸலைட் இயக்கம் என்பது ஏதோ புதிதாக தோன்றியதல்ல. படித்து பட்டம் பெற்ற திறமையான இளைஞர்களில் இன்று பலர் நக்ஸலைட் ஆக மாறியிருக்கிறார்கள், அப்படி மாறி இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் சமூக பொருளாதார முன்னேற்றம் காரணமாகத்தான் மாறியிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக அந்தப் பகுதிகள் முன்னேற்றம் அடைய முடியாமல் போனதின் காரணமாக நக்ஸலைட்ஸ் ஆக மாறியிருக்கிறார்கள். நீங்கள் கூட ஒரு கமிட்டி போட்டீர்கள். தலைமைச் செயலாளர், நிதிச் செயலாளர், ரெவின்யூத் துறைச் செயலாளர், மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த செயலாளர்கள் கொண்ட ஒரு குழுவைப் போட்டீர்கள். அதன் மூலம் சமூக பொருளாதார பிரச்சினையை தீர்க்க வழி ஏற்படும் என்ற நம்பிக்கையில் செயல்பட்டீர்கள். ஆனால் இன்றைக்கு அந்தக் கமிட்டி என்ன செய்திருக்கிறது, என்ன அறிக்கை கொடுத்திருக்கிறது, என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது? மாறாக வெறும் போலீஸ் ஆக்ஷன்' மூலம் அந்தக் காரியங்களைச் செய்து விட முடியும் அல்லது அவர்களை ஒடுக்கி விடலாம் அல்லது அடக்கி விடலாம் என்று நீங்கள் நம்பினால் நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்பதுதான் பொருள். எனவே சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை அந்தப் பகுதிகளில் அமல் படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்த மத்திய அரசு சார்பில் கிட்டத்தட்ட 56.35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 1978–79-ல் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால் மத்திய அரசு கொடுத்த

(திரு. நா. சுந்தரராஜ்) [1981 மே 7

ரூ. 26.51 இலட்சத்தில் செலவிடப்பட்ட தொகை கிட்டத்தட்ட 18 சதவீதம் தான், மீதி 82 சதவீதம் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது, அதாவது செலவு செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அதற்கான சரியான காரணங்களைச் சொல்ல முடியவில்லை. அதே போல் 1977–78-ல் ரூ. 29.74 இலட்சம் மத்திய அரசு நிதி ஆதாரம் கொடுத்தும் கூட செலவிடப்பட்ட தொகை 8 சதவீதம் தான், மீதி 92 சதவீதம் தொகை செலவிடப்படாமல் இருக்கிறது. மத்திய அரசு தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக நிதி ஆதாரங்கள் கொடுத்தும் அது முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை என்று சொன்னால், குறைவாக அல்ல, நீங்கள் முழுமையாக அதைச் செயல்படுத்தவில்லை, முழு மயாக செலவு செய்யவில்லை என்று சொன்னால் கூட பொருந்தும். ஆகவே அப்படி கொடுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால் காவல் துறையை எப்படி நவீனப்படுத்த முடியும்? மத்திய அரசு நிதி ஆதாரங்கள் கொடுப்பதில்லை என்ற ஒரு புறம் குற்றச்சாட்டு, ஆனால் கொடுத்த பணத்தைச் செலவு செய்யவில்லை என்று சொன்னால் என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று புரியவில்லை. ஆகவே அரசாங்கம் இதில் சற்று அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, சிறப்புக் காவல் படைகள். முதல் அணி திருச்சியை தலைமையகமாகக் கொண்டு பணியாற்றியது. அவர்களுக்கு நகர ஈட்டுப் படியாக ரூ. 15 கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த பட்டாலியனில் உள்ளவர்களை வேறு இடங்களுக்கு, பழனி போன்ற இடங்களுக்கு மாற்றும்போது நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அரசாங்கம் இதைக் கவனித்து தேவையான நிதி உதவி அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்காக புதிதாக ஆள்களை எடுத்துக் கொள்ளப் போகிறோம்; தேர்வு செய்யப் போகிறோம் என்று சொல்லி 8,000 பேர்கள் அந்த வேலைக்காக வருகிறார்கள். அவர்கள் தேர்வு எழுத மூன்று மாதங்கள் செலவழிக்கிறார்கள். மூன்று மாதங்கள் இருந்து அந்தத் தேர்வில் பங்கு கொள்கிறார்கள். 1,500 பேர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகு 1981-ம் ஆண்டு மூன்றாம் மாதம் நீங்கள் தேர்வு பெற்று விட்டீர்கள், ஆகவே வேலைக்கு வாருங்கள் என்று அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. அவர்கள் அட்டவணையில் உள்ள 21 பொருள்களை, சோப், சீப், கண்ணாடி போன்ற பொருள்களோடு வந்த போது உங்களில் பல பேர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லிவிட்டு கடைசியாக 300 பேர்களை எடுத்துவிட்டு மற்றவர்களை காலி செய்து விட்டார்கள்



1981 மே 7] (திரு. நா. சுந்தரராஜ்)

அதிகாரிகள். அதற்கு பல காரணங்களைச் சொல்கிறார்கள். தேர்வு செய்த அதிகாரிக்கும் நியமனம் செய்யக் கூடிய அதிகாரிக்கும் கருத்து வேறுபாடு. இவர் தேர்வு செய்தவர்களை நான் எடுப்பதா ? என்ற கருத்து வேறுபாடு. ஆகவே அவர்களை எல்லாம் நீக்கிவிட்டு 300 பேர்களை எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு சிறப்பான ட்ரெயினிங் கொடுக்க வேண்டும் என்பதற்காக எக்மோர் ஸ்டேடியத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் பெரிய கொட்டகைகள் போட்டு திடீரென்று அதையெல்லாம் காலி செய்து விட்டார்கள். காரணம், அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதற்காக அதை எடுத்து விட்டார்கள்.

[முற்பகல் 10.50].

அதே போல், இன்றைக்கு இரண்டாம் நிலை காவலர்கள் முதல் நிலை காவலர்களாக மாற்றப்பட வேண்டுமென்றால், அவர்களுக்கு 10 ஆண்டுகள் சர்வீஸ் இருந்தாலும், முதல் நிலை காவலர்களாக வர முடியவில்லை. காரணம், 17–10–80 தேதி உத்தரவு போடப்படுகிறது. நீங்கள் யார் யார் முதல் நிலை காவலர்களாக வர ஆசைப்படுகிறீர்களோ, நீங்கள் உடனடியாக அதற்கு தேர்வு எழுத வேண்டும், வாருங்கள் என்று சொல்லப்படுகிறது. சுமார் 2,000 காவலர்கள் அந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கிறார்கள். 23–10–80 அன்று தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அதிலே 8 ஆம் வகுப்புப் படித்தவர்கள் எல்லோரும், மற்றும் பட்டப் படிப்பைப் படித்தவர்கள் எல்லோரும் எழுதுகிறார்கள். அதிலே 1346 பேர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு தேர்வுக் குழுவை அமைத்து, அதற்கு திரு. ஜி. எஸ். ரமணன், மற்றும் 4 ஆணையாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். 19–3–81 அன்று பதவி உயர்வு கொடுத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 24 பேர்கள். அந்த 24 பேர்களும் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று சொன்னால், அதிகாரிகளுடைய ஆர்டர்லிகளாக இருப்பவர்கள். குறைந்த பட்ச படிப்பு உள்ளவர்கள். மிகவும் குறைந்த சர்வீஸ் உள்ளவர்கள். பெரிய அளவில் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களுடைய சிபார்சு. அத்தகைய 24 பேர்கள் தான் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, இரண்டாம் நிலையிலே இருக்கின்ற பி. ஏ., படித்தவர்கள், பி.எஸ்.ஸி, படித்தவர்கள், இன்னும் பி.ஏ., பி. எல்., படித்தவர்கள் எல்லாம் தள்ளப்பட்டிருக்கிறார்கள் ; ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசாங்கம் உடனடியாக மறு பரிசீலனை செய்து, யார் யார் தகுதியானவர்களோ அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(திரு. நா. சுந்தரராஜ்) [1981 மே 7

அதே போல் காவல் துறையிலே 150 சப் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்க தேர்வு நடத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில சர்வீஸ் கமிஷன் மூலமாக அந்த அறிவிப்பு வந்தது. ஆனால், அதிலே ராணுவத்திலே பணியாற்றியவர்கள், 40 வயது என்று இருந்தாலும் அவர்களுக்கு ரிலாக்சேஷன் கொடுக்கிறார்கள். மற்றும் அதிலே புறக்காவல் நிலையத்திலே பணியாற்றியவர்கள் மற்றும் உணவுத் துறையிலே பணி புரிந்தவர்கள், ஜனத்தொகை இலாகாவிலே பணி புரிந்தவர்கள், மற்றும் இளம தொண்டர் படையிலே பணியாற்றியவர்கள், அவசரக் காலத்திலே பணியாற்றியவர்கள், தங்க கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றெல்லாம் வயதிற்கு சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால், காவல் துறையிலே பணியாற்றும் பட்டதாரிகளுக்கு கொடுக்கப்படவில்லை. காவல் துறையில் பணியாற்றக்கூடிய சாதாரண காவலர்கள், பட்டதாரிகளாக இருந்தும் அவர்களுக்கு இந்த வயது வரம்பிற்கு விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை. வயது வரம்பை நிர்ணயித்திருக்கிறோம், எனவே முடியாது என்று அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து விட்டது. அதனால், அவர்கள் அந்தப் பரிட்சையை எழுத முடியவில்லை. ஆனால், இன்றைக்கு ஒரு சாதாரண காவலர் எம். ஏ., படித்திருந்தால், அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி டிபுடி சூபரின்டென்டாக வர முடியும். அதற்கு ரிலாக்சேஷன் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், ஒரு சாதாரண காவலர் எம்.ஏ., பி.ஏ., படித்திருந்தால் எஸ். ஐ. யாக மட்டும் வர முடியாது. காரணம், இந்த வயது வரம்பை அவர்களுக்கு ரிலாக்சேஷன் செய்யாத காரணத்தினால், அவர்கள் இந்தத் தேர்வை எழுத முடியவில்லை. ஆகவே, காவலர்களாக பணியாற்றுகிறவர்கள் எஸ்.ஐ-யாக பதவி உயர்வு பெறுவதற்கு, நீங்கள் அந்த வயது வரம்பை ரிலாக்சேஷன் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், ஏ.எஸ்.ஐ பதவிக்கு தலைமைக் காவலர்கள் 180 பேர்கள் 13–12–80-ல் பரிட்சை எழுதுகிறார்கள். அவர்கள் 25 வருஷங்களுக்கு மேல் சர்வீசிலே இருக்கிறார்கள். ஆனால், அதிலே மொத்தம் 36 பேர்களுக்கு இந்த பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. காரணம் என்ன சொல்லப்படுகிறது ? சரியான விகிதாசாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. 25 ஆண்டுகள் சர்வீஸ் செய்து விட்டு, அவர்களை திறமையற்றவர்கள் என்று ஒதுக்கினால், அவர்களுடைய குழந்தைகள் இந்த எஸ். ஐ. பதவியைப் பெற்று, அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கீழே பணியாற்றக் கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. அவர்களிலே பலர் திறமையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் இந்த ஏ.எஸ்.ஐ. பதவியைக் கொடுக்க வழி செய்ய வேண்டு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மே 7] (திரு. நா. சுந்தரராஜ்)

அதே போல் செலக்ஷன் கிரேடு. இந்த அரசாங்கம் ஒரு ஜி.ஓ.-வை எம். எஸ். 214, தேதி 1–3–79 போட்டிருக்கிறது. அதிலே யார் யார் 10 ஆண்டுகள் பணியாற்றுகிறார்களோ ஒரே பதவியிலே, அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுப்பது. ஆனால், காவல் துறை இலாகாவிற்கு பட்டும் இது வரையிலே அந்தச் சலுகை கொடுக்கப்படவில்லை. 10,15 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் இருந்தும், அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை. அதே போல் ஹெட் கான்ஸ்டபிளாக பணியாற்றுகின்றவர்களுக்கும் செலக்ஷன் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, அரசாங்கம் இந்த செலக்ஷன் கிரேடு பிரச்சினையைப் பற்றி கவனித்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் 1980 ஆம் ஆண்டு கிரேடு 1-க்கு 695 பேர்கள் மாற்றப் போவதாகச் சொல்லி, அதற்கான ஏற்பாட்டைச் செய்கிறார்கள். 71 ஆம் ஆண்டு முதல் 80 ஆம் ஆண்டு வரை கிரேடு 1 பதவியில் அவர்களை தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், கிரேடு 1-லே அவர்கலளை நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்றைக்கு வெளி நாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம் என்று சொல்லி பல நிறுவனங்கள் மோசடியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே என்னுடைய தொகுதியிலே சில நண்பர்கள் சிங்கப்பூரிலே போய் வேலை பார்க்கப் போகிறோம் என்று சொல்லி, யாருக்கும் தெரியாமல் ஒவ்வொருவரும், 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று பணம் கொடுத்து விட்டு, அதைத் திரும்பப் பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள். நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 50 ஆயிரம் வரை கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் ஒரு பைசா கூட திரும்ப கிடைக்கவில்லை. அதைப் போல் பல நிறுவனங்கள் பத்திரிகையில் பெரிய அளவில் 'அட்வர்டைஸ்மெண்ட்' செய்து அதன் மூலமாக பொருள் ஈட்டுகிறார்கள் ; பிறகு கம்பி நீட்டுகின்ற காட்சியை இங்கே நாம் பார்க்கிறோம். அரசாங்கம் அந்த நிறுவனங்களை உடனடியாக சோதனை போட்டு உண்மையான 'போனபைடி' நிறுவனம் தானா என்று பரிசீலனை செய்து, இல்லையென்றால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விருத்தாசலம் சம்பவம். அங்கே இரண்டு பேருந்துகள் எரிக்கப்பட்டது, அவைகள் நமக்குத் தெரியும். வேதனை தான். ஆனால் அதற்கான காரணம், சூழ்நிலை என்ன, ஏது எப்படி ஏற்பட்டது. அங்கே இருக்கிற ஒரு இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் சேர்ந்து வந்து ஒரு தனியார்

(திரு. நா. சுந்தரராஜ்) [1981 மே 7

பேருந்தை சார்ந்த டிரைவரை மிரட்டி, சம்பந்தப்பட்டவர்களை பஸ்ஸில் ஏற்றிச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். நான் முதலாளியை கேட்டு தான் செய்ய முடியும் என்று டிரைவர் சொல்கிறார். அவரை அடிக்கிறார்கள். காவல் நிலையத்தில் போட்டு உதைக்கிறார்கள். நாம் சொல் ஏழை கேட்க வில்லையே என்று போலீஸ்காரர்களுக்கு ஆத்திரம். அதற்காக அடிக்கிறார்கள். இதன் விளைவாக அங்கே இருக்கிற பஸ் டிரைவர்களும், கண்டக்டர்களும் சேர்ந்து கொண்டு போராட்டம் நடத்தினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தி அந்த சப்-இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும், அங்கேசுமூகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இதுநாள் வரை அங்கே எந்த நடவடிக்கையும் இலாக்கா மூலமாக எடுக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கம் உடனடியாக இதில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும்.

அதைப்போலவே மதுரை மாவட்டத்திலே கருப்பூரணியில் லட்சுமி காட்டன் மில்லிலே மே மாதம் முதல் தேதியன்று வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஏதோ சிறு பிரச்சினையில் அவர்கள் கைது செய்யப்பட்டுகிட்டத்தட்ட 78 ஆட்கள் இன்றைக்கும் சிறையிலே வாடுகிறார்கள். அதில் 30 பெண்கள்-குழந்தைகள் இருக்கிறார்கள். மே மாதம் முதல் தேதியன்று அவர்களை கைது செய்தது தவறு. அவர்களை விடுதலை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொன்று சென்ற முறை முதல்வர் அவர்கள் ஆட்சிப்பீடத்தில் இருக்கிற நேரத்தில் திண்டுக்கல்லில் டி.எம்.ஓ. அப்துல் கான் என்பவர் ஏதோ 100 ரூபா லஞ்சம் வாங்கிவிட்டார் என்று சொல்லி அவரை அரசாங்கம் சஸ்பெண்டு செய்கிறது. சஸ்பெண்டு செய்கிற நேரத்தில் அங்கே இருக்கிற மருத்துவ அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து ஒரு போராட்டம் நடத்துகிறார்கள். வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அரசாங்கம் ஒரு விசாரணை கமிஷன் போடுகிறது. திரவியம் கமிஷன் வருகிறது. அந்த விசாரணை கமிஷனை நியமனம் செய்த பிறகு அந்த டி.எம்.ஓ. மனத்தாங்கலில், சங்கடத்தின் காரணமாக டி.எம்.ஓ. வாக இருக்கிற நம் மீது 100 ரூபாய் லஞ்சம் வாங்கி விட்டதாக குற்றத்தை சொல்லிவிட்டார்களே என்பதற்காக மருந்தை சாப்பிட்டு விட்டு இறந்து விடுகிறார். தற்கொலை செய்து கொள்கிறார். விசாரணை கமிஷன் தொடர்ந்து நடக்கிறது. இது நாள் வரை விசாரணை கமிஷன் அறிக்கையை அரசாங்கத்திற்கு கொடுத்தும் கூட அறிக்கை இந்த அவையில் தாக்கல் செய்யப்படவில்லை. எனக்கு கிடைத்தத் தகவல் அது உண்மையாக இருக்குமானால் அந்த விசாரணை கமிஷன் அறிக்கையின்படி அரசாங்கம் செய்தது தவறு சஸ்



1981 மே 7] [திரு. நா. சுந்தரராஜ்]

பெண்ட் செய்தது தவறு என்று அது கூறியிருப்பதாகத் அறிகிறேன். அரசாங்கம் உடனடியாக அந்த ரிப்போர்ட்டை இங்கே தாக்கல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்றைக்கு தாம்பரம் சீட்டு கம்பெனியிலே ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள்; ஆனால் இன்றைக்கு பூந்தமல்லியிலே நீதிமன்றத்திலே என்ன செய்திருக்கிறார்கள். அவரை விடுதலை செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது கண்டித்து அவர் எந்தவிதமான குற்றமும் செய்யாதவர் என்று நம்பிக்கையிலே அவர் தண்டிக்கப்படாமல்-கண்டிக்கப்பட்டு வெளியே விட்டிருக்கிறார்கள். ஆனால் சினிமா கொட்டகையிலே ஒருவன் பீடி குடித்து விட்டால் அவனுக்கு 50 ரூபாய் அபராதம் போடுகிற நீதிபதிகள்- நீதிமன்றங்கள்தான் தமிழ்நாட்டிலே லட்சக்கணக்கான ரூபாய்களை கொள்ளை அடித்தவரை வெளியே போகச் சொல்வதும் ஒரு சிறிய தவறு செய்தவனை தண்டிப்பதும் தான் இன்றைக்கு இருக்கிற அவலமான நிலைமை. ஆகவே அரசாங்கம் இது சம்பந்தமாக மறுபரிசீலனை செய்து- தாம்பரம் சீட்டு கம்பெனி சம்பந்தமாக முழு விசாரணை நடத்தி உண்மையாக குற்றம் செய்திருக்கிறார் என்பதை நிரூபணம் செய்து அவர்களுக்கு தக்க தண்டனை கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தலைசிறந்த நடிகை ஷோபா- ஊர்வசி பட்டம் பெற்றவர். சென்னையிலே மரணம் அடைகிறார். காவல் துறை அதிகாரிகள் போய் பார்க்கிறார்கள். ஏனையோரும்-பார்க்கிறார்கள். அங்கே பஞ்சாயத்து தீர்ப்பு சொல்கிறார்கள் அது தற்கொலை என்று. ஆனால் அவருடைய தாய் இது தற்கொலை அல்ல- கொலை என்று கூறுகிறார்கள். இருந்தாலும் இங்கே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் தற்கொலை என்று அவர்கள் முடிவு செய்துவிடுகிறார்கள். கடைசியிலே அந்த அம்மையார் டெல்லிக்குப் போய் பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை சந்தித்து என்னுடைய மகளை கொலைசெய்து விட்டார்கள் என்று சொன்னதற்குப் பின்னால்- உரிய நடவடிக்கை எடுங்கள் என்று தமிழக அரசை திருமதி இந்திரா காந்தி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மீண்டும் அதே அதிகாரிகள் விசாரணைக்கு போகிறார்கள். அதற்குப் பிறகு அது கொலை என்று அவர்களே முடிவு எடுக்கிறார்கள் ஆனால் முதலமைச்சர் எம். ஜி. ஆர். சொன்னார், அது கொலையல்ல.

[முற்பகல் 11-00]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே - மாண்புமிகு உறுப்பினர் அவர் யாரோ கொடுத்த தகவலிலிருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து தகவல் வருவதற்கு முன்பாகவே இந்த அரசு உத்திரவிட்டிருக்கிறது. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் எந்த முடிவும் சொல்லப்படவில்லை. தகுந்த வகையில் உண்மை வெளிவர இந்த அரசு முயற்சிக்கிறது. ஆகவே தயவுசெய்து தவறான தகவலை வைத்துக்கொண்டு இங்கே கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. காரணம் இந்தியாவின் தலைசிறந்த நடிகை ஒருவருக்கு ஏற்பட்ட கதி மிகப் பரிதாபமானது. ஆகவே உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம்- எஸ். எஸ். கோட்டை போலீஸ் சரகத்தைச் சேர்ந்த அய்யாபட்டி என்ற கிராமம். அந்தக் கிராமத்திலே பழனியப்பன் என்பவர் வெளிநாடுகளில் பொருளீட்டி தமிழகத்திலே தொழில் நடத்துவதற்காக தஞ்சையிலே ஒரு கடையும் மதுரையிலே ஒரு கடையும் ஆரம்பிக்கிறார். ஆனால் 22-10-1979 அன்று அவருடைய வீட்டில் காலை நேரத்திலே அந்த ஊரைச் சேர்ந்த பலர் விரோதம் கொண்டு அவர் வீட்டைத் தாக்குகிறார்கள் அவரையும் தாக்குகிறார்கள். கடைசியாக அவருடைய வீட்டிலிருந்து 150 பவுன் தங்க நகைகளையும் 8 கிலோ வெள்ளிப் பாத்திரங்களையும் பிராமிசரி நோட்டுகளையும் கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய்க்கு கொள்ளை அடித்துப் போய் விட்டார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட பழனியப்பன் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். இதுநாள் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு போலீஸ் அலுவலகத்திற்கும் ஏறி ஏறி நடந்து நடந்து சென்னையில் உள்ள பெரிய போலீஸ் அதிகாரியையும் சந்தித்துச் சொல்லியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக அங்கே இருக்கிற எஸ். பி. யிடம் நீங்கள் அந்த வழக்கை விசாரணை செய்ய மாட்டீர்கள். ஆகவே மத்திய அரசாங்கத்தினுடை சி.பி.ஐ.,க்கு மாற்றித் தாருங்கள் என்று கேட்டதற்குப் பிறகு அதற்கு அவரும் ஒப்புதல் அளித்து மத்திய அரசாங்கத்தினுடைய சி.பி.ஐ. விசாரணை செய்யலாம் என்று மேலதிகாரிகளுக்கு அனுப்பியும்கூட இதுநாள் வரையில் மத்திய அரசாங்கத்தினுடைய சி.பி.ஐ. யிடம் இலாகா ஒப்படைக்கவில்லை. நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் 3 இலட்சம்



கொள்ளை போய் இருக்கிறது. அந்தப் பகுதியில் அது புதி
தல்ல. இதற்கு முன்னாலே 74, 73 என்று நினைக்கிறேன்-
நினைவு சரியாக இருக்குமானால். ஆ. தெக்கூர் என்ற ஊரிலே
அதே திருப்பத்தூர் தொகுதியிலே சிவலிங்கம் செட்டியார் என்
வருடைய வீட்டில் காலை 8 மணிக்கு புகுந்து கொள்ளை அடித்தி
ருக்கிறார்கள். அதைத் தமிழ்நாடு காவல் துறை கண்டுபிடிக்
முடியவில்லை. கடைசியாக சி.பி.ஐ. அதிகாரிகள் வந்து மாறு
வேடம் போட்டு கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சரி
யான தண்டனையை வாங்கிக் கொடுத்தார்கள், அதே பகுதி
யில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல,
அதற்கு பின்னால் அந்த பழனியப்பன் என்பவருக்கு ஆதரவாக
இருந்தார்கள்என்பதற்காக அதே ஊரைச் சேர்ந்த இன்னொரு
நபர் மருது என்பவர் இது நடைபெற்றது இந்த ஆண்டு 17-1-81
காலை 6 மணிக்கு வீட்டிலே புகுந்து தூங்கிக்கொண்டிருந்தவ
மீது தாக்குதல் நடத்தி அவரை அரிவாளால் வெட்டி 24 பவுர்
செயின்களை கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். இது
நாள் வரையில் எந்தவித நடவடிக்கையும் இல்லை. தமிழ்
நாட்டில் பெரிய கொள்ளைகள், சிறிய கொள்ளைகள் என்பதிலே
கருத்து வேறுபாடு என்பது வேறு. ஆனால் கொள்ளையடித்
ததை கண்டுபிடித்து தக்க தண்டனை வழங்கவில்லை என்றால்
அவர்கள் தான் ஊரிலே ராஜாவாகக் காட்சியளிப்பார்கள். அதன்
காரணமாக இந்த இரண்டு பேர்களும் ஊரைவிட்டு வெளியேறி
வெளியூரிலே தங்கிக் கொண்டிருக்கின்ற அவல நிலைமை இருக்கி
றது. முதலமைச்சர் நேரடியாகத் தலையிட்டு சம்பந்தப்பட்ட
வர்கள்மீது நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளுக்கு தண்டனை
கொடுக்க ஆவன செய்யவேண்டும். அதேபோல் நெல்லை
மாவட்டம் செங்கோட்டை தாலுகாவில் மேக்கரை கிராமத்தில்
அருணாசலத்தேவர் என்பவரையும், பரமசிவத் தேவர் என்பவ
ரையும் கொலை செய்துவிட்டார்கள். கொலை செய்துவிட்டு
ஆற்றிலே போடவில்லை, ஒரு காட்டிலே புதைத்து விட்டார்கள்.
அவர்கள் சொந்தக்காரர்கள் அவர்களைத் தேடிப் பார்த்து
கடைசியில் மிருகங்கள் பிணங்களை வெளியே போட்ட பிறகு
அவர்கள் தங்களுடைய உறவினர்கள் தான் என்று கண்டுபிடித்து
அதற்குப் பின்னாலே காவல் துறையிலே புகார் கொடுத்தார்கள்.
காவலர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். அவர்கள்
போஸ்ட் மார்ட்டம் செய்தார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட
வர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நபர். அது மட்டுமல்ல சம்ப
பட்டவர்கள் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியின் சொந்தக்காரர்
என்பதற்காக அந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.
அதற்கு மாறாக அவர்கள் தொடர்ந்து இராஜாக்கள் மாதிரியே
இன்றைக்கு அதே ஊரிலேயே நடமாடிக் கொண்டிருக்கின்ற
காட்சியைத்தான் பார்க்கிறோம். ஆகவே, முதலமைச்சரவர்
கள் இதில் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போல, மதுரை மாவட்டம் உத்தமபாளையம் தேவாரம் கிராமத்தில் தம்பிநாயக்கன்பட்டி என்ற ஊரில் எங்கள் கட்சியைச் சார்ந்த அரங்க சுப்பிரமணியம் என்பவர், அவருடைய மனைவி ஒரு நாள் மாலை 12–3–1981-ஆம் தேதி மாலை அவருடைய வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த நேரத்தில் அதே ஊரைச் சார்ந்த ஒரு பெரிய போக்கிரி என்று சொல்கிறார்கள். அவர் கற்பழிக்கின்றார். அந்தக் கற்பழிப்பு சம்பந்தமாக 13-ந் தேதி அன்று அங்கே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்படுகிறது. புகார் பதிவு செய்யப்பட்டும்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை, சம்பந்தப்பட்டவர்கள் அங்கேயிருக்கின்ற டி. எஸ். பி. யைச் சந்திக்கிறார்கள்; எஸ். பி. யைச் சந்திக்கிறார்கள். டி. எஸ். பி. யின் கடிதம் 142/81-லே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறார்; அதைப்போல எஸ். பி. அவர்களும் ஜி 412396/81 என்ற கடிதத்திலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறார். ஆனால் இதுநாள் வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம் அவர் பெரிய சண்டியர். போக்கிரி என்பதால். ஆகவே சண்டியர்களுக்கும், போக்கிரிகளுக்கும் காவல் துறை அதிகாரிகள் பயப்பட்டால் தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க முடியாது. ஆகவே, உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே திருப்பத்தூர் தொகுதியில், எஸ். ஈ. மங்கலம் என்ற காவல் நிலையத்தை சேர்ந்த ஒரு காவலர் ஆர். ஈ. 1562 சின்னசாமி என்பவர் என்னுடைய தொகுதியை சேர்ந்த மேலத்தானியம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் அங்கேயிருக்கின்ற பிரான் மலைக்கு நாடகம் பார்க்கப் போகின்றார். அப்படிப் போகின்ற நேரத்தில் அவன் கட்டை உருட்டினான் என்பதற்காக, புல்லுக்கட்டை விளையாடினான் என்பதற்காக அவனைக் காவலர் தண்டிக்கிறார். அது மட்டுமல்லாமல் அவனிடம் 15 ரூபாய் இலஞ்சமாகவும் கேட்கிறார். ஆனால் அவன் கொடுக்க மறுக்கின்ற நேரத்தில் 10 ரூபாய்தான் இருக்கிறது என்று கெஞ்சிக் கூத்தாடிக் கொடுத்த நேரத்தில் அதையும் வாங்கிக்கொண்டு இன்னும் 5 ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார். அதைக் கொடுக்க மறுத்த நேரத்தில் தன்னுடைய காலால் தாண்டா விளக்கு என்ற விளக்கை உதைக்கிறார். அந்த விளக்கு மண்ணெண்ணெயில்தான் எரியும். அதைக் காலால் உதைக்கிறான் அவன் மேல் அது படுகிறது; சட்டையெல்லாம் எரிகிறது; உடலெல்லாம் வெந்து போகிறது. அந்தப் படம் என்னிடம் இருக்கிறது. எரிந்த பிறகு அவனைக் காப்பாற்றும் வகையில் அங்கேயிருந்தவர்கள் மருத்துவமனையிலே சேர்க்கிறார்கள். சிங்கம்புணரி மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். அங்கே பயனில்லாமல் போய்விடும் என்பதற்காக அவரை மதுரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையிலே வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. இ[illegible]



யில் விசாரணையும் இல்லை; நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவனுடைய உயிர் இன்றைக்குப் போகுமா, நாளைக்குப் போகுமா என்று தெரியாத நிலையில் இருக்கிறது. அவனுடைய படம் கூட என்னிடம் உண்டு. ஆகவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வாங்குகின்ற இலஞ்சத்தை எவ்வளவு கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொண்டு போய்விட வேண்டும். அவர்கள் கேட்பதில் கொஞ்சம் கொடுப்பார்கள்; எல்லாவற்றையும் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுக்கவில்லை என்பதற்காகச் சாகின்ற அளவிற்குச் சித்திரவதை செய்யும் அளவிற்கு நிலைமைகளை ஏற்படுத்த வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் ஒரு பெரிய சென்சேஷனலான நியூஸ் ஒன்று வந்தது. அதாவது ஆம்னி பஸ் ஊழல். அந்த ஊழல் பற்றி ஒரு செய்திப் பத்திரிகையிலே வந்தது. தினமணி பத்திரிகையிலே வந்தது. 28-9-1980-ஆம் தேதிய செய்திப் பத்திரிகையிலே வந்தது. அதிலே இலஞ்சம் வாங்கிய அதிகாரி என்ற வகையில் 6 உதவி போலீஸ் கண்காணிப்பாளர்கள், 41 இன்ஸ்பெக்டர்கள், 71 சப்-இன்ஸ்பெக்டர்கள், 11 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 13 தலைமைக் காவலர்கள், 35 காவலர்கள் என்று ஆகமொத்தம் 177 பேர்களும், போக்குவரத்துத் துறையில் 11 ஆர். டி. ஓ.-க்களும், 62 மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களும், 11 குமாஸ்தாக்களும், ஆக மொத்தம் 84 பேர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக இலஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை மேற்கொள்வதாகச் செய்தி வந்தது. சில ஆம்னி பஸ் நிறுவனங்கள் சோதனையிடப்பட்டு, தேவையான தஸ்தாவேஜுகள் இலஞ்சம் வாங்கியதற்காகவும், அவர்கள் ஹோட்டலிலே தங்கியதற்காகவும் மற்றும் ஏனைய வகையிலே அவர்கள் அங்கே கணக்குகள் எழுதியிருந்தார்கள். இந்த வழக்கு விசாரணை யாரிடம் ஒப்படைக்கப்பட்டது? ஒன்று, திரு. சுப்பையா என்ற டெபுடி சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ், இலஞ்ச ஒழிப்பு இலாக்கா டைரக்டர், அவருக்கு மேலே இருக்கின்ற சி. வி. நரசிம்மன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சி. வி. நரசிம்மனைப் பற்றி உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அவர் ஜனதா ஆட்சியின் போது தற்பொழுது இந்தியாவின் பிரதம மந்திரியாக இருக்கின்ற திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய இல்லத்தையும், தவான் அவர்களுடைய இல்லத்தையும் சோதனை போட்டு முறைகேடாகச் செய்தார்கள் என்பதற்காக தவான் இவர் மீது வழக்குத் தொடர்ந்து, இவர் ஆண்டிசி—பேட்டரி பெயிலைக் கோர்ட்டில் வாங்கியவர்; இன்றைக்கு தமிழ்நாடு கேடருக்கு அனுப்பப்பட்டு, தமிழ்நாடு இலஞ்ச ஒழிப்பு இலாக்காவினுடைய பொறுப்பிலே இருக்கிறார்கள். அதிலே [illegible]க்கே போகவில்லை. ஆனால் டெபுடி சூப்பிரண்டெண்ட்

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மே 7

சுப்பையா அவர்கள் மாறுதல் செய்யப்படுகிறார். மாறுதல்
என்று சொன்னால், புரமோஷன், அடிஷனல் சூப்பிரன்டெண்
டாகத் திருநெல்வேலிக்கு மாற்றம் செய்யப்படுகிறார். ஆனால்
அவரை அங்கே அனுப்புவதற்குப் பதிலாக தொடர்ந்து சென்
னையில் இருக்க வேண்டுமென்று சொல்லி அவரை இங்கேயே
நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்
சென்று விட்டால் இங்கேயிருக்கின்ற இந்த விசாரணை சரியாக
நடைபெறாது என்றோ என்னவோ தெரியவில்லை, அவருடைய
மாற்றலைக் கேன்சல் செய்துவிட்டு இங்கேயே அவர் அடிஷனல்
சூப்பிரன்டெண்டாகப் போடப்படுகிறார். ஆனால் இன்றைக்கு
என்ன நிலைமை? இன்றைக்குச் செய்திப் பத்திரிகையிலே வரு
கிறது. அந்த வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டன,
அவர்களெல்லாம் நிரபராதிகள், தவறே செய்யாதவர்கள்.
யோக்கியமானவர்கள் என்று சொல்லி, அவர்கள் மீதுள்ள வழக்கு
களையெல்லாம் திரும்பப் பெற்றிருக்கிறீர்கள்.

(முற்பகல் 11·10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்
தலைவர் அவர்களே, அந்த வழக்கு திரும்பப் பெறப்படவில்லை
யாராவது அதிகாரியைத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்தால்
6 மாதத்திற்குள் வழக்குகள் நடைபெற வேண்டும், முடித்துவிட
வேண்டுமென்று கருத்து மத்திய அரசிலிருந்து அனுப்பப்பட்டி
ருக்கின்ற நிலையில் அதற்கு மேல் அவர்களைப் பதவி நீக்கம்
தற்காலிகமாகச் செய்யக் கூடாது என்கின்ற வகையில் அவர்களுக்
குப் பதவி அளிக்கப்படுகின்றதே தவிர, வழக்கு நடைபெறுகிறது.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே,
வழக்கு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நான்
தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம் அவர்கள் மீது எப். ஐ.
ஆர். போடப்பட்டு, அவர்கள் மீது குற்றப் பத்திரிகைத் தாக்கல்
செய்யப்படுகிறது. 6 மாதத்திற்குள் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட
வில்லை. அதன் காரணமாகத்தான் சஸ்பென்ஷன் செய்யப்
பட்டது. ரெவோக் செய்யப்படுகிறது. நான் கேட்க விரும்புவது
ஏன் 6 மாதங்களுக்குள்ளாக சார்ஜ் ஷீட் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அதுதான் முன்னால் இருந்தவர்
கள் நமக்குத் தந்திருக்கின்ற மூலதனம்.

திரு. நா. சுந்தரராஜ்: முன்னோர்கள் கொடுத்த மூல
தனத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு நாம் நடத்திக்கொண்
டிருப்பது வேறு. ஆனால், நாம் முறையாக, முழுமையாக,
ஊழல் செய்தவர்கள்—அடிதடி கேஸ் நடக்கிறது. அந்த கேஸை



1981 மே 7] [திரு. நா. சுந்தரராஜ்]

ரெவோக் செய்கிறோம். வேறு மாதிரி செய்கிறோம், அது
வேறு. ஊழல் சம்பந்தப்பட்டவர்கள்—தவறு செய்கிறார்கள்;
சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்
என்று காவல் துறை சம்பந்தப்பட்ட இலஞ்ச ஒழிப்பு—காவல்
துறை கண்காணித்து, சோதனை போட்டுக் கண்டு பிடித்திருக்
கிறது. இருந்தாலுங்கூட, சார்ஜ் ஷீட் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்
தலைவர் அவர்களே, இடையிடையே நான் பேசுவதற்குக்
காரணம், அவர் தவறான செய்திகளை வெளியிடக் கூடாது
என்பதற்காகத்தான். மீண்டும் சொல்கிறேன். விசாரணை
நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த வழக்கு கைவிடப்பட
வில்லை. நிச்சயமாக அவர்கள் மீது வழக்குப் போடப்படும்.
ஆனால், ரூபாய் 5, ரூபாய் 7 என்றெல்லாம் அவர்கள் பின்னால்,
விளக்கம் சொல்லி, அதற்கெல்லாம் நாங்கள் அவர்கள் மேல்
நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பதவி நீக்கம் தற்காலிகமாகச்
செய்திருக்கிறோம் என்றால், அது எப்படி நியாயமாகும் என்
றால், அதுவும் 6 மாதத்திற்குள் உண்மை வெளி வரக்கூடிய சூழ்
நிலை உருவாகவில்லையென்றால், அதை அனுமதிக்க முடியாது
என்ற வகையில்தான் அவர்களுக்கு மீண்டும் தற்காலிகப் பதவி
நீக்கத்திலிருந்து விடுதலை கொடுத்து பதவியிலே அமர்த்தியிருக்கி
றோமே தவிர, இந்த அரசுக்கு முன்னால் இருந்தவர்கள் தந்த
மூலதனம் என்று சொன்னேனே, அந்த மூலதனம், நமக்கிருக்
கின்ற சட்டமுறை, இங்கே ரெட் டேப்பிசம் என்று சொல்கிறார்
களே, அவை போன்றவைகள். அதனால்தான் தாமதமே தவிர
இந்த அரசின் அக்கறையின்மை காரணம் அல்ல என்று சொல்ல
விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே,
ரெட் டேப்பிசம் முறையை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால்,
முதலமைச்சர் அவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.
அவரே முன் மாதிரியாக ஏற்று, இந்த ரெட் டேப்பிசம் முறையை
ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுக்க வேண்டு
மென்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை
இந்த அவையிலே மிக வேகமாகக் கருத்து பரிமாறப்பட்டது.
திருவொற்றியூர் நகரில் ரூபாய் 2½ கோடி அளவிலே
பர்மாலின் ஆயில் கண்டு பிடிக்கப்பட்டு, அதைக் கூட, ஆளுங்
கட்சி உறுப்பினர் நம்முடைய சேலம் ஆறுமுகம் அவர்கள்
இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து
விவாதித்தார்கள். ஆனால், இன்றைக்கு எங்களுக்குக் கிடைக்

சுப்பையா அவர்கள் மாறுதல் செய்யப்படுகிறார். மாறுதல் என்று சொன்னால், புரமோஷன், அடிஷனல் சூப்பிரன்டெண்டாகத் திருநெல்வேலிக்கு மாற்றம் செய்யப்படுகிறார். ஆனால் அவரை அங்கே அனுப்புவதற்குப் பதிலாக தொடர்ந்து சென்னையில் இருக்க வேண்டுமென்று சொல்லி அவரை இங்கேயே நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர் சென்று விட்டால் இங்கேயிருக்கின்ற இந்த விசாரணை சரியாக நடைபெறாது என்றோ என்னவோ தெரியவில்லை, அவருடைய மாற்றலைக் கேன்சல் செய்துவிட்டு இங்கேயே அவர் அடிஷனல் சூப்பிரன்டெண்டாகப் போடப்படுகிறார். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? இன்றைக்குச் செய்திப் பத்திரிகையிலே வருகிறது. அந்த வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டன, அவர்களெல்லாம் நிரபராதிகள், தவறே செய்யாதவர்கள். யோக்கியமானவர்கள் என்று சொல்லி, அவர்கள் மீதுள்ள வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்றிருக்கிறீர்கள்.

(முற்பகல் 11·10)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு திரும்பப் பெறப்படவில்லை யாராவது அதிகாரியைத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்தால் 6 மாதத்திற்குள் வழக்குகள் நடைபெற வேண்டும், முடித்துவிட வேண்டுமென்று கருத்து மத்திய அரசிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கு மேல் அவர்களைப் பதவி நீக்கம் தற்காலிகமாகச் செய்யக் கூடாது என்கின்ற வகையில் அவர்களுக்குப் பதவி அளிக்கப்படுகின்றதே தவிர, வழக்கு நடைபெறுகிறது.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, வழக்கு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நான் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம் அவர்கள் மீது எப். ஐ. ஆர். போடப்பட்டு, அவர்கள் மீது குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்படுகிறது. 6 மாதத்திற்குள் சார்ஜ் ஷீட் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாகத்தான் சஸ்பென்ஷன் செய்யப்பட்டது. ரெவோக் செய்யப்படுகிறது. நான் கேட்க விரும்புவது ஏன் 6 மாதங்களுக்குள்ளாக சார்ஜ் ஷீட் கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் முன்னால் இருந்தவர்கள் நமக்குத் தந்திருக்கின்ற மூலதனம்.

**திரு. நா. சுந்தரராஜ் :** முன்னோர்கள் கொடுத்த மூலதனத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு நாம் நடத்திக்கொண்டிருப்பது வேறு. ஆனால், நாம் முறையாக, முழுமையாக, ஊழல் செய்தவர்கள்—அடிதடி கேஸ் நடக்கிறது. அந்த கேஸை



ரெவோக் செய்கிறோம். வேறு மாதிரி செய்கிறோம், அது வேறு. ஊழல் சம்பந்தப்பட்டவர்கள்—தவறு செய்கிறார்கள் ; சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று காவல் துறை சம்பந்தப்பட்ட இலஞ்ச ஒழிப்பு—காவல் துறை கண்காணித்து, சோதனை போட்டுக் கண்டு பிடித்திருக்கிறது. இருந்தாலுங்கூட, சார்ஜ் ஷீட் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இடையிடையே நான் பேசுவதற்குக் காரணம், அவர் தவறான செய்திகளை வெளியிடக் கூடாது என்பதற்காகத்தான். மீண்டும் சொல்கிறேன். விசாரணை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த வழக்கு கைவிடப்படவில்லை. நிச்சயமாக அவர்கள் மீது வழக்குப் போடப்படும். ஆனால், ரூபாய் 5, ரூபாய் 7 என்றெல்லாம் அவர்கள் பின்னால், விளக்கம் சொல்லி, அதற்கெல்லாம் நாங்கள் அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பதவி நீக்கம் தற்காலிகமாகச் செய்திருக்கிறோம் என்றால், அது எப்படி நியாயமாகும் என்றால், அதுவும் 6 மாதத்திற்குள் உண்மை வெளி வரக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லையென்றால், அதை அனுமதிக்க முடியாது என்ற வகையில்தான் அவர்களுக்கு மீண்டும் தற்காலிகப் பதவி நீக்கத்திலிருந்து விடுதலை கொடுத்து பதவியிலே அமர்த்தியிருக்கிறோமே தவிர, இந்த அரசுக்கு முன்னால் இருந்தவர்கள் தந்த மூலதனம் என்று சொன்னேனே, அந்த மூலதனம், நமக்கிருக்கின்ற சட்டமுறை, இங்கே ரெட் டேப்பிசம் என்று சொல்கிறார்களே, அவை போன்றவைகள். அதனால்தான் தாமதமே தவிர இந்த அரசின் அக்கறையின்மை காரணம் அல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, ரெட் டேப்பிசம் முறையை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், முதலமைச்சர் அவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அவரே முன் மாதிரியாக ஏற்று, இந்த ரெட் டேப்பிசம் முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை இந்த அவையிலே மிக வேகமாகக் கருத்து பரிமாறப்பட்டது. திருவொற்றியூர் நகரில் ரூபாய் 2½ கோடி அளவிலே பாமாலின் ஆயில் கண்டு பிடிக்கப்பட்டு, அதைக் கூட, ஆளுங் கட்சி உறுப்பினர் நம்முடைய சேலம் ஆறுமுகம் அவர்கள் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து விவாதித்தார்கள். ஆனால், இன்றைக்கு எங்களுக்குக் கிடைக்

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மே 7

கின்ற தகவல் சரியான முறையிலே சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக, அந்த வழக்கு கைவிடப்படுகின்றது என்கின்ற தகவல் வருகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, யாரோ வேண்டுமென்றே, என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களுக்கு எதிராக ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவே செய்துக் கொண்டிருக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அந்த வழக்கு நடைபெறுகிறது. அந்த வழக்கு நடைபெறுகிறது என்பது மட்டுமல்ல, கைவிடப் படவும் இல்லை. ஒரு பெரிய பணக்காரர் அந்த வழக்கிலே தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பிய போது கூட செய்தி வந்ததும், நாங்கள் யார், யாரை எச்சரிக்கை செய்ய வேண்டுமோ செய்து, அந்த வழக்கிலே எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த வகையில் பப்ளிக் பிராசிக்யூட்டரைக் கொண்டு வந்து அந்த வழக்கை நடத்தினோம். ஜாமீனில் வெளியேபோக வேண்டுமென்றபோதுகூட, நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதியினுடைய தீர்ப்பினால்தான் அவர் ஜாமீனிலே வெளியே வந்தார்கள். அரசு அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

அவருடைய பாஸ்போர்ட் தடை செய்யப்பட வேண்டுமென்று பப்ளிக் பிராசிக்யூட்டர் வற்புறுத்தினார். ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்கு வெளியூருக்குப் போய்வரலாம் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. நாங்கள் எதுவும் செய்ய முடியவில்லை. இப்பொழுதும் இந்த நிலைமைதான். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்த வழக்கைப் பின்பெற்றுக் கொள்வதாக இந்த அரசுக்கு எண்ணம் இல்லை.

**திரு. நா. சுந்தரராஜ் :** பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யாரோ எங்களைச் சிக்கலிலே மாட்டிவிடுவதற்காக இந்தச் செய்தியைச் சொன்னார்கள் என்று குறிப்பிட்டார்கள். யாரும் எங்களைச் சிக்கலில் மாட்டிவிடமுடியாது. நானும் சரி, என்னுடைய கட்சியும் சரி, தனித்தன்மையோடுதான் செயல்படுகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் 'நாங்கள் தனித் தன்மையோடு செயல்படுகிறோம்' என்று ஒருமகிழத்தக்க செய்தியை இங்கே தெரிவித்தார்கள். அப்படியானால் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தோடு மேற்கொண்ட தேர்தல் உறவு அறுபட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 மே 7]

**திரு. நா. சுந்தரராஜ் :** அது வேறு - இது வேறு. மணலியில் இருந்து திருவொற்றியூர் வழியாக தண்டையார்பேட்டையில் உள்ள கிடங்குக்கு குழாய் மூலம் இந்திய எண்ணெய் கழகத்திற்கு டீசல் மற்றும் பெட்ரோல் போன்ற எண்ணெய் அனுப்பப்படுகிறது அந்தக் கான்கிரிட் குழாய்களை வழியில் உள்ளவர்கள் உடைத்து எண்ணெய் எடுத்து இருக்கிறார்கள். அப்படி எடுத்து எண்ணெய்யை ஒவ்வொரு பேரலும் 1,000 ரூபாய்- 2,000 ரூபாய் என்று விற்று இருக்கிறார்கள். இதைத் தமிழ்நாட்டில் உள்ளகாவல் துறை சரியாகக் கண்டுபிடிக்கவில்லையென்றதால், மத்திய காவல் துறை அதற்காக நடவடிக்கைஎடுத்துக் கண்டு பிடித்தது. கண்டுபிடிக்கப்பட்ட பின்பு என்னமேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால்-அங்கேயுள்ள காவல் துறை கண்காணிப்பாளர் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார். மாநில காவல் துறை கண்டுபிடிக்கமுடியாத ஒன்றைக் கண்டுபிடித்ததற்காக- அந்தத் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை தொடர் மேல் நடவடிக்கை- மாநில அரசு எடுக்க வேண்டும் என்பதற்கு பதிலாக- அதைக் கண்டுபிடிக்க உறுதுணையாக இருந்த அதிகாரி மாற்றப்படுகிறார். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் எதுஎதற்கோ போராட்டம் நடத்துகிறார். சுடுகாட்டுக்குப் பாதை வேண்டும் என்று கூட போராட்டம் நடத்தி இருக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெரிய மோசடியைக் கண்டுபிடிக்க போராட்டம் நடத்தியிருந்தால் அவரைப் பாரட்டியிருப்பேன். அவர் அப்படி ஒரு போராட்டம் நடத்தவில்லையே என்பது என் வருத்தம்.

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் போது, ஒரு தலைவரைப் பற்றி அப்படிச்சொல்வது மிகவும் வருந்தத்தக்கது. மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்தார்கள். இதில் மத்திய சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது. எது எதற்கோ மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறபோது இது போன்ற பிரச்சனைகளில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

**திரு. நா. சுந்தரராஜ் :** திண்டிவனத்திற்கு அருகில் உள்ள மயிலம் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு 100 தாய்மார்களின் தாலி இரவு தூங்குகிற நேரத்தில் அறுக்கப்பட்டு இருக்கிறது ஏதோ மயக்க மருந்து போட்டுவிடுகிறார்களாம், அதனால் ஒன்றும் தெரியவில்லையாம். அருகில் கணவன் இருந்தும் ஒன்றும் செய்யமுடியாத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது குறித்து காவல் துறை அதிகாரிகளுக்குத் தகவல் தரப்பட்டும் அவர்கள் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் கூட அதுபற்றி தெரிவித்து இருக்கிறார் இதுநாள் வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை, அதை ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு நா. சுந்தரராஜ்] [1981 மே 7

கைரேகை நிபுணர்களுக்கு எஸ். ஐ.களுக்கு வழங்கப்படும் ஊதியம் உயர்த்தப்படவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹோம் கார்ட்ஸ்ஸுகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 3.50 என்று இருப்பதை உயர்த்தி ரூ. 5 என்று கொடுக்கவேண்டும். அதே போல் காவல்துறையினருக்கு என்னென்ன சலுகைகள் வழங்கு கிறார்களோ அந்தச் சலுகைகளை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் பேசிய நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சேலம் ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் சம்பந்தமாக ஒரு விரிவான கருத்தைச் சொன்னார்கள். அப்போதே நான் கேட்டேன். பதில் சொல்ல வாய்ப்புத் தரவேண்டும் என்று. அந்த வாய்ப்புத் தர அப்போது முன்வரவில்லை என்பதைக் குறையாகச் சொல்லவில்லை. இப்போது அதற்கு பதில்-சொல்லிவிட விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த ஒரு சாதாரணத் தொண்டன் மத்திய அரசாங்கத்தையோ- அல்லது மத்திய அமைச்சரையோ பேசுவதைப் பற்றி எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அது அரசியல் நாகரிகம், அரசியல் பிரச்னை, அரசியலிலே பேசலாம். ஆனால் ஒரு பெரிய பொறுப்புள்ள அமைச்சர், மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் சுமுகமான உறவு இருக்க வேண்டும் என்று நம்புகிறவர்கள்- மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் பிரதம அமைச்சராக இருக்கின்ற இந்திரா காந்தி அவர்களைப் பார்த்து இப்படிப் பேசுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை, மற்றபடி அரசியல் ரீதியாகப் பேசுவது வேறு. தனிப் பட்ட நபர் பேசுவது வேறு.

ஒரு பொறுப்புள்ள அமைச்சர் தரக்குறைவாக மத்திய அரசையும், மத்திய அமைச்சர்களையும், திருமதி இந்திரா காந்தி அவர்களையும் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே தவிர மற்றபடி வேறு எந்தப் பிரச்னையும் இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். நான், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜனிடம் கேட்டுக்கொள்வது, மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் உபயோகப்படுத்திய வார்த்தையைப் பற்றிச் சொன்னார்கள் ஆனால் மத்திய அமைச்சர் மிஸ்டர் சேத்தி அவர்கள் நம்முடைய முதலமைச்சரைப் பற்றி இங்கே-சென்னை பொதுக் கூட்டத்தில்



1981 மே 7] [திரு. ரா. உமாநாத்]

If he has got a little sense of shame, he must resign. கொஞ்சமாவது மானமோ, ரோஷமோ, வெட்கமோ இருந்தால் என்று சொன்னாரே, அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனால் இந்த மாநில அமைச்சர் ஒருவர் சொல்லி விட்டார் என்றவுடன் ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள். இது சரியா ?

திரு. நா. சுந்தரராஜ் : என்னைப் பொறுத்தவரையில் ஒரு அரசு இன்னொரு அரசோடு சுமுகமான உறவோடு இருக்க வேண்டுமே தவிர மோதலில் இருக்கக்கூடாது. அவர் பேசி யிருந்தாலும் அது தவறுதான், ஆனால் அதே நேரத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் பேசியதும் தவறுதான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்களே, காவல் துறை மானியத்தின் சார்பாக இங்கே கருத்துரை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுப்போடும் கண்ணியத்தோடும், எந்த எந்த வார்த்தைகளை எவ்வளவு கடுமையாக விமரிசிக்க வேண்டியிருந்தாலும் கூட நாகரிகத்தின் அடிப்படையில் அந்த வார்த்தைகளை உருவாக்கிப் பேசுவது எப்படி என்பதை மற்றவர்களும் புரிந்து கொள்ளுகின்ற வகையில் இந்த மாமன்றத்தில் கருத்துக்களைத் தெரிவித்திருப் பதை காதாரக் கேட்டும், படித்தும் நான் மிக மிக மகிழ்ச்சி யடைகிறேன். அதற்காக இந்த அரசின் சார்பாக மாமன்ற உறு பினர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த மட்டில் மிகப்பெரிய பிரச்னையை உள்ளிட்ட ஒரு மாபெரும் இயக்கித்தினுடைய மறுபதிப்பை, உணர்வை வைத்து நாம் விமரிசிக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் காவலர்களைப் பற்றி, காவல் துறையைப் பற்றி எந்த அளவுக்கு நாம் உரிமையோடு குற்றச்சாட்டுகளைக் கூறி நாம் நமது கடமையை நிறைவேற்ற முன்வருகிறோமோ அதைப்போல அவர்களை அவர்களுடைய சிறந்த சேவைக்கு பாராட்ட வேண்டுமென்ற வகையிலும் இந்த மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டி வந்ததை எண்ணி நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன்.

வெறும் குற்றச்சாட்டுகளை மட்டுமே சொல்வது என்பதும் அல்லது குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தாலும் இல்லா விட்டாலும் கூட அவைகளை உருவாக்கிக்கொண்டு அதுபற்றி பேசுவது என்பது கூட சிலருக்கு கைவந்த கலையாக இருந்தாலும் கூட, இந்த அவையில் இரண்டொரு நாள் தொடர்ந்து நடை பெற்ற விவாதத்தில் கூடுமானவரையில் உண்மையை இந்த

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

அவைக்கு சொல்லவேண்டுமென்ற ஆர்வத்தில் சொல்வதும், அது உண்மையல்ல என்று தெரிந்தபோது அதை அப்படியே ஏற்றுக்கொள்கின்ற பண்பையும் நாம் இங்கே கண்டோம். இந்த மரபு வளரவேண்டும், தொடர வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் ; விரும்புகிறோம். அதற்கு ஒத்துழைக்க நாங்கள் மிக மிக கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மாமன்றத்தில் இதைப்போன்ற பிரச்னையில் கருத்து வேறுபாடுகள், கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும் கூட யாராவது ஒருவர் அதற்காக தன்னுடைய மாற்றுக் கருத்தைச் சொல்லி, எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக வெளியேறுகிறேன் என்று சொல்லுகிறபோது அதை மதிக்கின்றவர்களாகத்தான் அதை எதிர்க்கின்ற கருத்துக்குச் சொந்தக்காரர்கள் இருக்க வேண்டுமே தவிர, இந்த மாமன்றத்திலிருந்து வெளியேறுகிறவரை அவமதிக்கின்ற வகையில் பேசுவது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதையும் அப்படி யாராவது எங்கள் தரப்பிலே செய்திருந்தால் கூட இந்த அரசு, இந்த அரசை நடத்துகின்ற நாங்கள், எங்களை அனுப்பியிருக்கின்ற எங்களுடைய கட்சி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம் எவ்வளவு செம்மையாகவும் ஒரு வினாடி கூட வீணாக்காமலும் இந்த நாட்டின் நன்மைக்காகப் பேசப்படுகின்ற கருத்துக்களாக இந்த மமன்றத்திலே ஏற்படவேண்டுமோ அப்படி பணியாற்றி நீதிமன்றங்களுக்குக் கூட இப்படித்தான் நியதி என்று நியதிகளையும், வரம்புகளையும் கட்டி சட்டங்களை உருவாக்குகின்ற இந்த மன்றம் நீதியின் தலைமையிடம் என்று சொல்லிக்கொள்கின்ற அந்த அளவுக்கு இருக்கின்ற உரிமையைப் பெற்றிருக்கின்ற இந்த மாமன்றம் கண்ணியக்குறைவாகவும், கேவலமாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற அந்த இடத்திற்குப் போகுமானால் தன் தகுதியை அது இழந்துவிடும் என்ற அச்சத்தைப் பொறுத்தவரையிலே நாங்கள் யாருக்கும் பின்னாலேயோ போய்விடவில்லை, என்பதோடு மட்டுமல்ல, மற்றவர்களுடைய தரத்திற்கேற்ப நாங்களும் ஒத்துப்போகத் தயாராக இருக்கிறோம், அதைக் காப்பாற்ற முனைவோம் என்பதை மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மானியக் கோரிக்கையிலே பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் நன்மை தீமைகளை வைத்து கருத்துக்களை வெளியிட்டுள்ளீர்கள். அதே



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

போன்று தங்களுடைய தொகுதியில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றியும் வெளியிட்டுள்ளீர்கள். இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் மிகச்சீராகவும், செம்மையாகவும் தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டும் வகையிலே கருத்துக்களைச் சொல்வதற்கு இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசிலிருந்து, மாநில அரசிலிருந்து, வகுப்பு வாதங்களிலிருந்து, வேலை நிறுத்தத்திலிருந்து, ஜாதிக் கலவரத்திலிருந்து இப்படி பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் உள்ளடக்கி அதற்கு இந்த காவல் துறைக்குத் தரவேண்டிய மானியத்தைப் பற்றிய விவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளீர்கள். ஆகவே இவ்வளவு திறமை உடையவர்கள் இருக்கின்ற இந்த மாமன்றம் எப்படித் தவறான பாதையில் செல்ல முடியும் என்பதை என்னால் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆகவே இங்கே இரண்டு நாட்களாக நடந்த இந்த விவாதம் தமிழகத்திற்கு இந்த மாமன்றம் எப்படி பொறுப்போடு நடக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையிலே மிகத் தெளிவாக அதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். உங்களுடைய அந்த பெருமையில் நான் பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து காவலர்களைப் பற்றி ஒன்றை நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை சில சமயம் நாம் பாராட்டுகிறோம், சில சமயம் கண்டிக்கிறோம், ஒரு தாயைப் போல, சில சமயம் அரவணைக்கிறோம். சில சமயம் எதிர்த்து இது சரியல்ல என்ற அறிவுரை சொல்கிறோம் ஒரு ஆசானைப்போல, தந்தையைப் போல. ஆனால் சிலர் தவறாகக் கற்பனை செய்துகொண்டு அந்தக் காவல்துறை என்பதே மிகவும் மோசமான துறை என்றும் அதிலே இருப்பவர்களுக்கு நாகரீகம், கண்ணியம், பண்பாடு என்பது எதுவுமே தெரியாது என்று கருதுகின்ற வகையிலே சில செய்திகளை மட்டும் சொல்வது என்பது அதாவது குற்றச்சாட்டுக்களை மட்டும் சொல்வது என்பது அல்லது இவைகளை மட்டுமே வெளியிடுவது என்று சிலர் கடைப்பிடிக்கின்ற முறையின் காரணமாகத்தான் மக்கள் மத்தியிலே காவல்துறை என்று சொன்னவுடனே ஐயோ என்று சொல்கின்ற நிலைமைகள் கூட உருவாகிறது என்பதை நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். மற்ற துறைகளின் அலுவலர்களை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளை எடுத்துக்கொண்டால் எந்தெந்த வேலைகளிலே அவர்கள் பங்குகொண்டிருக்கிறார்களோ அந்தந்த வகையிலே தங்கள் கடமைகளைச் செய்து புகழ்பெறுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாராட்டுகளைப் பெறுவதற்கும் நிறைய வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கின்றன. அவர்களைப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

பொறுத்தவரையில் வேண்டும் என்றால் சில நேரங்களில் அவர்கள் தங்களது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை அல்லது இங்கிருந்து மக்களின் பிரச்சினைகளைச் சொல்வதற்காகச் செல்பவர்களை மதிப்பதில்லை என்று இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தான் இருக்கும். அல்லது தாமதம் ஆகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கும். ஆனால் காவல் துறையைச் சேர்ந்த எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், சாதாரணக் காவலர்களாக இருந்தாலும் அவர்கள் அத்தனை பேரும் யாரோ ஒருவரிடமிருந்து ஒரு பாராட்டைப் பெறுவது என்பதே மிகவும் அரிதானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் யாருக்காவது சம்பளம் போதவில்லை, உயர் பதவிகள் கிடைக்கவில்லை என்ற அந்தப் பிரச்சினைகளோடு அவர்களுடைய கோரிக்கைகளும், விண்ணப்பங்களும், போராட்டங்களும் நின்று விடும். ஆதரித்து சொல்கிறவர்கள் அவர்களுக்கு நிறைய பேர்கள் இருப்பார்கள். எதிர்ப்பவர்கள் கூட, அரசியல் கணக்கு பார்க்கிறவர்கள் கூட, அவர்கள் போராட்டங்களின் கோரிக்கைகளை யோசித்து அது முடியுமோ, கொடுக்கக் கூடுமா, அது அவசியம் தானா என்று கேள்விகள் எழுப்பி பார்ப்பார்களே தவிர, இவர்கள் நேரம் பார்க்காமல் பிரச்னைகளை கொண்டு வருகிறார்களே என்று வேண்டுமானால் ஏதாவது குற்றம் சொல்லலாமே தவிர, மற்றபடி எல்லோருமே அவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் இருப்பார்கள். யாரிடமும் அதிகமாக எதிர்ப்பை சேகரித்துக் கொள்ள வேண்டிய அவசியம், உருவாக்கி கொள்ள வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இல்லை. ஆனால் காவல் துறையின் எதிர்ப்பை பொறுத்த மட்டில் அப்படியில்லை.

[முற்பகல் 11.30]

நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். என்னிடமிருக்கும் பட்டியலைப் படித்தால் அவர்களுடைய பணி எவ்வளவு சிக்கலானது என்பது மட்டும் அல்ல; எவ்வளவு சிறப்பானது என்பது மட்டும் அல்ல; எவ்வளவு தொல்லையானது என்பதோடு அதே சமயத்தில் எவ்வளவு தொந்திரவானது என்பதும் கூட நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அவர்களுக்கு இருக்கிற கடமை சட்டம் ஒழுங்கை பாதுகாத்து; குற்றங்களை தடுத்து, குற்றவாளிகளை கண்டு பிடிப்பதோடு மட்டுமல்லாமல், போராட்டங்கள் வரும்போது அவர்கள் முன் வந்து நின்று, இந்தப் போராட்டங்கள் சரியாக அமைதியாக நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு வேளை சட்டத்திற்கு முரணாக, இருந்தால், அவர்களுக்கு இட்டிருக்கிற ஆணைபடி செயல்பட்டு அவர்களுடைய பணிகளை



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அவர்கள் மேற்கொள்ள வேண்டும். நான் தமிழகத்தில் நடக்கிற சில விஷயங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்—முழுவதையும் குறிப்பிட நேரம் இல்லை என்றாலும் சிலவற்றையாவது நான் குறிப்பிட்டாக வேண்டும்.

எந்த எந்தத் தரப்பை அவர்கள் எதிரியாக்கிக் கொள் கிறார்கள், அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதன் மூலம் என்பதை நாம் முதலிலே நினைவு படுத்திக் கொள்வோமே யானால், அந்தக் காவலர்களுக்காக பரிந்து பேச வேண்டிய வர்கள் நாம் மட்டும் அல்ல, இந்த மாநிலம் முழுவதும் உள்ள வர்கள் மட்டும் அல்ல; எங்கெங்கே மக்கள் இருக்கிறார்களோ, அங்கே உள்ள அத்தனை பேர்களும் அவர்களுக்கு அனுதாபத் தைக் காட்ட வேண்டியவர்களாகத் தான் இருக்கிறார்கள் என்பதை நாம் உணருவதற்கு இது உதவும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் போராட்டம் என்பதை எடுத்துக் கொள்வோம். அதிலே எத்தனை வகை? போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டம்; டாக்சி பணியாளர்கள் போராட்டம், சைக்கிள் ரிக்ஷா போராட்டம், ஆட்டோக்கள், போராட்டம்; கை வண்டிக்காரர்கள் போராட்டம்; மூட்டை சுமப்பவர்கள் போராட்டம்; அரசு ஊர்தி ஓட்டுபவர்கள் போராட்டம்; விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஒரு தரப்பினர் போராட்டம்; அதிலே பெரிய விவ சாயிகள் கூலி உயர்வு கூடாது என்று போராட்டம்; ஆலைத் தொழிலாளர்கள் போராட்டம்; பஞ்சாலைகளிலே போராட் டம்; நூற்பு ஆலைகளிலே போராட்டம்; சர்க்கரை ஆலை களிலே போராட்டம்; சைக்கிள் தொழிற்சாலையிலே போராட்டம்; மோட்டார் சைக்கிள் தொழிற்சாலையிலே போராட்டம், கார் தொழிற்சாலைகளிலே போராட்டம், லாரி தொழிற்சாலைகளிலே போராட்டம்; இது போன்ற இன்ன பல

இது போக நெசவுத் தொழிலாளர்கள். மீதன் தொழி லாளர்கள் போராட்டம்; ஊதிய உயர்வு கோரி. ஆசிரியர்கள் போராட்டம்; மருத்துவர்கள் போராட்டம்; மருத்துவமனை களில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம். அங்கே இருக்கிற நர்சுகள் போன்ற இன்னொரு பகுதி பிரிவினர்கள் இருந்தால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்;

துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டம்; கட்டிடத் தொழிலாளர்கள் போராட்டம்; அணைக்கட்டு தொழிலாளர்கள் போராட்டம்; சிறைச்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம்;

மின் உற்பத்திக்காக அமைப்புகள் உருவாக்கும் பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம் ; அது மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ரமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும் : அரசு இதழ் பதிவு பெறாத ஊழியர்கள் போராட்டம். இது போக அரசியல் கட்சிகள்.

திரு. ரா. உமாநாத் : காவலர்கள் போராட்டமே இருக்கிறதே.......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதை கடைசியில் சொல்கிறேன். அரசியல் கட்சிகள் எத்தனை என்று என்னால் இப்போது எண்ணிக்கை சொல்ல முடியாது. அது போக மதசார்பற்ற, மதசார்புற்ற கட்சிகள். அதற்குப் பிறகு ஜாதிகளைக் காப்பாற்றும் கட்சிகள், ஜாதிகள் வேண்டாம் என்று சொல்கிற கட்சிகள். விவசாயிகள், மாணவர்கள், அவர்களில் நிர்வாகத்தை எதிர்த்து, ஆதரித்து போராட்டங்கள் ; அதே போல ஆசிரியர்களை எதிர்த்து, ஆதரித்து போராட்டங்கள் அவர்களுக்குள்ளேயே அதாவது மாணவர்களுக்குள்ளேயே போராட்டம். கிராம அதிகாரிகள் போராட்டம் ;

கிராம அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்வதற்கு ஒரு போராட்டம் ; கிராம அதிகாரிகள் பழைய நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் ; ஜாதி ஒழிப்புப் போராட்டம் ; பெயர் மாற்றப் போராட்டம் ; பெயர் மாற்றப் போராட்டம் என்றால் பெயர் அழிக்கும் போராட்டம் ; பெயர் எழுதும் போராட்டம் , ஜாதிப் பெயர் இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு போராட்டம் ; இப்போது அண்ணாப் பிள்ளை தெருவில் ஏன் பிள்ளையை அழிக்கிறீர்கள், அது அண்ணா என்று இருந்து விடாதா என்று அதே எண்ணத்தில் உள்ளவர்கள் போராட்டம் ; கள்ளக்கடத்தல், கலப்படம், இவைகளுக்காக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பொது நலம் விரும்புகிறவர்கள் போராட்டம் ; நுகர் பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் போராட்டம், மதுவிலக்குப் போராட்டம் ; மதுக்கடைகள் மறியல் போராட்டம் ; விலைக் குறைப்புப் போராட்டம் ; விலை உயர்வுப் போராட்டம் ; மீனவர்கள் போராட்டம், மீனவர்களுக்குள் போராட்டம் ; நடை பாதை வியாபாரிகள் போராட்டம், அவர்கள் இடம் வேண்டுமென்று கேட்கக் கூடாது, அவர்களுக்குக் கொடுக்க கூடாது என்று இன்னொரு தரப்பு வியாபாரிகள் போராட்டம் ; தண்ணீர் கேட்டுப் பானை உடைப்புப் போராட்டம் ; தன் பகுதியிலிருந்து தண்ணீர் எடுக்காதே என்று போராட்டம்.

இது போக திருட்டுக்கள். சைக்கிள் திருட்டு, கார் திருட்டு, வழிப்பறி திருட்டு, வீடு புகுந்து திருட்டு; இது போக குழந்தைகள் திருட்டு, இளைஞர் திருட்டு, முதியோர்கள் திருட்டு , காணாமல்



போனால் திருடப்பட்டுவிட்டார், கண்டு பிடிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். மணப்பெண் திருட்டு, மணமகன் திருட்டு மணமகன், மணமகள் இரண்டு பேரும் திருட்டு.

ஜாதி பெயரால் கொலை, சொத்துப் பெயரால் கொலை, அரசியல் வேறுபாடு என்ற பெயரில் கொலை, கடைசியில் நக்ஸலைட் என்ற பெயரில் கொலை, இவ்வளவையும் கண்டு பிடித்து இவைகளைத் தடுத்து பணியாற்ற வேண்டியவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள், எங்கேயாவது எந்த சமுதாயத்தின் பிரதிநிதிகளாவது இதில்லாமல் இருக்க முடியுமா ? எந்தப் பிரிவிலாவது ஒரு சில மக்கள் காவல் துறை எடுக்கிற நடவடிக்கையால் பாதிக்கப்படக் கூடியவர்கள் இருப்பார்கள் திருடு கொடுத்தவனும் சரி திருடியவனும் சரி காவல் துறைக்கு எதிரிகளாவர். இந்த நிலையில் நாம் காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு கேட்கும் போது, உங்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறீர்கள் என்பதில் நான் மகிழ்ச்சி கொள்ளும் போது ஒன்றை மனம் விட்டு சொல்ல விரும்புகிறேன். இதையெல்லாம் நாங்கள் மனதில் வைத்துப் பேசினீர்கள் என்பதை நான் உலகுக்குச் சொல்வதற்காக இந்தப் பட்டியலை நான் இங்கே படித்தேன். இன்னும் பட்டியல் பெருகும். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்டவர்கள், இவ்வளவு பெரிய பிரச்சினைளை அவர்கள் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் போது அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற பயன் என்ன எதிர் காலத்தில் ஓய்வெடுக்கும் போது அவர்களுக்குக் கிடைக்க இருக்கிற பயன் என்ன என்றால் ஒரு பயனும் இல்லை. கெட்ட பெயரைத் தவிர. லஞ்சம், ஊழல்—இதுதான் அவர்களுக்குத் தரப்படுகிற பட்டம். தவறுகள் சிலயிடங்களில் இருக்கும். நான் இல்லையென்று சொல்லவில்லை. இங்கே கூடச் சொன்னார்கள், கையூட்டு பெறுகிறார்கள் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள், காரணம், அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வசதி ரூ. 10 உயர்த்தியிருந்தால் செய்திருக்க மாட்டார்கள். அது போன்று வசதிகள் எல்லாம் செய்ய வேண்டும் அது இல்லாததால் அவர்கள் தவறு செய்ய வேண்டி உள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள் நான் கேட்கிறேன் ரூ 10, ரூ 20 மட்டும் முக்கியமானதல்ல. இந்த கையூட்டு என்றால் எங்கிருந்து எது வரைப் போகிறது என்பதை நாம் கொஞ்சம் கவனித்தால்தான் தெரியும். 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' என்று அழகாகப் பேசுவார்கள். எங்கெங்கோ இருப்பது அங்கே எதிரொலிக்கிறது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிலர் அந்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். யாருக்குமே கெட்ட பெயர் வாங்க வேண்டும், கடமையிலிருந்து வழுவ வேண்டும் என்ற அந்த எண்ணம் இருக்காது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவை, நெருக்கடி இவைதான் ஒரு மனிதனைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லுகிறதே தவிர, பிறக்கும் போதே யாரும் கெட்டவனாகப் பிறப்பதில்லை. சாகும் போதும் யாரும் கெட்டவனாக சாவதில்லை. ஆனால் சிலர் இருக்கிறார்கள். என் மகன் செத்தாலும், என் மருமகள் தாலி அறுத்தாலும் பரவாயில்லை என்றிருக்கிறார்கள். இப்படி ஒரு இலட்சத்தில் ஒருவர், ஒரு கோடியில் ஒருவர் இருப்பார்கள். அவர்களை மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள். ஆனால், இந்த நிலையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்கள் மீது அனுதாபம் கொண்டிருக்கிறது என்று சொல்லும் போது, மற்றவர்கள் மீது அனுதாபம் இல்லை என்று சொல்ல முடியாது. அனுதாபம் என்று சொன்னால், ஒரு தாய்க்கு ஒரு ஊனமுள்ள குழந்தை, கைகால் விளங்க வில்லை ; இன்னொரு குழந்தை அறிவு மழுங்கி, மூளை வளர்ச்சியில்லை ; இன்னொரு குழந்தை கண் பார்வை இல்லை, கைகால் விளங்காது. அதிலே அந்தத் தாய் யாருக்கு முதலில் உணவு கொடுப்பாள் என்றால், பார்வை தெரியாத, கைகால் விளங்காத அந்தக் குழந்தைக்கு முதலில் கொடுத்து விட்டு, கண்பார்வை தெரியாத அந்தக் குழந்தைக்கு முதலிலே கொடுத்து விட்டு, பிறகு அதே சமயத்தில் அறிவு மழுங்கிய இன்னொரு குழந்தைக்கு கொடுக்க விரும்புவாள் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். அந்த வகையில் இந்த அரசு தன் கடமையைச் செய்ய முனைகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 11.40].

சங்கங்களுக்கு உரிமை கொடுத்தீர்கள் என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது ; நடை முறையில் உண்டா என்கிறார்கள் ; அந்தத் தவறுகளைச் செய்தவர்கள் மீது அரசு முன்னதாகவே கவனிக்கச் சொல்லி, அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு அரசு விதித்துக் கொடுத்திருக்கிற அந்த விதிமுறைகள்படி அவர்கள் தங்களுடைய சங்கத்தை அமைத்துக் கொள்ள இந்த அரசு துணை நிற்கும் என்பதையும், அதற்கு ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சில இடங்களில் சில அதிகாரிகள் வேண்டாத காரியத்தைச் செய்கிறார்கள், பிடிவாதமான காரியத்தைச் செய்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எஸ். பி. கணேசன் என்பவர் மீது அப்படிச் சொன்னார். ஆனால், இதே கணேசன் தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் கொடுக்கக் கூடாது என்ற போராட்டத்



தின் போது, வேறு சிலர் கண்டித்த போது, அவர்களுக்கு எதிராக உரிமையைப் பெற, தாழ்த்தப்பட்டவர்களுக்கு துணை நின்று போராடி, தன் கடமையைச் செய்தார் என்ற பாராட்டை....

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு கரெக்ஷன் மட்டும். அதே எஸ். பி. கணேசன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் ஒதுக்கப்படுவதற்கு தாக்கப்பட்டபோது, பாதுகாப்பாக இருந்தார் என்று நான் பாராட்டவில்லை ; நான் கலெக்டரைப் பாராட்டினேன். அது முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகம் வரும். அதே எஸ். பி. கணேசன், அதே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலம் அளிக்க வேண்டுமென்றபோது, தன் அதிகாரத்தால் அங்குள்ளவர்களை கட்டி வைத்து, அந்த நிலப் பிரபுக்கள் கிராமத்திற்கு கொண்டு போனதற்குப் பிறகு, 9 பேர்களை கைது செய்து கொண்டு போனது அவரது தலைமையில் தான். அந்த எஸ். பி. வேண்டுமென்றே இரண்டு லாரிகளில் பார்டியை, படாலியனை வைத்துக் கொண்டு கைது செய்தார். அதற்குப் பிறகு தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி, வாபஸ் பெற வேண்டும் என்று சொல்லி வாபஸ் பெறப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இவ்வளவு நல்ல சாட்சியாகச் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அரசு உத்தரவின் பேரில் தான், அந்த எஸ். பி. கணேசன் அவர்கள் தன் கடமையைச் செய்தார்களே தவிர, விவசாயிகள் மீது கைவைக்கக் கூடாது என்ற இந்த அரசினுடைய கருத்துக்களை பிரதிபலித்தார்களே தவிர, நாங்கள் உத்தரவிட்ட பிறகு, அதை நிறைவேற்றாமல் திரும்பவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும், கைது செய்ய வேண்டும் என்று உத்தர விட்டோம். அதற்குப் பிறகு விவசாயிகளாக இருந்தாலும் அல்லது யாராக இருந்தாலும், அவர் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தார்கள் அப்படி இந்த அரசினுடைய உத்தரவிற்குக் கீழ்படிந்து, தன் கடமையைச் செய்கின்ற ஒருவர் ஒருவேளை பாராட்டப்படுகின்றார் ; இன்னொரு வேளை குற்றஞ் சுமத்த வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

அதற்கு முழு காரணம் அரசுதான், மேல் அதிகாரிகள் தானே தவிர அந்த குறிப்பிட்ட அதிகாரி அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விழைகிறேன். அப்படி தவறு வேண்டுமென்றே நடந்திருந்தால் டி. ஐ. ஜி. பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் ;

அல்லது ஐ.ஜி. பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது டி.ஜி.பி. பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே எந்தத் தரப்பிலிருந்தும் பின் வாங்க அல்லது ஓடிப்போக நாங்கள் தயாராக இல்லை; விசாரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் அதை. அவரைப் பொறுத்தவரை நிச்சயமாக கடமையை ஆற்றிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது என்பதை மட்டும் சொல்லி, அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் பொய் என்று சொல்லத் தயாராகயில்லை; அந்த வார்த்தை சட்டமன்றக் குறிப்பிலே இருக்கக்கூடாது; உண்மைக்கு புறம்பானது என்று சொல்ல வேண்டும் என்ற வகையிலும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு காரணம் அது பொய் அல்ல. அதை நம்புகிற அளவிற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் விசாரித்த பிறகுதான் அதுபற்றி ஒரு முடிவை சொல்ல முடியும் என்பதை நான் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். இதைப் போல, பல பிரச்சினைகள் வருகின்றன. இங்கே மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களுக்கு கிடைத்த செய்தி கடிதத்தின் மூலமாகவோ, அல்லது வேறு வகையிலோ எடுத்துச் சொல்கிறபொழுது படித்து காண்பிக்கிறார்கள். எனக்கு அப்போதுதான் தகவல் கிடைக்கிறது. விசாரித்து பதில் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. விசாரித்துச் சொல்வதற்கான வாய்ப்பு கிடைக்குமானால் அவ்வப்போது சொல்ல முடியும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தது. உடனே பதில் சொல்ல முடிந்தது. ஏதோ ஒரு ஊரிலிருந்து இப்படித்தான் நடந்தது, தற்கொலை செய்து கொண்டார், அல்லது கொலை செய்யப்பட்டார்; தீ வைத்தார்கள் என்றெல்லாம் சொல்லும்போது கிராமங்களிலே ஆனாலும் சரி, ஏதோ ஒரு சிற்றூரில் ஆனாலும் சரி, நகரத்திலேயானாலும் சரி, அத்தனை செய்திகளும் ஒரு முதலமைச்சருக்கு முழுமையாக வந்து சேர்ந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. போலீஸ் முன்பே விசாரித்து இருந்தால் முழுமையான தகவல்களைப் பெற்று நாம் இங்கே சொல்லியிருக்க முடியும்.

நான் அதற்கு ஒரு உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்பொழுது, அந்த ஞானசவுந்தரி கொலை வழக்கைப் பற்றி, அதாவது மரணத்தைப் பற்றி; கொலை வழக்கு என்றும், தற்கொலை என்றும் இப்படி பல்வேறு காரணங்கள் சொல்லி இங்கே பேசப்பட்டிருக்கிறது; அதைப்பற்றி முழு விவரத்தையும் நான் சொல்லக் கூடாது, அது விசாரணையில் இருக்கிற காரணத்தால்; இருந்தாலும் கடிதங்கள், கையெழுத்துக்களைப்பார்த்தால் எவ்வளவோ உண்மைகள் இன்னும் வெளி வரவில்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும். அதை இங்கே கொண்டு வந்திருந்தால்கூட



அதை நான் வெளியிடப் போவதில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். அதை தலைவருக்கு வேண்டுமானால் அனுப்பி வைக்கிறேன். மாமன்றத்து உறுப்பினர்கள் பார்க்க வேண்டுமென்றால் அதைப் பார்க்கட்டும். ஆனால் உண்மை நிலைமையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். செய்திகள் இப்போது எதற்கெடுத்தாலும் வெவ்வேறு விதமாக வருகின்றன. நான் இதே மன்றத்தில் முன்பு வேண்டுகோள் விடுத்தேன். பத்திரிகையிலே செய்தி, இங்கே சொல்கின்றவர்கள் எதைச் சொன்னாலும், அதை வெளியிடும்போது எச்சரிக்கையாக வெளியிடுங்கள் என்று நான் வேண்டி கேட்டுக்கொண்டேன். அதற்கு என்ன பலன்? இன்றைக்குக் காலையில் பத்திரிக்கையில் பார்த்தால் மீண்டும் இராமநாதபுரத்தில் கலவரம்; இந்தத் தலைப்பு தேவை தானா? இந்த நாட்டிலே அமைதி ஏற்படுத்துகிற வழியா? பத்திரிகைகளுக்கு சுதந்திரம் இருக்கிறது; அவர்கள் எதை எப்படி எழுத வேண்டுமென்று கருதுகிறார்களோ அதை வெளியிடுவதற்கு உரிமை இருக்கிறது; யாரும் மறுக்க முடியாது. சமுதாயத்தின் ஒரு பிரச்சினை உருவாக்குவதற்குரிய ஒரு செயல் நடந்தாலும், நடக்கா விட்டாலும் அதை வெளியிடும்போது, இராமநாதபுரத்தில் கலவரம் என்றால் வேறு; மீண்டும் கலவரம் என்றால் வேறு; உடனே என்ன தோன்றும்? முன்னாலே தாக்கியவர்கள் தாக்கினார்களா? அல்லது தாக்கப்பட்டவர்கள் தாக்கினார்களா? எவ்வளவு கற்பனைகளுக்கு இடம் தரப்படுகிறது. இவைகள் எல்லாம் அந்த பத்திரிக்கைகள் எவ்வளவு பொறுப்போடு வார்த்தைகளை எண்ணி வெளியிட வேண்டுமோ அந்த வகையில் அந்த பணியை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் போது நாங்களும் அதேபோல் சில செய்திகளை அளவோடு வெளியே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கிழக்கு இராமநாதபுரத்தில் அரிசன மக்களை தெருக்களில் புகுந்து அடித்திருக்கிறார்கள். போலீஸ் உடனே பாதுகாப்பு அளித்திருக்கிறது. ஆகவே பத்திரிக்கையிலே வந்த செய்தியானது, அதிலே கருத்து வேற்றுமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும், தாங்கள் சென்று வந்த போது, அமைதிப் படுத்திய பிறகு, கலவரம் ஏற்பட்டிருப்பது உண்மை. சூப்பிரண்டெண்ட் போய் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையான நிலைமை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கலவரம் என்பது வேறு; சண்டை என்பது வேறு; இவை இரண்டையும் புரிந்து கொள்ள வேண்டும்

சண்டை என்பது அவ்வப்போது ஏற்படுகிற உணர்ச்சி ; காழ்ப்புணர்ச்சி இவைகள். கலவரம் என்பது திட்டமிட்டு நடத்தப்படுகிற ஒரு பெரிய போராட்டம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

[முற்பகல் 11-50.]

அந்தக் கலவரம் என்பதே உள்ளத்தில் ஏற்படுகிற கலக்கத்தின் விளைவு என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். ஆகவே தான் அதற்குக் கலவரம் என்று பெயர் வருகிறது. கலவரம் அடையாதே என்றால் குழப்பம் அடையாதே என்று பொருள் ஆகலாம் ; கலங்காதே என்ற பொருள் ஆகலாம், உண்மையை நீ சந்தேகப்படாதே என்று பொருள் ஆகலாம். ஆகவே அந்த வகையிலே கலவரம் ஏற்படுகிறது என்றால் ஒரு தரப்பார் இன்னொரு தரப்பார் மீது திட்டம்போட்டு அங்கே அந்த சூழ்நிலையை உருவாக்குகிறார்கள் என்று பொருள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நண்பர், நான் பெயர் சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அது பத்திரிக்கையில் வராமல் இருப்பது நல்லது. நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நான் பேசும்பொழுது கூட அப்படிப்பட்ட வார்த்தைகள் வருமானால் அதுகூட குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஜாதி என்று நம்பத்தகுந்த அளவில் தங்களை அமைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்த வகையில் செயல்படுகிறவர்கள் வாழ்க்கை நடத்திச்செல்கிறவர்கள் இன்னொரு நம்பிக்கைக்குரியவர்களால் தாக்கப்பட்டார்கள் என்று வந்தால்அந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் நான் முன்னே சொல்லியிருப்பதைப் போல் ஒருஇடத்தில் பெரும்பான்மையாக இருக்கலாம், அங்கே அவர்கள் தாக்க முடிந்திருக்கலாம், இன்னொரு இடத்தில் அவர்கள் சிறுபான்மையாக இருக்கலாம், அங்கே சிறுபான்மை நிலையில் இருக்கிறவர்களை பெரும்பான்மையானவர்கள் தாக்க ஆரம்பித்தால் தமிழ்நாடு மட்டுமல்ல, உலகம் முழுவதுமே ஒரு நிம்மதி இருக்க முடியாது. அந்த வகையில் இதை நான் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். எதைப்பற்றிப் பேசினாலும் நாம் ஜாதிப் பெயரை சொல்லாமல் தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருந்தாலும் சரி, உயர்த்தபட்டவர்களாக இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுடைய பெயரைச் சொல்லாமல் விவாதங்களை நடத்தினால்கூட நல்லதாக இருக்குமோ என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒரு





குறிப்பிட்ட பிரிவை ஆதி திராவிட பிரிவிலிருந்து முதலமைச்சர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். என்மீது அவ்வளவு நம்பிக்கை அவர்கள் வைத்திருப்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். நன்றி கூறுகிறேன். என்றாலும் இந்த அமைச்சரவை பிரிக்கப்பட்டு தனித்தனியாக இயங்குகிற ஒரு அமைச்சரவை அல்ல. எந்த அமைச்சரும் தன்னுடைய இலாகாவிலே காரியத்தினைச் செய்கிறபோது தவறு செய்தாலும் நல்லது செய்தாலும் எங்கள் அத்தனை பேருக்கும் அதிலே பங்கு உண்டு என்பதை நான் எடுத்து வைக்கிற போது விவரம் தெரிந்த அவர்கள் உண்மையிலே அந்தப் பிரிவிலே இருக்கிற ஒரு பகுதி என் கையில் வந்தாலும் மட்டும் சிறப்பாக இருக்கும், அவரிடமிருந்தால் இருக்காது என்று எண்ணுவது எங்கள் எல்லோரையும் சந்தேகிக்கக்கூடாது, நாங்கள் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து அந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** துணைத் தலைவர் அவர்களே, நான் அடிக்கடி பேசுவதற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்கிறேன். நம்முடைய அரசு ஏற்பட்டு ஒரு வருஷம் ஆகிறது. ஒரு வருஷமாக தென் ஆற்காடு ஜில்லாவிலே நாஞ்சலூரிலேயும் விருத்தாச்சலம் தாலுக்காவிலே முதனை என்ற கிராமத்திலேயும் நான்கு ஆசிரியர்கயளைக் கொண்ட பாடசாலைகள் அரிசன மக்களால் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்ட பாடசாலையிலே ஆசிரியர்களுக்கு நாற்காலி இல்லை, மேஜை இல்லை, பிளாக்போர்டு இல்லை இது சம்பந்தமாக அரிசன நலத்துறையிலே உள்ள அத்தனை அதிகாரிகளுக்கும் அமைச்சர் உட்பட கடிதம் எழுதியும் இன்றுவரையில் வரவில்லை என்ற வேதனையால் இன்று மட்டுமல்ல, கடந்த 20 ஆண்டுக் காலத்திலே அப்படி நடந்திருக்கிறது, அதிகாரிகளும் உயர்ந்த ஜாதியில் பிறந்தாலும் இந்தத் துறையில் பணிசெய்கிற ஒரு பாவ காரணத்தினால் தீண்டத்தகாதவர்களுடைய நிலையில் இருக்கிற காரணத்தினால் நம்பிக்கை அத்தனை அமைச்சர்களிடத்திலும் வைத்திருக்கிறேன் ஆனால் காரியம் நடைபெறுவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்று அனுபவ ரீதியாகச் சொல்கிறேனே தவிர அமைச்சரவையைச் பிரித்துச் சொல்லவோ அல்லது குறைத்துச் சொல்லவோ நினைக்கவில்லை, என்பதை நான் முதலமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் மதிக்கிறேன். அதிலே குறைகூறவில்லை. ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சில தவறுகள் அமைச்சருடைய கவனக்குறைவால் ஏற்படுகிறது என்று தயவுசெய்து யாரும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

நம்பிவிடக்கூடாது. அதிகாரிகளில் தவறு செய்கிறவர்கள் இருப்பார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். மத்திய அரசிடமிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது நாடாளுமன்றத்தில். நூற்றுக்கும் மேலான பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் இல்லாமல்இங்கே நடைபெறுகின்றன என்று இங்கிருந்து அனுப்பட்ட ஒரு அறிக்கையை வைத்து, அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது அனுப்பப்பட வேண்டிய'து எப்பொழுது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம். சில ஆண்டுகளுக்கு முன்னால் அனுப்பப்பட வேண்டிய அந்தக் குறிப்பை அண்மையிலே அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். பிறகு விசாரித்து, பதில் கிடைத்த பிறகு, அனுப்பிய அதிகாரியின் மீது நடவடிக்கையெடுப்பதற்கு சட்டப்படி வழிவகுத்திருக்கிறது ; இதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இதுபோன்ற தவறுகள் நடக்கலாம் ; உத்தரவிடப்பட்டிருக்கலாம் : பணமும் ஒதுக்கப்பட்டிருக்கலாம் ; செயல்களிலே அது வெளிப்படையாகத் தெரிவதற்குரிய நிலைமையை உருவாக்காமல் இருந்திருக்கலாம். ஆகவே, அந்த வகையில் நீங்கள் சொல்வதை நாங்கள் எந்த அளவிற்கு மரியாதையோடும், மதிப்போடும், ஏற்றுக்கொள்கிறோமோ அதைப்போல எங்கள் அனைவரையும் ஒருமித்த கண்ணோடு பார்க்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கூறுகின்றேன்.

எந்த அமைச்சராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வார்கள் ; செய்து தீர வேண்டும் ; இல்லாவிட்டால் நாங்கள் ஒட்டுமொத்தமாகப் பொறுப்பேற்று வேறு வகையில் அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதை இங்கே நான் கூறிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தமட்டில், ஒரு எண்ணம் உண்டு; எப்பொழுதுமே உண்டு; பல ஆண்டுகளாக உண்டு ; இன்றல்ல—எனக்கு 20 வயது, 25 வயது இருக்கும்பொழுது என்று வைத்துக் கொள்ளுங்கள் ,; அந்தக் காலத்திலேயிருந்தே உருவான ஒரு எண்ணம் என்னுடைய உள்ளத்திலே வளர்ந்து இருக்கிறது. அதைச் சொல்வது பலருக்குப் பிடிக்காது என்றாலும் கூட நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றார்களே அவர்களிடம்தான் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினையை ஒப்படைப்பது என்பதோ, தாழ்த்தப்பட்டவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் அவர்கள் மட்டும்தான் அந்த



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இனம் என்று சொல்லப்படுகின்றவர்களுக்காகப் பேச வேண்டும் ; அதுதான் நியாயம் என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை ; என்னுடைய மனச்சாட்சி ஒத்துக் கொள்வதில்லை: வேறு வகுப்பினர் யார் துன்பப்படுகின்றார்களோ அந்த வகுப்பினருக்காகப் பேச வேண்டும் ; அந்த நியதி உருவாக்கப்படவேண்டும்; தாழ்த்தப்பட்ட மக்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் பெரும்பான்மையாக இருப்பார்களேயானால் அங்கே வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் நின்று வெற்றி பெற்று வர வேண்டும். அதைப்போல வேறு வகுப்பைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள் இருக்கின்ற இடத்திலே சிறுபான்மை என்று அழைக்கப்படுகின்ற—தாழ்த்தப்பட்டவர்கள் என்று நாம் விரும்பாத ஒன்றைச் சொல்கிறோமே அந்தப் பெயருக்கு உடையவர்கள் அங்கே தேர்தலிலே நின்று வெற்றி பெற வேண்டும்.

இதை நான் வெளியே சொல்லாமலேயே மதுரை மாநகராட்சித் தேர்தலில் அதை நான் சோதனையாக நிறைவேற்ற முயன்றேன். அந்தப் பகுதியிலே பெரும்பான்மையாக இருந்த மக்களுக்கு எதிராக மிகச் சிறுபான்மையான ஒரு தாழ்த்தப்பட்ட பிரதிநிதியை அங்கே நிறுத்தினோம். இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் ; அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் ; மிக்க செல்வாக்கு உள்ளவர் ; மாவட்டம், மாநிலம் என்ற அளவிற்குப் புகழ் படைத்தவர் ; பெயர் உள்ளவர் ; விளம்பரத்தைப் பெற்றவர், அவர் எதிர்த்து நின்றார். அவர் தோற்றார் ; தாழ்த்தப்பட்ட எங்களுடைய வேட்பாளர் வெற்றி பெற்றார். இதற்கு என்ன பொருள் ? மக்கள் சரியாகத்தான் இருக்கின்றார்கள். நாம்தான் பிரிக்கின்றோம்.

என்னுடைய உள்ளக்கருத்தைச் சொல்கிறேன் ; மக்களை அந்த நிலைமைக்கு நாம் கொண்டு போயாக வேண்டும், நாம் அந்த நிலைமைக்கு வந்தாக வேண்டும். அந்தச் சமுதாயம்தான் சமத்துவம் உள்ள சமுதாயமாக, ஒருமித்த கருத்துடைய சமதர்மத்தை ஏற்றுக்கொண்ட சமுதாயமாக இருக்க முடியுமே தவிர, பாதுகாப்பிலே வந்து, பாதுகாப்போடு வெற்றி பெற்று, பாதுகாப்போடு இடம் பெற வேண்டும் என்று சொன்னால் அது நிச்சயமாக நல்லெண்ணத்தைக் காட்டாது ; திறமையைக் காட்டாது, ஒற்றுமையைக் காட்டாது, ஒத்துழைப்புத் தருகின்ற மனப்பான்மையையும் காட்டாது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில் நாம் பணியாற்ற, நாம் ஒருமித்து கடமைகளைச் செய்ய வேண்டும். அந்த வகையில் காவல் துறையை எடுத்துக் கொண்டால் அந்தப் பிரிவுகள் என்று கவனிக்கும் பொழுது எந்தெந்தப் பிரிவினருக்கு எவ்வளவு இடம் என்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

ஒதுக்கி வைத்திருக்கிறோமோ அந்த வகையில் இடம் தந்தாக வேண்டுமென்ற நியதியை இந்த அரசு கடைப்பிடிக்கிறது; தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதையும், தகுதியும் உரிமையும் உள்ள வகையில் அது காப்பாற்றப்பட ஆவன செய்வோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் வேடிக்கையாகச் சொல்கிறேன். விபரீதமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் அதிக அதிகாரிகளையெல்லாம் எதற்காகப் போடுகிறீர்கள் தேவையில்லாமல் என்று சொன்னார்கள். முதல் நாள் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள், காவல்துறையை விரிவுபடுத்த வேண்டும்; அதிக ஆட்கள் வேண்டும், நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இதை நான் கருத்து வேறுபாடு என்று சொல்லவில்லை. ஒவ்வொரு சூழ்நிலையில் அவரவர்களுக்குத் தோன்றிய எண்ணம்.

(நண்பகல் 12.00.)

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையை விரிவுபடுத்த வேண்டுமென்பதிலே எனக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், ஐ.ஜிக்கள் என்ற பெயரால், டி. ஐ. ஜிக்கள் என்ற பெயரால், ஒரே ஒரு ஐ. ஜி. இருந்த இடத்திலே இன்றைக்கு பல அதிகாரிகளை நியமனம் செய்து, அவர்களுக்குத் தேவையான சம்பளம், மற்றும் பிரயாணப் படிகள், மற்றும் ஏனைய செலவுகள் செய்வதை அரசாங்கம் தவிர்த்திருக்க வேண்டும். ஒரே ஒரு பெரிய அதிகாரி (மணியடிக்கப் பெற்றது) இருந்து, மற்றவர்களை வைத்து சமாளித்திருக்கலாம் என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிலருக்கு பழக்கம் உண்டு. தயவு செய்து எனக்கும் மணி அடித்துவிட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

காவல் துறையிலே இன்னும் அதிகமான காவலர்கள், மற்றும் அதை ஒட்டி இருக்கின்ற அதிகாரிகளுடைய பதவிகள் விரிவாக்கப்பட வேண்டும், எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும் என்றால், அவர்களை ஒழுங்குபடுத்துகிறவர்கள் மேலேயும் தேவைப்படும். பட்டாளம் என்று சொல்லி, இத்தனை ரெஜிமெண்ட் என்று சொல்லி அதற்கு ஒரு தளபதி என்று சொல்லும்போது, அதற்கு அடிஷனல் தளபதி, துணைத் தளபதி, உதவித் தளபதி, இப்படியெல்லாம் வரிசையாகப் போடுவார்களே, துணை இன்ஸ்பெக்டர், உதவி இன்ஸ்பெக்டர் என்றெல்லாம் போட்டார்களே, அது போல் இங்கும் தேவைப்படுகிறது என்று இங்கே நான் சொல்லிக் கொள்கிறேன்.



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மேலும், எவ்வளவுக்கெவ்வளவு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு, அந்தப் பகுதியை, பிரிவை, சிறிது, சிறிதாக்கி, அதிலே அதிகாரிகளைப் போட்டு கண்காணிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பதில் சொல்ல வேண்டியவர்களாக, பொறுப்பாளியாகத் தனிப்பட்டவர்கள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களைக் கேட்டால் இவர்களைக் கேட்க வேண்டும்; இவர்களைக் கேட்டால் அவர்களைக் கேட்க வேண்டும் என்று இல்லாமல் நாம் பதில் சொல்லியாகவேண்டுமென்றால், பிரித்தால் அது சரியாக இருக்கும் என்ற வகையில்தான் அந்த ஐ.ஜிக்களைப் பிரித்தோமே தவிர, ஏதோ எனக்குச் சொந்தக்காரர் யாரும் இல்லையென்ற நம்பிக்கை எதிர்க்கட்சியிலே இருக்கிற அத்தனை பேருக்கும் இருக்குமென்ற காரணத்தால் அதுவரை மகிழ்ச்சி அடைகிறேன். அல்லது வேண்டியவர்கள் என்பதற்காக, யாருக்கோ பதவி கொடுப்பதற்காகவும் அல்ல என்பதையும் நம்புவீர்கள். சந்தேகம் எனக்கு இல்லாததால், அந்த நம்பிக்கையிலே நான் இங்கே என் கருத்தை வெளியிட விரும்புகிறேன்.

அதே போல் இன்னொன்றைச் சொன்னீர்கள். ஒருவேளை இத்தனை ஐ.ஜிக்கள் என்று போடுவது, உங்கள் 18 மந்திரிகளுக்கு ஏற்ப அந்த எண்ணிக்கை அளவிற்குக் கூட நீங்கள் போடுவீர்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். தயவு செய்து அஞ்ச வேண்டாம்; மைய அரசு மாதிரி குறைத்துக் கொள்ளவும் மாட்டோம். ஆந்திராவைப் போல் அந்த அளவுக்குப் போகவும் மாட்டோம் (சிரிப்பு). அந்த எண்ணிக்கை இங்கே வருமோ என்ற அச்சம் உங்களுக்கு. ஆக, இந்த எண்ணிக்கையை வைத்துக் கொண்டு அந்த எண்ணிக்கைக்கு நாங்கள் போகமாட்டோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல் பல பிரச்சினைகள் [illegible]. இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள், மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்கள் எல்லாம் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். நெடுமாறன் அவர்களும் மாண்புமிகு உமாநாத் அவர்களும்தான் இந்த அரசுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார்கள். இந்த அரசு அவசரகாலச் சட்டம் போலிருக்கிற என். எஸ். ஏ.-யைப் பயன்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். பயன்படுத்த வேண்டுமென்ற அவசியத்தை நானா உருவாக்கினேன், ஏன் உருவாக்கி இருக்கிறார்கள், இரண்டு ஆண்டுக்காலம் செய்யவில்லை. மொரார்ஜி தேசாய் பிரதம அமைச்சராக இருக்கும் போது [illegible], நான் செய்யவில்லை. தேவை ஏற்பட்டாலன்றி [illegible] ஏற்பட்டாலன்றி நாங்கள் செய்யத் தயாராக இல்லை. ஆனால், நிலைமை என்ன? கண் [illegible] தெரிகிறது. ஆதாரம் இருக்கிறது. மிகப் பெரிய தவறு செய்கிறார்கள். [illegible] செய்கிறார்கள். அவர்களைக் கைது செய்துக் கொண்டு போனால் ஜாமீனிலே வெளியே வந்துவிடுகிறார்கள்.

எந்தப் பாதுகாப்பும் இல்லை; அவர்கள் மறுபடியும் அதே தவறைச் செய்து, அதிலேயிருந்து வருகிற பணத்தை வைத்துக் கொண்டு மீண்டும் பெரிய தவறுகள்—அதாவது சாராயம் என்று வைத்துக் கொள்ளுங்கள்—அதைப் போன்ற தவறுகள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக விரோதிகளைத் தடை செய்ய முடியவில்லை, கைது செய்து உள்ளே வைக்க முடியவில்லை. மக்களிடமிருந்து தொடர்பு அறுக்கச் செய்ய முடியவில்லையென்றால் என்ன செய்வது, அதற்காக நாம் சட்டப்படி செய்திருக்கிறோம். நீதிபதி கொண்ட குழு, தலைமைச் செயலாளர் கொண்ட குழு, இப்படியெல்லாம் அமைத்து அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு, அவர்களை இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்வது நியாயம்தான், தகுந்த காரணம் இருக்கிறது என்று அவர்கள் ஒத்துக்கொண்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சில இடங்களில் இருந்து, சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவர்களை இப்படிக் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறேன், அனுமதி வேண்டும் என்று கோரிக்கை கொண்டு வந்த போது—அவர்கள் பயந்து கொண்டு அப்படிச்செய்யவில்லை—நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, எங்களுடைய விருப்பு, வெறுப்பை வைத்துக் கொண்டு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்குத் தனி அதிகாரிகள், அதைப் பயன்படுத்தவேண்டிய அளவிற்குத் தகுந்த ஆதாரங்களைத் தருகிறவர்கள், அவர்களுடைய எண்ணத்தைத் தெரிந்து, ஒப்புக்கொண்டு, பிறகு தான் நாங்கள் பயன்படுத்துகிறோம். அரசியல்வாதிகளுக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன், நாராயணசாமி நாயுடு அவர்களை அரசியல்வாதி என்று அந்தப் பட்டியலில் சேர்த்து விடாதீர்கள். அவர் 'அவசரவாதியே' தவிர 'அரசியல்வாதி' அல்ல. எந்த நேரத்தில் அவசரம் அவசியமாக அவரைத் தூண்டிவிடுகிறதோ அவர் அந்த இடத்திற்குப் பக்கத்தில் இருப்பார்.

அவர் நேற்றைய தினம் பேசியிருக்கிறார். நீங்கள் சொன்னீர்களே விவசாயப் போராட்டம். அதையும் நிறுத்துவதற்குக் காவல் துறை வரவேண்டியிருக்கிறது. ஆகவே, சொல்கிறேன். வேறு ஏதோ சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டதாகக் கருத வேண்டாம். அந்த விவசாயப் போராட்டத்தை தடை செய்ய வேண்டும் என்று வந்தால்—இந்த முறை போராட்டம் எப்படி நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும், நான் என்ன நடந்தது என்பதைப் புதிதாகச் சொல்ல வேண்டாம். இப்போது என்ன சொல்கிறார் என்றால் இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு, இந்த அரசை நீக்குகிற வரையில் நான் உறங்கப் போவது இல்லை என்று சொல்லியிருக்கிறார். மகிழ்ச்சி. எங்களைவிட ஒரு நல்லாட்சியைக் கொண்டுவர முடியும் என்றால், மக்கள் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினால், நாங்கள் எப்படிக் குறுக்கே





நிற்க முடியும். இன்னொன்றையும் சொல்கிறார்கள். இன்னும் ஒரு வாரம், இன்னும் 2 வாரம், இன்னும் 3 வாரம் இல்லை என்றால் அடுத்த வாரம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒருநாளும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம். அந்த முயற்சிக்குப் போகமாட்டோம், என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் சொல்கிறார். நாங்கள் கவிழ்க்கமாட்டோம், அவர்களே கவிழ்ந்துபோவார்கள் என்று சிலர் சொல்கிறார்கள். அப்படியானால், தகுதி இல்லை என்றால் நாங்கள் கவிழ்ந்து போகிறோம். அதற்காக நாங்கள் வருத்தப்பட முடியாது. மக்கள் விருப்பத்திற்குக் குறுக்கே நாங்கள் இருக்கமுடியாது. ஆகவே, இப்போது பிரச்னை அது அல்ல. ஏதோ, நாங்கள் இந்தப் பதவி போய்விடுமோ, இந்த ஆட்சி போய்விடுமோ என்பதற்காக நாங்கள் எதையாவது விட்டுக் கொடுத்து காரியம் செய்கிறோம் என்ற தவறான கருத்து யாருக்காவது இருந்தால், அதைத் தயவு செய்து மாற்றிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், இங்கே எவ்வளவு மகிழ்ச்சியாக உட்கார்ந்து இருக்கிறோமோ அதேபோன்று தான் எதிர்க்கட்சி வரிசையில் கூட அல்ல, வெளியே நாங்கள் இருந்து மகிழ்ச்சியோடு இங்கே நடக்கின்ற செய்திகளைக் கேட்டு பெருமையோடு உட்கார்ந்து இருப்போம். இங்கே இருந்தால் தான் மகிழ்ச்சி என்கிற நிலைமை கடந்த காலத்தில் இருந்து இருக்கலாம். இப்போது இல்லை. நான் கற்பனை கூடச் செய்யவில்லை. நான் முதலமைச்சராக ஆவேன் என்று. யாரோ புண்ணியவான் நல்லது செய்து என்னை இங்கே உட்கார வைத்து இருக்கிறார். ஆகவே, எனக்கு இதிலே ஆசை இருந்தது இல்லை. திடீரென்று எங்களை வெளியே போ என்று சொன்னபோது நாங்கள் அதிர்ச்சி அடையவில்லை. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சிவகவி' படத்தை நான் ஒளிப்பெட்டியில் பார்த்துக்கொண்டு இருந்தேன். 17ஆம் தேதி பிப்ரவரி இந்த ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னபோது, என்னிடத்தில் ஒரு காரியத்திற்காக தேதி குறிக்க வந்த நண்பர் மணியன் போன்றவர்களிடத்தில் ஒரு சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு, படத்தை வழக்கம்போல் பார்த்துக்கொண்டு இருந்தேன். படத்தைப் பார்த்து விட்டு வழக்கம்போல் நான் போனேன். காலையில் எந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் இருக்கக்கூடாது; எனக்குக் காவல் இருந்தவர்கள் எல்லாம் வெளியே போகவேண்டும் என்று சொன்னேன். அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்ல. பாதுகாப்புத் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். பரவாயில்லை என்று சொல்லி அவர்களைப் போகச் சொன்னேன். அது தான் எம். ஜி. இராமச்சந்திரன்—உங்கள் நண்பன். இங்கேயுள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வேன். அண்ணா அவர்கள் இருந்து இருந்தால்

[திரு எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

நாங்கள் எல்லாம் எப்படி எப்படியோ இருந்து இருப்போம். இப்போது பதில் சொல்லவேண்டிய நெருக்கடி எனக்கு ஏற்பட்டு இருக்காது. அண்ணா இருந்து இருந்தால் நாங்கள் எல்லாம் தனிக்காட்டு ராஜாவாக எங்கேயோ சுற்றிக்கொண்டு இருப்போம். நிலைமை எப்படி இருந்தாலும் இந்தப் பதவிக்காக நாங்கள் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். அந்தச் சந்தேகம் யாருக்காவது இருந்து இருந்தால், அதைத் தயவு செய்து விட்டு விடலாம். எதை எதிர்க்க வேண்டும் என்று எங்கள் மனச்சாட்சி சொல்கிறதோ அதை நாங்கள் அனைவரும் செய்வோம். அதைப் போலவே எதை ஆதரிக்க வேண்டும் என்று எங்கள் மனச் சாட்சி சொல்கிறதோ, எங்களுடைய கொள்கை வற்புறுத்து கிறதோ அதைச் செய்வோம். அந்த வகையில் தான் நாங்கள் காரியங்களை ஆற்றி வருகிறோம். தயவு செய்து மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்கும், மாண்புமிகு உமாநாத் அவர் களுக்கும், அவர்கள் கட்சிக்கே சொல்வதுபோல், மற்ற அனைவருக்கும் சேர்த்துச் சொல்லிக்கொள்கிறேன்— அந்தச் சந்தேகம் வேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அளித்த இந்த உறுதிமொழிக்கு இதய பூர்வமாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே ஆளுங்கட்சி வரிசை யிலே இருக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோமோ அதைப்போல எங்களை யாராவது அகற்றிவிட்டாலும் வெளியே யும் மகிழ்ச்சியாக இருப்போம் என்று சொன்னார்கள். முதலமைச்சருக்கு நான் மக்கள் சார்பிலே தெரிவித்துக்கொள் கிறேன். யாராவது உங்களை அகற்றி, நீங்கள் வெளியே போனாலும் மீண்டும் இதைவிட அதிக பலத்துடன் உள்ளே வந்து உட்காருவீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலை வரவர்களே, பணம் நிறைய வைத்திருப்பவர்கள் ஏழை, ஏழை என்று பொதுவாகச் சொல்வார்கள். அதைப்போல மக்கள் நம்பிக்கை எங்களுக்கு அதிகமாக இருப்பதால்தான் இப்படித் துணிந்து சொல்கிறேன். நாங்கள் கவலைப்படவில்லை. அவை யடக்கம் என்று சொல்வார்களே, அந்த முறையில் அடக்கத்தோடு சொல்லியிருக்கிறேனே தவிர மற்றவகையில் அல்ல என்று சொல்லு கின்ற அதே நேரத்தில் தோழர் நெடுமாறன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இங்கே ஒருவர் சொன்னார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் 'அதை நீங்களே சொல்லியிருக்கலாமே' என்று. அவர் சொன்னாலும், நான் சொன்னாலும் மற்றவர்கள் சொன் னாலும் எல்லாம் ஒன்றுதான். அதில் வேறுபாடு இல்லை.

இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக் கிறார்கள். காவலர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சாதாரணமான குற்றச்சாட்டும் அல்ல; விளக்கமும் அல்ல; அலட்சியப்படுத்தக்கூடிய செய்தியும் அல்ல. ஆனால் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காவலர்களில் யார், யார் அப்படி இருக்கிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்தால், அந்த விவரத்தை தனியாக எனக்கு கொடுப்பார்களானால், சில விசாரணைகள் நடப்பதைப்போல இந்தத் தவறை யார் செய்தார் என்று குற்றச்சாட்டு இருக்கிறதோ அவருக்கே இந்தப் பிரச்னையை அனுப்பி, நீங்கள் விசாரணை செய்யுங்கள் என்று சொல்லாமல் வேறு வகையில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனாலும் ஒன்றை எண்ணிப்பார்க்கிறேன். 3 ஆண்டுக்கு மேல் ஒரு அதிகாரி ஒரு அலுவலகத்தில், ஒரே இடத்தில் இருக்கக் கூடாது என்பது ஒரு விதி. அந்தந்த ஜில்லாவுக்குள் மாற்றப் பட வேண்டும்; இன்னும் சில அதிகாரிகள் வேறு ஜில்லாக்களுக்கு மாற்றப்படலாம்; இன்னும் சிலர் வேறு மாநிலங்களுக்கே கூட மாற்றப்படுகிறார்கள். இதை முறையாக வைத்திருக்கிறோம். இதிலே காவல் துறையைச் சேர்ந்தவர்களையும் சிந்தித்துப் பார்க்கிறேன். அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் பல நேரங்களில்? அவர்களுக்கு என்று வீடுகள் இல்லை. கட்டிக் கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறோம்; இன்னும் கட்டிக்கொடுக்க முடியவில்லை. பல இடங்களில் வீடு இல்லை. சென்னை போன்ற இடங்களில் இருந்தாலும் எல்லோரும் 'போலீஸ் குவார்ட்டர்ஸ்' என்ற இடத்தில் இல்லை. மக்க ளோடு சேர்ந்து இருக்கிறார்கள். மக்களுக்கிடையிலே வாழ்கின்ற ஒரு காவலர் என்றால், அவருக்கும் குழந்தைகள், மனைவி, தந்தை, தாய், வயதுவந்த தமக்கை, தங்கைகள், மற்ற உறவினர் கள் எல்லாம் தன்னுடன் இருப்பார்கள். இவர்களை எல்லாம் வீட்டில் வைத்துவிட்டு, வெளியே போய், பக்கத்து வீட்டில் ஒருவர் தவறு செய்கிறார், அவர் குடிகார, சாராயம் காய்ச்சு பவர் என்று தெரிந்தாலும் அவர் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அவர் அப்படி நடவடிக்கை எடுத்தால் அந்தக் குடும்பத்திற்கு என்ன பாதுகாப்பு? குடும்பத்திற்குப் பாதுகாப்பு கொடுத்துவிடுகிறோம், எத்தனை நாளைக்கு? பக்கத்தில் இருப்பவர்களை விரோதித்து, எவ்வளவு நாளைக்கு வாழ

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

முடியும்? ஆக, இந்த வசதிகளைச் செய்து கொடுக்கின்ற வரையில் நாம் அவர்களைக் கொஞ்சம் விட்டுவைக்க வேண்டுமென்று சொல்லும்போது அதை ஒரு கொள்கையாக வைக்கவில்லை. அந்தப் பாதுகாப்பைத் தந்த பிறகு அவர்களைக் கவனிக்க வேண்டும், அடக்க வேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் ஒரு போலீஸ் அதிகாரி பதவி உயர்வு பெற்று, 37 ஆண்டுகளாக சென்னையிலே இருக்கிறார். அண்மையில் இங்கே அப்படி எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு கணக்கை எடுத்துப் பார்த்தேன். சென்னையில் குறைந்தது 4 ஆண்டு, 7 ஆண்டு, 9 ஆண்டு, 12 ஆண்டு, 18 ஆண்டு, 20 ஆண்டு, 35 ஆண்டு, 37 ஆண்டு என்று இப்படி இங்கே இருக்கிறார்கள். மயிலாப்பூரிலிருந்து இராயபுரத்திற்கு மாற்றம். இராயப்புரத்திலிருந்து மைலாப்பூருக்கு அல்லது எக்மோருக்கு மாற்றம், இப்படியே சுற்றிக்கொண்டு வந்திருக்கிறார்களே தவிர சென்னையை விட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்படவில்லை. அதற்கு தொடர்புடையவர் யாராக இருக்க முடியும்? யாரை எதிர்த்து அவர் வாழ முடியும்? அவருடைய குடும்பத்தில் இருக்கிறவர்கள் கூட வியாபாரிகளாக இருக்கலாம், அல்லது வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கலாம்.

நிலைமை என்ன? இவைகளை எல்லாம் ஒழுங்கு படுத்துகின்ற வகையிலே நாம் விரைவிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும் இதைப்போன்ற குற்றச்சாட்டுகளை ஒட்டு மொத்தமாகச் சொல்லாமல் குறிப்பிட்டு மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் அந்த விவரத்தைத் தரவேண்டும், அதன்பிறகும் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்துவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு உதாரணத்தை நான் சொல்லி ஆக வேண்டும். இராமநாதபுரத்திற்கு நான் போய் பிறகு அங்கிருந்து திரும்பி மதுரைக்கு வந்து அதிகாரிகளை எல்லாம் கூட்டி வைத்து, கூட வந்தவர்களையும் கூட்டி வைத்து, சில பிரமுகர்களையும் அழைத்துப் பேசியதில் அவர்கள் சில விவரங்களைத் தந்தார்கள். ஏதோ தகவல் வந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு எப்படித்தான் தெரியும் என்று நான் கேட்டேன். போலீஸ்காரர் சொன்னார் என்று அவர் சொன்னார். போலீஸ்காரர் யார் என்று கேட்டேன். நான் சொல்லமாட்டேன் என்று சொன்னார். எந்தக் கட்சி என்று கேட்டபோது ஒரு கட்சியின் பெயரைச் சொன்னார். இங்கே அதை நான் சொல்ல விரும்பவில்லை.



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அங்கே வந்தவர்களுக்கு தெரியும். நிலைமை என்ன? இப்படித் தொடர்பு வைத்துக் கொண்டவர்கள் சமூக விரோதிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா? ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டவர்களாகத் தெரிந்துவிட்டார்கள் என்பதற்காக அத்தனைபேரும் அதற்குப் பொறுப்பு என்று சொல்ல முடியுமா? அவர்கள் எதிராக இருக்கிறார்கள், ஆட்சியினுடைய கொள்கைக்கு விரோதமாக செயல்படுகிறார்கள், அல்லது செயல்பட முனைந்தார்கள் என்பதற்காக அவர்கள் எல்லோருமே சமூக விரோதிகள் என்றோ அல்லது அவர்கள் அனைவருமே தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, இலாக்காவிலே உள்ள அத்தனை பேரும் அதற்கு பொறுப்பு என்று நாம் சொல்ல முடியுமா?

அடுத்து, இளையபெருமாள் அவர்கள் கேட்டார்கள். அங்கே போகின்றபோது ஒரு குறிப்பிட்ட ஜாதியை மட்டும் அழைத்துக்கொண்டு போனீர்களே, வேறு பிரிவினரை அழைத்துப் போகவில்லையே என்றார்கள். இந்த இலாக்காவை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் என்று என்மீது நம்பிக்கையோடு இருக்கின்றபோது நான் அங்கே இருந்தால் நான் யாருடைய பிரதிநிதி? உங்களுடைய பிரதிநிதிதான். உங்கள் கட்சியிலே இருந்து ஒருவர் வந்தால் அவரை எப்படி நீங்கள் கட்சியின் பிரதிநிதியாக அல்லாமல் அந்த ஜாதியினுடைய பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு கட்சியினுடைய பிரதிநிதி வருகின்றபோது என் கணக்கிலே அவர் அனைத்து ஜாதிகளுக்கும் சொந்தம். அந்தக் கட்சியிலே இருக்கின்ற அனைத்து மதத்தினருக்கும் அவர் சொந்தம் என்றுதான் நான் ஏற்றுக் கொள்ள முடியும். இதுதான் நியதியும் கூட. அங்கே வருகிறவர்களை எல்லாம் எந்த ஜாதி, எந்த ஜாதி என்று கேட்டு அழைத்து இருந்தேனேயானால் ஒவ்வொரு கட்சியிலேயும் 5 பேர், 10 பேர் வரவேண்டி இருக்கும். அதை நாம் மறந்து விட முடியாது. ஜாதி, மத நம்பிக்கை கொண்டவர்களை உடையது தான் ஒவ்வொரு அரசியல் கட்சியும். எல்லா அரசியல் கட்சிகளும் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல ஜாதி, மத பேதத்தை முழுமையாகத் தூக்கி எறிந்து விட்டவர்கள் என்று சொல்ல எனக்கு துணிச்சல் இல்லை. அதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் ஒருவகையிலே கொஞ்சம் முன்னுக்கு வந்து இருக்கிறோம். முன்னேறி இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளலாம். உங்களையும் நாங்கள் அந்தக் கணக்கிலே சேர்க்கிறோம், அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. கருத்து வித்தியாசமும் இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டிய கட்டாயத்திலே இருக்கிறார்கள் என்பதை நான் சொல்கிறேன். தஞ்சை ஜில்லாவிலே கீழ்வெண்மணியிலே நடந்ததிலும் சரி, முதுகுளத்தூரிலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடந்ததிலும் சரி, தங்கள் காலத்திலே விழுப்புரத்திலே நடந்ததிலும் சரி, ராமநாதபுரத்திலே இரண்டு தடவையாக நடந்ததிலும் சரி, இந்த மண்ணிலே அந்த மக்கள் பிறந்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக அந்த பாவத்தை அனுபவிக்கவேண்டி இருக்கின்றது. உங்கள் மீதோ அல்லது உங்களுடைய அதிகாரிகளின் மீதோ உள்ள நம்பிக்கையிலே நான் குறை காணவில்லை. ஆனால் இந்த மண்ணிலே அந்த மக்கள் பிறந்துவிட்ட காரணத்தால் ஒரு கட்சியார் கூட தாங்கள் செல்வதற்கு முன்னே சென்று நீங்கள் அச்சப்படாதீர்கள், நாங்கள் இருக்கிறோம் என்று இதுவரையிலேயும் சொல்லவில்லை. ஏ பிரிவு வகுப்பாக இருந்தாலும் சரி, பி பிரிவு வகுப்பாக இருந்தாலும் சரி, சரி இடங்களிலே சில பிரிவினர் மைனாரிட்டியாக இருப்பார்கள். சில பிரிவினர் மெஜாரிட்டியாக இருப்பார்கள். இரண்டு வகையிலேயும் நடந்திருக்கலாம். ஆனால் எந்த அரசியல் வாதியாவது பாதிக்கப்பட்ட மக்களிடத்திலே சென்று அவர்கள் உங்களை அடித்துவிட்டார்கள், பயப்படாதீர்கள் நாங்கள் இருக்கிறோம் என்று இதுவரையிலும் சொல்லாத ஒரு பாவநிலை இருக்கின்றது. இதை நீங்கள் ஜாதி என்று சொன்னாலும் சரி அல்லது மனிதாபிமானம் என்று சொன்னாலும் சரி, இந்த நாட்டிலே நாங்கள் பிறந்த பாவத்தினால் நாங்கள் அனுபவிக்கிறோம் என்ற பெயர் கொடுத்தாலும் சரி, இதைத் தவிர்க்க முடியாத காந்தியார் காலம் முதல் இன்று வரையிலும் மெத்தனமாக இருக்கின்றனர் அரசியல்வாதிகள். ஆகவே முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் அரசியல்வாதிகள்தான் இவ்வளவு தொல்லைகளுக்கும் காரணம் என்பதை நான் கொஞ்சம் கூட ஆட்சேபிக்கவில்லை. ஒவ்வொரு சாரியத்துக்கும் உதாரணமாக சங்கணாங்குளத்தை எடுத்துக்கொண்டால், அந்த அதிகாரிகள் பற்றி என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கூட நான் தெரிந்து கொள்ள முடியாதபோது, தங்களை நான் சந்தேகிக்காவிட்டாலும் நான் சந்தேக நிலையிலேதான் இருந்துகொண்டிருக்கிறேன், இதற்கு ஒரு முடிவு கட்டித்தான் ஆகவேண்டும். அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் உங்களிடத்திலே நான் வைத்திருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் கூறுவது இன்று சமுதாயத்திற்கு எந்தவகையிலே உதவியாக இருக்கும் என்று நான் கேட்கவிரும்புகிறேன். பல்வேறு அரசியல் கட்சிகளும் சேர்ந்து, எதிர்த்துப் போராடித்தான் இன்றைக்கு நாட்டிலே முன்னேறி இருக்கிறார்கள். மேற்கொண்டும் முன்னேறுவதற்கும் அவர்கள்தான் செய்யவேண்டும். ஆனால் இப்போது அவர் சொல்கிறார் எந்த அரசியல் கட்சிகளாலும் பயன் இல்லை என்று. அப்படியானால் மறுபடியும் ஜாதிக்குப் போகவேண்டும் என்பதுதான் அர்த்தம்.

[பிற்பகல் 12.20]

மேற்கொண்டு முன்னேற்றத்திற்கும் அவர்கள் தான் ஏதாவது செய்ய வேண்டும். இப்பொழுது அவர்கள் சொல்கிறபடி எல்லா அரசியல் கட்சிகளும் பிரயோஜனம் இல்லை என்றால், அப்போது மறுபடியும் ஜாதி முறை அடிப்படையில்தான் போக வேண்டும் என்றுதான் பொருளாகிறது. காங்கிரஸ் கட்சியிடத்திலேயே அவருக்கு நம்பிக்கையில்லை என்று தான் அது பொருள் வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி). எந்த அரசியல் கட்சியுமே செய்யவில்லை என்று சொல்கிறபோது அவருடைய கட்சியையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறார் என்று பொருள். ஆகவே அது உள்கட்சிப் பிரச்னையாக இருக்கலாம்.

நம்மைப் பொறுத்தவரைக்கும் என்ன சொல்கிறோம் என்று சொன்னால், இந்த மாகாணத்தில் இருக்கக் கூடிய ஜனநாயக கட்சிகள் அனைத்தும் சேர்ந்து அந்த தீயை அழிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். செய்வார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேனே தவிர, பின்னாலே போய்—இதிலே எந்த அரசியல் கட்சியிடமிருந்தும் பாதுகாப்பு இல்லை, ஆகவே ஜாதியின் அடிப்படையிலே காரியங்களைச் செய்து கொண்டு போக வேண்டும் என்று சொன்னால் அது தமிழ் சமுதாயத்திற்கு எந்த உதவியையும் செய்யாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமை சகோதரர் சங்கரய்யா அவர்கள் சொல்லியதிலே ஒரு பகுதியை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று சொல்கிறேன். விழுப்புரத்தில் உள்ள நீதி விசாரணை புத்தகத்தை எடுத்துப் பாருங்கள். சதாசிவம் கமிஷனிலே, எங்களுக்கு முன்னாலே சாட்சி சொன்ன

வர்கள் யார்? பின்னாலே சாட்சி சொன்னவர்கள் யார்? அது திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, அல்லது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி—எப்படி அஃபிடவிட் போட்டார்கள்? பின்னாலே என்ன சொன்னார்கள் என்பதெல்லாம் விளங்கும். உங்களிடம் அந்த எண்ணம் இல்லை. நான் அந்த உணர்வைப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த ரிகார்டுகளைப் போய் பாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போலவே தஞ்சை மாவட்டத்திலே திருவோணம் என்ற இடத்திலே கோயில்புக வேண்டும் என்று அரிசன மக்கள் விரும்பினார்கள். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் எல்லோரும் சேர்ந்து கோயில் வாயில்படியில் நின்றுகொண்டு, நீங்கள் உள்ளே வரக்கூடாது—வந்தால் கொலை நடக்கும் என்று 1977-லே சொன்னதை, 1980-லே சொன்னதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களைப் போன்றவர்களுக்கு சொல்லி, நான் ஜாதியை விரும்பவில்லை. இன்னும் சொன்னால், தமிழகத்தில் ஜாதி பேர் இல்லாது இருக்கிற ஒரே ஜாதி ஆதி திராவிடர்கள்தான். மற்ற அத்தனை ஜாதிக்காரர்களும் செட்டியார், முதலியார், ரெட்டியார், ஐயர், சர்மா என்று ஜாதிப் பெயர்களை போட்டிருக்கிறார்களே தவிர, எந்த ஜாதி பெயருமே இல்லாத ஒரு ஜாதி ஆதித் திராவிட மக்கள்தான் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலகம் பிறந்தால நியாயம் பிறக்கும் என்பார்கள். அது போல கழுத்திலே கொஞ்சம் கலக்கம்—அது கலகம். அதன் விளைவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களும் கருத்து பரிமாறிக் கொண்டதில் சில உண்மைகள் வெளிப்பட்டன. அதற்கு மகிழ்ச்சி. இதிலிருந்து ஒன்றை நாம் தெரிந்து கொள்கிறோம். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் ஜாதியின் கண்ணோட்டத்தோடு அது செயல்படக் கூடாது என்ற உண்மையை நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டோம் என்பதை எண்ணும்போது நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல எதுவுமே நடவடிக்கை எடுக்கவில்லை என்று இங்கே குற்றம் சாட்டியதற்காக சொல்கிறேன். ஒரு குறிப்பு மாத்திரம் நான் இங்கே படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





1980 ஆம் ஆண்டில் காவல் துறையில் பணிபுரியும் ஆய்வாளர்கள் தன்னிச்சையாகவும், பாதிக்கப்பட்ட ஆதித் திராவிட மக்கள் மற்றும் தீண்டாமை குற்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளும், தண்டனை பெற்ற விவரங்களும்— பதிவு செய்யப்பெற்ற வழக்குகள் 759, தண்டிக்கப்பட்டவர்கள் 55; விடுதலை பெற்றவர்கள் 528 மீதி நிலுவையில் இருக்கும் வழக்குகள் 176. ஆகவே, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சொன்னதோடு மட்டுமல்லாமல் 5 ஐ.ஜி.க்கள் இருக்கிறார்களே அவர்கள் எல்லாம் ஏன் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற கேள்விக்கு ஒன்று நான் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

முன்பு இருந்ததை விட வழக்குகளின், குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றால், நடவடிக்கை அதிகமாகியிருக்கிறது என்று பொருளே தவிர, முன்னாடி இருந்ததைப் போல வழக்குகளை மறைத்து, எண்ணிக்கைகளை குறைத்து அறிக்கைகளை வெளியிட இந்த அரசு தயாராக இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பற்றி ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்த தகவலைத் தந்தார்கள். போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் அவர்களுக்கு, டி. சேகோஷி ஜெனரல் மேனேஜர் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள்.

Dear Thiru Sri Pal.

I am pleased to inform you that thanks to the vigil and co-operation of your officers in the northern region of the city During the month of March 1981, there was no one incident of pilferage of POL products by drilling holes. I trust the officers will continue to help us and maintain this excellent achievement. Please do convey our appreciation to the concerned.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்த அதிகாரி எழுதுகிறார் இப்படிப் பாராட்டி, இங்கே பேசப்படுகிறது நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. ஆகவே, நான் அதற்குத்தான் சொன்னேன். எங்கிருந்து தகவல் வந்தது என்பது பற்றி குறிப்பிடவில்லை. எனக்கு யாரும் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். எங்கிருந்து கிடைத்தாலும், பத்திரிகைகள் கொடுத்தாலும் அல்லது நண்பர்கள் தந்தாலும் இதுபோன்ற [illegible] தொலை பேசியைப் பயன்படுத்தி ஒரு எட்டணா, ஒரு ரூபாய் செலவு செய்து என்னிடம் கேட்டால் உடனடியாக தகவல்கள் கிடைத்திருக்கும். கொடுக்கச் செய்திருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இன்னொன்று.

ரோடரி கிளப் போல் காரியங்களைச் செய்கின்ற அமைப்பு அது. அவர்களிடம் சொல்லும்போது, யார் என்று பார்த்துப் போடுங்கள் என்று சொன்னாரே தவிர, அவர்களுக்கு எதிராக வாக்கு அளியுங்கள், இப்படிச் செய்கிறவர்களுக்கு வாக்கு அளிக்காதீர்கள் என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக சந்தேகப்படலாம். ஆட்சிக்காக, ஆட்சிக் கட்சிக்காக அவர் கருத்தை வெளியிட்டார் என்று சொல்லலாம். உண்மையிலேயே நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகூட கேட்கலாம். ஏன் எங்களுக்கு அப்படித் தோன்றவில்லை ? எங்கள் கட்சி போராடவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆட்சிக் கட்சிக்கு எதிராக, ஆட்சிக் கட்சி போராட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கம் இருக்காது. இந்த நிலைமையை எண்ணிப் பார்த்தால், சந்தேகத்திற்கு இடம் உண்டாகும். ஆகவே, தயவுசெய்து நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். எதிலும் சந்தேகப்படாமல், செம்மையாக காரியம் ஆற்றுவதைக் கவனித்து, இதைப்போன்ற விஷயங்களில் அவர்கள் நடந்து கொள்வதையும் கவனித்து, எது அதிகம் ? எது குறைவு ? என்பதைக் கவனித்து நீதி வழங்க வேண்டுமே தவிர எல்லாம் சரியாக இருக்கும், எல்லாமே சரிவர இருக்கும் என்ற வகையில் யாரிடமும், எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டு அல்ல........

திரு. என். சங்கரய்யா : இதிலே பிரச்சினை என்னவென்றால், அவ்வாறு அதிகமாக நடக்கக்கூடிய ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நல்ல நோக்கத்திற்கு நடக்கிறதா, தீய நோக்கத்திற்கு நடக்கிறதா என்பதுதான் கேள்வி. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன் இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை மத்திய சர்க்கார் கலைத்ததற்கு நம்முடைய நேசக் கட்சியான நாங்கள் அதிகமான கிளர்ச்சியை நடத்தினோம். அதில் அந்தத் தேர்தல் முடிகிற வரைக்கும் அதிகமான ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் இந்தக் கட்சி. ஆகவே அந்தக் கிளர்ச்சிகளையும், அந்த ஊர்வலங்களையும் அன்றைக்கு அதிகமாக நடத்தியது நியாயமானது. ஆகவே, அவருடைய கூற்றுப்படி, அந்தக் குறிப்பிட்ட காலத்திலே அதிசப்படியான ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் நாங்கள். ஆகவே, நோக்கம் என்ன ? அந்த நோக்கம் மக்களுக்குச் சாதகமானதா ? ஜனநாயகத்திற்கு விரோதமானதா என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, அதிகமாக ஆர்ப்பாட்டங்களை நடத்தியதை எண்ணத்தில் வைத்துக்கொண்டு, அதற்கு ஆதரவு கொடுக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அரசியலிலே அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் கூற்றுப்படி, அவா



சொல்லியதைச் சொல்லியிருந்தால், எதிர்க் கட்சியாக நாம் ஆக்கப்பட்டு, இந்தப் போராட்டங்கள் நடத்தியது எல்லாம் அந்த நோக்கத்தின் அடிப்படையிலே என்று நோக்கம் கற்பித்து, அதையும் அவர்கள் உன்னிப்பாக கவனித்து நல்லதா, கெட்டதா, இந்தப் போராட்டம் நடத்த வேண்டுமா, வேண்டாமா என்று ஒரு அதிகாரி தீர்மானிக்க ஆரம்பித்தால், அவர் அரசியல்வாதியாக ஆகிவிடுவார். ஆகவே, ஒரு அதிகாரி யார் போராட்டம் நடத்தினாலும், எந்தப் போராட்டம் நடத்தினாலும், அமைதி தான் தேவை என்று நினைக்கிற ஒரு அதிகாரியாகத் தான் செயல்பட வேண்டும், அந்த வகையில்தான் தன் கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, ஆட்சியை. ஆட்சிக் கட்சியை கலைத்து விட்டார்கள், அதற்கு மக்கள் போராடுவது நியாயம் என்ற நோக்கத்திற்கு அவர் வந்தால், அவர் அதிகாரியாக இருக்க முடியாது. நடுநிலைமையோடு அவர் தன் கடமையை எப்படிச் செய்ய முடியும் ? மேலதிகாரி உத்தரவிடுவார், அந்தப் போராட்டத்தைத் தடை செய்யுங்கள் என்று. இல்லை, இல்லை, அவர்கள் நோக்கம் நல்லது என்று அவர் அடிக்க மாட்டேன் என்று சொன்னால் என்னவாகும் ? அந்த வேலை அதிகாரிகளுக்கு இருக்கக் கூடாது. அது நியாயமா, அநியாயமா என்பதையும், நோக்கம் சிறந்ததா, இல்லையா என்பதையும் மக்கள் கவனிக்க வேண்டும் ; அதற்கு மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும். அதே நேரத்தில், ஆட்சியில் இருப்பவர்கள் சொல்வதை, சட்டத்தின்படி நடத்தி முடிக்க வேண்டியது ஒவ்வொரு அதிகாரியினுடைய கடமை என்பதை பல முறை நான் சொல்லியிருக்கிறேன். எந்த ஆட்சி மாறினாலும், அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள், நடுநிலைமையோடு தங்கள் கடமையைச் செய்யவேண்டும் என்று நாம் பேசியிருக்கிறோம். அந்த வகையிலே தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் நேரம் அதிகமாகிறது என்ற காரணத்தால் இந்த அரசு ஒன்றை எப்படி செய்யவேண்டுமென்று கருதுகிறது என்பதைச் சொல்ல விழைகிறேன். அரசிதழ் பதிவு பெறாதவர்களைப் பற்றி நான் சிலவற்றைச் சொல்லியாக வேண்டும். அழைத்துப் பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். அழைத்து பேசுவதிலே எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை ; யாரை அழைத்து பேசுவது? ஒரு முடிவை எடுத்து சந்தித்த பிறகு, பரிசீலிப்பதற்கும் பேசுவதற்கும் வாய்ப்பைத் தந்து அமை[illegible]வர்களை [illegible]க்கச் செய்து அதற்கு பிறகு அவர்கள் தீர்மானத்தைப் போட்டு, இதுதான் இறுதியான முடிவு; இதைச் செய்வோம், அரசை நடத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிற வகையிலே பல்வேறு பணிகள் நிச்சயமாக பாதிக்கப்படும்; மக்கள் தொல்லைப் படுவார்கள் ; இந்த அரசின் மீது அவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்கிற நிலையிலே ஒரு நடவடிக்கை எடுக்கும் பொழுது, அரசைப் பொறுத்தவரையில் என்னவாயினும் மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியை காப்பாற்ற அரசின் நிதிநிலைக்கு ஏற்ப காரியங்களை ஆற்றும் பொழுது அவைகளைச் செய்ய இந்த அரசு பின் வாங்

காது என்ற அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதற்காக எதைச் சொன்னாலும், அச்சுறுத்தினாலும், கேவலப் படுத்தினாலும், சட்டத்தை மீறினாலும், நியதியை கேட்க மாட்டோம், அதைப்பற்றி நினைக்கவே மாட்டோம் என்று சொன்னாலும் எந்த அரசும் எதுவும் செய்ய முடியாது. ஆகவே எங்களால் முடிந்த வரையில் நாங்கள் சொல்லியாகி விட்டது. முடிந்ததை எல்லாம் நாங்கள் செய்து விட்டோம். அங்கே கொடுத்தார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். மத்திய அரசோடு போராட வேண்டும்; அதற்கு பிறகு மத்திய அரசு தருகிறது என்பதை நாம் சொல்கிறோம், சுட்டிக் காட்டியிருக்கிறோம். உங்களுக்கு வசதி இருக்கிறது. கொடுக்கிறீர்கள், அதை எங்களிடம் கலந்து கொள்ளுங்கள், கொடுக்கிறோம் என்றால் அதற்கு பதில் இல்லை. இன்னொன்றைச் சொல்ல வேண்டும். பேசியதாக நினைவு வந்திருக்கிறது. ஏதோ சிலர் பணம் அங்கே அனுப்பினாலும் செலவு செய்வதில்லை என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஒரு காவல் நிலையத்தில் ஐந்து கைத்துப்பாக்கிகள் தற்காப்பிற்காக இருக்க வேண்டுமென்று சொல்லி, அவைகளை வெளிநாட்டிலே இருந்து வரவழைக்க வேண்டுமென்று இந்திய பேரரசிடம் அனுப்பினால் தேவையில்லை என்று சொல்லி விட்டார்கள். அங்கே என்ன நிலை? ஊர் எப்படி, மக்கள் எப்படி—இதை அவர்கள் புரிந்து கொண்டிருக்க முடியுமா? அங்கே போய் புள்ளி விவரத்தை கணக்கு பார்க்கிறார்கள். அதை வைத்து அவர்கள் தீர்மானிக்கிறார்கள். ஆகவே தான் சில சமயம் இவைகளை வெளியே சொல்லாமல் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். இதற்கும் அப்படித்தான்.

விவசாயிகளுடைய கடனை ரத்து செய்ய வேண்டும்; விவசாயிகளுடைய மின் கட்டணத்தை வசூலிக்கக் கூடாது; ஜப்தி செய்யாதீர்கள்; நாராயணசாமி நாயுடு என்ன சொல்கிறார்? நேற்றுக்கூட பேசியிருக்கிறார். திருச்செங்கோட்டிலே என்று நினைக்கிறேன். அங்கே பேசியதாக செய்தி வந்திருக்கிறது. நிலத்தை தரிசாகப் போடுங்கள்; அரசாங்கம் உங்களிடத்திலே வரும் என்கிறார்; இந்த நாட்டுக்கு நல்லது செய்கிறாரா? இதை எவ்வளவு நாட்களுக்கு அனுமதிக்க முடியும், கூப்பிட்டு பேசுங்கள் என்றால் கூப்பிட்டோம்; வர மாட்டேன் என்கிறார். நிபந்தனைகளை விதித்து இதையெல்லாம் ஒத்துக்கொண்டு இருக்கிறது. பணம் வசூலிக்காமல், பணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று; அதை செய்ய வேண்டும் நாங்கள்; பணத்தை வசூலிக்கக் கூடாது. மின்சார வாரியத்திற்கு எவ்வளவு கோடி நஷ்டப் என்று பார்த்தீர்கள். அந்த பணத்தை நாங்கள் சரி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, வரியை வசூலிக்காதீர்கள். கடனை வசூலிக்காதீர்கள், நாங்கள் வட்டியையும் ஜூன் மாதம் 30-ஆம் தேதி





வரை விட்டுக் கொடுத்து இருக்கிறோம். இவ்வளவு செய்த பிறகும் எதற்கெடுத்தாலும், இதைச் செய்ய மாட்டோம்; வந்து பார், நீ ஒத்துக் கொள்கிறாயா? வருகிறேன்; அதிலும் என்னை மட்டும் அழைத்தால் வருவேன்; மற்ற கட்சிகள் எல்லாம் என்ன? இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள் இல்லையா? அவர்கள் சொல்கிறார், நான் ஒத்துழைத்தேன்; இருக்கட்டும்; ஒத்துழைத்ததற்கு நாங்கள் என்ன செய்யவில்லை. நாங்கள் கமிட்டி அமைப்போம்; குழு அமைப்போம்; அமைச்சர் அந்தஸ்தில் ஒருவர் தலைவராக நியமிப்பது; வந்தார்களா? நீங்களே வந்திருந்தால் அந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். முடியாது என்று சொன்னீர்கள்; பிறகு வேறு ஒருவரை போட்டோம். அழைத்தோம், முடியாது என்கிறீர்கள். நிபந்தனை விதிக்கிறீர்கள். போராடுவோம் என்கிறீர்கள். இதை அழித்து விட்டு மறு வேலை என்கிறீர்கள். ஒரு கொள்கை வைத்துக் கொண்டு, ஒரு முடிவை வைத்துக் கொண்டு கேள்வி கேட்பது நியாயம் அல்ல. விவாதித்த பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டுமே தவிர, இது தான் என் முடிவு, இதற்கேற்ப விவாதிப்போம் என்றால் விவாதிப்பதில் அர்த்தமே இல்லை. இத்தகைய நிலைமைகளை எல்லாம்—மற்ற கட்சிகளை விட்டுவிடுங்கள்; எங்களை மட்டும் விவசாயிகளுடைய பிரதிநிதிகளாக நினைத்துக் கொள்ளுங்கள்—என்று ஒருவர் சொல்வாரானால் இங்கே இருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் நாம் எப்படி அலட்சியப்படுத்த முடியும். அத்தனை பேரும் மக்களுடைய வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். உங்களுடைய பிரதிநிதிகள் தானே இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அந்தத் துணிச்சலோடு இருக்கிறார் என்றால் அதற்கு யார் பக்கபலம் என்பது நமக்கு தெரிகிறது. உண்மை மக்களுக்குத் தெரியும் போது அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்ற பதிலைத் தவிர நான் எதையும் சொல்வதற்கில்லை.

[பிற்பகல் 12-40]

இந்தக் காவல் துறையைப் பொறுத்தமட்டில் இந்த அரசு சில முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள 1,038 காவல் நிலையங்களில் 450 காவல் நிலையங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அனைத்து காவல் நிலையங்களும் அரசு கட்டடங்களில் இயங்க வேண்டுமென்ற நோக்கத்தின் முதற் கட்டமாக புதிதாக 150 காவல் நிலையங்கள் கட்டப்படும். இதற்கென ரூ. 4 கோடி ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

அடுத்து, போக்குவரத்து காவல் துறைக்கு புதிய வாகனங்கள் வாங்குதல். சென்னை நகரின் போக்குவரத்துக் காவல் துறையை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு (தொலை தூர தொடர்புக் கருவி) வி.எச்.எப். பொருத்தப்பட்ட 3 வேன்கள் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறையில் தற்போதுள்ள 1,873 பழைய மோட்டார் வாகனங்களில் ஆண்டுதோறும் 10 சத விகிதம் புதுப்பிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதற்கட்டமாக 187 புதிய வாகனங்கள் வாங்க ரூ. 1.57 கோடி ஒதுக்க முடிவு செய்துள்ளது.

காவல் துறை வாகனங்களை பழுதுபார்த்து சிறந்த முறையில் பராமரிக்க வசதி செய்யும் நோக்கோடு, ஆவடியில் உள்ள மோட்டார் வாகன பழுதுபார்க்கும் பணிமனையை ரூ. 10 லட்சம் செலவில் மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் இதைப்போல் தொடங்கவும் திட்டமிட உத்திரவிடப்பட்டுள்ளது.

கோவையிலும் வேலூரிலும் உள்ள காவலர் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் காவலர்களுக்கு தேவையான கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தில், அப்பள்ளிகளுக்குத் தேவையான மேஜை, நாற்காலி, கட்டில் போன்ற சாதனங்களை வாங்க அரசு ரூ. 20 லட்சம் ஒதுக்க முடிவு செய்துள்ளது.

காவல் துறையைச் சேர்ந்த குதிரைப் படைப்பிரிவை மேலும் விரிவுபடுத்தும் வகையில், கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகரங்களிலும் குதிரைப் படைப் பிரிவை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

சென்னையிலுள்ள காவல் துறை பயிற்சிக் கல்லூரிக்குப் புதிதாக ஓர் பேருந்து, ஒரு ஜீப், ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள்கள் ரூ. 4·15 லட்சம் செலவில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரியும் காவலர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்படாமல் நீண்டகாலமாக இப்பிரிவிலேயே இருப்பதை இந்த அரசு பரிவோடு பரிசீலனை செய்து தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த காவலர்கள் சிறப்புக் காவல் படையிலிருந்து சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்ற முடிவு செய்துள்ளது. இவ்வாறு சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்றப்படுமுன் இந்திய தண்டனைச் சட்டம் (ஐ. பி. ஸி.), மற்றும் குற்ற நடைமுறைச் சட்டம் (சி. ஆர். பி. சி.) ஆகியவற்றில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.



1981 மே 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

15—8—1980 முதல் காவல் துறையில் ' ஏவலர் முறை ' இருக்கக்கூடாது என்று அரசு முடிவு செய்து ஆணைகள் பிறப்பித்தது. அதற்கேற்ப காவல் துறை அதிகாரிகளுக்கு ஏவலர்களுக்குப் பதிலாக அடிப்படை ஊழியரோ அல்லது அதற்கென ஒரு குறிப்பிட்ட ஈட்டுத் தொகையோ (லம்ப் சம்) கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. எக்காரணத்தைக் கொண்டும் காவலர்களை மீண்டும் ஏவற் பணிக்கு பயன்படுத்த இந்த அரசு அனுமதிக்காது.

இன்னொன்று, வெளியூரிலிருந்து வருகின்ற பெண்கள் எங்கேயோ வழிமாற்றி அழைத்துச் செல்லப்படுவதாகவும் வேறு பல குற்றங்கள் நிகழ்வதாகவும் எல்லாம் சொல்லப்படுகிறது.

வெளியூர் ளிலிருந்து வேலை தேடியோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ சென்னை மற்றும் முக்கிய நகரங்களுக்கு வந்து வழி தவறி அல்லற்படும் பெண்களுக்கு அவர்கள் சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லவும் அல்லது அவர்கள் செல்ல வேண்டிய வேறு இடத்திற்கு சரியான முறையில் சென்றடையவும் ஒரு வழிகாட்டும் நிலையம் ரயில் நிலையங்களிலேயே அமைத்துத் தர இந்த அரசு முடிவு செய்துள்ளது. இவ் வழிகாட்டும் நிலையம் முழுவதும் பெண் காவல் அதிகாரிகளும் பெண் காவலர்களும் கொண்டதாக இருக்கும். வெளியூரிலிருந்து வரும் பெண்கள் நேரடியாக இந்த நிலையத்திற்குச் சென்று தாங்கள் எங்கிருந்து வந்திருக்கிறோம் என்றும், எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதையும் தெரிவித்தால், அங்குள்ள அதிகாரிகள் அவர்களுக்கு வாகன வசதி செய்து போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்து தருவார்கள். இதன் முதற்கட்டமாக சென்னையில் சென்ட்ரல், எழும்பூர் நிலையங்களில் இந்த ஏற்பாடு செய்யப்படும். பின்னர் மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை போன்ற ரயில் நிலையங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் தற்காலிக அடிப்படையில் தற்போது பணிபுரியும் சமையற்காரர், சலவைத் தொழிலாளர், நாவிதர் ஆகியோரது பணியை நிரந்தரம் செய்து முறைப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அவர்களுக்கு விடுப்பு மற்றும் ஓய்வூதியச் சலுகைகள் கிடைக்கும்.

அரசால் தனி வீடு கொடுக்கப்படாத தமிழ்நாடு சிறப்புக் காவல்படை வீரர்களுக்கு அவர்களது குடும்பங்கள் வேறு இடத்தில் வாடகை வீட்டிலிருந்தால் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படும்.

காவல் துறையினரின் சேவை கிராமப்புற மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் இவ்வாண்டு புதிதாக 30 காவல் நிலையங்கள் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மே 7

தீயணைப்புப் படையில் பணிபுரிபவர்களுக்கும் இது தொடரும் என்பதை ........

[பிற்பகல் 12.50]

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு, 41 சுருக்கெழுத்தர்கள் இருக்கிறார்கள். போலிஸ் சர்வீஸ் சென்ட்டர் ரெசக்னைஸ் பண்ணியாயிற்று. அவர்களுக்கு அரிசியும் மற்ற ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கவில்லை. 41 பேர்கள்தான் இருக்கிறார்கள். இதை நீங்கள் கொஞ்சம் கன்சிட் பண்ண வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சொல்லுவதற்குள், கொஞ்சம் அவசரபட்டு விட்டார்கள். தீயணைப்புப் படையினருக்கும் அந்த வசதி செய்து கொடுத்தோமே அது போல் செய்யப்படும் என்பதையும் அதுபோல் அலுவலர்கள் என்ற வகையிலே பணியாற்றுகிறவர்கள் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்றும்—காவல் நிலையத்தில் பணியாற்றுகிறவர்கள் அவர்களுடைய எண்ணிக்கை அதிகம் ஆக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்காக ஊர்வலமும் வந்தார்கள். அதையும் இந்த அரசு தேவையான அளவு உயர்த்த இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, அந்தப் பளுவும் குறையும் என்று கூறி, ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : —விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 15—காவல்துறை.

திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், எண். வரதராஜன், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,85,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1981 மே 7]

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

திருவாளர்கள் டி. மணி, தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. என். இராசாராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,46,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,82,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. கே. எம். தங்கமணி : துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரில் மேல் நிலைக் கல்வி பயிலும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு விடுதி கட்டி வசதி செய்து தருவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,82,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. கே. ஆர். சுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படும் உபகாரச் சம்பளத்தை அதிகரிக்கவும், பள்ளி, கல்லூரிக் கட்டணங்களைக் குறைக்கவும் போதிய வசதி செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,82,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் பழங்குடியினர் ஆகியோருக்கு அளிக்கப்பெறும் வசதிகள் போல் ஏனைய பின்தங்கிய வகுப்பினர்களுக்கு இன்னும் அதிகமான அளவு வசதி செய்ய வேண்டுமாய் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,82,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவரமான அறிக்கை* பேரவைமுன் வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அதையே என்னுடைய முன்னுரையாக எடுத்து, நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்து, விவாதத்திற்குப் பிறகு பதிலுரைக்கின்ற வாய்ப்பை எனக்கு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

*586ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.
[illegible]

1981 மே 7]

*திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை எண். 32-ல் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாகப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் தொகையிலே ஏறத்தாழ 65 சதவீதத்தினர் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் பட்டியலிலே இடம்பெற்றுள்ளனர். தமிழகத்தின் 1981—82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டுத் தொகையில் பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7,82,63,000 என்ற தொகையானது 1 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அரிஸ்டாட்டிலின் கருத்தினை இங்கே கூற விரும்புகிறேன்.

Equality consists in treating equals equally and unequals unequally என்று கூறினார்கள். ''சமத்துவம் என்பது சமமானவர்களை சமமாக நடத்துவது; சமமில்லாதவர்களுக்கு விசேட சலுகைகளை அளித்து முன்னேற்றுவது'' என்பதுதான் அதனுடைய கருத்து. இதே கருத்தில்தான் நமது இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் சமூக நீதி அனைவருக்கும் கிடைக்குமாறு செய்வதற்கு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வகுப்பு பேதத்தினால் பாதிக்கப்பட்ட பிரிவினரிடையே அதே வகுப்பின் அடிப்படையால் அளிக்கப்படும் சலுகையால்தான் அந்த வகுப்பு முன்னேற்றம் அடையமுடியும். அதைத்தான் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள், முள்ளை, முள்ளால்தான் எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1951 ஆம் ஆண்டு, அன்றைய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய அரசியல் சட்டம் பிரிவு 15-ல் துணைப்பிரிவு 4 இன் மூலம் முதன் முதலாக ஒரு அரசியல் சட்டத் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார்கள். அதன் மூலம், பின்தங்கிய வகுப்பினருக்கு சமூக நீதியாகவும், கல்வி ரீதியாகவும், விசேஷ சலுகைகள் அளிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் என்றென்றும் நேருஜியை மனதில் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் அண்மையில் கூறிய ஒரு கூற்றையும் இந்தத் தருணத்தில் நினைவுப்படுத்த விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோருக்கும், அரிசன மக்களுக்கும்—மலை வாழ் பழங்குடி மக்

களுக்கும் சட்ட ரீதியாக அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ சலுகைகளையும் ஒதுக்கீடுகளையும் தொடர்ந்து நீடிக்க உறுதி அளித்து இருக்கிறார்கள். இந்தச் செய்தி பின்தங்கிய மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டில் இன்றையதினம் 50 சதவிகிதம் பிற்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் மக்கள் தொகையில் 65 சதவிகிதத்தினர் தற்போது பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களின் பிற்பட்டத் தன்மையும், முன்னேற்றமும் ஒரே சீரான நிலையில் இருக்கிறதா என்பதை ஆராய்ந்தால், இல்லை என்று தான் சொல்லவேண்டும். இந்த உண்மையை மதிப்பிற்குரிய சட்டநாதன் தலைமையில் அமைந்த பிற்பட்டோர் நலக் குழு அறிக்கை தெளிவாகக் காட்டி இருக்கிறது. ஆகவே, தற்போது பிற்பட்டோர் பட்டியலில் உள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் சமநீதி ஏற்பட வழி வகை செய்வது மிகவும் அவசியமாகிறது. அதற்காக, மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனி ஒதுக்கீடு செய்வதின் மூலம்தான் நலிந்த மக்களுக்கு இந்தச் சமநீதியை அளிக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இன்றைய தினம் அண்டை மாநிலமாக உள்ள கருநாடக மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பினரை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த வகையில் தனித்தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை, கம்பார்ட்மென்ட் ரிசர்வேஷனை அமல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டு இருப்பதை முன்னாள் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் சட்டமன்றத்திலேயே கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்தத் தனி ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக அண்மையில் கூறியதாக அறிகிறேன். ஆனால், இந்தத் தனி ஒதுக்கீடு பற்றி பிற்பட்டோர் நலக்கொள்கை குறிப்பில் எதுவும் குறிப்படாமல் இருப்பதைக்கண்டு மிகவும் வருத்தப்படுகிறேன்.

17—11—1978 ஆம் தேதி தமிழக அரசின் சமூகநலத்துறை எம்.எஸ். நம்பர் 1087 என்ற ஒரு அரசாணையை வெளியிட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அந்த அரசாணையில் பிற்பட்ட பட்டியலில் உள்ள வகுப்பினர்களுக்கு சலுகை செய்யும்போது, அந்தப் பல்வேறு பிற்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை எவ்வளவு என்று தெளிவாகத் தெரியாதது ஒரு இடையூறாக இருக்கிறது. எனவே, தமிழகத்திலுள்ள



பிற்பட்ட சமூகங்களின் மக்கள் தொகையைக் கணக்கிட்டு தெரிவிக்க தமிழக அரசு இதன் மூலம் உத்திரவிட்டு இருக்கிறது. இந்த அரசாணை குறித்து தமிழக அரசு இது நாள் வரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்த பிற்பட்ட வகுப்பினருக்கு தனித்தனி ஒதுக்கீடு (கம்பார்ட்மென்ட்ல் ரிசர்வேஷன்) செய்கின்ற அறிவிப்பினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிடுவார் என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

[பிற்பகல் 1-00]

பிற்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் " மாநில பிற்பட்டோர் நலத் துறை ஆலோசனைக் குழு " திருத்தி அமைக்கப்பட திட்டப் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் குழு எப்போது திருத்தி அமைக்கப்படும் ? அதை திருத்தி அமைக்கும்போது அரசுத் துறையைச் சாராதவர்கள் இடம் பெறுவார்களா ? எப்போது இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

படிப்பிற்காக உதவித் தொகை அளிக்கப்படுவதையும் இந்த மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கிறீர்கள். படிப்பிற்காக உதவித் தொகை அளிக்கப்படும்போது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் 4-வது வகுப்பிலிருந்தே உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உதவித் தொகையை ஒரு மாணவன் பெற வேண்டுமானால் அவன் முந்தைய ஆண்டுத் தேர்விலே 40 சதவீதம் மார்க் பெற்றிருக்க வேண்டும் என்றும், அவனுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்றும் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. மாத வருமானம் 210 ரூபாய் வரக்கூடிய ஒரு சாதாரண ஊழியர் கூட, பிற்பட்டோர் விடுதியில் பணிபுரிகின்ற சமையல்காரரின் குழந்தை கூட இந்தச் சலுகையை அடைய வழி இல்லாமல் இருக்கிறது. எனவே இந்த படிப்பு உதவித் தொகையைப் பெற நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 2,500 ரூபாய் என்ற வருமான வரம்பை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு 40 சதவீத மதிப்பு எண்கள் பெற்றவர்களுக்குத் தான் இந்த படிப்பு உதவித் தொகை என்ற நிபந்தனையையும் தளர்த்தி, தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் படிப்பு உதவித் தொகை கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது பிற்பட்டோர் பட்டியலில் 65 சதவீத மக்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்கள். ஆகவே, தற்போது பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்கின்றபோது பிற்பட்ட மாணவர்களுக்கு 65 சதவீதம் என்று இருப்பதை 75 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் தொகுதி எல்லாத் துறைகளிலும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கிற ஜெயங்கொண்டம், அரியலூர் போன்ற நகரங்களில் மாணவிகளுக்கு என்று தனியாக பிற்பட்டோர் மாணவியர் விடுதிகளை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என் தொகுதியாகிய ஜெயங்கொண்டத்தில் மீன்சுருட்டி, த. பளூர் ஆகிய இடங்களில் மாணவர் விடுதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல எனது தொகுதியான ஜெயங்கொண்டத்தில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று மதிப்புக்குரிய சட்டநாதன் தலைமையில் அமைந்த தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அங்கே ஒரு கல்லூரியையே அல்லது பாலிடெக்னிக் ஒன்றையோ அமைக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

" தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் " என்ற அமைப்பை ஏற்படுத்தி, பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஊக்கமூட்டுவது குறித்து இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருக்கிறார்கள். அதற்காக இந்தத் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.

உடையார்பாளையம் வட்டம் அனைத்து வகையிலும் மிகவும் பின்தங்கிய பகுதியாகவே இன்றுவரை இருந்து வருகிறது ; குறிப்பாக தொழில் துறையில் மிகவும் பின்தங்கி இருக்கிறது. உழைக்கின்ற வர்க்கத்தினர் மிகுந்த அந்தப் பகுதியில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லை ; குறிப்பிடும் வகையில் நீர்த்தேக்கங்களும் இல்லை. தற்போதுள்ள வறட்சி நிலை காரணமாக மட்டுமல்லாமல், ஆண்டாண்டு காலமாக குடிதண்ணீருக்காக உடையார்பாளையம் வட்டத்திலுள்ள பல கிராமங்களில் மக்கள் பலவாறாக அவதிப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தைப் போக்க ஒரு சிறப்பான திட்டத்தை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



உடையார்பாளையம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்த தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுகிறேன். அப்படி அறிவித்து, அங்கே பல சலுகைகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சமுதாய முன்னேற்றத்தில் நல்ல ஈடுபாடு உடையவர்கள். அதிலும் குறிப்பாக பின்தங்கிய மக்கள் நலனுக்காக மக்களுக்காக பல்லாண்டு காலமாக பாடுபட்டு வருகிறார்கள். அவர்களே இந்தத் துறையை ஏற்றிருக்கிற காரணத்தால் இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மக்கள் அடிப்படையில் தனித்தனி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் செய்திடாத அளவில், பின்தங்கிய இனத்தவர்க்கு 50 சதவிகிதத்தை கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் ஒதுக்கி, பின்தங்கிய இனத்தவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கிவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நான் மகிழ்வுடன் பாராட்டுகிறேன்.

பின்தங்கிய இனத்தவர் நலனுக்காக 7,82,63,000 ரூபாய் ஒதுக்கியும், பின்தங்கிய மாணவர்களின் உதவித் தொகைக்கென 40,000 ரூபாய் ஒதுக்கியும் புதிதாக பின்தங்கிய மாணவர்களுக்கென 40 விடுதிகள் கட்டவும் திட்டமிட்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின், இந்த அண்ணாவின் அரசை பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுதந்திரம் அடைந்து 34 ஆண்டுகள் ஆகியும் இந்திய மக்கள் தொகையில் 75 சதவிகிதத்தைக் கொண்ட பின்தங்கிய இன மக்களுக்கு வட மாநிலங்கள் பலவற்றில் போதுமான ஒதுக்கீடுகள் கிடையாது. பின் தங்கியோர் நலன் குறித்து ஆராய அமைக்கப்பட்ட மண்டல் கமிஷனோ கிடப்பில் போடப்பட்டு விட்டது. ஒரு வேளை பின்தங்கியோருக்கு ஒதுக்கீடுகளை மத்திய அரசு அளித்துவிடுமோ என எண்ணி, மத்திய அரசு அலுவலகங்களில் உள்ள உயர் அதிகாரிகள் அவசரம் அவசரமாக காலி இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே பின்தங்கிய இன மக்களுக்கு பாதுகாப்பு அரணாக உள்ள தமிழக அரசு மண்டல் கமிஷன் அறிக்கையை மத்திய அரசு செயல்படுத்தவும் பின்தங்கிய இன மக்களுக்கு மத்திய அரசுத் துறைகளான ரயில்வே, தபால் தந்தி, வருமானவரி, சுங்கம், வங்கிகள்,

எல்.ஐ.சி. போன்றவற்றில் 50 சதவிகித ஒதுக்கீட்டை உடனடி வழங்கவும் மத்திய அரசை வற்புறுத்தி தீர்மானம் நிறை வேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகளில் பின்தங்கிய இன மாணவர்கட்கு படிப்பு உதவித் தொகைக்குப் பதிலாக புத்தகங்கள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து, தகுதியுள்ள அனைத்து பின்தங்கிய இன மாண வர்களும் இந்தத் திட்டத்தால் பயன்பெறச் செய்தது இந்த அண்ணாவின் அரசுதான். பெரும்பாலான ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த கிராமத்தில் வசிக்கும் பின்தங்கிய இன மக்கள் தங்கள் குழந்தைகளை எட்டாவது வகுப்பு படிப்போடு நிறுத்தி விடு கின்றார்கள். ஆனால் பின்தங்கிய மாணவர்களுக்கான சலுகை கள் 9-வது வகுப்பிலிருந்துதான் வழங்கப்படுகின்றது. அதிலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பின்தங்கிய மாணவர்களுக்கே அளிக்கப்படுகிறது. உண்மையிலேயே ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பின்தங்கிய இன மாணவன் பள்ளி நேரம் போக மீதி நேரத்தில் வறுமையின் காரணமாக அவன் வயல் வேலை களுக்கோ அல்லது ஆடு, மாடு மேய்க்கவோ செல்கிறான். அவனால் அதிக மதிப்பெண்கள் பெற இயலாது. ஆனால் வசதி யுள்ள பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஓய்வு நேரத்திலும் படிக்கிறான், வசதியின் காரணமாக டியூஷன் வைத் தும் படிக்கிறான். ஆக அவன் அதிக மதிப்பெண்கள் பெற்று சலுகையும் பெற்று விடுகிறான். இதனால் ஏழைகளுக்கு நாம் அளிக்கும் திட்டம் பயன் தரவில்லை.

இந்நிலையைப் போக்க நாம் அளிக்கும் சலுகையை தொடக் கக்கல்வி முதல் மேல் நிலைக்கல்வி வரை அனைத்து பின்தங்கிய இன மாணவர்களுக்கும் அளிக்க வேண்டுமென நான் இந்த அரசை வேண்டுகிறேன். தமிழக அரசின் ஒதுக்கீட்டுக் கொள்கை யால் பின்தங்கிய இனம் நல்ல பல பயன்களைப் பெற்றுள்ளது. ஆனால் அளிக்கப்பட்ட சலுகைகள், பதவிகள் அனைத்தும் பின் தங்கிய சாதிகளிலேயே ஒரு சில குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்த வர்கள் மட்டுமே அரசியல் செல்வாக்காலும், ஏனைய செல் வாக்காலும் பெறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும், துறைகளின் முக்கியப் பொறுப்பு களிலும், அவர்களே ஊடுருவியுள்ளனர். ஏனைய பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்தவர்கள் சுதந்திரம் அடைந்ததிலிருந்து எந்தச் சலுகையையும் பெற இயலாதவர்களாகவே இருந்து வருகின்றனர். பெயரளவிற்கே பின்தங்கியோர் பயன் பெறுகின்றனரே தவிர உண்மையில் பின்தங்கிய இனத்தைச் சேர்ந்த அனைத்துச் சாதி யினரும் உரிய சலுகைகளை அடையவில்லை. இப்படிப்பட்டவர் கள் எப்பொழுதும் ஏமாந்து கொண்டுதான் இருப்பார்கள் என வும் நாம் எண்ணி விடக்கூடாது. இந்நிலையைப் போக்க ஒன்றும்



இதுவரை வாய்ப்புக் கிடைக்காத பின்தங்கிய சாதிகளை தனி யாகப் பிரித்து அவர்களை, "மிகவும் பின்தங்கியவர்கள்" என அறிவித்து அவர்களுக்கென ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் அல்லது பின்தங்கியோர் பட்டியலில் உள்ள ஒவ்வொரு சாதிக்கும் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் தனித் தனியாக ஒதுக்கீடுகள் அளிக்கலாம் என வும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாநில அரசு உத்தியோக நியமனத்தின்போது 50 சதவிகித ஒதுக்கீடு வழங்குவதுபோல, ஒவ்வொரு துறையிலும் உத்தியோக உயர்வின்போதும் இந்த 50 சதவிகித ஒதுக்கீடு முறையை அமுல்படுத்த ஆணைகள் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

தற்பொழுது தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் சாதி அமைப்பு கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சில சாதி அமைப்புகள் கடந்த 50 ஆண்டுகட்கு முன்பு நம் நாட்டில் தொடங்கப்பட்டு, அவர்களின் கல்வி, சமூக மேம்பாட்டிற்கென்றே இயங்கி வந்திருக் கின்றன. அப்படிப்பட்ட அமைப்புகளால் எந்தக் காலத்திலும் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

வாய்ப்பே கிடைக்காத, சலுகைகளே பெற முடியாத கல்வி யறிவற்ற பின்தங்கிய இனம் தங்களுக்கென சாதி அமைப்புகளை உருவாக்கி, அதை அவர்களின் கல்வி, சமூக மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவதை நாம் குறை சொல்ல முடியாது. அப்படிப் பட்ட அமைப்பில் பெரிய அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டு நல்ல அறிவுரைகள் வழங்கி முடிந்தால் நிதி வசதியும் அளித்து ஊக்கப்படுத்துவதுதான் சிறந்த நெறியாகும். இதனால் அவர்கள் முன்னேறவும் வழி ஏற்படும். ஆனால் அனைத்து சலுகைகளையும் அனுபவிக்கின்ற ஓரிரு இனம் தற்பொழுது சாதி அமைப்பை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. ஒன்றை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். ஒருசில சட்டமன்ற உறுப்பினர்கள் அறை களைப் பார்த்தால் அங்கு தொகுதி மக்களைவிட, கட்சிக்காரர் களை விட அந்த சட்டமன்ற உறுப்பினரின் சாதியைச் சேர்ந்த வர்களே நிரம்பி வழிகின்றனர். இதைவிட உயர்ந்த பதவியி லும் இதே நிலையினைத்தான் காண முடிகிறது. காண்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அரசு அலுவலகங்களில் காரியங்கள் நடைபெற வேண்டு மானால், செல்லுகின்றவர் சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது வேறு பொறுப்புகளிலோ இருந்துதான்! ஆக வேண்டும் என்பதில்லை.

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1981 மே 7

இவர் இன்ன சாதி என்றாலே காரியங்கள் நடைபெறுவதை நாம் பார்க்க முடியும். இந்த நிலைமை நிச்சயமாகப் போக்கப்பட வேண்டும். அரசியல்வாதியாக இருக்கும் ஒருவருக்கு சாதி அந்தஸ்து இருக்குமானால், அவரை எந்த அரசியல் இயக்கத்திலும் சேர்க்காமல் புறக்கணிக்க வேண்டும் என நான் எல்லா அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

வேலை நியமனத்தின்போதும், பதவி உயர்வின்போதும், சில உயர்மட்ட மேல் அதிகாரிகள் தாங்கள் சார்ந்திருக்கும் சாதிக்காக செயல்படுவதாக பல புகார்கள் நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. இந்நிலையைப் போக்க ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு ஆண்டும் நிரப்பப்படும் பதவிகள் எத்தனை என்பதையும், அளிக்கப்பட்ட பதவி உயர்வுகள் எத்தனை என்பதையும் கணக்கிட்டு எந்தெந்த சாதியைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அரசு கண்காணித்தால், தவறுகள் நடக்காமல் தவிர்க்கலாம்.

குறைகள் முழுமையாகக் களையப் பெறவேண்டுமானால் பின் தங்கியோர் நலனுக்கென ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி, முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற்பட்டோர் இனங்களிலேயே மிகவும் பிற்பட்டோர்களாக இருக்கக்கூடிய சலவைத்தொழிலாளர்கள், முடி வெட்டுபவர்கள், ஒட்டர், குறவர்கள் போன்றவர்களுக்கு, தொழில் முன்னேற்றத்திற்கான கருவிகளை அதிக அளவில் கொடுத்து அவர்கள் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் அடைய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உதவித் தொகை பெறக்கூடியவர்களுக்கு ஆண்டு வருமானம் என்பது 1,501 லிருந்து 2,500 என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் இருக்கும் விலைவாசி சூழலில், வருவாய்களின் கால அளவில் இது மிகவும் குறைவாக இருக்கிறது. இவ்வளவு குறைவான தொகையை பெறுவதாக அவர்கள் பொய் சர்டிபிகேட் வாங்கித்தான் தரவேண்டியிருக்கிறது. இதனால் நிறைய ஊழல்களும் நடக்க ஏதுவாகிறது. ஆகவே வருமான வரம்பை உயர்த்தி சலுகைகளைத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மே 7] [திரு. எம். செல்லமுத்து]

அடுத்து, பள்ளிகளிலே படிக்கக் கூடிய பிற்பட்டோர் இன மாணவர்களுக்கு 90 சதவீதம் பள்ளிக்கு வருகை தந்ததாக பதிவேடு இருந்தால்தான் அவர்களுக்குத் தரக்கூடிய சலுகைகளைப் பெற முடியும் என்கிற நிலைமை இருப்பது சரியல்ல. அதை மாற்றி, அவர்களுடைய வருமான வரம்பை அடிப்படையாகக் கொண்டும், பிற்பட்ட நிலைமையை அடிப்படையாகக் கொண்டும் அவர்களுக்கு சலுகைகளையும் உத்தரவாதத்தையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் படிக்கும் பிற்பட்டோர் இன மாணவர்கள் ஆங்கிலத்தை போதனா மொழியாக எடுத்துப் படிப்பதற்கு கட்டணம் வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது. அது முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும்.

அடுத்து, விடுதிகளில் தங்கியிருக்கும் பிற்பட்டோர் இன மாணவர்களுக்கு அரசு ஒதுக்கியிருக்கும் 45 ரூபாய் தொகை போதாது என்று கூற விரும்புகிறேன். இன்றைய தினம் நாட்டில் நிலவும் விலைவாசி நிலவரத்தில் ஒரு டீ குடிக்க வேண்டுமென்றால் கூட 40 பைசா செலவழிக்க வேண்டியிருக்கும் நிலையில் மாதம் ஒரு மாணவனுக்கு 45 ரூபாய் எப்படி போதும் என்பதை கணக்கில் கொண்டு, குறைந்தபட்சம் ஒரு மாணவனுக்கு 100 ரூபாயாவது கொடுக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாணவர்களின் விடுதிகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருக்கிறது. அப்படி குறைவாக இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு கல்லூரிக்கும், ஒவ்வொரு பள்ளிக்கும் 50 என்ற விகிதத்தில் விடுதியில் மாணவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் நியாயப்படி பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மிகவும் ஏழை மாணவர்கள் சிலர், அரசு அளிக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர். ஆகவே, இன்னும் அதிகமான அளவில் விடுதிகளைக் கட்டி, இருக்கின்ற மாணவர்கள் முழுவதற்குமே அந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று அந்த விடுதிகள் கட்டப் பெறும்போது, அதற்கான காண்ட்ராக்டுகளை வெளியார்களுக்கு கொடுக்காமல் அரசே ஏற்று நடத்தி கட்டிடங்களைக் கட்டி, வாடகை வீடுகளில் இருக்கும் சில விடுதிகளையும் இந்த அரசுக் கட்டிடங்களுக்கு மாற்றி, செலவைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1981 மே 7

அடுத்து, மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி நேர ஆசிரியர்களை இன்னும் அதிக அளவில் நியமித்து, அனைத்து பிற்பட்ட மாணவர்களும் நல்லமுறையில் கல்வி பெறச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவிற்காக 22 காசுகள் ஒரு மாணவனுக்கு என்கிற விகிதத்தில் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது நிச்சயமாக போதவே போதாது; குறைந்தபட்சம்ஒரு ரூபாயாவது கணக்கிட்டு கொடுத்தால்தான், மதிய உணவின் தரம் ஓரளவிற்கு சுமாராக தற்போது இருக்கும் விலைவாசி நிலைமையில் இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, கேர் ஸ்தாபனத்தின் சார்பிலே கொடுக்கக்கூடிய உணவு வகைகள் தரமானதாக இல்லை என்றும், புழுபுழுத்துப் போயிருப்பதாகவும் நிறைய புகார்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பரிசீலித்துப் பார்த்து நல்ல முறையில் அந்த உணவுப் பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் தனியார் அறக்கட்டளைகள் சார்பில் இந்த பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இல்லங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த இல்லங்கள் சரியானமுறையில் இயங்குகின்றனவா என்று பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் நிலங்களை எழுதி வைத்திருந்தார்கள். அதன் வருவாயைக் கொண்டு அந்த இல்லங்கள் சரியான முறையில் நடத்தப்படாமல் இன்று சீரழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தனியார் நடத்தும் அந்த அறக்கட்டளைகள் மூலம் நடத்தப்படுகிற விடுதிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் பொறுத்து, அதை வருட ஆரம்பத்திலேயே வழங்க வேண்டும். வருடம் முடிவில் அல்லது மத்தியில் அந்த உதவித் தொகை கொடுக்கப்படும்போது அதன் பலன் மாணவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே வருட ஆரம்பத்திலேயே அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் இவர்களுக்கு அரசாங்கம் சலுகைகள் வழங்கக்கூடிய நேரத்தில் சலவைத் துறைகள் கட்டுவதாக அரசே சொல்லியிருக்கிறது. எனவே எல்லா



1981 மே 7] [திரு. எம். செல்லமுத்து]

ஊராட்சி ஒன்றியங்களிலும், நகரங்களிலும் அதிகமான அளவிற்கு சலவைத் துறைகள் கட்டிக்கொடுக்கப்பட்டு அவர்கள் தரமான விதத்தில் சலவை செய்ய அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். முடிதிருத்துவோருக்கும் வேண்டிய சலுகைகளை அளிக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சில கருத்துக்களைக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை பற்றிய கொள்கைக் குறிப்பில் பல்வேறு துறைகளில் எவ்வளவு ரூபாய் செலவு செய்கிறோம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகஇன்று பிற்பட்டோர் என்று சொல்லும்போது பிற்பட்டோர் பட்டியலில் மிகவும் பிற்பட்டோர் என்ற ஒரு சில சமுதாயங்களும் அதில் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே பிற்பட்டோர் பட்டியலில் குற்ற மரபினர் என்ற ஒரு பிரிவும் அங்கே காணப்படுகிறது. இப்படி அதில் பல்வேறு பிரிவினர்கள் இருந்தாலும் கூட பொருளாதாரத் துறையில் இவர்கள் பிற்பட்டவர்களாக இருப்பதால் இவர்கள் வாழ்வு மேம்பாடு அடைவதற்கு, கலாசாரம் பண்பாடு இவற்றில் இவர்கள் முன்னேற்றம் அடைய, இந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது இன்று பிற்பட்டோர் சமுதாயம் பல்கிப் பெருகி வருகிறது. அந்தப் பட்டியலில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி முற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இன்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இன்று பொருளாதாரத்துறையில் பின்தங்கியிருக்கக் கூடிய மக்கள் எல்லாம் வாழ்க்கையில் மேம்பாடு அடைய போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு, சென்னை போன்ற நகரங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 60 என்றும், கிராமங்களில் உள்ளவர்களுக்கு ரூ. 55 என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏறிவரும் விலைவாசி காரணமாக அந்தப் பணத்தைக் கொண்டு அந்த மாணவர்களுக்கு சீரான முறையில் உணவு வழங்க முடியுமா என்று பார்க்கின்றபோது அந்தக் கட்டணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பிற்பட்டோர் நலத்துறையில் இருந்து மானியம் பெற வேண்டுமானால் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ரூ. 2,500 என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று சாதாரணமாக விவசாயத்

தொழிலாளர்களுக்குக்கூட நாம் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். ரூ. 5 கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது, குறைந்தபட்சமாக. அந்த அடிப்படையில் பார்த்தால் சாதாரணமாக ஒரு விவசாயக் கூலிக்குக் கூட ரூ. 150 மாத வருமானம் என்றால் ஆண்டுக்கு அது ரூ2,500யைத் தாண்டிவிடும். ஆகவே இந்த வருமானம் வரம்பை ரூ. 5,000 என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உதவித் தொகை பெறுகிற பிற்பட்ட வகுப்பு மாணவர்களாக இருந்தால் 40 சதவீதம் மார்க்ஸ் பெற்றிருக்க வேண்டும் என்றிருக்கிறது. இன்று கிராமங்களில் உள்ள மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், அந்த மாணவர்கள் அந்தளவிற்கு 40 சதவீதம் மார்க் பெற முடியாத நிலையில் இருப்பதால் அந்த 40 மார்க்ஸ் வாங்க வேண்டும் என்றிருப்பதை மாற்றி எல்லா பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் உதவித் தொகை கிடைக்கும் அளவிற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுவசதி வாரியம் மூலம் மறவர் குடியிருப்பு, மற்றும் பிற்பட்டோர் குடியிருப்பு என்ற அடிப்படையில் இன்று ரூ. 4,300 எஸ்டிமேட் என்றால் ரூ. 3,225 மானியமாகவும் வீட்டுச் சொந்தக்காரர் ரூ. 1,075 கொடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு வந்து இரண்டு இடங்களில் அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1—30]

ஆனால் இதுவரையில் அங்கே வீடுகள் கட்டப்படுவதற்கான எந்த அறிகுறிகளும் தென்படவில்லை. குறிப்பாக என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் மேல்மங்கலம் என்று சொல்லக்கூடிய பகுதியில் அவர்கள் வீடுகள் கட்ட 1075 ரூபாய் கட்டி, இரண்டு வருடங்களாகி விட்டது. ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. அதற்கு தட்கோ மூலம் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மானியமாக உழைப்பாகக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலையை மாற்றி அவர்களே கட்டிக் கொள்ள உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி எங்கள் நெல்லை மாவட்டத்திலே ஆயிரக்கணக்கான பிற்பட்டோர் தங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று மனு செய்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலே ஒரு வீடு கூட நெல்லை மாவட்டத்திலே கட்டிக்கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.





இந்த ஆண்டு நிதி கொடுப்பதற்கு, 1981—82லே ரூ. 1,000 ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அது அச்சுப் பிழையா அல்லது வேறு என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் கூற விரும்புகிறேன். அதேபோன்று நம்முடைய தமிழகத்தை எடுத்துக் கொண்டால், பிற்பட்டோர் பட்டியல் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் ஆதிதிராவிடர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களிலே இருக்கக்கூடியவர்கள் கிருஸ்துவ மீனவர்களாக இருந்தால், அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக, இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி, விலைவாசி ஏறியிருக்கின்ற நிலைமையில், அவர்கள் வாழ்க்கையை நடத்தமுடியாத நெருக்கடி நிலைமையில் போராடிக் கொண்டிருக்கும்போது இன்றைக்கு மதவாத கும்பல் அதாவது ஆர்.எஸ்.எஸ். என்று சொல்லக்கூடியவர்கள் அந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், கன்னியாகுமரியில் விவேகானந்த பாறையில் உள்ளவர்கள், அங்கே இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு எதிராக இனக் கலவரம் வரக்கூடிய அளவிலே தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்ற வேளையில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்காக ஒதுக்கியிருக்கிற அந்த இடங்கள் முழுமையாக அவர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும். அப்படிக் கிடைத்ததா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற வகையில் இந்த இலாகா செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர்நலத் துறையை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது விவாதத்தை மிக விவேகத்தோடு, மிக விரைவாக முடித்துக் கொண்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லாமலே தெரியும் பெரியோர் என்று சொல்வார்கள். ஆகவே, சொல்லாமலே பலபேர் பெரியவர்களாக இருந்து இந்த விவாதத்திலே, மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கின்ற வகையில் தங்களுடைய முழு ஆதரவையும் தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், இதிலே செய்யப்பட

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1981 மே 7

வேண்டிய மேம்பாட்டுத் தன்மைகளை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். மற்றவர்கள், அவ்வப்போது வினாக்கள் எழுப்பப்படும்போது, துணை வினாக்கள் மூலமும் தங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது சொல்லி வருகிறார்கள். அவ்வப்போது விடையளிக்கும்போது, இருக்கின்ற நிலைமைகளையும், எடுக்க வேண்டிய நிலைமைகளைப் பற்றியும் நான் அவ்வப்போது சொல்லியிருக்கிறேன். அந்த வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஆக, பிற்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையிலும், இந்த மாநிலம் அகில இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக, வியக்கத்தக்க வகையில் அமைந்திருக்கிறது என்பதை நான் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, பிற்பட்டோர், முற்பட்டோர் என இரண்டு பிரிவுகள்தான் இந்தியாவிலே பொதுவாகக் கருதப்படுகின்ற அளவிற்கு அமைக்கப்பட்டு, வேறு பல மாநிலங்களிலும் 2 பிரிவுகள்தான் வைத்திருக்கிறார்கள். பேக்வேர்ட் கம்யூனிடி அதாவது பிற்பட்டோர் என்று சொல்லும்போது, வட பகுதி மாநிலங்களிலே எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களை அது குறிக்கும். தாழ்த்தப்பட்டவர் அல்லாதவர்கள் அத்தனை பேர்களும் முற்பட்டோர் என்ற வகையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேதான் 3 அடுக்குகளை வைத்திருக்கிறோம். ஆக, பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்றும், இவர்கள் அல்லாத மற்ற வகுப்பினர்கள் என்று 3 பிரிவுகளை வைத்திருக்கிறோம். இங்கே இருப்பதைப்போன்று பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இருக்கிற ஒலுகைகள் தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கிற நிலையிலேதான் வேறு பல மாநிலங்களிலே அந்த உரிமைகளின் மீது போராட்டங்கள் எல்லாம் நடைபெற்ற தகவல்கள் வந்திருக்கிறது. ஆனால் தமிழகத்தின் சான்றோர்கள் பலரும் இதிலே நியாயங்கள் பல இருக்கின்றன என்று வலியுறுத்தி வந்ததின் காரணமாக அந்தக் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லாத் தரப்பினராலும் ஆதரவு தரப்பட்டு அதற்கு உறுதுணையான தன்மை வளர்ந்து வருவது மிக மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆகவே இந்த பிற்பட்டோர் நலத்துறை 1948-49 ஆம் ஆண்டு முதன்முதலாக உருவாக்கப்பட்டு, இதற்கென்று தனி சலுகைகள் எல்லாம் கொடுக்க தலைப்பட்டனர். முதன் முதலாக 1948-49 ஆம் ஆண்டில் இருக்கும்போது ஒரு இலட்சம் ரூபாய் தான் இந்த பிற்பட்டோர் நலத் துறைக்கு ஒதுக்கினார்கள். இன்று படிப்படியாக ஆண்டுக்காண்டு வளர்ந்து வந்து இன்றைய நிலையில் 7 கோடியே 82 இலட்சம் ரூபாய் இந்த பிற்பட்டோர் நலத் துறைக்கு ஒதுக்குகின்ற அளவிற்கு நிலைமைகள் வந்திருக்கின்றன. 1948 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கினாலும் கூட மாணவர்களுக்கு சலுகைகள், உதவித் தொகை அளிக்கிற அளவிற்குத்தான் அமைந்திருந்தது. அப்போது 609 மாணவர்கள் பலன் பெற்றார்கள் என்று சொன்னால், இன்றைய



1981 மே 7 [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

நிலையில் சென்ற ஆண்டு, 1980-81 ஆம் ஆண்டில் உதவித் தொகை பெற்ற மொத்த மாணவர்கள் மூன்று லட்சத்து சில்லறை மாணவர்கள் வருகிறார்கள். அதிலே பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் அடங்குகிறார்கள். உதவித் தொகை 3 கோடியே 73 இலட்சம் ரூபாய் சென்ற ஆண்டிலே மட்டும் மாணவர்களுக்கு பல்வேறுவிதமான உதவித் தொகைகளை எல்லாம் நாம் அளித்து வருகிறோம்.

அதைப்போல உணவு விடுதிகள் ஆண்டுக்காண்டு செய்து இப்போது கிட்டத்தட்ட 357 உணவு விடுதிகள் சென்ற ஆண்டு வரை நடத்துகிறோம். இந்த ஆண்டு சுமார் 40 விடுதிகள் திறக்கலாம் என்கிற ஒரு எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது. அதிலே பள்ளி மாணவர்களுக்கு மட்டும் 22,732 பேர்கள் விடுதிகளில் இருந்து பயில்கிறார்கள். கல்லூரி மாணவ, மாணவியர்கள் 3,925 பேர் இருந்து பயில்கிறார்கள். அவர்களுக்கு அளித்து வந்த தொகைகளை கூட்டிக் கூட ஓரளவிற்கு கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துள்ளோம். 45 ரூபாய் கொடுத்து வந்த இடத்திலே 15 ரூபாய் கூட்டி 60 ரூபாய் தருகிற நிலைமையும்; 65 ரூபாய் கொடுத்து வந்த இடத்திலே 15 ரூபாய் கூட்டி 80 ரூபாய் தருகிற வகையிலும்; பிறகு 15 ரூபாய் கூட்டி 90 ரூபாய் தருகிற வகையிலும் நாம் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் பிற்பட்ட வகுப்பினர் என்று நாம் இப்போது கணக்கிட்ட அளவிற்கு 213 வகுப்பினர்கள் இப்போது பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலே இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே 70 வகுப்பினர் குற்றப்பரம்பரை மரபினரிலிருந்து நீக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட வகுப்பினர் இதிலே வருகிறார்கள். மிகவும் பின்தங்கிய பிற்பட்ட வகுப்பினர் 'மோஸ்ட் பேக்வார்டு' என்று சொல்லத்தக்க அளவிற்கு வருகிறவர்கள் 39 பிரிவினர் வருகிறார்கள். ஆகவே இதைத் தவிர வேறு சிலரும் தங்களை இதிலே இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதை சிலர் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பின் தங்கியவர்கள் என்பதற்கு நாம் வைத்திருக்கிற இலக்கணம் என்ன என்றுச் சொன்னால் சமுதாயத்திலே பரம்பரை, பரம்பரையாக பல்வேறு பழக்க வழக்கங்களின் காரணமாக பின்தங்கிய நிலைமையில், சமுதாயத்தில் தாழ்ந்து இருப்பவர்கள் என்பது ஒன்று; சமுதாய அந்தஸ்து; அடுத்து கல்வியிலே மிக மிக தாழ்ந்து இருப்பவர்கள் என்ற முறையிலே கணக்கிட்டு எடுக்கிறோமேத் தவிர பொருளாதாரத்தில் தாழ்ந்ததை கணித்து எடுத்துக்கொள்வதில்லை. அதையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறபோது தான் பல்வேறு வகுப்பினர் தாங்கள் இதில் இணைக்கப்பட வேண்டும் என்பது வருகிறது. இப்போது அண்மையில் கூட நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செட்டியார்கள் கூட தங்களை பின்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1981 மே 7

தங்கிய வகுப்பினர்கள் என்று சேர்க்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். அதுமாதிரி பலரும் தங்களை பின்தங்கிய வகுப்பிலே சேர்க்க ஆரம்பிப்பார்களேயானால் பங்கு எங்கிருந்து போகுமென்றால் பின்தங்கியவர்களுக்கு என்று நாம் ஒதுக்குகிற பங்கு, ஒதுக்குகிற இடம், விழுக்காடுகள் பலரும் பங்கு போட்டுக்கொண்டு விடுவார்கள். யாருடைய நலன் கருதி இவற்றை செய்கிறோமோ அவர்களுடைய நலனுக்கு, அதிகம் போக முடியாது. இதிலே அதிகமாக பட்டியலிலே சேர்க்கக் கூடாது என்று சட்டநாதன் குழுவினர் கூட மேற்கொண்டு பட்டியலிலே சேர்த்து விட்டால் யார் இதை அனுபவிக்க வேண்டுமோ அவர்கள் அனுபவிக்காத அளவிற்கு இதை குறைத்துவிடக் கூடாது என்று ஒரு எச்சரிக்கையும் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி நாம் பார்க்கிறபோது கூட இப்போது கணக்கிடுகிறபோது சமுதாயத்திலே பின்தங்கியவர்களா அல்லது கல்வியிலே பின்தங்கியவர்களா என்று கணக்கின் அடிப்படையிலே தான் நாம் கணித்துக்கொண்டு வருகிறோம்.

ஆகவே மக்கள் தொகை கணக்கு வந்ததற்குப் பிறகு சில பல சமூகத்தைப் பற்றி நாம் கணக்கிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதுபற்றிய முழு குறிப்பும் வந்ததற்கு பிறகு அது பற்றி தனியாக ஆராயலாம். ஆனாலும் கூட மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்துவதிலே, ஏழை எளியவர்களாக இருப்பவர்கள், பிற்பட்ட வகுப்பினர்கள், தாழ்ந்திருப்பவர்கள். ஆகியவர்களுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்குதல் ; தேர்வு கட்டணம் அரசு செலுத்துதல் ; தனி கட்டணங்கள் செலுத்துதல் ; இலவச உறையுள் ; முதலிய வசதிகளை செய்தல் ; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விற்கான சிறப்பு பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

சைதாப்பேட்டையில் மாத்திரம் 50 மாணவர்களை தேர்ந்தெடுத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பரீட்சைகளுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர்களை தயார் செய்வதற்கு என்று வைத்திருக்கிறோம். ஆதி திராவிட மாணவர்களுக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பரீட்சைகளுக்கு தயாரிப்பதற்கு தனி பயிற்சி நிலையம் வைத்திருக்கிறோம்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



1981 மே 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் போன்றே 50 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். சென்ற ஆண்டு 49 பேர்கள் பயிற்சி பெற்றதில் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான வாய்ப்பும் வசதியும் செய்து தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் 1981–82 ஆம் ஆண்டில் மதுரையில் 50 பேர்கள் பயிற்சி பெறுகின்ற கூடமும் கோயம்புத்தூரில் 50 பேர்கள் பயிற்சி பெறுகின்ற கூடமும், திருச்சியில் 50 பேர்கள் பயிற்சி பெறுகின்ற கூடமும் சைதாப்பேட்டையிலே இருக்கின்ற 50 பேர்கள் பெறுகின்ற நிலைமையும் சேர்த்தால் ஆக மொத்தம் 200 பேர்கள் பிற்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி பெறுவதற்கான திட்டத்தை இந்த ஆண்டிலிருந்து மேற்கொள்ளலாம் என அரசு எண்ணி முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்திலே மிக மிகப் பின்தங்கியவர்களாக இருக்கின்ற ஓட்டர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் ஆகியோருக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று பல வகைகளிலே பணிகளை மேற்கொண்டு வருகிறோம். சலவையாளர் சமூகத்தினர் 5,10,000 பேர்களும் முடிதிருத்துவோர் 4,70,000 பேர்களும் இருக்கிறார்கள். சலவையாளர்கள் குடும்பம் ஒன்றுக்கு 5 பேர் என்று வைத்துக்கொண்டால் 1,02,000 அதைப்போலவே முடிதிருத்துவோர் குடும்பம் ஒன்றுக்கு 5 பேர் என்று வைத்துக்கொண்டால் 94,000 இருக்கின்றன என்று கணக்குப் போடப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக பல்வேறு சலுகைகளை அளித்துக் கொண்டு வருகிறோம். 1968–69 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இவர்களுக்கு இலவசக் கருவிகள் அளிக்கும் திட்டத்தை துவக்கினார்கள். 1968–69 ஆம் ஆண்டு முதல் 1977–78 ஆம் ஆண்டு வரையில் பத்து ஆண்டுகளில் கருவிகள் பெற்றோர் எண்ணிக்கை 27,180 பேர்கள். சலவையாளர்களுக்கு 13,514 முடிதிருத்துவோருக்கு 13,666 என்ற வகையிலே இலவசக் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு சலவைப் பெட்டிகளை இலவசமாகத் தருகிறோம். ஒரு சலவைப் பெட்டி 315 ரூபாய் பெறுமானமுள்ளது. அதைப் போலவே சவரப்பெட்டி 95 ரூபாய் பெறுமானமுள்ளது, 16 கருவிகளைக் கொண்டது அந்தப் பெட்டி. 10 ஆண்டுகளாக 27,180 பேர்களுக்கு அளிக்கப்பட்டதை இப்போது நாம் கொஞ்சம் வேகப்படுத்தியிருக்கிறோம். ஆனால் சென்ற 3 ஆண்டுகளில் 1978–79, 1979–80, 1980–81 ஆகிய மூன்று ஆண்டுகளில் 23,249 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆகவே வேகத்தை நாம் அதிகப்படுத்தியிருக்கிறோம். அதிகமான அளவுக்கு அதனால் செலவு செய்து கொண்டிருக்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1981 மே 7

கிறோம். போயர்களுக்கு 100 ரூபாய் பெறுமானமுள்ள உளி, சுத்தியல், கடப்பாரை போன்ற கருவிகளை அளித்திருக்கிறோம். இப்படி அவர்களுக்கு 550 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சலவையாளர்களுக்கு நடமாடும் சலவை நிலையம் அமைக்க ஆகும் செலவு 545, அதில் நாம் மானியமாக 165 ரூபாய் தருகிறோம். , 480 ரூபாயை 4 சதவீத வட்டியில் நாம் கடனாகப் பெற்றுத் தருகிறோம். அதைப்போலவே சலவை நிலையம் அமைக்க மொத்தம் 1,050 ரூபாய் செலவாகிறது என்றால் அரசு மானியமாக 2 0 ரூபாய் தருகிறோம். 840 ரூபாய் வரையில் கடன் குறைந்த வட்டியில் வாங்கிக் கொடுக்கிறோம். முடிதிருத்தும் நிலையம் அமைக்க கடனாக 535 ரூபாய் 4 சதவீத வட்டியில் வாங்கித்தருகிறோம். ஆகவே இந்த வகைகளிலே அவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளின் மூலமாக செலவினத்தைப் பெருக்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. பிற்பட்ட மாணவர்களின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 2,500 என்று இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அப்பாத்துரையும் மற்றவர்களும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை எந்த அளவுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எந்த சமயத்தில் ஏற்படுத்தியது, அதற்குப் பிறகு விலைவாசி மற்றவைகள் வருமானம் மற்றவைகள் எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து ஓரளவுக்கு கணிசமான அளவுக்கு உயர்த்தலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. நிதித் துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் அதை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது. இந்த பள்ளி ஆண்டு தொடங்குவதற்கு முன்னால் ஒரு முடிவு செய்யப்பட வேண்டுமென்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. அதை ஓரளவுக்கு கூட்டுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றப்பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். எல்லோருக்கும் வீடு கட்டுவது என்றால் ஒதுக்குவது முடியாது. வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தரப்படுகின்ற அந்த வசதிகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பெறுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு சில பகுதிகளில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறோம்.

ஆனால் இவர்களுக்கும் ஓரளவு வீடு, மனை பட்டா வழங்குவதில் ஆதி திராவிடர்கள் மற்றவர்களுக்கெல்லாம் ஒதுக்கி வருகின்றதிலே பத்து சதவீதம் இவர்களுக்கு ஒதுக்கித் தருகின்ற ஒரு ஏற்பாடும் இப்பொழுது கட்டப்படும் வீடுகளில் 10 சதவீதம், மனைப்பட்டாக்களிலே 10 சதவீதம், மிகவும் பிற்பட்ட அதாவது மோஸ்ட் பேக்வார்ட் கம்யூனிட்டி என்பவர்களுக்கு



1981 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒதுக்கித் தருகின்ற முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம். நில எடுப்புக்காக இந்த ஆண்டு, வருகின்ற ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அதுவும் மிகவும் பின் தங்கியிருக்கின்றவர்களுக்கு, வீடே இல்லாமல் கஷ்டப்படுகின்றவர்களுக்குச் செய்ய இருக்கின்றோம். இது போதாது என்றாலும்கூட நிதி ஆதாரங்களை வைத்து இந்த வசதி வாய்ப்புக்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. நிதி வசதிகளை நாம் பெருக்கப் பெருக்க எதிர் காலத்திலே அதற்கான சூழ்நிலைகளை அதிகமாக ஆக்கலாம் என்ற அளவிற்கு இருக்கிறது.

மத்திய அரசினுடைய நிதியை இந்த வகைக்கு நாங்கள் கேட்டுப் பார்த்தாலும்கூட பிற்பட்டோர் நலத்துறைக்கு நாம் செலவழிக்கின்ற ஏழு கோடியே சில்லறை ரூபாயானாலும், வேறு வகையிலானாலும் இந்த மாநில அரசு நிதியிலிருந்து முழுக்க முழுக்க நாம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதைப் பற்றி மத்திய அரசுக்குக்கூட, வந்த குழுவினரிடத்தில் கூட நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஆனால் மத்திய அரசினால் ஆதி திராவிட மக்களுக்குச் செய்கின்ற நன்மைகளுக்கு ஓரளவுக்குக் கணிசமான அளவிற்கு அவர்கள் நிதி உதவி செய்கிறார்கள். அதோடு சேர்த்து மாநில அரசும் நிதி உதவி செய்கிறோம். பிற்பட்டோர் நலத்துறைக்கு ஓரளவுக்காவது செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதுவும் வருமேயானால் கூடுதலாகச் செய்ய முடியும். அதைப் பற்றி அந்தக் குழுவினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை வருமேயானால் நமக்கு இன்னும் கொஞ்சம் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடும்.

ஆனால் இந்த வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி ஆங்காங்கு மாணவர்களுக்கான இல்லங்கள் கட்ட வேண்டும். அவர்களுக்கு வசதி வாய்ப்புக்களைச் செய்து தர வேண்டுமென்ற கோரிக்கை அதிகமாக வருகிறது. ஆண்டுக்காண்டு நாம் ஒதுக்கீடு செய்கின்ற நிதியளவைப் பொறுத்தும், மிகமிகத் தேவைப்படுகின்ற இடம் எது என்பதைப் பொறுத்தும், எங்கே பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் படிக்காமலேயே இருக்கிறார்கள் என்று கண்டறிந்து அந்த இடத்திலே ஏற்படுத்த வேண்டுமென்பதற்கு நாம் அதிக முக்கியத்துவம் தருகிறோம். வேறு பல வசதி வாய்ப்புகள் இருக்கும் இடத்திலே எப்படியாவது படித்துக்கொள்வார்கள். வசதி வாய்ப்பு இல்லாத இடங்களில்தான் இந்த இல்லங்களை அமைக்க வேண்டுமென்று நாம் எடுத்துக்கூறியிருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மே 7]

இங்கே முக்கியமான கருத்துக்கள் பலவற்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களின் மூலமாக வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றியும் இந்த அரசு கவனித்துத் தக்க முடிவெடுக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அவ்வப்பொழுது அதற்கான முடிவுகளில் ஈடுபடும் என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆனால் அதிலுள்ள கருத்துக்களை அரசு ஆராயும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவரவர்களே ஒரு விளக்கம் வேண்டும். அமைச்சரவர்கள் சொல்லுகின்ற பொழுது மிகக் கருணையோடுதான் பின்தங்கிய மக்களுக்குச் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். பின்தங்கிய சமுதாய மக்களிலேயே மிகவும் நலிந்த நிலையில் உள்ள வண்டி ஓட்டுகின்றவர்கள், வீட்டுத் தொழில் செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இவர்களையும், பின்தங்கிய மக்களிலேயே உயர்ந்த நிலையிலே செல்வாக்கு உள்ளவர்களையும் பற்றி இவர்கள் இருவரும் ஒரே சமுதாயத்தினராக இருந்தாலும் அரசு ஒரு நல்ல முடிவை எடுத்தது. ஆனால் அரசியல் காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை. எல்லாரையும் ஒன்றுபடுத்தி விட்டதால் மிகவும் நலிந்த நிலையிலே, இரண்டாயிரம் ரூபாய்கூட வருமானம் இல்லாத நிலையிலே உள்ள பின் தங்கிய மக்கள், ஏழை மக்கள், கவுண்டர் அல்லது ஏழைகள், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த உதவியைப் பெற முடியாத நிலை இருப்பது உண்மையா? அதற்கு அரசு வருங்காலத்திலே யோசித்து என்ன முடிவெடுக்கும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். மற்றொன்று..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். ஒரு விளக்கம் கேட்க வேண்டுமென்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கிறீர்களே?

திரு. எல். இளையபெருமாள் : இன்னும் ஒரேயொரு விஷயம். ஒரேயிடத்தில் பின்தங்கிய வகுப்பு ஹாஸ்டல், தாழ்த்தப்பட்டோர் ஹாஸ்டல், பிரைவேட் ஹாஸ்டல் என்று வைத்து 3 பகுதியிலேயும் 10 சதவீதம் சேர்ப்போம் என்று நாம் நல்லெண்ணத்தோடு சொன்னாலும், தெரிந்தோ தெரியாமலோ ஹாஸ்டலில்கூட பெரிய அக்கிரமங்கள், கொலை, சண்டைகள் நடப்பதால் அரசுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். பின் தங்கிய வகுப்பு ஹாஸ்டல், அல்லது தாழ்த்தப்பட்டோர் ஹாஸ்டல் அல்லது பிரைவேட் ஹாஸ்டல் என்று ஒரு குறிப்பிட்ட இடத்திலே மூன்று ஹாஸ்டல்களையும் வைத்து இந்த மூன்று விதத்திலேயும் 10 சதவீதம், 10 சதவீதம், 10 சதவீதம் என்று மூன்று பேரும்



1981 மே 7] (திரு. எல். இளையபெருமாள்)

ஒன்றுகூடி, அதனால் அவதி நிலை வந்திருக்கிறது. கும்பகோணம் அரியலூர், சேத்தியாந்தோப்பு, விருத்தாசலம், சென்னையில்கூட நடந்தது. ஆகவே, இதையெல்லாம் யோசனை செய்து அமைச்சரவை இதை நல்லபடி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பொதுவாக இத்தகைய விவாதங்களில் பேசிய உறுப்பினர்கள் தான் அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற பொழுது எழுந்து சந்தேகம் கிளப்புவது வழக்கை. ஆனால் விவாதத்தில் கலந்து கொள்ளாத உறுப்பினர்கள் எழுந்து அவர்கள் எதையெதைப் பேச வேண்டுமென்று கருதினார்களோ அவைகளை இதைச் சாக்காக வைத்துப் பேசுவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 1–40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த முறையைப் பின்பற்ற வேண்டாம்.

திரு கே. எம். தங்கமணி: சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சட்டநாதன் கமிஷன், கல்வித் துறையில், பொருளாதாரத்துறையில், சமுதாயத் துறையில் முன்னேறியிருக்கிற சமூகங்கள் கூட இடம் பெற்றுவிட்டார்கள் எப்படியோ என்று தெரிவித்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு அந்த முன்னேறிய சமூகத்தினர் பின்தங்கிய பட்டியலில் இடம் பெற்றிருப்பதை நீக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புவதுடன், கர்நாடகாவிலே செய்திருப்பதைப் போல, பின்தங்கியோர் பட்டியலில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஜனத்தொகை அடிப்படையிலே அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களும் மாண்புமிகு தங்கமணி அவர்களும் எழுப்பியிருக்கிற பிரச்னைகள் கொள்கை பற்றிய பிரச்னைகள். பின்தங்கியோர் பட்டியலிலே பல பேர்கள் இருந்தாலும் அவர்களுக்கென்று 25 சதவீதம் ஒதுக்கிய நேரத்திலும், சரி, 31 சதவீதம் ஒதுக்கிய நேரத்திலும் சரி, அந்தப் பின் தங்கியோர்களிலே வசதி படைத்து பின்தங்கியவர்களாக இருப்பவர்கள், அந்தச் சதவீத இடங்களை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். மிகமிக பின்தங்கியவர்கள் எட்டிப் பிடிக்க முடி

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1981 மே 7

யாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறிப்புகளை யெல்லாம் எடுத்து, புள்ளி விவரங்களைச் சொல்லி, சில வகுப்பு களை ஆராய்ந்து பார்த்து, பின் தங்கியோர் பட்டியலிலிருந்து நீக்கி விட வேண்டுமென்று சட்டநாதன் கமிட்டி கூறியிருக்கிறது. ஆனால் அது இயலுமா என்பதுபற்றி நாம் யோசிக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். ஏனென்றால், புது புது வகுப்புகள் உள்ளே வந்து நுழையப் பார்க்கின்றனவே தவிர, உள்ளே நுழைந்த வகுப்புகள் வெளியேறுகின்ற சூழ்நிலை ஏற்படுமா என்பது கொள்கைப் பிரச்னை. அதை எல்லா அரசியல் கட்சிக் காரர்களும் ஏகமனதாக ஒப்புக்கொள்வார்களானால், அதுபற்றி முடிவு எடுக்கலாம்.

அடுத்தது, அவர்கள் சொல்லிய மாதிரி, பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களை இரண்டாகப் பிரிக்கலாமா என்ற கொள்கை யிருக்கிறது. 50 சதவீதம் பின் தங்கியோர் இருக்கும்போது அதிலே மோஸ்ட் பாக்வார்ட் கம்யூனிட்டி, அதாவது பொருளா தாரத்திலே பின்தங்கியவர்களுக்கு 25 சதவீதம், அந்தப் பின் தங்கியவர்களுக்குள்ளே வேறுபாடு வைத்து, 25 சதவீதம் என்று பிரிக்கலாமா என்று யோசனை சொல்கிறார்கள். அதே மாதிரி முற்பட்ட வகுப்பினருக்கு பிரிக்கப்பட்ட 25 சதவீதத்திலுங்கூட, அதே மாதிரி; பாதி பாதியாக, எந்தக் கணக்கும் பார்க்காமல் பொருளாதாரத்திலே பின்தங்கிய முற்பட்ட வகுப்பினர் என்று பிரிக்கலாமா என்ற பிரச்னையும் கொள்கை அடிப்படையிலே இருக்கிறது. அதை ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சர்வகட்சித் தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு வைத்து, முடிவு செய்தது மாதிரி, சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதிலே இந்தக் கொள்கை பற்றிய பிரச்னையை எல்லா தலைவர் களும் ஏகமனதாக ஒப்புக்கொள்கிற சூழ்நிலை ஏற்படுமானால், அந்த அடிப்படையிலே வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்கு இடம் அளிக்கும் அளவுக்கு நாம் செய்யலாம். ஆனால், எல்லோருடைய ஒத்துழைப்பும் இல்லா விட்டால், ஜாதி அடிப்படையிலே வருகின்றபொழுது, அவரவர்கள் மாச்சரியங்கள் கொள்கிறார்கள். ஒருமித்து செய்ய வேண்டிய ஒரு கொள்கை முடிவு இது. அதை சட்டநாதன் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. அதை வைத்து நாம் விவாதிக்கலாம். இப்பொழுது அதைப் பற்றி முடிவு எதுவும் எடுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது வாக்கெடுப்பு.



1981 மே 7]

**மானியக்கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.**

நிறுவனர்கள் கே. எம். தங்கமணி, கே. ஆர். சுந்தரம், கே. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேர வையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக்கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 7,82,63,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

195. கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981—82. (தமிழ், ஆங்கிலம்).

196. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I

[562 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்.

மானியக்கோரிக்கை எண் 32.

பிற்பட்டோர் நலத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கான 1981-82 ஆம் ஆண்டுக்கான ரூபாய் 7,82,63,000 மானியக்கோரிக்கையை நான் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரின் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள் 1981-82 ஆம் ஆண்டில் எடுக்க இருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைத் திரட்டித் தருகிறேன்,

2, 1949-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு வரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன் ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது, 1949-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் ஆதி திராவிடர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டு ஆதி திராவிடர்கள் பழங்குடி மக்கள் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில் பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு- 1969-ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவரை ஆதிதிராவிடர் நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம்- குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.



3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டுவரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையில் பணிபுரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப்பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் " மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு " ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974,ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது போன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக்குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971—72 முதல் தனியாக மானியக்கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967—68-ல் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கான ரூபாய் 1,61,40,000 ஆக இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் வளர்ந்து 1981—82 இல் ரூபாய் 7,82,63,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

5. மேலும், இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

6(i) படிப்பு உதவித் தொகை—பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலைமையிலேயே இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தினை கருத்திற்கொண்டு கல்வி மேம்பாட்டிற்கு வழி வகை செய்வது மிக அவசியம். எனவே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும்- குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் கல்வி வசதிக்காக படிப்பு உதவித் தொகை மற்றும் உண்டி. உறையுள், வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பினருக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட

இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும், படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 2,500,-க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

உதவித் தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன் 1948–49இல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்கு பயனளித்தது.

பின்னர் இத் தொகை 1949-50 ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960–61 இல் 19,900 மாணவர்களுக்கு ரூபாய் 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

(i) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் காட்டும்—

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்

| ஆண்டு. | | உயர்பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங்களில். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| உதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை. | | | | |
| 1969–70 | .. | 41,361 | 2,828 | 21.16 |
| 1970–71 | .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971–72 | .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972–73 | .. | 67.772 | 4.638 | 34.29 |
| 1973–74 | .. | 65 876 | 4,338 | 34·38 |
| 1974–75 | .. | 60 661 | 4.673 | 35.66 |
| 1975–76 | .. | 61.845 | 3,964 | 29.64 |
| 1976–77 | .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977–78 | .. | 1,10,639 | 4,183 | 29.80 |
| 1978–79 | .. | 1,84 772 * | 3.902 | 31.08 |
| 1979–80 | .. | 1,72,486 | 6,939 | 33.60 |

* இந்த ஆண்டில் 1977 1978 ஆம் ஆண்டும் அடங்கும்.



| ஆண்டு. | | உயர்நிலைப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங்களில். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| பிற்பட்ட வகுப்பினர். | | | | |
| 1969–70 | .. | 42,515 | 48,050 | 160.89 |
| 1970–71 | .. | 74,842 | 59,407 | 201.20 |
| 1971–72 | .. | 92,694 | 76,281 | 290·50 |
| 1972–73 | .. | 1,04,486 | 87,652 | 324·65 |
| 1973–74 | .. | 94,032 | 80,025 | 318·86 |
| 1974–75 | .. | 88,897 | 86,494 | 331·68 |
| 1975–76 | .. | 90,620 | 71,433 | 317·08 |
| 1976–77 | .. | 80,372 | 78,741 | 295·00 |
| 1977–78 | .. | 1,07,501 | 74,469 | 291·53 |
| 1978–79 | .. | 1,02,490 | 66,341 | 264·83 |
| 1979–80 | .. | 1,02,672 | 1,03,911 | 261·61 |

குறிப்பு :— (1) 1977–78 ஆம் ஆண்டு முதல், பள்ளிக் கல்வி மாணவர்களுக்கான உதவித் தொகை பொருள் வடிவில் வழங்கப்படுகிறது. அதாவது சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப் பட்ட பின் எஞ்சியுள்ள உதவித் தொகைக்கு பாடப் புத்தகங்களாக வழங்கப்படுகிறது.

(2) 1978–79 ஆம் ஆண்டில் இவ்வுதவித் தொகையில் பயனடைவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் உதவித் தொகை வழங்க +1, +2 வகுப்புகளைப் பாகுபடுத்த மைய அரசின் விளக்கமும், அரசு ஆணையும் காலம் கடந்து பெறப்பட்டமையாகும்.

(3) 1979–80 ஆம் ஆண்டில் கல்லூரி வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்துள்ளது. ஆனால், செலவினத்தில் அதன் மாறுதல் காட்டப்படவில்லை. காரணம் முந்தைய ஆண்டுகளில் கல்லூரி விடுதியில் தங்கியிருந்த புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு விடுதி வசதியுடனான உதவித் தொகை' வழங்கப்பட்டது. ஏனெனில் பளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். மேலும் இப்பள்ளிகளில் அவைகளுக்கான சொந்த விடுதிகள் பொதுவாக நடத்தப்படுவதில்லை.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம், போன்ற படிப்புகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. தகுதிபெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும், படிப்பு உதவித் திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மேலும், பட்டயக்கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டண்ட்) பயிற்சிக்காக 1973–74 ஆம் ஆண்டு முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| வருடம். | | உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1973–74 | .. | 32 |
| 1974–75 | .. | 40 |
| 1975–76 | .. | 47 |
| 1976–77 | .. | 72 |
| 1977–78 | .. | 68 |
| 1978–79 | .. | 67 |
| 1979–80 | .. | 65 |
| 1980–81 | .. | 61 |

1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(4) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்றுவரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள், 1971–72 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், படிப்பு வகையும். | சென்னையில். | | வெளியூர்களில். | |
|---|---|---|---|---|
| | பி.வ. * | கு.ப.நீ.இ. ** | பி.வ. * | கு.ப.நீ.இ. ** |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ஒவ்வொரு மாதத்திற்கான ரூபாய்.) | | | |
| 1 கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 60 | 70 | 50 | 55 |
| 2 மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை .. .. | 60 | 75 | 55 | 70 |
| 3 தொழில் நுட்பக் கல்வி .. .. | 50 | 60 | 45 | 50 |

(5) உதவித் தொகை வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

| | செலவு 1979–80. | மதிப்பீடு 1980–81. | திருத்திய மதிப்பீடு 1980–81. | மதிப்பீடு 1981–82. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள். .. | 2,25,47 | 3,34,28 | 3,03,87 | 2,99,17 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் .. | 29,19 | 39,00 | 40,45 | 39,12 |
| மொத்தம் .. | 2,54,66 | 3,73,28 | 3,44,32 | 3,38,29 |

* பி.வ.—பின்தங்கிய வகுப்பினர்.

** கு.ப.நீ.இ.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

7 (அ) படிப்புக் கட்டணச் சலுகைகள்.—மேல்நிலைப் பள்ளிப் படிப்புவரை (+2) சாதிப் பாகுபாடில்லாமல், இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேல் நிலைப் பள்ளிப் படிப்பில் (+2) தமிழை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் எந்த விதமான படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால், மேல் நிலைப் படிப்பில் (+2) ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் படிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். ஆதி திராவிடர், பழங்குடி மக்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த, ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு, மேல் நிலைப் பள்ளி கல்வி கற்கும் மாணவர்கள், தமிழ்நாடு கல்வி விதிகள் 92-இன் கீழ் வழங்கப்படும் படிப்புக் கட்டணச் சலுகைகள் பெறத் தகுதியுடையவராவார்.

மேல் நிலைப்பள்ளி (ப்ளஸ் 2) வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித்துறையின் மூலமும் பிற்பட்டோர் நலத் துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப் படுகிறது :—

| வருமானப் பிரிவு. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர். | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | முழுச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி. | முழுச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி. | அரைச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி மிகுந்த அரைச் சம்பளம் இத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப் படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 2,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | மூன்று பிரிவினருக்கும் அரைச் சம்பளச் சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித்தொகையுடன் சேர்ந்து வழங்கப்படுகிறது. | | |



7 (ஆ) கடன் உதவித் தொகை.—தொழில் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2,501-இலிருந்து ரூ. 6,000-க்குட்பட்டு இருந்தால், வருடத்திற்கு ரூ. 500 வீதம் ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு படிக்கும் காலம் முழுவதற்கும் அதிக பட்சம் ஐந்து வருட காலத்திற்கு ரூ. 2,500-க்கு மேற்படாது இத்துறையின் மூலமாக கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

8. அரசு மாணவர் இல்லங்கள்.—(1) மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ் விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப் படுகின்றனர் :—

| | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான விடுதிகள். | பின்தங்கிய வகுப்பினருக்கான விடுதிகள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (விழுக்காடு). | |
| பிற்பட்ட வகுப்பினர் .. | 10 | 65 | 20 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் .. | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் .. .. .. | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் .. | 5 | 10 | 5 |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |

பெற்றோர்/பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ. [illegible] [illegible] மிகைப்படாது இருக்கும், மாணவர்கள் இவ்விடுதியில் சேருவதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவர்.

[1981 மே 7

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காவும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காவும் நடத்தப்பெறும் விடுதிகளின் விபரங்கள்.

| ஆண்டு. | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | |
|---|---|---|---|---|
| | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969–70 | 11 | 979 | 37 | 3,619 |
| 1970–71 .. | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971–72 .. | 81 | 5,333 | 46 | 4,369 |
| 1972–73 .. | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973–74 .. | 144 | 9,348 | 54 | 5,099 |
| 1974–75 .. | 177 | 11,210 | 54 | 5,099 |
| 1975–76 .. | 196 | 12,060 | 53* | 5,069 |
| 1976–77 .. | 215 | 13,305 | 51* | 4,919 |
| 1977–78 .. | 227 | 14,065 | 57 | 5,219 |
| 1978–79 .. | 237 | 14,565 | 57 | 5,219 |
| 1979–80 .. | 261 | 15,538 | 60 | 5,369 |
| 1980–81 .. | 295 | 17,263 | 62 | 5,469 |

(*தேவையான மாணவர்கள் இல்லாததினால் 3 குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.)



1981 மே 7]

(3) மேலே குறித்த 357 விடுதிகளில் 55 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு குறைந்தபட்ச மரச்சாமான்கள் (Furniture) வசதி செய்து தரும் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக 1981–82 ஆம் ஆண்டில் 6,000 மாணவர்களுக்கு மரச்சாமான்கள் வசதி செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1981–82 ஆம் ஆண்டில் மேலும் 40 பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) இந்த 397 விடுதிகளையும் பராமரிக்க 1981–82 ஆம் ஆண்டில் 1,85,70,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது :—

| | சென்னை. | வெளியூர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய்) | |
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் .. | 80 | 65 |
| 2. தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 80 | 65 |
| 3. இதர விடுதிகள் .. .. .. | 45 | 45 |

குறிப்பு :—1. அனைத்து மாணவியருக்கும் மேற்குறித்த தொகையைவிட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும் மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்படுகிறது. மேலும் சில்லறைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 2 விதமும் ஒவ்வொரு மாணவியர்க்கும் மாதம் ரூ. 1 விதமும் அளிக்கப்படுகிறது.

2. முன்பு சென்னை நகரில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கு உணவுத்தொகை மாதம் ரூ. 65 ஆக இருந்தது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் இது மாதம் ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டது. வெளியூர் விடுதி மாணவர்களுக்கு இத்தொகை மாதம் ரூ. 55-லிருந்து ரூ. 65 ஆக உயர்த்தப்பட்டது.

[1981 மே 7

இதர விடுதி (பள்ளி விடுதி) மாணவர்களுக்கு இவ்வுணவுத் தொகை மாதம் ரூ. 40 லிருந்து ரூ. 45 ஆக 1978 ஆம் ஆண்டு சூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் உயர்த்தப்பட்டது.

1980—81 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வி மாணவர்களுக்கான விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கான செலவுத் தொகை கல்லூரி விடுதி மாணவர்களுக்கு இணையாக உயர்த்தப்பட்டது.

இந்த ஆண்டில் 1981—82 அரசு உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் இருந்து பயிலும் மாணவர்களுக்கு உணவு செலவுத் தொகையை ரூ. 15 வீதம் உயர்த்தவும், அரசு அங்கீகாரம் பெற்ற விடுதிகளில் இருந்து பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டணத்திற்கான உதவித் தொகையை ரூ. 10 வீதம் உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு உணவு இல்லங்களில் இதுநாள்வரை ரூ. 55 மற்றும் ரூ. 65 வீதம் மாதத்திற்கு சம்பளமும் இலவச உணவும் பெற்று வந்த சமையற்காரர்கள் அனைவருக்கும் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 150—5—200—10—300 என்ற சம்பள விகிதத்தில் எல்லா இதர படிகளும் சேர்த்து சம்பளமும் விடுதிகள் திறந்திருக்கும் காலங்களில் இலவச உணவும் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் 707 சமையற்காரர்கள் பயனடைகின்றனர்.

கடந்த ஆண்டில் அரசு விடுதிகளிலிருந்து தங்கி படிக்க தகுதி பெற்ற மாணவர்களிடமிருந்து நிறைய மனுக்கள் வந்ததினால் அந்த நெருக்கடியைச் சமாளிக்க எங்கெங்கெல்லாம் இடவசதியும், மற்ற வசதிகளும் இருந்தனவோ, அவற்றில் சேர்க்கும் நிமித்தம் கூடுதலாக 150 கல்லூரி விடுதி மாணவர்களுக்கான இடங்களையும், 800 பள்ளி விடுதி மாணவர்களுக்கான இடங்களையும் அனுமதித்து அரசு உத்தரவிட்டது.

5. மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள்.—மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்டவகுப்பு மாணவர்களுக்கான 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 50 விடுதிகளில் 25 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. இது நாள் வரை பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் கட்டுவதற்கு தனியே நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. நடப்பு ஆண்டில் (1981—82) புதிய மாணவர் விடுதிகள் கட்ட ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 3 விடுதிகளுக்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1981 மே 7]

9. (1) பள்ளிகள்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல்பட்டுவரும் 278 பள்ளிகளின் விபரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:—

| மாவட்டங்கள். | மேல் நிலைப்பள்ளி. எண்ணிக்கை. | மேல் நிலைப்பள்ளி. மாணவ/மாணவியர். | உயர்நிலைப்பள்ளி. எண்ணிக்கை. | உயர்நிலைப்பள்ளி. மாணவ/மாணவியர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. வடாற்காடு .. | .. | .. | .. | .. |
| 2. தென்னாற்காடு | .. | .. | .. | .. |
| 3. மதுரை (கள்ளர் சீரமைப்பு). .. | 2 | 1,357 | 8 | 1,609 |
| 4. இராமநாதபுரம் | .. | .. | .. | .. |
| 5. திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 6. சேலம் .. .. | .. | .. | .. | .. |
| 7. பெரியார் .. | .. | .. | .. | .. |
| 8. கோவை .. .. | .. | .. | .. | .. |
| 9. தர்மபுரி .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 2 | 1,357 | 8 | 1,609 |

| மாவட்டங்கள். | நடுநிலைப் பள்ளிகள். | | ஆரம்பப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ/மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ/மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. வடாற்காடு .. | .. | .. | 4 | 469 |
| 2. தென்னாற்காடு .. | .. | .. | 1 | 304 |
| 3. மதுரை (ச.சி.) .. | 31 | 13,367 | 206 | 28,337 |
| 4. இராமநாதபுரம் .. | 1 | 390 | 5 | 1,013 |
| 5. திருநெல்வேலி .. | 1 | 244 | 9 | 1,004 |
| 6. சேலம் .. .. | .. | .. | 2 | 358 |
| 7. பெரியார் .. | 1 | 269 | .. | .. |
| 8. கோவை .. | .. | .. | 1 | 56 |
| 9. தர்மபுரி .. | 1 | 85 | 2 | 210 |
| மொத்தம் .. | 35 | 14,355 | 230 | 31,751 |

மொத்தப் பள்ளிகள் .. 275.

மொத்த மாணவர்கள். 49,072

கல்விச் சுற்றுப்பயணம்.— ஒவ்வொரு ஆண்டும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பொது அறிவு மற்றும் பாட அறிவு வளர்வதற்காக கல்விச் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

பகுதி நேரப் போதனை.— பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்/மாணவியர் உணவு இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல் நிலை வகுப்பு மாணவர்/மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்து



வதற்காகவும், அவர்கள் சமூகத்தில் மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குச் சரிசமமான அறிவினைப் பெறவும் எல்லா உயர்நிலைப் பள்ளி விடுதிகளிலும் பகுதி நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

10. மதிய உணவு— குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக இப்பள்ளிகளில் அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒரு மதிய உணவின் விலை 22 காசுகள். திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக் கூடங்களில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அம்மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு 1975–76 ஆம் ஆண்டு முடிய வழங்கப்பட்டது. இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. அரசு இதற்கான அதிகச் செலவினைத் தவிர்க்க அம்மாணவர்களுக்கு, 'கேர்' (CARE) நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதற் கொண்டும், திருநெல்வேலி இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி திங்கள், 1976 ஆம் ஆண்டு முதற் கொண்டும் நடைமுறையில் உள்ளது.

11. உணவு மானியங்கள்.—(1) தனிப்பட்ட நபர்களாலும், சமூக நல நிலையங்களாலும் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 1955–56 ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் நலத்துறை உணவு, மானியம் வழங்கி வந்தது. 1956–57 ஆம் ஆண்டு முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப் புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து தேவையான இடங்களில் அரசே விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாத தனியார் விடுதிகளையும், அரசே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்தப்படுகின்றன. தற்பொழுது பிற்பட்டோர் நலத்துறை உதவி பெறும் தனியார் உணவு விடுதிகள் 46 உள்ளன. இவைகளுக்கு உணவுச் செலவுகளுக்காக பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் சென்னை மற்றும் மாவட்ட, வட்ட தலைநகரங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு

மாதம் 1-க்கு தலா ரூபாய் 25-லிருந்து ரூபாய் 35 ஆகவும், மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூபாய் 25-லிருந்து ரூபாய் 30 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 8.83 இலட்சம் இதற்காக வழங்கப்பட்டது. உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 2,000-லிருந்து ரூபாய் 2,500-க்கு 1978-79 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டு ரூபாய் 8,41,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) **கல்லூரிப் படிப்பு**.—கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ்வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்வித் துறையினர் அல்லது ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும் அவர்களுக்கு படிப்பு உதவித் தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் விவரம் பின் வருமாறு :—

| | மாவட்டம். (1) | விடுதிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| 1 | சென்னை | 7 |
| 2 | வடார்க்காடு | 7 |
| 3 | திருச்சிராப்பள்ளி | 43 |
| 4 | புதுக்கோட்டை | 7 |
| 5 | மதுரை | 2 |
| 6 | கோயம்புத்தூர் | 2 |
| 7 | தஞ்சாவூர் | 2 |
| | மொத்தம் | 70 |

தற்போது புதிதாக எந்த தனியார் விடுதியையும் அங்கீகரிப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம்மாணவர்களுக்கு உணவு, மற்றும் உறையுள் தொகை பத்தி 6 (4)-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வழங்கப்படுகிறது.





12. **புத்தகங்களும், எழுது பலகைகளும்**.—அரசினர் நடத்தும் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும், எழுது பலகைகளும், இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969–70 ஆம் ஆண்டில் 7,600. இதனால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரைக்கும் மாணவர்களுக்கு இலவசமாக புத்தகம் மற்றும் எழுது பலகைகளும், 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்களும், நோட்டுப்புத்தகங்களும், அளிக்கப்படுகின்றன. இதனால் 1980–81 ஆம் ஆண்டில் பயன் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 44,994 ஆகும். 1981-82 ஆம் ஆண்டில் பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 48,000 ஆக உயரலாம்.

13 (1) **சீருடைகள் வழங்குதல்**.—மதுரை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களிலுள்ள குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் முறை பள்ளி ஆரம்பித்தவுடன், அல்லது தீபாவளிக்கு முன்பாகவும் இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதன் முதலாக இவ்வாறு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம், மதுரை மாவட்டத்தில் 1969–70 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டது. இப்போது இரு முறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டில் ரூபாய் 3,91,000-ம், 1973–74 ஆம் ஆண்டில் 8,06,000 ரூபாயும் 1974–75 ஆம் ஆண்டில் 6,58,000 ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 10,39,000 ரூபாயும் 1976–77 ஆம் ஆண்டில் 8,94,000 ரூபாயும், 1977–78 ஆம் ஆண்டில் 10,47,000 ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் 9,37,000 ரூபாயும், 1979–80 ஆம் ஆண்டில் 9,08,000 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் நடைமுறையில் இருந்துவருவது போல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் 1981–82 ஆம் ஆண்டு முதல் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இதனை ஒட்டி 1980–81 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் 12,11,000 ரூபாயும், 1981–82 ஆம் ஆண்டில் 20,73,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1971–72 ஆம் ஆண்டு முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு மாணவர் உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் இரண்டு முறை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973–74 ஆம் ஆண்டில் 1,67,000 ரூபாயும், 1974–75 ஆம் ஆண்டில் 2,16,000 ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 2,38,000 ரூபாயும், 1976–77 ஆம் ஆண்டில் 2,98,000 ரூபாயும், 1977–78 ஆம் ஆண்டில் 3,03,000 ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் 3,80,000 ரூபாயும், 1979–80 ஆம் ஆண்டில் 4,05,000 ரூபாயும் செலவிடப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் 6,41,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு தனிப்பயிற்சி அளித்தல்.—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், ஆதி திராவிட மாணவர்களுக்கும், மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975–76 ஆம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எட்டாவது மற்றும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் அடுத்த அதிக மதிப்பெண் பெறும் மாணவ–மாணவியருக்கு முதல் மற்றும் இரண்டாவது பரிசு வழங்க ரூபாய் 4,000 ஒதுக்கப்பட்டு உள்ளது. மாநில அளவில் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் தலா ரூபாய் 500 மதிப்பில் பரிசு வழங்கப்படுகின்றது. மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு :—

| | ரூபாய். |
|---|---|
| பள்ளி இறுதி தேர்வு முதற் பரிசு .. .. | 100 |
| இரண்டாவது பரிசு .. .. .. | 50 |
| எட்டாம் வகுப்பு முதல் பரிசு.. .. .. | 50 |
| இரண்டாவது பரிசு .. .. .. | 10 |

14. ஆசிரியர்கட்கு வீடுகள்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூபாய் 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டில் 14 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 1.45 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.



15. ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான பயிற்சிக் கூடம்.—1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட (1971–72-ஆம்) ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில் 8 பேர் தேர்வுக்கு சென்றனர். 3 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். ஆனால் எவரும் தேர்வு பெறவில்லை. 1972–73-ல் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் 34 பேர் தேர்வு எழுதினர். 6 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். இதில் ஒருவர் இந்திய ஆட்சிப் பணிக்கும், இருவர் மத்திய ஆட்சிப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1973–74-ல் 33 பேர் தேர்வு எழுதினர்: 4 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் ஒருவர் இந்திய ஆட்சிப் பணிக்கும், ஒருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974–75-ல் 57 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 41 பேர் தேர்வு எழுதினர்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாக ஒருவர் இந்திய காவல் பணிக்கும், இருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975–76-ல் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 3 பேர் நேர்முகத் தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக இந்தியக் காவல் பணிக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1976–77-ல் 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 32 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் இருவர் மத்திய அரசுப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1977–78-ல் 42 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 39 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் ஒருவர் நேர்முகத்தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இறுதியில் தேர்வு பெறவில்லை. 1978–79-ஆம் ஆண்டில் 49 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 12 பேரும், பழைய மாணவர்களில் 4 பேரும் ஆக 16 பேர் இறுதித் தேர்வுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் 4 பேர் தேர்ச்சி பெற்றனர். இவர்கள் நேர்முக தேர்வுக்குச் சென்றதில் 8-வது அணியைச் சேர்ந்த ஒருவர் இந்திய ஆட்சிப் பணிக்கும், மற்றும் 6-வது, 7-வது அணியைச் சேர்ந்த இருவரில் ஒருவர் இந்திய ஆட்சிப் பணிக்கும் மற்றொருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 9-வது அணியில் நுழைவு (Prelimi[illegible]y) தேர்வு எழுதிய 49 மாணவர்களில் [illegible] பேர் தேர்வு பெற்றனர். அத்துடன் வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பேர் பயிற்சி அளிக்கப்பட்டு இறுதித் தேர்வுக்கு அனுப்பப்பட்டனர். இதில் ஆறு பேர் நேர்முகத்தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேர்முக தேர்வினை எதிர்நோக்கி உள்ளனர். தற்போது 10-வது அணியில் 43 மாணவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்

[1981 மே 7

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க்கண்டவாறு பதவி பெற்றனர் :—

| | |
|---|---|
| 1. துணை ஆட்சியாளர்கள் .. .. .. | 3 |
| 2. இணை வணிக வரி அலுவலர் .. .. | 1 |
| 3. துணை பேராசிரியர்கள் .. .. .. | 7 |
| 4. ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, மற்றும் அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகள் (இளநிலை அலுவலர்). | 3 |
| 5. வருமான வரி முதல் வகுப்பு அலுவலர் .. | 1 |
| 6. காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர் .. | 1 |
| 7. மாவட்டக் கல்வி அலுவலர் .. .. .. | 1 |
| 8. கல்வெட்டுக் கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு) .. .. .. .. .. | 1 |
| 9. எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கழகம் .. | 1 |

சென்னையில் உள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக, மதுரை, திருநெல்வேலி, கோவை, திருச்சி ஆகிய ஒவ்வொரு நகரத்திலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்கத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த துணைப் பயிற்சி நிலையங்கள் சனவரி 1981 முதல், மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. போதிய மாணவர்இல்லாததால் திருநெல்வேலியில் செயல்படவில்லை.

துணைப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களின் விபரங்கள் கீழ்வருமாறு :—

| | |
|---|---|
| கோயம்புத்தூர் .. .. .. .. | 29 |
| மதுரை .. .. .. .. .. | 28 |
| திருச்சி .. .. .. .. .. | 33 |
| மொத்தம் .. | 90 |

சென்னையில் பயிற்சி பெறும் 43 மாணவர்கள் இதில் அடங்கமாட்டார்கள்.



1981 மே 7]

மேலும் இந்திய அரசின் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும், 15 ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும், போக்குவரத்துச் செலவுக்காகவும், மாதம் ரூபாய் 40 வழங்கப்படுகின்றது. இதில் முந்தைய வருடங்களில் மூவர் தேர்ச்சி பெற்றிருந்தனர். 1977–78-ல் இருவர் தேர்ச்சி பெற்றுஉள்ளனர். 1978–79 ஆம் ஆண்டில் மூவர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

16. பொருளாதார வளர்ச்சி:—இத்திட்டத்தின் கீழ் முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களை செய்துவர தொழிற்கருவிகள் இலவசமாக வழங் கப்படுகின்றன. இத்திட்டம் 1971–72 வரை வெளி மாவட்டங் களிலும், 1971–72 முதல் சென்னை உட்பட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகின்றது. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை :—

| ஆண்டு. | பயன் அடைந்த நபர்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1969–70 .. .. .. .. .. .. | 1,542 |
| 1970–71 .. .. .. .. .. .. | 1,512 |
| 1971–72 .. .. .. .. .. .. | 1,633 |
| 1972–73 .. .. .. .. .. .. | 1,654 |
| 1973–74 .. .. .. .. .. .. | 4,081 |
| 1974–75 .. .. .. .. .. .. | 3,961 |
| 1975–76 .. .. .. .. .. .. | 3,506 |
| 1976–77 .. .. .. .. .. .. | 3,695 |
| 1977–78 .. .. .. .. .. .. | 4,095 |
| 1978–79 .. .. .. .. .. .. | 7,240 |
| 1979–80 .. .. .. .. .. .. | 8,000 |
| 1980–81 .. .. .. .. .. .. | 8,000 |

(2) 1980–81 ஆம் ஆண்டிற்கு (திருத்திய மதிப்பீடு) இந் திட்டத்தின் கீழ் ரூபாய் 23,63,000-ம் 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 17,08,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற் கண்டவை தவிர சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவை யகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற் காக ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 165 மான்யமாக வழங்கப் படுகிறது. மேலும், ரூபாய் 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன் பெற வசதியாக சலவை தொழிலாளர்களுக்கு மேற்படி தொகையில் 20 விழுக் காடான ரூபாய் 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் பொருட்டு, 1979–80-க்கு ரூபாய் 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூபாய் 100 ஆகும். இவ்வாண்டு முதல் ரூபாய் 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சேலம், தென்னாற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டது. இது 1979–80 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, வடஆற்காடு, தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட் டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 75,000-ம், 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 75,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. சலவைத் துறைகள் கட்டுதல் :—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கும் நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்த செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித் தொகை மானிய மாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 55 உள்ளாட்சி மன்றங் களுக்கு சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட் டுள்ளது.

1980–81 ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிகளையும், இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.

4. சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணி மனைகள் சீர்மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டம் செக்காணூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரிலும், அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் 21-2-1981 வரை இருந்தன. தற்போது இவைகள் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்களின் நேரடி பராமரிப்பின்கீழ் கொணரப்பட் டுள்ளன. இவைகளில் பற்றவைத்தல், சேர்த்தல் ஆகிய துறை களில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற் பயிற்சி கூடங்கள் நடத்தப்படுகின்றன :—



1. தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக் கூடம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் பயிற்சிக் கூடம், செக்காஊரணி, மதுரை மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நார்ப் பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம், (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும் 1978–79 ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற் காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங் களில் ஆரம்பிக்கப்பட்டு நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது:—

| | |
|---|---|
| கிருஷ்ணன் கோயில் .. .. | கன்னியாகுமரி மாவட்டம். |
| அஜீஸ்நகர் குடியிருப்பு .. | தென்னாற்காடு மாவட்டம். |
| கம்பம் .. .. .. | மதுரை மாவட்டம். |
| கடலாடி .. .. .. | இராமநாதபுரம் மாவட்டம். |
| தேவர் குளம்.. .. .. | திருநெல்வேலி மாவட்டம். |

இப்பயிற்சி கூடங்களையும் பொது நோக்கு பொறியியல் பணி மனைகளையும் பராமரிப்பதற்காக ரூபாய் 4.70 இலட்சம் 1979–80-ல் செலவிடப்பட்டது. 1980–81-ல் திருத்திய மதிப் பீட்டில் ரூபாய் 6.53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1981–82-ல் இதற்காக ரூபாய் 6.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

17. விவசாயம்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசன கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றுக்கு ரூபாய் 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1980–81-க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 1 இலட்சத்து 51 ஆயிரம். ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 51 நபர்கள் பயனடைந்தனர். 1981–82 மதிப்பீட்டில் ரூபாய் 1,51,000-ம் ஒதுக்கப்பட்டுள்ளது.

18. வீட்டு வசதி.—1956–57-ம் ஆண்டு முதல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூபாய் 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூபாய் 300 மானியம் ரூபாய் 900. 1975–76 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்கான மொத்தத் தொகை ரூபாய் 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூபாய் 2,025 மானியமாகவும், ரூபாய் 675 (பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ) பயனடைவோர் பங்காகவும் இருந்தது. இத்தொகை 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 4,300 ஆக உயர்த்தப்பட்டு இதில் மானியம் ரூபாய் 3,225 ஆகவும், பயனடைவோர்—பங்கு ரூபாய் 1,075 ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது. 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் 665 மற்றும் 302 வீடுகள் தாட்கோ நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது இத்திட்டத்திற்கு 1981–82-க்கு ரூபாய் 1,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. குழந்தைகள் காப்பகம்.—அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளை சரியாக பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் 1977–78 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. ''கேர்'' நிறுவனத்தின் உதவியும் இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவைகளில் 350 தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஐந்து பால சேவகிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1980–81 திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 16,000 –ம் 1981–82-க்கு ரூபாய் 17,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.—பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ''தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்'' என்ற அமைப்பை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூபாய் 100 வீதம் 10 இலட்சம்





சமபங்குகளாக ரூபாய் 10 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் தலைவராக சமூக நலத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் இருப்பார். அக்கழகத்தில் கீழ்க்கண்ட நபர்கள் பொறுப்பாளராகவும், அங்கத்தினர்களாகவும் இருப்பார்கள்.

1. பிற்பட்டோர் நல இயக்குநர், சென்னை--நிர்வாக இயக்குநர்

2. நிதித் துறை செயலர் (அல்லது) அவரால் நியமிக்கப்பட்ட நபர்—அங்கத்தினர்.

3. தொழில் துறை செயலர் (அல்லது) அவரால் நியமிக்கப்பட்ட நபர்—அங்கத்தினர்.

4. ஆணையர் மற்றும் செயலர், விவசாயத் துறை (அல்லது) அவரால் நியமிக்கப்பட்ட நபர்—அங்கத்தினர்.

5. மற்றும் 6 தனியாக நியமிக்கப்படுபவர் அங்கத்தினர்கள் இருவர் (அரசு சார்பற்றவர்).

இக்கழகத்தின் நோக்கங்கள் பின் வருமாறு :—

(i) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார, தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை (Margin money)—அளித்தல்.

(ii) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக வர்த்தக, வணிக, தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதியுதவி பெற்று இயங்கும் இக்கழகம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

இந்த மேம்பாட்டுக் கழகத்திற்கான அமைப்பு விதிகள் மற்றும் சங்க விதி முறைகளின் வடிவமைப்பு பிற்பட்ட நலத் துறையின் இயக்குநரிடமிருந்து அரசுக்கு வரப்பெற்று அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இக்கழகத்தை 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இக்கழகம் செயல்படத் துவங்கும்.

**21. வீட்டு மனைகள் கையகப்படுத்துதல்.**—பின் தங்கிய வகுப்பினருள் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்காக வீட்டு மனை கையகப்படுத்தி வழங்கும் திட்டம் அமுலில் இல்லை. ஆதி திராவிடர்களுக்காக கையகப்படுத்தும் வீட்டு மனையில் 10 விழுக்காடு பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிடர் மக்களை விட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலானோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1981–82 ஆம் ஆண்டில் 5,000 குடும்பங்கள் பலனடைவதற்காக இத் திட்டத்தின்கீழ் ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனவே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக் கொள்கிறேன்.



அட்டவணை 'அ'

II

கொள்கை விளக்கக் குறிப்பு 1981-82 ஆம் ஆண்டு, 1981-82 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்).

மொத்தம்—78,263.

நிர்வாகத்தில் : 4,783. திட்டத்தில் : 7,34,80

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,58,11. | | திட்டத்தில் இல்லாதவை 5,76,69. | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| உதவித் தொகை .. | 920 | 641 | 28,997 | 3,271 |
| பள்ளிகள் .. .. | .. | 109 | .. | 10,736 |
| மதிய உணவு .. | .. | 269 | .. | 696 |
| புத்தகம் மற்றும் துணி | 389 | 2,126 | 252 | 407 |
| உணவு மானியம் .. | 51 | .. | 763 | 27 |
| விடுதிகள் .. .. | 6,255 | 699 | 8,860 | 2,756 |
| பல்கலைக் கழகத்திற்கு மானியம். | .. | .. | 300 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 145 | .. | .. |

[1981 மே 7

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,58,11 | | திட்டத்தில் இல்லாதவை 5,76,69 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| விவசாயம் .. .. | .. | 151 | .. | .. |
| தொழிற் பயிற்சி .. | 26 | 474 | 75 | 61 |
| இலவசக் கருவிகள் .. | 1,823 | 25 | .. | .. |
| குடிநீர் .. .. | .. | .. | .. | 25 |
| சலவைத் துறை .. | 185 | .. | .. | .. |
| தனிப்பயிற்சி நிலையம் | .. | .. | 364 | .. |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள். | .. | 1 | .. | .. |
| வீட்டு மனைகள் ஆர்ஜிதம். | 1,500 | .. | .. | — |
| சிறப்புப் பயிற்சி .. | .. | .. | 40 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு. | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்கு பரிசு. | 4 | .. | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 17 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல் சில்லரை வேலைகள். | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. | 11,154 | 4,657 | 39,691 | 17,978 |



1981 மே 7]

## அட்டவணை ஆ

## அரசு பிற்பட்டோர் விடுதிகள்.

## 1980—81

| | | மொத்தம். |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்—** | |
| 1 | கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை .. | 105 |
| 2 | கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் .. | 105 |
| 3 | கல்லூரி மாணவர் விடுதி, வட சென்னை .. | 155 |
| 4 | தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சென்னை-10.. | 75 |
| 5 | மாணவியர் விடுதி, திருவான்மியூர் .. .. | 120 |
| 6 | மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி .. .. | 70 |
| 7 | கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை .. .. | 50 |
| | **செங்கல்பட்டு மாவட்டம்—** | |
| 8 | கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம் .. .. | 100 |
| 9 | கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு .. | 50 |
| 10 | கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி .. .. | 50 |
| 11 | மாணவர் விடுதி, வங்கனூர் .. .. .. | 50 |
| 12 | மாணவர் விடுதி, கனகம்மாசத்திரம் .. .. | 50 |
| 13 | மாணவர் விடுதி, மதுரமங்கலம் .. .. | 25 |
| 14 | மாணவர் விடுதி, சாலவாக்கம் .. .. .. | 25 |
| 15 | மாணவர் விடுதி, பெரியபாளையம் .. .. | 50 |
| 16 | மாணவர் விடுதி, கருங்குழி .. .. .. | 30 |
| 17 | மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிப்பேட்டை .. | 50 |
| 18 | மாணவர் விடுதி, பாதிரிவேடு .. .. .. | 50 |
| 19 | மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் .. .. | 40 |
| 20 | மாணவர் விடுதி, சோமங்கலம் .. .. | 25 |
| 21 | மாணவர் விடுதி, ஓரத்தி .. .. .. | 50 |
| 22 | மாணவர் விடுதி, வாலாஜாபாத் .. .. | 200 |
| 23 | மாணவியர் விடுதி, வாலாஜாபாத் .. .. | 60 |
| 24 | மாணவியர் விடுதி, மதுராந்தகம் .. .. | 40 |

செங்கல்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம். |
|---|---|---|
| 25 | மாணவியர் விடுதி, திருத்தணி .. .. | 50 |
| 26 | மாணவர் விடுதி, ஆவடி .. .. .. | 50 |
| 27 | மாணவர் விடுதி, ஓணம்பாக்கம் .. .. | 50 |
| 28 | கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் .. .. | 50 |

வடஆற்காடு மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 29 | கல்லூரி மாணவர் விடுதி, செய்யார் .. .. | 60 |
| 30 | கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் .. .. | 50 |
| 31 | கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி .. .. | 50 |
| 32 | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப்பேட்டை. | 50 |
| 33 | மாணவர் விடுதி, பொன்னை .. .. .. | 50 |
| 34 | மாணவர் விடுதி, திருவண்ணாமலை .. .. | 50 |
| 35 | மாணவர் விடுதி, திருப்பத்தூர் .. .. .. | 50 |
| 36 | மாணவர் விடுதி, குடியாத்தம் .. .. .. | 50 |
| 37 | மாணவர் விடுதி, ஜோலார்பேட்டை .. .. | 50 |
| 38 | மாணவர் விடுதி, ஆரணி .. .. .. | 50 |
| 39 | மாணவர் விடுதி, போளூர் .. .. .. | 50 |
| 40 | மாணவர் விடுதி, செங்கம் .. .. .. | 50 |
| 41 | மாணவர் விடுதி, ஆற்காடு .. .. .. | 50 |
| 42 | மாணவர் விடுதி, வந்தவாசி .. .. .. | 50 |
| 43 | மாணவியர் விடுதி, செங்கம் .. .. .. | 50 |
| 44 | மாணவர் விடுதி, அரக்கோணம் .. .. | 50 |
| 45 | மாணவர் விடுதி, பேரணாம்பட்டு .. .. | 50 |
| 46 | மாணவர் விடுதி, கே. வி. குப்பம் .. .. | 50 |
| 47 | மாணவர் விடுதி, பேரணமல்லூர் .. .. | 50 |

தென்னாற்காடு மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 48 | கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் .. .. | 75 |
| 49 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் .. .. | 50 |
| 50 | கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாச்சலம் .. | 150 |



தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 51 | கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் .. .. | 50 |
| 52 | மாணவர் விடுதி, விருத்தாசலம் .. .. | 100 |
| 53 | மாணவர் விடுதி, பெண்ணாடம் .. .. | 90 |
| 54 | மாணவர் விடுதி, பெரியகுப்பம் .. .. | 70 |
| 55 | மாணவர் விடுதி, சேத்தியாத்தோப்பு .. | 140 |
| 56 | மாணவர் விடுதி, திருநாவலூர் .. .. .. | 50 |
| 57 | மாணவர் விடுதி, சிறுபாக்கம் .. .. .. | 75 |
| 58 | மாணவர் விடுதி, கம்மாவரம் .. .. .. | 50 |
| 59 | மாணவர் விடுதி, தேவபண்டலம் .. .. | 50 |
| 60 | மாணவர் விடுதி, சோமந்தார்குடி .. .. | 50 |
| 61 | மாணவர் விடுதி, வடக்கநேந்தல் .. .. | 50 |
| 62 | மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி) .. .. .. | 55 |
| 63 | மாணவர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி) .. .. .. | 40 |
| 64 | மாணவர் விடுதி, தியாகதுர்க்கம் .. .. | 50 |
| 65 | மாணவர் விடுதி, இல்லோடு .. .. .. | 50 |
| 66 | மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் .. .. | 50 |
| 67 | மாணவர் விடுதி, ஆனந்தபுரம் .. .. | 50 |
| 68 | மாணவர் விடுதி, சிதார் .. .. .. | 50 |
| 69 | மாணவர் விடுதி, ப. முத்தூர் .. .. .. | 50 |

தஞ்சாவூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 70 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-1 } .. | 175 |
| 71 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-2 } | |
| 72 | கல்லூரி மாணவர் விடுதி, கும்பக்கோணம் .. | 50 |
| 73 | கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் .. | 50 |
| 74 | கல்லூரி மாணவியர் விடுதி, மாயூரம் .. .. | 50 |
| 75 | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் .. | 40 |
| 76 | மாணவர் விடுதி, பேராவூரணி .. .. | 50 |
| 77 | மாணவர் விடுதி, மகாதேவப்பட்டிணம் .. | 50 |
| 78 | மாணவர் விடுதி, மன்னார்குடி .. .. | 100 |
| 79 | மாணவர் விடுதி, நீடாமங்கலம் .. .. | 175 |
| 80 | மாணவர் விடுதி, உம்பளச்சேரி .. .. | 45 |
| 81 | மாணவர் விடுதி, வேதாரண்யம் .. .. | 50 |
| 82 | மாணவர் விடுதி, ஆலத்தூர் .. .. .. | 40 |
| 83 | மாணவர் விடுதி, கண்ணத்தான்குடி .. .. | 50 |
| 84 | மாணவர் விடுதி, மாயூரம் .. .. .. | 75 |
| 85 | மாணவர் விடுதி, மதுக்கூர் .. .. .. | 40 |
| 86 | மாணவர் விடுதி, செம்பனார்கோயில் .. | 50 |

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 87 | மாணவர் விடுதி, பூம்புகார் .. .. .. | 50 |
| 88 | மாணவர் விடுதி, களி .. .. .. | 50 |
| 89 | மாணவர் விடுதி, பாபநாசம் .. .. .. | 50 |
| 90 | மாணவியர் விடுதி, வலங்கைமான் .. .. | 50 |
| 91 | மாணவியர் விடுதி, நன்னிலம் .. .. | 50 |
| 92 | மாணவியர் விடுதி, குற்றாலம் .. .. | 40 |
| 93 | மாணவர் விடுதி, ஈச்சங்கோட்டை .. .. | 50 |
| 94 | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் .. | 50 |
| 95 | மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் .. | 50 |
| 96 | மாணவர் விடுதி, திருவிடைமருதூர் .. | 50 |
| 97 | மாணவர் விடுதி, வைத்தீஸ்வரன்கோயில் .. | 50 |

சேலம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 98 | கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | |
| 99 | கல்லூரி மாணவர் விடுதி நாமக்கல் .. | 100 |
| 100 | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் .. .. | 40 |
| 101 | மாணவர் விடுதி, எலம்பிள்ளை .. .. | 55 |
| 102 | மாணவர் விடுதி, கொங்கனாபுரம் .. .. | 90 |
| 103 | மாணவர் விடுதி, மகதலேனா சத்திரம் .. .. | 70 |
| 104 | மாணவர் விடுதி, கண்ணங்குறிச்சி .. | 70 |
| 105 | மாணவர் விடுதி, தாராமங்கலம் .. .. | 50 |
| 106 | மாணவர் விடுதி, தீவாடிப்பட்டி .. .. | 70 |
| 107 | மாணவர் விடுதி, எடப்பாடி .. .. | 70 |
| 108 | மாணவர் விடுதி, எருமைப்பட்டி .. .. | 70 |
| 109 | மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் .. .. | 70 |
| 110 | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் .. .. | 70 |
| 111 | மாணவர் விடுதி, வாழைப்பாடி .. .. | 70 |
| 112 | மாணவர் விடுதி, ராமாபுரம் .. .. .. | 50 |
| 113 | மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி .. .. | 40 |
| 114 | மாணவர் விடுதி, ஆதனூர் .. .. .. | 50 |
| 115 | மாணவர் விடுதி, சாத்தப்பாடி .. .. | 50 |
| 116 | மாணவர் விடுதி, வரகனூர் .. .. .. | 75 |
| 117 | மாணவியர் விடுதி, தாராமங்கலம் .. .. | 50 |
| 118 | மாணவர் விடுதி, காரைக்குச்சிபுதூர் .. .. | 50 |
| 119 | மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி .. | 50 |
| 120 | மாணவர் விடுதி, மங்களாபுரம் .. .. | 50 |
| 121 | மாணவர் விடுதி, விட்டம்பாளையம் .. .. | 50 |



1981 மே 7]

தர்மபுரி மாவட்டம்—

| | | மொத்தம். |
|---|---|---|
| 122 | கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி .. | 150 |
| 123 | மாணவர் விடுதி, ஹோசூர் .. .. .. | 50 |
| 124 | மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை .. .. | 50 |
| 125 | மாணவர் விடுதி, பாலக்கோடு .. .. .. | 60 |
| 126 | மாணவர் விடுதி, பூச்சம்பள்ளி .. .. | 50 |
| 127 | மாணவர் விடுதி, ஊரூர் .. .. | 50 |
| 128 | மாணவர் விடுதி, தோகரப்பள்ளி .. .. | 40 |
| 129 | மாணவர் விடுதி, களிமங்களம் .. .. | 40 |
| 130 | மாணவர் விடுதி, ஆஞ்செட்டி .. .. | 50 |
| 131 | மாணவர் விடுதி, பெண்ணாகரம் .. .. | 50 |
| 132 | மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி .. .. | 50 |
| 133 | மாணவர் விடுதி, கோணங்கிநாயக்கன்ஹள்ளி .. | 50 |
| 134 | மாணவர் விடுதி, கோட்டப்பட்டி .. .. | 50 |
| 135 | மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி .. .. | 50 |
| 136 | மாணவியர் விடுதி, காவேரிப்பட்டிணம் .. | 50 |
| 137 | மாணவர் விடுதி, திருமால்வாடி .. .. | 50 |
| 138 | மாணவர் விடுதி, மொரப்பூர் .. .. | 50 |
| 139 | மாணவர் விடுதி, கிழமங்கலம் .. .. | 50 |
| 140 | மாணவியர் விடுதி, இளாலிகம் .. .. | 50 |

கோயம்புத்தூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 141 | கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் .. | 100 |
| 142 | கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் .. .. | 100 |
| 143 | மாணவர் விடுதி, தொண்டமுத்தூர் .. .. | 50 |
| 144 | மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம் .. .. | 50 |
| 145 | மாணவர் விடுதி, சொக்கம்பாளையம் .. .. | 50 |
| 146 | மாணவர் விடுதி, பெத்திகுட்டை .. .. | 50 |
| 147 | மாணவர் விடுதி, உடுமல்பேட்டை .. .. | 50 |
| 148 | மாணவர் விடுதி, பல்லடம் .. .. .. | 50 |

பெரியார் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 149 | கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு .. .. | 50 |
| 150 | கல்லூரி மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 100 |
| 151 | மாணவர் விடுதி, பெருந்துறை .. .. | 50 |
| 152 | மாணவர் விடுதி, சத்தியமங்கலம் .. .. | 60 |
| 153 | மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் .. | 40 |
| 154 | மாணவர் விடுதி, அந்தியூர் .. .. .. | 40 |
| 155 | மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் .. | 50 |
| 156 | மாணவியர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி .. | 50 |
| 157 | மாணவர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி .. .. | 50 |
| 158 | மாணவர் விடுதி, சிவகிரி .. .. .. | 50 |
| 159 | மாணவர் விடுதி, சென்னிமலை .. .. | 50 |

நீலகிரி மாவட்டம்—

| | | மொத்தம். |
|---|---|---|
| 160 | கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் | 100 |
| 161 | கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 162 | மாணவர் விடுதி, கூனூர் | 30 |
| 163 | மாணவர் விடுதி, தேவர்சோலை | 40 |
| 164 | மாணவர் விடுதி, அம்பலமூலா | 50 |
| 165 | மாணவர் விடுதி, உதகமண்டலம் | 50 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 166 | கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர்- திருச்சி | 100 |
| 167 | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை- திருச்சி | 125 |
| 168 | கல்லூரி மாணவர் விடுதி, கரூர் | 40 |
| 169 | கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் | 40 |
| 170 | கல்லூரி மாணவியர் விடுதி உறையூர்- திருச்சிராப்பள்ளி | 45 |
| 171 | மாணவர் விடுதி, கல்லக்குடி | 50 |
| 172 | மாணவர் விடுதி, திருவெறும்பூர் | 100 |
| 173 | கல்லூரி மாணவர் விடுதி, புதூர் | 75 |
| 174 | மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான் | 60 |
| 175 | மாணவர் விடுதி, பெரம்பலூர் | 50 |
| 176 | மாணவர் விடுதி, லாலாப்பேட்டை | 75 |
| 177 | மாணவர் விடுதி, பஞ்சப்பட்டி | 50 |
| 178 | மாணவர் விடுதி, கண்ணனூர் | 50 |
| 179 | மாணவர் விடுதி- துங்காபுரம் | 50 |
| 180 | மாணவர் விடுதி, அரியலூர் | 75 |
| 181 | மாணவர் விடுதி, மருவத்தூர் | 100 |
| 182 | மாணவர் விடுதி, மணப்பாறை | 100 |
| 183 | மாணவர் விடுதி, பொன்பரப்பி | 50 |
| 184 | மாணவர் விடுதி, வி. களத்தூர் | 40 |
| 185 | மாணவர் விடுதி, குலக்காநத்தம் | 40 |
| 186 | மாணவர் விடுதி, உடையார்பாளையம் | 50 |
| 187 | மாணவர் விடுதி, செட்டிக்குளம் | 50 |
| 188 | மாணவர் விடுதி, திருமழப்பாடி | 50 |
| 189 | மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம் | 30 |
| 190 | மாணவியர் விடுதி, இராமலிங்கபுரம், திருச்சிராப்பள்ளி. | 30 |
| 191 | மாணவர் விடுதி, தரகம்பட்டி | 50 |
| 192 | மாணவர் விடுதி, கூத்தூர் | 50 |
| 193 | மாணவர் விடுதி, நொய்யல் | 50 |
| 194 | மாணவர் விடுதி, திருமானூர் | 50 |



புதுக்கோட்டை மாவட்டம்—

| | | மொத்தம். |
|---|---|---|
| 195 | கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 175 |
| 196 | கல்லூரி மாணவர் விடுதி, (கூடுதல்), புதுக்கோட்டை | 75 |
| 197 | மாணவர் விடுதி, திருமயம் | 50 |
| 198 | மாணவர் விடுதி, ஆலங்குடி | 40 |
| 199 | மாணவர் விடுதி, விராலிமலை | 75 |
| 200 | மாணவர் விடுதி, திருப்பூர் | 50 |
| 201 | மாணவர் விடுதி, வடகாடு | 50 |
| 202 | மாணவர் விடுதி, சுப்பிரமணியபுரம் | 50 |
| 203 | மாணவர் விடுதி, மணல்மேல்குடி | 50 |
| 204 | மாணவர் விடுதி, பொன்பதி | 40 |
| 205 | மாணவியர் விடுதி, அறந்தாங்கி | 40 |
| 206 | மாணவர் விடுதி, ஆவுடையார்கோயில் | 50 |
| 207 | மாணவர் விடுதி, திருக்களம்புதூர் | 50 |
| 208 | மாணவர் விடுதி, அண்டக்குளம் | 50 |
| 209 | மாணவியர் விடுதி, அரிமளம் | 50 |

மதுரை மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 210 | கல்லூரி மாணவர் விடுதி, மதுரை | 50 |
| 211 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 212 | கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் | 100 |
| 213 | கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை | 40 |
| 214 | மாணவர் விடுதி, அலங்காநல்லூர் | 104 |
| 215 | மாணவர் விடுதி, திருநகர் | 80 |
| 216 | மாணவர் விடுதி, தல்லாகுளம் | 110 |
| 217 | மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலுகா) | 60 |
| 218 | மாணவர் விடுதி, பெரியகுளம் | 80 |
| 219 | மாணவர் விடுதி, சேக்காப்பட்டி | 75 |
| 220 | மாணவர் விடுதி, திருமங்கலம் | 50 |
| 221 | மாணவர் விடுதி, மேலவளவு | 50 |
| 222 | மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் | 120 |
| 223 | மாணவர் விடுதி, டி. வாடிப்பட்டி | 80 |
| 224 | மாணவர் விடுதி, அச்சம்பட்டி | 70 |
| 225 | மாணவர் விடுதி, மட்டப்பாறை | 40 |
| 226 | மாணவர் விடுதி, அப்பநாயக்கன்பட்டி | 50 |
| 227 | மாணவர் விடுதி, கே. பெருமாள்பட்டி | 50 |
| 228 | மாணவர் விடுதி, ஏழுமலை | 50 |
| 229 | மாணவர் விடுதி, கருங்காலக்குடி | 50 |
| 230 | மாணவர் விடுதி, பழனி | 50 |
| 231 | மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி | 90 |
| 232 | மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி | 60 |
| 233 | மாணவியர் விடுதி, பேரையூர் | 50 |
| 234 | மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி | 50 |

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம் |
|---|---|---|
| 235 | மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி .. | 50 |
| 236 | மாணவர் விடுதி, கூடக்கோயில் .. | 50 |
| 237 | மாணவர் விடுதி, வெம்பர்பட்டி .. .. | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 238 | கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் .. | 50 |
| 239 | கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் | 100 |
| 240 | கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை .. | 40 |
| 241 | மாணவர் விடுதி, கண்டரமாணிக்கம் | 30 |
| 242 | மாணவர் விடுதி, வடக்கு சமுத்திரம் .. | 50 |
| 243 | மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் .. | 70 |
| 244 | மாணவர் விடுதி, காரியாப்பட்டி .. | 40 |
| 245 | மாணவர் விடுதி, புதுவயல் .. | 50 |
| 246 | மாணவர் விடுதி, திருதங்கல் | 60 |
| 247 | மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் | 40 |
| 248 | மாணவர் விடுதி, கூமாபட்டி | 50 |
| 249 | மாணவர் விடுதி, பரமக்குடி | 50 |
| 250 | மாணவர் விடுதி, பெரியகோட்டை | 50 |
| 251 | மாணவர் விடுதி, செயத்தூர் | 50 |
| 252 | மாணவர் விடுதி, தேவிப்பட்டினம் .. | 50 |
| 253 | மாணவர் விடுதி, சாயல்குடி .. .. | 50 |
| 254 | மாணவியர் விடுதி, பாகனேரி .. .. | 30 |
| 255 | மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை | 40 |



இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம் |
|---|---|---|
| 256 | மாணவியர் விடுதி, தேவகோட்டை .. | 50 |
| 257 | மாணவியர் விடுதி, குள்ளூர் சந்தை .. | 75 |
| 258 | மாணவியர் விடுதி, பிரான்மலை .. .. | 50 |
| 259 | மாணவியர் விடுதி, காரியாபட்டி .. | 50 |
| 260 | மாணவர் விடுதி, பெருநாழி .. .. | 50 |
| 261 | மாணவர் விடுதி, மண்டபம் .. .. | 50 |
| 262 | மாணவர் விடுதி, நரிக்குடி .. .. | 50 |
| 263 | மாணவர் விடுதி, ராஜபாளையம் .. | 50 |
| 264 | மாணவர் விடுதி, திருவாடானை .. | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 265 | கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி .. | 50 |
| 266 | கல்லூரி மாணவர் விடுதி, திருநெல்வேலி. | 50 |
| 267 | கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை .. .. .. .. | 40 |
| 268 | மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி .. | 150 |
| 269 | மாணவர் விடுதி, ஏருவாடி .. .. | 30 |
| 270 | மாணவர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு .. .. .. .. | 150 |
| 271 | மாணவர் விடுதி, சாமிநாதபுரம் .. | 49 |
| 272 | மாணவர் விடுதி, மேலப்பாளையம் .. | 50 |
| 273 | மாணவர் விடுதி, இடிந்தகரை .. | 90 |
| 274 | மாணவர் விடுதி, பணப்பாடு .. .. | 70 |
| 275 | மாணவர் விடுதி, விளாத்திகுளம் .. | 40 |

திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி

| | | மொத்தம். |
|---|---|---|
| 276 | மாணவர் விடுதி, பழவூர் .. .. | 50 |
| 277 | மாணவர் விடுதி, எட்டையாபுரம் .. | 50 |
| 278 | மாணவியர் விடுதி, புதூர் .. .. | 75 |
| 279 | மாணவியர் விடுதி, நான்குனேரி .. | 40 |
| 280 | மாணவியர் விடுதி, தூத்துக்குடி .. | 50 |
| 281 | மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 50 |
| 282 | மாணவர் விடுதி, பேட்டை .. .. | 50 |
| 283 | மாணவர் விடுதி, கூட்டப்புளி .. | 50 |
| 284 | மாணவர் விடுதி, கழுகுமலை .. .. | 50 |
| 285 | மாணவர் விடுதி, இடைக்கல் .. | 50 |
| 286 | மாணவியர் விடுதி, பணிக்க நாடார் குடியிருப்பு .. .. .. .. | 50 |
| 287 | மாணவியர் விடுதி, கருங்குளம் .. .. | 50 |
| 288 | மாணவியர் விடுதி, கூட்டப்புளி .. | |

கன்னியாகுமரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 289 | கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில் .. | 50 |
| 290 | கல்லூரி மாணவர் விடுதி, குழித்துறை .. | 50 |
| 291 | கல்லூரி மாணவியர் விடுதி, அகத்தீச்வரம். | 50 |
| 292 | மாணவியர் விடுதி, குளச்சல் .. .. | 50 |
| 293 | மாணவியர் விடுதி, குலசேகரம் .. .. | 50 |
| 294 | மாணவியர் விடுதி, பூதப்பாண்டி .. | 50 |
| 295 | மாணவியர் விடுதி, தக்கலை .. .. | [illegible] |



| | சுருக்கம். | மொத்தம். |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் .. .. | 3,260 |
| 14 | கல்லூரி மாணவியர் விடுதிகள் .. .. | 665 |
| 196 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் .. | 11,063 |
| 43 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள். | 2,200 |
| 1 | தொழிற் பயிற்சி விடுதி .. .. | 75 |
| 295 | | 17,263 |

## அட்டவணை 'இ'

### அரசு குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதிகள் 1980—81.

| | | மொத்தம். |
|---|---|---|
| செங்கற்பட்டு மாவட்டம் | | |
| 1 | மாணவர் விடுதி, பல்லாவரம் .. | 50 |
| வட ஆற்காடு மாவட்டம் | | |
| 2 | மாணவியர் விடுதி, பி. எல். தண்டா .. | 50 |
| கோயம்புத்தூர் மாவட்டம் | | |
| 3 | மாணவர் விடுதி, அவினாசி .. .. | 50 |
| 4 | மாணவர் விடுதி, திருப்பூர் .. .. | 50 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | | |
| 5 | மாணவர் விடுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 50 |
| 6 | மாணவர் விடுதி, மேலமாயனூர் .. | 50 |

புதுக்கோட்டை மாவட்டம்

| | | மொத்தம். |
|---|---|---|
| 7 | மாணவர் விடுதி, கந்தர்வகோட்டை .. | 50 |
| 8 | மாணவர் விடுதி, புதுக்கோட்டை .. | 44 |
| 9 | மாணவர் விடுதி, பொன்னமராவதி .. | 50 |

மதுரை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 10 | தொழிற் பயிற்சிப் பள்ளி விடுதி, கே. புதூர் மதுரை .. .. .. .. | 100 |
| 11 | மாணவர் தொழிற்பயிற்சி விடுதி, தேனி .. | 50 |
| 12 | மாணவர் விடுதி, திருமங்கலம் .. .. | 150 |
| 13 | மாணவர் விடுதி, திண்டுக்கல் .. .. | 180 |
| 14 | மாணவர் விடுதி, உசிலம்பட்டி .. .. | 650 |
| 15 | மாணவர் விடுதி, ஞானஒளிவுபுரம், மதுரை. | 60 |
| 16 | மாணவர் விடுதி, செக்கானூரணி .. | 200 |
| 17 | மாணவர் விடுதி, நாட்டார்மங்கலம் .. | 120 |
| 18 | மாணவர் விடுதி, உத்தமபாளையம் .. | 150 |
| 19 | மாணவர் விடுதி, வத்தலகுண்டு .. | 140 |
| 20 | மாணவர் விடுதி, கடமலைக்குண்டு .. | 60 |
| 21 | மாணவர் விடுதி பாப்பாபட்டி .. | 80 |
| 22 | மாணவர் விடுதி, ராஜதானி .. .. | 70 |
| 23 | மாணவர் விடுதி, அல்லிநகரம் .. | 60 |
| 24 | மாணவர் விடுதி, மேலக்கால் .. .. | 50 |
| 25 | மாணவர் விடுதி, விளாம்பட்டி .. .. | 50 |
| 26 | மாணவர் விடுதி, போடி .. .. | 50 |



மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 27 | மாணவர் விடுதி, தும்மக்குண்டு .. | 50 |
| 28 | மாணவர் விடுதி, கம்பம் .. .. | 50 |
| 29 | மாணவர் விடுதி, ராயப்பன்பட்டி .. | 50 |
| 30 | மாணவர் விடுதி, வெள்ளையம்மாள்புரம். | 50 |
| 31 | மாணவியர் விடுதி, உசிலம்பட்டி .. | 650 |
| 32 | மாணவியர் விடுதி, திருமங்கலம் .. | 125 |
| 33 | மாணவியர் விடுதி, சின்னமனூர் .. | 100 |
| 34 | மாணவியர் விடுதி, கம்பம் .. .. | 50 |
| 35 | மாணவியர் விடுதி, செக்கானூரணி .. | 50 |
| 36 | மாணவியர் விடுதி, கூடலூர் .. .. | 50 |
| 37 | மாணவியர் விடுதி, திண்டுக்கல் .. | 50 |
| 38 | மாணவர் விடுதி, கூடலூர் .. .. | 50 |
| 39 | மாணவர் விடுதி, விளாத்தூர் .. .. | 45 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 40 | மாணவர் விடுதி, கோவிலாங்குளம் .. | 50 |
| 41 | மாணவர் விடுதி, கமுதி .. .. | 150 |
| 42 | மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை .. | 100 |
| 43 | மாணவர் விடுதி, நைனார்கோயில் .. | 75 |
| 44 | மாணவர் விடுதி, முதுகுளத்தூர் .. | 100 |
| 45 | மாணவர் விடுதி, பொம்ம நேந்தல் .. | 50 |
| 46 | மாணவர் விடுதி, கடலாடி .. .. | 60 |
| 47 | மாணவர் விடுதி, மேலக்கிடாரம் .. | 50 |

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 48 | மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை | 50 |
| 49 | மாணவியர் விடுதி, கமுதி .. .. | 50 |
| 50 | மாணவியர் விடுதி, முதுகுளத்தூர் .. | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 51 | மாணவர் விடுதி, கயத்தார் .. .. | 50 |
| 52 | மாணவர் விடுதி, கோவில்பட்டி .. | 60 |
| 53 | மாணவர் விடுதி, சங்கரன்கோவில் .. | 110 |
| 54 | மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் .. | 75 |
| 55 | மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 75 |
| 56 | மாணவர் விடுதி, தென்காசி .. .. | 60 |
| 57 | மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் .. | 30 |
| 58 | மாணவர் விடுதி, வெள்ளாங்குளம் .. | 30 |
| 59 | மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் .. | 30 |
| 60 | மாணவர் விடுதி, சாயமலை .. .. | 30 |
| 61 | மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் .. | 50 |
| 62 | மாணவியர் விடுதி, சங்கரன்கோயில் .. | 50 |

சுருக்கம்.

| | | |
|---|---|---|
| 46 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் .. | 3,894 |
| 14 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள். | 1,425 |
| 2 | தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் .. | 150 |
| 62 | மொத்தம் .. | 5,469 |



அட்டவணை 'ஈ'.

| தொழிற்பயிற்சிக் கூடங்கள். (1) | துவங்கப்பட்ட வருடம். (2) | பயிற்சியாளர்கள் எண்ணிக்கை. (3) | உதவிப் பணம். (4) |
|---|---|---|---|
| அ. பிற்பட்டோர் நலத்துறை தொழில் வணிகத்துறை இயக்குனரின் கீழ் நடப்பவை:— | | | |
| 1 பொது நோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர் இராமநாதபுரம். | 1961 | 30 | 45 |
| 2 பொது நோக்கு பொறியியல் பட்டறை, செக்காணூரணி மதுரை. | 1963 | 15 | 45 |
| 3 பொது நோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம், புதூர், திருநெல்வேலி. | 1965 | 15 | 45 |
| 4 பிரம்பு பயிற்சி நிலையம், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 5 தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |
| ஆ. சமூக நல இயக்குநரின் கீழ் நடத்தப்படுவன:— | | | |
| 1 தையல் மற்றும் ஆயத்த ஆடை நிலையம் ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2 தையல் மற்றும் எம்ப்ராய்டரி நிலையம், செக்காணூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |
| 3 தையல் பயிற்சி நிலையம் ஊமங்கலம், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |

| தொழிற்பயிற்சிக் கூடங்கள் (1) | தொடங்கப்பட்ட வருடம் (2) | பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை (3) | உதவிப் பணம் (4) |
|---|---|---|---|
| ஆ சமூக நல இயக்குநரின்கீழ் நடத்தப்படுவன—தொடர்ச்சி. | | | |
| 4 தையல் பயிற்சி நிலையம், கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5 தையல் பயிற்சி நிலையம், கடலாடி இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6 தையல் பயிற்சி நிலையம், தேனர் குளம், திருநெல் வேலி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7 தையல் பயிற்சி நிலையம் கிருஷ்ணன்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |

N83·22

122203